வெண்முரசு

மகாபாரதம் நாவல் வடிவில்

# திசைதேர் வெள்ளம்

ஜெயமோகன்

## வெண்முரசு’ – நூல் பத்தொன்பது – திசைதேர் வெள்ளம்

### பகுதி ஒன்று : விண்புரள்தல்

குருக்ஷேத்ரத்தில் பாண்டவரின் படைமுகப்பில் அமைந்த கொடிமேடையில் காவலிருந்த பாண்டவ வீரனாகிய ஜலன் கீழ்வானில் ஒரு சிறிய செந்தீற்றலை கண்டான். அது ஓர் எரிவிண்மீன் என எண்ணி அதை சொல்ல தன்னருகே அமர்ந்திருந்த துணைக்காவலனாகிய சோமிதனை நோக்கினான். அவன் அரைத்துயிலில் கொடித்தூணுடன் உடலைச் சேர்த்து தலைகுனிந்து முகவாய் மார்பில் படிந்திருக்க அமர்ந்திருந்தான். அவனைத் தொட்டு “எரிவிண்மீன்!” என்றான் ஜலன். “ஆம்” என துயிலிலேயே சோமிதன் மறுமொழி சொன்னான். “எரிவிண்மீன்” என்றான் ஜலன். “ஆம், அம்புகள்!” என்று அவன் சொல்லி சப்புக்கொட்டியபின் திரும்பியமர்ந்து மெல்ல குறட்டைவிட்டான். ஜலன் விழிதிருப்பியபோது மீண்டுமொரு எரிவிண்மீன் இறங்குவதை கண்டான். அவனுக்கு மெய்ப்பு எழுந்தது. நெஞ்சு ஓசையுடன் அறைந்தது.

முதல்நாள் போர் முடிந்த குருக்ஷேத்ரக் களம் முன்னிரவிலேயே புண்பட்டோரும் பிணங்களும் உடைந்த தேர்களும் சிதறிய படைக்கலங்களும் அகற்றப்பட்டு தூய்மைசெய்யப்பட்டிருந்தது. குருதிபடிந்த களத்திற்கு சூழ்ந்திருந்த குறுங்காட்டிலிருந்து செந்நாய்களும் நரிகளும் கழுதைப்புலிகளும் வராமலிருக்க எல்லைகளில் மீன் எண்ணைப் பந்தங்கள் நெருக்கமாக எரியவைக்கப்பட்டிருந்தன. தொலைவில் ஒரு அனல்கோடென அது குருக்ஷேத்ரத்தை வளைத்துச் சென்றது. களமெங்கும் கல்லெறித்தொலைவு இடைவெளி விட்டு நடப்பட்டிருந்த தூண்களின் பந்தங்களில் எரிந்த தழலொளி அலையடித்த நிலம் கூர்ந்துநோக்கியபோது செந்நிற நீர்ப்பரப்புபோல தோன்றியது. எடைமிக்க யானைப்பிணங்களை அகற்றும்பொருட்டு தடித்த பலகைகள் போடப்பட்டு உருவாக்கப்பட்டிருந்த பாதைகள் இறுதியாக எடுத்து அகற்றப்பட்டபோது அவற்றின் தடம் மட்டும் மண்ணில் எஞ்சியிருந்தது. புழுதிபறக்கும்படி காற்று ஏதும் வீசவில்லை, ஆனால் அந்தத் தடம் நோக்க நோக்க அழிந்தபடி வந்தது.

காற்றிலிருந்த குருதிவாடை மாறிக்கொண்டே இருந்தது. எரியும் செங்குருதியின் நிலையழியச் செய்யும் மணம் மெல்ல உருமாறி

புதுச்சீழ்வாடை ஆயிற்று. பின்னர் நாள்பட்ட நெஞ்சுச்சளியின் வாடை. பின்னிரவில் அழுகும் ஊனின் கெடுநாற்றம் எழுந்து குமட்டச் செய்தது. செல்லச்செல்ல கந்தகம் கலந்ததுபோல், புளிப்பு ஏறுவதுபோல அந்த வீச்சம் மாறியது. காற்று வீசும் திசைக்கேற்ப அதன் இயல்பு வேறுபட்டுக்கொண்டிருந்தது. நேர்எதிரில் ஒழிந்துகிடந்த படுகளத்தில் இருந்து வந்தபோது கெடுநாற்றம் உடலைச் சூழ்ந்து தோல்வழியாகவே உள்ளே நுழைந்து உள்ளுறைந்தவற்றை நடுங்கச் செய்தது. வாயிலூறிய நீரே அந்த கெடுநாற்றம் கொண்டிருந்தது. அவர்கள் துப்பிக்கொண்டே இருந்தனர். “வாய் சீழ்கொண்ட புண் என ஆகிவிட்டிருக்கிறது” என்று சோமிதன் சொன்னான். அதை சொல்லெனக் கேட்டபின் ஒரு துளிகூட வாய்நீரை விழுங்க இயலவில்லை. ஆனால் சற்றுநேரமானதும் தொண்டையில் குருதிவாடை ஒரு கரகரப்பாக எஞ்சியிருப்பதாக தோன்றியது.

அரைநாழிகைக்கு ஒருமுறை இரு பக்கங்களிலும் உள்ள காவல்மாடத்திற்கு அவன் அகல்சுடரைச் சுழற்றி கொம்பூதி செய்தியனுப்பவேண்டும். அவர்களின் மறுசெய்தி வந்ததும் அதை ஏற்றுச் சுழற்றி ஊதியபின் வேலுடன் அமர்ந்துகொள்ளவேண்டியதுதான். ஒவ்வொருமுறையும் செய்தியனுப்பியதுமே உடல் மெல்ல தளர உள்ளம் ஓய்வை உணர்ந்தது. இன்னும் அரைநாழிகைப்பொழுது அரைத்துயில் கொள்ளலாம். அரைநாழிகைப் பொழுதுதான் எத்தனை நீண்டது! முழுத்துயிலுக்கு அது ஒரு கணம். அரைத்துயிலில் எத்தனை கனவுகள், எவ்வளவு எண்ணங்கள்! நிகழ்வுப்பெருக்கு. கால அடுக்கு புரண்டபடியே இருக்கிறது. வாழவாழ தீராதது. விழித்துக்கொண்டு அருகே நேரம்காட்ட வைத்திருக்கும் மணல்குடுவையை நோக்குகையில் மேலும் பொழுதிருக்கும். அந்தச் சிறுபொழுது மேலும் நீண்டது. அதற்குள் நூறு வாழ்க்கைகளை திணிக்கமுடியும்.

துயில் அத்தனை இனிதானதென்று அவன் எப்போதும் அறிந்திருந்ததில்லை. படைப்புறப்பாடு தொடங்கிய நாள்முதல் ஒருபோதும் நான்கு நாழிகைப் பொழுதுக்குமேல் உளமழிந்து உறங்கியதில்லை. பயணத்திலும் அவனுக்கு குறைவான துயிலே வாய்த்தது. ஆனால் ஒவ்வொருமுறையும் காலையில் எழும்போது உள்ளம் நிறைவு கொண்டிருந்தது, உடல் புதியதெனத் தோன்றியது. அந்தப் பயணத்தைப்போல வேறெப்போதும் அவன் தன் வாழ்க்கையில் மகிழ்ந்திருந்ததில்லை. அவன் மெய்மறந்து துயின்றது போருக்கு முந்தையநாள்தான். குருக்ஷேத்ரத்திற்கு

வந்தபின் செய்வதற்கு ஏதுமில்லை. பெரும்பாலான பொழுதுகளில் நண்பர்கள் சொல்லாடுவதைக் கேட்டபடி மடியில் வேலுடன் அமர்ந்திருந்தான். போரைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். தொல்கதைகள், மூத்தார்கூற்றுகள், நம்பிக்கைகள்.

“அம்பு ஆலையில் நெருப்பில் உருகி, அனலென்றாகி கூடத்தால் அறையுண்டு உருப்பெறும்போதே அது எவரைக் கொல்லும் என்பது முடிவாகிவிடுகிறது. அம்புக்கும் அதன் பலிக்குமிடையேயான ஆடலே போர்” என்றார் சம்பர். “அந்த அம்பு பிழைத்ததே இல்லையா?” என்றான் இளைஞன் ஒருவன். “பிழைக்காது. பிழைத்தால் அது மீண்டும் வரும். அறிக, களத்தில் விழுந்த அனைத்துப் படைக்கலங்களும் பொறுக்கிச் சேர்க்கப்படும். இறந்தவர் உடல்களில் தைத்தவைகூட பிடுங்கி கொண்டுசென்று மீண்டும் உருக்கி அடித்து வளைவும் சதைவும் நீக்கி படைக்கலக்கூர் அளிக்கப்படும். அவை அழியா வஞ்சத்துடன் மீண்டும் களம் நுழையும். இலக்கை தேடிவரும்.” அவன் அதை கேட்டபோது சிற்றுயிர் ஒன்று முதுகெலும்பில் ஊர்வதுபோல உடல்சிலிர்த்தான். அவனருகே அமர்ந்திருந்த சூலன் “மானுடரிடம் தோற்பதில் இங்கே எவருக்கும் உடன்பாடில்லை. ஊழ்வடிவென எழும் தெய்வங்களுடன் போரிட்டு வீழ்ந்ததாக எண்ண விழைகிறார்கள்” என்றான்.

மறுநாள் காலையில் போர் என்று அறிவித்தபோது முதல் கொந்தளிப்புக்குப் பின் அதுவரை போரைப்பற்றி பேசிக்கொண்டே வந்த அத்தனை படைவீரர்களும் முற்றாகவே சொல்லழிந்துவிட்டிருந்தார்கள். எவருமே போரைப்பற்றி பேசிக்கொள்ளவில்லை. ஒற்றைச்சொற்களில் அன்றாடச் செய்திகளையே பேசினர். உணவுண்டதுமே ஆங்காங்கே படுத்துக்கொண்டார்கள். அவன் அன்று துயிலப்போவதில்லை என்றே எண்ணினான். ஆனால் படுத்ததுமே கைகால்கள் உடலில் இருந்து உதிர்ந்து அகல உடல் எடைகொண்டு மண்ணில் பதிய சித்தம் கரைந்து அழிய ஆழ்துயிலில் மூழ்கி மறுநாள் கொம்போசை கேட்டுத்தான் விழித்தெழுந்தான். தன்னைச் சூழ்ந்திருந்த படை விழவுக்களிப்புடன் ஒருங்கிக்கொண்டிருப்பதை கண்டான். கவசங்களை அணிகையில், படைக்கலம் சூடுகையில் சிரிப்பும் களியாட்டுமென படைகள் முழங்கின.

அணிகொண்டு படைமுகப்புக்குச் செல்கையில் அவன் அதற்கும் படைநகர்வுக்கும் வேறுபாடிருப்பதாக உணரவில்லை. முரசுகள் ஒலித்து கொம்புகள் அறைகூவி போர்க்கூச்சல் எழுந்தபோது எண்ணத்தில் ஏதும் பதியாமலேயே உடல் மட்டும்

மெய்ப்புகொண்டது. இடக்கால் துடிக்கலாயிற்று. “வெற்றிவேல்! வீரவேல்!” என்ற கூச்சல் அவனை சூழ்ந்தபோது அறியாமல் தானும் கூவியபடி வேலுடன் முன்னால் ஓடினான். படைக்கலங்கள் கலக்க, உடல்கள் முட்டித் ததும்பிய அணுக்கப் போரில் அவன் ஒருகணமும் தன்னை அறியவில்லை. அலைக்கொந்தளிப்பு கொண்டு ஒழுகும் பெருநதியில் தானும் மிதந்து செல்வதாகவே உணர்ந்தான். தன் நூற்றுவர்தலைவனின் ஆணைகளை மட்டுமே விழிசெவிகொண்டு அவற்றுக்கேற்ப செயல்படுவதன்றி எதையுமே எண்ணவில்லை.

பின்னர் அவன் எதையுமே எண்ணிச்செய்யவேண்டியதில்லை என்றாயிற்று. அவன் உடலும் உள்ளமும் முன்னரே முடுக்கிவிடப்பட்ட கைவிடு பாவை என செயல்படலாயின. முடிவிலாது நீண்டு நீண்டு சென்றது பொழுது. எண்ணுகையில் ஒருகணமே என உளம்மயங்கச் செய்தது. அவன் சென்ற படை கேடயம் உருகி நீண்டு வேலாவதுபோல் வடிவம் கொண்டபோது அவன் படைமுகப்புக்கு சென்றான். அங்கே அம்புகள் விண்ணிலிருந்து சிறுபுட்களின் கூட்டம் என விழுந்துகொண்டே இருந்தன. அவற்றின் ஓசையிலாத் தொடுகைக்கு திடுக்கிட்டு இறுதிச் சொல்லுக்கு காற்றில்லாது விழுந்துகொண்டிருந்தனர் வீரர்கள். அவர்கள் வேறெங்கோ விழுந்தபடி இருக்க அவன் தன் உலகில் வேலுடன் இயங்கிக்கொண்டிருந்தான். இறப்பு எனும் எண்ணம் ஒருகணம்கூட உள்ளத்திலெழவில்லை.

அவன் அவர்கள் மேல் கால்வைத்து முன்னால் சென்றான். நீண்ட வேலால் எதிரில் வந்தவர்களின் கழுத்தில் கவச இடைவெளியை மட்டும் குறிவைத்து குத்திக்கொண்டே சென்றான். அவர்கள் மானுடர் அல்லாமலாயினர். கவசம் நடுவே ஒரு சிறு இடைவெளி அன்றி வேறேதுமல்ல அவர்கள். அவன் முன் காற்றுப்பரப்பில் அலையடித்த அந்த இடைவெளிகள் கரந்தும் தெளிந்தும் விளையாடின. அவன் வேல் சென்றபோது ஒழிந்தும் வேல் தூக்கப்பட்டபோது அணைந்தும் அவனைச் சுற்றிச் சுழன்றன. அவனுக்கு அருகே அவன் படைத்தோழன் சூலன் வந்துகொண்டிருந்தான். பொருளின்றி அவன் எதையோ கூவிக்கொண்டே இருந்தான். அவன் ஊரில் விழவுகளில் கூவும் பொருளிலா மொழி அது. அவர்கள் ஒரு கன்றுக்குட்டியை தோளிலேற்றியபடி ஓடி மலை ஒன்றில் ஏறி மேலிருக்கும் சிற்றாலயத்திற்கு கொண்டுசெல்லும் போட்டி ஒன்றை நிகழ்த்துவார்கள். அதில் வென்றவனை அழகிய மகளிர் மணப்பார்கள். சூலனின் தோளில் இருக்கும் கன்றை அவன்

உணர்ந்தான். ஆனால் தான் கூவிக்கொண்டிருப்பது எதை என சூலன் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

வேலுடன் திரும்பிய அவன் ஒருகணத்தின் ஆயிரத்திலொரு துளியிலென பீஷ்மரின் விழிகளை விழிநோக்கினான். அவனருகே வந்துகொண்டிருந்த சூலன் தோல்பறை கிழியும் மூச்சொலியுடன் மண்ணில் விழுந்து இரு கைகளையும் இழுத்துக்கொண்டு கால்களை அறைந்து உயிரிழந்தான். அவன் திரும்பி நோக்குவதற்குள் படை அவனை தள்ளிக்கொண்டு சென்றது. அது பீஷ்மரின் அம்பு என எண்ணுவதற்குள் அவனை கடந்து சென்றது ஒரு எறிவேல். அவன் கைவேல் சுழல உள்ளம் பொருளிலா சுழற்சியென்றானது. வேல்வடிவப் படை மீண்டும் விரிந்து கேடயமாகியது. அவன் மீண்டும் படையின் பின்பக்கம் சென்றான். கேடயம் வாளென்றாகியபோது மிக விலகிச் சென்றான். அதன்பின் அவன் சூலனின் உடலை காணவில்லை. அவன் குடிவழக்கப்படி எரியேறியிருப்பான். விண்ணில் நிறைந்துள்ள மூச்சுலகில் இருப்பான். எஞ்சிய போரை ஆற்றாமையுடன், கசப்புடன், கண்ணீருடன் நோக்கிக்கொண்டிருப்பான்.

அந்திக் கொம்புகள் முழங்கியபோது அவன் எங்கிருக்கிறான், என்ன செய்கிறான் என்பதையே உணரவில்லை. அவனருகே நின்றிருந்த வீரர்கள் படைக்கலம் தாழ்த்தி “மாமன்னர் யுதிஷ்டிரருக்கு வெற்றி! மின்கொடிக்கு வெற்றி! குருகுலம் வாழ்க!” என்று கூவியதை திரும்பித்திரும்பி நோக்கினான். “செல்வோம்” என்றான் ஒரு வீரன். “எங்கே?” என்றான். “இன்றைய போர் முடிவடைந்தது. மகிழ்க, நாம் உயிருடன் இருக்கிறோம்.” அவன் உளம் வெறித்து நின்றான். “கள்ளுண்க, களிகொள்க, நாம் சாகவில்லை. நாம் எஞ்சியிருக்கிறோம்.” பெருமழை அறைந்ததுபோல உடல்குளிர்ந்து மெய்ப்புகொள்ள அவன் அச்சொற்களின் பொருளை உணர்ந்தான். உயிருடனிருக்கிறேன், எஞ்சியிருக்கிறேன். இன்னமும் காலம் இருக்கிறது. இன்னுமிருக்கிறது வாழ்வு. அவன் வேலைத் தூக்கி “வெற்றிவேல் வீரவேல்!” என்று கூச்சலிட்டான்.

அன்று உலர்ந்த குருதி ஆடையென உடலில் ஒட்டிப்படிந்திருக்க படைநிலையை அடைந்து அப்படியே வெறும் மண்ணில் விழுந்து விழிமயங்கினான். பெரிய மரப்பீப்பாய் வண்டிகளில் ஃபாங்கம் கலந்த புளித்த கள் கொண்டுவரப்பட்டது. கொப்பரைக் குடுவைகளை நீட்டி அதை வாங்கி அருந்தினர் வீரர்கள். சிரிப்பு, வெறிக்கூச்சல். மதுக்கொப்பரையை தலைக்குமேல் தூக்கி “வெற்றிவேல்! வீரவேல்!” என கூவினர். “தோழா, நாம் ஏன்

வெற்றிகூவுகிறோம்? நம் படைகளில் பத்திலொன்றை ஒரே நாளில் பீஷ்மர் கொன்றழித்துவிட்டார், அறிவாயா?” என்றான் ஒருவன். “ஆம், அதற்கென்ன? நான் உயிருடன் இருக்கிறேன். என் வெற்றி இதுவே” என்று வெற்றிகூவியவன் சொன்னான். கூடிநின்றவர்கள் வெறிநகைப்பொலித்தனர். கொப்பரையை தலைமேல் வைத்து நடனமிட்டபடி “உண்மின் கள்ளே! அடுமின் சோறே! எறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!” என்று ஒருவன் கூச்சலிட்டான்.

புரவியில் ஊர்ந்து படைநிரைகளின் ஊடாக வந்த நூற்றுவர்தலைவன் ஜலனிடம் “இன்று பின்னிரவில் நீ களக்காவல். இப்போதே உறங்கி எழுக!” என்று ஆணையிட்டுச் சென்றான். “ஆம், அவ்வாறென்றால் நாளை நீ களத்தில் இல்லை… பீஷ்மரின் அம்புகளிலிருந்து இன்னொரு நாள் உனக்கு விலக்கு… அருந்துக கள்! ஆடுக கூத்து! உனக்கு பீஷ்மரின் கொடை ஒரு நாள்!” என்றான் ஒருவன். வீரர்கள் கூவிச்சிரித்து அவன் தலைமேல் கள்ளை சரித்தனர். அவன் ஊன்சோறு உண்டு மீண்டும் கள்ளருந்தி படுத்துக்கொண்டபோது பீஷ்மரின் அந்த விழிமின்னை எண்ணிக்கொண்டான். நெஞ்சு துணுக்குற புரண்டுபடுத்து அவ்வெண்ணத்தை விரட்டினான். இருந்துகொண்டிருக்கிறேன், இன்னும் இறக்கவில்லை. அவ்வெண்ணமே இனித்தது. மேலும் மேலும் ஆறுதல் அளித்தது. மெல்லிய தலைவருடல்போல். அன்புமொழிபோல். மடி வெம்மைபோல்.

துயிலின் களைப்பு தசைகளில் இனிய உளைச்சலாக, வாயில் மெல்லிய உலர்தலாக, கண்களில் எரிச்சலாக பரவியது. கைகளை நீட்டி சோம்பல்முறித்துக்கொண்டான். உடலை நீட்டி இனிய வலியை அடைந்தான். எங்கோ ஒரு மென்முழக்கம் கேட்டுக்கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான பன்றிமுகமுள்ள பாதாளதெய்வங்கள் கெடுநாற்ற ஆவியெழும் வாய்களைத் திறந்து சூழ்ந்துகொண்டதுபோல கனவு கண்டு விழித்துக்கொண்டான். உடல்நடுங்கிக்கொண்டிருந்தது. வாயில் குளிர்ந்த சீழ் என நீர் ஊறச்செய்யும் கெடுநாற்றம். மலைமலையென மலம் குவிந்திருப்பதுபோல. அவன் ஆடையை உதறியபடி எழுந்து நின்றபோதுதான் விண்ணில் எரிகோடு தீற்றிச்செல்வதை கண்டான்.

அவன் எறிவேலை தன் இரு கால்களுக்கு நடுவே வைத்தபடி நோக்கி அமர்ந்திருந்தான். துயின்றுகொண்டிருக்கிறோம் என்னும் உணர்வு

அவனுக்கு இருந்தது. துயிலில் நோக்க முடியுமா என்ற ஐயம் ஊடே எழுந்தது. அவ்வாறென்றால் அது கனவு. ஆனால் அவன் அதை மிகத் தெளிவாக நோக்கி எண்ணத்தாலும் தொடர்ந்துகொண்டிருந்தான். மீண்டுமொரு எரிவிண்மீன் இறங்கி இருளில் புதைந்து மறைந்தது. இந்த எரிவிண்மீன்கள் எங்கே விழுகின்றன? அங்கே அவை விண்ணின் விழிகளென ஒளிகொண்டிருக்குமா? அணையாது எஞ்சி குளிர்ந்தும் ஒளிகொண்டிருக்கும் எரிவிண்மீனே அரசர்களின் மணிமுடிகளில் அருமணிகளென அமர்ந்திருக்கிறது என்று மூதன்னை சொல்வதுண்டு. ஒளிகரந்த கல். அங்கிருந்தபடி உலகை இமைக்காது நோக்குகிறது. மொழியிலாது ஆணையிடுகிறது. அரசர்கள் அவற்றின் ஆணைகளை சொல்லாக்குபவர்கள் மட்டுமே. குருதி என அது கூவுகிறது. மேலும் குருதி, உலராப் பெருங்குருதி என ஆர்ப்பரிக்கிறது. அனைத்து தெய்வங்களுக்கும் மானுடக்குருதி பிடித்திருக்கிறது. குருதி கோராத் தெய்வங்களே இல்லை. குருதிவிடாயை அவை அரசர்களுக்கு அளிக்கின்றன.

மீண்டுமொரு எரிவிண்மீன்! இன்று ஏன் இத்தனை எரிவிண்மீன்கள்? அவை அரிதாகவே உதிருமென்று அவன் கேட்டிருக்கிறான். விண்ணிலிருந்து ஓர் எரிவிண்மீன் உதிர்வதென்றால் பெருவீரர், பேரறத்தார்கள், அறிவமர்ந்தோர், முனிவர் என எவரேனும் அங்கே சென்றிருக்கவேண்டும். அவர்களுக்கான இடத்தை அளிக்கும்பொருட்டு அவை உதிர்கின்றன. ஏனென்றால் விண்ணில் ஒரு விண்மீன்கூட கூடவோ குறையவோ முடியாது. அவற்றை எண்ணி அடையாளமிட்டு நிரத்தியிருப்பது பிரம்மம். மணல்பருக்களையும், மழைத்துளிகளையும், உயிர்களின் ஒவ்வொரு முடியையும் எண்ணி அமைத்திருப்பது. “இங்கே ஒன்றும் கூடுவதோ குறைவதோ இல்லை. குறையாநிறையா பரப்பு இது. இதைப்போல எண்ணவொண்ணா உலகுகள். அவற்றின் எண்ணிக்கை மாறாது காப்பதே பிரம்மம்” மூதன்னையின் சொற்கள்.

இது கனவல்ல. கனவில் இத்தனை தெளிவாக சொற்கள் எழுவதில்லை. மீண்டுமொரு விண்மீன் உதிர்ந்தது. விண்மீன்களா? அல்லது வேறு ஏதேனுமா? விண்ணிறங்கும் தெய்வங்களா? தெய்வங்கள் தங்கள் விழிகளில் இருப்பென எஞ்சி ஒளிர்ந்தபடி மண்ணில் விழுகின்றன. இங்கே சிறகுமீட்டும் வண்டுகளாகின்றன. ஒளிரும் மின்மினிகளாகின்றன. இளங்காற்றும் நறுமணமும் ஆகின்றன. விண்ணின் முடிவின்மையில் இருந்தாலும் அவை விழைவையும் வஞ்சத்தையும் வைத்து ஆடும் களமென்று

அமைந்தது இப்புவிமட்டுமே. மீண்டும் ஒரு விண்மீன் உதிர அவன் பெருமூச்சுவிட்டான். விண்மீன்களேதான். நேற்று குருக்ஷேத்ரத்தில் இறந்தவர்கள் விண்ணமைகிறார்கள். இத்தனை அறத்தோரா? மாவீரர்களா? இறந்த அரசர்கள் சிலர்தானே?

ஏன், அரசர்களல்லாத அறத்தோர் இருக்கவியலாதா? நேற்று எளிய வீரர் எத்தனைபேர் பெருவீரத்தை விளைவித்திருப்பர்? அறத்தின் குன்றேறி விண்ணிலூர்ந்திருப்பர்? ஐயமில்லை, அவ்விண்மீன்கள் எளிய படைவீரர்களையே வாழ்த்தி வீழ்கின்றன. அரசர்கள் அங்கே செல்வதில்லை. அவர்களின் ஆணவத்தால் அடைந்த அனைத்தையும் ஈடுசெய்துவிடுகின்றனர். அறியப்படாத வீரனே தெய்வத்தை அணுகமுடியும். இங்கு எவராலும் அவன் அறியப்படுவதில்லை என்பதனாலேயே அவனை தெய்வம் அறிந்தாகவேண்டும். இனிய, எடைமிக்க, துயர் ஒன்று நெஞ்சை அடைக்க ஜலன் செருமிக்கொண்டான். அழுகையோசைபோல அவனுக்கே அவ்வொலி கேட்க விழித்துக்கொண்டான். வேல் அருகே சரிந்துகிடந்தது. அதை கைநீட்டி எடுத்தபோது அவன் களத்தின் நடுவே ஒரு பெண் நடந்துவருவதை கண்டான்.

சற்றுநேரம் அது கனவென்றே அவன் எண்ணினான். இல்லை, இல்லை என அவன் விழியும் சித்தமும் வலியுறுத்தின. அதன்பின்னர் ஒரு திடுக்கிடல் ஏற்பட்டு உடல் அதிர மேலாடையை எடுத்து அணிந்தபடி எழுந்து நின்றான். கொம்பை எடுத்து ஊதி பிற காவலரை எழுப்பலாமா என எண்ணினான். ஆனால் அது வெறும் கனவென்றால் அவர்கள் அவனை ஏளனம் செய்வார்கள். இது களம், இங்கே உயிருக்கு மதிப்பில்லை, நூற்றுவர்தலைவன் வாளை உருவி தலையை வெட்டிவீசினால்கூட வியப்பதற்கில்லை. அவன் கண்களை இமைத்து இமைத்து கூர்கொள்ளச் செய்து உற்றுநோக்கினான். அது பெண்ணுருவேதான். என்ன செய்கிறாள்? நிலத்தை தொட்டுத்தொட்டு பார்க்கிறாள். இரு கைகளையும் வான் நோக்கி விரிக்கிறாள். அவள் ஆடையும் குழலும் எழுந்து நீண்டு பறந்து அலைகொள்கின்றன. ஆனால் எங்கும் காற்றுவீசவில்லை. ஐயமில்லை, இது கனவேதான்.

ஜலன் எண்ணி அடிவைத்து நடந்து அவள் அருகே சென்றான். எதிர்பார்த்ததுபோல் அணுகும்தோறும் கலைந்து உருவழிந்து அவள் மறையவில்லை. மேலும் தெளிவடைந்தபடியே சென்றாள். அவன் அஞ்சி நடை தயங்கினான். ஆயினும் பள்ளம் நோக்கி விழுபவன் என அவளை நோக்கி செலுத்தப்பட்டான். அவள் கூந்தலின் நீளம் அவனை திகைக்கச் செய்தது. நெடுந்தொலைவுவரை அது

அலையடித்தது, அவளுக்குப் பின் ஒரு நீரோடை பெருகிச்செல்வதைப்போல. அவள் அவனை அறியவில்லை. மிக அருகே சென்று அவன் நின்றபோதுகூட அவள் விழிகள் அவனை நோக்கவில்லை. அவள் பிச்சி என தெரிந்தது. மெல்லிய குரலில் தனக்குத்தானே என ஏதோ சொல்லிக்கொண்டாள். உதடுகள் அசைந்தபடியே இருந்தன. கருவிழிகள் நிலையற்று அலைந்தன. கைவிரல்களில் ஏதேதோ முத்திரைகளாக ஒரு தனிமொழி ஓடிக்கொண்டிருந்தது.

“அன்னையே…” என அவன் அழைத்தான். அதன்பின்னர்தான் அவள் அரசகுடியினள் என தன் உள்ளம் உணர்ந்திருப்பதை அறிந்தான். “அன்னையே, நீங்கள் யார்?” என்றான். அவள் அவன் சொற்களை செவிகொள்ளவில்லை. “அன்னையே, நீங்கள் எவரென்று நான் அறியலாமா?” என்றான். “ஏனென்றால் இது படுகளம். இங்கே படைநோன்புகொண்ட வீரர் அன்றி பிறர் வரலாகாது. பெண்டிர் நுழைய நெறியில்லை.” அவள் திரும்பி அவனை நோக்கினாள். அவன் மெய்ப்புகொண்டு கைகூப்பினான். கருவறையிலமைந்த தெய்வமுகம், தெய்வங்களுக்குரிய கடந்த நோக்கு. “நான் பாண்டவப் படையின் களக்காவலன்… ஹம்சபுரத்தைச் சேர்ந்த துஷாரகுடியினன்” என்றான் ஜலன். அவள் மீண்டும் களத்தை நோக்கி குனிந்தாள். அவள் நோக்குவதென்ன என்று அவன் நோக்கினான். அது மண்ணில் பதிந்த வடு. தொடுக்கப்பட்டு குறிபிழைத்த அம்பு புதைந்து உருவானது.

“அவன் விட்ட அம்புகள்… இந்தப் போரில் அவன் விட்ட நான்காயிரம் அம்புகள் பிழைத்தன” என்று அவள் சொன்னாள். “ஆயிரத்தில் ஒன்று மட்டுமே பிழைக்கும் திறன்கொண்டவன் அவன். இந்த அம்புக்குரிய வீரன் ஒரு கணநேர இடைவெளியில் உயிர்பிழைத்தான். இன்று அங்கே தன் அணிகளுடன் வெறுந்தரையில் உளமழிந்து உறங்கிக்கொண்டிருக்கிறான்.” அவள் தன் கால்களால் அம்புத்தடங்களை தொட்டபடி நடந்தாள். “இதோ இங்கே இன்னொன்று… இதோ பிறிதொன்று.” ஜலன் “அன்னையே, நீங்கள் யார்?” என்றான். அவள் இரு கைகளையும் விரித்தாள். “அவன் கொன்றுகுவித்தான்… இப்படைகளில் பத்திலொன்று ஒருநாளிலேயே அழிந்தன. அவனுக்கு எதிர்நின்றிருக்க எவராலும் இயலவில்லை…” அவளிடமிருந்து எழுந்த உறுமலோசை ஜலனை எலும்புகுளிரச் செய்தது. “அன்னையே…” என்றான். “வா என்னுடன்!” என்று அவள் சொன்னாள். “நான் காவல்பணியில் இருக்கிறேன்,

அன்னையே!” அவள் அதை கேட்கவில்லை. வெறிப்புகொண்ட விழிகளுடன் “என்னுடன் வா!” என்றாள்.

அவள் நடக்க அவன் உடன் நடந்தான். கீழே கிடந்த அம்புத்தடங்கள் ஒவ்வொன்றையும் நோக்கி உடல் நடுக்குகொள்ளும் பெருஞ்சினத்துடன் அவள் கூச்சலிட்டாள். “அன்னையே, நீங்கள் யார்?” என்று அவன் அழுகை கலந்த குரலில் கேட்டான். அவள் களத்தின் மறுபக்கமாக செல்ல அவனும் உடன் நடந்தான். அவள் நிலத்திலிருந்த வடு ஒன்றை நோக்கி “அறிவிலி!” என்று கூவினாள். “வீணன்!” என இன்னொரு அம்புவடு நோக்கி பற்களை கடித்தாள். இன்னொன்றை ஓங்கி உதைத்தாள். இன்னொரு வடுமேல் காறி உமிழ்ந்தாள். வடுக்களை நோக்க நோக்க அவள் கொண்ட வெறி ஏறிக்கொண்டே செல்வதை அவன் உணர்ந்தான். இரு கைகளையும் ஓங்கி அறைந்துகொண்டு தலைதூக்கி விண்ணை நோக்கி பெருங்குரலெழுப்பினாள். பின்னர் ஓடத்தொடங்கினாள். மண்மேல் விழுந்துகிடந்த பல்லாயிரம் அம்புவடுக்களின்மேல் வெறியால் இலக்கழிந்து சுற்றிவந்தாள். கால் தளர்ந்தவள்போல் அமர்ந்தாள்.

“அன்னையே” என அருகே சென்று ஜலன் அழைத்தான். “அவன் இன்னமும் உயிருடன் இருக்கிறான்... அவனை இவர்கள் எவராலும் கொல்ல இயலவில்லை. இந்தக் கடையர்களால் அவன் உடல்மேல் ஒற்றை அம்பையேனும் தொடுக்கமுடியவில்லை...” என்று அவள் இரு கைகளையும் நீட்டி சொன்னாள். அக்கைகள் நரம்புகள் புடைத்து நாணேற்றிய வில் என இழுபட்டு நின்றிருந்தன. கழுத்துத் தசைகள் தெறிக்க வாய் திறந்து வெண்பற்கள் தெரிந்தன. “இவர்கள் எவரும் அவனை கொல்லப்போவதில்லை... கோழைகள்... அறிவிலிகள்!” அவள் உளமுடைந்து விம்மினாள். கண்ணீர் வழிய “பல்லாயிரம் அம்புகள்... இவையனைத்தும் அவனுக்காகத் தொடுக்கப்பட்டு இலக்கிழந்தவை. வீணாக மண் அடைந்தவை... பல்லாயிரம் முறை எண்ணத்தால் கொல்லப்பட்டவன், தொடப்படாதவனாக திரும்பிச் சென்றான். தெய்வங்களே! தெய்வங்களே!” என்றாள். அவள் தன் நெஞ்சில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டாள். தலையை அசைத்தபடி வீறிட்டலறி அழுதாள்.

அவன் அவள் எவரென்று உணர்ந்துகொண்டான். மூதன்னை கதைகளினூடாக அவனை குழவிப்பருவத்திலேயே வந்தடைந்தவள். கைகளை மார்பில் கட்டி தலைகுனிந்து நின்றிருந்தான். “அவனை எவர் வெல்வார்? அவன் குருதி என்று இக்களத்தில் விழும்? கணங்களே! காலதேவர்களே!” அவள் அலறி கைகளால்

குருக்ஷேத்ரத்தின் மண்ணை அறைந்தாள். அந்தக் குருதிச்சேற்றை அள்ளி தன் முகத்திலும் நெஞ்சிலும் பூசிக்கொண்டாள். “அன்னையே, அவரைக் கொல்லும் அம்பு எத்தனைமுறை பிழைத்தாலும் மீண்டும் உருகிமீண்டு கூர்கொண்டு வரும்” என்றான். “இங்கு தடம் விட்டுச்சென்ற அம்புகளில் சில அங்கே அப்பிழைக்காக வெந்து அறைவாங்கிக்கொண்டிருக்கின்றன. உளம் ஆறுக!”

அவள் சுடர் பொங்குவதுபோல் எழுந்து “எங்கே அவன்?” என்றாள். அவன் மறுமொழி சொல்லவில்லை. “எங்கே அந்தச் சிறுமையாளன்? வீரன் என்று காண்டீபம் எடுத்த கீழ்மகன்? என்ன செய்கிறான்? துயில்கிறானா? அவன் நெஞ்சை அறைந்து எழுப்புகிறேன். அவன் முகத்தில் காறியுமிழ்கிறேன்” என்றபடி திரும்பி ஓடலானாள்.

ஜலன் “அன்னையே!” என்று கூவியபடி அவளுக்குப் பின்னால் ஓடினான். அவள் காற்றெனச் சென்றாள். அவ்விரைவை எண்ணி அவன் வியந்தபோதே அதே விரைவில் தானும் சென்றுகொண்டிருப்பதாக உணர்ந்தான். பாண்டவப் படைகளின் நடுவே சென்ற பெரும்பாதையில் இருபுறமும் எரிந்த பந்தங்களின் ஒளியில் செந்நிற ஆடை சுடர்விட அவள் சென்றாள். அவளைத் தொடர்வதன்றி எதையும் எண்ணவியலாதவனாக ஜலன் உடன் சென்றான்.

02.பாண்டவப் படைகளின் நடுவினூடாக காசிநாட்டு இளவரசி அம்பை கூந்தல் எழுந்து நீண்டு பறக்க பெருங்குரலெழுப்பியபடி ஓடினாள். ஒவ்வொரு ஆயிரத்தவர் குழுவுக்கும் இருவர் என காவலர் சிறிய மரமேடைமேல் வேலுடன் விழித்து அமர்ந்திருந்தனர். ஒவ்வொரு அக்ஷௌகிணியின் தொடக்கத்திலும் சிறு காவலரணில் எழுவர் தாழாப் படைக்கலங்களுடன் இருந்தனர். எவரும் அவளை காணவில்லை. பெருவெள்ளம் அகன்ற பின் சேற்றில் பரவிக் கிடக்கும் சருகுகளும் சுள்ளிகளும் தடிகளும்போல பாண்டவப் படை நிலம்படிந்து துயின்றுகொண்டிருந்தது. இரவிலெழுந்த நீர்வெம்மை மிக்க காற்று அவர்களின்மேல் அசையாது நின்றிருக்க மீன்நெய்ப் பந்தங்களின் ஒளிவட்டங்களில் கொசுத்திரள்கள் பொறிகளென, புகையென சுழன்றன. அவர்கள் எவரும் அவள் ஓசையை கேட்கவில்லை.

ஜலன் அவர்கள் தன்னை அறியக்கூடுமென அஞ்சி மறுகணமே அது நிகழவில்லை என்பதை உணர்ந்தான். அவன் காற்றுபோல

விழியறியாது சென்றுகொண்டிருந்தான். அவ்வாறென்றால் நான் இறந்துவிட்டேனா? அந்த எண்ணம் எழுந்ததுமே அச்சத்தில் உடல்நடுக்குற ஒருகணம் நின்றான். இறக்கவில்லை என எவ்வாறு உணர்வது? தன்னை உயிருடன் இருப்பதாக உணர்வதற்கு பிறர் தேவைப்படுகிறார்கள் என்னும் விந்தையால் அவன் உளநிலைப்பு அடைந்தான். அவ்வண்ணமென்றால் உயிரோடிருப்பது என்பதே பிறர் அளிக்கும் நிலைதானா? தன்னிருப்பென்பது காலமும் இடமும் கடந்தது. தான் மட்டுமே அறிந்தது.

என்ன செய்வதென்றறியாமல் அவன் சுழன்று நோக்கினான். அறிக, என்னை அறிக! நான் இருக்கிறேன். நான் இங்கிருக்கிறேன். கூச்சலிடலாம், நெஞ்சிலறைந்து வீறிடலாம். இவர்களில் எவரேனும் என்னை கேட்டால், எவர் விழியேனும் என்னை அறிந்தால், நான் உயிருடனிருக்கிறேன். கேட்டாகவேண்டும், அறிந்தாகவேண்டும். இல்லையேல் நான் இப்புவியில் இல்லை என்றாவேன். அவன் “காவலர்தலைவரே! காவலர்தலைவரே!” என அழைத்தான். காவலர்தலைவன் அவ்வொலி எட்டும் தொலைவுக்கு அப்பால் என இயல்பாக வேலை கைமாற்றியபடி கொசுக்களை விரட்டினான். அவனருகே பந்தம் மெல்லிய ஓசையுடன் வாய்திறந்து ஒரு வண்டை விழுங்கியது.

ஜலன் பெருகும் அச்சத்துடன் கால்கள் நடுங்க நின்றான். பின்னர் எண்ணி காலெடுத்து முன்னால் சென்று காவலர்தலைவனின் தோளை மெல்ல தொட்டான். அவன் அதை உணரவில்லை என்று உணர்ந்ததும் இரு கைகளாலும் அவன் உடலைப்பற்றி உலுக்கினான். அவனால் தொட முடிந்தது, மானுட உடலின் வெம்மையையும் மென்மையையும் அறியமுடிந்தது. ஆனால் காவலர்தலைவன் வெறுமனே கொட்டாவி விட்டபடி சாய்ந்து அமர்ந்துகொண்டான். ஜலன் தளர்ந்து வேலை ஊன்றி மண்ணில் குந்தி அமர்ந்தான். சில கணங்கள் உளம் தொய்ந்து அசைவிழந்து கிடந்தது. ஒரு கணத்தில் பற்றிக்கொள்ள துயரா சினமா என்றறியாத உளப்பொங்குதல் எழுந்தது. கண்களிலிருந்து நீர் வழியலாயிற்று. எழுந்து வேலால் அங்குளோர் அனைவரையும் குத்திவீசவேண்டும் என்றும், அவர்களின் குருதிமேல் நின்றாடவேண்டும் என்றும் வெறிகொண்டான். ஆனால் உடல் செயலற்று இருந்தது.

பின்னர் எழுந்து திரும்பி நோக்கினான். ஒன்றே செய்வதற்குள்ளது, சென்று தன் காவல்மேடையை அடைவது. அங்கு என் உடல் இருக்கும். அரைத்துயிலில், விண்மீன்கள் உதிர்வதை

நோக்கிக்கொண்டிருக்கும். சென்று அதில் பொருந்திக்கொள்வேன். அவ்வுடலில் இருந்து ‘எல்லாம் கனவு!’ என உணர்ந்து விழித்துக்கொள்வேன். அவன் திரும்புவதற்குள் அப்பாலிருந்து வெறிக்கூச்சல் எழுந்தது. அவன் பதைத்து நோக்கியபோது இரு கைகளையும் விரித்தபடி அம்பை அவனை நோக்கி சுழல்காற்றென வருவது தெரிந்தது. அவன் “அன்னையே” என்றான். “வா. வந்து காட்டு... எங்குளான் அவன்? அவன் எங்குளான்?” என்று அவள் கூவினாள். “வருகிறேன், அன்னையே” என்று சொல்லி அவன் அவளுடன் ஓடினான்.

வற்றிய ஏரியின் மீன்படிவு என துயிலும் படைகளினூடாக அவர்கள் சென்றார்கள். “வீணர்கள்... கோழைகள்...” என்று அவள் பற்களைக் கடித்து கைகளை நீட்டி கூவினாள். “போர்புரிய வந்தவர்களல்ல இவர்கள்... கீழ்மக்கள். தலைகொடுக்க வந்த வெள்ளாடுகள்...” என சிலரை ஓங்கி உதைத்தாள். அவர்கள் திடுக்கிட்டு உடலதிர்ந்தபின் மீண்டும் துயிலில் மூழ்கினர். ஜலன் “அதோ அதுதான் இளைய பாண்டவர் அர்ஜுனரின் பாடிவீடு, அரசி” என்றான். உறுமலோசையுடன் அவள் அதை நோக்கி சென்றாள்.

தட்டிகளாலும் மரப்பலகைகளாலும் செய்யப்பட்ட சிறிய பாடிவீட்டின் கதவு திறந்திருந்தது. வெளியே இரு காவலர் வேல்களுடன் அமர்ந்திருந்தனர். அவள் அவர்களைக் கடந்து உள்ளே சென்று அங்கே மஞ்சப்பலகையில் மல்லாந்து படுத்திருந்த அர்ஜுனனை அணுகினாள். அவள் உள்ளே நுழைந்த காலடியோசையை அவன் உடலே கேட்டது. மூடிய விழியிமை விதிர்ப்பு கொள்ள அவன் எழுவதற்குள் அவள் அவன் நெஞ்சின்மேல் தன் காலைத் தூக்கி வைத்தாள். “எழுக, மூடா! கீழ்மகனே, நாணிலையா உனக்கு?” என்றாள். “அரசி! அன்னையே!” என அவன் தடுமாறினான். “உன் ஆயிரம் அம்புகள் ஒற்றை இலக்கை அடையாது உதிர்ந்தன. வீரனென்று வில்தூக்கி அலைகிறாயா? இழிந்தோனே, நீ அரசமகனா?” என்று கூவினாள்.

அர்ஜுனன் விழிமலைக்க அவளை நோக்கினான். கைகளைக் கூப்பியபடி “அன்னையே, நான் என் இறுதித்திறன் வரை குவித்தே அவரை எதிர்கொள்கிறேன். என்னிடம் இனி எஞ்சுவதேதுமில்லை” என்றான். “பிறகு ஏன் உன்னை இருதோள் வில்லவன் என்கிறார்கள்? எங்குளது உன் கலை? எவர் உன் ஆசிரியர்?” என்றாள் அவள். அர்ஜுனன் “என் கலையை நான் ஒவ்வொருநாளும் கணமும் என வழிபட்டேன். ஆனால் மும்முறை அதன்மேல் நான் ஐயம் கொண்டு வில்தாழ்த்தினேன். அரசி, ஒவ்வொருமுறை ஐயம்கொள்கையிலும்

என் கலை என்னை ஏழுமுறை கைவிடுகிறது. வழுக்குமரம் ஏறுபவன்போல் இழந்து இழந்து எய்தியவன் நான். அவரோ ஒருகணமும் தன் வில்லை ஐயுறவில்லை. பெருங்கலை சலியா நோன்பை விலையெனக் கோருகிறது" என்றான்.

அவள் "கீழ்மகனே!" என்று கூவியபடி அவன் தலையை ஓங்கி உதைத்தாள். "இழிமகனே, கோழையே, கீழோனே!" என்று கூவியபடி வெறிகொண்டு அவன் தலையை உதைத்துக்கொண்டே இருந்தாள். பின்னர் மூச்சுவாங்க நின்று "நீ பிறந்ததற்கு வேறேது பயன்? இக்கடன் தீர்க்க ஆற்றலில்லாதோன் என்றால் தின்று கழித்து செத்து மட்கும் ஊன்பிண்டமன்றி வேறென்ன நீ?" என்றாள். சினவெறியில் அவள் கைகள் பெருகுவதுபோல தோன்றின. நெஞ்சிலும் தலையிலும் மாறிமாறி ஓசையுடன் அறைந்தபடி திரும்பி நான்கு பக்கமும் நோக்கி "எங்கு சென்றீர்கள்? இழிமகள்களே, எங்கு சென்றீர்கள்? வந்து சொல்லுங்கள், உங்கள் குருதியின் துளியிடம் அவன் ஏன் பிறந்தான் என்று... வருக..." என்று குரலெழுப்பினாள்.

குடிலின் மறுபக்கக் கதவினூடாக அவளைப்போலவே தோன்றிய அரசமகள் ஒருத்தி மெல்ல உள்ளே வந்தாள். அவளைத் தொடர்ந்து அவள் ஆடிப்பாவை என இன்னொருத்தி. அவர்களை நோக்கி அம்பை "இதோ உங்கள் உடலில் முளைத்தெழுந்த வில்லவன். திறனிழந்து நம்பிக்கையழிந்து உயிர்பிரிந்த உடல் என கிடக்கிறான்... பார்த்துக்கொள்ளுங்கள். இவனுக்காகவே இத்தனை நாள் விண்ணிலிருந்து பெருமிதம் கொண்டீர்கள்..." என்றாள். சினம் தாளாமல் அவள் நகைத்தாள். விழிகளில் அழுகையுடன், பற்கள் துறித்துத் தெரிய, தொண்டை ஏறியிறங்க, தலையை பின்தள்ளி முழங்கிச் சிரித்து "நீங்கள் உளம் கரந்த வஞ்சம் எனக்கு அளித்த பரிசு இந்த ஊன்தடி. உங்கள் தவம் முதிர்ந்து எழுந்தது இந்த வெற்றுரு... நன்றாக பார்த்துக்கொள்க... நன்று... இதற்குமேல் உங்களுக்கும் ஒன்றுமில்லை என்று அறிக!" என்றாள்.

அர்ஜுனன் எழுந்து அமர்ந்து கைகூப்பி அவ்விரு பெண்களையும் நோக்கி "அன்னையரே!" என்றான். கசப்புடன் முகம் சுளிக்க முன்னால் வந்து "உன் தந்தையரைப் பெற்ற அன்னையர் நாங்கள். என் பெயர் அம்பிகை" என்றாள் முதல் அரசி. "இவள் என் தங்கை அம்பாலிகை. எங்கள் கொழுநரை நாங்கள் விரும்பினோம். எளிய விழைவுகளிலும் அதைவிட எளிய வஞ்சங்களிலும் திளைத்தோம். எங்கள் கனவுகளில் நாங்கள் எங்கள் அக்கையாகி எரிந்து எழுந்துகொண்டிருந்தோம். அதை எங்கள் உள்ளத்திடமிருந்தே மறைத்தோம்."

“என் மைந்தன் பிறந்து அவன் விழியிலாதோன் என வயற்றாட்டி சொன்ன முதற்கணம் நான் ஏங்கியது இவன் எப்படி அவரை எதிர்கொள்வான், எங்ஙனம் வஞ்சம் முடிப்பான் என்றுதான். அன்று உளமழிந்து கண்களை மூடிக்கொண்டு விழிநீர் வடித்தேன். அவன் கொண்ட விழியின்மையால் அக்கண்ணீர் என எண்ணி சேடியர் என்னை நோக்கி ஆறுதலுரைத்தனர். நான் வியந்துகொண்டிருந்தேன். அந்த முதல் எண்ணம் என் உள்ளத்தில் இயல்பாக எழுந்தபோதுதான் என் கனவுக்குள் இருப்பதென்ன என்று என் உள்ளம் அறிந்தது” என்றாள் அம்பிகை. “நான் என் அக்கையன்றி வேறல்ல. அவள் பிறிதொரு உடலில் பிறிதொரு வழியில் வெளிப்பட்டதே நான்.”

அம்பாலிகை “ஆம், நானும் என் மைந்தன் வெளிறிய சிறுபாவை என பிறந்தபோது முதல் எண்ணமாக அடைந்தது இவன் கையில் வில் நிற்குமா, இவனால் அவ்வஞ்சத்தை முடிக்கவியலுமா என்றுதான்…” என்றாள். அம்பிகை மேலும் அருகே வந்தாள். “எங்கள் வஞ்சம் எங்கள் மைந்தரின் ஆழத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. அவர்கள் தங்கள் கனவுகளில் அதை அறிந்துகொண்டிருந்தனர். ஆகவே நனவில் அதற்கு எதிராக நெடுந்தொலைவு சென்றனர். அந்தக் கனவுகளிலிருந்து பிறந்தவர்கள் நீங்கள்…”

அவள் முகம் அம்பையின் முகம்போலவே உணர்வுக்கொதிப்பு கொண்டு அசைந்தது. “உன் கைவில் எங்களால் அளிக்கப்பட்டது. அதற்கு நாங்கள் இட்ட முதற்பணி அவ்வஞ்சத்தை முடிப்பதே. அதை செய்யாதொழிந்தால் உன்மேல் விண்ணிலிருந்து காறி உமிழ்வோம். நீ விண்ணுலகு எய்த ஒருபோதும் ஒப்போம். அறிக, விண்ணேறிய முன்னோரின் சொல்லின்றி எவரும் மூச்சுலகையும் அடைவதில்லை. சிறுமதியனே, நீ தோற்று மீண்டாயென்றால் உன்னை எங்கள் எரிசொல்லால் மீளா இருளுலகுக்கே அனுப்புவோம். உன் குடியின் மைந்தர் எவரும் அளிக்கும் எள்ளும் நீரும் ஏற்கமாட்டோம்…”

அம்பாலிகை “நீ உன் தந்தையின் மைந்தன் என்றால் உன் வஞ்சம் எரிந்தெழுக! வென்றால் மட்டுமே நீ எங்கள் மைந்தன். இது எங்கள் ஆணை! அறிக தெய்வங்கள், இது எங்கள் இறுதிச் சொல்!” என்றாள். அம்பை “வில்லுக்கும் தனக்கும் நடுவே சொல்வந்து நிற்கக் கண்டவன் இவன். இனி இவன் வெல்லப்போவதில்லை. விலகுக… இனி இவனிடம் எனக்கு சொல் இல்லை” என்றபடி வாசல் நோக்கி சென்றாள். அர்ஜுனன் கைநீட்டியபடி அவள் பின்னால் சென்று “அன்னையே… அன்னையே… நில்லுங்கள். ஆணை, நான் என்

வில்லுடன் களம்நின்று அவரை கொல்வேன். என் அன்னையர் உளம்கொண்ட வஞ்சம் ஒழிப்பேன். ஆணை!” என்றான்.

அம்பை நின்று இகழ்ச்சியால் வளைந்த உதடுகளுடன் “நீ அவனுடன் களம் நின்றுபொருதுவாய், அது எனக்கு தெரியும். எவ்வகையிலும் அவனை வெல்வேன் என வஞ்சினம் உரைத்துள்ளாயா?” என்றாள். அர்ஜுனன் “அவரை வெல்வேன் என்று வில்தொட்டு ஆணையிட்டுள்ளேன்” என்றான். “அறிவிலி!” என அவள் கைநீட்டி கூவினாள். கழுத்துத் தசைகள் அதிர விழிகள் நீர்மைகொள்ள பெருங்குரலில் கேட்டாள் “நான் கேட்டதற்கு மறுமொழி சொல். எவ்வண்ணமேனும் வெல்வேன், எந்நிலையிலும் கொல்வேன் என்று வஞ்சினம் உரைத்தாயா?” அர்ஜுனன் பேசாமல் நின்றான்.

அம்பை பற்களைக் கடித்து சீறும் குரலில் “இப்போது நான் கேட்கிறேன், அவனைக் கொல்ல எந்த எல்லைக்கும் செல்வாயா?” என்றாள். இரைகண்ட சிறுத்தைபோல் தலையை முன் நீட்டி மெல்லடி வைத்து அவனை அணுகி “சொல், எவ்விலையும் கொடுத்து அதை எய்துவாயா?” என்றாள். அவன் திறந்த வாயும் விழித்த கண்களுமாக நின்றான். “சொல், நீ கொண்ட நெறிகளனைத்தையும் கைவிடுவாயா? நீ உயர்வென்று எண்ணும் அனைத்தையும் கடந்துசெல்வாயா? அரக்கனாக அசுரனாக விலங்காக பாதாளதெய்வமாக மாறி நின்று போரிடவும் சித்தமாவாயா?”

அர்ஜுனன் “இல்லை அன்னையே, நான் என் வாழ்க்கையை இளைய யாதவருக்கு அளித்தவன். அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டவன்!” என்றான். “நீ யாதவனை விட்டு எழுவாயா? அவன் குருதிகொள்ளும்பொருட்டு நாராயணவேதத்தை உடைப்பாயா?” அர்ஜுனன் “மாட்டேன்” என்றான். “சீ, இன்று முடிந்தது உனக்கும் எனக்குமான உறவு… இழிவிலங்கே, விலகு!” என்றபடி அவள் திரும்ப அர்ஜுனன் “அன்னையே…” என்றான். “என்னை இனி அச்சொல்லால் அழைக்காதே” என்றபடி அவள் வெளியே ஓடினாள்.

இரு அன்னையரும் அவளைத் தொடர ஜலன் அர்ஜுனனை நோக்கியபடி நின்றான். அவன் உடல் காய்ச்சல்கண்டவன்போல் நடுங்கிக்கொண்டிருந்தது. பலமுறை வாயைத் திறந்து மூடினான். பின்னர் மெல்ல பின்னகர்ந்து சுவரை பற்றிக்கொண்டு மஞ்சத்தில் அமர்ந்தான். வெளியே அன்னையரின் பெருங்கூச்சல் கேட்டது. ஜலன் பாடிவீட்டிலிருந்து வெளியே ஓடினான். அங்கே மூவரும் கைகளை விரித்து ஆர்ப்பரித்தபடி சென்றார்கள்.

ஜலன் துயின்றுகொண்டிருப்பவர்களை நோக்கினான். அவர்கள் அவ்வோசையை கேட்கவில்லை என்று முதலில் தோன்றியது. ஆனால் துயின்றுகொண்டிருந்த ஒருவனின் முகத்தை நோக்கியபோது அதில் தெரிந்த உணர்வெழுச்சியின் நெளிவு அவனை திகைக்கச் செய்தது. அவன் முகங்களை மாறி மாறி பார்த்தான். அத்தனை முகங்களிலும் அச்சமும் சினமும் துயரும் என உணர்வுகள் கொந்தளித்துக்கொண்டிருந்தன. படுத்தபடியே அவ்வுடல்கள் போர்புரிந்துகொண்டிருந்தன.

மூன்று அன்னையரும் பீமனின் பாடிவீட்டை அணுகி அதன் இரு கதவுகளையும் மாறிமாறி அறைந்தனர். பெருங்காற்றிலென கதவுகள் உடைந்து திறக்க உள்ளே புகுந்து சுழன்று வெளியே வந்தனர். மகிழமரத்தின் அடியில் பீமன் வெறுந்தரையில் மல்லாந்து படுத்திருந்தான். அவனருகே ஊனுணவுக் கலங்களும் மதுக்குடங்களும் உருண்டு கிடந்தன. அம்பை பாய்ந்து வந்த விசையில் அவன் தோளை ஓங்கி உதைத்து “எழுக! எழுக, மூடா!” என்றாள். பீமன் எழுந்தமர்ந்து அவளை நோக்கி உடனே அடையாளம் கண்டுகொண்டு கைகூப்பியபடி எழுந்து நின்று “அன்னையே!” என்றான்.

“நீ அவனை கொல்லலாகுமா? சொல், நீ அவனை கொல்வாயா?” என்றாள் அம்பை. “அன்னையே, அவரைக் கொல்ல வஞ்சினம் உரைத்தவன் என் இளையவனாகிய அர்ஜுனன்” என்றான். அம்பை பாய்ந்து அவன் நெஞ்சை எட்டி உதைக்க அவன் இரண்டு அடி பின்னடைந்தான். அவன் முகத்தில் உமிழ்ந்து “கோழை… கீழ்மகன்… என் ஆணையை தவிர்க்கிறாயா?” என்றாள். “இல்லை, அன்னையே. அதன்பொருட்டு இமையசைக்காது உயிர்துறப்பேன். இது என் சொல். ஆனால் அவரைக் கொல்ல அவனால்தான் இயலும் என்பது நிமித்திகர் கூற்று” என்றான் பீமன்.

“இல்லை, அவனைக் கொல்ல அவனால் இயலாது. அல்ல அல்ல என அனைத்தையும் விலக்கி ஒன்றை மட்டும் தான் என கொண்டுள்ளவனின் தன்னிலையை மூன்று பெருந்தெய்வங்களும் காக்கின்றன. அவனைக் கொல்ல அந்த இழிமகனால் இயலாது. அவனைக் கொல்பவன் அவனுக்கு நேர் எதிர்த்திசையில் செல்பவன். அவனுக்கு விண்ணுலாவும் தேவர்கள் அனைவரும் துணையிருப்பர். இருளுலாவும் அத்தனை தெய்வங்களையும் துணைக்கொள்பவனே அவனை கொல்லமுடியும்” என்றாள் அம்பை. “நான் துணைக்கொள்கிறேன். நான் என்னை பலியிட்டு அவர்களின் ஆற்றலனைத்தையும் அடைகிறேன்” என்றான் பீமன்.

“சொல், எதை துறப்பாய்? நீ அவனைக் கொல்லும்பொருட்டு எதை கடப்பாய்?” பீமன் தன் நெஞ்சில் ஓங்கியறைந்து “அனைத்தையும் துறப்பேன், எதையும் கடப்பேன். இது என் ஆணை!” என்றான். “நீ கொண்ட நல்லியல்புகள் அனைத்தையும் துறப்பாயா? தெய்வம் நீத்தோர் சான்றோர் என நீ பெற்ற நல்லருள் அனைத்தையும் இழப்பாயா?” என்றாள் அம்பிகை. கைநீட்டியபடி அவள் அவனை நோக்கி வந்தாள். “சொல், நீ எங்கள் பொருட்டு முடிவிலாப் பெருநரகுக்குச் செல்லவும் துணிவாயா?” பீமன் “ஆம் அன்னையே, செல்வேன். எனக்கென்று எதையும் நாடமாட்டேன்” என்றான்.

அம்பாலிகை அருகே வந்து அவன் தோளைத் தொட்டு “உன்னை வாழ்த்துகிறேன், மைந்தா. என் கருவில் உன் தந்தை எழுந்தபோது அடைந்த உவகையை இன்று அடைகிறேன்” என்றாள். அவன் மறுதோளைத் தொட்டு “எழுக! உன் இருளனைத்தும் பெருகுக! நீ வெல்வாய்!” என்றாள் அம்பை. பீமன் “ஆணை, அன்னையே!” என்றான். அம்பை தன் இரு கைகளையும் விரிக்க இருபுறமும் இருளில் அசைவுகள் எழுந்தன. ஜலன் அறியாது பின்னடைந்தான். பேருருவ நிழல்தோற்றங்களை அவன் அங்கே கண்டான்.

இருளில் நாகங்கள் என விழியொளி சூடியவை. கள்ளிச்செடியென கைகள் பெருகியவை. விடாய்கொண்ட வாயும் வெறிநகைப்பாகிய பற்களும் கொண்டவை. அவை கைகளை விரித்து வெறிக்கூச்சலெழுப்பின. ஒன்றுடன் ஒன்று இணைந்த உடல்கள் சுழித்து சுற்றிவந்தன. பீமன் தன் கைகளை விரித்தபடி அவற்றை நோக்கி போர்க்குரலெழுப்பினான். நெஞ்சில் ஓங்கி அறைந்து வஞ்சினம் கூவினான். அவை அதை ஏற்று முழக்கமிட்டன. ஒலி விரியவிரிய அவை பெருகிப் பரந்தன. ஆயிரம் பல்லாயிரம் தெய்வங்கள். இருண்ட ஏழடுக்குகளிலிருந்து அவை எழுந்தெழுந்து வந்தபடியே இருந்தன.

பீமனின் உடல் கருமைகொண்டு ஒளிவிடத் தொடங்கியது. அவன் கைநகங்கள் எருமை விழிகளென தெரிந்தன. கைகளை விரித்து அசைத்து மதயானை என பிளிறியபடி அவன் துயிலும் படைகள் நடுவே சுற்றிவந்தான். அவனுடன் நோக்க நோக்க பெருகிக்கொண்டிருந்த பேயுருக்களும் சேர்ந்துகொண்டன. அவை துயின்றுகொண்டிருந்த படைவீரர்களின் நெஞ்சிலும் தலையிலும் மிதித்து எழுப்பின. தங்கள் தலையிலும் மார்பிலும் அறைந்தபடி கூச்சலிட்டன. அவர்கள் ஒவ்வொருவராக அக்குரல் கேட்டு எழுந்தார்கள். அவர்களின் விழிகள் மாறிவிட்டிருந்தன. அவர்களும் கைகளை விரித்து போர்க்கூச்சலெழுப்பினர். அலையலையென

பாண்டவப் பெரும்படை எழுந்துகொண்டிருந்தது. பூதவடிவுகொண்ட தெய்வங்களும் வெறியெழுந்த படைவீரர்களும் இணைந்து நிழலுடன் நிழல் கலந்ததுபோல் அவ்வெளியை நிறைத்து கொந்தளித்தனர்.

“செல்க! நாளை அவன் நெஞ்சுபிளந்து குருதி கொள்க! நீ வெல்வாய். பிறிதொன்றிலாதவன் வெல்லாமலிருக்க ஊழ்நெறியில்லை!” என்று அம்பை சொன்னாள். “ஆம். நான் வெல்வேன். நான் குருதியிலாடுவேன்!” என்று பீமன் நெஞ்சிலறைந்து கூச்சலிட்டான். அம்பை “அங்கே இலக்கு பிழைத்த அம்புகள் அனைத்தும் வஞ்சம் திரட்டி மீண்டெழுகின்றன. அவை உங்கள் அம்புத்தூளிகளில் மீண்டும் வந்தமர்க... நாளை பெரும்போரில் இந்த மண் குருதி வயலாகும்” என்றாள்.

முதல்முறையாக அவள் முகத்தில் மகிழ்ச்சி தெரியும் சிரிப்பு எழுந்தது. “அறிக, தெய்வங்கள்! ஒரு துளி விழிநீர் ஏழு குருதிக்கடல்களுக்கு நிகரானது. ஒரு பெண்ணுக்கிழைத்த பழிக்கென பன்னிரு தலைமுறைகள் நிணப்பலி அளித்தாகவேண்டும்!” மறுகணமே மகிழ்வு வஞ்சமும் வெறியும் துயரமும் கசப்புமென்றாக அவள் வீறிட்டாள் “வஞ்சம் எழுக! பெண்வஞ்சம் எழுக! குருதி! குருதி! கொழுங்குருதி! செங்கொழுங்குருதி!”

அவர்கள் மூவரும் பாண்டவப் படைகளினூடாக பறப்பதுபோல ஊடுருவிச் சென்றார்கள். படைப்பிரிவுகளுக்கு பின்பக்கம் அடுமனையும் மருத்துவநிலையும் பலநூறு நெய்விளக்குகள் எரிய ஒளிகொண்டிருந்தன. அடுமனைகளில் கலங்கள் அனல்கொள்ளத் தொடங்கிவிட்டிருந்தன. எழுந்த புகை பந்த வெளிச்சத்தில் தழலென்றே விழிக்கு தெரிந்தது. நிழலுரு மேலெழுந்து விண்ணில் பரவியாட அடுதொழிலர் உலவிக்கொண்டிருந்தனர். மருத்துவநிலைகளில் கைகளில் அகல்விளக்குகளுடன் அலைந்துகொண்டிருந்த மருத்துவப்பணியாளர்கள் மின்மினி செறிந்த சேற்றுப்பரப்பென அதை தோன்றச் செய்தனர்.

அவர்களுக்கும் அப்பால் யானைக்கொட்டடிகளும் புரவிநிலைகளும் இருந்தன. அவர்களைக் கண்ட யானைகள் கால் மாற்றிவைத்து மெல்ல பிளிறின. கட்டுத்தறியில் துள்ளிச்சுழன்ற புரவிகள் கனைத்தன. அப்பால் விழிதொடு எல்லைவரை விரிந்த ஏவலர் படைகளில் கட்டப்பட்டிருந்த காளைகள் கொம்புதாழ்த்தி பெருமூச்சுவிட்டன. ஏவலர் சிலர் துயிலில் புரண்டுபடுத்து

முனகினர். சிலர் கடுங்குளிரை உணர்ந்து இடையாடையால் உடல் போர்த்திக்கொண்டனர்.

அதற்கும் அப்பாலிருந்த கொல்லர்களின் ஆலைநிரை உமிநீற்றுக் குவைகள்போல் புகை எழுப்பிக்கொண்டிருந்தது. அங்கே துருத்திகள் மூச்செறிய எரிகனல் சீறி சீறி எழுந்தது. பலநூறு கொல்லர்கள் பழுக்கக் காய்ச்சப்பட்ட வேல்முனைகளையும் அம்புமூக்குகளையும் கிடுக்கியால் எடுத்து பீடத்தில் வைத்தனர். பெருங்கூடங்கள் காற்றில் சுழன்று வந்து அறைய உலோகம் அடிவாங்கி சிலம்பி துள்ளியது. பின் அடங்கிய ஒலியெழுப்பி வடிவம் சூடியது. அதன் மேல் அடிமேல் அடியென விழுந்துகொண்டே இருக்க சிவந்து சிவந்து அது தன் சிதைவுகள் அனைத்திலிருந்தும் விடுபட்டெழுந்தது.

ஜலன் விழித்து நோக்கியபடி நின்றான். அன்னையர் உலைப்பீடங்கள் நடுவே பரவினர். ஒவ்வொரு அம்பாக நோக்கி தலையசைத்தபடி, பற்களைக் கடித்து உதடுகளை நெரித்து உறுமியபடி சுற்றிவந்தனர். அவன் பழுக்கக் காய்ச்சப்பட்ட அம்புகள் மலரிதழ்கள்போல பணிவதை, வழிந்து நீண்டு முனைகொள்வதை, நீரில் விழுந்து சீறி மூழ்குவதை கண்டான். அவற்றை எடுத்து சுழலும் சாணைகற்களில் வைத்தபோது செம்பொறிகள் நீண்டு தெறித்தன. கூர்கொண்டு வெள்ளித்துளி ஒன்றை சூடிக்கொண்டன. ஒரு விழி அவற்றில் திறப்பதுபோலிருந்தது. முட்டைக்குள்ளிருந்து வெளிவந்த நாகத்தின் முதல் விழிநோக்கு.

“பிறந்து பிறந்தெழுக! ஒழியாது இலக்கு தேடுக! குருதியுண்டு அமையும்வரை செல்க!” என்று அம்பை கூவினாள். “நாளை… விடிகிறது… நாளை அவன் வீழும் நாள்… பல்லாயிரம் தலைகள் உருள்க! பல்லாயிரம் நெஞ்சுகள் பிளந்தழிக! சோரி பெருகுக! வீழ்வோர் குரலால் விண்நிறைக!” அவளுடன் இணைந்து கைகளை விரித்தபடி அம்பிகையும் அம்பாலிகையும் “ஆம், நாளை! நாளை!” என்று கூவினர். “நாளை வஞ்சநிறைவு. நாளை பழிப்பொலிவு!” அவர்கள் கைகளை விரித்து நகைத்துக்கூவியபடி வெளியே செல்ல ஜலன் பின்னால் சென்றான். இருளலைகளாக கொந்தளித்துக்கொண்டிருந்த பாண்டவப் படைகளுக்கும் பாதாளதெய்வங்களுக்கும் நடுவே அவர்கள் வெறிக்கூச்சலிட்டுக்கொண்டு முன்னால் செல்ல அவன் தொடர்ந்தான்.

03.இரு கைகளையும் தூக்கி ஆர்ப்பரித்தபடி செருகளத்தின் முகப்பு நோக்கி ஓடிய அம்பையைத் தொடர்ந்து இருபக்கமும் அம்பிகையும் அம்பாலிகையும் சென்றனர். அவர்களின் குரல் கேட்டு அங்கே துயின்றுகிடந்த போர்வீரர்கள் அனைவரும் எழுந்தனர். ஒற்றைச்சரடால் கோக்கப்பட்ட பாவைகள் என ஒருவரால் ஒருவர் தூக்கப்பட்டு எழுந்து படைக்கலங்களைத் தூக்கி ஆட்டி போர்க்கூச்சலெழுப்பியபடி அவளுடன் பெருகிச்சென்றனர். துறுத்த கனல்விழிகளும் இளித்த வெண்பற்களும் பெருகிச்சுழலும் கைகளுமாக ஆழுலகத் தெய்வங்கள் அவர்களுடன் ஊடுகலந்து கொந்தளித்தன. கன்னங்கரு நிறத்தில் ஒரு நதி அலையடித்துச் சரிவிறங்குவதுபோல அப்படை முன்னால் சென்றது.

செருகளத்திற்குள் சென்றதும் பேய்த்தெய்வங்கள் குருதிமணம் கொண்ட ஓநாய்களையும் கழுதைப்புலிகளையும்போல தரையை முகர்ந்தும் கைகால்களால் சுரண்டியும் எக்களிப்போசையிட்டு துள்ளிக்குதித்துச் சுழன்றன. பல்லிளித்து உறுமி ஒன்றுடனொன்று பூசலிட்டன. வானோக்கி முகம்தூக்கி ஊளையிட்டு நெஞ்சிலறைந்துகொண்டன. ஜலன் அவர்களின் நடுவே அஞ்சியும் ஒதுங்கியும் முன்னால் சென்று அம்பையை அடைந்தான். அவள் தன் முன் விரிந்துகிடந்த கௌரவப் படையை நோக்கி சென்று அதன் முகப்பில் நின்று இரு கைகளையும் விரித்து அறைகூவினாள். அவள் விரல்நகங்களில் விழிகளெழுந்ததுபோல் ஒளியிருந்தது. அவள் குரல் அலையலையாக எழுந்து இருளில் பரவியது.

மறுபக்கமிருந்து ஒரு பெண்ணுருவம் வருவதை ஜலன் கண்டான். விழிகூரும்தோறும் அவள் உருவம் தெளிவுற்றது. இளநீலப் பட்டாடை அலைகொண்டு காற்றில் பறக்க கூந்தல் எழுந்து சிறகென உலைய அவள் சீரடியில் நடந்து வந்தாள். கண்கள் அம்பையை நோக்கி உறுத்திருந்தன. அவளுக்குப் பின்னால் அவளைப்போலவே நீலப் பட்டாடை அணிந்த எழுவர் வந்தனர். மேலும் பலர் தொடர்வதுபோல் இருளுக்குள் அசைவுகள் திளைத்தன. கௌரவப் படையே எழுந்து வருவதுபோல் ஜலன் உணர்ந்தான்.

அம்பை தன்னைத் தொடர்ந்து வந்தவர்களிடம் கைகாட்டிவிட்டு செருகளத்து எல்லையை கடக்க முனைந்தபோது அவள் இரு கைகளையும் விரித்துத் தடுத்து “நில்!” என்றாள். “யார் நீ? என்னை தடுப்பதென்றால் என்ன பொருளென்று அறிவாயா?” என்று அம்பை உறுமினாள். “ஒவ்வொன்றையும் எரியாக்கி சாம்பலாக்கும் தழல்

நான். விலகுக, என் சினத்தைத் தாங்குபவரென எவரும் இங்கில்லை. அகல்க!” எதிரில் நின்றவள் “நான் கங்கை. அனைத்தையும் உண்டு வயிற்றிலடக்கும் நீர் நான். எரிவடிவனின் இணையமர்ந்தவள். என் மைந்தனைக் கொன்று வஞ்சம் தீர்க்கும்பொருட்டே நீ களம் புகுந்துள்ளாய் என்று அறிவேன். எண்ணுக, ஒருபோதும் அது நிகழப்போவதில்லை! அவன் வாழ்நாளெல்லாம் என்னால் காக்கப்பட்டவன். இந்நிலத்தில் நீரென்று ஒழுகுவன அனைத்தும் என் வடிவே. அவனுக்கென எழுந்து திரள பல்லாயிரம் அன்னையர் இங்குள்ளனர்” என்றாள்.

அம்பை ஒருகணம் திகைத்து பின் சினத்துடன் கைநீட்டியபடி அவளை அணுகி “பெண்பழி கொள்பவனின் அன்னைக்கே முதல்பழி. நீ கொண்ட பழி தீர்வது உன் மடியில் கிடந்து அவன் குருதிவடிய உயிர்துறக்கும்போதுதான். நீயல்ல, முதல்மூவரும் அவர்களின் இடம் அமர்ந்த அன்னையரும் எண்ணினாலும் அவனை காக்கவியலாது. தெய்வங்களுக்கும் மேலானது சொல். குருதியும் கண்ணீரும் கொடுத்து கணம்தோறும் பேணப்படும் சொல்லுக்கு அவிநிலைக்கா வேள்வித்தீயின் ஆயிரம்மடங்கு விசை உண்டு என்று அறிக… விலகுக, என் வழியை எவரும் தடுக்கவியலாது!” என்று அலறினாள். வெறிச்சிரிப்புடன் “வையம் காத்திருக்கிறது அவன் வீழ்வதைக்காண. அன்று தொடங்கிய ஒன்று இக்களத்தில் நிறைவுறுகிறது. நீர்மகளே, எப்போதும் சமன்களால் ஆனது இப்புடவி. எனவே முடியாக் கணக்குகளென ஏதும் இங்கு எஞ்சுவதில்லை” என்றாள்.

அம்பை போர்க்கூச்சலுடன் முன்னகர அவளை எதிர்க்குரலுடன் கங்கை தடுத்தாள். அம்பை அவளை முட்டிக்கடக்க முயல அவர்களுக்குப் பின்னால் பெருகிவந்த படைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. சில கணங்களுக்குள் விழிமலைக்கச் செய்யும் பெரும்போர் அங்கே நிகழத் தொடங்கியது. வாள்களும் வேல்களும் மின்னிச் சுழன்று உலோக ஒலியுடன் மோதிக்கொண்டன. வெறிகொண்ட பேய்த்தெய்வங்கள் ஒன்றையொன்று வெறுங்கைகளால் கிழித்துக்கொண்டன. குருதிவெறிகொண்டு கூச்சலிட்டன. வௌவால்கள்போல் கைகளை சிறகுகளாக்கி எழுந்து பறந்து அமைந்து போரிட்டன. புதுக் குருதியின் வாடை எழுந்து சூழ்ந்தது.

ஜலன் சொல்லின்றி ஒழிந்த சித்தத்துடன் வெற்றுவிழிகளாக நின்று அதை நோக்கிக்கொண்டிருந்தான். சுழன்று நோக்கியபோது விழிதொடும் எல்லைவரை போரின் அலைக்குமுறலையே அவன்

கண்டான். மெல்ல கால்தளர்ந்து நிலத்தில் அமர்ந்து முகத்தை கைகளால் பொத்திக்கொண்டான். செவிபுகுந்து உடலை நிறைத்து கைவிரல்நுனிகளைக்கூட அதிரச்செய்யும் அளவுக்கு எழுந்துகொண்டிருந்தது போரின் முழக்கம். ஓசை அவன் விழிகளுக்குள் ஒளிவெடிப்புகளாகவும், நாவில் கடுங்கசப்பாகவும், தோலில் நடுக்காகவும் கூடியது. இருமுறை வயிறு எக்கி வாயுமிழ்ந்தான். பின்னர் களைப்புடன் மல்லாந்து விழுந்தான்.

அவன்மேல் கால்கள் பறந்தோடின. எடைமிக்க பிணங்கள் துடித்தபடி மேலும் மேலுமென விழுந்தன. குருதி பெரிய மழைத்துளிகளாக பொழிந்துகொண்டே இருந்தது. அவன் குருதிச்சேற்றில் மிதந்ததுபோல கிடந்தான். எங்கோ இருந்து அங்கு நிகழும் போர்க்கொப்பளிப்பை நோக்கிக்கொண்டிருந்தான். எடைமிக்க ஒன்று நீரில் அமிழ்ந்திறங்குவதுபோல குமிழிகளுடன் சுழித்தது அப்பெருந்திரள். கணந்தோறும் பெருகும் வெறியுடன் ஒவ்வொரு உடலும் இன்னொன்றை கவ்விக்கொண்டது. விழுந்த உடல்கள்மேல் போரிட்டவர்கள் ஏற மேலும்மேலுமென குவிந்து குவிந்தெழுந்தது.

விழிகளுக்குமேல் மெல்லிய வெளிச்சம் பரவுவதை உணர்ந்ததும் ஜலன் கண்விழித்தான். எழுந்தமர்ந்தபோது படுகளத்தில் அசைவுகள் நிலைத்திருந்ததை கண்டான். கையூன்றி எழுந்து தள்ளாடும் கால்களில் நின்றபடி சுற்றிலும் நோக்கினான். வாள்களையும் படைக்கலங்களையும் தாழ்த்தி களைப்புடன் மூச்சிளைத்தபடி இருபுறமும் வீரர்கள் நின்றிருந்தனர். பேய்த்தெய்வங்கள் நிலத்தில் கால்களையும் கைகளையும் ஊன்றிப்பரவி நிணத்தையும் குருதியையும் அள்ளி அள்ளி மாந்திக்கொண்டிருந்தன. ஓசையின்றி உறிஞ்சியும் ஒன்றோடொன்று பல்காட்டி சீறியும் அவை சுவைகொண்டாடின. அவற்றின் உடல்களே குருதியில் திளைக்கும் நாவுகள் போன்றிருந்தன.

அவன் படைமுகப்பில் அம்பையும் அவளுக்குப் பின்னால் அம்பிகையும் அம்பாலிகையும் நிற்பதை கண்டான். அவர்களுக்கு எதிர்முகம் கொண்டு கங்கையும் ஏழு தங்கைகளும் நின்றிருந்தனர். இருசாராரும் ஒருவரை ஒருவர் முட்டி உச்சவிசையில் அசைவிழந்தவர்கள் போலிருந்தனர். ஜலன் “அன்னையே!” என அழைக்க விழைந்தான். ஆனால் அவன் கூற விழைந்த எவற்றுக்கும் சொல் திரளவில்லை. அவன் நா வறண்டு ஒட்டியிருந்தது. கால்கள் மண்ணில் ஆழப்பதிந்தவை போலிருந்தன.

“இந்த நாள் முடியலாம், இந்தப் போர் ஓயாது… ஆயிரமாண்டுகளாகட்டும். இப்புவியிலுள்ள குருதி முழுக்க இங்கே பெருகட்டும். என் பழி கொள்ளாமல் இங்கிருந்து நான் அகலப்போவதில்லை” என்று அம்பை சொன்னாள். “உன் வஞ்சத்திற்கு என் மைந்தனை நான் விட்டுத்தர இயலாது. நானும் என் தங்கையர் பன்னீராயிரவரும் அவனுடன் நிற்போம். அவன் தேரை எங்கள் விசையால் செலுத்துவோம். அவன் அம்புகளை நாங்கள் ஏந்தி வருவோம். அவனை வெல்ல எவராலும் இயலாது” என்றாள் கங்கை. “உன் குருதிவழியினர் முற்றழியலாகாது எனில் திரும்பிச்செல். அவர்களை அவன் கால்தொட்டு வணங்கி சொல்பெற ஆணையிடு…”

அம்பை “என் குருதிவழியா?” என்று சிரித்தாள். “என் குருதி இவர்களல்ல… இங்குள்ள அத்தனை மகளிர் நெஞ்சங்களிலும் வஞ்சமென மறைந்திருப்பது அது. அது எந்நிலையிலும் அழியாது… நீ எதுவரை காக்க இயலும் உன் மைந்தனை? பார்க்கிறேன். இங்கே அவன் நெஞ்சக்குருதி சிதற விழுவதை நான் காண்பேன். அக்குருதியாலன்றி எதனாலும் என் நெஞ்செரி அணையாது.” கங்கை கீழ்வானை நோக்கினாள். அம்பையும் தங்கையரும் உடன் நோக்கினர். அங்கே முதல் கதிரின் வண்ணத்தீற்றல் தெரிந்தது. அம்பை பெருமூச்சுடன் திரும்பி “இரவு செல்க! நான் பகலிலும் இங்குதான் இருப்பேன். இவர்களின் கனவுகளில்… ஒருகணமும் இங்கிருந்து ஒழியமாட்டேன்” என்றபின் மறுதிசை நோக்கி விலகிச்சென்றாள். அவள் உடன்பிறந்தாரும் உடன் சென்றனர்.

ஜலன் அவர்கள் சென்று மறைவதை நோக்கியபடி நின்றான். திரும்பிப் பார்த்தபோது தன் தங்கையருடன் கங்கையும் அப்பால் சென்று மறைவதை கண்டான். குருதியுண்ட பேய்த்தெய்வங்கள் பெருத்த வயிறுகளை கைகளால் ஏந்தியபடி வண்டுகள்போல நிலத்தில் ஊர்ந்து அகன்றுகொண்டிருந்தன. ஒளி மேலெழுந்தோறும் அவர்கள் நிழல்களென இழுபட்டு சுருங்கி மறைந்தனர். படைக்கலங்களுடன் நின்றிருந்த வீரர்கள் பெருமூச்சுடன் திரும்பி நடந்தனர். தொய்நடையில் சென்று தாங்கள் ஏற்கெனவே படுத்திருந்த இடங்களை அடைந்து கையூன்றி அமர்ந்து கால்நீட்டி சலிப்போசையுடன் மீண்டும் படுத்துக்கொண்டார்கள். களைத்த மூச்சொலிகளும் மென்முனகல்களும் ஒலித்தன.

ஜலன் அவர்களின் நடுவே நடந்தான். மிக விரைவிலேயே அவர்கள் துயில்கொண்டுவிட்டனர் என்று தோன்றியது. முகத்தசைகள் மெல்ல தளர கைகால்கள் தொய்ந்துவிழ அவர்கள் உதடுகள்

அதிரும் குறட்டையொலியுடன் ஆழ்துயிலில் மூழ்கினர். ஜலன் தன் காவல்மேடையை அடைந்தான். அங்கே சோமிதன் கால்களை நீட்டி மார்பின்மேல் வேலை வைத்து அணைத்தபடி படுத்திருந்தான். அவன் தன் இடத்தில் அமர்ந்து வேலை கால் நடுவே வைத்துக்கொண்டு வானை நோக்கினான். மேலும் இரு முகில்கள் செந்நிறப்பூச்சு கொண்டிருந்தன. இன்னும் சற்றுநேரத்தில் விடியத் தொடங்கும். முதற்கொம்பொலி எழ அரைநாழிகைகூட இல்லை. அவன் விண்ணையே நோக்கிக்கொண்டிருந்தான். உதிர்ந்த விண்மீன்களை எண்ணினான். எண்ணங்கள் குழம்பிக் கரைந்து உருவழிவதை அவனே எங்கோ இருந்து நோக்கிக்கொண்டிருந்தான்.

முன்காலையில் தன்னை எழுப்புவது எது என்று பீஷ்மர் எண்ணி வியப்பதுண்டு. நெடுநாள் நோன்பால் உடலில் உருவான ஒழுங்கு அது என்று அறிந்திருந்தாலும் எங்கிருந்தோ எவரோ வந்து தொட்டு எழுப்புவதாகவே அவர் உணர்வது வழக்கம். அந்தத் தொடுகையை அரிதாக உடலால் உணரமுடியும். மென்மையான கை. அன்னைக்குரியது, அல்லது இளமகவுக்குரியது. அத்தொடுகைக்கு முந்தைய கணம் ஒவ்வொரு முறையும் ஒன்று. அவர் காட்டில் நின்றிருப்பார். நதிக்கரைகளில், அருவியின் ஓரம், அவைகளில் அமர்ந்திருப்பார். எவருடனேனும் சொல்லாடிக் கொண்டிருப்பார் அல்லது நூல்நோக்கிக் கொண்டிருப்பார். இலக்கு நோக்கி அம்புகளை எய்தபடி ஊழ்கத்திலிருப்பார். அக்கனவுக்கு வெளியிலிருந்து மென்மையாக அது நீண்டுவரும்.

அத்தொடுகை அதுவரை நிகழ்ந்த அனைத்தையும் கனவென்றாக்கி பின்னால் தள்ளும். அந்த நாளை நோக்கி சித்தம் விரிந்தெழச் செய்யும். அத்தொடுகையை உணர்ந்த கணமே அது இல்லையென்றாகும். கனவினுள் தானும் சென்று மறையும். ஆனால் அதை அவரால் எண்ணி எடுக்க முடியும். நெடுநேரம் மீட்டிக்கொள்ளவும் இயலும். அக்கனவின் பொருளையோ பொருளின்மையையோ எண்ணியபடி நீராடச் செல்கையில் அத்தொடுகையை வந்தடையும் எண்ணம் புன்னகையுடன் முகம் மலரச்செய்யும். நீருக்குள் எப்போதும் அவர் தன்னை முழுமையாக உணர்வார். நெடும்பொழுது நீந்தித்திளைக்காமல் அவர் நீராடியதேயில்லை.

கைகளைக் கூப்பியபடி மஞ்சத்தில் கண்விழித்து கையூன்றாமல் உடல் மடித்து எழுந்து அமர்ந்து கைகளை விரித்து நோக்கினார்.

காலை வழுத்தலை உரைத்தபின் பெருமூச்சொலியுடன் எழுந்து சுவரில் தொங்கிய மரவுரியை எடுத்தார். அவர் அறைவாயிலில் விஸ்வசேனர் நின்றிருந்தார். அவர் எழுந்த ஓசை பீஷ்மரை எழுப்புவது என்றுமுள வழக்கம். அவரை வெறுமனே நோக்கிவிட்டு நடக்க அவர் பீஷ்மருக்கு முன்னால் சென்றார். வானில் செந்தீற்றல்கள் எழத் தொடங்கியிருந்தன. மிக அப்பால் ஒரு தனி கரிச்சானின் கீறல் ஒலி எழுந்து இருளில் அகன்றது. விஸ்வசேனர் கொப்பரையில் நீரை கொண்டுவந்து மருதமரத்தின் அடியில் வைத்தபின் அகன்று நின்றார்.

அவர் சிறுகுடுவையை கையில் எடுத்து கொப்பரையிலிருந்து நீரை அள்ளியபோது நீல ஆடை அலைவுறும் அசைவுடன் அக்கால்களை கண்டார். நெஞ்சு துணுக்குற நிமிர்ந்து நோக்கினார். அவளை அவர் நன்கறிந்திருந்தார். “அன்னையே...” என்றார் பீஷ்மர். “இது என் நீர். இதனருகே உனக்காக காத்திருந்தேன்...” என்றாள் கங்கை. அவர் பெருமூச்சுடன் “உன்னிடம் விடைபெற்றுச் செல்லவேண்டும் என வந்திருந்தேன்... அன்று மாலைவரை உன் கரையிலேயே இருந்தேன். உன்னை சந்திக்க என்னால் இயலவில்லை” என்றார். “ஆம், நான் உன்னை நோக்கிக்கொண்டிருந்தேன். நீ கிளம்பவிருந்த அப்போருக்கு வாழ்த்துரைக்க என் உளம் எழவில்லை” என்றாள் கங்கை.

“என் கடமை” என்றார் பீஷ்மர். “நன்று, வாழ்நாளெல்லாம் முதல் நெறியெனக் கொண்ட ஒன்றை இறுதியில் போட்டுடைப்பதுதான் நெறிபோலும்” என்று கங்கை சொன்னாள். பீஷ்மர் துயருடன் ஏறிட்டு நோக்கி “எனக்கு தெரியவில்லை, அன்னையே. நான் செய்வதென்ன என்று எத்தெளிவும் எனக்கில்லை. என் உள்ளியல்பு சொல்வதை செய்வதொன்றே என் வழி எனத் தோன்றியது” என்றார். “தவிர்க்கமுடியாமைக்கு எதிராக நோன்புகொண்டவன் நீ” என்றாள் கங்கை. “ஒருவகையில் அது நன்று, எவ்வகையிலும் தவிர்க்கமுடியாதது அது என நீ கண்டுகொண்டாய். தந்தையால் கொல்லப்படாத சிம்மக்குருளையே காட்டை ஆளவேண்டும் என்பது உயிர்நெறி.”

பீஷ்மர் “இனி நான் சொற்களை விரும்பவில்லை, அன்னையே” என்றார். “உள்ளும் புறமும் சொல்லிச் சொல்லி சொற்பொருள் அனைத்தையும் முற்றாக கடந்துவிட்டிருக்கிறேன்.” கங்கை “நான் உன் நலம்காக்க வந்தேன். ஏனென்றால் இப்புவியில் நான் ஈன்ற ஒரே மைந்தன் நீ” என்றாள். பீஷ்மர் “அது என் பேறு” என்றார். “உன்னை அவர்கள் களத்தில் வெல்லக்கூடும்” என்றாள் கங்கை.

அவர் மறுமொழி சொல்லவில்லை. “வாய்திறந்து பேசு, அறிவிலி… நீ களம்பட்டுக் கிடப்பதைக் காண நான் விழையவில்லை” என்று கங்கை சீறினாள்.

“ஊழ் அதுவெனில் நான் என்ன செய்வது?” என்றார் பீஷ்மர். “ஊழை துணைக்கொள்வது கோழைகளும் வலிவிலாதோரும் சொல்லும் வீண்சொல். நீ களம்படலாகாது. இப்புவியில் எவரும் உன்னை வெல்லலாகாது” என்று கங்கை மூச்சிரைக்க சொன்னாள். கைநீட்டி அவர் அருகே வந்து “ஏனென்றால் மைந்தன் எனும் நீ என் பிறிதுவடிவம். ருத்ரப்பிரயாகையில் நான் கொண்ட பேராற்றலை உன் தோள்களுக்கு அளித்திருக்கிறேன்” என்றாள். பீஷ்மர் “ஆற்றலால் என்ன பயன்? அன்னையே, இப்போரில் எத்துணை விரைவில் நான் களம்படுவேனோ அத்துணை நன்று என்று கொள்கிறேன்” என்றார்.

“அறிவிலி… என்ன பேசுகிறாய் என்று தெரிகிறதா? மூடா, வெற்றியுடையவனுக்கே சிறப்பு அமைகிறது. நீ பயின்ற வில் உனக்கு அதை சொல்லவில்லையா என்ன?” என்று கங்கை பற்களைக் கடித்து சீற்றத்துடன் கேட்டாள். “நீ களத்தில் வீழ்ந்தால் உன் செயல்களெல்லாம் பழியென்று ஆகும். உன் வாழ்க்கையே தீயதென்று மாறும். சூதர்சொல்லில் கொடியோனாக வாழ்வாய்.” பீஷ்மர் “ஆம், தோல்வி என்றால் அதுவே பொருள்” என்றார். “நீ வென்றாகவேண்டும். களத்தில் உன் சொல்லே இறுதியாக நிலைகொள்ளவேண்டும். அதன்பின் துறந்து வந்து என் மடியில் அமர்ந்து உயிர்துறந்து விண்ணெழுக! மண்ணில் உன் பெயர் என்றும் நிலைக்கும்.”

குரல் தழைய விழிகள் சற்றே கனிய “என் மைந்தனிடம் நான் கோருவது அதை மட்டுமே, பழியற்ற வாழ்வொன்றை இங்கு நினைவென்று விட்டுச்செல்லவேண்டும் நீ” என்று கங்கை சொன்னாள். “உன்னை வீழ்த்த அங்கே பெருவஞ்சம் வீறுகொண்டு நின்றுள்ளது. இதோ சற்றுமுன் அதை நேருக்குநேர் பார்த்துவிட்டு வந்துள்ளேன். அவர்கள் உன்னை வெல்ல ஒருபோதும் ஒப்பேன். உன் அன்னையரின் பெருநிரை உனக்குத் துணை என உடனிருக்கும். உன் தோள் ஒருபோதும் தளர்வுறாது. உன் இலக்குகளை எந்த விசையும் விலக்காது” என்றாள் கங்கை.

“நான் வெல்வதற்காக போரிடுகிறேனா என்றே எனக்கு தெரியவில்லை, அன்னையே” என்றார் பீஷ்மர். “போர்க்களத்தில் வில்லுடன் சென்று நின்றிருக்கையில் அங்கிருந்து அவ்வழியே

கிளம்பிச்சென்றுவிடுவதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பேன். போர்முடிந்து வில்தாழ்த்தி கிளம்பும்போது சலிப்பும் கசப்பும் தன்வெறுப்புமென என் உள்ளம் தொய்ந்திருக்கும். ஆனால் போர்முரசுகள் ஒலிக்கக் கேட்டதும் என்னுள் இருந்து நான் அஞ்சும் பிறனொருவன் எழுகிறான். என் வில்லை அவன் ஏந்திக்கொள்கிறான். அவனுக்கு உறவுகளேதுமில்லை. இம்மண்ணில் அவன் எய்தவும் ஏதுமில்லை. அளியும் அன்பும் அறமும் அவனறியாதவை. அம்புகள் இலக்கடைவதையன்றி எதையும் அவன் நோக்குவதில்லை. பழுதற்ற கொலைக்கருவி என மாறி களம்நின்றாடுகிறான்."

"அவனே நீ. இந்தச் சோர்வும் தவிப்பும் அல்ல. வில்லென்பது நாண்பூண்டு இறுகித் துள்ளி நின்றிருப்பதே. தளர்ந்து மேடையில் இருப்பது வெறும் மூங்கில்" என்றாள் கங்கை. பீஷ்மர் மீண்டும் பெருமூச்சுவிட்டார். "இது ஒரு நுண்ணிய தன்நடிப்பு என நீ ஏன் புரிந்துகொள்ளவில்லை? களத்தில் முழுவிசையுடன் எழுந்து குருதியாடுவதற்காக நீ உன் ஆற்றல் அனைத்தையும் சேமித்துக் கொள்கிறாய். அதன்பொருட்டு உன் உடலையும் உள்ளத்தையும் ஓய்வுக்கு கொண்டுசெல்கிறாய். அதற்காகவே இப்பற்றற்ற நிலையை பூண்கிறாய். இந்தச் சொற்களினூடாக நீ குற்றவுணர்ச்சிகளையும் வெறுமையையும் பெருக்கிக் கொள்வது ஊசல் இம்முனையின் உச்ச எல்லைவரை வருவதற்கே. அம்முனையில் முழுவீச்சுடன் எழுவதற்குரிய வழி அது."

பீஷ்மர் "இருக்கலாம்" என்றார். கங்கை மேலும் அருகணைந்து அவர் தோளில் கைவைக்க வர அவர் அறியாது பின்னடைந்தார். "செயல்வீச்சு கொண்ட அனைவருமே இந்த உளச்சோர்வை கொள்கிறார்கள். நீ இன்று தேரிலேறியதுமே படைப்பெருக்குகளை அழிக்கும் காலமானுடனாகிவிடுவாய் என்பதற்கான சான்று இது" என்றாள். "ஆனால் உனக்கு எதிர்நிற்பவள் எளியவள் அல்ல. உன்னிலிருந்து எழுந்தவள் என்பதனாலேயே உன்னை வெல்லும் வாய்ப்புள்ளவள்" என்றாள் கங்கை. இறைஞ்சும் குரலில் "அன்னையே!" என்று பீஷ்மர் அழைத்தார்.

கங்கையின் முகம் மீண்டும் இனிதாகியது. "சற்றுமுன் நான் தொடவந்தபோது நீ விலகியது என் உள்ளத்தை இனிக்கச் செய்தது" என்றாள். "மைந்தா, முழுதமைந்த ஆண்மையின் நிமிர்வும் வீரமும் நீ. பெண்ணிடம் காமம் கொள்வதுகூட அந்த ஆண்மைக்கு குறைவு என்பதனால்தான் நீ அதையும் கடந்தவனானாய். பெண்மையின் முழுநிலை தாய்மை என்றால் ஆண்மையின் முழுநிலை என்பது

தன்னிலேயே நிறைவுற்று தொடப்படா மலைமுடியென நின்றிருத்தலே. நிறைவுகொண்ட பேராண்மையே நீ. உன் ஆண்மையின் ஆணவமே அவளை உருவாக்கியது. அதுவும் நீயே.”

“அறிக, எவராயினும் அவரை வெல்வது அவரால் உருவானதாகவே இருக்கவியலும். அது புடவிப்பெருவிசையின் நெறிகளில் ஒன்று” என்று கங்கை தொடர்ந்தாள். “உனக்கிணையான உளவிசை. உனக்கு சற்றும் குறைவிலாத நோன்புறுதி. மைந்தா, உன் பிறிதுவடிவம் அவள். உன்னை வென்றபின் ஒருபால் அமர்ந்து நான் நெஞ்சுருகி அழுகையில் மறுபால் அமர்ந்து அழவிருப்பவள்.” பீஷ்மர் விழிவிலக்கிக்கொண்டார். பின்னர் “அன்னையே” என மென்குரலில் அழைத்தார். “அவளை ஏன் விலக்கினேன், ஏன் சிறுமைசெய்தேன் என்று பல்லாயிரம் முறை நான் கேட்டுக்கொண்டதுண்டு. அது நான் உங்களுக்கு எதிராகச் செய்தது.”

கங்கை திகைத்து நின்றாள். “அன்று ஒருகணம் உங்களை வென்றேன்” என்றார் பீஷ்மர். கங்கை சீற்றத்துடன் “ஆம், அவள் நானே” என்றாள். மேலும் விசைகொண்டு “ஆகவே அவளுக்காக நீ உன் வில்லை தாழ்த்தக்கூடும். அவளிடம் விரும்பி தோற்கவும்கூடும்” என்றாள் கங்கை. “அதைவிட நான் அஞ்சுவது மறுபால் நின்றிருக்கும் இளைய யாதவனை. வானறிந்தது அனைத்தும் அறிந்த மானுடன் அவன். உன் ஆழம்வரை வந்து தொடும் விழிகொண்டவன். அவன் அவளை உன்முன் நிறுத்துவான். அவள்முன் உன்னை மண்டியிடச் செய்வான். நீ புகழ் அழிந்து இழிவுறுவாய்... இனியவனே, இக்களத்தில் நீ விழுந்தாய் எனில் மைந்தர்கொலை புரிந்த கொடுந்தாதை என்ற பெயரையே குடிகள் நாவிலும் கொடிவழியினர் நெஞ்சிலும் எஞ்சவிடுவாய்.”

“நான் என்ன செய்யவேண்டும், அன்னையே?” என்றார் பீஷ்மர். “உன்னைக் காத்து உடனிருக்க என் மைந்தர் எழுவருக்கும் ஆணையிட்டிருக்கிறேன். அந்த நீர்ப்பரப்பை தொடு.” பீஷ்மர் ஐயத்துடன் ஒருகணம் நோக்கிவிட்டு நீர்ப்பரப்பை தொட்டார். நீரிலிருந்து எழுந்தவர்களாக எழுவர் அவருடைய உருவையே தாங்களும் கொண்டு எழுந்து விரிந்து நின்றனர். “மைந்தா, நீ விண்ணாளும் எட்டு வசுக்களில் இளையவனாகிய பிரபாசனின் மண்ணுரு என அறிக. உன் மூத்தவர்களான தரன், துருவன், சோமன், ஆபன், அனிலன், அனலன், பிரத்தியூடன் ஆகியோரை வணங்குக!” என்றாள் கங்கை. அவர்கள் நீண்டு எழுந்த உடலும் வெண்தாடியும் களைத்த விழிகளும் கொண்டிருந்தனர்.

பீஷ்மர் அவர்களை நோக்கி தலைவணங்கினார். "உன் இரு விழிகளிலும் இரு தோள்களிலும் இரு கால்களிலும் முதுகிலும் இவர்கள் குடிகொள்வார்கள். உன்னுடன் இருந்து இப்போரை தாங்களும் நடத்துவார்கள். இனி உன்னுடன் பொருதுபவர்கள் உங்கள் எண்மரையும் எதிர்கொள்வார்கள். விண்ணளந்தோனும் கங்கைசூடியோனும் நேரிலெழுந்தால் அன்றி மண்ணில் எவரும் உன்னை வெல்லவியலாது" என்றாள் கங்கை. பீஷ்மர் "உங்கள் அருள், அன்னையே" என்றார்.

முதல் வசுவாகிய தரன் "அன்னையே, இளையோனின் ஆற்றலென அவன் உடலில் உறைவோம் என ஆணையிடுகிறேன். ஆனால் அறுதியிலாது எதையும் அளிக்கலாகாது என்பது நெறி. போர்க்களத்தில் ஒருமுறை இவன் உளம்தளர்ந்து வில்தாழ்த்துவான் என்றால் எங்களில் ஒருவர் விலகிச்செல்வோம் என்று உணர்க! ஏழுமுறை வில்தாழ்த்தினால் இவன் மட்டுமே எஞ்சுவான். எட்டாவது முறை வில்தாழ்த்துகையில் இவனில் உறையும் பிரபாசனும் மறைவான். வெற்றுடலென அங்கே நின்றிருப்பான்" என்றான். "அவன் உளம்தளர மாட்டான். குன்றா ஊக்கமே அவனை தேவவிரதனாக்கியது" என்றாள்.

"ஆயிரத்தில் ஓர் அம்பு குறிதவறுபவனாகவே அவன் இருக்கிறான். அந்த அம்பு என்றுமிருக்கும்" என்றான் அனலன். "நோன்புகொண்டோர் செல்லத்தக்க உச்சம் அதுவே, ஆயிரத்திலொன்றுமட்டும் பிழைபடும் நிலையை எய்துதல்." கங்காதேவி சீற்றத்துடன் "என்ன சொல்கிறீர்கள்? அவன் நோன்பு குறையுடையதென்றா? அவன் ஆற்றலில் பிறழ்வுண்டு என்றா?" என்றாள். அனிலன் "ஆயிரத்தில் ஒரு முறை, அன்னையே" என்றான். கங்காதேவி சினத்தில் உடல் எழுந்தமைய அவர்களை மாறி மாறி நோக்கி "இனி எதையும் சொல்ல நான் விரும்பவில்லை. அவனுடன் நீங்கள் இருந்தாகவேண்டும். அவன் களத்தில் விழலாகாது. அன்னை என என் ஆணை இது" என்றபின் திரும்பிச் சென்றாள்.

பீஷ்மர் ஏழு தன்னுருக்களையும் நோக்கியபடி நின்றார். "அந்த ஆயிரமாவது அம்பு உன் விழைவே அல்லவா, இளையோனே?" என்றான் சோமன். "அதுவல்லவா உன்னை மானுடனாக இங்கு நிலைநிறுத்துகிறது?" என்றான் துருவன். "அது உன் இனியவர்களுக்கு நீ அளிக்கும் நற்கொடை அல்லவா?" என்றான் ஆபன். பீஷ்மர் கைசோர்ந்தவராக நின்றார். பிரத்தியூடன் அவர் கைகளைப் பற்றி கனிந்த புன்னகையுடன் "நீ விழைவதே நிகழும் இளையோனே, துயர் ஒழிக!" என்றான். பீஷ்மர் புன்னகைத்தார்.

## பகுதி இரண்டு: தாள்வோன்

04.--இருள் விலகத் தொடங்கிய முன்புலரியில் படைகளை எழுப்பியபடி கொம்புகளும் முழவுகளும் ஒலித்துக்கொண்டிருந்தன. முதல் ஆணைக்கு அவர்களனைவரும் துயிலெழுந்தனர். அடுத்த ஆணைக்குள் காலைக்கடன்களை முடித்தனர். தொடர்ந்த ஆணைகளுக்கு உணவருந்தி கவசங்கள் அணிந்தனர். அரையிருளுக்குள் நிழல்கள் என அசைவுகள் கொப்பளித்த படையின் நடுவே பீமன் புரவியில் சென்றான். அவனைக் கண்டு தலைவணங்கிய சுருதகீர்த்தி “அவை கூடிவிட்டது, தந்தையே” என்றான். தலையசைத்தபின் அவன் யுதிஷ்டிரரின் மாளிகை முன் இறங்கி புரவியை ஏவலனிடம் அளித்துவிட்டு உள்ளே சென்றான்.

யுதிஷ்டிரரின் சொல்சூழவை முழுமைகொண்டிருந்தது. அவனுக்காக அவர்கள் காத்திருந்தது அவையில் எழுந்த மெல்லிய உடலசைவுகளில் தெரிந்தது. பீமன் சொல்லின்றி அரசரையும் இளைய யாதவரையும் வணங்கிவிட்டு தன் பீடத்தருகே சென்றான். அமர்வதற்கு உடல் தாழ்த்தி, பின் அமர விடாத உளவிசையால் தவிர்த்து, பீடத்தின் பின்னால் சென்று கைகளால் அதன் சாய்வுப்பகுதியை பற்றியபடி நின்றான். அவை அவனை நோக்கிக்கொண்டிருந்தது. வெளியே படைகள் கிளம்புவதன் ஓசை எழுந்து சாளரங்களினூடாக அறைக்கூடத்தை நிரப்பியது. இளங்காற்றில் குருதியும் சீழும் கந்தகமும் கலந்த மணம் வந்தது. அங்கிருந்து அருகேதான் மருத்துவநிலை இருந்தது.

யுதிஷ்டிரர் “இளையோனே, இன்றைய படைசூழ்கையை நாம் முடிவு செய்ய வேண்டும். மேலும் விசையுடன் சற்றும் பிழைக்காத வழிமுறைகளை கண்டடையவேண்டும். அதன் பொருட்டே பாஞ்சால இளவரசர் இங்கு வந்துள்ளார். அவருடைய திட்டங்கள் முன்னரே அவைமுன் வைக்கப்பட்டுவிட்டன. உன் சொற்களைக் கேட்டு முடிவு செய்வதற்காக காத்திருந்தோம்” என்றார். பீமன் அவையை ஒருமுறை நோக்கிவிட்டு “நேற்றைய செய்திகள் அவைக்கு முழுமையாக வந்துவிட்டனவா?” என்றான். யுதிஷ்டிரர் அதிலிருந்த உட்குறிப்பை உணர்ந்து ஒருகணம் சொல்லிழந்து விழிதாழ்த்தினார்.

சகதேவன் “ஆம் மூத்தவரே, பின்னிரவிலேயே அனைத்துக் கணக்கெடுப்பும் முடிந்து எல்லாச் செய்திகளும் வந்து சேர்ந்துவிட்டன. அவை அனைத்தையும் படித்து சுருக்கி

மூத்தவரிடம் நான் கூறிவிட்டேன்” என்றான். “அவைக்கும் கூறலாமே” என்று பீமன் சொன்னான். சகதேவன் யுதிஷ்டிரரை ஒருகணம் நோக்கிவிட்டு “அனைவரும் அறிந்த செய்திகள்தான். நேற்று நமது படைகள் நாம் எண்ணியிராத பேரழிவை சந்தித்திருக்கின்றன. ஆகவே படைவீரர் அனைவரிடமும் பெருஞ்சோர்வு நிறைந்துள்ளது. வெல்வோமெனும் நம்பிக்கை எவரிடமும் இல்லை. ஒழுங்கின்மை பரவிக்கொண்டிருக்கிறது” என்றான். “நேற்று நள்ளிரவில் குலாடர்களின் ஏழு நூற்றுவர் தலைமையில் ஒரு சாரார் படையிலிருந்து தப்பிச்செல்ல முயன்று பிடிபட்டனர்.”

பீமன் “அசுரர்களும் நிஷாதர்களும் கிராதர்களும் எவரும் செல்லவில்லையா?” என்றான். யுதிஷ்டிரர் “அவர்களின் போர் அல்ல இது. அவர்கள் செல்ல விழைந்தால் தடுக்கவேண்டாம் என்று நான் சொன்னேன்” என்றார். “அறிவின்மை... படை என்பது உடைப்பெடுத்த கரையை மேலும் உடைக்கும் ஏரி” என்றான் பீமன். “ஆம், ஆனால் நேற்று இங்கே நடந்தது இரக்கமில்லா படுகொலை. அதற்கு அவர்களை இழுத்துக்கொண்டு சென்று படைக்க நான் விரும்பவில்லை” என்றார் யுதிஷ்டிரர். பீமன் சினத்துடன் மேலும் சொல்லெடுக்க முயல “அதைப்பற்றி பேசவேண்டியதில்லை, இளையோனே” என்று யுதிஷ்டிரர் கைநீட்டி தடுத்தார். கசப்புடன் தலையசைத்தபடி பீமன் திரும்பிக்கொண்டான்.

சகதேவன் “நமது துணையரசர்களில் பன்னிருவர் களம்பட்டனர். களம்பட்ட இளவரசரின் எண்ணிக்கை எட்டு மடங்கு. குலாடர் குலத்து இளவரசர்கள் ஸ்வேதனும் சங்கனும் மறைந்தது நம் படைக்கு பேரிழப்பு. அவர்கள் மாவீரர்களாக தங்களை நிறுவி விண்புகுந்தனர். விராட குலத்து இளவரசர் உத்தரரின் களப்பலி நமக்கு நேரிழப்பு. அவர் இன்று நம் குடியில் ஒருவர். நம் படைகளுக்கு மிகப் பெரும் எச்சரிக்கை ஒன்று விடப்பட்டுள்ளது பிதாமகர் பீஷ்மரால்” என்றான். பீமன் “அச்சுறுத்தல் என்று சொல்” என்றான். சகதேவன் கண்களில் பொறுமை இழப்பின் சிறு சுருங்கல் வந்து மறைய “ஆம்” என்றான்.

அவை சகதேவனின் சொற்களுக்காக காத்திருந்தது. “நேற்று ஒருநாளில் நமது படைகளில் பத்தில் ஒன்று முற்றழிந்தது என்கின்றன கணக்குகள். எரிக்கப்பட்ட, புதைக்கப்பட்ட உடல்களின் கணக்குகளை மூத்த பாஞ்சாலர் சிகண்டி தனியாகவே எழுதியளித்திருக்கிறார். புண்பட்டோர் அவர்களைவிட இருமடங்கு. அக்கணக்குகளும் வந்துசேர்ந்துள்ளன.” சகதேவன் கைகாட்ட இரு

ஏவலர் ஓலைகளைக் கொண்டுவந்து பீமனிடம் நீட்டினர். அவன் அதை கையால் வாங்கி பீடத்தின்மேல் இட்டுவிட்டு “அவர்கள்... அவர்களின் இழப்பு என்ன?” என்று கேட்டான். “நமது அழிவில் மூன்றில் ஒன்று, அல்லது அதைவிடக் குறைவு” என்றான் சகதேவன்.

பீமன் கைகள் பீடத்தின் மேல் இறுகின. பற்கள் கடிபட தாடை முறுகியது. மூச்சொலியுடன் “நாம் என்னதான் செய்தோம் களத்தில்? நாணிழந்தனவா நமது விற்கள்? நமது அம்புகள் அனைத்துமே குறி தவறினவா?” என்றான். சகதேவன் “இல்லை மூத்தவரே, நம் படைகள் முழுவீச்சுடன் போரிட்டன என்பதே உண்மை. மூத்தவர் அர்ஜுனனும் தாங்களும் பாஞ்சாலர் திருஷ்டத்யும்னனும் நேற்று வில்திறனின் உச்சத்தில் இருந்தீர்கள். நம் மைந்தர்களும் களத்தில் ஒருகணம் சளைக்கவில்லை. உங்கள் அனைவரை விடவும் பெருந்திறல் கொண்டவனாக திகழ்ந்தான் நமது மைந்தன் அபிமன்யூ. நாம் அவர்களுக்கு அளித்த அழிவும் சிறிதல்ல. ஆனால் பீஷ்மபிதாமகர் நேற்று முப்புரம் எரிக்கவந்த சிவன்போலிருந்தார்...” என்றான்.

“அவர் விட்ட அம்புகளில் குறி தவறியவை மிகச் சிலவே. அவர் முன்னிருந்து நம்மவர் உயிர் தப்பியவர் அதனினும் சிலர்...” என்றான் நகுலன். “காவல்மேடைமேல் ஒருமுறை ஏறியபோது கண்டேன் அவர் போரிட்ட இடத்தின் விந்தையை. பரவிப்பெருகும் வெள்ளம் நடுவே பிலத்தில் சுழித்து இறங்கி மறைவதுபோல நமது படை அவரை அணுகி மறைந்துகொண்டிருந்தது. அவருடைய தேர் சென்ற வழி இருபுறமும் எழுந்த பிணக்குவியல்களால் நன்கு தெரிந்தது.” பீமன் பெருமூச்சுவிட்டான். திருஷ்டத்யும்னன் “மெய்யாகவே அவரை தேரில் தொடர்வதற்குத் தடையாக இருந்தது அப்பிணக்குவியல்தான். பிணவேலி என்று என் தேர்ப்பாகன் சொன்னான்” என்றான்.

யுதிஷ்டிரர் “அனைத்தையும் அழித்தபடி பற்றிப் படர்ந்தேறுகிறார் பிதாமகர். நேற்று நாம் வகுத்த சூழ்கைகள் அனைத்தும் பொய்யென்றாயின. அவரை நாம் சரியாக மதிப்பிடவில்லை. முதியவர் என்றும் மூத்தவரென்றும் மட்டுமே நோக்கினோம். ஏனென்றால் அவரது மைந்தர்களாக நாம் பிறிதெவ்வகையிலும் அவரை எண்ணியதில்லை. இரக்கமற்ற களப்போர் வீரர் என்றும் குறிதவறாத வில்லவர் என்றும் நாம் அவரை மதிப்பிட்டதில்லை. அதை நேற்று கண்டோம்” என்றார். தலையை அசைத்து “களத்தில் இளையோரை முன்னிறுத்தினால் மூதாதையின் கைதளரும் என்று

எண்ணியதைப்போல் இப்போரில் நாமிழைத்த பெரும்பிழை பிறிதொன்றில்லை” என்றார்.

“அது நம் பிழை அல்ல, அரசே. அவருடைய திறன் என்று கொள்க! ஒவ்வொருவருக்கும் அவர்கள் தாண்டுதற்கரிய எல்லைகள் உண்டு. தந்தை எனும் எல்லையை கடந்தார் பீஷ்மர்” என்றான் சாத்யகி. யுதிஷ்டிரர் “என் கண் முன்னால் செத்துக் குவிந்தனர் மென்மயிர் பரவிய மழலை மாறா முகத்தோர், நம் குருதிவழியை கொண்டுசெல்லவேண்டிய மைந்தர். அவர்கள் மண்ணோடு மண்ணாகக் கிடப்பதை கண்ட பின்னரும் உயிருடன் மீண்டதை எண்ணி நேற்று நான் ஒருகணமும் துயிலவில்லை” என்றார். அவரிடம் சீற்றம் குடியேறியது. “இங்கு படைசூழ்கையில் எவரோ உரைத்தனர் தன் மைந்தரை தானே பலிகொடுக்கும் குலம் வெல்லும் என்று. தனக்கு கருணையும் இரக்கமும் இல்லையென்று அது பிறருக்கும் தனக்கும் அறிவித்துக்கொள்கிறது என்று. அதை சொன்னபோது அந்த அவையில் நின்ற தெய்வம் நகைத்தது போலும். இதோ அள்ளிக் குவித்திருக்கிறோம் நம் வீட்டு வாயிலில் நம் குலத்து மைந்தர்களை. நாமே கொன்று கூட்டினோம் அவர்களை. இனி விண்வாழும் மூதாதையரிடம் சென்று சொல்ல நம்மிடம் சொற்களில்லை.”

பீமன் கைவீசி “போதும், அழுது புலம்புவதற்கு நாம் அவை கூட்டவில்லை. ஆவதென்னவென்று உரையுங்கள். இன்று எப்படி பிதாமகர் பீஷ்மரை எதிர்கொள்ளப்போகிறோம்?” என்றான். “ஒன்று உரைக்கிறேன், இன்று அம்முதியவர் அதே வில்துடிப்புடன் களம் நின்றாரென்றால் நம்மில் பாதி பேர்கூட எஞ்சப்போவதில்லை. இன்றும் களம்படாது அவர் திரும்பிச் செல்வாரென்றால் நாளை மறுநாள் இப்போர் முடியும். பாண்டவர் தரப்பில் படையென்றும் குடியென்றும் எதுவும் எஞ்சப்போவதில்லை.” சகதேவன் “மூத்தவரே…” என்றான். “நான் எதையும் எண்ணிச் சொல்லவேண்டியதில்லை. அவைசூழ்கை அறியா மந்தன் என நின்று இதை சொல்கிறேன். இப்போருக்கு நாம் எழுகையில் விழைவுக்கேற்ப ஒவ்வொருவரையும் மதிப்பிட்டோம். பிதாமகர் பீஷ்மரை வெறும் தந்தை என்று…”

அவன் வாய் ஏளனமாக சுழித்தது. “சென்று கண்டு கால்பணிந்து தந்தையே என்றால் அவர் கனிவார் என்று கருதியிருக்கலாம். அவ்வாறு சென்றதே அவருக்கு வாய்ப்பென்றாயிற்று. வாழ்த்திவிட்டார் என்பதனால் நெறிநின்றவர் ஆனார். வாழ்த்தியமையால் உருவான ஐயத்தைப் போக்க கொன்று

குவிக்கிறார்.” எவரும் ஒன்றும் சொல்லவில்லை. யுதிஷ்டிரர் “மந்தா, உன் சொல்லின் நஞ்சு ஒன்றே எனக்கு இனி எஞ்சியிருக்கிறது” என்றார். சகதேவன் கடுமையான குரலில் பீமனிடம் “மூத்தவரே, நாம் பழிச்சொல் உரைக்கவும் அவைகூடவில்லை. இனி படைசூழ்கை குறித்து நீங்கள் பேசினால் போதும். அவை சொல்லெடுக்கட்டும்” என்றான்.

அவையில் அமர்ந்திருந்த அனைவருமே நோயுற்றவர்கள்போல் தோன்றினர். துயில்நீப்பின் கருவளையங்கள் படிந்த விழிகளும், உலர்ந்த உதடுகளும், இருக்கை கைப்பிடிமேல் தளர்ந்தமைந்த கைகளுமாக அமர்ந்திருந்தனர். அர்ஜுனன் பீமனை நோக்கி “இந்தத் தருணத்தில் இனி நாம் இழந்தவற்றை கணக்கிலெடுக்க வேண்டியதில்லை என்று எண்ணுகின்றேன். இழந்ததென்ன என்று அறியாத எவரும் இன்று நம் படையில் இருக்கமாட்டார்கள். ஆவதென்ன என்று எண்ணுவோம்” என்றான். யுதிஷ்டிரர் கசப்புடன் “ஆவது ஒன்றே. நாம் பிதாமகரை வெல்ல வேண்டும். அது நம்மால் இயல்வதல்ல என்று ஒருநாளில் அவர் நமக்கு காட்டிவிட்டார்” என்றார்.

சீற்றத்துடன் திரும்பிய பீமன் “எனில் சென்று அஸ்தினபுரியை ஆளும் இழிமகனின் காலடியில் தலைவைத்து பணியுங்கள். மணிமுடியை அவனுக்கு அளித்து தொழும்பர் குறியேற்று பணிபுரியுங்கள். வெல்ல இயலாதென்ற உணர்வுடன் களம் நிற்கிறீர்கள் என்றால் உங்களை நம்பி வேல் கொண்டெழுந்த பல்லாயிரவரை பலி கொடுக்க எண்ணுகிறீர்கள் என்றே பொருள்” என்றான். “மூத்தவரே, பொறுங்கள்” என்றான் சகதேவன். “என்ன பொறுப்பது? நிகழ்ந்தது ஒருநாள் போர். அதற்குள் ஒவ்வொருவரும் அரைப்பிணங்களென அமர்ந்திருக்கிறார்கள். அவை நடுவே அமர்ந்து ஒருவர் வான்நோக்கி ஓலமிடுகிறார். தொல்புகழ் கொண்ட குருகுலம், பாண்டுவின் குருதி இத்தனை இழிந்தமையுமென்று எண்ணியதில்லை” என்றான் பீமன்.

கைநீட்டியபடி யுதிஷ்டிரர் எழுந்தார். உடல் நடுங்க, வாயோரம் எச்சில் தெறிக்க கூவினார். “இழிந்தமைவது இன்றல்ல, மூடா. நேற்று நீ பிதாமகரின் அம்புகளுக்கு முன் நிற்கவொண்ணாது பின்னடைந்தாயல்லவா அப்போது” என்றார். “இன்று பின்னடைவதில்லை” என்று பீமன் கூவினான். “நேற்று நான் நாளைப் போருக்கென காக்கப்பட்டேன். நோக்குக அவை, இன்று களம்படுவேன்! அன்றி அம்முதியவரைக் கொன்று மீள்வேன்.” அர்ஜுனன் “வெறும் வஞ்சினங்களுக்கான இடமல்ல இது,

மூத்தவரே. இது என் போர், இதை நான் நிகழ்த்துகிறேன்” என்றான். “அவ்வண்ணமெனில் நேற்று நிகழ்த்தவேண்டியதுதானே? நேற்று எங்கு போயிற்று உன் வீரம்?” என்றான் பீமன்.

அர்ஜுனன் சொல்லெடுப்பதற்குள் “உன் காண்டீபத்தை வந்து பற்றியது அறம். தொல்குடியின் நெறி. தந்தைமுன் நின்று கால்நடுங்கும் சிறுவனென்றானாய். அறிவிலி, இன்றுமட்டும் அந்த எல்லையை எப்படி கடப்பாய்?” என்றான் பீமன். “இப்போது சென்றதை பேசிக்கொண்டிருப்பவர் நீங்கள், மூத்தவரே” என்று நகுலன் சொன்னான். “மூடு வாயை!” என்று கையை ஓங்கியபடி அவனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான் பீமன். இளைய யாதவர் மெல்ல கனைத்தபோது அவையில் ஓர் அசைவு ஏற்பட்டது. பீமன் உடல் பதிந்து அமைய திரும்பி அவரை பார்த்தான். “நாம் எதையும் மிகைப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை, குறைத்துக் கருதவும் வேண்டியதில்லை. நேற்று நிகழ்ந்தது நாம் எண்ணியிராதது” என்றார்.

“நம் இளையோரை இழந்தோம். பீஷ்மரின் கைத்திறனை முன்னரே அறிந்திருந்தும் நெஞ்சக்கடுமையை நேற்றுதான் அறிந்தோம். இழந்தது எதுவானாலும் ஈட்டியது அவ்வறிதல் என்று கொள்க!” என்றார். பின்னர் அவர் உதடுகளில் மெல்லிய புன்னகை ஒன்று வந்தது. “எய்தவேண்டியவை அனைத்தையும் தந்தையரைக் கடந்து சென்றுதான் அடையவேண்டுமென்று நெறியுள்ளது போலும். தடையென்று எழுந்து வந்து நிற்கும் தந்தையர்ப் பெருந்திரளின் வடிவமாக பீஷ்மர் இங்கு வில்லேந்தி நம்முன் வந்து நிற்கிறார்.” பீமன் அர்ஜுனனை நோக்கினான். அவன் கைகளை மார்பில் கட்டி வெறித்து நோக்கி அமர்ந்திருந்தான்.

“மைந்தரை இழந்ததும் நன்றே. இழப்பு குறித்த அச்சமே செயலில் தயக்கமென்று ஆகிறது. நாம் எய்தும் இழப்பு எதுவரை என்றும் இப்போது கண்டோம். நம் எல்லைகள் இரண்டும் தெளிவடைந்தன. நம்மால் கடக்க முடியுமா என்று பார்ப்போம்.” பீமன் “யாதவரே, நம் படைகள் இருக்கும் நிலையை தாங்கள் அறிந்திருக்கிறீர்களா என்று தெரியவில்லை. நேற்று நம் படைகளை கொடுங்கனவுகள் அலைக்கழித்திருக்கின்றன. அடுக்கடுக்காக மண் திறந்துகொள்ள பாதாளதெய்வங்கள் எழுந்து வந்து பரவி குருதிகொண்டாடுவதை கண்டிருக்கிறார்கள். பலர் அலறி கூச்சலிட்டு எழுந்து விழுந்திருக்கின்றனர். தங்கள் படைக்கலங்களாலேயே உடலை கிழித்துக்கொண்டிருக்கின்றனர் சிலர். நம் படைகளில் அனைவருமே கனவுகண்டதாக சொல்கிறார்கள். காலையில்

எழுந்து காய்ச்சல்கொண்டவர்களைப்போல் நடுங்கி அமர்ந்திருக்கின்றனர் இளையவர்களும் முதியவர்களும்” என்றான்.

“ஆம், அதை என்னிடமும் சொன்னார்கள்” என்றார் இளைய யாதவர். “நீங்கள் கனவுகாணவில்லையா?” என்று பீமன் கேட்டான். அவர் புன்னகையுடன் “இல்லை” என்றார். மேலும் புன்னகை விரிய “அதன்பொருள் நீங்கள் கனவுகண்டீர்கள் என்பதுதான் அல்லவா?” என்றார். பீமன் “ஆம்” என்றபடி தலைதிருப்பிக்கொண்டான். யுதிஷ்டிரர் “இங்கு அனைவருமே அக்கனவுகளை கண்டிருக்கிறார்கள்” என்றார். அர்ஜுனன் பெருமூச்சுடன் அசைந்தமர்ந்தான். “நாம் பகலைப்பற்றி மட்டும் பேசுவோம்” என்றார் இளைய யாதவர். “ஆம், அதற்குமுன் நான் அறியவேண்டுவது ஒன்றுண்டு. நேற்று நாம் படைகளின் நம்பிக்கையின்மையை போக்க அரவானை பலி கொடுத்தோம். இன்று மும்மடங்கு சோர்வில் அவர்கள் உள்ளனர், இன்று செய்யவேண்டியதென்ன?” என்றான் பீமன்.

இளைய யாதவர் “இனி இப்போரை பீஷ்மரே கொண்டுசெல்வார்” என்று அதே புன்னகையுடன் சொன்னார். “ஒவ்வொரு வீரனும் தன் எல்லையை கண்டுவிட்டான். சாவதொன்றே வழி என்றால் புகழுடன் சாகலாமென்று எண்ணுவான். இனி நம் படைகள் பின்னடி வைக்க இயலாது. காண்க, இன்று அவை உச்சவெறிகொண்டு களம் நிற்கும்! வேட்டையாடப்படும் விலங்கிலும் வீரம் எழுவதுண்டு.” பீமன் பெருமூச்சுவிட்டபின் பீடத்தில் அமர்ந்து கைகளை கட்டிக்கொண்டான்.

இளைய யாதவர் “இன்று நாம் அமைக்கவிருக்கும் படைசூழ்கை என்ன என்று படைத்தலைவர் கூறுக!” என்றார். யுதிஷ்டிரர் கைகாட்ட திருஷ்டத்யும்னன் “இன்று காலை எழுந்தவுடனே அப்படைசூழ்கையை முடிவு செய்துவிட்டேன். ஏழு பகுதிகளாக முழுமையாக வரைந்து அவைமுன் படைத்திருக்கிறேன்” என்று கைகாட்டினான். படைத்தலைவன் வஜ்ரசீர்ஷன் அந்தப் படைசூழ்கை வரைவுகளை கன்றுத்தோல் சுருள்களாக கொண்டுசென்று இளைய யாதவரிடம் அளித்தான். அவர் அவற்றை ஒவ்வொன்றாக விரித்து கூர்ந்து நோக்கி தலையசைத்தார். அவை அவர் நோக்குவதை நோக்கி அமர்ந்திருந்தது. யுதிஷ்டிரர் “கிரௌஞ்ச வியூகம்” என்றார். இளைய யாதவரின் முகத்தில் எவ்வுணர்வும் வெளிப்படவில்லை.

சுருள்களைச் சுருட்டி அப்பால் வைத்துவிட்டு “இதன் நோக்கம் என்ன?” என்றார். திருஷ்டத்யும்னன் “யாதவரே, நாரைச்சூழ்கையை நான் வெவ்வேறு கோணங்களில் நோக்கிவிட்டேன். நமக்கு இன்று தேவை விரைந்து செல்லும் பறவையுடல். உடலிலிருந்து நெடுந்தூரம் விலகி சொடுக்கி எழும் நீள்கழுத்து கொண்டது நாரை. அதன் முனையில் கூர்கொண்ட அலகு அமைந்துள்ளது. நாரையின் கழுத்து எண்புறமும் வளைவது. தன் உடலில் எங்கும் சென்று தொடுவது. தன் எதிரியை பாம்பென்றாகி வளைக்கவும் கொத்தவும் வல்லது. நாகத் தொடுகையின் விரைவு கொண்டது” என்றான். இளைய யாதவர் “மெய், இன்று விரைவொன்றே நம்மை காக்கும்” என்றார்.

“நாரையின் உடல் என நம் படை அமையட்டும். அதன் முகப்பில் கூரலகு என அர்ஜுனன் அமைக! தொடர்ந்து அதன் நீள்கழுத்தில் பீமசேனரும் அபிமன்யூவும் சாத்யகியும் நானும் பிற மைந்தரும் அமைவோம். அதன் இறகுகளாக பாஞ்சாலப் படை விரிந்திருக்கும். உடலென்றும் காலென்றும் பிற படைகள் நிலைகொள்ளும்” என திருஷ்டத்யும்னன் தொடர்ந்தான். “நாரை இன்றைய போரில் ஒன்றை மட்டுமே இலக்கெனக் கொண்டது. எந்த ஆழத்தில் மூழ்கியும் அதையே கொத்தி எடுக்க அது முயலும், அதன் முழுதுடலும் அவ்வலகுக்கும் கழுத்துக்கும் துணைப்புலம் என அமையும்.” அவன் சொல்லிமுடித்ததும் அவையினர் கைகளைத் தூக்கி “ஆம்!” “வெற்றிச்சூழ்கை!” “கொத்தி எடுப்போம் இரையை!” என்று கூவினர்.

பீமன் “அவையோரே, நேற்று என் கனவில் நான் எனக்கென வஞ்சினமொன்றை உரைத்தேன். இன்று அதை நெஞ்சில் கொண்டே களத்தில் எழவிருக்கிறேன்” என்றான். அனைவரும் அவனை நோக்க “நேற்று எந்தத் தடைகளெல்லாம் என் கால்களை தடுத்தன, தோள்களில் எடையாகியன என்று எண்ணி நோக்கினேன். அவை அனைத்தையும் இன்றுடைப்பேன். என்னுள் வாழும் தந்தையையும் மைந்தனையும் இன்று குருக்ஷேத்ரக் களத்தில் பலி கொடுப்பேன். அவையோர் அறிக! என்னுள் வாழும் நல்லறத்தோனையே இன்று பலி கொடுப்பேன். பயின்ற உடலென, வெறிகொண்ட உள்ளமென, விலங்கென நின்று எதிர்ப்பேன். இன்று பெருங்குருதியாடியே மீள்வேன்” என்றான்.

இளைய யாதவர் அர்ஜுனனை நோக்கி “இது உன் போர், பார்த்தா” என்றார். அர்ஜுனன் “ஆம், எண்ணியிராப் பெருவீரத்துடன் எழுந்து நிற்கிறார் பீஷ்ம பிதாமகர். எல்லையற்றது எனத் தெரிகிறது

அவர்கொண்ட இரக்கமின்மை. ஆயினும் நான் அவரை வெல்வேன். ஏனெனில் வென்றாகவேண்டுமென்பதே நெறி. இப்புடவி அத்தகைய பல்லாயிரம் நெறிகளின் நெசவால் ஆனது” என்றான். தன் மார்பில் கைவைத்து “அவையோரே, பிறிதின்மை ஒன்றை என் உள்ளத்தில் ஆழ உணர்கிறேன். அவ்வாறன்றி வேறு வழியில்லை என என் அகம் சொல்லிக்கொண்டே இருக்கிறது. அது ஒன்றே என்னை செலுத்துகிறது” என்றான்.

“அது உன் இயலாமைக்கு நீ அளிக்கும் அணிகலனாகவும் இருக்கலாம். உன் கால் தயங்குவது ஏன் என்று நீ அறிவாய்” என்று பீமன் சொன்னான். சீற்றத்துடன் ஏதோ சொல்ல நாவெடுத்து பின் அடக்கிக்கொண்ட அர்ஜுனன் “என் எல்லையையும் நான் அறிவேன்” என்றான். பற்களைக் கடித்து கைகளை ஓங்கியபடி “இன்று உன் கண்முன் அதை நான் கடக்கிறேன். இன்றுடன் நீ என்னை கைவிடுவாய், அன்றி உன்னைக் கடந்து மேலெழுவாய்” என்றான் பீமன்.

யுதிஷ்டிரர் “பொழுதணைந்துவிட்டது… அவை எழுக!” என்றார். அவையினர் அனைவரும் எழுந்து நின்று தங்கள் வாள்களை உருவி தலைக்குமேல் தூக்கி அசைத்து “வெல்க குருகுலம்! வெல்க மின்கொடி! வெல்க யுதிஷ்டிரப் பேரறத்தான்! வெற்றி! வெற்றி! வெற்றி!” என்று போர்வஞ்சினம் ஒலித்தனர்.

05.---பீமனுக்குப் பின்னால் சாத்யகி நடந்து வந்தான். காலடியோசை கேட்டு நின்ற பீமனை அணுகிய சாத்யகி “மூத்தவரே, நாம் உளம்சோரும் அளவுக்கு நிலைமை இன்னும் நம்மை மீறிவிடவில்லை. உண்மை, பீஷ்ம பிதாமகர் பேராற்றலுடன் நின்றிருக்கிறார். துரோணரும் சல்யரும் நிகராற்றலுடன் களம் நின்றிருக்கிறார்கள். ஆயினும் நமக்கு நம்பிக்கையூட்டும் ஒன்றுண்டு, நம் இளையோரின் ஆற்றல் நாம் எண்ணியதைவிட பல மடங்கு. ஒருநாள் போரை வைத்து நோக்கினால் நம் வீரர்களில் முதல்வன் அபிமன்யூவே என்கின்றனர் படைவீரர்கள். மறுதரப்பில் துரியோதனரின் மைந்தர் லக்ஷ்மணர் மட்டுமே சற்றேனும் ஆற்றல்கொண்டவராக தெரிகிறார்” என்றான்.

பீமன் “போருக்கு முன்பு கணிப்பதெல்லாம் போரில் பிழையாகும் என்பார்கள். பார்ப்போம்” என்றபின் “என்னுடன் இரும் யாதவரே, இப்போரில் நாம் முன்சென்றாகவேண்டும். இன்று வென்று திரும்புவதில் உள்ளது நம் இறுதி வெற்றி” என்றான். “இன்று

பிதாமகரை எதிர்கொள்கிறீர்களா?” என்றான் சாத்யகி. “ஆம், அவரை. அவரைச் சூழ்ந்துள்ள அனைவரையும். இன்று எந்த எல்லைக்கும் செல்பவன் நான் என்று அவர்களுக்கு காட்டுவேன்” என்றான் பீமன். சாத்யகி புன்னகைத்து “ஆம், இன்று நம்மை முழுதும் வெளிக்காட்டுவோம்” என்றான்.

அவர்கள் புரவிகளில் ஏறிக்கொண்டு படைகளினூடாக சென்றனர். சாத்யகி “நேற்று ஒரு கொடுங்கனவு” என்றான். “தலையறுந்த உடல் ஒன்று இடக்கையில் தன் தலையையும் வலக்கையில் வாளையும் ஏந்தியபடி குருதியால் நனைந்திருந்த புரவிமேல் ஏறி நம் படைகள் நடுவே அலறியபடி ஓடியது. அதனுடன் பேய்த்தோற்றம் கொண்ட பாதாளதெய்வங்கள் வெறிகொண்டு தொடர்ந்தன. கௌரவர்களின் படையிலுள்ள யாதவர்கள் அனைவரும் பித்தெழுந்த விழிகளுடன் படைக்கலங்களைத் தூக்கியபடி போர்க்கூச்சலிட்டுக்கொண்டு வந்து நம்மை தாக்கினார்கள். குருதித்திவலை பேரருவிச் சிதறலெனத் தெறிக்கும் பெரும்போர்…”

பீமன் அது யார் என்று கேட்கவில்லை. சாத்யகி “சததன்வா… அவன் இங்கிருந்து செல்லவில்லை. அணையா வஞ்சம் கொண்டிருக்கிறான்” என்றான். பீமன் அதற்கும் மறுமொழி சொல்லவில்லை. “கொல்லப்பட்டவர்கள் எப்படி இங்ஙனம் பேருருக் கொள்கிறார்கள் என்று புரிந்துகொள்ளவே முடியவில்லை” என்றான் சாத்யகி. “அவர்களின் அனைத்துப் பிழைகளும் சிறுமைகளும் மறக்கப்படுகின்றன. அவர்களின் வஞ்சம் மட்டும் கணந்தோறும் வளர்கிறது. விண்ணளவு பெரியதாகும் ஒவ்வொன்றையும் மானுடர் தெய்வங்களென தொழத் தொடங்கிவிடுகிறார்கள். பாண்டவரே, யாதவக் குடிகளை மறுநிலை நோக்கி கொண்டுசென்றவை பெருவிழைவும் குலப்பெருமையும் அச்சமும் மட்டுமல்ல, அவர்களின் நெஞ்சின் ஆழத்திற்குள் எங்கோ எப்போதுமே சததன்வா இருந்தான்” என்றான்.

பீமன் “அவர்கள் அவனை மறக்கமுடியாது” என்றான். “அவன் கொல்லப்பட்டபோது துவாரகை எப்படி மகிழ்ந்துகொண்டாடியது என நினைவுறுகிறேன். கிருதவர்மன் சிறைபிடிக்கப்பட்டு நகருக்குள் கொண்டுவரப்பட்டபோது யாதவர் அவனைச் சூழ்ந்து காறியுமிழ்ந்தனர். அவர்களறியாத நச்சுவிதைகள் அவர்களின் நெஞ்சுக்குள் விழுந்து கரந்துவிட்டிருந்தன. இளையவர் மீது விலக்கமும் அச்சமும் அதன் விளைவான காழ்ப்பும் எழுந்ததுமே அவை முளைத்துவிட்டன” என்றான் சாத்யகி. “கிருதவர்மன் இன்னும்

இருக்கிறான். ஒவ்வொருநாளும் தன் தோழனை எண்ணிக்கொண்டுமிருக்கிறான்” என்றான் பீமன்.

“ஆம், பாண்டவரே” என்ற சாத்யகி சற்று தயங்கி “கனவில் எதுவும் எப்படியும் வரும். ஆனால்…” என்றபின் “நேற்று என் கனவில் அறுந்த தலையை ஏந்தி சததன்வா தலைமைகொண்டு போருக்கெழுந்தபோது வெறிக்கூச்சலிட்டபடி உடன் பெருகிவந்த யாதவர் படை கிருதவர்மர் வாழ்க என்றுதான் கூவியது…” என்றான். பீமன் திரும்பி நோக்கினான். “அந்தத் தலைமட்டும்தான் சததன்வாவுடையது…” என்றான் சாத்யகி. பீமன் கண்களில் மகிழ்ச்சியில்லாமல் உரக்க நகைத்து “கனவுகளை ஆராயப்புகுந்தால் அவை நம் படைகளைவிட நூறுமடங்காகும். நேற்று நம் படைவீரர்கள் இரவெல்லாம் கனவுகண்டிருக்கிறார்கள்” என்றான்.

படைகளின் முகப்பினூடாக அவர்கள் பெருநடையில் சென்றார்கள். சாத்யகி “நான் கடக்கவேண்டிய எல்லையை இன்று வகுத்துக்கொண்டேன்” என்றான். பீமன் திரும்பி நோக்காமலேயே தலையை அசைத்தான். “நேற்று என் எதிரில் யாதவர்கள் வராமல் பார்த்துக்கொண்டேன். என் கைகளால் என் குலத்தவரை கொல்லவியலுமா என்று அஞ்சினேன். இன்று கொல்வேன். பாண்டவரே, இன்று யாதவக்குருதியிலாடியே மீள்வேன்” என்றான். “ஒவ்வொருவரும் தங்கள் எல்லைகளை தலையால் அறைந்துடைத்துக் கடந்தாகவேண்டிய நாள் இது. அதையே இளைய யாதவர் இன்று அவையில் சொன்னார்.”

பீமன் புரவியை நிறுத்தி தன் படைகள் அணிவகுத்து நின்றிருப்பதை கண்டான். பெரும்பாலானவர்கள் துயில்நீப்பின் நிழல் படிந்த கண்களுடன் சுருங்கிய வாயுடன் காய்ச்சல்கண்டவர்கள் போலிருந்தனர். சிலர் கைகளும் உதடுகளும் நடுங்குவதாகவே தோன்றியது. முரசுகளும் கொம்புகளும் முழங்க கொடிகள் சுழன்று சுழன்றசைய படை தன் பிரிவுகளை முள்ளம்பன்றி முட்களை அமைப்பதுபோல விரித்து சீராக அடுக்கியது. அதன் வெவ்வேறு பகுதிகள் தனித்தனியாகப் பிரிந்து ஒன்றாக இணைந்துகொண்டிருந்தன. தோல்சுருளில் பார்த்த வரைபடத்தை நினைவுகூர்ந்து படைகள் நாரைச்சூழ்கை அமைப்பதை பீமன் உணர்ந்தான்.

சாத்யகி தன் படைகளின் முகப்பை நோக்கி செல்ல பீமன் மேலும் முன்னகர்ந்து தன் படைகளை அணுகினான். அவனைக் கண்டதும்

வாழ்த்தொலிகள் எழுந்தன. ஆனால் அவை தளர்ந்த வில்லின் நாணொலிபோல் பதிந்து ஒலித்தன. பீமன் தன் தேரை அணுகி புரவியிலிருந்து இறங்கி நின்றான். வீரர்கள் அவன் கவசங்களை பொருத்தத் தொடங்கினர். அவன் விழிசுருக்கி ஒளிபரவத் தொடங்கிய வானத்தைப் பார்த்தபடி நின்றிருந்தான். படைசூழ்கை முடிவடைந்ததை அறிவிக்கும் கொம்போசை எழுந்ததும் அவன் அருகே நின்றிருந்த முரசு மாடத்தை அணுகி ஏணியென அமைக்கப்பட்டிருந்த கணுமூங்கிலில் தொற்றி மேலேறினான். மறுபக்கம் முரசறைவோர் இருவர் அவனுக்காக கீழிறங்கினர். அவன் எடை தாளாது மேடை முனகியது.

பெருமுரசும் சிறுமுரசும் சிவக்கும் வானொளியில் செந்நிறத் தோற்பரப்புகள் மின்ன அமைந்திருந்தன. கொம்புகளுடன் ஒரு காவலன் மட்டும் அங்கிருந்தான். வண்ணக் கொடிகள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. பீமன் நின்றபடி புருவம்மேல் கைவைத்து பாண்டவப் படையை பார்த்தான். நாரை கழுத்தை கட்டுவிரியன்போல மும்முறை வளைத்து உள்ளிழுத்து, சிறகுகளை உடலுடன் ஒட்டிக்கொண்டு ஒடுங்கி நீண்டிருந்தது. சிறகுகளின் இறகுகளாக அமைந்த விரைவுத்தேர்களின் கொடிகள் காற்றில்லாமையால் துவண்டு கிடந்தன. அலகுமுனையில் இளைய யாதவர் தேரைத் தொட்டு வணங்கியபின் அமரத்தில் ஏறி அமர்ந்து சவுக்கை கையிலெடுத்தார். புரவிகளின் புட்டங்களை இடக்கையால் மெல்லத் தொட்டு அவற்றுடன் உரையாடினார். கவசங்கள் மின்ன அர்ஜுனன் நிலம்தொட்டு வணங்கி தேரிலேறிக்கொண்டான். அவனுடைய ஆவக்காவலர் பின்னால் ஏறி அம்பறாத்தூணிகளை எடுத்து தேரில் அடுக்கினர்.

அர்ஜுனனைச் சூழ்ந்து அவனுடைய தனிப்படை வில்லவர் நூற்றெண்மர் இரட்டைப்புரவி இழுத்த எடையற்ற தேர்களில் ஏறி பீடத்தில் வில்லேந்தி நின்றனர். அவர்களின் ஆவக்காவலர் பின்பக்கம் அம்புத்தூளிகளுடன் ஏற பாகன்கள் முன்னால் ஏறி அமரத்தில் அமர்ந்தனர். விசைவில்லவர் ஆயிரத்தெண்மர் புரவிகளில் ஏறிக்கொண்டு வலக்கையில் வில்லை வாங்கி தொடையுடன் ஒட்டி நீட்டுவாக்கில் வைத்தனர். அவர்களின் புரவிகளின் வலப்பக்கம் அம்புத்தூளிகளை ஏவலர் கட்டினர். அவர்கள் கவசங்களை சீரமைத்து கையுறைகளை அணிந்துகொண்டனர். தலைக்கவசங்கள் வெட்டுண்ட தலைகள்போல தோல்நாடாவில் கட்டப்பட்டு புறங்கழுத்தில் தொங்கின.

பீமனின் படையிலிருந்த நூற்றெட்டு தேர்வீரர்களும் ஆயிரத்தெட்டு புரவியினரும் முன்னரே ஒருங்கிவிட்டிருந்தனர். அர்ஜுனனும் பீமனும் தங்கள் படைகளை தாங்களே தெரிவுசெய்திருந்தனர். அவர்களின் இயல்பு படைகளிலும் தெரிந்தது. அர்ஜுனனின் படைவீரர்கள் தங்கள் திறன்மேல் நம்பிக்கைகொண்டவர்களாகவும் அதனால் எதையும் பெரிதாக பொருட்படுத்தாதவர்களுமாக இருந்தனர். அங்கிருந்து நோக்கியபோதே அவர்களின் படைகளில் உருவாகி மறைந்துகொண்டிருந்த சிறிய கலைவு தெரிந்தது. பீமனின் படைகள் முன்னரே முழுமையாக சித்தமாகி பொறுமையிலாது தங்கள் உடல்களுக்குள் ததும்பிக்கொண்டிருந்தன. சிலர் தரையை கால்களால் மெல்ல உதைத்தனர். சிலர் கைகளின் தோலுறைகளை உரசிக்கொண்டனர்.

அவனுக்குப் பின்னால் சாத்யகியின் படைகளும் அதற்கப்பால் திருஷ்டத்யும்னனின் படைகளும் நாரையின் கழுத்தென்று அமைந்திருந்தன. நாரையின் வலச்சிறகின் முனையில் அபிமன்யூவும் இடச்சிறகின் முனையில் சுருதகீர்த்தியும் இருந்தனர். அபிமன்யூவின் அருகே துருபதரும் சுருதகீர்த்தியின் அருகே விராடரும் தேர்கொண்டிருந்தனர். நாரையின் நெஞ்சில் யுதிஷ்டிரரின் கொடியும் அருகே இருபுறமும் நகுலனின் கொடியும் சகதேவனின் கொடியும் தெரிந்தன. படை முழுமையாக ஒருங்கிவிட்டிருந்தது. ஆனால் வெறும் விழிகளாலேயே நோக்கத்தக்க சோர்வு அதில் இருந்தது.

எதிரே விழியெல்லை வரை கௌரவர்களின் படை நிரந்து படர்ந்திருந்தது. அவர்களின் முகப்பெல்லையை கடல்விளிம்பென காணமுடிந்தது. அப்பாலிருக்கும் படை ஓசையென்றே அறியவந்தது. ஆயினும் அவர்கள் கொண்டிருக்கும் உளஊக்கமும் பெருமிதமும் எவ்வண்ணமோ அனைவருக்கும் தெரிந்தது. அவர்கள் பருந்துச்சூழ்கை அமைத்திருந்தார்கள். பருந்தின் கூரலகு என பீஷ்மரின் படை நின்றது. அவருடைய மாணவர்கள் மட்டுமே அடங்கிய தேர்வில்லவர் சூழ்ந்திருக்க அவர் தேர்த்தட்டில் வில்லை மதலையென மடியில் போட்டு கைகளை மார்பில் கட்டி ஊழ்கத்திலென அமர்ந்திருந்தார். வலப்பக்கமிருந்து வீசிய மென்காற்றில் தாடி பறந்தது. பரிவில்லவர் ஆயிரத்தெண்மர் அவருக்கு இருபுறமும் அவருடைய கைகள் விரிந்ததென நிரைகொண்டிருந்தனர்.

பருந்தின் வலப்பக்கச் சிறகின் எல்லையில் துரோணர். அருகே கிருபர். இறகுத்தொகையாக கௌரவர்களின் அணி. இடப்பக்கச் சிறகின் எல்லையில் அஸ்வத்தாமன். அருகே இறகுகளாக சல்யரும் கிருதவர்மனும் லட்சுமணனும் அவன் இளையோரும். பருந்தின் கூருகிர்கால்களாக ஜயத்ரதனும் பூரிசிரவஸும். பருந்தின் நெஞ்சில் சகுனியும் துரியோதனனும் அருகருகே நின்றிருப்பது கொடிகளினூடாக தெரிந்தது. பருந்து சிறகுகளை நன்கு விரித்து கழுத்தைத் தாழ்த்தி கூரலகு நீட்டி மறுகணம் காற்றிலெழுந்து பாயும் கணத்தில் நிலைகொண்டிருந்தது.

பருந்தின் கழுத்து நீளமற்றிருந்தாலும் அதில் வலுவான மூன்று அரசர்களின் படைகள் இருப்பதை பீமன் கண்டான். சூரியக்கொடி பறக்கும் தேர்களின் நிரை கலிங்கப் படைகள் என்று தெரிந்தது. உசிநாரத்தின் அஸ்வக் கொடியையும் துஷாரத்தின் நாகக் கொடியையும் அடையாளம் கண்டான். புருவம் சுருக்கி அவன் படையின் அப்பகுதியை மட்டும் பார்த்துக்கொண்டு நின்றான். பின்னர் கணுமூங்கில் வழியாக இறங்கி கீழே வந்தான். அவனை அணுகிய அணுக்கப்படைவீரன் சிம்ஹபாகு “தாங்கள் பருந்தின் கழுத்தை நோக்குவதை கண்டேன், அரசே” என்றான். “ஆம், பீஷ்மரை மையப்படையுடன் பிணைப்பது அது” என்றான் பீமன்.

சிம்ஹபாகு “ஆனால் அது நீளமற்றது. மைய உடலின் பகுதியேதான். மையப்பெரும்படைக்குள் எத்தருணத்திலும் தங்களை உள்ளிழுத்துக்கொள்ள அவர்களால் இயலும். அவர்களை தொடர்ந்து சென்றோமென்றால் மையப்படையால் சூழப்படுவோம்” என்றான். பீமன் தலையசைத்தான். தேரின் அருகே சென்று அதன் சகடக்காப்பின்மேல் கையூன்றி மேலே மெல்ல நுடங்கிய மின்கதிர்கொடியை நோக்கியபடி நின்றான். சிம்ஹபாகு “அங்கே என்ன நிகழ்ந்தது என்ன புரியவில்லை” என்றான் பீமன் “கலிங்கம் மூன்றுநாடுகளாகி பல ஆண்டுகளாகின்றது. ஸ்ருதாயுஷ் ஆட்சிசெய்யும் மையக்கலிங்கம் பெரியநாடு. அவருடைய முதல்மைந்தர் ருதாயு சூரியதேவர் என்னும் பெயர் சூடி தென்கலிங்கத்தை ஆள்கிறார். அவருடைய இளையோன் கேதுமானும் தனிப்படையும் கொடியுமாக உடன்வந்துள்ளான். இளையவராகிய சித்ராங்கதர் ராஜபுரத்திலமைந்து வடகலிங்கத்தை ஆள்கிறார். ஒரே குருதி. ஒன்றென இணைவதே நன்று என அவர்களுக்குப் புலப்படுவதற்கு இத்தகைய பெருங்களம் உகந்த சூழல்தான்”.சிம்ஹபாகு ”ஆம்”என்றான்.

பீமன் முகவாயை தடவியபடி எண்ணத்திலாழ்ந்து நின்றிருக்க "மல்ல நாட்டு ஆகுகர், உசிநார மன்னர் சிபி, துஷார நாட்டு அரசர் வீரசேனர் ஆகியோர் கலிங்கத்துடன் இணைந்துள்ளனர்" என்றான் சிம்ஹபாகு. "பருந்தின் கழுத்தை நாம் வெட்டியாகவேண்டும்" என்றான் பீமன். சிம்ஹபாகு "ஆணை" என்றான். "எந்த விசை கலிங்கர்களை பிரித்ததோ அது துளியளவிலேனும் அங்கே இருக்கும். பாறைக்குள் நீரோட்டம்போல என்பார்கள். அந்த விரிசலை நாம் கண்டடைந்தால் போதும். அவர்களை உடைப்போம்.". சிம்ஹபாகு "ஆனால் அவர்கள் தந்தையும் மைந்தரும் பெயர்மைந்தரும்" என்றான். பீமன் "ஆகவேதான் இத்தனை மோதல்கள்" என்றபடி தன் கையுறைகளை இழுத்து அணிந்துகொண்டு "இப்போரில் பீஷ்மர் கொல்லப்படவேண்டும். அல்லது புண்பட்டு தேர்த்தட்டில் விழுந்து கொண்டுசெல்லப்படவேண்டும். அவர் வெல்லப்படக்கூடியவரே என்பதை நம் படைகளுக்கு நாம் காட்டவேண்டும்" என்றான்.

சிம்ஹபாகுவின் முகத்தில் எவ்வுணர்ச்சியும் வெளிப்படவில்லை. "இன்று நம் இலக்கு வேறேதுமல்ல. பீஷ்மரை அவர் அமைந்துள்ள பீடத்திலிருந்து பெயர்த்து அர்ஜுனன் முன் நிறுத்துவோம். இரு இளமைந்தரும் வந்து சூழ்ந்துகொள்ளட்டும். நம் வில்லவர் அனைவரும் இணைந்தாலும் சரி, இன்று அவர் களத்தில் விழுந்தாகவேண்டும்." சிம்ஹபாகு "ஆம்" என்றான். பீமன் தேரில் ஏறி பீடத்தில் நின்று தன் வில்லை எடுத்து நாணேற்றினான். படைகளெங்கும் ஒரு மெல்லிய விதிர்ப்பு பரவுவதை உணர்ந்த மறுகணமே புலரியை அறிவிக்கும் கொம்போசை எழுந்தது. முரசுகள் உடன் எழுந்தன. திரை ஒன்று நாற்புறமும் இழுத்துக் கட்டப்படுவதுபோல படை இறுக்கம் கொள்வதை பீமன் கண்டான்.

புலரி அறிவிப்பு ஓய்ந்ததும் கௌரவர் படைகளின் முகப்பிலிருந்து போர்முரசு ஒலிக்கத் தொடங்கியது. கொம்போசைகளுக்கு நிகராக போர்க்கூச்சல்கள் எழுந்தன. அங்கிருந்து நோக்கியபோதே வாள்களும் வேல்களும் காற்றிலெழுந்து அலையடிப்பதன் ஒளியை காணமுடிந்தது. பாண்டவர் தரப்பின் போர்முரசு சற்று பிந்தியே ஒலித்தது. அதன் தோற்பரப்பு சற்று நனைந்திருப்பதுபோல அதன் நடை சோர்ந்திருந்தது. கொம்புகள் ஊதியடங்கியதும் மேலும் சிலகணங்கள் இடைவெளிவிட்டுதான் போர்க்கூச்சலெழுந்தது. அர்ஜுனனின் தேர் உச்சவிசையுடன் எழுந்து முன்செல்ல அவனைச் சூழ்ந்து அணுக்கவில்லவர் சென்றனர். இரு படைகளும் இரண்டு பெருமழைப் பொழிவுகள் என சென்று முட்டிக்கொண்டன.

06..--பீமன் தேர்முன் நின்றபடி “செல்க! செல்க!” என்று பாகனை ஊக்கினான். அவன் தேர் கவணிலிருந்து எழுந்த கல் என விரைய சற்று பிந்தியே அணுக்கவில்லவர் வந்தார்கள். நாரையின் கழுத்து மூன்று வளைவுகளாக மாறி மும்முனைகொண்டு கௌரவப் படையை எதிர்கொண்டது. பீமன் தன்முன் வந்த தேரிலிருந்த துஷாரநாட்டு இளவரசன் சுகேசனை முதல் அம்பிலேயே தலைகொய்து வீழ்த்தினான். அவன் தலை தேர்த்தட்டிலிருந்து உருள பாகன் கடிவாளத்தை இழுத்து தேரை திருப்பினான். உடன்பிறந்தான் வீழக்கண்டு கூச்சலிட்டபடி அவனை நோக்கி வந்த துஷாரநாட்டு இளவரசன் காமிகனை மறு அம்பால் வீழ்த்தினான். அவர்களின் உடல்கள் மேல் அவன் தேர் ஏறிச் சென்றது. துஷாரர்களின் படைத்தலைவன் கீர்த்திமானும் அவனுடைய அணுக்கவீரர் பன்னிருவரும் வீழ்ந்தனர்.

பீமன் தன் அணுக்கரை திரும்பிநோக்கி “நாம் போருக்கு எழவில்லை. கொல்லவே வந்திருக்கிறோம். வெறுமனே கொல்ல. கொலைக்கூத்தாட! கொல்லுங்கள்! எவரும் விலக்கல்ல. எதுவும் தடையல்ல… கொல்க! கொல்க!” என்று ஆணையிட்டான். “பாகன், அணுக்கன், ஏவலன் எவராயினும் நம் அம்புபட்டு எவரும் எஞ்சலாகாது. கொல்லுங்கள். கொன்று குவியுங்கள்!” என்று கூவினான். அவன் படைவீரர்கள் அவனுக்கு இருபுறத்துமிருந்த வெளியை பறக்கும் அம்புகளால் நிறைத்தனர். சிட்டுகளின் சிறகோசை என காற்று விம்மியது.

துஷாரநாட்டு அரசர் வீரசேனர் தன் மைந்தர்கள் வீழ்ந்ததை அறிந்ததும் தன் சங்கை எடுத்து ஊதினார். அவ்வொலி கேட்டு துஷாரப் படைகள் இழுபடும் வலையென அவரை நோக்கி குவிந்து அணுகின. அவர் வெறிகொண்டவர்போல காலால் தேர்த்தட்டை உதைத்தபடி சங்கை ஊதிக்கொண்டே இருந்தார். வலிமிக்க அலறல்போல, துயர்பீறிடும் தேம்பல்போல அவ்வோசை களத்தில் எழுந்தது. அதைக் கேட்டு மல்ல நாட்டு ஆகுகரும் உசிநார மன்னர் சிபியும் தங்கள் சங்குகளை முழக்கினர். அவர்களின் படைகளும் சூழ்ந்துகொள்ள மூன்று முனைகளாக கௌரவப்படை எழுந்து பீமனை நோக்கி வந்தது.

அப்பாலிருந்து அதை நோக்கிய திருஷ்டத்யும்னனின் செய்தி வந்தது. “பாண்டவரே, பின்னகர்க! அவர்கள் மையப்பெரும்படையால் தொடரப்படுகிறார்கள். சகுனியும்

சுபலரும் பால்ஹிகர் சலனும் கௌரவர் பதினெண்மரும் அவர்களுக்குப் பின்னால் வருகிறார்கள். உங்களை சூழ்ந்துகொள்வார்கள்... அணிவிலகுக!” அந்த முரசொலிக் குரலை கேட்டு அவன் படை சற்றே தயங்க பீமன் “முன்னேறுக... முன்னேறுக!” என்று பாகனை நோக்கி கூவினான். அவன் அம்புகளால் துஷாரப் படைவீரர்கள் அலறியபடி விழ நிலையழிந்த புரவிகளால் தேர்கள் கவிழ அம்புபட்டு விழுந்த புரவிகள் எழுந்தும் விழுந்தும் கால்கள் துடிக்க அவற்றின் மேலேறி விழுவதுபோல் மறுபுறம் சென்று அவன் துஷாரர்களையும் மல்லர்களையும் உசிநாரர்களையும் எதிர்கொண்டான்.

“ஊன்மலையே, தந்தையறியா கீழ்மகனே, என் மைந்தனைக் கொன்ற உன் குருதியை அள்ளிச்சுவைக்காமல் செல்லப்போவதில்லை” என்று துஷாரரான வீரசேனர் கூவினார். “கொல்லுங்கள் அவனை. சூழ்க... ஒருகணமும் ஒழியாமல் அவன்மேல் அம்புகள் பொழிக!” என்று கண்ணீருடன் வீறிட்டார். பீமன் கையை உதறி குருதித் திவலைகளை தெறிக்கச் செய்தபடி உரக்க நகைத்து “கீழ்மகனே, நீ அரசனல்ல வேடன். உன்னை அரசனுக்குரிய முறையில் கொல்லப்போவதில்லை. உன் தலையை என் காலால் உதைத்து வீசுவேன்” என்று கூவியபடி அம்புகளை ஏவினான். வீரசேனரின் தேர்த்தூணிலும் குவைமுகட்டிலும் அம்புகள் பெய்து மூடின.

மிக அண்மையிலென வீரசேனரின் கண்களை நோக்கி “அறிவிலி, நீ ஷத்ரியனாக நடிக்கும் இழிகுலத்தான். பழித்துத் துரத்தப்பட்ட அனுவின் குருதி நீ. உன் குடியே பாரதவர்ஷத்தால் இழிவுசெய்யப்பட்டது... ஆண்மையிருந்தால் வில்தாழ்த்தாது போரிடு” என்றான் பீமன். செவிமறைக்கும் பேரோசை நடுவே உதடசைவால் ஒலித்த மொழி பெருமுரசுகளைவிட முழக்கம் கொண்டிருந்தது. “இன்று நீ களத்தில் மடிவாய். உன் தலையை மூக்கைச் சீவி என் தேர்மேல் வைப்பேன்... இன்று என் தேரின் கண்ணேற்றுக் கலமுகம் நீ” என்றான் பீமன்.

அச்சொற்கள் ஒவ்வொன்றாலும் இரும்புக் கதாயுதத்தால் அறைவாங்கியவர்போல துஷார வீரசேனர் அதிர்ந்தார். அவர் துணைக்கு வந்த மல்ல ஆகுகரும் உசிநார சிபியும் இருபக்கமும் சூழ்ந்தனர். “சூழ்ந்துகொள்க... அவன் தனியன். சூழ்ந்துகொள்க!” என்று சிபி கூவினார். “செல்க! செல்க! அவனை கால்நாழிகைப்பொழுது நிறுத்துக... நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம்!” என்று பின்னாலிருந்து சலன்

செய்தியனுப்பினான். “கலிங்கம் நிலைபெயர வேண்டியதில்லை. பீஷ்மரை பின்காத்து நிலைகொள்க! இப்போரை நாங்கள் முடிக்கிறோம்” என்று சகுனியின் ஆணை வந்தது.

தன் உள்ளம் அஞ்சி தளர்ந்துவிட்டதை வீரசேனர் உணர்ந்தார். உடல்களும் படைக்கலங்களும் கொப்பளித்துக் கொண்டிருந்த அந்தப் பெருக்கில் முற்றிலும் தனியராக உணர்ந்தார். கொண்ட அனைத்தும் முற்றிலும் பொருளிழந்தன. உடல் தன் செயற்பழக்கத்தால் மட்டும் அம்புகளை எய்துகொண்டு களம் நின்றது. மல்ல ஆகுகர் தன் இளமைந்தரிடம் “கைநிலைக்காது எய்து நிறையுங்கள். கணமொழியாது அம்பு பெருக்குங்கள்... இது வெற்றியின் தருணம்...” என்று கூவியபடி பீமனை நெருங்கினார். அவர் மைந்தன் பலதேவனின் உடல் தேரிலிருந்து யானையால் தூக்கி வீசப்பட்டதுபோல் களத்தில் விழுந்தது. இன்னொரு மைந்தன் சுகிர்தனின் தலை அதன்மேல் தெறித்தது. அவர் அலறி திரும்புவதற்குள் அவருடைய கவசம் உடைந்தது. மறுகணமே அடுத்த நீளம்பு நெஞ்சில் புதைந்து மறுபக்கம் சென்று தேர்த்தூணுடன் அவரை அறைந்து நிறுத்தியது. கைகால்கள் துடிக்க வில்நழுவ அவர் வாயிலும் மூக்கிலுமிருந்து கொழுங்குருதி பெருக்கி நின்றார்.

உசிநார சிபி “செல்க! செல்க!” என்று வீறிட்டபடி அவருக்கும் பீமனுக்கும் நடுவே புகுந்தார். மறுகணம் கதையுடன் தேர்ப்புரவிகள் மேல் தாவி உடைந்துசரிந்த தேர்முகடொன்றில் கால்வைத்து காற்றிலெனப் பறந்து அவர் தேரிலேயே ஏறிய பீமன் அவரை கால்தூக்கி நெஞ்சில் மிதித்துத் தள்ளி கதையைச் சுழற்றி தலையை அறைந்து உடைத்தான். “தந்தையே!” என்று கூவியபடி புரவி திருப்பி அருகணைந்த உசிநார நாட்டு இளவரசன் நிகும்பனை ஒரே அடியில் தேர்த்தட்டில் குருதிக்குமிழியாக உடைந்து தெறிக்கச் செய்தான். அவன் உடலெங்கும் குருதி வழிந்தது. தலையை உதறியபோது தலைக்கவச முனைகளிலிருந்து கூழாங்கற்களென நிணமும் உறைசோரியும் தெறித்தன. பெருங்கதையை சுழற்றித் தூக்கி மதயானைபோல் பிளிறலோசை எழுப்பினான். அவன் படைவீரர்கள் “வெற்றிவேல்! வீரவேல்!” என்று போர்க்குரலெழுப்பி பறவைக்கூட்டமென வீழ்ந்தவர்கள்மேல் பாய்ந்து மேலெழுந்து வந்தனர்.

துஷார வீரசேனர் தன் கையிலிருந்து வில்நழுவுவதை உணர்ந்தார். தேர்த்தட்டில் விழப்போகிறவரைப்போல் அசைந்தாடினார். அரைக்கணத்தில் இரு மைந்தரையும் அருகிலெனக் கண்டார்.

இளையவர்களாக அவருடன் நதியில் நீராடினார்கள். பற்களும் விழிகளும் ஒளிர நகைத்தபடி புரவிகளில் பாய்ந்தேறி மலைச்சரிவுகளில் கூழாங்கற்கள் தெறிக்க உருளைக்கற்கள் உடன் உருள விரைந்தனர். பாணனின் பாடலைக் கேட்டு பந்த ஒளி விழிகளில் மின்ன கனவு காய்ச்சலெனப் படிந்த முகங்களுடன் அமர்ந்திருந்தனர். “மைந்தா!” என்று கூவியவாறு அவர் அம்புகளைத் தொடுத்தபடி முன்னால் பாய்ந்தார். “மைந்தர்களே, உங்கள் பொருட்டு அவன் உடலில் ஒரு புண்… இப்பழிமகனின் ஒருதுளிக் குருதி… தெய்வங்களே, என் மைந்தர்களுக்காக அக்கொடையை எனக்களியுங்கள்… மூதாதையரே, இத்தருணத்தில் என்னுடனிருங்கள்.”

ஆனால் அவருடைய அம்புகளை பீமன் எளிதில் கைவில்லாலேயே அறைந்து தெறிக்கச் செய்தான். அவன் வில் நெளிந்து முறுகுவதை, பிறவிபிறவியென அவரைத் தொடர்ந்து வரும் அந்த அம்பு ஒளித்துளியை கூரில் சூடியபடி அதிலமர்ந்து இறுகுவதை, எழுந்து பின்சிறகுகள் காற்றில் நீர்ப்பாசி இலைகள் என ஒதுங்க மிதந்து வருவதை அவர் கண்டார். அவர் நெஞ்சில் ஓர் உதையென அது பதிந்தது. மூச்சு இறுக ஓசையின்றி தேரில் மல்லாந்து விழுந்தார்.

“பின்னடைக! பாண்டவரே, பின்னடைக! பெரும்படை சூழ்ந்துகொள்கிறது… பின்னடைக!” என்று திருஷ்டத்யும்னனின் ஆணை எழுந்தது. “பின்னடைக! பிற படைகளுடன் ஒருங்கிணைக! எதிரி சூழ்ந்துகொள்ள விடாதீர்கள்!” பீமன் இடைவாளால் துஷார வீரசேனரின் தலையை வெட்டி எடுத்தான். தலைக்கவசத்தை உடைத்து அவர் மூக்கை அரிந்து வீசிவிட்டு புரவிகள்மீதும் தேர்க்குடங்கள் மீதும் குரங்குபோலத் தாவி தன் தேரை அடைந்தான். அவருடைய கொண்டையினூடாக அம்பொன்றை செலுத்தி தன் தேர்முகப்பில் குத்தி நிறுத்தி அதை ஆடவிட்டான். “செல்க! முன்செல்க!” என்றான். “அரசே!” என்றான் பாகன். “முன்னால் செல்க… முன்னால் செல்க!” என்று பீமன் காலால் தேர்த்தட்டை ஓங்கி மிதித்தபடி கூவினான். “குருதியாடி மகிழ்க என் தேவர்கள்! மூச்சுலகில் துள்ளிக்களிக்கட்டும் என் மூதாதையர்… செல்க!”

தேர் அதிர்ந்தபடி முன்னால் சென்றது. அவன் வீரர்களில் வீழ்ந்தவர்களின் புரவிகளும் தேர்களும் பின்னடைய பிறர் தங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு அவனைத் தொடர்ந்து போர்க்கூச்சலுடன் சென்றனர். “சாத்யகியை என்னை தொடரச் சொல்க… என் பின் சாத்யகி இருக்கவேண்டும்!” என்று பீமன்

கூவினான். “எவர் வரினும் கொன்றே மீள்வேன்… மையப்பெரும்படையே ஆயினும் எதிர்கொள்வேன்… விரைக! விரைக! விரைக!”

07----வீரசேனர் விழுந்ததை துஷாரர்களின் கொம்போசையிலிருந்து உத்தர கலிங்க மன்னர் சித்ராங்கதர் அறிந்தார். வீரசேனரின் பாகன் தேர்த்தட்டில் எழுந்து நின்று விழிநீருடன் தன் சங்கை வெறிகொண்டவன்போல் திரும்பத் திரும்ப ஊதினான். சூழ்ந்திருந்த துஷாரப் படையினர் “விண்ணெழுந்த வீரர் வெல்க! துஷார வீரசேனர் நிறைவுறுக! துஷாரச் செங்கோல் நீடுவாழ்க!” என்று வாழ்த்தொலி எழுப்பினர். துஷாரர்களின் படைத்தலைவர்கள் பறைகளையும் கொம்புகளையும் முழக்கி கொடிகளை அசைத்து சிதறி சிறுகுழுக்களாக எஞ்சிய படைகளை ஒருங்கு திரட்டி மேலும் மேலும் பின்னுக்கிழுத்தபடி மையப்படைக்குள் சென்று அமைந்தனர்.

சித்ராங்கதர் தன் உடல் ஒரு பக்கம் எடை மிகுந்து நிலை சரிந்ததுபோல் உணர்ந்தார். இடக்கால் துடித்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு கணமுமென வீரசேனரின் இறப்பை தான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. முதலில் மல்ல நாட்டு ஆகுகர் விழுந்தபோது அவருள் ஒரு திடுக்கிடலாக எழுந்தது அது. கடுங்குளிர்போல உடலுக்குள் நிறைந்து விரல்நுனிகள் அனைத்தையும் விறைப்படையச் செய்தது. பின்னர் உசிநாரர் விழுந்தபோது பற்கள் இரும்பைக் கடித்ததுபோல் கூசின. விழிகள் நீர்கோத்தன. இனி ஒருவர், இனி ஒருவர் என்று அவர் உள்ளம் சொல்கொண்டது. வீரசேனர் விழுந்தபோது ஒரு வட்டம் முழுமையடையும் நிறைவை அடைந்தார். இழுத்துக்கட்டியிருந்த சரடுகள் அனைத்தும் அறுபட உடல் நிலம் நோக்கி விழ விரும்பியது.

அவருடைய படைத்தலைவன் திரிசக்ரன் முன்னால் தேர்மேல் எழுந்து கலிங்கப் படைகளை நோக்கி “முன்னேறுக! முன்னேறுக!” என்று கூவிக்கொண்டிருந்தான். அவருடைய மைந்தர்கள் சித்ரரதனும் சித்ரபாகுவும் இருபுறமும் தேர்களில் போரிட்டபடி முன்னால் சென்றுகொண்டிருந்தனர். பின்னாலிருந்து முரசொலியாக சகுனியின் ஆணை வந்தது. “கலிங்கப் படை அணிபிரிய வேண்டியதில்லை. மூன்று கலிங்கங்களும் இணைந்து வடிவை நிலை நிறுத்துக! பருந்து பறந்து முன்னேறட்டும். நாரையின் சிறகுகளை சிறகால், உடலை உகிரால் எதிர்கொள்க!

செல்க! செல்க!” அவருக்கு வலப்பக்கமிருந்து சித்ரரதன் “இளைய பாண்டவர் நம் படைகளில் ஒரு பகுதியை முற்றழித்துவிட்டார். பருந்தின் கழுத்துக்குள் ஊடுருவிக்கொண்டிருக்கிறார்” என்றான். இடப்பக்கம் இருந்த சித்ரபாகு “அவரால் உள்ளே வர முடியாது. இன்னும் சற்று நேரத்தில் முற்றிலும் சூழ்ந்துகொள்ளப்படுவார். ஒருவேளை இன்றே களம்படுவார்” என்றான். சித்ரரதன் உரக்க நகைத்து “அணைவதற்கு முந்தைய தழலெழுகை!” என்றான்.

எச்சொற்களும் அவர் உள்ளத்தில் பதியவில்லை. தேர்ந்த பயிற்சியால் தன் முன்வந்த அம்புகளுக்கு உடலொழிந்தும், வில்லெடுத்து இலக்கு கூர்ந்து கவசங்களின் இடைவெளி நோக்கி வீரர்களை வீழ்த்தியும் முன் சென்றுகொண்டிருக்கையில் அவர் உள்ளிருந்து இரு விழிகளும் சிறுபறவையென்றாகி பறந்து மேலெழுந்து கீழே படைக்கலங்களும் உடல்களும் கொந்தளிக்கும் போர்ப்பரப்பை பார்த்து திகைத்து தத்தளித்துக்கொண்டிருந்தன. பின்னால் தன் மையப் படைகள் அகன்று விலகிக்கொண்டே இருக்க அதை சற்றும் பொருட்படுத்தாமல் பீமன் மேலும் மேலுமென பருந்தின் கழுத்தை வெட்டி உள்ளே வந்துகொண்டிருந்தான். அவனுடைய சூழ்படை அவனிலிருந்தே வெறியை பெற்றிருந்தது. அவனைப் போலவே உடலசைவுகள். அவனுடைய அதே போர்க்கூச்சல். பீமனே நூறென ஆயிரமென பெருகியது போலிருந்தது. குருதி வழியும் கவசங்களுடன் வில்லாலும் கதையாலும் வேலாலும் கொன்று கொன்று பெருகி எழுந்து அணுகும் அப்படையில் எவர் பீமன் என்பதை ஒருகணம் விழிமயங்கித் தெளிந்த பின்னரே உணரமுடிந்தது.

மூன்று கலிங்க நாடுகளும் ஒன்றென கலந்துருவானது கலிங்கப்படை எனினும் ஆயிரத்தவரும் நூற்றுவரும் தங்கள் பழைய அடையாளங்களுடன்தான் படைகளுக்குள் திரண்டிருந்தனர். மையக்கலிங்க மன்னர் ஸ்ருதாயுஷ் தன் நான்கு மைந்தர்களுடன் முகப்பிலிருந்தார். அதன் இடது எல்லையில் தட்சிண கலிங்கநாட்டு மன்னர் சூரியதேவர் தன் இளையோன் கேதுமானுடனும் ஏழு மைந்தர்களுடன் படை நடத்தினார். அவர்களிருவரையும் திருஷ்டத்யும்னனின் படைகள் எதிர்கொண்டன. நாரையின் கழுத்து நன்றாக வளைந்து மூன்று முனைகள் கொண்ட அலை போலாகி பருந்தை வளைக்க முயன்றுகொண்டிருந்தது. பீமன் மட்டும் அந்தப் படைசூழ்கையின் வடிவ ஒழுங்கையும் மீறி மேலும் மேலுமென நீண்டு உள்ளே வந்திருந்தான். திருஷ்டத்யும்னனை தடுத்து

நிறுத்தவும் மேலும் மேலுமென பின்னால் தள்ளிக்கொண்டு செல்லவும் கலிங்கப் படைகளால் இயன்றது.

அவர் விழியோட்டித் திரும்பிய கணத்தில் பீமனின் தேரை நெடுந்தொலைவில் கண்டார். மறுகணம் மிக அருகிலென உணர்ந்தார். உள்ளம் திடுக்கிட்டு வில் கைநழுவியபோது பாய்ந்து பிடித்து அந்த நிலைகுலைவால் இரு அம்புகள் தோளிலும் தொடையிலும் தைக்க முட்டுகள் மடித்து தேரில் அமர்ந்து தலையை நன்கு குனித்து தேர்த்தட்டின்மேல் பதித்துக்கொண்டார். மூடிய விழிக்குள் பீமனின் தேர்முகப்பிலாடிய வீரசேனரின் வெட்டுண்ட தலை அவருக்கெனவே வெட்டி வைக்கப்பட்டதுபோல் தெரிந்தது. திறந்த உதடுகளுக்குள் இரண்டு பற்கள் சற்று எழுந்தன. கண்கள் களைப்பும் சலிப்பும் கொண்டவைபோல் நிலைத்திருந்தன. அவர் குமட்டல் கொண்டு வயிற்றை எக்கி வாயுமிழ்ந்தார். அதுவரை அவர் வீரசேனரின் முகத்தை பலமுறை நோக்கியிருந்தார், அது போரில் ததும்பும் முகங்களில் ஒன்றாக இருந்தது. இறந்த முகம். இங்கே அனைத்து முகங்களும் இறந்தவர்களுடையவைதானா?

அவர் புண்பட்டு விழுந்துவிட்டாரென்றெண்ணி பாகன் தேரை பக்கவாட்டில் திருப்பி படைப்பெருக்குக்குள் அமிழ வைக்க முயல தன் உடலிலிருந்த அம்புகளை பிடுங்கி வீசியபின் எழுந்து “செல்க! செல்க!” என்றார் சித்ராங்கதர். “தந்தையே!” என்று சித்ரரதன் கூவினான். “ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! படை முன்செல்லட்டும்!” என்று சித்ராங்கதர் கூறினார். சற்று தொய்வடைந்த அவர் படை மீண்டும் ஒருங்கிணைந்து எதிரில் வந்துகொண்டிருந்த சாத்யகியின் படைகளை தடுத்தது. இரு படைகளும் சந்தித்துக்கொண்ட முனையில் முப்புரிகளாக வடம் ஒன்று முறுகி, பின் பிரிந்து, மீண்டும் முறுகுவதுபோல உச்சப் போர் நிகழ்ந்தது. வலையினூடாக நீர் என முன்னின்று பொருதிய தேர்வில்லவர்களின் இடைவெளியினூடாக பரிவில்லவர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்கள் போரிட்டு விரிய அவ்விடைவெளியினூடாக வேலேந்திய காலாள்படையினர் வந்தனர்.

அவர்களை கலிங்கத்து தேர்வில்லவர் சூழ்ந்துகொண்டு அம்புகளால் தாக்கினர். தேர்கள் தாக்கி அழுத்திப் பிரித்த தேர்களை புரவிப்படைகள் சூழ்ந்துகொண்டன. கலிங்கப் படைத்தலைவன் யுதாமன்யூவை சாத்யகியின் அம்பு தலைகொய்து சென்றது. துணைப்படைத்தலைவன் சித்ரரூபன் தேர்த்தட்டில் அலறி வீழ்ந்தான். அவர்களின் துணைப்படையினர் நிலைகுலைந்தபோது சாத்யகியின் படைவீரர்கள் தேர்களிலிருந்து நீள்வேல்களை ஊன்றி

தாவி வந்து தேர்களிலேயே தொற்றிக்கொண்டு வாளால் வெட்டி வீழ்த்தினர். சினத்துடன் “முன் செல்க! அந்த யாதவனை எதிர்கொள்க! குருதிகொள்க!” என்று சித்ராங்கதர் ஆணையிட்டார். அவருடைய தேர் கீழே விழுந்து கிடந்த உடைந்த சகடங்களின் மீதும் புண்பட்டோர் உடல்கள் மீதும் ஏறிச் சரிந்து எழுந்து அலைகொண்டு சென்று சாத்யகிக்கு நேர் முன்னால் வந்தது.

சாத்யகி சிரித்தபடி “வருக! இன்று கலிங்கன் குருதிகொள்ள வேண்டுமென்பது என் நூலெழுத்து போலும்!” என்றான். “இன்று களத்தில் சிறப்புறுவேன் என்று நிமித்திகர் உரைத்த பின்னரே கிளம்பியிருக்கிறேன், கீழ்மகனே. அது இழிகுலத்தோனாகிய யாதவனுடன் போர் புரிந்தல்ல, உன்னை இங்கு ஏவிய ஷத்ரியர்களுடன் வில்கோர்ப்பதனூடாக!” என்றார் சித்ராங்கதர். அவர்கள் இருவரின் அம்புகளும் வானில் சந்தித்தன. நாணிழுத்து தான் விடும் ஒவ்வொரு அம்பையும் அவன் எளிதாக தவிர்ப்பதை, அவன் அம்புகள் தன் தேரிலும் கவசங்களிலும் அனற்பொறி கிளம்ப வந்து அறைவதை சித்ராங்கதர் உணர்ந்தார். மைந்தர்களை துணைக்கு அழைக்கவேண்டுமா என்று அவர் எண்ணுவதற்குள்ளாகவே இரு மைந்தர்களும் அவருக்கு இருபுறமும் வந்தனர். “கொல்க! கொல்க!” என்று கூவியபடி அவர் சாத்யகியை நோக்கி அவர்களை ஏவினார்.

சாத்யகியின் கவசங்கள் மேல் பட்டு முனை மழுங்கி உதிர்ந்தன அவர்களின் அம்புகள். அவன் நாணிழுத்து அம்பெடுக்க வலக்கையை சற்றே தூக்கிய இடைவெளியில் முதல் முறையாக அவர் அம்பு சென்று அவன் உடலை தைத்தது. சீற்றத்துடன் பிறைஅம்பு ஒன்றை எடுத்து இழுத்து வலப்பக்கமாக விட்டு அவன் சித்ரரதனின் நெஞ்சை பிளந்தான். அவன் ஊதி அணைக்கப்படும் சுடர் என ஓசையிலாது தேர்த்தட்டில் விழுந்தான். “மைந்தா!” என்று அலறி அவர் திரும்புவதற்குள் அவருடைய தோளில் சாத்யகியின் அம்பு பாய்ந்தது. “தந்தையே, பின்னடைக! பின்னடைக!” என்று சித்ரபாகு கூவுவதற்குள் அவன் கழுத்தை பிறையம்பால் வெட்டி தேரில் வீழ்த்தினான் சாத்யகி. சித்ராங்கதர் “மைந்தர்களே!” என்று அலறியபடி வில்லை நழுவவிட்டு இரு கைகளையும் தூக்கினார். அவர் நெஞ்சில் ஓசையுடன் வந்தறைந்த பேரம்பினால் கவசம் இரண்டாகப் பிளந்து கீழே விழுந்தது. அடுத்த அம்பு நெஞ்சைப் பிளப்பதற்குள் பாகன் புரவிகளை முழு ஆயம் கூட்டி இழுத்து தேரை ஒடித்து திருப்பினான். நெஞ்சுக்கென வந்த அம்பு பட்டு தூண் உடைந்து தேரின் குவைமுகடு அவர் மேலேயே விழுந்தது.

சாத்யகியின் அடுத்த அம்புகளால் அக்குவடு முகடும் உடைந்தது. பாகன் தேரைத் திருப்பி பின்னகரச் செய்து படைகளுக்குள் அமிழ்த்தி கொண்டு சென்றான்.

தன் மேல் விழுந்த தேர்க்குவடுக்குள் உடல் வளைத்து முழங்காலில் அமர்ந்து நடுங்கிக்கொண்டிருந்தார் சித்ராங்கதர். அவர் நெஞ்சு உறைந்தது போலிருந்தது. இத்தனை எளிதா? இத்தனை பொருளற்றதா? அவர் உள்ளம் சொல்கொண்டபோது “இவ்வளவா? இவ்வளவேதானா?” என வீறிட்டது. இருபுறத்திலிருந்தும் அவர் தேருக்குள் பாய்ந்தேறிய காவல்வீரர்கள் அவரைப்பற்றி பின்புறத்தினூடாக இழுத்து கீழே இறக்கினார்கள். மரவுரி விரிப்பில் அவரை இட்டு இருபுறமும் பற்றி மேலும் மேலும் படைகளுக்குப் பின்னால் கொண்டு சென்றனர். பின்னிலிருந்து “என்னாயிற்று? என்னாயிற்று?” என்று துரியோதனனின் வினா எழுந்தது. “புண்பட்டிருக்கிறார்! புண்பட்டிருக்கிறார்!” என்று கலிங்கத்தின் முரசுகள் மறுமொழி சொல்லின.

படைகள் நடுவே வந்துகொண்டிருந்த மருத்துவ வண்டிக்குள் அவரை கொண்டுசென்று படுக்க வைத்தனர். அங்கே முன்னரே கிடந்த இளவரசர்களில் ஒருவன் இறந்துவிட்டிருந்தான். அவன் மூக்கில் கைவைத்த பின் மருத்துவர் தலையசைக்க அவனை மறுபக்கத்தினூடாக கொண்டு சென்றனர். பிறிதொருவன் மெல்ல முனகியபடி தலையை அசைத்துக்கொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து மூச்சு வெம்மையான குருதிக்கொப்புளங்களாக வெடித்தது. அவன் உடலில் எழுந்த வலிப்பில் திடுக்கிட்டு எழப்போகிறவன் என தோன்றினான். வழிந்த குருதி வண்டியின் விளிம்பில் மழைநீர் என சொட்டியது. சித்ராங்கதர் அக்குருதி மேலேயே படுக்க வைக்கப்பட்டார். வெங்குருதி உடலில் பட்டதும் விழிப்பு கொண்டு “மைந்தா! மைந்தா!” என்று கூவினார். “இது களம், அரசே. சற்று உளம்கூருங்கள்” என்று ஏவலன் சொன்னான்.

மருத்துவர் அவர் தலையைப்பற்றி சற்றே தூக்கி இளஞ்சூடான மதுவை அவர் வாயில் விட்டார். பாலையில் கைவிடப்பட்டவன் நீரை என வாய்நீட்டி அதை அள்ளி இழுத்து அவர் அருந்தினார். ஒவ்வொரு துளியும் உடல் முழுக்கச் சென்று தசைகளை உயிர்கொள்ளச் செய்தது. வயிற்றுக்குள் உலை ஒன்று பற்றிக்கொள்வதுபோல. குருதியிலோடும் அமிலத்தை உணர்ந்தபடி கண்களை மூடி உள்ளே சுழன்ற ஒளிப்புள்ளிகளை பார்த்துக்கொண்டு படுத்திருந்தார். மருத்துவர் அவர் உடலிலிருந்து அம்புகளை பிடுங்கினர். அவை அசைந்தபோது நரம்புகள் வலிகொண்டு சுருண்டு அதிர்ந்தன.

அகன்றபோது புண்வாய் அனல் என எரிந்தது. அவற்றின் மேல் மருந்தும் மெழுகும் வைத்து மரவுரியால் இறுக்கிக்கட்டினர். இரு இடங்களில் அம்பு கிழித்த தசையை குதிரைவால் மயிரால் இழுத்துக்கட்டி அவற்றுக்கு மேல் மரவுரிச் சுற்று அமைத்தனர். அவர் மூக்கில் புகைக்குடுவையை வைத்து “அகிபீனா…” என்றார் மருத்துவர். ஆழ இழுத்து தன் நெஞ்சை நிரப்பிக்கொண்டார். புகை எரிந்துகொண்டிருந்த உள்ளுடலுக்குள் குளிர்ந்த மழைமுகில்போல கடந்து சென்றது.

08.--சித்ராங்கதர் மெல்ல வெம்மையான நீரில் அமிழ்ந்துகொண்டிருப்பதைப்போல் உணர்ந்தார். இருபுறத்திலிருந்தும் நீர் அவருடலை வருடியபடி மேலெழுந்தது. நீர் விளிம்பு ஆடை தைக்க வந்த பீதனின் மென்பட்டு நூல்போல் அவருடைய தோலைத் தொட்டு அளந்து மேலெழுந்தது. இன்னும் சற்று எஞ்சியுள்ளது. தொடைகளில், வயிற்றில், முகத்தில்… மூக்கு முழுகுகையில் இந்த இனிய பெருக்கில் அமிழ்வேன். இதில் கரைந்து மறைவேன். மிக அருகே துரியோதனனின் குரல் எழுந்தது. “தங்கள் வருகையை நான் எதிர்பார்க்கவில்லை, கலிங்கரே!” அவனுடைய அவையில் அவர் அமர்ந்திருந்தார். துரியோதனன் அரசர்களுக்குரிய பீடத்தில் அமர்ந்திருக்க அவனுக்குப் பின்னால் துச்சாதனன் நின்றான். அறையின் மறு எல்லையில் துர்மதனும் துர்முகனும் நின்றிருந்தார்கள். சாளரத்தோரமாக பானுமதி நின்றாள். அவருக்குப் பின்னால் மைந்தர்கள் இருவரும் சுவர் ஓரமாக நின்றனர்.

அவ்வினாவுக்கான விடையை கலிங்கத்திலிருந்து தன் படையுடன் கிளம்புவதற்கு முன்னரே அவர் நூறுமுறை எண்ணியிருந்தார். பயணம் முழுக்க அத்தருணத்தை பலநூறுமுறை நடித்திருந்தார். ஆகவே இயல்பாக “இது என் கடமை. அரசர்கள் கடமைக்கு கட்டுப்பட்டவர்கள்” என்று கூறினார். அத்தருணத்திற்குரியது அச்சொல் ஆயினும் அது ஒலித்ததுமே எத்தனை பொய்யானது என்று தோன்றியது. துரியோதனன் அந்த முறைமைச்சொற்களால் சற்றே எரிச்சலுற்றவன்போல முகக்குறி காட்டி உடனே புன்னகைத்து “ஆம், நாம் பிறப்பதற்கு முன்னரே ஆற்றவேண்டியவையும் அடிபணியவேண்டியவையும் எதிர்க்கவேண்டியவையும் வகுக்கப்பட்டுவிட்டன. பிறப்பு முதல் இறப்பு வரை எழுதப்பட்ட பிறகே அரசன் பிறக்கிறான் என்று

நிமித்திகர்கள் கூறுவதுண்டு" என்றான். அவன் சொல்வதும் அணிச்சொல் என்று உணர்ந்தாலும் அவர் உடல் மெல்ல தளர்ந்தது.

கைகளை பீடத்தின் கைப்பிடி மேல் வைத்து சற்றே சாய்ந்து "மெய். ஆயினும் அந்தந்த தருணங்களில் பெரும் மனக்கொதிப்பை அடைகிறோம். நான் பொய்யுரைக்க விரும்பவில்லை. என் அரண்மனைக்குள் புகுந்து மணத்தன்னேற்பு அன்றே என் மகளிரை நீங்கள் சிறைபிடித்துச் சென்றதை பல ஆண்டுகள் என்னால் மறக்க இயலவில்லை. ராஜபுரம் அந்த அடியிலிருந்து மீளவேயில்லை. நாங்கள் ஆற்றலற்றவர்கள் என்பது நிறுவப்பட்டது. ஆகவே எங்கும் மதிப்பில்லாதவர்கள் ஆனோம். ஆனால் அஸ்தினபுரி படைத்துணை செய்யக்கூடும் என்பதனால் மட்டுமே தாக்கப்படாமல் இதுவரை கடந்துவந்தோம்" என்றார் சித்ராங்கதர். "அஸ்தினபுரியுடன் போர்கொண்டெழுவதற்கு எவ்வகையிலும் ஆற்றல் உடையதல்ல ராஜபுரம் என்பதனால் மட்டுமே அங்கு ஒடுங்கியிருந்தேன். இயலாதவனின் நெஞ்சிலெழும் வஞ்சம் எத்தனை கொடிதென்பதை ஒவ்வொரு நாளும் உணர்ந்தேன். முற்றிய நஞ்சு நாகத்தையே எரிக்கும் என்பார்கள்."

துரியோதனன் "கலிங்கரே, நான் பிறப்பதற்கு முன்னரே இந்த ஆடற்களம் முடிவாகிவிட்டது. இன்று அணுகியிருக்கும் இப்போர் என் மூதன்னை சத்யவதியின் ஆட்சிக்காலத்திலேயே முனை கொள்ளத்தொடங்கியது என அறிக! சென்ற மூன்று தலைமுறைகளாக பாரதவர்ஷத்தில் நிகழ்ந்தவை அனைத்தும் இப்போருக்கு அணிதிரட்டுவது மட்டுமே. நான் இயற்றியதும் அவ்வணி திரட்டலில் ஒரு நிகழ்வுதான்" என்றான். எங்கிருந்தென்று அறியாமல் உளக்கொதிப்பொன்று எழுந்து அவர் முகத்தை இறுக வைத்தது. பற்கள் கிட்டிக்க சில கணங்களில் முறுகிய கைகளை ஒவ்வொன்றாக விடுவித்து உடலை தளரவைத்து அதனூடாக உள்ளத்தை இயல்பாக்கி செயற்கையாக உதடுகளை புன்னகைக்கென விரித்தார். முகத்தசைகள் புன்னகைபோல் ஆனால் எவ்வண்ணமோ உள்ளத்திலும் சொற்களிலும் அப்புன்னகை குடியேறுவதை அவர் பயின்றிருந்தார்.

"ஆம், பாரதவர்ஷத்தின் அரசர்கள் அனைவருமே மாபெரும் நாற்களப் படைக்களத்தின் கருக்களாகவே நின்றுள்ளனர். தாங்கள் என் மகளை கவர்ந்து வந்தது இயல்பென்றே எனக்கு தோன்றுகிறது. ஆனால்..." என்றதுமே துரியோதனனின் கண்களில் வந்த மாற்றத்தை அவர் கண்டார். அத்தருணத்தில் அது அவருக்கு உவகையளித்தது. அவனுடைய உள்ளத்தின் மிக நுண்ணிய

பகுதியொன்றை கண்டடைந்துவிட்டவர்போல் அங்கே தன் சொற்களை ஆழக் குத்தினார். “சிறுகுடியினனாகிய சூதனொருவனுக்கு என் மகள் துணைவியானதை மட்டும்தான் இத்தருணத்தில் என்னால் ஏற்க இயலவில்லை” என்றார்.

ஆனால் அவர் எண்ணியதுபோல துரியோதனன் சினந்தெழவில்லை. துச்சாதனன் உடலில் மட்டும் எதையோ சொல்ல வருபவன்போல் ஓர் அசைவு வெளிப்பட்டது. துரியோதனன் “ஆம், உங்களை புரிந்துகொள்கிறேன். ஆயினும் அங்க நாட்டின் கலிங்க அரசி பெற்ற இளமைந்தர் இன்று பெருவீரர்களாக வளர்ந்து நின்றிருக்கிறார்கள். வருங்காலங்களில் அவர்கள் பாரதவர்ஷத்தின் பெருநிலங்களை ஆள்வார்கள் என்று நிமித்திகர்கள் கூறியிருக்கிறார்கள்” என்றான். சித்ராங்கதர் எண்ணிச் சொல்லெடுத்து “அவர்களைப்பற்றிய செய்திகளை நான் கேட்பதுண்டு. சின்னாட்களுக்கு முன் ஒருமுறை அவர்களுடைய ஓவியங்களை கொண்டுவந்து காட்டினார்கள். அழகர்கள். என் அரசி அவற்றை நோக்கி விழிநீர் உகுத்தாள்” என்றார்.

துரியோதனன் “இன்னும் தருணம் உள்ளது. தாங்கள் இங்கு தேடி வந்தது ஒரு தொடக்கம் என்று அமையட்டும். உங்கள் தோள்கள் பெயர்மைந்தரை அணைத்துக்கொள்ளும் தருணத்தை காத்திருக்கிறேன்” என்றான். சித்ரரதன் சினத்துடன் “அவர்கள் மாவீரர்களாக இருக்கலாம். நிமித்திகர் சொற்படி நாளை இப்பாரதவர்ஷத்தின் மீது அவர்களின் கொடியும் பறக்கலாம். சூதனின் குருதி என்பது மட்டும் மாறாது. கலிங்கம் ஒருபோதும் அவர்களை ஏற்காது” என்றான். சித்ராங்கதர் அவனை திரும்பிப்பார்த்துவிட்டு “ஆம், கலிங்கம் தன் குலப் பெருமையை ஒருபோதும் விட்டுத்தர இயலாது” என்றார்.

பானுமதி புன்னகையுடன் “அதை புரிந்துகொள்ள இயல்கிறது, கலிங்கரே. தீர்க்கதமஸின் குருதியில் பிறந்த கலிங்கக் கொடிவழியினருக்கு என்றுமே தொல்குடி ஷத்ரியர்களின் மதிப்பும் அவைப்பீடமும் இருந்ததில்லை. உங்கள் முன்னோர்கள் செய்த அஸ்வமேதமும் ராஜசூயமுமே ஷத்ரியத் தகுதியை ஈட்டியளித்திருக்கின்றன. அதை விட்டுவிடுவதென்பது அருஞ்செல்வத்தை கையளிப்பது போன்றது” என்றாள். “ஆனால் அங்கர் எண்ணினால் மும்முறை அஸ்வமேதமும் ராஜசூயமும் செய்ய இயலும். அவர் மைந்தருக்கு அது இன்னும் எளிது. மிக விரைவிலேயே நீங்கள் சென்று அமரும் அவைகளில் மிகச் சிறந்ததாக அங்கம் அமையும். அன்று அவர்களின் பொருட்டு

உங்களுக்கு நீங்கள் விழையும் அவைப்பீடமும் கிடைக்கக்கூடும். அதுவரை பொறுத்திருக்கலாம் ”என்றாள்.

அவள் சொன்னதன் உட்குறிப்புகள் அனைத்தையும் புரிந்துகொள்வதற்கு முன்னரே சித்ரரதன் “அப்போது பார்ப்போம். அவைப்பீடம் ஈட்டுவது வரை எவரும் புறத்தோரே” என்றான். சலிப்புடன் தலையசைத்த சித்ராங்கதர் “இவ்வண்ணம் சொற்போரிடும்பொருட்டு நான் இங்கு வரவில்லை. என்ன செய்யலாம் என்று எங்கள் அவைகூடி எண்ணினோம். என் பேரமைச்சர் சொன்னது இதுதான். கலிங்கர்களுக்கு இரு வாய்ப்புகளே உள்ளன. பாண்டவர் தரப்பில் நான் செல்வேனென்றால் எனது ஷத்ரியக் குலப்பெருமையை இழந்தவனாவேன். மண்வென்று முடிகொண்ட குடியனைத்துக்கும் ஷத்ரிய நிலை வேண்டுமென்று நின்றிருக்கிறார் இளைய யாதவர். அதை ஏற்று கிராதருடனும் நிஷாதருடனும் இணை அமர என்னால் இயலாது” என்றார்.

அவருக்கு தான் சொல்வது சரியான சொற்கள்தானா என்னும் ஐயம் எழுந்தது. ஆயினும் நிறுத்தமுடியவில்லை. “தென்கலிங்கமும் மையக் கலிங்கமும் இங்கு வந்து சேர்ந்திருக்கையில் நான் என் படைகளுடன் அவர்களுக்கெதிராக நின்றிருக்க வேண்டியிருக்கும். மையக்கலிங்க அரசர் என் தந்தை. தென்கலிங்கத்து சூரியதேவர் என் தமையன். மூன்று கலிங்கங்களும் முன்பு பிரிந்தது வணிகப்போட்டியால். நாங்கள் ஒரே குருதி, ஒரே கொடிவழி. ராஜபுரத்தின் பெரும் செல்வத்தை கலிங்கம் கொண்டுசெல்கிறது என்பதே தனிநாடாக மாறவேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியது. அவ்வண்ணமே தண்டபுரமும் எண்ணியிருக்ககூடும். ஆனால் இன்று தோன்றுகிறது, அதைவிட முதன்மையானது எங்கள் உள்ளத்தில் மகதம் விளைவித்த திரிபு என்று. முன்பு பிருஹத்ரதரும் பின்னர் ஜராசந்தரும் தங்கள் சூழ்ச்சிகளினூடாக தந்தைக்கு மைந்தரை எதிரியாக்கினர். எங்கள் நாட்டை மூன்றெனப் பகுத்தனர். மூன்றுடனும் நல்லுறவிலும் இருந்தனர். ஆனால் எத்தருணத்திலும் மகதத்தின் படைவல்லமையை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டதாக கலிங்கம் இருந்ததில்லை. தாம்ரலிப்தி இல்லாமல் மகதத்தின் வணிகம் இல்லை. ஆனால் தாம்ரலிப்தியில் கலிங்கம் கொள்ளும் சுங்கத்தைவிட பன்னிரு மடங்கு சுங்கத்தை ராஜகிருஹத்திலும் பாடலிபுரத்திலும் மகதம் ஈட்டிக்கொண்டிருந்தது. ராஜபுரம் இல்லையேல் விதர்ப்பமும் விராடமும் வாழ இயலாது. ஆனால்

அவர்கள் உவந்தளிக்கும் கொடையினால் வாழ்பவர்களாகவே இத்தனை காலமும் வாழ்ந்தோம். இனியாகிலும் நாங்கள் மூவரும் ஒருங்கிணைந்தாக வேண்டும்.”

“கலிங்கம் ஒன்றுபட்டு எழவேண்டுமெனில் இப்போருக்குப் பின்னரே அது இயலும். ஆகவே இங்கு வரலாம் என்று முடிவெடுத்தேன். தந்தையை நேரில் சந்திப்பது கடினம் என்றாலும் எனக்கு வேறுவழி இருக்கவில்லை.” அதுவரை இருந்த அனைத்து சொற்கட்டுப்பாடுகளையும் இழந்து சித்ராங்கதர் சொன்னார் “மெய், எனக்கு இம்முடிவு எளிதானதாக இருக்கவில்லை. என் உடல் ஆயிரம் முட்களில் சிக்கியிருப்பதாகவே உணர்ந்தேன். ஒவ்வொன்றையாக குருதி வழிய கிழித்து முன்னகர வேண்டியிருந்தது.” அவர் குரல் மாறுபட்டது. அறியாமல் கை நெஞ்சில் பதிந்தது. “என் இரு மகள்களின் வாழ்வும் அழிந்தது. ஒருத்தி இங்கே சித்தம் பிறழ்ந்து சிறையிருக்கிறாள். பிறிதொருத்தி பிச்சியென எங்கோ அலைந்துகொண்டிருக்கிறாள். இருவரையும் குழவிகளாகக் கண்ட அந்நாட்களை நான் இன்னும் மறக்கவில்லை. தந்தையென்று உங்கள் இரு அரசுகளுக்கும் மேல் நான் கொண்ட வஞ்சம் என் உள்ளத்திலிருந்து இன்னும் அழியவில்லை. ஆயினும் எனக்கு வேறு வழியில்லை. என் மைந்தர்கள் மூன்று கலிங்கமும் ஒன்றாக வேண்டுமென்று கூறினார்கள். என் அமைச்சர்கள் வலியுறுத்தினார்கள். அதன் பொருட்டே கிளம்பினேன்” என்றார்.

அவர் உதடுகள் துடிக்க கண்களிலிருந்து நீர் வழியத் தொடங்கியது. வெறும் முதியவராக மாறி கைநீட்டி “என் மகள்! இங்கு அவள் எதை அடையவில்லை? எதனால் அப்படி உடைந்தாள்?” என்றார். துரியோதனன் விழிதாழ்த்தி மெல்ல உடலை அசைத்து “நான் ஒன்றும் சொல்வதற்கில்லை, கலிங்கரே. அதுவும் என் ஊழின் ஒரு பகுதி என்று உணர்கிறேன். எந்தை தன் துணைவியரின் பெண் பழி கொண்டவர். அவர் கொள்ளும் துயரமும் கொள்ளவிருப்பதும் அதற்கான விலை. நானும் அவ்வாறே. இப்புவியிலோ விண்ணிலோ அதன் பொருட்டு நான் பிழையீடு செய்கிறேன்” என்றான். சித்ராங்கதர் விம்மலோசை எழுப்பி அழுதார். சித்ரரதன் சீற்றத்துடன் அவர் தோளைத் தொட்டு குரலைத் தாழ்த்தி “தந்தையே” என்றான்.

துரியோதனன் “அரசே, இப்போது நான் அதன் பொருட்டு தங்களிடம் என்ன சொல்ல வேண்டும்? தங்கள் அடிமேல் என் தலையை வைத்து பொறுத்தருளும்படி கோரவேண்டுமெனில் அவ்வாறே செய்கிறேன்” என்றான். சித்ரபாகு எழுந்து “வேண்டாம், அரசே. தங்கள் கீழ்

படைநிரத்தவே வந்துள்ளோம். எளிய தந்தையென உணர்வுகளை காட்டலாகாது என்று சொல்லியே அழைத்து வந்தோம். அவருக்கு தன் சொற்கள் மேல் முழுதாள்கை இல்லை" என்றான். அவன் கையைத் தட்டியபடி முன்சாய்ந்து சித்ராங்கதர் கூவினார் "ஆம், நான் அரசனல்ல. வெறும் தந்தை. என்ன ஆயிற்று என் மகளுக்கு? அங்கனின் துணைவி எதை இழந்தாளென்று நான் உணர்கிறேன். அவள் உளத்தமர்ந்தவன் அனைத்து அவைகளிலும் தலைநிமிர்ந்து நிற்கும் பேரரசன். அவள் அடைந்ததோ இழிவன்றி பிறிதொன்றை அறியாத சூதன். அஸ்தினபுரியின் பேரரசனுக்குத் துணைவியாக வந்தவளுக்கென்ன?"

பானுமதி "ஏனெனில் அவள் இரண்டாமவள்" என்றாள். அவள் குரல் அடைத்திருந்தமையால் எவரோ பேசுவதுபோல் ஒலித்தது. சித்ராங்கதர் திறந்த வாயுடன் ஒருகணம் திகைத்து அவளை பார்த்தார். அவர் கன்னங்களில் விழிநீர் பரவி தாடி மீது நீர்த்துளிகள் நின்றன. தலை ஆடிக்கொண்டிருந்தது. பின்னர் மூச்சு சீறி, தொண்டையைக் கனைத்து "ஆனால் அது அரசகுடியினருக்கு இயல்பானதே" என்றார். பானுமதி "அவ்வரசர்கள் புரிந்துகொள்ள எளியவர்கள்" என்றாள். சித்ராங்கதர் புருவம் சுருங்க பானுமதியை நோக்கினார். பானுமதி "தெய்வம் அமர உறுதியான கருங்கல்லால்தான் பீடம் அமைப்பார்கள், கலிங்கரே" என்றாள். ஒருகணத்தில் அனைத்தும் புரிந்துவிட சித்ராங்கதர் தளர்ந்து பீடத்தில் மீண்டும் சாய்ந்தார். சிலகணங்களுக்குப் பின் நீண்ட பெருமூச்சுடன் மீண்டு வந்து "ஆம், அதற்கொன்றும் செய்வதற்கில்லை. அதற்கு மானுடர் எவரும் எதுவும் செய்வதற்கில்லை" என்றார்.

"பொறுத்தருளும்படி கோருகிறேன். பிறிதொன்றும் நான் சொல்வதற்கில்லை" என்றான் துரியோதனன். சித்ரரதன் "இதை இனிமேல் பேச வேண்டியதில்லை, அரசே. இன்று அவையில் மூன்று கலிங்க அரசர்களும் ஒன்றென அமர்ந்திருக்கவேண்டும். நாங்கள் இப்படைப்பெருக்கில் ஒற்றைக்கொடியுடன் நின்று பொருத வேண்டும்" என்றான். "இளவரசே, உண்மையில் மையக்கலிங்க அரசர் ஸ்ருதாயுஷ் அதை முன்னரே கூறியிருந்தார். தன் மைந்தருடன் ஒன்றாகவேண்டும் என்று அவர் விரும்பினார். தென்கலிங்கத்தின் சூரியதேவருக்கும் மாற்றுக் கருத்தில்லை. அவர்களிடையே பெரும் பிளவென ஏதுமில்லை.அவர்களிருவரும் படைகளை இணைப்பதைப்பற்றி சில நாட்களாகவே பேச்சு நடந்துவந்துள்ளது. உத்தர கலிங்கத்திலிருந்து தாங்கள் இங்கு

வருவீர்கள் என்பது மட்டுமே எங்களால் எதிர்பாராததாக இருந்தது” என்று துரியோதனன் சொன்னான்.

மூச்சுத் திணறுவதுபோல் உணர அவர் திரும்பி அருகிலிருந்த சித்ரரதனிடம் மூச்சு திணறுகிறது என்றார். ஆனால் அவன் இறந்த உடலுடன் அமர்ந்திருந்தான். நோக்கு நிலைத்திருந்தது. “என்ன ஆயிற்று உனக்கு?” என்று சித்ராங்கதர் கேட்டார். அவன் உடல் பீடத்தில் பக்கவாட்டில் சரிந்தது. பீடத்தின் கீழே குருதி பெருகி வழிந்து அறையிலிருந்து வழிந்தோடுவதை அவர் கண்டார். “மைந்தா” என்று அலறியபடி எழுந்து அவன் தோளை பற்றிக்கொண்டதும் விழித்துக்கொண்டார். குருதிப் பெருக்கொன்றில் அவர் மூழ்கிக்கொண்டிருந்தார். மூக்கும் கண்களும் மூழ்கின. தொண்டையில் குருதியின் உப்பு. இரு கைகளாலும் அந்த வெம்மை கொண்ட நீர்ப்பரப்பை அளைந்து நீந்தி முகத்தை மேலே தூக்கினார். கைகளால் உந்தி எழுந்து அமர்ந்தார். அவர் அருகே அந்த இளவரசன் இறந்து மூக்கில் எஞ்சிய குருதிக்குமிழி அசைவிலாது நிற்க விழிமலைத்துக் கிடந்தான். மருத்துவர் “ஓய்வுகொள்ளுங்கள், அரசே. உங்களை பாடிவீட்டுக்கு கொண்டு செல்ல தேர் வந்திருக்கிறது” என்றார். “இல்லை, என் தேர் ஒருங்கட்டும். என்னால் போர்புரிய முடியும். நான் களம் மீள்கிறேன்” என்று சித்ராங்கதர் சொன்னார்.

‘போர் என்பது போர் மட்டுமே’ எனும் சொல் எத்தொடர்பும் இன்றி சித்ராங்கதரின் உள்ளத்தில் எழுந்து ஊழ்கநுண்சொல்லென மீண்டும் மீண்டும் ஒலித்தது. போர் என்பது போர் மட்டுமே. இழப்பு அல்ல, இறப்பு அல்ல, வெற்றியோ தோல்வியோ அல்ல, துயரமும் களிப்பும்கூட அல்ல, போர் மட்டுமே. போருக்கெனவே அது நிகழ்கிறது. போரென்று மட்டும் நிகழ்கிறது. போரென்று மட்டுமே எஞ்சுகிறது. பிறிதொன்றல்ல. போர்க்கலை பயின்ற நாட்களில் ஆசிரியர் உத்தபாகு கூறிய வரி அது. பின் எத்தனையோ முறை அவர் அதை சொன்னதுண்டு. பிறர் ஆற்றிய போர்களைப்பற்றி பேசுகையில், காவியங்களின் போர்களைப்பற்றி சொல்லாடுகையில். அது மானுடன் தனக்கென சொல்லிக்கொள்ளும் வெறும் சொல். போர் என்பது எப்போதும் பிறிதொன்றுதான். கணம்தோறும் ஒவ்வொன்று.

அத்தருணத்தில் அது இழப்பு மட்டும்தான். என் இரு மைந்தர்! என் கண்முன் இறந்ததன்றி பிறிதொன்றுமல்ல போர். அவர்களின்

புன்னகைக்கும் இளமுகங்களன்றி பிறிதொன்றும் இத்தருணத்தில் என்னுள் இல்லை. ஒருகணம் உள்ளிருந்து எரிகுமிழி ஒன்று வெடித்து உடலெங்கும் பற்றிக்கொண்டதுபோல் தோன்றியது. சினமோ வஞ்சமோ வெறியோ அதற்கப்பால் ஒன்றோ அவரில் நிறைந்தது. வில்லை ஊன்றி குருதி வழுக்கிய இடக்கால் விரல்களால் பற்றி வலக்கையால் நாணிழுத்து செவிக்கு மேல் நீட்டி அம்பு தொடுத்து எதிரில் தோன்றிய முதல் வீரன் நெஞ்சக் கவசத்தை உடைத்து உள்ளே நாட்டினார். துடித்து அவன் விழுந்தபோது எரிபட்ட தோள்மேல் குளிர்தைலத் துளி விழுந்ததுபோல் ஓர் ஆறுதலை உணர்ந்தார். மீண்டும் மீண்டும் அம்புகளை எடுத்து எதிர்ப்பட்ட ஒவ்வொரு வீரனையும் வீழ்த்தியபடி முன் சென்றார். “செல்க! முன் செல்க!” என்று பாகனை நோக்கி கூவியபடியே தேர்த்தட்டில் நின்று தவித்தார்.

இது என் மைந்தருக்கான போர். என் உடன்பிறந்தாருக்கான குருதிப்பழி. இன்னும் எத்தனை பொழுது நான் உயிரோடிருப்பேன் என்று அறியேன். சித்தம் எஞ்சுமட்டும் என் மைந்தருக்கென பழிநிகர் செய்தேன் என்றிருக்கட்டும். எழுந்து சென்று என் தெய்வங்களிடம் “ஆம், என் மைந்தரின் பொருட்டு களத்தில் நின்றேன்” என்று கூறும் ஒரு சொல் மட்டும் எனக்கு எஞ்சட்டும். செல்க! செல்க! செல்க! எதை சொல்லிக்கொண்டிருக்கிறேன்? எவரிடம் சொல்கிறேன்? போரில் சற்றும் பயனற்ற உறுப்பாகிவிடுகிறது சொல்லோடும் உளம். அது செய்வதறியாது நின்று தவிக்கிறது. இரண்டாக, மூன்றாக, நூறாகப் பிரிந்துநின்று முட்டிக்கொள்கிறது. செய்வனவற்றை சொல்லாக்கிக் கொள்கிறது. கேளாச் செவிகளுக்கு அவற்றை அள்ளி வீசுகிறது. அறியாத் தெய்வங்களிடம் முறையிடுகிறது.

ஒவ்வொரு அம்பிலும் தன் உடல் அளித்த விசைக்கப்பால் மும்மடங்கு விசையை உள்ளம் அளிப்பதை உணர்ந்தார். இரும்புக் கவசங்களைக்கூட பிளந்தது அவரது நீள்வாளி. நெஞ்சில் பாய்ந்து மறுபுறம் சென்று தேர்க்காலில் குத்தி நின்று அவ்வீரன் அலறியபடி உருவி விழ குருதி சொட்டி நின்றாடியது. வலப்பக்கம் பீமன் துஷாரர்களின் படைகளை தொடர்ந்து அறைந்து பின்னால் கொண்டுசென்று கொண்டிருந்தான். “சூழ்ந்து கொள்க! பீமசேனனை சூழ்ந்து கொள்க!” என்று முரசுகள் ஒலிக்க சகுனியும் சலனும் இருபுறத்திலும் நீண்டு வலை போலாகி பீமனை நோக்கி சென்றனர். ஏழு கௌரவர்கள் அவ்வளைவின் மையத்தில் அவனை நேருக்கு நேர் எதிர்கொண்டனர். பீமன் கொல்வதன்றி பிறிதறியா

வெறிகொண்டிருந்தான். அன்றே களத்தில் உயிர்துறக்கவேண்டுமென முடிவெடுத்தவன் போலிருந்தான்.

பின்னிருந்து சாத்யகியின் படை பீமனைத் தொடர்ந்து வந்து மையப்படையுடன் அவன் கொண்ட இணைப்பை விடாமல் தக்கவைத்தது. பீமன் வில் இழுபடுகையிலேயே துஷார வீரர்களின் உடலுக்குள் உயிர் நின்று அதிர்ந்தது. எண்ணியிராக் கணத்தில் நீள்வேல் ஊன்றி காற்றில் பறந்தெழுந்து புரவிகள் மேல் பாய்ந்து எதிரில் வந்தவர்களை குத்தி தலைக்குமேல் அவர்கள் உடல்களை சுற்றித் தூக்கி அப்பாலிட்டான். சிறகு கொண்டவனைப்போல் தேர்க்கூடுகளின் மேல் தாவி அலைந்தான். மீண்டும் தன் தேரில் வந்திறங்கி அவ்விசையிலேயே அம்பெடுத்து தொலைவில் தெரிந்தவர்களை வீழ்த்தினான்.

சித்ராங்கதர் திரும்பி அவனுக்கு எதிராக படைகொண்டு செல்ல விழைந்தார். ஆனால் எதிரே படைஎழுந்து வந்த சாத்யகியை தென்கலிங்கத்துச் சூரியதேவரும் மையக்கலிங்கத்துச் ஸ்ருதாயுஷூம் சூழ்ந்துகொண்டிருந்தனர். சாத்யகி அணுக்கவில்லவர் சூழ அலையென எழுந்துவந்து அவர்களிருவரையும் எதிர்கொண்டான். “கலிங்கர்களுக்கு துணை செல்க! யாதவன் விழுந்தாகவேண்டும்… யாதவனை கொல்க!” என்று அவருக்குப் பின்னிருந்து சகுனியின் ஆணை வந்தது. அக்கணம் ஸ்ருதாயுஷ் அம்புபட்டு தேரில் விழுந்தார். பாகன் அவர் தேரைத் திருப்பி பின்னால் கொண்டுசெல்ல கேடயப் படையினர் எழுந்து அவரை மூடிக்கொண்டனர்.

சித்ராங்கதர் தன் தேரை கிளப்பி சாத்யகியை நோக்கி சென்றார். அவன் முகம் எவ்வுணர்வும் இன்றி கனவிலென நிலைத்திருந்தது. கிளையில் தொங்கி காதலாடும் அரவுகள் என அவன் கைகள் குழைந்தும் வளைந்தும் தேரில் நிறைந்திருந்தன. அசையும் ஆடியிலிருந்து ஒளிச்சரடுகள் என அம்புகள் தெறித்தெழுந்தபடியே இருந்தன. ஒருகணம் அவனை தன்னால் அணுகவே இயலாதென்ற திகைப்பை சித்ராங்கதர் அடைந்தார். மறுகணம் தன் இரு மைந்தரின் முகங்களும் நினைவிலெழ வெறிக்கூச்சலுடன் “செல்க! அவன் முன் செல்க!” என்று பாகனுக்கு ஆணையிட்டார். சாத்யகி அவர் வருவதை பார்த்தான். மறுகணம் அவனுடைய அம்பு வந்து அவருடைய தேர்த்தட்டை அறைந்து அதிரச் செய்தது.

சித்ராங்கதர் தன் வில்லை முழு விசையுடன் இழுத்து அவன் மேல் எய்தார். அம்பு எய்த விசையில் அவன் திரும்ப அவன்

தொடைக்கவசம் உடைந்து தெறித்தது. அடுத்த அம்பை அவன் தொடைமேல் தறைக்கச் செய்தார். வலியுடன் அவன் முழங்காலிட அடுத்த அம்பு அவன் தலைக்கவசத்தை உடைத்து தெறிக்கச் செய்தது. அவனுடைய அணுக்க வில்லவர்கள் இருபுறத்திலிருந்தும் சூழ்ந்து கொண்டு அவருடைய அம்புகளை தடுத்தனர். கவச வீரர்கள் நால்வர் அத்தேருக்கு முன் இரும்பாலான சுவரொன்றை உருவாக்க சித்ராங்கதரின் அம்புகள் அச்சுவரின் மேல் பட்டு உலோக ஓசையுடன் உதிர்ந்தன. துணைவில்லவர்கள் எழுவரை அவர் கொன்று வீழ்த்தினார். மேலும் மேலுமென துணைவில்லவர்கள் வந்து சாத்யகியை பின்னால் கொண்டு சென்றனர்.

ஸ்ருதாயுஷ் புண்ணில் கட்டுடன் மீண்டும் தேர்மேல் தோன்றி “தொடர்க! யாதவனை தொடர்க!” என்று கூவியபடி சாத்யகியைத் தொடர்ந்து அம்புகளால் அறைந்துகொண்டு சென்றார். சாத்யகியின் துணைவில்லவர்கள் மேலும் பன்னிருவர் களம்பட்டனர். அவர்கள் ஏறிவந்த புரவிகள் அம்பு பட்டு நிலத்தில் விழுந்து துடிக்க துணைத்தேர்கள் பின்னிழிந்து சென்றன. எழுந்த முரசொலிகளிலிருந்து பீமனை கௌரவப் படைகள் அணுகிவிட்டன என்று தெரிந்தது. “பீமசேனரை வளைக்கிறார்கள்!” என்று அருகிலிருந்த தேர்வில்லவன் கூவினான். “அவர் களத்தில் விழுந்தால் இன்றும் வென்றோம்!” அவர் “ஆம்! செல்க… இந்த யாதவனையும் வீழ்த்துவோம்!” என்றார். ஆனால் கௌரவப் படை பீமனை சந்திக்கும் தருணத்தில் பின்னிருந்து திருஷ்டத்யும்னன் அனுப்பிய யானைகளின் நிரையொன்று கவசங்கள் மின்ன இரண்டு ஆள் உயரமான எடைமிக்க இரும்புக் கேடயங்களை சுமந்தபடி இடையே புகுந்தது. ஒளிவிடும் இரும்புச்சுவரொன்றை உருவாக்கியபடி யானைகள் பீமனிலிருந்து கௌரவர்களை முற்றாக வெட்டின.

சினமும் வெறியும் கொண்டு துர்மதன் நெஞ்சில் அறைந்து கூச்சலிட்டான். சகுனி “உடையுங்கள்! அச்சுவரை சிதறடியுங்கள்! அவனை கொன்றாகவேண்டும். கொல்லுங்கள்! முன்னகருங்கள்!” என்று அறைகூவினார். கௌரவப் படைகளின் வேல்கள் யானைகள் ஏந்திய பெருங்கேடயங்களில் பட்டு உதிர்ந்தன. யானைகளின் கவசங்களின் இடைவெளிகளில் பாய்ந்து அவற்றின் உடலில் தைத்த அம்புகளால் அவை பிளிறியபடி தயங்க பின்னிருந்து வந்த யானைகள் அவற்றை அழுத்தி முன்னால் செலுத்தின.

யானைகள் மேலும் மேலும் முன்னகர்ந்து சூழ்ந்துகொண்ட பருந்தின் சிறகிலிருந்து, உடலிலிருந்து பீமனை காத்தன. பீமன் தன் படைகளின் முன்னால் வந்த யானையின் மத்தகத்தின்மேல் கதாயுதத்தால் ஓங்கி அறைந்தான். அலறியபடி அந்த யானை தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, துதிக்கை தூக்கி பிளிறி கேடயத்தை வீசிவிட்டு, படைமேல் பாய்ந்தது. பீமன் கதாயுதத்தை எடுத்து அதன் பின்புறம் ஓங்கி அறைந்தான். பிளிறியபடி புரவிகளையும் தேர்களையும் சிதைத்து நீண்ட வழி ஒன்றை உருவாக்கியபடி அது கலிங்கப் படைகளுக்குள் புகுந்தது.

என்ன செய்கிறான் என்பதை ஒருகணம் திகைப்புடன் எண்ணி, மறுகணம் புரிந்துகொண்டு சித்ராங்கதர் “நம்மை நோக்கி வருகிறார்! இளைய பாண்டவர் கலிங்கப் படைகளுக்குள் புகுந்துவிட்டார். திரும்புங்கள்! திரும்புங்கள்!” என்று கூவினார். அவருடைய செய்தியறிவிப்பாளன் கொடிகளை எடுத்து ஆட்ட தொலைவில் கொம்பூதியும் முரசறைபவனும் அச்செய்தியை செவியொலியாக மாற்றி படைகளில் பரவவிட்டனர். கலிங்கப் படைகள் அனைவரும் திரும்பி நோக்க புண்பட்ட யானை வெறிகொண்டு பிளிறியபடி வந்து சேற்றில் விழுந்த இரும்புருளைபோல அவர்கள் படைகளுக்குள் புதைந்தது. அது உருவாக்கிய இடைவெளியினூடாக பீமனின் தேர் கொடி பறக்க குருதியாடிய கொலைத்தெய்வம்போல வந்தது. அதற்கே விடாய்கொண்ட வாய்களும் சின விழிகளும் இருப்பதுபோலத் தோன்றியது. அவனைச் சூழ்ந்து அணுக்க வில்லவர்களின் தேர்களும் பரிவில்லவரும் கூர்கொண்ட வேல்வடிவில் வந்தனர்.

ஸ்ருதாயுஷ் “சூழ்ந்து கொள்க! பீமசேனரை சூழ்ந்து கொள்க!” என்று கூவினார். கலிங்கப் படைவீரர்கள் போர்க்குரலுடன் பீமனை சூழ்ந்துகொண்டனர். ஸ்ருதாயுஷ் கவசம் குருதியால் நனைந்து சொட்ட தேர்த்தட்டில் நின்றிருந்த பீமனை மிக அருகிலென கண்டார். நாணிழுத்து அவர் விட்ட அம்பு அவனை இயல்பாகக் கடந்து அப்பால் சென்றது. அவர் வெறிகொண்டு அம்புகளை ஏவியபடி அவனை மேலும் மேலுமென அணுகிச் சென்றார். வேண்டாம் வேண்டாம் என ஓசையின்றி சித்ராங்கதர் அலறினார். தந்தையே, உடன்பிறந்தாரே வேண்டாம். ஆனால் அவரும் போரிட்டுக்கொண்டுதான் இருந்தார்.

ஸ்ருதாயுஷின் அம்புகள் பீமனை தொடவில்லை. அவருடைய நான்கு அணுக்கர்களை கொன்றுவீழ்த்தியபின் அவன் விட்ட அம்பு அவருடைய தேர்ப்பாகன் தலையை அரிந்து தெறிக்கச் செய்தது.

ஸ்ருதாயுஷ் தன் தேரிலிருந்து பாய்ந்திறங்கி பிறிதொன்றில் ஏறிக்கொண்டார். “வலப்பக்கம் சூழ்ந்து கொள்ளுங்கள்! தனித்து வந்திருக்கிறார்! சூழ்ந்து கொள்ளுங்கள்” என்று கூவியபடி பீமனை நோக்கி சென்றார். இறப்புக்கு பெருங்கவர்ச்சி உண்டா? அது மானுடரை கைபற்றி அருகே இழுக்குமா? சித்ராங்கதர் அத்தருணத்தை விழிதிகைக்க நோக்கி நின்றார்.

எக்கணமும் தேரிலிருந்து பாய்ந்திறங்கி தோள்கோப்பவர்கள்போல ஸ்ருதாயுஷும் பீமனும் அணுகினர். விசைகொண்ட அம்புகளால் காற்றில் மோதிக்கொண்டனர். ஸ்ருதாயுஷின் அம்புகளை உடல் திருப்பி தவிர்த்து ஒருகணத்திற்குள் அவர் தேர்ப்பாகனை தலை மீது அம்பெய்து வீழ்த்தினான். ஸ்ருதாயுஷ் திகைத்து நிற்க கேடயப்படை வந்து அவரை மீட்டது. ஸ்ருதாயுஷின் இளமைந்தர்கள் சக்ரதேவனும் உக்ரதேஜஸும் “கொல்லுங்கள்! அவரை சூழ்ந்து கொள்ளுங்கள்” என்று அலறியபடி பீமனை இருபுறமும் நெருங்கினர். “தந்தையை பின்னால் கொண்டுசெல்க...” என்று சக்ரதேவன் ஆணையிட்டான். சித்ராங்கதர் தன் அணுக்கப் படையுடன் பீமனின் பின்பக்கம் சென்று வளைத்துக்கொண்டார். சக்ரதேவன் பீமனை நேர்நின்று எதிர்த்தான். அம்புகள் வானில் எறும்புகள் என முகம்தொட்டு ஒருசொல் பேசி திரும்பி விழுந்தன. உரசி பொறிபறக்கச் செய்தன. சக்ரதேவனின் துணிவு கலிங்கப் படைகளை விசைகொள்ளச் செய்தது. “அனைவரும் சூழ்ந்து கொள்ளுங்கள்... பிறர் பாண்டவரின் அணுக்கவில்லவரை வீழ்த்துங்கள்” என்று சக்ரதேவன் ஆணையிட்டான்.

பீமனின் அணுக்கர்கள் ஒவ்வொருவராக அலறி வீழ்ந்தனர். சக்ரதேவன் எழுவரை கொன்றான். சித்ராங்கதர் மூவரை சிதறிவிழச் செய்தார். சூரியதேவர் பொருளிலா ஒலியை கூவியபடி பீமனின் நான்கு அணுக்கர்களை கொன்று வீழ்த்தினார். சித்ராங்கதர் தேர்களின் அச்சுகளை நோக்கி அம்புதொடுத்து சகடங்கள் உடைந்து அவை சரியச் செய்தார். உடைந்த தேர்களால் பீமன் சூழப்பட்டான். அவன் தேர் முன்னகர முடியாமல் விசையிழந்தது. பீமன் வில்லை தேரிலிட்டு நீண்ட வேலை மண்ணில் ஊன்றி தேரிலிருந்து தாவி புரவியொன்றின் மேல் கால்வைத்து மீண்டுமொருமுறை எழுந்து இறங்கி கைசுழற்றி அவ்வேலை நீட்டி ஓங்கி சக்ரதேவனை கவசத்துடன் குத்தி தேர்த்தூணில் அறைந்து நிறுத்தினான். கலிங்கப் படைகள் திகைத்து நின்றன. பின்னர் அலறியபடி நாற்புறமும் சிதறின. சித்ராங்கதர் “தாக்குக! தாக்குக!” என்று கூவியபடி பீமனை நோக்கி

அம்புகளை தொடுத்தபடி அணுக பீமன் சக்ரதேவனின் உடலிலிருந்து பெருவேலை உருவியெடுத்து அதே விசையில் ஓங்கி வீசி உக்ரதேஜஸை கொன்று தேர்த்தட்டில் வீழ்த்தினான். மூன்றாமவனாகிய பிரபவதேஜஸ் தயங்கி பின்னடைவதற்குள் உக்ரதேஜஸின் தேரிலிருந்த வேலொன்றைப் பிடுங்கி எறிந்து அவனை கொன்றான் பீமன்.

சூரியதேவரும் அவர் மைந்தர்களும் அஞ்சி பின்னடையத் தொடங்கினர். “நில்லுங்கள்! பின்னடையாதீர்கள்! இதோ வந்துகொண்டிருக்கிறோம்!” என்று பின்னால் சகுனியின் அறிவிப்புக்குரல் கேட்டது. யானைச் சுவரால் தடுக்கப்பட்ட கௌரவப்படை மறுபக்கம் முழுவிசையுடன் ஒருங்கு கூடிக்கொண்டிருந்தது. யானைகளை உடைக்கும்பொருட்டு புரவிகள் இழுத்த வண்டிகளில் பொருத்தப்பட்ட பெருவில்கள் கொண்டுவரப்பட்டன. யானைச்சுவருக்கு அப்பால் அவை குரங்குவால்கள்போல் எழுந்து வளைந்து தெரிந்தன. யானைகளால் இழுக்கப்பட்டு நாணேற்றப்பட்ட அவ்விற்களில் இரண்டு ஆள் நீளமுள்ள நீளம்புகள் பொருத்தப்பட்டு ஏவப்பட்டன. அவை கவசங்களிலும் கேடயங்களிலும் பட்டு பொறிபறக்க ஓசையெழுப்பின. கவசங்கள் உடைய பிளிறியபடி யானைகள் முன்காலும் பின்காலும் எடுத்துவைத்து நிலையழிந்தன. ஓர் யானை கேடயத்தை வீசியது. அவ்விடைவெளியை மேலும் மேலும் அம்பெய்து பிளவாக்கி அதனூடாக பருந்தின் உடலில் இருந்து படை ஒன்று மதகுநீரென பீறிட்டு இப்பால் வந்தது. நிஷாத மன்னன் கீர்த்திமானை அதன் முகப்பில் சித்ராங்கதர் கண்டார்.

“கொல்லுங்கள்… சூழ்ந்துகொள்ளுங்கள்!” என்று கூச்சலிட்டபடி கீர்த்திமான் தன் மைந்தன் பானுமான் தொடர நிஷாதப் படைகளுடன் வந்து சூரியதேவரின் படை பின்னகர்ந்த இடைவெளியை நிறைத்து பீமனை எதிர்கொண்டான். பீமன் அவன் வருவதை திரும்பிக்கூட பார்க்காமல் கலிங்கப் படைகளை சிதறடித்தபடி மேலும் மேலுமென முன்சென்றான். எந்த விசையாலும் தடுக்கப்படாதவனாக தோன்றினான். பின்னடைந்த சூரியதேவரும் அவர் மைந்தர்கள் சத்யனும் சத்யதேவனும் மீண்டும் படைகளை திரட்டிக்கொண்டு முழவுகளும் கொம்புகளும் ஒலிக்க பீமனை நோக்கி வந்தனர். சில கணங்களிலேயே பீமன் முற்றிலும் சூழப்பட்டான். அவனுடைய அணுக்கப்படையின் பெரும்பகுதி அழிந்துவிட்டிருந்த்து. முற்றுகையிட்ட படையிலிருந்து நாற்புறமும் என வந்த அம்புகளை எதிர்கொள்ள முடியாமல் பீமனின்

அணுக்கர்கள் வீழ்ந்தபடியே இருந்தனர். நோக்கிநிற்கவே அவர்கள் பன்னிருவராக குறைந்தனர். பரிவில்லவர் அனைவரும் விழுந்த பின் நிஷாதர்களாலும் கலிங்கர்களாலும் சூழப்பட்டு ஏழு தேர்வில்லவர்களுடன் பீமன் நின்றான்.

“தாக்குங்கள்… தாக்குங்கள்” என்று வெறிகொண்டவராக சூரியதேவர் கூவிக்கொண்டே இருந்தார். சாத்யகியின் படைகள் அப்பால் துண்டுபட்டு அகன்றுவிட்டிருந்தன. அவன் வந்து பீமனை காக்கலாம். மறுபக்கம் யானைச்சுவர் பல இடங்களில் உடைந்துகொண்டிருந்தது. சகுனியும் சலனும் கௌரவர்களும் வந்துசூழ பருந்து பீமனை கவ்விக்கொண்டு செல்லலாம். சித்ராங்கதர் கைகால் செயலிழக்க தேரில் சில கணங்கள் நின்றார். அந்த கணத்திற்காக காத்திருந்ததுபோல அம்புகள் அவரை அறைந்தன. கவச இடைவெளியில் புகுந்த இரு அம்புகளால் அவர் தேரிலிருந்து வீழ்த்தப்பட்டார். அவருடைய பாகன் நெஞ்சைப் பற்றியபடி அமரபீடத்தில் சரிய தேர் நிலையழிந்து சகடம் தூக்கி ஒருக்களித்தது. அவர் பாய்ந்து மண்ணில் இறங்கி நிலையழிந்த புரவி ஒன்றைப்பற்றி அதன்மேல் ஏறிக்கொண்டார். அவருடைய கால் இறந்ததுபோல் குளிர்ந்து எடைகொண்டது. கவசத்திற்குள் குருதி பெருகி விளிம்புகள் வழியாக ஊறி வழிந்தது.

சித்ராங்கதர் புரவியில் உடலை நன்கு தாழ்த்தி அதன் கழுத்துடன் தலைவைத்தபடி நிகழ்வதை நோக்கிக்கொண்டிருந்தார். சூழ்ந்துகொள்ளப்பட்டதை பீமன் பொருட்படுத்தவேயில்லை. சேற்றிலிறங்கிய யானைபோல உடலெங்கும் குருதிக்குழம்பு வடிய வில்சூடி தேரில் நின்று வெறியாடினான். சூரியதேவர் அவன் அம்பு பட்டு தேர்த்தட்டிலிருந்து உருண்டு கீழே விழுந்தார். தேரில் அவரை கடந்துசென்ற பீமன் அவ்விசையிலேயே வேலால் ஓங்கி அவர் கழுத்தைக் குத்தி அவர் இறப்பை உறுதி செய்தான். சத்யனும் சத்யதேவனும் அந்தத் தயக்கமின்மை கண்டு உளம் உறைந்து நின்றனர். அதே வேலால் அவர்களைக் குத்தி அப்பாலிட்டான். ஊடே புகுந்த படைத்தலைவன் ஒருவனை குத்தித் தூக்கி வேலுடன் தலைமேல் எடுத்தபடி போர்க்குரலெழுப்பி சுற்றிநோக்கினான். அவனை வேலுடன் எதிர்கொண்ட கீர்த்திமான் மீது அந்தச் சடலத்தை தூக்கி வீசி அவன் நிலையழிந்த தருணத்தில் வாளால் அவன் தலையை அறுத்தெறிந்தான்.

வில்தொடுக்க இயலாதபடி நெருங்கி படைகள் ஊடுகலந்துவிட்டிருந்தன. “விலகுங்கள்… வில்தொடுக்கும் அகலம் எழுக!” என்று ஆணையிட்டபடி கீர்த்திமானின் மைந்தன் பானுமான்

தன் படைகளுடன் பின்னால் சென்றுகொண்டே இருக்க பீமன் அவனை துரத்திச் சென்றான். உடைந்த தேரொன்றில் சகடம் சிக்க பானுமானின் தேர் தடுமாறியது. பீமன் தன் கதையை தூக்கி வீசி அவன் தலையை கவசத்துடன் அறைந்து உடைத்தான். அந்த அடியில் தேர்த்தூண் நொறுங்க தேர்முகடு உடைந்து அவன் மேல் விழுந்தது. சங்கிலியை இழுத்து கதையைத் தூக்கி அதைச் சுழற்றி கலிங்கர்களின் தலைகளை உடைத்து சுழன்றுவந்தான்.

மறுபக்கம் யானைச்சுவர் இரண்டாகப் பிளந்தது. புண்பட்டு அலறிய யானைகள் இருபுறமாக சிதறி ஓட வெள்ளம் இடிக்கும் ஏரிக்கரை என மேலும் மேலுமென அது சிதைந்தது. முன்யானையை பின்னால் வந்த யானை சினத்துடன் தந்தங்களால் குத்தித் தூக்கியது. குத்துபட்ட யானை கதறியபடி சரிந்து விழ அப்பாலிருந்து சகுனியும் சலனும் பாய்ந்து வந்தனர். பீமனின் அணுக்கத்தேர்வீரர்களில் மூவரே எஞ்சியிருந்தனர். ஆயினும் அவன் தயங்காமல் கலிங்கர்களைக் கொன்று முன்சென்றபடியே இருந்தான். தலைவர்களை இழந்த கலிங்கப்படை சிறு சிறு குழுக்களாக சிதறி பின்னடைய அவர்களினூடே புகுந்து வளைத்து கொன்று வீழ்த்தினான். ஸ்ருதாயுஷ் கலிங்கப் படைகளின் நடுவிலிருந்து எழுந்து “ஒன்றுதிரள்க... நமக்கு துணைப்படை வந்துவிட்டது... கொடிகளின் கீழ் திரள்க!” என்று ஆணையிட்டார். பீமன் சிரித்தபடி நீள் அம்பு ஒன்றை எடுத்து அவர் நெஞ்சுக்காக குறிவைத்தான். அதைக் கண்ட கணம் பூனையைக் கண்ட எலி என அவர் அசைவிழந்தார். அம்பு அவரை அறைந்து தெறிக்கச் செய்தது. அவர் உடல் அப்பால் படைத்திரளுக்குள் எங்கோ விழுந்து மறைந்தது. கைகள் செயலற்று விழ சித்ராங்கதர் சொல் உறைநத நெஞ்சுடன் நின்றார்.

முன்புறம் கலிங்கப்படை உடைந்த இடைவெளியின் வழியாக சாத்யகி தன் படையுடன் உள்ளே நுழைந்தான். சிறு குழுக்களாக முட்டி மோதிய கலிங்கர்களை கொன்று பரப்பியபடி அவன் படை வந்து பீமனை அணுகி சூழ்ந்துகொண்டது. சாத்யகி “வெட்டிவிட்டோம், பாண்டவரே! பருந்தின் தலை துண்டாகிவிட்டது!” என்று கூவினான். அப்போதுதான் பீமனின் அன்றைய திட்டமென்ன என்று சித்ராங்கதருக்கு புரிந்தது. அவர் உறைவு உடைந்து பல்லாயிரம் படிகச்சில்லுகளாக தெறிக்க உடல் பதற்றம் கொண்டு துள்ளியது. பீஷ்மரை மையப்படையிலிருந்து முற்றிலும் பிரித்து அர்ஜுனன் முன் நிறுத்துவது அவர்களின் எண்ணம். இன்று அர்ஜுனனாலும் அவர் இளம் மைந்தர்களாலும் சூழப்பட்டு பீஷ்மர்

தனித்து களம் நிற்பார். ஒருவேளை இன்று அவர் களம்படவும் கூடும். ஆனால் அத்தருணத்தில் அச்செய்தி அனைத்தும் எங்கோ எவரோ சொல்லிக்கொண்டிருப்பதுபோல் பொருளற்று அவருக்கு கேட்டது. கண் முன் வில்லுடன் பெருந்தோள்களில் குருதி சொட்டும் கவசங்களுடன் நின்று கொலையாடிய பேருருவனன்றி வேறெதுவுமே மெய்யில்லை என்பதுபோல் தோன்றியது. அவர் போரிடுவதை முற்றிலும் நிறுத்திவிட்டிருந்தார். ஆனால் களத்திலிருந்து விலகி ஓட விரும்பவில்லை.

சலனின் மைந்தன் பீஷ்மனின் உடல் அம்புகளால் தலையறுந்து நின்று தேர்த்தட்டில் உலைந்து துடித்தபடி கீழே விழுந்து தன் தேரின் சகடங்களாலேயே அறைபடுவதை சித்ராங்கதர் கண்டார். மைந்தன் கொல்லப்பட்டதைக் கண்டு வெறியுடன் கூச்சலிட்டபடி சலன் முன்னால் வந்தான். படைகள் சினம்கொண்ட யானைகளின் மத்தகங்கள் என மோதிக்கொண்டன. சித்ராங்கதர் தலைதூக்கி தொலைவில் பாண்டவப் படைகள் சென்று மறுபக்கம் திருஷ்டத்யும்னன் நடத்திய படையுடன் இணைந்துகொள்ள மேலும் மேலுமென அப்படையிணைவு பருத்து வலுக்கொண்டு விரிய பருந்தின் தலை பாண்டவப் படைகளால் தனியாக விலக்கிக்கொண்டு செல்லப்படுவதை பார்த்தார். பீஷ்மரின் கொடி பறக்கும் தேர் மிக அப்பால் பாண்டவப் படைகளால் சூழப்பட்டு தெரிந்தது. திரும்பி அவர் பீமனை பார்க்கையில் அப்பாலிருந்து பறந்து வந்த வேல் ஒன்று அவர் நெஞ்சில் பாய்ந்தது. அதன் மரத்தண்டை பிடித்தபடி உடல் துடிக்க அவர் புரவியில் மல்லாந்து விழுந்தார்.

அவரை சித்ரரதன் பற்றிக்கொண்டான். “மைந்தா!” என்று அவர் கூவினார். அவன் உடலில் குருதியே இல்லை. கைகள் உறுதிகொண்டிருந்தன. விழிகள் அவர் அறியா வெறிப்புடன் இருந்தன. அப்பால் சித்ரபாகு “எழுக தந்தையே, இனி வலி இல்லை” என்று கூவினான். அவர் எழுந்து நின்றபோது உடலில் வலியோ நிகரழிவோ இல்லை என்று உணர்ந்தார். “செல்க… செல்க!” என்று சித்ரரதன் அறைகூவியபடி தேர்கள் மேலும் புரவிகள் மேலும் தாவியபடி முன்னால் சென்றான். அவர் ஸ்ருதாயுஷையும் அவர் மைந்தர்களையும் கண்டார். கேதுமானும் பானுமானும் அப்பால் போரிட்டுக்கொண்டிருந்தனர். சூழநோக்கியபோது அவர் அதுவரை கண்டதைவிட மேலும் பலமடங்கினர் அங்கே பொருதிக்கொண்டிருந்ததை அறிந்தார். மண்ணளவுக்கே விண்ணும் போரால் அலைக்கொந்தளிப்பு கொண்டிருந்தது.

கௌரவப் படையின் பருந்துச்சூழ்கையின் அலகுமுனை என விஸ்வசேனரால் செலுத்தப்பட்ட பீஷ்மரின் தேர் நின்றிருந்தது. அதைச் சூழ்ந்திருந்த நூற்றெட்டு தேர்வில்லவரும் ஆயிரத்தெட்டு பரிவில்லவரும் கொண்ட அணுக்கப்படை பருந்தின் நெற்றியிறகு என வகுக்கப்பட்டிருந்தது. அதில் தேர்வில்லவர்களில் ஒருவனான சுஜயன் தன் நிழல் நீண்டு களத்தில் விழுந்திருப்பதை நோக்கியபடி நின்றான். அவன் கையிலிருந்த வில்லின் நிழல் கரிய நாகம்போல் நெளிந்து கிடந்தது. அவன் அம்பை தூக்கி நிழலில் பார்த்தான். அது கூர்கொண்டிருக்கவில்லை. அதனால் ஒரு இலைக்குருத்தைக்கூட கிழிக்க முடியாது. அவன் புன்னகைத்து தனக்கு வலதுபக்கம் தேரில் கவசங்கள் ஒளிவிட நின்றிருந்த சம்பனை பார்த்தான். அவன் நெஞ்சில் படைகளின் தேர்கள் வண்ணக்கரைசலாக சிற்றலைகொண்டன. தலைக்கவசத்தில் வானொளி ஒரு துளியென மின்னியது.

அன்று காலை பாசறையிலிருந்து கிளம்புகையிலேயே அவனுடைய தேர்இணையனாகிய சம்பன் “இன்று பார்த்தரும் பிதாமகரும் களம் பொருதுவார்கள். ஒருவேளை இறுதி வெற்றி எவருக்கென முடிவு செய்யும் தருணமாக அது அமையும்” என்றான். சுஜயன் நெஞ்சு படபடக்க “ஆனால் நேற்றும் அவர்கள் பொருதிக்கொண்டனர்” என்றான். “ஆம், அது எருதுகள் கொம்பால் தட்டி ஆற்றல் நோக்கிக்கொள்வதுபோல. நேற்று பார்த்தர் தன் முதல் அம்பால் பிதாமகரின் கால்தொட்டு வணங்கி அருள்பெற்று சென்றார். நேற்றிரவு முழுக்க நெடுந்தொலைவு உள்ளத்தால் சென்று இன்று எதிரியென வஞ்சம் திரட்டி வருவார். உரிய சூழ்கையை இன்று வகுத்திருப்பார்கள். இருவரில் ஒருவர் என முடிவு செய்து போரிடுவது இன்றே நிகழும்” என்றான் சம்பன்.

சுஜயன் பெருமூச்சுவிட்டு “ஒவ்வொரு நாளுமென எதிர்பார்த்திருந்த களம். ஆனால் இன்று காலை ஏனோ சோர்வடைந்தேன்” என்றான். சம்பன் “நானும்தான். நேற்றிரவு முழுக்க கனவுகளால் ஆட்டுவிக்கப்பட்டேன். விந்தையான கனவுகள். பாதாள தெய்வங்கள் எழுந்துவந்து படைகளின் மேல் நின்று கூத்தாடுவதுபோல. பிறிதொரு இடத்தில் பிறிதொரு வகையில் பல்லாயிரம் மடங்கு விசையுடன் இப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என கண்டேன். இறந்தவர்கள் அனைவரும் எழுந்து வந்து அப்போரில் ஈடுபட்டிருந்தனர்.

வாழ்ந்தபோதெல்லாம் அவர்கள் அனைவரும் விழைந்தது இப்போரைத்தானோ என்று தோன்றியது" என்றான். "போரை தெய்வங்கள் விரும்புகின்றன என்பார்கள். தெய்வமாதலுக்காகவே மானுடர் போர்புரிகிறார்கள்."

சுஜயன் "எனக்கும் இரவெல்லாம் கனவுகள் அலைக்கழித்தன. ஒருவேளை முதல்நாள் போருக்குப் பின் எப்போதும் இத்தகைய கனவுகள் எழும்போலும் என்று எண்ணிக்கொண்டேன். அவ்வாறுதானா என்று எவரிடமும் கேட்டு அறிந்துகொள்ளக் கூடவில்லை. மூத்தவர் எவரேனும் அறிந்தால் அது நம் கோழைத்தனத்திற்கு சான்றாகிவிடுமென்று தோன்றியது" என்றான். சம்பன் சிரித்து "ஆம், நாம் அஞ்சாதவர்கள் என நடிக்கவேண்டியிருக்கிறது" என்றான். எப்போதுமே கற்றறிந்தவனின் மொழியில் மெல்லிய இளக்காரத்துடன் பேசுவது அவன் இயல்பு. "இன்று என்ன நிகழும் என உள்ளம் அலைக்கழிகிறது" என்று சுஜயன் சொன்னான். "இன்று களத்தில் நாம் எவரென்று காட்ட முடியும். இன்று அந்தியில் மீண்டு வந்தால் இனி எவரிடமும் நம்மை நிறுவிக்கொள்ள வேண்டியதில்லை" என்றான் சம்பன்.

அவன் சொற்களில் இன்று இன்று என்னும் ஒலி மட்டுமே சுஜயன் காதில் ஒலித்தது. கவசம் அணிகையில், கையுறைகளை இழுத்துக்கொள்கையில், தேரிலேறி விற்பீடத்தில் நின்று நாணிழுத்து விம்மலொலி எழுப்புகையில் இன்று இன்று என்று உளம் ஒலித்துக்கொண்டிருந்தது. "செல்க!" என்று ஆணை வந்தபோது தேர்கள் எழுந்து அரைவட்டமாக பீஷ்மரின் தேரை சூழ்ந்து களமுனை நோக்கி சென்றன. சகட ஒலிகள் இன்று இன்று என்று ஒலித்தன. வில்லை நிறுத்தி நாணைச் சுண்டியபோது ஆம் இன்று ஆம் இன்று என்று அது ஆணையிட்டது. அவன் உள்ளம் முதலில் இருந்த விசையை இழந்து மெல்ல அமைந்து அசைவின்மை கொண்டது. ஒவ்வொரு சொல்லாக வானிலிருந்து பொழிந்து மண்ணில் அமைந்து நிலைகொண்டு அதனாலேயே விழியிலிருந்து மறையும் சிற்றிறகுகள்போல ஒழிந்தன.

உள்ளம் சொல்லடங்கியபோதுதான் அதுவரை அந்த அகப்பெருக்கு புலன்கள்மேல் படிந்து தன்னை திரைபோலச் சூழ்ந்திருந்ததென்பதை அவன் உணர்ந்தான். செவிகளும் கண்களும் மூக்கும் கூர்கொண்டன. உடல் விழியாகவும் செவியாகவும் மாற ஒருகணத்தில் அப்பெருங்களத்தை அணுவணுவாக முற்றறிய முடியுமென்று தோன்றியது. பீஷ்மரின்

தேர் சீரான விரைவில் முன்னால் செல்ல அவர்களின் துணைத்தேர்வரி தொடர்ந்தது. படைமுகப்பில் புலரிக்கெனக் காத்து பீஷ்மர் ஊழ்கத்திலென அமர்ந்திருக்க ஊன்றிய வில்லுடன் கைகளை தொங்கவிட்டு அவன் தேர்த்தட்டில் நின்றான். மெல்லிய காற்றில் தேர்களின் முனைகளில் கட்டப்பட்ட கொடிகள் படபடக்கும் ஓசை கேட்டது. தலைக்குமேல் பறவைக்கூட்டமொன்று வந்து சுழல்வதுபோல.

அவன் பீஷ்மரையே நோக்கிக்கொண்டிருந்தான். முதல் கொம்பொலி எழுந்ததும் ஒரு மங்கல சடங்குக்கு முனைபவர்போல அமைதியாக எழுந்து நின்று தன் வில்லை இடக்கால் நுனியால் குமிழ்பற்றி நிறுத்தி வலக்கையால் மேல்முனையைப்பற்றி மிக எளிதாக அவர் நாணேற்றினார். அந்த வில்லை அவன் பலமுறை பார்த்திருக்கிறான். அதன் எடை தோள் தசைகளை தெறிக்க வைப்பது. எருமைத் தோலில் முறுக்கிய அதன் தடித்த நாண் மூன்றுவிரல் தடிமன் கொண்டது. பெருந்தோள் வீரன் ஒருவன் தன் முழு எடையையும் கையிலாக்கி, ஏறுதழுவலில் பெருங்களிற்றை கொம்பு பற்றி வளைத்து நிலம் தொடத்தாழ்த்தும் முயற்சியுடன்தான் அதை நாணேற்ற இயலும் என்று அவன் எண்ணியிருந்தான்.

பீஷ்மர் தொலையம்பு செலுத்தும் பெருவில்லை கையில் தொட்டு அவன் பார்த்ததேயில்லை. முதல் நாள் போரில் அவ்வில்லை இடக்கையில் பற்றி அவர் எழுந்து நின்றபோது எவ்வண்ணம் நாணேற்றப்போகிறார் என்று ஓரவிழியால் பார்த்துக்கொண்டிருந்தான். வலப்பக்கம் சம்பன் “ஒளி எழுகிறது” என்றான். இயல்பாக திரும்புகையில் எங்கோ ஒரு கேடயத்தின் பரப்பு அவன் கண்ணை அறுத்துச் சென்றது. திரும்பிப்பார்த்தபோது பீஷ்மர் நாணேற்றி முடித்திருந்தார். நெஞ்சு ஓசையிட அவன் அந்த வில்லை பார்த்துக்கொண்டிருந்தான். மெய்யாகவே தேவர்களால் துணைக்கப்படுகிறாரா? எட்டு வசுக்களில் ஒருவரா? ஏழு உடன்பிறந்தார் சூழ களம் வந்துள்ளாரா?

அன்று மாலை போருக்குப் பின் உணவருந்திக்கொண்டிருக்கையில் அதை அவன் சொன்னபோது சம்பன் நகைத்தான். “இன்று மாலை வில்லவர் அனைவருமே அதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சாலைத்தூணின் உச்சியின் அகல்விளக்கில் சுடர் பொருத்துவதுபோல அத்தனை எளிதாக நாண் பூட்டினாரென்று குணதன் சொன்னான். அது வில்நாண் அல்ல யாழ் நரம்பென்று தோன்றியது என்று மரீசி சொன்னான். அத்தனை எளிதாக

பூட்டப்பட்டதனாலேயே அந்த வில் அம்புக்கு போதிய விசையளிக்குமோ என்று ஐயுற்றதாக நாசிகன் கூறினான். களத்தில் பார்த்திருப்பாய், களிற்று மத்தகத்தின் பெருங்கவசத்தையே மும்முறை அறைந்து உடைத்தார். அவர் வில்லிருந்து எழுந்த அம்பின் அறைகொண்டு வீரர்கள் தேரிலிருந்து தெறித்து பின்னால் விழுந்தனர். பலர் தேர்த்தூண்களோடு சேர்த்து அறைந்து நிறுத்தப்பட்டனர். புரவிகள் தலையறுந்து விழும்படி பிறையம்பு செலுத்த முடியுமென்பதை முன்னர் கதைகளில்தான் கேட்டிருப்போம்" என்றான்.

சில கணங்களுக்குப் பின் சுஜயன் "பிதாமகரை வெல்ல இளைய பாண்டவரால் இயலுமா?" என்றான். "வெல்லக்கூடும் என்ற எண்ணம் இன்று போர் தொடங்கும் கணம் வரை பெரும்பாலானோரிடம் இருந்தது. ஏனெனில் இளைய பாண்டவர் களத்தில் தோற்றதே இல்லை. அவருக்குப் பெருந்துணையாக இடிமின்னலின் தேவன் களத்தில் எழுந்தருள்வான் என்றார்கள். இன்று தெரிந்தது, இப்புவியில் எவரும் பீஷ்மர் முன் வில்லுடன் நிற்க இயலாது. ஐயமே கொள்ள வேண்டாம், போர் முடிந்துவிட்டது. போர் முடிந்துவிட்டதென்பதை அவர்களின் தன்முனைப்பு புரிந்துகொள்ளும் வரைதான் இக்களக் கொலை நிகழும். பெரும்பாலும் நாளை அதுவும் இயலும்" என்றான் சம்பன்.

அவர்கள் அன்று இரவு புழுதியில் விண்மீன்களை நோக்கி படுத்திருந்தார்கள். காற்றில் கூடாரங்கள் விலாவிம்மி அமைந்துகொண்டிருக்க, கொடிகளின் சிறகோசை இருண்ட வானில் ஒலித்தது. அருகே படுத்திருந்த வில்லவர்கள் பலரும் துயின்றுவிட்டிருந்தார்கள். நெடுநேரம் விண்மீன்களையே நோக்கி படுத்திருந்த சுஜயன் தொண்டையை கனைத்து மெல்லிய குரலில் எவரிடமென்றில்லாமல் "நான் வழிபடுதெய்வமென உளத்தே நிறுத்தியிருப்பவர் இளைய பாண்டவர் அர்ஜுனர்தான்" என்றான். சம்பன் ஒன்றும் சொல்லவில்லை. "ஆனால் என்றோ ஒருநாள் களத்தில் அவருக்கெதிராக வில்லுடன் நிற்பேன் என்றும் எண்ணியிருந்தேன். ஏனெனில் நான் பிறக்கும்போதே எந்தையருக்கும் பாண்டவர்களுக்கும் பூசல் தொடங்கிவிட்டிருந்தது. அப்பூசல் ஒருபோதும் அமைவுறாதென்பது அரண்மனைப் பெண்டிரின் பேச்சில் தெளிவாகவே இருந்தது."

சம்பன் "உங்களுக்கு மட்டுமல்ல இளவரசே, இன்று பீஷ்மரை சூழ்ந்து வில்கொண்டு செல்லும் நூற்றெண்மரும் இளைய பாண்டவர் அர்ஜுனரை தங்கள் உளத்தே ஆசிரியராக நிறுத்தி வில்

தொட்டெடுத்தவர்களே” என்றான். “நீயுமா?” என்றான் சுஜயன். “ஆம், எனது ஆசிரியர் எனக்கு வில் கற்பிக்கையில் அதைத்தான் சொன்னார். காண்டீபத்தை எண்ணி வில்லெடுங்கள். காண்டீபனுக்கு நிகரென ஓர் அம்பையேனும் செலுத்துவேன் என உறுதி கொள்ளுங்கள். அவன் நிற்கும் களத்தில் நின்றிருக்க வேண்டுமென்று மூதாதையரை வேண்டிக்கொள்ளுங்கள். வில்லுக்குரிய தெய்வங்களனைத்தும் உங்களுக்கும் அருள்க என்றார். என் அன்னையரிடமிருந்து இளைய பாண்டவரின் பயணங்களையும் பெண்கோள் கதைகளையும் கேட்டு வளர்ந்தேன். ஆசிரியரிடமிருந்து அவர் வில்திறனை அறிந்துகொண்டேன். இந்நாள்வரை பிறிதெவரைப்பற்றியும் ஒவ்வொரு நாளும் நான் எண்ணியதில்லை. பிறிதெவரைப்பற்றியும் ஒவ்வொரு நாளும் செவிகொண்டதுமில்லை” என்றான் சம்பன்.

சுஜயன் “நான் இளமையில் மஞ்சத்தில் நீர்கழிப்பவனாகவும் பேய்களையும் நாகங்களையும் கண்டு அஞ்சி துயில் விழிப்பவனாகவும் இருந்தேன். எந்தை என்னை அச்சம் களைந்து படைபயில்பவனாக ஆக்கும்பொருட்டு தவச்சாலைக்கு அனுப்பினார். அங்கு ஒரு செவிலியன்னையிடமிருந்து ஒவ்வொரு நாளுமென இளைய பாண்டவரின் பயணத்தின் கதைகளை கேட்டேன். அவர் நாகருலகுக்குச் சென்றது, விண் புகுந்து தன் தந்தையாகிய இந்திரனை கண்டது, மணிபூரக நாட்டுக்குச் சென்று சித்ராங்கதை அன்னையை மணந்தது என பல கதைகளை நூறுமுறைக்குமேல் சொல்லியிருக்கிறாள். சுபத்ரை அன்னையை அவர் துவாரகைக்குள் புகுந்து தூக்கி வந்த கதையை இன்று எண்ணுகையிலும் மெய்ப்பு கொள்கிறேன்” என்றான். சம்பன் சிரித்து “அது இளங்குழவியருக்கு சொல்வதற்கேற்ற கதைதான். ஒரு நகருக்குள் புகுந்து ஆயிரம் பேரை வீழ்த்தி ஒரு அம்புகூட உடலில் படாமல் மீள முடியுமா என்ற வினா எழும் வரைக்கும்தான் அக்கதைகளை கேட்க முடியும்” என்றான்.

“ஆனால் இன்றுவரை அவ்வினா எழாதவனாகவே என்னை வைத்துக்கொண்டுள்ளேன்” என்றான் சுஜயன். “களம் முற்றிலும் பிறிதொன்று. தேரிலிருந்து தவறி விழுந்து புரவிக்குளம்பால் மிதிபட்டு இறந்த மாவீரர்கள் இங்குண்டு” என்றான் சம்பன். சுஜயன் உடலை நன்கு நீட்டி கைகளை தலைக்குமேல் வைத்துக்கொண்டான். “அவருக்கு காண்டீபம் கிடைத்த கதை… அதை எப்போதும் ஒருமுறை சொல்லும்படி செவிலியன்னையிடம் கேட்பேன். அன்னைக்கும் பிடித்த கதை அதுதான்” என்றான்.

“காண்டீபம் இளைய பாண்டவரின் விற்திறன் மட்டும் தனியாக பிரிந்து ஒரு பொருளென்று உடல் கொண்டது என எண்ணுகிறேன். நான் ஒருமுறை செவிலியன்னையிடம் கேட்டேன், அவளுக்கு ஏன் காண்டீபம் அவ்வளவு உவப்பானதாக இருக்கிறதென்று. அம்மனிதர் மூப்பும் தளர்வும் கொள்வார், இன்றிருந்து நாளை மறைவார், இப்புவியில் காண்டீபம் என்றுமிருக்கும் என்றாள். அதன் பின் அச்சொல் எனக்கு ஒரு வில்லைக் குறித்ததே இல்லை. என்றும் அழியாத ஒன்று அது.”

“காண்டீபம் என்றுமிருக்கும். இந்த வரியைப்போல என்னை ஊக்கியது பிறிதொன்றில்லை” என்றான் சுஜயன். “செவிலியன்னையுடன் இந்திரப்பிரஸ்தம் சென்று நெடுநாள் அங்கு தங்கியிருக்கிறேன். பாண்டவ மைந்தருக்கு களித்தோழனாக. அன்று இளைய பாண்டவரின் வில்பயிற்சி நிலையம் இந்திரப்பிரஸ்தத்தின் தென்மேற்குக் காட்டிலிருந்தது. பாண்டவ மைந்தருக்கு அங்குதான் விற்பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு படைக்கலங்கள் வைக்கும் இல்லத்தில் சிறு சாளரத்தினூடாக காண்டீபத்தை பார்க்க முடியும். நான் இளையவனாகையால் கம்பிகளைப்பற்றி உடலைத் தூக்கி நுனிவிரலில் நின்று அதை பார்ப்பேன். கால் வலி கொண்டு உடல் தளரும் வரை நிற்பேன். சில தருணங்களில் அது ஒரு பொன்னிற நாகமென நெளிவதாக விழிமயக்கு ஏற்படும். அல்லது கண்ணுக்குத் தெரியாத நரம்புகள் இழுத்துக்கட்டிய ஒரு யாழ். என் கனவுகளில் அது உருமாறிக்கொண்டே இருந்தது.”

“அபிமன்யூ அன்று இளையோன். என்னை தூக்கு என்னை தூக்கு என்று கூவுவான். அவனுடைய மூத்தவர்களில் இளைய பாண்டவர் அர்ஜுனரின் மைந்தன் சுருதகீர்த்தி அவனுடன் எப்போதும் போட்டியிடுவதுண்டு. பீமசேனரின் மைந்தர் சுதசோமனோ சர்வதனோதான் அவனைத் தூக்கி தோளில் வைத்து காண்டீபத்தை காட்டுவார்கள். கால்களை உதைத்தபடி இக்கம்பிகளை வளைத்துக்கொடுங்கள் மூத்தவரே, நான் உள்ளே சென்று அதை தூக்குகிறேன், அதை என்னால் எடுக்க முடியும் என்று அவன் கூவுவான். பின்னர் ஒருமுறை இளைய பாண்டவர் காண்டீபத்தை எடுத்து அதை மடித்து சிறிதாக்கி அவனுக்கு அளித்தார். அவர் எங்களுக்கு பயிற்சி அளித்த முதல் நாளிலேயே அவன் அதை கையிலெடுத்து முதல் முயற்சியிலேயே நாணேற்றி விண்ணில் பறந்த ஒரு புறாவின் நான்கு இறகுகளை மட்டும் அப்புறா அறியாமலேயே அம்பினால் சீவி நிலத்திட்டான்.”

நான் காண்டீபத்தை தொட விரும்பினேன். விழிகளால் பல்லாயிரம் முறை அதை தொட்டிருக்கிறேன். நீண்ட பயணம் ஒன்றுக்குப் பின் இளைய பாண்டவர் திரும்பி வந்தபோது நான் அங்கிருந்தேன். என் விருப்பத்தை விழிகளிலேயே அறிந்தார். அவர் மைந்தர்கள் இருவரும் சென்று அதை வாங்கி அம்பு தொடுத்து இலக்கில் அறைந்தனர். அவர் திரும்பி என்னைப் பார்த்து அருகே அழைத்தார். நான் நாணியவனாக பின்னடி எடுத்து வைத்தேன். அவர் எழுந்து வந்து என் தோள்களைப்பற்றி “வா” என்றார். “வேண்டாம் வேண்டாம்” என்று நான் சொன்னேன். “அஞ்சுகிறாயா?” என்றார். “இல்லை” என்றேன். “இது ஏந்துபவனுக்கு இணக்கமாகும் படைக்கலம், உன் வாழ்வில் பிறிதெவரும் இதைப்போல் உன்னை புரிந்துகொண்டவராக அமையப்போவதில்லை. எடு!” என்று காண்டீபத்தை நீட்டினார். உடைந்த குரலில் “தந்தையே, என் குறிகள் தவறும். என் கைகளும் விழிகளும் பயின்றவை அல்ல” என்று நான் சொன்னேன். “காண்டீபம் அறியும். பெற்றுக்கொள்” என்று சொல்லி அவர் வலியுறுத்தினார்.

என்னால் அதை வாங்க இயலவில்லை. என் கைகள் எழவில்லை. சற்று கடுமையான குரலில் “வாங்குக!” என்றார். நான் ஆணையை மீற முடியாமல் அதை வாங்கிக்கொண்டேன். நான் எண்ணியதுபோல் அது பேரெடை கொண்டிருக்கவில்லை. ஆனால் என்னை சற்று நிலைதடுமாறவைக்கும் அறியா விசை ஒன்று அதற்கு இருந்தது. “நாணேற்று!” என்றார். அபிமன்யூ என்னிடம் “அதைப்பற்றி எண்ண வேண்டாம், மூத்தவரே. எந்த வில்லையும் எப்படி நாணேற்றுவீர்களோ அதைப்போல நாணேற்றுங்கள். அது உங்களை அறிந்துகொள்ளும்” என்றான். அவன் என்ன சொல்கிறான் என்று எனக்கு புரியவில்லை. நான் நாணேற்ற முயன்றபோது கன்று கயிற்றை உதறுவதுபோல தலைசிலுப்பி மும்முறை அது என்னை தவிர்த்தது. அதை திருப்பி இளைய பாண்டவரிடம் கொடுக்கச் சென்றேன். அவர் கைநீட்டாமல் “உம்” என்றார். “தந்தையே...” என்றேன் தளர்ந்த குரலில். மேலும் கடுமையாக “உம்” என்றார்.

சூழ்ந்து இருந்த உடன்பிறந்தாரின் விழிகள் என் உடலை சிலிர்க்கச் செய்தன. இன்று சிறுமைகொண்டு கண்ணீருடன் திரும்பப்போகிறேன். இன்றே இங்கிருந்து மீண்டு அஸ்தினபுரிக்கு கிளம்பிவிடவேண்டும். இனி ஒருபோதும் வில்லை கையால் தொடப்போவதில்லை. என் உடன்பிறந்தாரைப்போல இரும்புக்கதைதான் எனக்கான படைக்கலம். எந்த நுட்பமும் அற்றது, தோள் வல்லமையினாலேயே பயிலப்பட வேண்டியது. இது

கரவுகள் நிறைந்த படைக்கலம். மானுடனுடன் விளையாடுவது. தன்னுள்ளிருக்கும் கள்ளத்தை எடுத்து இதனுடன் பொருத்திக் கொள்பவனே வெல்கிறான். பாம்பாட்டியின் பாம்பு. அவன் கையிலிருந்தாலும், அவன் பாடலுக்கு நெளிந்தாலும் ஒருபோதும் அவனால் அதை அறிந்துகொள்ள முடியாது.

என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று தெரியாமல் நின்றிருந்தேன். “நாணேற்றுக!” என்றார் இளைய பாண்டவர். என்ன செய்கிறேன் என்று அறியாமல் நாணை தொடுத்தேன். காண்டீபம் அதை ஏற்றுக்கொண்டது. சூழ நின்றிருந்த உடன்பிறந்தோர் வாழ்த்தொலி எழுப்பி சிரித்தபோதுதான் நாணேற்றிவிட்டிருப்பதை நானே உணர்ந்தேன். நாணேற்றிவிட்டேன். இதோ என் கையில் அமர்ந்திருக்கிறது காண்டீபம். பாரதவர்ஷத்தின் ஒவ்வொரு வில்லவரும் தங்கள் வில்லை காண்டீபத்தின் மறுவடிவமென்றே எண்ணுகிறார்கள். என் கையில் இதோ இருக்கிறது வில்லென்று மண்ணில் வந்த சிவம். என்னால் நிற்க இயலவில்லை. “அந்தத் தவளை இலக்கை அடி” என்று தந்தை சொன்னார். தொலைவில் மரத்தாலான சிறுதவளையொன்று கயிற்றில் கட்டப்பட்டு தொங்கியது. நாணை இழுத்து குறி நோக்கி அதை அறைந்தேன். அம்பு அணுகுவதற்குள்ளே தவளை துள்ளி அப்பால் சென்றது.

அன்று நான் வில்பயிலத் தொடங்கி ஓராண்டாகிவிட்டிருந்தது. ஒவ்வொரு முறை குறி தவறுகையிலும் முதலில் ஒரு சோர்வும் பின்னர் எரிச்சலும்தான் எழும். மும்முறை ஒரு குறிதவறிவிட்டதென்றால் வில்லை தாழ்த்திவிடுவது என் வழக்கம். அன்று என் ஆணவம் சீறி எழுந்தது. என்னை வென்று ஒரு இலக்கு நின்றிருப்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அடுத்த அம்பு மேலும் விசையுடன் சென்றது. தவளை துள்ளி தவிர்த்தபோது மேலும் வெறி எழுந்தது. பின்னர் பலமுறை அத்தருணத்தை எண்ணியிருக்கிறேன். அது காண்டீபம் என்னும் ஆணவம் எனக்கு ஆணையிட்டதனால்தான். என்னை எடுத்துச்சென்றது அதன் விழைவு. மூன்றாம் முறை தவளை என் அம்பை ஒழிந்தபோது பற்களை இறுகக்கடித்து வெறிக்குரலெழுப்பியபடி நான்காவது அம்பால் தவளையை சிதறடித்தேன். ஐந்தாவது அம்பால் அச்சிதறலை மேலும் சிதறடித்தேன். மீண்டும் ஏழு அம்புகளால் ஒவ்வொரு துண்டையும் சிதறடித்தேன். என்னையறியாமலேயே போர்க்குரல் எழுப்பி கொந்தளித்துக்கொண்டிருந்தேன்.

தன்னுணர்வு கொண்டபோது காண்டீபத்தை தாழ்த்தி தலைவணங்கினேன். “வந்து என் கால்தொட்டு வாழ்த்து

பெற்றுக்கொள்” என்று தந்தை சொன்னார். “காண்டீபத்தை பீடத்தில் வைத்துவிட்டு எட்டுறுப்பும் நிலம்தொட விழுந்து அவர் காலடியில் தலைவைத்து வணங்கினேன். பெருவில்லவனாவாய் என்று அவர் என்னை வாழ்த்தினார்” என்றான் சுஜயன். சம்பன் “பிறர் தங்களை அணுவணுவாக வெற்றி நோக்கி நகர்த்திக்கொண்டிருக்கிறர்கள், இளவரசே. நீங்கள் இப்பிறவியின் முழு வெற்றியிலிருந்து வாழத்தொடங்கியிருக்கிறீர்கள்” என்றான். சுஜயன் “அதன் பின் நான் இந்திரப்பிரஸ்தத்துக்கு செல்ல நேரவில்லை. பாண்டவ மைந்தர் எவரையும் நேரில் பார்க்கவுமில்லை. அஸ்தினபுரிக்கு மீண்டேன். ஆயிரத்தவரில் தனித்தவனானேன். என் காண்டீபத்தை நானே அமைத்துக்கொண்டேன்” என்றான்.

அதை காண்டீபம் என்றே சொன்னேன். ஒருமுறை நான் வில் பயின்றுகொண்டிருக்கையில் அங்கே மூத்த தந்தை துரியோதனர் வந்தார். அவருடன் அங்கரும் இருந்தார். பன்னிருமுறை ஒரே இலக்கை அடித்து வானில் நிறுத்தி மீண்டபோது பெரிய தந்தை ஓடிவந்து என்னைத் தூக்கி தோளுடன் அணைத்துக்கொண்டார். உரக்க நகைத்தபடி “நம் குடியில் ஒரு பெருவில்லவன்! எண்ணியதே இல்லை! நம் தோள்கள் வில்லுக்குரியதென எவரும் சொன்னதுமில்லை” என்றார். நான் “காண்டீபம் குறிதவறுவதில்லை, தந்தையே” என்றேன். அவர் புருவம் சுளித்து “காண்டீபமா?” என்றார். “இது எனது காண்டீபம்” என்று நான் சொன்னேன். அவர் என்னை கீழே இறக்கி சினத்துடன் குனிந்து நோக்கி “என்ன உளறுகிறாய்? காண்டீபம் அவனுடையது மட்டுமே” என்றார்.

அங்கர் பெரிய தந்தையின் தோள்மேல் கைவைத்து “இப்புவியில் இன்று பல்லாயிரம் காண்டீபங்கள் இருக்கின்றன, அரசே” என்றார். சினத்துடன் “அது அவன் பெற்ற தவப்பரிசில். அவன் பெற்றதாயினும் நம் குடிக்கு தெய்வங்கள் அருளியது. பிறிதொன்றிலாதது அது” என்றார். அங்கர் நகைத்து “பிறிதொன்றிலாதது எத்தனை வடிவம் கொண்டாலும் மாறாது, அரசே” என்றார். பெரிய தந்தை அதை புரிந்துகொள்ளவில்லை. அங்கர் “இது அவன் அளிக்கும் நல்வாழ்த்து. நம் மைந்தருக்கு ஆசிரியரும் தந்தையுமாக அவன் அமைவது நன்றே” என்றார். பெரிய தந்தை மீசையை நீவியபடி “நன்று, அது உன்னிடம் எப்போதுமிருக்கட்டும்” என்றார்.

சம்பன் சிலகணங்கள் மறுமொழி சொல்லவில்லை. பின்னர் “அவர் ஏன் சினந்தார்?” என்றான். சுஜயன் “அவரை புரிந்துகொள்வது

அத்தனை எளிதல்ல” என்றான். “என்னை இந்திரப்பிரஸ்தத்திற்கு வாழ்த்தி அனுப்பியவர் அவர். தன் செவிபட பாண்டவர்கள் எவரையும் பிறர் இழித்துரைக்க ஒப்பமாட்டார்” என்றான். “ஆம், ஒருமுறை அவையிலேயே யுதிஷ்டிரரை பேரறத்தான் என்றும் பீமசேனரை பெருந்தோளர் என்றும் அவர் சொல்லி கேட்டிருக்கிறேன்” என்றான் சம்பன். “இக்குடிகளில் எவராலும் பீமசேனரை எண்ணாமல் அரசரை எண்ணமுடியாது. அவர்கள் பிரிக்கமுடியாதவர்கள்.”

சுஜயன் “ஒவ்வொரு நாளும் அவர் எண்ணும் உடன்பிறந்தான் பீமசேனர் மட்டுமே. அவருடைய தனி மாளிகையில் பீமசேனரின் உடல் அளவுகளுடன், அதே தோளாற்றலுடன் கைவிடு பாவை ஒன்றை செய்து வைத்திருப்பதாகவும் அதனுடன் போர்புரிந்தே தன் தோள் ஆற்றலை பெருக்கிக்கொள்வதாகவும் சொல்கிறார்கள். யவன நாட்டிலிருந்து பொறியாளர் வந்து உருவாக்கியது அப்பாவை. அதை அங்கே அரண்மனைக்குள் ஓர் ஆலயத்தில் நிறுத்தி பூசனைகள் செய்வதாகக்கூட சூதர்கள் நகரில் பாடி அலைகிறார்கள். எவரும் அதை பார்த்ததில்லை. ஒவ்வொரு நாளும் பீமசேனருடன் தோள்கோப்பவர். உளம்கோக்காமல் தோள் இணையவியலாது என்பதே மற்போரின் நெறி என்பர்” என்றான்.

சம்பன் “பிறகெதற்கு போர்புரிகிறார்கள்?” என்று கேட்டான். “அதனால்தானோ என்னவோ” என்று சுஜயன் சொன்னான். அவர்கள் மீண்டும் அமைதியானார்கள். “காண்டீபத்துக்கு எதிர்நிற்கிறோம்” என்று சுஜயன் தனக்குள் ஒலிக்க சொல்லிக்கொண்டான். “ஆம்” என்றான் சம்பன். “இப்போருக்கு அணிதிரண்டபோது பெருவில்லவராகிய பீஷ்மரையும் ஜயத்ரதரையும் அஸ்வத்தாமரையும் துரோணரையும் கிருபரையும் சூழ்ந்திருக்கும் தேர்வில்லவர்களை தெரிவு செய்தனர். ஜயத்ரதரும் அஸ்வத்தாமரும் தங்கள் நாட்டிலிருந்தே அணுக்கர்களை கொண்டுவந்திருந்தார்கள். துரோணருக்கும் கிருபருக்கும் அவரவர் மாணவர்கள் அணுக்கர்களாக அமைந்தனர். பீஷ்ம பிதாமகர் நெடுங்காலமாக எவரையும் பயிற்றுவித்ததில்லை. ஆகவே அவருக்கான வில்லவர்களை படைகளில் இருந்து அவரே தெரிவு செய்தார்.”

முதல் வில்லவன் அவர் முன் சென்று நின்று மூன்று தாவும் மீன்களை விற்களால் அறைந்து உடைத்துக் காட்டியதும் “நீ எங்கு பயின்றாய்?” என்று அவர் கேட்டார். “நான் என் சிற்றூர் ஆசிரியரிடம் பயின்றேன்” என்று அவன் சொன்னான். “அவர் எங்கு பயின்றார்?”

என்று அவர் கேட்டார். “அதே சிற்றூரில் பிறிதொரு ஆசிரியரிடம்” என்று அவன் சொன்னான். “உங்கள் குருமரபில் எவரேனும் வில்முனிவராகிய சரத்வானிடம் பயின்றிருக்கிறீர்களா?” என்றார். “இல்லை பிதாமகரே, நாங்கள் எளிய ஷத்ரியர்கள்” என்றான். சில கணங்களுக்குப் பின் அவர் “நீ அர்ஜுனன் வில்பயிலுமிடத்தில் இருந்திருக்கிறாயா?” என்றார். “அவரை நான் பார்த்ததே இல்லை” என்று அவன் சொன்னான். “ஆனால் ஒவ்வொரு நாளும் விழித்திருக்கும் பொழுதெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறேன். என் ஆசிரியர் அவர் வில்வென்ற கதைகளைச் சொல்லி என்னை பயிற்றுவித்தார். என் உள்ளத்தில் அவரை வரைந்துகொண்டேன். அவரென என்னை நிறுத்தி முதலம்பை எடுத்தேன். இங்கு சற்று முன் எய்த இறுதி அம்புவரை என்னுள்ளிருந்து எய்தது அவரே” என்றான். “உம்” என்று பீஷ்மர் தலையசைத்தார்.

தொலைவிலிருந்து நோக்கியபோது அவர் அதை விரும்புகிறாரா சினம் கொள்கிறாரா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நூற்றெட்டு வீரர்களை அவர் தெரிவு செய்தார். இறுதியாக நான் சென்று நின்றேன். புருவம் சுளித்து “நீ வில்லவனா?” என்று அவர் கேட்டார். பின் என் விரல்களைப் பார்த்து “ஆம், விரல்கள் வில்லறிந்தவை” என்று சொல்லி தலையசைத்தார். “நானும் பார்த்தரே” என்று சொன்னேன். “ஆம், இந்நூற்றெண்மரும் அவனே” என்று சொல்லி அவர் தலையசைத்தார். “நன்று, களத்தில் நாம் அவனை எதிர்கொள்ளப் போகிறோம். அவனே பெருகி அவனுக்கு எதிர்நிற்றல் நன்று” என்றார். முகத்தில் அப்போதும் புன்னகை எழவில்லை. ஆனால் விழிகளில் கனிவு இருந்தது.

சம்பன் “முதல் நாள் நானும் அதையே எண்ணினேன். போர் முரசுகள் ஒலிக்க படைகிளம்பி நம்மை நோக்கி வந்தபோது பல்லாயிரம் இளைய பாண்டவர்கள் வில் பூண்டு எதிர்வருவதாகத் தோன்றியது. அவருடைய படையினர் ஒவ்வொருவரும் அவரென்றே ஆகிவிட்டிருக்கின்றனர்” என்றான். “அது நம் உளமயக்கல்ல. மெய்யாகவே அப்படையில் ஒவ்வொருவரிலும் ஒருதுளியேனும் அவர் இருக்கிறார்” என்றான் சுஜயன்.

போர் தொடங்குவதற்கான கொம்போசை எழுந்தபோது மெல்லிய விதிர்ப்பொன்று அவன் காலில் ஓடிச்சென்றது. ஆனால் உள்ளத்தை அது அடையவில்லை. சொல்லின்றி அது உறைந்து கிடந்தது. போர்முரசுகள் எழுந்து அடங்கிய பின்னரும் முதல் அம்பு எழவில்லை. கௌரவப் படைகளின் போர்க்கூச்சல் எழுந்து சற்று நேரம் கழிந்து பாண்டவப் படைகளில் எதிர்க்கூச்சல் எழுந்தது.

சம்பனின் நாணில் காற்று கிழிபடும் ஒலியை சுஜயன் கேட்டான். அவன் புரவிகளில் ஒன்று பொறுமையிழந்து காலெடுத்து வைக்க தேர் அசைந்தது. எதிரே பாண்டவப் படைகளின் முகப்பு இடிந்து சரியும் பெருங்கோட்டை என அவர்களை நோக்கி வந்தது. “காண்டீபம் எழுகிறது” என்று சம்பன் சொன்னான்

சுஜயன் இரண்டாம்நாள் போரின் முதல் தருணமே பீஷ்மரும் அர்ஜுனனும் அம்புகோத்துக்கொள்வதாக அமையுமென்று எண்ணியிருந்தான். நாரையின் அலகை பருந்தின் அலகு கூர் கூரால் என சந்திக்கும் தருணம். புலரியிலேயே அத்தருணத்தை உளம்கண்டுகொண்டுதான் அவன் எழுந்தான். கவசங்களணிந்து தேரிலேறுகையில் பலமுறை அவன் உள்ளத்தில் அது நடந்துவிட்டிருந்தது. ஆனால் முரசொலித்து படைமுகப்புகள் சந்தித்துக்கொண்டபோது நாரையின் நீள்கழுத்து சவுக்குபோல வளைந்து சுழன்றது. அதன் அலகுமுனை மிக அப்பால் பருந்தின் இடச்சிறகில் இருந்த கிருபரை நோக்கி சென்றதை அவன் கண்டான். பீஷ்மரை திருஷ்டத்யும்னனின் ஏழு படைப்பிரிவுகள் அலையென எழுந்து வந்து எதிர்கொண்டன. நாரையின் கழுத்தை ஓங்கிக் கொத்தியது பருந்து. சிறகுகள் சிதறிப்பரக்க உருவான பள்ளத்தினூடாக பருந்தின் அலகு நுழைந்தேறியது. நாரைக்கழுத்து வளைந்து வளைந்து சூழ்ந்துகொண்டு அம்புகளால் தாக்கத்தொடங்கியது.

மிகச் சில கணங்களுக்குள்ளேயே உச்சகட்டப் போர் நிகழலாயிற்று. அம்புகளால் நிறைந்த காற்றுவெளியினூடாக சுஜயன் பீஷ்மரின் கைகள் சுழன்று அம்புகளை எடுத்து நாணிலமைத்து நீட்டித்தொடுத்து, விம்மி விழிதெரியாமலாகி, இலக்கடைந்து நின்று நடுங்கிய அம்புக்கு மேல் அடுத்த அம்பை எய்ததை கண்டான். அவர் விழிதிருப்பி களத்தை நோக்க விழித்தொடுகையே அம்பென்றாகியது. எண்ணமே அம்பென்ற பருவடிவெடுத்து எழுந்து தைத்தது, உடைத்தெறிந்தது. பீஷ்மரைச் சூழ்ந்து நின்றிருந்த அணுக்கத்தேர் வீரர்கள் அனைவரும் தாங்கள் விற்தொழிலின் உச்சத்தில் உடல் நெளிந்தாடி கைபறந்து விழிசுழன்று கொண்டிருக்கையிலும்கூட பீஷ்மரின் போர்க்கலையை மூன்றாவது விழியொன்றால் நோக்கிக்கொண்டுமிருந்தனர். நோக்கற்கரிய நடனம் போலிருந்தது அது. விழியறியாக் கையொன்று ஏந்திச்சுழற்றிய சாட்டை.

முதல்நாள் போருக்குப் பின் கௌரவப் படையினரில் பீஷ்மரின் போர்க்கலையைப்பற்றிய பேச்சுக்களே ஓங்கியிருந்தன. அவருடைய போர்ப்பயிற்சியை அத்தலைமுறையினரில் பெரும்பாலானவர்கள் பார்த்திருக்கவில்லை. முந்தைய இரவில் பரிவில்லவனாகிய ஊர்த்துவன் "முப்புரம் எரித்த ஆடல்வல்லான் மட்டுமே இங்ஙனம் போரிட்டிருக்க இயலும். வில்லுடன் தேரில் நிற்பதற்கன்றி பிறிதெதற்காகவும் வடிவமைக்கப்படாத உடல் என்று எண்ணினேன்" என்றான். "உள்ளம் அலைவுறாது நிலைகொள்பவரின் உடலில் மட்டுமே அத்தகைய முழுமை அமையும்" என்றான் தேர்வில்லவனாகிய கூகன். "ஏனென்றால் அவருடைய ஆழம் இப்போரில் ஈடுபடவில்லை. அது ஊழ்கத்திலமர்ந்த தவத்தோன் என தன்னைத் தானே சுவைத்து களிப்பில் செயலற்று நிலைத்துள்ளது" என்றார் முதிய வில்லவராகிய சாமர்.

பீஷ்மருக்கு முன்பாக முதன்முதலில் காண்டீபம் எழுந்து வந்த தருணத்தை சுஜயன் தன் உள்ளத்தில் மீள மீள நிகழ்த்தியிருந்தான். கொந்தளிக்கும் கடலலைகள் மேல் தோணி எழுந்து வருவதுபோல் படைகளின் முகப்பில் யாதவர் ஓட்டிய தேர் வந்தது. குரங்குக்கொடி பாறிய அமரமுனையில் பீலி விழி மலர்ந்து அமர்ந்திருந்த இளைய யாதவர். ஏழு புரவிகளும் நீர் உலையாமல் அலையிலெழுந்தமைந்து அணுகும் ஏழு அன்னப்பறவைகளின் நிரை என்று எண்ணினான். அவற்றின் கால்கள் நடனமங்கையர் என ஒத்திசைந்தன. புரவிகளின் கால்கள் நிலம் தொடவில்லை என தோன்றியது. தேர்ச்சகடம் காற்றில் உருண்டு வருவது போலிருந்தது. போர்க்களத்தில் பீடமுலையாது குவடு அசையாது ஒரு தேர்வரமுடியுமென்று அன்றுதான் கண்டான். ஒருமுறைகூட இளைய யாதவரின் சவுக்கு புரவிகளின் மேல் படவில்லை. ஏழு புரவிகளின் கடிவாளங்களின்மேல் ஏழ்நரம்பு யாழ் மேலென அவர் கைகள் அசைந்தன. அச்சரடுகளினூடாக அவர் உள்ளத்தை அவை அறிந்தன. எண்ணத்தை உடலுறுப்புகள் அறிவதுபோல அவரை அவை நடத்தின.

அர்ஜுனனுடனான அந்தப் போரில்தான் பிதாமகர் தன் முழுப் பேருருவுடன் வெளிப்பட்டார். அவருடைய அணுக்கர்களாகச் சென்ற எவரும் அவருக்கு மெய்த்துணையாக இருக்க வேண்டியிருக்கவில்லை. இளைய பாண்டவரைச் சூழ்ந்துவந்த வில்லவர்களை மட்டுமே அவர்கள் எதிர்கொண்டனர். முதல் அம்பை வணங்கி எடுத்து பீஷ்மரின் காலடி நோக்கி எய்தபின் நாணொலி

எழுப்பி நிமிர்ந்த அர்ஜுனன் உதடுகளை இறுகக் கடித்து விழிகூர்ந்து நோக்கால் அம்பு செலுத்துபவன்போல தேர்த்தட்டில் நின்று போரிட்டான். குறைந்த நேரமே அப்போர் நிகழ்ந்தது. கேடயப்படையால் வளைக்கப்பட்டு அர்ஜுனன் அகற்றிக்கொண்டு செல்லும் வரை அவன் தன் இரு கைகளாலும் அம்புகளை செலுத்திக்கொண்டிருக்கும்போதும் விழிமலைத்து அவரை நோக்கிக்கொண்டிருந்தான். முகிலிலிருந்து எழுந்து ஒளியுடன் தோன்றி மீண்டும் மறைந்த இளங்கதிரவன் என்று எண்ணிக்கொண்டான்.

அதை சொன்னபோது “சூதர் பாடலின் வரிபோல” என்று சம்பன் நகைத்தான். சுஜயன் “அவர்களின் சொற்களால்தான் நாம் பேசிக்கொள்ள முடியும்” என்றான். இருவரும் சொல்லடங்கி படுத்திருந்தனர். அச்சிரிப்பால் அந்நிகழ்விலிருந்து நெடுந்தூரம் சென்றுவிட்டிருந்தான். “நாளை மெய்யாகவே போர் நிகழும். இருவரும் களமெதிர்கொள்கிறார்கள். நாமும் உடனிருப்போம்” என்றான் சம்பன். “எனது காண்டீபத்துடன் அவர் முன் நின்றிருக்கையில் ஒரு வட்டம் முழுமையடைகிறது” என்று சுஜயன் சொன்னான். சம்பன் சற்றுநேரம் கழித்து “அல்லது ஒரு கடன் தீர்க்கப்படுகிறது” என்றான்.

பீஷ்மரின் அம்புகள் பட்டு வீரர்கள் அலறி தேரிலிருந்தும் புரவிகளிலிருந்தும் உதிர்ந்துகொண்டிருந்தனர். விழுந்தவர்களுக்கு மேல் தலையறுபட்ட புரவிகள் விழுந்தன. திசைஇழுபட்டு சகடம் சிதறி தேர்கள் சரிந்தன. அவருடைய தேர் விழுந்தவர்களின் மேல், உடல்களின் மேல், தேர்களின் உடைசல்களின் மேல் பறந்து செல்வதுபோல் சென்றது. அலைகளிலாடும் படகென தேர்த்தட்டு உலைந்தபோதும்கூட அதற்குமேல் மெல்லிய புகைப்படலம்போல இன்மையும் இருப்புமாக நின்றிருந்தார். நெளிவுடன் கலைந்து நிலைகொள்கையில் திரண்டு உடல்காட்டினார். பறக்கும் தேன்சிட்டின் சிறகுகள் போன்றிருந்தன கைகள்.

மச்சர் நாட்டு சலஃபனின் மைந்தர் இருவர் தலையறுந்து விழுந்தனர். நிஷாத குலத்து கோமுகனின் ஏழு மைந்தர்களும் ஒருவர் பின் ஒருவராக கொல்லப்பட்டனர். பாணாசுரரின் அமைச்சரான சுபூதர் தேர்த்தட்டிலிருந்து தலையற்றவராக விழுந்து புரவிக்கால்களால் உதைத்தெறியப்பட்டார். பாஞ்சால படைத்தலைவர் உக்ரபாகுவும் வஜ்ரசிருங்கனும் நெஞ்சக் கவசமுடைந்து தேரில் விழுந்தனர். அவர்களை பீஷ்மரின் அம்புகள் மொய்த்து கொத்திப்புரட்டின. முட்பன்றிபோல அம்புகள் சூடி

அவர்கள் விழுந்து நௌிந்தனர். தேர்த்தட்டில் விழுந்தவர்களை அம்புகளால் தாக்க இயலாதென்பது சுஜயன் கற்றிருந்தது. காற்றிலெழுந்த அம்பு இரைதேடும் பருந்தென வளைந்திறங்கி விழுந்தவன் நெஞ்சில் பாய்ந்து நிற்கும் என்பதை அப்போது கண்டான். பீஷ்மர் எவரையும் புண்பட்டு களத்தில் விழவிடவில்லை என்பதை அவன் முந்தைய நாளே அறிந்திருந்தான். ஒரே அம்பிலேயே கொன்று வீழ்த்தவே அவர் எண்ணினார். உயிர்பிரியாதென அவர் உணர்ந்தால் மேலும் மேலுமென அம்புகள் தேடிச்சென்றன. உத்தர மல்லநாட்டு தீர்க்கபிரக்யர் கழுத்தில் அம்புபட்டு சரிய அவருடைய விலாக் கவசத்தை உடைத்து உட்புகுந்து தைத்து நின்ற நீளம்பு "ஆம்" என தலையசைத்தது.

"இன்றும் கொலைத்தாண்டவத்தின் உச்சத்திலிருக்கிறார் பிதாமகர்!" என்று சம்பன் கூவினான். "பாண்டவப் படையின் பெரும்பகுதியை இன்று அழித்துவிடுவார்" என்று கூகன் சொன்னான். பீஷ்மரை நோக்கி வந்துகொண்டிருந்த எதிரியம்புகளை அவருக்குப் பின்னாலிருந்து அம்பு பெய்து வலையொன்றை காற்றில் நிறுத்தி தடுத்துக்கொண்டிருந்தனர் நூற்றெண்மரும். திருஷ்டத்யும்னனின் அம்பு நெஞ்சிலறைய சம்பன் தேர்த்தட்டில் இருந்து தெறித்தான். அவன் மேல் கூகனின் தேர் ஏறியது. நிலைகுலைந்து கூகன் விழிதிருப்ப அவன் தலையை அறுத்தெறிந்தது திருஷ்டத்யும்னனின் அடுத்த அம்பு. கூகனின் தேர் விசையழியாமல் சம்பனின் தேரை முட்டி சரிய அவர்களுக்குப் பின்னாலிருந்த வக்ராக்ஷனின் பாகன் தேரை வளைத்து சுற்றிவந்து அவ்விடத்தை நிரப்பினான். திருஷ்டத்யும்னனைச் சூழ்ந்து வந்த அவன் மைந்தர்கள் திருஷ்டகேதுவும் க்ஷத்ரதர்மனும் க்ஷத்ரஞ்சயனும் தந்தையை சூழ முயன்ற கௌரவத் தேர்வீரர்களை எதிர்த்து தடுத்தனர். சுஜயன் தன் சலியா அம்புகளால் அவர்களை அறைந்து நிரை பிளந்தான். தந்தையைச் சூழ்ந்து அவர்கள் உருவாக்கிய பிறைசூழ்கையை உடைத்தான். க்ஷத்ரதர்மனின் கவசம் பிளந்தது. அவன் பின்னடைவதற்குள் அவனை அம்பால் அடித்து வீழ்த்தினான். வெறியுடன் கூவியபடி அவனைத் தாக்கிய க்ஷத்ரஞ்சயனை தோளில் அம்பு தொடுத்து தேர்த்தட்டில் மடிந்தமரச் செய்தான். திருஷ்டகேது சுஜயனின் அம்புகளால் பின்னடைய அவனை கேடயப்படை காத்தது.

காவல்சூழ்கை விலக்கப்பட்ட திருஷ்டத்யும்னன் பீஷ்மரிடம் போரிடுவதன் உளக்கூரால் அறியாது முன்னகர்ந்து கௌரவப் படைகளின் முன் வந்துவிட்டிருந்தான். சுஜயன் அவனை

அம்புகளால் அறைந்தபடி முன்னால் சென்றான். தன் அம்புகள் எவையும் அவன் இரும்புக்கவசங்களை உடைக்க ஆற்றல் கொண்டதல்ல என்று உணர்ந்தான். அவை தட்டையான தகட்டுக் கவசங்கள் அல்ல. சிறு குமிழிகளால் ஆன பரப்பு கொண்டவை. எடைகுறைந்தவை, ஆனால் அறைகளின் விசையை வளைவுப்பரப்பால் வாங்கிக்கொள்பவை. ஆனாலும் இடைவிடாத அம்புகள் அவன் விசையை தடுத்தன. பீஷ்மரின் முன் வெற்று நெஞ்சுடன் நிற்பதுபோல அவனை ஆக்கின. ஆயினும் அவன் வெறிமிகுந்து கூச்சலிட்டபடி பீஷ்மரிடம் போரிட்டான்.

பீஷ்மர் அவனுக்குப் பின்னால் வந்தவர்களை ஒவ்வொருவராக கொன்றார். கிராத குலத்து கூர்மரை பீஷ்மரின் அம்பு கொன்று வீழ்த்தியது. அலறியபடி தந்தையை காக்க வந்த மைந்தர்கள் மூவரையும் கொன்றார். இலை நுனி நீர்க்குமிழிகளைத் தொட்டு உடைத்து விளையாடும் சிறுமைந்தர் போலிருந்தார். தேரை வளைத்து பின்னகர்ந்த இறுதி மைந்தன் குத்ஸிதனின் தலையும் பிறையம்பால் வெட்டப்பட்டு உடல் சிதறடிக்கப்பட்டது. அப்பகுதியில் நின்றிருந்த கிராத வீரர்கள் அலறியபடி விலகிச் சிதற ஒவ்வொருவரையாக தேடிச்சென்று வீழ்த்தியது பீஷ்மரின் அம்பு. இலைகளின் மேல் விழும் மழைத்துளி என அவர்களை அதிரச் செய்து மெல்ல விடுபட வைத்தது. விழிகளில் இறப்பின் திகைப்பை கணம் கணமென சுஜயன் கண்டான்.

திருஷ்டத்யும்னன் வெறியுடன் கூவியபடி தேர்ப்பாகனை தலையில் வில்லால் அடித்து “செலுத்துக! முன்செலுத்துக!” என்று கூச்சலிட்டான். தேர்ப்பாகன் அவன் முன் பரல்மீன் திரளென வந்து கடந்துசென்ற அம்புகளை தலைகுனிந்து கடந்து பீஷ்மருக்கு முன் சென்று நின்றான். பீஷ்மரின் அம்பு அவன் தேர்த்தூணை உடைத்தது. பீஷ்மர் “விலகிச் செல் பாஞ்சாலனே, இது உன் போர் அல்ல. உன் தந்தை எனக்கு அணுக்கன், உன்னைக் கொல்ல நான் விழையவில்லை” என்றார். “இது போர் முதியவரே, இங்கு வில் ஒன்றே பேசவேண்டும்” என்றபடி திருஷ்டத்யும்னன் பீஷ்மரை நோக்கி அம்புகளை தொடுத்தான். கவசங்களில் பட்டு அனற்பொறிகள் தெறிக்க அம்புகள் பீஷ்மரை மின்மினிகளெனச் சூழ்ந்தன. அவருடைய தோள்கவசத்தை அவன் உடைத்தான். மறுகணமே முழந்தாளிட்டு அமர்ந்து பிறிதொரு கவசத்தை அணிந்துகொண்டு புரண்டெழுந்து அவ்விசையிலேயே அடுத்த அம்பால் அவன் தோள்கவசத்தை உடைத்தார். அவன் நிலைதடுமாறுவதற்குள் நெஞ்சக்கவசம் உடைந்தது. அம்பு அவன்

நெஞ்சில் பாய்ந்தது. திருஷ்டத்யும்னன் தேரில் மல்லாந்து விழ அவன் அணுக்கப்படையினர் கேடயங்களுடன் முன் வந்து அவனை மறைத்தனர்.

துணைவில்லவர் இடைவெளியில்லாத அம்புகளுடன் வேலியொன்றை அமைக்க அவனை பாஞ்சாலப் படை பின்னாலெடுத்துச் சென்றது. அவன் உயிர் பிரிந்திருக்கக்கூடுமென்று சுஜயன் எண்ணினான். ஆனால் பாஞ்சாலத்தரப்பிலிருந்து சங்கொலி எழவில்லை. "பிழைத்துக்கொண்டார்!" என்று அருகிருந்த உர்வன் சொன்னான். சுஜயன் பீஷ்மரை நோக்கிவந்த வேலொன்றை தன் அம்பினால் உடைத்தான். அதை எய்த கிராத நாட்டு மன்னன் காலகேயனை கழுத்தில் அம்பை அறைந்து தேர்த்தூணுடன் நிறுத்தினான். அவனுக்குப் பின் வந்த உத்ஃபுத நாட்டு சுப்ரதீபனை அம்பால் அறைந்து சரித்தான். பீஷ்மர் "முன்னேறுக! நாரையின் கழுத்தை உடைத்து அதன் முனையை நம் படைகளுக்குள் எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று கூவியபடி மேலும் முன்னகர்ந்தார். அவருடைய அணுக்கவில்லவரில் பாதிப்பங்கினர் விழுந்துவிட்டிருந்தனர். எஞ்சியவர்கள் ஒருங்கிணைந்து மேலும் சிறிய அரைவட்டமொன்றை அமைத்து அவரைத் தொடர நாண்முழங்க அம்புவிட்டபடி அவர் முன்னால் சென்றார்.

சுஜயன் பக்கவாட்டில் அலறல்களையும் விலங்குகளின் ஓசைகளையும் கேட்டான். பின்னிருந்து "பின்நகர்க! பிதாமகர் பின்நகர்க! பருந்தின் உடலுடன் தலை பொருந்திக்கொள்க! நாரை நம் கழுத்தை ஊடுருவுகிறது! அது நம்மை துண்டிக்கலாகாது... பின்னகர்க!" என்று முரசு ஒலித்தது. என்ன நிகழ்கிறதென்று தேர்த்தூணில் உடல் மறைத்து நின்று நுனிக்காலேந்தி நோக்கி சுஜயன் புரிந்துகொண்டான். பீமனின் படை பெருகி கூர்கொண்டு சரிவிறங்கும் ஆறென விசை பெற்று பருந்தின் தலையை முற்றாக அறுத்து அப்பால் சென்று அங்கிருந்த துருபதரின் படைகளுடன் இணைந்துகொள்ள முயன்றது. "சூழ்ந்துகொள்ளப்பட்டுவிட்டோம், பிதாமகரே!" என்று சுஜயன் கூவினான். பீஷ்மர் திரும்பி நோக்கியபோது பீமனின் படைகள் முழுமையாகவே மறுபுறம் சென்று அங்கிருந்த பாஞ்சாலப் படைகளுடன் இணைந்துகொண்டதை கண்டார். "நாற்புறமும் பாண்டவப் படைகளால் சூழப்பட்டுவிட்டோம்... இச்சூழ்கையை உடைத்தாகவேண்டும்" என்று சுஜயன் சொன்னான். "யானைத்தடையை உடைத்துவிட்டோம்.

சூழ்ந்துகொண்டிருக்கிறோம். இன்னும் சிறுபொழுதில் பீமனை நேர்நின்று தாக்குவோம். பிதாமகர் அவனை பின்னிருந்து தாக்கி அழிக்க வேண்டும்” என சிறுமுரசுகள் பேசின. “பின்னிருந்து தாக்குக! பின்னிருந்து தாக்குக!” என்று பெருமுரசுகள் முழங்கின.

ஆனால் பீஷ்மர் திரும்பி நோக்காமல் “முன்செல்க! முன்செல்க!” என்று ஆணையிட்டார். சுஜயன் தன்னுடன் வந்த வில்லவர்களிடம் “அறுபதின்மர் பிதாமகருக்கு பின்காப்பாகுக... எஞ்சியவர்கள் என்னுடன் எழுக!” என ஆணையிட்டான். அவனுடைய முழவறிவிப்பாளன் அதை ஒலியாக்கியதும் கௌரவப் படை இரண்டாகப் பிரிந்தது. தனக்குப் பின் இரு சிறகுகள் என எழுந்த படையுடன் அவன் பின்னால் திரும்பி பீமனை நோக்கி சென்றான். நடுவே சிதறிக்கிடந்த கௌரவர்களின் உடல்கள் திருஷ்டத்யும்னன் உருவாக்கிய அழிவு என்ன என்று காட்டின. அப்போதுதான் ஒரு திடுக்கிடலாக சுஜயன் இன்னமும் அர்ஜுனன் பீஷ்மரை எதிர்கொள்ளவில்லை என்று உணர்ந்தான். இதுவே அவர்கள் வகுத்த தருணம். அவன் திகைத்து நெஞ்சழிந்து இருபக்கமும் மாறிமாறி நோக்கினான். “பீமனை தாக்குக... பின்னிருந்து தாக்குக!” என சகுனியின் முழவு அறைகூவியது. “செல்க!” என்று அவன் ஆணையிட துணைவில்லவன் அக்ரன் “இளவரசே, பிதாமகர் தனித்துச் செல்கிறார்” என்றான். “முதலில் இந்தப் பின்சுவரை உடைப்போம். அப்பாலிருக்கும் நம் படைகள் நம்முடன் இணைந்துகொண்டால் பிதாமகரை நாம் முழுப் படையாலும் ஏந்திக்கொள்வோம். அதுவரை அவர் களம்நின்றிருப்பார். எளிதில் அவரை வெல்லமுடியாது!” என்றான் சுஜயன்.

பீமனின் படைகள் பாஞ்சாலப் படைகளுடன் இணைய அவர்களின் படை பெருத்து அகன்று பெருஞ்சுவரென்றாகியது. யானைக்கோட்டை உடைந்து பெருகிவந்த சலனின் படை முதலில் பீமனின் படைகளை எதிர்கொண்டது. சகுனியின் படைப்பிரிவுகள் உடன்வந்து சேர்ந்துகொண்டன. பருந்தின் உடலில் இருந்து ஏழு படைப்பிரிவுகள் எழுந்துவந்தன. துரியோதனன் துச்சாதனனும் துச்சகனும் துர்முகனும் சுபாகுவும் துணைவர மையத்தில் வந்தான். அவனுக்கு வலப்பக்கம் சலனும் அவன் மைந்தர்களும் இடப்பக்கம் சகுனியும் சுபலரும் அவர் மைந்தர்களும் இணைந்தனர். பூரிசிரவஸின் படையும் கௌரவப் பருந்தின் சிறகிலிருந்து வளைந்து பீமனை நோக்கி வந்தது. “பின்னிருந்து தாக்குக! இச்சூழ்கையை உடைப்போம். பின்னிருந்து தாக்குக!” என்று மீண்டும் மீண்டும் சகுனியின் முரசுகள் அழைத்தன. அது பீமனின்

படைப்பிரிவுகளை குழப்புவதற்கான அறிவிப்பும்கூட என சுஜயன் புரிந்துகொண்டான்.

ஆனால் சாத்யகியும் துருபதரும் பீமனுடன் இணைந்துகொண்டார்கள். எளிதில் பீமனின் படைகளை உடைத்து பருந்தின் கழுத்தை இணைக்கமுடியாதென்று சுஜயன் அறிந்தான். “பிதாமகரே, பின்னிருந்து தாக்கி பீமசேனரின் படைகளை உடைப்போம். அன்றேல் பாண்டவப் படைக்குள் நாம் கொண்டுசெல்லப்படுவோம்” என்று அவன் கூவினான். திரும்பி நோக்கிய பீஷ்மர் புன்னகையுடன் கைவீசி அவனை அகற்றிவிட்டு தன் வில்லை ஓங்கி தேர்த்தட்டில் அறைந்து முன்னால் செல்லும்படி விஸ்வசேனரிடம் சொன்னார். அவர் தேர் முன்னால் சென்றதை திரும்பி நோக்கிய சுஜயன் விழிநிலைத்தான். பாண்டவப் படை முகப்பில் கேடயப் படைவீரர்கள் பிளந்து வழிவிட ஒளிரும் கவசங்களுடனும் காண்டீபத்துடனும் அர்ஜுனன் தோன்றினான்.

சுஜயன் எண்ணியதுபோல் இருக்கவில்லை அத்தருணம். வஞ்சினங்கள் கூறப்படவில்லை. படைவீரர் வாழ்த்தொலி எழுப்பவில்லை. வணக்கமுறைமைகள் நிகழவில்லை. பறக்கும் அம்பென முழு விசையில் அர்ஜுனனின் தேர் பீஷ்மரை நோக்கி வந்தது. அதே விரைவில் பீஷ்மர் அர்ஜுனனை நோக்கி சென்றார். இருதரப்பின் அணுக்க வில்லவர்களும் விசைகொண்ட படகின் பின்னால் நீளலை தொடர்வதுபோல் அத்தேர்களை தொடர்ந்து சென்றனர். இருவரும் சந்தித்துக்கொண்ட தருணத்தை அவர்கள் இருவரன்றி வேறெவரும் அறியவில்லை. பீஷ்மரின் முதல் அம்பை அர்ஜுனன் தன் மறுஅம்பால் உடைத்தான். தொடர்ந்தெழுந்த பன்னிரு அம்புகளை பன்னிரு அம்புகள் அறைந்து வீழ்த்தின. அம்புகள் வெள்ளிமின்னல்கள் என வானை நிறைத்தன. இருவர் தேர்களும் ஒளிர்மழைத்துளிகளால் என கூரம்புகளால் முழுக்காட்டப்பட்டன.

துரியோதனனும் சகுனியும் சலனும் பீமனின் படைகளை சந்தித்தனர். அங்கே வெறியெழுந்த போர் மூண்டுவிட்டிருந்தது. சாத்யகியின் அணுக்கர்களை சுஜயன் வீழ்த்தினான். பீஷ்மரின் வில்துணைவர் எழுவர் சருகுகள் என உதிர்வதைக் கண்டு திரும்பி “திரும்புக... பிதாமகரை காப்போம்!” என்று தன் படைகளுக்கு ஆணையிட்டான். முழுவிசையில் பீஷ்மரை நோக்கி சென்றபடியே அர்ஜுனனின் அணுக்கவீரனை தன் அம்பினால் அறைந்து

வீழ்த்தினான். அவன் தேர் நிலைதயங்கி சரிய பின்னாலிருந்து வந்த தேர் அவ்விடத்தை நிரப்பியது. அர்ஜுனனின் நோக்கு ஒருகணம் வந்து சுஜயனை தொட்டுச்சென்றது. மெய்ப்புகொண்டு உடல் உலுக்கிக்கொள்ள பற்களை கிட்டித்து மூச்சை இழுத்து மேலும் மேலுமென அம்பு தொடுத்தபடி சுஜயன் பீஷ்மரின் அருகே சென்றான்.

அப்போர் மிகத் தொன்மையான ஒரு பலிச்சடங்குபோல் அவனுக்குத் தோன்றியது. ஒவ்வொரு அம்பும் பிறிதொரு அம்பால் நிகர் செய்யப்பட்டது. ஒவ்வொரு அசைவும் இணையான அசைவால் சுழிநிரப்பப்பட்டது. முற்றிலும் நிகர்நிலை கொண்ட இருவர் நடுவே போரென்பது எத்தனை பெரிய வீண்செயல் என்று தெரிந்தது. ஓரவிழியால் அப்போரை பார்த்தபடியே இருதரப்பிலும் அணுக்கர்கள் போரிட்டனர். பீஷ்மரின் விழிகள் அர்ஜுனனின் விழிகளை மட்டுமே நோக்கின. விழியசைவுகளிலிருந்தே அவர்களின் கைகள் ஆற்றப்போவதை உணர்ந்து தம் கைகளால் எதிர்வினையாற்றினர். இரு தேர்களும் இருவரின் பேருடல்கள் என்றாயின. தேர்கள் சீறின, தயங்கின, கூர்ந்தன, பாய்ந்தன, சினந்து பின்னடைந்து மீண்டும் விசைகொண்டன. ஒருகணம் அது தேர்களின் போரென்று தோன்றியது.

தேர்த்தட்டில் பீஷ்மரின் மறுவடிவென்றே அமர்ந்திருந்தார் விஸ்வசேனர். இளைய யாதவரின் மறுவடிவென்று தேர்த்தட்டில் நின்றிருந்தான் அர்ஜுனன். மீண்டும் மீண்டும் ஒன்றே நிகழ்வது போலிருந்தது. காலம் தோன்றியது முதல் அது நிகழ்ந்து வருவதுபோல, இனி எப்போதும் இத்தருணம் இங்ஙனமே நீளும் என்பதுபோல, நிகழ்ந்து கொண்டிருந்தது. இருவர் அம்புகளும் பிறர் உடலில் தொட்டுத் தொட்டு துழாவித் தேடின. ஒரு சிறு உளப்பிழைக்காக, அசைவுப்பிறழ்வுக்காக, அது உருவாக்கும் சின்னஞ்சிறு இடைவெளிக்காக. சுஜயன் அப்போரின் முழுமையான ஒத்திசைவு மிக விரைவிலேயே சலிப்பூட்டுவதென உணர்ந்தான். அப்போர் முடிவடைவதற்கு ஒன்றே வழி. முழுமை மானுடரில் உருவாக்கும் சலிப்பை இருவரில் ஒருவர் உணரவேண்டும். அடுக்கியவற்றை கலைக்கும் குழந்தை அவரில் எழவேண்டும். ஒரு துளி, துளியின் துளி, கணப்பிசிறு, அணுக்காலம். அவர்கள் அதை உணரும் வரை அதுவே நிகழும். அக்கணம் நிகழ்ந்தால் ஒருவரில் மற்றவர் மட்டுமே அறியும் விரிசல் ஒன்று திறக்க அம்பு அங்கே தைக்கும்.

ஓர் அம்பு ஒருவரை தைத்துவிட்டால்கூட அங்கு உருவாகி நின்றிருந்த பழுதற்ற முழுமை பின்னர் கைகூடாது. நிலைகுலைவே போர். பிறழ்வே வாழ்வு. அசைவின்மை வானின் அமைதி கொண்டது. அங்கு தேவர்கள் சூழ்ந்திருக்கக்கூடும். பாதாள தெய்வங்களும் மண்ணெங்கும் விழியெனப் பரவி நோக்கிக்கொண்டிருக்கக்கூடும். அவர்கள் பொறுமையிழப்பார்களா? முடிவிலி என்பது மானுடருக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இருவரில் ஒருவர் இடைவெளிவிட்டாக வேண்டும். இருவரில் ஒருவர் ஒருகணமேனும் தலைதாழ்த்தியாக வேண்டும். ஆனால் மேலும் மேலுமென விசைகொண்டு அவ்விசையின் நிகர்த்தன்மையால் மேலும் மேலுமென அசைவிழந்து இருவரும் அம்புகளால் ஆன சரடொன்றின் இரு முனைகளில் கட்டப்பட்டு சுழன்று வந்தனர்.

இரு தரப்பிலும் அணுக்க வீரர்கள் அம்பால் அறைபட்டு கீழே விழுந்தனர். அர்ஜுனனின் அணுக்க வீரர்களை பீஷ்மர் அம்பெய்து வீழ்த்திக்கொண்டிருந்தார். அத்தேர்கள் ஏதேனும் ஒன்று நிலையழிந்து அர்ஜுனனின் தேரை முட்டுகையில் அவ்வசைவின் சிறு வாயிலினூடாக நுழைவதற்கு அடுத்த கணமே அவர் அம்பு கிளம்பியது. ஆனால் அணுக்க வீரனொருவன் அறைபட்டு விழுந்ததுமே அர்ஜுனனின் தேர் நீர் என இயல்பாக அவன் தேரிலிருந்து ஒசிந்து விலகி தன்னை காத்துக்கொண்டது. நூற்றெட்டு அணுக்கத்தேர்களாலும் ஆயிரத்தெட்டு அணுக்கப்புரவிகளாலும் சூழ்ந்திருந்த அப்படை அவனுடைய உருவற்ற நிழல் என தோன்றியது. பீஷ்மரின் வலப்பக்கம் சென்று கொண்டிருந்த திரிதன் விழுந்தான். அந்த இடத்தில் வந்தமர்ந்த சாமனும் அக்கணமே விழுந்தான். சுஜயனின் நெஞ்சுக்கு வந்து அவன் ஒழிய தேரின் தூணை அறைந்து சிம்புகளாக தெறிக்க வைத்தது ஓர் அம்பு. அவன் பாகன் தலைக்கவசம் உடைந்து தெறித்தது. அவன் திரும்பி மாற்றுக்கவசத்தை எடுப்பதற்குள் தலை கொய்யப்பட்டது.

தேர்க்கூண்டு சரிய சுஜயன் தன் வேல் முனையால் அதை ஓங்கி அறைந்து திறந்து அப்பால் உடைத்து வீழ்த்தினான். நாற்புறமிருந்தும் சுழன்று வீசிய காற்று அவன் கவசங்களுக்குள் புகுந்து சீழ்க்கை ஒலி எழுப்பியது. கீழிருந்து புரவி வீழ்ந்த வீரனொருவன் பாய்ந்து அவன் தேரிலேறி அமரத்திலமர்ந்து கடிவாளங்களை பற்றிக்கொண்டான். “செல்க! செல்க!” என சுஜயன் கூவினான். அர்ஜுனனின் இரு அணுக்கர்களை அவன் அறைந்து

வீழ்த்தினான். அங்கிருந்து அர்ஜுனனின் விழிகளை நோக்க இயலுமா என அவன் விழிகள் தவித்தன. இரு அசைவிலா வேல்நுனிகளென அர்ஜுனனின் கண்கள் பீஷ்மரில் நிலைகொண்டிருந்தன.

விழுந்துதுடிக்கும் அக்குதிரையுடலில் ஏறி சகடம் நொடிக்கலாம். தெறிக்கும் அம்பொன்று சகடத்தின் ஆரக்கால்களில் சிக்கலாம். ஊடே புகும் அம்பால் புரவி அஞ்சி நிலையழியலாம். எத்தருணத்திலும் ஒன்று நிகழலாம். பெருந்திறல் வீரர்களாக இருந்தாலும் அவர்கள் காலமென ஒழுகும் செயல்பெருக்கில் தூசுத்துகள்களே. ஒன்று பிறிதொன்றென கோக்கப்பட்ட இம்முடிவின்மைமேல் ஆட்சி கொண்டவை தெய்வங்கள் மட்டுமே. எங்கோ ஒரு கண்ணியை ஒரு தெய்வம் அறுக்கும். ஒரு புரவியின் குளம்பு பிறிதொன்றுடன் முட்டக்கூடும். ஓர் அம்பு அதன் வால் சூடிய சிறகொன்றின் திரும்பலால் அணுவிடை திசை பெயரக்கூடும். அணுவில் ஆயிரத்திலொன்று, கணத்துளியில் கோடியிலொன்று எக்கணமும் நிகழக்கூடும்.

ஒரு கட்டத்தில் அவன் உணர்ந்தான், இருபுறமும் அணுக்கவீரர்கள் போரிடுவதை நிறுத்திவிட்டிருந்தனர். சூழ்ந்திருந்த படைகள் பெரும்பாலானவர்கள் வில்தாழ்த்தி அந்தப் போரை நோக்கிக்கொண்டிருந்தனர். என்ன நிகழுமென்று சுஜயன் எண்ணினான். முதியவர் நீள்வாழ்வினூடாக எண்ணத்தின், உளச்சோர்வின் அலைகளினூடாக கடந்து வந்தவர். நெஞ்சின் ஏதோ ஒரு சிறு துளி பொருளின்மையை சென்று தொட்டால் அவர் சலிப்புறக்கூடும். ஆனால் முதியவர்களைவிட எப்போதும் இளையவர்களே பொறுமையிழக்கிறார்கள். காலத்தை நிலைக்க வைக்க முதியவர்கள் விழைகையில் அது ஆயிரம் குளம்புகள் தாளமிட விரைந்து செல்லவேண்டுமென்று இளையோர் விழைகிறார்கள். அர்ஜுனன் சலிப்புறுவதற்கே வாய்ப்பு மிகுதி.

அந்த நிகர்நிலை மீது கற்றறிந்த அனைத்துச் சொற்களும் முட்டி பொருளிழந்து உதிர்வதை அவனுள் எங்கோ இருந்து அது பார்த்துக்கொண்டுதான் இருக்கும். ஒவ்வொரு அம்புடனும் ஒரு சொல் எழுந்தகல்கிறது. ஒரு சொல்லை எஞ்சவைக்க அர்ஜுனன் விரும்பக்கூடும். கோபுரமுகட்டுக் கலசத்தின் விதைநெல்போல ஒரு விதை அவ்வொரு சொல். இந்த அம்புகள் பறக்கும் வெளியில் அவ்வொரு சொல்லின் இன்மை நடுவில் வந்து நின்றால் போதும். இப்போர் முடியும் தருணம். எப்போது முடிவது? இனி எப்போது? மேலும் மேலுமென சென்று கொண்டிருக்கும் இந்நிகர்நிலையில்

சூழ்ந்திருக்கும் போர்க்கொந்தளிப்பு முற்றிலும் பொருளிழந்து வெறும் பித்தென்றாகும். இது முடியப்போவதில்லை. இது கனவு. வெறும் பித்து. இது முடிவிலாதொழுகும் வீண்பெருக்கு. என்ன நிகழ்ந்ததென்று அவன் உணர்வதற்குள் அர்ஜுனனின் நெஞ்சக்கவசத்தை உடைத்தது பீஷ்மரின் அம்பு. அர்ஜுனன் அசைவதற்குள் அவன் உடலில் பீஷ்மரின் அம்பு பாய்ந்தது. நிலை தடுமாறி தேர்த்தூணில் அவன் சாய இளைய யாதவர் புரவிகளை தன் உளத்தாலேயே திருப்பி தேரை தன் அணுக்கப்படைகளுக்கப்பால் கொண்டு சென்றார்.

அர்ஜுனனின் தேர் மறைந்த பின்னரே என்ன நிகழ்ந்ததென்று உணர்ந்து பீஷ்மரின் படைவீரர்கள் ஓங்கி வெற்றிக் குரலெழுப்பினர். சுஜயன் தன்னை மறந்து வில்லையும் அம்பையும் தூக்கி தலைக்குமேல் அசைத்து “வெற்றிவேல்! வீரவேல்! பிதாமகருக்கு வெற்றி! கௌரவப் படையினருக்கு வெற்றி!” என்று கூவினான். ஆனால் அவன் குரல் எழவில்லை. தனக்குள் ஏன் அந்த ஏமாற்றம் நிலைகொள்கிறது என்று அவனுக்கு தெரியவில்லை. பாண்டவப் படையின் இருபுறத்திலிருந்தும் அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் வந்து பீஷ்மரை சூழ்ந்துகொண்டனர். உரக்க நகைத்தபடி அவர் இருவரையும் எதிர்கொண்டார். சுஜயன் அபிமன்யூவை நோக்கி அம்பெடுத்தபோதுதான் தன் வலக்கை செயலற்றிருப்பதை உணர்ந்தான். திரும்பி நோக்கியபோது அவன் தோளில் அம்பு பாய்ந்திருந்தது. அதை இடக்கையால் பற்றி அசைத்தபோது மூச்சு சிடுக்கு கொள்வதை உணர்ந்தான். கவசங்களுக்குள் கொழுங்குருதியின் வெம்மை நிறைந்திருந்தது. அவன் தசைகள் உடலெங்கும் அறுபட்டவைபோல் துடித்துக்கொண்டிருந்தன. நெஞ்சுக்கவசத்தின் சிறிய இடைவெளிக்குள் புகுந்து வாலிறகு வரை புதைந்திருந்த அம்பை அதன் பின்னரே அவன் கண்டான்.

மெல்ல தேர்த்தட்டில் அமர்ந்தான். இருமுறை இருமியபோது குருதித்துண்டுகள் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் தெறித்தன. பாகன் தேரை திருப்பி பின்னால் கொண்டுசென்றான். அவனுடைய இடத்தை அணுக்கப்போர் வில்லவன் ஒருவன் எடுத்துக்கொண்டான். தேர்த்தட்டில் சரிந்து படுத்த சுஜயன் அந்த அம்பை குனிந்து நோக்கினான். அதில் அர்ஜுனனின் குரங்குமுத்திரை இருப்பதை பார்த்தபின் நீள்மூச்செறிய விழிமூடினான்.

யுயுத்ஸு அபிமன்யூவின் தேரை அமரத்தில் அமர்ந்து செலுத்திக்கொண்டிருந்தான். பீஷ்மரின் அம்புபட்டு தேர்த்தட்டில் விழுந்த அர்ஜுனனை கேடயப்படை காப்பாற்றி அழைத்துச் சென்றுவிட்டிருந்தது. “தடுத்து நிறுத்துக... பிதாமகரை தடுத்து நிறுத்துக... சூழ்க! சூழ்க!” என திருஷ்டத்யும்னனின் முரசொலி ஆணையிட்டது. அபிமன்யூ தேர்த்தட்டில் நின்று கூச்சலிட்டும் வெறிகொண்டு தேர்த்தூண்களை கால்களால் உதைத்தும் வில்லைச் சுழற்றி தேரில் அறைந்தும் கொப்பளித்துக்கொண்டிருந்தான்.

“செல்க! செல்க! அவர் முன் சென்று நிற்கவேண்டும். இத்தருணமே! இப்போதே!” என்று கூச்சலிட்டான். அவனில் கொந்தளிக்கும் உணர்வென்ன என்று யுயுத்ஸுவால் புரிந்துகொள்ள இயலவில்லை. பீஷ்மர் இரு நாட்களிலுமாக கொன்று வீழ்த்திய இளவரசர்களின் எண்ணிக்கை நூறுக்கு மேல் என்று அவன் அறிந்திருந்தான். அர்ஜுனன் ஒரு விழியிமைப்பொழுது தோற்று பின்வாங்கியதை நேரில் கண்டுமிருந்தான். “இளவரசே, ஒற்றைநிரையாக நின்று எதிர்க்கும்படி ஆணை” என்றான். “இது என் ஆணை... செல்க! செல்க!” என்றான் அபிமன்யூ.

இளமை எப்போதுமே தன்னை சற்று மிகையாகவே மதிப்பிட்டுக்கொள்கிறது, தனக்குரிய வாய்ப்புகள் அமையாதுபோகுமென்று அஞ்சுகிறது. வாழ்வு கண்முன் விரிந்து கிடக்கையில் அதை பணயம் வைத்தாடி வாழ்வுக்கு அப்பாலென எதையோ அடையத் துடிக்கிறது. “இளவரசே, இளவரசர் சுருதகீர்த்தியும் நீங்களும் இருமுனையிலும் நிகர்நின்று தாக்கவேண்டும். பின்புறம் சாத்யகி எழுவார். நாம் செய்யக்கூடுவது இணையான விசையில் முப்புறமும் தாக்கி பிதாமகரை தடுத்து நிறுத்துவது மட்டுமே. இனி அவரை வென்று செல்ல நம்மால் இயலாது. பொழுது அடங்கிக்கொண்டிருக்கிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “இன்று நான் அவரை வெல்வேன்! இன்று அவர் நெஞ்சு பிளந்து குருதியுடன்தான் பாடிவீடு மீள்வேன்! செல்க! முன் செல்க!” என்று அபிமன்யூ கூச்சலிட்டான்.

யுயுத்ஸு பொறுமையை சேர்த்துக்கொண்டு “ஒருவர் நிரையிலிருந்து முன் எழுவதைப்போல் பிழை பிறிதில்லை. பிதாமகர் வெறிகொண்டிருக்கிறார். அவருடைய அம்புகளின் எல்லைக்குள் தனித்து நெஞ்சுகொண்டு நிறுத்துவது போன்றது அது” என்றான். “அஞ்சுகிறீர்களா? அச்சமிருந்தால் தேரிலிருந்து

இறங்கிக்கொள்ளுங்கள்” என்றான் அபிமன்யூ. அவன் பேசிக்கொண்டிருக்கையிலேயே அவனிடமிருந்து ஆணைபெற்று தனித்தியங்குவதுபோல வில் அம்புகளை பெய்தது. பீஷ்மரின் ஏழு அணுக்கவில்லவர் அலறி விழுந்தனர். யுயுத்ஸு “நான் அஞ்சுவதஞ்சுபவன்” என்றான். அபிமன்யூ “செல்க! செல்க! மாற்றுச் சொல்லை பொருட்படுத்தமாட்டேன்! செல்க!” என்று கூச்சலிட்டான்.

யுயுத்ஸு பற்களைக் கடித்து நெஞ்சிலெழுந்த சொற்களை அடக்கி புரவியைச் சுண்டி தேரை பீஷ்மரின் அம்புவளையத்தின் முன் கொண்டு சென்றான். அபிமன்யூவின் அம்புகள் பீஷ்மரின் அம்புகளை இடைமுறித்து அறைந்து தெறிக்கவைத்தன. அவர் திரும்பி நோக்கி எழுந்து பறந்த தாடியை தலையை அசைத்து பின்னால் தள்ளி முதிய உடலின் நடுக்கத்துடன் நகைத்து “வருக! இன்று பிறிதொரு சிறுமைந்தனின் குருதியுடன் பாடிவீடு மீளப்போகிறேன் போலும்!” என்றார். “பார்ப்போம், பிதாமகரே. என்றும் முதியதை இளையது வெல்வதே காட்டின் நெறி” என்றான் அபிமன்யூ. பீஷ்மர் சிறுவனின் குதலைப்பேச்சை மகிழ்ந்து செவிகொள்பவர் என சிரித்து “தொன்மையானவை அறங்கள். அவையே வெல்லும்…” என்றார். “வருக!” என கைகாட்டினார். அபிமன்யூ “இன்று இவரை கொல்வேன்… இந்தச் சிரிப்பைக் கண்டபின் பாடிவீடு மீண்டால் நான் ஆணே அல்ல” என்றான்.

அபிமன்யூவின் தொலையம்புகள் பீஷ்மரின் தலைக்குமேல் எழுந்து பறந்து வளைந்து விழுந்து அவருக்குப் பின்னால் பீமனின் படைகளுக்கும் அப்பால் பொருதிக்கொண்டிருந்த சகுனியின் படைவீரர்களை கொன்றன. விழியோட்டியபோது ஒரு அம்புகூட வீணாவதில்லை என்று கண்டு யுயுத்ஸு அவன் அம்புகளை வெறுமனே பெய்யவில்லை, குறிநோக்கியே எய்கிறான் என உணர்ந்தான். எவ்வண்ணம் என திகைத்ததுமே ஒரு வீரன் வீழ்ந்தான். உடன் பிறிதொருவன். மறுகணமே இன்னொருவன். அபிமன்யூ கவசங்களோ தேர்முகடுகளோ ஒளிவிட்டுத் திரும்பும் மின்னலை மறுகணம் அறைகிறான் என்று தெரிந்தது. ஓர் அம்பு அங்கே சென்றதும் பிறிதொரு வில்லில் இருந்து என இன்னொரு அம்பு பீஷ்மரை நோக்கி சென்றது. “ஆம், இவனே இருகைவில்லவன்… தந்தையைக் கடந்தவன். உடல் விழியாக்கி கைகளை உளமாக்கி தன்னை எச்சமின்றி வில்லென்று மாற்றிக்கொள்பவன்…” என்று யுயுத்ஸு எண்ணினான். “பெருவில்லவன். தேவர்களாலும் கந்தர்வர்களாலும் விரும்பப்படுபவன்!” மறுகணம் அவன் நெஞ்சு பதைத்தது.

அக்கணம் அவன் தெளிவுறக் கண்டான். இவனை தேவர்கள் கொண்டுசெல்வார்கள். களத்தில் அபிமன்யூ விழுந்துகிடப்பதை நேர்விழியால் என அவன் கண்டான்.

யுயுத்ஸு “இளவரசே, இது காடல்ல, களம். இங்கு போரை நிகழ்த்துபவை மனிதர்களல்ல. படைக்கலங்களும் அவற்றை ஆளும் தெய்வங்களும்தான்” என்றான். “பேசவேண்டாம், முன் செல்க!” என்று அபிமன்யூ கூவினான். “அவரை சென்றறையவேண்டும் என் அம்புகள்... அவர் நெஞ்சுக்கவசத்தை பிளக்கும் விசை கூடவேண்டும் அவற்றில்.” யுயுத்ஸு தேரை மீண்டும் அணுக்கமாக கொண்டு சென்றான். ஒவ்வொரு அம்பும் சிறுத்தை என உறுமும் அண்மை. அம்பு செல்லும் காற்றில் செவிமடல் குளிரும் அண்மை. அவன் பீஷ்மரின் கண்களை அருகிலென கண்டான். அவை சிவந்திருந்தன. காமத்தில் சிவந்த பெண்விழிகள்போல. அவர் கொள்ளும் உடலுச்சங்கள் இவைதானா? அனைத்தையும் உதறி ஆயிரம் படியிறங்கி வந்து நின்று குருதியாடி களிவெறிகொள்கிறாரா? பிதாமகரே, இங்கிருந்து எப்படி மீள்வீர்கள் என அவன் உள்ளம் கூவியது. அவரை வெவ்வேறு அவைகளில் கண்ட நினைவுகள் ஓடின. அவரல்ல இவர். அந்த ஒவ்வொரு பீஷ்மரிலிருந்தும் அவர் சேர்த்து கரந்து வைத்த ஒன்று. ஒவ்வொரு முறையும் நிகழாமல் அவர் அப்பால் கடத்திய ஒன்று.

பீஷ்மரும் அபிமன்யூவும் கணமொழியா அம்புகளால் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். அம்புகளின் ஓசை பாறைகளை அலைத்து சரிந்து பரந்தொழுகும் அருவி போலவும் நடுவே பாறையொன்றில் நின்று அதை கேட்டுக்கொண்டிருப்பது போலவும் யுயுத்ஸு உணர்ந்தான். பீஷ்மரின் அம்புகளின் திசை கணித்து அதற்கேற்ப தேரை திருப்பினான். அவன் திருப்பும் திசை கணித்து அதற்கேற்ப அம்பு செலுத்தினான் அபிமன்யூ. அபிமன்யூவின் உளம் செல்லும் வழிகளை அவனால் உய்த்துணர முடியவில்லை. அவன் வெறிக்கூச்சலிட்டபடி, நகைத்தபடி போரிட்டான். வஞ்சமோ விழைவோ இல்லாதபோது போர் வெறும் விளையாட்டென்று ஆகிவிடுவதை யுயுத்ஸு கண்டான். விளையாட்டில் வெற்றி ஒரு பெருங்களிப்பு, ஆனால் தோல்வி இழப்பல்ல. விளையாடுபவர்களே மாவீரர்கள். மறுபக்கம் பீஷ்மரும் விளையாடுகிறார். அவருக்கும் அடையவோ இழக்கவோ ஏதுமில்லை. அம்புகளின் ஆடலன்றி வேறேதுமில்லை இப்போர்.

அபிமன்யூவின் அம்பு ஒன்று பீஷ்மரின் தலைக்கவசத்தை அறைய அவர் நிலைதடுமாறியபோது அவர் தோள்கவசத்தை உடைத்தது

இன்னொரு அம்பு. “ஆம், அதை எண்ணிக் கொள்க! தந்தை அல்ல இத்தனயன்” என்று அவன் கூவினான். அர்ஜுனன் தோற்றுப் பின்னகர்ந்ததே அபிமன்யூவை முன்னகர்ந்து சென்று வென்றுகாட்டவேண்டுமென்று துடிப்பு கொள்ளச் செய்கிறதென்று யுயுத்ஸு அப்போதுதான் உணர்ந்தான். அவன் கொள்ளும் அந்த விசை பீஷ்மருக்கு மட்டுமல்ல அர்ஜுனனுக்கும் எதிரானது. வில்லேந்தி நின்றிருப்பவன் களம்கண்டு முதிர்ந்த பிறிதொரு அர்ஜுனன்.

அவன் உள்ளம் வியப்பால் அலைக்கழிந்தது. ஒரு போர்க்களம் எத்தனை ஆயிரம் வாழ்வுத்தருணங்களால் ஆனது! எத்தனை கோடி உளக்கணக்குகள் முடிச்சவிழ்வது! அவன் விழிகள் அம்புக்கு திசைதேர்ந்து கைகளுக்கு ஆணையிட, கடிவாளங்கள் தறியின் நாடாக்களென ஓட, தேர் போர்க்களத்தை தானே புரிந்துகொண்டதைப்போல விலகியும் பாய்ந்தும் பின்னகர்ந்தும் பொருத, அப்பாலிருந்து அவன் அனைத்தையும் வியந்து நோக்கிக்கொண்டிருந்தான். வாழ்வின் பெருவெளி முழுக்க ஒவ்வொரு தருணத்திலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் முடிவிலாப் போரின் உச்சங்கள் மட்டுமேயான ஒரு வெளி இக்குருக்ஷேத்ரம். தந்தையர் தனயரை, மைந்தர் மூதாதையரை, உடன்பிறந்தார் மறுகுருதியினரை எதிர்கொள்ளும் களம். தன்னைத்தானே பிளந்து பூசலிடும் தளம்.

அபிமன்யூவின் விரைவும் ஒரு கணமும் சலிக்காத உளவிசையும் அவனை திகைக்கச் செய்தது. அர்ஜுனன் மெய்த்தேடலின்றி, காமமின்றி வில்லவன் மட்டுமென்றே எழுந்ததுபோல. பீஷ்மரின் முகத்திலும் அந்தத் திகைப்பையும் பின் மகிழ்ச்சியையும் அவன் கண்டான். பீஷ்மர் அவன் கவசங்களை உடைத்தார். அவன் வில்லையும் மும்முறை சிதறடித்தார். ஆடியில் பாவை மாறும் விரைவுடன் அவன் கவசம் மாற்றிக்கொண்டான். உலைஎரியில் பொறிச்சிதறல் என அவனிடமிருந்து எழுந்தன அம்புகள். முதலில் விளையாட்டென அவனை எதிர்கொண்டார் பீஷ்மர். மறுபக்கம் சுருதகீர்த்தி இணையான விரைவுடன் அவரை தாக்க இரு விழிகளும் இரு திசைக்குமென அளித்து நின்று வில்லாடினார். பின்பக்கம் சாத்யகியின் படைகளை அவருடைய அணுக்கப்போர்வீரர்களில் பாதிப்பேர் எதிர்கொண்டனர். சாத்யகி பீஷ்மரை அம்புதொடும் தொலைவுக்கு வந்தடையவில்லை. அவன் அங்கே வந்துவிட்டால் அவர் தணிந்தேயாகவேண்டும். ஆனால் அவர் அதை எண்ணியதாகத் தெரியவில்லை.

அபிமன்யூ பீஷ்மரின் கவசங்களை உடைத்தான். அது நிகழ்ந்த பின்னரே நெஞ்சு அதிர அது எவ்வாறு நிகழ்ந்ததென்று யுயுத்ஸு எண்ணினான். தந்தை உடைத்து செல்ல இயலாத பெருஞ்சுவரை தனயன் திறந்திருக்கிறான். பிறிதொரு முறை அம்பெய்து அபிமன்யூ பீஷ்மரின் தொடைக்கவசத்தை உடைத்தபோதுதான் என்ன நிகழ்கிறதென்று அவன் உளம் தெளிந்தான். முதலில் பீஷ்மர் அவனுக்கு இடம் கொடுக்கிறார் என்று அவனுக்கு தோன்றியது. ஆனால் அவ்விழிகளில் எழுந்த சினம் அவ்வாறல்ல என்று காட்டியது. முதல்முறையாக பீஷ்மர் வாய்திறந்து உறுமலோசை எழுப்பினார். மீண்டுமொரு அம்பு அவர் தோள்கவசத்தை உடைக்க அவர் இமைப்பதற்குள் தோளில் அபிமன்யூவின் அம்பு தைத்தது. பாண்டவப் படைகளில் இருந்து அபிமன்யூவுக்கு வாழ்த்தொலியும் வெற்றிக்கூச்சல்களும் எழுந்தன.

யுயுத்ஸுவால் திரும்பி அபிமன்யூவை பார்க்க இயலவில்லை. பீஷ்மர் நீளம்பு ஒன்றால் அபிமன்யூவை தாக்க அவன் தேரை திருப்பினான். தேர்க்குவடின்மேல் அது அறைந்த விசை அவன் உடலிலேயே அதிர்ந்தது. சிம்புகளாகத் தெறித்த தேர்முகடின் மேல் இன்னொரு அம்பு அறைந்து அபிமன்யூவின் தேரை கூரையற்றதாக்கியது. தன் தலைக்கு வந்த அம்பை தடுக்க யுயுத்ஸு நுகத்தின்மேலேயே மல்லாந்து படுத்தான். அண்ணாந்த விழிகளுக்கு மேல் சிறகதிர்வோசையுடன் சென்றது அம்பு. அடுத்த அம்பில் தேர்த்தூண் சிதறி சிம்புகள் அவன் முகத்தின்மேல் தெறித்தன. அம்புகளுக்கு ஒதுங்கி நிலம்படிய தவழ்ந்தெழுந்த அபிமன்யூ நாண் உறும, தலைமயிர் அசையும் விசையுடன் பேரம்பு ஒன்றைச் செலுத்தி பீஷ்மரின் தேர்த்தூணை உடைத்தான். பீஷ்மரின் அம்பு புலியென உறுமியபடி வந்து அபிமன்யூவின் புரவியை தாக்கியது. இடப்பக்கப் புரவியின் கழுத்தறுந்து தொங்க பிறபுரவிகளின் நடை சிதறி தேர் வலமிழுத்தது. யுயுத்ஸு வாளை உருவி கழுத்தறுந்து கவிழ்த்த தோல்பை என குருதி கொப்பளிக்க தொங்கி உதறிக்கொண்டிருந்த புரவியின் கடிவாளத்தை அறுத்து அதே விசையில் பிற புரவிகளின் கடிவாளங்களை இழுத்து திருப்பி இடம்திருப்பினான். அவன் எண்ணியதை உணர்ந்துகொண்ட ஆறு புரவிகளும் விழுந்த புரவியின் இடத்தை நிரப்பிக்கொண்டு தேரை நிலைவிசை கொள்ளச்செய்தன.

அபிமன்யூ தேரைப்பற்றி உணரவேயில்லை. தேவர்களின் விண்ணூர்தியில் இருப்பவன்போல அவன் அம்புகளை பெய்தான். பீஷ்மர் நடுங்கிக்கொண்டிருப்பதை அவன் கண்டான்.

முதுமைக்குரிய முறையில் தாடை விழுந்து வாய் திறந்திருந்தது. அவருடைய அம்புகள் தன் தலைக்குமேல் பறந்து செல்வதை உணர்ந்து அவன் செவிகூர்ந்தபோது பின்னால் எழுந்த ஓசையிலிருந்து அபிமன்யூ என்ன செய்கிறான் என்று புரிந்தது. நீளம்பு தொடுத்த அவ்விசையிலேயே தேர்த்தட்டில் ஒருக்களித்து விழுந்து படுத்தபடியே மேலும் அம்புகளை விடுத்தான். அது விற்போரின் முறைமை அன்று, கிராதரும் நிஷாதரும் கொள்ளும் படைசூழ்ச்சி. அதை அவன் செய்யக்கூடுமென்று பிதாமகர் எண்ணியிருக்கவில்லை என்பதே அவ்வெற்றிகளுக்கு வழிவகுத்ததென்று தெரிந்தது.

யுயுத்ஸு ஒருகணம் சலிப்புடன் தலையசைத்து பற்களை கடித்தான். அவன் கைகளில் கடிவாளம் தொய்ந்தது. அவ்விடைவெளியில் பீஷ்மரின் அம்பு வந்து அவன் நெஞ்சக்கவசத்தை பிளந்தது. யுயுத்ஸு அடுத்த அம்பு வருவதற்குள் அமரபீடத்திலிருந்து பாய்ந்து நுகத்தின்மேல் உடலொட்டி படுத்தான். கடிவாளத்தை விடாமல் தேரை செலுத்தியபடி எழுந்து அமர்ந்து கீழிருந்து கவசத்தை எடுத்து தலைவழியாக அணிந்தான். அடுத்த அம்பு கூகைபோல் ஒலியெழுப்பி வந்து அபிமன்யூவை அறைந்தது. அவன் நெஞ்சுக்கவசத்தின் துண்டுகள் யுயுத்ஸுவின் தலைமேல் விழுந்தன. கவசத்தை எடுத்தணிந்தபடி “செல்க! செல்க!” என்று அபிமன்யூ கூச்சலிட்டான். யுயுத்ஸு தன் வலப்புரவியின் கடிவாளத்தை இழுத்து தேரை திருப்ப “மேற்செல்க! மேற்செல்க!” என்று அபிமன்யூ கூவினான்.

மறுபக்கம் அணுகி வந்துவிட்ட சுருதகீர்த்தியின் அம்புகள் பீஷ்மரை தாக்கின. அவர் சுருதகீர்த்தியின் கவசங்களை உடைத்து அவன் தொடையில் அம்பை தறைத்தார். அபிமன்யூவின் மீறல்களை கருத்தில்கொண்ட பின்னர் பீஷ்மரின் உடலை அவனுடைய ஒரு அம்புகூட சென்று தொட இயலவில்லை. ஆனால் பீஷ்மரின் முன்நகர்வை அவர்களிருவரும் சேர்ந்து நிறுத்திவிட முடிந்தது. பின்னிருந்து சாத்யகியின் படை வந்து பீஷ்மரை சூழ்ந்துகொண்டது. சாத்யகியின் அம்புகள் பட்டு பீஷ்மரின் அணுக்க வில்லவர் அனைவரும் சரிந்தனர். அவரும் நான்கு தேர்வில்லவரும் மட்டும் படைநடுவே எஞ்சினர். சாத்யகியின் அம்பு வந்து பீஷ்மரின் பின் தோளை அறைய திரும்பி அவனை தாக்கி பின்னடையச் செய்தபின் பீஷ்மர் மூன்று பக்கமும் சுழன்று வில்தொடுத்தார். விஸ்வசேனர் நிலையுணர்ந்து தேரை பின்செலுத்தத் தொடங்கினார்.

அபிமன்யூ “துரத்திச் செல்க! துரத்திச் செல்க பிதாமகரை! இன்று கொல்லாமல் திரும்ப மாட்டேன்! துரத்திச் செல்க!” என்று ஆர்ப்பரித்தான். யுயுத்ஸு “பின்பக்கம் சாத்யகியின் படை பிளந்துகொண்டிருக்கிறது, இளவரசே. இன்னும் சற்றுப்பொழுதில் துரியோதனரும் சகுனியும் வென்று முன்வருவார்கள்” என்றான். செவியற்றவனாக அபிமன்யூ “செல்க… பின்செல்க!” என்று கூச்சலிட்டான். “இளவரசே, அங்கிருப்பது கௌரவர்களின் முழுப் படை. சாத்யகியும் பீமசேனரும் நெடும்பொழுது எதிர்நிற்கவியலாது. பீஷ்ம பிதாமகர் திரும்பி சாத்யகியை தாக்கத் தொடங்கினால் அவர் இருபுறமும் தாக்கப்படுவார்” என்று எரிச்சலுடன் சொன்னான். “பிதாமகர் திரும்பி தன் மையப்படை நோக்கி செல்கிறார். அவரை தொடர்வது நம்மால் இயலாது.”

ஆனால் அபிமன்யூ பித்தெழுந்த கண்களுடன் வாயில் எச்சில் நுரைக்க “செல்க! பின் தொடர்க!” என்று கூவிக்கொண்டே இருந்தான். “இளவரசே, இதோ நோக்குக! பீமசேனர் கௌரவர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டிருக்கிறார்” என்றான் யுயுத்ஸு. “மூடா, பின்னகர்கிறார் என்பதே அவர் ஆற்றல் இழந்திருக்கிறார் என்பதை காட்டுகிறது. செல்வோம்! சென்று அடிப்போம்!” என்றான் அபிமன்யூ. “இல்லை, பிதாமகர் வீண் உணர்ச்சிகளால் போரிடுபவர் அல்ல. இமைக்கணமும் பின்அடி எடுத்துவைக்காமல் நமது படையின் பெருவில்லவர்களை எதிர்கொண்டிருக்கிறார். இப்பெரும்படையை தனிமையில் எதிர்ப்பது வீணென்று உணர்ந்து பின்னடைகிறார். நம்மை கௌரவப் படைகளுக்குள் இழுக்கும் எண்ணமும் இருக்கலாம்” என்று யுயுத்ஸு கூச்சலிட்டான்.

“சொல்லாட நான் விழையவில்லை. முன்செல்க!” என்றபடி அபிமன்யூ பீஷ்மரின் பின்னால் வந்துகொண்டிருந்த அணுக்கவீரர்கள் இருவரை அம்பால் வீழ்த்தினான். அவர்களின் தேர்கள் உடைந்து களத்தில் கிடக்க பீஷ்மரின் தேர் பின்னகர்வது குறைந்தது. விஸ்வசேனர் தேரை பக்கவாட்டில் திருப்பி அரைவட்டமாக ஓட்டி கௌரவப் படைகளை நோக்கி கொண்டுசென்றார். “செல்க! பின்தொடர்க!” என்றான் அபிமன்யூ. “இளவரசே…” என்று யுயுத்ஸு சொல்லதொடங்குவதற்குள் அபிமன்யூ காலால் அவன் தலையை ஓங்கி மிதித்து “ஆணைக்கு இணங்கு, அறிவிலி… இன்றேல் இப்போதே உன் தலைகொய்வேன்!” என்றான். கையில் சவுக்கு எழ உளம்பொங்கிய யுயுத்ஸு உடனே தன்னை வென்று “ஆணை!” என்றான்.

அபிமன்யூவின் தேர் பீஷ்மரை துரத்தியது. “ஓடுகிறார்! தப்பி ஓடுகிறார்! பிடியுங்கள்! பிடியுங்கள் கிழவரை!” என்று அபிமன்யூ கூவினான். தன் சங்கை எடுத்து மும்முறை ஒலித்து “வெற்றி! பீஷ்மரை புறமுதுகிட்டு ஓடச்செய்துவிட்டேன்! வெற்றி!” என்று முழக்கினான். அவனைத் தொடர்ந்துவந்த வீரர்கள் வில்களையும் அம்புகளையும் தூக்கி “பீஷ்மரை புறமுதுகுகண்ட பாண்டவ மைந்தர் வெல்க! மின்கொடி வெல்க! வெல்க குருகுலம்!” என்று முழக்கமிட்டனர். முரசுகள் வெற்றிமுழக்கமிடத் தொடங்க பாண்டவப் படை வில்களையும் வேல்களையும் வானில் தூக்கி எறிந்து கூச்சலிட்டது. அபிமன்யூ “வென்றேன்! ஆம், நான் வென்றேன்! இனி கொன்றே தீர்வேன்! தொடர்க! தொடர்க!” என்றான்.

யுயுத்ஸு பற்களைக் கடித்து “இளவரசே, நாம் அவரை வெல்லவில்லை. பொய்ச்செய்தியை கூறுவது அரசகுடி வீரர்களுக்கு அழகல்ல” என்றான். அபிமன்யூ கூரம்பு ஒன்றை ஓங்கியபடி “நோக்குக, மூடா! அவர் யாரை அஞ்சி ஓடுகிறார் என்று பார்! அணுவிடை நகராது எந்தையை எதிர்கொண்டவர். புவியின் பெருவில்லவரை வென்று துரத்தியவர் ஏன் பின் திரும்பி ஓடுகிறார்?” என்றான். “போரில் பின்னடைவது அறிவும் தொடர்வது மடமையும் ஆகும் தருணங்களுண்டு” என்றான் யுயுத்ஸு. “வாயை மூடு... இக்கணமே உன்னை கொல்வேன்!” என அம்பை ஓங்கினான் அபிமன்யூ. “கொல்க!” என யுயுத்ஸு திரும்பி நெஞ்சுகாட்டினான். அபிமன்யூ ஆற்றாமையும் எரிச்சலும் விழிநீராக வழிய “செல்க! செல்க! செல்க!” என்று உளறலாக கூச்சலிட்டான்.

யுயுத்ஸு சலிப்புடன் தலையை அசைத்தபடி தேரை பீஷ்மரின் தேரை பின்தொடர்ந்து செலுத்தத் தொடங்கினான். உடைந்து கிடந்த தேர்ச்சகடங்களின் மீதேறி சடலங்களை உடைத்துச் சென்றது அத்தேர். அப்பால் பீமன் சகுனியாலும் சலனாலும் இருபுறமும் நெருக்கப்படுவதை கண்டான். அவன் நேர்முன்னால் கௌரவர் பதினெண்மர் தங்கள் நூற்றுக்கு மேற்பட்ட மைந்தர்களுடன் எதிர்நின்றனர். “இளவரசே, பீமசேனருக்கு பின்னால் பீஷ்மர் சென்றுவிடலாகாது. அவரை தடுப்பதொன்றே நாம் செய்யவேண்டியது” என்றான் யுயுத்ஸு. “ஆம், அவரை கொல்வோம்” என்றபடி அபிமன்யூ பீஷ்மரைத் தொடர்ந்து சென்று அம்புகளை செலுத்தினான். அவன் அம்புகள் அவரை எட்டவில்லை. “விரைக! அம்பெல்லைகளுக்குள் அவர் இப்போதே வந்துவிடவேண்டும். விரைக!” என்று அபிமன்யூ ஆணையிட்டான்.

மறுபுறம் சுருதகீர்த்தி பீஷ்மரின் வழியில் குறுக்கே புகுந்து தடுத்தான். பீஷ்மர் அவனை எதிர்கொண்டு தயங்கியபோது அபிமன்யூ மீண்டும் அவரை அம்பு எல்லைக்குள் கொண்டுவந்தான். பிறிதொரு போர் தொடங்கியது. பீமன் சலனையும் சகுனியையும் அம்புகளால் எதிர்கொண்டபடி போரிடுவதை யுயுத்ஸு கண்டான். ஒருகணமும் அஞ்சாத அவன் விசை அவர்களை அகத்துள் தயங்கச் செய்தது. அதை அவர்கள் தங்களிடமிருந்தே மறைத்தாலும் தொலைவில் அவர்களின் மொத்த அசைவில் அது தெளிவாகவே தெரிந்தது. ஒவ்வொரு கணமாக, ஒவ்வொரு அம்பாக அவர்கள் பின்னகர்ந்துகொண்டிருந்தார்கள். பின்னகரத் தொடங்கியதுமே முன்நோக்கும் உள்ளம் கூரழிய பீமனின் அம்புகளால் கௌரவ மைந்தர் விழத் தொடங்கினர். சமனும், சார்த்ரனும், குஜனும், உத்பவனும் தேர்த்தட்டிலிருந்து அலறி விழுந்தனர்.

மைந்தர் சாவதைக் கண்ட துர்முகன் வெறிகொண்டு நெஞ்சிலறைந்து “கொல்க! அவனை கொல்க!” என்று அலறினான். விருத்தனும் நிர்மதனும் காஞ்சனனும் காகேயனும் உதகனும் மூர்த்தனும் விழுந்தனர். அஞ்சிக் கூச்சலிட்டபடி கௌரவ மைந்தர் ஒருவரோடொருவர் இணைந்து திரண்டனர். பீமன் தேரிலிருந்து தாவி யானையொன்றின் கழுத்துச்சரடில் தொற்றிக்கொண்டான். அவன்மேல் அம்பு தொடுத்தவர்களை யானையின் மறுபக்கம் இருந்த பெருங்கவசம் தடுத்தது. கௌரவ மைந்தரின் தேர்களின் அருகே சென்றதும் அவன் சங்கிலி கட்டப்பட்ட கதையை வீசி அவர்களின் தலைகளை உடைத்தான். குருதி சிதற தலை உடைந்து அவர்கள் தேர்களிலிருந்து விழுந்து பின் மறைந்தனர். துச்சலனும் துர்முகனும் துர்மதனும் அலறினர். “மைந்தர்களை காத்து நில்லுங்கள்… மைந்தர்களை காத்து நில்லுங்கள்!” என்று துரியோதனன் அலறினான்.

துர்மதனையும் துச்சலனையும் பீமன் கதையால் எதிர்கொண்டான். இருவரும் சிறிதுநேரம்கூட அவனுக்கு எதிர்நிற்க இயலவில்லை. தோளில் அறை விழ துர்மதன் தேரிலிருந்து விழுந்தான். நெஞ்சுக்கவசம் நொறுங்க விழுந்த அறையால் துச்சலன் தேர்த்தட்டில் மல்லாந்தான். துர்முகன் அஞ்சி பின்னடைந்தான். கௌரவ மைந்தர் பின்னடைந்து விலக அவர்களை பீமன் யானைமேல் துரத்திச் சென்றான். தேர்கள் சகடம் சிக்கி நிற்க ஆனகனையும் குரகனையும் உதரனையும் குண்டனையும் சீர்ஷனையும் அறைந்து கொன்றான். அவர்களின் குருதியும் மூளைச்சேறும் அவன்மேல் தெறித்து கவசங்களில் கொழுப்புபடிய

வழிந்தன. தலையை உதறி குருதித்துளிகளை தெறிக்கச் செய்து அவன் நெஞ்சிலறைந்தபடி வெறிக்கூச்சலெழுப்பினான்.

பீஷ்மர் சுருதகீர்த்தியின் அணுக்கத்தேர்வீரர்கள் எழுவரை கொன்றார். அத்தேர்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி கவிழ சுருதகீர்த்தியின் தேர் முன்னகர முடியாமல் நின்றது. அபிமன்யூ “தொடர்க! தொடர்க!” என்று அலறினான். பீஷ்மரின் அம்பு அவன் தலைக்கவசத்தை சிதறடித்தது. அவன் நெஞ்சுக்கவசம் சிதற அம்பொன்று அவனை அறைந்து தேர்த்தட்டில் தள்ளியது. யுயுத்ஸு தன் தேரைத் திருப்பி பாண்டவப் படைகளுக்குள் கொண்டு சென்றான். அங்கு நின்ற பாகன் ஒருவனிடம் “விரைக! மருத்துவ நிலைக்கு செல்லட்டும் தேர்” என்றபடி பாய்ந்து புரவியொன்றில் ஏறிக்கொண்டான். பீஷ்மர் பீமனை நோக்கி பெரும்சினத்துடன் செல்வதை கண்டான். அவன் திரும்பி அவர் வருவதை பார்த்தான். என்ன நிகழ்கிறது என்பதை உணராத பித்தன் போலிருந்தான்.

கையில் சங்கிலியில் கட்டிய கதாயுதத்துடன் வேல்பட்டுச் சரிந்த யானை மேலிருந்து பாய்ந்து வேறு யானையொன்றின் மேல் ஏறிக்கொண்டான். கதாயுதம் காற்றில் இரும்புகுண்டு சீறிப்பறக்க அவனைச் சுற்றி சுழன்றது. தேர்க்குவடுகள் உடைந்தன, தேர் மகுடங்கள் அறைபட்டு தெறித்தன. சுஜாதனின் நெஞ்சை கதை அறைந்து உடைத்து மூக்கிலும் காதிலும் வாயிலும் குருதி பீறிட அவனை வீழ்த்தியது. கௌரவ மைந்தர் சதமனும் அக்ஷனும் விரூபனும் விகிர்தனும் நெஞ்சுடைந்து களம்பட்டார்கள். “மைந்தர் பின்னகர்க! மைந்தர் பின்னகர்க! மைந்தரைச் சூழ்ந்து காத்துக்கொள்க!” என முரசு அலறியது.

பீமனின் குருதிக்கோலம் கண்டு சகுனி திகைத்து வில்தாழ்த்தி தேரில் நிற்க சலன் கால் தளர்ந்து அமர்ந்தான். யானை மேலிருந்து தேர்மேல் குதித்த பீமன் நெஞ்சுடைந்து கிடந்த கௌரவ மைந்தன் கஜபாகுவினின் குருதியை இரு கைகளாலும் அள்ளி தன் முகத்திலும் நெஞ்சிலும் அறைந்தபடி வீறிட்டான். பீஷ்மர் திரும்பி அவனை நோக்கியதும் சீற்றம் கொண்டு உறுமியபடி தேரைத் திருப்பி அவனை நோக்கி செல்ல ஆணையிட்டார். பீமன் பீஷ்மரை நோக்கி வாய் வெறித்து பற்கள் தெரிய “வருக! வருக!” என்று கூவியபடி தேர்த்தட்டிலிருந்த வில்லை எடுத்து நாணேற்றினான். அக்கணம் ஊடே புகுந்த சாத்யகியின் அம்புபட்டு விஸ்வசேனர் தலையறுந்து அமரபீடத்தில் அசைந்து பக்கவாட்டில் விழுந்தார். தோலிணைப்பில் தொங்கிய அவருடைய தலை தேர்பீடத்தில் அறைந்து கீழே தொங்கியது.

பீஷ்மர் தேரிலிருந்து பாய்ந்து புரவிமேல் கால்வைத்து ஏறி பறவையெனப் பறந்து பிறிதொரு தேரின் விளிம்பில் தொற்றி வில்பூட்டி நாணிழுத்தார். பீமன் அவர்மேல் அம்புகளை சீறவைத்தபடி நேர்முன்னால் வந்தான். பீஷ்மரின் வில் சீற்றத்துடன் மேலெழுவதை யுயுத்ஸு கண்டான். ஆனால் மறுகணம் அவர் தோள் தளர்ந்து வில் தாழ்த்தினார். கையிலிருந்த அம்பு செயலற்று தழைய பீஷ்மர் தேர்த்தட்டில் அசையாது நின்றிருந்தார்.

கதிர் மேற்றிசை அமைந்து களம் ஒடுங்குவதை அறிவிக்கும் பெருமுரசுகள் ஒன்றிலிருந்து ஒன்றென தொடுத்துக்கொண்டு திசை எல்லைவரை முழங்கி விரிந்தன. படைக்கலங்கள் தாழ்த்தப்படும் அசைவு அலைகளாக சூழ்ந்து செல்வதை பார்க்கமுடிந்தது. வேல்களையும் விற்களையும் ஊன்றி உடல் தளர்ந்து தலை தாழ்த்தி நின்றனர் வீரர்கள். தெய்வம் மலையேறிய வெறியாட்டர்களைப்போல. பெரும்பாலானவர்கள் மண் நோக்கி விழுந்தனர். சிலர் முழந்தாளிட்டு அமர்ந்தனர். தேரிலோ புரவியிலோ பற்றிக்கொண்டு சாய்ந்தனர். நெடுந்தொலைவு ஓடி நீர் கண்ட புரவிகளைப்போல நீள்மூச்சுவிட்டனர். பயனிழந்த படைக்கலங்கள் ஓசையிட்டபடி உறைகளிலும் தேர்த்தட்டுகளிலும் அமைந்தன. ஒவ்வொருவரும் குருதியை உணர்ந்தனர்.

கௌரவப் படைகளில் ஆங்காங்கே வெற்றி முழக்கங்கள் எழுந்தாலும் முந்தைய நாளிருந்த ஊக்கம் முற்றாக வடிந்திருப்பதை உணரமுடிந்தது. மறுபக்கம் பாண்டவப் படைகளின் மையத்திலிருந்து எழுந்த வெற்றிக்கூச்சல் ஒவ்வொரு படையணியாக பற்றிக்கொண்டு பெருகி செவிநிறைத்து அதிர்ந்தது. தன் தேர்த்தட்டில் பீஷ்மர் காலோய்ந்தவர்போல் அமர்ந்து வில்லை தன் மடியில் வைத்துக்கொண்டார். அமரபீடத்தில் விஸ்வசேனரின் குருதி உலர்ந்து கருமைகொள்ளத் தொடங்கியது. வெண்புரவிகளின் உடலில் மென்மயிர்ப்பரப்பில் தெச்சி மொட்டுகள்போல குருதித் துளிகள் உலர்ந்து ஒட்டியிருந்தன. அப்போதும் உலராத குருதித் துளிகள் வழிந்து ஒன்றுடன் ஒன்று இணைந்து கீழ் நோக்கி சென்றன. தோற்பரப்பை ஆங்காங்கே சிலிர்த்து குருதியின் வழிவை உதற முயன்று கொண்டிருந்தன புரவிகள்.

அவருடைய தேரை நோக்கி புரவியில் வந்த பூரிசிரவஸ் இறங்கி அணுகி “பிதாமகரே…” என்றான். வில்லை தேர்த்தட்டிலேயே வைத்துவிட்டு பீஷ்மர் எழுந்தார். முதிய எலும்புகள் சொடுக்கி உரசிக்கொள்ளும் ஓசைகள் உடலெங்கும் எழுந்தன. படிகளில் கால்வைத்திறங்கி பூரிசிரவஸின் தோள்களில் கைவைத்து நின்று காலை தூக்கி அணிந்திருந்த இரும்புக் குறடின் தோல்பட்டையை சற்று தளர்த்திக்கொண்டார். பின்னர் கையுறைகளை இழுத்துக்கழற்றியபடி நடந்தார். பூரிசிரவஸ் அவருக்குப் பின்னால் வந்தபடி “படைகள் சோர்வுற்றிருக்கின்றன, பிதாமகரே” என்றான். பின்னர் அதை சொல்லியிருக்கலாகாதோ என்று உணர்ந்தவன்போல் “பீமசேனரின் இன்றைய வெறியாட்டு நம் படைகளை அச்சுறுத்தியிருக்கிறது” என்றான்.

அவர் திரும்பிநோக்காமல் நடந்தார். படைவீரர்கள் முதற்தருணத்து உளமழிவிலிருந்து தன்னுணர்வு மீண்டு ஒருவரை ஒருவர் நோக்கினர். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த முகம் ஒன்றை விழிதுழாவி கண்டுகொண்டு

அணுகி தோளிலும் கைகளிலும் தொட்டுக்கொண்டார்கள். இன்னொரு உடலைத் தொடாது தனித்து நடந்த எவரும் இருக்கவில்லை. அத்தொடுகையினூடாகவே அவர்கள் தங்கள் உடலை உணர்ந்தார்கள். தங்கள் உடலுக்கு எதையோ உணர்த்தினார்கள். ஆனால் அவர்களின் விழிகள் தனிமை கொண்டிருந்தன. நோக்கா வெறிப்புடன் உறைந்த உணர்ச்சிகளுடன் நடந்தனர்.

பூரிசிரவஸ் பீஷ்மருடன் நடந்தபடி "நம் படைசூழ்கையின் கழுத்தை அவரால் முறிக்க முடிந்ததை நம் படைகளால் இன்னமும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உண்மையில் அரசர் உளம் சோர்ந்திருக்கிறார். அவரிடமிருந்தே இவ்வுளச் சோர்வு நம் படைகளை நோக்கி பரவுகிறது" என்றான். அப்பேச்சும் எதிர்மறையானதாகத் தோன்ற "ஆனால் என் நோக்கில் இன்றைய போரும் நமக்கு வெற்றியே. படைமுகத்தில் அர்ஜுனன் வில்தாழ்த்தி பின்னடைவதை நான் என் கண்ணால் பார்த்தேன். அதுவும் நம் படைசூழ்கை துண்டுபடுத்தப்பட்டு தாங்கள் தன்னந்தனியாக எதிரிகளால் வளைக்கப்பட்டு நின்றிருந்தபோது. பாரதவர்ஷத்தின் மாபெரும் வில்லவர்கள் என்று புகழ்பெற்ற மூவர் ஒருங்கிணைந்து எதிர்த்தும் தங்கள் உடலில் ஒரு கீறலைக்கூட உருவாக்க இயலவில்லை என்பது கண்கூடெனத் தெரிந்தது. இப்போர் எவரால் முடிவு செய்யப்படுமென்பதை இன்று நான் கண்டேன்" என்றான்.

பீஷ்மர் அவன் சொற்களை கேட்டதாகவே தெரியவில்லை. தலை குனிந்து நீண்ட கால்களை கீழே கிடந்த உடல்கள் மீதும் அப்போதும் குளம்புதறி துடித்துக்கொண்டிருந்த புரவிகளைக் கடந்தும் உடைந்து சிதறிக்கிடந்த தேர்ச்சகடங்களை தாண்டியும் சென்றுகொண்டிருந்தார். அவருடன் செல்ல பூரிசிரவஸ் ஓடவேண்டியிருந்தது. மலைமகன்களுக்குரிய உயரமின்மையால் அவரருகே அவன் சிறுவன்போல் தோன்றினான். "இன்றைய போரில் இன்னொரு வெற்றி துரோணர் அடைந்தது, பிதாமகரே" என்றான். "திருஷ்டத்யும்னன் தன் தந்தை கொண்ட வஞ்சினத்தை தீர்க்கும் எண்ணத்துடன் இன்று களத்தில் துரோணரை எதிர்கொண்டார். மூன்று நாழிகைப்பொழுது அப்போர் நிகழ்ந்தது. தனக்கு எவரும் துணை வரவேண்டியதில்லை என்று ஆசிரியர் தடுத்துவிட்டார். அவரோ தன் முழு அணுக்கப் படையினருடன் அவரை சூழ்ந்துகொண்டிருந்தார். ஆசிரியர் இடத்தோளிலொரு கவச இலையை உடைத்தெறிவது ஒன்றையே அவரால் ஆற்றமுடிந்தது."

"ஆனால் அவர் ஊர்ந்த தேரை ஆசிரியர் உடைத்து தெறிக்கச்செய்தார். அவர் கவசங்களை சிதறடித்து தோளிலும் தொடையிலும் அம்புகளை செலுத்தினார். இன்று அவர் உயிர்பிழைத்து மீண்டது உண்மையில் ஆசிரியரின் உள்ளே குடிகொண்ட அவரே அறியாத கனிவால்தான். ஆம், அதை நான் உறுதியாக சொல்ல இயலும். அப்போரை நான் அருகிருந்து கண்டேன். திருஷ்டத்யும்னன் மேலும் மேலும் வெறிகொண்டார். அனைத்தையும் மறந்து முன்னால் வந்து அவருடைய அம்புவளையத்திற்குள்ளேயே நின்றார். துரோணர் ஏழு முறையேனும் அவர் நெஞ்சை பிளப்பதற்கு நீளம்பை எடுத்தார். ஆனால் செலுத்துகையில் அவரை அறியாமலேயே அவர் தேர்த்தண்டுக்கும் முகடுக்குமே குறிவைத்தார்."

"ஆம், பிதாமகரே. அவரால் தன் கையால் திருஷ்டத்யும்னனை கொல்ல இயலவில்லை. சூழ்ந்திருந்த அனைவருமே அதை உணர்ந்தோம். ஐயமில்லை, அவரும் உணர்ந்திருக்கக்கூடும். ஆனால் எட்டாவது முறை அவருள்ளிருந்து அவரே அறியாத பிறிதொரு தெய்வம் கையைப்பற்றி தான் செலுத்திவிடக்கூடும் என்று எனக்குப்பட்டது. மெய்யாகவே அது நிகழுமென்று அஞ்சினேன். அதற்குள் கேடயப்படை வந்து திருஷ்டத்யும்னனை மறைத்து இழுத்து அப்பால் கொண்டு

சென்றது” என்றான் பூரிசிரவஸ். “ஆனால் போர் முடிந்தபின் நம்மவரேகூட திருஷ்டத்யும்னனையே போற்றினர். பரத்வாஜரின் முதல் மாணவர் முன் நின்றுபொருதும் ஆற்றல் பார்த்தனுக்கும் இல்லை என்பதே நாமறிந்தது. அவர் நின்றார் அல்லவா? அது வெற்றிதான்.”

“ஆனால் அவ்வெற்றியே அவருக்கு இறப்பாகும். அவரை வெல்லமுடியுமென்று எண்ணச் செய்யும். அவரால் சிறுமையுண்டேன் என்று இன்னொரு அகம் சீறும். அவர் வருவார், மிதிபட்ட நாகம் மணம்கூர்ந்து பின்தொடரும். அவர் துரோணரை எண்ணி வாழ்ந்தவர். அவரை கொல்லும்பொருட்டே யாஜரும் உபயாஜரும் அதர்வ வேள்வியில் அவரை சமைத்தனர் என்றார்கள்…” மேலும் பேச பூரிசிரவஸ் விரும்பினான். முதலில் இயல்பாக சொன்ன ஒற்றைச்சொல்லை நஞ்சிழக்கச் செய்யும்பொருட்டே பிற அனைத்தையும் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதை அவன் உணர்ந்திருந்தான். “இன்று அவர்கள் வெற்றி கொண்டாடுவது இளைய பாண்டவர் பீமனின் பெருஞ்செயலுக்காக. அது பெருஞ்செயல் என்பதில் ஐயமில்லை. ஒருகணமும் அவர் தயங்கவில்லை, எந்நிலையிலும் பின்னடையவில்லை.”

“இன்று அவர் கொன்றுமீள்வேன் என வஞ்சினம் உரைத்தே வந்திருக்கிறார். அது மானுடர்க்களித்த வஞ்சினச்சொல் அல்ல, தெய்வங்களுக்கு அளித்தது என்கிறார்கள். பிதாமகரே, பெருவீரர் அணிநிரந்த நம் படையைச் சிதைத்து உள்ளே நுழைந்து மறுபக்கம் வர அவரால் இயன்றிருக்கிறது. ஆனால் அது படைமடம் அன்றி வேறல்ல. நான் நேரில் பார்க்கவில்லை, ஆனால் இங்கிருக்கும் அத்தனை வீரர்களும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நூறுமுறையேனும் இறப்பின் கணத்தில் இருந்தார். இறுதியில் உங்கள் ஓர் அம்பின் முன் செயலற்றவராக வந்து நெஞ்சு காட்டினார். பிதாமகரே, இன்று அவரை நீங்கள் வீழ்த்தியிருக்க முடியும். பீமசேனர் விழுந்திருந்தால் பாண்டவர்களின் ஆற்றலில் பாதி அழிந்திருக்கும். ஒருவேளை இன்றே போர் முடிந்தும் இருக்கும். தந்தையென நின்று அவர் உயிரை அவருக்கு அளித்தீர்கள்” என்றான் பூரிசிரவஸ்.

பீஷ்மர் ஒருகணம் நடை தயங்குவதுபோல தெரிய அவன் நின்றான். அவர் சென்றுகொண்டே இருக்க மங்கிக்கொண்டிருந்த மாலையொளியில் எதிரே துரியோதனனும் துச்சாதனனும் வருவதைக்கண்டு அவன் ஓரிரு அடிகள் முன்னே சென்றான். ஆனால் அப்படியே விடுவித்துக்கொள்ளலாம் என்னும் ஆறுதலையே அடைந்தான். துரியோதனன் கவசங்களை கழற்றவில்லை. அவனுடைய கவசங்களை கழற்றும்பொருட்டு அவனுக்குப் பின்னால் வந்த ஏவலர்கள் அவன் விரைந்து பீஷ்மரை அணுகுவதைக் கண்டு தயங்கி நின்றனர். அவர்களின் விழிகளில் அத்தனை தொலைவிலேயே கசப்பையும் ஆற்றாமையையும் பூரிசிரவஸால் பார்க்கமுடிந்தது.

கைகளை விரித்து “பிதாமகரே!” என்றபடி துரியோதனன் அருகணைந்தான். “இதோ சற்று முன்னர்தான் கேட்டேன், நீங்கள் பீமனுக்களித்த உயிர்க்கொடையைப்பற்றி. நன்று! நன்று! உயிர்க்கொடை அளிக்கும்போது நீங்கள் எங்களை எண்ணியிருக்கமாட்டீர்கள். அவர்கள் ஆற்றியதையும் எண்ணியிருக்கமாட்டீர்கள். விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் புகழன்றி வேறேதும் உங்கள் உள்ளத்தில் இருந்திருக்காது. தந்தையர் ஓர் அகவைக்குப் பின் தங்கள் மூதாதையரின் நல்லெண்ணத்தை அன்றி வேறெதையும் எண்ணுவதில்லை. விண்புகுதற்குரியவற்றை மட்டுமே மண்ணில் செய்ய எண்ணுகிறார்கள். நன்று!” அவன் பற்களைக் கடித்தபோது தாடை இறுக கழுத்தில் தசைகள் இழுபட்டன. “என் குடி மைந்தர் எண்பத்தேழுபேர் இன்று சிதைந்து இறந்தனர். அவர்களின் குருதி

அள்ளி முகத்தில் பூசிக்கொண்டு அவன் களியாடினான். நீங்களும் கண்டு மகிழ்ந்தீர்கள். தங்கள் நற்செயலால் இனி இதே களத்தில் என் தம்பியர் தலையுடைந்து சாகக்கூடும். நான் நெஞ்சுபிளந்து விழவும் கூடும்."

அவன் குரல் ஓங்கியது. "பிதாமகரே, இனி நீங்கள் அவர்களுக்கு அளிப்பதற்கு ஒரே கொடையே உள்ளது, தலைக்கொடை. சென்று அர்ஜுனன் முன் உங்கள் தலையை காட்டுங்கள்" என்றான். போதும் என்பதுபோல் பீஷ்மர் கைகாட்டினார். அவன் தணிந்து இடறிய குரலில் "நான் உங்களை குற்றம் சாட்டவில்லை. அதற்கு எனக்கு என்ன தகுதி? இப்படைமுகம் நின்று எனக்கு வெற்றியை ஈட்டித்தருவதாக சொல்லளித்தவர் நீங்கள். அது உங்கள் கொடை. அதைவிடப் பெரிய கொடையை அவர்களுக்கு அளிக்கிறீர்கள். முதல் நாள் போரில் உங்கள் பெருவீரம் கண்டு மகிழ்ந்திருந்தவன் நான். ஆனால் அந்த வீரமெல்லாம் அயல்குடியின் இளமைந்தரிடமே. தன் குடியை கண்டதும் உங்கள் வில் தாழ்ந்தது" என்றான்.

"களத்தில் அளியும் நெறியும்கூட கோழைத்தன்மையின் பிறிது வடிவமே. வெற்றி நோக்கி செல்லா எச்செயலும் வீண்செயலே. இளமையில் நீங்கள் கற்பித்த நூல்களிலிருந்து சொல்கிறேன்" என்றான் துரியோதனன். ஒன்றுடன் ஒன்று பொருந்தா சொற்களென அவனுக்கே தோன்ற இரு கைகளையும் விரித்து "இனி தாங்கள் எண்ணுவது என்ன என்று மட்டும் சொல்க! நாளை களம்காணவிருக்கிறீர்களா? எவ்வண்ணமெனினும் மீண்டும் மீண்டும் பாண்டவர் ஐவரையே நீங்கள் களத்தில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் அவர்களை கொல்லமாட்டீர்கள் என்றால் அவர்கள் உங்களை கொல்லமாட்டார்களென்று சொல்லுறுதி உள்ளதா? உங்களை நம்பி இதோ இத்தனை படைகள் திரண்டு நிற்கின்றன. நீங்கள் அவர்களுக்கு அளித்தது அவன் உயிரை மட்டுமல்ல, உங்களை நம்பி வந்த இப்பல்லாயிரவரின் உயிர்களையும்தான்" என்றான்.

"மெய், உங்களுக்கு அந்த உரிமை உண்டு. உங்களை நம்பி வந்தமையால் நாங்கள் உங்கள் உடைமை. நாளை எங்கள் தலைகளையும் அவர்களிடம் உருட்டிவிடுங்கள். ஒன்று செய்கிறேன், அவர்களால் அது நிகழவேண்டியதில்லை. உங்கள் அம்புகளாலேயே அதை செய்க!" என்றான் துரியோதனன். உறுமலோசையுடன் "போதும், நிறுத்து!" என்று பீஷ்மர் சொன்னார். துரியோதனன் தளர்ந்து "நான் உங்களை வருத்தமுறச் செய்யவில்லை. அதற்கு எனக்கு உரிமையில்லை என்று இப்போது உணர்கிறேன். பிதாமகரே, இன்று நீங்கள் உயிர்க்கொடை அளித்து திருப்பி அனுப்பிய அவன் நம் படைகளுக்குச் செய்தது என்ன என்று அறிவீர்களா? என் உடன்பிறந்தார் மூவர் இன்று களத்தில் விழுந்துள்ளனர். அவர்கள் உயிர் பிழைப்பார்களா என்று தெரியவில்லை. பிழைத்தெழுந்தால் அவர்கள் பெற்ற மைந்தர் மறைந்ததை எண்ணி மீண்டும் இறக்கவே துணிவர்" என்றான்.

"குலத்தானை கொல்லலாகாதென்று நீங்கள் கொண்ட நெறி அவனால் பேணப்படவில்லை. குலாந்தகனுக்கு உயிர்க்கொடை அளித்தீர்கள் என்றால் அதற்கு என்ன பொருள்? என்னையும் என் தம்பியரையும் என் குலத்தையும் முற்றழிப்பதற்கு நீங்கள் அவனுக்கு ஒப்புதல் அளிக்கிறீர்கள் என்றன்றி வேறென்ன?" பீஷ்மர் ஏதோ சொல்ல கையெடுக்க உடைந்த குரலில் துரியோதனன் "அளிகூருங்கள், பிதாமகரே. நாங்கள் உங்களை நம்பி வந்த உங்கள் பெயர்மைந்தர். முதுவேங்கை மைந்தரை கொன்று தின்னும் என்பார்கள். உங்களை அவ்வாறு கண்டு அஞ்சுகிறோம். பிதாமகரே, எங்களை காத்தருளுங்கள்" என்றான்.

பீஷ்மர் குருதிப்பசையால் சடைத்திரிகளெனத் தொங்கிய தாடியை கையால் தடவியபடி "இன்று ஒரு கணம் என் கைதாழ்ந்தது உண்மை. எவ்வண்ணம் அது

நிகழ்ந்ததென்று என் உள்ளம் இப்போதும் திகைப்பு கொண்டிருக்கிறது. நம்முள் நிகழ்வதென்ன என்பதை நாம் முன்னரே அறிய இயலாது” என்றார். எரிச்சலுடன் “தன் உள்ளத்தின்மேல் ஆணை இல்லாதவன் வீரனல்ல. இது தாங்கள் எனக்கு சொன்ன சொல்” என்றான் துரியோதனன். “மெய். ஆனால் போர்க்களமென்பது தனிக்கணங்களாக சிதறிப்போன காலத்தாலானது. ஒவ்வொரு கணத்திலும் முன்பும் பின்பும் அற்ற ஒன்று நிகழ்கிறது. முழு வாழ்க்கையையும் துலங்கச் செய்கிறது” என்றார் பீஷ்மர். “எண்ண எண்ண சித்தம் பேதலிக்கிறது. எத்தனை ஆயிரம், லட்சம், கோடி மெய்யறியும் தருணங்களின் தொகை இது! இன்று எனக்கும் ஒன்று வாய்த்தது. அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.”

“பிதாமகரே, நான் கேட்பது ஒன்றே. தங்களை நாங்கள் நம்பினோம். எங்களை கைவிடுகிறீர்களா? எங்களை எதிர்த்து படைகொண்டு வந்து நின்றிருக்கும் பாண்டவர்கள் அனைவருக்கும் இதேபோல் அளிகூரவிருக்கிறீர்களா?” என்றான் துரியோதனன். “இல்லை” என்று பீஷ்மர் சொன்னார். “அந்த ஐயம் உனக்கு தேவையில்லை. இன்று நான் என்னை கண்டடைந்தேன். ஆயிரம் கடிவாளங்களால் அங்ஙனம் கண்டடைந்த என்னை அணைகட்டி நிறுத்துகிறேன்.” அவன் தோளைத் தொட்டு “ஐயம் தேவையில்லை. நாளை பாண்டவரைக் கொன்று களத்திடுவேன். நாளை படையென்று எழுந்துவருபவர்களில் பாதிபேர்கூட திரும்பிப்போகப் போவதில்லை. இது நான் உனக்களிக்கும் சொல்லுறுதி” என்றார்.

துரியோதனன் வெற்று விழிகளுடன் நோக்கி நின்றான். அவர் துரியோதனனின் தோளில் மெல்ல அறைந்துவிட்டு நடந்து அப்பால் சென்றார். பின்னால் நின்ற பூரிசிரவஸை பார்த்து துரியோதனன் “படைகள் சோர்ந்துள்ளன. இன்று துயின்று நாளை எழுகையில் அவர்களது உள்ளம் எவ்வண்ணமிருக்கும் என்று என்னால் சொல்ல இயலவில்லை” என்றான். பூரிசிரவஸ் “நேற்றைய எழுச்சி இன்று சோர்வாகிறது. எனவே இன்றைய சோர்விலிருந்து நாளை எழுவார்கள். நாளை விடிவதற்குள் இன்று பிதாமகர் பீஷ்மரும் துரோணரும் அடைந்த களவெற்றியின் கதைகளை படைமுழுக்க பரப்புவோம். புலரியில் அவர்கள் இருவரும் கவசம் அணிந்து வில்லுடன் தேர்த்தட்டில் நிற்கையில் நமது வீரர்கள் விசைகொண்டெழுவார்கள்” என்றான்.

பீஷ்மர் தன் பாடிவீடு வரை தனியாக நடந்து சென்றார். அவர் செல்வதை முதலில் எவரும் உணரவில்லை. தற்செயலாக நிமிர்ந்து பார்த்த ஒரு வீரன் தலைக்குமேல் தேவனென அந்தியொளியில் சிவந்த அவர் முகம் செல்வதைக்கண்டு கைதூக்கி கலைவோசையிட்டுக் கொண்டிருந்த தன் தோழர்களை அடக்கினான். அந்த அமைதியே அவர்கள் அனைவருக்கும் கேட்க அவர்கள் ஒருவரை ஒருவர் அடக்கி அவர் செல்லும் வழியை ஓசையடங்கச் செய்தனர். பாடிவீடு திரும்பும் படைவீரர்களின் கூச்சல்களால் முழங்கிக்கொண்டிருந்த அந்த மானுடப்பரப்பில் அவர் சென்ற வழி மட்டும் குளிர்ந்து இறுகியதென அமைதிகொண்டபடியே நீண்டது.

தன் பாடிவீட்டுக்கு வந்து எழுந்தோடி எதிர்கொண்ட ஏவலனிடம் கையசைவாலேயே நீர் எடுத்து வைக்கும்படி அவர் ஆணையிட்டார். அவன் மரக்குடுவையில் நீரை கொண்டுவைத்ததும் அதன் அருகே சென்று நின்றார். அவன் நிலத்தமர்ந்து அவரது கால் குறடுகளை தோல்பட்டையை அவிழ்த்து அப்பால் வைத்தான். வெறுந்தரையில் கால் பட்டதும் அவர் நிறைவுணர்வை அடைந்தார். அதுவரை கால் கீழில் இருந்த தேரசைவு அகன்றது. கைகளின் உறைகளை ஏவலன் கழற்றினான். கைகள் வீங்கியமையால் அவை இறுகியிருந்தன. கைமூட்டுகள்

சிறுபந்துகளென்றாகியிருந்தன. அவன் இட்ட முக்காலிமேல் அமர்ந்து தன் கவசங்களை அவன் கழற்றுகையில் கண்மூடி சூழ்ந்தொலித்த படை முழக்கத்தை கேட்டுக்கொண்டிருந்தார்.

ஏவலன் கவசங்கள் அனைத்தையும் கழற்றிவிட்டதை அறிவிக்கும்பொருட்டு “வணங்குகிறேன், பிதாமகரே” என்றதும் விழிதிறந்து ஒருகணம் எங்கிருக்கிறோம் என்பதை உணராமல் “ஆம், ஆம்” என்றார். தலை சற்று நடுங்கிக்கொண்டிருந்தது. தாடியை சற்று நீவியபடி “என்ன நிகழ்கிறது?” என்றார். அவரது உள்ளம் அங்கில்லை என்பதை உணர்ந்த ஏவலன் “நீர் எடுத்து வைத்திருக்கிறேன்” என்றான். “ஆம்” என்றபடி அவர் எழுந்தார். “விஸ்வசேனனிடம் எனக்கான புதிய மரவுரியை எடுத்து வைக்கச் சொல்” என்றபடி நீர்க்கொப்பரையை நோக்கி சென்றார். ஏவலன் மறுமொழி சொல்லாமையை உணர்ந்து திரும்பி நோக்கிய கணம் அவருக்கு நிகழ்ந்தவை புரிந்து இரு கைகளும் தொடை நோக்கி விழ, தாடை தொய்ந்து வாய் திறக்க அசைவிழந்து நின்றார். ஏவலன் தலைகுனிந்தான். “ஆம்” என்று சொன்னபடி அவர் திரும்பி குடுவையிலிருந்த நீரை நோக்கி சென்றார்.

நீர் குளிர்ந்திருந்தது. அந்தியின் இருள் அதில் அலைகொண்டது. நீரை அள்ளி தன் கைகளை கழுவிக்கொண்டார். சுண்ணம் கலந்த மணல்பொடி ஒரு சிறு மரக்கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதை அள்ளி கைகளில் உரசி முழங்கால் வரைக்கும் தேய்த்து நீர்விட்டு கழுவினார். கருமை கொண்டிருந்த குருதி கரைந்து மீண்டும் செந்நிறமாக சொட்டத் தொடங்கியது. உடம்பிலும் தலையிலும் சுண்ணப்பொடி போட்டு கழுவினார். கழுவும்தோறும் குருதி வழிந்தபடியே இருந்தது. பலமுறை கழுவியதும் விரல்களைக் குவித்து ஒரு சொட்டுவிட்டு நோக்கியபோது சற்றே தெளிந்த செங்குருதியாகவே அது முகிழ்த்தது. நீள்மூச்சுடன் அவர் நிமிர்ந்து தரையிலிருந்து மண்ணை காலால் திரட்டி உள்ளங்காலிலும் விரல்களிலும் பூசிக்கொண்டு கால்களை ஒன்றுடன் ஒன்று உரசி நீர்விட்டு கழுவினார்.

தன் அருகே ஏவலன் வந்து நிற்பதைக் கண்டு “இன்னும் சற்று நீர்” என்றபடி நிமிர்ந்து பார்த்தார். ஒருகணம் திகைத்த பின்னரே அவனை அடையாளம் கண்டுகொண்டார். அவரைப் போன்ற தோற்றத்துடன் நின்றிருந்த தரன் “இன்று நான் விடைபெற்றேன், இளையோனே” என்றான். “ஆம், உணர்ந்தேன்” என்று பீஷ்மர் சொன்னார். “இனி இக்களத்தில் எனக்கு பணியில்லை. விண்ணேகுகிறேன். எழுவரில் அறுவர் உன்னுடன் இருப்பார்கள்” என்றான். பீஷ்மர் விழிகளை தாழ்த்தி தலையசைத்தார். “அனைத்தையும் பொறுத்துக்கொள்பவன் என்பதனால் எனக்கு இப்பெயர். என் அன்னை புவிமங்கை. எழுவதனைத்தும் திரும்பிச்செல்லும் மடி அவள். சொல் பொறுப்பவள். செயல்கள் அனைத்தையும் ஏற்பவள்” என்றான் தரன்.

பீஷ்மர் விழியிமைகள் சரிய கேட்டுக்கொண்டிருந்தார். “நான் மானுடரின் எண்ணங்கள் ஒவ்வொன்றையும் புரிந்துகொள்ளவும் அவர்களின் துயர்களை ஆற்றவும் எப்போதும் உடனிருப்பவன். எங்கெல்லாம் உளம்விரிந்து மானுடர் துயரையும் சிறுமையையும் வலியையும் பொறுத்துக்கொள்கிறார்களோ அங்கெல்லாம் நான் உடனிருப்பேன்” என்றான். பீஷ்மர் “இன்று நான் பொறுத்துக்கொண்டதற்கு சினந்து நீங்கள் கிளம்புகிறீர்கள், மூத்தவரே” என்றார். “இல்லை” என்று தரன் புன்னகைத்தான். “பொறுத்துக்கொண்ட மறுகணமே அதன்பொருட்டு நீ நாணினாய். உன் ஆணவம் சினந்தெழுந்து மறுமுறை பொறுப்பதில்லை என்று முடிவு செய்தது. உன்னைவிட்டு அகலவேண்டுமென்ற முடிவை நான் எடுத்தது அப்போதுதான்” என்றான்.

பீஷ்மர் பெருமூச்சுடன் “என் கடமை அது” என்றார். “என்னை இருக்கச்செய்ய உன்னால் இயலும். அதை சொல்லிச் செல்லவே நான் வந்தேன்” என்றான் தரன். “இச்சிறு மரக்கொப்பாரையிலிருப்பதும் நம் அன்னையே. அவளைத் தொட்டு நீ ஆணையிடவேண்டும், அனைத்துத் தருணங்களிலும் நான் உன்னுடன் இருக்க வேண்டுமென்று.” பீஷ்மர் “இல்லை, இனி ஒருமுறை படையில் எதிர்வரும் எவரிடமும் அளிகொள்ள நான் எண்ணவில்லை” என்றார். “எனில் இது நம் பிரிவுத் தருணம்” என்றான் தரன். பீஷ்மர் நிமிர்ந்து ஆடிப்பாவை போலிருந்த அவன் விழிகளை நோக்கி “ஆம், அவ்வாறே ஆகுக!” என்றார். அவர் கைவணங்க வாழ்த்தளிக்காமல் தலைதாழ்த்தி மூன்று அடிவைத்து பின்னால் நகர்ந்து காற்றுத்திரைக்கு அப்பால் தரன் மறைந்தான்.

பீஷ்மர் திரும்பி ஏவலன் கொப்பரையில் நீர் கொண்டுவருவதை பார்த்தார். அவன் அதை ஊற்றிவிட்டு “தங்களுக்கான உணவும் மாற்றாடையும் பாடிவீட்டிற்குள் உள்ளன, பிதாமகரே” என்றான். “நன்று” என்றபடி பீஷ்மர் மீண்டும் குருதியை கழுவத் தொடங்கினார். உடலில் இருந்து குருதி ஊறிவந்தபடியே இருந்தது. நகக்கண்களில் உறைந்திருந்தது. மீண்டும் கைதூக்கி துளிகளை நோக்கினார். புதுக்குருதிபோல துளித்து வந்தது.

**3. நிலைத்தோன்**

பாண்டவப் படைகளின் பின்புறம் மேற்கு எல்லையில் அசங்கன் தன் இளையோரான சாந்தனும் உத்ஃபுதனும் துணைக்க படைக்காவல் பணியில் இருந்தான். முதல் நாள் படைகள் குருக்ஷேத்ரத்திற்குள் நுழைந்தபோதே திருஷ்டத்யும்னன் அவனை அழைத்து எல்லைக்காவல் பணியில் அமர்த்தினான். மூச்சுவிடும் பசுவின் அடிவயிறென அலையடித்துக்கொண்டிருந்த கூடாரத்திற்குள் வெங்காற்று நிறைந்திருந்தது. திருஷ்டத்யும்னனின் ஆணைக்காக நான்கு தூதர் காத்திருந்தனர். அவன் தலைவணங்கிய அசங்கனை நிமிர்ந்து நோக்கி “மேற்கு எல்லைக்காவலுக்கு முதிர்ந்த காவலர்தலைவர் சுவீரர் முன்னரே பொறுப்பிலிருந்தார். நான் ஓலை தருகிறேன். சுவீரரின் கீழ் பணியில் இணைந்துகொள்க!” என்றான்.

படைப்பணியை எதிர்பார்த்து வந்திருந்த அசங்கன் ஏமாற்றத்துடன் “ஆனால்... எனக்கு படைக்காவல் பயிற்சி...” என்று தாழ்ந்த குரலில் சொன்னான். “ஆம், படைக்காவலில் நீயாக எதையும் செய்யவேண்டியதில்லை. சுவீரர் படைக்காவலில் இருபது ஆண்டு பட்டறிவு கொண்டவர். அவர் ஆணையை ஏற்று நீ உன் கடமையை செய்யலாம்” என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். அசங்கனின் விழி சற்றே மாறுபட்டதைக் கண்டு “ஆனால் நீ அரசகுடியினன் என்பதனால் ஆணைகளை வேண்டுகோளாக முன்வைக்கவும், முறைமைகளை ஒன்று தவறாமல் இயற்றவும் சுவீரர் உளம் கொள்வார். பட்டறிவு இங்கே ஒருவருக்கு முதன்மையாக கற்பிப்பது அதுதான்” என்றான் திருஷ்டத்யும்னன்.

தன் அகத்தை அவன் அறிந்துகொண்டதனால் அசங்கன் சீற்றமடைந்து “அப்படியென்றால் நான் ஏன் அங்கிருக்கவேண்டும்?” என்று கேட்டான். “எல்லைக்காவல் நிகழ்வுகளைக் குறித்து முறைமையான ஓலைகளனைத்தும் நான் அவரிடமிருந்தே பெறுவேன். அதற்கு மேல் என்னுடைய தனிவிழி ஒன்றும் அங்கிருக்கவேண்டும். முன்முடிவுகளில்லாத, தன்முனைப்பற்ற விழி. அத்துடன் நெடுங்காலப் பட்டறிவினால் பணியில் சலிப்புற்றுப் போகாத ஒரு விழி.

அதற்காகவே உன்னை அனுப்புகிறேன். உன்னுடைய தனிமொழியும் அரசகுடியினர் மட்டுமே அறிந்தது. ஒவ்வொரு நாளும் மூன்று ஓலைகள் எனக்கு உன்னிடமிருந்து வரவேண்டும்” என்று திருஷ்டத்யும்னன் சொன்னான்.

தனக்கு தனிப்பணி உள்ளது என்றதை அறிந்து ஆறுதல்கொண்டு அசங்கன் தலையசைத்தான். திருஷ்டத்யும்னன் எழுந்து வந்து அவன் தோளில் தட்டி “காவல் பணி என்பது ஒருகணமும் ஆர்வமிழக்காமல் இருப்பது. ஆகவே இளையோர் காவற்பணிக்கு உகந்தவர்கள். அவர்களால் எந்தச் சிறுநிகழ்வையும் கண்டறிந்துவிட முடியும். ஆனால் நெடுங்காலக் காவல்பணி அறிதல்கொண்டவர்களால் மட்டுமே அந்நிகழ்வை புரிந்துகொள்ள இயலும். ஆகவே எப்போதும் இளையோரும் முதியோரும் கலந்தே காவலுக்கு அனுப்பப்படவேண்டும்” என்றான்.

அசங்கன் தலையசைத்து “இச்சொற்களுக்கு அப்பாலுள்ளதென்ன என்று நான் அறிவேன். காவல் பணி என்றால் என்னை போர்முகப்பிலிருந்து விலக்குகிறீர்கள். அரசகுடியினனாகிய நான் இங்கு வந்தது படைமுகம் நின்று பொருதி புகழ் கொள்ளவே. அன்றி புறஎல்லையில் காவல் நின்றிருப்பதற்காக அல்ல” என்றான். திருஷ்டத்யும்னன் புன்னகைத்து “உன் துடிப்பு புரிகிறது. உனக்கான வாய்ப்பு வரும்வரை காத்திருப்பதும் போர்க்கலையில் ஒன்றுதான். தேர் செய்யும் தச்சன் உகந்த கருவியை தொட்டெடுப்பது போலத்தான் படைத்தலைவன் வீரர்களின் தனித்திறனை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பார்கள். சிறுகருவியாக இருந்தாலும் அது மட்டுமே ஆற்றக்கூடிய பணி உண்டு. உனது தருணம் வரும்” என்றான்.

“அதை எதிர்பார்க்கிறேன்” என்று சொல்லி அசங்கன் தலைவணங்கினான். “செல்க!” என்றான் திருஷ்டத்யும்னன். அசங்கன் விழிவிலக்கிக்கொண்டு “உங்கள் மகளை எண்ணி இம்முடிவு எடுக்கப்படவில்லை என எண்ணுகிறேன்” என்றான். திருஷ்டத்யும்னனின் விழிகளில் சினம் வந்து உடனே நகைப்பாக மாறியது. “நான் என் மைந்தரையும் எண்ணியதில்லை” என்றான். அசங்கன் தலைவணங்கினான். “செல்க, அனைத்து திறன்களும் அமையட்டும்!” என்றான் திருஷ்டத்யும்னன். அசங்கன் நடந்தபோது மெல்ல தொண்டையை கனைத்து “ஆனால் அதன்பொருள் என் மகளை நீ கருத்தில்கொள்ளவேண்டியதில்லை என்றல்ல” என்றான். ஒருமுறை நோக்கிவிட்டு அசங்கன் வெளியே சென்றான்.

காவல்பணிக்கு சுவீரரிடம் அவன் சென்று சேர்ந்தபோது முதலில் எழுந்த சலிப்பும் ஏமாற்றமும் விலகிவிட்டிருந்தன. அவன் எண்ணியதற்கு நேர்மாறாக இருந்தது படைகளின் பின்புலம். செயலும் அசைவும் படைகளின் முன்புறத்தில் மட்டுமே இருக்குமென்றும் பின்புறம் ஓய்ந்து கிடக்குமென்றும் அவன் எண்ணியிருந்தான். அவ்வெண்ணெம் ஏன் வந்தது என்பதை பின்னர் பலமுறை எண்ணி வியந்தும் கொண்டான். அவன் நாட்டில் அரண்மனையிலும் கல்விநிலையிலும் அரசகுடியைச் சேர்ந்த ஆண்கள் மாளிகைகளின் பின்புறங்களுக்குச் செல்வது உகந்ததாக கருதப்படவில்லை. அவன் வாழ்ந்த அரண்மனையின் பின்புறத்திற்கு விழிதெளியா இளமைக்குப் பின்னர் அவன் சென்றதே இல்லை. அறிந்ததும் கற்பனையில் விரித்ததும் எப்போதும் மாளிகை முற்றங்களும் கூடங்களும் இடைநாழிகளுமாகவே இருந்தன. அவ்வண்ணமே படைகளைப்பற்றி எண்ணும்போதும் படைமுகப்பைக் குறித்த உள ஓவியமே விரிந்தது.

படைமுகப்பில் பிறர் அனைவரும் நோக்க ஒளிரும் தேரில் நாண்முழங்கும் வில்லுடன் செல்லும் அவனையே அவன் கற்பனை செய்துகொண்டிருந்தான். பிறர்

மெய்ப்புகொள்ளும் பெருவீரச் செயல்களை புரிந்தான். பாண்டவ அரசர்களாலும் திருஷ்டத்யும்னனாலும் தந்தையாலும் தோள்தழுவி பாராட்டப்பட்டான். முடிசூடி அமர்ந்து பாஞ்சாலத்தை ஆண்டான். படைகொண்டு சென்று பரிவேள்வி புரிந்தான். அத்திசை சலிக்கையில் எண்ணம் புரள நிகர்ப்போரில் ஒருகணமும் சளைக்காது பகல் முழுக்க எதிர்த்து நின்று பீஷ்மரின் கையால் உயிர்துறந்தான். அவன் பொருட்டு பாண்டவப் படையினர் அனைவரும் வாள் தாழ்த்தி புகழ் மொழி கூறினர். அவனுடைய பெருவீரத்தை வியந்து கௌரவப் படைகளிலிருந்தும் வாழ்த்தொலி எழுந்தது.

வெற்றியைவிட தித்தித்தது அவ்வீழ்ச்சி. அவனை செம்பட்டில் மூடி சிதையேற்ற கொண்டுசென்றனர். துயரில் இறுகிய முகத்துடன் தந்தை அவனை சிதையேற்றினார். விழிநீர் வழிய உடன்பிறந்தோர் சூழ நின்றனர். அவன் விண்ணேற்று நிகழ்வுக்கு யுதிஷ்டிரரும் இளையோரும் வந்திருந்தனர். அவன் உடல்மேல் எரி எழுந்தபோது பல்லாயிரம் குரல்களாகத் திரண்டு பாண்டவப் படை “யாதவ இளையோன் வாழ்க! அசங்கன் வாழ்க! விண் நிறைக மாவீரன்! மூதாதையென அமைக! வெல்க சத்யகரின் பெருங்குடி!” என்று வாழ்த்தொலி எழுப்பியது.

படைநகர்வின் தருணங்களில் தனிமையில் மல்லாந்து படுத்து இருண்ட வானின் விண்மீன்களை பார்த்துக்கொண்டிருக்கையில் அவன் அவ்வெண்ணங்களால் உள நெகிழ்வடைந்து விழிநீர் உகுத்தான். மூக்கு உறிஞ்சும் ஒலியை இளையோர் கேட்டுவிடலாகாது என்பதற்காக ஓசையின்றி மேலாடையால் துடைத்துக்கொண்டான். விண்ணிலிருக்கும் அத்தனை விண்மீன்களும் மண்ணிலிருந்து புகழுடன் எழுந்த மாவீரரும் சான்றோரும் என்பார்கள். பல்லாயிரவரில் ஒருவருக்கே விண்மீனென ஒளிகொண்டு மண்ணை நோக்கி முடிவின்மையில் நிலைக்கும் பெருவாய்ப்பு அமைகிறது. விண்மீன்கள் நோக்க நோக்க பெருகிவந்தன. பல்லாயிரம் பல்லாயிரம் கோடி. அவற்றின் ஆயிரம் மடங்கு வீரர்கள் இம்மண்ணில் விழுந்திருக்கிறார்கள்!

அவர்களை எவ்வகையில் நினைவுகொள்ள இயலும்? பிறர் நினைவில் நின்றிருக்க வேண்டுமென்று ஒன்றை செய்வதைப்போல் பொருளற்ற பிறிதொன்று இருக்க இயலுமா? ஆனால் மண்ணில்தான் காலம் அலையடிக்கிறது. ஒன்றுமேல் ஒன்றென நாள்களை அடுக்கி சென்றவற்றை இன்மையென ஆக்குகிறது. விண்ணில் நாளென எழுவதே இல்லை. அங்குளது பிளவுறாக் காலம். ஆகவே மறதி அங்கில்லை. முடிவிலா விண்மீன்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கணமும் இருந்துகொண்டுமிருக்கின்றன. அங்கே ஒவ்வொரு விண்மீனும் பிற அனைத்தையும் அறியும்.

அவன் காவல்பணிக்குக் கிளம்பியபோது இளையோர் அனைவரும் உடன் கிளம்பினார்கள். சினி “நானும் வருவேன்! நானும் வருவேன்!” என்று அவன் கையை பிடித்தபடி துள்ளினான். “காவல்பணி கடுமையானது, இளையோனே. இங்கு இருப்பதைப்போல் மும்மடங்கு பணி அங்குண்டு. உன்னால் இயலாது” என்று அசங்கன் அவன் தலையை தட்டினான். “இங்கே என்னை படைக்கலங்களை கணக்கெழுதும் பணிக்கு அமர்த்தியிருக்கிறார்கள். நான் வாளுடன் களத்திற்கு வந்தவன். ஓலையையும் எழுத்தாணியையும் அளித்து என்னை சூதர்களுடன் செல்லச் சொல்கிறார்கள். என்றேனும் ஒரு நாள் இவர்கள் அனைவரையும் எழுத்தாணியால் குத்திவிட்டுச் சென்று படையில் நிற்பேன்” என்றான் சினி. “இன்னும் சில நாட்கள் மட்டும்தான். போர் தொடங்கிவிடும். அதுவரை மட்டுமே படைக்கலங்கள் கணக்கிலெடுக்கப்படும். பொறு” என்று அசங்கன் சொன்னான்.

சினி “அதுவரை நானும் காவல்பணிக்கு வருகிறேனே” என்றான். “ஆணையிட்டதை செய்யவேண்டுமென்பது படைக்கலம் ஏந்தியவனுக்கு தெரிந்திருக்கவேண்டும்” என்று அசங்கன் சொன்னான். சினி தலைதாழ்த்தி நிற்க அவன் தோளில் தட்டி புன்னகைத்துவிட்டு அசங்கன் கிளம்பினான். உடன்பிறந்தார் கூடி அவனை வழியனுப்பி வைத்தனர். அந்நிகழ்வு ஒரு செருமுனைக்குச் செல்லும் தன்மை கொண்டிருந்ததனால் அவன் உளநிறைவடைந்தான். அங்கே படைகளின் பின்புலத்துப் போர் நிகழக்கூடும். பின்னிருந்து தாக்க துரியோதனன் கரவுப்படைகளை காட்டுக்குள் நிறுத்தி வைத்திருக்கிறார். போர் தொடங்குகையில் அவர்கள் திரண்டு வந்து எதிர்பாராது தாக்க முகப்பைவிட பெரும்போர் பின்புலத்தில் நிகழக்கூடும். அவனைப்போன்ற போர்க்குடியினன் ஒருவனை அங்கு திருஷ்டத்யும்னன் அனுப்புகிறார் என்றால் அதுதான் பொருள்.

மெய்யாகவே அங்கு ஒரு பின் போரை அவர் எதிர்பார்க்கிறார். அதற்கு எதிரான செறுப்பை அவன் நிகழ்த்தவேண்டுமென்று மறைமுகமாக ஆணையிடுகிறார். முகப்பில் போர்களுக்கு நெறிகளுண்டு பின்புலப் போர் தன்னளவிலேயே நெறியற்றது. எனவே அங்கு நிகழவிருப்பது இரக்கமற்ற கொலையாட்டம். வாளை உருவி “வெற்றிவேல்! வீரவேல்!” என்று கூவியபடி அவன் எதிர்கொள்ளவிருப்பது கொன்றாலன்றி வெல்ல முடியாத எதிரிகளை. குருதியாடி புறமுதுகுகண்டு வாள் தூக்கி காற்றிலசைத்து “வெற்றி! வெற்றி! என் குடிக்கு வெற்றி! யாதவகுலத்துக்கு வெற்றி!” என்று அவன் போர்க்குரல் எழுப்புகையில் திருஷ்டத்யும்னனும் தந்தையும் தங்கள் காவல்படைகளுடன் இருபுறத்திலிருந்தும் திரண்ட படையுடன் வருகிறார்கள்.

அதற்குள் அங்கே அவன் போரை முடித்துவிட்டிருந்தான். தந்தை அவனை ஒருகணம் பார்த்துவிட்டு விழி திருப்பி அமைதியாக இருக்க திருஷ்டத்யும்னன் புரவியிலிருந்து பாய்ந்திறங்கி ஓடிவந்து அள்ளி நெஞ்சோடணைத்து “உன் குலத்தின் நற்பெயரை காத்தாய், இளையோனே. உன் தந்தைக்கு உரிய கைமாறு செய்தாய். உன்னால் பாஞ்சாலமும் பெருமை கொள்க!” என்றான். அவன் தன் தந்தையை பார்த்தான். அவர் ஒரு விழிமின்னலென அவனை பார்த்துவிட்டு வேறெங்கோ திரும்பி “இளையோருக்கு புண்கள் எதுவும் இல்லையல்லவா?” என்றார். “ஆம் தந்தையே, குறிப்பிடும்படியான புண் எதுவும் இல்லை” என்று அவன் சொன்னான். அவர் “நன்று” என்பதுபோல் தலையசைத்தார்.

எண்ணியது போலவே சுவீரர் சலிப்புற்றிருந்தார். “இதற்கு முன் தாங்கள் படைக்காவல் பணியிலிருந்ததுண்டா, இளவரசே?” என்றார். அவர் முறையான வணக்கத்தை கூறவில்லை என்பதை அசங்கன் உளத்தில் குறித்துக்கொண்டு “இல்லை. ஆனால் பன்னிரண்டு ஆண்டுகாலம் படைக்கலப் பயிற்சி பெற்றிருக்கிறேன்” என்றான். “படைக்கலப் பயிற்சி என்பது வேறு. காவல்பணி என்பது எதிரிகளின்றி போர்புரிவது. நம்முள்ளே உருவாகும் சலிப்புக்கும் அக்கறையின்மைக்கும் எதிராக ஒவ்வொரு கணமும் நாம் விழிப்புணர்வு கொள்வது. பொறுமையே இங்கு திறன் என்று கருதப்படும்” என்றார் சுவீரர்.

எரிச்சலுடன் “நான் அதையும் பயின்றிருக்கிறேன்” என்றான் அசங்கன். “அது கல்வி. களப்பயிற்சி மட்டுமே போரில் கருத்தில் கொள்ளப்படும். கல்வி என்பது களப்பயிற்சியை அடைவதற்கு உரிய தொடக்கத்தை அளிப்பது மட்டுமே” என்ற சுவீரர் “நன்று, தங்களுக்கான பணிகளை நான் வகுத்தளிக்கிறேன்” என்றார். அசங்கன் “ஆம்” என்றான். “மேற்குக் காவல்மாடங்கள் ஒன்றில் இரவுக்காவலுக்கு அமர்க!” என்றார். “அங்கே இருக்கும் காவல்படைகளுக்கு தலைமையாகவா?” என்றான் அசங்கன். சுவீரர் ஒருகணம் கழித்து “ஆம், அவர்களுக்குத் தலைமையாக.

மேடையில் ஒரு தருணத்தில் இருவர் இருப்பார்கள்” என்றார். அவருடைய புன்னகையின் பொருள் புரியாது அவன் தலையசைத்தான்.

அசங்கன் முதல்முறை காவல்பணிக்குச் சென்றபோது படைப்பின்புலத்தில் படைமுகப்பைவிட பேரோசை நிறைந்திருப்பதை கண்டான். பத்துக்கும் மேற்பட்ட கைவழிகளாக காட்டிலிருந்து நிஷாதர்களும் கிராதர்களும் படைகளை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் புல்கட்டுகளையும் தழைச்சுமைகளையும் விறகுக்குவைகளையும் கொண்டுவந்தனர். சிலர் கள் கொப்பரைகளையும் மூங்கிலில் கோக்கப்பட்ட ஊன் விலங்கின் உடல்களையும் சுமந்தனர். அரக்கும் அகிலும் மூங்கில் கூடைகளில் வந்தன. படைக்கு இத்தனை பொருட்கள் தேவையாக இருப்பதை அவன் அதற்கு முன் எண்ணி நோக்கியதே இல்லை. திரும்பி உடன்வந்த காதரரிடம் “இத்தனை அரக்கு எதற்கு?” என்று கேட்டான். காதரர் “புண்படுபவர் உடலில் அரக்கு தோய்த்த மரவுரியை சுற்றிக்கட்டியிருப்பது வழக்கம்” என்றார்.

அவன் உடலில் மெல்லிய விதிர்ப்பு கடந்துசென்றது. போரில் வெற்றியையும் இறப்பையும் மட்டுமே அவன் எண்ணியிருந்தான். புண்பட்டு விழுவதை, திறந்த புண்வாயை குதிரைவால் முடியால் தைப்பதை, சீழ்கொண்டு உடல் மஞ்சளாக, காய்ச்சலில் நினைவழிந்து இறப்புக்கும் வாழ்வுக்கும் நடுவே ஊசலாடியபடி அரைப்பிணம் என கிடப்பதை, தன் உடல் அழுகி மடிவதை தானே பார்த்தபடி நாள்எண்ணிக் காத்திருப்பதை கற்பனை செய்ததில்லை. அக்கணமே அவ்வெண்ணங்களை அழித்தான். “என் தங்குமிடம் எது?” என்றான். “இங்கு கூடாரங்கள் அன்றி தங்குமிடம் எதுவுமில்லை” என்றார் காதரர். அவர் காட்டிய கூடாரம் இடையளவே உயரமிருந்தது. அதற்குள் கையூன்றி தவழ்ந்து செல்லவேண்டும். உள்ளே காவலர் உடலோடு உடல் ஒட்டி துயின்றுகொண்டிருந்தார்கள். “இதற்குள்ளா?” என்றான் உத்ஃபுதன். “இதுவும் பயிற்சிதான்” என்றான் அசங்கன்.

அன்று மாலை அவன் தம்பியருடன் காவல்மாடத்தில் அமர்ந்திருந்தபோது அனைத்துச் சோர்வுகளையும் மீறி உள்ளம் எழுச்சிகொண்டது. பணி என ஒன்றை அவன் செய்துகொண்டிருக்கிறான். அவன் பொறுப்பில் இருக்கிறது ஒரு காவல் மாடம். பிழை நேர்ந்தால் தன் படைக்கே அவன் அழிவை கொண்டுவந்துவிடக்கூடும். பின்னால் விரிந்திருக்கும் அப்பெரும்படை அவன் காவலில் உள்ளது. நெடுந்தொலைவு தாக்கும் வில்லுடன் இரண்டு படைக்காவலர் காவல்மாடத்திலிருந்தனர். மூங்கிலேணியினூடாக அவன் இளையோருடன் ஏறிவந்தபோது அவர்கள் எழுந்து நின்று முறைப்படி தலைவணங்கி வாழ்த்துரை கூறினர். அவன் அமர்ந்ததும் ஒருவன் புன்னகைத்தான். “தங்கள் இளையோர் படைக்கும் புதியவர் போலும்” என்றான். “ஆம்” என்றான் அசங்கன்.

“நான் பாஞ்சாலன். என் பெயர் உதிரன்” என்றான் காவலன். அவனுக்கு தான் பாஞ்சால அரசியின் கணவன் என்பது தெரியுமா என அசங்கன் எண்ணிக்கொண்டான். “இரவுக்காவலென்பது துயிலுடன் போர்புரிவதுதான், இளவரசே” என்றான் உதிரன். காவல்தலைவனாகிய மகரன் “அதில் எப்போதுமே எதிரிதான் வெல்வான்” என்று பெரிய பற்களைக் காட்டி புன்னகைத்தான். அசங்கன் “துயிலலாகாது என்பதை அறிந்த பின்னரே காவலுக்கு வந்துள்ளேன்” என்றான். “நன்று” என்று மகரன் புன்னகைத்தான். உத்ஃபுதன் “படைப்பயணத்தின்போது பெரும்பாலான நாட்களில் இரவில் எங்களுக்கு பணிகள் இருந்தன. துயிலாது பணியெடுப்பது என்பதை நாங்களும் கற்றிருந்தோம்” என்றான். காவலர்தலைவன் வாய்விட்டு நகைத்து “துயிலாது பணியாற்றுவது எளிது. துயிலை மட்டுமே எண்ணியபடி துயிலுக்கு மிக அருகே, துயிலாது இருப்பது மிகக் கடினம்” என்றான்.

ஆனால் காவல்பணி அவன் எண்ணியதுபோல் இருக்கவில்லை. இரவு சற்றே அடர்வுகொள்ளத் தொடங்கியதும் அவனுக்குப் பின்புறம் பாண்டவப் படைகளின் பெரும்பரப்பு முற்றாக அடங்கி இல்லையென்றே ஆனதுபோல் இருட்டுக்குள் மறைந்தது. படைகளுக்குள் குறுக்கும் நெடுக்கும் பரவியிருந்த சாலைகளில் எரிந்த மீன்நெய் இட்ட பீதர் விளக்குகளின் நீண்ட நிரை மட்டுமே அங்கு ஒரு படை இருப்பதற்கான சான்றாக இருந்தது. கொந்தளிக்கும் கடல் உறைந்து கற்பரப்பாக ஆனதுபோல. அங்கிருந்து சங்குக்குள் செவி வைத்து கேட்பதுபோல ஒரு மென்முழக்கம் மட்டுமே எழுந்தது. அதை முழக்கமென்று எண்ணினால் மிகத் தொலைவில் ஒலித்தது. செவிகூர்ந்தால் பேரோசையென்று எழுந்தது. இல்லையென்று எண்ணிக்கொண்டால் வெறும் செவிமயக்கென்றும் தோன்றியது. அவ்வொலி எது என்று அவனால் எத்தனை எண்ணியும் புரிந்துகொள்ள முடியவில்லை. பல்லாயிரம் பேர் மூச்சுவிடுவதன் ஒலியா? அத்தனை விளக்குகள் எரிவதன் ஒலி இணைந்து அம்முழக்கமாகிறதா? அது ஒரு பானைக்குள் காற்று சென்று வருவதன் ஒலி என்று ஒருமுறை தோன்றியது. வெற்றிடத்தின் ஒலி.

பிறிதெப்போதும் தன் எண்ணங்கள் அப்படி பொருளற்று பித்தோ என ஐயுறும்படி ஓடிச் செல்வதை அவன் உணர்ந்ததில்லை. இருளுக்குள் தனித்து அமர்ந்திருப்பதென்பது தன் உள்ளத்துடன் அமர்ந்திருப்பதென்று அவன் அறிந்தான். நாற்புறமும் சுழன்றடிக்கும் காற்றில் மேலாடை பறப்பதுபோல் உள்ளம் துடித்து விடுபட்டு இருள்வெளியில் மறைய முயன்றது. நம்பிக்கை, ஏமாற்றம், ஏனென்றறியாத கசப்புகள், கிளர்ச்சியூட்டும் காமக்காட்சிகள். விந்தையான மணங்கள் தன் உடலுக்குள் இருந்தே எழுவதுபோல் உணர்ந்தான். நினைவுகள் அத்தனை துல்லியமான காட்சியாக எழுந்ததே இல்லை. அவையனைத்தும் ஒற்றைக்கணத்தில் சுருங்கி அணுவென்றாகி மறைய வானமென விளிக்கும் பெருந்தனிமை.

அங்கு ஒரு படை இருக்கிறது. பல்லாயிரம் பேர். இந்தக் கொம்பை எடுத்து ஊதினால் ஒரு கணத்தில் எழுந்து பேரோசையுடன் கொந்தளிக்கத் தொடங்குவார்கள். முரசுகள் ஒலிக்கும். கொம்புகள் ஓலமிடும். யானைகளும் புரவிகளும் எழும். படை பொங்கிப் பெருகி வரும். என் கையில் இருக்கும் இக்கொம்பு. ஆனால் இங்கு முற்றிலும் தனிமையை உணர்கிறேன். அவர்கள் அவன் உள்ளம் சென்று தொடமுடியாத தொலைவிலிருந்தனர். பிறிதெவரோ ஆக மாறிவிட்டிருந்தனர். காவலனுக்கு காவல் காக்கப்படுவதன்மேல் உள்ள அகவிலக்கம் விந்தையானது. அவன் அதை காவல் காக்கிறான் என்பதனாலேயே அதை துய்க்கவோ எவ்வகையிலும் அதனுடன் உறவுகொள்ளவோ இயலாதவனாகிவிடுகிறான். வெறுமனே அதை பார்த்துக்கொண்டிருக்கும் வாய்ப்புகூட அவனுக்கு இல்லை. அதற்கு எதிராக வருவனவற்றையே அவன் நோக்கவேண்டும்.

முதல்நாள் சுவீரர் அவனிடம் “காவலன் ஒருபோதும் கற்பனை செய்துகொள்ளக்கூடாது, எதிரிகளை, ஐயங்களை” என்றார். “ஐயமின்றி எவ்வாறு காவல் காக்கமுடியும்?” என்று அவன் கேட்டான். “ஐயமெழும்போது அனைத்தும் ஐயத்துக்குரியதாகி விடுவதை பார்ப்போம். அதன்பிறகு காவலென்பது பெருந்துன்பம். ஐயம்கொள்ளும் எவற்றையும் நம்மால் நோக்கி சரிபார்க்க இயலாது. அவையே முன் எழுந்து தங்களை தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று காத்திருக்க வேண்டும். காவல் அமர்ந்திருப்பது வேறு, காத்திருப்பது வேறு. காத்திருப்பவர்களால் நெடும்பொழுது அமர்ந்திருக்க இயலாது. அவர்கள் ஒவ்வொரு கணமும் காலத்தை உணர்ந்துகொண்டிருப்பார்கள். எண்ணிக் கணக்கிட்டு அமர்ந்திருப்பவன் காவலன் அல்ல” என்றார் சுவீரர்.

“பிறகு எப்படி காவல் காப்பது? ஐயங்கொள்ளாது வெறுமனே அமர்ந்திருப்பதா?” என்றான் அசங்கன். “காவலன் எண்ணம்சூழ்பவன் அல்ல. கருத்துக்களில் ஆடுபவனுமல்ல. அவன் தூய வேட்டை விலங்கு. செவிகளையும் விழிகளையும் மூக்கையும் தோலையும் சூழலுக்கு முற்றளித்து தானின்றி அங்கு அமர்ந்துகொள்கிறான். அறியவேண்டிய அனைத்தையும் வெறும் புலன்களே அறியும். புலன்களிலாடும் உள்ளம் அவற்றிலிருந்து முடிவுகளை எடுக்கும். வெறும் புலனென்று அமர்ந்திருப்பதைப்போல் இனியது எதுவுமில்லை என்று கண்டவன் சிறந்த காவலனாகிறான்” என்றார் சுவீரர்.

அனைத்துப் புலன்கள் மீதும் எண்ணங்கள் எடையுடன் மீள மீள விழுந்துகொண்டிருந்தன. எடைதாளாத புலன்கள் அவற்றை உந்தி அப்பால் மீண்டும் நிமிர்ந்து உடல் சிலிர்த்துக்கொண்டன. முதல் நாள் முதல் நாழிகையிலேயே இளையோர் இருவரும் வேல்களை மடியில் வைத்தபடி துயிலத் தொடங்கினர். உத்ஃபுதன் தன் தோள்மேல் சரிந்து விழுந்தபோது அசங்கன் அவனை உலுக்கி எழுப்பி “அப்பால் சென்றமர்க! துயிலவா வந்தாய்?” என்றான். முதலில் உடனிருந்த காவலர் அறியாமல் தாழ்ந்த குரலில் அவர்களை எச்சரித்தான். ஆனால் அக்காவலர் புன்னகைத்தபடி “மெல்ல காவலுக்கு பழகலாம், இளவரசே” என்றனர். “பணியில் துயில்பவர்களல்ல அவர்கள்” என்று அவன் சினத்துடன் மறுமொழி சொன்னான். “ஆம், தெரிகிறது” என்று ஒருவன் சொல்ல பிறிதொருவன் புன்னகைத்தான்.

உத்ஃபுதனின் தோளில் அறைந்து “விழித்தெழு, மூடா! என்ன செய்கிறாய்?” என்றான் அசங்கன். அவன் திடுக்கிட்டு விழித்து “அன்னை!” என்றான். பின்னர் வாயைத் துடைத்தபடி “என்ன சொன்னீர்கள், மூத்தவரே?” என்றான். காவலன் “படுத்து துயிலச்சொல்கிறார். அமர்ந்து துயில்வதனால் துயிலும் நிகழ்வதில்லை காவலும் நிகழ்வதில்லை” என்றான். இன்னொரு காவலன் “படுத்தாலும் காவல்தான் காக்கிறோம்” என்றான். “ஆம், என்னால் அமரமுடியவில்லை” என்றபடி உத்ஃபுதன் உடல்சுருட்டி படுத்துக்கொண்டான். அவன் படுத்ததைப் பார்த்ததும் சாந்தனும் அவனருகே ஒண்டி படுத்து அவன் போர்த்திக்கொண்டிருந்த போர்வையை இழுத்து தானும் போர்த்திக்கொண்டான்.

சலிப்புடன் தலையை அசைத்தபடி அசங்கன் “மிக இளையோர்” என்றான். “ஆம், அரசகுடியினரும் கூட” என்றான் காவலன். பிறிதொருவன் நகைத்தான். அசங்கன் அவர்களை நோக்குவதை தவிர்த்தான். அவன் மீதும் அரக்குபோல துயில் வழிந்து உடல்தசைகளை அசைவிழக்கச் செய்தது. உள்ளம் மயங்கி எண்ணங்கள் வெற்றுச் சொற்களென்றாகி அசையாமல் நின்றன. பின்னிரவு வரை அவன் தன் உள்ளத்துடன் சமரிட்டுக்கொண்டிருந்தான். குளிர் எடை மிகுந்து காதுகளை நடுங்க வைத்து மூச்சுக்குள் புகுந்து உடலை உலுக்கத் தொடங்கியபோது போர்வையால் போர்த்திக்கொண்டு நன்கு ஒடுங்கிக்கொண்டான். அவ்வாறு ஒடுக்கிக்கொள்வதே துயிலுக்கான ஆணை என அகம் புரிந்துகொள்ள எடைமிக்க வழிவு என நாற்புறத்திலிருந்தும் துயில் வந்து அவன் மேல் பதிந்தது.

தேர்ச்சகடங்கள் உளைசேற்றில் சிக்கி செயலிழப்பதுபோல் அவன் எண்ணங்கள் ஆங்காங்கே நின்றன. இடைவரை பதிந்த சேற்றிலென ஒவ்வொரு அடியையும் பிடுங்கிப் பிடுங்கி மீண்டும் புதைத்து வைக்க வேண்டியிருந்தது. நெடுநேரம் ஒற்றைச் சொற்றொடரையே எண்ணிக்கொண்டிருப்பதை அவனே உணர்ந்து திகைத்து எழுந்தமர்ந்து வாயை துடைத்தான். அச்சொற்றொடர் என்ன என்று பார்த்தான். யானையின் காலடி. எதற்காக அச்சொற்றொடரை என் உள்ளம் உணர்ந்தது? யானையின் காலடி! அச்சொற்றொடர் பாறைபோல் அவன் முன்

நின்றது. அதை உந்தி விலக்க இயலவில்லை. தலை எதிலோ முட்டிக்கொண்டபோது அவன் விழித்தான்.

நிலத்தில் விழுந்து கிடந்திருந்தான். கையூன்றி எழுந்து அமர்ந்தபோது காவலன் “துயில்க, இளவரசே! இன்னும் இரண்டு நாழிகைதான். இன்னும் சற்றே ஓய்வெடுப்பது நன்றுதான்” என்றான். “இல்லை, நான் துயிலவில்லை” என்றான் அசங்கன். “தாழ்வில்லை. நாங்களும் முதல்நாள் துயின்றவர்களே” என்றான் இன்னொருவன். அவர்களிருவரையும் மாறி மாறி பார்த்தபோது அவர்கள் தன்னை களியாடவில்லை என்று அவன் உணர்ந்தான். பெருமூச்சுடன் படுத்து போர்வையை நன்றாக சுற்றிக்கொண்டான்.

மறுநாள் புலரிக்கு முந்தைய சங்கொலி எழுந்ததும் காவலர் அவன் கால்களைத் தட்டி “எழுக!” என்று உலுக்கினர். அவன் எழுந்தமர்ந்து சில கணங்கள் எங்கிருக்கிறோம் என்று அறியாமல் திகைத்தபின் ஒருகணத்தில் தன்னிலை கொண்டான். இளையோரை தட்டி எழுப்பினான். அவர்கள் எழுந்து அமர்ந்து உடலை சொறிந்துகொண்டார்கள். அரண்மனை மஞ்சத்தில் விழித்தமர்ந்தவர்கள்போல வாய் திறந்து, தோள்கள் தொய்ந்து, சரியும் இமைகளுடன் அமர்ந்திருந்தனர். “அறிவிலிகளே! நாம் காவலுக்கு வந்திருக்கிறோம். அரசமாளிகை மஞ்சத்தில் அமர்ந்திருக்கவில்லை” என்று அசங்கன் சொன்னான். “அரசமாளிகையில் அமர்ந்தவர்களை காவலர் என்று சொல்லும் வழக்கமுண்டு, அரசே” என்றான் காவலர்தலைவன். அசங்கன் சினம்கொண்டு “எழுக! எழுக!” என்று அவர்களை உலுக்கினான். “நீர் உள்ளது. முகம் கழுவிக்கொள்ளுங்கள். இன்னும் சற்று நேரத்தில் விடிந்துவிடும்” என்றான் காவலன். அசங்கன் எழுந்து முகத்தை கழுவிக்கொண்டான்.

தொலைவிலிருந்து நூற்றுக்கணக்கான செந்நிற ஓடைகள்போல பந்தங்களும் விளக்கொளிகளும் ஒழுகி படையை நோக்கி வந்துகொண்டிருந்தன. அவன் விந்தையுடன் எழுந்து கூர்ந்து நோக்கினான். பச்சைப்புல்பெருக்கு ஒரு வேலியென, ஆறென நீண்டு வந்தது. நிஷாதரும் கிராதரும் தலைச்சுமையோடு சுமை முட்ட வந்தனர். “இத்தனை புல்லும் தழையும் எதற்கு?” என்றான் அசங்கன். “இங்குள்ள மானுடரைவிட விலங்குகள் மிகுதி. மானுடர் உண்பதைவிட பத்துமடங்கு உணவுண்பவை அவை” என்றான் காவலன். “இந்த நிஷாதரைப்போல உருமாறி எதிரிகள் படைகொணர்ந்து பின்புறம் தாக்கினால் நாம் என்ன செய்வது? இங்கே மிகக் குறைவாகவே காவலர் இருக்கிறோம்” என்றான் அசங்கன். “நாம் சென்று களப்பலியாக வேண்டியதுதான்” என்றான் காவலன்.

அசங்கனின் முகமாறுதலைப் பார்த்து இன்னொருவன் அவன் தோளை அறைந்து “இளவரசே, இவன் களியாடுகிறான். நாம் காவலுக்கு வந்திருக்கிறோம், ஐயங்களை பெருக்கிக் கொள்வதற்கல்ல. பின்புறம் படைகள் தாக்குமென்றால் என்ன செய்வதென்று எண்ணுவது நமது பணி அல்ல. அதை எண்ணிச்சூழவேண்டியவர் படைத்தலைவர்” என்றான். அசங்கன் எரிச்சலுடன் “நீங்கள் எளிய காவலர்கள். நான் அரசகுடியினன். நாளை படைநடத்த வேண்டியவன். நான் எண்ணித்தான் ஆகவேண்டும்” என்றான். “ஆம், ஆனால் இப்போது காவலை கற்றுக்கொள்ள இங்கு வந்திருக்கிறீர்கள். படைசூழ்கை கற்றுக்கொள்ள திருஷ்டத்யும்னரின் அவையில் அமர்ந்திருக்கையில் அதை எண்ணிச்சூழலாம்” என்றான் காவலன். “பணிகளை கலந்துகொள்வது பிழை என்பதே முதலில் கற்றுக்கொள்ள வேண்டியது.” அசங்கன் சீற்றத்துடன் ஏதோ சொல்ல எண்ணி பின் தவிர்த்து பெருமூச்சுவிட்டான்.

அசங்கனின் காவல் வாழ்க்கை முதல் நான்கு நாட்களும் பகல் முழுக்க படைகளின் நடுவே மரநிழலில் முகத்தின் மேல் மரவுரியை போட்டுக்கொண்டு துயில்வதும், அந்தி எழுந்ததும் ஆடையை உதறி அணிந்துகொண்டு வில்லையும் அம்புத்தூளியையும் வேலையும் எடுத்துக்கொண்டு காவல்மாடத்தில் இரவெல்லாம் அலையடித்துச் சுழலும் காற்றிலும் குளிரிலும் வெறித்து நடுங்கும் விண்மீன்களால் ஆன வான்வெளிக்குக் கீழே அமர்ந்திருப்பதுமாக சென்றது. முதல் சிலநாட்கள் பிறகாவலர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தான். பின்னர் சொல்லின்மையே அங்குள்ள இயல்பான நிலை என்று கண்டுகொண்டான்.

காவல்பணியினூடாக தனித்திருக்கையில் பேருருக்கொள்ளும் உள்ளத்தை ஆள்வதெப்படி என்று அவன் கற்றுக்கொண்டான். ஒன்றிலிருந்து ஒன்றென ஓடும் எண்ணங்களைக் கண்டு அஞ்சாமல், அவற்றை பொருளுணர முயலாமல் அவ்வண்ணமே விட்டு அமர்ந்திருப்பதே செய்யக்கூடுவது. விழிகளால் சூழலை துழாவவோ காட்சிகளை ஒன்றுடன் ஒன்று பொருத்தி பொருளென்றாக்கவோ முயலலாகாது. காண்பன, கேட்பன எதையும் சித்தத்திற்கு கொண்டுசெல்ல வேண்டியதில்லை. சித்தத்தை அதில் நிகழும் அலைகளாக தன் ஒழுக்கில் செல்லவிட்டு புலன்களை அதனுடன் தொடர்பற்ற தனியிருப்புகளாக அமைத்து அங்கிருப்பதொன்றே காவல்.

புலன்கள் சலிப்படைவதில்லை என்பதை அவன் உணர்ந்தான். உள்ளம் கொள்ளும் எந்த உணர்வுகளும் புலன்களுக்கில்லை. அவை வெறும் கருவிகள். நோக்கி நோக்கி சலிப்புற்றதென்றால் விழி எத்தனை பயனற்றதாகும் என்றெண்ணியபோது காவல்மாடத்தில் அமர்ந்து அவன் வானிருளை நோக்கி புன்னகைத்தான். வெறுமனே நோக்கி அமர்ந்திருப்பதனூடாக மிகச் சிறந்த காவல்பணியை ஆற்ற இயலுமென்பதை கற்றுக்கொண்டதுமே அவன் உள்ளம் அனைத்து அலைக்கழிப்புகளிலிருந்தும் விடுபட்டது. பின்னர் காட்டை நோக்கி கற்றுக்கொள்ளத் தொடங்கினான். இருளுக்கு விழி பழகியதும் காடு தெளிந்து அருகணையலாயிற்று. அடிமரங்களும் கிளைகளும் புடைப்புகொண்டு பட்டைவடுக்களும் கோடுகளும் தெளிய தெரியத்தொடங்கின. பின்னர் இலைநுனிகளும் காய்களும்கூட துலங்கின.

காடு அவனுடன் பேசத் தொடங்கியது. காட்டுக்குள் இரவில் செல்லும் விலங்குகளின் காலடிகளை செவிகள் பிரித்தறிந்தன. காற்று கடந்து செல்வதுபோல செல்லும் மான்கூட்டம். நரிகள் புதர்களுக்குள் நீரோடைபோல் செல்கின்றன. பெரும்பாறை ஒன்று மிக மெல்ல உருண்டு செல்வது போன்ற ஒலியுடன் யானைகள். கிளைகள் ஒடியும் ஓசை அருகே யானை நின்றிருக்கிறதென்பதன் தடம். மேலிருந்து பார்க்கையில் காட்டுத்தழைப்பு உலையும் தடமாகவே யானைத்திரள் செல்வதை பார்க்கமுடிந்தது. புலி முற்றிலும் ஓசையற்றது, காடு உளம் கரந்த எண்ணம்போல. ஆனால் மேலே பறவைகளும் குரங்குகளும் அதை அறிவித்து கூச்சலிடும்.

இத்தனை ஆயிரம்பேர் படைக்கலன்களுடன் இங்கு அமைந்திருக்கையிலும் காட்டுக்குள் மிக அருகே விலங்குகள் வந்து செல்கின்றன. விலங்குகளின் தன்னுணர்வுகளில் நுண்மையானது எல்லை வகுத்துக்கொள்வது. தன் எல்லை மட்டுமல்ல பிற எல்லைகளையும் வகுத்துக்கொள்கின்றன அவை. ஆயர் சிற்றூர்களில் சாலை ஓரங்களில் மேயும் எருமைகள் விரைந்து செல்லும் தேர்களுக்கு வெறும் பத்து விரற்கடை இடைவெளிவிட்டு செவியசைவின்றி பொருட்படுத்தாமல் நிற்பதை அவன் கண்டிருக்கிறான். மானுட உள்ளங்களையும்

அவை அவ்வாறே கணித்து எல்லையிட்டிருக்கின்றன. இந்த எல்லைக்கு அப்பால் நீங்கள் என்று குறுங்காட்டின் எல்லையில் விழிசுடர காதுகூர்ந்து தலைதூக்கிய செந்நாய் சொன்னது.

காட்டை அறியத் தொடங்குந்தோறும் அங்கிருப்பது பேருவகை அளிப்பதாக மாறியது. முற்காலையில் முதல் பந்தம் காட்டுக்குள் எழுந்து ஒழுகி அணைவதை காண்பது கிளர்ச்சியூட்டியது. விண்ணிலிருந்து எரிமீன் வருவதைப்போல. ஒன்றன்பின் ஒன்றென்று பந்தங்கள் தொடர சிறு ஊற்று பெருகி ஓடையாவதைப்போல பந்தநிரை படைகளை நோக்கி வரும். கொள்முதலுக்கென அமைக்கப்பட்டிருந்த கணக்கர்களும் பணியாளர்களும் படைவிளிம்பு முழுக்க மரப்பீடங்களிட்டு அமர்ந்திருப்பார்கள். புற்கட்டுகளை தூக்கி எடை பார்த்து அப்பாலிருக்கும் குவியலை நோக்கி வீசிவிட்டு பணியாட்கள் கூவியறிவிக்க கணக்கர்கள் ஓலையில் குறித்துக்கொண்டு செம்பு நாணயங்களை விலையாக வழங்கினர். புல்மலைகள், பசுந்தழைக் குன்றுகள், விறகுமேடுகள். அவற்றை வண்டிகளிலேற்றி படைகளுக்குள் அமைந்த வெவ்வேறு பொருள்நிலைகளை நோக்கி கொண்டு சென்றது பிறிதொரு ஏவலர் படை.

ஒன்றுடன் ஒன்று இணைந்து மாபெரும் கைவிடுபடைபோல இயங்கிக்கொண்டிருந்த படையைப் பார்த்தபடி அமர்ந்திருப்பது என்பது விந்தையான நிறைவை அளிப்பதாக இருந்தது. ஒன்று பிறிதொன்றுடன் சரியாகப் பொருந்துவதை பார்ப்பதுபோல் மானுட உள்ளத்திற்கு உவகை அளிப்பது பிறிதொன்றுமில்லை போலும். இவை அனைத்தும் இங்கு சிதறிப்பரந்து ஒன்றையொன்று எங்ஙனமேனும் பொருத்திக்கொள்கின்றன. அனைத்தையும் ஒன்றென தொகுத்துக்கொள்ள விழையும் ஒன்று உள்ளிருக்கிறது. அதுவே உள்ளமென்று உணர்கிறேன். ஒரு பொருள் பிறிதொன்றுடன் பொருந்துகையில் இங்குள்ள ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதே என அறிகிறேன். இவையனைத்தையும் ஒன்றென்றாக்கும் பெருநெறி ஒன்று உள்ளே இலங்குவதாகவும் எண்ணிக்கொள்கிறேன். அவன் கற்ற வேதமுடிபுச் செய்யுள் ஒன்று அப்போது நினைவிலெழுந்தது. ‘ஒன்றொன்றாய் தொட்டெண்ணி எண்ணும் பொருள் ஒடுங்குகையில் நின்றிடும் பரம்.’ அதை கற்றபோது வெறும் வரிகளாக, பொருளிலா அறிதலாக இருந்தது. அப்போது அவ்வரி வெடிப்புற்று திறந்துகொண்டது. ஆனால் தொடரும் வரிகள் நினைவிலெழவில்லை.

அவ்வெண்ணத்தை எண்ணி அவன் மீண்டும் புன்னகைத்தான். காவல்பணியில் அமர்ந்த நாள் முதல் தன் எண்ணங்கள் மேலும் மேலும் கூர்மைகொள்வதை அவன் உணர்ந்திருந்தான். கல்விச்சாலையிலோ அரண்மனையிலோ எங்கும் அவ்வாறு தன்னைத்தான் நோக்கி அவன் அமர்ந்திருந்ததே இல்லை. திருஷ்டத்யும்னனின் எண்ணமென்ன என்று அப்போதுதான் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. உள்ளூர நிலைகொள்ளாது கொப்பளித்துக்கொண்டே இருக்கும் கன்று ஒன்றை நுகம் பயில அனுப்பியிருக்கிறார். நுகம் அறிந்த காளை அமைதிகொண்டுவிடுகிறது. அளந்த காலடிகளும் கருதிய உடலசைவுகளுமாக நடக்கிறது. தன்னைப்போலவே தன் இளையோரும் மாறிவிட்டிருப்பதை அவன் உணர்ந்தான். அவர்களும் தேவையின்றி சொல்லெடுப்பதை, விளையாட்டுக்கு பூசலிடுவதை தவிர்க்கத் தொடங்கியிருந்தனர்.

அவர்களில் வந்த மாற்றத்தை காவலர்களும் உணர்ந்தனர். “காவலனாகிவிட்டீர், இளவரசே. ஒரு காவல்மாடத்தை ஆளத்தெரிந்தவன் நாட்டுக்கும் காவலனாக இயலும்” என்றார் சுவீரர். அசங்கன் புன்னகை புரிந்தான். “ததும்பாதிருப்பதே தலைவனுக்கு இயல்பு என்பார்கள். எங்கும் தேவைக்குமேல் ஒரு துளி உணர்வோ, சொல்லோ, செயலோ வெளிப்படலாகாது. அதை கற்க உகந்த இடம் காவல்மாடமே.”

அவன் உளம்பணிய “ஆம் சுவீரரே, நான் தலைபணியும் ஆசிரியர்களில் தாங்களும் ஒருவர்” என்றான்.

ஒவ்வொரு நாளுமென போர் அணுகிக்கொண்டிருந்தபோது அவன் அதை நோக்கி உருவழிந்து மறுவுரு கொண்டு சென்றபடியே இருந்தான். போருக்கு முந்தைய அத்தனை உளநாடகங்களையும் கண்டான். போரே வரப்போவதில்லை என்று நம்பி போருக்கென விழைந்தனர். போர் வரக்கூடும் என அஞ்சி போர் வராதென்று சொல்லாடினர். நோக்க நோக்க பேருருக்கொண்டு அணுகும் மலை என போர் வந்தது. மறுநாள் போர் என்று அறிவிக்கப்பட்டபோது தன்னை போருக்குச் செல்ல திருஷ்டத்யும்னன் ஆணையிடக்கூடும் என எண்ணினான். ஆனால் அவனும் உடன்பிறந்தாரும் காவலிலேயே நீடிக்கவே படையோலை கூறியது.

போர் தொடங்கிய முதல் நாள் அவன் படைக்குப் பின்னால் காவல்மாடமொன்றின் உச்சியில் அமர்ந்திருந்தான். அன்றிரவு காவலுக்கு மேலே செல்லும்போதே உடல் பதறிக்கொண்டிருந்தது. நாளை நாளை என உள்ளம் அரற்றியது. ஆனால் பழகிய காட்டுத்தழை மணம்கொண்ட காற்றும் பழுத்து நிறையத் தொடங்கிய விண்மீன்களும் மெல்ல அவனை ஆற்றி அறிந்து பழகிய அவ்வூழ்கத்தில் அமைத்தன. புலரியின் முதல் போர்முரசு விம்மத் தொடங்கியபோது ஒரே கணத்தில் எல்லாவற்றையும் உணர்ந்தான். உடலுக்குள் அனைத்து நீர்மைகளும் கொந்தளிப்பு கொள்ள, விழிமங்க, செவிகள் அடைத்துக்கொள்ள, அடியிலா ஆழமொன்றில் விழுந்துகொண்டிருக்கும் உணர்வை அடைந்தான். பின்பு கைகள் நடுங்கி நெஞ்சு துடிக்க தன்னுணர்வு கொண்டான்.

பதறும் கால்களுடன் காவல்மாடத்தில் எழுந்து நின்று போருக்கு ஒருங்கி முகத்தொடு முகம் நின்ற படைப்பெருவெளியை நோக்கினான். போர்முரசு ஒலித்து கொம்புகள் தொடர்ந்து பின் அமைந்த அமைதிக்குப் பின் நடைமாறி “எழுக! எழுக!” என பெருமுரசம் ஒலித்தது. அவன் முன் இரு படைகளும் ஒன்றுக்கொன்று அறைந்துகொண்டு, ஒன்றுடன் ஒன்று கலந்து, ஒன்றை ஒன்று கவ்வி, ஒன்றுள் ஒன்று ஊடுருவின. கீழே அது பெருவிசையுடன், விரைவுடன் நிகழ மேலே மிக மெல்ல தழுவிக்கொள்வதுபோல தோற்றம் அளித்தது. காவலர்தலைவர் அவனை மெல்ல தொட்டபோது உடல் துள்ளினான். அவர் அவனிடம் “நிலைமீள்க! உங்கள் பணி முடிந்தது” என்றார். அவன் அங்கேயே இருக்க விரும்பினான். “நான் போரை...” என சொல்லத்தொடங்க அவர் “செல்க!” என குரல்மாறி கடுமை காட்டினார்.

நடுங்கும் உடலுடன் தன் கூடாரத்தை அடைந்தான். பின்னர் பகல் முழுக்க அவன் அறிந்ததெல்லாம் வெறும் அலைக்கொந்தளிப்பு மட்டுமே. ஓசைகள் காட்சியாயின. முரசுகளும் கொம்புகளும் எழுப்பிய முழக்கங்கள் ஒன்றாகக் கலந்து வானை அறைந்து எதிரொலியாக திரும்பிக்கொண்டிருந்தன. மழையோசையை கேட்டுக்கொண்டிருக்கையில் பெருகி அணைவது போலவும், நின்று அலைகொள்வது போலவும் செவி மயக்கேற்படுவது போலவே தோன்றியது. அந்த படைமுழக்கத்தை சொற்களாக மாற்றிக்கொள்ள உள்ளிருந்து ஒரு புலன் துடித்தது. “ஆம் அவ்வாறே! ஆம் அவ்வாறே! ஆம் அவ்வாறே!” என்று. “அல்ல! அல்ல! அல்ல!” என்று. பின் “எழுக! எழுக! எழுக!” என்று. நடைமாறி “வெல்க! வெல்க! வெல்க!” என்று. அல்லது “கொல்க! கொல்க! கொல்க!” என்றா? இறுதியில் எஞ்சியது “அல்ல! அல்ல! அல்ல! அல்ல! அல்ல!” எனும் ஓயா நுண்சொல் மட்டுமே.

அன்று அந்திக்குள் “அல்ல! அல்ல!” என்ற சொற்களாக மட்டுமே அவன் முழக்கத்தை கேட்டுக்கொண்டிருந்தான். அந்தி முரசு முழங்குவதற்குள்ளாகவே அவனுக்கு காவல்பணிக்கு அழைப்பு வந்தது. அவன் காவல்மாடத்தில் நின்று நோக்கியபோது

அவன் உள்ளத்தால் உணர்ந்த ஓசைக்காட்சியுடன் இணையாது பொருளற்ற கொந்தளிப்பாக களம் தெரிந்தது. வெறித்து நோக்கிக்கொண்டு அவன் நின்றபோது அந்தி வீழ்வதை அறிவித்து முரசொலி எழுந்தது. ஒற்றைப் பெருங்காற்றில் பெருமழை நின்றுவிடுவதுபோல களம் ஓய்ந்தது. ஓசைக்குப் பழகிய செவி கீழே விழுந்த தாலமென ரீங்கரித்தது. விந்தையான பற்கூச்சம் ஒன்றை அடைந்து அவன் கண்மூடினான்.

பின்னர் மெல்ல உடல் தளர்த்தி தொலைவை நோக்கினான். படைகள் விரிந்து விரிந்து சிறுசிறு குழுக்களாக மாறி பின்வாங்கிக்கொண்டிருந்தன. உதிரும் சருகுகளை மேலிருந்து நோக்குவது போலிருந்தது. இரு படைகளுக்கும் நடுவே விரிசல்போல இடைவெளி தோன்றியது. நிலப்பிளவுபோல அது அகன்றது. பல்லாயிரவர் நிலம் படிந்து கிடந்த குருதிச் செருகளம் துலங்கலாயிற்று. மேலும் மேலுமென படைநடுவெளி அகன்று மனித உடல்களால் ஆன பரப்பாக மாறி விரிந்து கிடந்தது. இருபுறமிருந்தும் மருத்துவப் பணியாளர்களும் வண்டியோட்டிகளும் பலநூறு சிற்றோடைகள்போல் வழிந்து வந்து அந்தக் களத்தில் பரவினர்.

அவன் உளம் ஓய்ந்து வெற்றுவிழி என நோக்கிநின்றான். புழுத்த ஊன்பரப்புபோல தோன்றியது குருக்ஷேத்ரச் செருகளம். பல்லாயிரம் நெளிவுகள். மனித உடல் மண்ணில் விழுந்ததுமே புழுவென்றாகிவிடுகிறது. முன்பெப்போதோ புழுவென்றிருந்து அறியாத தெய்வ ஆணையொன்றால் எழுந்து நின்று மானுடனாகியது. புழுவென அதை வைத்திருந்த விசைகள் மீண்டும் எழுகின்றன. அவற்றின் தெய்வங்கள் இரக்கமின்றி கைவிடுகின்றன. என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன்! இவ்வெண்ணங்களை இதற்கு முன் அடைந்ததே இல்லை. ஒருநாளில் ஒருவன் எத்தனை தொலைவு செல்லமுடியும்? ஆனால் இச்சிலநாட்களில் நான் அடைந்த வாழ்வு இதுவரை வாழ்ந்த நாளைவிட பலமடங்கு. ஒவ்வொரு கணமுமென முதிர்ந்துகொண்டிருக்கிறேன். இன்னும் சில நாட்களில் முதுமை அடையக்கூடும். இறப்பு இயல்பானதாக வந்தணையக்கூடும்.

இறப்பு எனும் சொல் அவனை மெய்ப்பு கொள்ளச்செய்தது. வியர்வை எழ உடல் நடுங்கியது. இறப்பு. பல்லாயிரவர் இறப்புக்கு நிகரல்ல என் இறப்பு. என் இறப்பு இங்கு எவருக்கும் ஒரு பொருட்டல்ல. ஒருவேளை தந்தையும்கூட ஓரிரு நாட்களில் அதை கடந்து செல்லலாம். என் இறப்பு எனக்கு மட்டுமே பொருட்டு. அவ்விறப்பால் நான் எதை அடைவேன்? அவன் பாஞ்சால இளவரசியை எண்ணிக்கொண்டான். அந்த உளக்கிளர்ச்சியில் இருப்பும் இன்மையும் காலமும் இடமும் மயங்க அவள் மிக அருகிலென நின்றிருந்தாள். மெல்லிய மயிர்ப்பரவல்களும் பருக்களும் கொண்ட சிவந்த வட்டமுகம். அடர்ந்த புருவங்கள். சற்றே வளைந்து தடித்த கீழுதடு. சின்னஞ்சிறு மூக்குக்கு மேல் நீலப்புகை என மயிர்ப்பரவல். சற்றே பச்சை ஊடுருவிய சிறிய விழிகள். சிறுகுருவிகளுக்குரிய மென் துடிப்பு கொண்ட உடலசைவுகள். குருவிகளுக்குரிய கூரிய ஒலிகொண்ட சிரிப்பு. அவன் உடற்கிளர்ச்சி அடைந்தான். உடனிருந்த காவலர்களிடமிருந்து அதை மறைப்பவன்போல் அமர்ந்துகொண்டான்.

படைநகர்வு முழுக்க பாஞ்சால இளவரசி சௌம்யை அவனுடன் வந்தாள். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு யானைத்தோலாலான சிறு கூடாரம் அமைத்து அளிக்கப்பட்டது. அதிலிருந்த வெளிப்படைத்தன்மை அவர்கள் இருவருக்குமே கூச்சத்தை அளித்தது. படைகளுக்கு மிகவும் பின்னால் தனி அணியாக

வந்துகொண்டிருந்த அரசமகளிரின் குழுவுடன் சௌம்யை வந்தாள். படைகள் அந்தியில் அடங்கிய பின்னர் மூடுதிரையிடப்பட்ட விரைவுத்தேரில் படைகளுக்குள் வந்து கூடாரத்திற்குள் புகுந்து அவனுக்காக காத்திருந்தாள். அவன் இருளிலேயே வந்து இருளுக்குள் அவளுடன் தங்கி இருள் எழுவதற்கு முன்னரே திரும்பிச்சென்றான். ஆயினும் அவனுக்கு பிறர் விழிநோக்க நாணமிருந்தது. அதை தவிர்த்திருக்கலாம் என்று முதலில் இருவருமே எண்ணினர். முதல் நாள் சௌம்யை "நாளை முதல் இது வேண்டாம். என்னால் விழிகளை சந்திக்க இயலவில்லை" என்றாள். ஆனால் ஒவ்வொருநாளும் அவர்கள் அணுகி அறிந்தனர். மேலும் மேலும் தெளிவுகொண்டபடியே வந்தாள். காலை எஞ்சிய வினாவுக்கு அந்தியில் விடையுடன் தோன்றினாள்.

மணம்முடித்த முதல்நாள் இரவு உபப்பிலாவ்யத்தின் சிற்றறையில் அவர்கள் இரு நெடுந்தொலைவு எல்லைகளில் திகைத்து நின்றிருந்தனர். மாளிகையைச் சூழ்ந்து படைநகர்வின் முழக்கம் ஒலித்துக்கொண்டிருந்தது. சாளரத்தினூடாக காற்று வரும்போதெல்லாம் மழைபோல அவ்வோசை வந்து அறைந்தது. அவன் ஏவலரால் அழைத்துவரப்பட்டு அறைவாயிலில் விடப்பட்டான். கால்கள் குளிர்ந்து உறைந்து நிற்க வெளியே சற்று நேரம் நின்றான். பின்னர் உள்ளே சென்று வாயிலிலேயே தயங்கினான். அவளை அணுகவோ சொல்லெடுக்கவோ முயலவில்லை. சாளரக் கதவுகளை மூடி சூழலறியாது ஒலித்த அந்த ஓசையை துண்டிக்க விரும்பினான். ஆனால் அது எவ்வகையிலேனும் நாணிலாச் செய்கையாக தோன்றிவிடுமோ என்று எண்ணி ஒழிந்தான்.

நெடும்பொழுதுக்குப் பின் சௌம்யை விழிதூக்கி அவனை நோக்கி புன்னகைத்தாள். அதிலிருந்த துணிவு அவனை அஞ்சச் செய்தது. கைகளால் சாளரத்தின் மரக்கட்டையை பற்றிக்கொண்டான். அவள் "பேரோசையிடுகிறது படை, அதை மூடுக!" என்று சொன்னாள். "ஆம், நானும் அதையே எண்ணினேன்" என்று நடுங்கும் குரலில் சொல்லி அவன் சாளரக் கதவை இழுத்து மூடினான். ஓசை மட்டுப்பட்டது. அவ்விடைவெளியை உள்ளம் நிரப்ப மேலும் பேரோசையை அகச்செவியில் கேட்கத் தொடங்கினான். "ஏனிந்தப் பேரோசை?" என்று அவள் கேட்டாள். "படைநகர்வு தொடங்கிவிட்டது. இன்னும் சில நாட்களில் நாம் குருக்ஷேத்ரத்தில் இருப்போம்" என்று அவன் சொன்னான்.

சௌம்யை உதடுகளை நாவால் வருடி கழுத்து அசைய மூச்செறிந்து "நானும் உடன்வருவேன் என்று தந்தை சொன்னார்" என்றாள். "என்னிடமும் சொன்னார்கள்" என்றான். "ஏன் நிற்கிறீர்கள்? அமர்ந்துகொள்ளலாமே" என்று அவள் மஞ்சத்தை காட்டினாள். அவன் தளர்ந்த கால்களை உளவிசையால் தள்ளி வைத்து மெல்ல நடந்து மஞ்சத்தருகே சென்றான். "அமர்க!" என்றாள். அவள் அருகே மஞ்சத்தின் விளிம்பில் அவன் அமர்ந்துகொண்டான். "நாணம் கொள்கிறீர்கள். ஆண்கள் இத்தனை நாணுவார்களென்று நான் அறிந்ததே இல்லை" என்றாள் சௌம்யை. "நாணமல்ல" என்று அவன் சொன்னான். பின்னர் புன்னகைத்து "நாணமேதான்" என்றபின் "நீ... நீங்கள் இத்தனை துணிவுடன் இருப்பீர்கள் என்று எண்ணவில்லை" என்றான்.

"நான் எப்போதுமே துணிவானவள்தான்" என்று சௌம்யை சொன்னாள். "படைக்கலம் பயின்றிருக்கிறேன். புரவியும் யானையும் ஊர்வேன்." அவன் "ஆம், அரசகுடியினருக்கு அவை கற்பிக்கப்படுமென்று கேட்டிருக்கிறேன்" என்றான். "ஏன் உங்கள் குலத்தில் கற்பிக்கப்படுவதில்லையா?" என்று சௌம்யை கேட்டாள். அச்சொல்லிலிருந்த சிறுமுள்ளொன்று அவனை குத்த "எங்கள் குலமும் அரசகுலம்தான்" என்றான். அவள் கைநீட்டி அவன் தொடையை மெல்ல தொட்டு

“இல்லையென்று நான் சொல்லவில்லை” என்றாள். “அவ்வாறல்ல” என்றான் அவன். சௌம்யை “நம்முள் உளப்பூசலென்று ஏதேனும் நிகழ வாய்ப்பிருப்பது இவ்வேறுபாடால்தான். என் குலம் தொன்மையான ஷத்ரிய குலம். நீங்கள் எழுந்து வரும் யாதவர் குடி. இருவருக்குமே மெய்யென்ன என்று தெரியும்” என்றாள். அந்தத் தெளிவு அவனை நிறைவுறச்செய்ய “ஆம்” என்றான்.

அவள் குரல் அன்னையருக்குரிய கனிந்த தணிவை கொண்டிருந்தது. “உங்கள் தந்தை என்னை நீங்கள் மணந்தபோது உணர்வு மீதூற மிகைபணிவு காட்டி நெகிழ்ச்சிச் சொல் பெருக்கினார். இவ்வுறவு எந்தை உங்கள் குடிக்கு அளிக்கும் பெருங்கொடை என்பதுபோல. அந்த உணர்வுகளுக்குள் நாமிருவரும் சென்றுவிட்டால் ஒருபோதும் நாம் நல்லுறவு கொள்ளப்போவதில்லை. குடியும் குலமும் இந்த அறைக்கு வெளியே இருக்கட்டும். நாம் இதற்குள் கணவனும் மனைவியுமாக மட்டும் இருப்போம்” என்றாள். நடுங்கும் குரலில் “ஆம், நானும் அவ்வாறே எண்ணினேன்” என்றான் அசங்கன். அவள் மேலும் அணுக்கமானவளாக ஆகிவிட்டிருந்தாள். அவளிடம் எத்தயக்கமும் உளவிளையாட்டும் தேவையில்லையென்ற உறுதி தோன்றியது. ஆனால் அவன் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன.

“உண்மையில் குலம், குடிப்பெருமை எதுவும் பெண்டிர்க்கு ஒரு பொருட்டல்ல. யாதவர்குலத்துப் பெண்களுக்கு இருக்கும் உரிமையும் விடுதலையும் ஷத்ரியப் பெண்களுக்கில்லை. அவர்கள் பொன்மாளிகையின் சுடர்கன்னிச் சிலைகள்போல. காம்பில்யத்தில் இருந்து விடுதலை பெற்று உங்கள் யாதவநகரிக்கு வரமுடியுமென்றால் அதைவிட நான் விரும்புவது பிறிதொன்றில்லை” என்று சௌம்யை சொன்னாள். அவன் “இந்தப் போர் முடிந்ததும் நாம் ரிஷபவனத்துக்கு செல்வோம்” என்றான். “ஆம்” என்றபடி அவள் அவன் கைகளை பற்றிக்கொண்டாள். “ஏன் உங்கள் விரல்கள் குளிர்ந்திருக்கின்றன?” என்றாள். “நான் அஞ்சுகிறேன்” என்றான். “ஏன்?” என்று அவள் கேட்டாள். அவனால் மறுமொழி சொல்ல இயலவில்லை. அவள் மீண்டும் தாழ்ந்த குரலில் “ஏன்?” என்றாள். அவள் கைவிரல்கள் அவன் கைவிரல்களுடன் பிணைந்தன.

அவன் உடைந்த குரலில் “எனக்கு பெண்கள் அறிமுகமாகவில்லை” என்றான். “அதனால் என்ன?” என்றபடி அவள் அவனருகே அசைந்தமர்ந்து அவன் கைகளை எடுத்து தன் மடியில் வைத்து இரு கைகளாலும் பொத்திக்கொண்டாள். அவன் “என்னை உங்களால் விரும்பலாகுமா, இளவரசி?” என்றான். “இதென்ன கேள்வி? விரும்பாதவனை மணமுடிப்பாளா ஷத்ரியப் பெண்?” என்றாள். அவன் உள்ளம் படபடக்கலாயிற்று. “என்னில் உங்களுக்கு பிடித்ததென்ன?” என்றான். “இளமைந்தருக்குரிய நாணமும் தயக்கமும். சில தருணங்களில் சொல்திருந்தா சிறுமைந்தன் போலிருக்கிறீர்கள்.”

அசங்கன் மேலும் நாணி “ஆம், என்னால் விழிநோக்கி பேச இயலவில்லை என்றும் எதையேனும் பேசுகையில் நாக்குழறி குரல் தழுதழுக்கிறது என்றும் தந்தை சொல்வதுண்டு. ஆகவே அவை முறைமைகளை முன்னரே பலமுறை எனக்குள் சொல்லி தெளிவான சொற்றொடர்களாக ஒப்பித்துவிடுவேன்” என்றான். அவள் “அதற்கு இன்னும் காலம் உள்ளது. முடிசூடி அவையமர்ந்து முறைச்சொல் பேசி ஒன்றையே நாள்தோறும் நிகழ்த்தி சலிப்புற்று வாழ்வதை முடிந்தவரை கடத்திவைப்போம். அரசர்களின் இனிய வாழ்வு சூதர்களின் சொற்களில் மட்டும்தான். முடிந்தவரை இளமையுடன் இருங்கள். அறியாதவராகவும் பதற்றம் கொள்பவராகவும் நீங்கள் இருப்பதையே நான் விழைகிறேன்” என்றாள்.

அவன் “உங்களிடம் பதற்றமோ அறியாமையோ இருப்பதாக தெரியவில்லையே?” என்றான். சௌம்யை “எங்கள் குடியில் அத்தைதான் அனைவருக்கும் முற்காட்டு. பாரதவர்ஷத்தின் அரண்மனை மகளிர் அனைவருமே துருபதன்மகள்போல் ஆகவேண்டுமென்ற ஆழ்கனவை கொண்டிருக்கிறார்கள். எங்கள் அரண்மனையில் அனைவருமே அத்தையாக மாறும்பொருட்டு இளமையிலேயே முறையாக பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறோம்” என்றாள். அவன் “அவர்களின் நிமிர்வே நெஞ்சு நடுங்கவைப்பது. என்னால் அவர்களின் கால்களை மட்டுமே விழிதூக்கி பார்க்க இயல்கிறது” என்றான்.

ஆனால் அவள் உதடு சுழித்து “அத்தனை பேருருக் கொண்டு நின்றிருப்பது எத்தனை கடினம் என்றுதான் நான் எப்போதும் எண்ணுவேன்” என்றாள். “ஏன்?” என்று அவன் கேட்டான். “வாழ்நாளில் ஒருமுறையாவது தாவிக்களிக்க வேண்டுமென்று யானைக்கு எண்ணமிருந்தால் அதன் வாழ்வுக்கு என்ன பொருள்?” என்றாள். அவன் புரியாமல் தலையசைத்து “என்ன சொல்கிறீர்கள்?” என்றான். “என்னை ஒருமையிலேயே அழைக்கலாம். நாம் மணமுடித்து ஒரு பகல் முடிந்துவிட்டது” என்று அவள் சொன்னாள். அக்குரலின் ஒலிமாறுபாடால் அவன் உளம்விழித்து அவள் விழிகளை பார்த்தான். அவை மெல்லிய புன்னகையுடன் நனைந்த இலைநுனிகள் போலிருந்தன. அவள் தொண்டை மெல்ல அசைந்தது. உதடுகள் சிவந்து ஈரமாக இருந்தன. அவை நெளிவு கொள்வதைப்போல் தோன்றியது. மிக மந்தணமாக எதையோ சொல்லவருபவள்போல்.

அவன் “என்ன?” என்றான். அவள் எழுந்து அவன் தலையை அள்ளி தன்னை நோக்கி இழுத்து அவன் உதடுகளில் முத்தமிட்டாள். அவளுடைய துணிவும் முதிர்ச்சியும் அவனுக்கு ஆறுதல் அளித்தன, அடிதுழாவித் தவிக்கும் பெருக்கில் சிக்கிய பற்றுக்கொடி என. ஆனால் வேறெங்கோ ஒருவன் அதனால் சீண்டப்பட்டான். அவ்விரவில் அவ்விருநிலையில் நின்று அவன் அவளுடன் இருந்தான். பெண் உடலின் புதுமை அவனுடலில் காமத்தை எழுப்பியது. பெண்ணுடலெனும் கனவு கலைந்தது பிறிதொருவனை ஏமாற்றம் கொள்ளச்செய்தது. உடல்களின் ஊடாடுதல் நீர்துழாவிக் களிக்கும் சிறுவனென விடுதலை அளித்தது. மிகச் சிறிதாகிவிட்டோமோ என ஆழத்திலிருந்தவனை சலிப்புகொள்ள வைத்தது.

அவள் அவனை நன்றாக பழகிய ஒருவனை என ஆட்கொண்டாள். விலகி அவளருகே மல்லாந்து படுத்திருந்தபோது தன் கையை அவன் மார்பின்மேல் போட்டு தோளில் தலை சாய்த்து அருகே கிடந்த அவளிடம் “உன் அகவை என்ன?” என்றான். அவள் “பதினேழு” என்றாள். “என்னைவிட ஓர் அகவை குறைவுதான்” என்றான். “ஆம், அதற்கென்ன?” என்று அவள் கேட்டாள். “ஒன்றுமில்லை” என்றான். அவன் உள்ளம் போகும் திசையை உணர்ந்து அவள் “பெண்களுக்கு உளஅகவை சற்று மிகுதி என்பார்கள்” என்றாள். அவன் “ஆம்” என்றான். அவள் அவன் காதில் “அதனால் ஏமாற்றமா?” என்றாள். “ஏமாற்றமா?” என்றபடி அவளை திரும்பி தழுவிக்கொண்டு “ஏமாற்றம் என்றா தோன்றுகிறது?” என்றான். “இத்தருணத்தில் என்ன தோன்றுகிறதென்று இருவருக்குமே தெளிவிருக்காது” என்று அவள் சொன்னாள்.

“தருணத்தைப் பற்றி நன்கறிந்திருக்கிறாய்” என்றான். அவள் “முதிய பெண்டிர் பேசுவதில் பெரும்பகுதி இதைப்பற்றித்தானே?” என்றாள். அவன் “ஆண்கள் மிகக் குறைவாகவே இதைப்பற்றி பேசிக்கொள்வோம். மூத்தவர் முன்னிலையில் பேசுவது அரிதினும் அரிது” என்றான். “ஆம், அறிந்திருக்கிறேன்” என்று அவள் சொன்னாள். “இவ்வாறு நிகழும் என்று நான் எண்ணவில்லை” என்று அசங்கன் கூறினான். “ஏன்?” என்று அவள் கேட்டாள். “போருக்கென்று கிளம்பி வந்தேன்” என்றான். “இதுவும் போரின் ஒரு பகுதியே” என்றாள். “ஏன்?” என்று அவன் கேட்டான். “இத்திருமணம் ஏன்

நிகழ்கிறதென்று நம் இருவருக்குமே தெரியும்” என்றாள். “ஏன்?” என்று அவன் மீண்டும் கேட்டான். அவன் சித்தம் உறைந்திருந்தது.

அவள் பேசாமல் கிடந்தாள். “சொல்” என்றான். “உங்கள் குலத்தின் இளையோர் அனைவருமே போருக்கு செல்கிறீர்கள்.” அவள் சொல்லவந்ததை புரிந்துகொண்டு “ஆம்” என்று அவன் சொன்னான். அவள் பெருமூச்சுவிட்டு மல்லாந்து தன் இரு கைகளையும் மார்பில் கோத்து மாளிகையின் கூரையை பார்த்தபடி படுத்திருந்தாள். பின்னர் “அரசியரைப்போல வேறெங்கேனும் பெண்டிர் வெறும் கருப்பை மட்டுமாக எண்ணப்படுவார்களா என்று தெரியவில்லை” என்றாள்.

அவள் உள்ளம் செல்லும் திசை அவனுக்கு முற்றிலும் புரியவில்லை. ஆனால் சற்றுமுன் மிக அணுக்கமாக இருந்தவள் மிகத் தொலைவில் விலகிச்சென்றிருப்பதை உணரமுடிந்தது. தான் இருக்கும் இடத்திலிருந்து அவளை சென்றடைவதற்கு நெடுந்தொலைவு கடந்து பிறிதொருவனாக உருமாற வேண்டுமென்று எண்ணினான். அவள் “துயில் கொள்க!” என்றாள். உண்மையில் அவன் அப்போது துயிலையே விரும்பினான். கண்களை மூடிக்கொண்டபோது பிறிதொருவனாக ஆகிவிட்டதுபோல் தோன்றியது. விட்டுவிட்டு வந்த அனைத்தும் மிக உகந்தவையாக இருந்தன.

அவன் தன்னை ஒரு சிறுவனாக எண்ணிக்கொண்டான். நீர்நிலைகளில் கூச்சலிட்டபடி ஓடிப்பாய்ந்து நீந்தி கரையேறி தலைசிலுப்பி துளிசிதற நின்றிருக்கும் ஒருவனை அவன் கண்டான். ஒளிமேவிய அலைகள் கொந்தளிக்க நீர்மை அவன் கண்களுக்குள் நிறைந்திருந்தது. காவல்மாடத்தின் இருளுக்குள் விழிகளுக்குள் ஒளிததும்பி அலைப்பதன் விந்தையை உணர்ந்து அவன் தன்னுணர்வு கொண்டபோது ஒருவர் அருகே அமர்ந்திருப்பதுபோல அவன் உணர்ந்த உண்மையொன்று உடனிருந்தது. உடல் திடுக்கிட அவன் “ஆ!” என்றான். காவல்துணைவன் “என்ன?” என்றான். “ஒன்றுமில்லை” என்றான். அவன் உடல் நடுங்கிக்கொண்டே இருந்தது. விடாய்கொண்டு தொண்டை தவித்தது. கையூன்றி எழுந்து மரக்குடைவுக் கலத்தை அணுகி அள்ளி அள்ளி குளிர்நீரை உடலுக்குள் நிறைத்துக்கொண்டான். பின்னர் நிமிர்ந்து விண்மீன்களை நோக்கினான். பெருமூச்சுடன் கைகளை மார்பில் கட்டியபடி அவற்றின் பொருளிலா பெருவிரிவை நோக்கிக்கொண்டு நின்றிருந்தான்.

காவலரண் வாழ்க்கையில் ஓரிரு நாட்களிலேயே அசங்கனுக்குள் விசைகொண்டு ஊசலாடிய எண்ணம் இரு சொற்களௌன சுருங்கியது. ஒருமுனையில் சௌம்யை இருந்தாள். மறுமுனையில் அவன் எண்ணிய கணமே அஞ்சி பின்னடையும் அச்சொல் இருந்தது. முதலில் அச்சொல் கூரிய அம்பெனப் பாய்வதாக இருந்தது. பின்னர் அதை அவன் முற்றிலும் தவிர்த்தான். அதன் பின் அச்சொல் நோக்கி செல்லும் அனைத்தையும் தவிர்த்தான். ஆனால் அவனுள் இருந்து எழுந்து அனைத்துமாகிச் சூழ்ந்திருந்தது அச்சொல். பல்லாயிரம் படைக்கலங்களின் கூரொளியாக. உலோக ஒலியாக. ஆணைகளாக. முரசொலியும் கொம்போசையுமாக. இரவில் கோடிகோடி விழிகளாக நடுங்கி விண்ணைப் பார்க்கும் இருண்ட வெளியாக.

அதை அஞ்சி அவன் அவளை நோக்கி வந்தான். அவளை வகைவகையாக புனைந்துகொண்டான். அவளுடன் ரிஷபவனத்தின் சோலைகளிலும் நீரோடைகளிலும் களித்தான். மலைச்சரிவுகளில் அவளுடன்

விரைந்திறங்கி கூச்சலிட்டான். இளந்தென்றல் மேவும் கொடிமண்டபங்களில் தழுவியபடி அமர்ந்திருந்தான். அந்த இனிமை சலித்தபோது மெல்லிய துயர்களை உருவாக்கிக்கொண்டான். அவள் அவனை கன்றோட்டும் குலத்தான் என பழித்தாள். சினந்து அவளை ஐவரை மணக்கும் குலம் என்று வசைபாடினான். ஊடி அரண்மனையின் பிறிதொரு அறையில் இருந்தான். அவள் வந்து அவனை தழுவிக்கொண்டாள். கண்ணீருடன் அவர்கள் கூடினர். இனிமையை மிகையாக்க மேலும் மேலும் துயர் தேவையாகியது. அவளிடம் விடைபெற்று களம்சென்றான். வழிதவறி பல்லாண்டு கடந்து மீண்டான். நோயுற்று நைந்து உடல்தேறினான். காதலில் முதலில் கண்டடையும் தருணத்தின் இனிமை பிறிதெதிலும் இல்லை என்று அறிந்தான். எனவே மீண்டும் மீண்டும் சூழல்களை மாற்றி, காலங்களை மாற்றி அவளை கண்டடைந்துகொண்டே இருந்தான்.

ஆனால் தனிமையில் நாட்கள் நீண்டு நீண்டு அகன்றன. ஒருநாளில் பலநூறு வாழ்க்கைகள். பிறந்திறந்து முதிர்ந்து உருமாறினான். அவளும் அவனுள் மாறிக்கொண்டிருந்தாள். அவன் எதிலிருந்து தப்பி அவளிடம் சென்றுகொண்டிருந்தானோ அதுவே அவளென்று ஆவதை அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர் அவள் அதுவே என்றானாள். ஒரு வட்டம் முழுமையடைந்து இரண்டுமுனைகளும் இணைந்தன. அவன் உள்ளத்தை குளிர்ந்துறையச் செய்யும் நோக்குடன் அவள் அவன் முன் நின்றாள். விண்மீன் விரிந்த கரிய வான் என.

படைநகர்வு முழுவதும் சௌம்யை அவனுடன்தான் இருந்தாள். ஒவ்வொரு அந்தியிலும் மிக இயல்பாக சாத்யகியின் அணுக்கனாகிய நேமிதரன் வந்து அவனை அழைத்துச்சென்றான். ஒவ்வொரு முறையும் படைநகர்வு குறித்த எதையேனும் ஒன்றை பேசியபடி மேலும் அதை உசாவும் பொருட்டென அவனை அழைத்துச்சென்று படைப்பிரிவுக்குப் பின்னால் தனியாக வந்துகொண்டிருந்த ஏவலர்களின் பகுதிக்கு கொண்டுசென்றான். அங்கே யானைத்தோல் கூடாரத்திற்குள் அவள் அவனுக்காக காத்திருந்தாள். நாள் செல்லச் செல்ல காமம் தொடங்கியது முதல் இருந்த இருநிலையை அவன் இழந்தான். அதில் முற்றாக தன்னைக் களைந்து உடலென்றாகி திளைத்தான்.

அதுவரை எண்ணிய அனைத்திலிருந்தும் வேறுபட்டிருந்தது மெய்க்காமம். அது உடலே என்றுணர்ந்து, ஆம் உடலே என ஏற்று, ஆம் உடலன்றி வேறேது என தெளிந்து அகம் அமைந்த பின்னர் உடலிலிருந்து மேலும் வளர்த்து உள்ள விளையாட்டாக மாற்றிக்கொள்ள இயன்றது. சிறுபூசல்கள், ஊடல்கள், உளமுருகும் அணுக்கம் என ஒவ்வொரு நாளும் ஒரு நாடகவெளி விரிந்தது. ஒவ்வொரு அந்தியும் ஒரு தனி வாழ்வின் கீற்றெனத் தெரிந்தது. அவனை முற்றாக இழுத்து பதினாறு கைகளால் அணைத்து தன்னுள் வைத்திருக்க அவளால் இயன்றது. அவன் சலிக்கையில் விழைவை கொட்ட, விழைவு கொள்கையில் ஊடி மேலும் எழுப்ப, தனித்திருக்கையில் அறியாது உடனிருக்க, தனித்திருக்க விரும்புகையில் இயல்பாக அகல, எப்போதும் தனது ஒரு பகுதியென அவனை உணரவைக்க, அவனில் ஒரு பகுதி தானென்று காட்டி அவ்வுண்மையை மறைக்க அவள் திறன் கொண்டிருந்தாள்.

ஆனால் இருவருக்குள்ளும் நஞ்சுத்துளி என இருவரும் ஆழத்தில் உணர்ந்த ஒன்று இருந்தது. இனிப்பை சுவைகொண்டதாக்கும் துளிக் கசப்புபோல. அவர்களின் கூடல்களை அது விசைமிக்கதாக்கியது. ஒழிந்த பொழுதுகளில் மாற்று எண்ணமே இல்லாதவர்களாக ஆக்கியது. இன்னும் இன்னும் என செல்லும் நாள்நோக்கி ஓர் அகம் தவிக்க, இதோ இதோ என ஒவ்வொருநாளையும் நூறுமடங்கு நீட்டி விரித்துக்கொண்டது பிறிதொரு அகம். அவன் விழிகளில் அப்பித்து இருந்தது.

ஆகவே அவன் இளையோர் எவரும் அவனை முகம்நோக்கி பேசவில்லை. சினி மட்டும் “மூத்தவரே, நீங்கள் தானாகவே புன்னகை செய்கிறீர்கள்” என்றான். உத்ஃபுதன் அவன் தலையை தட்டினான். “தலையை தட்டுகிறார், மூத்தவரே!” என்றான் சினி.

குருக்ஷேத்ரத்தை அணுகிய அன்றிரவு என்றும் போலன்றி சௌம்யை சோர்ந்தும் தனித்தும் இருந்தாள். அந்நாளின் பொருளை அவன் உணர்ந்திருக்கவில்லை. படை குருக்ஷேத்ரத்தில் அமைந்தது முதல் ஒவ்வொருகணமும் அவன் கற்றுக்கொண்டிருந்தான். பொறுப்பேற்கையிலேயே கல்வி நிகழ்கிறது என்பதை உணரத் தொடங்கியிருந்தான். ஆவலுடன் அருகணைந்து அவளருகே அமர்ந்து அன்று தான் செய்த பணிகளைப்பற்றி உளஎழுச்சியுடன் பேசத்தொடங்கினான். அடுமனை கணக்குகளனைத்தையும் ஒழுங்குபடுத்தி திருஷ்டத்யும்னனுக்கு அளித்திருந்தான். அப்படைகளின் அடுமனைத் தேவை அவனை எண்ணிவியக்கச் செய்தது. எவரிடம் அதை சொன்னாலும் அவர்களும் வியந்து விழிநிலைப்பார்களென்று அறிந்திருந்தான்.

ஆனால் அவள் அச்சொற்களை கேட்டதாகத் தெரியவில்லை. அவள் உளவிலக்கம் அவனை வந்தடைந்தபோது அகஎழுச்சி ஓய்ந்து “என்ன?” என்றான். “ஒன்றுமில்லை” என்று அவள் விழியொளிரா புன்னகையுடன் சொன்னாள். “என்ன உணர்கிறாய்?” என்றான். “ஒன்றுமில்லை” என்று சொல்லி அவன் கையை தொட்டாள். “இல்லை, நீ வழக்கம் போலில்லை” என்றான். “ஒவ்வொரு நாளும் வழக்கம் போலத்தான் இருக்கிறேனா?” என்று அவள் கேட்டாள். “இல்லை, ஒவ்வொரு நாளும் ஒரு புதிய பெண்ணாக இங்கு வருகிறாய். ஆனால் இன்றுவரை நான் பார்த்த பெண்கள் அனைவரிலும் இருந்த உவகை உன்னிடம் இன்று இல்லை” என்றான். அவள் விழிகளை நோக்கி “உயிர்விசை குறைந்தவள் போலிருக்கிறாய்” என்றான்.

அவள் அவனை நோக்கியபோது விழிகள் மேலும் வெளுத்து ஒளி இழந்திருப்பதை கண்டான். ஏனென்றறியாது உளம் நடுக்கு கொண்டது. அருகே நின்று பிறிதொரு உளம் திகைத்தது. அவள் “குருக்ஷேத்ரத்தை அடைந்துவிட்டோம்” என்றாள். அவன் “ஆம்” என்றான். “இனி நாம் சந்திக்க இயலாது. அங்கே பெண்களுக்கு ஒப்புதலில்லை.” அவன் அப்போதுதான் முழுதுணர்ந்து தோள் தளர்ந்தான். அவள் அவன் கையை பற்றி “வெற்றிவீரராக நீங்கள் திரும்பி வரும்போது சந்திக்கிறேன்” என்றாள். அவன் அச்சொற்களை வெறுத்தான். பொருளிலாச் சொற்கள் உள்ளே வாழும் தெய்வமொன்றை சீற்றம்கொள்ளச் செய்கின்றன. “ஆம், மீண்டு வருவேன். மீண்டு வந்தாகவேண்டும்” என்று சொல்லி புன்னகைத்தான். வெறும் தசைவிரிவாக எஞ்சியது அப்புன்னகை.

அவள் அவன் கையை இறுகப்பற்றி “குருக்ஷேத்ரத்திற்குள் படை நுழைவதற்குள் திரும்பிச் சென்றுவிடவேண்டுமென்று எனக்கு ஆணை. தேர்கள் ஒருங்கிவிட்டன” என்றாள். “பாஞ்சாலத்தரசியும் யாதவப்பேரரசியும் வந்து அருகே மிருண்மயம் எனும் சிற்றூரில் தங்குவதாக சொன்னார்களே?” என்றான். “ஆம். ஆனால் என்னிடம் திரும்ப காம்பில்யத்திற்கே செல்லும்படி தந்தை ஆணையிட்டிருக்கிறார்” என்றாள் சௌம்யை. “காம்பில்யத்திற்கா?” என்றான். “ஆம்” என்று அவள் சொன்னாள். “ஏன்?” என்றான் அவன். அவள் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள். “ஏன்?” என்று அவன் மீண்டும் கேட்டான். “என் நாள் தவறியிருக்கிறது” என்றாள்.

அவனுக்கு அது புரியவில்லை. “அதனால் என்ன?” என்றான். அவள் புன்னகைத்தபோது அதில் அன்னையருக்குரிய கனிவிருந்தது. அவன் தலைமயிரை கைகளால் வருடி செவியோரம் ஒதுக்கி “அதன் பொருள் நம் குழவி ஒன்று இப்புவிக்கு

வர விரும்புகிறது என்பது” என்றாள். “நம் குழவியா?” என்றபின் அவன் திடுக்கிட்டவன்போல் மஞ்சத்திலிருந்து எழுந்து நின்றான். அவள் அவனை நோக்கி சிரித்து “ஆம், அதற்கென்ன?” என்றாள். “நம் குழவியா?” என்றான். “ஆம்” என்றாள். “எப்போது அது வெளியே வரும்?” என்றான். “இன்னும் ஒன்பது மாதங்களுக்குப் பின்” என்றாள் சௌம்யை.

அவன் “ஒன்பது மாதங்கள்! நான்கு பருவங்கள் கடந்திருக்கும். நெடுங்காலம்” என்றான். “ஆம், ஆகவே நான் காம்பில்யத்தில் சேடியரும் மருத்துவச்சிகளும் உடனிருக்க தங்க வேண்டுமென்று தந்தை ஆணையிட்டிருக்கிறார்” என்றாள். அவன் விரைவுடன் “செல்க! இங்கு போர் நிகழ்கிறது. இது கடுமையான சூழல். நம் குழவிக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது” என்று சொன்னான். “அது ஆற்றலுடையது. ஆற்றலுடன் மண்ணுக்கு வரும்” என்றாள் சௌம்யை. “நம் குழவி, அல்லவா?” என்று அவன் கேட்டான். “ஆம்” என்றாள். “என் குழவி, அல்லவா?” என்றான். “ஆம்” என்றாள் அவள். அவள் முகம் சிரிப்பில் மலர்ந்தது.

“குழவி” என்று அவன் தனக்குத்தானே என சொல்லிக்கொண்டான். பின்னர் அவளருகே அமர்ந்து “நம் குழவி என்றால் அது ஆணா பெண்ணா?” என்றான். “ஆண்” என்றாள். அவன் புருவம் சுளித்து “எப்படி தெரியும்?” என்றான். “எப்படியோ தெரிகிறது” என்றாள். “ஏன்?” என்று அவன் மீண்டும் கேட்டான். “அனைவரும் விரும்புவது ஆணே” என்றாள். “ஏன்?” என்று அவன் கேட்டான். “ஆணிலிருந்து குலம் பெருக வேண்டுமல்லவா?” என்றாள் சௌம்யை. அவன் “எங்கள் குலம் பெண்களினூடாக பெருகுவது” என்றான். “பெருக விழையும் குலம் ஷத்ரியருக்குரியது அல்லவா?” என்றாள் சௌம்யை. “ஆம்” என்று அவன் சொன்னான்.

அந்தச் சிற்றுரையாடல் வழியாக உணர்வெழுச்சிகள் அணைந்து மீண்டு “இதன் பொருட்டுத்தானா?” என்று அவன் தனக்கென்று சொல்லிக்கொண்டான். “ஏன், இதன் பொருட்டென்றால் அது பிழையா?” என்றாள். “இல்லை. இது ஒரு பெருவேள்விபோல. சொல்லப்போனால் மானுடர் புவியில் பிறப்பதின் முதன்மைப் பொருளும் கடமையும் இதுதான். சற்று முன்னர் வரை அதை நான் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன். இப்போது அதுவன்றி பிறிதெல்லாம் பொய்யென்று தோன்றுகிறது” என்று அவன் சொன்னான். “நம் குழவி என்று நீ சொன்னபோது என் உளம் நடுங்கியது. என் அகம் அதை ஏற்றுக்கொள்வதற்குள்ளாகவே உடல் அதை ஏற்றுக்கொள்வதுபோல் தோன்றுகிறது. இன்னும் பருத்துளி ஆகாத குழவி. வெறும் எண்ணமென்றே இப்போது இருப்பது. ஆனால் எத்தனை அணுக்கமாக அது தோன்றுகிறது! இப்புவியில் எனக்கு பிற எவருமே அணுக்கமானவரல்ல. எந்தையோ, உடன்பிறந்தோரோ, அன்னையோ, நீயோ கூட. அது நானே.” “ஆம், அவ்வாறு ஒரு உபநிஷத் வரி உண்டு” என்றாள் சௌம்யை. “மகனெனும் நீ நானேதான்.” அவன் மெய்ப்புகொண்டு “ஆம், நானேதான்” என்றான். “ஆம் ஆம்” என்று சொல்லிச் சொல்லி அவன் அமைதியடைந்தான். கைகளை மார்பில் கட்டியபடி தலைகுனிந்து விழிதிறந்து அமர்ந்திருந்தான். அவன் தோளைப்பற்றி மெல்ல அசைத்து “என்ன எண்ணம்?” என்று கேட்டாள். “நானே” என்றான். அவள் புன்னகைத்தாள். “நானே, அல்லவா?” என்றான். “ஆம், நீங்களே” என்றாள். “ஆம், நானே” என்று அவன் சொல்லிக்கொண்டான்.

அன்றிரவு அவர்கள் உடல் தழுவியபடி, சொல்லின்றி ஒருவரை ஒருவர் நோக்கி, படுத்திருந்தனர். அவள் விழிகளை சந்தித்தபோது புன்னகைத்து “என்ன?” என்றாள். “ஏன்?” என்றான். அவள் “இன்று கைகள் ஓய்ந்திருக்கின்றன” என்றாள். “ஏன்?” என்றான். “இன்று வேண்டாமா?” என்றாள். அவன் அவள் சிரிப்பால் தானும் சிரித்து

“வேண்டாம்” என்றான். அவள் “இன்றிரவு தாண்டினால் போர் முடிந்த பின்னரே வாய்ப்பு” என்றாள். அவன் “வேண்டாம், நம் மைந்தன்…” என்றான். “மைந்தன் இப்போது வெறும் எண்ணம் மட்டும்தான்” என்றாள் சௌம்யை. “எண்ணமாக இருந்தாலும் உடனிருக்கிறான்” என்றான். அவள் சிரித்தபோது முகமும் விழிகளும் ஒளிகொண்டிருந்தன.

“உன்னை இனி நீ மட்டுமே என என்னால் பார்க்க இயலாது” என்று அசங்கன் சொன்னான். “அஞ்சவேண்டியதில்லை. இப்போது அதற்கு தடையேதுமில்லை என்று மருத்துவச்சி சொன்னாள்” என்றாள் சௌம்யை. “மருத்துவத்தால் அல்ல, என் உள்ளத்தால்” என்றான் அசங்கன். அவள் “நன்று” என்று சொல்லி அவன் குழலை தன் விரலால் வருடினாள். அவன் அவளருகே கருக்குழவிபோல் உடல் சுருட்டி படுத்துக்கொண்டான். அவன் குழலை கைகளால் சுருட்டி கசக்கி நீவி, காதுமடல்களை வருடி, கழுத்தையும் தோளையும் கையோட்டியபடி அவள் அருகே படுத்திருந்தாள். கன்றை நக்கும் பசு போலிருந்தாள்.

அவன் அன்றிரவு முழுக்க துயிலாது அருகே படுத்திருக்க வேண்டும், இமைக்காது அவளை நோக்கிக்கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அவன் விழிகள் துயிலில் சரியத் தொடங்கின. தன் மூச்சொலியை தானே கேட்டு அவன் கையூன்றி எழுந்தமர்ந்தான். “என்ன?” என்று அவள் கேட்டாள். “துயில் வருகிறது” என்றான். “துயிலுங்கள்” என்றாள். “இல்லை, நான் துயில விரும்பவில்லை. இவ்விரவை இழக்கமாட்டேன்” என்றான். “துயில்வதனால் இழப்பதாக யார் சொன்னது? படுத்துக்கொள்ளுங்கள்” என்றாள். அவன் தயங்க அவன் கையைப்பற்றி அருகணைத்து தாழ்ந்த குரலில் “படுத்துக்கொளுங்கள்” என்றாள்.

அவன் முகத்தை இழுத்து தன் முலைகளுக்கு நடுவே வைத்து அணைத்துக்கொண்டாள். “துயில்க!” என்று அவள் அவன் காதில் சொன்னாள். “உம்” என்று அவன் சொன்னான். “துயில்க! துயில்க!” என்று மேலும் மெதுவாக சொன்னாள். அவன் உடலுக்குள்ளிருந்து அவள் அச்சொற்களை உரைத்ததுபோல் உணர்ந்தான். அவன் உடற்தசைகள் ஒவ்வொன்றும் மெல்ல தளர்ந்தன. “நம் மைந்தன்” என்றான். “அவனுக்கென்ன?” என்றாள். “அவன் முகம் என் முகம் போலிருக்குமா?” என்றான். “ஆம்” என்று அவள் சொன்னாள். “ஆம், நானேதான்” என்று அவன் சொன்னான். புன்னகைத்தபடி மேலும் தன் முகத்தை அவள் மென்முலைகளுக்கு நடுவே புதைத்துக்கொண்டான். அவள் அவன் தலையையும் தோளையும் மெல்ல தட்டிக்கொண்டிருந்தாள்.

முன்புலரியின் இருளுக்குள் உள்ளுணர்ந்து அவன் எழுந்தபோது அவள் தன் ஆடைகளை அணிந்துகொண்டிருந்தாள். “ஏன்?” என்றான். “புலரி அணுகுகிறது” என்றாள். “இல்லையே, ஒலி மாறுபாடுகள் தெரியவில்லை” என்றான். “கரிச்சான் ஒலியெழுப்பிவிட்டது” என்றாள் அவள். அவன் விழிகளைத் தவிர்த்து “விடைகொடுங்கள், மீண்டும் காண்போம்” என்றாள். அவன் எழுந்து அவளை அணுகி இடைவளைத்துப் பற்றி தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டான். அவள் உதடுகளை அழுந்த முத்தமிட்டான். அவை மெல்லிய துடிப்பும் வெம்மையும் கொண்டிருந்தன. கன்னங்களில், கழுத்தில் முத்தமிட்டு இரு கைகளையும் சேர்த்துபற்றி தன் நெஞ்சோடு வைத்துக்கொண்டான். அவள் கண்களில் மெல்லிய ஈரப்படலம் இருந்தது. உதடுகள் புன்னகைத்தன.

“போர் எனில் அஞ்சலாகாதென்று சொல்லி வளர்க்கப்பட்டவன் நான். ஆனால் எப்போதுமே என்னுள் அச்சம் இருந்து கொண்டிருந்தது” என்றான். “அஞ்சாதவர் எவருமில்லை” என்று அவள் சொன்னாள். “அப்படித்தான் நானும் எண்ணுகிறேன்.

உன்னை அடைந்தபோது அவ்வச்சம் மிகுந்தது. களம்படுவதைப்பற்றி எண்ணும்போதே என் அகம் நடுங்கத்தொடங்கும். ஆகவே அவ்வெண்ணத்தையே முற்றிலும் ஒதுக்கினேன். இன்று களம்படுவது ஒன்றும் பெரிதல்ல என்று தோன்றுகிறது.” அவள் “நாம் ஏன் அதை பேசவேண்டும்?” என்றாள். “இல்லை, களம்படினும் நான் இருப்பேன். மீள மீள நிகழ்வேன். அதை சொல்லவந்தேன். அவன் நானேதான்” என்றான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் முகம் அவனால் புரிந்துகொள்ள முடியாத ஓர் உணர்வை காட்டியது. சலிப்போ இகழ்ச்சியோ ஒரு நிழலாட்டமென வந்து சென்றதா என ஐயுற்றான். மேலாடையை எடுத்துச் சுழற்றி இடையில் செருகியபடி “விடைகொள்கிறேன்” என்றாள். “சென்று வருக!” என்று அவன் சொன்னான். அவள் சற்று விலகி பின் திரும்பி அவனை பார்த்ததும் மெல்லிய விம்மலோசையுடன் பாய்ந்து அவன் கழுத்தைச்சுற்றி கைகளை வளைத்து தலைமுடியைப் பற்றி இழுத்து குனித்து வெறிகொண்டு அவனை முத்தமிடலானாள். அவன் முகத்திலும் கழுத்திலும் தோள்களிலும் பனித்துளிகள் உதிர்வதுபோல் அவள் முத்தங்கள் விழுந்தன.

பின்னர் நீண்ட விசும்பலோசையுடன் ஓய்ந்து அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள். அவள் விழிநீர்த்துளிகளை அவன் தன் மார்பில் வெம்மையாக, பின் குளிர்ந்துவழிவதாக உணர்ந்தான். அவள் அவனை சற்று உந்தியதுபோல் விலக்கி விரைந்த காலடிகளுடன் கூடாரத்தைவிட்டு வெளியே சென்றாள். அங்கு நின்றிருந்த சேடியிடம் கையால் தொடரும்படி காட்டிவிட்டு இருளில் நடக்க சேடி அவனை திரும்பிப்பார்க்காமல் உடன் நடந்தாள். அவன் அவள் சென்று இருளில் மறைவதை பார்க்க விரும்பாமல் குடிலை நோக்கி திரும்பிக்கொண்டான். பின்னர் நீண்ட பெருமூச்சுடன் தன் உடலை தளர்த்திக்கொண்டான். அவள் கண்ணீர் அவன் கன்னங்களிலும் மார்பிலும் மெல்லிய பசைபோல உலர்ந்து ஒட்டியது.

அசங்கன் காவல்மேடையை நோக்கி சென்றபோது உலோகப்பரப்புகள் மின்னும் அளவுக்கு காற்றில் ஒளியிருந்தது. கதிரவன் மறைந்த பின்னரும் முகில்களின் மேற்குமுகங்கள் மிளிர்ந்துகொண்டிருந்தன. படைகள் சிறுகுழுக்களாக பிரிந்து தங்கள் அணியமைவுகளை நோக்கி சென்றுகொண்டிருக்க அதுவரை எழுந்துகொண்டிருந்த போர்முழக்கம் காற்று திசைமாறுவதுபோல் பிரிந்து கலைவோசையாக மாறிச் சூழ்ந்தது. மரப்பலகை விரிக்கப்பட்ட படைப்பாதைகளினூடாக புண்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு வண்டிகள் சகட ஒலியுடன் கடந்து சென்றன. போரூழியர்களுக்கான ஆணைகளை இடும் சிறுகொம்புகள் குருவிகள்போல செவிகீறும் ஒலியெழுப்பின. அவ்வொலிகளால் களம் இணைத்து நெய்யப்பட்டது. அசங்கன் ஒரு பெரிய சிலந்திவலை என அவ்வொலி சாவுப்பரப்பென அகன்றிருந்த குருக்ஷேத்ரத்தை மூடுவதாக உள்ளத்தால் உணர்ந்தான்.

வண்டிகள் பின்கட்டையுடன் நுகம் முட்ட சென்றுகொண்டிருந்த ஏழு பாதைகளை நின்று, காத்து, இடைகண்டு கடந்து அவன் காவல் மாடத்தை அடைந்தான். அவனைக் கண்டதும் மேலிருந்த காவலன் எழுந்து சங்கொலி எழுப்பிய பின் தன் வில்லையும் அம்புத்தூளியையும் எடுத்துக்கொண்டு மறுபக்கம் வழியாக இறங்கிச் சென்றான். அசங்கனின் நரம்புகள் தளர்வுற்று உடற்தசைகள் மெல்லிய உளைச்சலுடன் தொய்ந்திருந்தன. கணுமூங்கிலைப் பற்றி ஏறும்போது எலும்புகள் உரசிக்கொள்வதுபோல் வலித்தன. இருமுறை நின்று மூச்செறிந்து மேலே

சென்றான். மேலே செல்லுந்தோறும் காற்றின் வெம்மை மாறுபடுவதை காதுமடல்களில் உணர்ந்தான்.

அசங்கன் மேலேறி காவல் மாடத்தின் சிறிய சதுரப்பரப்பை அடைந்தான். அங்கு மரக்குடைவுக்கலத்தில் குடிநீர் வைக்கப்பட்டிருந்ததையே அவன் நா முதலில் நாடியது. தன் வில்லையும் அம்புத்தூளியையும் தூணில் தொங்கவிட்டு, வேலை சாய்த்து வைத்துவிட்டு நீர் அருந்தினான். மூங்கில் நீட்சியில் உடலெடையை வைத்து கைகளைக் கட்டி நின்றதுபோல் அமர்ந்தான். மேலெழுந்ததும் கீழே நிறைந்திருந்த குருதியும் சீழும் கலந்த கெடுமணம் சற்றே குறைந்து நெஞ்சு ஆறுதல் கொண்டது. குமட்டி அதிர்ந்துகொண்டிருந்த வயிறு சற்றே அமைந்தது.

அங்கிருந்து பார்த்தபோது இரு படைகளும் மேலும் மேலுமென விலகி தங்களுக்குள் சுருங்கிக்கொண்டிருப்பதை காணமுடிந்தது. சேறு உலர்ந்து வெடிப்பதுபோல் படைப்பெருக்கின் நடுவே நூற்றுக்கணக்கான பாதைகள் உருவாயின. அவை பெருகி ஒன்றுடன் ஒன்று இணைந்தன. பின் நேராகி வகுக்கப்பட்ட வயல்வரப்புகளென்றாயின. நாற்றுநிரைபோல படையணிகள். அவற்றுக்குள் மேலும் மேலும் சிறிய அணிகளாக தங்களை தொகுத்துக்கொண்ட படைவீரர்கள் ஆங்காங்கே அமர்ந்தும் படுத்தும் ஓய்வு கொள்ளத்தொடங்கினர்.

அவன் பெருமூச்சுவிட்டபடி மருத்துவநிலைகளை நோக்கி ஒழுகிச் சென்றுகொண்டிருந்த வண்டிநிரைகளை பார்த்தான். முந்தைய நாள் புண்பட்டவர்கள் பெரும்பாலானவர்கள் உயிரிழந்துவிட்டிருந்தமையால் இப்போது செல்பவர்களுக்கு இடம் தேடுவது அரிதானதாக இருக்காது என்று தோன்றியது. இரண்டு நாள் போரிலேயே பாண்டவப் படையின் பெரும்பகுதி அழிந்துவிட்டிருந்தது. இனிவரும் போரில் தொடர்ந்து கொன்று குவிக்கப்பட்டாலும்கூட புண்பட்டோரும் இறந்தோரும் எண்ணிக்கை குறைவாகவே இருப்பார்கள் என்று அவன் மேலும் கசப்புடன் எண்ணிக்கொண்டான். தன் உடலில் குடியேறிய குமட்டல் உள்ளத்தில் உணர்வாக மாறி எல்லா எண்ணங்களுடனும் கலந்துவிட்டிருந்ததை அறிந்தான்.

மருத்துவநிலைக்குச் சென்று பார்க்கவேண்டுமென்று அவன் உள்ளம் விழைந்தது. ஆனால் பகல் அவனுக்கு அயலாகிவிட்டிருந்தது. விடிந்ததுமே படைகளுக்குப் பின்புறம் அமைக்கப்பட்டிருந்த இடையளவு உயரமான தோல் கூடாரங்களுக்குள் புகுந்துகொண்டு துயிலவேண்டுமென்று ஆணை. இரவில் பணியாற்ற வேண்டிய மருத்துவர்களும் ஏவலரும் சுடலைப் பணியாளர்களும் பிறரும் பகலில் எங்கும் நடமாடக்கூடாது, துயின்றே ஆகவேண்டுமென்று ஏவலர் படைகளை ஆண்ட சிகண்டியின் பிறழ்விலா ஆணை இருந்தது. முதல்நாள் போரில் எழுந்து செவிகளைத் துளைத்து, உடலெங்கும் விதிர்ந்து, வயிற்றையும் நெஞ்சையும் அதிரவைத்த பெருமுழக்கத்தால் அவனால் சற்றும் துயில இயலவில்லை. அவ்வோசையில் அவன் மிதந்து அலைந்தான். அவனுள் அது போர்வெளி ஒன்றை உருவாக்கியது.

பலமுறை எழுந்து அமர்ந்தான். அவனருகே படுத்திருந்த முதுகாவலர் உக்ரர் “எழுந்தமர்வது தண்டனைக்குரியது. படுத்துக்கொள்ளுங்கள், இளவரசே” என்றார். “என்னால் துயில முடியவில்லை. இப்போரொலி என்னை பித்தனாக்குகிறது” என்றான். “இன்று எவராலும் துயில இயலாது, ஏனெனில் இவ்வொலி புதியது. நாளை பெரும்பாலானவர்கள் துயின்றுவிடுவார்கள். இவ்வொலியை நம் துயிலுக்குரிய தெய்வங்கள் புரிந்துகொண்டுவிடும்” என்றார் அவர். பதைக்கும் குரலில் “அங்கு பல்லாயிரவர்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள்” என்றான் அசங்கன். “ஆம், அதனால் என்ன? போரென அறிந்துதானே இங்கு வந்தோம்?” என்றார் அவர்.

அசங்கன் பற்களை ஓசையெழக் கடித்து உள்ளங்கையில் நகங்கள் புதையுமளவுக்கு இறுகப்பற்றி குனிந்து அமர்ந்திருந்தான்.

“அகிபீனா இருக்கிறது, உண்கிறீர்களா?” என்றார் உக்ரர். “இல்லை, வேண்டாம்” என்றான். உக்ரர் “போரை நடத்துவதாயினும் இதுவன்றி எவரும் களம் நின்றாட இயலாது. கொல்வதும் அதுவே, வலி தாங்கச்செய்து உயிர் பிழைக்க வைப்பதும் அதுவே” என்றார். கையூன்றி எழுந்து தன் சிறு தோல்பையிலிருந்து கரிய உருளை ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டி “வாயிலிட்டு அதக்கிக்கொள்ளுங்கள். கரைந்து ஊறும் எச்சிலை மட்டும் விழுங்கிக்கொண்டிருங்கள்” என்றார். “வேண்டாம்” என்றான். “வெல்லமிட்டு உருட்டப்பட்டது. இனிய சுவையுடையது. உங்கள் உள்ளம் இப்போது கொடுங்காற்றில் கொடிக்கூறை என பறந்துகொண்டிருக்கும். அதை எடைகொண்டு அமையவைக்க இதனால் இயலும்” என்றார். அவன் பேசாமல் அமர்ந்திருக்க “தயங்கவேண்டாம். தங்கள் தந்தை உட்பட இந்தப் போரில் அகிபீனா உண்ணாத எவருமில்லை” என்றார்.

அவன் ஏன் தயங்கினான் என்பது அவனுக்கு தெரிந்தது. அதை வாங்கி கையில் உருட்டிப்பார்த்தான். ஆட்டுப்புழுக்கை போலிருந்தது. அவர் புன்னகைத்து “ஆட்டுப்புழுக்கை போலவேதான். ஆட்டுப்புழுக்கையின் அளவே ஒரு மாத்திரை என்பார்கள். உண்ணுங்கள்” என்றார். அவன் அதை தன் வாயிலிட்டு உதடுகளை மூடிக்கொண்டு மீண்டும் படுத்தான். வெல்லத்தின் முதற்சுவைக்குப் பிறகு மென்கசப்பு கொண்ட தழைச்சுவை எழுந்தது. தழை உண்ட ஆட்டின் புழுக்கை. மெல்லிய குமட்டல் எழுந்தாலும் இனிப்பு அதை உணவென்று ஆக்கியது. வழுவழுப்பான எச்சில் சுரந்து தொண்டையை நனைத்தது. அதை அவன் விழுங்கிக்கொண்டே இருந்தான்.

கண்ணை மூடியபோது ஓசைகள் மிக அருகிலெனத் தெரிந்தன. கூடாரங்களுக்கு மேல் அம்புகள் பறந்து செல்வது போலவும் அலறி விழுபவர்கள் கூடாரத்தை சுற்றியே சிதறிக்கிடப்பது போலவும் தோன்றியது. கூடாரத்தின் கீழ்விளிம்புகளினுடாக குருதி ஊறி உள்ளே வருகிறது. தரையில் நனைந்துகொண்டிருக்கும் செங்குருதி. அதன் வெம்மை எழும் குமிழியுடைவுகளின் மெல்லிய ஓசை. மண்ணில் அது ஊறி இறங்குவது வெங்கல்லில் நீர் கொதித்து மறைவதுபோல ஒலித்தது. குருதி வழிந்து அவன் உடலை நோக்கி வளைந்து வந்தது. அவன் எழ விரும்பினான். அவன் உடல் முற்றாக உதிர்ந்து சிதறி தனித்தனித் துண்டுகளாக கிடந்தது. அதை குருதி தழுவியது. அவன் படுத்திருந்த மண்பரப்பு சேறாகி நெகிழ்ந்து அவன் உடலை வாங்கிக்கொண்டது. குருதியில் அவன் மிதந்து கிடந்தான்.

வெம்மையான குருதி வியர்வைபோல் அவன் உடலை முற்றாக மூடியது. ஓசைகள் மிகத் தொலைவிலென அகன்று சென்றுவிட்டிருந்தன. வேறெங்கோ நிகழ்கின்றது போர். அவன் தன் கைகால்கள் துண்டாகி குடிலுக்குள் வெவ்வேறு மூலைகளிலாக கிடப்பதை உணர்ந்தான். அந்தக் கால்களின்மேல் கடிக்கும் கொசுக்களை உணரமுடிந்தது. தலை எடைமிக்க இரும்புக்குண்டென முருக்கு மரத்தடியாலான தலையணைமேல் படிந்திருந்தது. அதை அசைக்க எண்ணினான். அவ்வெடை கழுத்தை தெறிக்க வைத்தது. இருண்ட வானை பார்த்தபடி படுத்திருந்தான். இது வானல்ல, தோல் கூடாரத்தின் அடிப்பரப்பு. ஆனால் அங்கு விண்மீன்கள் எப்படி வந்தன? விண்மீன்களின் ஒளிகள் நீண்ட வெள்ளிச்சரடுகளாக நீண்டு வந்தன. அவன் உடலை அம்புகளாக துளைத்தன. மண்ணுடன் அவனை அசையவிடாமல் தைத்தன. ஒளிரும் வெள்ளிக்கம்பிகள். கூரியவை, குளிர்ந்தவை. விண்மீன்களுக்கு

நடுவே இருக்கும் இருளுக்குள் எவரோ அசைகிறார்கள். வான்படலத்தைக் கிழித்து உதிர முயல்கிறார்கள்.

மேலும் மேலும் விண்மீன்களை அள்ளிப்பரப்பினர். எவரோ “மூன்று” என்றார். என்ன சொல்கிறார்? “மூன்று!” என்று மிக அருகில் ஒலித்தது மீண்டும் ஒரு குரல். “மூன்று.” அதற்கு என்ன பொருள்? மூன்று! மூன்று! மூன்று என்பது ஓர் எண். அதன் பொருளென்ன? மூன்று என்பது ஒரு சொல். ஒரு சொல் எப்படி எண்ணிக்கையை குறிக்கிறது? ஒற்றைச்சொல்லில் எப்படி பல்லாயிரங்களை குறிக்கமுடிகிறது? மூன்று! மீண்டும் அவன் மூன்று என உணர்ந்தபோது ஓசைகள் மாறுபட்டிருந்தன. அவனருகே உக்ரர் எழுந்து அமர்ந்திருந்தார். அவன் பதறி “என்ன? என்ன?” என்றான். வேலுடன் பெரும்படை ஒன்று வாயிலில் நின்றுள்ளதா என்ன? கொலைவெறியுடன் அவனுக்காக வந்தவர்கள்?

“பொழுதணையத் தொடங்குகிறது. இன்னும் சற்று நேரத்தில் படை பின்வாங்குவதற்குரிய முரசுகள் ஒலிக்கும்” என்றார் உக்ரர். “எப்படி தெரியும்?” என்று அவன் கேட்டான். அவர் கூடாரத்தின் சிறிய ஊசித்துளையினூடாக உள்ளே விழுந்து கிடந்த ஒளிக்கோட்டின் சாய்வை சுட்டிக்காட்டினார். அவன் “நான் துயின்றுவிட்டேனா?” என்றான். “ஆழ்துயில்” என்றார். கரிய பற்கள் தெரிய சிரித்து “முதல்முறையாக அகிபீனாவை எடுக்கிறீர்கள். ஆகவே நற்பயன் கிடைத்துள்ளது” என்றார். அசங்கன் சோர்வுடன் “நான் துயின்றிருக்கக்கூடாது” என்றான். “ஏன்?” என்று அவர் கேட்டார். “போர்! அதை பார்க்கவே இத்தனை தொலைவு வந்தேன். இது ஓர் அருந்தருணம்.”

உக்ரர் புன்னகைத்து “உங்களுக்கான தருணம் வாய்க்கவேண்டும். அப்போது திகட்டத் திகட்ட பார்ப்பீர்கள்” என்றார். “என்னை காக்க எண்ணுகிறார் திருஷ்டத்யும்னர். ஆகவேதான் காவலுக்கு அனுப்பியிருக்கிறார்” என்றான். உக்ரர் “சென்றவர்களில் மீண்டவர்கள் குறைவு. இன்னும் சில நாட்கள் கடக்கையில் இங்குள்ள ஏவலர்களிடம்கூட படைக்கலத்தை அளித்து போர்முகப்புக்கு அனுப்பிவிடுவார்கள் என்று தோன்றுகிறது” என்றார். வாய்விட்டு நகைத்து “ஆகவே உங்களுக்கும் வாய்ப்பு வரும். கலங்கவேண்டாம். நாமெல்லாம் களப்பலியாவது தெய்வங்களுக்கு உகந்ததோ இல்லையோ அரசர்களுக்கு தேவையானது” என்றார்.

அவன் கையூன்றி எழுந்தபோது உடலுக்குள் திரவங்கள் குலுங்க கூடாரம் படகென மிதந்தது. “முதலில் சற்று குமட்டும். வாயுமிழத் தோன்றினால் உமிழ்ந்துவிடுங்கள். நிறைய வெல்லமிட்டு ஒரு மொந்தை புளிப்புநீர் அருந்தினால் உடலிலிருந்து அகிபீனா வெளியே செல்லும்” என்றார். “தெளிந்துவிடுவேனா?” என்றான். “இல்லை, அகிபீனா உடலிலிருந்து செல்ல ஒரு முழு நாளாகும். ஆனால் அது உடலில் இருப்பது நல்லது. மேலே காவலுக்கு அமர்கையில் காலத்தை அது அழுத்தி சுருட்டி அளிக்கும்” என்றார் உக்ரர். “நான் காவலுக்கு நன்கு பழகியிருக்கிறேன்” என்றான் அசங்கன். “ஆம். ஆனால் போர் முடிந்த இரவின் காவலுக்கு இன்னும் பழகவில்லை” என்றபின் உக்ரர் மீண்டும் புன்னகைத்தார். அவனை சிறுகுழவியெனக் கருதும் புன்னகை. அவன் எரிச்சலுடன் திரும்பிக்கொண்டான்.

அவன் வெளியே சென்று முகங்கழுவ குனிந்தபோது வயிறு குமட்டி உடல் உலுக்கியது. மும்முறை வாயுமிழ்ந்து கொப்பளித்த பின் கண்கள் சுழல அங்கு அருகிலேயே மரத்தடியில் அமர்ந்து தலையை அடிமரத்தில் சாய்த்துக்கொண்டான். உக்ரர் அவரே சென்று பெரிய மொந்தை நிறைய புளித்தநீர் கொண்டுவந்து அளித்தார். அதை பார்த்ததுமே அவன் வயிறு குமட்டியது. “வேண்டாம்” என்றான்.

“அருந்துக! இது உங்கள் ஆற்றலை மீட்டளிக்கும். அருந்தாமல் உங்களால் காவல்மாடத்தில் கணுமூங்கில்மேல் ஏற முடியாது” என்றார்.

அவன் அதை வாங்கி இரு கைகளாலும் பற்றி முகர்ந்தான். மீண்டும் வயிறு குமட்டி எழுந்தது. அவன் முகம் சுளிப்பதைக் கண்டு “முதல் மிடறு வயிற்றுக்குள் இருக்கும் அமிலத்தை கரைக்கும். அதன் பின்னர்தான் விடாய் எழும்” என்றார். அவன் கண்களை மூடிக்கொண்டு இரு மிடறு விழுங்கினான். வயிற்றுக்குள் நெருப்பின் அலை ஒன்றெழுந்து கொப்பளித்து அடங்கியது. அவர் கூறியது போலவே விடாய் எழுந்து மேலும் மேலுமென நீர் கேட்டது. அவன் முழுக் கொப்பரையையும் குடித்து நிலத்தில் வைத்து வாயை துடைத்தபின் கண்களை மூடி அமர்ந்தான். “சில கணங்களில் உடலெங்கும் இந்த நீர் சென்று நெருப்பை அணையவைப்பதை காண்பீர்கள்” என்றார் உக்ரர்.

நன்கு வியர்த்து மெல்லிய தலைசுற்றலுடன் அவன் விழிதிறந்தபோது அருகில் உக்ரர் இல்லை. மரத்தைப் பற்றியபடி எழுந்து நின்றான். உடல் நிலைகொண்டுவிட்டதுபோலத் தோன்றியது. ஆனால் கால்களைத் தூக்கி வைத்தபோது ஒவ்வொரு அடிக்கும் காற்றில் எழுந்து மிதந்து நெடுந்தொலைவு செல்வதுபோல எண்ணினான். பலரை தலைக்குமேல் கடந்து காலூன்றுவதுபோல. வில்லையும் அம்புத்தூளியையும் எடுத்துக்கொண்டு கணுமூங்கிலருகே சென்று நின்றான்.

பின்னர் உணர்ந்தபோது காவல் மாடத்தின்மேல் இருந்தான். சூழ நோக்கியபோது பந்தங்கள் ஒவ்வொன்றாக எரிந்துகொண்டிருப்பதை கண்டான். பல்லாயிரம் மானுட உடல்கள் விழுந்து கிடக்கும் பெரும்பரப்பு. அதை எந்த எண்ணமுமில்லாமல் நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் திரும்பி மறுபுறம் காடுகளுக்குள்ளிருந்து விளக்கொளிச் சரடுகளாக வந்துகொண்டிருந்த கிராதர்களையும் நிஷாதர்களையும் பார்த்தான். பின்னர் உணர்ந்தபோது ஓசைகள் அடங்க தென்மேற்கே சிதைநெருப்புகள் காட்டுத்தீபோல எழுந்து தழலாடுவதை பார்த்தான். தீ சிதறிச் சிதறி கிழிந்து வானில் எழ விழிவிலக்கவொண்ணாது நோக்கிக்கொண்டிருந்தான். ஒருமுறை நோக்கினால் அதிலிருந்து விலக நெடுநேரமாயிற்று. பல நாட்கள், மாதங்கள், ஆண்டுகள். பின்னர் தன்னை உணர்ந்தபோது வானில் ஒளி எழுந்திருந்தது.

அவன் உடலை எடை தாளா கணுக்கால்கள் தெறிக்க, நிலையழிந்து தோள்கள் ஊசலாட சுமந்து சென்று தன் குடிலை அடைந்தான். அங்கிருந்த உக்ரர் அவனை நோக்கி புன்னகைத்து “அகிபீனா இன்று தங்களுக்கு தேவைப்படுமா, இளவரசே?” என்றார். “ஆம், வேண்டும்” என்று அவன் சொன்னான். “அது இன்றி துயில இயலாது.” உக்ரர் கனிவுடன் “எடுத்துவைத்திருக்கிறேன்” என்றார். “என் இளையோர்… அவர்கள் எங்கிருக்கிறார்கள்?” என்று அவன் கேட்டான். “போரில் உறவுகளுக்கு பொருளேதுமில்லை. எங்கிருந்தாலும் அவர்களுக்கும் எவரேனும் அகிபீனா அளித்திருப்பார்கள். உண்க!” என்றபடி அவர் சிறிய கரிய உருளையை எடுத்து அளித்தார். அவன் அதை வாங்கி வாயிலிட்டு அதக்கியபடி கண்களை மூடி படுத்துக்கொண்டான்.

அதன் இனிய சாறு உடலுக்குள் ஒழுகி இறங்கியது. அவன் படுத்திருந்த தரை மெல்லிய ஊன்பரப்பென்றாயிற்று. மூச்சுவிடும் பசுவின் வயிற்றின்மேல் படுத்திருப்பதுபோல அசைந்தது. எங்கோ முரசொலிகள் எழுந்தன. அம்புகளின் சிறகதிர்வு. அலையோசை. பாறைகள்மேல் அலைத்து மலைச்சரிவில் இறங்கிச்செல்லும் நீர்ப்பெருக்கின் ஓசை. அவன் கண்களுக்குள் ஒரு

ஒளிப்புள்ளியை பார்த்தான். மின்மினிபோல அது எழுந்து எழுந்து பறந்து சுழன்றது. உள்ளத்தால் அதை பற்ற முயன்றான். அது எழுந்து இருளில் விழுவதுபோல் தொலைவுக்குச் சென்றது. அதை தொடர்ந்து அவனும் சென்றான். செல்லச் செல்ல விசை கூடிக்கொண்டே சென்றது. முடிவிலி நோக்கி அவன் விழுந்துகொண்டே இருந்தான்.

விழித்துக்கொண்டபோது முதலில் திரும்பி விழிதுழாவி அந்த ஒளிச் சரடைத்தான் பார்த்தான். முந்தைய நாள் போலவே வெள்ளிக்கம்பியென அது நிலத்தில் ஊன்றி நின்றிருந்தது. விரல் நீட்டி அதன் முனையை கையிலேந்தினான். விரல்கள் குருதி நனைந்ததுபோல் சிவந்திருந்தன. ஆனால் உள்ளங்கையில் ஒரு வெள்ளிநாணயம். உக்ரர் “பொழுதாகிறது, இளவரசே” என்றார். “ஆம்” என்றபடி அவன் எழுந்துகொண்டான். அன்று குமட்டலெடுக்கவில்லை. புளிநீர் அருந்தியபோது உடல் ஆற்றலை மீட்டெடுத்தது. வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு கிளம்பியபோது தன் இளையவரை பார்த்தான். அவர்கள் தலைவணங்கி முகமனுரைத்தனர். “எந்தக் காவல்மாடம்?” என்று அவன் சாந்தனிடம் கேட்டான். “வடமேற்கு, எட்டு” என்று அவன் சொன்னான். அவன் விழிகள் அவனறிந்த சாந்தனை காட்டவில்லை.

உத்ஃபுதன் “நாம் போர்முகத்துக்கு செல்லபோவதில்லையா, மூத்தவரே?” என்றான். “படையில் நமது பணியை நாம் வகுக்க இயலாது. எப்பணியாயினும் அதை முற்றிலும் சிறப்பென முடிப்பது நமது கடன்” என்று அவன் சொன்னான். “நேற்று பீஷ்ம பிதாமகர் பலநூறு இளவரசர்களை கொன்று வீழ்த்தியிருக்கிறார் என்று அறிந்தேன்” என்றான் உத்ஃபுதன். “ஆம், அதனால் என்ன?” என்றான். “களம் சென்றிருந்தால் ஒருவேளை நாமும் அவர் வில்லுக்கு இரையாகியிருப்போம்” என்றான் சாந்தன். அவன் “களம் வந்தபிறகு வாழ்வும் இறப்பும் ஒன்றே” என்றான். அவர்களின் விழிகள் சொற்களை வாங்கும் நிலையில் இருக்கவில்லை. அவற்றில் அவன் என்றும் காணாத ஒரு விலக்கம் குடியேறியிருந்தது. இளையோரின் தோள்களைத் தட்டி விடைகொண்டு தன் காவல்மாடம் நோக்கி நடந்தான்.

மேலிருந்து நோக்கியபோது காடுகளுக்குள் சிறிய பந்தங்களும் விளக்குகளும் ஒளிரத் தொடங்கியதை கண்டான். அவை அணிவகுத்து அனல்வேர்ப்பரப்புகள் என்றாகி இணைந்து பெருவேராகி பாண்டவப் படைகளை நோக்கி வந்தன. காவல்மாடங்களில் இருந்தவர்கள் வருபவர்களை தொலைவிலேயே அடையாளம் கண்டு அவர்கள் மலைப்பொருட்களுடன் வரும் நிஷாதர்களும் கிராதர்களுமென உறுதிசெய்து அதை முழவொலியினூடாக அறிவித்தனர். மருத்துவநிலைகளில் அனைத்துப் பலகைகளும் நிரம்ப, வெளியே திறந்தவெளியில் நிலத்தில் மரவுரிகளையும் பாய்களையும் விரித்து புண்பட்டவர்களை படுக்கவைத்திருந்தனர். அவர்களுக்கு நடுவே சிறுதூண்களில் அகல் விளக்குகளை பொருத்தும் ஏவலர்கள் அலைகளில் சுடர்விளக்கென அலைந்தனர்.

அங்கிருந்து பார்க்கையில் விளக்குகளின் அருகில் படுத்திருந்தவர்கள் மட்டுமே தெரிந்தனர். பலர் வலி தாளாமல் புரண்டும் அசைந்தும் நெளிந்துகொண்டிருந்தனர். மருத்துவநிலைகளை நோக்கி வண்டிகளில் தேன்மெழுகும் அரக்கும் மரவுரியும் சென்றுகொண்டிருந்தன. புண்பட்டவர்கள் முழுக்க களத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பிறகே உடல்களை எடுப்பதற்குரிய வண்டிநிரைகள் செருகளம் நோக்கி சென்றன. அவை தெற்குமூலையில் நெருங்கிச் செறிந்து மறுமுனை காட்டில் உள்ளே புதைந்திருக்க காத்து நின்றிருந்தன. புரவிகள் படை நடுவே விரிந்த மரப்பாதையினூடாக தடதடத்தோடின.

சிகண்டி ஏவலர்நிரை நடுவே கூந்தல்அலைகள் தோளில் புரள செல்வதை அவன் கண்டான். அவர் அவர்களின் நடுவே சென்று நிற்க ஏவலர்தலைவர்கள் சூழ்ந்து வணங்கினர். புரவியிலிருந்து இறங்கி அவர்களுக்கு கைநீட்டி சுட்டி ஆணையிட்டபடி அவர் சென்றார். அவரை நோக்கிக்கொண்டிருந்த அசங்கன் மிகத் தொலைவில் மரவுச்சியில் நின்றிருந்த காவலர்களில் ஒருவன் எழுப்பிய ஓசையைக் கேட்டு திரும்பி நோக்கினான். வேய்மூங்கில் ஊதுகுழலால் விந்தையான பறவைக்குரல் ஒன்றை அவன் எழுப்பினான். “அறியாதோர்! அயலோர்!” எச்சரிக்கை அடைந்து அசங்கன் எழுந்து காட்டுக்குள் விழிகூர்ந்து பார்த்தான். அவ்வொலியை அருகிலிருந்த பிற காவல்மாடங்களில் இருந்தவர்களும் கேட்டுவிட்டிருந்தனர். ஆனால் எதுவும் விழிக்கு தெரியவில்லை.

முதற்காவல்மாடத்திலிருந்து கொம்போசை எழ தொடர்ந்து அனைத்துக் காவல்மாடங்களிலும் கொம்போசை எழுந்தது. பின்புறம் படைகளிலிருந்து காவலர்கள் எச்சரிக்கை அடைந்து முழவுகளை ஒலிக்கத் தொடங்கினர். முகப்பில் இரண்டாவது சீழ்க்கை ஒலித்தது. பின்னர் காடுகளுக்குள் கோபுரமென எழுந்த தேவதாரு மரங்களின் மேலிருந்த காவலர்களின் குறுமுழவுகள் பேசலாயின. “அரக்கர் குடியினரின் படை ஒன்று அணுகுகிறது. ஆயிரத்தவர். படைக்கலங்கள் ஏந்தியிருக்கிறார்கள். முகப்பில் வருவோன் பேருருவன். அவர்கள் அனைவருமே பேருருக் கொண்டவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் மரங்களினூடாக பறப்பவர்கள்போல் தாவி வருகிறார்கள்.”

அசங்கன் அவர்களை நோக்கும்பொருட்டு காவல்மாடத்தின் விளிம்பில் வந்து நின்று விழிகூர்ந்தான். இருட்டு பரவத்தொடங்கியிருந்த பெருங்காட்டுக்குள் மெல்லிய காற்று வருவது போன்ற இலையசைவு தெரிந்தது. அனைத்துக் காவல்மாடங்களிலும் வில்லவர் நாணில் அம்பு தொடுத்தனர். பின்புறம் பாண்டவப் படையிலிருந்து காவல்வீரர்கள் பூட்டிய விற்களுடனும் வேல்களுடனும் வந்து கூர்வேல் வடிவில் ஒருங்கு திரண்டனர். ஏழு படைமுகப்புகளாக மாறி மருத்துவநிலைகளையும், ஏவலர் நிலைகளையும், அடுமனை நிரைகளையும், கடந்து அப்பால் சென்று வருபவர்களுக்காக காத்து நின்றனர்.

அசங்கன் இருளில் விழிதெளிய முதலில் வருபவனை பார்த்தான். முற்றிலும் மயிரற்ற பெரிய மண்டை கலம்போல ஒளியுடன் இருந்தது. கன்னங்கரிய பேருடல். கைகள் போலவே கால்களாலும் அவனால் கிளைகளை பற்றமுடிந்தது. மரக்கிளைகளினூடாக இயல்பாகத் துள்ளி காற்றில் எழுந்து தாவி மறுகிளை பற்றி பறந்து வந்து நிலத்தில் இறங்கி இரு கைகளாலும் தரையை ஓங்கி அறைந்து தலைதூக்கி அறைகூவலோசை எழுப்பினான். எதிரே பாண்டவப் படையில் ஆயிரம் விற்கள் அம்புகளுடன் நாணிழுபட்டன. அவன் அப்படைகளைக் கண்டாலும் ஒரு பொருட்டாக கருதவில்லை. அவனைத் தொடர்ந்து வந்த அரக்க வீரர்கள் கைகளில் கல்லுருளை கொண்ட கதாயுதங்களையும் கூர்முனைகொண்ட மிக நீண்ட ஈட்டிகளையும் விற்களையும் வைத்திருந்தனர். அனைவருமே தங்கள் கைகளால் நெஞ்சில் ஓங்கி அறைந்து ஓசையெழுப்பினர். ஒரு போர்முனை இறுகித் திரள்வதுபோலிருந்தது.

அசங்கன் தன் கொம்பை எடுத்து ஊதினான். “பொறுங்கள்! பொறுங்கள்! அவரை நான் அறிவேன்!” என்றான். “நான் யாதவ அரசகுடியினன். பாஞ்சாலியின் கணவன். நான் அறிவேன் அவரை!” கொம்பின் மொழி கேட்டு கீழிருந்த காவல்படை வீரர்கள் அண்ணாந்து மேலே பார்த்தனர். “அவரை நானறிவேன்! அவரை நானறிவேன்!” என்று கொம்பு முழக்கியபடி கணுமூங்கிலினூடாக கீழிறங்கி விரிந்த நிலத்தில் புதர்களையும் பெருஞ்செடிகளையும் தாவிக்கடந்து அசங்கன் முன்னால் ஓடினான்.

அசங்கன் மூச்சுவாங்க விரைந்தோடிச் சென்று அரக்கர்நிரைமுன் வந்தவன் அருகே சிற்றுருவாக நின்று தலைவணங்கி “வணங்குகிறேன் மூத்தவரே, தாங்கள் இடும்பவனத்தின் அரசர் கடோத்கஜர் என்று எண்ணுகிறேன். நான் ரிஷபவனத்தின் சாத்யகரின் சிறுமைந்தனும் யுயுதானரின் முதல் மைந்தனுமான அசங்கன்” என்றான். கடோத்கஜன் முழு உடலாலும் புன்னகை புரிந்தான். கரிய உதடுகள் அகல பெரிய பற்கள் பளிங்குப் படிக்கட்டுகள்போல விரிந்தன. “நான் இடும்பவனத்தின் காகரின் சிறுமைந்தனும் பாண்டவர் பீமசேனரின் மைந்தனுமாகிய கடோத்கஜன்” என்று சொல்லி வணங்கி அவன் தோளில் கைவைத்து “இந்திரப்பிரஸ்தத்தின் செய்திகளை குறைவாகவே கேட்டிருக்கிறேன். உங்கள் தந்தையின் பெயர் எப்போதோ செவியில் ஒலித்திருக்கிறது. அவர் இளைய யாதவரின் படைத்தலைவர் அல்லவா?” என்றான்.

அசங்கன் கடோத்கஜனின் கைகளை பற்றிக்கொண்டு “என்னை இளையோனே என்று அழையுங்கள். உங்களுக்கு அணுக்கமாக இருப்பது என் பேறு. இங்கு அரண்மனைகள் அனைத்திலுமே உங்களைப்பற்றிய கதைகள் எப்போதும் பேசப்படுகின்றன. உங்கள் தந்தையிடம் எதிர்நின்று பொருதவும் வெல்லவும் வாய்ப்புள்ள ஒரே மானுடர் நீங்களே என அறிந்திருக்கிறேன். நான் சிறுவனாக இருக்கையிலேயே உங்களை கதைகளினூடாக நன்கறிவேன். ஒருவேளை நீங்களே அறிந்திராத உங்கள் வீரச்செயல்கள்” என்று சிரித்த அசங்கன் “என்னால் காலூன்றி நிற்கவே முடியவில்லை. என் உடன்பிறந்தார் உங்களை பார்க்கவேண்டும். என் இளையோன் சினி தங்களை பார்த்தால் அருகிலிருந்து விலகமாட்டான். இப்புவியிலேயே அவனுக்கு மிக உகந்த வீரர் தாங்கள்தான்” என்றான்.

கடோத்கஜன் இரு கைகளையும் ஓங்கி அறைந்து வெடிப்பொலி எழுப்பி முழவோசையுடன் நகைத்தான். உடலை அலைக்கழித்து துள்ளியமைவதுபோல கால்களை மடித்து நீட்டி சிரித்தபடி அருகே நின்ற அவனளவே பேருருக்கொண்ட துணைவனிடம் “சகுண்டரே, கேட்டீர்களா? நமது வீரச்செயல்கள்!” என்றான். அவன் “ஆம்!” என தலையைச் சுழற்றி சிரித்தான். கடோத்கஜன் அசங்கனை இழுத்து தன் நெஞ்சோடணைத்துக்கொண்டான். பெரிய கைகள் இரு கரிய காட்டாறுகள்போல அவனை வளைத்தன. இறுக்கத்தில் அவனுக்கு மூச்சுத்திணறியது. அவன் உடலில் கரடிகளுக்குரிய புழுதிமணமும் வியர்வைநாற்றமும் கலந்த வீச்சம் இருந்தது. கடோத்கஜனின் உடலில் எங்கும் மயிரே இல்லை என்று முகம் அவன் மார்பில் அழுந்திய போதுதான் அசங்கன் உணர்ந்தான். ஆகவே அவன் உடலின் ஒவ்வொரு நரம்பும் எலும்பும் தசையும் நன்றாகத் தெளிய அவன் கருங்கல்லில் செதுக்கப்பட்டவன்போல தெரிந்தான்.

“உன்னை சந்தித்ததில் மகிழ்வு, இளையோனே. உன் தந்தைக்கு என் வணக்கங்கள். எங்கள் காடுவரை இப்போர் நிகழும் செய்தி வந்து சேர மிகவும் பிந்திவிட்டது. அறிந்த அக்கணமே கிளம்பிவிட்டோம். போதிய படைப்புறப்பாடு எதுவும் செய்துகொள்ளவில்லை. ஆகவே எங்களிடம் குறைவாகவே படைக்கலங்கள் உள்ளன” என்றான். அசங்கன் “இங்கு படைக்கலங்களுக்கு குறைவே இல்லை. மானுடர் மீண்டு வருவதில்லை, படைக்கலங்கள் அனலாடி மீண்டு வந்தபடியே இருக்கின்றன” என்றான். “அரசர் இருக்குமிடமே இந்திரப்பிரஸ்தம். பாண்டவர்களின் நகரிக்கு தங்கள் வரவு சிறப்புறுக!” என்றான்.

பின்னர் நினைவுகூர்ந்து “இங்கு நில்லுங்கள்… ஒருகணம் இங்கு நில்லுங்கள்” என்று சொல்லி திரும்பி ஓடினான். காவல்மேடையை அவன் அடைவதற்குள் எதிரே சுவீரர்

புருவங்கள் சுளிக்க கடோத்கஜனை உறுத்துப் பார்த்தபடி வேலை ஊன்றி விரைந்து வந்தார். “யாரவர்? எங்கிருந்து வருகிறார்கள்?” என்றார். அசங்கன் “சுவீரரே, இது என் ஆணை. வருபவர் என் மூத்தவர், பீமசேனரின் மைந்தர் இடும்பவனத்தின் கடோத்கஜன். அரசமுறைப்படி முரசுகள் முழங்கட்டும். கொம்போசையும் சங்கொலியும் எழ வாழ்த்துக்குரல்கள் சூழ அவரை நாம் வரவேற்கவேண்டும்” என்றான். சுவீரர் மேலும் கண்கள் இடுங்க “அதற்கான முறையான ஆணையில்லை. ஏனெனில்…” என்று சொல்ல “இது என் ஆணை” என்றான் அசங்கன்.

சுவீரர் உளநிகர் அடைந்து “இளவரசே, அவர்கள் அரக்ககுலத்தோர். அவர்களின் நோக்கமென்ன என்று இன்னமும் நமக்கு தெளியவில்லை. அவர்களை நம் படை ஏற்றுக்கொள்ளப்போகிறதா என்பதும் முடிவாகவில்லை. அம்முடிவுகளை படைசூழ்வோர்தான் எடுக்கமுடியும். அதற்குள் அரசமுறைப்படி வரவேற்பளிப்பதற்கு வழியில்லை. காவலர்களான நாம் முடிவெடுத்து முந்தலாகாது” என்றார். அசங்கன் “நான் முடிவெடுத்துவிட்டேன்” என்றான். அவன் குரல் மாறுபடுவதைக் கண்டு சுவீரர் ஏறிட்டுப் பார்த்தார். “ரிஷபவனத்து யாதவன் என்ற வகையிலும் பாஞ்சால அரசமகளை மணந்தவன் எனும் வகையிலும் உங்கள் படைப்பிரிவுகள் அனைத்திற்கும்மேல் சொல்லாட்சி கொண்டவன் நான். இது என் ஆணை” என்றான் அசங்கன்.

“இதை அரசுசூழ்தல் முறைகளால் முடிவெடுக்கவில்லை, குருதியால் முடிவெடுத்திருக்கிறேன். இப்பாண்டவ குலத்தின் முதல் மைந்தர் அவரே. முரசும் கொம்பும் வாழ்த்தொலிகளும் இன்றி அவர் எதிர்கொள்ளப்படலாகாது. என் ஆணை மீறப்படுமெனில் அரசமகன் அனைவரையும் தலைவெட்டி குவிக்க ஆணையிடுவேன். அன்றி உயிர்துறப்பேன்” என்றான். கைகளை நீட்டி “அரசே…” என்றார் சுவீரர். அசங்கன் “ம்ம்” என்று உறுமினான். “ஆணை” என்று சுவீரர் தலைவணங்கி பின்னால் திரும்பிச்சென்று இரு கைகளையும் விரித்து காவல்மாடத்திலிருந்து அவரை பார்த்துக்கொண்டிருந்த வீரர்களிடம் செய்கையால் பேசினார்.

காவல்மாடத்தில் நின்றவர்களும் முதலில் திகைப்பதை அவர்கள் அமைதியிலிருந்து உணரமுடிந்தது. பின்னர் ஒரு காவல்மாடத்திலிருந்து பெருமுரசு அரசகுடியினரை வரவேற்பதற்குரிய களிற்றுநடைத் தாளத்தை எழுப்பத் தொடங்கியது. மும்முறை மும்முறையென கொம்புகள் ஒலித்து “அரச மைந்தருக்கு நல்வரவு! பாண்டவ மைந்தருக்கு வாழ்த்து!” என்று முழங்கின. சங்குகளும் மணிகளும் இணைந்துகொள்ள பலநூறு தொண்டைகளிலிருந்து “கடோத்கஜர் வாழ்க! குருகுல மைந்தர் வாழ்க! பாண்டவ மைந்தர் வாழ்க!” என்று வாழ்த்தொலிகள் எழுந்தன.

அசங்கன் மீண்டும் கடோத்கஜனை நோக்கி சென்றான். “வருக, மூத்தவரே! தங்களை முறைப்படி வரவேற்கவேண்டும் என்பதற்காகத்தான் ஆணையிடும்பொருட்டு சென்றேன்” என்றான். கடோத்கஜன் சூழ ஒலித்த முரசொலிகளை திரும்பிப்பார்த்த பின் “இவை போர்முரசுகளா என்ன?” என்றான். “இல்லை, தங்களை வரவேற்கும் பொருட்டு ஒலிப்பவை” என்றான் அசங்கன். “எங்கள் ஊர்களில் தோட்டங்களிலோ இல்லத்தொகைகளுக்குள்ளோ யானை புகுந்துவிட்டால் இவ்வண்ணம் முழவோசை எழுப்புவார்கள்” என்றான் கடோத்கஜன். அவனுக்குப் பின்னால் நின்ற பிறிதொரு கரியவன் வெடித்து நகைத்தான். “இவன் உத்துங்கன், என் அணுக்கன்” என்றான் கடோத்கஜன்.

அசங்கன் “தங்களைப்போன்றே இருக்கிறார்” என்றபின் கடோத்கஜனின் படைவீரர்களைப் பார்த்து “அனைவருமே தங்களைப்போல பேருருவர். அனைவருமே

தங்களைப்போல அள்ளிப் பற்றும் கால்களை கொண்டிருக்கிறார்கள்” என்றான். “நாங்கள் அங்கு மரங்களின் மேலே பிறந்து வாழ்கிறோம். நிலத்தில் நடப்பதே எங்களுக்கு கடினமானது” என்று உத்துங்கன் சொன்னான். “ஆம், நீங்கள் நடப்பதை முதலில் நோக்கியபோதே விந்தையை உணர்ந்தேன். உங்கள் கால்கள் கைகளைவிட மிகச் சிறியவை. பக்கவாட்டில் வளைந்தும் உள்ளன” என்றான் அசங்கன். “குரங்குகளின் கால்கள்போல” என்று சொன்ன சகுண்டன் “எங்கள் தெய்வங்கள் குரங்குவடிவம் கொண்டவை” என்றான்.

எதிரில் சுவீரர் வரவேற்பாளர்நிரை ஒன்றை இட்டுவந்தார். இருப்பவர்களைக்கொண்டு அதை அமைத்திருந்தார். ஏழு படைவீரர்கள் உணவுண்ணும் மரத்தாலத்தில் மண், நீர், அன்னம், கத்தி, குருதி என்னும் ஐந்து படைமங்கலங்களை ஏந்தி வந்தனர். கடோத்கஜன் திகைப்புடன் “என்ன கொண்டுவருகிறார்கள்?” என்றான். “ஐந்து மங்கலங்கள், இவை வரவேற்புக்குரிய சடங்கு” என்றான் அசங்கன். “அவற்றில் ஒன்றில் நீர் இருக்கிறது. அதை என்ன செய்யவேண்டும், அருந்தவேண்டுமா?” என்றான். “அல்ல, அவற்றை நோக்கி கைகூப்பிவிட்டு கடந்து சென்றால் போதும்” என்றான் அசங்கன். “வெறுமனே கைகூப்புவதற்கு இத்தனை பொருட்களா?” என்றான் கடோத்கஜன்.

“அன்னமும் உள்ளது” என்றான் உத்துங்கன். சகுண்டன் “அரசே, நாம் மௌரியர் நகருக்குச் செல்கையில் இதேபோல ஐந்து மங்கலங்களை தாலங்களில் கொண்டுவந்தார்கள்” என்றான். “ஆம், ஆனால் அவை வேறுபொருட்கள்” என்றான் கடோத்கஜன். “அவை நகர்மங்கலங்கள். இது களம். இங்கே சில பொருட்களுக்கு ஒப்புதல் இல்லை” என்றான் அசங்கன். கடோத்கஜன் “ஆம், அறிவேன்” என்றபின் பெரிய தலையை சற்றே குனித்து பற்கள் வெளிவர முகம் சுளித்து நோக்கி “நிரையாக வருகிறார்கள்” என மகிழ்ந்தான். “ஆனால் பெண்டிரைப்போல தாலமேந்தி வருகிறார்கள்” என்றான் உத்துங்கன்.

“நாம் உள்ளே செல்கையில் இனியவற்றின் மேல் நம் விழி படவேண்டுமென்பதற்காக” என்றான் அசங்கன். “ஆம், அவை இனியவை” என்ற உத்துங்கன் அதிலிருந்து தன் முகத்தில் வீசிய ஒளிக்கற்றைக்காக தலை திருப்பி “ஆடி வைக்கப்பட்டுள்ளது” என்றான். “அது ஆடி அல்ல, வாள்” என்றான் அசங்கன். “வாளை எதற்கு வைக்கவேண்டும்?” என்று கடோத்கஜன் கேட்டான். “அது மங்கலப்பொருள்” என்றான் அசங்கன். “குறுவாளா? அது எப்படி மங்கலப்பொருள் ஆகும்?” என்றான் உத்துங்கன். “தீட்டப்பட்ட வாளில் வானம் நிறைந்துள்ளது” என்றான் அசங்கன்.

கடோத்கஜன் புரியாமல் அசங்கனை சிலகணங்கள் பார்த்துவிட்டு “நான் பார்த்ததில்லை” என்றான். “மூத்தவரே, நீர்நிறைந்த ஏரியில் வானம் விரிந்திருப்பதை பார்த்திருப்பீர்கள்” என்றான் அசங்கன். “ஆம் ஏரியில்!” என்றபின் மேலும் குழம்பி “ஏரியில் நான் நீரைத்தான் பார்த்திருக்கிறேன்!” என்றான் கடோத்கஜன். உத்துங்கன் மேலும் ஆர்வமாக “மீன்களும் உண்டு!” என்றான். அசங்கன் வாய்விட்டு நகைத்தான். உத்துங்கன் “அந்த வாளுக்கு மாற்றாக ஆடியை வைத்திருக்கலாம். அதைவிட அழகான வேறொன்றில்லை. விளையாட உகந்தது” என்றான்.

அசங்கன் சிரித்துக்கொண்டே இருந்தான். “வருக, மூத்தவரே” என்று அவர்களை உள்ளே அழைத்துச்சென்றான். மங்கலத்தால நிரை அவர்களை அணுகி இரு பிரிவாகப் பிரிந்து தலைவணங்கியது. கடோத்கஜன் இருபக்கமும் நோக்கி ஒவ்வொருவருக்கும் தலைவணங்கினான். “இவர்கள் படைவீரர்களா?” என்று கேட்டான். “அல்ல, காவலர்கள்” என்றான் அசங்கன். “ஆம், அவ்வாறுதான்

எண்ணினேன். ஏனெனில் இவர்கள் உடலில் புழுதியோ குருதியோ இல்லை” என்ற உத்துங்கன் “காவலர்கள் எதற்கு?” என்று கேட்டான். சுவீரர் “படைகளுக்கான காவல்” என்றார்.

திகைப்புடன் படைகளை நோக்கிய கடோத்கஜன் “படைக்குக் காவலா?” என்றபின் இரு கைகளையும் ஓங்கி அறைந்துகொண்டு உரக்க நகைத்தான். “முள்வேலிக்கு மூங்கில்வேலியிடுவது போலவா? படைக்கலம் ஏந்திய படைக்கு காவலர்களை நிறுத்துவதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன்” என்றான். உத்துங்கனும் சகுண்டனும் உடன் சேர மொத்தப் படையும் நகைக்கத் தொடங்கியது. “படைக்கு படை காவல்... எப்படியிருக்கிறது?” என்று உத்துங்கனின் தோளில் அறைந்தான் கடோத்கஜன். உத்துங்கன் கண்ணீர்வர நகைக்க அவர்களை நோக்கி திகைத்து நின்றனர் சுவீரரின் அணியினர். அப்போதுதான் அதிலிருந்த வேடிக்கை புரிய அசங்கனும் நகைத்தான். சிரிப்பை நிறுத்தி கண்ணீரை துடைத்தபடி, நோக்கி வாய்திறந்து நின்ற சுவீரரிடம் “மூத்தோரின் வருகையை அரசருக்கு அறிவிக்க வேண்டும்” என்றான். “ஆம், புறாச்செய்தி சென்றுவிட்டது” என்று சுவீரர் சொன்னார்.

பின்னர் தன்னிலை மீண்டு கடோத்கஜனிடம் “இளவரசே, தங்கள் வருகை எங்களுக்கு நலம் பயக்கட்டும். எங்கள் படைகளுக்கும் குடிகளுக்கும் வெற்றியும் மங்கலமும் அளிக்கட்டும்!” என்றார். “வருக!” என அவனை அவர் இட்டுச்சென்றார். கடோத்கஜன் ஆடியாடி நடந்தபடி “மிகப் பெரிய படை... ஆனால் நான் இன்னும் இதை முழுமையாக பார்க்கவில்லை” என்றான். சகுண்டன் “ஆம், மிகப் பெரிய படை. காடுபோல” என்றான். உத்துங்கன் “எறும்புக்கூடுபோல” என்றான். அந்தச் சொல்லாட்சியால் கவரப்பட்ட கடோத்கஜன் திரும்பி கண்கள் இடுங்க உற்றுநோக்கினான். அவனுக்கு அது சரியாகப் புரியவில்லை. ஆகவே ஒன்றும் சொல்லாமல் திரும்பிக்கொண்டான்.

படைகளினூடாக நடந்து செல்கையில் ஒவ்வொரு காலடிக்கும் கடோத்கஜனும் அவன் படையினரும் தயங்குவது போலிருந்தது. அது புதுப் பொருள்மேல் குரங்குகள் கொள்ளும் கால்தயக்கம் என்று அசங்கனுக்குள் ஓர் எண்ணம் எழுந்தது. அவ்வாறு தோன்றியதுமே அவர்கள் அனைவரும் பேருடல் குரங்குகள் போலவே நடப்பதை அவன் கண்டான். அவர்களின் சிறிய கால்கள் உடல் எடையால் வளைய மென்மூங்கில்மேல் என அவர்கள் ததும்பினர். தோள்கள் பேருருக் கொண்டு தசைபுடைப்புகளும் நரம்புவரிகளும் பாறைநிறக் கீற்றுகள் என தேமல்களுமாக திரண்டிருக்க தொடைகள் வற்றியிருந்தன. பின்திரட்சிகளே அவர்களுக்கு இருக்கவில்லை.

கடோத்கஜன் தவிர பிறருக்கு உடலில் மயிர் இருந்தது. உத்துங்கனின் உடலில் காய்ந்த பாறைப்புல்போல செம்மைகலந்த மயிர் புறங்கையிலும் அடர்ந்திருந்தது. தாடி தேன்கூடுபோல் முகவாய்க்கு கீழே தொங்கியது. மீசை மென்மையாக மென்பாசிப்படர்வு போலிருந்தது. ஒவ்வொரு கணமும் மின்னி மின்னி திரும்பி சூழலை நோக்கிகொண்டிருந்தன அவர்களின் சிறிய கண்கள். கடோத்கஜன் “நாங்கள் இவ்வாறு நெடுந்தொலைவு நடந்து செல்வதில்லை” என்றான். அசங்கன் “அங்கிருந்து நடந்துதானே வந்திருப்பீர்கள்?” என்றான். “நீ என்ன நினைத்தாய்? அங்கிருந்து நடந்து வந்திருந்தால் போர் முடிந்த பின்னரே வந்து சேர்ந்திருப்போம். நாங்கள் மரங்களின் மீது பாய்ந்து பறந்து வந்தோம்” என்றான் சகுண்டன்.

“அங்கிருந்து இங்குவரை தொடர்ச்சியாக மரங்கள் இருந்தனவா?” என்றான் அசங்கன். மரங்களில்லாத இடங்களில் கழைகளை கொண்டு நாங்கள் தாவினோம். பாறைகளிலும் இல்லங்களின் மீதும் தாவி வரமுடியும். அரிதாக காட்டு யானைகள் மீதும் தாவுவோம்” என்று சொல்லி உத்துங்கன் சிரித்தான். அவன் உதடுகள் கரிய படகு போலிருந்தன. அத்தனை பெரிய வாயின் நகைப்பு இந்திரப்பிரஸ்தத்தின் இந்திர ஆலயத்தின் கீழ்நிலைகளில் செதுக்கப்பட்டிருந்த பேருருவ நிலப்பூதங்களுக்கு மட்டுமே இருந்தது. ஆனால் விழிகளில் இருந்த மென்மையும் ஓசையிலிருந்த நட்பும் அச்சிரிப்பை உளத்திற்கு மிக அணுக்கமென்றாக்கின.

கடோத்கஜனின் உடலை தொட்டுக்கொண்டிருக்க அசங்கன் விழைந்தான். அவன் கைகளைப் பற்றியபடி “என் இளையோரை தங்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும், மூத்தவரே” என்றான். திரும்பி அருகே வந்த சுவீரரிடம் “என் தம்பியர் அனைவரும் உடனடியாக இங்கு வரவேண்டும்” என்று சொன்னான். “ஆணை” என்றார் சுவீரர். “எத்தனை உடன்பிறந்தார் உனக்கு?” என்றான் உத்துங்கன். கடோத்கஜன் அவனை ஒருமையில் அழைக்கத் தொடங்கியதுமே அவனும் அவ்வாறு அழைப்பதை உணர்ந்து அசங்கன் புன்னகைத்தான். “நாங்கள் பதின்மர்” என்றான். “அனைவருமே இங்கிருக்கிறீர்களா? நன்று நன்று!” என்றான் கடோத்கஜன்.

“இங்கே உங்களுக்கு மாபெரும் இளையோர் நிரை உள்ளது, மூத்தவரே. உங்கள் ஐந்து தந்தையரின் குருதி வழிவந்த இளையோர் ஒன்பதின்மர். எந்தையின் மைந்தர்களும் பாஞ்சால இளவரசரின் மைந்தர்களும் உள்ளனர். மேலும் பல இளவரசர்கள் இருக்கின்றனர்.” அவன் பீஷ்மரால் கொல்லப்பட்டவர்களை எண்ணினான். சொல் தணிய தலையை திருப்பிக்கொண்டான். “நான் முன்னரே பலமுறை இங்கு வர எண்ணியிருந்தேன். ஒவ்வொரு முறையும் வருகை தவிர்த்தது என் கால்கள் அளித்த தயக்கத்தால்தான். அஸ்தினபுரியிலும் நாங்கள் நிலத்தில் நடந்தே ஆகவேண்டுமென்றனர் ஒற்றர். நிலத்தில் நடந்து செல்கையில் ஆற்றலற்றவர்களாகவும் கேலிக்குரியவர்களாகவும் தோன்றுகிறோம்” என்றான் கடோத்கஜன்.

அசங்கன் “தங்கள் நடை மாறுபட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால் உங்கள் குடியினரின் பெருந்தோள்களைக் கண்டு விழிமலைக்காத ஒரு வீரனைக்கூட இதுவரை பார்க்கவில்லை” என்றான். “நாங்கள் இதுவரை பார்த்த பேருருவர்கள் தங்கள் தந்தையும் கௌரவ மூத்தவரும் பேரரசர் திருதராஷ்டிரரும்தான். அனைவரை விடவும் பெரியவர் மூதரசர் பால்ஹிகர். அவர்களின் தோள்களைவிடவும் பெரியவை தங்களுடையவை. கதை ஏந்தி தாங்கள் களம்புகுந்தால் எதிர்கொள்ள இங்கு எவருமில்லை” என்றான். கடோத்கஜன் சிரித்து கண்களை சிமிட்டியபடி “படைமுகம் நிற்கவே வந்துள்ளேன். எந்தைக்கு துணைநிற்க…” என்றான். “எங்கள் உதவி களத்தில் இருக்கவேண்டும் என பேரன்னை குந்திதேவி முன்னர் சொல்லியிருந்தார்கள். ஆனால் போர் தொடங்கியபோது எங்களுக்கு செய்தி அனுப்பாதொழிந்துவிட்டார்கள்…” அசங்கன் “அது இயல்புதானே?” என்றான். “அழைக்காவிட்டாலும் வருவோம் என அவருக்குத் தெரியாது” என்றான் சகுண்டன்.

“இது மாபெரும் படை” என்றான் கடோத்கஜன். “எங்கள் இனத்துக்குள்ளேயே மற்போர்களில் ஈடுபட்டிருக்கிறேனே ஒழிய இதுவரை போரென எதுவும் புரிந்ததில்லை.” சுற்றிலும் நோக்கி “இப்பெரும்போர்… இது எங்கு நிகழ்கிறது?” என்றான். அசங்கன் குழம்பி “இங்குதான்” என்றான். “நான் படைகளை பார்க்கிறேன். நான்குபுறமும் விழிதொடும் எல்லைவரை நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் சென்று போரிடும் இடம் எது?” என்றான் கடோத்கஜன். “இளவரசே, இங்கு நம் படை

நின்றிருக்கிறது. எதிரில் அவர்களின் படை. ஒவ்வொரு நாளும் புலரியிலிருந்து அந்திவரை மோதிக்கொள்வோம்.”

கடோத்கஜன் நின்று இடையில் கைவைத்து திகைப்புடன் கூர்ந்துநோக்கி “மொத்தப் படையினரும் முழுமையாகவே மோதிக்கொள்கிறார்களா?” என்றான். “ஆம் மூத்தவரே, அதுதான் போர்” என்றான் அசங்கன். “இங்கு பல்லாயிரவர் இருப்பார் போலிருக்கிறதே” என்றான் உத்துங்கன். “பல லட்சம்” என்றான் அசங்கன். “அஸ்தினபுரி இந்திரப்பிரஸ்தம் போன்ற நகரங்களைவிட மிகையான வீரர்கள் இங்கு இருக்கிறார்கள்.” சகுண்டன் “இவர்கள் அனைவரும் ஒரே தருணத்தில் ஒருவருடன் ஒருவர் போரிட்டுக்கொள்கிறார்களா?” என்றான். “ஆம்” என்று அசங்கன் சொன்னான். “தேர்ந்தெடுத்த வீரர்களை அனுப்புவதில்லையா?” என்றான் சகுண்டன்.

“இதை நான் எத்தனை விளக்கினாலும் தங்களுக்கு புரியப்போவதில்லை. நாளை ஒருநாளில் அனைத்தும் தெளிவாகிவிடும்” என்றான் அசங்கன். “ஆம்” என்று கடோத்கஜன் சொன்னான். பின்னிருந்து மரப்பலகைமேல் புரவிகளின் குளம்போசை கேட்டது. கடோத்கஜன் படையிலுள்ள அனைவரும் திடுக்கிட்டவர்கள்போல் பார்த்தனர். முதலில் வந்த புரவியிலிருந்து அசங்கனின் இளையவன் சினி இறங்கி அதே விரைவில் கைகளை விரித்தபடி ஓடினான். மூச்சுவாங்க கடோத்கஜன் அருகே நின்று தலைதூக்கி நோக்கி “இவரா?” என்றான். அவன் கை சுட்டுவிரல் நீண்டு அசைவிழிந்து காற்றில் நீண்டிருந்தது.

“ஆம், இவரேதான். நமக்கெல்லாம் மூத்தவர், குருகுலத்து முதல் மைந்தர்” என்றான் அசங்கன். “இவரது தலைதான் குடம் போன்றிருக்கும். ஆகவே தான் இவருக்கு கடோத்கஜன் என்று பெயர்” என்றபின் சினி “ஆனால் இங்கிருந்து தலை தெரியவில்லை. மிக உயரம்...” என்றான். கைகளை விரித்து “பாறைகளைப்போல... அவ்வளவு உயரம்!” என்றான். கடோத்கஜன் முழங்காலில் கைகளை வைத்து குனிந்து தலையை கீழே கொண்டுவந்தான். “தொட்டுப் பார்!” என்றான். சினி சிரித்தபடி தயங்கி பின்னடைந்தான். “அஞ்சவேண்டாம். தொட்டுப் பார்” என்றான் கடோத்கஜன் . சினி பின்னடைந்து தன் மூத்தவனாகிய உத்ஃபுதனை பற்றிக்கொண்டான்.

கடோத்கஜன் சினியின் இடையை இரு கைகளாலும் பற்றி சிறுகுழவியென தூக்கிச் சுழற்றி மேலெடுத்து தன் வலத்தோளில் வைத்துக்கொண்டான். சினி மேலிருந்து அலறிச்சிரித்தான். அச்சமும் பதற்றமுமாக கால்களை உதறினான். “தொட்டுப் பார்!” என்றான் கடோத்கஜன். சினி அவன் தலையை கைகளால் அறைந்து “யானை மத்தகம் போலிருக்கிறது” என்றான். சாந்தன் சிரித்து “மதோத்கஜன் என்று தங்களுக்கு பெயர் இட்டிருக்க வேண்டும், மூத்தவரே” என்றான். அசங்கன் நகைத்து “மதங்கோத்கஜன்... சிறந்த பெயர்! ஏன் நாம் அவ்வாறே அழைக்கக்கூடாது?” என்றான். “இது எனக்கு என் தந்தை சூட்டிய பெயர்” என்று கடோத்கஜன் சொன்னான்.

இளையோர் ஒவ்வொருவராக அவன் அருகே வர இரு கைகளாலும் அவர்களை பற்றி இழுத்து நெஞ்சோடணைத்தான். உத்ஃபுதனையும் சாந்தனையும் அணைத்து நெற்றியிலும் கன்னங்களிலும் முத்தமிட்டான். உத்துங்கனும் சகுண்டனும் பிறரும்கூட வந்து அவர்களை மாறிமாறி தூக்கி முத்தமிட்டார்கள். முத்தமிடுவது அவர்களின் குலவழக்கம் போலும் என்று எண்ணிக்கொண்டான் அசங்கன். முத்தம் பெற்றபோது மைந்தர் நாணி உடல் மெய்ப்புகொள்ள தோள் குறுகினர்.

புரவிகள் வரும் ஓசை கேட்டது. எதிரே பன்னிரு புரவிகளில் படைவீரர் சூழ வந்த ஆயிரத்தவனாகிய சூசிகட்கன் புரவியிலிருந்து பாய்ந்திறங்கி “பாஞ்சால இளவரசருக்கு செய்தி சென்றுவிட்டது. தங்களை முறைப்படி வரவேற்று கொண்டு

செல்லும் பொறுப்பிலிருக்கிறேன்” என்றான். அவர்களின் கால்களை நோக்கியபின் “தங்களுக்கான தேர்கள் அல்லது புரவிகள்...” என்று தயங்கினான். “நாங்கள் பிற உயிர்கள்மேல் ஊர்வதில்லை” என்றான் கடோத்கஜன். “உயிர்கள்மேல் ஊர்பவர்களை மரங்கள் ஏற்றுக்கொள்வதில்லை” என்று உத்துங்கன் சொன்னான். அசங்கன் “அவர்கள் நடந்தே வருவார்கள்” என்றான்.

இருபுறமும் பாண்டவப் படை மணற்கரையென செறிந்து விழிகளாகி கடோத்கஜனை பார்த்தது. ஆங்காங்கே வாழ்த்துக்குரல்கள் எழுந்தாலும்கூட சொல்லற்ற பெருமுழக்கமே படையில் நிரம்பியிருந்தது. கடோத்கஜனின் தலை அவர்கள் அனைவருக்கும் மேலாக எழுந்திருந்தது. எனவே விண்ணில் ஊரும் கந்தர்வனை பார்ப்பவர்கள்போல அவர்கள் முகம் தூக்கியிருந்தார்கள். காவல்வீரர்கள் முன்னால் சென்று கடோத்கஜனின் வரவை முழவோசையால் அறிவித்துக்கொண்டிருந்தனர். அம்முழக்கம் ஒன்றிலிருந்து ஒன்றென தொட்டுப்பெருகி விலகிச்செல்ல படைகளிலிருந்து கார்வை என எதிர்முழக்கம் எழுந்தது.

அசங்கன் கடோத்கஜனுக்கு அவைமுறைமைகள் தெரியுமா என்று ஐயுற்றான். மிகவும் பிழையாக ஏதேனும் ஆகிவிடக்கூடுமென்று தோன்றியது. அவன் யுதிஷ்டிரரையும் அர்ஜுனனையும் பீமனையும் தழுவி முத்தமிடுவதைப்பற்றி எண்ணியபோது தன்னையறியாமலேயே புன்னகையை அடைந்தான். “மூத்தவரே, இங்கு அரசவையில் முறைமைகளென சில உள்ளன” என்றான். “நான் அறிவேன்” என்று கடோத்கஜன் சொன்னான். “அவர்களுக்கு நாம் புறம் காட்டலாகாது. அவர்கள் பேசுகையில் ஒவ்வொருமுறையும் தலைதாழ்த்தி ஆணை என்று சொல்லவேண்டும். அவர்கள் பேசும்போது நாம் சிரிக்கவோ ஓசையிடவோ கூடாது” என்றான். “ஆணை என ஒவ்வொரு முறையும் சொல்லவேண்டியதில்லை” என்று அசங்கன் சொன்னான். “அப்படித்தானே சொன்னார்கள்?” என்று நின்று திரும்பிப்பார்த்தான் கடோத்கஜன். ஒருகணம் எண்ணியபின் “ஆம், அவ்வாறே சொல்வதில் தவறில்லை” என்று அசங்கன் கூறினான். “அவர்கள் எவரையும் நீங்கள் தொடக்கூடாது. அவர்களே உங்களை தொட்டால் கூட அதற்கு உங்கள் உடலை அளிக்கவேண்டுமேயொழிய திரும்பி அவர்களை தொடுவதோ அணைப்பதோ கூடாது” என்றான்.

கடோத்கஜன் குழப்பமாகத் தலையை அசைத்தான். “அவர்களை ஒருபோதும் நீங்கள் என்று அழைக்கலாகாது. தாங்கள் என்ற சொல்லை தேவையென்றால் மட்டும் பயன்படுத்தலாம். அவர்களை நோக்கி பேசுகையில் விரல் சுட்டுவதோ இருப்பிடத்திலிருந்து அவர்களை நோக்கி எழுந்து செல்வதோ எவ்வகையிலேனும் படைக்கருவி எதையும் கையிலெடுப்பதோ பெரும்பிழையென கருதப்படும்.” கடோத்கஜன் மீண்டும் நின்று “இவை அனைத்தையும் என்னால் நினைவில் வைத்துக்கொள்ள இயலாது” என்றபின் உத்துங்கனை பார்த்தான். உத்துங்கன் “ஆம், ஏராளமான செய்திகள்” என்றான்.

“பேரரசர்கள் எவரையும் நான் இதுவரை நேரில் பார்த்ததில்லை. நான் பார்த்த ஒரே அரசர் மௌரிய யாதவ குடியின் அரசர் முரு மட்டுமே. அவர் கன்றோட்டிக்கொண்டு காட்டுக்குச் செல்பவர்” என்றான் கடோத்கஜன். “முதல்முறையாக ஓர் அரசரை பார்க்கும் வாய்ப்பு அமைகையில் அவரை வேடிக்கை பார்ப்பதை விடுத்து இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக எண்ணத்துள் அடுக்கிக்கொண்டிருப்பது என்னால் இயலாது.” உத்துங்கன் “ஒன்று செய்யலாம். இவனை நம் அருகில் நிறுத்திக்கொள்ளலாம்” என்றான். கடோத்கஜன் “ஆம்” என்று சொல்லி அசங்கனின் தோளில் கல்லால் ஆனதோ என எடைகாட்டிய பெரிய கையை வைத்து “நீ என்னுடன் இரு. நான் செய்யும் பிழைகளை சொல்” என்றான்.

உடன் நடந்துகொண்டிருந்த சினி கடோத்கஜனின் இடையாடையைப்பற்றி அசைத்து “மூத்தவரே, நான் உங்களுடன் இருக்கிறேன். நான் உங்களுக்கு சொல்கிறேன்” என்றான். உத்துங்கன் “ஆம், இவனென்றால் இன்னும் எளிது. ஓர் ஆடையால் இவனை உங்கள் முதுகில் சேர்த்து கட்டிக்கொள்ளலாம். பின்னாலிருந்து காதுகளில் சொல்லிக்கொண்டே இருப்பான்” என்றான். சகுண்டன் “கிளிபோல” என்றான். அவர்கள் வேடிக்கையாக சொல்கிறார்கள் என எண்ணி நோக்கிய அசங்கன் உண்மையாக எண்ணிச்சொல்கிறார்கள் என உணர்ந்து திகைக்க சினி “ஆம். உங்கள் உடலுடன் கட்டிக்கொள்ளுங்கள், மூத்தவரே. மெய்யாகவே என்னை உங்கள் உடலுடன் கட்டிக்கொள்ளுங்கள்” என கூவினான்.

அசங்கன் சினத்துடன் “பேசாமல் வா. இது அரச நிகழ்வு, விளையாட்டல்ல” என்றான். முன்னால் சென்ற படைவீரர்கள் அதே விரைவில் திரும்பி வருவதைக் கண்டு அசங்கன் நின்றான். “என்ன ஆயிற்று?” என்றான் கடோத்கஜன். “அவர்களை யாரோ துரத்தி வருகிறார்கள்!” என்றான் சகுண்டன். “அல்ல” என்று அசங்கன் சொல்லி முன்னால் ஓடினான். சூசிகட்கன் புரவியிலிருந்து வேகமழியாமலே தாவி ஓடி அருகே வந்து “அரசர்! பேரரசர்!” என்றான். “என்ன? என்ன?” என்றான் அசங்கன். மூச்சடைக்க “பேரரசர் நேரில் அவரே வருகிறார். அரக்ககுலத்து இளவரசரை வரவேற்பதற்கு அவரே குடையும் சாமரமும் அணுக்கப்படையுமாக வந்துகொண்டிருக்கிறார்!” என்றான்.

சூசிகட்கனால் நிற்கமுடியவில்லை “அரசரே வருவதாக புறா வந்துள்ளது. நான் ஓடிவந்தேன்” என்றான். சுவீரர் பதைப்புடன் “மெய்யாகவா?” என்றார். சூசிகட்கன் “இதற்கென்ன முறைமை என்று எனக்கு தெரியவில்லை. இங்கு இவர் என்ன ஆற்றவேண்டும்?” என்றான். அசங்கன் “தாங்கள் விலகிக்கொள்க! இதை நான் நிகழ்த்துகிறேன்” என்றான். “அரசர் பிற நாட்டின் முதன்மை அரசர்களை மட்டுமே நேரில் சென்று வரவேற்பது வழக்கம். அந்த அரசர்கள் தாங்களும் வெண்குடை சூடியிருக்க வேண்டும். இருபுறமும் சாமரங்கள் விசிறப்படவேண்டும். இரு தரப்பிலிருந்தும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் முதலில் முன்னால் செல்லவேண்டும். படைத்தலைவர்கள் முழந்தாளிட்டு அமர்ந்து வாள் தாழ்த்தி வணங்கியபின் விலக அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துச்சொல் பரிமாற வேண்டும். அதன் பின்னரே அரசர்கள் சந்திக்கவேண்டும்” என்றார் சுவீரர்.

அசங்கன் “அம்முறைமைகள் எதுவும் இங்கு தேவையில்லை. தந்தை தன் மைந்தரை பார்க்க வருகிறார் என்பதன்றி வேறெதற்கும் பொருள் இல்லை. விலகுக!” என்றான். காவலர்கள் விலக அசங்கன் தன் உள்ளம் எடைகொண்டு நிறைந்து துடிப்பதை உணர்ந்தான். தொலைவில் இந்திரப்பிரஸ்தத்தின் மின்கொடி பறப்பது தெரிந்தது. அது அணுகி வருவதை அதன் பின்னரே உணர முடிந்தது.

விண்மீன்கள் விரிந்த வானின் கீழ் விளக்கொளிகளாக அரச ஊர்வலம் வருவது தெரிந்தது. சுடர்கொண்ட கொடிகள் நுடங்கின. மங்கல இசையும் வாழ்த்தொலிகளும் அணுகிவந்தன. தொலைவில் வெண்குடையின் கின்னரிகள் நலுங்கிச் சுழன்றன. நின்று கண்கூர்ந்து “வருவது யார்?” என்று கடோத்கஜன் கேட்டான். “தங்கள் பெரிய தந்தை, இந்திரப்பிரஸ்தத்தின் அரசர்” என்றான் அசங்கன். “அவரை மிக மெலிதாக நினைவுகூர்கிறேன்” என்று கடோத்கஜன் சொன்னான். “குழவிப்பருவத்தில் நான் அவரை கண்டதுண்டு… உடன் தந்தை வருகிறாரா?” என்றான். “ஆம் என்று எண்ணுகின்றேன்” என்றான் அசங்கன். “தந்தை வருகிறார்!” என்றபின் கடோத்கஜன் திரும்பி ஓங்கி உத்துங்கனின் தோளில்

அறைந்து “தந்தை! தந்தையை பார்க்கத்தான் வந்தோம்! தந்தை வருகிறார்!” என்று கூச்சலிட்டான்.

உத்துங்கன் இரு கைகளையும் விரித்து “ஆம், வந்துகொண்டிருக்கிறார்!” என்றான். திரும்பி படையினரை நோக்கி “பீமசேனர் வருகிறார்! தந்தை வருகிறார்!” என்று கூவினான். படையினர் அனைவரும் இரு கைகளையும் தூக்கி உடலை அலையடிக்கச்செய்து பெருங்குரங்குகள்போல் ஓசையெழுப்பினர். அசங்கன் “இளவரசே, தங்கள் படையினரை சற்று அமைதியாக வரச்சொல்லுங்கள்” என்றான். “அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்!” என்றான் கடோத்கஜன். “அவர்கள் எந்த ஓசையையும் இட வேண்டியதில்லை. அவரைக் கண்டதும் முறைப்படி வாழ்த்தொலி மட்டுமே எழுப்பவேண்டும்” என்றான் அசங்கன். “வாழ்த்தொலியை இவ்வாறு எழுப்புவதுதான் எங்கள் பழக்கம்” என்றான் கடோத்கஜன். அசங்கன் ஏதோ சொல்ல விரும்பி பின்னர் அதை முற்றிலும் தவிர்த்தான். நிகழ்வது அதன் போக்கில் அமையட்டும் என்று தோன்றியது.

மங்கலத்தாலங்களுடன் பன்னிரு வீரர்கள் இரண்டு நிரைகளாக வந்தனர். அவர்கள் கடோத்கஜனின் முன்னால் வந்து தாலமுழிந்து தலைவணங்கி விலக அவர்களைத் தொடர்ந்து பறைகளும் கொம்புகளும் சங்குகளும் மணிகளும் இலைத்தாளங்களும் முழங்க ஐந்திசை பெருகிச்சூழ இசைச்சூதர் எழுவர் வந்தனர். இசைக்கேற்ப கடோத்கஜனின் உடலில் எழுந்த அசைவைக்கண்டு அசங்கன் அறியாது அவன் கைகளை பற்றினான். அசங்கனை நோக்கி “என்ன?” என்றான் கடோத்கஜன். திரும்பிப்பார்த்தபோது கடோத்கஜனின் படையிலிருந்த அனைவருமே மெல்ல நடனமிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு அசங்கன் ஒன்றுமில்லை என்று தலையசைத்தான்.

சினியும் அவர்களுடன் சேர்ந்து தாளத்திற்கு உடலை அசைத்தபடி வந்தான். புருவத்தை நெரித்து உதட்டசைவால் ‘பேசாமல் வா’ என்று அவனுக்கு அசங்கன் ஆணையிட்டான். ஆனால் அவனைப் பார்த்து சிரித்தபடி மேலும் உடலை அசைக்கத் தொடங்கினான் சினி. பொறுமையிழந்து நோக்கை விலக்கிக்கொண்டான் அசங்கன். அவனைச் சூழ்ந்து அரக்கர்கள் அனைவரும் மெல்லிய நடமிட அவன் மட்டும் நேர்நடை கொண்டது மேலும் அமைதியின்மையை உருவாக்கியது. தன் உடலில் அந்த நடனம் கூடிவிடக்கூடாது என்பதற்காக உடலை இறுக்கிக்கொண்டான். கைகளை முறுக்கிப்பற்றியிருப்பதையும் பற்களைக் கடித்திருப்பதையும் சற்றுநேரம் கழித்தே உணர்ந்து எளிதாகி புன்னகையை முகத்தில் வரவழைத்துக்கொண்டான்.

யுதிஷ்டிரர் இரு கைகளையும் விரித்தபடி புன்னகை நிறைந்த முகத்துடன் முன்னால் வர அவருக்குப் பின்னால் நகுலனும் சகதேவனும் வந்தனர். கடோத்கஜன் விரைந்து ஓடிச்சென்று முழங்கால் தரையில் அறைபட விழுந்து தன் தலையை அவர் கால்களில் வைத்து வணங்கினான். தலையையும் கைகளையும் மும்முறை மண்ணில் அறைந்தான். அவனுக்குப் பின்னால் சென்ற அத்தனை படைவீரர்களும் அதைப்போலவே நிலம்படிய விழுந்து வணங்கினர். யுதிஷ்டிரர் குனிந்து அவனை தூக்க முயல எடையால் அவனை அசைக்க முடியவில்லை. அவன் எழுந்து யுதிஷ்டிரரின் தலைக்குமேல் தன் தோள் விரிந்திருக்க “தந்தையே, நான் உங்கள் மைந்தன் கடோத்கஜன்!” என்றான்.

அவர் அவனை கைகளால் சுற்றித் தழுவி, அவன் நெஞ்சில் தலைசாய்த்துக்கொண்டார். நகுலனும் சகதேவனும் அவன் இரு கைகளையும் தொட்டார்கள். யுதிஷ்டிரர் மெல்ல விசும்பி அழுதார். அவன் அவரை குனிந்து

நோக்கி “தந்தையே, என்ன இது? தந்தையே!” என்றான். நகுலனும் சகதேவனும்கூட விழிகசிந்திருந்தனர். யுதிஷ்டிரர் தன் முகத்தை துடைத்துக்கொண்டு பெருமூச்சுவிட்டார். கடோத்கஜன் “தந்தை எங்கே?” என்றான். யுதிஷ்டிரர் திரும்பிப்பார்த்தபோது பீமன் அவர்கள் நிரையின் பின்பகுதியில் தனியாக கைகளை மார்பில் கட்டிக்கொண்டு வேறேங்கோ நோக்கியவன்போல நின்றிருப்பதை கண்டார்.

கடோத்கஜன் ஓடிச்சென்று பீமனை அணுகி கால்களில் தலை வைத்தான். பீமன் குனிந்து அவன் தலையைத் தொட்டு வாழ்த்துச்சொல்லை முணுமுணுத்தான். கடோத்கஜன் எழுந்து சற்று நிலைகொள்ளாமல் நாற்புறமும் ததும்பிவிட்டு மீண்டும் ஓடிவந்து நகுலனையும் சகதேவனையும் நினைவுகூர்ந்து கால்தொட்டு வணங்கினான். அவர்கள் அவனை அள்ளி தூக்கி அணைத்துக்கொண்டார்கள். “இளையவன் விற்பயிற்சிக்கு சென்றிருக்கிறான். இல்லையேல் அவன் இத்தருணத்தை கொண்டாடியிருப்பான்” என்றார் யுதிஷ்டிரர்.

எண்ணியிராப் பொழுதில் கடோத்கஜன் திரும்பி யுதிஷ்டிரரை இரு கைகளாலும் அள்ளி மேலே தூக்கி வீசி மீண்டும் பற்றிக்கொண்டான். அவர் பதறிப்போய் கூச்சலிட படைவீரர்கள் சிறிய அலையென அசைந்து முன்வர முயன்றனர். சகதேவன் கையசைவால் அவர்களை அகற்றினான். கடோத்கஜன் யுதிஷ்டிரரை நெஞ்சோடணைத்து உரக்க நகைத்தபடி சுற்றி வந்தான். அவர் தோள்களிலும் கன்னங்களிலும் முத்தமிட்டான். அவனுடைய படைவீரர்கள் “ஹோ! ஹோ! ஹோ!” என முழக்கமிட்டார்கள். யுதிஷ்டிரர் “மூடா! மூடா!” என கூச்சலிட்டு அவன் தலையை தன் கையால் அறைய அவன் தூக்கிவீசி பிடித்துக்கொண்டே இருந்தான்.

அசங்கன் தலையில் கைவைத்து உடல் நடுங்க நிலம் நோக்கி நின்றான். அவனைச் சூழ்ந்திருந்த கடோத்கஜனின் படைவீரர்கள் பெண்களைப்போல கைகளைத் தூக்கி குரவையோசையிட்டனர். வாயால் முழவுத்தாளமிட்டு அதற்கேற்ப உடலை அசைத்தனர். சினி அசங்கனின் ஆடையைத் தொட்டு இழுத்து “மூத்தவரே! மூத்தவரே!” என்றான். கைசுட்டி உரக்க நகைத்து “தூக்கிப்போட்டு பிடிக்கிறார். அரசரை மரப்பாவைபோல பிடிக்கிறார்!” என்றான். “விலகிச் செல், அறிவிலி!” என்று அசங்கன் பற்களைக் கடித்து மூச்சொலியால் அவனை அப்பால் துரத்தினான். அவன் கால்கள் நிலத்திலிருந்து வழுவின. ஓசைகள் மங்கலாக, காதுகள் மூளலோசை எழுப்பின. சூழ்ந்திருந்த விளக்குகளின் ஒளி விசைகொண்டு கரைந்து ஒற்றைச் செம்பரப்பாக அவனை சுற்றிச் சுழித்தது.

அசங்கன் பின்னர் விழிநிமிர்ந்து நோக்கியபோது யுதிஷ்டிரர் கண்ணீர்வர முகம் சிவந்து நகைத்துக்கொண்டிருப்பதை கண்டான். நகுலனும் சகதேவனும் சூழ்ந்திருந்த படைவீரர்கள் அனைவருமே உடல் ஓய நகைத்துக் களைத்திருந்தனர். அப்பால் பீமன் கைகளை மார்பில் கட்டியபடி உதடுகள் மெல்லிய புன்னகையில் விரிந்திருக்க கடோத்கஜனை பார்த்துக்கொண்டிருந்தான். யுதிஷ்டிரர் கடோத்கஜனிடம் “வருக, இங்கே உனக்கு இன்னுணவு இல்லையென்றாலும் நல்லுணவு உள்ளது. விருந்துண்டு அவைக்கு வருக!” என்றார். “நான் எப்போதும் ஊனுணவு மட்டுமே உண்பேன்…” என்றான் கடோத்கஜன். “நன்று, ஓய்வெடுத்துவிட்டு வருக!” என்றார் யுதிஷ்டிரர். “நான் ஓய்வே எடுப்பதில்லை” என்றான் கடோத்கஜன். “உன் படையினர் ஓய்வெடுக்கட்டும்” என்றார் யுதிஷ்டிரர். “அவர்களும் ஓய்வெடுக்கும் வழக்கமில்லை” என்றான் கடோத்கஜன்.

யுதிஷ்டிரர் சலிப்புற்று “சரி, நான் ஓய்வெடுக்கவேண்டும்… அதன் பிறகு வா” என்றபின் அசங்கனை நோக்கி “அவைக்கு அழைத்து வருக!” என்றார். அவர் தன்னை

நோக்கி பேசியது அசங்கனை நிலைபதறச் செய்தது. “ஆம், அரசே” என்றபோது குரல் வரவில்லை. “ஆணை” என்று தலைவணங்கவேண்டும் என அவன் எண்ணியபோது யுதிஷ்டிரர் திரும்பிக்கொண்டிருந்தார். அசங்கன் ஏமாற்றத்துடன் அதை இளையோர் பார்த்துவிட்டார்களா என்று பார்த்தான். அவர்களின் விழி கடோத்கஜனிலேயே இருந்தது. அசங்கன் தன் ஆடையை நீட்டி இழுத்து நிமிர்ந்து நின்றான். பொறுப்பு ஒன்று வந்துள்ளது. அதை திறம்படச் செய்தாகவேண்டும் என சொல்லிக்கொண்டான். அவனுக்கு அப்போது தன்னை இளையோர் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. தொண்டையை கனைத்து “செல்வோம்” என்றான்.

கடோத்கஜனை பார்க்க பாண்டவப் படைவீரர்கள் முண்டியடித்தார்கள். அணிநிரைகள் கலைவதைக் கண்ட படைத்தலைவர்கள் கொம்புகளையும் முழவுகளையும் ஒலித்து அவர்களை நெறிப்படுத்தும் ஆணைகளை விடுத்தனர். யாரோ ஒருவன் “பேருருவர் வாழ்க! இளைய பாண்டவர் கடோத்கஜர் வாழ்க!” என கூவ மொத்த பாண்டவப் படையும் பெருங்குரலில் வாழ்த்தொலி எழுப்பத் தொடங்கியது. செவிகளை நிறைத்துச் சூழ்ந்த பேரொலி நடுவே கடோத்கஜன் சூழ நோக்கி தன்னை பார்த்து கையசைத்த அனைவரிடமும் சிரித்து வாழ்த்து சொல்லி நடந்தான். “இவர்கள் நம்மைக் கண்டு மகிழ்கிறார்கள், அரசே” என்றான் உத்துங்கன். “ஆம், நாம் இவர்களை மேலும் மகிழ்விப்போம்” என்றான் சகுண்டன்.

யானைத்தோல் கூடாரத்திற்குள் செல்ல கடோத்கஜன் மறுத்துவிட்டான். வெளியே சாலமரத்தடியில் கவிழ்த்திட்ட மரத்தொட்டிமேல் அமர்ந்தான். உத்துங்கனும் சகுண்டனும் அப்பால் நிலத்தில் கால்மடித்து குரங்குகள்போல அமர்ந்தனர். கடோத்கஜன் சுற்றிலும் நோக்கிவிட்டு “இத்தனை படைவீரர்கள், இவ்வளவு படைக்கலங்கள்… இருந்தும் நாம் ஏன் வெல்லவில்லை?” என்றான். “ஏனென்றால் அவர்கள் நம்மைவிட மிகுதி” என்றான் அசங்கன். “அனைவரும் சேர்ந்து போரிட்டால்…” என்றபின் கடோத்கஜன் “எத்தனைபேர் இறப்பார்கள்?” என்றான். “இரண்டு நாட்கள் நடந்த போரில் இங்கு வந்தவர்களில் பாதிப்பேர் மறைந்துவிட்டனர்” என்றான் அசங்கன். “பாதிப்பேர் என்றால்?” என அவன் வியப்பில் சுருங்கிய சிறிய விழிகளுடன் கேட்டான். “பல லட்சம்பேர்” என்றான் அசங்கன். “அவர்களை என்ன செய்தீர்கள்?” என்றான் கடோத்கஜன். “புதைத்தோம், எரித்தோம்” என்று அசங்கன் சொன்னான். அவனுக்கே ஒரு பொருளின்மை தோன்றலாயிற்று.

கடோத்கஜன் சில கணங்கள் கழித்து “இப்போர் எதற்கு?” என்றான். “நாட்டுக்காக” என்றான் அசங்கன். “நாடென்றால் நிலம் அல்லவா?” என்றான் கடோத்கஜன். “ஆம்” என்றான் அசங்கன். அவன் மேலே பேச விரும்பவில்லை. அச்சொல்லாடல் மேலும் பொருளின்மையை உருவாக்கி உயிர்கொண்டிருப்பதையே வீணென்று காட்டிவிடும் என அஞ்சினான். “நிலம் எதற்காக?” என்றான் கடோத்கஜன். “மானுடர் வாழ்வதற்காக. மானுடர் பேணும் தெய்வங்கள் பெருகுவதற்காக” என்றான் அசங்கன். “மானுடரைக் கொன்றழித்து மண்ணை வெல்வதில் என்ன பொருள்?” என்றான் கடோத்கஜன். உத்துங்கன் “ஆம், மண் வேண்டுமென்றால் பாரதவர்ஷத்தில் விரிந்துபரந்து கிடக்கிறதே” என்றான். சகுண்டன் “அவர்கள் அரசர்கள். அவர்களுக்கு இன்னொருவர் ஆளும் மண் மட்டுமே தேவைப்படும்” என்றான்.

அசங்கன் ஏனென்றறியாமல் சீற்றம்கொண்டான். “மண்ணுக்காக அல்ல. அறத்துக்காக. பாரதவர்ஷத்தை ஆளும் தொல்வேதங்களை வென்று

அறத்திலமைந்த நாராயணவேதம் நிலைகொள்வதற்காக" என்றான். "ஆம், அவ்வாறு சொன்னார்கள்" என்றான் கடோத்கஜன். "ஆனால் அந்த வேதங்களே மானுடருக்காகத்தானே?" என்றான். "ஆம், ஆனால் அது நாளை வரவிருக்கும் தலைமுறைகளுக்காக. இன்று மானுடர் அதை உயிர்கொடுத்து நிலைநாட்டியாகவேண்டும்." கடோத்கஜன் "இளையோனே, நீரில் முளைத்த செடி நீரின்றி அமையாது" என்றான். அசங்கன் உள்ளம் திடுக்கிட அவனை நோக்கினான். கடோத்கஜன் தலையை அசைத்து "ஆம், அவ்வாறே" என்றான்.

நெடுநேரம் கடந்து "குருதியில் அல்லாது அறம் நிலைகொள்ள முடியுமா?" என்றான் அசங்கன். கடோத்கஜன் "இயலவேண்டும். அவ்வாறொன்று எழவேண்டும்" என்றான். உத்துங்கன் "அது நம் மூதன்னையர் ஆண்ட நாட்களை போலிருக்கும்" என்றான். கடோத்கஜன் "நான் இன்று நம் அரசரை பார்த்தேன். எத்தனை ஆடைகள்… ஆடையே இல்லாத ஓர் அரசன் இருக்கலாகுமா என எண்ணினேன்" என்றான். குழப்பமும் கலக்கமுமாக முகம் சுளித்திருக்க "ஆடையே இல்லாத அரசர்கள். அவர்கள் போரிடமாட்டார்கள். எவரையும் தண்டிக்கமாட்டார்கள்…" என்றான். "நம் மூதன்னையர் அவர்களுக்கு காவலாக அமர்ந்திருப்பார்கள்" என்றான் உத்துங்கன்.

அசங்கன் மேலும் எரிச்சலடைந்தான். "நீங்கள் தொல்குடிகள் போரிடுவதே இல்லையா?" என்றான். கடோத்கஜன் "போரிடா விலங்குகள் எங்குள்ளன? ஆனால் குடி முற்றழியும் போர்கள் எங்களுக்குள் இல்லை" என்றான். அவனுடைய தோற்றம் எண்ணநுண்மை அற்றவன் என எவ்வாறு தனக்கு தோன்றச் செய்கிறது என அசங்கன் வியந்தான். பேருருவர்கள் அனைவருமே அந்த உளப்பதிவை உருவாக்குகிறார்கள். தன் எளிமையாலேயே நெடுந்தொலைவு செல்பவன் அவன் என்று அசங்கன் எண்ணினான். மேலும் பேச அவன் விரும்பவில்லை.

"பாவம் தந்தை" என்றான் கடோத்கஜன். "ஏன்?" என்றான் அசங்கன். "அவரால் இப்போரில் ஈடுபட இயலாது" என்றான் கடோத்கஜன். "அது மெய்யல்ல. இப்போரில் நிகர்நிற்கவியலாத வீரர் அவரே. நேற்றைய போரில் அவர் வெறிகொண்ட யானையென எதிரிகளை சூறையாடினார்" என்றான் அசங்கன். கடோத்கஜன் "அதனால் அவர் போரில் உளமீடுபட்டிருக்கிறார் என்று பொருளா என்ன?" என்றான். "உள்ளத்தால் அகன்றிருப்பதனால்கூட அவ்வாறு போரிடலாம் அல்லவா?"

அசங்கன் அவன் முகத்தை நேர்கொண்டு நோக்கி "நீங்கள் போரில் உளமீடுபாடு கொண்டிருக்கிறீர்களா, மூத்தவரே?" என்றான். "இல்லை" என்றான் கடோத்கஜன். "நான் என் தந்தையின்பொருட்டே வந்தேன். அவருக்கு மைந்தர் துணைநின்றாக வேண்டும் என்பதனால். அவர் இல்லையென்றால் இத்திசைக்கே வந்திருக்கமாட்டேன்." அசங்கன் "எப்போரிலும் ஈடுபட்டிருக்கமாட்டீர்களா?" என்றான். "பிறரை கொன்றமைவதல்ல என் வெற்றி" என்றான் கடோத்கஜன்.

"மூத்தவரே, நீங்கள் இப்போரில் பெரும்புகழ் அடையலாம். வெற்றிக்குப் பின் உங்கள் குடியும் நாடும் செல்வமும் சிறப்பும் அடையும்" என்றான் அசங்கன். "புகழா? அதிலென்ன இருக்கிறது? எங்கள் நடுகல்குன்றுகளில் மாவீரர் நிரைநிரையாக நின்றிருக்கிறார்கள். அவர்கள் எவருக்கும் தனிப் பெயர்கள் இல்லை" என்றான் கடோத்கஜன். "உங்கள் நாட்டுக்கு நலம் அமையுமென்றால்? உங்கள் குடி வாழும் என்றால்?" என்றான் அசங்கன்.

"ஆம், அது மெய். இனியும் காடுகளுக்குள் நாங்கள் வாழவியலாது. கானுறைவாழ்விலுள்ள எந்த இன்பமும் ஊர்திகழ் வாழ்வில் இல்லை. ஆனால் கானுறைவோர் இனி அவ்வண்ணம் நீடிக்கமுடியாது. அவர்கள் அழிக்கப்படுவார்கள். பெரும்புகழ்கொண்ட அசுரகுல வேந்தர்கள் அனைவரும் அழிந்தனர். நிஷாதரும்

கிராதரும் அரக்கரும் அசுரரும் வெல்லப்படுகிறார்கள். எங்கள் குலம் வாழவேண்டும் என்றால் நாங்கள் நாடாகவேண்டும். படைகொள்ளவேண்டும். எங்கள் கருவூலங்களில் பொன் இருக்கவேண்டும்" என்று கடோத்கஜன் சொன்னான்.

பன்னிரு ஏவலர் நிரைவகுத்து பெரிய கடவங்களில் கொண்டுவந்து இறக்கி அகன்ற மரத்தாலங்களில் உணவு பரிமாறினர். சுட்ட மாட்டுத்தொடைகளும் முழுப் பன்றியும் தோலுடன் பொரிக்கப்பட்ட ஆடும். கடோத்கஜன் உணவைப் பார்த்ததும் அதுவரை இருந்த உணர்வுகள் அகல கைகளை தட்டிக்கொண்டு உரக்க நகைத்தான். உத்துங்கன் எழுந்து நின்று கைகளை நீட்டி "இங்கே இங்கே" என்று கூச்சலிட்டான். உணவை முன்னால் வைத்ததும் அவர்கள் கைகளை உரசிக்கொண்டு நாவால் வாயை துழாவினார்கள்.

கடோத்கஜன் "என் படைவீரர்கள் அனைவரும் உண்டுவிட்டார்களா?" என்று கேட்டான். அடுமனையாளன் "ஆமென்று எண்ணுகிறேன். நான் வரும்போது உணவு சென்றுகொண்டிருந்தது" என்றான். கடோத்கஜன் அசங்கனிடம் "சென்று நோக்கிவிட்டு வருக! அனைவரும் உணவில் கைவைத்துவிட்டிருக்கவேண்டும். ஒருவர்கூட உணவுக்காக காத்திருக்கக்கூடாது" என்றான். அசங்கன் எழுந்து விரைந்து அப்பால் சென்று மூன்று ஏவலரிடம் ஆணையிட்டு குதிரைகளில் அவர்களை அனுப்பிவிட்டு காத்து நின்றான். அவர்கள் மரப்பாதை பெருந்தாளமிட வந்திறங்கி "அனைவருக்கும் உணவு சென்றுவிட்டது, இளவரசே. உண்ணத்தொடங்கிவிட்டனர்" என்றனர்.

அசங்கன் அதை கடோத்கஜனிடம் வந்து சொன்னான். கடோத்கஜன் பிறரை பார்க்க அவர்கள் இருவரும் உணவை கையில் எடுத்த பின்னர் தான் மாட்டுத்தொடையை எடுத்துக்கொண்டான். அசங்கன் "இது உங்கள் குலவழக்கமா, மூத்தவரே?" என்றான். "ஆம், எங்கள் குடியில் குழவியர், பெண்டிர், முதியோர், வீரர், என அனைவரும் உணவுண்ட பின்னரே அரசன் உணவுண்ண வேண்டும். ஒருவர் பசித்திருக்க அரசன் உண்டாலும் அவ்வுணவு நஞ்சு. அதற்கு அவன் ஏழுமுறை கங்கையில் நீராடி பிழையீடு செய்யவேண்டும்" என்றான்.

அசங்கன் கடோத்கஜன் உண்ணுவதை நோக்கிக்கொண்டிருந்தான். அவன் இரு கைகளாலும் ஊன்தடியைப் பிடித்து சுழற்றிச் சுழற்றி கடித்து இழுத்தான். பெரிய துண்டுகளாக கிழித்து ஓசையுடன் மென்றான். ஏப்பம்விட்டபடி கள்ளை குடித்து புறங்கையால் துடைத்துக்கொண்டான். அவனுடைய அசைவுகளனைத்தும் குரங்குகளுக்குரியவை. சுவையை உணர்ந்தபோது புலிபோல உறுமியபடி தன் தோழரை நோக்கி சிரித்தான்.

"தாங்கள் இப்போது இடும்பவனத்தின் அரசர் அல்லவா?" என்றான் அசங்கன். "ஆம், பதினெட்டு அகவை நிறைந்ததும் என் காட்டுக்கு பொறுப்பேற்றேன். இப்போது அது காடல்ல. கங்கைக்கரை துறைமுகத்தில் இருந்து ஏழு வண்டிச்சாலைகளால் இடும்பவனம் இணைக்கப்பட்டுள்ளது. தெருக்களும் ஆலயங்களும் கல்விச்சாலைகளும் கொண்ட இடும்பவனம் இன்று ஒரு பேரூர். நூற்றெட்டு அந்தணர்குடிகள் உள்ளன. ஆயரும் உழவரும் வாழும் தெருக்கள் நாள்தோறும் பெருகிக்கொண்டிருக்கின்றன. ஊரைச்சுற்றி மரத்தாலான கோட்டை அமைத்துள்ளேன்" என்றான் கடோத்கஜன்.

"மரத்தாலா?" என்று அசங்கன் வியப்புடன் கேட்டான். "எளிதில் எதிரிகள் அதை எரித்துவிட முடியுமே?" கடோத்கஜன் "வாழும் மரங்களால் ஆன கோட்டை. சொல்லப்போனால் செறிந்த சிறுகாடொன்றால் ஆன கோட்டை. பன்னிரு அடுக்குச்சுற்றுகளாக பெருமரங்களை வளர்த்து முள்ளாலும் மூங்கிலாலும்

இணைத்துக்கட்டி உருவாக்கப்பட்டது. அனைத்து மரங்களுக்கு மேலும் எங்கள் வீரர்கள் அமர்ந்திருக்கும் காவல்மாடங்கள் உண்டு” என்றான். அசங்கன் “ஆம், அவ்வாறு கதைகளில் கேட்டுள்ளேன்” என்றான். கடோத்கஜன் “இன்று பாரதவர்ஷத்தில் எந்த அரசும் எளிதில் என் நகரை வென்றுவிட இயலாது” என்றான்.

அந்தக் கோட்டையை தன் உளவிழிக்குள் விரித்துக்கொண்டு “அங்காடிகள் உள்ளனவா?” என்றான் அசங்கன். “ஆம், நாளங்காடி கோட்டைக்கு வெளியே அமைந்துள்ளது. கங்கைக்கரையில் இன்னொரு அங்காடி. கூலமும் படைக்கலங்களும் பிற கலங்களும் படகுகளில் வந்திறங்குகின்றன. தென்மேற்கே தேவபாலபுரத்திலிருந்தும் தென்கிழக்கே கலிங்கத்திலிருந்தும் வணிகர்கள் ஆண்டுக்கு எட்டுமுறை எங்கள் ஊருக்கு வருகிறார்கள். சிந்துவிலிருந்தும் கூர்ஜரத்திலிருந்தும் மலைப்பொருள் கொள்ளும் வணிகர்கள் ஒவ்வொரு வாரமும் வருகிறார்கள்” என்று கடோத்கஜன் சொன்னான். “அல்லங்காடி கோட்டைக்குள் உள்ளது. அருமணிகளும் பூண்களும் இன்னுணவுகளும் மதுவும் விற்கும் கடைகள் நிரைகொண்ட நாற்கை வடிவம் கொண்டது.”

கடோத்கஜன் விழிகள் விரிய கைகளைத் தூக்கி சொன்னான் “நகர் நடுவே அரசமாளிகை அமைந்துள்ளது.” அவன் கையில் பன்றித்தொடை வானிலென நின்றது. “மூன்றடுக்கு மாளிகை அது.” அசங்கன் “உங்கள் அரண்மனையா?” என்றான். “ஆம், ஆனால் மண்மானுடரின் அரண்மனைகளை போன்றது அல்ல” என்றான் கடோத்கஜன். “எங்கள் மாளிகையை அரக்கர் குடிகளுக்குரிய முறையிலே அமைத்துள்ளேன். எழுந்த பெரிய மரங்களுக்குமேல் மூங்கில் வேய்ந்து உருவாக்கப்பட்டது அது. நடந்து அதில் ஏறுவதைவிட மரங்களினூடாக பறந்து செல்வது எளிது. எங்கள் இடும்பநகரியில் அனைத்து மாளிகைகளும் மரங்களுக்கு மேலேயே அமைந்துள்ளன. தரை எங்கள் விலங்குகளுக்குரியது. யானைகளும் புரவிகளும் மாடுகளும் பன்றிகளும் அங்கு வாழ்கின்றன.”

“அயல்நிலத்தாரும் அவர்களுடன் வாழ்கிறார்கள்” என்றபின் கன்றுத்தொடையை மென்றான் உத்துங்கன். கடோத்கஜன் உரக்க நகைத்து “எந்நிலையிலும் எங்களை தலை தூக்கியே நோக்கும் நிலையிலிருப்பவர்கள் அவர்கள்” என்றான். “நீங்கள் நிலத்தில் நின்றாலும் பாரதவர்ஷத்தில் பெரும்பாலானவர்கள் உங்களை அண்ணாந்துதான் பார்க்கவேண்டியிருக்கிறது, மூத்தவரே” என்றான் அசங்கன்.

உணவுக்குப் பின் சகுண்டனும் உத்துங்கனும் கைகளை நக்கியபடியே எழுந்துசென்று உடல்நீட்டி சோம்பல்முறித்தபடி சுற்றுமுற்றும் நோக்கினர். “நீங்கள் ஓய்வுகொள்ளலாம். அரசரும் இளையோரும் முற்புலரியில் அவையமர்வார்கள். அப்போதுதான் நீங்கள் செல்லவேண்டும்” என்றான் அசங்கன். கடோத்கஜன் “ஆம், அவ்வாறுதான் சொல்லப்பட்டது. ஆனால் எங்கே துயில்வது?” என்றான். “இங்குதான். கூடாரங்களுக்குள் துயிலலாம். அல்லது வெளியே நிலத்தில் பாய்விரித்து…” என்றான் அசங்கன். “நாங்கள் தரையில் துயில்வதில்லை” என்றான் கடோத்கஜன்.

“இங்கே மரங்கள் இல்லையே?” என்றான் அசங்கன். “குருக்ஷேத்ரத்தில் மரங்கள் முளைப்பது அரிது… ஆகவேதான் இது தொன்மையான போர்நிலமாக உள்ளது.” கடோத்கஜன் சூழ நோக்கி “மெய்தான்… மரங்களெல்லாம் மிகச் சிறியவை” என்றான். உத்துங்கன் “நன்று, நாங்கள் அப்படியே அமர்ந்துகொள்கிறோம்” என்றான். அசங்கன் “மூத்தவரே, நான் ஒன்று செய்கிறேன்” என்று எழுந்துசென்று கூடாரத்தின் மேலிருந்த யானைத்தோல்பரப்பை அழுத்திநோக்கி “இதன்மேல்

படுத்துக்கொள்ளலாம்” என்றான். உத்துங்கன் அழுத்தி நோக்கி “ஆம், தழைக்கூரை போலவே உள்ளது” என்றபின் மூங்கில் வழியாக ஏறி மேலே சென்றான். படுத்துநோக்கி “மெய்யாகவே மரங்களின்மேல் தழைப்பரப்பில் படுத்திருப்பதுபோல” என்றான்.

சகுண்டனும் மேலேறி படுத்தான். “நீங்களும் படுத்துக்கொள்ளலாம், மூத்தவரே. நான் இங்கேயே நிலத்தில் மரவுரியில் ஓய்வெடுக்கிறேன்” என்றான் அசங்கன். “நானும் தரையிலேயே அமர்ந்திருக்கிறேன். தேவையென்றால் மேலே செல்கிறேன்” என்றான் கடோத்கஜன். அசங்கன் மரவுரியை விரித்து படுத்துக்கொண்டான். “அசையாத தரையில் படுத்தால் துயில்வது கடினம்” என்றான் கடோத்கஜன். “ஆம், சில மாலுமிகளும் அவ்வாறு பழகியிருக்கிறார்கள்” என்றான் அசங்கன். “அதைவிட மண்ணில் நாகங்கள் மிகுதி. எங்கள் முதலெதிரிகள் அவையே” என்றான் கடோத்கஜன். “இங்கே நாகங்கள் இல்லை” என்று அசங்கன் சொன்னான். “அவை இல்லாத இடமே இல்லை” என்றான் கடோத்கஜன்.

அவர்கள் விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தார்கள். கடோத்கஜனின் விழிகள் வானில் நிலைத்திருக்க முகம் மட்டும் அசைந்துகொண்டிருந்தது. அவ்விழிகளில் விளங்கவியலா துயர் ஒன்றை அசங்கன் கண்டான். கட்டுண்ட அனைத்து விலங்குகளிலும் அதை அவன் கண்டிருந்தான். மானுடருடன் கலந்து அரைமானுடராகவே ஆகிவிட்டிருந்தாலும்கூட புரவிகளின் விழிகளில் தனிமையும் துயரும் நிறைந்திருக்கும். யானைவிழிகளுக்குள் அத்துயர் மிகமிக ஆழத்திலென மின்னிக்கொண்டிருக்கும். அவன் அப்போது கடோத்கஜனிடமிருந்து மிக விலகிவிட்டிருந்தான். மீண்டும் அணுக விரும்பினான். எதையாவது பேசவேண்டும். அவன் ஆளும் அரசை. அவன் குடியை. ஆம், அவற்றைப்பற்றிய பேச்சே அவனை அருகே கொண்டுவருகிறது.

கடோத்கஜனுக்கு மைந்தர்கள் இல்லையா என்ற எண்ணம் அசங்கனின் உள்ளத்தில் எழுந்தது. அவனறிந்த கடோத்கஜனின் கதைகள் அனைத்துமே அவனுடைய சிற்றகவையிலேயே நின்றுவிட்டிருந்தன. காட்டுக்குள் பதினான்காண்டுகள் அலைந்தபோது நினைத்தபோதெல்லாம் தோன்றி குந்தியையும் ஐந்து தந்தையரையும் தன் தோளில் சுமந்து விழைவிடம் நோக்கி கொண்டுசென்ற பேருருவனாகிய சிறுவன். அவன் முன் அமர்ந்திருந்த கடோத்கஜன் முதிர்ந்தவனாக இருந்தான். அவ்வண்ணமென்றால் மைந்தர் இருக்கவேண்டும். அவர்கள் போருக்கு வந்திருக்கிறார்களா?

அதை நேரடியாக கேட்கலாமா என்று தயங்கி “உங்கள் குடியில் மணச்சடங்குகள் உண்டா?” என்றான். “என்ன?” என்று கடோத்கஜன் திரும்பி நோக்கினான். “இல்லை, கதைகளில் இளைய பாண்டவர் பீமசேனர் உங்கள் அன்னையை கொள்மணம் புரிந்ததாக வருகிறது. பல தொல்குடிகளில் முறையான மணச்சடங்குகள் இல்லை என்பார்கள். நான் எவரையும் இதற்குமுன் சந்தித்ததில்லை” என்றான் அசங்கன். “நான் மணம்புரிந்துகொண்டவன்” என்றான் கடோத்கஜன். “ஆனால் என் குடியில் அல்ல. என் குடியில் அரசர்கள் எல்லா குலக்குழுவிலிருந்தும் ஒரு பெண்ணை மணக்கவேண்டும். நான் அவ்வாறு மணம்புரிந்துகொள்ளவில்லை. நான் மணந்தவள் அரசமகள்.”

அசங்கன் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் கடோத்கஜன் பேச விரும்பினான். “நான் என் குடியிலேயே மணம்புரிந்துகொள்ள விரும்பினேன். ஆனால் மூதன்னை குந்திதேவி அதை விரும்பவில்லை” என்றபின் “எந்தையின் அன்னை. இளஅகவையிலேயே என் மூதன்னை என நெஞ்சிலமர்ந்தவர். இந்திரப்பிரஸ்தத்தின்

பேரரசியாயினும் எனக்கு களித்தோழி என்றே ஆனவர்” என்றான். அசங்கன் “அவர் உங்களை தன் குடியின் முதல் மைந்தனாக ஏற்றுக்கொண்டதாக கதைகள் கேட்டிருக்கிறேன்” என்றான். கடோத்கஜன் முகம்மலர்ந்து “ஆம், என்னை அவர் பைமி என்றும் பைமசைனி என்றும்தான் அழைப்பார்கள். என் அன்னையிடம் தன் குலத்தின் முதல் மாற்றில்மகள் அவரே என்றும் மூத்தவரால் மணக்கப்பட்டிருந்தால் அஸ்தினபுரியின் பட்டத்தரசியென அவரை அமரச்செய்திருப்பேன் என்றும் சொன்னார்.”

தன் ஆடையிலிருந்து அருமணி பதித்த கணையாழி ஒன்றை காட்டினான். “இது பாண்டவ அரசகுடியினருக்குரியது. இடும்பவனத்திலிருந்து கிளம்பும்போது இதை மூதன்னை என் அன்னையிடம் அளித்தார்.” அதை திருப்பிக்காட்டி “அருமணி... மலர்மொட்டுபோலவோ குருதித்துளிபோலவோ தெரிவது. இதை என் கைகளில் அணிந்திருக்கவேண்டும் என்பார்கள். எப்போதும் இதை அணிந்திருப்பது கடினம். மரங்களினூடாக செல்லும்போது எங்கேனும் தவறி விழுந்துவிடும். ஆகவே இதை சரடில் கட்டி என் இடையில் அணிந்திருக்கிறேன். அரியணை அமரும்போது மட்டும் விரலில் அணிந்துகொள்வேன்” என்றான்.

அதை வாங்கி நோக்கிய அசங்கன் “பாண்டவ மைந்தர் அனைவரும் இத்தகைய கணையாழியை வைத்திருக்கிறார்கள். அவையனைத்தும் இதைவிட சிறியவை. இந்த அருமணிக்குள் விழிகளால் நோக்கமுடியாதபடி சிறிதாக அமுதகல முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது” என்றான். அதை அப்பாலிருந்து வந்த விளக்கொளியில் காட்டி அதன் ஊடொளியை தன் உள்ளங்கையில் ஏந்தினான். அதில் சிறிய நிழலுருவாக அமுதகலம் தெரிந்தது. கடோத்கஜன் “ஆம், அதில் கதிரொளி பட்டால் அமுதகலம் எழும்... அதை சுவரில் காட்டினால் பேருருவாகும்” என்றான். “உங்களில் பீமசேனர் என இது இந்த அருமணிக்குள் அமைந்துள்ளது, மூத்தவரே” என்றான் அசங்கன்.

“இது முதல் மைந்தனுக்குரியது” என்றான் கடோத்கஜன். “இந்த அருமணியால்தான் எனக்கு அரசமகள் மணமகளாக வந்தாள்.” அசங்கன் “அரசமகளா?” என்று கேட்டான். “ஆம். என் காடு நாடாகவேண்டும் என்றும் நான் வேள்விச்செயல் முடித்து அந்தணர் அரிமலரிட்டு வாழ்த்த முடிசூடவேண்டும் என்றும் அரசமகளை மணம்புரிந்து பட்டத்திலமர்த்தவேண்டும் என்றும் குந்திதேவி ஆணையிட்டார். ஆனால் நூல்கள் எதையும் நான் சென்று கற்கலாகாதென்றும் அனைத்து மெய்மையையும் என் காட்டுக்குள் அமர்ந்தே கற்றறியவேண்டும் என்றும் சொன்னார்.”

நான் கற்றுத்தேர்ந்தேன். படைதிரட்டினேன். நகர் சமைத்து கோட்டைகட்டி செல்வம் பெருக்கினேன். என் நகரில் குடியேற அந்தணர் ஒருங்கவில்லை. ஆகவே விந்தியனுக்கு அப்பாலிருந்து அனற்குலத்து அந்தணரை குடியமர்த்தி வேள்விகள் செய்தேன். அவர்களின் நூல்நெறிப்படி குடித்தலைமை கொண்டேன். முடிசூடி அமர எனக்கு அருகே அரசி அமையவேண்டும். அந்தணரே என் பொருட்டு அரசர்களிடம் தூது சென்றனர். ஆயினும் எனக்கு பெண் தருவதற்கு அரசர்கள் எவரும் சித்தமாகவில்லை. பலமுறை முயன்றும் பயனின்றிப் போயிற்று. அப்போது அவர் இந்திரப்பிரஸ்தத்தில் இருந்தார். அரசகுடி மணமகள் அமையாமையால்தான் நான் இந்திரப்பிரஸ்த பெருவேள்விக்கு செல்லவில்லை. அதை அன்னைக்கு செய்தியாக அனுப்பினேன்.

அன்னை எனக்கு செய்தி அனுப்பினார். “நீ பாரதவர்ஷத்தின் பெருவீரனின் மைந்தன். உனக்கு நிகரான வீரர்கள் இந்நிலத்தில் மிகக் குறைவே. ஆயினும் உன்

குருதியின் தோற்றமோ அரக்கர்களுக்குரியது. அரக்கர் குடிக்கு மகற்கொடை நிகழ்த்த அரசர் சித்தமாக மாட்டார்கள்” என்றார். “நான் விழைந்தால் என் மைந்தர் வென்று அடியறைவு செய்யவைக்கும் அரசர்களின் மகளிர் எவரையாவது உனக்கு மணமுடிக்க முடியும். ஆனால் நீ உன் தோள்வல்லமையால் வென்ற அரசமகளை மணப்பதே பெருமை. ஏனென்றால் நாளை உன் குடியினர் அதன்பொருட்டு பெருமைகொள்ளவேண்டும்” என்றார்.

என் குடியின் மூத்தவர்கள் நான் படைகொண்டு சென்று அரசமகள் எவரையேனும் கவர்ந்து வந்து மணமுடிக்கலாம் என்றார்கள். அரக்கர்குலத்துக்கு கொள்மணம் உகந்த நற்செயல்தான் என்றனர். ஆனால் அதை நான் விரும்பவில்லை. அன்னை எனக்கிட்ட ஆணை முறைப்படி ஷத்ரிய குடியொன்றிலிருந்து பெண்கொள்வதும் அவளுக்குப் பிறக்கும் மைந்தர்களுக்கு எனது நாட்டை உரிமையாக்குவதும்தான். எனக்கு பெண்கொடுக்கும் ஷத்ரியர் என்னை அரசன் என ஏற்கவேண்டும். தன் மகளை அரக்கன் கவர்ந்தான் என்று சொல்லி அவர் அந்தணரை அழைத்து கொல்வேள்வி செய்தால், அதற்கு பிற அரசரை அழைத்தால் அரசமகளை மணந்தமையின் நலம் ஏதும் எனக்கோ என் குடிக்கோ பிறக்கவிருக்கும் மைந்தருக்கோ அமையாது போகும்.

என் தந்தையர் காடேகி மறைந்தனர். அஸ்தினபுரி துரியோதனரால் கைப்பற்றப்பட்டது. அந்நாளில் சிந்து மலையிறங்கி நிலம்பரவும் காட்டில் இருந்த அஷ்டதச ஃபீகரர் என்னும் அரக்கர்களுக்கும் அங்கு குடியேறிய யாதவக்குடி ஒன்றுக்கும் பூசல்கள் நிகழ்வதாக அறிந்தேன். அவர்கள் முரு என்னும் தொல்மூதாதையின் வழிவந்தவர்கள் என்பதனால் மௌரியர் என அழைக்கப்பட்டார்கள். அவர்களின் அன்றைய அரசரின் பெயரும் முரு என்பதே. நாற்பத்தெட்டாவது முரு பதினெட்டு அரக்கர்குடிகள் இணைந்த படையிடம் தோற்று படைவீரர்களையும் குடிகளையும் இழந்து மேலும் மேலும் ஆற்றங்கரை நோக்கி சென்றுகொண்டிருந்தார். அவர்களின் பசுக்கள் அரக்கர்களால் தொடர்ந்து கவரப்பட்டன. ஊர்கள் கொளுத்தப்பட்டன. மகளிரும் இளமைந்தரும் சிறைபிடிக்கப்பட்டனர்.

முரு தனித்திருந்தார். ஏன் அவர்களுக்கு பிற யாதவர்களின் உதவி கிடைக்கவில்லை என்பதை ஆராய்ந்தேன். கூர்ஜரத்துக்கு மேற்கே இருக்கும் வெண்பாலை நிலத்தில் வாழ்ந்த தொல்யாதவக்குடியிலிருந்து முன்பு விலக்கப்பட்டவர்கள் அவர்கள். ஒருமுறை பெரும்பஞ்சம் வந்து பாலை நிலத்தில் தனிமைப்பட்டபோது அவர்கள் தங்கள் மாடுகளைக் கொன்று தின்றதாகவும், இறுதியாக கன்றுதங்கிய வயிற்றுடன் சினைப்பசு ஒன்றை கொன்றதாகவும் அதனால் பிற யாதவர்களால் விலக்கப்பட்டதாகவும் கதைகள் கூறின.

அவர்களின் முது மூதாதையாகிய முரு தன் குலத்தாருடன் சிந்துவை அடைந்து ஆயிரம் தெப்பங்களில் நீர்ஒபெருக்கினூடாக வடக்கே வந்து இக்காட்டை அடைந்தார். அது அன்று புல் ஒழியா பெருவெளி. ஆகவே கன்றுகள் பெருகின. ஊர்களும் நடுநகரும் கோட்டையும் காவலும் மாளிகையுமென அவர்கள் நிலைகொண்டனர். நெடுங்காலத்துக்குப் பின் சிந்துவினூடாக அங்கு வந்த பரசுராமரை சென்றுகண்டு தலை தாள்வைத்து வணங்கி முருகுலத்து அஜன் தன்னை அளித்தார். அவருடன் வந்து நகரில் தங்கிய பரசுராமர் பன்னிரு நாட்கள் நீண்ட வேள்வியொன்றை நிகழ்த்தி அதன் இறுதியில் அவரை அனல்குலத்து ஷத்ரியராக ஆக்கி செங்கோல் சூடவும் மணிமுடியணியவும் அரியணை அமரவும் உரிமையளித்தார். வஹ்னி என்னும் பெயர்கொண்டு அவர் அரசரானார்.

ஷத்ரிய நிலையை அடைந்த பின்னர் தன் யாதவக் குடிகளுடன் எத்தொடர்பையும் வைத்துக்கொள்ள வஹ்னி எண்ணவில்லை. பிற அனற்குலத்து ஷத்ரியக் குடிகளிலிருந்தே மகற்கொடை பெற்றார். மேலும் அவர் குடி பெருகியபோது காடுகளுக்குள் ஊடுருவிப் பரந்தனர். புதிய சிற்றூர்களை அமைத்தனர். சிந்துவிலிருந்து தங்கள் நகர்வரை படகுகளில் சென்றுவரும் கால்வாய் ஒன்றை வெட்டிக்கொண்டார்கள். வணிகர் வந்து செல்வதனால் அங்காடியும் வணிகர் குடியிருப்புகளும் உருவாயின. பிற அனற்குலத்து அரசர்களுடன் தொடர்புகொண்டமையால் படைவல்லமை பெருகியது.

நாற்பத்திரண்டாம் முருவாகிய தேவபர் திரைகொள்ளும் பொருட்டு காடுகளுக்குள் படைகளை அனுப்பி அரக்கர் குடிகளை தாக்கினார். அவர்கள் மேலும் மேலும் காடுகளுக்குள் சென்று ஒளிந்துகொண்டனர். மேலும் செல்ல இடமில்லாதபோது நூறாண்டுகளுக்கு முன் சிதறி அழிந்திருந்த அரக்கர்கள் கூட்டமைப்பு ஒன்றை மலையடிவாரத்தில் தொல்குகையொன்றில் கூட்டினர். அங்கு அக்குடிகள் அனைவருக்கும் தலைவராக தொல்லரக்கர் குடியைச் சார்ந்த கீகடரை தேர்ந்தெடுத்தனர். அவர் தலைமையில் அரக்கர் குடிகள் முரு குடிகளை திருப்பி தாக்கத் தொடங்கினர்.

முதலில் அரக்கர்களின் கட்டுப்பாடற்ற படைகளை முரு குடியினர் எளிதில் வென்றனர். ஆனால் தோல்வியிலிருந்து மேலும் வெறிகொள்வதற்கு கற்றவர்கள் அரக்கர். உயிரிழந்தவர்களின் ஆத்மாக்கள் தங்கள் உடல்களில் வந்து அணைந்து ஆற்றல் அளிப்பதாக நம்புகிறவர்கள். இறந்தோரின் துளியுடலை உண்டு தானாக மாற்றிக்கொண்டு இருவராக ஆற்றல்கொண்டு எழுவார்கள். மழைக்காலம் வந்தபோது முருக்களின் ஆற்றல் குறைந்தது. மழையின் மறைவு அரக்கர்களுக்கு மிக உகந்தது. குளிரும் நீரும் அவர்களுக்கு இனிதானவையும் கூட. மழைக்காலப் போரில் மௌரியர்களின் மௌரியபுரியை தாக்கி கோட்டையை சிதறடித்து உட்புகுந்தனர். மாளிகைகளை உடைத்தெறிந்தனர். மகளிரை சிறைப்பிடித்தனர். இளையோரை கொன்று குவித்தனர். எஞ்சிய படைகளுடனும் குடிகளுடனும் அரசர் முரு ஊர்களை ஒவ்வொன்றாக கைவிட்டு சிந்துவின் கரைவரை சென்றார்.

அரக்கர்கள் மேலும் தாக்கக்கூடுமென அஞ்சி சிந்துவின் கரையிலேயே தங்கியிருந்தார். சிந்துவினூடாக கிளம்பி மீண்டும் அவர் வந்த மேற்குப் புல பாலைக்கே சென்றுவிட எண்ணினார். அதன்பொருட்டு தெப்பங்கள் கட்டப்பட்டன. உதவும்படி தொல்குடி யாதவர்களை நோக்கி தூதர்களை அனுப்பினார். ஆனால் கன்றுண்டவன் என்னும் பெரும்பழி இருந்ததனால் யாதவர்கள் அவரை ஏற்கவில்லை. கூர்ஜரரும் சைந்தவரும் சைப்யரும் காந்தாரரும் முரு தன்னை அரசர் என சொல்லிக்கொண்டதனால் சினம்கொண்டிருந்தனர்.

கூர்ஜரர் முரு தன் மணிமுடியையும் செங்கோலையும் களைந்து, அரியணை அமரும் உரிமையைத் துறந்து, யாதவ குடிக்குரிய வளைகோலையும் மரவுரியையும் அணிந்து அவருடைய நகருக்கு வந்து அனல் தொட்டு தானும் தன் கொடிவழியும் இனி ஒருபோதும் முடிகோரப் போவதில்லை என ஆணையிட்டு தன் அரசுக்குக் கீழ் ஒரு குடியென அமைய முடியுமெனில் தன் நிலத்திற்குள் புக இடமளிப்பதாகவும் அவ்வாறில்லையென்றால் ஒருவர்கூட எஞ்சாது கொன்றொழிப்பதாகவும் செய்தி அனுப்பினார்.

முரு அனலுக்கும் சிம்மத்துக்கும் நடுவே என நின்றிருந்த பொழுது அது. அதுவே உகந்ததென்று கண்டு நான் என் தூதர்களை அனுப்பினேன். அரக்கர்களை வென்று அவர் நகரத்தை நான் காப்பேன் என்றும் அதற்கு ஈடாக என்னை அரசனென ஏற்று

அவர் மகளை எனக்கு மணமுடித்தளிக்க வேண்டுமென்றும் கோரினேன். என் தூதராகச் சென்றவர் முதிய அந்தணரான ஆக்னேயர். தன் அவையில் சுற்றத்துடன் அமர்ந்திருந்த முரு அச்செய்தியைக் கேட்டு உறுமியபடி கைகளை அறைந்து ஓசையிட்டுக்கொண்டு கல்லரியணையிலிருந்து எழுந்து “என்ன சொல்கிறீர்? இதென்ன சூழ்ச்சி?” என்று கூவினார். “இவர் அந்தணர் என்பதனால் பொறுத்துக்கொள்கிறேன். இவரை நாடுகடத்துக! இவருடன் வந்த அரக்கர்களை கழுவேற்றுங்கள்” என்று தன் படைநிரைகளுக்கு ஆணையிட்டார்.

ஆனால் அவருடைய அமைச்சராகிய மூர்த்தர் “பொறுங்கள், அரசே. உங்களிடம் மணம்கோரி வந்திருப்பவர் வெறும் அரக்கரல்ல” என்றார். “வெறும் அரக்கரோ ஆடையணிந்த அரக்கரோ, அரக்கர் குடியினரிடம் மணம்கொண்டோமெனில் அதன் பின் பாரதவர்ஷத்தில் நம் இடம் என்ன? என் மூதாதையர் பரசுராமரின் முன் அமர்ந்து பன்னிரு நாட்கள் பெருவேள்வி செய்து ஈட்டியது இச்செங்கோலும் மணிமுடியும். கூர்ஜரன் முன் இதை துறக்கமாட்டோம் என்று தயங்கியே இங்கு அமர்ந்துள்ளோம். துறந்துசென்று கூர்ஜரத்தில் தொல்குடியாக அமைவது இங்கு இவ்வல்லரக்கனின் மாதுலனாக அமைவதைவிட எத்தனையோ மடங்கு மதிப்புடையது” என்றார் முரு.

“நாம் இதைப்பற்றி மேலும் கூர்ந்து எண்ணுவோம், பொறுங்கள்” என்று மூர்த்தர் மீண்டும் மீண்டும் கூறினார். “என்ன சொல்கிறீர்கள்? என்னை குலமிலி என நீங்களும் எண்ணுகிறீர்களா?” என்று முரு கூச்சலிட்டார். சினத்தால் நிலையழிந்து அவையில் அலைமோதினார். ஆக்னேயர் அதை எதிர்பார்த்துச் சென்றிருந்தமையால் உளமழியவில்லை. தருணம் நோக்கியிருந்தார். முரு “சேற்றில் சிக்கிய யானைமேல் தவளைகள் ஏறி விளையாடுகின்றன. தெய்வங்களே, மூதாதையரே, என்ன பிழை செய்தேன்!” என நெஞ்சுலைந்தார். அதுவே இடம் என கண்டு ஆக்னேயர் எந்தையின் அடையாளமாக இந்திரப்பிரஸ்தத்தின் பேரரசி அளித்த இக்கணையாழியை எடுத்துக்காட்டி “இது என் அரசரின் கணையாழி. இதை தன் வலக்கை ஆழிவிரலில் அணிந்து அரியணை அமர்பவர் அவர்” என்றார்.

மூர்த்தர் அதை வாங்கி பார்த்த பின் ஒன்றும் சொல்லாமல் அரசரிடம் அளித்தார். அதை முரு கையிலேந்தி சற்றே திருப்பியபோது எதிரே சுவரில் அமுதகலம் பேருருவாக எழுந்தது. “அஸ்தினபுரியை ஆளும் தேவனின் வடிவம்” என்று மூர்த்தர் சொன்னார். அதை திகைத்து நோக்கிய பின் “இதை எவர் அளித்தது?” என்று முரு கேட்டார். “இந்திரப்பிரஸ்தத்தின் அரசி குந்திதேவி அளித்தது இது. தங்களைப்போலவே யாதவ குடியிலிருந்து எழுந்து ஷத்ரிய அரசுகளின் தலைமைக்கு வந்தவர் அவர்” என்று ஆக்னேயர் சொன்னார். “அவர்களின் குடியின் முதல் மாற்றில்மகளாக ஏற்கப்பட்டவர் என் அரசரின் அன்னை. அரசரோ பாண்டவ மைந்தர்களில் மூத்தவர் என நிலைகொள்பவர். இந்தக் கணையாழியே சான்று.”

முரு மீண்டும் அரியணையில் அமர்ந்து அக்கணையாழியை திருப்பி நோக்கிக்கொண்டிருந்தார். மூர்த்தர் “இப்போது நமக்கு வந்துள்ள உதவி சிறிதல்ல, அரசே. வெறுமொரு அரக்கர் குடியின் உதவியல்ல இது. இந்திரப்பிரஸ்தத்தின் பாண்டவ குலத்தின் உதவி இது. நாட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் அர்ஜுனரின் வில்லும் பீமசேனரின் கதையுமே பாரதவர்ஷத்தை ஆள்பவை” என்றார். “நாளை இந்திரப்பிரஸ்தத்தின் மின்கொடியே இந்நிலத்தை ஆளும். ஐயமே தேவையில்லை. இனி ஆயிரம் ஆண்டுகள் அக்கொடியே இங்கு பறக்கும். அவரது குடியின் ஒரு குருதித்தொடர்பு நமக்கு உருவாவது அனைத்து வகையிலும் நம்மை நிலைநிறுத்தும்” என்றார்.

“நமது அரசுக்கு அரக்க மகளை நாம் எடுக்கவில்லை. நமது இளவரசரின் குருதி தூயதே. அவருக்கு மகள் தேடுகையில் தூய ஷத்ரியக் குடியிலிருந்தே நாம் பெண் தேடமுடியும். மறுப்பார்களென்றால் இந்திரப்பிரஸ்தத்தின் வாளையே அவர்களிடம் காட்டி பெண் கோரமுடியும்” என மூர்த்தர் சொன்னார். “நமது குடி இங்கு வாழும். கூர்ஜரத்துக்கோ யாதவ நிலத்துக்கோ சென்றால் நாம் மேலும் மேலும் இறங்குவோம். எழுகுடி எழ வீழ்குடி வீழ வரலாறு ஒழுகுகிறது என கொள்க!” என்று மூர்த்தர் தொடர்ந்தார்.

“எண்ணுக அரசே, நிமித்திகர் கூறிய மாறாச் சொல் ஒன்று உண்டு! ஒருநாள் மௌரியப் பெருங்குலம் பாரதவர்ஷத்தை முற்றாளும். காமரூபம் முதல் காந்தாரம் வரை, காஷ்மீரம் முதல் திருவிடத்துக்கும் அப்பால் முக்கடல் முனைவரை நாவலந்தீவு முழுக்க நம் குருதிவழியில் வந்த அரசர்களின் கொடி பறக்கும். ஆற்றலும் அறமும் கொண்ட பேரரசர்களின் பெயர் இந்நிலத்தில் என்றுமிருக்கும். இன்று உருவாகியிருக்கும் இவ்வாய்ப்பு அதற்கான தொடக்கம் போலும். அருமணிகள் தெய்வத்தின் விழிகள். நம்மை நோக்கி தெய்வம் ஒன்று திரும்பியுள்ளது என்பதையே இந்த மணி காட்டுகிறது. மகற்கொடை அளிப்போம், தயங்க வேண்டாம்” என்றார் மூர்த்தர்.

முரு “ஆனால் இக்குலக் கலப்பு…” என சொல்லத் தொடங்க “குலக் கலப்பிலிருந்தே ஷத்ரியப் பெருங்குடிகள் பிறக்கின்றன. அரக்கர்குருதியோ அசுரர்குருதியோ இல்லாத தொல்குடி ஷத்ரியர் யார்? அஸ்தினபுரியின் குடியே அசுர மூதன்னை சர்மிஷ்டையிலிருந்து உருவானது என அறிக! மீனவப் பேரன்னை சத்யவதியால் குருதிகொண்டது அது. அரசே, உலோகக் கலவைகளே வலுமிக்கவை. ஷத்ரியர் என்னும் படைக்கலம் உருவாக அவையே ஏற்றவை. பொன்னுடன் இரும்பு கலந்து புதிய பெருங்குடி எழுக…” என்றார் மூர்த்தர்.

முரு பெருமூச்சுவிட்டு “என்றும் என் குடி அந்தணர் சொல்லை அடிபணிந்திருக்கும் என்று பரசுராமருக்கு எம்மூதாதை சொல்லளித்துள்ளார். தங்கள் சொல்லை தெய்வ ஆணை என்று ஏற்கிறேன், ஆசிரியரே” என்றார். ஆக்னேயர் “அந்தணர் சொல் மீறாதோன் அழிந்ததில்லை. இந்தக் கருவூலங்களில் இருந்து ஒரு செம்புநாணயத்தைக்கூட கொள்ள எண்ணாதோர் நாங்கள். தர்ப்பையே எங்கள் பொன். எங்கள் சொல்லை ஓம்புக, சிறப்புறுக!” என்றார். கைகூப்பி “அவ்வண்ணமே ஆகுக!” என்றார் முரு. அவை வாழ்த்தொலி எழுப்பியது.

மௌரிய குலத்து முருவின் முதல் மகள் அகிலாவதியை நான் மணந்தேன். வெற்றியுடன் திரும்பிவந்து முருவின் ஏற்புச் செய்தியை ஆக்னேயர் சொன்னபோது என் குலத்தாரால் அதை நம்ப இயலவில்லை. ஆனால் நான் அது நிகழுமென்றே கணித்திருந்தேன். என் குடியில் முதலில் குழப்பமும் விளக்கவியலா கலக்கமும்தான் நிலவியது. பின்னர் பதினெட்டு நாள் நீண்ட பெருங்களியாட்டு தொடங்கியது. அன்னை இந்திரப்பிரஸ்தத்தில் இருந்தார். நான் செய்தி அனுப்பி வாழ்த்து கோரினேன். அன்னை எட்டு சகடங்களில் பொன்னும் பட்டும் வெள்ளிக்கலங்களும் பரிசென அனுப்பினார். “நான் நகர்நீங்கா நோன்புகொண்டிருக்கிறேன். ஆகவே அங்கு வரவில்லை. நீ நுழைய இந்நகரில் உனக்கு உரிமை இல்லை. உன் மைந்தர் வழியாக என் குடி வாழ்க!” என அவருடைய சொல் வந்தது.

நான் அஸ்தினபுரிக்கு திருதராஷ்டிரருக்கும் துரியோதனருக்கும் செய்தி அனுப்பினேன். “உங்கள் குடி என நான் என்னை எண்ணுவதால் பெருந்தந்தையாகிய உங்களுக்கு இச்செய்தியை அனுப்புகிறேன். உங்கள் சொல்லன்றி ஏதும் வேண்டேன். உங்கள் காலடியில் என் தலை அமைக!” என பொறிக்கப்பட்ட என் ஓலையுடன் என்

தூதராக அவையந்தணர் ஜ்வாலர் சென்றார். அச்செய்தியை கேட்டதும் திருதராஷ்டிரர் எழுந்து கைகளை விரித்து மகிழ்ச்சிக் கூச்சலிட்டார். “விரிகிறது என் குடி! காடுகளிலும் என் குருதி பரவுகிறது… விதுரா, என் பெயர்மைந்தனின் மணநிகழ்வுக்கு அரசமுறைப்படி அனைத்தும் செய்யப்படவேண்டும். இது என் ஆணை” என்றார்.

அச்செய்தியைக் கேட்டதும் அரசவையில் அரியணையமர்ந்திருந்த துரியோதனர் எழுந்து “என் குடியின் முதல் மைந்தன் மணம்கொள்கிறான். அனைத்து முறைமைகளும் நிகழ்க! நானே மணநிகழ்வுக்குச் செல்கிறேன்” என்றார். “அரசே, அது இன்னும் நாடென வகுக்கப்படாதது. நமக்கும் மகதத்திற்கும் பாஞ்சாலத்திற்கும் நடுவே உள்ளது. முறைமைப்படி அவ்விரு அரசர்களின் ஒப்புதலின்றி நீங்கள் அங்கே செல்வது உகந்தது அல்ல” என்றார் கனகர். “அவ்வண்ணமென்றால் என் இளையோர் செல்லட்டும். நானே செல்வதற்கு அது நிகர்” என்றார் துரியோதனர். அங்கிருந்து நாற்பத்தெட்டு வண்டிகளில் அருஞ்செல்வம் எனக்கு சீர்பரிசிலாக வந்தது. என் மணநிகழ்வுக்கு துச்சாதனரும் துச்சலரும் துர்முகரும் சுபாகுவும் சுஜாதரும் வந்திருந்தார்கள்.

முரு குலத்து அரசமகளுக்கு என் மூதன்னை அளித்த பீதர்நாட்டு பொன்னிழைப் பட்டும் அஸ்தினபுரியின் பட்டத்தரசி அளித்த அருமணி பதித்த பதினெட்டு சங்கு வளைகளும் வந்து சேர்ந்தன. அஸ்தினபுரியின் அரசிளையோர் முன்னிலையில் அந்த மணநிகழ்வு நடந்தது. அரக்க குடிக்கு அரசமகளைக் கொடுப்பதில் மௌரிய குடிகளுக்கு பெரும் தயக்கமிருந்தது. அவர்கள் பேசிய அலர் அரசரையும் சோர்வுறச் செய்தது. ஆனால் பதினெட்டு சகடங்களில் நான் அனுப்பிய சீர்நிரை மௌரிய நகரிக்கு வந்திறங்கியபோது அவர்கள் சொல்லடங்கினர். அவற்றின் பெருமதிப்பை வணிகர்கள் சொன்னபோது மறு எண்ணமில்லாதாயினர். அஸ்தினபுரியின் அரசரின் இணையான துச்சாதனரே வருகிறார் என்றபோது களிவெறி கொண்டனர்.

நான் திருமண அணிகொண்டு அந்நகருக்குள் நுழைந்தபோது மௌரியர்களின் பெருந்திரள் என்னை எதிர்கொள்ள நகர் வாயிலில் மங்கலங்களுடன் காத்து நின்றது. அன்றும் இவ்வாறே சென்றிருந்தேன். வேங்கைத் தோலணிந்து இரும்பு அணிகள் பூண்டு என்னைக் கண்டதும் அவர்கள் நகைக்கலாயினர். ஆனால் எவரோ வாழ்த்தொலி எழுப்ப சற்று நேரத்தில் அந்நகரமே வாழ்த்தொலிகளால் நிறைந்தது. அரிமலர் மழையெனப் பெய்ய அதன் நடுவே என் அன்னையரும் குலமூத்தாரும் தோழரும் உடன்வர சென்றேன். மாளிகை முகப்பில் கட்டப்பட்ட அணிப்பந்தலில் பேரரசி அளித்த அனல்மணி ஆழியை அகிலாவதியின் கையிலணிவித்து மணந்தேன்.

கைபற்றி அவளை அழைத்துவந்து குடிமக்கள் முன் நின்றபோது வாழ்த்தொலிகள் நெடுநேரம் எழுந்து ஓய மறுத்தன. உளம் பொறாது மீண்டும் எழுந்து அலையடித்தன. துச்சாதனரின் கால்களைத் தொட்டு வாழ்த்து பெற்றபோது எங்கோ அறியாக் காட்டில் அலையும் என் தந்தையை வணங்குவதாகவே உணர்ந்தேன். வஞ்சத்துக்கும் வெறுப்புக்கும் அப்பால் அவருடைய குருதி அதை மகிழ்ந்து ஏற்றிருக்கும் என எண்ணிக்கொண்டேன். மௌரியர்களின் தொல்தெய்வமாகிய அஜமுகி அன்னையின் ஆலயத்தின் முன் சென்று நின்றோம். குறும்பாட்டை பலிகொடுத்து குருதி காட்டி பூசகர் அன்னைக்கு படையலிட்டார்.

அப்போது வெறியாட்டெழுந்த பூசகன் நாவில் ஒரு சொல்லெழுந்தது. “அறிக, குடிகளே! அறிக, மானுடரே! இவ்வரசியின் வயிற்றில் மாவீரர்கள் பிறப்பர். அவர்களே முருக்களின் குடிக்கும் கொடிவழியாவர். அவர்களின் குருதிவழியில் எழுபவன்

ஒருவன் பாரதவர்ஷத்தை முழுதாள்வான். சைந்தவமும் காங்கேயமும் தட்சிணமும் அவனால் ஒரு கொடிக்கீழ் ஆளப்படும். இது ஊழி வரை கணம் கணமென அணு அணுவென இவ்வுலகை வகுத்துள்ள தெய்வங்களின் ஆணை! ஆம், இதுவே ஆணை!" என்று கூவி, பலிகுருதி அள்ளி முகத்தில் அறைந்து, துள்ளிச் சுழன்றாடி, தன் வேலை தன் தொடையில் குத்தி, அக்குருதியை தானே அருந்தி விடாய் தீர்ந்து விழுந்து உறைந்தான். எழுந்து சென்ற தெய்வம் சொன்ன அச்சொற்கள் மட்டும் எஞ்சியிருந்தன.

"என் நகரியில் அகிலாவதியுடன் அரியணை அமர்ந்தேன். அந்தணர் அதர்வ வேதம் ஓதி அரிமலரிட்டு வாழ்த்தி கங்கைநீர் முழுக்காட்டி என்னை அரசனாக்கினர்" என்றான் கடோத்கஜன். "முருக்களின் முத்திரையாகிய பீடத்திலமர்ந்த சிம்மத்தை என் குடிச் சின்னமாக நான் ஏற்றுக்கொண்டேன். அவ்வடையாளம் பொறிக்கப்பட்ட பொன் நாணயத்தை என் நகரில் எங்கள் அச்சில் வார்த்து வெளியிட்டேன். ஆயிரத்தெட்டு பொன் நாணயங்களை அந்தணருக்கும் புலவருக்கும் சூதருக்கும் அளித்து என் ஆட்சியை தொடங்கி வைத்தேன்."

அசங்கன் "தெய்வச்சொற்களில் பிழை வருவதில்லை" என்றான். கடோத்கஜன் "நான் நாகர்குலத்து அரசன் வக்ரனின் மகள் லக்ஷ்மணையையும் மணந்துகொண்டேன். அகிலாவதியில் எனக்கு இரு மைந்தர்கள் பிறந்தனர். மூத்தவனாகிய பார்பாரிகனுக்கு பதின்மூன்று அகவை ஆகிறது. இளையவன் மேகவர்ணனுக்கு பத்து. லக்ஷ்மணையில் பிறந்தவள் இடும்ப இளவரசி மேகவதி" என்றான். முகம்மலர்ந்து "என் மைந்தர் இருவரும் என்னைவிடப் பேருருவர்கள். என்னை வெல்லும் போர்த்தொழில் அறிந்தவர்கள். அவர்களின் குருதியில் வெல்ல முடியாத அரசநிரையொன்று எழுமென்பதை ஐயமின்றி உணர்கிறேன்" என்றான்.

அசங்கன் "அவர்கள் இடும்பவனத்தில் இருக்கிறார்களா?" என்றான். "இல்லை" என்றபின் சற்று தயங்கிய கடோத்கஜன் "இளையவன் மேகவர்ணன் அன்னையுடன் இருக்கிறான். மூத்தவன் பார்பாரிகன் பாதிப்பங்கு இடும்பர் படையுடன் கௌரவப் படைகளுக்கு ஆதரவாக போரிடும்பொருட்டு சென்றிருக்கிறான். நாங்கள் சேர்ந்தே கிளம்பினோம். குருக்ஷேத்ரத்தை அணுகியபோது பிரிந்தோம்" என்றான். அசங்கன் திகைப்புடன் "ஏன்?" என்றான். "அது என் மைந்தனின் முடிவு. தந்தைக்காக நான் இங்கே வந்து நின்றிருக்கவேண்டும். ஆனால் எங்கள் முடியை ஆதரித்த நாடு அஸ்தினபுரி. எனவே இடும்பர்கள் அங்கு செல்லவேண்டும் என்றான்" என்று கடோத்கஜன் சொன்னான்.

அசங்கன் சிலகணங்கள் வெறுமனே நோக்கி அமர்ந்திருந்தான். பின்னர் இமைகளை மூடித்திறந்து எண்ணம் மீண்டு "இதை என்னால் உளம்கொள்ள இயலவில்லை. ஆனால் நீங்கள் சொல்கையிலேயே அதில் பொருள் உள்ளது என்றும் தோன்றுகிறது" என்றான். "மறுபக்கம் இவ்விரவில் விண்மீன்களை நோக்கியபடி என் மைந்தன் என்னை எண்ணிக்கொண்டிருக்கிறான்."

முற்புலரியில் கடோத்கஜன் அணிந்தொருங்கி கிளம்பியபோது ஒரே தருணத்தில் வியப்பும் ஏமாற்றமும் அசங்கனுக்கு ஏற்பட்டது. இடையில் அனல்நிறப் புலித்தோல் அணிந்து, தோளில் குறுக்காக இருள்வண்ணக் கரடித்தோல் மேலாடையை சுற்றி, கைகளிலும் கழுத்திலும் நீர்வண்ண இரும்பு வளையங்கள் பூட்டி, தலையில் செங்கருமையில் வெண்பட்டைகள் கொண்ட பெருவேழாம்பல் சிறகுகள் சூடி அவன் சித்தமாகி வந்தான். வானம் பின்னணியில் விண்மீன்களுடன்

விரிந்திருக்க மயிரிலாத அவனுடைய பெரிய தலை முகில்கணங்களுக்குள் இருந்தென குனிந்து அவனை பார்த்தது. அசங்கன் உடல்மெய்ப்பு கொண்டான். சற்றுநேரம் அவனுக்கு குரலெழவில்லை.

கடோத்கஜன் “நான் நீண்டபொழுது எடுத்துக்கொள்ளவில்லை அல்லவா?” என்றான். “இல்லை, மூத்தவரே” என மூச்சிரைத்து பின் மீண்டு “இங்கு குடித்தலைவர்கள் இந்த ஆடையை அணிந்தே வருகிறார்கள்” என்றான் அசங்கன். “நீங்கள் அவர்களை அரசர்களென ஒப்பாவிட்டாலும் தங்கள் குடிக்கு அவர்கள் அரசர்களே” என்ற கடோத்கஜன் அவன் தோளில் எடைமிக்க கைவைத்து “செல்வோம்” என்றான். வெறும் தொடுகையிலேயே எப்படி பேராற்றலை உணரமுடிகிறது என அசங்கன் வியந்தான். யானையின் துதிக்கை மிக மெல்ல தோளில் படிகையில் அவ்வாறு பேராற்றலை அவன் உணர்ந்ததுண்டு என எண்ணிக்கொண்டான்.

யுதிஷ்டிரரின் அவைமாளிகைக்குச் செல்லும் பாதையின் முகப்பிலேயே பிரதிவிந்தியன் தன் உடன்பிறந்தாருடன் அவர்களுக்காக காத்து நின்றிருந்தான். அசங்கன் “உங்கள் உடன்பிறந்தார், மூத்தவரே” என்றான். கடோத்கஜன் “தெரிகிறது, முதலில் நிற்பவன் பிரதிவிந்தியன், அவனுக்குப் பின்னால் நிற்பவன் யௌதேயன். இருவரும் மூத்த தந்தையைப் போலவே இருக்கிறார்கள். அவர் எங்கள் காட்டுக்கு வந்திருந்தபோது இதே போன்ற முகத்துடன் இருந்தார்” என்றான். “அவனுக்குப் பின்னால் நிற்பவர்கள் நகுலரின் மைந்தர்கள் சதானீகனும் நிர்மித்ரனும். அவர்கள் இளைய தந்தை சகதேவரின் வார்ப்புத் தோற்றம் கொண்டுள்ளனர்.”

கடோத்கஜனின் உடலே மகிழ்ச்சியிலாடி நகைப்பதுபோல அசங்கனுக்கு தோன்றியது. “நானே சொல்கிறேன். அதோ பின்னால் நிற்பவன் சுருதகீர்த்தி, இன்னொருவன் சுருதசேனன்” என்றான். விலகி பின்னால் நின்றிருந்தவர்களை நோக்கி “அப்பெருந்தோளர்களை சொல்லவே வேண்டாம். அவர்களில் முன்னால் நிற்பவன் சுதசோமன், பின்னால் நிற்பவன் சர்வதன்” என்றான். “அடுமனை வாழ்க்கை தெரிகிறது உடலில்” என்று சொல்லி தலையை அசைத்து சிரித்தான்.

கடோத்கஜனுடன் உத்துங்கனும் உடன்வந்தான். தொலைவிலேயே அவர்களை பார்த்த பிரதிவிந்தியன் கைகளைக் கூப்பியபடி இருபுறமும் சதானீகனும் சுருதகீர்த்தியும் நிர்மித்ரனும் சுருதசேனனும் வணங்கியபடி உடன்வர அருகணைந்தான். “நீங்கள் முறைமைச்சொல் உரைக்கவேண்டும், மூத்தவரே. அவர்கள் உங்களை வணங்கினால் புகழும் செல்வமும் நல்வாழ்வும் அமைக என வாழ்த்தவேண்டும்” என்றான் அசங்கன். “இன்னொருமுறை சொல்” என்றான் கடோத்கஜன். “புகழும் செல்வமும் நல்வாழ்வும் அமைக என்று...” என்றான் அசங்கன்.

பிரதிவிந்தியன் அரசமுறைப்படி சீரான நடையுடன் வர கடோத்கஜன் சிறிய வளைந்த கால்களில் தாவித்தாவி சென்றான். இரு கைகளையும் விரித்து உரக்க நகைத்தபடி பிரதிவிந்தியனை அணுகினான். பிரதிவிந்தியனை தூக்கி தலைக்கு மேல் வீசப்போகிறான் என்று எண்ணியதுமே திகைப்பெழ அசங்கன் நின்றுவிட்டான். பிரதிவிந்தியன் குனிந்து கடோத்கஜனை கால்களைத் தொட்டு வணங்கி “வணங்குகிறேன், மூத்தவரே. தங்கள் காலடிகளை வணங்கும் பேறு வாய்த்தது” என்றான்.

கடோத்கஜன் அவன் இரு தோள்களையும் பற்றி மேலே தூக்கி தன் நெஞ்சோடணைத்துக் கொண்டான். பிரதிவிந்தியனின் கால்கள் காற்றில் தவித்தன. கடோத்கஜன் அவன் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டு நிலத்தில் நிறுத்திவிட்டு பிற உடன்பிறந்தாரை நோக்கி கைவிரித்தான். அவர்கள் குனிந்து

வணங்கி முறைச்சொல் உரைப்பதற்குள்ளாகவே ஒவ்வொருவராக பாய்ந்து பற்றி இழுத்து உடலுடன் சேர்த்துக்கொண்டு முத்தமிட்டான். அவன் விட்டதுமே உத்துங்கனும் பிரதிவிந்தியனையும் இளையவர்களையும் அள்ளி அணைத்து முத்தமிட்டான். பிரதிவிந்தியன் திகைத்தாலும் உடனே புரிந்துகொண்டு நகைத்தான்.

கடோத்கஜன் நிர்மித்ரனை அவன் எதிர்பாராத கணம் தூக்கி மேலே வீசிப்பிடித்து சுழற்றினான். சதானீகனை உத்துங்கன் தூக்கி வீசிப் பிடித்தான். அவர்கள் கூவி கைவிரித்து நகைத்தனர். அனைத்து முறைமைகளும் அகல அவர்களனைவருமே கடோத்கஜனின் உடலுடன் ஒட்டிக்கொண்டிருக்க விழைந்தார்கள். அவர்களை அவன் வீசிப்பிடித்தான். குடுமியைப்பற்றிச் சுழற்றினான். தூக்கி உத்துங்கனை நோக்கி எறிய அவன் பற்றிக்கொண்டு திரும்ப வீசினான். மூச்சிரைக்க சிரிப்பு முகத்தில் அசையாச் சுடர் என நின்றிருக்க அவர்கள் ஓய்ந்தனர்.

நிர்மித்ரன் “தாங்கள் மூதன்னை குந்திதேவியை இப்படி தூக்கி வீசி விளையாடுவீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்” என்றான். “ஆம், அது நெடுங்காலம் முன்பு… அன்று நான் இளமையாக இருந்தேன். என் தலையில்கூட புன்மயிர் இருந்தது” என்று அவன் சொன்னான். “அன்றே தாங்கள் பேருருவர் என்றார்கள்” என்றான் சதானீகன். “அரக்கர்கள் அனைவருமே பேருருவர்கள். உங்கள் தோழர்களும் தங்களைப்போல இருக்கிறார்கள்” என்றான் சுருதசேனன். “ஆம், இன்று படைகளில் எங்களைத்தான் அனைவரும் பார்த்தார்கள்” என்றான் கடோத்கஜன். “போர்க்களத்தில் கௌரவர்கள் உங்களை பார்க்கப்போகிறார்கள்” என்றான் சுருதசேனன். கடோத்கஜன் “ஆம்! ஆம்! பார்ப்பார்கள்… முழு உருவை பார்ப்பார்கள்” என்று கூவி தன் தோள்களில் அறைந்துகொண்டு நகைத்தான்.

சதானீகன் “இப்போது தாங்கள் வந்திருப்பது ஏக்கத்தையே அளிக்கிறது, மூத்தவரே. முன்னரே இந்திரப்பிரஸ்தத்திற்கு தாங்கள் வந்திருந்தால் மகிழ்ந்து கொண்டாட எத்தனையோ தருணங்களிருந்தன” என்றான். “போரும் மகிழ்ந்து கொண்டாடுவதற்கு உரியதுதானே?” என்று சொன்ன கடோத்கஜன் “நாம் போரை கொண்டாடுவோம்! போரிலாடுவோம்!” என்றான். சுருதகீர்த்தி “ஆம், போரை கொண்டாடுவோம்!” என்றான். “நம் இளையோர் அனைவரும் இங்குள்ளனரா?” என்றான் கடோத்கஜன். “இல்லை, அபிமன்யூவை நாங்கள் பார்ப்பதே இல்லை. அவன் தனக்கான தனி வழிகள் கொண்டவன்” என்றான் பிரதிவிந்தியன்.

கடோத்கஜன் திரும்பி அப்பால் நின்றிருந்த சுதசோமனையும் சர்வதனையும் பார்த்து “எந்தையின் மைந்தர்… என்ன ஆயிற்று அவர்களுக்கு?” என்றபின் குரல் தாழ்த்தி “முறைமையா?” என்றான். பிரதிவிந்தியன் “அவர்கள் தாங்கள் பெருந்தோளர்கள் என்னும் எண்ணம் கொண்டிருந்தார்கள். தங்களை பார்த்ததுமே உளம் சுருங்கிவிட்டனர்” என்றான். கடோத்கஜன் புரியாமல் “ஏன்?” என்றான். “தங்கள் தோள்களை பார்த்தால் தேவர்களே பொறாமை கொள்வார்கள், மூத்தவரே” என்றான் சதானீகன். கடோத்கஜன் நகைத்தபடி அவர்கள் அருகே செல்ல நாணத்தால் முகம் சிவந்த சர்வதன் “அவ்வாறல்ல, மூத்தவரே. ஆனால்…” என்றான். சுதசோமன் “எனக்கு எவரிடமும் பொறாமை இல்லை” என்றான்.

கடோத்கஜன் அவன் தோளை வெடிப்போசை எழ ஓங்கி அறைய சர்வதன் இரண்டடி பின்னால் நகர்ந்தான். மற்போருக்கு நிற்பதைப்போல் சற்றே குனிந்து இரு கைகளையும் விரித்து நின்றான் கடோத்கஜன். சர்வதன் பாய்ந்து கடோத்கஜனை மார்பில் தலையால் அறைய கடோத்கஜன் பின்னால் சரிந்தான். அதே விசையில் சர்வதன் கடோத்கஜனின் கால்களை தன் கால்களால் அறைந்தான். கடோத்கஜன்

பின்னகர்ந்து நிலை தடுமாறி தரையில் பேரோசையுடன் வீழ்ந்தான். மறுகணமே கையூன்றி தாவி எழுந்து நின்றான். சிரித்தபடி “தரையில் நான் ஆற்றல் குறைந்தவன், இளையோனே. உங்களுடன் எதிர்நிற்க என்னால் இயலாது” என்றான்.

“ஆம், தங்கள் கால்கள் ஆற்றலற்றவை. தரையில் அழுந்த ஊன்றுவதுமில்லை” என்றான் சர்வதன். சுதசோமன் அப்போதுதான் அதை நோக்கியவன்போல முன்னால் வந்தான். “ஆம். விந்தையானவை” என்றான். “மூத்தவரே, தங்கள் கால்கள் குரங்குகளின் கால்கள் போலுள்ளன” என்று நிர்மித்ரன் சொன்னான். “குரங்குகளைப்போல மரங்களைப் பற்றும் கால்கள்!” என்றான் சதானீகன். குனிந்து நோக்கிய நிர்மித்ரன் “இன்று போர்க்களத்தில் எவ்வாறு செல்வீர்கள்?” என்றான். “நாங்கள் பறக்கும் அரக்கர்கள். தேர்களுக்கு மேல், யானைகளுக்கும் புரவிகளுக்கும் மேல்” என்றான் கடோத்கஜன். பின்னர் சுதசோமனை நோக்கி “உன் தோள்வல்லமையை பார்ப்போம்” என்றான். அவன் “ஆம்” என்றான்.

கடோத்கஜன் இரு கைகளையும் விரித்து வரும்படி அழைத்தான். சுதசோமன் மற்போர் முறையில் நிலைமண்டிலமாக நின்று இரு கைகளையும் விரித்து கூர்ந்துநோக்கியபடி மெல்ல அணுகினான். ஒருகணத்தில் அறைவோசையுடன் இருவரும் பாய்ந்து உடல்முட்டிக்கொண்டனர். ஒருவர் ஒருவரை கவ்வியபடி பெருந்தோள்கள் பின்னி முறுகி தசையதிர விசைநிகர் கொண்டு சுற்றிவந்தனர். இரு உடல்களும் ஒன்றையொன்று உந்தி தசைகள் இழுபட்டு தெறிக்க மெல்ல சுழன்றன. ஓசையில்லாமல் வெறும் விழிகளாலேயே உள்ளம் உடைந்து தெறிக்குமளவுக்கு பெருவிசையை உணரமுடிவது அசங்கனை வியப்பிலாழ்த்தியது.

தசைகள் உரசிக்கொள்ளும் முறுகலோசை எழுந்தது. ஒருகணத்தில் தன் காலால் கடோத்கஜன் காலை தடுக்கி அவனை பின்னால் தள்ளி விழவைத்தான் சுதசோமன். அவன் மல்லாந்து விழ அவன் மேல் தான் விழுந்து அவனுடைய இரு கால்களையும் தன் கால்களால் பின்னிக்கொண்டு தோளை நிலத்துடன் அழுத்திக்கொண்டான். கடோத்கஜன் நகைக்க சுதசோமன் எழுந்து நின்று கைநீட்டி அவனை தூக்கினான். சர்வதன் பாய்ந்து கடோத்கஜனை தழுவிக்கொள்ள அவர்கள் மூவரும் உடல் தழுவி மாறி மாறி தோள்களில் தட்டிக்கொண்டு நகைத்தனர். பிரதிவிந்தியன் “இப்போது இருவரும் நிறைவுற்றிருப்பார்கள். இனி இப்புவியில் அவர்களை வெல்ல எந்தையும் பால்ஹிகரும் மட்டும் உள்ளனர்” என்றான். கடோத்கஜன் “ஆம், பெருந்திறலோர் இவர்” என்றான்.

சர்வதன் “நான் அகன்று நின்று நோக்குகையில் தெரிகிறது மூத்தவரே, நீங்கள் எங்களை வெல்லவிடுகிறீர்கள்” என்றான். “ஏன் சொல்கிறாய்?” என்று கடோத்கஜன் கேட்டான். “உங்கள் பெருங்கைகளுக்கு எங்கள் உடல்கள் ஒரு பொருட்டே அல்ல. உங்களுடன் போரிட வேண்டுமென்றால் ஒன்றே வழி. உங்கள் கைகளுக்கு சிக்கக் கூடாது. நீங்கள் அறைவதை ஒழிந்துகொண்டே இருக்கவேண்டும்” என்றான். கடோத்கஜன் அவன் தோளை அறைந்து நகைத்தான். சுதசோமன் “ஆம், நானும் இப்போது அதை உணர்கிறேன். முழு வல்லமையையும் கைகளுக்கு அளிக்காமல் ஒழிந்தீர்கள்” என்றான். “நாம் பிறிதொருமுறை மெய்யாக போரிடுவோம்” என்றான் கடோத்கஜன்.

“மூத்தவரே, நீங்கள் தந்தை பீமசேனரை வெல்லக்கூடுமா?” என்றான் சர்வதன். “அவரை எவரும் வெல்லமுடியாது…” என்றான் கடோத்கஜன். “அவரை வெல்லற்கரியவராக ஆக்குவதே என் கடமை.” “அவரை இன்னும் முதுதந்தை பால்ஹிகர் களத்தில் சந்திக்கவில்லை. அவர்களின் போரை அனைவரும் எண்ணி நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான் சர்வதன். “நீங்கள் இன்று களத்தில்

பால்ஹிகரை எதிர்கொள்க, மூத்தவரே!" என்றான் சுதசோமன். "நாங்களும் வருகிறோம். மூவரும் சேர்ந்து அவரை சூழ்ந்து கொள்வோம்" என்றான். "ஆம், அவரை களத்தில் எதிர்ப்போம்" என்றான் கடோத்கஜன்.

"நேற்றும் இன்றும் களத்தில் அவராடிய கொலையாடல் எண்ண எண்ண மெய்ப்புகொள்ளச் செய்வது. அசைக்க முடியத பெரும் கதாயுதம் ஒன்றை சங்கிலியால் கட்டித் தூக்கி யானை மேல் அமர்ந்திருக்கிறார். ஒரே அறையில் தேர்களை சிம்புகளாக தெறிக்கவிடுகிறது அது. யானைகள் எலும்புடைந்து விழுந்து குருதி பெருகுகிறது. புரவிகள் சிறு பேன்களைப்போல் நொறுங்கித் தெறிக்கின்றன. அவர் இருக்கும் இடத்தை எவரும் அணுக இயலவில்லை. எடைமிக்க கவசங்கள் அணிந்திருப்பதால் அம்புகள் எவையும் அவரை வீழ்த்துவதுமில்லை. ஒரு நிறைவுறா மூதாதை விண்ணிறங்கி பலிகொள்ள வந்ததுதான் அவர் என்று வீரர்கள் சொல்கிறார்கள்" என்றான் சுருதகீர்த்தி.

"மூதாதையை களத்தில் எதிர்கொள்வது என்பது ஒரு பேறு" என்றான் கடோத்கஜன். பிரதிவிந்தியன் "அவை கூடியிருக்கிறது. வருக!" என்றான். அவர்கள் யுதிஷ்டிரரின் அவைமாளிகை நோக்கி செல்கையில் பிரதிவிந்தியன் "தங்கள் வேங்கைத்தோலாடை பேரழகு கொண்டிருக்கிறது. மூத்தவரே, தொலைவிலிருந்து பார்க்கையில் சிறிய தந்தைக்கு பாசுபதம் அளித்த வெள்ளிமலை கிராதனே எழுந்து வருவதுபோல் தோன்றியது" என்றான். சதானீகன் "கிராதனுக்கு சடைத்தொகை உண்டு அல்லவா?" என்றான். கடோத்கஜன் அவன் தோளை மெல்ல அறைந்து உரக்க நகைத்தான்.

யுதிஷ்டிரரின் அவைக்குள் கடோத்கஜன் உத்துங்கன் தொடர நுழைந்தபோது அங்கிருந்தவர்கள் சேர்ந்தெழுப்பிய வியப்பொலி வாழ்த்துபோல் ஒலித்தது. கடோத்கஜன் அவையை நோக்கி வணங்கி "என் பெயர் கடோத்கஜன். நான் என் தந்தைக்கு உதவும்பொருட்டு போரிட வந்தேன்" என்றான். யுதிஷ்டிரர் சிரித்து "எங்கே முறைமைச்சொல் எதையாவது உனக்கு பயிற்றுவிப்பதில் சாத்யகியின் மைந்தன் வெற்றிபெற்றிருப்பானோ என அஞ்சினேன்... நன்று. அமர்க!" என்றார். கடோத்கஜன் அமர்ந்து கால்களைத் தூக்கி இருக்கைமேல் மடித்து வைத்துக்கொண்டான். இரு கைகளும் இருபக்கமும் தொங்கின. அவனருகே தரையில் உத்துங்கன் அமர்ந்தான்.

"இருக்கை உள்ளது" என ஏவலன் மெல்ல சொல்ல உத்துங்கன் "இல்லை, எனக்கு தரையிலமர்வதே உகந்தது" என்றான். யுதிஷ்டிரர் "மைந்தா, இன்று நிகழவேண்டிய போரைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம். நேற்றைய போரில் நாம் வென்றுள்ளோம். அவர்களுக்கு பேரிழப்பு. அவர்களின் சூழ்கையை இளையோன் உடைத்துவிட்டான் என்பதே அவர்களுக்கான செய்திதான். இன்றும் நாம் வென்றாகவேண்டும்... அதன்பொருட்டே நாம் படைசூழ்கை அமைத்துள்ளோம்" என்றார்.

"படைசூழ்கை என்றால் என்ன?" என்றான் கடோத்கஜன். அவை நகைக்க பீமன் "உனக்கு கல்வி கற்பிக்கும் இடமல்ல இது. அமைதியாக இருந்து பேசுவதை செவிகொள்க!" என்றான். கடோத்கஜன் தலைவணங்கினான். யுதிஷ்டிரர் "சொல்லும் திருஷ்டத்யும்னரே, இன்றைய சூழ்கை என்ன?" என்றார். "இன்றும் அவர்கள் பருந்துச்சூழ்கை அமைக்கவே வாய்ப்பு" என்றான் திருஷ்டத்யும்னன். "ஏனென்றால் பீஷ்மரை மையமாகக் கொண்ட சூழ்கையையே அவர்கள் அமைக்கவியலும்... ஆனால் நாரைச்சூழ்கை அமைத்து பீஷ்மரை நம் படைகளுக்குள் ஊடுருவ

விடமாட்டார்கள்... பீமசேனர் நேற்று பருந்தின் கழுத்தையே உடைத்துவிட்டபின் நீள்கழுத்துள்ள சூழ்கையை அமைப்பது அறிவின்மை.”

“அவர்கள் இம்முறை பருந்தின் கழுத்தை மும்மடங்கு வலுவாக அமைப்பார்கள்” என்றான் திருஷ்டத்யும்னன். “சென்றமுறை ஆற்றல்குறைவான கலிங்கர்களை அங்கே நிறுத்தியதுபோன்ற பிழையை செய்யமாட்டார்கள்.” அவன் தன் கையிலிருந்த தோல்சுருளை நீட்ட அதை ஏவலன் வாங்கி யுதிஷ்டிரருக்கு அளித்தான். “நாம் கழுகை பிடிக்கும் வலுவான வலை ஒன்றை அமைப்போம். நம் படைக்கு அரைநிலவுச் சூழ்கையை அமைத்திருக்கிறேன். அணைக்க விரிந்த மல்லனின் கைகளைபோல அது விரிந்திருக்கும். நம் வீரர்கள் அனைவருமே முன்னணியில் இருப்பார்கள். நாம் இலக்காக்குவது ஒன்றே, முடிந்தவரை அனைவரும் சேர்ந்து தாக்கி பீஷ்ம பிதாமகரை இன்றே வெல்வது...”

“ஆம், அவரை வெல்லாமல் இனி நாம் படைநடத்தவே இயலாது. நம் படைகள் பாதிப்பங்கு அவரால் கொல்லப்பட்டுவிட்டன” என்றான் சாத்யகி. திருஷ்டத்யும்னன் “இனி எவரும் தனித்தனியாக பிதாமகரை எதிர்கொள்ள வேண்டியதில்லை. அது இயலாதென்பது உறுதியாயிற்று. நம் படையின் அனைத்து வில்லவரும் இணைநிரையாக நிற்கட்டும். வலை விரிந்து விரிந்து அவரை உள்ளே இழுத்துக்கொண்டு சுருங்கிச் சூழ்ந்து அழிக்கட்டும்” என்றான். குந்திபோஜர் “ஒரே ஒருவரை முன்வைத்த போர்” என முனகினார். திருஷ்டத்யும்னன் அவரை நோக்கி திரும்பி “ஆம், மெய். ஆனால் அவர்கள் எடுப்பதும் ஒற்றை ஒருவரை மையமாக்கிய சூழ்கையே” என்றான்.

யுதிஷ்டிரர் சுருளைச் சுருட்டி பீமனிடம் அளித்துவிட்டு “நன்றாகவே உள்ளது. இது வெல்லவேண்டும்” என்றார். பீமன் நோக்கிவிட்டு “ஆம், இதைவிடச் சிறந்த சூழ்கை இயல்வதல்ல” என்றான். சாத்யகி “படைமுகப்பில் நிற்பவர்களில் வில்லவர் அல்லாதோர் எவர்?” என்றான். “நான் நிற்கிறேன்” என்றான் பீமன். பின்னர் “என் மைந்தனும் முன்னிரையில் நிற்கட்டும்...” என்றான். திருஷ்டத்யும்னன் “அவர்களை பார்த்தேன்... அவர்களிடம் படைக்கருவிகள் இல்லை. விற்களை கேட்டும் அறியாதோர் போலிருக்கிறார்கள். தேரிலோ புரவியிலோ ஊர்வதற்கும் பயிற்சியில்லை. அவர்களை எப்படி முன்னணியில் நிறுத்துவது?” என்றான்.

“அவர்களைப்பற்றி நான் நன்கறிவேன்” என்றான் பீமன். “இப்போரில் அவர்களே முதன்மை வீரர்கள் நம் தரப்பில். அவர்களின் விசையை நாம் தேரிலேறியும் அடையமுடியாது.” திருஷ்டத்யும்னன் “எங்ஙனம்? அதை சொல்லுங்கள்” என்றான். “அவர்கள் காற்றின் மைந்தர்... காற்றே அவர்களின் ஊர்தி” என்றான் பீமன். திருஷ்டத்யும்னன் “நீங்கள் சொன்னால் மறுசொல்லில்லை. ஆனால்...” என்றான். “களத்தில் காண்போம்” என்றான் பீமன். அசங்கன் திரும்பி கடோத்கஜனை நோக்கினான். அந்தப் பேச்சே தன்னைப்பற்றியதல்ல என்பதுபோல் அவன் அமர்ந்திருந்தான். மெய்யாகவே அங்கு பேசப்படுவன அவனுக்கு புரியவில்லை என்று தெரிந்தது.

“சூழ்கைக்கான ஆணைகள் எழுதப்பட்டுள்ளன எனில் அவற்றுக்கு அமைச்சர்களே அரசச்சாத்து அளிக்கட்டும்... அவை கலையலாம்” என்றபடி யுதிஷ்டிரர் எழுந்தார். அவையினரும் எழுந்தார்கள். நிமித்திகன் எழுந்து சங்கொலி எழுப்பி யுதிஷ்டிரரின் புகழ்கூறி அவை கலைவதை அறிவித்தான். யுதிஷ்டிரர் கைகூப்பியபடி நகுலனும் சகதேவனும் தொடர நடந்து வெளியே சென்றார். பீமன் அவைமேடையில் இருந்து கீழிறங்கி வந்து கடோத்கஜனை அணுகி அவனை நோக்காமல் கடுமையான குரலில் “சென்று இளைய யாதவரை வணங்கி வாழ்த்து கொள்க!” என்றான்.

கடோத்கஜன் இளைய யாதவரை சில கணங்கள் நோக்கிவிட்டு “தாங்கள் சொன்னால் நான் வாழ்த்து கொள்கிறேன், தந்தையே. ஆனால் நான் இவரிடம் வாழ்த்து கொள்ள விரும்பவில்லை” என்றான். பீமன் சினத்துடன் கையை ஓங்கியபடி திரும்பி “என்ன சொல்கிறாய், அறிவிலி?” என்று கூவினான். இளைய யாதவர் புன்னகையுடன் நோக்க பீமன் தன்னை அடக்கி “நீ சொல்வதென்ன என்று அறிவாயா?” என்றான். கடோத்கஜன் “நான் இங்கு வந்த பின்னர்தான் அறிந்துகொண்டேன். இந்தப் போரே இவருக்காகத்தான். இவர் சொல்லும் எதையோ இங்கே நிலைநாட்டத்தான்” என்றான். பீமன் உரக்க “ஆம், அவருடைய சொல் நிலைகொள்ளும்பொருட்டே இப்போர்” என்றான்.

“தந்தையே, எவருடைய சொல்லும் மானுடரின் அழிவுக்கு நிகரானதல்ல. சொல்லுக்காக மானுடர் சாவதைப்போல் வீண்செயல் வேறில்லை” என்றான் கடோத்கஜன். “அவ்வாறென்றால் நீ ஏன் இங்கே வந்தாய்?” என்று பீமன் கூவியபடி மீண்டும் கடோத்கஜனை அறைய கையோங்கினான். அவனை அஞ்சாமல் நோக்கி கடோத்கஜன் “தங்களுக்காக” என்றான். “நான் என் மூதன்னைக்கு அளித்த சொல்லுக்காக. அதன்பொருட்டு கொல்கிறேன். ஆனால் ஒரு மானுடன் இன்னொருவனை கொல்லவேண்டுமென்றால் அது தனிப் பகைக்காகவும் தனிப் போரிலும் மட்டுமே நிகழவேண்டும். பிற இறப்புகள் அனைத்தும் வீண்கொலையே.”

“நீ எனக்காக வரவேண்டியதில்லை… கிளம்பு… என் ஆணை, கிளம்பு!” என்று பீமன் கூவினான். கடோத்கஜனின் தோளைப்பற்றி தள்ளி “செல்… இப்போதே செல்!” என்றான். “அதை சொல்லவேண்டியவர் உங்கள் மூத்தவர், பாண்டவரே” என்றார் இளைய யாதவர். “அல்லது நான்.” பீமன் தளர்ந்து “இவன், இந்த அறிவிலி…” என்று கைசுட்டி நடுங்கினான். அவன் முகம் சிவந்து மூச்சிரைத்தது. சுடரொளியில் முகம் வியர்வையால் மின்னியது. “அவர் தன் தொல்மரபிலிருந்து பெற்ற மெய்மையை சொல்கிறார்” என்றார் இளைய யாதவர். “ஆனால் இப்போரில் ஒவ்வொரு படைக்கலமும் நமக்கு தேவை.”

பீமன் இருவரையும் மாறிமாறி நோக்கியபின் திரும்பி நடந்து வெளியே சென்றான். இளைய யாதவர் “நீங்கள் உங்கள் தந்தையின்பொருட்டு களம்நிற்க வேண்டும், அரக்கரே. உங்கள் தந்தை இப்போரில் வென்றாக வேண்டும்” என்றார். “அவர் இக்களத்தில் வெல்வார்” என்றான் கடோத்கஜன். “ஆனால் முழுமையாகவே தோற்பார்.” இளைய யாதவர் அதே புன்னகையுடன் நோக்கிநிற்க “பெரியவர்கள் தோற்றாக வேண்டும். மிகப் பெரியவர்கள் முற்றாக தோற்கவேண்டும். அதுவே இவ்வுலகின் நெறி” என்றான் கடோத்கஜன். இளைய யாதவர் “ஆம், மெய்” என்று அவன் தோளில் தட்டியபின் வெளியே நடந்தார். கடோத்கஜன் திரும்பி அசங்கனை நோக்கி பெரிய பற்கள் தெரிய புன்னகைத்தான்.

துரியோதனன் அவைக்குள் நுழைவதுவரை கலைந்த சொற்களின் முழக்கம் அங்கு நிறைந்திருந்தது. கைகளை கூப்பியபடி அவன் முதல் வாயிலினூடாக உள்ளே நுழைந்து தன் பீடத்தை நோக்கி செல்ல அவையினர் வாழ்த்தொலி எழுப்பினர். பீடத்தில் அமர்ந்து களைப்புடன் உடலை நீட்டிக்கொண்டு அருகே வந்து தலைவணங்கிய விகர்ணனிடம் தாழ்ந்த குரலில் சில ஆணைகளை பிறப்பித்துவிட்டு அவையை சிவந்த கண்களால் நோக்கினான். ஒருகணம் அவன் விழி வந்து தன்னை தொட்டுச்செல்வதைக் கண்டு லட்சுமணன் உளம் இறுகி மீண்டான். அவ்வப்போது அவனை அவையிலும் பொதுவிலும் துரியோதனனின் விழிகள் வந்து தொட்டுச்செல்வது அண்மைக்கால வழக்கமாகிவிட்டிருந்தது.

முன்பெல்லாம் துரியோதனன் அவன் இருப்பதையே அறியாதவன் போலிருப்பான். அரிதாகவே விழிதொடுவான். அவனை அதுவரை மிகச் சில முறையே உடல்தொட்டிருக்கிறான்.

லட்சுமணன் தந்தையை நோக்கியபடி அவையை முற்றிலும் மறந்து அமர்ந்திருந்தான். துரியோதனன் மிகவும் உடல் தளர்ந்திருப்பதாக அவனுக்கு தோன்றியது. முந்தைய நாளிரவு அவன் இயல்பான துயிலை அடைந்திருக்க வாய்ப்பில்லை. நெடுநாட்களாகவே நற்துயில் இல்லாமை அவனது கண்களைச் சுற்றி கருமையையும் தோல்சுருக்கத்தையும் உருவாக்கியிருந்தது. இமைகள் தடித்து உதடுகள் கருகியிருந்தன. பிறர் பேசிக்கொண்டிருக்கையில் அவன் விரல்கள் பொறுமையிழந்து அசைந்துகொண்டிருப்பதை, காற்றில் எதையோ எழுதி அழிப்பதை லட்சுமணன் கண்டான். துர்மதன் துரியோதனனை அணுகி ஏதோ சொல்ல முகம் சுளித்து வேண்டாம் என்று தலையசைத்து விலகிச்செல்லும்படி கைகாட்டினான். அமைச்சர் அவை தொடங்கலாமா என விழிகளால் வினவ துச்சாதனன் ஆம் என தலையசைக்க அமைச்சர் வாழ்த்துரையுடன் அவை தொடங்கவிருப்பதை அறிவித்தார்.

அவை அமைதியாகவே இருந்தது. துச்சாதனன் பூரிசிரவஸை நோக்கி விழிகளால் பேசத்தொடங்கும்படி கோரினான். மேலாடையை இரண்டுமுறை சீரமைத்தபடி பூரிசிரவஸ் எழுந்து “அரசே, இன்றைய படைசூழ்கையை ஆசிரியர் துரோணர் வகுத்துள்ளார். இன்றும் பருந்துச்சூழ்கையே உகந்ததென்பது அவரது எண்ணம். ஒற்றை வீரரை முன் நிறுத்தி முழுப் படையும் போரிடுவதற்கு உகந்த வடிவம் அது. இன்றும் நமது முதன்மை படைக்கலம் பீஷ்ம பிதாமகரே. அவரை வெல்ல அவர்களில் எவராலும் இயலாதென்பது இரு நாட்களில் நிறுவப்பட்டுவிட்டது” என்றான். “அவர்களும் இன்று நாரைச் சூழ்கையை அமைக்கக்கூடும் என்றனர்” என்றார் சல்யர். பூரிசிரவஸ் “ஆம், அவர்களுக்கும் அர்ஜுனனே முதன்மை படைக்கலம்” என்றான்.

ஜயத்ரதன் “அல்ல, நேற்றைய போரில் பீமன் காட்டிய பெருவிசையையும் நிலைபெயரா உறுதியையும் அர்ஜுனன் வெளிப்படுத்தவில்லை. இன்னமும்கூட படைமுகப்பில் சற்றே கைதளர்பவனாகவே அவன் இருக்கிறான்” என்றான். “ஏன்?” என்று கிருதவர்மன் கேட்டான். “நேற்று பிதாமகரிடம் அவர் புரிந்த போரை நானும் பார்த்தேன். எவ்வகையிலும் கைத்தளர்வும் உளச்சோர்வும் தென்படவில்லை.” ஜயத்ரதன் புன்னகைத்து “கைகளிலோ அம்புகளிலோ அத்தளர்வு தென்படாது. அது உள்ளத்தின் ஆழத்தில் இருப்பது. மிக அகன்றிருந்து நோக்கினால் அது தெரியும். அம்புக்கு கைசெல்வதில், நாண் இழுப்பதில் தெரியும் மிகுவிரைவு தொடுப்பதற்கு முன் அரைக்கணம், அரைக்கணத்தில் ஆயிரத்திலொரு அளவு தயங்குவதை காணலாம். அதைக்கூட முகவிழியால் அல்ல மெய்விழியால்தான் காண இயலும்” என்றான்.

அவை ஜயத்ரதனை நோக்கியது. சல்யர் “அது வெறும் உளமயக்கு” என்றார். “அகன்றிருப்பவனுக்கு உளமயக்கும் விழிமயக்கும் ஏற்படுவதில்லை” என்ற ஜயத்ரதன் “அவ்வாறென்றால்கூட தாழ்வில்லை. பீஷ்ம பிதாமகரை ஏன் அர்ஜுனன் வெல்ல இயலவில்லை என்பதற்கான விளக்கம் இதுவே” என்றான். “சொல்க!” என்றான் துரியோதனன். “அரசே, இன்னமும் அர்ஜுனன் போரில் அருங்கொலை எதையும் செய்யவில்லை” என்றான் ஜயத்ரதன். பூரிசிரவஸ் “அவர் கொன்று குவித்த நம் படைவீரர்களின் எண்ணிக்கை...” என சொல்ல ஜயத்ரதன் கைகாட்டி தடுத்து “அவர்கள் முகமில்லாதவர்கள். போரில் இறப்பதற்கென்றே பிறவி கொள்ளும்

படைவீரர்கள். எதிர்த்து வரும் படைக்கலங்களேந்திய கைகள் மட்டுமே போரில் நம் விழிக்கு தெரியும். எதிரிவீரனின் விழிகளை எவரும் நோக்குவதில்லை” என்றான்.

“ஆம், படைவீரனை போரில் கொல்வதில் எந்த உளத்தடையும் ஏற்படுவதில்லை” என்றான் கிருதவர்மன். “போரில் மெய்யாகவே ஓர் அருங்கொலை நிகழ்வது கொல்பவன் தன்னாலும் பொறுத்துக்கொள்ள இயலாத ஒன்றை நிகழ்த்துகையில்தான்” என்றான் ஜயத்ரதன். “தன் அனைத்து எல்லைகளையும் மீறிச்சென்று அதை அவன் ஆற்றவேண்டும். அத்தருணத்தில் அவனுள் ஏதோ ஒன்று உடைவதை காண்கிறான். பிறகு ஒருபோதும் திரும்பிச்செல்ல முடியாத இடத்திற்கு வந்துவிட்டதை திகைப்புடன் திரும்பிப்பார்க்கிறான். அதை அவன் மீண்டும் எண்ணிப்பார்க்க விரும்புவதில்லை. அது இயல்பாக எழுந்துவரும்போது உடலும் உள்ளமும் தவிக்கிறான். அதை வெல்ல ஒரே வழிதான் உள்ளது, மேலும் மேலுமென அதையே செய்து உள்ளத்தை அதற்கு பழக்கப்படுத்துதல். அவ்வழியே நெடுந்தொலைவு சென்று மேலும் மேலும் நிகழ்வுகளால் முதற்கணத்தை மூடி புதைத்துவிடுதல்.”

லட்சுமணன் ஏனென்றே தெரியாமல் மெய்க்கூச்சம் அடைந்தான். உடல் தவிக்க கைகளை இறுகப்பற்றிக்கொண்டு தலைதாழ்த்தி பற்களை நெரித்தான். அங்கிருந்து எழுந்து ஓடிவிடவேண்டும் என்றே அகம் தவித்தது. ஜயத்ரதன் இவற்றை ஏன் சொல்கிறான்? அவன் அவ்வெல்லையை கடப்பதைப் பற்றி எண்ணி எண்ணி உளம்உருட்டிக்கொண்டிருக்கிறான். அவன் அவ்வெல்லையை உறுதியாக கடப்பான். பெரும்பழி ஒன்றை செய்வதற்கு முன் மானுடர் உளம்கிளர்கிறார்கள். அவர்களின் அகம் கொண்ட சலிப்பு முற்றாக விலகிவிடுகிறது. அதை அஞ்சித்தயங்கும் ஆழமே அவர்களை கொந்தளிக்கச் செய்து அதை அருநிகழ்வாக ஆக்கிவிடுகிறது. பெரும்பழிகளைச் செய்தவர்கள் தங்கள் கட்டுகளை மீறிவிட்டதாக, ஆற்றல்பெற்றுவிட்டதாக உணர்கிறார்கள். தெய்வங்களால் அறைபட்டு விழும்வரை தருக்கி நின்றிருக்கிறார்கள்.

“போர்க்களத்தில் முதல் அருங்கொலையை செய்த பின்னரே வெல்ல முடியாதவனாக இயலும். நேற்று பீமன் அதை செய்துவிட்டான்” என்று ஜயத்ரதன் சொன்னான். “தன் கைகளால் தன் குருதிமைந்தர் எண்பத்தைந்து பேரை தலையறைந்து கொன்றான். அக்குருதியை அள்ளி தன் முகத்தில் பூசி வெறியாடினான். எங்ஙனம் அவன் திரும்பி தன் பாடிவீட்டுக்குச் சென்றான் என்பதை என்னால் உய்த்துணர இயலவில்லை. குற்றஉணர்வும் தன்கசப்பும் கொண்டு தனிமையில் ஆழ்ந்து சென்றிருக்கலாம். அல்லது இதுநாள்வரை தன்னை கட்டி வைத்திருந்த பெருந்தளையொன்றிலிருந்து விடுபட்டதன் கொண்டாட்டத்தை உணர்ந்திருக்கலாம். அல்லது இவ்விரு உணர்வுகளுக்குமிடையே இடைவிடா ஊசலாட்டமாகி நேற்றிரவை கழித்திருக்கலாம்.” தன் எண்ணங்களே சொற்களென ஒலிப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

“ஆனால் அவன் நெடுந்தொலைவு வந்துவிட்டான்” என ஜயத்ரதன் தொடர்ந்தான். “அர்ஜுனன் இன்னமும் கிளம்பவே இல்லை. ஆகவே சொட்டுவதற்கு முந்தைய துளி என ததும்பிக்கொண்டிருக்கிறான்.” புன்னகைத்து “ஆனால் இது பெருங்களம். இது கடல். துளிகளனைத்தையும் இழுத்து தன்னில் சேர்த்துக்கொள்வதே கடலின் பேராற்றல். அவன் மீறி எழுவான். ஏனென்றால் ஒவ்வொரு கணமும் அவன் அகம்சீண்டப்படுகிறான். சிறுத்து ஆணவம் அழிந்து மறைந்துகொண்டே இருக்கிறான். நான் நான் என அவனுள் நின்று திமிறும் ஒன்று அவ்வில்லை ஏந்தவேண்டும். அது நிகழ்ந்தே தீரும். எப்போது எங்கு என்பதே நம் வினா” என்றான்.

சுபாகு “நாம் எதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்?” என்றான். அதுவரை ஜயத்ரதனின் சொற்களில் ஒழுகிச்சென்றுகொண்டிருந்த அவை திகைப்புடன் கலைவுகொள்ள துச்சாதனன் “ஆம், நாம் செய்யவேண்டியதென்ன என்று பேசவந்தோம்” என்றான். “அவர்கள் இனிமேல் எந்த தனி வீரரையும் முன்னிறுத்தமாட்டார்கள். ஆகவே நாரைச்சூழ்கையோ அன்றி பிற அலகுள்ள வடிவுகளையோ தெரிவுசெய்ய மாட்டார்கள். பீஷ்மரை சூழவும் சேர்ந்து அழிக்கவும்தான் முயல்வார்கள். பெரும்பாலும் நண்டு அல்லது தேள்சூழ்கை... அதையே நான் எதிர்பார்க்கிறேன்.”

“ஆம், இன்று பீமனும் திருஷ்டத்யும்னனும் சாத்யகியும் அர்ஜுனனுக்கு இணையான வீரத்துடன் களத்தில் நின்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இணைந்தமையும் சூழ்கைக்கே வாய்ப்பு” என்றார் சல்யர். சகுனி மெல்லிய கனைப்போசை எழுப்ப அவர்கள் அனைவரும் திரும்பி அவரை நோக்கினர். “அவர்கள் பிறைச்சூழ்கை அமைக்கிறார்கள். ஒற்றுச்செய்தி நான் கிளம்பும்போது வந்தது” என்றார். அவை மெல்லிய ஓசையுடன் எளிதானது. “அவர்கள் பீஷ்ம பிதாமகரை முழுப் படையாலும் சூழ எண்ணுகிறார்கள். அவர்களின் பெருவீரர்கள் அனைவருமே இணைநிரையென படைமுகம் நிற்பார்கள்.” துரியோதனன் “ம்ம்” என முனகி தன் கைகளால் இருக்கையின் பிடியை நெருடினான்.

“அத்துடன் நேற்று அந்தியில் பீமனின் மைந்தன் கடோத்கஜன் வந்து அவர்களுடன் இணைந்திருக்கிறான். இன்றைய போரில் அவன் ஆற்றவிருப்பதென்ன என்பதை இனிமேல்தான் பார்க்கவிருக்கிறோம்” என்றான் ஜயத்ரதன். “வெறும் காட்டுமனிதன். இத்தகைய பெரும்போரை முன்னர் பார்த்திருக்க மாட்டான். இங்கே நிகழ்வதென்ன என்று அவன் உணர்ந்துகொள்வதற்குள் நெஞ்சை பிளந்துபோட இயலும்” என்றான் கிருதவர்மன். அஸ்வத்தாமன் “அல்ல யாதவரே, அவன் நாம் அனைவரும் கொண்டிருக்கும் அந்த உளத்தடைகள் எதுவும் இல்லாதவனாக இருக்கலாம். இயல்பிலேயே நாம் சற்று முன் பேசிய அனைத்து உளத்தடைகளையும் கடந்தவனாக இருக்கலாம்” என்றான்.

சல்யர் “ஆம், போர்க்களங்களில் அரக்கர்கள் பேரழிவை உருவாக்குகிறார்கள். அவர்களிடமிருந்து வெளிவரும் குருதி வெறிகொண்ட தொல்விலங்கொன்று எளிதில் வெல்லப்பட இயலாதது” என்றார். சலன் “நம்மிடமும் ஆற்றல் மிக்க அரக்கர்கள் இருக்கிறார்கள். அவனை எதிர்கொள்ள அலம்புஷனை அனுப்புவோம்” என்றான். ஜயத்ரதன் “அலம்புஷன் வெறும் அரக்கன். அவனிடமிருப்பது கண்மூடி எழும் காற்றுவிசை மட்டுமே. கடோத்கஜன் அரக்கனின் குருதியில் ஷத்ரியன் முளைத்தெழுந்தவன். அவனை எதிர்கொள்வது மேலும் கடினம்” என்றான். சகுனி “அவர்கள் விந்தையான திறன்கள் கொண்டவர்கள் என்று ஒற்றர்கள் சொல்கிறார்கள். இடும்பவனத்திலிருந்து எந்த ஊர்திகளும் இன்றி கிளம்பி ஓரிரவில் குருக்ஷேத்ரம் வந்திருக்கிறார்கள்” என்றார்.

அவையில் வியப்பு ஒலித்தது. சல்யர் “எப்படி வந்தனர்?” என்றார். “அவர்களால் பறக்கவியலும். பறக்கும் அரக்கர் என்றே அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்” என்றார் சகுனி. துர்மதன் “அவர்கள் மரங்களிலிருந்து மரங்களுக்கு தாவுவார்கள். குரங்குகள் பறப்பதுபோல காற்றில் செல்லும் அவர்களின் வடிவம் இன்னும் என் விழிகளில் உள்ளது” என்றான். “அவர்களின் உடல்களும் அதற்காகவே தெய்வங்களால் அருளப்பட்டவை. குரங்குபோல சிறிய எடையற்ற கால்கள் கொண்டவர்கள். நமக்கெல்லாம் உடலின் எடையில் பெரும்பகுதி இடையும் கீழும்தான் உள்ளது. அவர்களுக்கு அது உடலெடையின் ஐந்திலொன்று மட்டுமே.” துச்சாதனன் “இயல்புக்கு மாறான உடல்கொண்ட எவரும் படைகளில் குலைவையும்

அழிவையும் உருவாக்குவார்கள்” என்றான். “நான் கடோத்கஜனுடன் மற்போரிட்டிருக்கிறேன். என்னால் அவன் தோள்களை நிலைகொண்ட பாறை என்று மட்டுமே உணர முடிந்தது.”

“நாம் இக்களத்தில் வெல்ல இயலாதென்பதையா பேசிக்கொண்டிருக்கிறோம்?” என்றான் ஜயத்ரதன் எரிச்சலுடன். “அனைத்தையும் பேசித்தான் ஆகவேண்டும்” என்று சீற்றத்துடன் துர்மதன் சொன்னான். “நாம் பருந்துச்சூழ்கையை அமைப்பது தவிர்க்க இயலாது. அவர்கள் நம்மை சூழ்ந்துகொள்ளாமலிருக்க என்ன செய்யவிருக்கிறோம்?” லட்சுமணன் மெல்ல அசைந்து “அவர்கள் அனைவரும் இணைந்து சூழ்ந்துகொண்டால் நாம் பிதாமகரை மட்டும் முன்னிறுத்துவது…” என்று மெல்ல தொடங்க துரோணர் “நாம் பருந்துச்சூழ்கையை முன்பு அமைத்ததுபோல் எளிமையாக அமைக்கவில்லை. இந்தச் சூழ்கையை போர்த்தருணத்திலேயே கலைத்து நண்டோ தேளோ நாகமோ ஆக மாற்றிக்கொள்ள நம்மால் இயலும். இம்முறை பருந்தின் சிறகுகளில் முட்களும் கால்களில் கூருகிர்களும் உள்ளன. அதன் அலகின் இருபுறமும் கால்கள் எப்போதுமிருக்கும்” என்றார். “அவர்கள் ஒற்றை வீரனை நம்பி இல்லை என்பதை உளம் கொள்வோம். நாம் ஒற்றை வீரரை முன் நிறுத்துகிறோம். அவர்கள் பலர் என்பதையும் மறக்காமலிருப்போம்” என்றார்.

“பிதாமகர் பீஷ்மர் வெல்ல முடியாத களவீரர் என்பதை எவரும் மறுக்கவில்லை. ஆனால் நம் தரப்பிலும் மாவீரர் பலர் உள்ளனர். சைந்தவர் இருக்கிறார். பால்ஹிகர் இருக்கிறார். நாம் ஏன் மீள மீள இச்சூழ்கையை அமைக்கிறோம்?” என்றார் சல்யர். “ஏனெனில் பிதாமகரை மட்டுமே அவர்கள் அஞ்சுகிறார்கள். பிதாமகரிடம் மட்டுமே அர்ஜுனனின் வில் ஒருகணமேனும் தாழ்கிறது. அவரை நிறுத்தியே நாம் இப்போரை முன்னெடுக்க இயலும்” என்றார் துரோணர். சல்யர் மேற்கொண்டு பேசவிரும்பவில்லை என்பதுபோல் கையசைத்தார்.

பூரிசிரவஸ் “ஒரு படைவீரருக்குப் பின் மொத்தப் படையும் தன் ஆற்றலை செலுத்துவதற்குரியது பறவைச்சூழ்கைகள். பிதாமகரை நேற்று பருந்தின் அலகுமுனையென நிறுத்தினோம். இன்று அலகுக்குக் காவலென உகிர்களாக ஜயத்ரதரும் பால்ஹிகரும் தாங்களும் நானும் நின்றிருப்போம். கூர்கொண்டு புகுந்து பாண்டவப் படைகளுக்குள் சென்று பிளந்து கிழித்து அழிப்போம். இன்றைய போரில் பாண்டவப் படை மூன்றிலொன்றாக குறையவேண்டும். அவர்கள் எண்ணி பெருமிதம் கொள்ளும் சிலரேனும் களம்பட்டாக வேண்டும்” என்றான்.

துரியோதனன் “இன்று நாம் நிகர்நிலையில் நின்றிருக்கிறோம். முதல்நாள் போர் நமக்கு உகந்ததாக முடிந்தது. இவ்விரண்டாம் நாள் போர் அவர்களுக்கு வெற்றியாகியது. மூன்றாம் நாள் போரில் நாம் வென்றாக வேண்டும். இன்று நம்மை பார்த்தனோ பாஞ்சாலனோ ஊடுருவுவான் என்றால் நமது படைகளின் உளவிசை அழியும். நாம் எழ இயலாது” என்றான். சகுனி “மருகனே, நேற்று நம்மை ஊடுருவி துண்டுபடுத்த பீமனால் இயன்றதென்பது உண்மை. ஆனால் பீஷ்மர் கொன்று குவித்த பாஞ்சாலர்களின் எண்ணிக்கையை இன்று காலைதான் அறிந்தேன். அவர்கள் படை எண்ணியிரா அழிவுகளை கண்டுவிட்டது. இன்றும் பிதாமகரின் விசை குறையாது தொடருமென்றால் பாண்டவப் படையில் பெரும்பகுதி அழிந்துவிட்டிருக்கும்” என்றார்.

வெளியே கலைவோசை கேட்டது. அணுக்கக் காவலன் உள்நுழைந்து “பிதாமகர் பீஷ்மர்!” என்றான். அவையினரும் துரியோதனனும் எழுந்து

கைகூப்பியபடி நிற்க வணங்கியபடி பீஷ்மர் உள்ளே வந்தார். எவரையும் பார்க்காமல் துரோணரின் அருகிலிருந்த பீடத்தில் சென்று அமர்ந்து கால்களை மடித்து வைத்துக்கொண்டார். கைகள் தாடியை நீவத் தொடங்கின. விழிகள் தழைந்திருந்தன. அவருடைய தாடி குருதிச்செம்மை கொண்டு முடியிழைகள் தடித்து பொற்கம்பிச் சுருள்கள்போல் இருந்தது. தோளில் கிடந்த குழலும் செந்நிறச் சடைத்திரிகளாகத் தெரிந்தது.

அவை பீஷ்மருக்கு வாழ்த்தொலி எழுப்பி வணங்கி மீண்டும் அமர்ந்தது. பூரிசிரவஸ் தலைவணங்கி “பிதாமகரே, இன்றும் பருந்துச்சூழ்கை அமைத்துள்ளோம். அலகென தாங்கள் நின்றிருக்க வேண்டுமென்றும் பருந்து தன் அலகால் பாண்டவப் படைகளை கிழித்து துண்டுபடுத்தி அளிக்கவேண்டுமென்றும் ஆசிரியர் துரோணர் விழைகிறார். அவ்வழியே பருந்தின் கால் உட்புகும்” என்றான். “ஆகுக!” என்று பீஷ்மர் எந்த உணர்வும் இன்றி சொன்னார். ஜயத்ரதன் “பிதாமகர் இன்னும் தன் முழு உருவை கொண்டு போரிடத் தயங்குகிறார் என்று அவையிலோர் எண்ணம் உள்ளது” என்றான்.

பீஷ்மர் சினத்துடன் “எவருக்கு அவ்வெண்ணம்?” என்றார். ஜயத்ரதன் “எனக்கு உள்ளதென்றே வைத்துக்கொள்ளுங்கள்” என்றான். “அறிவிலி” என்றபடி பீஷ்மர் கசப்புடன் முகம் திரும்பிக்கொண்டார். “நான் அறிவிலி என்பது இன்னொரு பக்கம் அமைக! பிதாமகரே, இந்த இரு நாட்களும் தாங்கள் ஆற்றல்மிக்க படைக்கருவிகளுடன் பொருதினீர்கள், பேரழிவை விளைவித்தீர்கள், ஐயமில்லை. ஆனால் நீங்கள் பயின்ற அரிய அம்புகள் எவையும் நேற்றும் முன்னாளும் களத்தில் எழவில்லை. உங்கள் நீண்ட வாழ்நாள் முழுக்க தேடியலைந்து ஈட்டிய அம்புகளெல்லாம் எங்கே? அனலெழுப்பவும் இடிமின்னல் உருவாக்கவும் ஒலியால் செவிதுளைக்கவும் விழியும் உளமும் மயங்கச்செய்யவும் ஆற்றல்கொண்ட அம்புகள் உங்களிடம் உள்ளன என்று கேட்டிருக்கிறேன்” என்றான்.

“அவையெல்லாம் வெறும் பேச்சுகள். அம்புவித்தைகள் பல உண்டு. அவை இத்தகைய அறப்போருக்குரியவை அல்ல. மாயங்கள் கோழைகளுக்குரியவை” என்றார் பீஷ்மர். துரியோதனன் பற்கள் நெரிபட, ஆனால் முகம் சிரிப்பென நீள “அறப்போரா? அது எங்கு நடக்கிறது, பிதாமகரே? இன்னும் அச்சொற்களை என் முன் உரைக்காதீர்கள்” என்றான். இரு கைகளாலும் பீடத்தின் கைப்பிடியை அறைந்து “என் இளமைந்தர் தலையறைந்து விழுவதை என் கண்ணால் கண்டேன். அவர்களின் குருதியை முகத்தில் பூசி நின்றாடிய வெறியனை நேற்றிரவெல்லாம் என் கனவில் கண்டு விழித்தெழுந்துகொண்டிருந்தேன். மதுவருந்தி மயக்கமருந்து உண்டு அவன் முகத்தை மறைக்க முயன்றேன்” என்றான். அவன் உளவிசையால் எழுந்துவிட்டான். “எது அறம்? இன்னும் நீங்கள் சொற்களால் உங்களை ஏன் தளையிட்டுக் கொள்கிறீர்கள்?” என்றான்.

பீஷ்மர் “நான் என்ன செய்யவேண்டும் என எனக்குத் தெரியும். உன் அவையில்தான் அந்தணர் வந்து ஆணையிட்டனர், நஞ்சும் நீரும் விழிசெவிச் சூழ்ச்சிகளும் உளமாயங்களும் இப்போரில் இடம்பெறலாகாது என்று. ஆம் என்று சொல்லளித்தவன் நீ” என்றார். “ஆம், ஆனால் அச்சொற்கள் அனைத்தும் நேற்றே இறந்தன. என் குடி மைந்தர் இறந்தபோதே அனைத்து நெறிகளும் அழிந்தன. இனி எதற்கும் நான் கட்டுப்பட்டவன் அல்ல. அந்தணர் அல்ல, தேவர்களும் கந்தர்வர்களும் அல்ல, புடவியாளும் மூன்று தெய்வங்களும் எழுந்து வந்தாலும் அவர்களிடம் சொல்ல எனக்கு இனி ஒன்றே உள்ளது. இனி எனக்கு நெறிகள் இல்லை. நஞ்செனில் நஞ்சு, நெருப்பெனில் நெருப்பு ,வென்று இக்களம்விட்டுச் செல்வதொன்றே என் இலக்கு” என்றான்.

பீஷ்மர் “நான் என் நெறிகளை நானே வகுத்துக்கொண்டவன்” என்றார். “அதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நெறியென்ற பேரில் உங்களை நீங்களே கட்டுப்படுத்திக் கொள்கிறீர்கள். ஆகவே அவர்கள் எழவும் நம் மைந்தரை நம் கண்முன்னில் தலையுடைத்துக் கொல்லவும் வழிவகுக்கிறீர்கள். பிதாமகரே, நேற்று நம் களத்தில் நிகழ்ந்த அருங்கொலைகளுக்கு பொறுப்பேற்க வேண்டியவர் நீங்கள் மட்டுமே” என்றான். துரோணர் “என்ன பேச்சு இது?” என்றார். “பிதாமகர் அல்ல, இங்கே அவையமர்ந்திருப்பவர் நம் முதன்மை வீரர்.”

பீஷ்மர் அவரை கையமர்த்திவிட்டு “ஆம், நானே பொறுப்பு. அதை மேலும் மேலும் உணர்கிறேன். இவ்வழிவெல்லாம் என்னால்தான். ஆம், மெய்தான்” என்றார். அவர் குரலில் எவ்வுணர்வும் இருக்கவில்லை. “இப்போரில் நெறிநின்றமைக்காக பழி கொள்கிறேன் எனில் அவ்வாறே ஆகுக! நெறிக்குமேல் எழுவது ஷத்ரியனின் வீரம் என்று எண்ணியிருந்தேன் எனில் இப்போரே நிகழ்ந்திருக்காது. என் குருதிவழியினர் மோதி களம்படும் காட்சியைக் கண்டு இரவெலாம் துயிலழிந்து விண்மீன்களை நோக்கி வெறுமைகொண்டு நிற்கவும் நேரிட்டிருக்காது.”

கைகளைத் தூக்கி ஏதோ சொல்லவந்து சொல்சிக்காது உழன்று மீண்டு “இந்த மணிமுடி என்னிடம் வந்தபோது சௌனகரின் தந்தை காதரர் சொன்னார், ஷத்ரியனின் கடன் முடிகொள்வதே என்று. நல்லாட்சியே அனைத்தறம் என்று. எளிய மானுடரின் நெறிகளால் ஷத்ரியனின் தனியறத்தை மீறவேண்டாம் என்று. நான் என் தந்தைக்கும் தாய்க்கும் அளித்த சொல்லை கடக்கவில்லை. நான் காத்து நின்ற நெறியால்தான் இவையனைத்தும் நிகழ்கின்றன. நன்று, இத்தனை நாள் காத்த அந்நெறியை இனியும் காத்து நிற்கிறேன். அதன்பொருட்டு களம்படுவேன் என்றால் அதுவும் ஆகுக!” என்றார்.

சல்யர் “நாம் இவற்றைப் பற்றியெல்லாம் பேசி பொழுது கழிக்க வேண்டியதில்லை. இன்றைய படைசூழ்கையை முடிவு செய்வோம்” என்றார். “அதில் பேச ஒன்றுமில்லை. அந்த முடிவு எடுக்கப்பட்டுவிட்டது” என்று துரியோதனன் சொன்னான். “இன்னும் முடிவெடுக்க வேண்டியது பிதாமகர் பீஷ்மர் தன் அனைத்துத் தடைகளையும் கடந்து முழு விசையுடன் போரிடுவாரா என்பதொன்றைத்தான்.” பீஷ்மர் “இல்லை, எனது நெறிகளுக்குள் நின்றே போரிடுவேன்” என்றார். துரியோதனன் மேலும் பேசுவதற்குள் பூரிசிரவஸ் “தாங்கள் கொள்ளும் முழு விசை எங்களுக்கு உதவட்டும், பிதாமகரே. தங்களை நம்பி களம் வருகிறோம். எங்களுக்கு வெற்றி ஈட்டித் தருக!” என்றான். “நான் போரிடுகிறேன். வெற்றியும் தோல்வியும் தெய்வங்களின் முடிவு” என்றார் பீஷ்மர். அவர் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தார்.

பூரிசிரவஸ் “இதுவே அவையின் ஆணை. இந்த அவையை இப்போதே முடிவு செய்வோம். இன்னும் அரைநாழிகைக்குள் புலரவிருக்கிறது” என்றான். பூரிசிரவஸ் கைகாட்ட அவை நிறைவை அறிவிக்கும்பொருட்டு அமைச்சர் எழுந்தார். அவையினர் தங்கள் வாள்களையும் வேல்களையும் தூக்கி வாழ்த்தொலி எழுப்பினர். துரியோதனன் எழுந்து தலைவணங்கி அவையிலிருந்து வெளியே சென்றான். பீஷ்மர் எழுந்துகொள்ள துரோணர் அவர் அருகே சென்று தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டு உடன் நடந்தார். லட்சுமணன் பெருமூச்சுடன் அவையை நோக்கி நின்றான். அவை மூலையிலிருந்து அவனை நோக்கி வந்த துருமசேனன் அவன் அருகே நின்றான். அவனை நோக்கிவிட்டு லட்சுமணன் வெளியே நடந்தான்.

லட்சுமணன் அவையிலிருந்து வெளியே வந்து குளிர்காற்றை உணர்ந்தபோது மேலும் களைப்படைந்தான். கால்கள் நீரிலென நீந்தி நீந்தி அவனை கொண்டுசெல்வதுபோல தோன்றியது. வெளியே அவனுக்காகக் காத்து நின்றிருந்த துருமசேனன் அருகணைந்து “களமொருக்குதானே அடுத்த பணி, மூத்தவரே?” என்றான். லட்சுமணன் தலையசைத்தான். துருமசேனன் “இன்று படைவீரர்கள் சோர்ந்திருக்கிறார்கள். நேற்றும் அவர்களை கனவுகள் அலைக்கழித்தன என்கிறார்கள்...” என்றான். லட்சுமணன் “உம்” என்றான். “அதே கனவுகள்தான். பேயுருக்கொண்ட ஆழத்துதெய்வங்களும் விண்வாழ்தெய்வங்களும் மண்ணிலிறங்கி பூசலிட்டன” என்றான் துருமசேனன்.

“அவர்கள் சொல்வதை கேட்டால் இதுவரை மண்ணில் உருக்கொண்ட அத்தனை தெய்வங்களும் இங்கு வந்துள்ளன என்று தோன்றுகிறது. பல்லாயிரக்கணக்கான குலதெய்வங்கள், லட்சக்கணக்கான அன்னைதெய்வங்கள், பலகோடி மூதாதைதெய்வங்கள். இங்கே தெய்வங்களுக்குப் போக எஞ்சிய இடமே மானுடருக்கு” என்று துருமசேனன் தொடர்ந்தான். லட்சுமணன் “தெய்வங்களுக்கு ஊசிமுனைமேல் நூறு நகர் அமைக்கும் ஆற்றல் உண்டு” என்றான். “ஆம்” என்றான் துருமசேனன். லட்சுமணன் என்ன சொல்கிறான் என அவனுக்கு புரியவில்லை. “உணவுண்டாயா?” என்றான் லட்சுமணன். “ஆம்” என அவன் நாணத்துடன் சொன்னான். “நீங்கள் உணவருந்தவில்லை என அறிவேன். ஆனால் என்னால் காலையில் எழுந்தவுடன் உண்ணாமலிருக்க இயல்வதில்லை.”

லட்சுமணன் புன்னகையுடன் அவன் முதுகில் கைவைத்து “அதிலென்ன? நீ அடுமனையில் வாழ்பவன் என அறியாதவனா நான்?” என்றான். துருமசேனன் “நான் அடுமனைக்கே செல்லவில்லை” என்றான். “உணவை கூடாரத்தில் கொண்டுவந்து வைத்திருந்தாயா?” என்றான் லட்சுமணன். “எப்படி தெரியும்?” என்று துருமசேனன் கேட்டான். லட்சுமணன் புன்னகை செய்தான். துருமசேனன் குற்றவுணர்ச்சியுடன் “ஆனால் நான் உங்களுக்கான உணவை கொண்டுவந்து வைத்துள்ளேன். சென்றதுமே நீங்கள் உண்ணலாம்” என்றான். லட்சுமணன் “நன்று” என்றான்.

அவர்கள் படைகளின் நடுவே நடந்தார்கள். முந்தையநாள் களம்பட்ட இளையோர் எண்பத்தைந்து பேர் வரிசையாக சிதைக்கு முன் அடுக்கி போடப்பட்டிருந்ததை அவன் பார்த்திருந்தான். அவர்களின் உடல்கள் சிதைந்திருந்தமையால் செந்நிற மரவுரியால் சுருட்டி உருளையாக வைக்கப்பட்டிருந்தனர். “மலைப்பாறைகளால் உருட்டி சிதைக்கப்பட்டவர்கள் போலிருந்தன உடல்கள், மூத்தவரே” என்றான் துருமசேனன். லட்சுமணன் சீற்றத்துடன் “வாயை மூடு!” என்றான். ஆனால் அவனால் அந்த உளஓவியத்திலிருந்து மீளவே முடியவில்லை.

கௌரவ மைந்தர் சிலரே வந்திருந்தார்கள். “எஞ்சியவர்கள் உண்டு துயிலச் சென்றாகவேண்டும் என ஆணையிட்டேன், மூத்தவரே” என்றான் துருமசேனன். “அவர்கள் அனைவரும் துயரில் இருக்கிறார்கள். இங்கு வந்தால் தாளமாட்டார்கள். அவர்கள் ஓர் உடல்போல. ஒவ்வொருவரின் இறப்பும் தங்கள் இறப்பென்றே தோன்றும்.” லட்சுமணன் புன்னகையுடன் “நன்று, ஆயிரம்முறை இறப்பதற்கு நல்லூழ் வேண்டும். இனி பிறப்பும் இறப்பும் இல்லை போலும்” என்றான். அவன் சொல்வது புரியாமல் துருமசேனன் விழித்து நோக்கினான்.

சத்யனும் சத்யசந்தனும் அவர்களுக்குப் பின்னால் வந்தனர். நாகதத்தன், சம்பு, கன்மதன், துர்தசன், சுப்ரஜன் ஆகியோர் ஒரு சிறு குழுவாக நின்றனர். அப்பால்

துந்துபி, துர்ஜயன், சுஜலன், சுமுகன் ஆகியோர் கூடி நின்றனர். சுபூதன், சுபாதன், பாவகன், பரமன் ஆகியோர் இன்னொரு குழுவாக நின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு ஒற்றை உடலென நின்றனர். அவர்கள் எப்போதுமே அப்படித்தான் நிற்பது வழக்கம், ஆகவே அவர்களை ஆலமர விழுதுகள் என பிறர் களியாடுவதுமுண்டு. ஆனால் அப்போது இழுத்துச்செல்லவிருக்கும் ஏதோ சரடு ஒன்று அவர்களை கட்டி நிறுத்தியிருப்பதுபோலத் தோன்றியது.

தனியாக நின்றிருந்த இருவரை நோக்கி லட்சுமணன் நின்றான். “அவர்கள் இளைய தந்தை குண்டாசியின் மைந்தர்கள் அல்லவா?” என்றான். “ஆம், தீர்க்கநேத்ரனும் சுரகுண்டலனும். அவர்கள் எப்போதும் தனித்தே நிற்கிறார்கள். ஒருவருக்கொருவர்கூட பேசிக்கொள்வதில்லை” என்றான் துருமசேனன். லட்சுமணன் “தந்தையிடமிருந்து நோய்களை தவறாமல் பெற்றுக்கொள்கின்றனர் மைந்தர்” என்றான். கைநீட்டி அவர்களை அருகே அழைத்தான். அவர்கள் அவன் அழைப்பை விழிகடந்து உளம் பெற்றுக்கொள்ளவே சற்று பிந்தியது. இருவருமே எதையும் நோக்காத முகம் கொண்டிருந்தனர். அருகே வந்ததும் தீர்க்கநேத்ரன் சொல்லின்றி வணங்கினான். சுரகுண்டலனின் வாயில் ஒரு சொல் எழுவதுபோல ஓர் அசைவு வந்து மறைந்தது.

லட்சுமணன் ஒன்றும் சொல்லாமல் வெறுமனே கைநீட்டி அவர்களின் தோளை மட்டும் தொட்டான். சுரகுண்டலன் பெருமூச்சுவிட்டான். ஏதாவது சொல்லவேண்டும் என லட்சுமணன் எண்ணினான். ஆனால் அவர்களிருவரிடமும் அவன் பேசுவதே அரிது. அவர்களின் கைகளை மட்டும் மெல்லப் பிடித்து அழுத்தினான். அங்கிருந்து நடந்தபோதும் அவர்களின் கைகளை தன் கையிலேயே வைத்திருந்தான். அவர்களும் சொல்லின்றி உடன் நடந்தார்கள். ஒவ்வொரு உடலாக பார்த்தபடி மெல்ல நடந்து சிதையை அணுகியபோது உள்ளம் வெறுமைகொண்டு எடையற்றிருந்தது.

முந்தையநாள் இறந்தவர்களுக்கான செல்கைச் சடங்குகள் அரசர்களின் பாடிவீடுகளின் முற்றங்களிலேயே நிகழ்ந்தன. களத்திலிருந்து அவர்களின் உடல்கள் கொண்டுவரப்பட்டு முற்றங்களில் நிரையாக வைக்கப்பட்டிருந்தன. ஷத்ரிய முறைப்படி வெண்கூறைக்குமேல் வாளும் வேலும் சாத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த அவ்வுடல்களுக்கு இறந்தவர்களின் தந்தையர் வாய்க்கரிசியிட்டு வணங்கினர். அவர்களின் களப்போர்த்திறத்தையும் வெற்றியையும் போற்றி பாணர் எருமைமறம் பாடினர். அங்கிருந்து உடன்பிறந்தார் தொடர அவ்வுடல்கள் எரிகளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டன.

ஆனால் மறுநாளே அரசர் உடல்கள் எவையும் படைகளுக்குள் கொண்டுவரப்படலாகாது என்று ஆணையிட்டுவிட்டார். அவ்வுடல்கள் படைகளின் உளச்செறிவை அழிக்கின்றன என்று அவருக்கு சொல்லப்பட்டிருந்தது. அது உண்மை என லட்சுமணன் படைகளில் இருந்து உணர்ந்திருந்தான். போருக்குப் பின் படைகள் களைப்பையும் உயிருடனிருப்பதன் மகிழ்வையும் மட்டுமே கொண்டிருந்தன. ஆனால் தழைந்த தோற்பரப்பில் விரல்கள் குழைந்தாட பருபருத்த குரலில் பாணர் பாடிய எருமைமறப் பாடல்கள் கேட்டவர்களை விழிநீர்விடச் செய்தன. அத்துயர் சொல்லில்லாமல் கடுங்குளிர் என படையில் பரவியது.

சிதையருகே இளைய தந்தை குண்டாசி நின்றிருந்தார். அவர் ஏன் அங்கே வந்தார் என்னும் திகைப்பை அவன் அடைந்தான். பின்னர்தான் முந்தையநாளே அவர்தான் கௌரவப் படைத்தரப்பின் ஈமநிகழ்வுகளுக்கு பொறுப்பேற்றிருக்கிறார் என்று சொல்லப்பட்டது நினைவு வந்தது. அவனுடைய மெலிந்த சிற்றுடல் காற்றில் சருகு பறப்பதுபோல அங்கே தத்தி அலைந்தது. கைகளை வீசி ஆணைகளை

பிறப்பித்தபடி சுற்றிவந்தான். லட்சுமணனைக் கண்டதும் அருகணைந்து “என்ன? உன் தந்தை எங்கே?” என்றான். “அரசர் வரவில்லை என செய்தி…” என்றான் லட்சுமணன். “ஆம், அது இங்கு வந்துள்ளது. வாய்க்கரிசிச் சடங்குகளுக்காக இறந்தோரின் தந்தையர் வரவேண்டும்…” என்றான் குண்டாசி. “வந்துகொண்டிருக்கிறார்கள்” என்று லட்சுமணன் சொன்னான். குண்டாசி தன் மைந்தர் அங்கிருப்பதை அறியாதோன்போல “பொழுதில்லை… இச்சிதை கொளுத்தப்பட்ட பின்னரே பிற சிதைகள்… இன்று மட்டும் நாநூற்று எழுபது சிதைகள். அவை முழு இரவும் எரிந்தாலே இன்று வீழ்ந்தவர்கள் விண்ணேறமுடியும். மின்னலும் தூறலும் உள்ளது, மழைவருமென்றால் இடர்தான்” என்றான்.

குண்டாசி சற்று மிகையான ஊக்கத்துடன் இருக்கிறானோ என்னும் ஐயம் அவனுக்கு எழுந்தது. அங்கே நிரையென நீண்டுசென்றிருந்த இளையோரின் உடல்களை அவன் ஒருகணத்துக்கு மேல் நோக்கவில்லை. ஆனால் அவன் உள்ளம் குளிரை உணர்ந்து நடுங்குவதுபோல் அவ்வப்போது சிலிர்ப்புகொண்டது. குண்டாசி எதையுமே எண்ணுவதுபோல தெரியவில்லை. படைப்புறப்பாட்டுக்கு முந்தைய ஏற்பாடுகளை செய்பவன்போல பரபரப்பாக இருந்தான். அவன் உடல் மெலிந்து கூன்விழுந்திருந்தமையால் அது வில்மூங்கில் நிலத்தில் ஊன்றப்படுகையில் என சற்று துள்ளுவதுபோலத் தோன்றியது.

எண்பத்தைவருக்கும் ஒற்றைச் சிதை அடுக்கப்பட்டிருந்தது. அங்கே ஆலயம் ஒன்று எழுப்பப்படவிருப்பதாகவும் மரங்கள் அடுக்கப்பட்டு அடித்தளம் ஒருக்கப்பட்டிருப்பதாகவும் தோன்றியது. அரக்கும் மெழுகும் நெய்யும் பொழியப்பட்ட விறகுகள் நனைந்தவை போலிருந்தன. குண்டாசி ஒருவனை உரக்க அதட்டி கீழ்மொழியில் ஏதோ சொன்னான். துருமசேனன் “எப்போதுமே சிறிய தந்தையை செயலூக்கத்துடன் பார்த்ததில்லை” என்றான். “இத்தருணத்துக்காகத்தான் அவர் அப்படி இருந்தார் போலும்” என்ற லட்சுமணன் எண்ணிக்கொண்டு குண்டாசியின் மைந்தர்களை பார்த்தான். அவர்கள் சொல்கேளாதோர்போல அணைந்த விழிகளுடன் இருந்தனர்.

தேர்கள் ஒலிக்க அனைவரும் திரும்பிப்பார்த்தனர். “வந்துவிட்டார்களா?” என்று கேட்ட குண்டாசி “விரைக… பொழுதணைகிறது!” என ஏவலரை ஊக்கினான். ஏழு தேர்களில் இருந்து சித்ராங்கனும், பீமவேகனும், உக்ராயுதனும், சுஷேணனும், மகாதரனும், சித்ராயுதனும், நிஷங்கியும், திருதகர்மனும், சேனானியும், உக்ரசேனனும், துஷ்பராஜயனும், திருதசந்தனும், சுவர்ச்சஸும், நாகதத்தனும், சுலோசனனும், உபசித்ரனும், சித்ரனும், குந்ததாரனும், சோமகீர்த்தியும், தனுர்த்தரனும், பீமபலனும் இறங்கி வந்தனர். ஒருவரே மீண்டும் மீண்டும் வருவதுபோல் விழிச்சலிப்பு ஏற்பட லட்சுமணன் நோக்கு விலக்கிக்கொண்டான்.

அவர்கள் வந்து நின்றதும் குண்டாசி “இறந்தவர்களின் தந்தையர் மட்டும் நிரையாக வந்து தனியாக நிற்கவேண்டும். ஒருவர் சிதையேற்றினால் போதும்” என்றான். அருகே நின்றிருந்த அந்தணர் ஏதோ சொல்ல தலையசைத்து “ஆம், ஒரு கொள்ளியை அனைவரும் கைமாற்றி இறுதியில் ஒருவர் சிதையில் வைக்கலாம்…” என்றான். கௌரவர்களில் பன்னிருவர் உடல்களில் கட்டுகள் போட்டிருந்தனர். துஷ்பராஜயனும், திருதசந்தனும் தடி ஊன்றி காலை நீட்டி வைத்து நடந்தார்கள். அவர்களின் முகங்கள் இருண்டு ஆழ்நிழல் போலிருந்தன. “விரைவு… சடங்குகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. வாய்க்கரிசியிட்டு, நீரூற்றி, மலர்பொழிந்து சிதையேற்றுவதே எஞ்சியுள்ளது” என்றான் குண்டாசி.

இறந்தவர்களின் உடல்கள் நிரையாக கொண்டுவரப்பட்டன. இறந்த மைந்தனின் தந்தை மட்டும் முன்னால் சென்று அரிசியை அள்ளி மும்முறை வாய்க்கரிசி இட்டு, நீர் தெளித்து வணங்கினான். மலரிட்டு தலைதாழ்த்தியபோது அவன் விம்மியழ அவன் துணைவர் இருவர் விழிநீர் வழிய தூக்கி அகற்றினர். சடங்குகள் முடிந்ததும் சடலங்கள் சிதைமேல் பரப்பப்பட்டன. இருபது சடலங்கள் பரப்பப்பட்டதும் அரக்கும் மெழுகும் கலந்து இறுக்கப்பட்ட பலகைகள் அவர்களுக்குமேல் அடுக்கப்பட்டு மென்விறகு செறிவாக பரப்பப்பட்டது. அதன்மேல் மீண்டும் இருபதுபேர். நான்கு அடுக்குகளாக அவர்களின் உடல்கள் அடுக்கப்பட்டபின் மேலே மீண்டும் மெழுகரக்குப் பலகைகளும் விறகும் குவிக்கப்பட்டன. அவர்கள் விழிகளிலிருந்து மறைந்ததுமே லட்சுமணன் ஒரு விடுதலையுணர்வை அடைந்தான். ஆனால் கௌரவத் தந்தையரிடமிருந்து விம்மலோசைகளும் அடக்கப்பட்ட அழுகைகளும் எழுந்தன.

தீப்பந்தம் கௌரவர் கைகளுக்கு அளிக்கப்பட்டது. பீமவேகன் அதை வாங்கத் தயங்கி பின்னடைந்தான். துஷ்பராஜயனும் பின்னடைய குண்டாசி “எவரேனும் வாங்குக... பொழுதாகிறது!” என்றான். உபசித்ரன் அதை வாங்கிக்கொண்டான். அவனிடமிருந்து சித்ரன் பெற்றுக்கொள்ள கைகள் வழியாகச் சென்ற தழல் மகாதரனை அடைந்தது. “தழல் மூட்டுக, மூத்தவரே!” என்றான் குண்டாசி. மகாதரன் தன் பெரிய வயிற்றுடன் மெல்ல கால்வைத்து நடந்தான். இருமுறை நின்றபோது “செல்க!” என்றான் குண்டாசி. சிதையருகே சென்று அவன் நின்று விம்மியழுதான். நிஷங்கியும் சுஷேணனும் அருகே சென்று அவன் தோள்களை பற்றிக்கொண்டார்கள். அவன் விழப்போகிறவன்போல காலை நீட்டி வைத்து நடந்தான். சிதையருகே சென்றதும் எதிர்பாரா விசையுடன் பந்தத்தை வீசி எறிந்தான். சிதையின் அரக்கும் நெய்யும் கலந்த ஈரம் நீலநிறமாக பற்றிக்கொண்டது. நூறாயிரம் நாக்குகள் என நீண்டு எழுந்த தழலால் சிதை கவ்வப்பட்டது. வெடித்து நீலத்தழல் துப்பி நின்றெரியலாயிற்று.

குண்டாசி “திரும்பிச்செல்லலாம். இது களமென்பதனால் இனி நீராட்டு முதலிய சடங்குகள் ஏதுமில்லை” என்றான். பின்னர் “சாவு தொடர்ந்து வந்துவிடக்கூடும் என அஞ்சவேண்டியதில்லை. அது எப்போதும் உடனுள்ளது” என்று சொல்லி புன்னகைத்தான். ஒடுங்கிய முகமும் துறித்த விழிகளும் எழுந்த பற்களுமாக அச்சிரிப்பு அச்சுறுத்தியது. மகாதரன் ஏதோ சொல்ல வாயெடுக்க சித்ரன் அவன் தோளைத் தொட்டு தடுத்தான். கௌரவர்கள் கால்களை தள்ளித் தள்ளி வைத்து தேர்களை நோக்கி நடந்தார்கள்.

சடங்குகளை முடித்து தம்பியருடன் திரும்பி பாடிவீட்டுக்குச் செல்கையில் லட்சுமணன் எதையும் உணரவில்லை. அங்கிருந்து சென்றுவிடவேண்டும் என்று மட்டுமே அகம் தவித்தது. முற்றத்தில் சென்றமர்ந்து கைகளை கழுவிக்கொண்டதும் கள்ளும் ஊனுணவும் கொண்டு வரப்பட்டது. உணவை கையிலெடுத்த கணம்தான் உடலுக்குள்ளிருந்தென ஓர் அலை வந்து அவன் நெஞ்சை அறைந்தது. தம்பியர் அனைவரும் உணவு அருந்தியாயிற்றா என்னும் சொல்லன்றி நினைவறிந்த நாள் முதல் அவன் ஒருபோதும் உண்டதில்லை. பற்கள் உரசிக்கொள்ளும் ஓசை தலைக்குள் வெடித்தது. அவன் அதிர்வதை நோக்கி “என்ன? என்ன, மூத்தவரே?” என்றான் துருமசேனன். ஒன்றுமில்லை என அவன் தலையசைத்தான். உடல் உலுக்கிக்கொண்டே இருந்தது. ஊன் துண்டை மீண்டும் தாலத்தில் வைத்துவிட்டு எழுந்து சென்றான்.

துருமசேனன் “மூத்தவரே!” என்றான். அவனை கையை காட்டி விலக்கிவிட்டு லட்சுமணன் நடக்க துருமசேனன் பின்னால் வந்து “உணவுண்ணாவிட்டால் நாளை

களைத்திருப்பீர்கள். உண்க, மூத்தவரே!" என்றான். "இல்லை, என்னால் உண்ண இயலாது" என்றான் லட்சுமணன். "மூத்தவரே!" என்று அவன் மீண்டும் கூற "என்னை தனிமையில் விடு" என்றான். துருமசேனன் பேசாமல் நின்றான். லட்சுமணன் விண்மீன்களை பார்த்தபடி சாலமரத்தடியில் சரிவான பீடத்தில் சென்று அமர்ந்தான். விண்மீன்களின் பொருளின்மை அவனை திகைக்க வைத்தது. உளம் பதைத்து அதிலிருந்து விலகிக்கொள்ள முயன்றான். ஆனால் பிறிதொரு விசை விழிகளை அதிலிருந்து விலக்கவும் விடவில்லை.

நெடுநேரம் கழித்து பெருமூச்சொன்று எழ உளம் கலைந்தபோது அருகே துருமசேனன் நின்றுகொண்டிருந்ததை கண்டான். "நீ துயிலவில்லையா?" என்றான். "இல்லை" என்று அவன் சொன்னான். "இளையவர்கள் துயின்றுவிட்டார்களா?" என்றான் லட்சுமணன். "அனைவருக்கும் இருமடங்கு அகிபீனா அளிக்கும்படி ஆணையிட்டேன். பெரும்பாலானவர்கள் துயின்றுவிட்டார்கள்" என்றான் துருமசேனன். "நீ சென்று துயில்கொள்" என்று லட்சுமணன் சொன்னான். "இல்லை, மூத்தவரே" என்று துருமசேனன் சொன்னான். "நீ உணவுண்டாயா?" என்று லட்சுமணன் கேட்டான். அவன் மறுமொழி சொல்லவில்லை. பெருமூச்சுடன் "சரி, உணவை கொண்டுவா. நாமிருவரும் இணைந்து உண்போம்" என்றான் லட்சுமணன்.

தலைவணங்கியபின் துருமசேனன் சென்று தாலத்தில் ஊன் துண்டுகளை கொண்டுவந்தான். ஒரு துண்டை எடுத்தபின் இன்னொன்றை எடுத்து அவனுக்கு அளித்தான் லட்சுமணன். ஆனால் துருமசேனன் அதை கையிலேயே வைத்திருந்தான். அவன் கடித்து உண்ணத்தொடங்கிய பின்னரே உண்டான். உண்டு முடித்து கைகளைக் கழுவியதும் லட்சுமணன் "எனக்கும் அகிபீனா வேண்டும். இரண்டு உருளை" என்றான். "மூன்று வைத்திருக்கிறேன்" என்றான் துருமசேனன். "ஆம்" என்றபின் அவன் அவற்றை எடுத்துக்கொண்டான். கையிலிட்டு உருட்டிக்கொண்டே இருந்தான். அதிலிருப்பது என்ன? அது ஒரு சிறு ஊற்று. அது ஊறி ஊறிப் பெருகி பெருவெள்ளமாகி அனைத்தையும் மூடிவிடுகிறது. முழுமையாக தன்னுள் அமைத்துக்கொண்டு மெல்ல அலைகொண்டு முடிவிலாது பெருகி நிற்கிறது.

மூன்று உருண்டைகளையுமே வாயிலிட்டு கரைந்துவந்த சாற்றை விழுங்கிக்கொண்டு விண்மீன்களை பார்த்துக்கொண்டு லட்சுமணன் படுத்திருந்தான். சற்று நேரத்தில் துருமசேனனின் குறட்டையொலி கேட்கத் தொடங்கியது. விண்மீன்கள் சிலந்திகள் வலையில் இறங்குவதுபோல நீண்ட ஒளிச்சரடொன்றில் தொங்கி கீழிறங்கி வந்தன. மிக அருகே வந்து அவனைச் சுற்றி ஒளிரும் வண்டுகள்போல் பறந்தன. பறக்கும் விண்மீன்களின் சிறகோசையை அவன் கேட்டான். அந்த ரீங்காரம் யாழ்குடத்திற்குள் கார்வை என அவன் தலைக்குள் நிறைந்தது. புலரிக்கு முன் அவன் விழித்துக்கொண்டபோதும் அது எஞ்சியிருந்தது.

லட்சுமணன் படைகளை நோக்கியபடி நின்றான். அவனால் நடக்கமுடியவில்லை. "நம் இளையோர் எங்கிருக்கிறார்கள்?" என்றான். "அவர்கள் எட்டு படைப்பிரிவுகளிலாக இணைந்து பணியாற்றுகிறார்கள், மூத்தவரே" என்றான் துருமசேனன். "இப்போது கிளம்பினால் எட்டு படைப்பிரிவுகளிலும் சென்று அவர்களை நாம் பார்த்துவர முடியுமா?" என்றான் லட்சுமணன். துருமசேனன் அவனைப் பார்த்து ஒருகணம் தயங்கி "ஆம், சற்று விரைந்து சென்றால் இயலும்... ஆனால்" என்றான். "சொல்" என்றான் லட்சுமணன். "அது அமங்கலப்பொருள் அளிக்கக்கூடும்" என்றான். லட்சுமணன் "ஆம், ஆனால் அது கைநெல்லி என துலங்கும் உண்மை. அவர்களை நோக்காதொழிந்தால்..." என்றபின் "நேற்று சென்றவர்கள் என் கனவில் வந்தனர். பலரை நான் அருகணைந்து ஒரு சொல்

உரைத்தே பல ஆண்டுகளாகின்றன என்று உணர்ந்தேன்” என்றான். துருமசேனன் “அழைத்துவரச் சொல்கிறேன்” என தலைவணங்கினான்.

லட்சுமணன் காவல்மாடத்தருகே புரவியை நிறுத்திவிட்டு இறங்கி அதன் கணுமூங்கில் வழியாக மேலேறிச் சென்றான். அங்கிருந்த ஒரு காவலன் இறங்கி அவனுக்கு இடமளித்தான். புதிய முரசின் சிவந்த தோலில் கழி விழுந்த தடம் நிறமாற்றமாக தெரிந்தது. லட்சுமணன் தன்னை நோக்கி தலைவணங்கிய காவலனிடம் “மறுபால் படைகள் எழுந்துள்ளனவா?” என்றான். “ஆம் இளவரசே, இன்று அவர்கள் மேலும் ஊக்கம் கொண்டுள்ளனர்” என்றான்.

அவன் மேலே சொல்லும்பொருட்டு லட்சுமணன் காத்து நின்றான். “அங்கே பீமசேனரின் மைந்தர் கடோத்கஜன் வந்துள்ளார். பேருருவ அரக்கர்” என்றான் காவலன். “நம்மவரும் அச்செய்தியை அறிந்துகொண்டிருக்கிறார்கள். அது அனைவரையும் அஞ்சவைத்திருப்பதையும் காணமுடிகிறது. இன்று களத்தில் பெரும் கொலைவெறியாட்டு நிகழுமெனத் தோன்றுகிறது.”

லட்சுமணன் தலையாட்டியபின் பாண்டவப் படைகளை நோக்கிக்கொண்டிருந்தான். அங்கே வாழ்த்தொலிகளும் வெறிக்கூச்சல்களும் கேட்டுக்கொண்டிருந்தன. போர்க்களத்தின் இயல்பான உளநிலை சோர்வே என்று அவனுக்கு தோன்றியது. அதை அவர்கள் வெவ்வேறு நிமித்தங்களால் ஊக்கமென மாற்றிக்கொள்கிறார்கள். மிகையாக்கி களியாடுகிறார்கள். சிரித்துக்கொண்டே சாவுக்குச் செல்வதே மேலும் எளிதானது.

துருமசேனன் வருவதை அவன் ஓரவிழியில் அசைவாகக் கண்டு திரும்பி நோக்கினான். முன்னால் துருமசேனனின் புரவி பலகைப்பாதையில் பெருநடையில் வந்தது. தொடர்ந்து அவன் தம்பியர் நிரை வந்தது. கருமணி மாலை ஒன்று நீண்டுகொண்டே இருப்பதுபோல. ஒருவரே மீளமீள வருவதைப்போல. அவர்களின் முகங்களும் தோற்றங்களும் வெவ்வேறு என்பதை விழிநிலைத்தால் காணமுடியும். ஆனால் அவர்களை ஒற்றைத்திரளெனக் காணவே உள்ளம் விழையும். அவ்வாறு ஒன்றென அவர்களைத் திரட்டும் ஏதோ ஒன்று அவர்களிடமிருந்தது.

லட்சுமணன் மேலிருந்து கீழிறங்கினான். அவன் நிலத்தை அடைந்தபோது புரவியில் அணுகி வந்த துருமசேனன் கடிவாளத்தை இழுத்து நிறுத்தி இறங்கி தலைவணங்கினான். பிறர் ஒவ்வொருவராக இறங்கினர். அவர்கள் ஆயிரத்தவராக இருந்தமையாலேயே அந்தத் திரள்தன்மை அவர்களுக்கு உருவாகிறது என லட்சுமணன் எண்ணினான். கலைந்துபரவும் கட்டின்மையை அவர்கள் எப்போதும் கொண்டிருந்தாலும் அது புகை என, நீர்ப்பாசி என தனக்குரிய ஒரு வடிவையும் கொண்டிருந்தது. அவர்களில் எவரும் தொலைந்து தனித்துச் செல்வதில்லை. அதை எண்ணியதுமே அவன் குண்டாசியின் இரு மைந்தரை நினைவுகூர்ந்தான். அவர்கள் எப்போதும் தனியர். அவர்கள் அத்திரளில் இருக்கிறார்களா என்று அவன் பார்த்தான். இல்லை என்று கண்டதும் அவன் தலையசைத்து ஆம் என எண்ணிக்கொண்டான்.

துருமசேனன் “நாங்கள் எங்களுக்கென ஒரு முரசொலியை உருவாக்கிக்கொண்டோம், மூத்தவரே. அதை எழுப்பினால் எளிதில் இணைந்துகொள்ள இயல்கிறது” என்றான். விப்ரசித்தியும் நமுசியும் நிசந்திரனும் குபடனும் அகடனும் சரபனும் வந்து அவன் அருகே நின்றார்கள். அஸ்வபதியும் அஜகனும் சடனும் சவிஷ்டனும் தீர்க்கஜிஹ்வனும் மிருதபனும் நரகனும்

அவர்களுக்குப் பின்னால் நின்றனர். லட்சுமணன் அவ்வாறு அவர்களை வரச்சொன்னதை எண்ணி கூச்சமடைந்தான். அதில் மங்கலமின்மை இருந்தது. அதை அகம் உணர்ந்தது.

“நான் உங்களைப் பார்த்து சிலநாட்களாகின்றது. நலமாக இருக்கிறீர்களா என்று அறிய விழைந்தேன்” என்றான் லட்சுமணன். அவன் உள்ளத்தை அச்சொற்களிலிருந்தே உணர்ந்த துருமசேனன் “நாம் உடன்பிறந்தார் போரில் நமக்கென படைச்சூழ்ச்சிகள் சிலவற்றை வகுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதை சொல்ல மூத்தவர் விழைகிறார்” என்றான். ஆனால் பின்னால் நின்றிருந்த அஸ்வசங்கு “நானும் மூத்தவர் எங்களை சந்திப்பது நன்று என்று எண்ணினேன். ஏனென்றால் நேற்று மட்டும் எண்பத்துமூன்றுபேர் இறந்துள்ளனர். முதல்நாள் போரில் பன்னிருவர். அறுவர் புண்பட்டுக் கிடக்கின்றனர். இப்போது ஆயிரத்தவரில் நூற்றுவர் குறைகிறோம்…” என்றான். அவனை துருமசேனன் தடுப்பதற்குள் அவனருகே நின்றிருந்த கேசி “இன்றும் நூற்றுவருக்குக் குறையாமல் இறப்போம். எங்களை முழுமையாக மூத்தவர் பார்ப்பது நன்று என தோன்றியது” என்றான்.

துருமசேனன் அலுப்புடன் தலையசைத்தான். லட்சுமணன் அப்பேச்சை நேரடியாக எதிர்கொள்வதே நன்று என உணர்ந்து “ஆம், நாம் எஞ்சியோர் இன்றே சந்தித்துக்கொள்வதே நன்று. இப்போரில் நான் விழுந்தால் உங்கள் முகங்கள் நினைவில் எஞ்ச விண்புகுவேன்” என்றான். “இங்கிருந்தாலும் மேலுலகில் இருந்தாலும் ஒன்றென்றே இருப்போம், இளையோரே.” அதை சொன்னதும் அவன் தொண்டை இடறியது. அந்த உணர்வெழுச்சியை அவனே நாணி தலையை குனித்துக்கொண்டான். கைகளால் விழிகளை துடைக்க முயன்று அசைவு நிகழ்வதற்குள்ளே உள்ளத்தால் அடக்கினான்.

துருமசேனன் அந்த இடைவெளியை நிறைக்கும்பொருட்டு “மூத்தவரை வணங்குக!” என்று இளையோரிடம் சொன்னான். அவர்கள் ஒவ்வொருவராக வந்து லட்சுமணனை வணங்கினர். அவன் அவர்களை நெஞ்சோடு அணைத்து வாழ்த்துரைத்தான். அணைக்க அணைக்க தம்பியர் பெருகுவதுபோல் உணர்ந்தான். இறந்தவரும் இவர்களுக்குள் இருப்பார்கள்போலும் என்று எண்ணி மெய்ப்புகொண்டான். ஆயிரத்தவர். கார்த்தவீரியனின் ஆயிரம் தம்பியர். அவன் கண்களில் இருந்து நீர் வழியத்தொடங்கியது. இளையோரும் விழிசொரிந்தனர். பின்னர் அடக்கவேண்டியதில்லை என்றாக அவர்கள் விம்மலோசை எழ அழுதனர். அழுகை ஏதோ இடத்தில் நின்றுவிட சிரித்தனர்.

“மூத்தவரே, அவனை இருமுறை வாழ்த்திவிட்டீர்கள்” என்றான் சம்பிரமன். “சிலர் கூட்டத்தில் புகுந்து மீண்டும் மீண்டும் வாழ்த்து பெறுகிறார்கள். இப்படி போனால் அந்திவரை இந்த வாழ்த்துரை தொடரக்கூடும்.” லட்சுமணன் வாய்விட்டு நகைத்து “வாழ்த்து பெற்றவர்களெல்லாம் அப்பால் செல்க!” என்றான். “வாழ்த்து பெற்றவர்களின் முகத்தில் ஏதேனும் அடையாளம் வைக்கலாம்” என்றான் சத்ருதபனன். “முகத்திலா? ஓங்கி அறையலாம். சிவந்த தடம் எஞ்சும்” என்றான் துருமசேனன். சிரித்துக்கொண்டே அவர்கள் வணங்க அவர்களின் தோள்களில் அறைந்தும் முதுகைத் தட்டியும் லட்சுமணன் தழுவிக்கொண்டான்.

“மூத்தவரே, நேற்று சிறிய தந்தை பீமசேனரின் போராடலை கண்டேன். எனக்கு மெய்ப்பு எழுந்தது. போர்த்தெய்வம் எழுந்தது போலிருந்தார்” என்றான் கிரதன். தரதன் “அவருடைய கைகளையும் கால்களையும் பெருங்காற்றுகள் எடுத்துக்கொண்டன என்று சூதர் பாடினர். அவர் காற்றின் மேலேயே ஊர்வதை பலமுறை கண்டேன்” என்றான். “அவர் கையால் சாவதென்பதே நற்பேறு.

நம்குடியின் மாவீரர் அவர். ஒருமுறையேனும் அவருடன் கதைபொருதி களத்தில் வீழ்ந்தால் நான் பிறந்தது ஈடேறும்” என்றான் குகரன். ”ஆம், அவருடைய தோள்தசைகளையே நோக்கிக்கொண்டிருந்தேன். கதை அவரைச் சூழ்ந்து பறக்கும் மெல்லிய இறகு போலிருந்தது” என்றான் ஆஷாடன்.

லட்சுமணன் முதலில் சற்று திகைப்படைந்தான். ஆனால் அவர்களின் முகங்களை பார்க்கையில் அவன் உள்ளம் மலர்ந்தது. “ஆம், போர்க்கலைகளில் கதைப்பயிற்சியே உச்சமென நேற்று நானும் எண்ணினேன்” என்றான். துருமசேனன் அச்சொல்லால் ஊக்கம் பெற்று “நான் அவருடன் இருமுறை கதைபொருதினேன். என் கதையை தட்டித்தெறிக்கச் செய்தார். யானைக்குப் பின் சென்று உயிர் தப்பினேன். பின்னர் எண்ணினேன், பெருங்காற்றுகளின் மைந்தனுடன் நின்று பொருதி மீண்டிருக்கிறேன். நானும் கதைத்திறலோன் என்று ஆனேன் என்று…” என்றான்.

“இளமையில் அவருடைய தோளில் தொற்றி களிநீராடியிருக்கிறோம், மூத்தவரே. அதைப்போல ஒரு விளையாட்டுதான் இது என்று எனக்கு பட்டது” என்றான் உத்வகன். லட்சுமணன் “ஆம், இது வெறும் விளையாட்டு. நாம் எஞ்சுவோம். அழியாது வாழும் ஓர் இடத்திலிருந்து இவை அனைத்தையும் எண்ணி எண்ணி மகிழ்வோம்” என்றான். துருமசேனன் “பொழுதணைகிறது, மூத்தவரே” என்றான். அவர்கள் தனி முகங்களை இழந்து மீண்டும் திரளென்றாகி தங்கள் புரவிகளை நோக்கி சென்றார்கள்.

புரவிகள் பெருநடையிட தன் படையணிக்குச் செல்லும்போது லட்சுமணன் நிறைவுற்றிருந்தான். துருமசேனன் “முதலில் அவர்களை சந்திக்கவேண்டாமே என எண்ணினேன். உங்கள் உளம் விழைந்ததனால் சென்றேன். ஆனால் நீங்கள் அவர்களை சந்தித்தது நன்று என இப்போது தோன்றுகிறது, மூத்தவரே” என்றான். லட்சுமணன் திரும்பி நோக்க “அவர்கள் நம்பிக்கையிழந்திருந்தனர். முகங்கள் உயிரிழந்தவை போலிருந்தன. திரும்பிச்செல்கையில் ஒவ்வொருவரும் மீண்டிருப்பதை கண்டேன்” என்றான். லட்சுமணன் “நானும் மீண்டுள்ளேன்” என்றான்.

“அவர்களுக்கு வேண்டியிருந்தது உங்கள் தொடுகை… உங்கள் கை அவர்கள்மேல் பட்டபோதே சுடரேற்றப்பட்ட விளக்குகள்போல ஆகிவிட்டார்கள்” என்றான். லட்சுமணன் புன்னகைத்தான். “தந்தையரின் தொடுகை ஏன் மைந்தருக்கு தேவைப்படுகிறது என எண்ணிக்கொண்டேன்” என்று துருமசேனன் சொன்னான். “அது நம்மிடம் நீ இருக்கிறாய் என்று சொல்கிறதா? இரு என வாழ்த்துகிறதா?” லட்சுமணன் “நான் தந்தையை தொட விழைகிறேன். இருமுறை அவர் அருகே சென்றேன். அவர் இயல்பாக என என் தோள்மேல் கைவைப்பதுண்டு. ஆனால் போர் தொடங்கியபின் ஒருமுறைகூட தொடவில்லை. கை நீள்கிறது. அஞ்சியதுபோல் அகல்கிறது” என்றான்.

துருமசேனன் “ஏன்?” என்றான். லட்சுமணன் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. அவர்கள் படைகளின் நடுவே எண்ணத்தில் மூழ்கியவர்களாக புரவிகளில் சென்றனர். “தேர்கள் ஒருங்கியிருக்கும்” என துருமசேனன் பொதுவாக சொன்னான். அதற்கு லட்சுமணன் ஒன்றும் சொல்லவில்லை. “அங்கே சிறிய தந்தை பீமசேனரின் மைந்தர் போர்முகப்புக்கு வந்திருக்கிறார். பெருமல்லர் என்றார்கள். தம்பியர் அவரைப்பற்றி உள்ளக்கிளர்ச்சியுடன் பேசிக்கொண்டார்கள்” என்றான் துருமசேனன். லட்சுமணன் “நம் படைகளில் ஓர் பேருருவ அரக்கன் உளன்

என்றார்களே?” என்றான். “ஆம், அவன் பெயர் அலம்புஷன்…” என்றான் துருமசேனன். “உண்மையில் நானும் இன்னமும் அவனை பார்க்கவில்லை.”

“அவனை நான் பார்க்க விழைகிறேன்” என்றான் லட்சுமணன். “அவனை நம் வழியில் வந்து சந்திக்க ஆணையிடுகிறேன்” என்றபடி துருமசேனன் அருகிருந்த முரசுமாடம் நோக்கி சென்றான். அங்கே விந்தையான சிறிய முரசு ஒன்று நாய்க்குரைப்பின் ஓசையில் முழங்கத் தொடங்கியது. லட்சுமணனுடன் வந்து சேர்ந்துகொண்ட துருமசேனன் “அவன் மிகச் சிறிய படையுடன் வந்துள்ளான். ஆனால் விந்தையான பேருருக் கொண்டவர்கள் அவர்கள் என்றனர்” என்றான். லட்சுமணன் “இன்றைய போரில் கடோத்கஜன் தடுத்து நிறுத்தப்படவேண்டும், இளையோனே” என்றான். துருமசேனன் ஒன்றும் சொல்லவில்லை. லட்சுமணன் “நம் இளையோருக்காக” என்றான்.

தொலைவில் அவர்களை எதிர்கொள்ளும் கையசைவு எழுந்தது. அங்கே நின்றிருந்த காவலனை நோக்கி துருமசேனன் கையசைத்த பின் “வந்துள்ளான்” என்றான். பாதையின் வலப்பக்கம் இரும்புக் கவசங்கள் அணிந்த ஒருவன் அவர்களுக்காக காத்திருந்தான். முதலில் அவன் எதன் மேலோ அமர்ந்திருப்பதாகத்தான் லட்சுமணனுக்கு தோன்றியது. மீண்டும் விழிகூர்ந்தபோதுதான் அவன் நின்றிருப்பவன், உயரமற்றவன் என்பதனால் அத்தோற்றம் என்று தெரிந்தது. அவன் கால்கள் ஆமைக்கால்கள்போல பருத்து குறுகி இருபக்கமும் வளைந்து பெரிய நகங்களுடன் தெரிந்தன. ஆனால் பருத்த உடலும் நீண்ட பெருந்தோள்களும் கொண்டிருந்தான்.

“அவனா?” என்றான் லட்சுமணன். “ஆம், மூத்தவரே. அவன் பெயர் சாலகண்டகன், அலம்புஷர்கள் என்னும் அரக்கர்குலத்தை சேர்ந்தவன்” என்றான் துருமசேனன். அவனருகே அவனைப்போலவே உடல்கொண்ட நால்வர் நின்றிருந்தனர். இரும்புக்கவசங்களில் படையின் அசைவுகள் நீரலைகளென நெளிய சிறுசுனை என தெரிந்தனர். “விந்தையான உடல்கள்” என்றான் லட்சுமணன். “தேள்போன்ற தோள்கள் கொண்டவர்கள் என்பதனால் இவர்களை துரூணர்கள் என்றும் அழைக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவென்றாலும் காடுகளில் இவர்களை மிக அஞ்சுகிறார்கள் என்று காவலன் சொன்னான்.”

அவர்கள் அருகே சென்றதும் அலம்புஷன் தலைவணங்கி “சுயோதனரின் மைந்தரும் அஸ்தினபுரியின் இளவரசருமான லட்சுமணரை வாழ்த்துகிறேன். தங்கள் ஆணைப்படி வந்துள்ளேன்” என்றான். லட்சுமணன் “நலம்பெறுக!” என்றபின் அவன் அருகே நின்றிருந்தவர்களை பார்த்தான். அவன் திரும்பி நோக்கிய பின் “என் குடியினர் நாற்பத்தெட்டுபேர் என்னுடன் வந்துள்ளனர்” என்றான். லட்சுமணன் “நீ புரவியூர்வாயா? வில்பயின்றுள்ளாயா?” என்றான். “இல்லை, என் படைக்கலங்கள் பாசமும் கதையும்தான்” என அவன் தரையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த சுருள்கயிற்றையும் கல்லால் ஆன பெரிய கதையையும் காட்டினான்.

“இக்கயிற்றை எளிதில் வாளால் அறுத்துவிட முடியுமே?” என்றான் லட்சுமணன். “இல்லை அரசே, இது இரும்புக் கம்பிகளுடன் சேர்த்து முறுக்கப்பட்டது. இதைக்கொண்டு யானையைக் கட்டி இழுப்பேன். கோடரியாலும் இதை வெட்ட முடியாது” என்றான் அலம்புஷன். “இதன் முனையிலுள்ள இரும்புக்கூர் எடைமிக்கது. இதை நாங்கள் நாகப்பல் என்கிறோம். பறந்துசென்று அம்பெனத் தாக்கும்.” அந்தக் கூர்முனை ஒளியுடனிருந்தது. அதற்குக் கீழே நான்கு இரும்புக் கொக்கிகள் இருந்தன. “முன்பு கழுகின் நகத்தால் இதை செய்திருந்தனர் என் முன்னோர்.

இப்போது உருக்கி கரியுடன் சேர்த்து சிறுகச்சிறுக ஓராண்டு குளிரச்செய்த இரும்பால் செய்கிறோம்.”

அவனுடைய முகம் பேருடல் ஒன்றுக்குமேல் அமையவேண்டியது என லட்சுமணன் எண்ணினான். கண்கள், மூக்கு, உதடுகள் அனைத்துமே மானுடரைவிட இருமடங்கு பெரியவையாக இருந்தன. மிகப் பெரிய பற்கள் மிக வெண்மையாக, சீரான நிரையாக வெளித்தெரிய அவன் பேசும்போதே சிரிப்பவன்போல தோன்றியது. “நீ எதில் ஊர்வாய்? உன் கால்கள் மிகச் சிறியவை” என்றான் லட்சுமணன். “ஆம், ஆனால் மிக வலுவானவை. என்னால் யானைக்கு நிகராக எதிர்விசை அளிக்கவியலும்” என்றான் அலம்புஷன். “நான் தனியாக ஊர்திகளில் ஏறுவதில்லை. என் பாசக்கயிற்றில் சிக்கும் விலங்குகளும் தேர்களுமே எனக்கான விசையை அளிக்கும்.” அவன் புன்னகைத்து “நம்புங்கள் என்னை. என்னை களத்தில் பார்க்கையில் நான் மறுபக்கத்தில் இல்லை என்பதற்காக மகிழ்ச்சிகொள்வீர்கள்” என்றான்.

“அதையே நானும் எண்ணினேன். நீ ஏன் இங்கு வந்தாய்? மறுநிரையில் அல்லவா உன் குலத்தோர் அனைவரும் நின்றுள்ளனர்?” என்றான் லட்சுமணன். “ஆம். ஆனால் என் குலத்தைவிட பெரிது என் வஞ்சம்” என்றான் அலம்புஷன். லட்சுமணன் விழிசுருக்கி நோக்க அவன் “இளவரசே, முன்பு உசிநாரத்தின் எல்லைக்குள் அமைந்த சிருங்கபுரிக்கு அருகே கிருஷ்ணசிலை மலைச்சாரலில் ஊஷரர்கள் என்னும் நூறு அரக்கர்குடியினர் வாழ்ந்தனர். வறுநிலத்தோர் என்று அச்சொல்லுக்கு பொருள். ஆற்றலற்ற கால்களும் மங்கலான விழிகளும் கொண்டிருந்தவர்கள் அம்மக்கள். அடர்காடுகளுக்குள் குகைகளில் வாழ்ந்தனர். கைக்கு சிக்கும் அனைத்தையும் உண்டனர். ஒவ்வொருநாளும் உசிநாரத்தின் நிலம் விரிந்து காட்டை உண்டு உடலாக்கிக்கொண்டது. காட்டுக்குள் ஊடுருவிய யாதவர்களாலும் அவர்களுக்குத் துணைவந்த ஷத்ரியர்களாலும் ஊஷரர் வேட்டையாடப்பட்டு புழுக்களைப்போல கொன்று அழிக்கப்பட்டனர்” என்றான்.

“அக்குடியில் குலத்தலைவராகிய தூமருக்கும் அவர் துணைவியாகிய யமிக்கும் பிறந்த பன்னிரண்டு மைந்தர்களில் இளையவர் என் மூத்தவராகிய பகன். யமியின் தங்கை சூர்ணையின் எட்டு மைந்தர்களில் இளையவன் நான். நாங்கள் தொல்லரக்கர் குடியினர். பெரும்புகழ்கொண்ட ராவணப்பிரபுவின் குருதியினர். ராகவகுலத்து ராமனால் எங்கள் குலம் அழிந்தது. சிதறுண்டு காடுகளுக்குள் பரவி உளம் தேங்கி உடல் நலிந்து சிறுகுடியினரானோம். விலங்குக்கும் கீழென்று அமைந்தோம்” என்றான் அலம்புஷன். விழிகள் சிவக்க, கன்னத்தசைகள் இழுபட்டு அசைய அவன் கனல்கொண்டான். அவ்வுணர்ச்சியாலேயே அவன் உயர்ந்தெழுவதுபோல் உளமயக்கு எழுந்தது.

“அறிக, பிரம்மனிலிருந்து பிறந்த ஹேதியும் பிரஹேதியும் எங்கள் முதல் மூதாதையர்! அவர்களின் கொடிவழியில் வந்த சுகேசருக்கும் தேவவதிக்கும் மூன்று மைந்தர்கள் பிறந்தார்கள். மாலி, சுமாலி, மால்யவான். அவர்களில் சுமாலி கேதுமதியை மணந்து பெற்ற பகைதேவி எங்கள் மூதன்னை. அன்னை பெயரால்தான் என் மூத்தவர் பகன் என்று பெயர் பெற்றார். அன்னை பெற்ற பன்னிரு குடிகளில் இருந்து பிறந்தவர்கள் ஊஷரர்களின் கொடிவழியினர்” என்றபோது அவன் பிறிதொருவனாக இருந்தான். “அக்குருதிவழியில் வந்த அன்னை கைகசியை விஸ்ரவஸ் என்னும் முனிவர் மணந்து ஈன்ற மைந்தரே அசுரகுலத்துப் பேரரசர் ராவண மகாபிரபு. அவரை அழித்தவர் ராகவகுலத்து ராமன். வென்றவனைவிட தோற்றவன் பெரும்புகழ்கொண்டு பன்னிரண்டாயிரம் தொல்குடிக்கு தெய்வமென்று அமர்ந்தான்.”

“இளவரசே, அஸ்வத்தாமரால் ஊஷரர் குடி அழிக்கப்பட்டது. எஞ்சிய குடிகளுடன் ஏகசக்ரபுரிக்குச் சென்று அங்கே ஒரு சிற்றூர் அமைத்து தங்கிய என் மூத்தவராகிய பகனை கொன்றவர் இளைய பாண்டவராகிய பீமசேனர். பிறந்த நாள்முதல் அவர் கொல்லப்பட்ட கதைகேட்டு வளர்ந்தவன் நான். கைவளர கால்வளர என் பகையும் வளர்ந்தது. ஒருநாள் பீமசேனரின் குருதிகொள்வேன் என எங்கள் குடிமூதன்னை பகைதேவியின் கிடைக்கல் அருகே குருதிதொட்டு வஞ்சினம் உரைத்தேன்” என்றான் அலம்புஷன்.

லட்சுமணன் “அது எங்கள் குடிக்கு எதிரான வஞ்சம்” என்றான். “ஆம், இன்று அவர்கள் உங்கள் எதிரணியில் நின்றிருக்கிறார்கள். என்னால் தனியனென அவரை எதிர்கொண்டு கொல்லவியலாது. இப்பெரும்போரில் அவர் சூழப்படுகையில் என் வஞ்சத்துடன் எதிர்கொண்டு செல்வேன். என் பாசத்தால் அவரை வளைப்பேன். கதையால் தலைபிளப்பேன். அக்குருதியில் ஒரு துணிச்சுருளை முக்கிச் சுருட்டி எடுத்து என் படைவீரன் ஒருவனிடம் அளித்து காட்டில் நடுகல்லென நின்றிருக்கும் என் மூத்தவர் பகனுக்கு படைக்கச் சொல்வேன்” என்றான் அலம்புஷன். “அரசே, இறந்த நாள் முதல் இன்றுவரை என் மூத்தவர் எந்தப் பலியையும் ஏற்றதில்லை. ஆண்டுதோறும் அவர் வீழ்ந்த நாளில் நாங்கள் அந்நடுகல்லுக்கு குருதியும் அன்னமும் கள்ளும் மலரும் படைத்து வணங்குவோம். ஒருமுறைகூட காகமென்றோ காட்டுநாய் என்றோ உருக்கொண்டு அவர் பலிச்சோறு கொள்ள வந்ததில்லை.”

“இக்குருதியே முதற்பலி… அவர் நிறைவுற்று வந்து இதை ஏற்றுக்கொள்வார். எங்கள் கொடிவழியினர் அவருக்கு அன்னமூட்டி மண்ணுக்கு அடியில் வேர்வெளியென விரிந்துள்ள எங்கள் மூதாதையருடன் நிலைநிறுத்துவார்கள்” என்றான் அலம்புஷன். “என் பிறவிநோக்கமே இதுதான் போலும். அஸ்வத்தாமரால் அழிக்கப்பட்ட குடியில் எஞ்சிய என் அன்னையும் ஏழு ஊஷரகுடியினரும் பன்னிரு மைந்தருடன் வடக்கே மலையேறிச்சென்று திரிகர்த்தத்தின் ஆழ்காட்டுக்குள் குடியேறினர். அங்கே என் அன்னை அளித்த இவ்வஞ்சத்தையே ஆற்றலெனக் கொண்டு நான் வளர்ந்தேன். என் உடலின் அனைத்து விசைகளும் அப்பழியால் ஊறி எழுபவையே. அவரை கொல்லும்பொருட்டே இப்படையில் சேர்ந்திருக்கிறேன்.”

துருமசேனன் “ஆனால் உன் குடியின் முதல் வஞ்சம் அஸ்வத்தாமருடன் அல்லவா?” என்றான். “ஆம், ஆகவேதான் நூற்றெட்டு ஊஷரகுடியினரும் மறுபக்கம் பாண்டவர்களுடன் சேர்ந்து நின்றுள்ளனர். என் வஞ்சம் இளைய பாண்டவர் பீமசேனரிடம் மட்டும்தான்” என்றான் அலம்புஷன். லட்சுமணன் புன்னகைக்க அலம்புஷன் “எங்களை உங்களால் புரிந்துகொள்ள முடியாது, ஷத்ரியரே. இங்கே எங்கள் குலத்தான் பிறிதொருவன் வந்திருக்கிறான். அவன் தந்தை மறுபக்கம் நின்று போரிடுகிறான், அவன் இங்கு வந்துள்ளான்” என்றான். லட்சுமணன் “யார் அவன்?” என்றான். “இடும்ப குலத்தவன், அவன் தந்தை இளைய பாண்டவர் பீமசேனரின் மைந்தன். அவன் பெயர் பார்பாரிகன்” என்றான் அலம்புஷன்.

லட்சுமணன் திரும்பி துருமசேனனை நோக்கி “இங்கு வந்துள்ளானா?” என்றான். “தெரியவில்லை, மூத்தவரே” என்றான் அவன். “எங்குள்ளான்?” என்று அலம்புஷனிடம் லட்சுமணன் கேட்டான். “இங்குதான். மிக இளையவன், ஆனால் பேருருவன். தாங்கள் விரும்பினால் அவனை வரச்சொல்கிறேன்” என்று தன்னருகே நின்றிருந்தவனிடம் முழவொலிக்கும் மொழியில் ஆணையிட்டான். அவன் தன் கையிலிருந்த கதையைச் சுழற்றி ஊன்றி அதன் விசையில் தவளைபோல எழுந்து தாவி காலூன்றி மீண்டும் சுழற்றித் தாவி விரைந்து அகன்றான். “சகடம்போல் உருள்கிறான்” என்றான் துருமசேனன். அலம்புஷன் நகைத்து “அது எங்கள்

வழிமுறை” என்றான். “நாங்கள் புரவிகளையே கடந்து விரைவோம்… மரங்களில் என்றால் குரங்குகள் எங்களிடம் பிந்தும்.”

துருமசேனன் அவன் கைகளை நோக்கி “விந்தையான கைகள்” என்றான். அவன் விரல்கள் உள்ளங்கையிலிருந்து மிக நீண்டு காக்கையலகு போன்ற கரிய நகங்களுடன் இருந்தன. அவன் தன் கைகளைக் காட்டி “ஆம், இக்கைகளால் எங்களால் மரக்கிளைகளை நன்கு வளைத்துக்கொள்ள முடியும். அலம்புஷர்கள் என்றால் நீள்விரலர் என்று பொருள்” என்றான். “இவை கழுகுக்கால்கள் போன்றவை என்பதனால் எங்களுக்கு ஃபாசர்கள் என்றும் பெயருண்டு.”

“நீ இன்று களத்தில் கடோத்கஜனை எதிர்கொள்” என்றான் லட்சுமணன். “நானும் உடனிருப்பேன். என் இளையோரை நாம் அவரிடமிருந்து காக்கவேண்டும்.” அலம்புஷன் “அது என் கடமை” என்றான். “என்னால் அவரை எதிர்கொள்ள முடியும். ஊழிருப்பின் கொல்லவும் கூடும்.” லட்சுமணன் “நன்று. போரில் என் அருகே நீ எப்போதுமிருக்கவேண்டும்” என்றான். அலம்புஷன் “உண்மையில் சற்றுமுன் அதைப்பற்றி நான் பார்பாரிகனுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவன் தந்தையை களத்தில் எதிர்கொள்ளப்போவதைப்பற்றி” என்றான்.

துருமசேனன் அப்பால் நோக்கி “அவனா?” என்றான். அலம்புஷன் “ஆம், அவனே. அவனை எவரும் விழிதவற இயலாது” என்றான். தொலைவில் பார்பாரிகன் வருவதை லட்சுமணன் கண்டான். கைகளை நிலத்தில் ஊன்றி நடந்து வருகிறானா என்ற ஐயம் ஏற்பட்டது. பின்னர்தான் அவன் கால்களும் நீளம் குறைவானவை என்று தெரிந்தது. ஆனால் அலம்புஷனின் கால்களைப்போல அவை தடித்திருக்கவில்லை. குரங்குக்கால்களைப்போல பக்கவாட்டில் வளைந்திருந்தன.

அணுகுந்தோறும் பார்பாரிகனின் உருவம் அகன்று பெரிதாகிக்கொண்டே இருந்தது. பெரிய தோள்களும், தசையுருளைகள்போல நீண்ட கைகளும், உந்திச்சரிந்த வயிறும், இரு உருளைகளாக அசைந்த மார்புகளும் கொண்டிருந்தான். அவன் அருகணைந்தபோது விலங்குகளிலிருந்து எழும் மயிர்மணம் எழுந்தது. அவனுடைய பெரிய முகத்திலிருந்தும் கொழுத்து விரிந்த தோள்களிலிருந்தும் வியர்வை வழிந்தது. லட்சுமணன் அருகே வந்து மூச்சுவாங்க நின்று அரசர்களை வீரர் வணங்கும் முறைப்படி தலைதாழ்த்தி “இடும்பர் குடியினனாகிய பார்பாரிகன் நான். கௌரவ இளவரசரை வணங்குகிறேன்” என்றான்.

லட்சுமணன் அவனிடம் சினத்துடன் “என் கால்தொட்டு வணங்கு, அறிவிலி. நீ என் குருதியினன், எனக்கு மகன் முறையானவன்” என்றான். அவன் அச்சொற்கள் புரியாமல் தத்தளித்து ஒருமுறை அலம்புஷனை நோக்கியபின் “ஆம், ஆனால்” என்றான். அலம்புஷன் நகைத்து “அவர் உன் தந்தையின் குலமைந்தர்” என்றான். “ஆம்” என்றபின் பார்பாரிகன் நீள்மூச்செறிந்து முன்னால் வந்து எடைமிக்க உடலை மூச்சொலிக்க வளைத்து லட்சுமணனின் கால்களைத் தொட்டு வணங்கினான். “நீள்வாழ்வும் புகழும் செல்வங்களும் அமைக!” என லட்சுமணன் அவன் தலைதொட்டு வாழ்த்தினான்.

பார்பாரிகன் எழுந்தபோது மேலும் வியர்வை வழிந்தது. மழைபெய்யும் பாறைச்சரிவுபோல இருந்தது அவன் உடல். மயிரற்ற கரிய தோல்பரப்பு ஈரமாக மின்னியது. “இவன் உன் சிறிய தந்தை துருமசேனன்” என்றான் லட்சுமணன். “ஆம்” என்றபின் பார்பாரிகன் துருமசேனனின் கால்களையும் தொட்டு வணங்கி வாழ்த்துகொண்டான். முகம் மலர பார்பாரிகனின் தோள்களை பற்றிக்கொண்ட

துருமசேனன் “பேருடலன்… ஆனால் கால்கள்தான் விந்தையானவை” என்றான். “எங்கள் குலத்தின் கால்கள் இவ்வாறுதான் அமைந்துள்ளன” என்றான் பார்பாரிகன்.

அலம்புஷன் “அவர்கள் மரங்களுக்குமேல் மீன் என நீந்துபவர்கள்” என்றான். “நீ எப்போது வந்தாய்?” என்றான் லட்சுமணன். “நான் நேற்று மாலையே வந்துவிட்டேன், தந்தையே. இளைய கௌரவர் துர்மதர் என்னை வரவேற்றார். இளைய கௌரவராகிய சுபாகுவிடம் அழைத்துச்சென்றார்.” லட்சுமணன் “என்ன சொல்கிறாய்? அவர்கள் உன் தாதையர்” என்றான். பார்பாரிகன் “ஆம், தாதையர்” என மெல்ல சொன்னான். துருமசேனன் “பலமுறை தாதையர் என உள்ளத்திற்குள் சொல்லிக்கொள்” என்று புன்னகையுடன் சொல்ல பார்பாரிகன் “ஆம், தாதையர்” என்றான். அவனுடைய கொழுத்த பேருடலில் வியர்வை வழிந்து ஓடைகளாக இறங்கியது.

லட்சுமணன் பரிவுடன் அவன் தோளில் கைவைத்து “சொல்” என்றான். “என்ன சொல்ல?” என்றான் பார்பாரிகன். லட்சுமணன் சிரித்துவிட்டான். துருமசேனன் “நீ என்ன செய்கிறாய் என்று சொல்” என்றான். “நான் ஒன்றுமே செய்யவில்லை. காலையில் உணவருந்தினேன்” என்றான் பார்பாரிகன். “அதை நீ சொல்லவேண்டிய தேவையே இல்லை” என்றான் லட்சுமணன். துருமசேனன் “நீங்கள் எத்தனைபேர் வந்தீர்கள்?” என்றான். “நாங்கள் பாதிப்பேர் இங்கு வந்துள்ளோம். எஞ்சியோர் அங்கு சென்றனர்” என்றான் பார்பாரிகன். “நான் போரிடவேண்டிய படைப்பிரிவு எதுவென்று இன்று கூறுவதாக சொன்னார் இளைய கௌரவர் சுபாகு” என்றபின் குரல் தாழ்த்தி “தாதை” என்றான்.

லட்சுமணன் “நீங்கள் எத்தனைபேர்?” என்றான். பார்பாரிகன் “நாங்கள் இருநூறுபேர் வந்துள்ளோம். இன்று காலைதான் முகப்புப்படையில் கழுகின் கழுத்தென அமையும்படி ஆணை வந்தது. போருக்கெழ ஒருங்கிக்கொண்டிருந்தேன்” என்றான். பேருருக்கொண்ட அரக்கர்களின் குலத்தில் பிறந்த கைக்குழந்தை அவன் என லட்சுமணன் நினைத்துக்கொண்டான். “நீ ஏன் இங்கே போர்புரிய வந்தாய்? உன் தந்தை அங்குள்ளார். பீமசேனர் உன் குருதித்தாதை” என்றான் துருமசேனன்.

“ஆம், எங்கள் நாட்டுக்கு முதலில் ஆதரவளித்தவர் கௌரவப் பேரரசர் துரியோதனர். எங்கள் நகருக்கு துச்சாதனர் வந்து என் தந்தைக்கு மணம்புரிந்து வைத்தார். நாங்கள் அரசமுறைப்படி அஸ்தினபுரிக்கு கடமைப்பட்டிருக்கிறோம்” என்ற பார்பாரிகன். “எங்கு போருக்குச் செல்வது என்ற வினா எழுந்தபோது இதை நான் அவையில் சொன்னேன். எங்கள் குடிமூத்தார் நான் சொன்னது உண்மை என ஏற்றனர். ஆகவே நாங்கள் இங்கே வந்தோம்” என்றான் பார்பாரிகன். “நான் என் தந்தையிடம் ஒப்புதலும் வாழ்த்தும் பெற்றேன்.”

துருமசேனன் “நீ உன் குடியுடன் போரிடுவாயா?” என்றான். “என் தந்தையுடனும் போரிடுவேன். எதிர்கொண்டு மோதினால் கொல்வேன். அது களநெறி” என்றான் பார்பாரிகன். “அவரை வெல்ல இவனால் எளிதில் இயலும்” என்று அலம்புஷன் நடுவே புகுந்தான். “இவன் நகரில் நிகழும் அனைத்துப் போர்களிலும் தன் தந்தையை கைக்குழவி என தூக்கி அறைந்திருக்கிறான். இவன் வல்லமை அவரைப்போல நால்வருக்கு நிகர்.” துருமசேனன் “மெய்யாகவா?” என்றான். “ஆம், தந்தையே. என்னால் எந்தையை மிக எளிதில் வெல்லமுடியும். தாதை பீமசேனரையும் இடரின்றி வெல்வேன். நேர்ப்போரில் என்னிடம் எதிர்நிற்கும் ஆற்றல் கொண்டவர் பால்ஹிகர் மட்டுமே. இளைய யாதவரும் அங்கநாட்டரசர் கர்ணனும் மட்டுமே என்னை வெல்லக்கூடும் என எந்தை சொன்னார்” என்றான் பார்பாரிகன்.

லட்சுமணன் முகம் சுளித்து தலையை திருப்பிக்கொண்டு “உன் அகவை என்ன?” என்றான். “பதின்மூன்று, ஆனால்…” என அவன் தொடங்க “நீ களம்புகலாகாது. இது என் ஆணை!” என்றான் லட்சுமணன். “தந்தையே, நான்…” என அவன் சொல்லத்தொடங்க “என் சொல்… அதை என் மைந்தர் மீறலாகாது” என்று லட்சுமணன் உரக்க சொன்னான். “நீ மேற்குமூலை காவல்மாடத்தில் அமர்ந்துகொள்க! அங்கிருந்து போரை நோக்கு. ஒவ்வொருநாளும் போரில் என்ன நிகழ்கிறதென்பதை உள்ளத்தில் பதித்து அன்று மாலை என்னிடம் வந்து விரிவாக சொல்.”

பார்பாரிகன் நிறைவின்மையுடன் உடலை அசைக்க அவன் தசைத்திரள்கள் நெளிந்தன. “என்ன?” என்றான் லட்சுமணன். “ஆணை” என்றான் பார்பாரிகன். லட்சுமணன் தன் புரவிமேல் ஏறிக்கொண்டு மறுசொல் இல்லாது அதை செலுத்தி முன்னால் சென்றான். துருமசேனன் பார்பாரிகனை நோக்கி புன்னகைத்து அவன் தலைமேல் கையை வைத்து “உன் மண்டை விந்தையானது… பெருங்குடம்போல” என்றான். பின்னர் “நன்று சூழ்க, மைந்தா!” என்றபின் லட்சுமணனை தொடர்ந்துசென்றான்.

லட்சுமணன் எதனாலோ துரத்தப்பட்டவன்போல புரவியை விரைவுகொள்ளச் செய்தான். துருமசேனன் அவனுக்குப் பின்னால் விரைந்தான். பின்னர் மூச்சிரைக்க கடிவாளம் தளர்த்தி குதிரையை பெருநடைக்கு இறக்கிய லட்சுமணன் பெருமூச்சுவிட்டான். துருமசேனன் அருகணைந்து மூச்சிரைக்க நின்றான். லட்சுமணன் அவனை திரும்பி நோக்கவில்லை. கண்கள் சுருங்க போர்முனையை நோக்கிக்கொண்டு புரவிமேல் நெடுநேரம் அமர்ந்திருந்தான். பின்னர் பெருமூச்சுடன் புரவியை செலுத்தினான்.

லட்சுமணன் பீஷ்மரை முதலில் பார்த்தபோது அவரும் விஸ்வசேனரும் உரையாடிக்கொண்டு வருவதை கண்டான். தன் அம்பையும் வில்லையும் எடுக்க குனிந்தபோதுதான் அதிர்ச்சிகொண்டு நிமிர்ந்து பார்த்தான். பீஷ்மர் தனக்குள் என தலைகுனிந்து கையசைத்து மெல்ல முணுமுணுத்தபடி வந்தார். அவருக்குப் பின்னால் அவன் பார்த்தது அவரது நிழலைத்தான். ஆனால் பார்த்தது அவருடைய நிழல் அல்ல என்று நினைவு வீறிட்டது. அது வண்ணமும் வடிவும் கொண்டிருந்தது என்று அது மீளமீள வலியுறுத்தியது. என்ன நிகழ்ந்தது என்று அவனுள் எழுந்த உளக்கூர் துழாவியது. அவையனத்துக்கும் அப்பால் உடல் சிலிர்ப்பு கொண்டு பின் அடங்கி வியர்வை பூத்து குளிர்ந்தது. மீண்டும் ஒருமுறை நோக்கிவிட்டு விழிவிலக்கிக்கொண்டான்.

குனிந்து தன் காலின் இரும்புக்குறடின் தோற்சரடை இன்னொரு முறை இறுக்கிவிட்டு தலைதூக்கி பார்த்தான். உடல் அதிர உள்ளம் படபடக்கத் தொடங்கிய பின்னரே முதலில் பார்த்ததையே மீண்டும் கண்டதை உணர்ந்தான். பீஷ்மருக்குப் பின்னால் அவரைவிடப் பெரிய ஓர் உடல் தெரிந்தது. ஒருவர் பின் ஒருவராக நால்வர். அவன் விழியிமைத்த பின்னரும் அக்காட்சி மறையவில்லை. எட்டு கைகளுடன் ஒருவர் என அது மேலும் தெளிந்தது. இரும்புக் கவசங்கள் அணிந்த பேருடலர். பீஷ்மரிடம் பேசிக்கொண்டு இணையாக, சற்று பின்னால் அவர் வந்துகொண்டிருந்தார்.

உள்ளம் அச்சத்தால் துடித்தபோது, அச்சத்தாலேயே விழி மேலும் கூர்கொள்ள அவன் பீஷ்மரைத் தொடர்ந்து வருபவரை நிலைவிழியால் நோக்கினான். அவர் ஏன் விஸ்வசேனர் என்று தோன்றினார் என்று புரிந்தது. அவர் பீஷ்மரின் அதே வடிவிலிருந்தார். விஸ்வசேனரை எப்போது நோக்கினாலும் பீஷ்மரோ என உள்ளம் திடுக்கிட்டு பின்னர் மெல்ல அமைவது அவன் வழக்கம். பலமுறை பீஷ்மர் என எண்ணி அவன் வணங்கியதும் உண்டு. இயல்பாக பீஷ்மரைப்போல வாழ்த்திவிட்டு கடந்துசெல்வது அவர் வழக்கம். தான் பீஷ்மரல்ல என்றுகூட அவர் அறிந்திருப்பதில்லை. பீஷ்மரிடம் சொல்லாடுவதுபோல, அவர்மேல் எரிச்சல் கொண்டவர்போல, அவருக்கு ஆணையிடுபவர்போல இடைவிடாது பேசிக்கொண்டிருந்தார்.

லட்சுமணன் திரும்பி தன் அருகே நின்ற இளையோனாகிய துருமசேனனை பார்த்தான். அவன் விழிகள் இயல்பாக இருப்பதைப் பார்த்து “இளையோனே, பிதாமகர் எவரிடம் பேசிக்கொண்டு வருகிறார்?” என்றான். “அது நெடுநாள் வழக்கம்தான் மூத்தவரே, அவர் தனக்குத்தானே சொல்லாடுவார். அரிதாக தன்னிடமே சினம்கொண்டு பற்களைக் கடித்து கைகளை முறுக்கி உறுமுவதும் உண்டு” என்றான். “அவருக்குப் பின்னால் எவரோ வருவதுபோல் எனக்கு தோன்றுகிறது” என்றான் லட்சுமணன். “அவர் நிழலல்லவா அது, மூத்தவரே” என்றான் துருமசேனன். “ஆம்” என்றபின் லட்சுமணன் பெருமூச்சுடன் தன் தேரிலேறிக்கொண்டான்.

பீஷ்மர் அவருடைய தேர் நோக்கி சென்றார். தேரோட்டுவதற்காக அவருடைய மாணவன் உக்ரசிம்மன் கையில் சவுக்கும் மறுகையில் தலைக்கவசமுமாக நின்றிருந்தான். அவன் சற்று இளமையான பீஷ்மரைப் போலிருப்பதாக லட்சுமணன் எண்ணினான். அவர்கள் அனைவரிலும் அவர் எப்படி அவ்வாறு பதிகிறார்? ஏனென்றால் அவர் மிகையாக வெளிப்படுவதில்லை. ஓரிரு சொற்களும் முகக்குறிகளும் கையசைவுகளும்தான் அவர் மொழி. அதை அறிய உளமும் விழியும் கூர்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அவன் தன்னருகே வந்து கடந்துசென்ற பீஷ்மரை நோக்கி தலைவணங்கினான்.

பீஷ்மர் அவனைப் பார்த்து மெல்ல தலையை அசைத்தபின் தேர் அருகே போடப்பட்டிருந்த சிறுமரக்கூடைமேல் சென்று அமர்ந்தார். காத்து நின்றிருந்த ஏவலர்கள் அவருடைய பேழையிலிருந்து கவசங்களை எடுத்து அணிவிக்கத் தொடங்கினார்கள். அதன் ஆணிகளை திருகி, தோல்பட்டைகளை முறுக்கினர். அவர் இரு கைகளையும் முட்டில் ஊன்றி சற்றே தலைகுனிந்து அமர்ந்திருந்தார். அவர்களின் செயல்களுக்கேற்ப அவர் உடல் அசைந்தது. இறந்த எருதின் உடலை காக்கைகள் கொத்துவதுபோல. அவர் இறந்து உடல்மட்டும் அங்கிருப்பதுபோல ஒருகணம் தோன்ற அவன் அவ்வெண்ணங்களுக்காக உளம்கூசி, விழிதிருப்பிக்கொண்டான்.

துருமசேனன் “ஒவ்வொருநாளும் என நாமறியாத எவரோ ஆக மாறிவருகிறார் பிதாமகர்” என்றான். லட்சுமணனால் திரும்பி அவரை நோக்காமலிருக்க இயலவில்லை. அங்கிருந்த அனைவரும் அவரைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவன் கண்டான். புரவிகளும் தலைதிருப்பி அவரை நோக்கிக்கொண்டிருந்தன. இறுதியாக நின்ற புரவி நாக்கை நீட்டி தலையை குலைத்தது. அவர் கைகளை நீட்டியிருக்க ஏவலர் கைக்கவசத்தை பொருத்தினர். தோளிலைகளை இறுக்கியபின் அவர்கள் மெல்ல அவரை அழைக்க இருமுறை சொல்லெழுந்தபின் முனகியபடி அவர் எழுந்து நின்றார். இடைக்கச்சையையும் தொடைக்கவசங்களையும் ஏவலர் அணிவித்தனர்.

அவருடைய நரைத்த நீண்ட குழல் தோல்சரடால் கட்டுண்டு தோளில் சரிந்திருந்தது. முதியவர்களுக்குரிய வகையில் உதடுகளை மடித்து கவ்வியிருந்தமையால் முகம் மேலும் அழுந்தி தாடி முன் நீட்டி இருந்தது. மூக்கு தளர்ந்து வளைந்து மீசைமேல் படிந்ததுபோல் தெரிந்தது. அவருடைய தலை மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. லட்சுமணன் அவருடன் அந்த உருவம் தெரிகிறதா என்று பார்த்தான். அந்த தேவன் யார்? அவர் எட்டு வசுக்களால் பேணப்படுபவர் என்கிறார்கள். அவன் துருமசேனனிடம் “இளையோனே, எட்டு வசுக்களில் எண்கையர் யார்?” என்றான். “மூத்தவரே, இரண்டாமவரான துருவர்” என்றான்.

லட்சுமணன் ஒன்றும் சொல்லாமல் தன் தேரை அடைந்து ஏறி அமர்ந்தான். அவனுடைய தேரோட்டி அவன் கால்வைத்து ஏறிய மரப்பீடத்தை அகற்றிய பின் கையூன்றித் தாவி அமரபீடத்தில் அமர்ந்து தன் தலைக்கவசத்தை அணிந்து அதன் தோல்பட்டைகளை இறுக்கிக்கொண்டான். ஆவக்காவலன் தேருக்குப் பின்பக்கம் ஏறிக்கொண்டு தன்னைச் சுற்றி அம்புக்கூடைகளை பொருத்தி தோல்நாடாக்களால் கட்டினான். அம்புகள் தங்களுக்குள் மென்குரலில் பேசிக்கொள்பவைபோல ஓசையிட்டன. துருமசேனன் தன் தேரிலேறிக்கொண்டான். அனைவரும் வானை நோக்கிக்கொண்டிருந்தார்கள். படைக்கலங்களில் சுடர் ஏறிவிட்டிருந்தது. துதிக்கவசங்கள் அணிந்த யானைகளின் காதுகள் காட்டுச்சேம்பின் இலைகளென திரும்பின. அவற்றின் உடல்கள் ஊசலாட மணியோசைகள் எழுந்தன. சகடங்கள் அசைவதும், படைக்கலங்கள் முட்டிக்கொள்வதும், மெல்லிய பேச்சொலிகளும், புரவிகளின் சினைப்போசைகளும் கலந்து சூழ்ந்திருந்தன.

லட்சுமணன் நிலைகொள்ளாமையுடன் தலைக்கவசத்தின்மேல் விரல்களால் தாளமிட்டான். முந்தையநாள் இரவில் அவன் கண்ட கனவில் பீமனால் தலையுடைந்து இறந்த இளையோர் அனைவருமே தங்கள் தலைகளை அதேபோல கைகளில் ஏந்தியபடி ஓசையின்றி அவனை நோக்கி வந்தனர். குளிர்ந்த நீரோடும் அறியா ஆறொன்றின் கரை. ஆற்றுநீர் அத்தனை கருமையாக இருந்து அவன் பார்த்ததே இல்லை. இருள் அலை ஒன்று சுழித்தோடுவதுபோல. அதன் இரு கரைகளிலுமிருந்த மரங்கள் கொத்துக் கொத்தென தழைத்து எடைகொண்ட இலைகளைத் தாழ்த்தி நீரை வருடிக்கொண்டிருந்தன.

அங்கே அவன் எதற்காக வந்தான் என தெரியவில்லை. நதிநீரை குனிந்து தொட்டு அது பனியின் குளுமை கொண்டிருப்பதை உணர்ந்தபோதுதான் முதல் இளையோனை பார்த்தான். தலையற்றிருந்த அவனுடல் விதிர்ப்பை உருவாக்க குனிந்து கையிலிருந்த முகத்தை பார்த்தான். ‘மூத்தவரே’ என்று ஒலியிலாது உதடுகள் உச்சரித்தன. ‘இளையோனே’ என்று அவன் அழைத்த குரல் அச்செவியைச் சென்று எட்டவில்லை. ‘மூத்தவரே! மூத்தவரே! மூத்தவரே!’ என்று அவன் அழைத்துக்கொண்டிருந்தான். பின்னர் அவனுடைய நிழலில் இருந்து எழுந்தவன்போல் இன்னொரு இளையவன் தோன்றினான். ஒவ்வொருவராக அவர்கள் ஒருடலிலிருந்து மீள மீள முளைத்தெழுபவர்கள்போல வந்துகொண்டிருந்தனர். லட்சுமணன் அவர்களில் ஒருவனை தொடுவதற்காக கைநீட்டினான். நிழலுரு என நெளிந்து அவன் விலக ‘இளையோனே!’ என்றபடி விழித்துக்கொண்டான்.

தாளவியலா உடற்களைப்பால் படுத்த சில நொடிகளிலேயே அவன் துயில்கொண்டிருந்தான். விழித்தபோது அரை நாழிகைப்பொழுது ஆகியிருக்குமென்று தோன்றியது. உடல் சற்று ஓய்வு கொண்டுவிட்டிருந்தமையால் உள்ளம் முற்றிலும் விழித்துக்கொண்டு நின்றது. அவனுக்கு மிக அருகிலென அவன் இறந்தவர்கள் அமர்ந்திருப்பதை கண்டான். குளிர்ந்த இரவுக்குள் அவர்கள் மேலும்

செறிந்த குளிரென தோன்றினர். நீர்த்துளிகள்போல் கரவொளி கொண்ட விழிகளும் சருகசைவதுபோல எழுந்த மென்குரலும் கொண்டிருந்தார்கள்.

முழு இரவும் அவன் தன் இறந்த இளையோருடன் இருந்தான். அவர்களுக்குமேல் மூடா விழிகளென விண்மீன்கள் செறிந்த கருவெளி வளைந்திருந்தது. எங்கோ பெரும்போர் நடந்துகொண்டிருக்கும் ஓசையை அவன் கேட்டான். “என்ன நிகழ்கிறது? என்ன நிகழ்கிறது அங்கே?” என்று அவன் கேட்டான். இறந்த இளையோனாகிய கீர்த்திசிம்மன் “அங்கே போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது, மூத்தவரே” என்றான். “போரா? இவ்விரவிலா?” என்றான் லட்சுமணன். “ஆம், இப்போது போரிடுபவர்கள் மனிதர்கள் அல்ல, தெய்வங்கள். இருளும் ஒளியுமான பேருருக்கள்” என்றான் அவன்.

“அவர்களில் சிலர் மானுடரை ஊர்திகளாக கொண்டிருக்கிறார்கள். சிலர் காற்றை. சிலர் இடிமின்னலை” என்றான் இன்னொரு இளையோனாகிய ரேணுகன். லட்சுமணன் சோர்ந்து “இங்கு என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது, இளையோனே?” என்றான். அவர்களில் இளையவனாகிய உலூகன் “போர்!” என்றான். “புவியில் தெய்வங்கள் போரிடாத ஒருகணமும் இருந்ததில்லை, மூத்தவரே. இது அவர்களின் போருக்கென உருவாக்கப்பட்ட களம்.” லட்சுமணன் பெருமூச்சுடன் “ஆம்” என்றான். “போரினூடாகவே அவை வாழ்கின்றன. போர் அனலுக்கு அவியென அத்தெய்வங்களுக்கு இன்றியமையாதது. இது எரிகுளம்” என்றான் நிமோஷன்.

புலரியில் உலூகன் தன் மடியிலிருந்த தலையை கையிலெடுத்துக்கொண்டு “சென்று வருகிறேன், மூத்தவரே” என்றான். “நீங்கள் இவ்வாறு மீண்டும் வரமுடியுமென்பது எனக்கு உளநிறைவளிக்கிறது, இளையோனே” என்றான் லட்சுமணன். “ஆம், ஆனால் நாங்கள் உங்கள் உலகில் இருப்பவர்களை அணுக இயலாது. அங்கிருந்து எங்களை நோக்கி வரத்தொடங்கியவர்களையே நாங்கள் அணுகுகிறோம்” என்றான். “நான் வந்துகொண்டிருக்கிறேனா?” என்று லட்சுமணன் கேட்டான். ஆனால் அவனுள் துயர் இருக்கவில்லை. மெல்லிய ஆவலும் உவகையுமே எழுந்தது. “ஆம், நீங்கள் எங்களை அணுகி வந்துவிட்டீர்கள். இன்னும் சில நாட்கள்தான்.”

“எவ்வளவு நாட்கள்?” என்று லட்சுமணன் கேட்டான். “சில நாட்கள் மட்டுமே. எவ்வளவு நாட்கள் என்பதை தெய்வங்கள் மட்டுமே அறியும், அல்லது அவையும் அறியாது. இப்பெரும் பூசலில் எத்தருணத்தில் எது நிகழுமென்பதை அனைத்துமான பிரம்மமும் அறியாதிருக்கவே வாய்ப்பு” என்றான் புளினன். லட்சுமணன் துயருடன் “காத்திருப்பது சுமையானது” என்றான். அவர்கள் துயரால் வெளிறிய உதடுகளுடன் புன்னகைத்தனர். தலைகளை கையில் எடுத்துக்கொண்டு ஒவ்வொருவராகக் கிளம்பி முதலில் சென்றவன் நிழலுக்குள் தாங்களும் சென்று மறைந்தனர். எறும்புநிரை பொந்துக்குள் புகுந்து மறைவதுபோல.

அவன் எழுந்து அந்தச் சிறு வாயிலினூடாக தானும் நுழைந்துவிடவேண்டுமென்று விரும்பினான். விழித்துக்கொண்டபோது புலரியின் குளிர் உடலை மெய்ப்புகொள்ளச் செய்வதை உணர்ந்து நெடுந்தொலைவில் எழுந்த துருவ விண்மீனை பார்த்துக்கொண்டிருந்தான். நோக்க நோக்க விண்மீன்கள் ஒளிகொள்வதன் விந்தை அவனை நிறைத்தது. துருமசேனன் எழுந்து அவன் அருகே வந்து “துயிலவில்லையா, மூத்தவரே?” என்றான். “இல்லை” என்றான் லட்சுமணன். “நானும் துயிலவில்லை. சென்று மறைந்தவர்களை எண்ணிக்கொண்டிருந்தேன். அவர்களால் நம்மை விட்டுச்செல்லவே இயலவில்லை” என்றான் துருமசேனன்.

“ஆம்” என்று லட்சுமணன் சொன்னான். துருமசேனன் சற்றே உடைந்த குரலில் “இறந்தவர்கள் ஏன் இத்தனை இரக்கமிலாதிருக்கிறார்கள்!” என்றான். லட்சுமணன்

காய்ச்சல் படிந்த கண்களால் நிமிர்ந்து நோக்கி “அவர்களுக்கு வேறு வழியில்லை, இளையோனே” என்றான். அவன் நோக்கிய துருவ விண்மீனை துருமசேனனும் நிமிர்ந்து நோக்கினான். “நிலைக்கோள்!” என்றான். “ஆம், நிலைக்கோள் அடைந்த ஒரே ஒருவன்” என்றான் லட்சுமணன். “மீதி அனைவரும் இங்கே இடம் அறியாது, இருப்பிலாது அலைக்கழிபவர்கள்தானா?” என்றான் துருமசேனன்.

லட்சுமணன் “நாம் இந்த எண்ணங்களை கடப்போம். இவற்றினூடாகச் சென்றால் நாம் வாழும் இவ்வுலகுக்கு எப்பொருளும் இல்லாத பிறிதெங்கோ சென்று சேர்கிறேன். வேண்டாம்” என்றான். “ஆம், இரவில் பலமுறை நான் அவ்வாறே எண்ணினேன். இது தேவையற்ற அல்லல். வான்வெளியில் சிதறுண்டு சித்தம் அழிகிறது” என்றபின் அவன் மேலே நோக்கி “நெடும்பொழுதாக நானும் துருவனையே பார்த்துக்கொண்டிருந்தேன், மூத்தவரே. விழிவிலக்காது துருவனை நோக்கிக்கொண்டிருப்பது ஓர் நிலைப்பேறை அளிக்கிறது. அலைக்கழியும் படகில் செல்கையில் அமரத்தில் சுக்கான் நிலையை மட்டுமே நோக்குக என்று முன்பொருமுறை தந்தை சொன்னார்” என்றான் துருமசேனன்.

லட்சுமணன் “நாளை படைநடத்தவிருப்பவர் பீஷ்மர். நமது தரப்பின் நிலைக்கோள் அவரே” என்றான். துருமசேனன் “ஆம், இம்முறையும் பிறழாது நிலைகொண்டாரெனில் ஒருவேளை நாளையே போர் முடியக்கூடும். எஞ்சியோருடன் நாம் நகர்மீள முடியும்” என்றான். “நம்மில் சிலரேனும் எஞ்சவேண்டும், மூத்தவரே.” லட்சுமணன் “அதில் உனக்கு ஐயமிருக்கிறதா?” என்றான். குரல் தாழ “ஐயமென்றில்லை…” என்றான் துருமசேனன். “சொல்” என்றான் லட்சுமணன். “ஐயமில்லை, மூத்தவரே, நான் மானுடனின் எல்லைகளைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன்” என்றான் துருமசேனன். லட்சுமணன் “என்ன?” என்றான்.

துருமசேனன் “ஒவ்வொரு பொருளும் எடைதாளாது உடையும் ஒரு புள்ளி உண்டு. மானுடர் உடையும் இறுதிப்புள்ளிகள் வெளிப்படுவது இத்தகைய போர்க்களத்திலேயே. இங்கு உடையாது எவரும் எஞ்சப்போவதில்லை” என்றான். “அதுவே எண்ணுதற்கு பொருத்தமாக உள்ளது. ஆயினும் ஒருவரேனும் உடையாது தன் முழுநிலையுடன் எஞ்சவேண்டுமென்று விழையாமலும் இருக்க இயலாது. இல்லை எனில் எதை நம்பி இப்புவியில் வாழ்வோம்? எதன் பொருட்டு உயிர் கொடுப்போம்?” என்று லட்சுமணன் சொன்னான்.

மிக அப்பால் இளையோர் ஒவ்வொருவராக தேரிலேறிவிட்டதை லட்சுமணன் பார்த்தான். அவர்கள் உவகையுடன் ஒருவருக்கொருவர் கைகளைக் காட்டி பேசிக்கொண்டார்கள். ஒருவன் கதையைத் தூக்கி இன்னொருவனை அச்சுறுத்துவதுபோல ஆட்டினான். குண்டாசியின் மைந்தர்களான தீர்க்கநேத்ரனும் சுரகுண்டலனும் தங்கள் தேர்களில் வெறித்த விழிகளுடன் நின்றிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் நிழல்கள் நீண்டு விழுந்திருந்தன. நிழல்களா, இன்னமும் ஒளியே எழவில்லையே? அவன் விழிகளை மூடித்திறந்தான். இந்தக் களத்தில் துயிலின்மையால் அகம் பேதலித்து மெய்மைக்கும் மாயைக்கும் நடுவே ஊசலாடும் உள்ளத்துடன் நின்று எப்போரை எடுக்கவிருக்கிறேன்? நான் கொல்லப்பட்டால் அதை நான் அறியவே சற்று பொழுதாகும்போலும் என்று எண்ணி லட்சுமணன் புன்னகைத்தான்.

புலரிமுரசுகள் முழங்கியதும் லட்சுமணனின் உடல் இயல்பாக போருக்கென எழுந்தது. நாணேற்றி வில்லை நிறுத்தி ஒற்றை அம்பில் கை தொட்டு காத்துநின்றான். திரும்பி பீஷ்மரை பார்த்தான். தேரில் அவருக்குப் பின்புறம் ஆவக்காவலனும் உதவியாளனும் அமர்ந்திருந்தனர். அவருடைய இடப்பக்கம் கைகளைக் கட்டியபடி அவ்வுருவம் நின்றிருந்தது. பீஷ்மர் கையை காற்றில் வீசும் எளிய அசைவால் வில்பூட்டி நாணோசை எழுப்பினார். எதிரில் பாண்டவப் படையிலிருந்து பாஞ்சஜன்யமும் தேவதத்தமும் ஒலித்தன. பீஷ்மர் தன் இடையிலிருந்து சசாங்கம் என்னும் பெருஞ்சங்கத்தை எடுத்து ஊதினார். அந்த ஒலி பாண்டவப் படைகளை அதிர்வென ஊடுருவுவதை காணமுடிந்தது

போர்முரசு முழங்கியபோது அவன் உள்ளம் எழுவதற்குள்ளேயே வில்லையும் அம்பையும் எடுத்து உடல் போரில் இறங்கிவிட்டிருந்தது. மெய்யாகவே அதை தான் அறியாத் தேவர்கள் ஆள்கிறார்களா என்று அவன் உளம் துணுக்குற்றது. இரு படைகளும் கொதித்தெழும் நுரையெனப் பொங்கி எழுந்து ஒன்றோடொன்று அறைந்துகொண்டன. அவனைச் சூழ்ந்து கடலென கொந்தளிக்கத் தொடங்கியது படைச்சூழ்கை. போர் தொடங்கி பலநூறு வீரர்கள் அம்புபட்டு சிதறி விழுந்த பின்னரும்கூட உள்ளம் போர் தொடங்கிவிட்டதென்பதை உணராததுபோல் பேதலித்திருந்தது. அர்ஜுனன் மிக அப்பால் இளம்பிறையின் மையவளைவில் தன் ஒளிரும் தேரில் நின்று போரிடுவதை அவன் கண்டான். பூரிசிரவஸும் சலனும் ஜயத்ரதனும் அவனை எதிர்கொண்டனர். அம்புகள் வானில் உரசிக்கொண்டு அனல்தெறிக்க சிதறின. அவனைச் சூழ்ந்து சென்ற அம்புகளில் சிலவற்றின் ஒளி தேர்த்தூணில் விழுந்துசென்றது. எதிர்சென்று உரசிக்கொள்ளும் அம்புகள் சிட்டுக்குருவிச் சிலம்புவதென ஓசையிட்டன.

பிறைநிலவு வீசப்பட்ட வலைபோல வளைந்து வளைந்து பருந்தின் கழுத்தில் சுற்றிக்கொள்ள முயன்றது. பீஷ்மரின் தேர் சவுக்கு முனையில் சொடுக்கப்பட்டு பறந்து தெறிக்கும் இரும்பு அங்குசம்போல் பாண்டவப் படைகளுக்குள் புகுந்து அந்த வலையை கிழித்தது. கிழிந்த பகுதிகள் கல் விழுந்த நீரென விலகி சுழித்து மீண்டும் குவிந்தன. தொலைவிலிருந்து பார்க்கையிலேயே பருந்தின் தலை சென்று கொத்துமிடம் சிதறி விரியவும் மீண்டும் இணையவும் பிறைசூழ்கையே உகந்தது என காண முடிந்தது. எந்தப் படைக்கும் பின்னால் படையினர் எவரும் முன்னுந்தி வரவில்லை. ஆனால் பிறையை பருந்து இரண்டாகப் பிளந்துவிட்டதென்றால் அச்சூழ்கை முற்றிலும் பொருளிழந்துவிடும்.

பீஷ்மரை சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் இருபுறமும் நின்று எதிர்த்தனர். பீஷ்மர் வாயை சுருக்கி, தாடி முன்னால் நீட்டியிருக்க, காற்றிலெனச் சுழலும் நீண்ட கைகளால் அம்புகளை செலுத்தினார். அவர் முன் அம்புபட்டு அலறிச்சரிந்த உடல்கள் ஒன்றன்மேல் ஒன்றெனக் குவிய சற்றே சரிந்து அவற்றை தவிர்த்து உருண்டது அவருடைய தேர். சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் தங்கள் முன் உடைந்து சிதறிய தேர்களாலும் சிதறி விழுந்த உடல்களாலும் விரைவழிந்து புதுத்தடம் தேரும்பொருட்டு சற்று பின்னடைய பிறைசூழ்கை சற்று விரிந்தது. அந்த மையத்தில் அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் தோன்றினார்கள்.

பீஷ்மர் நுண்ணிதின் கூர்ந்து செதுக்கிக்கொண்டிருக்கும் சிற்பியின் முகத்துடன் அம்புகளை தொடுத்தபடி அவர்களை நோக்கி சென்றார். அவருடைய அம்புகளால் சுருதகீர்த்தி திணறி பின்னடைய அபிமன்யூவின்மேல் அம்புகள் முட்புதர்போல மூடிக்கொண்டன. அவனுடைய கைகள் தேன்சிட்டின் சிறகென விழிதொடா விரைவுகொண்டிருந்தன. அவன் அங்கில்லை என்று தோன்றும்படி உடல் எழுந்து திரும்பி அம்புகளை தவிர்த்தது. அவன் தொடைக்கவசம் உடைந்தது.

தலையிலணிந்திருந்த செம்பருந்தின் இறகுடன் ஓர் அம்பு அப்பால் சென்றது. சினம்கொண்டு கூச்சலிட்டபடி மேலும் மேலும் முன்னால் வந்தான்.

மேலும் சில கணங்களுக்குள் அவனை பீஷ்மரின் அம்புகள் அறைந்து வீழ்த்தும் என லட்சுமணன் எதிர்பார்த்தான். அவன் கை வில்லுடன் தாழ்ந்தது. அபிமன்யூவின் தலைக்கவசம் சிதறியது. நெஞ்சுக்கவசம் உடைந்ததும் தன் தேரிலிருந்து அவன் தேருக்குப் பாய்ந்த சாத்யகி அதை திருப்பி பிறைக்குள் கொண்டுசென்றான். வெறிகொண்டு தேரின் தூண்களை மாறிமாறி உதைத்து கூச்சலிட்டான். நெஞ்சிலறைந்து அலறினான். தேரிலிருந்து பாய்ந்திறங்க அவன் முயல அவனை இரு ஆவக்காவலரும் சேர்ந்து பற்றிக்கொண்டனர். அவனுக்கு முன்னால் திருஷ்டத்யும்னன் தோன்றி பீஷ்மரை எதிர்கொண்டான்.

தன்முன் தேரில் வந்த சர்வதனை அம்புகளால் அறைந்து நிலைகுலையச் செய்தான் லட்சுமணன். சர்வதனின் உதவிக்கு வந்த காரூஷ நாட்டு இளவரசர்கள் ஹஸ்திபதனையும் சுரவீரனையும் மூஷிகாதனையும் லட்சுமணன் தன் அம்புகளால் வீழ்த்தினான். சர்வதன் அவன் முன் விழுந்த அந்த உடல்களால் விசையழிந்த தருணத்தில் தன் தேரிலிருந்து கதையுடன் பாய்ந்தெழுந்து புரவிகள்மேல் கால்வைத்துத் தாவி கதையால் ஓங்கி அறைந்து சர்வதனின் தேர்ப்பாகனை கொன்றான். சர்வதன் கதையுடன் பாய்ந்திறங்க இருவரும் எண்ணுவதற்குள் கதைபொருதலாயினர். இரும்புருளைகள் அறைபட்டு எழுந்த ஓசை அப்பெருக்கில் மறைய அவற்றின் அதிர்வாலேயே நோக்கினோர் எடையையும் விசையையும் உணர்ந்தனர்.

சர்வதனுக்கு உதவியாக வந்த சுதசோமனை தன் சங்கை ஒலித்துக்கொண்டு பாய்ந்துசென்ற துருமசேனன் எதிர்கொண்டான். அம்புகளால் இருவரும் மாறிமாறி அடித்தனர். இருவருமே அம்புத்திறன் குன்றியவர்கள் என்பதனால் அவர்களின் உள்ளம் மேலும் மேலுமென எழ தேரிலிருந்து பாய்ந்திறங்கி கதைபொருதிக்கொண்டார்கள். உடன்பிறந்தார் கதைகளுடன் வந்து சூழ எதிர்ப்புறமிருந்து அஸ்மாக அரசர் சௌதாசனின் மைந்தர்கள் சம்வர்த்தகனும் பூர்ணபத்திரனும் நாணொலியுடன் வந்து அவர்களை தடுத்தனர். அஸ்மாக அரசரின் இளையோள் மைந்தனாகிய சங்கசிரஸ் கௌரவர்களின் தரப்பிலிருந்தான். அஸ்மாகர்கள் வருவதைக் கண்டு அவன் பின்னிருந்து “விலகுக, இது என் போர்!” என்று கூவியபடி வில்லை ஒலித்துக்கொண்டு ஊடுருவி வந்தான். அவன் அணுகுவதற்குள் சம்வர்த்தகனை நாகதத்தன் கொன்றான். சத்யசந்தனால் பூர்ணபத்திரன் கொல்லப்பட்டான். சங்கசிரஸ் வெறியுடன் கூவிச்சிரித்தபடி வந்து தேரில் தொங்கியபடி சென்று சம்வர்த்தகனின் தலையை ஓங்கி மிதித்துச் சுழன்று மீண்டும் ஏறிக்கொண்டான்.

குனிந்த மன்னர் அமோக்பூதியின் மைந்தர்கள் ஆர்யகனும் ஐராவதனும் துருமசேனனை சூழ்ந்துகொள்வதைக் கண்ட லட்சுமணன் “இளையோனை காக்க! அலம்புஷா, இளையோனை காக்க!” என்று கூவியபடியே சர்வதனின் அறையை தடுத்து தலையை குனிந்து அவன் தோளில் அறைய காற்றில் இலை என திரும்பி அதை சர்வதன் தடுத்தான். அலம்புஷன் தன் பாசத்தின் கொக்கியை வீசி ஆர்யகனின் தேரை இழுத்தான். தேர் தூண்டில் மீன் என எழுந்து அவனை நோக்கி செல்ல அவ்விசையில் அவன் எழுந்து பிறர் தலைக்குமேல் பறந்து வந்து தன் கதையால் ஆர்யகனின் தலையை உடைத்து சிதறடித்தான். திகைத்து வில்லை நழுவவிட்ட ஐராவதன் அக்கணமே சிதைந்தான். அவன் இளையோர் ததிமுகனும் கோடரகனும் அலம்புஷனின் துணைவரால் கொல்லப்பட்டனர்.

கௌண்டிவிசர்களின் ஏழு இளவரசர்களான ஹேமகுகனும், பாஹ்யகர்ணனும், பில்வகனும், பாண்டுரனும், அபராஜிதனும், ஶ்ரீவகனும், சுமுகனும் தேர்களில் வந்து அலம்புஷனை சூழ்ந்துகொண்டனர். அவன் அவர்களின் தேர்களை கொக்கிக்கயிற்றால் தொடுத்துக்கொண்டு சிலந்தி என காற்றில் சுழன்றெழுந்தான். அவர்களின் அம்புகள் அனைத்தும் குறி தவறின. ஏழு தேர்களும் அவன் கதையால் அதிலிருந்தவர்களுடன் சேர்த்து உடைத்து எறியப்பட்டன. சிதைந்த உடல்களுக்குள் நெஞ்சுக்குமிழ் கொப்புளம்போல துடித்துப் பதைத்தது. தலைவெண்கூழ் சிதறி தேர்த்தூண்களில் வழிந்தது. அலம்புஷனின் படையின் அரக்கர்கள் அக்குருதியை அள்ளி தங்கள் முகத்திலும் நெஞ்சிலும் பூசிக்கொண்டு வெறிக்கூச்சலிட்டனர்.

சர்வதனின் ஓர் அறை லட்சுமணன்மேல் பட்டது. நிலைதடுமாறி அவன் நிலத்தில் கையூன்றினான். அவன் எழுவதற்குள் கதையை ஓங்கியபடி சர்வதன் பாய்ந்து மேலெழுந்தான். அந்த வெறிமீதூறல் அவன் ஆற்றிய பிழையென்றாக அக்கணமே அவன் விலாவை அறைந்தது லட்சுமணனின் கதை. மூச்சொலியுடன் உடல் மடிந்து நிலத்தில் விழுந்தான் சர்வதன். அவன் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் குருதி குமிழிகளாக கொப்பளித்து மார்பில் வழிந்தது. அவனை அப்பாலிருந்து வந்த கொக்கி ஒன்று கவசத்தில் தொடுத்து இழுத்து அப்பாலெடுத்துக் கொண்டது. கேடயப் படை வந்து அவன் சென்றவழியை மூடி லட்சுமணனை விலக்க மறுபக்கம் துருமசேனனின் முன்னாலிருந்து சுதசோமன் பின்னகர்ந்தான்.

துருமசேனன் தன் சங்கை எடுத்து வெற்றிக்கூவலை எழுப்பினான். கௌரவ மைந்தர்கள் துர்தசன், சுப்ரஜன் ஆகியோர் தங்கள் சங்குகளை எடுத்து முழக்கினர். அப்பால் துந்துபி, துர்ஜயன், சுஜலன், சுமுகன் ஆகியோரும் சங்கொலி எழுப்ப கௌரவப் படையின் முரசு வெற்றி வெற்றி வெற்றி என ஓசையிடத் தொடங்கியது.

கௌரவர்களின் வெற்றிச்சங்கொலி ஓர் அறைகூவலென எழ பாண்டவப் படை வளையும் வில்லின் நாண் என தளர்ந்தது. “தளருமிடத்தில் தாக்குக… விரிசல் விழுந்த இடத்தை உடைத்து உட்செல்க… அங்கே அனைவரும் வேல்முனை என குவிக!” என சகுனியின் முரசு பின்பக்கம் ஆணையிட்டது. லட்சுமணன் தன் தம்பியருக்கு கையசைவால் ஆணையிட்டுக்கொண்டு பாண்டவப் படைகளை தாக்கினான். தித்திரகுலத்து இளவரசர்களான சங்கபிண்டனையும் கர்க்கரனையும் அகர்க்கரனையும் வீழ்த்தினான். அவர்களின் தந்தை பகுமூலகன் அதை கண்டு உரக்கக் கூவியபடி வில்லுடன் வந்தான். அவனை துருமசேனன் கொன்றான்.

விந்தியமலைச்சரிவின் துந்துபக் குலத்து விரஜஸ் தன் மைந்தர்கள் சாலி, உபசாலி, பத்மசாலி ஆகியோருடன் லட்சுமணனை எதிர்கொண்டான். அவர்களை லட்சுமணன் தடுக்க அவனுக்கு வலப்பக்கமாக வந்த விதர்ப்பநிலத்தின் தண்டகத் தொல்குடியின் அரசர் கௌணபர் தன் மைந்தர்களான சரணனும் மானசனும் கோடிசனும் துணைவர அவனை பக்கவாட்டில் தாக்கினார். அவர்களை துருமசேனனும் இளையோர் சுபூதன், சுபாதன், பாவகன், பரமன் ஆகியோரும் எதிர்த்தனர். அந்த இடைவெளியில் அலம்புஷன் தன் சிறிய அரக்கர் படையுடன் பாண்டவர்களை கோடரியால் என வெட்டிப்பிளந்து உள்ளே சென்றான்.

லட்சுமணன் இடியோசைபோல் எழுந்த முரசுகளின் முழக்கத்தை கேட்டான். போர்க்களத்தில் அப்புதிய ஒலி அனைவரையும் திகைத்து திரும்பிப்பார்க்கச் செய்தது. எதிரே வந்துகொண்டிருந்த பாண்டவர்களின் தேர்கள் மீதாக கரிய

பேருருவர்கள் விண்ணிலிருந்து தொங்கும் விழியறியா சரடில் தொங்கி பறந்து அணுகுபவர்கள்போல் பாய்ந்து வந்தனர். ஒரு தேர் முகடிலிருந்து பிறிதொன்றுக்குத் தாவுகையில் அவர்கள் மடிந்து உடலோடு ஒட்டிய தவளைக்கால்களும் நண்டுக்கொடுக்குபோல் இருபுறமும் விரிந்த பெருங்கைகளும் கொண்டு தெரிந்தனர். “மாபெரும் வௌவால்கள்போல!” என்று துருமசேனன் கூவினான். “கடோத்கஜர்!” என கௌரவப் படை கூச்சலிட்டது.

இடக்கையிலிருந்த இரும்புக்கொக்கி கொண்ட கயிற்றால் வீசி அறைந்து பற்றிய தேர்முகடை அவ்விசையாலேயே உந்தி மீண்டும் எழுந்தனர் இடும்பர். வலக்கையில் இரும்புக்கல்லாலான கதாயுதம் வானிலிருந்து பாறை விழுவதுபோல தேர்களையும் யானை முதுகுகளையும் புரவித்தலைகளையும் அறைந்து உடைத்தது. தேருடன் அவர்கள் அறைந்து உடைக்க தம்மை காக்கும் வழியேதுமின்றி சிம்புகள் நடுவே சிதைந்து அமைந்தனர் வில்வீரர். வாயால்தான் அம்முழவொலியை அவர்கள் எழுப்புகிறார்கள் என்று தெரிந்தது. அது அவர்களுக்கே உரிய ஒரு தனி மொழியாக ஒருவரோடொருவரென அவர்களை கோத்தது.

“சிலந்திகள்!” “வெறிகொண்ட வல்லூறுகள்!” என கௌரவப் படை கூச்சலிட்டது. கொக்கியால் பற்றப்பட்ட தேர்கள் எரிநோக்கி சருகுகள் என அவர்களை அணுகி உடைந்து தெறித்தன. அவர்களின் கதைகள் சுழன்றெழுந்தபோது குருதிச்சரடு வானில் வளைந்து பறந்தமைந்தது. அந்த வெறி கௌரவப் படைகளை அச்சுறுத்த தேர்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி தயங்கின. அத்தயக்கமே அவர்களை எக்காவலுமில்லாமல் அவர்கள் முன் கொண்டு நிறுத்தியது. உடைந்து தெறிக்கும் தேர்களும் புரவியின் தலைகளும் குருதிக் குமிழிகளென சிதைந்து பறந்த தலைகளுமென அவர்கள் வந்த வழியின் தடம் நதிவற்றிய பரப்பென செஞ்சேற்றில் சருகுகளும் தடிகளும் படிந்து விழிக்கு புலப்பட்டது.

அவர்களில் எவர் கடோத்கஜன் என்று உய்த்துணரக் கூடவில்லை. அனைவரும் ஒன்றுபோலிருந்தனர். பின்னர் அவன் கடோத்கஜனை அடையாளம் கண்டான். அவனுடைய வாயிலிருந்து எழும் ஒலியே பிறரை ஆள்கிறதென்று அப்போது உணர்ந்தான். அவன் கையிலிருந்த கதாயுதம் மலையில் வெட்டி வெப்பத்தில் அறைந்துருட்டி எடுக்கப்பட்ட இரும்புக்கல்லால் ஆனது. பிறர் அதை அசைக்கவும் இயலாத எடை கொண்டது. இடக்கையில் நீண்ட சங்கிலியால் தொடுக்கப்பட்ட கொக்கி இருந்தது. சினம் கொண்ட நாகமென காற்றில் எழுந்து வளைந்து பறந்து அக்கொக்கி தேர்களின் குவடுகளிலும் தூண்களிலும் கவ்விக்கொண்டது.

பெருந்தோளால் தேர்களை சுண்டி இழுத்து அருகணையச்செய்து அவ்விசையாலேயே தானும் தேரை நோக்கி தாவி எழுந்து வலக்கையிலிருந்த கதாயுதத்தால் ஓங்கி அறைந்து தேருடன் வில்லவனையும் சிதறடித்துவிட்டு அவனுக்கு என்ன ஆயிற்று என்று அரைக்கணமும் திரும்பி நோக்காமல் மறுதிசை நோக்கி பாய்ந்தான். அவர்கள் ஒவ்வொருவரும் அவனைப்போன்றே இருந்தனர். வெறும் கொலைவிலங்குகள். அல்லது மண் வெடித்துத் திறந்த வழியினூடாக பெருகி எழுந்து வந்த அதலத்து தெய்வங்கள்.

அவர்கள் களத்தில் போரிடும் முறை கௌரவ வீரர்கள் தேர்ந்து பயின்றதற்கு முற்றிலும் வேறாக இருந்தது. விண்ணிலிருந்து என வரும் அத்தாக்குதலை எதிர்கொள்ள அவர்களால் இயலவில்லை. அம்புகள் அவர்களை நோக்கி சென்றபோதுகூட பெரும்பாலும் இடைக்குக் கீழே தொடைக்கவசங்களில் பட்டு தெறித்தன. நிலத்தூன்றிய வில்லை தலைக்குமேல் தூக்கி குறிபார்க்க இளைய கௌரவர்களால் இயலவில்லை. அவர்கள் அம்புகள் விசையுடன்

நெடுந்தொலைவுக்கு செல்வதற்காக தேர்த்தட்டில் ஊன்றி தலைக்குமேல் நிற்கும் பெரிய நிலைவிற்களுடன் வந்திருந்தனர். ஒற்றைக்கையால் அவற்றை தலைக்குமேல் தூக்கியபோது நிலை பிறழ அம்புகள் இலக்கு தவறின.

லட்சுமணன் தன் வில்லை தாழ்த்தி நீளம்புகளை குறிபார்த்து இடும்பர்களை நோக்கி எய்தான். பேருருவன் ஒருவனின் நெஞ்சக்கவசத்தை பிளந்து அடுத்த அம்பை அவ்விடைவெளியில் செலுத்துவதற்குள் வில் இருமுறை துடித்து அவன் கையிலிருந்து நழுவியது. அடுத்த அம்பை அவன் எடுத்தபோது உடைந்த கவசத்துடன் அவ்விடும்பன் அவன் தேருக்கு முன்னால் வந்திருந்தான். அவன் கதை சங்கிலி குலுங்கும் ஓசையுடன் மேலெழுவதை விழியாலோ செவியாலோ அன்றி வேறேதோ புலனால் லட்சுமணன் உணர்ந்தான். மறுகணம் அவன் தாவி அப்பால் வந்துகொண்டிருந்த யானை ஒன்றின் விலாவில் சுற்றப்பட்டிருந்த கயிற்றில் படுத்து தொங்கி விலகிக்கொள்ள அவன் இருந்த தேர் அறைபட்டு நூறாயிரம் சிம்புகளாக மாறி தெறித்தது.

லட்சுமணன் "தேர்! தேர் அளியுங்கள் எனக்கு!" என்று கூவுவதற்குள் அவ்விடும்பன் அவனுக்கு முன்னால் வந்த பிறிதொரு தேர்மேல் கால் ஊன்றி மேலெழுந்து அவன் தொங்கிக்கொண்டிருந்த யானையின்மேல் கதாயுதத்தால் ஓங்கி அறைந்தான். அலறியபடி உள்ளுடல் உடைய அது பக்கவாட்டில் சரிந்தது. அதனுடன் தானும் விழுந்த லட்சுமணன் அடுத்த கதாயுதம் தன்னை அறைவதற்குள் நகர்ந்து இரண்டாவது அறையில் சிதைந்து துதிக்கை குழாய் வழியினூடாக குருதி பீறிட செவியில் குருதிக்கொப்புளங்கள் வெடிக்க கால்கள் விலுக்கிட்டு துடித்துக்கொண்டிருந்த யானைமேல் கால் வைத்ததும் அவன் முன் வந்து நின்றான் இடும்பன்.

லட்சுமணன் மேலும் மேலுமென பின்னகர்ந்தபடி அவனை எதிர்கொள்வதெப்படி என்று எண்ணினான். அடுத்த அறையை தாவி தவிர்த்து அங்கு நின்றுகொண்டிருந்த வில்லவன் ஒருவனின் தேரிலேறிக்கொண்டான். அவனிடம் "பின் செல்க! பிறிதொரு தேர் கண்டடைக!" என்று கூவியபடி அவன் வில்லை வாங்கிக்கொண்டான். இடும்பன் கொக்கியை அவன் தேர் நோக்கி வீச ஒற்றை அம்பால் அக்கொக்கியின் கண்ணியை உடைத்தான். அடுத்த அம்பு இடும்பனின் கால்மேல் பட்டது. எண்ணி அனுப்பியதல்ல அது. ஆனால் உள்ளுறையும் உயிர்விசை அதை கண்டுகொண்டிருந்தது. காலில் பட்ட அம்புடன் அலறியபடி இடும்பன் நிலத்தில் விழுந்தான். அவன் மறுமுறை எழும்போது பேருடலின் எடை தாங்காத கால் பிறழ லட்சுமணனின் அம்பு அவன் நெஞ்சக்கவசம் அகன்ற இடத்தில் ஆழத் தைத்தது. அவன் மல்லாந்து விழுந்தபோது முழு விசையுடன் அடுத்த அம்பை செலுத்தி அவன் நெஞ்சை பிளந்தான்.

தேரை திருப்பியபடி லட்சுமணன் உரக்க கூவினான். "அவர்களின் கால்களை மட்டும் நோக்குக! கால்களுக்கென மட்டும் அம்பு விடுக!" அவன் கூச்சலை சொல்நோக்கிகள் விழிகூர்ந்து அறிந்து முழவொலியாக்க "கால்களை நோக்குக! கால்களை நோக்குக!" என்று முரசுகள் விம்மின. இடும்பர்கள் பேரொலி எழுப்பி அவனை சூழ்ந்துகொண்டனர். தேரை மேலும் மேலும் பின்னுக்கு விலக்கியபடி லட்சுமணன் அவர்களின் கால்களை நோக்கி அம்புகளை செலுத்தினான்.

ஆனால் விரைவிலேயே இடும்பர்கள் அதை உணர்ந்துகொண்டனர். நிலத்துக்கு வராமல் தேர்முகடுகள் மீதும் யானைகள் மீதும் மட்டுமென தாவி போரிட்டனர். வானில் எழுகையில் அவர்கள் தலைக்குமேல் சென்றுவிட்டிருந்ததனால் அம்புகள் சென்றடையவில்லை. லட்சுமணன் இயல்பாக நிலத்தில் கால் மடித்தமர்ந்து

அம்பொன்றை செலுத்த இடும்பன் ஒருவன் அலறியபடி அவன் தேர்மேலேயே விழுந்தான். தேர்க்குதிரைகள் கால் விலக்கி கனைத்தபடி சிதற அவன் தேர்நிலையழிந்தது. லட்சுமணன் ஒருக்களித்து படுத்தபடி வில்லை இழுத்து அம்பை அவன் கால் நடுவே மீண்டும் செலுத்தினான். இடும்பன் பேரம்பு தன் உடலில் தைக்க இரு கைகளையும் நிலத்தில் அறைந்தபடி எழுந்து நிலைகொள்ள முடியாது இருபுறமும் அசைந்து விழுந்தபோது அவன் தலையை துண்டித்தது அடுத்த அம்பு.

“படுத்துக்கொள்ளுங்கள்! தேரில் படுத்தபடி அம்பெய்யுங்கள்!” என அவன் கூவினான். “தேரில் படுத்துக்கொள்ளுங்கள்!” “படுத்துக்கொள்ளுங்கள்!” என்று முழவுகள் ஒலித்தன. கௌரவப் படையினர் அதற்குள் பல துகள்களாக சிதறியவர்கள்போல அகன்றுவிட்டிருந்தனர். இளைய கௌரவர்களின் தேர்கள் மட்டும் இடும்பர்களை சூழ்ந்துகொண்டிருந்தன. லட்சுமணன் அம்புகளைச் செலுத்தி அவர்களை தடுத்து விசையிழக்கச் செய்தபடி களத்தில் நின்று “சூழ்ந்து கொள்க! இடைவெளி விடாதீர்கள்! இடைவெளி விடாதீர்கள்!” என்று கூவினான். ஆனால் கௌரவப் படையினர் மீதூறும் அச்சத்தால் நெடுந்தொலைவுக்கு விலகிச் சென்றுவிட்டிருந்தனர். “அணுகுக! அணுகுக!” அவர்களுக்குப் பின்னால் சகுனியின் ஆணை முழவொலியாக எழுந்துகொண்டே இருந்தது.

லட்சுமணன் அருகே கணுமூங்கிலில் எழுந்தமைந்த தொழும்பன் நோக்கிக்கூற அப்பால் வலப்பக்கம் பீமனும் துச்சாதனனும் வெறிகொண்ட போரில் ஈடுபட்டிருப்பதை அறிந்தான். நெடுந்தொலைவில் சாத்யகியும் சுருதகீர்த்தியும் இணைந்து துரியோதனனை செறுத்துவிட்டிருந்தனர். இடும்பர்கள் கணந்தோறும் பெருகுபவர்கள் போலிருந்தனர். தன்னால் அவர்களை முழுமையாக எதிர்கொள்ள இயலாது என்று அவனுக்கு புலப்பட்டது. கதாயுதத்தால் மட்டுமே எதிர்கொள்ளத்தக்க தோள்வலர்கள் அவர்கள். அவர்களை எதிர்கொள்ளும் விசை பால்ஹிகரிடமும் துரியோதனனிடமும் துச்சாதனனிடமும் மட்டுமே உண்டு. “படை உதவி! படை உதவி வருக!” என்று லட்சுமணன் கூவினான். “இதோ வந்துகொண்டிருக்கிறது… செறுத்து நிற்கவும்” என்று சகுனியின் அறைகூவல் எழுந்தது.

லட்சுமணன் தன்னைச் சுற்றி கௌரவ மைந்தர்களின் தேர்கள் உடைந்து தெறிப்பதை உணர்ந்தான். இடும்பன் ஒருவனை நீள்வேல் கொண்டு குத்தி அவ்விசையாலேயே தேரிலிருந்து எழுந்து அதில் தொங்கிச் சுழன்று இறங்கி அவ்வேலை உருவ முயன்றபோது எதிரே முழக்கமிடும் கரிய முகில்போல் கடோத்கஜனை கண்டான். வேலை விட்டுவிட்டு தன் தேரை நோக்கி ஓடினான். கடோத்கஜன் அவனுக்கெதிர் வந்த இரண்டு வில்தேர்களை அறைந்து நொறுக்கிவிட்டு லட்சுமணனை நோக்கி வந்தான். லட்சுமணன் பாய்ந்து இளையவன் படவாஸகனின் தேரிலேறிக்கொள்ள அத்தேரை அறைந்து உடைத்த கடோத்கஜன் பெருங்கூச்சலிட்டான்.

கதை சுழன்று மேலெழும் விம்மலோசையிலேயே தேரிலிருந்து தாவும் உணர்வை அடைந்துவிட்டிருந்த லட்சுமணன் அவ்வறையிலிருந்து தப்பினான். ஆனால் படவாஸகனின் கொழுங்குருதி அவன் மேல் வெஞ்சேறென தெறித்தது. மேலும் மேலுமென இடும்பர்கள் சூழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு எதிரே வந்த இடும்பன் ஒருவனை இளையோனாகிய கூர்மன் தன் அம்பால் அறைந்தான். அவ்வம்பை கவசத்திலிருந்து பிடித்து அப்பால் இட்டபின் ஓங்கி அவனை அறைந்து கொன்றான் இடும்பன். அப்போர் வெறும் படுகொலையாக நிகழ்ந்துகொண்டிருந்தது.

சல்யரின் மைந்தர்கள் இருபுறமும் தேரில் வந்து சூழ்ந்தனர். “எங்களை அரசர் இங்கு வரச்சொன்னார். இடும்பர்களை தடுத்து நிறுத்தச்சொன்னார்” என்று கூவினான் ருக்மாங்கதன். “வில் ஒழியும் மட்டும் போர் புரிவோம், இளவரசே” என்றான் ருக்மரதன். “அதற்குள் அவர்கள் வந்துவிடுவார்கள்.” அவர்கள் இருவரும் தேரில் முட்டு மடக்கி படுத்தபடி இடும்பர்களின் கால்களை நோக்கி அம்பெய்தனர். இரு இடும்பர்கள் அலறியபடி நிலம்சரிய லட்சுமணன் அவர்களை அம்பெய்து கொன்றான். தேரின்மேல் தாவி வந்திறங்கிய கடோத்கஜன் ஒரே சுழற்றலில் ருக்மாங்கதனையும் ருக்மரதனையும் கொன்றான். ருக்மரதனின் தலை உடலில் இருந்து பறந்து நிலத்தில் எடையுடன் விழுந்தது. அதிலிருந்து உயிருள்ள சிப்பிகள்போல விழிகள் வெளியே தெறித்து குருதிக்குழாய்ச் சரடில் தொங்கின.

இடும்பர்கள் வெறியுடன் நெஞ்சிலறைந்து கூச்சலிட்டனர். போர் மேலும் விசை கொண்டது. “அரசர் முன்னேறுக! இளையோரை துணை செய்க!” என்று சகுனியின் முழவொலி எழுந்துகொண்டிருந்தது. எவராலும் எதிர்க்கப்படாமல் இடும்பர்கள் மேலும் மேலுமென படைக்குள் புகுந்தனர். விந்தையான அவர்களின் குரல் அனைத்து செவிகளையும் மலைக்க வைத்தது. தோன்றும் இடத்திலிருந்து அக்கணமே எழுந்து மறையும் அவர்களின் விசை விழிகளை குழப்பியது. அவர்களை நோக்கி செலுத்தப்பட்ட அம்புகள் அனைத்தும் வீணாயின.

பீஷ்மர் தொலைவில் அவர்களை கண்டார். “செல்க! அவனை நோக்கி செல்க!” என்று அவர் தேரோட்டியிடம் தன் கைகளைக் காட்டுவதை காண முடிந்தது. ஆனால் அவரைச் சூழ்ந்திருந்த திருஷ்டத்யும்னனும் நகுலனும் சகதேவனும் சலிக்கா தொடர் அம்புகளால் அவரை சூழ்ந்து வேலியிட்டனர். மறுபக்கம் ஜயத்ரதன் சினந்து கடோத்கஜனை நோக்கி வர அர்ஜுனன் அவனை தடுத்து நிறுத்தினான். பூரிசிரவஸ் மிக அப்பால் துருபதனை எதிர்கொண்டான்.

உடைந்து புரண்டு மலையிறங்கி வரும் பாறைத்திரள்போல கடோத்கஜனின் படை கௌரவப் படையினரை சிதறடிப்பதை லட்சுமணன் கண்டான். “விரைக! விரைக! அவனை சூழ்ந்துகொள்க!” என்று தன் தம்பியருக்கு ஆணையிட்டு அவர்கள் அரைவட்டமென தன்னை சூழ்ந்து வர நாண் முழக்கியபடி கடோத்கஜனை நோக்கி சென்றான். அவன் முதலில் விட்ட அனைத்து அம்புகளும் வீணாயின. அம்பு தொடுக்கும் விரைவைவிட அவர்கள் எழுந்து தாவிச்செல்லும் விரைவு மிகுதியென அவன் அறிந்தான். அம்புகள் அவர்களை கரும்புகையை என கடந்துசெல்வதுபோல தோன்றியது. மானுடப் படைக்கலங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அவர்கள் என்று நெஞ்சு மலைத்தது.

கடோத்கஜன் லட்சுமணனை நோக்கி வரும் வழியிலேயே துந்துபி, துர்ஜயன், சுஜலன், சுமுகன் ஆகியோரை தலையுடைத்துக் கொன்றான். ஒரு கணம் விழிமுனையால் தன் உடன்பிறந்தோர் சிதைந்து தேரின் உடைசல்களுக்கு நடுவே கிடப்பதைக் கண்டதும் லட்சுமணனின் தொடை துடிக்கத் தொடங்கியது. சுபூதன், சுபாதன், பாவகன், பரமன் ஆகியோர் வீழ்ந்தனர். ஹிரண்யபாகு, கக்ஷிகன், பிரகாலனன், சுரபன், பங்கன், சலகரன், மூகன், முத்கரன், சுரோமன், மஹாஹனு, உச்சிகன், பிச்சாண்டகன், மண்டலகன் என கௌரவ மைந்தர் அறைபட்டு விழுந்தபடியே இருந்தனர். “நூறுக்குமேல் தம்பியர் கொல்லப்பட்டுவிட்டனர், மூத்தவரே” என கண்ணீருடன் துருமசேனன் கூவினான். லட்சுமணன் தன் நெஞ்சு ஒரு பெரும்பாறை என எடைகொண்டிருப்பதை உணர்ந்தான். “உளம் சலிக்கலாகாது. என் கை தளரலாகாது…” என அவனே தனக்கு ஆணையிட்டுக்கொண்டான். “தெய்வங்களே! மூதாதையரே! உடனிருங்கள்… தெய்வங்களே!”

காற்றில் உதிர்ந்த பல அம்புகளுக்குப் பின் பறக்கும் இடும்பர்களை அம்பால் தாக்கும் பிறிதொரு முறையை லட்சுமணன் கற்றுக்கொண்டான். அவர்கள் தாவி எழுகையில் கால்களால் உந்தப்பட்டு அசையும் தேரின் எதிர்த்திசையில் அவர்களின் நீள் நிழல்களுக்கு மேல் வான்நோக்கி அம்பால் அறைந்தான். நிழல் தலைக்கு மேல் தாவிச்சென்ற அவர்களை அடையாளம் காட்டியது. அவனுடைய அம்புகள் பட்டு முதல் இடும்பன் அலறியபடி தேர் மேல் விழுந்தான். துருமசேனன் “மூத்தவரே, கற்றுக்கொண்டேன்” என்று கூவினான்.

ஆனால் ஆள்நீளப் பேரம்புகூட அவர்களின் உயிர்பறிக்க இயலவில்லை. நெஞ்சில் பாய்ந்து இறங்கிய வேலம்பின் முனையை ஒடித்தெறிந்துவிட்டு பெரும்பற்கள் தெரிய முழவோசை எழுப்பி கைகளால் அருகிருந்த தேர்களையும் புரவிகளையும் அறைந்துடைத்தபடி அவன் அம்பு வந்த திசை நோக்கியே மீண்டும் வந்தான். லட்சுமணன் அவன் கால்களில் அம்பை செலுத்தினான். ஆனால் தோள்களே அவர்களின் கால்களும் என்று தெளிய தோள்கவசத்தையே குறிவைத்து அடித்தான். அது உடைந்து தெறித்த இடைவெளியில் அம்புகளால் அறைந்தபோது விசையிழந்து இடும்பன் நிலையழிந்தான். மீண்டும் மீண்டுமென அம்பு செலுத்தி அவன் இரும்புக்கவசங்களை உடைத்து உயிரை அணைக்க வேண்டியிருந்தது.

எழுவரை வீழ்த்தி முடிப்பதற்குள் அம்பறாத்தூணி ஒன்று முடிந்தது. துருமசேனன் இடும்பர் மூவரை வீழ்த்திவிட்டு “மூத்தவரே, பாறைகள்மேல் அம்பெய்வது போலிருக்கிறது” என்று கூவினான். “பறக்கும் யானைகள்போல் இருக்கிறார்கள்” என்றான் இளையோன் பிரவேபனன். மறுகணமே அவன் தலை கதையால் அறைபட்டு சிதறியது. “மூத்தவரே!” என அலறிய அமாகடன் கொக்கி ஒன்றால் பருந்தின் உகிரால் என கவ்வப்பட்டு வானிலெழுந்து சுழன்று தரைமேல் அறைபட்டான். அவன் தலையை ஒரு கதை அறைந்து சிதறடித்தது.

மழையில் மலை என கடோத்கஜனின் கவசங்களிலிருந்து குருதி வழிந்தது. அவன் கதை மாபெரும் ஊன்துண்டு என சிவந்திருந்தது. அது அதிர்வதுபோல் உளமயக்கு எழுந்தது. அவனை எதிர்கொள்ள முடியாமல் துருமசேனன் பின்னகர்ந்தான். கௌரவ மைந்தர்களான பூர்ணாங்கதன், குடாரமுகன், பூர்ணன், அவ்யகன், கோமலகன், வேகவான், ரக்தாங்கன் ஆகியோர் உடலுடைந்து விழுந்தனர். பைரவன், பிசங்கன், சம்ருத்தன், படாவாசகன், வராகன், தருணகன், துர்ப்பிரபன், துர்க்கிரமன் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஒருவனை ஒருகணத்திற்கு மேல் கடோத்கஜன் நோக்கவில்லை. ஓர் அறைக்குமேல் வீழ்த்தவில்லை. விழிகள் அசையும் விரைவில் கதை பறப்பதை லட்சுமணன் அன்றுதான் கண்டான்.

“மைந்தர் விலகுக… கடோத்கஜனிடமிருந்து மைந்தர் அகல்க… அரசரும் இளையோரும் அவனை சூழ்க!” என்று பின்னால் முரசுகள் ஓசையிட்டன. பாண்டவப் படையால் சூழப்பட்டிருந்த அலம்புஷனும் அவன் துணைவரும் அந்த வளையத்தை உடைத்துக்கொண்டு பேரோசையுடன் கடோத்கஜனை நோக்கி வந்தனர். இடும்பர்களும் ஊஷரர்களும் கதைமுட்டிக்கொண்டனர். கொக்கிக்கயிறுகளை வீசி ஒருவரை ஒருவர் இழுத்து கதையால் அறைந்தனர். ஏழு இடும்பர்களைக் கொன்று யானையொன்றின் மேல் கால்வைத்து ஏறிய அலம்புஷன் சகுண்டனுடன் கோத்துக்கொண்டான். உறுமியபடியும் கூச்சலிட்டபடியும் இருவரும் கொக்கியாலும் கதையாலும் போரிட்டனர்.

லட்சுமணன் இரண்டு இடும்பர்களை வீழ்த்தியபின் கடோத்கஜனை அணுகினான். அம்பைச் செலுத்தி அவன் கவசத்தை உடைத்தபோதுதான் அது கடோத்கஜனின் துணைவனாகிய உத்துங்கன் என்று தெரிந்தது. அவன் வீசிய கொக்கிக்கயிறு

லட்சுமணனின் தேர்த்தூணில் பற்றிக்கொள்ள இழுவிசையால் தேர் சரிந்து முன்னால் சென்றது. கதை வருவதற்குள் லட்சுமணன் பாய்ந்து அப்பால் குதித்தான். தன் கதையுடன் பாய்ந்து யானையொன்றின் மேலேறி நின்றபடி மேலெழுந்த உத்துங்கனின் விலாவை அறைந்தான். உடைந்த கவசத்துடன் கீழே விழுந்த உத்துங்கன்மேல் பாய்ந்து அவன் தலையை கவசத்துடன் அறைந்து உடைத்தான்.

இடும்பன் ஒருவனை கொன்றபின் துருமசேனன் “மூத்தவரே, நோக்குக!” என்று கூவினான். கடோத்கஜன் அவன் இளையோர் துர்த்தகன், ராதன், கிருசன், விகங்கன், ஹரிணன், பாராவதன், பாண்டகன் ஆகியோரை கொன்றபடியே அவனை நோக்கி வந்தான். லட்சுமணன் திரும்பி ஓடி பிறிதொரு தேரில் ஏறிக்கொள்ள தங்கள் தேர்களுடன் குண்டாசியின் மைந்தர் தீர்க்கநேத்ரனும் சுரகுண்டலனும் ஊடே புகுந்தனர். “இவர்கள் இங்கே எப்படி வந்தனர்?” என்று லட்சுமணன் கூச்சலிட்டான். “அவர்களை பின்னகரச் சொல்... பின்னகர்க! பின்னகர்க!”

அவன் தன் வில்லை எடுத்து அம்பு தொடுத்தபடி முன்னே செல்ல மிக அருகே பெரும்பற்களுடன் அறைகூவல் எழுப்பிய இடும்பன் ஒருவனை நீள் வேலால் ஓங்கி நெஞ்சில் குத்தி அவ்வேல் நுனியில் பற்றி தாவிப் பறந்து பிறிதொரு தேரிலேறிக்கொண்டான். இடும்பன் அந்த வேலுடனே எழுந்து அவன் தேரை அறைந்து உடைத்து தேர்ப்பாகனுடன் அள்ளி அப்பாலிட்டான். நுகத்தில் இருந்து சரிந்த புரவிகளை வெறிகொண்டு கைகளால் அறைந்து உடைத்தான். இன்னொரு வேலால் அவன் கழுத்தை ஓங்கிக் குத்தி சரித்தான் லட்சுமணன். அதற்குள் கடோத்கஜன் தீர்க்கநேத்ரனையும் சுரகுண்டலனையும் அணுகினான். அவர்கள் செயலிழந்து வெறித்து நோக்கிநிற்க அரைக்கணமும் விழிநிலைக்காமல் இரண்டு அறைகளால் அவர்களை நசுக்கியபடி அவன் முன்னால் சென்றான்.

சகுண்டனைத் தூக்கி மண்ணில் அறைந்து அவன் தலையை உடைத்தபின் நிமிர்ந்த அலம்புஷனை நோக்கி வந்து கதையால் அவன் தோளை அறைந்தான் கடோத்கஜன். அலம்புஷன் தெறித்து அப்பால் விழுந்து அவ்விசையாலேயே உருண்டு எழுந்து கதையையும் கொக்கிக்கயிற்றையும் எடுத்துக்கொண்டு கடோத்கஜனை முகம்கொண்டான். இருவரும் கதாயுதங்களால் அறைந்தனர். பாய்ந்தெழுந்து வானில் முட்டிக்கொண்டு அப்பால் சென்றிறங்கி அங்கிருந்து கழுகென மீண்டும் காற்றில் எழுந்தனர்.

“இவர்களைத் தடுக்க நம்மால் இயலாது. தந்தையர் வரவேண்டும்” என்றான் லட்சுமணன். “தந்தையர் வரவேண்டும்! தந்தையர் வருக!” என முழவுகள் அவன் ஆணையை ஒலிக்கத் தொடங்கின. அலம்புஷனைத் தூக்கி அறைந்து வெறும் கைகளால் அவன் தலையைப்பற்றி திருப்பி விறகுடையும் ஒலி எழ உடைத்து மும்முறை திருகி பிடுங்கி எடுத்து வலக்கையில் தூக்கி வெறிமுழக்கம் எழுப்பினான் கடோத்கஜன். இடும்பர்கள் நெஞ்சில் அறைந்து முழவுக்குரல் எழுப்பி அவனை சூழ்ந்துகொண்டனர்.

லட்சுமணன் எடுத்த அம்பு காற்றில் திகைத்து நிற்க விழிநிலைத்து நோக்கிக்கொண்டிருந்தான். அக்களத்தில் இருக்கும் எவரையுமே கடோத்கஜன் முன்பு அறிந்திருக்கவில்லை. வஞ்சமோ பகையோ அவனுக்கில்லை. அக்கள வெற்றியால் அவன் அடைவதும் ஒன்றுமில்லை. அதனாலேயே விழைவும் வஞ்சமும் கொண்டவர்களைவிட கொடிய போர்வீரனாக அவன் இருந்தான். அவன் அறியாமல் மேலும் மேலுமென பின்னகர்ந்தான். கடோத்கஜன் கதையையும் கொக்கிக்கயிற்றையும் சுழற்றியபடி அணுகி வந்தான். அலம்புஷர்கள் முழுமையாகவே கொல்லப்பட்டுவிட்டிருந்தனர். “வருக! வருக, இளவரசே! இன்று என்

கணக்கில் நீங்களும் உண்டு!” என்று கூவியபடி கடோத்கஜன் அவனை நோக்கி வந்தான். “ஆம், இது என் தம்பியருக்காக!” என்று கூவியபடி லட்சுமணன் அவனை நோக்கி கதையுடன் பாய்ந்தான். “வேண்டாம் மூத்தவரே, பின்னகர்க!” என துருமசேனன் அவனுக்குப் பின்னால் கூச்சலிட்டான்.

கடோத்கஜனின் கதையும் அவன் கதையும் முட்டிக்கொண்டன. இரண்டாம் அறையிலேயே அவன் கதை தெறித்தது. கடோத்கஜனின் கதை அறைய அவன் உருண்டு விலகினான். தரையிலிருந்து வெடித்தெழுந்த செம்மண்ணும் கற்களும் அவன்மேல் பெய்தன. கொக்கி அவன் கவசத்தை பற்ற அவன் அதை தலைவழியாக கழற்றிவிட்டு தப்பி தாவி எழுந்து அகன்றான். வாய் முழவென ஒலிக்க பெரிய பற்களைக் காட்டி சிரித்தபடி கடோத்கஜன் அவனை அணுகினான்.

அப்பால் முரசொலி எழுந்ததும் லட்சுமணன் உடல்தளர்ந்தான். பாண்டவர்களின் சூழ்கையை உடைத்துக்கொண்டு துரியோதனனும் துச்சாதனனும் தேர்களில் அணுகி வந்தனர். துரியோதனன் வந்த விசையிலேயே கடோத்கஜனை கதையால் சந்தித்தான். நான்குமுறை அறை விழுந்ததுமே நிலைதடுமாறி பின்னால் சரிந்த கடோத்கஜன் துரியோதனனின் ஆற்றலை புரிந்துகொண்டு பாய்ந்து தேர்களுக்குமேல் தாவினான். துரியோதனன் யானை ஒன்றின்மேல் ஏறிக்கொண்டு கதையால் அவனை அறைந்தான். துச்சாதனன் யானைபோல பிளிறியபடி துரியோதனனை தாக்க எழுந்த இரு இடும்பர்களை கதையால் அறைந்து கொன்றான்.

துரியோதனனின் அறை நெஞ்சுக்கவசத்தை உடைக்க, அடுத்த அறைக்குத் தப்பி எழுந்து பறந்த கடோத்கஜன் துரியோதனன் கையிலிருந்து நீண்ட சங்கிலியில் பறந்து வந்த கதையால் அறைபட்டு பேரோசையுடன் தேர்மகுடம்மேல் விழுந்து மண்ணை அறைந்தான். துச்சாதனன் வெறிக்கூச்சலுடன் அவன் தலையை அறையப்போக அவன் கையை ஊன்றி எழுந்து பின்னால் தாவி இருமுறை துள்ளி பாண்டவப் படைகளுக்குள் புகுந்துகொண்டான். “தொடர்ந்து செல்க… இன்றே அவ்வரக்கமகனை கொல்க!” என்று துரியோதனன் கூவினான். கௌரவப்படை முரசொலியும் கொம்போசையும் சூழ தொடர்ந்துசென்றது.

கொந்தளிக்கும் படை நடுவே அலையில் எழுந்தமைந்து சுழன்றுகொண்டிருந்த அபிமன்யூவின் வலப்பக்கம் பின்காப்போனாக தேரில் வில்பூண்டு நின்றிருந்தான் பிரலம்பன். சாத்யகி அபிமன்யூவின் தேரிலேறி அதை பின்னால் ஓட்டிச்சென்று படைகளில் ஆழ்த்தி நிறுத்தியபின் பாய்ந்திறங்கி மீண்டும் தன் தேரிலேறிக்கொண்டதும் அவன் தேரிலிருந்து இறங்கி அபிமன்யூவை நோக்கி ஓடினான். நேர் எதிராக திருப்பப்பட்டு புரவிகள் கால்விலக அசைவிழந்த தேரிலிருந்து பாய்ந்திறங்கிய அபிமன்யூ “இன்னொரு தேர்! இன்னொரு தேர் கொடுங்கள் எனக்கு!” என்று கூவினான்.

பிரலம்பன் அவன் அருகே சென்று கைகளைப்பற்றி “தாங்கள் புண்பட்டிருக்கிறீர்கள், இளவரசே” என்றான். “இல்லை, எனக்கொன்றும் ஆகவில்லை. என்னை போர்முனையிலிருந்து யாதவர் திருப்பிக்கொண்டுவந்துவிட்டார். இன்று அம்முதியவரின் குருதி கண்டு திரும்புவேன். என்னை எவரும் வெல்லவியலாது. இப்புவியில் எவராலும் இயலாது! இதோ கிளம்புகிறேன்” என்றான் அபிமன்யூ. காய்ச்சலில் பிதற்றுபவன் போலிருந்தான். பிரலம்பன் “பொறுங்கள் இளவரசே,

இக்கவசங்களை கழற்றிப் பார்ப்போம். அம்புகள் ஏதேனும் தைத்திருந்தால் முதலில் அவற்றைப் பிடுங்கி ஊனைத் தைத்து இளகாமல் கட்டுப்போடுவோம்” என்றான்.

“நான் களம்புகுவேன்… களம்புகுவேன்… தேர் கொண்டுவருக!” என்ற அபிமன்யூ அவன் கையை உதறி “விடு, மூடா… என்னை என்ன நோயாளி என்று எண்ணினாயா? விடு!” என்று கூச்சலிட்டான். “ஆம், நாம் மீண்டும் களம்புகவே உறுதி கொண்டுள்ளோம். ஆனால் அதற்கு முன் புண்களை பார்ப்போம். புண்களை கட்டிக்கொண்டால் நாம் மேலும் உறுதிகொண்டு களம்நிற்போம்” என்றான் பிரலம்பன் மீண்டும் அவன் தோளைப்பற்றி நிறுத்தியபடி. “எனக்கு புண்ணில்லை. எங்கே என் தேர்? என் தேரை கொண்டுவருக!” என்று அபிமன்யூ கழுத்துத்தசைகள் இழுபட, நெற்றிநரம்புகள் புடைக்க கூவினான்.

“இளவரசே, போர்க்களத்தில் புண்ணின் வலி தெரியாது… குருதியிழப்போ நரம்பு வெட்டோ நிகழ்ந்திருந்தால் களத்தில் உங்கள் அம்புகள் குறிதவறும்” என்றபின் அபிமன்யூவின் ஒப்புதலின்றியே தோளில் கைவைத்து தோல்பட்டையை இழுத்து அவிழ்த்து மார்புக்கவசத்தை விலக்கினான் பிரலம்பன். அவற்றிலிருந்து குருதி சொட்டியது. தோள்கவசத்தையும் தொடைக்கவசத்தையும் அவிழ்த்தான். அபிமன்யூ குனிந்து பார்த்து “பார்… விரைவாகப் பார்” என்றான். அபிமன்யூவின் உடம்பெங்கும் சிறுபுண்கள் நிறைந்திருந்தன. அறைபட்ட கவசங்கள் உருவாக்கிய சிராய்ப்புகள். சிற்றம்புகளும் உடைந்த தேர்ச்சிம்புகளும் பாய்ந்த ஆழ்புண்கள். தோளுக்கருகே அம்பு ஒன்று ஆழ தறைத்திருந்தது.

“இது ஒன்றுமில்லை. ஒவ்வொருநாளும் இதைவிட அதிகமான புண்ணுடன்தான் பாடி மீள்கிறேன்” என்றான் அபிமன்யூ. பிரலம்பன் “பொறுங்கள்” என்றான். அதற்குள் மருத்துவஏவலர் இரும்புக்கவசங்களை ஆமைஓடுபோல முதுகுக்குமேல் அமைத்து முற்றாக குனிந்து ஊர்ந்து வந்தனர். தலைக்குமேல் அம்புகள் சீழ்க்கை ஓசையுடன், சிறகதிர்வோசையுடன் சென்றுகொண்டிருந்தன. சில அம்புகள் அவர்களின் கவசங்களுக்குமேல் விழுந்து பொறியெழ உரசி அகன்றன. “இங்கே, இங்கே” என பிரலம்பன் கூவினான். அவர்கள் மருந்துப்பெட்டிகளுடன் அருகணைந்து அபிமன்யூவை சூழ்ந்தனர். “இந்தத் தேருக்கு அடியில் அமர்க, இளவரசே! தங்களுக்காக அல்ல, எங்களுக்காக” என்றான் மருத்துவன். அபிமன்யூ தேர்ச்சகடங்களுக்கு நடுவே அமர்ந்தான்.

பிரலம்பன் உடைந்த தேரொன்றின் தட்டை எழுப்பி அதை கொண்டு தன்னை மறைத்துக்கொண்டு அருகே நின்றான். அதன்மேல் அம்புகள் சீற்றம்கொண்ட வண்டுகள் என வந்து அறைந்துகொண்டிருந்தன. அவர்களுக்குப் பின்னால், பாண்டவப் படையின் பின்நிரையிலும்கூட அம்புபட்டு அலறி விழும் வீரர்களின் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. உயரமான பீடத்தேர்களில் நின்று தொலையம்புகளை நீள்வளைவாக வானில் செலுத்தி முன்நிரைப்படைக்கு மேலாக அம்புகளை கௌரவப்படை நோக்கி ஏவிக்கொண்டிருந்தனர் பின்னணி வில்லவர். கௌரவர்களின் தொலையம்புகள் இரைதேடும் கழுகுகள்போல் தலைக்குமேல் பறந்து வந்து விரைந்திறங்கி படையினரை கொன்றன. களத்தில் எங்கு நின்றாலும் வானிலிருந்து சீற்றம்கொண்ட அம்புகள் வந்து உயிர்கொள்ளும் என்று தோன்றியது.

மருத்துவ ஏவலர் அபிமன்யூவை தோள்பற்றி அமரச்செய்து விரைந்த கைகளால் அவன்மேல் தைத்த அம்புகளை பிடுங்கி எடுத்து புண்வாயில் கந்தகமும் மெழுகும் கலந்த பஞ்சை வைத்து அழுத்தி மரவுரியால் கட்டினர். தோள்புண்னை ஒருவன் குதிரைவால் முடியால் தைத்தான். “விரைவு… பொழுதணைந்துகொண்டிருக்கிறது!” என்றான் அபிமன்யூ. “இதோ” என்றான் மருத்துவன். இடையிலிருந்த அம்பு உள்ளே

சற்று திரும்பியிருந்தமையால் தசையை கவ்வியிருந்தது. பிடுங்கியபோது தசை கிழிய அவன் பற்களை இறுகக் கடித்தான். “ஒவ்வொரு புண்ணும் என்னை வெறிகொள்ளச் செய்கிறது. இன்று நூறு தலைகொள்ளாது திரும்புவதில்லை. முதல் தலை அம்முதியவருடையதே. பிரலம்பரே, ஒன்று தெளிந்துவிட்டது. அவரைக் கொன்று குருதியாடாது இப்போர் எவ்வகையிலும் முடிவுறாது” என்றான் அபிமன்யூ.

குதிரை வாலால் கிழிந்த தசையை மூன்று முடிச்சுகள் போட்டு இறுக்கி தேன்மெழுகும் அரக்கும் கலந்த மரவுரியால் இறுக்கிக் கட்டிவிட்டு “தசை மட்டுமே கிழிந்துள்ளது” என்றார் மருத்துவர். “அதை நானே அறிவேன். என் கவசங்களை எடு” என்றபடி அபிமன்யூ எழுந்தான். மருத்துவன் “தாங்கள் விரும்பினால்…” என்று சொல்லி சிறு தாலத்தை நீட்ட அதிலிருந்த இரண்டு அகிபீனா உருண்டைகளை எடுத்தான். “இரண்டு சற்று மிகுதி, இளவரசே” என்று அவன் சொல்வதற்குள் இரண்டையும் வாய்க்குள்ளிட்டு கடைவாயில் அதக்கிக்கொண்டான். அவன் கைகாட்ட ஏவலர் அவன் கவசங்களை இழுத்துக்கட்டினர். “கிளம்புக!” என்று சொல்லி அபிமன்யூ புண்பட்ட குதிரைகளை நீக்கி புண்படாத குதிரைகள் கட்டப்பட்டு ஒருங்கி நின்றிருந்த புதிய தேரில் ஏறிக்கொண்டான்.

தேர்ப்பாகன் நிமிர்ந்து நோக்க “பீஷ்மரின் இடம் நோக்கி” என்றான். தேர்ப்பாகன் தன் சவுக்கை வீச தேர் எழுந்து விசைகொண்டது. உடன்சென்றபடி பிரலம்பன் “நம் படையினர் அதோ தொடர்ந்து பின்வாங்கி வருகிறார்கள். அங்குதான் பீஷ்மர் இருக்கிறார்” என்றான். “பிறை ஏற்கெனவே இரண்டு துண்டுகளாக உடைந்துவிட்டது. அதை இணைக்கும்பொருட்டு திருஷ்டத்யும்னரும் சாத்யகியும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.” அபிமன்யூ “செல்க! செல்க!” என்று கூவினான். தேர் விரைவுகூடியது. முன்னால் நின்றிருந்த தேர்கள் விலகி வழிவிட நீரிலிருந்து மீன் என எழுந்தது.

அபிமன்யூ தொழும்பனிடம் கைகாட்ட அவன் கணுமூங்கிலை ஊன்றி காற்றிலென மேலெழுந்து நோக்கி அதே விரைவில் கீழிறங்கி உரத்த குரலில் “போர் எட்டு முனைகளில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது, இளவரசே. கிருபரும் துரோணரும் ஒருங்கிணைந்து நமது படைகளை தாக்குமிடத்தில் துருபதரும் யுதிஷ்டிரரும் நகுல சகதேவர்களும் அவர்களை தடுத்திருக்கிறார்கள். பீமசேனருக்கும் பால்ஹிகருக்கும் நிகர்ப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. கடோத்கஜர் மீண்டும் களம் புகுந்திருக்கிறார். அவரை கௌரவ நூற்றுவரில் பன்னிருவர் சேர்ந்து எதிர்கொள்கிறார்கள். துரியோதனரும் துச்சாதனரும் களமுகப்பில் நின்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக யுதாமன்யுவும் சிகண்டியும் குந்திபோஜரும் உத்தமௌஜரும் நின்றிருக்கிறார்கள்” என்றான்.

“இளவரசே, பூரிசிரவஸை சத்யஜித் எதிர்கொள்கிறார். சலனை பாஞ்சால இளவரசர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். கிருதவர்மருடன் சுருதகீர்த்தியும் சுருதசேனரும் போரிடுகிறார்கள். லட்சுமணரை சுதசோமரும் துருமசேனரை சர்வதரும் நேரிடுகிறார்கள். கௌரவ மைந்தர்களை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள் சதானீகரும் நிர்மித்ரரும். ஜயத்ரதருடன் அம்புக்கு அம்பு குறைவின்றி போரிட்டுக்கொண்டிருக்கிறார் அர்ஜுனர். நமக்கு வலப்பக்கம் சீற்றம்கொண்டு போரிடும் பிதாமகர் பீஷ்மரை சாத்யகியும் திருஷ்டத்யும்னரும் இருபுறங்களிலாக நின்று தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பீஷ்மருக்கு அரண் என கௌரவப் படையின் விந்தரும் அனுவிந்தரும் கௌரவ இளையோரும் போரிடுகிறார்கள்.”

“ஒவ்வொரு அணுவிலும் முழு விசையுடன் இரு படைகளும் மோதுவதனால் படைமுகப்பு சிதைந்து உடல்களும் உடைசல்களுமாக திரண்டு கொண்டிருக்கிறது. இளவரசே, கௌரவப் படைகள் நம்மை அழுத்தி பின்னகர்த்துகின்றன. பருந்தின் சிறகுகள் நம் படைகளால் தடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் பிறையை கொத்தி கிழித்துக்கொண்டிருக்கிறது கழுகின் தலை. இன்றும் நமக்கு பேரழிவே” என்றான் தொழும்பன். “இன்று அதை மாற்றுகிறேன். இதோ!” என்றான் அபிமன்யூ. “செல்க! செல்க!” என்று கூவி தேர்த்தட்டில் நின்று துள்ளினான். தேர் விரைவழிய போர்முனை தெரியலாயிற்று.

பிரலம்பன் தொலைவிலேயே அருவி வீழ்வதை துமிப் புகையிலிருந்து அறிவதுபோல் பீஷ்மரின் இடத்தை அம்புகள் வழியாக கண்டான். அங்கிருந்து ஓலங்களும் போர்க்கூச்சல்களும் கேட்டுக்கொண்டிருந்தன. அவன் எண்ணியிரா விரைவில் மழைக்குள் நுழைவதைப்போல அந்த அம்புகளின் எல்லைக்குள் தேர் சென்றது. அதன் குடமுகடிலும் தூண்களிலும் தன் கவசங்களிலும் பெய்த அம்புகளால் உலோகமுழக்கம் சூழ்வதை கேட்டான். “மூதாதையரே! தெய்வங்களே!” என்று கூவியபடி பிரலம்பன் தன் வில்லை நாணிழுத்து பற்களை இறுகக் கடித்து முதல் அம்பை பீஷ்மரின் இருபுறமும் வந்துகொண்டிருந்த வில்லவர்களில் ஒருவனை நோக்கி செலுத்தினான். அவன் தலை திருப்பிய அக்கணம் அம்பு தலைக்கவசத்திற்கும் நெஞ்சிற்கும் நடுவே பாய்ந்தது.

உலுக்கிக்கொண்ட உடலுடன் தேர்த்தட்டில் அமர்வதுபோல் விழுந்து தன் இரு கால்களுக்கும் நடுவே தலை பதித்து அவன் விழ தேரோட்டி திரும்பிப் பார்த்தான். புரவியில் அருகே வந்துகொண்டிருந்த வில்லவர்களில் ஒருவன் அக்கணமே விட்டிலென தாவி அத்தேரிலேறி விழுந்த வில்வீரனை புரட்டி கீழே தள்ளி அவன் அம்புகளை தான் எடுத்துக்கொண்டான். அவனை நோக்கி இரண்டாவது அம்பை பிரலம்பன் செலுத்தினான். அது அவன் இரும்புக்கவசத்தை உரசி அப்பால் செல்ல அம்பு வந்த திசையை கணித்து அவன் நாணிழுத்து தன் அம்பை செலுத்தினான். தன் காதருகே விம்மி அப்பால் கடந்து சென்ற அம்பின் விசையை பிரலம்பன் உணர்ந்தான். அடுத்த அம்பால் அவனை வீழ்த்தி மீண்டும் அம்பெடுத்தபோதும் அவன் செவியில் கடந்துசென்ற அம்பின் உறுமல் எஞ்சியிருந்தது. ஓர் எச்சரிக்கை சொல் என.

இக்களத்தில் ஒவ்வொரு அம்புடனும் எத்தனை விசை இணைந்துள்ளது என்று அவன் அகம் திகைத்தது. மலையிறங்கும் பேராறொன்றின் விசையைவிட பல மடங்கு. பெருங்காடுகளை சூறையாடும் புயல் விசையைவிட பற்பல மடங்கு. திறலோர் தோள்களில் திரண்டு வயல்களென, சாலைகளென, மாளிகையென மாறுவது. கால்களில் குவிந்து தொலைவுகளை வெல்வது. சொற்களில் எழுந்து நூல்களும் நெறிகளுமாவது. இன்று கொலை மட்டுமேயாக இக்களத்தில் அலை ததும்புகிறது. ஆயிரத்தில் ஒன்றே உயிர்குடிக்கிறது. எஞ்சிய விசை எங்கு செல்கிறது? காற்றில் மண்ணில் சென்று பதிகிறது. அவை தெய்வங்களுக்கு திரும்ப அளிக்கப்படுகின்றன. போர் ஒரு பெரும் பலிக்கொடை. தெய்வங்கள் தாங்கள் அளித்த அனைத்தையும் இரக்கமின்றி திரும்பப் பெற்றுக்கொள்ளும் தருணம்.

இலக்கு நோக்கவும் அம்பெடுக்கவும் நாணெடுத்து செலுத்தவும் அதுவரை பல்வேறு பயிற்சிக்களங்களில் உடல் அடைந்த கல்வியே போதுமானதாக இருந்தது. அத்தனை பயிற்சிக்களங்களிலும் அவன் இரண்டாக பிளந்தே இருந்தான் என அன்று அறிந்தான். உடல் பயிற்சி கொள்கையில் உள்ளம் சொற்பெருக்கென ஓடிக்கொண்டிருந்தது. உன் உள்ளம் இங்கில்லை என பலமுறை அவன் கால்களிலும் தோள்களிலும் அவன் ஆசிரியர் அம்பால் அறைந்ததுண்டு. வெயிலில், வெறும்

மண்ணில் முழந்தாளிட்டு நிற்கவைத்ததும் உண்டு. ஆனால் போர்க்களத்தில் அவ்வாறு இரண்டாகப் பிளந்தது அவனுக்கு பேராற்றலை அளித்தது. அவனுடைய பதற்றங்களும் கொந்தளிப்புகளும் முழுக்க வேறெங்கோ நிகழ்ந்துகொண்டிருந்தன. அவை எவ்வகையிலும் அக்களத்தில் அவன் நின்று போரிடுவதற்கு நடுவே ஊடுருவவில்லை.

அபிமன்யூ சாத்யகிக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் நடுவே புகுந்து உரத்த குரலில் “பிதாமகரே, இதோ திரும்பி வந்துவிட்டேன். உங்கள் தலைகொண்டு திரும்பிச்செல்லப் போகிறேன்!” என்றபடி தன் முதல் அம்பை தொடுத்து பீஷ்மரின் தோள்கவசத்தை உடைத்தான். கணப்பொழுதில் திரும்பி அருகே நின்றிருந்த காவலனுக்கு தோள் காட்டி அதே விசையை அம்பு எடுக்கவும் அளித்து அபிமன்யூவின் தேரை தன் அம்பால் அறைந்தார் பீஷ்மர். போர் எத்தனை விரைவாக விழிதொடாக் கணம் ஒன்றில் தொடங்கிவிடுகிறது என்று பிரலம்பன் கண்டான்.

பீஷ்மரும் அபிமன்யூவும் அவர்கள் இருவரும் மட்டுமே இருந்த ஒரு வெளியில் ஒருவரோடொருவர் மட்டுமே நோக்கி ஒருவர் பிறிதொருவரென ஆகி போரிட்டனர். அது ஒரு ஊழ்கம். ஊழ்கங்களெல்லாம் போரேதான் போலும். அருள் எழும் தெய்வம் இறுதி எல்லை காணும் வரை எதிரி என்றே நின்றிருக்கிறது. சில கணங்களுக்குள் அங்கிருந்த பலரும் வில்தாழ்த்தி அப்போரை நோக்கத்தொடங்கினர். அம்புகள் காற்றில் முனையொடு முனை தொட்டு சிதறி வீழ்ந்தன. பறந்து வரும் அம்பின் முனையை பிறிதொரு அம்பு சென்று தொடமுடியுமென்பதை காவியங்களில் அவன் கற்றிருந்தான். அது ஒரு கனவுநிலையென்றே எண்ணியிருந்தான். போரிடும் இருவர் ஒருவரையொருவர் உச்சத்திலும் உச்சமென எழும் உளக்கூரொன்றில் சந்தித்துக்கொண்டால் அது இயல்வதே என்று அப்போது கண்டான்.

அவர்கள் இருவரின் விழிகளும் ஒன்றுடன் ஒன்று கோத்துக்கொண்டிருந்தன. இருவர் விழிகளின் அசைவுகளும் ஒன்றென்றே ஆயின. இருவர் கைகளும் ஒரு நடனத்தின் இரு பகுதிகளென சுழன்றன. அம்புகள் ஒரு சொல்லுக்கு மறுசொல் வைத்தன. காற்றில் தெய்வச்சொல் ஒன்றை இரண்டாக பகிர்ந்துகொண்டன. பீஷ்மரின் கவசங்களை அபிமன்யூ உடைத்தான். அவருடைய இடையிலும் தோளிலும் உடைந்து தெறித்த கவசங்களைக் கண்டு கௌரவர்கள் வெறிக்கூச்சலிட்டனர். சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் பீஷ்மரின் இருபுறமும் சூழ்ந்துகொண்டு அபிமன்யூவை தாக்க முயன்ற அரசர்களை செறுத்தனர்.

பிரலம்பன் அபிமன்யூவின் தேர்ப்பாகனை குறிவைத்த வில்லவன் ஒருவனை அம்பால் அறைந்து நிலையழியச் செய்தான். அவனுக்கு உதவிக்கு வந்த இன்னொருவனை வீழ்த்தினான். தடுமாறி எழுந்த அவன் பிரலம்பனின் தேர்த்தூணை உடைத்தான். இன்னொரு அம்பால் அவன் தலைக்கவசத்தை உடைத்தான். சீறி அணுகிய அம்புக்கு முழந்தாளிட்டு தலைகாத்து அதே விசையில் அம்பெய்து அவன் நெஞ்சை பேரம்பால் பிளந்தான் பிரலம்பன். அபிமன்யூ தன் விரைவம்புகளால் பீஷ்மரைச் சூழ்ந்து வந்துகொண்டிருந்த அபிசாரநாட்டு இளவரசர்கள் நிசந்திரனையும் மிருதபனையும் சுவிஷ்டனையும் கொன்றான்.

இறப்புகள் பீஷ்மரை சற்றே கைதளரச் செய்ய அவருடைய தேரை பாகன் பின்னோட்டிச் சென்றான். சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் அவரை உந்தி பின்செலுத்துபவர்கள்போல தொடர்ந்து செல்ல “நில்லுங்கள், பிதாமகரே… நில்லுங்கள்” என்று கூவியபடி அபிமன்யூ அவரை தொடர முயன்றான். மகதமன்னன்

ஜயசேனன் “என்னை எதிர்கொள்க, சிறுவனே!” என்று நாணொலி எழுப்பியபடி ஊடே புகுந்தான். எள்ளலுடன் நகைத்தபடி அபிமன்யூ அவனை அம்புகளால் அடித்தான். ஜயசேனனின் அம்புகள் அபிமன்யூவைச் சூழ்ந்து பறந்தன.

ஜயசேனன் பித்துகொண்டிருந்தான். அத்தருணத்திற்கென்றே காத்திருந்தவன் என தெரிந்தான். களத்தில் போருக்கெழும் ஒவ்வொருவரிடமும் ஒரு வெற்றிக்கனவும் ஒரு வீழ்ச்சிக்கனவும் இருக்கிறது. புகழ்சூழ இறப்பதை எண்ணி தனிமையில் உளமுருகாத வீரன் இல்லை. ஜயசேனன் அதன்பொருட்டே வந்தவன் போலிருந்தான். “வில்தொட்டுத் தேறுவது குடிச்செல்வம் அல்ல மூடா, அது பெருந்தவம்!” என்று ஜயசேனன் கூவினான். “பெருஞ்செல்வம் மூதாதையர் ஆற்றிய தவத்தால் ஈட்டப்படுவது, அறிவிலி…” என்று அபிமன்யூ சொன்னான். “உன் குலமென்ன? காட்டில் வாழ்ந்த ஜரையின் குருதியில் அம்புத்தொழில் எப்படி அமைந்தது?” என்று சிரித்தான். “உன் அம்புகள் எவ்வளவு என்று பார்க்கிறேன். வா… வந்து என் முன் அரைநாழிகையேனும் நில் பார்ப்போம்!”

கட்டற்றுப் பெருகிய வெறி ஜயசேனனின் கைகளின் ஆற்றலை பெருக்க அவன் அம்புகள் அபிமன்யூவின் கவசங்களை உடைத்தன. ஒவ்வொரு முறை அவன் அம்புகள் அபிமன்யூவை தாக்கும்போதும் அவனைச் சூழ்ந்திருந்த வீரர்கள் ஆர்ப்பரித்தனர். பிரலம்பன் ஜயசேனனின் அணுக்கவீரனை வீழ்த்தினான். அவ்விடத்தை நிரப்பிய பிறிதொருவனை அம்புகளால் தடுத்து பின்னடையச் செய்தான். அபிமன்யூவின் அம்புகளால் மேலுமிருவர் தேர்த்தட்டிலிருந்து கழுத்தறுபட்டு அப்பால் வீசப்பட்டனர். “உன் உடலும் உன் தந்தையைப்போல இரண்டாக கிழிபடவிருக்கிறது, கீழ்மகனே” என்று அபிமன்யூ நகைத்தான்.

அவன் ஜயசேனனின் சினத்தைக் கூட்டி அவன் உடல்தாளா விசையை எழச்செய்கிறான் என பிரலம்பனுக்கு புரிந்தது. போர்முனையில் வஞ்சினம் என்பது தன்சோர்வை அழிப்பது, எதிரிக்கு சோர்வை ஊட்டுவது. “நீ தலையற்று வீழ்வதற்கு முன் உன் ஆணவம் அழியும், சிறுவனே” என்றான் ஜயசேனன். “கன்றோட்டும் குடியினன் நீ. உனக்கெதற்கு சொல்வீரம்?” என்றபடி மேலும் அணுகி நீளம்புகளால் அபிமன்யூவை அறைந்தான். ஆனால் அவன் தோள் தளரத்தொடங்கியது. உள்ளத்தின் வெறியில் அவன் அதை உணரவில்லை.

கால் தளரும் மானை மேலும் விரைவுகொண்டு துரத்தும் சிறுத்தை என அபிமன்யூ விசைகொண்டான். அறியாது அபிமன்யூவின் பேரம்பின் வட்டத்திற்குள் ஜயசேனன் கால்வைத்தான். அக்கணமே அவன் தலையை பிறையம்பு கொய்தது. ஏழு அம்புகளால் அத்தலை வானில் தூக்கப்பட்டது. எழுந்துகொண்டே இருந்த அம்புகளால் வானில் பட்டம்போல் நிறுத்தப்பட்டது. மகதவீரர்கள் அலறியபடி பின்னடைந்தனர். முரசுகள் “மகதர் மகதர் மகதர்” என முழங்கத் தொடங்கின.

மகதப்படை விலகிய இடைவெளியினூடாக அபிமன்யூ பீஷ்மரை நோக்கி சென்றான். அவர் தேர்த்தட்டில் ஜயசேனனின் தலை வந்து விழுந்தது. பீஷ்மர் சீற்றத்துடன் உறுமியபடி தேர்த்தட்டில் ஓர் அடி பின்னெடுத்து வைத்தார். ஜயசேனனின் தோழனின் தலை அதன்மேல் வந்து விழுந்தது. பீஷ்மர் அவற்றை காலால் உதைத்து அகற்றிவிட்டு “கீழ்மகனே!” என்று கூவியபடி அபிமன்யூவை எதிர்கொண்டு முன்னெழுந்தார். மீண்டும் இருவரும் அம்புகளால் இணைந்துகொண்டனர். முதுமையும் இளமையும் அகன்றன. அறிவும் அறியாமையும் மறைந்தன. உடல் நிகழ்த்தியது போரை. பின்னர் உடலும் மறைய எஞ்சியிருந்தது காலத்தை கணமென, அணுவென ஆக்கி பிளந்து பிளந்து சென்ற ஒரு நிகழ்வு மட்டும்.

பீஷ்மர் கண்ணறியாது சித்தம் மட்டுமே அறியும் காலத்துணுக்கொன்றில் கை தளர்வதை பிரலம்பன் கண்டான். அவன் அனைத்து நரம்புகளும் முறுக்கேறின. இக்கணம், இதோ இக்கணம் என்று அவன் இறுகி இறுகி நெரிபட்டு உடையப்போகும் கணமொன்றில் நின்றான். அபிமன்யூவின் தேர்முகடு உடைந்து தெறித்தது. அவன் புரவிகளிலொன்று கழுத்தறுந்து விழுந்தது. ஒவ்வொரு அம்பிலும் தேவைக்கு மிஞ்சிய விசை இருந்தது. அது பீஷ்மரின் அகம் நிலையழிந்துவிட்டதென்பதை காட்டியது. அதை அபிமன்யூவும் உணர்ந்துவிட்டான் என்பதை விழிசுருங்க சற்றே உடல் வளைத்து நாணிழுத்த விசையில் தெரிந்தது.

பீஷ்மரின் தொடைக்கவசம் உடைந்தது. அவர் சற்றே வளைந்து தடுப்பதற்குள் அடுத்த அம்பு அவர் தொடைமேல் பாய்ந்தது. பீஷ்மர் தேர்த்தட்டில் கையூன்றி சரிந்தார். அவர் தலைக்கவசத்தை உடைத்து அடுத்த அம்பை கழுத்திற்கு ஏவுவதற்குள் தேர்ப்பாகன் கைகாட்ட இருபுறமுமிருந்து கேடயப்படை வந்து அவரை சூழ்ந்தது. கேடையநிரைக்கு அப்பால் எழுந்து வளைந்து சரியும் நீளம்புகளால் அப்படைவீரர்களை அபிமன்யூ வீழ்த்தினான். ஓரிடத்தில் கேடயச்சுவர் உடைய அங்கே தோன்றிய அஸ்வாக நாட்டு அரசன் உபநாகனை கொன்றான். கேடயச்சுவர் மீண்டும் இணைந்தது. மீண்டும் அதை உடைத்து அஜநேயநாட்டு இளவரசர்கள் இருவரை கொன்றான்.

சிதறிய கேடயப்படைக்கு அப்பால் கௌரவப் படையினர் ஒருங்குகூடி அபிமன்யூவை எதிர்கொண்டனர். அபிமன்யூ கைகளைத் தூக்கி பீஷ்மர் பின்வாங்கிவிட்டார் என அறிவித்தான். பாண்டவப் படையில் வெற்றி முரசுகள் ஒலிக்கத் தொடங்கின. கௌரவப் படையில் பதற்றமும் நிலையழிவும் எழுவதை பிரலம்பன் கண்டான். போர் நிலையில் ஒரு சிறு உளவீழ்ச்சிகூட அக்கணமே விழிக்குத் தெரியும் அசைவுகளென்றாவதை அவன் வியந்தான். அவ்வுள வீழ்ச்சி எதிரிக்கு விரியத்திறந்த வாயில்.

அபிமன்யூ உரக்க நகைத்து “இன்று ஐம்பது மணிமுடித் தலைகள் இன்றி பாடி மீள்வதில்லை” எனக் கூவியபடி பேரம்புகளைத் தொடுத்து கேடய நிரையை உடைத்தான். பிரலம்பன் அபிமன்யூவை நோக்கி அம்புகளைக் குவித்த வில்லவர்களை தன் அம்புகளால் தடுத்தபடியே உடன் சென்றான். பீஷ்மரின் படைகள் நீர் பட்டணையும் தழலென அணைந்து பின்வாங்கத் தொடங்கின. அபிமன்யூ அடுத்தடுத்த அம்புகளால் காம்போஜ நாட்டு சுதக்ஷிணனின் மைந்தர்கள் அபிஷந்தியனையும் அமத்யனையும் கொன்றான். மறுபுறம் முரசுகள் எச்சரிக்கை ஒலி எழுப்புவதை பிரலம்பன் கேட்டான். அவற்றின் மொழி அறியவொண்ணாததாக இருப்பினும் அவை ஆணையிடுவதென்ன என்பதை புரிந்துகொள்ள முடிந்தது. அபிமன்யூ உருவாக்கும் உடைவை சீர்செய்ய அவை வீரர்களை அறைகூவின.

பூரிசிரவஸும் ஜயத்ரதனும் இருபுறத்திலிருந்தும் அம்புகளுடன் வந்து கௌரவப் படைகளின் விரிசலை இணைத்தனர். இருவரும் ஒரே தருணத்தில் நாணிழுத்து அம்புகளால் அபிமன்யூவை தாக்கினர். அவன் தன் விசையாலேயே இரண்டாகப் பிளந்தவன் போலானான். இருபுறமும் அம்புகள் தொடுத்து இருவர் அம்புகளையுமே எதிர்கொண்டான். ஜயத்ரதன் அந்த வெறியைக்கண்டு விழிதிகைப்பதை மிக அருகிலென பிரலம்பன் அறிந்தான். பூரிசிரவஸ் சினமும் அதனால் எழுந்த சீற்றமும் கொண்டு மேலும் மேலுமென அம்புகளை தொடுத்தான்.

அபிமன்யூ அவன் கவசங்களை உடைத்தான். தேரில் முழந்தாளிட்டு அமர்ந்த அவன் தலைக்கவசத்தை உடைத்து அடுத்த அம்பை கழுத்தை நோக்கி அறைந்தான். அந்த அம்பை பிறிதொரு அம்பு தெறித்துச் சிதறவிட அபிமன்யூ திரும்புவதற்குள் எதிரில்

வந்த இரு தேர்களுக்குப் பின்னிருந்து பீஷ்மர் தன் அம்பை இழுத்து அபிமன்யூவின் தொடைக்கவசத்தைத் தெறிக்க வைத்தார். “பிதாமகரே!” என்று திகைப்புடன் கூவியபடி அபிமன்யூ தேர்த்தட்டில் விழுந்தான். பீஷ்மரின் அம்பு அவன் தொடையை தைத்தது. அடுத்த அம்பு கழுத்துக்கு வர அதை பிரலம்பன் தன் அம்பால் வீழ்த்தினான்.

“இருவர் பொருதும் களத்திற்கு சங்கொலியிலாமல் நுழைவதா பிதாமகரின் நெறி?” என்று திருஷ்டத்யும்னன் உரத்த குரலில் கூவினான். தேர் அலைமேல் என எழுந்து வர அதன் மேல் அதுவரை கண்டிராத வஞ்சமும் வெறுப்பும் நிறைந்த முகத்துடன் நின்ற பீஷ்மர் குவிந்து சுருங்கிய வாயும் இறுகிய தாடையுமாக சொல்லின்றி நாணிழுத்து திருஷ்டத்யுமனின் நெஞ்சக்கவசத்தை உடைத்தார். அவன் புரள்வதற்குள் தோளில் அம்பை அறைந்து வீழ்த்தினார். சாத்யகி தன் தேரில் குப்புற விழுந்து அவன் மேல் விம்மிச் சென்ற மூன்று பிறையம்புகளை தவிர்த்தான்.

“அனைத்து நெறிகளையும் கடந்துவிட்டீர்கள், பிதாமகரே” என்று திருஷ்டத்யும்னன் தேர்த்தட்டில் குப்புற விழுந்தபடி கூவ அவன் தேரோட்டி தேரை மேலும் மேலும் பின்னுக்கிழுத்தான். கேடயப்படை ஒன்று அவர்களுக்கு எதிரே வந்தது. பாண்டவப் படை இருபுறமும் கிழிபட்டு விலக அந்த இடைவெளியில் மெழுகை உருக்கி இறங்கும் பழுக்கக் காய்ச்சிய வாளென பீஷ்மர் உள்ளே வந்துகொண்டிருந்தார். பிரலம்பன் அபிமன்யூவை பார்த்தான். அவன் புண்பட்ட தொடையுடன் தேர்த்தூணைப்பற்றி எழுந்து நின்றான். கையிலிருந்து வில் நழுவிவிட்டிருந்தது.

அரைக்கணம் என பீஷ்மரின் பார்வை அபிமன்யூவை தொட வந்தது. அதன் பொருளை உணர்ந்த பிரலம்பன் தன் தேரிலிருந்து எழுந்து அபிமன்யூவின் தேரை நோக்கி பாய்ந்து அந்தப் பேரம்பை தன் நெஞ்சில் வாங்கி அபிமன்யூவின் மேல் விழுந்தான். அபிமன்யூ குனிந்து அவனை தூக்க பிரலம்பன் நீருக்குள்ளென அவன் முகம் கலங்கித் தெரிவதை இறுதியாக பார்த்தான்.

யுதிஷ்டிரரின் பாசறையில் வெள்ளிக்கு முன் படைத்தலைவர்கள் மட்டுமே கூடியிருந்த அவையில் வாயில்காவலனாக சுருதகீர்த்தி நின்றிருந்தான். பின்பக்க வாயிலில் சுருதசேனன் நின்றான். பிரதிவிந்தியன் மட்டுமே அவைக்குள் இருந்தான். யுதிஷ்டிரர் வந்து அமர்வதுவரை அவையினர் ஒருவருக்கொருவர் உதிரிச்சொற்களால் மெல்ல பேசியபடி அமர்ந்திருந்தனர். அந்த ஒலிகள் இணைந்த முழக்கம் தூங்கும் பூனையின் ஓசையென கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் அனைவருமே புண்பட்டிருந்தனர். கட்டுகளுக்குமேல் ஊற்றப்பட்டிருந்த களிம்பிலிருந்து எழுந்த கந்தகமணம் அறையை நிறைத்திருந்தது.

அந்த மணம் படையின் மணமாகவே ஆகிவிட்டிருந்தது. அது எரிமணம். விழிக்குத் தெரியாத நெருப்பு ஒன்று அங்கே எரிந்துகொண்டிருப்பதுபோல. கந்தகம் மண்ணில் உப்பென உறங்கும் நெருப்பு என்றார் மருத்துவரான குணதர். “புண்களில் வந்தமர்கின்றன ஊனும் குருதியும் உண்ணும் பாதாளதெய்வங்களான க்ஷதையும் வ்ரணையும் ஜீர்ணையும். குருதிவண்ணத்துடன், கொடுவாயுடன், கூர்விழிகளுடன், எட்டு கைகளிலும் வாளும் வேலும் ஏந்திய க்ஷதை செம்புண்களின் தெய்வம். கரிய உடல்கொண்ட வ்ரணை புண்களின் தெய்வம். நான்கு கைகளிலும் பாசமும் அங்குசமும் சவுக்கும் வேலும் கொண்டவள். ஜீர்ணை இரு கைகளிலும் கலமும்

கோலும் கொண்டு நீள்நாக்கு நெஞ்சுதொட அமர்ந்திருப்பவள். வெண்நிறமானவள். சீழின் தெய்வம். அவர்கள் மிருத்யூதேவியின் மகளிர்” குணதர் சொன்னார்.

“நாம் ஊனில் ஓர் எரிகுளம் அமைக்கிறோம். அதில் கந்தக வடிவில் எரியேற்றுகிறோம். ஊனையும் குருதியையும் அவியென்றாக்கி அளிக்கிறோம். உண்டு நிறைவுற்று மீள்கின்றன மூன்று தெய்வங்களும். அவை சென்று அவ்வன்னையிடம் சொல்லி அவளை அகற்றிக்கொண்டு செல்கின்றன. அவியால் நிறைவடையாது சினந்தால் அவை உடலை முழுதுண்கின்றன. அவர்களின் அன்னை அவ்வுடல்மேல் எழுந்தருள்கிறாள்” என்றார் குணதர். “கந்தகம் உப்பென்றான அனல். படிகாரம் உப்பென்றான நீர். கழுவித் தூய்மையாக்குகிறது படிகாரம். எரித்துத் தூய்மையாக்குகிறது கந்தகம். நீர் ஒளிகொண்டு படிகாரமானது. அனல் தணிந்து கந்தகமென்றானது. தந்தையரின் உளக்கனிவே மகள்களாக உருக்கொள்கின்றன. உப்பென்று எழுந்த இரு தேவியரால் காக்கப்படுகின்றனர் மானுடர். அவர்களை ஸ்படிகை என்றும் சுபீதை என்றும் வழிபட்டனர் முன்னோர்.”

முழவொலி மட்டும் எழுந்து அடங்கியது. தளர்ந்த மயிலகவல் என கொம்போசை. கொடியுடன் முகவீரன் வர தொடர்ந்து யுதிஷ்டிரர் வந்தார். அம்மூன்று நாட்களுக்குள் மிகவும் கூன்விழுந்து உடல் தளர்ந்தவர் போலிருந்தார். நடந்துவந்தபோது அவரது உடல் குளிரிலென நடுங்கிக்கொண்டிருப்பதை சுருதகீர்த்தி பார்த்தான். பீடத்தில் அவர் அமர்ந்ததும் அவருக்குப் பின்னால் நகுலனும் சகதேவனும் நின்றனர். பீமன் சாளரத்தருகே கைகளைக் கட்டியபடி மூங்கில் தூணில் சற்றே சாய்ந்து நின்றான். ஒவ்வொருவராக அமரும் ஓசை. இருக்கைகளின் முனகல். ஒரு சிறுபறவை அந்தப் பாடிவீட்டின் மேலிருந்து எழுந்து இருளில் பறந்தகன்றது. சுருதகீர்த்தி வெளியே குளிர்காற்று மெல்ல அலையடிப்பதை உடலால் உணர்ந்தான். உள்ளே உடல்கள் உருவாக்கும் வெம்மை. ஊனை கந்தகம் உண்பதன் வெம்மையா அது?

அவைமுறைமைகள் முடிந்த பின்னரும் எவரும் எதுவும் பேசத்தொடங்கவில்லை. அவர்கள் இளைய யாதவருக்காக காத்திருக்கிறார்கள் என்பது அவனுக்கு தெரிந்தது. சற்று நேரத்தில் இளைய யாதவரின் அணுக்கன் நேமிதரன் விரைந்து வந்து சுருதகீர்த்தியிடம் “யாதவ அரசர் வருகை” என்று மெல்ல சொன்னான். உள்ளே செல்லலாம் என்று அவன் கைகாட்டினான். விரைந்த நடையில் வந்த இளைய யாதவர் படிகளிலேறி புன்னகையுடன் சுருதகீர்த்தியின் தோளில் கைவைத்து “நேற்று உன் களநிற்றல் நன்று” என்றபின் உள்ளே சென்றார். அப்புன்னகையும் தொடுகையும் சுருதகீர்த்தியை மெய்ப்பு கொள்ளச்செய்து விழிநீர் நிறைத்தன. அவர் அவையின் வணக்கங்களை ஏற்று அப்பீடத்தில் சென்று அமர்ந்துகொள்வது வரை அவன் எங்கு இருக்கிறான் என்றே அறியாதிருந்தான்.

யுதிஷ்டிரர் “இளையவன் வரவில்லையா, யாதவரே?” என்ற பின்புதான் தந்தை அவருடன் வரவில்லை என்பதை சுருதகீர்த்தி எண்ணிக்கொண்டான். “இல்லை” என்று மட்டும் இளைய யாதவர் சொன்னார். யுதிஷ்டிரர் பெருமூச்சுவிட்டு தாடியை நீவியபடி பேசாமல் இருந்தார். ஒவ்வொருவரும் பிறர் ஏதேனும் பேசட்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவையின் அமைதி மேலும் மேலுமென நீண்டது. திருஷ்டத்யும்னன் எழுந்து “நாம் இன்றைய படைசூழ்கையைப்பற்றி எண்ணவேண்டியுள்ளது” என்றான். துருபதர் “ஆம்” என்றார். மேலும் பேச சொற்களற்றவர்கள்போல் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

துருபதர் “நேற்றைய போரின் இழப்புகள் குறித்து அறிக்கைகள் அளிக்கப்பட்டுவிட்டனவா?” என்றார். “பின்னிரவிலேயே அரசருக்கு அனுப்பியிருந்தேன்” என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். “சொல்லப்போனால் அதை ஒவ்வொரு நாளும் கணக்கிட்டு அனுப்பவேண்டியதே இல்லை. மேலும் மேலும் உளச்சோர்வூட்டக்கூடியது அது” என்று பீமன் சொன்னான். “உண்மையின் மீது நின்றுதான் போர்புரிய முடியும், இளைய பாண்டவரே” என்றான் திருஷ்டத்யும்னன். “உண்மையின்மீது நின்றா? அப்படி ஒரு போர் உண்டா?” என்றான் பீமன். “அகிபீனாவை உண்மையின் பீடம் என சொல்லமாட்டீர் என்று நினைக்கிறேன்.” அவை அமைதியின்மையுடன் அசைவதை சுருதகீர்த்தி கண்டான்.

“உண்மை எவரும் அறிந்ததே. நாம் தோற்றுக்கொண்டிருக்கிறோம். கௌரவப் படையினரிடம் அல்ல, ஒற்றைத்தனிமனிதரிடம். அவரை எதிர்கொள்ளும் ஆற்றல் எம் ஐவருக்கும் இல்லை. பெரும்புகழ் கொண்ட பார்த்தனின் காண்டீபம் அவர் முன் நாண்தளர வளைகிறது. எரிதீயின் முன் தழை அள்ளிப்போட்டு அணைக்கமுயல்வது போலிருக்கிறோம். நாம் அள்ளி அள்ளி அணைகட்டுவது நம் இளமைந்தரைக் கொண்டு. இனியும் நமக்கிருக்கிறார்கள் சிலர். அவர்களும் கணக்கு முடிவது வரை இப்போர் நீளும். அதன் பின்னர் சென்று தலைகொடுப்போம். பிதாமகரை எத்தனை நாள் எதிர்த்து நின்றோம் என்னும் கணக்கையே வெற்றி என கொள்ளட்டும் நம் கொடிவழியினர்” என்றான்.

“மந்தா, படைசூழ்கைக்கான அவையில் நம்பிக்கையை அழிக்கும் சொற்களை பேசலாகாது” என்றார் யுதிஷ்டிரர். “வெற்றிவேல்! வீரவேல்! வெல்வோம்! கொல்வோம்! நம்பிக்கையூட்டுவதற்கு இந்தச் சொற்கள் அன்றி வேறில்லை, மூத்தவரே” என்றான் பீமன். எரிச்சலுடன் “மூத்தவரே, தாங்கள் சற்று பேசாமலிருங்கள். இதுவே தங்களுக்கு சொல்வதற்கு இருக்கிறதென்றால் நாளை முதல் தாங்கள் அவைச்சூழ்கைக்கு வரவேண்டியதில்லை” என்று சகதேவன் சொன்னான். “நன்று. இளையவன் ஏன் வரவில்லை என்று இப்போது தெரிகிறது. இங்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை. சென்று களத்தில் நிற்பதொன்றே நானும் அவனும் செய்யக்கூடியது. இங்குள்ள சொற்கள் எவற்றுக்கும் எப்பொருளுமில்லை” என்றான் பீமன்.

திருஷ்டத்யும்னன் “பொழுதில்லை, நாம் நமது படைசூழ்கையை அமைக்கவேண்டியுள்ளது” என்றான். “நேற்று அமைத்தீர்களே பிறைசூழ்கை. என்ன ஆயிற்று? சூதாடுபவன் தன் கையிலுள்ள அனைத்துப் பகடைகளையும் வெளிக்காட்டுவது போன்றது அது. நமது வில்லவர்கள் அனைவருமே முகப்பில் நின்ற சூழ்கை. ஆனால் நுரையை ஊதி பறக்கவிடுபவர்போல அதை அழித்தார் பீஷ்மர். அதன் பிறகென்ன படைசூழ்கை இங்கு அமைக்கவிருக்கிறோம்?” என்றான் பீமன். திருஷ்டத்யும்னன் “அப்படைசூழ்கையின் ஆற்றல் அனைவருமே முன்னிலையில் நின்றோம் என்பது. அதன் குறைபாடு எவருக்கும் பின்புலத்தில் எதுவுமே இல்லை என்பது. ஒற்றைப்புள்ளியில் குவிந்த பீஷ்மர் நம் சூழ்கையை உடைத்தார். இம்முறை குறைகளைக் களைந்து அடுத்த சூழ்கை அமைப்போம். இம்முறை வெல்வோம். இன்று நம்மால் பீஷ்மரை கொல்ல முடியும்” என்றான்.

திருஷ்டத்யும்னனை நோக்கி மெல்லிய சிரிப்புடன் “உன் வஞ்சம் துரோணரிடம் அல்லவா? எத்தனை முறை எதிர்கொண்டாய் அவரை?” என்றான் பீமன். “அவரை தனியனாக நான் எதிர்கொண்டு வெல்ல இயலாதென்பதை அறிவேன். பீஷ்மரை வீழ்த்திய பின்னரே அவரை வீழ்த்த இயலும். சூழ்ந்துகொள்ளவேண்டும். ஆற்றலை அழிக்க வேண்டும். அதற்குரிய கணக்குகள் என்னிடம் உள்ளன” என்று

திருஷ்டத்யும்னன் சொன்னான். “இன்று நம் இலக்கு கௌரவப் படையின் கூர்முனையான பிதாமகரை வெல்வது மட்டுமே. அதைப்பற்றி பேசுவோம்.”

துருபதர் “நான் மும்முறை துரோணரை எதிர்கொண்டேன். தன்னை எவரும் வெல்ல இயலாதென்ற எண்ணத்திலிருக்கிறார். அவ்வண்ணம் தருக்குபவர்கள் உண்மையில் வெல்ல இயலாதவர்களாகிறார்கள். ஏனென்றால் அந்நம்பிக்கை அவர்களை பதற்றமில்லாதவர்களாக ஆக்குகிறது. போரை ஓர் இனிய கலையென்று நடிக்கச் செய்கிறது. அந்த இறுமாப்பின் உச்சம்வரை அவர் செல்லவேண்டும். தெய்வங்கள் அவர்மீது எரிச்சல் கொள்ளவேண்டும். அந்த எல்லைக்குச் சென்று முட்டி நிலையழியும் கணம் வரை அவரை நாம் தொட இயலாது. ஆணவம் கொண்டோர் சரியும் கணம் வரை வெற்றிகளை மட்டுமே அடைவார்கள் என்று நூல்கள் சொல்கின்றன” என்றார்.

“நூற்கல்விக்கு நம்மில் எந்தக் குறையும் இல்லை” என்றான் பீமன். “களத்தில் நூல்களை மேற்கோள் காட்டமுடிந்தால் நம் மூத்தவரே போதும் வெற்றிக்கு.” அனைவரும் திகைத்து யுதிஷ்டிரரை நோக்க அவர் இயல்பாக பீமனை தவிர்த்து “இன்று பீஷ்மரை வீழ்த்த என்ன சூழ்கை வகுத்துள்ளோம்?” என்று கேட்டார். திருஷ்டத்யும்னன் தோற்சுருளை எடுத்து விரித்து யுதிஷ்டிரரிடம் காட்டி “இது இன்றைய சூழ்கை. இது அவர்களை உடைக்கும். பிதாமகரை தனிமைப்படுத்தும். நாம் மூன்று நாட்கள் போரிட்டு அனைத்திலிருந்தும் பெற்ற பாடங்கள்தான் நமது முதன்மை படைக்கலங்கள். நமது காவல்தெய்வம் அறம். அதன் வடிவமாக நம் முன் அமர்ந்திருக்கும் இளைய யாதவரின் சொற்கள். நாம் வெல்வோம்” என்றான்.

துருபதர் மெல்ல அசைந்து “நேற்று இளைய பாண்டவர் அர்ஜுனர் அஞ்சி பின்னோடினார் என்ற செய்தி கௌரவர்களிடையே பரந்துள்ளது. நேற்றிரவு முழுக்க அங்கு கௌரவர் படைகளுக்குள் உண்டாட்டின் முழவுகள் முழங்கிக்கொண்டிருந்தன. வென்றுவிட்டோம் என்றே அவர்கள் உறுதி கொண்டுவிட்டார்கள்” என்றார். அனைவரும் இளைய யாதவரை பார்க்க அவர் கைகட்டி புன்னகையுடன் அமர்ந்திருந்தார். திருஷ்டத்யும்னன் “பின்னடைதல் தோல்வியல்ல” என்றான். மெல்ல நகைத்து “தோல்வி வீழ்ச்சியல்ல என்று இன்னொரு சொல் உண்டு” என்று சிகண்டி சொன்னார்.

அதுவரை அவர் அங்கு இருப்பதை எவரும் நோக்கவில்லை. அனைவரும் திரும்பிப்பார்த்தனர். சிகண்டி அந்நோக்குகளை உணர்ந்ததும் “நேற்று நிகழ்ந்ததென்ன என்பதும் அனைவருக்கும் தெரியும். எந்தப் படைக்கலம் அவரை வீழ்த்துமோ அதை எடுக்க அஞ்சி களம்நின்று தவித்து திரும்பிச்சென்றார் இளைய பாண்டவர்” என்றார். அனைவரும் ஒருகணம் அவர் சொல்லப்போவதென்ன என்பதைக் காத்து நின்றிருந்தனர். “மாறாக அனைத்துப் படைக்கலங்களையும் பிதாமகர் எடுக்கிறார். நேற்று பீஷ்மர் போர்நெறி மீறி பின்னின்று தாக்கியபோது இங்குள்ள அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். நான் வியப்படையவில்லை. ஏனெனில் இத்தனை ஆண்டுகளாக அவராக மாறி நடித்துக்கொண்டிருப்பவன். பகை என்பது நம் எதிரியென்று நம்மை நாமே வைத்துக்கொண்டு நடிப்பது. அத்தருணத்தில் நானும் அதையே செய்திருப்பேன்” என்றார் சிகண்டி.

“பிதாமகரை இயக்கும் முதல் விசை என்பது அவருடைய ஆணவமே. பெருநோன்புகளை தான் ஏற்றுக்கொள்வது, தன் குலத்திற்கே பொறுப்பேற்றுக்கொள்வது, களம்முன் நின்று போரிடுவது அனைத்தும் அவ்வாணவத்தாலேயே. ஆணவம் சிதறும் எதையும் அவர் செய்யப்போவதில்லை. தன் ஆணவத்தை அவர் முற்றழிக்காதவரை அவரை நம்மால் வெல்லவும் இயலாது”

என்று சிகண்டி தொடர்ந்தார். “அதற்கு நம்மால் இயலவில்லை. நம் அச்சமும் தயக்கமும் அவரை மேலும் ஆணவம் கொள்ளச்செய்கின்றன. ஆணவத்தாலேயே வானுருக்கொண்டு தேவன் என நின்றிருக்கிறார்.”

“நேற்று என்ன செய்திருக்கவேண்டும் இளைய பாண்டவர்?” என்று சேதிநாட்டு திருஷ்டகேது கேட்டான். “தன் ஆணவத்தை பெருக்கியிருக்க வேண்டும். மாறாக யானை மீதேறி வருபவரை மண்ணில் நின்று எதிர்கொண்டார்” என்றார் சிகண்டி. எரிச்சலுடன் “நெறிநின்றவனுக்குரியது ஆணவம்” என்றார் யுதிஷ்டிரர். சிகண்டி மேலும் விரிந்த கோணல் சிரிப்புடன் “அவர் நின்றது நெறியின் மீதல்ல அரசே, பிதாமகரின் முன் தானொரு மைந்தன் என்னும் எண்ணத்தை ஒருகணமும் அவரால் உதறமுடியவில்லை. களத்தில் மைந்தனில்லை, தந்தையுமில்லை. வேலுக்கும் வில்லுக்கும் மானுட உணர்வுகள் ஏதுமில்லை. கடந்து செல்லவேண்டிய எல்லையொன்றை கண்முன் கண்டு அஞ்சி திரும்பி ஓடினார் நேற்று. அதை எண்ணி எண்ணிச் சோர்ந்து இன்று எங்கோ வில்பயின்று உளமொழித்துக்கொண்டிருக்கிறார்” என்றார்.

அவர் சொல்வது உண்மை என்று ஒவ்வொருவரும் எண்ணினர். சிகண்டி “நான் சொல்வது பொய்யென்று இளைய யாதவர் சொல்லட்டும். ஏன் பொறுமையிழந்து அவர் படையாழி ஏந்தினார்? ஏன் அவர் பிதாமகருக்கு எதிராக சென்றார்?” என்றார். அனைவரும் இளைய யாதவரை நோக்க அவர் அதே புன்னகையுடன் அமர்ந்திருந்தார். “நான் சொல்கிறேன்” என்று சிகண்டி தொடர்ந்தார். “தன் முழுதுளத்தாலும் உந்தி இளைய பாண்டவரை எல்லை கடக்கச்செய்ய அவர் முயன்றார். அதில் மீண்டும் மீண்டும் தோற்று சினந்தார். இறுதியில் அது இயல்வதேயல்ல என்று உணர்ந்ததும் கரைகடந்தார்.”

“அவர் படைக்கலம் எடுத்ததைப்போல் நம்மை நாமே களத்தில் காட்டிக்கொடுக்கும் செயல் வேறெதுவுமில்லை” என்று சிகண்டி தொடர்ந்தார். “இளைய பாண்டவர் அர்ஜுனர் சோர்ந்திருக்கிறார், காண்டீபம் முழு விசையுடன் இல்லை என்பதை கௌரவர்களுக்கு அறிவிக்கும் செயல்தான் அது. இன்று அவர்கள் உண்டாடி கொண்டாடுவது அந்த வெற்றியைத்தான்.” இளைய யாதவரின் முகம் மாறுபடவில்லை. சுருதகீர்த்தி தன் உடல் பதற்றம் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவையில் இருந்திருந்தால் எழுந்து சொல்லெடுத்திருப்பேன் என்று எண்ணிக்கொண்டான். தன் குரலாக பிரதிவிந்தியன் எழுந்து பேசவேண்டுமென்று அவன் உள்ளம் திமிறியது.

உரத்த குரலில் சிகண்டி சொன்னார் “ஆனால் நேற்று களத்தில் இளைய யாதவர் காட்டியது ஒரு நற்குறி. தன் நோன்பையும் நெறியையும் எக்கணத்திலும் ஆடையென கழற்றி வீசிவிட சித்தமாக இருப்பதாக அறிவித்தார். அவையில் ஆடை களைவது சிறுமை, ஆனால் தீப்பற்றும் இல்லத்திலிருந்து எரியும் ஆடையுடன் தப்பி ஓடுபவன் அதை கிழித்தெறியாவிட்டால் அவன் அறிவிலி. நாம் ஒவ்வொருவரும் எரிந்துகொண்டு எண்ணி தயங்கிக்கொண்டிருக்கிறோம். நம்மில் எல்லை கடந்தவர் எவர்? சொல்க… எவரால் இயன்றது அது?”

இளைய யாதவர் மறுத்து ஏதேனும் சொல்வாரென்று சுருதகீர்த்தி எதிர்பார்த்தான். பீமன் “யாதவரும் கடக்கவில்லை. கடந்திருந்தாரெனில் நேற்று படையாழியால் அவர் பீஷ்மரை கொன்றிருக்க வேண்டும்” என்றான். “அறிவிலி! கை விரித்து படைக்கலமின்றி நின்றிருப்பவரை கொன்றிருக்கவேண்டுமா யாதவர்?” என்றார் யுதிஷ்டிரர். “அதுவும் ஓர் எல்லைமீறல்தானே? எல்லையை மீறுவதென்றால் ஒன்றில் கடந்து பிறிதொன்றில் ஏன் நிற்கவேண்டும்?” என்றான் பீமன்.

இளைய யாதவர் மெல்லிய குரலில் “கொன்றிருப்பேன்” என்றார். அவை மெய்ப்புகொள்வதைப்போல சுருதகீர்த்தி உணர்ந்தான். “அர்ஜுனனால் கொல்ல இயலாதென்று எனக்கு உறுதி இருந்தால் தயங்கியிருக்கமாட்டேன்.” அமர்ந்தவாறே மிக இனிய நற்சொல் ஒன்றை அவர்களிடம் சொல்வதுபோல அவர் பேசினார். முகத்தில் அப்புன்னகையும் கண்களில் இளமைந்தனுக்குரிய ஒளியும் இருந்தன. “என் பொருட்டு இங்கு நின்று போரிடும் ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன். உங்கள் எவராலும் நான் பேணப்படுவதில்லை, காக்கப்படுவதுமில்லை. என் சொற்களின் பொருட்டு நீங்கள் போரிடவில்லை, விதைத்த வயலைச் சூழ்ந்து வேலியிடுகிறீர்கள் என்று உணர்க!”

“அவியிட்டு தேவர்களை வளர்க்கும் வைதிகர் தங்களைத்தான் வளர்த்துக்கொள்கிறார்கள். மண்ணில் இருந்து ஒரு துளி நெய்யோ அன்னமோ செல்லாவிடினும் தேவர்கள் குறைபடுவதில்லை என்றுணர்க! நீங்கள் அறியும் தேவர் வளரும் பொருட்டே உங்கள் வேள்விகள் இயற்றப்படுகின்றன. இந்த அவையிலிருந்து இப்போதெழுந்து இன்று அந்தியில் கதிர் மேற்குமுகம் கொள்வதற்குள் இப்போர் முடித்து மீள என்னால் இயலும். ஐயுறுபவர் எழுக!” என்றார்.

சுருதகீர்த்தி உளக்கிளர்ச்சியால் நடுங்கியபடி வாயில்தூணாக அமைந்த மூங்கிலை பற்றிக்கொண்டான். இழுத்துக் கட்டப்பட்ட நாண் போலிருந்தது அவை. “இப்போர் என் சொல் வெல்வதில் மட்டுமே முடியும். பிறிதெவ்வகையிலும் இது முடியாது. உங்கள் பொருட்டு நீங்கள் இதை நிகழ்த்தவேண்டுமென்பது என் ஆணை. அது நிகழுமென்று அறிந்திருக்கிறேன். என் பொருட்டென்றால் நான் இமைப்பதுபோல் இதை ஆற்றுவேன். ஆற்றுதலும் ஒழிதலும் எனக்கு வேறுவேறல்ல என்றும் இருப்பேன்” என்றார் இளைய யாதவர்.

அவை மெல்ல மூச்செறிந்து தளர்ந்தது. ஒவ்வொருவரும் நிலைமீள்வதை காணமுடிந்தது. திருஷ்டத்யும்னன் கைகளில் இறுகப்பற்றி கசங்கிய தோற்சுருளை நீவினான். துருபதர் மேலாடையை இழுத்து அணிந்தார். யுதிஷ்டிரர் பெருமூச்சுடன் இளகியமைந்தார். சிகண்டி பீமனை நோக்கி “இளைய பாண்டவர் பார்த்தரைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இளைய பாண்டவர் பீமசேனர் என்ன செய்கிறார்? அவரது கால்களும் அந்த எல்லையில் சென்று தயங்கி மீளத்தானே செய்கின்றன?” என்றார்.

பீமன் சினத்துடன் “எத்தயக்கமும் எனக்கு இல்லை. களத்தில் கொழுங்குருதி அள்ளிக்குடித்தவன் நான். உங்கள் ஷத்ரிய நெறிகளுக்கு கட்டுப்பட்டவன் அல்ல, நெறியிலாதவன், வெறும் காட்டாளன்!” என்றான். “எனில் இம்மூன்று நாட்களில் நீங்கள் கொன்ற உடன்பிறந்தார் எத்தனை பேர்?” என்றார் சிகண்டி. பீமனின் எழுந்த கை அசையாமல் நின்றது. சிகண்டியின் உடல் சற்றே வளைய முகம் கோணலாக “ஆம், மைந்தரை கொன்றீர்கள். உடன்பிறந்தார் எத்தனை பேரை கொன்றீர்கள்? நூற்றுவரும் அங்கு உயிருடன்தானே இருக்கிறார்கள்?” என்றார்.

அங்கே ஒரு அறியாத் தெய்வம் தோன்றியதென சுருதகீர்த்தி உணர்ந்தான். காற்றிலொரு கெடுமணம் வந்து சூழ்வதுபோல. சிகண்டி “இம்மூன்றுநாள் போரில் அவர்களில் பதின்மர் வீழ்ந்திருந்தால் அந்த அரியணையில் தன்னிறைவுடன் நிமிர்ந்து அமர்ந்திருப்பானா சுயோதனன்? வஞ்சம் உரைக்கும் சொல்லுக்கும் வீறுகாட்டும் விழிக்கும் அடியில் அவன் நெஞ்சுக்குருதி பெருகியிருக்காதா? ஆணவத்துடன் தேர் மேலேறி களம்புகுந்தான் இன்று. அவனது நூறு கைகளும் எழுந்து விரிந்திருந்தன. அதன்முன் நாம் தோற்றோம்” என்றார். சிரிப்பொலி எழ

“நேற்றும் களத்தில் கண்டேன் எத்தனை முறை நீங்கள் அஞ்சி பின்னடைந்தீர்கள் என்று” என்றார்.

சினத்தால் கைநீட்டி “எவர் அஞ்சினார்கள்? எண்ணி சொல்லெடுங்கள். அவையில் எழுந்து என்ன சொல்கிறீர்கள் என கருதுக! எவர் அஞ்சினார்கள்?” என்று கேட்டபடி பீமன் முன்னால் வந்தான். இமையேனும் அசைக்காமல் நின்று “நீங்கள் அஞ்சினீர்கள். எதிரிகளை அல்ல, உங்களை” என்றார் சிகண்டி. பீமன் செயலற்று நின்றான். “இனியொரு சொல்லெடுக்கும் முன் இந்த வஞ்சினத்தை அவைமுன் வையுங்கள், இன்று அந்திக்குள் ஓர் உடன்பிறந்தோன் குருதியையேனும் உடல் பூசிக்கொண்டே மீள்வீர்கள் என்று. அதன்பின் பார்ப்போம்” என்றார் சிகண்டி.

தன் தொடையில் ஓங்கி அறைந்து பீமன் உரக்க குரல் கொடுத்தான் “அவை அறிக! இன்று தார்த்தராஷ்டிரர்கள் எண்மரைக் கொன்று அக்குருதியை என் உடலெங்கும் பூசிக்கொண்டு மட்டுமே பாசறை மீள்வேன். இன்றிரவு அவ்விழிமகன் தன் அரியணையிலிருந்து அவர் பொருட்டு விழிநீர் சிந்த வைப்பேன்! ஆணை!” புன்னகைத்தபடி சிகண்டி அவையைப் பார்த்து “போதும். இன்று இது நிகழுமென்றால் பீஷ்மர் நம்மில் எத்தனை பேரை கொன்று குவித்தாலும் நாம் வென்றவர்களாவோம். முதல் அடியை சுயோதனனுக்கு அளித்துவிட்டால் நாம் முன்னகரும் பாதை தொடங்குகிறது” என்றார்.

“வீழ்வார் பீஷ்மர், நான் அறிவேன் அவரை. கால்தளர்வார் பிதாமகர். அறிக! மைந்தரைவிட இனியோர் பெயர்மைந்தர்களே! மறுபெயர்மைந்தர்களோ வெறும் பெயர்கள்தான். பிதாமகர் பீஷ்மர் கௌரவ மைந்தர்கள் எவரையும் அறியார். கௌரவர்களோ அவர் தோளில் வளர்ந்த குழந்தைகள். நூற்றுவரைக் கொன்றபின் அவர் உயிர்வாழமாட்டார். ஒவ்வொருவர் இறப்பிலும் நூற்றிலொரு முறை அவர் இறக்கிறார்” என்றார் சிகண்டி. “பீஷ்மரை முற்றிலும் கொல்ல இன்று நம்மால் இயலாது போகலாம். ஒவ்வொரு துளியாக கொல்வோம். நூறுமுறை கொல்வோம்! ஆம், நூறுமுறை கொல்வோம்!”

அவ்வுரை அவையை கிளர்ந்தெழச் செய்வதை சுருதகீர்த்தி பார்த்தான். துருபதர் சிறுநடுக்குடன் எழுந்து “வெற்றிவேல்! வீரவேல்!” என்று கூவ அவையிலிருந்த அனைவரும் கைகளைத் தூக்கி “வெற்றிவேல்! வீரவேல்!” என்று முழங்கினர். ஆனால் அரியணை அமர்ந்திருந்த யுதிஷ்டிரர் வெளிப்படையாகவே நடுங்கிக்கொண்டிருந்தார். விரல்கள் அதிர்வதை தடுக்க கைகளை கோத்து அதன் மேல் தாடையை வைத்துக்கொண்டார். பேச முடியாதபடி அவர் உதடுகள் துடித்தன.

சகதேவன் “இன்று நமது சூழ்கை என்ன?” என்றான். நகுலன் “நாம் யானைத்திரள் சூழ்கை அமைத்துள்ளோம். காட்டு யானைகள் செல்வதுபோல் களம்புகுவோம். முதன்மை யானையென செல்லவிருப்பவர் மூத்தவர் பீமசேனர். முதல் யானையின் வால்சுழிப்பும் செவியசைவும் துதிக்கை நெளிவும் கண்டு பிற யானைகள் அணுகியும் விரிந்தும் களம்நிற்கவேண்டும்” என்றான். துருபதர் “கஜவியூகம் தொன்மையானது. பெருநகர்களை தாக்குவதற்கு அதை அமைப்பதுண்டு. மத்தகங்களால் கோட்டைகளை உடைத்து திறப்பதற்குரியது” என்றார். “பன்னிரண்டு மத்தகங்களால் ஆனது நம் சூழ்கை. ஒவ்வொன்றும் ஒரு சிகரம் எனப்படும். அவற்றை விரிவாக குறித்துள்ளேன்” என்றான் திருஷ்டத்யும்னன்.

“அவர்கள் அமைக்கவிருக்கும் சூழ்கை என்ன என்ற செய்தி ஏதேனும் உண்டா?” என்று சகதேவன் கேட்டான். திருஷ்டத்யும்னன் “நேற்று அது குறித்து என்ன எண்ணப்பட்டதென்று தெரியாது. அங்குள்ள நமது ஒற்றர்கள் அளித்த செய்தியின்படி பெரும்பாலும் அது யானைகளால் ஆன முகில்திரள் படையாக

இருக்கும்” என்றான். சிகண்டி “வ்யாள வியூகம் பெரிய நிலப்பரப்பில் பரவிச்செல்வதற்குரியதல்லவா?” என்றார். “ஆம், வடிவிலா வடிவு அது. நோக்கிற்கு யானைகள்போல். ஆனால் ஒவ்வொரு கணமும் உருவழிந்து இணைந்தும் பிரிந்தும் அணுகும் அதில் மின்கொடிபோல் பீஷ்மர் இருப்பார். முகில்திரளில் எங்கிருந்தும் எங்கும் தாவ அவரால் இயலும். எந்த வடிவத்தையும் வழியையும் அவர் தக்க வைத்துக்கொள்ள வேண்டியதில்லை.”

எண்ணியிராத கணம் யுதிஷ்டிரர் எழுந்து “அவ்வாறே ஆகுக! நன்று நிகழ்க!” என்று சொல்லி கைகூப்பி வெளியே சென்றார். அவர் தன்னை கடந்து செல்ல சுருதகீர்த்தி தலைவணங்கினான். அவர் சென்ற அக்காற்றிலேயே அவர் உளம்கொண்ட வெம்மை இருப்பதாக அவனுக்கு தோன்றியது. நிமித்திகர் எழுந்து கொம்போசை எழுப்ப அவையினர் மெல்லிய சொற்களுடன் கலைந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக செல்வதை சுருதகீர்த்தி பார்த்துக்கொண்டிருந்தான். திருஷ்டத்யும்னன் அவனை அழைத்து “உங்கள் ஒவ்வொருவருக்குமான ஆணைகொண்ட ஓலைகள் பிரதிவிந்தியனிடம் அளிக்கப்பட்டுள்ளன. இன்று கடோத்கஜனுடன் இணைக! இரண்டாவது சிகரம் அவனே” என்றான்.

சுருதகீர்த்தி தலைவணங்கினான். திருஷ்டத்யும்னன் அப்பால் செல்ல பிரதிவிந்தியன் எழுந்து அருகே வந்து “உனக்கான ஆணையோலை, இளையோனே” என்றான். சுருதகீர்த்தி அதை வாங்கி படிக்காமலே தலைவணங்கி தன் இடையில் செருகிக்கொண்டு வெளியில் சென்றான். வெளிக்காற்றின் தண்மை அவனுக்கு ஆறுதல் அளித்தது. கந்தகம் இல்லாத காற்று. ஆனால் அதன் திசை சற்றே மாற கந்தகத்தின் எரிமணம் வரத்தொடங்கியது.

சுதசோமன் தன் புரவியில் அமர்ந்து ஆணைகள் இடுவதற்குள்ளாகவே புரவி கிளம்பிச்சென்றது. அவன் எண்ணத்தை உடலசைவிலிருந்தே அது உணர்ந்தது. சீர்நடையில் பாதையின் பலகை வழியாக சென்றான். குளிரலைகள் பரவியிருந்த முற்காலையில் பாண்டவப் படை போருக்கு ஒருங்கிக்கொண்டிருந்தது. மேலே விடிவெள்ளி விழுந்துவிடும் என நின்றிருந்தது. விளக்குகளின் நிழல்கள் ஆடின. வீரர்கள் கவசங்கள் அணிந்துகொண்டும், படைக்கலங்களை தேர்ந்துகொண்டும், உணவருந்திக்கொண்டும் இருந்தனர். போர் என்னும் கிளர்ச்சி அமைந்து அது நாள்கடன் என ஆகிவிட்டதுபோல மிக மெல்லவே ஒவ்வொன்றும் நிகழ்ந்துகொண்டிருப்பதாக அவனுக்கு தோன்றியது.

‘தோற்றுக்கொண்டிருக்கும் படை!’ என்ற எண்ணம் வந்ததுமே அதை அகற்றும் பொருட்டு அவன் தன்னை கலைத்துக்கொள்ள முயன்றான். ஆனால் அவ்வெண்ணத்திலிருந்து அவன் உள்ளம் விலகவே இல்லை. படைகளின் நடுவே புரவிக்குளம்புகள் ஒலிக்க சென்றுகொண்டிருந்தான். இருபுறமும் காவலர் தலைவணங்கினர். கடோத்கஜனின் பாடிவீட்டருகே சென்றபோது அங்கு காவல் நின்ற இடும்பனாகிய லம்போதரன் தலைவணங்கினான். “அரசர் இருக்கிறாரா? பார்க்க வந்துளேன்” என்றான். “அவர் பலிச்சடங்கு செய்துகொண்டிருக்கிறார்” என்றான் லம்போதரன். “இங்கில்லையா? காட்டிலா?” என்றான். “இங்குதான், அதோ” என்று அவன் சொன்னான்.

புரவியிலிருந்து இறங்கி கடிவாளத்தை ஒப்படைத்துவிட்டு சுதசோமன் முன்னால் சென்றான். தொலைவிலேயே கடோத்கஜன் முழந்தாளிட்டு அமர்ந்து தரையில் மண்

ஒதுக்கி உருவாக்கிய வட்டத்தடத்தில் நிறுத்தப்பட்டிருந்த சிறு கற்களுக்கு முன் இலை விரித்து, அதில் அன்னமும் மலரும் படைத்து, நீர் தெளித்து பூசை செய்துகொண்டிருப்பதை பார்த்தான். அருகே ஓர் இடும்பன் சிறு முழவை விரல்களால் மீட்டி கருங்குரங்கு முழங்குவதுபோல் ஓசையெழுப்பிக்கொண்டிருந்தான். மேலும் இருவர் கைகட்டி நின்றிருந்தார்கள். மூன்று கற்கள் முகப்பில் மலர்சூடி இருந்தன. நூற்றுக்கணக்கான சிறு கூழாங்கற்கள் அவற்றுக்குப் பின்னால் அடுக்கப்பட்டிருந்தன. வாழையிலையில் அன்னம் வெண்மையின் வெறுமையுடன் கிடந்தது.

ஏழு முறை நீர் தெளித்து பன்னிரு முறை மலர் அளித்துவிட்டு கைகூப்பி நெற்றி நிலந்தொட வணங்கி கடோத்கஜன் எழுந்தான். கனவிலிருந்து விழித்ததுபோல் அவனை பார்த்து “வருக, இளையோனே” என்றான். “இது என்ன சடங்கு?” என்று சுதசோமன் கேட்டான். “இது முதற்கல் நாட்டுதல். பின்னர் எங்கள் மலையில் நிலைக்கற்களாக இவை ஆகும்” என்றான். மீண்டும் அந்தக் களத்தை பார்த்த பின் “அக்கூழாங்கற்கள்?” என்றான் சுதசோமன். “நேற்று போரில் கொல்லப்பட்டவர்களில் இடும்பர்களும் அரக்கர்களும்” என்றான் கடோத்கஜன். முன்னாலிருந்த மூன்று பெரிய கற்களை சுட்டிக்காட்டி “இவை சகுண்டனும் உத்துங்கனும் அலம்புஷனும்” என்றான்.

சுதசோமன் “மூத்தவரே, அலம்புஷன் தங்களால் கொல்லப்பட்டவன்” என்றான். “அதனாலென்ன? நாங்கள் அரக்கர்கள். நானளிக்கும் அன்னத்தை அவன் மறுக்கப்போவதில்லை. இங்கு இவ்வண்ணம் இருக்கலாம். பிறிது வடிவில் நாங்கள் வாழும் மண்ணுக்கடியில் நாங்கள் ஒன்றென்றிருப்போம். இறப்புக்குப் பின் நாங்கள் வேர்களின் உலகில் வாழ்வோம். தழுவிக்கொள்ளும் கலையறிந்தவை வேர்கள்” என்றான் கடோத்கஜன். சுதசோமன் அவன் அச்சடங்கை ஏழுமுறை கைகளை நொடித்துச் செய்து முடிக்கும்வரை காத்து நின்றான்.

கடோத்கஜன் “இன்று யானைச்சூழ்கை என அறிந்தேன்” என்றான். “ஆம், நீங்கள் யானையின் துதிக்கை” என்றான் சுதசோமன். திரும்பி அந்தச் சிறுகற்களை சிலகணங்கள் நோக்கிவிட்டு ஏளனச் சிரிப்புடன் “இக்களத்தில் மாண்டவர்கள் அனைவருக்கும் நாளை கல்நாட்டுவதைப்பற்றி எண்ணினேன்” என்றான். “மலைக்குடியினருக்கு மட்டும் கல்நாட்டினால் போதும். ஏனென்றால் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை கொண்டவர்கள், உங்கள் படைவீரர் ஒவ்வொருவரும் பிறிதொருவரை போன்றவர்கள். படைப்பயிற்சி என நீங்கள் எண்ணுவது அவ்வாறு அவர்களை ஆக்குவதைத்தான்” என்றான். “நானும் அதையே எண்ணினேன், மூத்தவரே. கங்கைமணற்பரப்பை ஒட்டுமொத்தமாக இன்றுவரை வாழ்ந்து களம்பட்ட அனைவருக்கும் உரியதாக உருவகித்து ஒரு கை நீரள்ளிவிட்டால் கடன் முடியும்” என்றான் சுதசோமன்.

கடோத்கஜன் அமர்ந்துகொள்ள இரு இடும்பர் கவசங்களை அணிவித்தனர். சுதசோமன் “சகுண்டன்…” என சொல்லத் தொடங்க “அவர்கள் மண்ணுக்குள் சென்றுவிட்டனர். இனி சொல்லில் அவர்களுக்கு இடமில்லை. கனவில்மட்டுமே அவர்கள் தோன்றவேண்டும்” என்றான் கடோத்கஜன். “அவர்களை நீங்கள் நினைவுறவே போவதில்லையா?” என்றான் சுதசோமன். “இல்லை, பேச்சில் அவர்கள் எழலாகாது. கதையென நிலைகொள்ளுதலும் பிறழ்வு. நாம் இங்கே பேசுந்தோறும் அவர்களை இங்கே இழுக்கிறோம். நாம் மறந்தாலொழிய அவர்கள் இங்கிருந்து முற்றாகச் செல்வதில்லை.”

“விந்தைதான்” என்றான் சுதசோமன். “நாங்கள் சொல்லிச் சொல்லி நிலைநிறுத்துகிறோம்.” கடோத்கஜன் “அதுவும் நன்றே, அவர்களை கனவிலிருந்து துரத்துவதற்கான வழி அது” என்றான். “நீங்கள் பலிகொடுப்பதுண்டு அல்லவா?” என்றான் சுதசோமன். “ஆம், ஆண்டுக்கொருமுறை. நினைவுநாட்களில் அல்ல. அனைவருக்கும் ஒரேநாளில், ஒரே பலியாக. ஆடிமாதம் கருநிலவுநாளில்” என்றான் கடோத்கஜன். சுதசோமன் சில கணங்களுக்குப் பின் “இரண்டும் வெவ்வேறு என எண்ணினேன். அவ்வாறல்ல, இரண்டுமே நிகர்தான், மூத்தவரே” என்றான். “எவ்வாறு?” என்றபடி கடோத்கஜன் எழுந்தான். “அறுதியாக இரண்டுமே பொருளற்றவை” என்றான் சுதசோமன்.

கடோத்கஜன் பேருருளையை சங்கிலி பற்றி எடுத்தான். அதை கையில் சுழற்றிச்சுருட்டி அதன் தண்டில் பிடித்து தூக்கி தலைக்குமேல் சுழற்றினான். “தந்தை இன்று வஞ்சினம் உரைத்துள்ளார் என்று அறிந்தேன்” என்றான் சுதசோமன். கடோத்கஜன் கொக்கிச்சரடை சுழற்றிக்கொண்டிருந்தமையால் நோக்கவில்லை. “இன்று கௌரவ உடன்பிறந்தாரில் எண்மரைக் கொன்று மீள்வேன் என்று” என்று அவன் சொன்னான். “அதிலென்ன?” என்றான் கடோத்கஜன். “நீங்கள் வஞ்சினம் உரைக்கவில்லையா? உங்கள் அணுக்கர்களை கொன்றவர்களை…” என்றான் சுதசோமன். “எனக்கு வஞ்சம் இல்லை” என்றான் கடோத்கஜன். “நான் கொல்லலாம் என்றால் அவர்கள் என்னை கொல்வதும் அறமே.”

சுதசோமன் “ஆனால் உங்கள் குருதியினர்…” என்று தொடங்க “குருதியினர் போரிடலாகாது. போரிடலாமென்றால் கொல்லலாம்” என்ற கடோத்கஜன் “இதை உளநாடகங்களாக, உணர்ச்சிப்பெருக்குகளாக ஆக்கிக்கொண்டாலொழிய உங்களால் போரிட இயலாது. நான் அவ்வாறல்ல, போரின்பொருட்டே போரிடுபவன்” என்றபின் பெரிய பற்கள் தெரிய புன்னகைத்து “செல்க… களத்தில் காண்போம்!” என்றான். “நான் உங்களிடம் பிறிதொன்றைச் சொல்ல வந்தேன்” என்றான் சுதசோமன். “ஆனால் உங்கள் உணர்ச்சியின்மை அதை சொல்லவேண்டாமென என்னை தடுக்கிறது.” கடோத்கஜன் “சொல்லாது சென்றால் எஞ்சாது எனில் சொல்லவேண்டியதில்லை” என்றான்.

அந்தக் கூற்றிலிருந்த கூர்மையை வியந்தபடி “ஆம், சொல்லாமல் சென்றால் அது பெருகும், மூத்தவரே” என்றான் சுதசோமன். பெருமூச்சுடன் அணுகிவந்து “நான் தங்களிடம் கோர வந்தது இதுவே. இந்தப் போரில் என் உடன்பிறந்தார் களம்படக்கூடும்” என்றான். “ஆம்” என்றான் கடோத்கஜன். “மூத்தவர்கள் பிரதிவிந்தியனும் யௌதேயனும் போர்வல்லவர்கள் அல்ல. களத்தில் அவர்கள் திகைத்து நின்றிருப்பதைக் காண நெஞ்சு பதைக்கிறது. சுருதசேனனும் சதானீகனும்கூட போர்தேராதவர்களாகவே தெரிகிறார்கள் இக்களத்தில். நானும் சர்வதனும் சுருதகீர்த்தியும் அபிமன்யூவும் மட்டுமே போர்க்கலை தேர்ந்தவர்கள். நாங்கள் போரிடுவதும் இறப்பதும் இயல்பு. அவர்கள் இறந்தால் அது வெறும் கொலை…”

“ஆம், அவ்வண்ணம் பலர் இங்குள்ளனர். தோள்வளராச் சிறுவர்கள்கூட இங்கே பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். நான் இதை கோருவது பெரும்பிழை. அரசமைந்தன் என நின்று இப்படி எண்ணுவதே அறமீறல். ஆயினும் உடன்பிறந்தான் என இதையே என் உள்ளம் சொல்லிக்கொண்டிருக்கிறது. மூத்தவரே, அவர்கள் காக்கப்படவேண்டும்” என்று சுதசோமன் தொடர்ந்தான். “அளிகூர்க! தாங்கள் அவர்களைக் காத்துநிற்கவேண்டும்…” கடோத்கஜன் பேச நாவெடுப்பதற்குள் சுதசோமன் சொன்னான் “நான் இதை எந்தையர் எவரிடமும் சொல்ல இயலாது.

முதல் நாள் முதல் இளவரசன் களம்பட்டதுமே எங்களுக்கு எந்தத் தனிக்காவலும் கூடாதென்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டனர்.”

“நான் இங்கே எந்தைக்கு துணைபுரியவே வந்தேன்” என்றான் கடோத்கஜன். “எவருக்கும் பொறுப்பேற்றுக்கொள்ள என்னால் இயலாது.” சுதசோமன் தளர்ந்து “ஆம், நீங்கள் இவ்வாறுதான் சொல்வீர்கள் என எண்ணினேன்” என்றான். “வருகிறேன், மூத்தவரே” என நடக்க உடன்வந்த கடோத்கஜன் தணிந்த குரலில் “நான் இருக்கும்வரை…” என்றான். சுதசோமன் நின்றான். கடோத்கஜன் அவனை பார்க்காமல் மறுதிசை நோக்கி திரும்பியிருந்தான். “தாங்கள் இருக்கும் வரை எவரும் அவர்களை அணுகமுடியாது… அதுபோதும்” என்றபின் சுதசோமன் சென்று தன் புரவிமேல் ஏறிக்கொண்டான்.

காவல்மாடத்தின் மேலிருந்து பாண்டவப் படை திரண்டுகொண்டிருப்பதை சுதசோமன் வெற்றுவிழிகளுடன் நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். ஒவ்வொருவரும் தங்களுக்கான இடத்தை நோக்கி செல்ல மிக விரைவாக படை நிரையமைந்தது. மணல்துகள்களும் கற்களும் தாமாகவே எழுந்து இணைந்து கோட்டையென்றாவதுபோல. பின்னர் ஒவ்வொரு கணமும் உடைந்து சிதறிப்பரந்து மீண்டும் மணல்வெளியாக ஆகிவிடத் துடிப்பதுபோல ததும்பிக்கொண்டே இருந்தது. படை எனத் திரளாவிட்டால் இத்தனை பெரிய நிகழ்வை இம்மானுடர் எதிர்கொள்ள முடியுமா? படையில் ஒரு துளிமட்டுமே என உணராவிட்டால் இயல்பாக இதில் அமைய முடியுமா?

அவன் ஒவ்வொரு முகங்களையாக பார்க்க விழைந்தான். உறுதியும் களைப்பும் இணையாகக் கலந்திருந்த முகங்கள். ஒவ்வொருவரும் இரவில் நன்கு துயிலப் பழகிவிட்டிருந்தனர். ஆயினும் கனவுகள் அவர்களை அலைக்கழித்தன. அவர்களுக்கு மேல் இரவில் இறந்தவர்களின் போர் ஓயாது நிகழ்ந்துகொண்டிருந்தது. முன்னிரவிலேயே படுத்து காலையில் எழுந்தாலும்கூட அவர்கள் துயிலிழந்தவர்கள்போல் இமை தடித்து, முகம் வீங்கி, வாய் உலர்ந்து, சொல்லிழந்திருந்தனர். அங்கிருந்து நோக்கியபோது ஒட்டுமொத்தமாகவே படை அனைத்து ஊக்கத்தையும் இழந்து வெளிறிய உடலென உயிரின்மை தெரிய நின்றிருப்பதை காணமுடிந்தது. இறந்தவர்கள் உயிருள்ளவர்களை வதைக்கிறார்கள். இரவில் கனவென வந்து குருதி உறிஞ்சுகிறார்கள்.

சுதசோமன் பெருமூச்சுவிட்டான். அங்கே படைக்கெழுந்து வந்தபோதிருந்த உணர்வுகளை மிகமிக அகலே, கனவென நினைவுகூர இயன்றது. எதன்பொருட்டு பிறந்தோமோ, எதற்காக நாள்நாளென கணம் கணமென காத்திருந்தோமோ அதற்காக எழுந்துள்ளோம் என்ற உணர்வு. வெற்றி அல்லது வீரன் எனும் புகழ். கற்பனையில் மாவீரர்களான மூதாதையர் வந்துகொண்டிருந்தனர். பாரதவர்ஷத்தின் அவைகளில், இல்லத் திண்ணைகளில், கல்விநிலைகளில் அகல்விளக்கில் நெய்ச்சுடர் எரிய அவன் கதையை சூதர்கள் பாடுவதை அவன் கண்டான். அவன் பெயரெழுந்த காவியத்தின் வரிகளை விழிகூர்ந்தால் படித்துவிடமுடியுமெனத் தோன்றியது.

குருக்ஷேத்ரம் முதன்முதலாக கண்முன் விரிந்தபோது மெய்ப்பு கொண்டு சிலிர்த்து புரவிமேல் அமர்ந்துவிட்டான். பின்னர் உடலை உணர்ந்தபோது காமத்தின் தசையிறுக்கத்தை அறிந்து சூழ நோக்கினான். அத்தனை படைவீரர்களும் சொல்லிழந்து நின்றிருந்தனர். எங்கோ ஓசை ஒன்று எழுந்தது. மழை

பெருகிவருவதுபோல் அனைவரையும் சூழ்ந்து மூடியது. “குருநிலம் சிவக்கட்டும்! குருதி அவியாகட்டும்! தேவர்கள் மகிழ்க! மூதாதையர் உவகை கொள்க! வெற்றிதேவியே, அணுகுக! இனியவளே, தூயவளே, சாவுதேவியே அணுகுக! வெற்றிவேல்! வீரவேல்!” அவனும் உடல் திறந்தெழும் பேரொலியுடன் கைகளைத் தூக்கி எக்களித்தான்.

வெற்றியும் சாவும் இணைச்சரடுகளென முயங்கியே எப்போதும் சொல்லப்பட்டுள்ளன. சாவு சாவு என்று சொல்லிச்சொல்லி சாவின் பொருளை மழுங்க வைத்திருக்கின்றனர். வெற்றி, தோல்வி, போர், களம் என அத்தனை சொற்களும் பொருள் மழுங்கிய பின்னரே படைக்கு எழமுடிகிறது. “வேல்களும் அம்புகளும் கூர்கொள்கின்றன, சொற்கள் மழுங்குகின்றன, போர் அணுகும்போது” என்றான் சுருதகீர்த்தி. எப்போதுமே கூரிய சொற்கள் கொண்டவன். “சென்றுபழகி மென்மையாகின்றன பாதைகள். சாவும் அவ்வாறே ஆகியிருக்கக்கூடும்.”

ஆனால் முதல்நாள் போருக்குப் பின் பாடிவீட்டுக்கு மீள்கையில் அவன் உள்ளம் ஏமாற்றம் கொண்டிருந்தது. இதுவா போர்? இவ்வண்ணமா அது நிகழும்? அனைத்தும் இத்தனை எளிதானதா? மீளமீள சொல் ஓடிக்கொண்டிருந்தது. அந்தியில் உடலை மென்மரவுரியால் ஏவலன் துடைத்துக்கொண்டிருக்கையில் அருகே அமர்ந்திருந்த சுருதகீர்த்தியிடம் “நாம் கற்றவற்றுக்கெல்லாம் போரில் எப்பொருளும் இல்லை போலும்!” என்றான். “போரில் கற்றுக்கொள்வனவற்றுக்கு மட்டுமே இங்கே பொருள்” என்றான் சுருதகீர்த்தி. “கற்றுக்கொள்வதற்கு முதலில் தேவை சாகாமலிருப்பது.”

சுதசோமன் “நான் இவ்வாறு எண்ணவில்லை” என்றான். “வேறு எவ்வாறு எண்ணினீர்கள்?” என்று சுருதகீர்த்தி கேட்டான். “இது வெறும் கொலை… அருங்கொலை” என்றான் சுதசோமன். சுருதகீர்த்தி வெடித்துச் சிரித்தான். “என்ன சிரிப்பு?” என்றான் சுதசோமன் எரிச்சலுடன். அவன் மறுமொழி சொல்லவில்லை.

சுதசோமனை வலப்பக்கம் இருந்து குறுமுழவு அழைத்து ஆணையிட்டது. தனக்கான ஆணை என்பதை களம்பழகிய செவி அக்கணமே உணர்ந்துகொண்டது. “சுதசோமன் எழுக! முகக்களிற்றை சென்று காண்க!” முழவோசையையும் கொம்போசையையும் அது எவருடைய தனிக்குரலும் அல்ல என்பதனால் அது படையென எழுந்த பேருருவின் ஆணை என்று கொள்வதே அவன் வழக்கம். களிறொன்று பேசத் தொடங்கியதுபோல அது ஒலித்தது. ஆனால் புரவியில் ஏறும்போது மீண்டும் அது ஒலிக்கக் கேட்டபோது தந்தையின் முகம் நினைவிலெழ அகம் சிலிர்த்துக்கொண்டான்.

புரவியில் சென்றுகொண்டிருந்தபோது அவ்வாணை மீண்டும் எழுந்தது. அப்போது அது பீமனின் குரலாகவே இருந்தது. புரவி நாற்கால்தாளம் துள்ளி தொடர்ந்தொலிக்க பலகைச்சரடுமேல் விரைகையில் தன் உள்ளம் ஆவலும் உவகையும் கொண்டு துடிப்பதை அவன் உணர்ந்தான். பீமன் அரிதாகவே அவனுடன் பேசுவது வழக்கம். மகவுடன் பேசும் அன்னை யானையின் உள்ளிருந்து உள்ளேயே ஒலித்தோயும் மெல்லிய உறுமல்போல அது ஒலிக்கும். அவன் தன்னிடம் அவர் பேசிய ஒவ்வொரு சொற்களையும் உள்ளே மிக ஆழத்தில் அவன் வைத்திருந்த சிறு பொற்செப்பு ஒன்றில் இட்டு வைத்திருந்தான். அருமணிகள்போல. நீர்தொட்டால் முளைத்தெழும் மலர் விதைகள்போல.

நினைவறிந்த நாள் முதல் கிடைத்த தந்தையின் அனைத்து தொடுகைகளும் அவன் உடலில் நினைவென வாழ்ந்தன. எப்போதுமே விடைபெறுவதற்கு சற்று முன்பு இயல்பாக வேறெதன் பொருட்டோ என தந்தை அவனை தொட்டார். எதையாவது

சுட்டிக்காட்ட விரும்புபவர்போல, எதையேனும் நினைவுறுத்துபவர்போல, வேறெவரிடமோ பேசிக்கொண்டிருக்கையில் அறியாது கைவந்து படிந்ததுபோல. வேழத்துதிக்கையின் எடையுள்ள அப்பெருங்கை தன்மீது படிகையில் அதன் எடையும் அழுத்தமுமேகூட அத்தனை மென்மையையும் எப்படி உணர்த்துகிறது என்பது என்றும் அவன் எண்ணி வியப்பது.

படைமுகப்பில் இறங்கி அங்கு முழுக் கவசங்களணிந்து பிறிதொருவரிடம் பேசிக்கொண்டிருந்த பீமனை அணுகினான். மிகத் தொலைவிலேயே அது தந்தை என்று தெரிந்தது. அவர் உடலில் ஒரு துளிகூட வெளியே தெரியவில்லை. பேருருவத்தால் என்றால் அவர் அளவுக்கே உருவம் கொண்ட பலர் அரக்கர் குடியிலிருந்து போருக்கெழுந்திருக்கிறார்கள். களிற்றுச்சூழ்கையில் முகப்பில் மத்தகம் எனவும் துதிக்கை எனவும் அமைக்கப்பட்டிருந்த வீரர்கள் அனைவருமே பேருருவர்கள். அவரது அசைவே அவரென காட்டியது. முகம்போல, குரல்போல, அவற்றினும் நுண்ணிதாக மானுடரை அடையாளப்படுத்துவது அசைவு. முகத்திலும் குரலிலும் எழுவதைவிட உள்ளமெழுவது அசைவில்தான். உள்ளமென தன்னை நிறுத்தியிருப்பதன் கண்சூழ் தோற்றம்.

சுதசோமன் தலைவணங்கியபோது தலைக்கவசத்துடன் திரும்பிப் பார்த்த பீமன் கைதூக்கி “நீ மத்தகத்தின் செவியென அமைக!” என்றான். “ஆணை” என்றான் சுதசோமன். “இப்போரில் நாம் உடைத்து உட்புகவிருக்கிறோம். செல்லும் தொலைவு முதன்மையானதல்ல. செல்லும் இடமெங்கும் முற்றழிவு நிகழவேண்டும். இப்போர் முடிகையில் அவர்கள் தங்கள் இழப்புகளை எண்ணி ஏங்கவேண்டும். புரிகிறதென்று எண்ணுகின்றேன்” என்றான் பீமன். “அவ்வாறே” என்று சுதசோமன் தலைவணங்கினான். “உன் இளையோன் மறுபுறச் செவியென நிலைகொள்கிறான். துதிக்கை என அவன்” என்று பீமன் சொன்னான்.

சுதசோமன் உள்ளம் பொறாமையால் பொங்கி பின் மெல்ல அமைந்தது. பெயர் சுட்ட நாணுமளவுக்கு தந்தையின் உள்ளத்தில் ஆழ்ந்த அன்பை விளைவித்திருக்கிறாரா கடோத்கஜன்? அவர் அரக்கர்குலத்தவர் என்பதனால் நாணுகிறார் என்று எண்ணவியலாது. அவ்வாறு நாணுபவர் அல்ல தந்தை. ஒருமுறைகூட கடோத்கஜனை நேர் நின்று அவர் நோக்கியதில்லை. அவரைக் குறித்து ஒரு சொல்லும் உரைத்ததில்லை. தன் அன்பின் எடை தாளாதவர்போல் அப்பேரன்பின் உலகப்பொருளை, அல்லது பொருளின்மையை எண்ணி நாணுபவர்போல அத்தனை பின்னகர்ந்து தனக்குள் அமர்ந்துகொள்கிறார்.

சுதசோமன் மீண்டும் அவரது ஆணைக்காக காத்துநின்றான். பீமன் “செல்க!” என்று கையசைத்து திரும்பி அருகே நின்ற பேருருவ அரக்கர் குலத்தோனிடம் “கவசங்களணிந்த யானைகள் ஆயிரம் முகப்பில் நின்றாகவேண்டும். நெடுந்தூண்கள் ஏந்திய ஐநூறு யானைகள் இருநிரையென நிற்கட்டும். அவை இக்களிற்றின் தந்தங்கள்” என்றான். அரக்கன் சுதசோமனை திரும்பிப்பார்த்துவிட்டு தலையசைத்தான். படைசூழ்கை முற்றிலும் வகுக்கப்பட்டுவிட்டபின் எழும் அந்த ஆணை பொருளற்றது என்று சுதசோமன் புரிந்துகொண்டான். அவனை தவிர்க்கும்பொருட்டு பேசப்படுவது. தான் அவனிடம் படைசூழ்கை அன்றி எதையும் பேச விழையவில்லை என தந்தை காட்டுகிறார்.

மீண்டும் தலைவணங்கி அவன் திரும்பி நடந்தபோது அவ்வழைப்பும் ஆணையும் எதற்காக என்று எண்ணிக்கொண்டான். இறுதியாக தன்னை பார்க்க விழைகிறாரா என்று எண்ணியபோது அவன் உதடுகளில் புன்னகை விரிந்தது. சர்வதனையும் அவ்வாறு அழைத்து ஒரு சொல் பேசியிருக்கக்கூடும். அவர் தன்னை தொடவில்லை

என்பதை அவன் அதன்பின்னர் எண்ணிக்கொண்டான். தொடவில்லை என்றால் தொடுவதைப்பற்றியே அவர் எண்ணியிருக்கக்கூடும். அவ்வாறு மிகையாக எண்ணியமையாலேயே அதை இயற்றமுடியாமலாகும் அச்செயல் மேலும் மேலும் உணர்வுகள் செறிந்து எடை மிகுந்து உள்ளத்தால் அசைக்கவொண்ணாததாக மாறும். சுதசோமன் தன் படைப்பிரிவுக்கு திரும்பி வரும் வரை புன்னகைத்துக்கொண்டே இருந்தான்.

சுதசோமன் படைமுகப்பில் வந்து நின்று அருகே நின்ற ஏவலனிடம் “அனைத்தும் ஒருங்கிவிட்டனவா?” என்றான். மதங்க குலத்தை சேர்ந்த கூர்மிகன் எனும் பேருருவ கதைவீரன் அவன். “ஆம் இளவரசே, நமது களிறுகள் பொறுமையிழக்கத் தொடங்கிவிட்டன” என்று அவன் சொன்னான். புன்னகையுடன் கிழக்கை சுட்டிக்காட்டினான் சுதசோமன். பொறுமையிழப்பின் ஓசைகள் படைகளிலிருந்து வந்தன. யானைச்சங்கிலிகளின் குலுக்கம். புரவிகளின் செருக்கடிப்பு. வாழக்கிடைக்கும் இறுதிக்கணமாக இருக்கக்கூடும் இது. இதில் ஏன் திளைக்காமலிருக்கிறார்கள்? ஏனென்றால் உள்ளம் ஏற்கெனவே போரிலிறங்கிவிட்டது. உடல் தங்கி நின்றிருக்கிறது. உள்ளம் உடலை இழுக்கிறது.

முதல்முறையாக சுதசோமன் தன் உடலெங்கும் ஒரு பதற்றத்தை உணர்ந்தான். அது அவன் ஈடுபடும் நான்காம்நாள் போர். இம்மூன்று நாட்களிலும் ஒவ்வொரு கணமுமென அவன் களம்நின்று கதையும் வில்லும் ஏந்தி போராடி இருக்கிறான். மும்முறை லட்சுமணனிடமும், நான்கு முறை துருமசேனனிடமும், கௌரவ மைந்தர்கள் நூற்றுக்கு மேற்பட்டோரிடமும் நிகர்சமர் புரிந்திருந்தான். கௌதம குலத்து சுஷ்மிதன், ஊஷ்மளன், மதங்கசேனன் ஆகியோரையும், மாளவத்து இளவரசர்கள் அசீதன், அஸ்மாதன், அப்ரமாதன் ஆகியோரையும் தலை சிதற அடித்து கொன்றான். அவந்தியின் புஷ்கரனையும், புஷ்பதந்தனையும், புஷ்பமித்திரனையும் கொன்றான். ஆனால் ஒரு படைசூழ்கையில் முகப்பில் அவன் நிற்க நேர்ந்தது அதுவே முதல் முறை.

அவன் தந்தை தன் தோளில் தொட்ட இடத்தின்மேல் கைவைத்தான். அதன் பின்னரே அவர் தன்னை தொடவில்லை என நினைவுகூர்ந்தான். முதல்கணத் திகைப்புக்குப்பின் அவனுக்கு புன்னகையே மீண்டும் எழுந்தது. அவர் தொட எண்ணிய இடமா அது? உள்ளத்தால் விழிகளால் நூறுமுறை தொட்டிருப்பாரா? போர்முரசு எழுவதை அவன் அக்கணம் உயிர்பிரியும் கணத்தின் துடிப்புபோல் உணர்ந்தான். களம்புகுந்து கதைசுழற்றி வென்று செல்லவேண்டும். “சுதசோமன்! சுதசோமன்!” என எழும் குரல்கள் மெல்ல ஓய்ந்து “இளைய பைமி! இளைய பைமி!” என ஒலிக்கவேண்டும். மீண்டும் மீண்டும் மெய்ப்புகொண்டபடி விழிநீர் நிறைந்த கண்களுடன் அவன் காத்து நின்றிருந்தான்.

கிழக்கே புலரியை அறிவிக்கும் முரசொலி எழுந்ததும் சிலிர்த்து, செவி முன் குவித்து, முன்கால் தூக்கி பாய ஒருங்கும் படைப்புரவியென தன்னில் விசை கூட்டியது பாண்டவப் படை. கதையை வலக்கையால் பற்றியபடி சுதசோமன் மூச்சை இழுத்து மெல்ல விட்டு தன்னை ஆற்றிக்கொண்டான். “எழுக! எழுக! எழுக!” என முரசுகள் அதிரத்தொடங்கியதும் “வெற்றிவேல்! வீரவேல்!” எனும் பேரோசையுடன் பாண்டவப் படை எழுந்து கௌரவப் படையை நோக்கி சென்று விசை அழியாது முட்டி ஊடுகலந்தது.

எத்தனை பழகிய ஓசையாக அது உள்ளதென்று சுதசோமன் வியந்தான். ஒவ்வொரு நாளுமென பல்லாண்டுகள் கேட்ட ஓசைக்கு நிகர். நான்குமுறை மட்டுமே கேட்ட ஓசை, நாலாயிரம்முறை உள்ளத்தில் அதை மீட்டிக்கொண்டிருந்திருக்க வேண்டும். போர் எழுந்த பின் படையிலெழும் ஓசை பிறிதொன்று. படை நின்றிருக்கையில் எழுவது வேறு. படை எழுந்து எதிர்ப்படையை சந்திக்கும் தருணம் வரை அது முற்றிலும் தனித்த ஓசை. அறைகூவல் என முதலில் தோன்றும். வெறியெழுகை என எண்ண முடியும். அரிதாக துயரின் ஓலம் என்றும் தோன்றும். எண்ண எண்ண பொருளிலாதாகும் ஓசை அது. ஆனால் அறியமுடியாத பொருள் ஒன்றை கரந்தது என்றும் தோன்றச் செய்வது.

போர்நிகழ்வின் ஓசையில் எதிரியின் ஓசையும் கலந்துள்ளது. அதில் தன்னுணர்வென எதிரி எப்போதும் உள்ளான். எழும் படையின் ஓசையில் எதிரி இல்லை. அது ஒரு பெருந்திரள் தன்னை படையென உணரும் கணம் மட்டுமே. வியனுருக்கொண்டு கைவிரித்து நானென தருக்கும் தருணம். ஒவ்வொருவரும் தன்னை உதிர்த்து தன்னிலிருந்து வேறாகி எழும் கணங்களின் பெருந்தொகை. விண்வடிவம் கொண்டெழும் தெய்வங்கள் அவ்வோசை எழுப்பக்கூடும். சுதசோமன் கதையைச் சுழற்றி எதிர்வருபவர்களை அறைந்து தலையுடைத்து, குருதி சுழன்றுதெறிக்க கைசுழற்றி அவ்விசையாலேயே மீண்டும் மேலெடுத்து மீண்டும் பறக்கவிட்டு அடித்தான். அடியின் எதிர்விசையால் தசைகள் குலுங்கின. உள்ளே நெஞ்சக்குலை புல்நுனிப் பனித்துளிபோல் அதிர்ந்தது. உள்ளே ஓடிக்கொண்டிருந்த சொற்கள் நடுங்கி ஒன்றன்மேல் ஒன்றென ஏறிக்கொண்டன.

சங்கிலியில் கட்டப்பட்ட கதை அவனுடலிலிருந்து கிளைத்த பேருருவத்தெய்வமொன்றின் விரல்முறுக்கிய கைபோல் பாய்ந்து அறைந்து மீண்டது. தேர்களை உடைத்து, புரவிகளின் தலைகளை அறைந்து சிதறடித்து, யானை மத்தகங்கள் மேல் பிறிதொரு மத்தகமென முட்டி அதிர்ந்து எழுந்தது. அவை குருதி கொட்ட, துதிக்கை தளர்ந்து, கால் வளைந்தமைய, முன்னால் சரிந்தன. “செல்க! செல்க!” என்று அவன் தன் தேர்ப்பாகனுக்கு ஆணையிட்டுக்கொண்டே இருந்தான். அவன் உடல் குருதியால் நனைந்து குளிரத் தொடங்கியது. அவன் விழிகள் தொட்டுத்தொட்டு பறந்தலைந்தன.

பாண்டவப் படை எழுந்து முன்சென்று கலந்ததுமே கௌரவப் படை பல சிறுதுணுக்குகளாக விலகி மத்தகம் பாய்ச்சி வந்த களிற்றை தன் உடலுக்குள் சேறென, நீரென மாறி உள்ளிழுத்துக்கொண்டு அனைத்து திசைகளிலிருந்தும் சூழ்ந்தது. அம்புகளும் வேல்களும் மத்தகங்களின் மேல் பொழிந்தன. கவசங்களேந்திய யானைகளால் உருவான இரும்புக்கோட்டை இருபுறமும் சூழ்ந்து அரணமைக்க அதன் வாயில் திறப்பில் கதையுடன் நின்று சுதசோமன் போர் புரிந்தான். “முன்செல்க… கொன்று முன்செல்க!” என முரசொலி அறைகூவியது. “யானையின் வலக்கொம்பு முன்சென்றுள்ளது… இடக்கொம்பு தொடர்க… இடைவெளியை துதிக்கை சிதைக்கட்டும்!”

எதிரே அரைக்கணம் என எழுந்த தேர்திரும்பலில் துருமசேனனின் உருவை சுதசோமன் கண்டான். தன் பொருட்டே அவன் வந்திருப்பதை அக்கணத்தில் உணர்ந்தான். முன்நோக்கி என்று அவன் கைநீட்டி ஆணையிட தன் முன் நீண்டிருந்த தேர் நுகத்தில் தீட்டப்பட்ட இரும்புப்பரப்பில் அவ்வசைவைக் கண்டு பாகன் தேரை துருமசேனனை நோக்கி கொண்டுசென்றான். செல்லும் விசையிலேயே நாணொலி எழுப்பி, சங்கொலி முழக்கி பிறரை விலக்கி முதல் அம்பை துருமசேனனின் நெஞ்சை நோக்கி எய்து சுதசோமன் போருக்குள் தன்னை ஆழ தொடுத்துக்கொண்டான். ஆடிப்பாவை என நாணொலியும் சங்கொலியுமாக

அவனை நோக்கி வந்த துருமசேனனின் வில்லதிர்ந்து எழுந்த அம்பு அவன் நாணின் அதிர்வு அடங்குவதற்குள்ளாகவே வந்து நெஞ்சை அறைந்து அவன் அணிந்திருந்த இரும்புக்கவசத்தை அதிரச் செய்தது. அவன் தன் சொல் ஒன்று இணைச்சொல்லுடன் இணைந்ததுபோல் உணர்ந்தான்.

சுதசோமன் அம்புகளை எய்தபடி துருமசேனனை அரைவட்ட வடிவில் சுற்றி வந்தான். அரைவட்டத்தில் மறுவளைவை நிரப்பியபடி துருமசேனன் சுற்றினான். துருமசேனனின் கை எடுக்கவிருக்கும் அம்பை முன்னரே சென்றடைந்தது சுதசோமனின் உள்ளம். அவ்வம்பு எழுந்த பின்னர் அதிரும் நாணை ஒருகணமும், அறையும் அம்பின் சிறகை மறுகணமும், அது தன்னை கடந்து போகவிட்டு சுழன்று எழுகையில் விம்மலோசையை பிறிதொரு கணமும் உணர்ந்தான். ஒற்றைக்கணத்தில் மூன்று பட்டைகள் என அவை அமைந்திருப்பதை அறிந்தான். பிறிதொரு முறையும் அவ்வாறு படைக்களத்தில் தன் முழுதுளமும் குவிந்ததில்லை என்று உணர்ந்தான்.

அம்புகள் விம்மி ஓங்கரித்து உறுமி கூச்சலிட்டுச் சென்றன. உரசி பொறிகளுடன் மண்ணில் பாய்ந்தன. ஒன்றையொன்று சிதறடித்து நிலைகுலைந்து துள்ளித் துடித்தபடி நிலத்தில் விழுந்தன. துருமசேனனின் தேர்ப்பாகன் தலைக்கவசம் உடைந்து இரு கைகளையும் விரித்து நுகத்தில் மல்லாந்து இன்னொரு கவசத்தை எடுப்பதற்குள் சுதசோமன் அவன் கழுத்தில் பிறையம்பை எய்தான். தலைதுண்டுபட்டு அவன் பக்கவாட்டில் சரிய நிலை தடுமாறி அழிந்த தேரில் நின்று “தேர்வலர் வருக! தேர்வலர் வருக!” என்று கூச்சலிட்டபடி துருமசேனன் சுதசோமனை அம்புகளால் இடைவிடாது அறைந்து காற்றில் வேலி ஒன்றை நிறுத்தினான்.

தன் தேரிலிருந்த நீள்மூங்கிலை எடுத்து ஓங்கி ஊன்றி காற்றில் தாவியெழுந்து எதிர்வந்த தேரின் புரவி மேல் காலூன்றி துருமசேனனின் தேரில் ஏற முயன்ற மாற்றுத் தேர்ப்பாகனின் தலையை கவசத்துடன் அறைந்துடைத்து அடுத்த சுழற்றலில் துருமசேனனின் தோளை அறைந்தான் சுதசோமன். தன் கதையுடன் தேரிலிருந்து பின்புறம் பாய்ந்திறங்கி மண்ணில் நின்ற துருமசேனன் அடுத்த அடியை ஒழிய, தேர்த்தூணில் பட்டு அதன் இரும்புக் கவசத்தை உடைத்தது கதை. தேரிலிருந்து தாவி எழுந்து துருமசேனனின் முன்னால் நின்று “பொருதுக, மூத்தவரே!” என்றான் சுதசோமன். “ஆம், இதற்காகவே அனைத்தும் பயின்றுள்ளோம்!” என்று கூவியபடி சுதசோமனை தன் கதையால் அறைந்தான் துருமசேனன்.

இரு கதைகளும் வெடிப்போசையுடன் முட்டிக்கொண்டன. இரும்புக்குண்டுகள் இரு வண்டுகளென ரீங்கரித்து ஒன்றையொன்று துரத்தின. விசையுடன் முட்டிக்கொண்டு அதிர்ந்து விலகி மீண்டும் சுழன்று விசைகொண்டன. ஒன்றை ஒன்று உடைக்க வெறிகொண்டவைபோல. உருகி உடல் பிணைத்து காற்றில் திளைக்க விழைபவைபோல. சுதசோமன் பிறகொருபோதும் ஒருவரை அத்தனை புலன் குவிந்து உளம்கூர்ந்து அணுகியதில்லை என்று உணர்ந்தான். துருமசேனனின் ஒவ்வொரு தசையசைவும் ஒவ்வொரு விழியோட்டலும் அவையென வெளிப்பட்ட உள்ளமும் அவனுக்கு எச்சமின்றி அவனுக்காக திறந்திருந்தன. மிகச்சில கணங்களிலேயே உள்ளங்கள் மட்டுமே மோதிக்கொள்ளும் போரென்று ஆகியது அது.

கால்வைக்கும் கணக்குகளாக முதலில் பயின்றது கதை. போருக்கெழும் நிலைமண்டிலம், விசைகொண்ட தாக்குதலை எதிர்கொள்கையில் அரைமண்டிலம், எழுந்தடிக்கையில் முன்நீள் அரை மண்டிலம். அடிஏற்று நிலைகொள்கையில்

பின்நீள் அரைமண்டிலம். அடியொழிந்து விசைகூட்டுகையில் பின்குதிகால் ஊன்றிச்சுழலும் செக்குச்சுழல்கை. அறைவிசையை சிதறாது காத்து மற்றொரு அறையென்றாக்குகையில் முன்கட்டைவிரல் நின்றுசுழலும் தாழ்குடுமிச் சுழல்கை.

களரியில் கற்கையில் ஒவ்வொன்றும் தனித்தனியாக தொடர்பற்ற அறிதல்களாக இருந்தன. அவற்றை என்றேனும் போரில் நிகழ்த்தப்போகிறோம் என்றே எண்ணியதில்லை. கற்றவை அனைத்தும் முற்றாக மறந்து அமிழ்ந்து வேறெங்கிருந்தோ எழுந்து உடலில் கூடின. சுழன்றறைந்து வாங்கும் ஓதிரம். நின்று இருநிலைகளிலும் சுழற்றும் கடகம். நான்கு என திசைமடிந்து சூழ்ந்துசெல்லும் மண்டிலம், எண்ணியிராது எழுந்து அடிக்கும் சடுலம். நின்று எதிர்கொள்ளும் விஜயம். ஒவ்வொன்றும் உடலில் எழுவதன் உவகை. ஒவ்வொன்றுக்குமுரிய தெய்வங்கள் எடுத்துக்கொள்கின்றன என் உடலை. என் தசைகளில் ஊறுவது தேவர்க்கினிய அமுது.

சுதசோமன் அனைத்து சினங்களையும் பதற்றங்களையும் வெறிகளையும் இழந்து உவகையால் நிறைந்தான். அந்தத் தருணத்தின் விடுதலையில் திளைத்தான். அத்தனை ஆண்டுகளில் எவரிடமும் அந்த தன்னிலையழிந்த அணுக்கத்தை உணர்ந்ததில்லை என உணர்ந்தான். எவரையும் அத்தனை விரும்பியதில்லை. எவரையும் தானென்றே எண்ணிக்கொண்டதில்லை. தோள்தொடும் கணங்களில் தந்தையிடம் மட்டுமே உணர்ந்த அணுக்கம் அது. ஒரு வாயில் சற்றே திறந்து ஒளிக்கோடெனக் காட்டி மூடும் தருணம் அது. கண்கூச அனைத்து வாயில்களும் திறந்துகொண்டிருக்கின்றன இப்போது.

உருளைகளில் அறைவு கைகளுக்கும், தோள்தசைகளுக்கும், உள்ளங்கால் ஊன்றிய மண் வரைக்கும் அதிர்வென்றாகி சென்றது. ஒவ்வொரு அடிக்கும் உள்ளிருந்து புழுதி மூடிய அனைத்தும் நடுங்கி திரையுதிர்த்து உறைவிலிருந்து எழுந்தன. பிறிதொன்றாயின. ஒளி கொண்டன. அக்கதைப்போர் தொடங்கி சற்று நேரமே ஆகியிருந்த போதிலும்கூட அதில் நெடுநாள் அவன் வாழ்ந்திருந்தான் என்றுணர்ந்தான். அதுவரை வாழ்ந்த வாழ்வைவிட செறிந்து நீண்ட பிறிதொரு வாழ்வு.

அதுவரையிலான வாழ்வில் அருந்தருணங்கள் ஒவ்வொன்றும் மிகக் குறைவானவை. அவ்வருந்தருணங்களில்கூட அவன் உடலிலும் உள்ளத்திலும் ஒரு சிறு கூறு மட்டுமே வாழ்ந்தது. விழியோ செவியோ நாவோ தோளோ காலோ நெஞ்சோ... அதை நோக்கி பிற கூறுகள் உறைந்து இன்மையென்றே ஆகி சூழ்ந்திருந்தன. வாழ்ந்த உறுப்பு துடித்து தன்னிலை உணர்கையில் அவை வந்து சூழ்ந்துகொண்டன. அது அந்த தித்திப்பை நினைவு வைத்திருந்தது. தான் பிறிதென்றுணர்ந்தது. தன்னுடையதே என பொத்தி வைத்துக்கொண்டது. அந்த இனிமையை பிற அனைத்திற்கும் எதிராக நின்றே அது அடைந்தது.

உவகையின் கணங்களில் உவகை கொள்ளும் கூர்முனை பிற அனைத்துடனும் முரண்கொண்டு நின்றிருப்பதனாலேயே பல்லாயிரம் கைகளால் அழுத்தி மண்ணுடன் பற்றப்பட்டது. திமிறித்திமிறி அது தான் தான் என்று தெறிக்கையில் மேலும் அழுத்தப்பட்டது. உவகை என்பது ஒரு திணறல். பெருந்திமிறல். பிறிதொருவகையில் அதை அவன் அறிந்ததில்லை. ஆனால் அப்போரில் அக்கணத்தில் ஒவ்வொரு உறுப்பும் முழுதுவகையில் தானழிந்து திளைத்தது. ஒவ்வொன்றும் ஓர் உலகை படைத்தது. கணங்கள் ஒன்றுக்குப் பின் ஒன்றென அடுக்கி உருவாகும் காலம் அங்கில்லை. கணங்களுக்குள் கணங்களுக்குள்

கணங்கள் எனச் செல்லும் காலத்தில் ஒரு கணமே ஆயிரம் ஆண்டுகளாக மாற முடியும்.

துருமசேனனின் கதை சுதசோமனின் தோளை அறைந்தது. அவன் நிலைகுலைந்த கணம் அடுத்த அறை வந்து அவன் நெஞ்சைத் தாக்கி தூக்கி வீசியது. அவன் எழுந்தபோது விழுந்த அறையில் இடைக்கவசம் உடைந்து கீழே தெறித்தது. பின்னிருந்து அவன் தேர்ப்பாகன் “இளவரசே!” என்றான். மேலும் ஒரு அடி பின் வைத்து கவசத்தை கவர எண்ணி அவ்வெண்ணத்திற்கு செல்லாமல் முன் சென்ற உடலால் கதைசுழற்றி துருமசேனனை தாக்கினான் சுதசோமன். அவன் அறையை ஒழிந்து துருமசேனன் பின்னகர்ந்தான். மேலும் மேலும் வெறிகொண்டு தாக்கியபடி சுதசோமன் முன்னால் சென்றான்.

ஆனால் ஒவ்வொரு அடியும் இலக்கு பிழைத்தது. உடலில் பட்ட ஓர் அடி எண்ணத்தை விழிகளை எப்படி குலையச்செய்ய இயலும்? ஆனால் ஒவ்வொரு எண்ணத்தின் முனையும் கூரிழந்திருந்தது. கதை சென்றுசேருமிடம் அணுவிடை காலம் பிழைத்தது. அவன் மூச்சிரைக்கலானான். இதோ என் உடலை அறையவிருக்கிறது அந்தக் கதை. இங்கே உடன்பிறந்தான் கையால் உயிர்விடப்போகிறேன். அவன் விழிகளில் ஒன்று துளிக்கணத்தில் அந்த மண்ணை நோக்கியது. அங்கே மேலும் பலர் மண்தழுவிக் கிடந்தனர். இந்த இடமா? இதுதானா? இந்த மண் இதை காத்திருந்ததா? என் கருவுறும் கணத்தில் இங்கும் ஒரு தேவன் வந்து காத்திருந்தானா?

அவன் கொண்ட அந்த துளித் தயக்கமே துருமசேனனை ஏமாற்றியது. அவன் பின்னடி வைக்கப்போகிறான் என்று எண்ணி எழுந்த துருமசேனனின் கை அரைக்கணம் தளர்ந்தபோது சீறி முன்னெழுந்து அவனை அறைந்து பின்னால் வீழ்த்தியது சுதசோமனின் கதை. நெஞ்சுக்கவசம் உடைந்து தெறிக்க துருமசேனன் மல்லாந்து விழுந்து துள்ளிச்சுழன்று கதையையே ஓங்கி ஊன்றி உடலைச் சுழற்றித் துள்ளி அப்பால் சென்றான். அவனை அறைந்த சுதசோமனின் கதையின் உருளை குருதி விழுந்து நனைந்த குருக்ஷேத்ர மண்ணை மும்முறை குழியாக்கியது. நான்காவது அறை தலைமேலெழ துருமசேனன் தன் கதையால் அதை தடுத்தான். தன் கதையைச்சுழற்றி சுதசோமனின் கதையை விலக்கியபடி எழுந்து ஓங்கி அறைந்து அது தன் விலாவை எட்டாமலிருக்க பின்னடி வைத்து உடல் வளைத்து விலகி மீண்டும் அறைந்தான்.

சுதசோமனின் கதை உரசி பொறிபறக்க நழுவியது. அதைச் சுழற்றி அறைந்தபோது “உம்” என்றான் துருமசேனன். அக்கணம் வரை அருகிலென, தானேயென நின்றிருந்த அவன் அகன்று நெடுந்தொலைவில் இருந்தான். பிறிதொருவன், பிறிதொன்று. அது மானுடனின் ஒலி அல்ல. உயிரின் உறுமல். அனைத்து விலங்குகளிலும் பசியென்றும் காமம் என்றும் குடிகொள்வது. கொன்று கிழித்துண்பது. அறமென்றும் அளியென்றும் நெறியென்றும் குருதியென்றும் அறியாதது. அந்த எண்ணம் சுதசோமனை களிகொள்ளச் செய்தது. இது விலங்கு. இது வெறுந்தசை. இது குருதிப்பை. பிறிதொன்றல்ல. இதற்கு உறவில்லை. இது அறியும் நெறியென்று ஏதுமில்லை. ஒருகணம் என் கைபிழைத்தால் என் குருதி அள்ளிக் குடிப்பது. என் கை ஓங்குமென்றால் என் கையில் வெஞ்செம்மைவிழுதென வழியும் வெற்றி. கொல்! கொல்! அறை! அறை! இக்கணம். இக்கணமே வெற்றி. இக்கணம் அவன் இறப்பது நீ வாழ்வதற்கென்று தெய்வங்கள் அளிக்கும் ஆணை. பிறிதொன்றல்ல. இது போரல்ல. வெற்றியும் தோல்வியும் அல்ல. இருத்தலும் மறைதலும் மட்டுமே. அறைக! அறைக! கொல்க! கொல்க!

அவன் சொல்லனைத்தும் அறைகளாக துருமசேனன் மேல் வீசி மண்ணில் அறைபட்டன. கையூன்றி புரண்டு எழுந்து தன் கதையால் அவனை அறைந்தான் துருமசேனன். அந்த அறை தளர்ந்திருந்தது. அத்தளர்வே சுதசோமனை விசைகொள்ளச் செய்தது. துருமசேனனின் விழிகளை அருகிலென கண்டான். அவை முற்றிலும் அறியாதவையாக இருந்தன. வெற்று ஒளிகொண்டவை. ஒரு சொல்லும் நில்லாதவை. கொல், கொல், கொல் என அவையும் கூறின. அவன் துருமசேனனின் கதையை அறைந்து அது தெறித்து விலகிய இடைவெளியில் மீண்டுமொருமுறை அறைந்து அவன் நெஞ்சக்கவசத்தை உடைத்தான். அடுத்த அறையை துருமசேனன் ஒழிய மீண்டுமொரு அறையால் அவன் உடலை விதிர்த்து செயலிழக்கச் செய்தான். அறைகாத்து மெய்ப்புகொண்டு காத்திருந்தது துருமசேனனின் உடல். கரிய தோலில் விலாவெலும்புகளின் அலை. தோல் மெய்ப்புகொண்டு மழைத்துளி விழுந்த மென்நிலப்பரப்பெனத் தெரிந்தது.

சுதசோமன் இறுதி அறைக்கென அவன் கதை தூக்கியபோது கொம்பொலி எழுந்தது. துருமசேனன் “தந்தை!” என்று கூவினான். அச்சொல் சுதசோமனை உளம்நிலைக்கச் செய்தது. அப்படியென்றால் என் உள்ளம் இதுவரை ஓடிக்கொண்டா இருந்தது? செயலே சொல்லென ஓடும் அந்தப் பெருக்கே என் உள்ளமா என்ன? மீண்டுமொரு கொம்பொலி எழுந்தது. “தந்தையர் இருவர்!” என்றபடி வெறிகொண்டெழுந்து முன்னால் வந்தான் துருமசேனன். எவருடைய தந்தை? அச்சொல். தந்தை! அச்சொல் ஏன் எழுந்தது? தந்தையர்! துருமசேனன் வெறிகொண்டு கூச்சலிட்டபடி கதையை வீசி முன்னெழுந்தான். அந்தப் புத்தூக்கத்தை எதிர்பாராத சுதசோமன் பின்காலடி எடுத்துவைத்தான். மேலும் மேலுமென அறை வந்து அவன் முன் காற்றொலியுடன் சுழன்று சென்றது. அதன்மேல் வந்து பட்ட அம்பொன்று உலோகக் கூரொலியுடன் சிதறியது. சுதசோமனின் காலடியில் யானைச்சடலம் ஒன்று தடுக்க அவன் இயல்பான அசைவுடன் பாய்ந்து பின்னால் சென்று அரைமண்டிலத்தில் அமைந்தான். யானையைக் கடந்து பாய்ந்து அவன் அருகே வந்து அமரும் பறவை என முன்கால்மண்டிலத்தில் நிலம் பதிந்த துருமசேனன் அதே விசையுடன் அவன் தலையை நோக்கி கதையை வீசினான்.

துருமசேனனின் அறைவந்து அவன்மேல் படுவதற்குள் பின்னிருந்து கொக்கியால் அவன் கதை கைப்பற்றப்பட்டது. பெருங்கதையைச் சுழற்றி ஓங்கியறைந்த கடோத்கஜனின் தாக்குதலை பின்னால் தாவிச்சென்று ஒழிந்தான் துருமசேனன். அந்த அறைசென்று பட்ட தேர் நொறுங்கி அதிலிருந்த வீரனின் குருதி உடைந்த குடத்து நீரெனத் தெறிக்க அப்பால் குவிந்தது. புரவிகள் கனைத்தபடி நிலையழிந்தன. துருமசேனன் இன்னொரு வீரனின் கதையை பெற்றுக்கொண்டு உறுமியபடி முன்னால் வந்து கடோத்கஜனை எதிர்கொண்டான். ஓரிரு அறைகளுக்குள்ளாகவே அவனால் கடோத்கஜனை தடுக்கவியலாதென்று சுதசோமன் உணர்ந்தான். அவனுக்குப் பின்னால் முரசுகள் ஒலிக்க இருபுறத்திலிருந்தும் கௌரவர்கள் வந்து சூழ்ந்துகொண்டனர். அவர்களை தனியொருவனாக கடோத்கஜன் எதிர்க்க அவனுக்குத் துணையாக இடும்பர்கள் முழவொலி எழுப்பியபடி சூழ்ந்தனர்.

சுதசோமன் தேரிலேறிக்கொண்டு கைகளை வீசினான். தேர் பின்னால் சென்றது. அவன் தேரிலிருந்து இறங்க அணுகிவந்த மருத்துவர்கள் அவன் கவசத்தை கழற்றினர். உள்ளே குருதி நிறைந்திருந்தது. உடைந்த இரும்புக்கவசம் தசையில் கிழித்திறங்கியிருந்தது. அவர்கள் அதை மருந்துவைத்து கட்ட “துணைசெல்க! பீமனுக்கு துணைசெல்க! அவர் சூழப்பட்டிருக்கிறார்!” என்று அறைகூவியது முரசு.

அவன் மருத்துவர்களை விலக்கியபடி ஓடிச்சென்று தேரிலேறிக்கொண்டு “தந்தையை நோக்கி… தந்தையை நோக்கி!” என ஆணையிட்டான்.

தேரிலிருந்து பொறுமையிழந்து அவன் துடித்துக்கொண்டிருந்தான். அவன் செல்வதை முழவுகள் அறிவித்தன. “விரைக! விரைக!” என அவன் தேர்க்காலில் குறடால் ஓங்கி உதைத்தான். அப்பால் சர்வதன் வந்துகொண்டிருப்பதை கேட்டறிந்தான். தொலைவிலேயே அவன் பீமனின் தேரின் கொடியை பார்த்துவிட்டான். கௌரவப் படையின் மிக ஆழத்தில். வண்டுநுழைந்த தேனீக்கூடு என அங்கே கௌரவப் படை கொந்தளித்துக்கொண்டிருந்தது. முழவுகள் உறுமின. முரசுகள் வானிலிருந்தென ஆணையிட்டுக்கொண்டே இருந்தன. சுதசோமன் தன் கதையை எடுத்துச் சுழற்றி அறைந்து புரவிகளையும் தேர்களையும் உடைத்தபடி பீமனை நோக்கி சென்றான். அப்பால் கடோத்கஜனும் சூழப்பட்டிருப்பதை அறிவித்தன முரசுகள்.

“செய்தி சொல்க! செய்தி சொல்க!” என அவன் கழையனிடம் ஆணையிட்டான். அவன் மேலெழுந்து இறங்கி “அரசே, யானை முற்றிலும் சூழப்பட்டுள்ளது. அப்பால் இளைய பாண்டவர் அர்ஜுனரை பீஷ்மர் எதிர்கொள்கிறார். அபிமன்யூவை ஜயத்ரதர் நேரிடுகிறார். சுருதகீர்த்தியை அஸ்வத்தாமரின் படைகள் தடுத்துள்ளன. சாத்யகியும் பூரிசிரவஸும் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் துரோணரும் திருஷ்டத்யும்னரும் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தருணத்திலும் போர் விசையுச்சம் கொண்டு நிகழ்கிறது. மத்தகம் சூழப்பட்டுள்ளது. துதிக்கை வளைத்து பற்றப்பட்டுள்ளது. கால்கள் சேற்றில் புதையுண்டிருக்கின்றன. யானை அசைவிழந்துள்ளது” என்றான்.

சுதசோமன் அணுகியதும் பீமனைச் சூழ்ந்து நின்றிருந்த கௌரவர்களில் சலன், சத்வன், சித்ரன் ஆகியோர் அவனை நோக்கி திரும்பினர். அவர்களின் ஓசைகேட்டு ஜலகந்தன், சமன், சகன், விந்தன், அனுவிந்தன், துர்தர்ஷன் ஆகியோரும் அவனை நோக்கி கதைகளுடன் கூச்சலிட்டபடி பாய்ந்து வந்தனர். சுதசோமன் அவர்களை அம்புகளால் எதிர்த்தபடி அணுகி அதே விசையில் தேரிலிருந்து பாய்ந்தெழுந்து சமனின் தோளில் அறைந்தான். அலறியபடி அவன் தேர்த்தட்டிலிருந்து விழுந்தான். கதையுடன் பாய்ந்து தன்னை நோக்கி வந்த ஜலகந்தனை அறைந்து வீழ்த்தினான். தரையில் நின்ற அவனை விந்தனும் அனுவிந்தனும் துர்தர்ஷனும் சூழ்ந்துகொண்டனர். கதைமுழைகள் அவனைச் சூழ்ந்து பறந்தன. விழியில் உளம் முற்றிலும் கூட அவன் அவற்றின் சுழற்சியை அணுவணுவாக கண்டான். நெளிந்தும் அமர்ந்தும் பாய்ந்தெழுந்தும் அவற்றை ஒழிந்தான்.

பின்பக்கம் முரசொலி எழுந்தது. சுதசோமன் கதைச் சுழற்சியில் திரும்பியபோது துரியோதனன் கதையைச் சுழற்றியபடி யானையொன்றின்மேல் அமர்ந்து வருவதை கண்டான். யானையின் கழுத்துச்சரடை வலக்கையால் பற்றிக்கொண்டு இடக்கையால் கதையைச் சுழற்றியபடி காற்றில் பறந்தணைவதுபோல வந்த துரியோதனனின் கதையுடன் பீமனின் கதை வெடிப்பொலியுடன் முட்டிக்கொண்டது. ஒரு கணத்தில் இருவரும் நேருக்குநேர் என போரிலீடுபட்டிருந்தனர்.

பீமனும் துரியோதனனும் புரிந்த போரை மிக மெல்ல அனைவரும் அசைவிழந்து கதைகள் நிலம்தாழ நின்று நோக்கலாயினர். அவர்கள் ஓர் ஆற்றின்

இரு கரைகளெனத் தோன்றினர். ஒருவர் பிறிதொருவர் என இடம் மாறினர். ஒருவர் உடலின் அசைவே பிறிதொன்றிலும் உருவாகியது. மிக மெல்ல பஞ்செனு, மலரென காலடி எடுத்து வைத்து மூக்கு நீட்டி மயிர்சிலிர்த்து அணுகி நிலமறைந்து ஓசையெழுப்பியபடி பாய்ந்து ஒன்றோடொன்று அறைந்தும் தழுவியும் விழுந்து புரண்டு எழுந்து மீண்டும் அறைந்து போரிடும் வேங்கைகளின் போரென்றிருந்தது அது. பின்னர் செவி முன்மடித்து விரைந்து பின்னடைந்து துதிசுழற்றி வெள்ளம்போல் வருவதறியாமல் பாய்ந்து அணைந்து மத்தகம் முட்டி உடலதிர்ந்து பிளிறி துதிக்கைபற்றி முறுக்கிச் சுழற்றி சுற்றிவந்து உதறிவிலகி மீண்டும் ஆயம்கொள்ளும் களிற்றுப்போர் என ஆயிற்று.

சுதசோமன் தேரை நிறுத்தி அவர்களின் களமாடலை பார்த்துக்கொண்டிருந்த அத்தனை வீரர்களையும் விழியொடு விழிதொட்டு நோக்கினான். இரு இணைவீரர் தோள் கோத்துக்கொள்கையில் போர் பிறிதொன்றாகிவிடுகிறது. அதுவரை அத்தனை படைவீரர்களிலும் எழுந்து தங்கள் ஆற்றலை நிகர் நோக்கிக்கொண்டிருந்த தெய்வங்கள் இரு முனையிலென குவிந்துவிடுகின்றன. அங்கிருந்த அனைவரும் உள்ளத்தால் எழுந்து இருவருடனும் அமைந்துவிட்டிருந்தனர்.

தேர்ந்த மல்லர்களின் போர் என தோன்றியது அது. வஞ்சமற்ற, சினமற்ற, வெற்றிவிழைவுமற்ற மோதல். தசைகள் மட்டுமே ஈடுபடும் பூசல். தசைகள் மண்போல், நீர்போல், காற்றுபோல் இருப்பொன்றே இயல்வதென்றானவை. அப்பாலற்றவை. ஆழமில்லாதவை. முட்டிமோதி அதிர்ந்து விலகி மீண்டும் மோதித்தெறித்துக்கொண்டிருந்த கதை மீளமீள ஒற்றைச் சொல்லையே உரைத்தது. அச்சொல் பொருளற்றதாக, விண்ணிலிருந்து விழுந்துகிடக்கும் அறியாத் தெய்வம்போல தோன்றியது. ஆனால் நோக்க நோக்க அதன் முழுமைகூடிய அசைவுகளுக்குள் இருந்த வஞ்சத்தையும் சினத்தையும் உணரமுடிந்தது. அத்தனை அமிழ்ந்தமையால் அத்தனை அழுந்தியமையால், அத்தனை எரிகொண்டமையால் வைரமென்றாகிவிட்டவை அவை. அனைத்து அணுக்களும் கூர்கொண்டு எழுந்தவை.

நீக்கிலாப் பெருவஞ்சத்தின் விசையை ஒவ்வொரு அறையிலும் உணர்ந்து அவன் உடல் விதிர்த்தபடியே இருந்தது. மறு எல்லையில் அவனுடைய போர்க்கலை பயின்ற அகம் ஒவ்வொரு அசைவையும் அடையாளம் கண்டது. ஒவ்வொன்றும் உச்சமுழுமையில் அங்கே நிகழ்ந்தன. நின்று இருபுறமும் சீர்நிலைகொண்டு செம்மைக்காலடியில் முன்செல்லும் ஓதிரம். எதிரடியை இருபுறமும் தடுத்து நடுவில் நிலைநிறுத்தி எழுந்தமையும் கடகம். காற்றை உதைத்து விசைகொண்டெழும் பனந்தத்தையின் பாய்ச்சலென சடுலம். நிலைக்கால் ஊன்றி வரும் அடி காத்து அழுத்தி எழும் மண்டிலம். அரைவட்டமெனச் சுழலும் விருத்தசக்ரம். அலையலையென எழும் சுகங்காளம். அறைந்து சுழன்றெடுக்கும் விஜயம்.

மீண்டும் பின்னகர்ந்து நிலைகொண்டு நோக்கி உணர்ந்து சுவடுக்குச் சுவடும் தோள்விரிவுக்கு விரிவும் கண்ணுக்குக் கண்ணும் இமைப்புக்கு இமைப்புமென சுழலும் விஸ்வமோகனம். கதைகள் தழுவிக்கொண்டு நிற்க தொடுத்துச்சுழலும் அன்யோன்யம். அறைந்து துள்ளிப்பின்னெழுந்து பாய்ந்தமையும் சுரஞ்சயம். அமர்ந்து உடல்நீட்டி சிறுத்தையென மண்ணுடன் வயிறமைய முன்னகர்ந்து பாயும் சௌபத்ரம். கால்நடுவே கால்புகுத்தி வீழ்த்தும் பாடலம். விலாநோக்கி விலாவால் பாயும் புரஞ்சயம். உடலே விழியென உணர்ந்து கதையொழியும் காயவிருத்தி. கணமொழியாது அறைந்தறைந்து பின்னால் கொண்டுசெல்லும் சிலாகண்டம்.

எழுந்து காற்றில் காலுதைத்து மேலேறி நடுத்தலையில் அறையும் சிரோகதம். நெஞ்சைத் தாக்கும் அனுத்தமம். கதையால் சூழ்ந்துகொள்ளும் கதாயகட்டம்.

துரியோதனனிடமிருந்து முதல்முறையாக ஓர் உறுமல் எழுந்தது. மறுமொழி என பீமன் பிளிறலோசை எழுப்பினான். அவ்வொலி சூழ்ந்திருந்தோரை திகைக்கவைத்தது. அவர்கள் விழித்தெழுந்தவர்கள்போல் கூச்சலிட்டபடி தாக்கத் தொடங்கினர். சர்வதனை மகாபாகுவும் சித்ராங்கனும் சித்ரகுண்டலனும் பீமவேகனும் பீமபலனும் சூழ்ந்துகொண்டார்கள். தனுர்த்தரனும் அலோலுபனும் அபயனும் திருதகர்மனும் அப்ரமாதியும் தீர்க்கரோமனும் சுவீரியவானும் சுதசோமனை சூழ்ந்தனர். கதையால் அவர்களை அறைந்து பின்னடையச்செய்து பீமனின் பின்பக்கத்தை காத்தான் சுதசோமன். மேலும் மேலும் கௌரவர்கள் வந்துகொண்டிருந்தனர். பெருகிச்சுழன்று நதிச்சுழல் என்றாயினர். நடுவே பீமன் சுழிவிசையில் என சுழன்றபடி கதையால் அவர்களைத் தாக்கி தடுத்தான்.

எதிர்பாராக் கணமொன்றில் பீமன் எழுந்து பாய்ந்து சேனானியின் தலையை அறைந்து உடைத்தான். ஒருகணம் அனைத்தும் உறைந்து மீண்டதுபோல சுதசோமன் நெஞ்சு நடுங்கினான். கௌரவர்கள் நடுவே அதிர்ச்சிக்கூச்சல்கள் எழுந்தன. துரியோதனன் என்ன நிகழ்ந்தது என உணராதவன்போல திகைத்து நின்றான். அந்த கணத் தேக்கத்தில் புகுந்து ஜலகந்தனை நெஞ்சிலறைந்து வீழ்த்தினான். கௌரவர்கள் திரளென்று நின்று போர்புரிகையில் ஒற்றை உளம் கொண்டிருந்தார்கள். ஒருவரோடொருவர் நன்கு கோத்துக்கொள்ளும்படி அனைத்து உடல்களும் நிகரென்று அமையும் தன்மை கொண்டிருந்தன. ஆனால் முதல் கணங்களிலேயே அவர்களில் இருவரை பீமன் வீழ்த்தியது அனைவரையும் கால்தளரச் செய்திருந்தது. அந்தச் சிறு தளர்வின் ஒத்திசைவின்மையே அவர்களின் கதை சுழற்றலில் சிறு பிழையென எழ அதனூடாக நுழைந்து பீமன் அவர்களை அறைந்தான்.

ததும்பிய உடல்கள் நடுவே அலையில் நெற்றுகளென கௌரவர் தலைகள் எழுந்தமைந்தன. பீமன் ஒருவனின் இடையில் மிதித்து மேலேறி எழுந்து சுழற்றி அறைந்த கதையால் சுஷேணனை தலைசிதற குப்புறச் சரித்தான். கௌரவர்களின் சுழிவளையம் விரிந்து அகல அவனைச் சூழ்ந்து உருவான வெற்றிடத்தில் கௌரவர் மூவரும் வாயிலும் மூக்கிலும் குருதிக்குமிழிகள் கொப்பளிக்க கிடந்துநெளிந்தனர். துரியோதனனுக்கு காப்பெனக் கருதி பாய்ந்து அவனைச் சூழ்ந்திருந்த கௌரவர்கள் அவ்விசையால் அவனை கால்தடுமாறச் செய்து பின்னால் கொண்டுசென்றனர். வெறிக்கூச்சலுடன் அவர்களை கைகளால் அறைந்து விலக்கி பற்கள் நெரித்து உடல்தசைகள் இழுபட்டு அதிர துரியோதனன் பீமனை நோக்கி பாய்ந்தான். பீமன் பின்னடைந்து கதையால் அவனைத் தடுத்து மேலும் பின்னடைந்து பக்கவாட்டில் தாவி வீரபாகுவின் தலையை கவசத்துடன் அறைந்து உடைத்தான்.

திகைத்து ஒருகணம் செயலற்று நின்ற பின்னர் துரியோதனன் பீமன் மேல் பாய்ந்தான். துர்மதனும் துச்சலனும் துச்சகனும் அவனுடன் இணைந்தனர். பீமன் அவர்களை முற்றாகத் தவிர்த்து விட்டிலென பின்னால் தாவித்தாவி அகன்று விலகிச் சென்றுகொண்டிருந்த சுலோசனனின் தலையை அறைந்து வீழ்த்தினான். அவன் நெஞ்சில் மிதித்துக் குனிந்து இடைவாளை உருவி அவன் தலையைத் துணித்து குழல்கற்றையைப்பற்றித் தூக்கி அவனை நோக்கி கதையுடன் ஓடிவந்த துரியோதனன் மேல் வீசினான். தன் நெஞ்சிலறைந்து விழுந்த இளையோனின் தலையால் விதிர்ப்புற்று மெய் துள்ள துரியோதனன் கால்தளர்ந்து அமரப்போனான். பாய்ந்து அவன் தலையை அறைந்த பீமனின் கதையை துச்சலனின் கதை தடுத்தது. அவன் அதை எடுப்பதற்குள் பீமன் துச்சலனின் தலையை அறைந்தான்.

தலைகுனித்து தப்பிய துச்சலனின் தோளை அறைந்து கவசங்களை உடைத்து தூக்கி வீசியது கதை. துர்மதன் துரியோதனனை இழுத்து அப்பால் கொண்டுசெல்ல துச்சகன் வெறிகூவியபடி கதை சுழற்றி பீமனை அறைந்தான்.

தாவி பின்னகர்ந்த பீமன் விழுந்துகிடந்த தேர்ச்சகடம் ஒன்றின் மேல் ஏறி புரவி ஒன்றை தாவிக்கடந்து அப்பால் நின்றிருந்த கௌரவ இளையவன் பீமபலனை அறைந்து வீழ்த்தினான். அருகே நின்றிருந்த பீமவேகனின் முகத்தில் குருதியும் வெண் தலைச்சேறும் தெறிக்க அவன் உள்ளமும் உடலும் செயலிழந்து அசைவற்று நின்றான். அவன் தலையை வாளால் வெட்டி நிலத்திலிட்டான் பீமன். துரியோதனன் தீ பட்ட யானை என வீறிட்டபடி கதை சுழற்றி பாய்ந்தெழுந்தபோது கீழிருந்த பீமவேகனின் தலையை எடுத்து இடக்கையில் தூக்கி பிடித்தான் பீமன். கதையை நழுவவிட்டு அலறியழுதபடி துரியோதனன் மயங்கி விழுந்தான். அத்தலையை துச்சகன் மேல் வீசி அவன் நிலைகுலைந்த கணம் ஓங்கி அறைந்தான். தேர்ந்த பயிற்சியால் அவன் தலையொழிந்தான். அவன் புரள்வதற்குள் விலாவை அறைந்தது பீமனின் கதை.

கௌரவர்கள் அணிசிதைந்து ஒருவரோடொருவர் முட்டியபடி தத்தளித்து உடல்ததும்பினர். பீமன் உறுமலோசையுடன் அவர்களை நோக்கி பாய "மூத்தவரே" என்று அலறியபடி அவர்கள் சிதறியோடினர். கால்தவறி கீழே விழுந்த சுவர்மன் "மூத்தவரே! மூத்தவரே!" என்று கூவினான். பீமன் அவன் நெஞ்சை உதைத்து மண்ணில் வீழ்த்தி தன் வாளால் அவன் தலையை வெட்டி குடுமியைப்பற்றித் தூக்கி காட்டியபடி வெறிநகையாடினான். கௌரவர்கள் முட்டி மோதி அகன்றுவிட அவனைச்சுற்றி எவருமிருக்கவில்லை. உடைந்த குடமென கொழுங்குருதி வழிந்த தலையைத் தூக்கி தன் முகத்தின்மேல் அதை ஊற்றினான். காலால் தரையை ஓங்கி அறைந்து "குலமகள் பழிசூடிய வீணர்கள்! இனி தொண்ணூற்றி இருவர்! எஞ்சியோர் வருக! வருக, கீழ்மக்களே! வருக, இழிசினரே! எவருள்ளனர் இங்கே? இக்களத்தில் ஒவ்வொருவரையும் நெஞ்சுபிளந்து குருதியுண்பேன்! அறிக தெய்வங்கள்! அறிக மூதாதையர்!" என்று கூச்சலிட்டான்.

அவன் விழிகளை அரைக்கணம் கண்ட சுதசோமன் நெஞ்சு நடுங்க பின்னடைந்தான். அவன் கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. "கௌரவர்கள். எண்மர் வீழ்ந்துவிட்டார்கள், இளவரசே! அவர்கள் எழுந்து படைசூழக்கூடும்!" என்று சுதசோமனின் தேர்ப்பாகன் கூவினான். கௌரவர்களின் படையிலிருந்து முரசுகள் வெறிகொண்டவைபோல முழங்கி ஆணையிட்டுக்கொண்டிருந்தன. புயல்காற்றில் மலர்க்கிளைகள் என கொடிகள் சுழன்றன. பிரக்ஜ்யோதிஷத்தின் கொடி எழுந்து அணுகுவதை சுதசோமன் கண்டான். சங்கொலி எழுப்பியபடி யானைமேல் அமர்ந்தவராக பகதத்தன் படைமுகப்பில் வந்தார். யானை விரைந்து வர அவ்விசை குறையாமலேயே கதையுடன் பாய்ந்திறங்கினார். பீமன் குருதி சொட்டும் உடலுடன் போர்க்கூச்சலெழுப்பியபடி பகதத்தனை எதிர்கொண்டான்.

பிரக்ஜ்யோதிஷத்தின் படைவீரர்கள் பீமனை சூழ்ந்துகொண்டார்கள். படைத்தலைவனாகிய பேருருவன் வியாஹ்ரஹஸ்தன் பீமனை அணுகாமல் சுதசோமன் தடுத்தான். மறுபக்கம் இன்னொரு அணுக்கவீரனாகிய உக்ரவிரதனை சர்வதன் செறுத்தான். ஒவ்வொரு அடியிலும் வியாஹ்ரஹஸ்தனின் பேராற்றலை உணரமுடிந்தது. ஒவ்வொரு அடிக்கும் அவன் கதை மோதித் தெறித்தது. அவ்விசையையே தோளுக்குப் பின் சுழற்றி தன் உடலுக்கு கொண்டுவந்து துள்ளி விலகுவதற்கான சிறகசைவாகவும் அவன் பயன்படுத்திக்கொண்டதனால் எதிர்நின்று போரிட இயன்றது. ஆனால் அந்தப் போர் நெடும்பொழுது நீளாது என அறிந்திருந்தான். "துணையெழுக!" என அவன் கையசைத்து ஆணையிட்டான்.

தேர்வீரனால் கொம்போசையாக அது மாற மிக அப்பால் “பீமசேனருக்கு துணையெழுக! பீமசேனருக்கு துணையெழுக!” என்று ஆணைமுரசு முழங்கியது.

பீமன் ஒரு கையில் கதையும் மறுகையில் அங்குசமும் கொண்டு உடலெல்லாம் குருதி வழிய செங்கதுப்புபோல தோள்தசைகளும் நெஞ்சுத்தசைகளும் இறுகி நெளிந்து அசைய “வருக! இன்று குருதியாடுகிறேன்... வருக!” என வஞ்சினம் கூவியபடி போரிட்டான். “வருக! இன்று உடன்பிறந்தோர் குருதியிலாடியே மீள்வேன் என்று எழுந்து வந்தேன்!” என்றான். பித்தன்போல நகைத்தபடியும் காலால் நிலத்தை மிதித்து பொருளிலாக் கூச்சலிட்டபடியும் போரிட்டான். தன் தலையை நோக்கி வந்த பகதத்தனின் கதையை பிறிதொரு அறையால் தடுத்து அவ்விசையடங்குவதற்குள் அப்பால் நின்ற கதைவீரனை அங்குசத்தால் இழுத்து தன் முன் இட்டு அவன் தலையை அறைந்துடைத்து முன் சென்றான். அவன் கதைவீச்சின் விசை மெல்ல மெல்ல பகதத்தனை பின்னால் தள்ளியது.

“பிதாமகர் பால்ஹிகர்! எழுக பிதாமகர்! பால்ஹிகர் எழுக!” என்று சகுனியின் முரசு அறைகூவுவதை சுதசோமன் கேட்டான். கௌரவர்கள் உக்ரசாயியும் கவசீயும் கிருதனனும் கண்டியும் பீமவிக்ரனும் தனுர்த்தரனும் அலோலுபனும் அபயனும் சூழ துச்சாதனன் போர்ச்சங்கூதியபடி தேரில் களமெழுந்து வந்தான். சுதசோமன் தன் தேரில் பாய்ந்தேறி அதை முன்செலுத்தி அவர்களை தடுத்தான். அவர்களைச் சூழ்ந்து கௌரவர்களின் தேர்வீரர்கள் வந்தனர். சுதசோமனின் அம்புபட்டு இருவர் தேர்த்தட்டில் விழுந்தனர். துச்சாதனனின் கதை தேரிலிருந்து பறந்தெழுவதை கண்டான். பாய்ந்து அவன் நிலத்தில் விழ கதையால் அறைபட்டு அவன் தேர் உடைந்து தெறித்தது. கதையுடன் பாய்ந்தணைந்த கிருதனனின் நெஞ்சில் ஓங்கி அறைந்து அவன் நிலைதடுமாறிய கணம் பிறிதொரு அறையால் அவனை வீழ்த்தினான் சுதசோமன். கையூன்றி புரண்டெழுந்து உடலை பின்னிழுத்து விலக்கி அப்பால் சென்ற கிருதனனின் தோளை அறைந்தது சுதசோமனின் கதை.

மறுபுறம் உக்ரசேனனையும் துஷ்பராஜயனையும் அபராஜிதனையும் எதிர்த்து பின்செலுத்திக்கொண்டிருந்த சர்வதன் “மூத்தவரே, இச்சூழ்கையை இரண்டாக உடைப்போம். எஞ்சியதை தந்தை பார்த்துக்கொள்வார்” என்றான். போர் செல்லும் திசை விழிக்கு தெரியத்தொடங்கியது. கௌரவர்களும் பிரக்ஜ்யோதிஷத்தவரும் பிதாமகர் பால்ஹிகர் களம்புகுவது வரை பீமனை தடுத்து நிறுத்த மட்டுமே விழைந்தனர். நெஞ்சில் அறைபட்டு மூக்கிலும் காதிலும் குருதி வழிய விழுந்து இருமுறை இருமி குருதிச்சேறை உமிழ்ந்து நிலத்தில் விழுந்து துடித்த கௌரவ மைந்தர்களான சுஜனனையும் கிரந்தனையும் கபந்தனையும் காலகனையும் உக்ரவேகனையும் உஜ்வலனையும் கடந்து தாவி வீழ்ந்த யானையொன்றின் நெஞ்சை மிதித்தேறி சக்ரனையும் சுதீரனையும் அறைந்து வீழ்த்தித் தாவி பின்னால் சென்று விழுந்த குர்மிதன் கையூன்றி எழுவதற்குள் ஓங்கி அறைந்து முதுகெலும்பை முறித்தான் பீமன்.

பின்புறம் கௌரவர்களின் மறைவை அறிவித்து முழங்கியது முரசு. கௌரவப் படையே உளம் தளர்வதை சுதசோமன் கண்டான். மீண்டுமொரு கௌரவ மைந்தன் அறைபட்டு ஓசையே இன்றி விழுந்தான். தழலை ஊதி அணைப்பதுபோல அத்தனை எளிதாக, அத்தனை அமைதியாக கௌரவ மைந்தர்கள் களம்பட்டனர். ஒருவரையொருவர் உடல் முட்டி ததும்பினர். ஒற்றை உடலென்றாகும் அவர்களின் இயல்பே சற்றே அணி சிதைந்தால் ஒன்றுடன் ஒன்று முட்டி வெற்றுத்திரளென்று மாறுவதை சுதசோமன் கண்டான். அவர்களின் கால்கள் பின்னிக்கொள்ள தோள்கள் ஒன்றையொன்று முட்ட ஒருவரையொருவர் நோக்கி நாய்கள்போல் பல்காட்டி

சீறினர். “விலகு, மூடா!” என்று ஒருவன் கூவுவதற்குள் அவன் தலையுடைந்து குருதி பிறிதொருவன் முகத்திலறைந்தது. நால்வர் தோள் அறைபட்டு விழுந்தனர்.

மேலும் அஞ்சி கதையை தூக்கவும் உளம் துணியாது வெற்றுக்கூச்சலிட்டபடி அவர்கள் சிதறி விலக கௌரவப் படைக்கு அப்பால் முரசுகளும் கொம்புகளும் எழுந்தன. துச்சாதனன் தன் முன் நின்றிருந்த சுதசோமனின் கதையை அறைந்து தெறிக்கச்செய்து தன் கதையைச் சுழற்றி மேலே தூக்கி “பிதாமகர்! பிதாமகர் எழுந்துவிட்டார்! அணிதிரள்க! இக்குலாந்தகனை இங்கேயே கொன்றொழிப்போம்!” என்று கூவினான். பறந்து வருபவர்போல் பால்ஹிகர் படைகளுக்கு மேல் அசைவதை அவன் கண்டான். பாண்டவப் படைகளுக்குள் ஊடுருவி நெடுந்தொலைவு சென்றவர் அங்கிருந்து திரும்பி வளைந்து மீண்டு வந்துகொண்டிருந்தார். பெருங்கதை பறக்கும் களிறெனச் சுழன்று தேர்களை சிதறடித்தபடி வந்தது. மானுட உடல்கள் குருதித் துளிகள்போல் துமி சிதறிப்பரந்தன. தொடுத்த அம்பென அவர் நேராக பீமனை நோக்கி வந்தார்.

கௌரவர்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்து பீமனைச் சூழ்ந்து அவன் கதைவீச்சிலிருந்து விலகி பின்சென்றனர். பால்ஹிகருக்காக அவனை சிறைநிறுத்த அவர்கள் விழைந்தனர். பீமன் தன் தலையை சிலுப்பி முழுக்காட்டப்பட்டதுபோல் கூந்தலிலிருந்து வழிந்துகொண்டிருந்த குருதியை தெறிக்கவிட்டு மூச்சிழுத்து நெஞ்சை விடைத்தபடி பால்ஹிகரை நோக்கி சென்றான். பாண்டவத் தேர்வீரர்களை கொன்றபடி வந்த பால்ஹிகரைச் சூழ்ந்து நகரொன்றின் இடிபாடுபோல் உடல்களும் சிதைந்த தேர்களும் கிடந்தன. மத்தகம் உடைந்த யானைகள் ஏழு மண்ணில் கிடந்து கரிய உடல் கொப்பளித்துக்கொண்டிருந்தன.

பால்ஹிகர் வெண்சுண்ணத்தால் செய்த சிலை போலிருந்தார். அத்தனை பொழுது படைக்களத்தில் இருந்தபோதும்கூட அவர் உடலில் ஒரு துளி குருதியேனும் பட்டிருக்கவில்லை. அரிய உலோகமொன்றால் ஆன அவருடைய கதையும் குருதித்துளிகூட நில்லாமல் புதியதென தெரிந்தது. விண்ணிலிருந்து விளையாடும் தேவன். அந்தக் கதை ஒரு விழிமாயம். அது எவரையும் தொடுவதில்லை. சுதசோமன் அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். அவர் முகம் விளையாடும் மைந்தரை நோக்கும் தந்தைபோல் புன்னகை கொண்டிருந்தது.

தன்னுள் எழுந்த ஒன்று அவர் வருகையை விழைவதை உணர்ந்த அவன் திடுக்கிட்டான். அவர் என் தந்தையை கொல்ல வேண்டுமென்று விழைகிறேனா என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். அக்கணமே இல்லை இல்லையென அகம் மறுத்தது. அதற்கப்பால் ஒன்று ஆம் என்றது. அவ்வாறே அது நிகழவேண்டும். நிகழ்ந்தே தீரும். அதுவே மானுடரை மண்ணில் இணைத்து நிறுத்தியிருக்கும் நெறியொன்றின் விளக்கம். பீமன் பாய்ந்து சென்று அங்கு நின்றிருந்த யானை ஒன்றின் மேல் ஏறி அதன் பாகனை தள்ளிவிட்டு மத்தகத்தில் அமர்ந்தான். அவன் கால்கள் காதுகளை உதைத்து ஆணையிட யானை அடுக்குக்கவசம் அணிந்த தன் துதிக்கையைச் சுழற்றி வீறிட்டபடி பால்ஹிகரை நோக்கி சென்றது. தன் கையில் சுற்றியிருந்த சங்கிலியை சுழற்றி மீட்டி கதையை பறக்கவிட்டபடி பீமன் பால்ஹிகரை அணுகினான். இரு கதைகளும் வானில் சுழன்றெழுந்து பெருவிசையுடன் முட்டிக்கொண்டன.

சுதசோமன் பால்ஹிகரின் மாபெரும் கதையின் விம்மலோசையை கேட்பதுபோல் உணர்ந்தான். பீமன் அதன் வீச்சிலிருந்து தன் யானையின் மத்தகத்தை காக்கும்பொருட்டு அதை மேலும் மேலும் பின்னடையச்செய்து இருபுறமும் தலைதிருப்பி அடிகளை ஒழிந்துகொண்டு நகர்ந்தான். பிதாமகரின் கதையை தன்

கதையால் தடுக்க இயலாதென்று முதல் சில அறைகளிலேயே கற்றுக்கொண்டிருந்தமையால் எவ்வகையிலும் அதை எதிர்கொள்ளவில்லை. பால்ஹிகர் கதைப்பயிற்சி அற்றவர் போலிருந்தார். எண்ணற்கரிய தோள்விசையால் அப்பெருங்கதையை வானில் பறக்கவும் விட்டார். ஆனால் அது பீமனால் திறமையாக உடலொழிந்து தவிர்க்கப் படுகையில் அந்த அசைவின் ஒழுங்கை உய்த்துணர்ந்து அதற்கேற்ப தன் வீச்சின் முறைமையை மாற்றிக்கொள்ளவில்லை.

மீண்டும் மீண்டும் ஒரே சுழற்சியுடன் குன்றாத ஒரே வீச்சுடன் வந்துகொண்டிருந்தது பிதாமகரின் கதை. அதன் சுழல் உருவாக்கிய இரும்புக்கோட்டையில் உருவாகும் சிறுவிரிசல் திறப்பொன்றுக்காக தந்தை விழிகொண்டிருந்தார். ஒருகணம் அதனூடாக உள்நுழைந்து அவருடைய யானையின் மத்தகத்தை அறைந்துவிட்டாரெனில் பிதாமகரை வீழ்த்திவிடுவார் என்று சுதசோமன் எண்ணினான். அவ்வாறு நிகழலாகாதென்று அவன் உளம் ஏங்கியது. அதன்பின் இப்புவியில் எஞ்சுவதொன்றில்லை. யானை மேல் முகிலூரும் விண்ணவனென அமர்ந்து சிரித்தும் நகைத்தும் களித்தும் விளையாடிய அம்மூதாதையால் இவர் கொல்லப்படுவதே முறை.

தெய்வங்களே! நான் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன்! இத்தீயோன் எங்கிருந்து என்னுள் முளைத்தான்! ஏனிங்கு இவ்வண்ணம் தன்னை நடத்திக்கொள்கிறான்! தீயோர் மைந்தருள் எழும் தந்தையரே. அனைத்து விதைகளும் மரங்களே என்பதுபோல். நானும் அவரே. பிதாமகரே, இங்கு இதை நன்கு நிறைவுறச் செய்க! தங்கள் பெருங்கதையால் இதை முழுமை செய்க! அதன் பின் என் தலை சிதறடிக்கப்படட்டும். குருதிச் சேறென இக்களத்தில் கிடந்து நூறு கால்களால் மிதிபடுவேன் எனில் அனைத்தும் உரிய முழுமையை சென்றடைகிறது.

பின்னர் அவன் உணர்ந்தான். பால்ஹிகரின் அந்தப் பழுதற்ற கதைசுழற்றலில் ஒருபோதும் பிழை நிகழவில்லை என்று. அது மானுட உள்ளத்தால் ஏந்தி சுழற்றப்படும் கதையல்ல. விண்ணிலிருந்து சுழற்றப்படுவது. விண்ணென்பது மண்ணில் ஒருபோதும் நிகழாத முழுமைகளின் முடிவிலி. ஒவ்வொன்றும் தன் நிறைவை, அழகை, ஒழுங்கை எய்திவிட்ட இடம். பல்லாயிரம் யுகங்கள் இந்தப் பெருங்கதை இவ்வாறு சுழலக்கூடும். ஓர் அணுவிடைக்காலம்கூட அதில் பிழை நிகழப்போவதில்லை. அது ஒன்றென்றே முடிவிலி வரை நிகழும். மாற்றமில்லை என்பதனால் காலமில்லாதது. காலமின்மையில் எதுவும் வளர இயலாது. ஒரு கணம் கோடி யுகங்களாகும் இந்தப் பெருக்கில் இது இவ்வண்ணமே நின்றிருக்கும். வான்போல் அழிவிலாது.

அதை பீமன் உணர்ந்துகொண்டதுபோல் அவன் இடக்கையை தூக்க பின்புறம் முரசுகள் முழங்கின. கேடயங்களை ஏந்திய யானை நிரைகள் எழுந்து இருபுறமும் குவிந்து வந்து பீமனை பால்ஹிகரிடமிருந்து பிரித்தன. பால்ஹிகரின் பெருங்கதை அறைவால் கேடயமேந்திய யானைகள் பிளிறியபடி உடல் பின்னடைந்து நிலத்தில் விழுந்து கால்களை உதைத்துக்கொண்டு துதிக்கை சுழல துடித்தன. அவ்விடத்தை பிறிதொரு யானை நிரப்பிக்கொள்ள பால்ஹிகர் கேடயமேந்திய யானைகளின் கோட்டையால் முற்றிலும் சூழப்பட்டார். பீமன் மேலும் மேலுமென தன் தேரை பின் இழுத்து பாண்டவப் படைகளுக்குள் தன்னை உள்செலுத்திக்கொண்டான்.

“மத்தகம் தளர்கிறது! படைவீரர் அனைவரும் எழுக! அம்புகளால் பிதாமகரை சூழ்க! மத்தகம் தாழலாகாது!” என்று திருஷ்டத்யும்னனின் முரசுகள் அறைகூவின. சுதசோமன் தன் தேரை மேலும் பின்னிழுத்து பாண்டவப் படைகளுக்குள் செல்ல

முயன்றான். கௌரவர்கள் நீர்த்துளிகள் ஒன்றிணைந்து பெருந்துளியாவதுபோல தங்களை தொகுத்துக்கொண்டு பின்னடைந்தனர். பால்ஹிகரின் வெற்றிக்கென முரசுகள் இயம்பியபோது அவர்கள் எவரும் கதைகளைத் தூக்கி வெற்றிக்கூச்சல் எழுப்பவில்லை. களத்திலிருந்து சிதைந்து விழுந்த கௌரவர்களின் உடல்களை கொக்கி வீசி கவ்வி இழுத்துத் திரட்டி தரையோடு தரையென கொண்டுசென்றனர் ஏவலர். கால்தளர்ந்து துச்சாதனன் போர்க்களத்தில் அமர்ந்தான். துர்விகாகன் கதைகளை நிலத்திலிட்டு இரு கைகளையும் விரித்து வான் நோக்கி கூச்சலிட்டு அழுதான்.

கௌரவப் படைகளின் மறுபுறம் முரசுகளும் கொம்புகளும் எழக்கேட்டு திரும்பியபோது சங்கின் பேரோசையுடன் பீஷ்மர் வருவதை பார்த்தான். நடுவிலிருந்த பாண்டவப் படை சிதறி அப்பால் சென்றது. பீஷ்மர் வில் அதிர அம்புவிட்டு படைவீரர்களை கொன்றுகொண்டே வந்தார். பால்ஹிகர் தன் கதையை நிலம்பதிய வைத்து யானை மேல் நிமிர்ந்து அமர்ந்து அவரை பார்த்தார். பீஷ்மர் பால்ஹிகரை சந்தித்த கணம் என்ன நிகழ்ந்ததென்று சுதசோமனால் உணரக்கூடவில்லை. அவரது வில் தழைந்தது. விழி திரும்ப தலை தாழ்த்தி ஒருகணம் நின்றபின் வில்லாலேயே பாகனை அறைந்து நேர் எதிர்த்திசைக்கு தன் தேரை திருப்பிக்கொண்டு செல்ல அவர் ஆணையிட்டார்.

### பகுதி ஐந்து : கனல்வோன்



போர்ச்சூழ்கையை வகுப்பதற்காக துரியோதனனின் சிற்றவை முற்புலரியில் கூடியிருந்தது. கிருதவர்மன் தன் உடலெங்கும் சோர்வு படர்ந்து எடையென அழுத்துவதை உணர்ந்தான். பஞ்சால் ஆன தன்னுடல் துயிலெனும் நீரால் நனைக்கப்பட்டு ஊறிக் குழைந்து வடிவிழந்து எடைகொண்டு மண்ணில் அழுந்துவதாகத் தோன்றியது. பிறிதெப்போதும் கைவிரல்களில்கூட துயில் வந்து நின்றிருப்பதை அவன் உணர்ந்ததில்லை. அவையிலிருந்த அனைவருமே துயிலால் அழுத்தப்பட்டுக்கொண்டிருப்பதைப்போல் தோன்றியது. அவர்களில் சிலரே பேசிக்கொண்டிருந்தனர். நனைந்த மரவுரியால் மூடப்பட்டவைபோல அந்தச் சொற்கள் முனகலாக ஒலித்தன.

அவனருகே அஸ்வத்தாமன் கைகளை மார்பில் கட்டியபடி நிலைத்த நோக்குடன், நிமிர்ந்த முதுகுடன் அமர்ந்திருந்தான். ஒரு யோகநிலையில் தன்னில் ஆழ்ந்து பிறிதொன்றை நேர்கண்டு இருப்பவன்போல. அஸ்வத்தாமன் பெரும்பாலான தருணங்களில் ஒரு சில நொடிகளுக்குள் சூழ்ந்திருக்கும் அனைத்திலிருந்தும் தன்னை முற்றாக விடுவித்துக்கொண்டு தனிமைக்குள் சென்றுவிடுவதை அவன் பலமுறை கண்டிருக்கிறான். அப்போது அவனை நோக்க சிலை என்று விழியும் உயிர்க்குவை என்று உட்புலனும் சொல்லும் துணுக்குறல் எழும். ஆனால் அவன் அதை கலைப்பதில்லை. பெரும்பாலும் அவனருகிலிருந்து மெல்ல விலகிச் சென்றுவிடுவான்.

“பாஞ்சாலரே, தாங்கள் அவ்வாறு தனிமைப்படுவது ஏன் என்று நான் அறிந்துகொள்ளலாமா?” என்று ஒருமுறை அவன் அஸ்வத்தாமனிடம் கேட்டான். “அதை நீங்கள் என்னிடம் கேட்கலாகாது, யாதவரே. ஏனெனில் நான் எண்ணி முயன்று அவ்வாறு தனிமைப்படுவதில்லை” என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

“புகை கலைவதுபோல் இயல்பாக நான் இல்லாமலாகிறேன்” என்றான். அதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அஸ்வத்தாமன் புன்னகைத்து “என்னால் நான் என என்னை தொகுத்துக்கொள்வதற்கே முயற்சி தேவையாகிறது” என்றான். அவர்கள் போருக்குப் பின் கூடாரத்தின் முகப்பில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தனர். அஸ்வத்தாமன் கால்களை நீட்டிக்கொண்டு “மிக இளமையில் எனக்கு தந்தை கற்றுத் தந்தது. அம்புக்கு கூர்கையில் குவிவதே நான். பிறபொழுதுகளில் நான் ஐம்பருக்களில் கலந்துள்ளேன்” என்றான்.

கிருதவர்மன் “நானும் தனிமைகொள்ள விழைபவனே. ஆனால் தனிமையை உருவாக்கிக்கொள்ள என்னை சூழ்ந்திருக்கும் ஒவ்வொன்றையும் என்னிடமிருந்து அகற்றவேண்டியிருக்கிறது. சூழ்ந்திருக்கும் இவையனைத்திலிருந்தும் என்னை வந்து பற்றும் ஆயிரம் கைகளை அகற்றி அகற்றி என்னை மீட்பேன். அன்பும் அளியும் கொண்ட கைகள். சினமும் ஆற்றாமையுமாக என்னை பற்றுபவை. வினாக்களுடன், கோரிக்கைகளுடன், மன்றாட்டுகளுடன் என்னை கவ்வுபவை. தனிமைபோல் எய்த அத்தனை அரிதான பிறிதொன்றில்லை” என்றான்.

அஸ்வத்தாமன் “ஆம், ஊழ்கம் பயில்கையில் பிறர் அவ்வாறு சொல்வதை கேட்டிருக்கிறேன். ஆனால் முதிரா இளமைமுதலே இவ்வியல்பு என்னிடமிருக்கிறது. விழிதிறந்து அமர்ந்து துயில்பவன் என்று என்னை அர்ஜுனன் ஏளனம் செய்ததுண்டு. நான் ஒருமுறை என் தந்தையிடம் கேட்டேன், என்னில் இத்தனை தனிமை ஏன் எழுகிறது என்று. ஒருவேளை இத்தனிமையால் நீ காக்கப்பட்டிருக்கலாம், எளிதில் தனிமை கொள்பவர்கள் இங்குள்ள எதிலும் பெரிதாக உரசிக்கொள்வதில்லை, ஆகவே அவர்கள் அழிவற்றவர்களாகிறார்கள் என்று தந்தை சொன்னார்” என்றான்.

கிருதவர்மன் நீள்மூச்செறிந்தான். “ஒவ்வொருநாளும் போர் முடிந்த பின்னர் நம்மை மீட்டுக்கொள்வதென்பது எளிதாக இல்லை” என்றான். “போரென்பது நம்மை நாம் சிதறடித்து பல்லாயிரம் துகள்களாக ஆக்கி படையென்று உருவளித்து இக்களம் முழுக்க பரப்புவதுதான். போர் முடிந்து அந்தியில் கொம்பு முழங்குகையில் எதுவும் எஞ்சாத வெற்றுக்கலமாக நம் உடல் நின்று திகைக்கிறது. எட்டுத் திசைகளிலும் துளித்துளியாக நம்மை இழுத்துச்சேர்த்து ஒன்றென திரட்டிக்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் வெடித்துப் பரவியவற்றில் ஒரு பகுதியை இழந்து எஞ்சியதை மட்டுமே திரட்டிக்கொள்கிறோம். அவையே நாம் என்று எண்ணி எண்ணி அமைதி கொள்கிறோம்” என்றான்.

“ஆனால் இரவு இவ்வாறு விண்மீன்களுக்குக் கீழே துயில்கையில் இழந்தவற்றை எண்ணி உளம் பதைக்கிறது. அஸ்வத்தாமரே, ஒவ்வொரு போருக்குப் பின்னரும் முற்றிலும் பிறிதொருவராகவே பாடிவீட்டுக்கு திரும்புகிறோம்” என்றான் கிருதவர்மன். “போர் கொடிதல்ல, போருக்குப் பின் விண்மீன்களை நோக்கி மல்லாந்து படுத்திருப்பதே கொடிது.” அஸ்வத்தாமன் “என்னில் ஒரு துளியும் சிதறுவதில்லை” என்றான். சிலகணங்கள் அவனை நோக்கியிருந்த பின் “ஒருவேளை அதுவும் ஒரு தீயூழ் போலும். அத்தனை எடையுடன் போருக்குப் பின் இருப்பது நன்றா என எனக்கு சொல்லத்தெரியவில்லை” என்றான் கிருதவர்மன்.

அஸ்வத்தாமன் அத்தகைய தருணங்களில் எப்போதும் அவனுள் எழும் அரைப்புன்னகையை அளித்து விழிகளணைய முகம் சிலையென்றாக உடல் கல்தன்மை கொள்ள தன்னுள் அமிழ்ந்தான். கிருதவர்மன் வானை நோக்கிக்கொண்டிருந்தான். அகிபீனா தன் தலையை கல்லுருளைபோல் ஆக்குவதை உணர்ந்தான். நிலம் நீர்மை கொள்ள தலை எடைமிகுந்து அமிழ்ந்து மூழ்கி முழு உடலையும் இழுத்துக்கொண்டு ஆழ்ந்து சென்றது. விடியலில்

எழும்போது தலை எடையிழந்து மேலே வர உடல் ஆழத்தில் குளிர்ந்து உயிரற்றுக் கிடந்தது. தன் உறுப்புகள் ஒவ்வொன்றையும் இழுத்துப் பற்றி ஒன்றாக்கவேண்டியிருந்தது. கிருதவர்மன் தன் வாயின் கசப்பை உணர்ந்தான். வாய்மணம் எதையேனும் கோரலாம் என நோக்கியபோது ஏவலர் எவருமில்லை என்று கண்டு கண்களை மூடி உடலை தளர்த்திக்கொண்டான்.

வெளியே கொம்போசை எழுந்து துரியோதனன் வருகையை அறிவித்தது. நிமித்திகன் அவைமேடை ஏறி வெள்ளிக்கோலை மும்முறை சுழற்றி "அஸ்தினபுரியின் அரசர் தார்த்தராஷ்டிரர் துரியோதனர் அவைபுகுதல்!" என்று அறிவித்தான். அனைவரும் எழுந்து நின்று வாழ்த்தொலி எழுப்பினர். துரியோதனன் மிக மெல்ல இரு கால்களையும் இரும்பு உருளைகளால் கட்டப்பட்டவைபோல இழுத்து வைத்து நடந்து வந்தான். அவனைச் சூழ்ந்து வந்த துச்சலனும் துர்மதனும் அதேபோல தளர்ந்திருந்தனர். தம்பியர் அனைவருமே உடலில் குருதிபடிந்து உலராதிருந்த கட்டுகளை போட்டிருந்தனர். இரு கைகளையும் கைப்பிடியில் ஊன்றி எடைமிக்க உடலை மெல்ல தாழ்த்தி துரியோதனன் அமர்ந்தான். அரியணையில் அமர்ந்து வலிகொண்டவன்போல் பெருமூச்சுவிட்டு கால்களை நீட்டிக்கொண்டு முழங்கைகளை ஊன்றி கைக்குவிப்பில் முகம் பதியவைத்துக்கொண்டான்.

நிமித்திகன் "அவை நிகழ்வு தொடங்குக!" என்றான். முறைமைச்சொற்கள் ஒலித்தடங்கியதும் அவை அமைதியாக காத்திருந்தது. சில கணங்களுக்குப் பின் துரோணர் கனைத்துக்கொண்டு "இன்றைய படைத்தலைமையை அஸ்வத்தாமன் ஏற்கலாமென்று முடிவு செய்துள்ளோம். படைசூழ்கையை அவர் இந்த அவையில் அறிவிக்கட்டும்" என்றார். அஸ்வத்தாமன் அச்சொல் எழுந்த பின்னரே வேறெங்கிருந்தோ வந்து தன் உடலில் பொருந்தியவன்போல அசைவுகொண்டு எழுந்து வணங்கி "படைசூழ்கையை வகுத்து தோலேட்டில் வரைந்து அரசரின் நோக்குக்கு அளித்துள்ளேன்" என்றான். ஏவலன் கொண்டுசென்று நீட்டிய தோல்சுருளை கையால் வாங்காமல் பீஷ்மரிடம் அளிக்கும்படி துரியோதனன் தலையசைத்து ஆணையிட்டான்.

அஸ்வத்தாமன் "இப்படைசூழ்கையின் உணர்வுநிலை என்ன என்பதை சொல்லவிரும்புகிறேன். இதுவரை நம் படைசூழ்கைகள் அனைத்துமே எதிர்கொண்டு சென்று தாக்கும் தன்மை கொண்டிருந்தன. ஏனெனில் நாம் வெல்லும் உறுதியுடன், வெல்வோம் என்னும் நம்பிக்கையுடன், வென்றபின் அடைவன மீதான விழைவுடன் இருந்தோம். படைசூழ்கைகளை படையின் உணர்வுநிலைகளை ஒட்டி அமைப்பதே வழக்கம். இன்று அவ்வாறல்ல. நான் எதையும் குறைத்தோ மிகையாகவோ சொல்ல விழையவில்லை. நம் படைகள் உளம் சோர்ந்துள்ளன. படைத்தலைவர்களும் சோர்ந்திருக்கிறார்கள்" என்றான்.

"நாம் வென்றுகொண்டிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. வெல்வோம் என்பதில் எனக்கு அசையா நம்பிக்கையும் உள்ளது. பிதாமகர் பீஷ்மர் உடனிருக்கையில் எவரும் நம்மை வெல்ல இயலாது" என அஸ்வத்தாமன் தொடர்ந்தான். "ஆனால் வெற்றிகூட பேரிழப்புகள் வழியாகவே அடையப்பட இயலும் என்று இப்போர் நமக்கு காட்டியிருக்கிறது. நேற்று நம் அரசரின் இளையோர் எண்மர் களத்தில் கொல்லப்பட்டுள்ளனர்..." என்றதும் துரியோதனன் தன் இடக்கையை தூக்கி போதும் என்று கைகாட்டினான். அவன் முகத்தில் எழுந்த வலியைக் கண்டு உளம் பொறாது கிருதவர்மன் விழிதாழ்த்திக்கொண்டான்.

"இல்லை, நான் அதை விளக்கப்போவதில்லை" என்றான் அஸ்வத்தாமன். "ஆனால் நம் படைசூழ்கைகள் இனியும் குறைந்த இழப்புகளுடன் வெற்றியை நோக்கி

செல்வதாகவே இருக்கவேண்டும். ஆகவே நான் வகுத்துள்ளது முதலைச்சூழ்கை. அசைவற்றதாக, மரக்கட்டையென காத்துக்கிடப்பது. இரை நம் வட்டத்துக்குள் வந்ததும் எதிர்பாராது பாய்ந்து தாக்குவது. முதலையின் விரைவு வேங்கைக்கு நிகரானது. முதலையின் பற்கள் கொண்டது விடாதவை. எவரும் எண்ணியிராத பெரும்படைக்கலம் என தன் வாலை பின்னிருந்து சுழற்றி முன்னெடுக்கத் தெரிந்தது அது. தன் இடத்தில் இருக்கையில் முதலை யானையை வெல்லும் ஆற்றல் கொண்டது.”

“அப்படியானால் நாம் முன்னேறி தாக்கப்போவதில்லையா?” என்று பூரிசிரவஸ் கேட்டான். “ஆம், இம்முறை நாம் படைசூழ்கை வகுத்து முற்றமைதிகொண்டு காத்திருப்போம். அவர்கள் வரட்டும், தாங்கள் விரும்பிய இடத்தை அவர்கள் தாக்கட்டும். முதலைக்கு தன் எல்லைக்கு அப்பால் பார்வை இல்லை. முதலையால் எத்திசையிலும் திரும்ப முடியும். கணப்பொழுதில் மீன்கொத்தியென எழவும் ஓசையின்றி பின்னகர்ந்து மூழ்கி விழிமறையவும் இயலும்” என்றான் அஸ்வத்தாமன்.

படைசூழ்கைகள் ஒவ்வொரு நாளும் அவையில் விளக்கப்படுகையில் எழும் கொந்தளிப்போ மாற்றுக்கருத்துக்களோ ஐயங்களோ எழவில்லை. அவையினர் பெரும்பாலும் வெற்று விழிகளுடன் நோக்கி அமர்ந்திருந்தனர். துரியோதனன் அதை செவி கொடுத்து கேட்டதாகவே தெரியவில்லை. அஸ்வத்தாமன் “பிதாமகர் பீஷ்மரின் எண்ணத்தை அறிய விழைகிறேன்” என்றான். பீஷ்மரின் விழிகளுக்குச் சுற்றும் உலர்சேறென வெடிப்புகள் பரவியிருந்தன. நடக்கட்டும் என்பதுபோல் கைகாட்டினார். துரோணர் “நன்று” என்றார். கிருபர் “ஆம், இயல்பானது” என்றார்.

அஸ்வத்தாமன் “இப்படைசூழ்கையின் முகப்பென முதலையின் வாயாக பிதாமகர் பீஷ்மரும் அவருக்குத் துணையாக பூரிசிரவஸும் சலனும் அமையட்டும். முதலையின் நான்கு கால்களாக எந்தையும் நானும் அஸ்தினபுரியின் அரசரும் தம்பியரும் அமைக! வால் என ஜயத்ரதரும் கிருதவர்மரும் நிலைகொள்ளட்டும். முதலை இரையை கவ்வியதுமே அதற்கு துணை வரும் பிற படையினரை சுழன்றெழுந்து வந்து வால் அடித்துச் சிதறடிக்கும்” என்றான். அவை எதுவும் சொல்லவில்லை. “இது வெல்லும் சூழ்கை... நம்புக!” என்றான் அஸ்வத்தாமன். “இன்று நாம் ஐவரில் ஒருவரையேனும் கவ்விக்கொண்டே நீருள் மூழ்கி மீள்வோம்.” கிருபர் “ஆம்” என்றார். அவை முனகலோசை எழுப்பியது.

துர்மதன் பெருமூச்சுடன் “நல்ல சூழ்கை, பாஞ்சாலரே” என்றான். தொண்டையை கனைத்து குரல்மீட்டு “ஆனால் படைகளின் நடுவே மழலைமாறா மைந்தரை இல்லத்திற்குள் பனிக்காலத்தில் பூட்டி வைப்பதுபோல் எங்களை வைத்திருக்கிறீர்கள் இல்லையா?” என்றான். “இல்லை, அவ்வாறல்ல. முதலையின் கால்கள் நீங்கள்” என்றான் அஸ்வத்தாமன். “அக்கால்கள் முதலை விரைந்தெழுந்து முன்செல்வதற்கு மட்டுமே உதவும். அவை படைக்கலங்களல்ல” என்றான் துச்சலன். “ஆம், ஆனால் அவை படைசூழ்கையின் வலுவான கூறுகள்” என்றான் அஸ்வத்தாமன். “எங்களிடம் சொல்விளையாட்டு தேவையில்லை, பாஞ்சாலரே” என்று துச்சலன் சொன்னான்.

உரத்த குரலில் அவன் தொடர்ந்தான். “எங்கள் உடன்பிறந்தார் எண்மர் இறந்திருக்கிறார்கள் என்பது உண்மை. என் மூத்தவர் துச்சாதனர் நேற்று பாடிவீட்டுக்கு வந்து படுத்தவர் இன்னும் எழவில்லை. இரவெல்லாம் துயிலிலாது அரற்றிக்கொண்டிருக்கிறார். அகிபீனாவின் மயக்கில் இன்னமும் உளம் ஓய்ந்திருக்கிறார் அரசர். ஆயினும் நாங்கள் இன்னமும் சோர்ந்துவிடவில்லை.

ஆசிரியர் மைந்தரே, எங்கள் இளையோர் கொல்லப்பட்டதனால் களத்திலிருந்து நாங்கள் விலகுவோம் என்று பொருளல்ல. நூற்றுவர் ஆயிரத்தவராகி மேலும் களத்தில் நிற்போமென்று தெய்வங்கள் அறியட்டும். இறந்தவர்களுக்கு குருதிபலி அளித்து விண்நிறைவு செய்யவேண்டிய பொறுப்பிலிருக்கிறோம். இனி போர்க்களம் எங்களுக்கு எதையும் ஈட்டிக்கொள்வதற்கான இடம் அல்ல. இது வேள்வி. பலிக்களம். விண்ணில் தேவர்களாக அமைந்த எங்கள் இளையோருக்கு நாங்கள் அளிக்கும் அவியே இந்தக் குருதி. முகப்பில் எங்களை நிறுத்துக!”

அஸ்வத்தாமன் குரலெழா உறுதியுடன் “படைத்தலைவனென நான் அமர்ந்திருக்கிறேன். என் சொல்லுக்கு மாற்றெழுவதை நான் விழையமாட்டேன்” என்றான். “ஆனால்…” என்று துர்முகன் சொல்லெடுக்க பீஷ்மர் “நாம் சொல்லாடி முடிவெடுக்க இது ஒன்றும் அரசுசூழ்கை அல்ல, படைசூழ்கை. ஒருவர் இயற்ற பிறர் அதில் அமைவதே வழக்கம்” என்றார். “அவ்வாறே ஆகட்டும்” என்று துர்முகன் தலைவணங்கினான். துரியோதனன் ஏதோ சொல்லப்போவதுபோல அசைந்தான். அனைவரும் அவனை நோக்க அவன் ஒன்றுமில்லை என கைவீசினான். கிருபரிடம் துரோணர் ஏதோ சொல்ல பீஷ்மர் வாயை மென்றபடி வேறெங்கோ நோக்கி அமர்ந்திருந்தார்.

பூரிசிரவஸ் “தாங்கள் நேற்றிரவு நன்கு துயின்றீர்களா, பிதாமகரே?” என்றான். அந்த நேரடி வினாவை கேட்டு கிருதவர்மன் திகைத்தான். ஆனால் அவையில் பிறர் அதை கேட்டதாகத் தெரியவில்லை. விழிகள் சுருங்க “ஏன்?” என்று பீஷ்மர் சினத்துடன் கேட்டார். “தங்கள் விழிகள் மிகவும் தளர்ந்திருக்கின்றன. உடல் நீர் வற்றியதுபோல் தெரிகிறது” என்றான் பூரிசிரவஸ். “அதை மருத்துவன் நோக்கட்டும்” என்றார் பீஷ்மர். “நீங்கள் நேற்றிரவு முழுதும் துயிலாது முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்ததாக ஏவலர் கூறினார்கள். முதன்முறையாக நேற்று அகிபீனா அருந்தியிருக்கிறீர்கள்.”

பீஷ்மர் எரிச்சலுடன் கை தூக்கி ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் பூரிசிரவஸ் தொடர்ந்தான். “நேற்று மாலை களத்திலிருந்து திரும்புகையில் நான் உங்களை பார்த்தேன். முந்தைய போர்களில் களம் மீண்ட பிதாமகரின் முகம் அல்ல அது. ஒருபோதும் உங்களில் வஞ்சத்தையும் சினத்தையும் நான் கண்டதில்லை. விந்தையானதோர் உளப்பதிவு எனக்கேற்பட்டது, பிதாமகரே. உங்களிடமிருந்து ஒன்று விலகியிருப்பதாக.” பீஷ்மர் தணிந்த குரலில் “எது?” என்றார். அவர் உடல் நடுங்கிக்கொண்டிருப்பதை கிருதவர்மன் கண்டான். “அறியேன். அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் இயல்பா? அனைத்துக்கும் அப்பால் நிலைகொள்ளும் தன்மையா? அனைத்திலும் தனக்குரிய களிமயக்கொன்றைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் ஒன்றா? அல்லது இம்மூன்றுமேவா? அறியேன். ஆனால் தாங்கள் மாறிக்கொண்டிருக்கிறீர்கள்” என்றான் பூரிசிரவஸ்.

பீஷ்மர் “இக்களத்தில் ஒவ்வொரு நாளும் ஒன்றை இழந்து பிறிதொருவராகி மாறாது மீண்டவர் எவரேனும் உளரா?” என்றார். “அனைவரும் அவ்வாறுதான் மீள்கின்றனர். ஆனால் அவர்களில் ஒருவரல்ல தாங்கள். தாங்கள் மாறுவதற்கேற்ப நம் படை மாறியாகவேண்டும். தங்களின் ஒவ்வொரு இழப்பும் இப்படையினர் ஒவ்வொருவருக்கும் பல மடங்கு பெரிய இழப்பு. பிதாமகரே தாங்கள் அறிவீர்கள், இப்போர் தங்களை முன்னிறுத்தி மட்டுமே” என்றான். “நான் தகுதியற்றுவிட்டேன் என்கிறாயா? புண்பட்டு செயலிழந்துவிட்டேன் என எண்ணுகிறாயா” என்றார். “புண் உடலில் நிகழவேண்டுமென்பதில்லை” என்றான் பூரிசிரவஸ். “உங்களிடமிருந்து விலகியதென்ன என்று என் உள்ளம் தவிக்கிறது.”

பீஷ்மர் பெருஞ்சினத்துடன் எழுந்து “சென்றவர்கள் உளர். ஆனால் எஞ்சினோர் என்னில் இன்னும் ஆற்றல்கொள்வர். நான் எட்டு வசுக்களின் வடிவம். எட்டில் எவர் சென்றாலும் எஞ்சியவர் போதும் எனக்கு இப்போர் முடிக்க. எவரிடமும் நான் அதை விளக்கவேண்டியதில்லை. என் மேல் நம்பிக்கை இருப்பின் உடன் திரள்க! அன்றேல் உங்கள் சூழ்கையை நீங்கள் அமைத்துக்கொள்க!” என்றார். “அவ்வாறல்ல, பிதாமகரே” என்று பூரிசிரவஸ் சொல்ல “இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை” என்றபின் பீஷ்மர் அவையிலிருந்து எழுந்து வெளியே நடந்தார்.

பூரிசிரவஸ் துரோணரைப் பார்த்து “ஆசிரியரே, நான் எண்ணியது அதுவல்ல” என்றான். “நான் சரியான சொற்களை கோக்கவில்லை. என் நா என் இயல்பில் இல்லை.” துரோணர் “இங்கு அனைவரும் எண்ணிய சொற்களே அவை. அவற்றை அவரிடம் கேட்கும் துணிவு எவருக்குமில்லை. மலைமகன்களுக்குரியது உன் துணிவு” என்றார் துரோணர். “கேட்பதனால் பயனொன்றும் இல்லை என்றும் அறிவோம்” என்றார் கிருபர். அங்கே பேசப்பட்டவற்றை பிறர் கேட்டதாகவே தெரியவில்லை. சிலர் மெய்யாகவே துயிலில் ஆழ்ந்திருக்கக்கூடும் என கிருதவர்மன் எண்ணினான். அஸ்வத்தாமன் ஏட்டில் தன் படைசூழ்கையை தானே மீண்டும் கூர்ந்துநோக்கிக்கொண்டிருந்தான்.

“முதலைச்சூழ்கை வகுத்துள்ளோம் எனில் அதை முன்னெடுப்போம். பிறிதெதுவும் சொல்வதற்கில்லை” என்று ஜயத்ரதன் கூறினான். துரியோதனன் இருமலோசை எழுப்ப அனைவரும் அவனை நோக்கினர். அவன் கைநீட்ட ஒரு வீரன் வாய்மணத்தை அளித்தான். அதை வாங்கி வாயில் போட்டுக்கொண்டு மீண்டும் இருமினான். பெருமூச்சுடன் நிமிர்ந்தமைந்து “இச்சூழ்கையில் என் இளையோர் எங்கிருப்பார்கள்?” என்றான். “படைசூழ்கையின் பின்நிரையில்… முதலையின் கால்களாக” என்றான் அஸ்வத்தாமன். துரியோதனன் “அவர்கள் காக்கப்படவேண்டும்” என்றான். துர்மதன் ஏதோ சொல்ல முயல துச்சலன் அவன் தோளைத் தொட்டு தடுத்தான். “அவர்கள் சூழப்பட்டிருக்கவேண்டும்… அவர்கள் காவலுடன் இருக்கவேண்டும்” என்றான் துரியோதனன்.

பூரிசிரவஸ் “இச்சூழ்கை அதன்பொருட்டே அமைந்துள்ளது, அரசே” என்றான். “என் இளையோருக்கு நேற்று நான் எரிகடன் அளித்தேன்…” என்றான் துரியோதனன். “அவர்களை எரி உண்டது. என் குடியை எரி கவ்வத் தொடங்கிவிட்டது. அதன் பெரும்பசியை நேற்று கண்டேன்… எத்தனை பெரிய சிதை! ஒரு மாளிகை பற்றி எரிவதுபோல. உருகும் அரக்குமணம்… அரக்கு…” அவன் கைகளைத் தூக்கியபடி ஏதோ சொல்லவந்து மீண்டும் இருமினான். ஏவலன் நீர்க்குவளையை அளிக்க அதை வாங்கி அருந்தினான். அந்த ஓசை அவை முழுக்க கேட்டது. “என் குடியை எரிதொட்டுவிட்டது… எரியைப்போல் பரவும்வெறிகொண்டது பிறிதில்லை…”

துரியோதனனின் விழிகளிலிருந்து நீர்வழிவதை கிருதவர்மன் கண்டான். அவனால் ஒரு கணத்துக்குமேல் அதை நோக்க முடியவில்லை. தன்னை இறுக்கி நிலைப்படுத்திக்கொண்டான். பூரிசிரவஸும் ஜயத்ரதனும்கூட விழிநீர்கொள்வதை கண்டான். அஸ்வத்தாமன் “மிகவும் உளம்தளர்ந்திருக்கிறார். அகிபீனா துயிலாக மாறவில்லை என்றால் உளத்தளர்ச்சியை அளிக்கிறது” என்றான். துரியோதனன் இருமி அதிர்ந்து தலையை சாய்த்து விழிகளை மூடிக்கொண்டான். அவை அவனை நோக்கியபடி அமர்ந்திருந்தது.

சல்யர் மெல்ல அசைந்து தாழ்ந்த குரலில் “எனக்கு ஒன்று தோன்றுகிறது” என்றார். “இப்போர் இன்று ஐந்தாம் நாள். இது நிகழத்தான் வேண்டுமா என்ற எண்ணம் அனைவருக்கும் எழுந்ததுபோல் உள்ளது. அனைவர் உள்ளமும் வெற்றியிலிருந்து

விலகிச்சென்றுவிட்டது. நாம் இழப்பை மட்டும் எண்ணிக்கொண்டிருக்கிறோம். இங்கு மட்டுமல்ல, அங்கே பாண்டவர் தரப்பிலும் எதன் பொருட்டு இப்போர் என்று எண்ணம் எழுந்துள்ளது. உண்மையில் இப்போரைக்குறித்து ஒரு மாற்றுச்சொல் திகழுமென்றால் அது இப்போதுதான். இதை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஒரு அமர்வு நிகழுமெனில் அதற்கான நல்வாய்ப்பு இத்தருணமே.”

கிருபர் “போருக்கு நடுவே உடன்பாட்டுப் பேச்சா?” என்றார். “இரு அரசர்களும் பேச அமர்கிறார்கள் என்ற செய்தி முதல்நாள் போரிலோ இரண்டாம்நாள் போரிலோ எழுந்திருந்தால் படைவீரர்கள் அனைவரும் உளம் சோர்ந்திருப்பார்கள். இன்று அவ்வாறல்ல, அவர்கள் ஒவ்வொருவரையும் உயிர்மீட்கும் அமுதமாக அது அமையும். நாம் பாண்டவர்களுக்கு ஒரு செய்தி அனுப்புவதில் பிழை என்ன?” என்று சல்யர் சொன்னார். அவையினர் அனைவரும் அவரை நோக்கினர். அஸ்வத்தாமன் தலைதூக்கி சல்யரை நோக்கியபின் தோல்சுருளை சுருட்டினான்.

பூரிசிரவஸ் “நானும் அவ்வாறே எண்ணினேன். இவ்வாறு ஒரு பேச்சு எழுவதென்றால் அது நலம் பயக்கும்” என்றான். துரோணர் “அவையின் எண்ணமென்ன என்று அரசரிடம் சொல்லலாம். அவர் முடிவெடுக்கட்டும்” என்றார். கிருபர் “நாம் முடிவெடுப்பது அனைவர் நலனுக்காகவும்தான்” என பொதுவாக சொன்னார். “நாம் என்ன செய்யக்கூடும்? எவருடைய பேச்சு அவைநிற்கும்?” என்றார் துரோணர். “பிதாமகர் பேசட்டும்… பால்ஹிகர் முன்னிலையில் உடன்பிறந்தார் பகைமறக்கட்டும்” என்றார் சல்யர்.

அவையில் கலைவாக குரல்கள் எழுந்துகொண்டிருந்தன. கிருதவர்மன் துரியோதனனை நோக்கினான். அவன் துயில்பவன் போலிருந்தான். துர்மதன் குனிந்து அவனிடம் ஏதோ சொல்ல ஜயத்ரதன் “போர்நிறுத்தம் என்றால் மீண்டும் அவைச்சொல்லாடல் தொடங்குமா? போருக்கு அஞ்சும் பேச்சுக்கு என்ன பொருள்?” என்றான். “நாம் அஞ்சவில்லை. போர் எனும் சொல்லுக்கு மெய்ப்பொருள் என்ன என்று இருவருமே இன்று உணர்ந்திருக்கிறோம்” என்றார் சல்யர். “ஆம், நம்மைவிட அவர்கள் உணர்வார்கள்” என்றார் துரோணர்.

அவை திடுக்கிடும் ஓசையெழ துரியோதனன் இரு கைகளாலும் இருக்கையின் பிடிகளை ஓங்கி அறைந்தபடி எழுந்து “இனி ஒரு சொல்லென இது இங்கெழலாகாது. எந்நிலையிலும், என் இறுதிக் குருதி இங்கு விழுவது வரையிலும், விழுந்த பின்னரும், என் குலக்கொடியின் ஒரு துளி எஞ்சுவது வரையிலும், ஒத்துப்போதலென்பது இனி இல்லை. முழுவெற்றியோ முற்றழிவோ அன்றி தெரிவென்று நம்முன் எதுவும் இல்லை” என்றான். உடைந்த குரலில் “சாவு! அதைமட்டுமே நான் அவர்களுக்கு அளிக்கமுடியும்… ஆம்” என்றான்.

சல்யர் “அரசே, நான் சொல்வதை கேளுங்கள்” என்றார். “என் இளையோர் மடிந்தது மண்ணுக்காக. வெறும் சொல்பெற்று அமைவதற்காக அல்ல” என்று துரியோதனன் கூச்சலிட்டான். அவன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. விழப்போகிறவன்போல அசைந்தான். துர்மதன் அவனை பிடிக்க வர அக்கையை உதறினான். “வேறெதைப் பெற்று நான் அமைந்தாலும் என் இளையோரின் பழிகொள்வேன்… என் இளையோர்!” அவன் குரல் அடைத்தது. இரு கைகளையும் விரித்து “இனி என் கடன் அவர்களிடம்… இருப்பவர்களிடமல்ல, இறந்தவர்களிடம்” என்றான்.

மேலும் பேச விழைந்து நெஞ்சு அதிர சொல்லிலாமல் தவித்து பின் இருமத் தொடங்கினான். இருமி ஓய்ந்து ஏவலன் நீட்டிய நீரை விலக்கி துச்சலனை நோக்கி கைகாட்டிவிட்டு மேலாடையை எடுத்து தோளிலிட்டு விரைந்து அவையிலிருந்து வெளிநீங்கினான். முரசுகள் மெல்ல முழங்கி அமைந்தன. வாழ்த்தொலிகள்

வெளியே எழுந்து ஓய்ந்தன. கிருதவர்மன் நிலைமீண்டபோது தன் விழிகளிலிருந்து நீர்வழிந்து முகவாய்விளிம்பில் துளிசொட்டுவதை உணர்ந்தான். மேலாடையை எடுத்து முகத்தை மூடி அழுந்த துடைத்தான்.

எவரும் அறிவிக்காமலேயே அவை கலைந்தது. ஒரு சொல்லும் இல்லாது ஜயத்ரதனும் கிருபரும் துரோணரும் வெளியே சென்றனர். அஸ்வத்தாமன் “செல்வோம்” என்று சொல்லி தோல்சுருளை கையிலெடுத்தபடி நடக்க கிருதவர்மன் உடன் சென்றான். வெளியே செல்கையில் பூரிசிரவஸ் சிவந்த கண்களுடன் அணுகுவதை கிருதவர்மன் கண்டான். அவனும் விழிநீர் வடித்து அழுந்தத் துடைத்திருந்தான். அத்தருணத்தின் ஒவ்வாத்தன்மையை கடக்க விழைபவன்போல கிருதவர்மனை நோக்கி புன்னகைத்த பின் அஸ்வத்தாமனிடம் “முதலைசூழ்கை நன்று, ஆசிரியர் மைந்தரே. ஆனால் அவர்கள் எச்சூழ்கையை வகுக்கவிருக்கிறார்கள் என்று தெரியவில்லை” என்றான்.

அஸ்வத்தாமன் “ஒற்றர் சொல்லை வைத்து பார்த்தால் அவர்கள் மீண்டும் அன்னப்பறவை அமைக்கக்கூடும்” என்றான். பூரிசிரவஸ் “அன்னச்சூழ்கை நன்று. நீள்கழுத்து” என்றபின் “ஆனால் பறந்து அமர்ந்து அனைத்து திசைகளையும் சூழ்ந்து தாக்கும் சிறு பறவை ஒன்றின் வடிவை அவர்கள் அடையக்கூடும். ஒரு பேச்சுக்காக கேட்கிறேன், அவர்கள் வல்லூறின் வடிவில் சூழ்கை அமைக்க வாய்ப்புள்ளதா?” என்றான். “வல்லூறா?” என்று அஸ்வத்தாமன் கேட்டான். “முதலை வல்லூறை கவ்வ இயலாது. ஏனெனில் அவை காற்றிலெழும் விரைவுகொண்டவை” என்றான். அஸ்வத்தாமன் “இருக்கலாம், உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்” என்றான்.

கிருதவர்மன் “அவ்வாறெனில் இப்போர் இன்று இருதரப்பும் ஒருவரையொருவர் தவிர்த்தாடுவதாக அமையப்போகிறது” என்றான். பூரிசிரவஸ் கைவிரித்து “பார்ப்போம்” என்றபின் முன்னால் சென்று தன் புரவி வீரனை நோக்கி கைகாட்டினான். கிருதவர்மன் அவன் செல்வதை நோக்கி நின்றான். அஸ்வத்தாமன் “இன்றைய போர்தான் நமக்கான உலை. இதில் எரியாது மீளவேண்டும்” என்றான்.

அரசுசூழ் மாளிகையிலிருந்து புரவிகளை நோக்கி செல்கையில் அஸ்வத்தாமன் “என் பாடிவீட்டுக்கு வருகிறீர்களா, யாதவரே?” என்றான். “ஆம், வருகிறேன்” என்ற பின்னரே கிருதவர்மன் யாதவ குலத்தலைவர்கள் அப்பால் தனக்காக காத்து நிற்பதை கண்டான். “பொறுத்தருள்க பாஞ்சாலரே, என் குலத்தலைவர்கள். நான் அவர்களிடம் பேச வேண்டியிருக்கிறது. நான் சற்று பிந்தி அங்கு வருகிறேன்” என்றான். “பிந்துவதற்கு பொழுதில்லை. இன்னும் சற்று நேரத்தில் புலர்ந்துவிடும். நேராக களத்திற்கு வருக!” என்றபடி அஸ்வத்தாமன் தன் புரவி நோக்கி சென்றான்.

யாதவர்களை அணுகிய கிருதவர்மன் அவர்களின் தலைவணக்கங்களை ஏற்று “இன்று முதலைச்சூழ்கை. முதலையின் உடலென நாம் அமைக்கப்பட்டுள்ளோம்” என்றான். அவர்களிடம் ஒளியணைவதுபோல் ஓர் முகமாறுதல் ஏற்பட்டது. போஜர் குலத்தலைவர் பிரபாகரர் “நாங்கள் உங்களை நேரில் கண்டு பேசிப்போகவேண்டும் என்று வந்தோம், கிருதவர்மரே” என்றார். “பாடிவீட்டுக்கே வந்திருக்கலாமே?” என்று கிருதவர்மன் சொன்னான். “ஆம், அங்கு சென்றபோது நீங்கள் இங்கிருக்கிறீர்கள் என்றார்கள்” என்று ஹேகய குலத்தலைவர் மூஷிகர் சொல்ல குங்குர குலத்தலைவர்

சுதமர் ஊடே புகுந்து “உண்மையில் அரசரிடம் பேசத்தான் வந்தோம். தயங்கி நின்றுவிட்டோம். அதை உங்களிடம் சொல்லலாம் என நினைத்தோம்” என்றார்.

அந்த வாயுதிர்தல் அனைவரையும் நிலையழியச் செய்ய ஒருவரை ஒருவர் நோக்கினர். பிரபாகரர் “ஒன்று கேட்டேன். நேற்று போரில் இளைய யாதவர் தேர்திருப்பி தப்பி ஓடினார் என்று சொல்கிறார்கள். மெய்யா?” என்றார். எரிச்சலுடன் “இளைய யாதவர் இப்போரில் இல்லை” என்றான் கிருதவர்மன். சுதமர் “யார் சொன்னது? இப்போரை நடத்துவது அவர்தான். இளைய பாண்டவனின் வில்திறனை நம்பி இதை முன்னெடுத்தார். இதோ களத்தில் அவன் கோழை என தெரிந்துவிட்டது. நேற்றிரவு துயின்றிருக்கமாட்டார்” என்றார்.

மூஷிகர் “பீஷ்மரின் முன் அவன் வில் தாழ்த்தி ஓடியதும் அவனை விட மாவீரன் என்று சொல்லப்பட்ட அவன் மைந்தன் அபிமன்யூ பீஷ்மரின் அம்பால் தேர்த்தட்டில் விழுந்து புண்பட்டு மருத்துவநிலையில் கிடப்பதும் அவருக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்தியிருக்கும்” என்றார். பிரபாகரர் “அவருக்கு ஓர் எண்ணமிருந்தது, பெருவீரர்கள் அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டு நின்றிருக்கிறார்கள் என்று. அவ்வெண்ணத்தால் எங்களை அவர் பொருட்படுத்தவில்லை” என்றார்.

கிருதவர்மன் அவர்களிடம் பேசிப் பயனில்லை என அமைதிகாத்தான். பிரபாகரர் “கிருதவர்மரே, எங்கள்பொருட்டு தாங்கள் நேரடியாக சென்று இளைய யாதவரிடம் பேசக்கூடுமா?” என்றார். “ஏன் பேசவேண்டும்?” என்றான் கிருதவர்மன். “இப்போரில் நமது குடிகள் இறந்துகொண்டிருக்கின்றனர். எளிய கன்றோட்டும் மானுடர். இத்தனை அழிவை நாம் எதிர்பார்க்கவில்லை. நம்மவருக்கு இத்தகைய பெரும்போர்கள் பழக்கமில்லை. உண்மையை சொன்னால் கால்தடுக்கி விழுந்தே யாதவர்கள் பலர் உயிர்துறக்கிறார்கள்” அந்தகக் குடித்தலைவர் சாரசர் சொன்னார்.

“நாம் வெல்வோம்” என்றான் கிருதவர்மன். “ஆம், நாம் வெல்வோம். ஆனால் எஞ்சுபவர் எவர் என்ற எண்ணம் எழுந்துள்ளது” என்றார் சாரசர். “ஆகவே இளைய யாதவரை மீண்டும் அரசனாக ஏற்க எண்ணுகிறீர்களா?” என்றான் கிருதவர்மன் சீற்றத்துடன். “அரசனாக அல்ல. இனி அரசனாக அவரை ஏற்க எங்களால் இயலாது. இனி யாதவக்குடியின் அரசர்கள் குடித்தலைமைக்கு முற்றாகவே கட்டுப்பட்டவர்கள். ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொருவர் அரசனாக அமையட்டும். அவர்களை குடித்தலைமையின் கூட்டுமுடிவுகள் ஆளட்டும். அவ்வாறுதான் இன்றுவரை நம் குடி பெருகிப்பரவியிருக்கிறது” என்றார் ஹேகய குலத்தலைவர் மூஷிகர்.

“இனி நமக்கு பேரரசர்கள் வேண்டாம். நம்மை மிதித்து நம் மீது ஏறும் பேரரசர்கள் நம்மை பலிகொண்டு மகிழ்கிறார்கள். நம் குருதியுண்ணும் பலித்தெய்வங்களை இனி நாம் உருவாக்கவேண்டாம்” என்றார் சுதமர். “கார்த்தவீரியர்களை இனி நம் குடி காணவேண்டியதில்லை!” என்றார் போஜர் குலத்தலைவர் சுஃப்ரர். “அவர் நம் அரசர்களில் ஒருவராக அமையட்டும். அல்லது அவர் மைந்தர்களுக்கு துவாரகையை அளித்து காடேகட்டும்” என்றார் அந்தக குடித்தலைவரின் இளையவரான சுதீரர். அவர்கள் உள்ளம் ஏகும் திசையெதுவென்று கிருதவர்மனால் ஊகித்துணர முடியவில்லை. அவன் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்க மூஷிகர் “அவர் தன் ஆணவமழித்து தோற்றேன் என்று ஒரு சொல் சொன்னால் போதும். அவரை ஏற்க நாங்கள் சித்தமே. முற்றழிவு எங்களுக்கு உகந்ததல்ல” என்றார்.

“யார் முன் அவர் தலை தாழ்த்த வேண்டும்?” என்று கிருதவர்மன் கேட்டான். அவர்களின் விழிகள் மாறுவதை கண்டான். சாரசர் “பசுவைவிட மந்தை பெரிது என்று சொல்லிக்கேட்டு வளர்ந்தவன் நான். நமது குலத்தில் தன்னை தருக்கி தலைதூக்கியவர் கார்த்தவீரியர். அவரை தன் முற்காட்டு எனக்கொண்டு எழுந்தவர்

இளைய யாதவர். கார்த்தவீரியர் வேருடன் பிடுங்கி அகற்றப்பட்டார். அவருடைய ஆயிரம் கைகளும் பெருமரம் வெட்டிக்குவிக்கப்பட்டதுபோல் மாகிஷ்மதியின் வாயிலில் கிடந்ததென்கின்றன கதைகள். அந்நிலை இவருக்கும் வரக்கூடாது" என்றார்.

கிருதவர்மன் "அவர் அந்தணராகிய பரசுராமரால் கொல்லப்பட்டார். அவரை ஆதரித்து நின்றது நம் குலம்" என்றான். "அவர் அழிந்தது நம் குலத்தாலும்தான். அவருடைய ஆணவத்தால் குலம் அவரிடமிருந்து உளம்விலகிவிட்டிருந்தது. அவர்கள் களத்தில் அவருக்கு முற்றாதரவு அளிக்கவில்லை" என்றார் மூஷிகர். கிருதவர்மன் ஏளனப் புன்னகையுடன் "ஆக அப்போதும் குலத்தால் கைவிடப்பட்டுதான் அவர் அழிந்தார். இப்போதும் அதுவே நிகழ்கிறது" என்றான். "கைவிடப்பட்டு என்று ஏன் சொல்கிறீர்கள்? நாங்கள் எவருக்கும் வஞ்சமிழைக்கவில்லை. குலப்பெருமையன்றி பிறிதெதையும் நாங்கள் பெரிதென்று எண்ணவில்லை" என்றார் சுதமர்.

"மெய்யாகவா? உங்களில் எவராயினும் தெய்வங்கள்மேல் சொல்லூன்றி இங்கே சொல்ல முடியுமா, நீங்கள் குலத்திற்கு முழுத் தலைமை ஏற்கும் நாளொன்றை உள்ளாழத்தில் ஒருமுறையேனும் கனவு காணவில்லை என்று?" என்று கிருதவர்மன் கேட்டான். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி தத்தளிக்க சாரசர் "இது வீண்சொல்" என்றார். "களத்தில் அவருடைய தோல்வியை எப்படி எதிர்பார்க்கிறீர்கள் என்று தெரிகிறது. நீங்கள் ஈட்ட விரும்புவது பிறிதொன்றும் அல்ல, ஆணவமீட்சி மட்டுமே. அவரது அவையில் சென்றமர்ந்து பல்லாண்டுகாலம் வாழ்த்தொலி எழுப்பினீர்கள். அந்த ஒவ்வொரு வாழ்த்தொலிக்கும் உங்களுள் அமைந்த ஏதோ ஒன்று சீற்றம் கொண்டது. அவ்வெளிய வஞ்சத்தை சுமந்து இங்கு படை நடத்த வந்திருக்கிறீர்கள். இங்கு அதற்கு எப்பொருளும் இல்லை. இங்கு எந்த வஞ்சத்திற்கும் பொருளில்லை. இங்கு எதற்குமே பொருளில்லை என்று இப்போது உணர்ந்திருப்பீர்கள்" என்றான் கிருதவர்மன்.

அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்க கிருதவர்மன் கசப்பு நிறைந்த பெருஞ்சிரிப்புடன் "ஆனால் போருக்கெழுவது எளிது, மீள்வது கடினம்" என்றான். "இது இளைய யாதவர் பேசுவதுபோல் ஒலிக்கிறது" என்றார் சாரசர். "நீங்கள் இளைய யாதவராக ஆக முயல்கிறீர்கள் என்றால் நாங்கள் சொல்வதொன்றே, இன்னொரு இளைய யாதவர் எங்களுக்கு தேவையில்லை." கிருதவர்மன் "ஆம், ஒவ்வொருவரும் இளைய யாதவராகவே எண்ணிக்கொண்டிருக்கிறோம். இதில் ஒளிவென்ன மறைவென்ன?" என்றான். சாரசர் சீற்றத்துடன் "நீங்கள் எங்களை களியாடுகிறீர்கள்" என்றார். "இல்லை, நான் சொல்வது இயல்பாகவே அவ்வாறு ஆகிறது" என்றான் கிருதவர்மன்.

"கிருதவர்மரே, நீங்கள் எங்கள் தலைவர் அல்ல, எங்களில் ஒருவர் மட்டுமே. வெற்றிக்குப் பின் நீங்கள் உங்களை இளைய யாதவரென்று எண்ணிக்கொள்வீர்கள் என்றால் அன்று உங்களுக்கெதிராகவும் நாங்கள் எழுவோம்" என்றார் மூஷிகர். "அதை நான் நன்கறிவேன். நான் இளைய யாதவர் அல்ல. அவருக்கு எதிராக எழுந்த சிறுமை எனக்கெதிராகவும் எழுமென்று அறியாதவனும் அல்ல. ஆனால் ஒன்றுணர்க, இப்போருக்குப் பின் நான் யாதவர்களுக்கு அரசனாக ஆனேன் என்றால் குலத்தலைமையென்று கோல்கொண்டு ஒருவரும் என் முன் வந்து அமர ஒப்பமாட்டேன்! என்னை மீறி சொல்லெடுக்கத் துணிவீர்கள் என்றால் உங்களையும் உங்கள் மைந்தர்களையும் தலைவெட்டி கோட்டை முகப்பில் வைத்த பின்னரே அரியணையில் அமர்வேன்" என்றான்.

அவர்கள் ஒவ்வொருவரும் முகம் வெளிறி திகைத்து ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டார்கள். கிருதவர்மன் புன்னகைத்து "சிறுமைகளை

ஏற்றுக்கொள்வது பெருந்தன்மை. சிறுமைகளை பொறுத்தருள்வது மடமை. இப்பாரதவர்ஷத்தில் பேரரசுகளை உருவாக்கிய அனைவருமே தங்கள் குலத்தை முற்றடிமையாக கால்கீழ் வைத்திருந்தவர்கள். தேரிழுக்கும் புரவிகளுக்கு தங்களுக்கென்று எண்ணமும் இலக்கும் இருக்கலாகாது. அவை சவுக்கால் மட்டுமே செலுத்தப்படவேண்டும், கடிவாளத்தால் ஆணையிடப்படவேண்டும்” என்றான். அவர்கள் ஒவ்வொருவரையாக நோக்கியபின் “நன்று, என் சொற்களை உரைத்துவிட்டேன். முன்னரே சொல்லப்படவில்லை என்னும் குறை இனி வேண்டாம்” என்று திரும்பி நடந்தான்.

ஓர் யாதவ இளைஞன் உரக்க “நில்லுங்கள், கிருதவர்மரே!” என்றான். கிருதவர்மன் நிற்க “நான் விருஷ்ணி குலத்தலைவர் சசிதரரின் மைந்தன். என் பெயர் சேகிதானன்” என்றபடி அவன் அருகே வந்தான். “விருஷ்ணிகுலம் என்றும் பாண்டவர்களுக்கு கடமைப்பட்டது. ஏனென்றால் எங்கள் குலமகள் அங்கே அஸ்தினபுரியின் அரசியானாள். அவள் வயிற்றில் பிறந்தவர்கள் அரசமைந்தர் ஐவரும். எங்கள் குடிசெழிக்க வந்த இளைய யாதவரின் அணுக்கனாக என்றும் என்னை உணர்ந்தவன் நான். மயன் அமைத்த இந்திரப்பிரஸ்த மாளிகையில் பாண்டவர்கள் அணிக்கோலத்துடன் நுழைந்தபோது அவர்களுக்குப் பின்னால் வாளேந்தி சென்றவர்களில் நானும் ஒருவன். ராஜசூயப் பெருநிகழ்வில் அரசரைச் சென்று பணிந்து எங்கள் குலத்து வில்லை காலடியில் வைத்து முழுதளிப்பை அறிவித்தவன்.”

உளவிசையால் அவன் மூச்சிரைத்தான். “இன்று இதோ பாண்டவர்களுக்கு எதிர்நிரையில் நின்றிருக்கிறேன் எனில் அது என் குலமூத்தாரின் ஆணை என்பதனால் மட்டுமே. மூத்தோர் சொல் பசுத்திரளை ஒருங்கிணைக்கும் கழுத்துமணியோசைக்கு நிகர் என்று கேட்டு வளர்ந்தேன். இன்றும் நாவெடுக்காமல் இருந்தால் பின்னர் என்னை நானே பழிப்பேன் என்பதனால் இதை சொல்கிறேன். யாதவகுலத்தை நீங்கள் உங்கள் ஏவல்படை என எண்ணினீர்கள் என்றால் அது நடைபெறப்போவதில்லை. இதுகாறும் யாதவர்கள் குலத்திரள் என்றுதான் திகழ்ந்துள்ளனர். ஒவ்வொரு குடியும் தனித்தனியான அரசும் கொடியும் முத்திரைகளும் கொண்டு பிறரை சாராமல் தங்கள் நிலத்தில் தாங்களே என்று வாழ்கிறார்கள்.”

“நாங்கள் மலைகளைப்போல ஓங்கி உயர முடியவில்லை. நெருப்பென பிறவற்றை அழித்து நிலைகொள்ளவும் இயலவில்லை. ஆனால் நீரெனப் பரவி செல்லுமிடமெல்லாம் செழிக்க வாழ்கிறோம். குலங்களென விரிந்து குடிகளென பிரிந்து வாழ்ந்தால் நாங்கள் பேரரசென்று ஆகாவிட்டாலும் என்றுமழியாது இங்கிருப்போம். துவாரகைகளை உருவாக்கி நிலைநிறுத்தும் ஆற்றல் எழாது போகலாம். கன்றுபெருகி வாழ்வதற்கு அதுவே சிறந்த வாழ்க்கைமுறை” என்றான் சேகிதானன்.

“ஆகவேதான் என் குடி இளைய யாதவரை கைவிட்டபோது அதிலும் ஒரு நெறி உள்ளது என எண்ணினேன். எந்நிலையிலும் குலங்களும் குடிகளும் தங்கள் தனிப்போக்கை கைவிடாதிருப்பதில் தெய்வஆணை ஒன்று வாழ்கிறதென்று கருதினேன். ஒவ்வொரு உயிருக்கும் வாழவும் பெருகவும் தனக்குரிய வழிகள் உள்ளன. காலங்களாக ஆற்றித்தேர்ந்த வழிகள் அவை” சேகிதானன் சொன்னான். “பசுவை ஏரில் கட்டியது போன்றது யாதவரைக்கொண்டு படைசமைத்து பேரரசு அமைக்க இளைய யாதவர் முயன்றது என தெளிந்தேன். ஆகவே இவர்களின் அச்சமும், தயக்கமும், சிறுமையும், பூசலும் எனக்கு இயல்பானவையாகவே பட்டன.”

“அவை என்னிடமில்லை. ஆனால் என் தந்தையர் உடலே நான். ஆகவே இவர்களுடன் நின்று இவர்களுடன் மடிவதே என் கடன் என்று கொண்டேன். என் உள்ளத்தில் வாழும் தெய்வம் என்னை அறியும். எங்கு நின்று மடிந்தாலும் என்னை அது ஏற்கும் என்று சொல்லிக்கொண்டேன்.” நீண்ட சொல்லாடலால் உணர்வுகள் சிதறிப்பரவ அவன் தன்னை மீட்டு யாதவ குடித்தலைவர்களை நோக்கி “நன்று, இந்தப் போரில் இளைய யாதவரை கைவிட்டு நாம் இவரை ஏற்றது இதன்பொருட்டுதானா என முடிவெடுக்கவேண்டிய பொழுது இது” என்றான்.

“என்ன முடிவெடுக்கப் போகிறீர்கள்?” என்று கிருதவர்மன் இகழ்ச்சிச்சிரிப்புடன் கேட்டான். “படைதுறந்து மறுபக்கம் சென்று சேரப்போகிறீர்களா? அதற்கு கௌரவர்கள் ஒப்பமாட்டார்கள். படைதுறப்போரை சிறைப்பிடித்து கொல்ல கௌரவருக்கு உரிமை உண்டு.” அவன் சிரிப்பு மேலெழுந்தது. “சரி, வேண்டுமென்றால் நான் ஓர் உறுதியை அளிக்கிறேன். நீங்கள் கௌரவர்களை உதறி பாண்டவர்களிடம் சென்று சேர்வதாக இருந்தால் துரியோதனர் அதற்கு ஒப்புதல் அளிக்க நான் ஆணைபெற்றுத்தருகிறேன். செல்க!” அவர்களை மாறிமாறி நோக்கி “என்ன முடிவு கொள்ளப்போகிறீர்கள்?” என்றான்.

சேகிதானன் யாதவ குடித்தலைவர்களிடம் “இனி என்ன எண்ணவேண்டியிருக்கிறது? இங்கே வீண்போர் செய்து மடிவதைவிட நம் குடித்தலைவர் பொருட்டு போரிடுவோம். இவர்கள் நம்மை சிறைபிடிப்பார்களென்றாலும் நம் முடிவென்ன என்று அறிவித்துவிட்டுச் செல்லவே எழுவோம். இப்போது நாம் செய்யவேண்டியது அதுவே” என்றான். கிருதவர்மன் “நீங்கள் சென்றால் அவர் உங்களை ஏற்கவேண்டுமென்பதில்லை. அஸ்தினபுரியிலிருந்து கால்பொடி தட்டி கிளம்பிய கணமே மீளவியலாதபடி ஒவ்வொன்றும் முற்றமைந்துவிட்டன” என்றான்.

உளஎழுச்சியுடன் முன்னால் வந்து விழிகள் மின்ன “அவர் கனிவார். நாம் அவருடைய குடிகள். தந்தை மைந்தரை கைவிடமாட்டார். நம்மை அவர் ஏற்பாரா ஒறுப்பாரா என எண்ணுவதும் பிழை. நாம் செய்வதில் உகந்தது சென்று அடிபணிவதே” என்றான் சேகிதானன். கிருதவர்மன் இளமையின் விசையை அவனிடம் கண்டு அகம்வியந்தான். முகத்தில் ஏளனப் புன்னகை நிலைக்க “எனில் செல்க... நானோ கௌரவர்களோ ஒரு தடையும் சொல்லப்போவதில்லை” என்றான். “ஆம், கிளம்புகிறோம். இப்போதே கிளம்புகிறோம். தாதையரே, மூத்தவர்களே, இங்கிருந்தே கிளம்புவோம்” என்று சேகிதானன் கூவினான்.

போஜர் குலத்தலைவர் சுஃப்ரர் “ஆனால் நமது வஞ்சினங்கள் அவ்வண்ணமே இன்றும் நீடிக்கின்றன” என்றார். குங்குரர்களின் தலைவர் சுதமர் “எங்கள் குடிமூத்தார் வாகுகர் கழுவிலேற்றப்பட்டபோது நாங்கள் எடுத்த சூளுரை ஒன்றுண்டு... அது தெய்வங்களையும் மூதாதையரையும் முன்நிறுத்தி கொண்ட நோன்பு” என்றார். போஜர் குலத்தலைவர் பிரபாகரர் “எங்கள் தாதை சீர்ஷரையும் கழுவிலேற்றினார் அவர். அந்தக் கழுவை நாங்கள் கொண்டுசென்று எங்கள் கன்றுமேயும் காட்டில் நிறுத்தி தெய்வமென பலியிட்டு வணங்குகிறோம்” என்றார்.

குரல்கள் ஆங்காங்கே எழுந்தன. “வாகுகரின் குருதி உலராமல் நின்றுள்ளது. சரபரும் கூர்மரும் இன்னமும் விண்ணேகவில்லை” என்றார் ஒருவர். கிருதவர்மன் நகைத்து “சரபரும் கூர்மருமா? நன்று, எதிரிக்கு தன் படையை ஒற்றுக்கொடுத்தவர்கள்... அவர் அவர்களை மட்டுமே கழுவேற்றினார். நூல்நெறிகளின்படி அக்குடியின் அத்தனைபேரையும் அழித்து, எழுகுருத்தும் விதையும்கூட எஞ்சாமல் ஆக்கிவிட்டிருக்கவேண்டும். நூல்நெறி கற்ற இளைய யாதவர் அரசருக்கு ஒவ்வாத

இரக்கத்தையும் சற்றே கொண்டுவிட்டார். ஆகவேதான் இக்குரல்கள் எழுகின்றன” என்றான்.

“எங்கள் குருதியை விழைகிறாயா நீ? இழிமகனே!” என்று முதியவரான விருஷ்ணிகுலத்து சதகர்ணர் கூவினார். கிருதவர்மன் அவர் விழிகளை நோக்கி “ஆம், உங்கள் குருதியை எதிர்பார்க்கிறேன். நீங்கள் முற்றழியவேண்டுமென்பதே ஊழ். இல்லையென்றால் உங்கள் குலத்தில் முலைப்பால் உலரா வாயுடன் குழவியர் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள். கைகொண்டு மெய் பொத்தி உங்கள் வளைகளுக்குள் ஒண்டியிருக்கும் கீழ்மை உங்களில் கூடியிருக்காது” என்றான்.

“கொல்லுங்கள் அவனை... நம்மை அழிக்க நினைக்கும் கீழ்க்குடியின நரி... கொல்க!” என்றார் குங்குரரான குவலயர். கிருதவர்மன் “கொல்லுங்கள் பார்ப்போம்... உங்களுக்கு உறுதிசொல்கிறேன். என் வாளை உருவமாட்டேன். துணிவிருப்போர் கொல்லுங்கள்” என்றான். விருஷ்ணிகுலத்தவராகிய சூரியர் “அஸ்தினபுரியின் படைத்தலைவர்களில் ஒருவர் நீர். உம்மை கொன்றால் எங்களை முற்றாக கொன்றழிப்பார் துரியோதனர்” என்றார். கிருதவர்மன் ஏளனம் நிறைந்த முகத்துடன் வெறுமனே நோக்கி நின்றான்.

“இனியும் என்ன தயக்கம்? நாம் இப்போதே கிளம்புவோம்” என்றான் சேகிதானன். பிரபாகரர் “இவருக்காக நாங்கள் இங்கே படைக்கு வரவில்லை. நமது சொல் கௌரவப் பேரரசருடன்தான். அதை போருக்குப் பின் பேசுவோம்” என்றார். சேகிதானன் “என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? நாம் அரசுசூழ்தலைப் பேச இங்கு நிற்கவில்லை. அதற்கு நமக்கு இனி வாய்ப்பே இல்லை. நாம் இப்போதே கிளம்புவோம். நாம் செய்யவேண்டியது அதுமட்டுமே” என்றான். போஜர் குலத்தலைவர் சுஃப்ரர் “நாம் குடித்தலைவர்கள். எந்நிலையிலும் நம் கோல் தாழவேண்டியதில்லை” என்றார்.

சேகிதானன் எரிச்சலுடன் “இனியும் இந்தத் தன்முனைப்பு எதற்கு? நாம் எவரென்று இன்று நன்கறிந்துவிட்டோம். இதுவே இறுதித் தருணம்... இதை தவறவிட்டால் நம் குடிவழியினர் பழிக்கும் பேரழிவை ஈட்டிக்கொள்வோம்” என்றான். ஹேகய குலத்தலைவர் மூஷிகர் “நாம் அவருக்கு ஒரு தூது அனுப்பலாம்” என்றார். “நமது எண்ணங்களை அவரிடம் சொல்வோம். நாம் சொல்வனவற்றை அவர் ஏற்றுக்கொண்டு சொல்லளித்தால் அவரை ஏற்றுக்கொள்வோம்.” சேகிதானன் சலிப்புடன் பற்களைக் கடித்து தலையை அசைத்தான். “அவர் செய்த பிழைகளை உணர்ந்துகொண்டார் என ஒரு சொல் நம் அவையில் உரைத்தாரென்றால் தடையில்லை” என்றார் பிரபாகரர்.

கிருதவர்மன் சேகிதானனிடம் திரும்பி “அறிக, இவர்கள் தங்கள் வெற்றாணவத்தால் போருக்கெழுந்தவர்கள்! ஆணவம் விழிமறைக்க இவர்களால் இளைய யாதவரை நோக்க இயலவில்லை” என்றான். அவன் முகத்தில் புன்னகை மறைந்தது. “ஆனால் துயிலிலும் விழிப்பிலும் அவரையே எண்ணிக்கொண்டிருந்தவன் நான். பகைமையும் ஒரு தவமே. வெறுப்பினூடாக என்னை முழுதளித்தேன். அறிந்தறிந்து அவரென்றே நானும் ஆனேன். என் உடலை அப்பாலிருந்து காண்பவர்கள் அவரோ என ஐயுறுவதுண்டு. என் குரலும் சொல்லும் அவர்போலவே என பலர் சொன்னதுண்டு. ஒருவரை முழுதறிய அவரே என்றாவதே ஒரே வழி” என்றான்.

சேகிதானன் திகைப்புடன் நோக்கினான். “இந்த வீணர் உடனிருந்து வணங்கியும் அறியாதவர்கள். நான் அகன்றிருந்து அணுகியவன். இந்தப் போர் எங்கு எவ்வண்ணம் முடியுமென்று இன்று நான் நன்கறிவேன். ஆயினும் இதை நான் இயற்றியாகவேண்டும். என் நண்பன் சததன்வாவுக்கு நான் அளித்த சொல் அது. என்

சொல்லை நான் மீறக்கூடாது.” சேகிதானனின் தோளில் கைவைத்து கிருதவர்மன் புன்னகைத்தான். “செல்க, இளைஞரே! உமது உள்ளம் ஆணையிடுவதை செய்க! இந்தக் களத்தில் ஒவ்வொருவரும் அவர்கள் அகம் நாடுவதை தயங்காது செய்யவேண்டும். அவர்கள் எவரோ அவராக நின்றிருக்கவேண்டும். ஏனென்றால் நாளை என்ற ஒன்று இங்கே இல்லை. செல்க!”

சேகிதானன் “நான்…” என்றான். கிருதவர்மன் அவன் தோளை அழுத்தி “எவராயினும் தன் குடியை, குலத்தை, உறவை, கற்றவற்றை கடந்துதான் எய்தவேண்டியதை சென்றடைய இயலும். உமது உளம் எனக்கு தெரிகிறது” என்றான். சேகிதானன் “ஆம்” என்றான். பெருமூச்சுடன் “இதுவே தருணம் என என் அகத்தே உணர்கிறேன்” என்றான். பிரபாகரர் “என்ன செய்யப்போகிறாய்? தனியாகக் கிளம்பி மறுபக்கம் செல்லப்போகிறாயா?” என்றார்.

“ஆம், எண்ணி எண்ணி இத்தனைநாள் என்னுள் எரிந்துகொண்டிருந்தேன். இனியில்லை. நான் செல்லத்தான் போகிறேன்” என்றான். “நீ குலமிலியாவாய்… எங்கள் அனைவரின் பழிச்சொல்லும் பெறுவாய்” என்றார் பிரபாகரர். “நான் இதுவரை கொண்டிருந்த அனைத்தையும் இங்கே துறக்கிறேன். என் பெயரையும் நான் அவர்மேல் கொண்டிருக்கும் பணிவையும் மட்டுமே சுமந்து அங்கே செல்கிறேன்” என்றான் சேகிதானன்.

யாதவர்கள் குழம்பிக்கலந்த முகங்களுடன் நிற்க சேகிதானன் தன் உடைவாளையும் குலமுத்திரை பொறித்த தாமிரவளையத்தையும் கீழே வைத்துவிட்டு அவர்களை வணங்கி கிளம்பினான். கிருதவர்மன் தன் கணையாழியை உருவி அவனிடம் அளித்து “இக்கணையாழி உடனிருக்கட்டும், உம்மை எவரும் தடுக்கமாட்டார்கள். எவரேனும் தடுத்தால் அரசாணை என்று சொல்க!” என்றான். சேகிதானன் அதை வாங்கிக்கொண்டான். “அங்கு சென்ற பின் இக்கணையாழியை அவரிடம் அளியும்” என்றபோது கிருதவர்மன் நோக்கு திருப்பியிருந்தான். “நான் என்ன சொல்லவேண்டும்?” என்றான் சேகிதானன். “ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. நான் சொல்லி அவர் அறிய ஒன்றுமில்லை” என்றான் கிருதவர்மன்.

சேகிதானன் யாதவர்தலைவர்களை திரும்பிப்பார்க்காமல் நடந்தான். அவனை நோக்கியபடி கிருதவர்மன் சென்றான். சேகிதானன் செல்வதை நோக்கி நின்றபின் புரவியிலேறிக்கொண்டான். தளர்நடையில் புரவி செல்ல தலை நிமிர்ந்து தொலைவில் நிலைத்த விழிகளுடன் அமர்ந்திருந்தான். அஸ்வத்தாமனின் குடில்முற்றத்தை அடைந்தபோதுதான் அங்கே செல்லும் விழைவை புரவிக்கு உடலே உணர்த்தியிருப்பதை உணர்ந்தான். அஸ்வத்தாமன் கவசங்கள் அணிந்துகொண்டிருந்தான். கிருதவர்மன் இறங்கி அவன் அருகே சென்று அமர்ந்தான்.

“யாதவரின் கவசங்களை இங்கே கொண்டுவரச் சொல்க!” என்றான் அஸ்வத்தாமன். ஆணையை முழவு ஒலியாக்கி காற்றில் செலுத்தியது. அஸ்வத்தாமன் அவன் ஏதேனும் சொல்வான் என எதிர்பார்த்தபின் “யாதவர்கள் அஞ்சியிருக்கிறார்களா?” என்றான். “ஆம், அவர்களுக்கு பெரும்போர் இத்தகையது என்று தெரியாது” என்றான் கிருதவர்மன். “இங்குள எவருக்குமே தெரிந்திருக்கவில்லை… இத்தகைய பெரும்போர் பாரதவர்ஷத்தில் முன்பு நிகழ்ந்ததுமில்லை” என்றான் அஸ்வத்தாமன். கிருதவர்மன் “அவர்கள் போரொழிய விழைகிறார்கள். அதன்பொருட்டு இளைய யாதவரிடம் பேச எண்ணுகிறார்கள்” என்றான்.

அஸ்வத்தாமன் புன்னகை செய்தான். “ஆனால் தங்கள் ஆணவத்தை கைவிடவும் அவர்களால் இயலவில்லை” என்றான் கிருதவர்மன். “எத்தனை எளிய மாந்தர் என்று

என் உள்ளம் எண்ணி எண்ணி வியக்கிறது.” அஸ்வத்தாமன் “களிறுகளை எடைமிக்க சங்கிலிகளால் கட்டிப்பழக்கிய பின்னர் வெறுமனே சங்கிலி ஓசையை மட்டுமே காட்டிவிட்டு சென்றுவிடுவதுண்டு. அவை கட்டப்பட்டுவிட்டன என எண்ணி கந்தின் அருகிலேயே நின்றிருக்கும்” என்றான். அவன் சொல்வதென்ன என்று கிருதவர்மன் உள்ளம் கொள்ளவில்லை. “ஆனால் அஞ்சியோ சினம்கொண்டோ வலியாலோ அலறியபடி விலகிற்று என்றால் களிறு அங்கே கட்டு இல்லை என்று கண்டுகொள்ளும். மானுடர் அப்போதும் கற்றுக்கொள்வதில்லை” என்று அஸ்வத்தாமன் மீண்டும் சொன்னான்.

கிருதவர்மன் மீண்டும் “எளிய மானுடர்…” என்றான். “மிக மிக எளியவர்கள். இத்தனை எளிய உயிர்களை ஏன் படைத்தன தெய்வங்கள்? ஏன் இரக்கமில்லாது இவற்றுடன் ஆடுகின்றன?” அஸ்வத்தாமன் நகைத்து “அதற்கு மாற்றாக எளிய மானுடர் தங்கள் ஆணவத்தையும் சிறுமையையும் கொண்டு தெய்வங்களை பழிதீர்க்கிறார்கள்” என்றான். கிருதவர்மன் அவன் சொன்ன அனைத்தையும் ஒரே கணத்தில் புரிந்துகொண்டு நிமிர்ந்து நோக்கினான்.

கவசங்களுடன் எழுந்துகொண்ட அஸ்வத்தாமன் கைகளை நீட்டி மடித்து அவற்றை சீரமைத்தான். அக்கவசங்களுக்குள் தன் உடலை நன்கு அமைத்துக்கொள்பவனைப்போல. தொலைவில் புரவியில் தன் கவசங்கள் வருவதை கிருதவர்மன் கண்டான். தன்னைப்போன்ற பிறிதொருவனை துண்டுகளாக கொண்டுவருவதுபோல் தோன்ற அவன் புன்னகை செய்தான்.

கௌரவர்களின் யானைப்படை பன்னிரண்டாவது பிரிவின் முகப்பில் சசக குலத்து யானைவீரனாகிய கம்ரன் தன் படையின் தலைப்பட்டம் ஏந்திச்சென்ற சுபகம் எனும் முதுகளிற்றின்மீது அமர்ந்திருந்தான். சுபகம் போர்க்களங்களில் நீடுநாள் பட்டறிவு கொண்டிருந்தது. எனவே படைநிரை அமைந்ததுமே முற்றிலும் அமைதிகொண்டு செவிகளை வீசியபடி தன்னுள் பிறிதொரு உடல் ததும்புவதுபோல் மெல்ல அசைந்து நின்றது. அதன் உடலிலிருந்த கவசங்கள் அவ்வசைவுகளால் ஒன்றுடன் ஒன்று மெல்ல உரசிக்கொண்டு அலைமேல் நின்றிருக்கும் படகில் வடங்களும் சுக்கானும் ஒலிப்பதுபோல மெல்லிய ஓசையை எழுப்பிக்கொண்டிருந்தன.

கம்ரன் தனக்கு ஆணை வருவதற்காக விழிசெவி கூர்ந்து காத்து நின்றான். அவன் அன்று காலை சற்று பொறுமை இழந்திருந்தான். அந்தப் பொறுமையிழப்பு அவனை பதற்றம்கொள்ள வைத்தது. பாகன் பொறுமையிழந்தால் யானையும் அதை பெற்றுக்கொள்ளும். பொறுமையிழந்த யானை செய்வதறியாது திகைக்கத் தொடங்கும். அதன்பின் அதை யானைவீரன் ஆள முடியாது. “யானைமேல் அமர்ந்திருக்கையில் ஒன்று உணர்க, நீங்கள் பேருருவம் கொண்டுவிட்டீர்கள்! அவ்வுருவுக்குரிய உள்ளத்தை அடைக! மானுட உள்ளம் கொண்ட யானை மூங்கில்கழையால் செலுத்தப்படும் பெருங்கலம் போன்றது. கழை உடையும், கலம் நிலையழிந்து திசைமீறும்” என்பது அவன் குடிமூத்தாரும் ஆசிரியருமான குபேரரின் கூற்று.

சுபகம் எப்போதுமே ஆணைகளை எதிர்பார்ப்பதில்லை. அவன் எண்ணமென்று அது ஒரு கணத்திற்கு முன்னரே அறிந்திருந்தது. அவன் உடலசைவினூடாக அவன் உள்ளத்துடன் தொடர்பிலிருந்தது. பிறயானைகள் அதை அஞ்சின. காஞ்சனம்

என்னும் முதிர்ந்த பெண்யானையால் ஆளப்பட்டுவந்த யானைக்கொட்டிலில் அது முற்றிலும் தனித்திருந்தது. மிக அரிதாகவே அதன் குரல் கொட்டிலில் எழுந்தது. மிகத்தாழ்ந்த கார்வையுடன் அது ஒற்றைச் சொல்லுரைக்க பிற யானைகள் அதை அஞ்சியதுபோல் தலை நிலைக்க, செவிகோட்டி, துதிக்கை சரித்து ஏற்றுக்கொண்டன.

“தன் மேல் அமர்ந்திருப்பவனை முழுதேற்றுக்கொண்ட யானை பிற யானைகளைவிட ஆற்றல்மிக்கது. அவன் உள்ளத்தையும் தன் உள்ளத்துடன் சேர்த்துக்கொள்கிறது அது.மானுடரின் வஞ்சங்கள் விழைவுகள் அனைத்தையும் யானை பெற்றுக்கொள்கிறது. அறிக, அதனால் அது மானுட உள்ளத்தை அடைகிறதென்று பொருளில்லை!. எந்நிலையிலும் மானுடனின் அச்சத்தையும் சிறுமையையும் யானை பெற்றுக்கொள்வதில்லை” என்று குபேரர் சொன்னார்.

அவன் அதை அறிந்திருந்தான். அவன் அறியாத பிறிதொன்று அதனுள் வாழ்வதை அதை ஓட்டிக்கொண்டு காட்டுக்குள் செல்லும்போதெல்லாம் உணர்ந்தான். காட்டுக்குள் நுழைவதுவரை அது அவனறிந்த யானையாக இருக்கும். புதர்களுக்குள் மூழ்கி ஊடுருவிச் செல்கையில் மெல்ல மெல்ல உருமாறிக்கொண்டே இருக்கும். ஒருகட்டத்தில் அவன் அதன் மத்தகத்தின் மீதிருந்து இறங்கிவிடுவான். பின்னர் தன் துரட்டியும் குத்துக்கோலுமாக பின்னகர்ந்துவிடுவான். காட்டுக்குள் செல்லும் சுபகம் ஓரிருநாட்களுக்குப்பின் நினைவுமீண்டதுபோல் திரும்பிவரும். உடலெங்கும் மண்மூடி, சிறுசெடிகள் முளைத்திருக்க, குன்றுபோலிருக்கும்.

காட்டுக்கு வெளியே இருக்கும் சிறுகுடிலில் அவன் அதற்காக காத்திருப்பான். சுபகம் காட்டின் விளிம்பில் வந்து நின்றிருக்கும் காட்சிக்காக அவன் விழிகள் தேடிக்கொண்டே இருக்கும். பெரும்பாலும் புலர்காலையின் முதல்வெளிச்சத்தில் அது தொங்கவிடப்பட்ட பட்டம் போல மெல்ல அசைந்தபடி நின்றிருப்பதை காண்பான். அது இரவில் எப்போதோ வந்திருக்கும். ஆனால் ஓசையெழுப்புவதோ வரவை தெரிவிப்பதோ இல்லை. அவன் உள்ளத்தில் முதலில் எழுவது அச்சம்தான். சென்ற யானைதான் திரும்ப வந்திருக்கிறதா? அதற்கு அது சுபகம் என்பது நினைவிருக்கிறதா?

குடில்வாயிலில் நின்று அவன் அதை நோக்கிக்கொண்டிருப்பான். அது அங்கிருந்து அவனை நோக்கியபடி அசைந்துகொண்டிருக்கும். மெல்ல அவன் அதை நோக்கி நடப்பான். வழியில் பலமுறை நின்று அதன் அசைவுகளை விழிகூர்வான். அது செவிகோட்டி ஒலிகூர்ந்தும் துதிக்கை நீட்டி மணம்பிடித்தும் அவனை அறியமுயலும். உறுமலோசை எழுந்தால், தலைகுலுக்கல் நிகழ்ந்தால் அவன் நின்றுவிடுவான். மீண்டும் நெடுநேரம் கடந்தே அதை நோக்கி செல்வான். அதை அணுகி கையெட்டும் தொலைவில் நின்று “மைந்தா!” என்று அழைப்பான். “என் தந்தை அல்லவா? என் தெய்வம் அல்லவா? நான் கம்ரன். உன் அணுக்கன்” மெல்லியகுரலில் திரும்பத்திரும்ப அதை சொல்லிக்கொண்டிருப்பான்.

பின்னர் கைநீட்டியபடி அடிமேல் அடி எண்ணி வைத்து அதை அணுகுவான். ஒருமுறை அவன் தொடுவதற்கு கைநீட்டியபோது சுபகம் அமறியது. அவன் அஞ்சி பின்னடைந்து மீண்டும் நெடும்பொழுது கடந்தே அதை அணுகினான். அதை மெல்ல தொட்டுவிட்டால் அனைத்தும் முடிந்துவிட்டதென்று பொருள். அறியவொண்ணா இருள்குவையென நின்றிருக்கும் அது யானையென்று ஆகி சுபகம் என்று பெயர்சூடிவிட்டது. “காலெடு யானை” என்று அவன் சொல்வான். “யானை காலெடு!” என பலமுறை சொன்னபின் அது காலை தூக்கும். செவிபற்றி ஏறி மத்தகத்தின் மேல் அமர்ந்துகொள்ளும்போது மண் கால்கீழே ஆழத்திலெங்கோ இருக்கும்.

யானைக்குள் எல்லைகளும் கட்டுகளும் அற்ற காடு ஒன்று குடிகொள்கிறது. அனைத்துக் கல்விகளும் சொற்களும் வெளியே இருந்து அதற்கு அளிக்கப்படுபவை. உள்ளே யானை மிகமிக தனித்தது. மானுடர் எவரையுமே அடையாளம் காணும் ஆழம் அற்றது. யானை போர்க்களத்தில் தன் படை நோக்கி திரும்புதலும், தன் இணையானையை குத்திக் கவிழ்ப்பதும் எப்போதும் நிகழ்வதுதான். குபேரர் சொன்னார் "எந்நிலையிலும் யானையின் துதிக்கை காக்கப்படவேண்டும். அதனுடலில் மிக நுண்ணிய உறுப்பு துதிக்கை. தேக்கு மரங்களை பிழுதெடுக்கவும் தரையிலிருந்து பயறுமணி ஒன்றை பொறுக்கி எடுக்கவும் ஆற்றல் கொண்டது. மானுடருக்குள் எண்ணம்போல யானை முகத்தில் அது திகழ்கிறது. ஒரு கணமும் ஓயாதது, எப்போதும் எதையோ தேடுவது. யானையின் துதிக்கை புண்பட்டால் அது அனைத்தையும் உதறி அக்கணமே காட்டுக்கு மீண்டுவிடுகிறது".

"அறிக! துதிக்கையால்தான் அது இவ்வுலகுடன் தொடர்பு கொண்டுள்ளது. தொட்டறிகிறது. முகர்ந்துணர்கிறது. மூச்சுவிடுகிறது. உண்கிறது. உரையாடுகிறது. துதிக்கை இழந்த யானை இவ்வுலகுடன் அதை பிணைக்கும் அனைத்தும் துணிக்கப்பட்ட ஒன்று. அதன் ஆழத்து தெய்வங்களால் அது பின்னர் ஆளப்படுகின்றது. அதன் செவியசைவில், வால்நெளிவில், கால்வைப்பில் தங்கள் திமிறலை எப்போதும் வெளிப்படுத்திக்கொண்டிருப்பவை அத்தெய்வங்கள். இளையோரே, அத்தெய்வங்கள் காட்டிலிருந்து பிடுங்கி கொண்டுவரப்பட்டவை. நகர்களில் பலியும் கொடையும் பெறாதவை. யானையுடலெனும் இருளறைக்குள் வாயில்கள் இன்றி அடைபட்டவை. அவை மானுடர் மேல் கொண்டிருக்கும் வஞ்சம் அளவிறந்தது" என்றார் குபேரர்.

யானையின் துதிக்கைக்கென அமைந்த கவசம் ஒன்றின்கீழ் இன்னொன்றென அமைந்த அரைவளையங்களின் அடுக்குகளால் ஆனது. பெருமுதலையொன்றின் எலும்புச்செதில் வால்போல. யானையின் துதிக்கை நிலையற்று சுழன்றுகொண்டிருக்க, நெரிபடும் பற்கள்போல் ஓசையெழுப்பி அக்கவசம் முனகிக்கொண்டிருந்தது. அவன் முன்நடத்திய நூற்றெட்டு யானைகளின் கவசஒலிகளாலும் ஒளியலைகளாலும் அந்தப் படை கொதித்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அல்லது கண்ணுக்குத் தெரியாத பேரெடை ஒன்று வந்து அமைய அழுந்தி நொறுங்கி மண்ணிலமர்ந்துகொண்டிருப்பதுபோல.

புலரியின் கொம்போசை எழுந்ததும் தொடர்ந்து போர்முரசுகள் முழங்கத் தொடங்கின. கம்ரன் தன்னுடலெங்கும் எழுந்த மெல்லிய விதிர்ப்பில் பற்கள் கூச, கண்கள் ஒளி மங்கி நீர் கொள்ள, உடலை இறுக்கி பின்பு தளர்த்தினான். ஒவ்வொரு முறையும் போர்முரசு அத்தகைய உடலுணர்வை அவனிடம் ஏற்படுத்தியது. உடலிலிருந்து அரிதான ஒன்று வெளியேறுவதுபோல. பெண்ணுறவின் உச்சம்போல. அது இறப்பின் தருணமா? உயிர் அகல்வதும் அவ்வாறுதான் இருக்குமோ? ஒவ்வொரு நாளும் இறந்தபின்புதான் போர் தொடங்குகிறதா? அவனுக்கான ஆணையை தொலைவில் கொடி சுழித்து அசைந்து அளித்தது. கைகளைத் தூக்கி அசைத்து தன் படைப்பிரிவுக்கு "முன்னேறுக! முன்னேறுக!" என ஆணையிட்டபடி அவன் படைமுகப்பில் ஊர்ந்தான்.

சுபகம் தன் துதிக்கையைத் தூக்கி பிளிறியபடி அதன் வலப்பக்கம் கீழே கிடந்த தோதகத்தி அடிமரத்தில் இரும்புப் பூணிட்டு இறுக்கி உருவாக்கப்பட்ட நீண்ட தண்டை எடுத்துக்கொண்டு முன்னால் சென்றது. அலையிலெழும் கட்டுமரம்போல் தண்டு முன்னால் செல்ல "தாக்குக! எதிரிப்படைகளை பிளந்து செல்க!" என்று ஆணையிட்டபடி கம்ரன் முன்னால் சென்றான். அவனைச் சூழ்ந்து அவனுடைய

படையின் நூற்றெட்டு யானைகளும் தண்டுகளேந்தி எடைக்கு உடல்குறுக்கி விரைவடி வைத்து முன்னால் சென்றன. சுபகம் தன் தண்டால் எதிரே வந்த தேர்நிரையை தாக்கியது. அதன் பெருவிசையால் தேர்கள் உடைந்தன. பொருளற்றுப்போன நுகங்களுடன் புரவிகள் திகைத்து முட்டிச்சுழித்தன. கனைப்புகளும் அலறல்களுமாக அவன் சூழல் கொந்தளிக்கலாயிற்று.

தண்டை பின்னிழுத்து மீண்டும் பிளிறியபடி விசைகூட்டி தாக்கி முன்சென்றது சுபகம். இருபுறமும் யானைகள் தண்டுகளால் தாக்கி தேர்ச்சூழ்கையை உடைத்தன. எதிரில் சிகண்டியின் கொடி தெரிந்தது. இடப்பக்கம் பாஞ்சாலத்தின் வில்லும் வலப்பக்கம் மண்டையோடும் பொறிக்கப்பட்ட சிவந்த கொடி அனலென படபடத்தது. அங்கிருந்து அவருடைய ஆணையை கொம்புகளும் முரசுகளும் அறிவித்தன. “முன்செல்க! முன்செல்க!” என்று கூவியபடி கம்ரன் தன் படையை எடுத்துச்சென்றான். உடல் அனைத்து பதற்றங்களையும் இழந்து குளிர்ந்து நீரடியில் பாறையென ஆயிற்று. கண்கள் பலவாகப் பெருகி இருபுறமும் நிறைந்தன. கவசஇரும்புகள் மின்ன தெளிநீர் அலையெழுந்து செல்வதுபோல் எதிரிப்படையை சென்று முட்டிய யானை நிரையின் எடையை ஒட்டுமொத்தமாகவும் ஒவ்வொன்றாகவும் கணக்கிட்டு கைகளும் வாய்களும் ஆணை பிறப்பித்தன. கீழே தாழ்வான வண்டியில் அமர்ந்து அவன் கைக்கும் வாய்க்குமென விழிகூர்ந்து வந்துகொண்டிருந்த கொம்பூதிகள் அவன் ஆணைகளை ஓசையாக்கி காற்றில் நிறைத்தனர்.

தான் சொல்வது தனக்கே திரும்ப வருவதை அவன் கேட்டான், மானுடக்குரலை தெய்வங்கள் எதிரொலிப்பதுபோல. அல்லது அவன் எண்ணுவதை அவை முன்னரே அறிந்திருக்கின்றன. அவை நுண்வடிவில் ஆணையிட அவற்றையே அவன் சொல்லென்றாக்கினான். விண் வளைவில் மோதி அது தேவர் மொழியில் எதிரொலிக்கிறது. இடியின் மொழி. புயல்காற்றின் மொழி. தன் சிறு கையசைவு ஒன்று வானிழியும் ஆணை என்று மாறும்போது முதல் நாள் எழுந்த உவகையை அவன் நினைவுகூர்ந்தான். விண்வாழும் பேருருவ இருப்பொன்று தன்னை அறிகிறதென்று முதலிலும், தானே ஒரு பேருருவ இருப்பென்று ஆகிவிட்டதாக மறுகணமும் தோன்றியது.

அப்பேருரு அவனுள் எப்போதும் ஒரு யானை வடிவிலேயே இருந்தது. ஆறு வயதில் அவனை தந்தை யானைக்கொட்டிலுக்கு பணிக்கு அழைத்துச் சென்றார். கைக்குழந்தையாக இருக்கையிலேயே அன்னையுடனும் தந்தையுடனும் அவன் வந்த கொட்டில். மானுடரை விடவும் அவன் கூர்ந்து நோக்கியது யானைகளைத்தான். அன்னை தந்தையெனும் சொற்களுக்கு முன்னதாகவே யானை எனும் சொல்லை அவனுள் சொல்லத் தொடங்கிவிட்டான். மாதங்கரின் குலத்தில் யானைகளைத்தான் மொழி முதலில் அறிகிறது. மிக எளிதாக சொல்லும்பொருட்டே அச்சொல் உருவாகியிருக்கிறது. இளமைந்தர் எவரேனும் அச்சொல்லை கண்டடைந்திருக்கலாம்.

அவனை தந்தை அழைத்துச்சென்று சுபகத்தின் அருகே நிறுத்தினார். அதன் கால் நகங்களிலெழுந்த அரக்கப்பெருஞ்சிரிப்பை பார்த்து அவன் திகைத்து ஒருகணம் பின்னடைந்தான். “அஞ்சுகிறான்!” என்று அன்னை நகைத்தாள். “யானைக்கு அணுக்கமாகி ஒருடலென அதனுடன் தன்னை இணைத்துக்கொள்ளும்போதுகூட இறுதிக்கணம் வரை பாகனிடம் எஞ்சுவது இந்த அச்சம். தன் ஆணைக்கிணங்கி தோழனென்றும் ஊர்தியென்றும் உடன்வரும் இவ்விலங்கு கனவுகளில் தெய்வமென்றும் கொலைவடிவென்றும் எழுந்து வந்துகொண்டிருக்கும் விந்தையை அவன் ஒருபோதும் கடக்க இயலாது” என்றார் தந்தை.

அவனை இரு தோள்களையும் பற்றித் தூக்கி சுபகத்தின் காதருகே கொண்டுசென்றார். “உன் பெயரை சொல்” என்றார். அவன் தந்தையை திரும்பிப்பார்த்தான். “சொல்! உன் பெயர் என்னவென்று சொல்!” என்றார். “கம்ரன்” என்று மிகத் தாழ்ந்த குரலில் அவன் சொன்னான். அன்னை “இன்னும் சற்று குரலெழுப்பு” என்றாள். தந்தை திரும்பி புன்னகைத்து “யானைக்கு முணுமுணுத்தாலே கேட்கும். பல தருணங்களில் நம்முள் எண்ணமென எழுவதே அதற்கு கேட்டுவிடும்” என்றார்.

அன்று யானையின் சாணியை அள்ளிக்கொண்டு சென்று குழியிடும் பணியை அவனுக்களித்தார். “யானைப்பிண்டத்தில் உழல்வதிலிருந்து தொடங்கு. அந்த மணம் அதற்கு தெரியும். அதனூடாகவே உன்னை அது ஏற்றுக்கொள்கிறது” என்றார். அன்று முதல்முறையாக அவன் அத்தனை அணுக்கத்தில் யானைச்சங்கிலியை பார்த்தான். மலைப்பாம்பொன்று சுருண்டு கிடப்பதைப் போன்றிருந்தது. அதில் கால் தட்டியபோதுதான் அங்கு அது இருப்பதை கண்டான். இரவில் வீசிய மண் புழுதியால் மண்குவியலென்றாகியிருந்தது. அவன் கால்பட்டு அது சற்றும் அசையவில்லை. எடைமிக்க இரும்புப் படைக்கலங்களை குவித்துப்போட்டதுபோல. அள்ளித் தூக்க முயன்றபோது ஒரு கண்ணியைக்கூட நகர்த்த முடியவில்லை.

தந்தை திரும்பிப்பார்த்து புன்னகைத்து “அதை எந்த மானுடராலும் அசைக்க இயலாது. யானை தன்னைத்தானே எடுத்து அதை பூட்டிக்கொள்ளும்” என்றார். அவன் விழிகளில் எழுந்த மாற்றத்தை பார்த்து “தன்னை நமக்கு அடிமையென அதுவே ஆக்கிக்கொள்கிறது” என்றார். “ஆனால் அச்சங்கிலி யானையால் உருவாக்கப்பட்டதல்ல. எந்த மனிதனாலும் உருவாக்கப்பட்டதல்ல. பல்லாயிரம் மானுடரின் உள்ளங்களை இணைக்கும் தெய்வம் ஒன்றால் உருவாக்கப்பட்டது. அத்தெய்வத்தையே மாதங்கி என நாம் வணங்குகிறோம். கொற்றவையின் நூற்றெட்டு உருத்தோற்றங்களில் ஒருத்தி. கைகளில் அங்குசமும் தாமரையும் கதாயுதமும் கோலும் கொண்டு யானைமேல் அமர்ந்து எழுந்தருள்பவள். அவளை வணங்குக!”

யானைப்படை பாண்டவர்களின் தேர்நிரையை உடைத்து உட்செல்ல அங்கிருந்து எழுந்த ஆணைகளால் தேர்கள் நீர் விலகுவதுபோல் உருமாறி இருபுறமும் அகன்றன. அவற்றுக்கு அப்பாலிருந்து விலகும் நீரிலிருந்து பாறைகள் எழுவதுபோல் பாண்டவர்களின் யானைப்படை எழுந்து வந்தது. தண்டுகளும் வீசுகதைகளும் ஏந்திய யானைகள் பிளிறியபடி விரைவடிகள் எடுத்து வைத்து தன் படை நோக்கி வருவதை கம்ரன் கண்டான். விசையில் அவை உருளைகள்போல் உடல் குறுக்கியிருந்தன. துதிக்கை சுருட்டி தலையை நிலம் நோக்கி தாழ்த்தி மத்தகத்தில் எழுந்த கூர்வேல்களும் கொம்புகளில் பொருத்தப்பட்ட நீள்வேல்களும் முனைமின்ன பிளிறியபடி வந்தன.

போர்க்களத்தில் யானை முரசுப்பரப்பில் மெல்ல கோலால் தடவுவது போன்ற ஓசையல்லா ஓசையுடன் மெல்ல உறுமி ஒன்றுடன் ஒன்று சொல் கோத்துக்கொள்ளும். அவ்வோசையின் திரள் முழக்கம் என ஆகும். அத்தனை ஓசைகளுக்கு நடுவிலும் அதை அவனால் தெளிந்து அடையாளம் காணமுடிந்தது. இருபத்தாறு ஆண்டுகளாக அவன் கேட்டுக்கொண்டிருக்கும் ஓசை. யானையின் எண்ணமே ஒலியென்றானதுபோல. ஒவ்வொரு தருணத்திலும் அது எழுப்பும் ஒலிமாறுபாடுகள் அவனுக்கு தெரியும். ஆயினும் முற்றிலும் அறியாத பிறிதொரு மொழியென்றே அது இருந்தது. நகரில் பிறந்து மானுடருள் வாழ்ந்து முதிர்ந்தாலும் யானைகள் அந்த மொழியை மானுடருக்கு அப்பால் கரந்து வைத்திருக்கின்றன.

சுபகத்தின் தண்டுடன் எதிரில் வந்த யானையின் தண்டு மோதியது. அதன் அதிர்வை அவன் உணர்ந்தான். இரு யானைகளும் பின்னகர்ந்து வெறியுடன் மத்தகங்களால் முட்டிக்கொண்டன. தண்டை கீழேவிட்டு துதிக்கையோடு துதிக்கை பிணைத்துக்கொண்டு ஒன்றையொன்று முட்டி முன்னும் பின்னும் நகர்ந்தன. உதறி பின்னகர்ந்து விசைகூட்டிப் பிளிறியபடி மீண்டும் மத்தகத்தால் ஒன்றையொன்று முட்டின. எதிரியானையின் மத்தகங்களில் பொருத்தப்பட்டிருந்த எடை மிக்க கூர்முனைகள் உடைந்து நசுங்கின. மீண்டுமொரு முறை சுபகம் பின்னகர்ந்து பாய்ந்து மத்தகத்தால் தாக்கியபோது அந்த யானை நின்று சற்றே அசைந்து பக்கவாட்டில் விழுந்தது. அதன் துதிக்கையை சுற்றிப் பற்றி வலக்காலைத் தூக்கி அதன் கழுத்தில் வைத்து ஒரு முறை இழுத்து கழுத்தை முறித்துவிட்டு சீற்றத்துடன் அடுத்த யானை நோக்கி சென்றது சுபகம்.

கீழே விழுந்து நான்கு கால்களும் மேலே தெரிய துடித்துக்கொண்டிருந்த அந்த யானையை அரைக்கணம் பார்த்து கம்ரன் தன் பார்வையை திருப்பிக்கொண்டான். கீழிருந்து வேல்களும் அம்புகளும் எழுந்து வந்துகொண்டிருந்தன. யானையின் மத்தகத்தின் மீது கவிழ்ந்து அதன் பாறைத் தோல்பரப்பை அணைப்பதுபோல் படுத்துக்கொண்டு அவன் அதற்கு ஆணைகளை இட்டான். சுபகம் ஆணைகளை விரும்புவதில்லை என்று அவன் அறிந்திருந்தான். அதற்கு இலக்கு அறிவிக்கப்பட்டபின் தன் உத்திகளையும் சூழ்ச்சிகளையும் அதுவே வகுத்துக்கொள்ளும். ஒவ்வொரு முறையும் எதிர்வந்த யானையை வீழ்த்தி அதை முற்றாக கழுத்தை முறித்த பின்னரே அது அடுத்த யானையை நோக்கி சென்றது.

வயிற்றில் மிதித்தோ கொம்புகளால் குத்தியோகூட யானைகளை யானையால் கொல்லமுடியும். ஆனால் அதற்கு சற்று பொழுதாகும். வீழ்ந்த யானையின் கழுத்து முறிக்கப்படுவதை பிற யானைகள் பார்க்கவேண்டுமென்று சுபகம் விரும்புகிறது. சீற்றத்துடன் கொம்பு குலுக்கி அது முன்வரும்போதே எதிரியானை அறியாது அச்சமடைந்து ஓரடி பின்னால் வைத்து பாகனின் ஆணைக்கேற்ப மீண்டும் விசை திரட்டி வருவதை அவன் கண்டான். அந்த அச்சத்தாலேயே ஓரிரு முட்டல்களுடன் அது சுபகத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறது. கருங்குவியலென விழுந்து எழுந்த வயிற்றிலிருந்து மூச்சு துதிக்கைக் குழாயினூடாக சீறி புழுதிபறக்க அமைய, செவிநிலைத்து வாயிலிருந்து குருதி வழிந்துறைய உடல்துறக்கிறது.

கரிய அலைக்கொந்தளிப்பாக சூழ்ந்து நடந்துகொண்டிருந்த யானைப்போரை அவன் கண்டான். யானைகள் கொப்புளங்கள் வெடித்தழிவதுபோல மறைந்துகொண்டிருந்தன. தனது யானைப்படையில் இருபது யானைகளுக்கு மேல் விழுந்துவிட்டதைக் கண்டு “விரியவேண்டாம், குவிந்து தாக்குக! கூர்கொண்டு தாக்குக! ஒவ்வொரு யானைக்குப் பின்னாலும் இன்னொரு யானை இருக்கவேண்டும்! வீழ்ந்த யானையை வரும் யானை நிரப்ப வேண்டும்! முன்செல்லும் யானைகளுக்கு முன் நம் அம்புகள் சென்று விழுந்து ஒரு வெளி உருவாகவேண்டும்!” என்று அவன் ஆணையிட்டான்.

சிகண்டியின் படைக்குப் பின்னால் நின்று நெடுவில்லவர்கள் எய்த அம்புகள் கம்ரனின் தலைக்கு மேல் எழுந்துசென்று அப்பால் யானைமேல் அமர்ந்திருந்த பாகன்களை வீழ்த்தின. யானைகளின் மத்தகங்களிலும் உடல்களிலும் அமைந்திருந்த கவசங்களை அம்பு சென்று அறைய அவை சிலிர்த்துக்கொண்டன. கவசங்களின் இடைவெளிகளில் அம்பு தைத்திறங்க அவை உடல் அதிர்ந்து நின்றவாறே பக்கவாட்டில் சரிந்து விழுந்தன. “யானைகளை முகம் திருப்பச் செய்யுங்கள்! முகம் திருப்புக! யானைகள் சிகண்டிக்கு நேர் முகம் நிற்கவேண்டும்!”

என்று அவன் ஆணையிட்டான். ஆனால் மிகவும் முன்னகர்ந்துவிட்டிருந்த அவன் படையால் பின்னால் வரவோ பக்கவாட்டில் திரும்பவோ இயலவில்லை.

அவன் யானைப்படைக்கு வலது பக்கமாக வந்துகொண்டிருந்த சிகண்டி ஒவ்வொரு அம்பிலும் ஒரு யானைப்பாகனையோ படைத்துணைவனையோ வீழ்த்திக்கொண்டிருந்தார். அவர் அம்புகள் பட்டு நான்கு யானைகள் வீழ்வதை கம்ரன் கண்டான். யானை தன் காதுகளை அசைக்கும் கணத்தில் ஒரு மின்னென தெரிந்து மறையும் அதன் நரம்புக்குழியை கணித்து அம்பு செலுத்துவது மானுடரால் இயல்வதா என அவன் அகம் வியந்தது. வானில் பறக்கும் பறவைகளின் சிறகுகளை மட்டுமே அரிந்து வீழ்த்தும் வில்லவர்களை அவன் கேள்விப்பட்டிருந்தான். அவன் முன் மேலும் மேலுமென யானைகள் விழுந்துகொண்டே இருந்தன. “செல்க! செல்க! அவரை நோக்கி செல்க!” என்றான். “அவர் அம்புகளுக்கு இடைகொடுக்காதீர்கள். அவருடைய களிற்றுநிரையை உடைத்து அழியுங்கள்.”

சுபகம் அவனது ஆணையை கேட்டதுபோல தண்டை எடுத்துக்கொண்டு பிளிறியபடி சிகண்டியை நோக்கி சென்றது. சிகண்டியைச் சூழ்ந்திருந்த வில்லவர்களின் அம்புகள் அவன் மேலும் சுபகத்தின் கவசங்களின் மேலும் அறைந்து விழுந்தன. எதிரில் வந்த இரண்டு யானைகளை அறைந்து தூக்கி அப்பால் வீசியது சுபகம். மூன்று தேர்களை தண்டுகளால் அறைந்து உடைத்தது. சிகண்டியை மிக அருகிலென கம்ரன் கண்டான். சுபகத்திற்கு ஆணையிடலாகாது என்பதை மறந்து “கொல்க! கொல்க! அவ்விழிமகனை இக்கணமே கொல்க!” என்று கூவினான். “ஆணிலியே… இன்று உன் இறுதிநாள்… என் களிற்றுக் காலடி உனக்கு!” என்றான்.

சிகண்டியின் கண்களில் சினமோ சீற்றமோ தெரியவில்லை. அவை மங்கலாக இரு ஒளிப்புள்ளிகள் போலிருந்தன. அவர் கைகள் அம்பெடுப்பதை, நாண் இறுகி இழுபடுவதை, வில் வளைந்து தெறிப்பதை, கணம் கணமென கம்ரன் கண்டான். அம்பு வந்து சுபகத்தின் கவசத்தை உடைத்து அதன் தோளில் ஆழ்ந்திறங்கியது. அவன் திகைத்து யானையின் மத்தகத்தை பற்றிக்கொண்டான். யானையின் உடல் முழுக்க ஓடிய நடுக்கை உணர்ந்தான். யானை சரிந்து நிலத்தில் விழுந்தது. அவன் அதில் காலூன்றி தாவி அப்பால் இறங்கினான். அக்கணமே சிகண்டியின் அம்பொன்று வந்து அவன் முன் மண்ணிலூன்றியது. அவன் பாய்ந்து இன்னொரு களிற்றை நோக்கி ஓடினான். அவனுக்குச் சுற்றும் உறுமும் அம்புகள் சென்றுகொண்டிருந்தன.

சுபகம் துதிக்கையை சுழற்றியபடி பாய்ந்தெழுந்து பிளிறியபடி உடலை உதறிக்கொண்டது. எதிரே வந்த களிறொன்றை மத்தகத்தால் முட்டி அது நிலையழிந்த கணத்தில் தூக்கிச் சுழற்றி அறைந்து அதன் பள்ளையை மிதித்து வாயில் குருதி பீறிட சிதைத்து அடுத்த யானையை முட்டியது. அதன் விசையாலேயே மத்தகம் பிளக்க சுழன்ற துதிக்கையிலிருந்து குருதி வளைந்து தெறிக்க அந்த யானை வீழ்ந்தது. அடுத்த யானை அஞ்சி குரலெழுப்பியபடி பின்னடைந்தது. சுபகம் எவரும் கணிக்கவியலா விரைவுடன் சிகண்டியின் தேரை அணுகி அதன் மேல் ஓங்கி அறைந்து உடைத்தது. தேர்த்தூணை பற்றித் தூக்கி அப்பாலிட அதில் கட்டப்பட்டிருந்த புரவிகள் கால்கள் பின்ன கனைத்தபடி ஒன்றன்மேல் ஒன்றென விழுந்தன. அதன் அடியில் பாகன் சிக்கிக்கொள்ள சுபகம் தேரைத் தூக்கிச் சுழற்றியது.

தேரிலிருந்து பாய்ந்திறங்கிய சிகண்டி வாளை உருவியபடி சுபகத்தை எதிர்கொண்டார். கம்ரன் சுபகத்தை நோக்கி ஓடினான். சுபகம் பிளிறி, துதிக்கை சுழற்றி, தலைகுலுக்கியபடி சிகண்டியை நோக்கி பாய்ந்தது. சிகண்டி விட்டிலென

பின்னால் தாவி அதன் அறையை தவிர்த்தார். துதிக்கைவீச்சு சென்று பட்ட தேர் ஆரம் முறிந்து கவிழ்ந்தது. காலால் புரவி ஒன்றை எற்றி எறிந்தபடி சுபகம் சிகண்டியை நோக்கி மீண்டும் பாய்ந்தது. தேர்த்தட்டு ஒன்றில் கால்வைத்து தாவி காற்றிலெழுந்த சிகண்டி தன் உடைவாளால் சுபகத்தின் துதிக்கையை ஓங்கி வெட்டினார். அவர் வாள் துதிக்கையின் கவசங்கள் நடுவே கடந்து தசையிலேயே பதிந்து நின்றது. வாளை விட்டுவிட்டு கீழே பாய்ந்து இரு தாவல்களில் தேர்களைக் கடந்து அவர் படைகளுக்குள் புகுந்துகொண்டார்.

துதிக்கையில் பதிந்த வாளுடன் அலறியபடி சுபகம் தன்னைத்தானே சுற்றிக்கொண்டது. தலையை உலுக்கியபடி அங்குமிங்கும் அலைமோதியது. துதிக்கை துண்டாகி விழ வாளும் உதிர்ந்தது. உடைந்த கலமென குருதிச்சேறு கொட்டும் வெட்டுவாயுடன் சுபகம் திரும்பி கௌரவப்படை மேல் பாய்ந்தது. அங்கிருந்த யானை ஒன்றின் வயிற்றில் தந்தங்களை குத்தி இறக்கி தூக்கி அப்பாலிட்டது. வயிறு கிழிந்து குடல்திரள் குருதியுடன் வெளிப்பெருக அந்த யானை நிலத்தில் கிடந்து துள்ளியது. இரு தேர்களை உதைத்து உடைத்து மேலும் தன் படைக்குள் புகுந்த சுபகம் இன்னொரு யானையை குத்தி கீழே தள்ளி அதன் மேல் மீண்டும் மீண்டும் தந்தங்களைச் செலுத்தி சுழற்றித் தூக்கி கவிழ்த்து எழுந்தது. அதன் வெண்கோடு சிவந்து குருதிவழிய குடல்சரடுகள் தொங்கி வழுக்கி உதிர்ந்தன. பிளிறியபடி அது எதிர்வர அதன் தோழமை யானைகள் அலறியபடி பின்னகர்ந்தன.

கம்ரன் “என் தெய்வமே! என் தாதையே! பொறுத்தருள்க!” என்று கூவியபடி சுபகத்தை நோக்கி ஓடினான். அதன் நேர்முன்னால் சென்று இரு கைகளையும் விரித்துக்கொண்டு நின்றான். சுபகம் அவனை அறியவில்லை. தலைகுலுக்கி பிளிறியபடி அவனை நோக்கி பாய்ந்து வந்தது. அவன் நெஞ்சுகுலுங்கும் அச்சம் எழுந்தபோதும் நிலையூன்றி நின்றான். அவனை தன் காலால் எற்றி தெறிக்கவிட்டது சுபகம். அவன் விலாவுடைந்து நிலத்தில் விழுந்து இருமி குருதியுமிழ்ந்து உடல்ததும்பினான். நின்று இருமுறை அசைந்தபின் அதுவும் அவனருகிலேயே விழுந்தது. அவன் தன் உடலுக்குள் சிக்கியிருந்த மூச்சைத் திரட்டி குருதியுடன் உமிழ்வதற்கு முன் தனக்கு அருகில் கிடந்த அதன் பெரிய மத்தகத்தை இறுதியாக பார்த்தான்.

பாண்டவப் படைமுகப்பில் பூரிசிரவஸ் தன் தேரில் அமர்ந்து எதிரே எழுந்த செவிநிறைத்துச் சூழும் முழக்கத்தை கேட்டான். “எதிர் வருகிறது யானை நிரை! நேர்கொள்க! யானை நிரை! எதிரில் யானைப்படை!” என்று முரசுகள் ஒலித்தன. பூரிசிரவஸ் தன் கழையனிடம் கைகாட்ட அவன் கணுக்கழையில் தொற்றி மேலேறி அணிலென அதே திசையில் தலைகீழாக கீழிறங்கி குதித்து “நூற்றெட்டு யானைகள் ஒற்றைத்தண்டு கொண்டு வருகின்றன” என்றான். “பதினெட்டு தண்டுகள் எழுந்துள்ளன.” பூரிசிரவஸ் “ஒற்றைத்தண்டா?” என்று திகைத்த மறுகணமே அதை உளத்தால் கண்டான். “தேர்கள் பின்னடைக! படை பின்னடைக!” என்று அவன் ஆணையிட்டான். அவன் ஆணையை முரசுகள் ஒலித்தன.

ஆனால் அவன் எண்ணியவாறு தேர்கள் பின்னடைய இயலவில்லை. முகப்பில் வில்லவர்கள் ஊர்ந்த தேர்கள் பாண்டவப் படைமுகப்பிலிருந்து பின்னகர வேண்டுமென்றால் முகம் திருப்பி வளைய வேண்டியிருந்தது. அவை ஒன்றுடன் ஒன்று விலாசெறிந்து சென்றுகொண்டிருந்தமையால் அதற்கான இடம் இருக்கவில்லை. திரும்பிய ஓரிரு தேர்கள் பிற தேர்களுக்கு இடையூறாயின. புரவிகள்

ஒன்றுடன் ஒன்று கால்தட்டி கனைத்தன. சவுக்குகளை அறைந்தபடி வசைச்சொற்களைக் கூவி தேர்களை பின்னிழுத்து கொள்ள முயன்றனர் பாகர்கள். அதற்குள் நூறு யானைகள் சேர்ந்து பற்றிய பெரும் தண்டு ஆழிப்பேரலை என அணுகி வந்தது. விலகவோ ஒழியவோ இயலாதபடி தேர்கள் சிக்கிக்கொள்ள அவற்றை அறைந்து சிதறடித்தபடி அணுகியது.

பூரிசிரவஸ் அந்த அறைதலை ஓசையென்றே உணர்ந்தபடி கைவீசினான். அவன் தேர் பின்னடைந்தது. “மேலும் பின்னடைக! மேலும் பின்னடைக! எதிர்கொள்ளல் ஒழிக!” என்று அவன் கூவினான். “நெடுவில்லவர் முன்னெழுக! தொலையம்புகளை ஏவி யானைகளின் பின்பகுதியை தாக்குங்கள்” என்றான். மத்தகக் கவசம் அணிந்த யானைகளின் நெற்றிமுழைகள் மேல் வில்லவர்களின் அம்புகள் சென்றுபட்டு உதிர்ந்துகொண்டிருந்தன. உடைந்த தேர்களிலிருந்து நுகம் சிதறிய புரவிகள் கனைத்தபடி திரும்பி ஓடிவர, பின்னால் நின்ற தேர்களின் புரவிகள் அவற்றை தடுக்க அங்கு பெருங்குழப்பம் நிலவியது.

கண்ணெதிரில் கௌரவப் படை முழுமையாக சிதறடிக்கப்பட்டுவிட்டதை பூரிசிரவஸ் பார்த்தான். பிறிதொரு அலையாக சற்று அப்பால் மேலும் நூறு யானைகள் பெருந்தண்டு கொண்டு முன்னெழுந்து வந்தன. தண்டேந்திய யானைகளை முகப்பில் அமைக்காமல் வேண்டுமென்றே வில்லவர்களின் தேர்களை முன்னால் நிறுத்தி யானைகளை முற்றிலும் மறைத்து சிகண்டி படைகொண்டு வந்திருக்கிறார் என்று அவன் புரிந்துகொண்டான். வில்லவருக்கெதிராக தேர்வில்லவர் கௌரவர் தரப்பில் அணிநிரந்திருந்தனர். அவர்கள் அம்புகளால் எதிர்கொண்டதும் ஒரு முரசாணையால் பாண்டவ வில்லவர்கள் ஒதுங்கி வழிவிட அவர்களுக்குப் பின்னாலிருந்து தண்டேந்திய யானைகள் முன்னால் எழுந்து வந்தன.

நொறுங்கிய தேர்களை மிதித்து உடைத்துத் நெறித்தபடி யானைநிரை மேலும் மேலும் முன்னால் வந்தது. ஏந்திவந்த தண்டால் ஒன்றுடன் ஒன்று இணைத்து தொகுக்கப்பட்டதால் அவற்றின் விசை ஒவ்வொரு பகுதியிலும் பன்மடங்காக இருந்தது. அந்த அடியை தடுக்கவே இயலவில்லை. தொடர்ந்து பின்னகர்ந்து இணைந்து இணைநிரையென்றாகின கௌரவர்களின் தேர்கள். தேரில் நிலைகொண்டு பெருவில்லெடுத்து நீளம்பு தொடுத்து வானில் எய்து அது வளைந்திறங்கி யானை மேல் விழச்செய்தான் பூரிசிரவஸ். அவனைத் தொடர்ந்து அம்புகள் எழுந்து வளைய அம்புகளாலான ஓர் யானைமுதுகு காற்றிலெழுந்தது. “யானை மேலிருக்கும் பாகன்களை மட்டும் குறிவையுங்கள்” என்றான். “யானைப்பாகன்களை குறிவையுங்கள்!” என்று அவன் ஆணை காற்றிலேறியது.

ஆனால் யானைகளும் பாகன்களும் கவசமணிந்திருந்தமையால் அம்புகள் பெரும்பாலும் பயனற்றன. பின்னகர்ந்துகொண்டிருந்த கௌரவப் படையினரால் குறிபார்க்கவும் இயலவில்லை. நெடுவிற்களை காலில் மிதித்தூன்றி நுனிபற்றி இழுத்து வளைத்து அவர்கள் எழுப்பிய அம்புகள் எவருக்கென்றன்றி எழுந்து இலக்கடையாது அறைந்து விழுந்தன. பூரிசிரவஸ் தன் வலது இடது என இரு பகுதிகளிலும் அலறல் ஒலிகளை கேட்டான். மேலும் பின்னகர்ந்தபோது முற்றிலும் நம்பிக்கை இழந்திருந்தான். இரு பகுதிகளிலிருந்தும் முரசுகள் “முன்னகர்க! யானைப்படை முன்னகர்க!” என்று ஆணையிட்டன. யானைகள் ஏந்திவந்த தண்டு அணுகி வருந்தோறும் பெருகுவதைப்போல அவனுக்கு தோன்றியது. அது தோதகத்திப் பெருமரங்களை இரும்புப்பூணிட்டு ஒன்றுடன் ஒன்று இணைத்து உருவாக்கப்பட்டது. அதில் கூரிய இரும்புமுனைகள் பொருத்தப்பட்டிருந்தன.

மேலும் தேரை பின்னெடுக்க இயலாமல் பின்னிருந்து வந்த படையுடன் முட்டிக்கொள்ள அவன் தேரிலிருந்து பாய்ந்திறங்கி விரைந்துகொண்டிருந்த புரவியொன்றின் மேலேறினான். கைதூக்கி "பின்னகர்க! இறப்புகளை குறைத்துக்கொள்வதொன்றே வழி! இறவாதொழிக!" என்று ஆணையிட்டான். அவன் படைவீரர்கள் தேர்களிலிருந்து பாய்ந்திறங்கினர். ஆனால் பின்னால் நின்றவர்கள் அதற்கு வழியிலாது திகைக்க தண்டு தேர்களின் மேல் பாய்ந்தது. நூற்றுக்கணக்கான தேர்கள் நொறுங்கும் ஒலி எழ பூரிசிரவஸின் முதுகு சிலிர்ப்படைந்தது. தேர்களும் புரவிகளும் தேர்வலரும் வில்லவரும் இணைந்த திரள் உடைந்து சிதைந்து தண்டின் மீதும் களிறுகளின் கால்களிலுமாக நிலத்திலமைந்தது. பூரிசிரவஸ் கண்களை மூடிக்கொண்டான்.

கௌரவப் படைகளுக்குப் பின்புறம் எங்கோ சங்கொலி எழுந்தது. அது எவருடையதென்று உணர்வதற்கு முன்னரே அவன் உடல் மெய்ப்புகொண்டது. அதன் பிறகே பால்ஹிகரின் கவசயானையான அங்காரகன் துதிக்கை தூக்கி பிளிறியபடி தேர்களை பிளந்துகொண்டு வருவதை அவன் கண்டான். அதன் அடுத்த பிளிறல் மேலும் அருகே ஒலித்தது. மூன்றாவது பிளிறலில் அது அவனைக் கடந்து சென்றது. அங்காரகன் குருதிவழிய சிவந்திருந்தது. அதை சிவந்த யானை என பால்ஹிகர் சொல்லிக்கொண்டிருந்ததை அவன் நினைவுகூர்ந்தான். பால்ஹிகரின் பெருத்த கதையின் சங்கிலியை அவரது யானை துதிக்கையால் பற்றியிருந்தது. அதன் நுனியை அவர் தன் வலக்கையில் பிடித்திருந்தார். உரக்க நகைத்தபடி இரு கால்களாலும் யானையின் விலாவை அணைத்தபடி சிறுவன்போல் எழுந்தெழுந்து நகைத்தார். "செல்க! செல்க!" என்று அவர் ஓசையிடுவது கேட்டது.

அங்காரகன் அவருடைய கதையை தன் துதிக்கையால் சுழற்றி விசையுடன் முன் வீச பெரும் குமிழி பறந்து சென்று நூறு யானைகளால் கொண்டு வரப்பட்ட தண்டின் மேல் அறைந்து விரிசலோசை எழுப்பியது. அதை ஏந்தியிருந்த யானைகள் அனைத்தும் அவ்வதிர்வால் திகைத்து நின்று செவிகூட்டின. இரண்டு யானைகள் தண்டை துதிக்கையிலிருந்து விட்டுவிட்டு பிளிறலோசை எழுப்பின. பால்ஹிகர் பெருங்கதையின் விசையை தன் கைகளால் ஏந்திச்சுழற்றி மீண்டும் ஓங்கி அறைந்தார். இம்முறை மத்தகத்தில் அறைபட்டு கவசத்துடன் தலை சிதற ஒரு யானை பிளிறி முழந்தாளிட்டு விழுந்தது. அனைத்து யானைகளும் திகைத்து நிற்க மேலும் ஒரு யானையை அறைந்து வீழ்த்தினார்.

அங்காரகன் கதையின் நுனியைப்பற்றி மீண்டும் சுழற்றி வீச அடுத்த அறையில் பெருந்தண்டில் இருந்து மெல்லிய முனகலோசை ஒன்று எழுகிறதா என்று பூரிசிரவஸ் வியந்தான். விழிகளும் ஒலிகேட்கப் பழகுவதென்பது போர்க்கலையின் தேர்ச்சிகளில் ஒன்று. மீண்டும் ஒருமுறை கதை சென்று அறைந்து எழுந்தபோது யானைகளில் ஒன்று தண்டை விட்டுவிட்டு துதிக்கையை மேலே தூக்கி சினத்துடன் பிளிறலோசை எழுப்பியது. அது பிடியானை என்பதை பூரிசிரவஸ் நோக்கினான். அனைத்து யானைகளும் அந்த யானையின் ஆணைக்கு கட்டுப்பட்டவையாக உரக்கப் பிளிறியபடி தண்டைத் தள்ளி முன்னெடுத்தன. பால்ஹிகரின் கதை மீண்டும் ஒருமுறை சென்று அறைய யானைகளின் உந்துவிசையாலேயே தண்டின் நடுப்பகுதி விரிசலிடத் தொடங்கியது.

பூரிசிரவஸ் "தண்டின் நடுப்பகுதியை தாக்குக! தாக்கி முன்னெடுங்கள்!" என்று கூவினான். அதற்குள் அவன் படைகளின் பின்னிலிருந்து வந்து விட்டிருந்த மூன்று யானைகள் நீள் தண்டை ஏந்தி விரைந்து முன்னால் சென்றன. அவற்றிலிருந்த பாகர்கள் ஆணையிட அத்தண்டால் எதிர் வந்துகொண்டிருந்த தண்டின் விரிசலிடும் பகுதியை ஓங்கி அறைந்தன. தண்டு இரண்டாக முறிந்து மடிந்தது. அவ்விசைச்

சிதறலால் யானைகள் கால் தடுமாறி பிளிறி தண்டை விட்டன. பால்ஹிகர் மீண்டுமொருமுறை தன் கதையால் அறைந்து அத்தண்டை உடைத்தார். யானைகள் நிலைதடுமாறி அங்குமிங்கும் சிதற அவர் கதை எழுந்து சென்று அறைந்தது. ஒரு யானை மத்தகம் உடைந்து கீழே விழுந்தது. இன்னொன்று விலாவில் அறைபட்டு சாய்ந்தது.

அங்காரகன் சினத்துடன் பிளிறியபடி விழுந்த யானைகளின் இடையே புகுந்து அப்பால் சென்றது. நிலைகுலைந்த யானைகள் ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொண்டு சுழல பூரிசிரவஸ் “செல்க, இடைவெளிகளினூடாக உள்நுழைக!” என்று ஆணையிட்டு தன் தேர்ப்படையை மீண்டும் ஒருங்கு குவித்து முழு விசையுடன் பாண்டவப் படைகளுக்குள் நுழைந்தான். அம்புகளை இடைவெளியின்றி எழுப்பியபடி அவர்கள் முன்னே சென்றனர். நீளம்பு ஒன்றால் எதிர்வந்த யானையின் காதுக்குப் பின்புறம் அறைந்து அதை பூரிசிரவஸ் வீழ்த்தினான். “யானைகள் மீண்டும் திரளலாகாது… செல்க!” என ஆணையிட்டான். அவன் மைந்தர் யூபகேதனனும் யூபகேதுவும் மூத்தவன் சலனும் அவன் மைந்தர் சார்த்தூலனும் சகனும் அம்புகளை தொடுத்தபடி முன்னால் சென்றார்கள். சகுனி பின்னிருந்து “உடைத்து முன்செல்க! உடைவினூடாக மேலும் உடைத்து முன்செல்க!” என்று ஆணையிட்டுக்கொண்டிருந்தார்.

நிலைகுலைந்த யானைகள் பாண்டவப் படைகளுக்குள்ளாகவே சிதறி பின்வாங்க அங்கிருந்த தேர்களும் வில்லவர் புரவிகளும் ஒன்றுடன் ஒன்று முட்டி நிலையழிந்து சுழன்றன. பால்ஹிகரின் கதை பித்தெழுந்ததுபோல் துள்ளிச் சுழன்றுகொண்டிருப்பதை அவன் பார்த்தான். அதில் அறைபட்டு தேர்கள் தெறித்தன. புரவிகள் குருதிச்சொட்டுகளென சிதறின. அந்த கதை சென்ற பாதை பாண்டவப் படைகளுக்குள் மலைப்பாறை உருண்டுசென்ற தடம்போல் உருவாகியது. இருபுறத்திலிருந்தும் பால்ஹிகரை நோக்கி எழுந்து வந்த அம்புகள் அவருடைய எடைமிக்க கவசங்களில் முட்டி விழுந்துகொண்டிருந்தன. அம்புகள் அவருக்கு கொசுக்களைப்போல என்று முந்தைய நாள் எவரோ சொன்னதை பூரிசிரவஸ் நினைவுகூர்ந்தான்.

அவருடைய படைநிற்றல் கௌரவப் படையினருக்கு விண்ணிலிருந்து விளக்க இயலாத பேராற்றலுடன் தெய்வம் ஒன்று வந்து சேர்ந்திருப்பதுபோல் எழுச்சியூட்டியது. அவரை எவராலும் கொல்ல இயலாது என்று வீரர்கள் கூறினர். இறப்பற்று இக்களம் மீண்டு இதேபோல் மேலும் பன்னிரு களம்கண்டு விண்ணிலிருந்து இறங்கிவரும் வெண்ணிற யானை மேலேறி உடலுடன் விண்செல்லவிருப்பவர். மானுடருடன் விளையாட வந்த தேவன். தொலைவிலிருந்து பெருங்கதை சுழன்று செல்வதை, அதை மேலிருந்து இயல்பாக கை சுழற்றி இயக்கியபடி அறைந்து நகைத்து களியாடிக்கொண்டிருந்த பேருருவரை பார்க்கையில் பூரிசிரவஸ் மெய்ப்பு கொண்டான்.

பாண்டவப் படை கலங்கிச் சிதைந்து அகல, இருபுறத்திலிருந்தும் வந்து இணைந்துகொண்ட யானைப்படைகள் எல்லைக்கோட்டை என அமைய, நடுவே அம்புகளை செலுத்தியபடி கௌரவத் தேர்கள் பாண்டவப் படைக்குள் நுழைந்தன. பூரிசிரவஸ் தொலைவில் சிகண்டியின் கொடி வருவதை பார்த்தான். சிகண்டி சீற்றமும் எரிச்சலும் கொண்டிருந்தார். இரு கைகளையும் வீசி தன் படைகளுக்கு ஆணையிட்டபடி அணுகி வந்தார். அவர் வில்லிலிருந்து எழுந்த நீளம்பு பால்ஹிகரின் தோள் கவசத்தை அறைந்தது. முதன் முறையாக அம்பின் விசையொன்றை உணர்ந்த பால்ஹிகர் திரும்பி அவரை நோக்கி இடக்கையைச் சுட்டி சிரித்தார். அதே வீச்சில் கதையை வீசினார்.

தன் கதை செல்லும் தொலைவைக்கூட அவர் கணித்திருக்கவில்லை என்று தெரிந்தது. சிகண்டிக்கும் தனக்கும் நடுவில் நின்றிருந்த வில்லவர்களை, புரவிகளை அறைத்து தெறித்தபடி அவரை நோக்கி சென்றார் பால்ஹிகர். அவர் அணுகுந்தோறும் தன்னை பின்னடையச்செய்து பேரம்புகளால் மீண்டும் மீண்டும் பால்ஹிகரின் தோள்கவசத்தை அறைந்தார் சிகண்டி. ஏன் தோள்கவசத்தில் இலக்கு குவிக்கிறார் என்று பூரிசிரவஸ் எண்ணினான். கவசங்களில் அசைவு மிக்கது தோள்கவசம். பால்ஹிகரோ பெருங்கதையை இடைவிடாமல் சுழற்றுபவர். உறுதியாக அவற்றின் எட்டடுக்கில் ஒன்றேனும் பொருத்து தேய்ந்துவிட்டிருக்கலாம். வலக்கையின் கவசத்தை உடைத்து தோளிலொரு அம்பை நிறுத்திவிட முடிந்தால் அதன்பின் பால்ஹிகர் போருக்கு பயனற்றவரே.

கைகாட்டி வீரர்களை தன்னை தொடரச்செய்தபடி பூரிசிரவஸ் பால்ஹிகரின் பின்னால் தொடர்ந்து சென்று அவ்விசையிலேயே அம்பெடுத்து சிகண்டியின் தேரை நோக்கி செலுத்தினான். நாணொலி கேட்டு திரும்பிப்பார்த்த சிகண்டி தொடையில் கையால் அறைந்து நகைத்தபடி பூரிசிரவஸை நோக்கி திரும்பினார். பூரிசிரவஸ் சிகண்டியின் வில்திறனை முதன்முறையாக அருகென கண்டான். பிதாமகர் பீஷ்மருக்கு நிகரானவர், புல்லை அம்பாக்கும் வித்தையையும் அறிந்தவர் என்று அவரைப்பற்றி அறிந்திருந்தான். பீஷ்மரைப் போலவே சிகண்டி போர்புரிந்தார். தேரில் தவத்தில் ஆழ்ந்த முகத்துடன், தன்னியல்பென நெளியும் உடலுடன், கைகள் நடனமென வீசிச் சுழல நின்றிருந்தார்.

மீண்டும் மீண்டும் சிகண்டியின் அம்புகள் வந்து அவன் தேரையும் கவசங்களையும் உடைத்தன. அவன் பின்னகர விழைகிறானா என்று பாகன் கையசைவால் வினவிக்கொண்டே இருந்தான். “செல்க! செல்க!” என்று ஆணையிட்டபடி மீண்டும் மீண்டும் அம்புகளை அறைந்த பூரிசிரவஸ் அந்த அம்புகள் எவையுமே சிகண்டியை சென்று சேரவில்லை என கண்டான். “துணை சேர்க! உதவி தேவை! துணை தேவை!” என அவன் கோரினான். “சிகண்டியை எதிர்கொள்கிறேன்! சிகண்டிமுன் நின்றுள்ளேன்!” என்று அவன் கூற அக்குரலே பெருகி முழவோசையென எழுந்தது.

அப்பால் காவல்மாடத்தில் பெருமுரசோசை என எழுந்தது சகுனியின் ஆணை. “ஜயத்ரதரும் அஸ்வத்தாமரும் செல்க! சிகண்டியை எதிர்கொள்க!” ஜயத்ரதனும் அஸ்வத்தாமனும் வந்துகொண்டிருப்பதை இருபுறத்திலிருந்தும் முரசுகள் கூவி அறிவித்தன. இன்னும் சற்று நேரம். அதற்குள் என் தலை அறுந்து விழாதிருக்கவேண்டும். அம்பொழியாது நிலைகொள்வதையே முதன்மைப் போரென கொள்ளவேண்டும். சென்றெழுந்து தாக்குவதாக தோற்றமும் அளிக்கவேண்டும். பின்னடைகிறோம் என்று தோன்றினால் அதுவே இறப்பு. சிகண்டியின் அம்பின் அருகுவலையத்திற்குள் சென்றால் பிறையம்பு தலைகொய்து செல்வதை தவிர்க்க இயலாது.

பூரிசிரவஸ் “முன்செல்க! முன்செல்க!” என்று கூவியபடி சிகண்டியை அம்புகளால் தாக்கினான். அவன் தேர்ப்பாகன் அவன் எண்ணத்தை புரிந்துகொண்டான். தேரை முன்செலுத்த இயலாமல் எதிர்த்தேரில் முட்டிக்கொண்டவன் என நடித்து அதை விரைவழியச் செய்தான். சீற்றத்துடன் சவுக்கால் புரவிகளை மாறி மாறி அறைந்து கைநீட்டி அவற்றுக்கு ஆணையிட்டான். ஆனால் கவிழ்ந்து கிடந்த இரு தேர்களுக்குப் பின்னால் முட்டிநின்ற அவன் தேரை இழுக்கவியலாது புரவிகள் காலசைத்தபடி அங்கேயே அசைவிலாது நிலைகொண்டன. பூரிசிரவஸை சூழ்ந்திருந்த வில்லவர்கள் சிகண்டியை அம்புகளால் அடித்து தடுத்து நிறுத்தினர். தன் பின்னாலிருந்து வீரர்கள் அலறி விழுந்துகொண்டிருப்பதை பூரிசிரவஸ் பார்த்தான். ஒவ்வொருவராக அவர்கள் சரிய அவ்விடத்தை நிரப்புவதற்கு மேலும் வில்லவர்கள் இன்மையால் அவனுடைய

துணைப்படை வளையம் உடைந்து சிறுகுழு என்றாயிற்று. சிகண்டியை முன்வராது தடுத்த அம்புவேலி மெலிந்தபடி வந்தது.

பூரிசிரவஸ் மிகத் தொலைவில் பால்ஹிகர் கடந்து சென்றிருப்பதை கண்டான். அம்புகளால் அவன் சிகண்டியை தடுத்து நிறுத்தியிருக்க சிகண்டிக்கும் தனக்கும் நடுவே இருந்த யானைகளையும் தேர்களையும் உடைத்தபடி பால்ஹிகர் அவரை நோக்கி சென்றிருந்தால் சிகண்டியை மேலும் பின்னடையச் செய்திருக்க இயலும். ஆனால் அவர் தன்னை எதிர்ப்பவர்களை மட்டுமே எதிர்த்தார். பிறரை தாக்குபவர்களை சென்று தாக்க எண்ணவில்லை. எவரையும் வெல்ல எண்ணவில்லை. எவரையும் காக்கும் பொருட்டு எழவும் இல்லை. அந்தப் பெருங்கதையை சுழற்றுவதன் இன்பத்திற்கு அப்பால் அவர் எதையும் உளம்கொள்ளவில்லை என்று தோன்றியது.

இன்னும் ஒரு படி. இன்னும் ஒரு கணம். இன்னும் சில அம்புகள். சற்று, இதோ அணுகிக்கொண்டிருக்கிறார்கள். இதோ வந்து சூழ்கிறார்கள். இன்னும் ஒரு வாழ்க்கை. இன்னும் காலத்துளிகள் சில. பூரிசிரவஸ் சிகண்டியின் முகத்தை அருகிலென கண்டான். முதன் முறையாக இறப்பின் அச்சம் அவனில் எழுந்தது. அக்கணமே அதன் பொருளின்மை எழுந்து தெரிந்தது. அதுவரை அந்நிகழ்வின் மேல் ஏற்றப்பட்டிருந்த அனைத்தும் விலகி அகன்றன. கைநழுவி பளிங்குக் கலம் கீழே விழுந்து உடைவதுபோல பிறிது ஒருபோதும் தன் வடிவுக்கு மீள இயலாத ஓர் அழிதல். அதுவன்றி வேறெதுவுமல்ல. அழிவு. அழிவு மட்டுமே. அழிவு என்பது மிக வெளிப்படையானது. முற்றிலும் உள்ளற்றது. ஆழமென அணுவிடைகூட இல்லாது அலையடிக்கும் பெருங்கடல்வெளி.

அவ்வெறுமை அவனை சீற்றமடையச் செய்தது. அவ்வெறுமையின் திரள் என முன்னால் எழுந்து நின்றிருந்த சிகண்டி மீது பெரும் சீற்றம் உருவாகியது. பற்களைக் கடித்து கண்களில் நீர்கோத்துக்கொள்ள முழு விசையுடன் அம்பை இழுத்து எய்தான். பேரம்பு சிகண்டியின் தலைக்கவசத்தை உடைத்தது. அடுத்த அம்பு அவர் தலைநோக்கி செல்ல உடல் வளைத்து அதை ஒழிந்த சிகண்டி மூன்று தனி அம்புகளால் அவன் தோள்கவசங்களை உடைத்தார். தோளில் அம்பொன்று உரசிச்செல்ல தெறித்த குருதி கவசங்களின் மீது வழிந்தது. உறுமியபடி வந்த பிறையம்பிலிருந்து தப்ப பூரிசிரவஸ் தேர்த்தட்டிலேயே கால் மடித்தமர்ந்தான். தேர்த்தூணை உடைத்துச் சென்றது அது. தேர்முகடை தெறிக்க வைத்தது பிறிதொரு அம்பு. பிறிதொன்று எழுந்து அவன் விலாக்கவசத்தை உடைத்தது. அவன் உருண்டு வேறொரு கவசத்துடன் எழுவதற்குள் விசைமிகுந்த நாகச்சீற்றம் போன்று அவன் விலாவில் தைத்தது ஓர் அம்பு. கால் தளர்ந்து அவன் தேர்த்தட்டில் அமர பிறிதொரு அம்பு அவன் பாகனை கொன்றது. அவன் புரவிகளிலொன்று கழுத்தற்று விழுந்தது. பின் ஓர் அம்புககு அவன் விழுந்து புரண்டெழ தேர்த்தட்டில் நின்று நடுங்கியது.

தேரிலிருந்து பாய்ந்து புரவிகளுக்கும் உடைந்த தேர்ச்சகடங்களுக்கும் நடுவே தன் உடலை ஒடுக்கி ஒளிந்துகொண்டான். மேலும் மேலுமென அம்புகள் வந்து அவனைச் சூழ விழுந்து கிடந்த புரவிகளிலும் யானையுடல்களிலும் தைத்தன. தேர்ச்சகடங்களையும் உடைந்த தேர்முகடுகளையும் அதிர வைத்தன. சிகண்டியின் அம்புகள் தன்னை சினம்கொண்டு தேடிவருவதை அவன் கண்டான். மேலும் உடல் இழுத்து விழுந்து கிடந்த தேர்முகடொன்றை அணுகி அதற்குப் பின்னால் எலிபோல் உடல் சுருட்டி பதுங்கினான். அவனைச் சூழ்ந்திருந்த தேர் வில்லவர்கள் நால்வர் விழுந்தனர். எஞ்சியவர்கள் புரவிகளையும் தேர்களையும் பின்னிழுத்து மேலும் பின்னடைய சிகண்டி நாணொலி கேட்கும்படி, அம்புகளின் சீறலோசை முழக்கமென எழுந்து சூழ அணுகி வந்தார்.

பூரிசிரவஸ் வலப்பக்கம் மிக அருகே நாணொலியை கேட்டான். அது ஜயத்ரதன் என்று தெரிந்ததும் அவன் உள்ளத்திலிருந்து எடையொன்று அகன்றது. மறுபக்கம் அஸ்வத்தாமனின் சங்கொலி எழுந்தது. இருவரும் தங்கள் அணுக்கப்படையினருடன் வந்து சிகண்டியை எதிர்கொண்டனர். சிகண்டி அவர்கள் இருவரையும் ஒரே தருணத்தில் எதிர்கொள்வதை அவன் பார்த்தான். இருகைவில்லவன் என்று புகழ்பெற்ற அர்ஜுனனுக்கு நிகராக இருந்தது அவர் கைவிசை. ஜயத்ரதனும் அஸ்வத்தாமனும் தங்கள் மிகச் சிறந்த அம்புகளால் அவரை தாக்கினர். ஓர் அணுவிடையும் பின்னகராமல் சிகண்டி அவர்கள் இருவரையும் நேர்கொண்டு விசை நிலைக்க அம்புகளால் கோத்து நின்றார்.

பூரிசிரவஸ் முதன்முறையாக தன் மேல் எரிச்சலை உணர்ந்தான். தான் ஒளிந்திருக்கும் இடமும் தன் உடல் அமைந்திருக்கும் வடிவும் அக்கணம்தான் அவனுக்கு புலப்பட்டன. திரும்பி சூழவும் பார்த்தான். அங்கு அவனை நோக்கும் விழிகள் எதுவும் இல்லை. ஆனால் அவனை அவனே நோக்கிக்கொண்டிருந்தான். அக்கணமே அம்பறாத்தூணியிலிருந்து கூரம்பு ஒன்றை எடுத்து கழுத்தில் வைத்து அறுத்துக்கொள்ள வேண்டுமென்ற உளவிசையை அவன் அடைந்தான்.

பாண்டவர்களின் யானைப்படைக்குப் பின்னால் அணிவகுத்துச்சென்ற தொலைவில்லவர்களின் தேர்ப்படையில் அசங்கனும் இருந்தான். அவனைச் சூழ்ந்து அவன் தம்பியர் ஒற்றைப்புரவி இழுத்த விரைவுத்தேர்களில் வந்தனர். முரசுகளும் முழவுகளும் இணைந்த முழக்கம் காற்றில் நிறைந்திருந்தது. அசங்கன் திரும்பி நோக்கி “செறிந்துவருக... இடைவெளி விழாது அணைக!” என்றான். அவன் ஆணையை தேருக்குப் பின்னால் அமர்ந்திருந்த கழையன் முழவோசையாக்கினான். “செறிந்து வருக... ஆணை அமைந்ததும் வில்தொடுத்து முன்னேகுக!” என்று அசங்கன் ஆணையிட்டான்.

தன் உடன்பிறந்தார் தன் குரலை மட்டுமே கேட்கிறார்கள் என்று அசங்கன் அறிந்திருந்தான். போரில் எழும் முரசொலிகளை புரிந்துகொள்வதற்கான பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும்கூட செவி பழகியிருக்கவில்லை. அவனுக்கே தந்தையின் பெயரை மட்டுமே பிரித்தறிய இயன்றது. முழவொலியை சொல்லெனக் கேட்க செவி பிற புலன்களிலிருந்து விலகி அதை மட்டும் அறியும் ஒன்றாக மாறிவிட்டிருக்க வேண்டும். அலறும் யானைகளையோ குளம்படிகளையோ போர்க்கூச்சல்களையோ உயிர் துடிக்கும் கூச்சல்களையோ முற்றிலும் அகற்றி அவ்வதிர்வுகளை செவிப்பறையால் முற்றிலும் இணைகோத்து கேட்கவேண்டும்.

போருக்கெழுந்த சற்றுநேரத்திலேயே அவன் அதை உணர்ந்துகொண்டான். போர்முழவின் ஓசை தாளங்களின் எண்ணிக்கையாலும் அணுக்க விலக்கத்தாலும் விசையாலும் கோல் மாறுபாடுகளாலும் சொல்லென்றாகிறது. இரு முட்டலும் இரு நீட்டலும் ஒரு முத்தாய்ப்பும் ஒன்றென ஒலிப்பது சாத்யகி எனும் சொல். எண்ணி கணக்கிட்டு சொல்லென்று மொழியாக்கி அத்தாளத்தை புரிந்துகொள்ள இயலாது. நேரடியாகவே சொல்லென்று சிந்தை புகவேண்டும். அவன் தன் கைவிரல்களால் சாத்யகி சாத்யகி என அச்சொல்லை தாளமாக்கிக் கொண்டிருந்தான். ஆனால் அது வேறெங்கோ இருந்தது. முழவு அச்சொல்லை முழங்கியபின் சற்று கழித்தே அது சிந்தையை அடைந்தது. அதனுடன் இணைந்த ஆணைகள் வெறும் ஓசையென்றே ஒலித்தன. அருகே நின்றிருந்த மூத்த வீரர்கள் எவரேனும் அவ்வாணையை சொல் பெயர்த்தனர்.

“போர்க்களத்தில் வாய்ச்சொற்கள் சித்தம் புகாமலாகும். முழவொலியே குரலென்று சமையும். அத்தருணத்தை பயின்றறிய இயலாது. உள்ளம் சென்றமையவேண்டும்” என்றார் மூத்த வீரரான பரகாலர். “சென்றமைந்த கணமே நாம் படையென்று உருமாறுகிறோம். அதன்பின் நம் இறப்பு நமக்கொரு பொருட்டே அல்ல.” அவனுக்கு போர்க்களம் கணந்தோறும் பெருகும் திகைப்பாக இருந்தது. அலையடிக்கும் திரளில் தம்பியருடன் அவனும் மிதந்தலைந்தான். பாண்டவப் படையின் முன்புறம் தண்டேந்திய யானைகள் சென்றமையால் கரிய சுவரால் என எதிரிப்படை முற்றாக மறைக்கப்பட்டிருந்தது. சூழ்ந்திருந்த ஓசை திரையென்றாகி தனிமையை அளித்தது. அவன் ஒரு பொருளிலாக் கனவிலென விழித்தெழ தவித்துக்கொண்டிருந்தான்.

தந்தை எங்கோ இருந்தார். அவன் போருக்கு எழுகையில் தந்தைக்குப் பின்னால் அவருடைய விழிவட்டத்திற்குள் நின்றிருப்பதையே எண்ணியிருந்தான். அவர் காண போரிடவேண்டும் என கற்பனை செய்தான். அவர் முன் களம்படவேண்டும். அவர் அள்ளி அணைத்து மடியிலிட்டு கூவி அழுகையில் புன்னகையுடன் உயிர்துறக்கவேண்டும். காவல்மாடத்தில் இருந்து அவன் ஒவ்வொருநாளும் எண்ணி கண்ணீருடன் உவந்தது அதைத்தான். அந்த உடற்கொந்தளிப்பில் அவன் நிலம்பட்டால் அவன் உடன்பிறந்தாரே மிதித்து முன்சென்றுவிடக்கூடும். போர் முடிந்தபின் அவன் உடலை குடிமுத்திரை நோக்கி கண்டடைவார்கள். தந்தை அவர்கள் அங்கிருப்பதை அறிந்திருப்பாரா?

அவன் அவர் முகத்தையே எண்ணிக்கொண்டிருந்தான். அவருடைய தோற்றத்திற்கும் அவனுக்கும் தொடர்பே இல்லை. ஓங்கிய கரிய உடலும், பெருந்தோள்களும், எச்சரிக்கையுடன் நோக்கும் சிறுவிழிகளும், எண்ணி அடுக்கப்பட்ட சொற்களும் கொண்டவர் அவர். நாணிழுத்து இறுகக் கட்டப்பட்ட வில் என பிறருக்கு தோற்றமளிப்பவர். எண்ணியது இயற்றும் ஆற்றல்கொண்ட சிலர் இப்புவியில் எப்போதும் எழுகிறார்கள். அரியவர்கள், முன்நிற்பவர்கள், வழிநடத்துபவர்கள், பொறுப்பேற்றுக்கொள்பவர்கள், முதலில் வீழ்பவர்கள். அவர் அவர்களில் ஒருவர். அவன் தன் அன்னையைப்போன்ற தோற்றம் கொண்டவன். அவன் உடன்பிறந்தார் ஒன்பதின்மரும் அன்னையைப்போன்றே அமைந்தனர்.

அவர்கள் போஜர்குலத்தின் துணைக்குடியாகிய அஜகடகத்தை சேர்ந்தவர்கள். அக்குடியினர் அனைவருமே சிவந்த சிற்றுடலும் மென்மையான உதடுகள் அமைந்த நீள்முகமும் தணிந்த குரலும் கொண்டவர்கள். ஆண்கள் அனைவரிலும் பெண்டிர் அமைந்திருப்பார்கள். அக்குலப் பெண்டிரிலிருந்து சிறுமியர் மறைவதே இல்லை. அவர்களை யாதவக்குடிகள் விரும்புவதில்லை. ரிஷபவனத்திற்கு பெண்ணளிக்க பல யாதவக்குடிகள் சித்தமாக இருந்தாலும் சாத்யகி அவளை மணந்தான். யாதவர்களின் பெருங்களியாட்டுக்கு வந்திருந்த அவளை நோக்கியதுமே விழைவுகொண்டான். தன்னோரன்ன பெண்களுடன் மலர்களியாடிக்கொண்டிருந்த அவளை தேடிச்சென்று பலர் முன்னிலையில் தூக்கிக்கொண்டு காட்டுக்குள் புகுந்தான். அங்கேயே அவர்களுக்கு குலமூத்தார் கான்மணம் செய்துவைத்தனர்.

அன்னையிடம் தந்தை பேரன்புடன்தான் எப்போதுமிருந்தார் என்பதை அசங்கன் கண்டிருந்தான். ஆனால் ஒவ்வொரு முறை தன்னை பார்க்கையிலும் தந்தையிடம் உருவாகும் புருவச்சுளிப்பையும் அவன் மிக இளமையிலேயே அறிந்திருந்தான். அது ஒவ்வாமை என அவன் உணர்ந்தான். அதை கடந்து அவருக்கு இனியவனாகும்பொருட்டு தன் அனைத்துச் செயல்களாலும் விழைந்தான். படைக்கலங்கள் ஏந்தி போருக்கெழுந்தான். இரவும் பகலும் களரியில் கழித்தான். ஆனால் வளைதடியோ வில்லோ அவன் கைக்கு பழகவில்லை. அவன் அளித்த தவம் அவற்றை சென்றடையவில்லை.

அவன் அம்புகள் பிழைபடுகையில், வளைதடி பிறிதொரு இடம் தேடிச்செல்கையில் தந்தை கடிந்து ஒருசொல்லும் கூறியதில்லை. ஆனால் மிக சிறு ஒளித்துளியென அவரில் எழும் நம்பிக்கை மறைவதை அவர் உடலில் எழும் ஓர் அசைவே காட்டிவிடும். அக்கணம் தன்னுள் உருவாகும் சலிப்பும் துயரமும் அவனை அன்றிரவெலாம் வாட்டி எடுக்கும். மீண்டும் சீற்றம்கொண்டு அம்பையும் வில்லையும் எடுத்தால் அச்சீற்றத்தாலேயே பிழைகள் நிகழும். தன் இரு கைகளையும் பார்த்து அவன் விழிநீர்வார ஏங்குவான். எவ்வண்ணம் இவ்வுடலை நான் கடக்கலாகும்? இதிலிருந்து எழுந்து பிறிதொருவனாக தந்தைமுன் நிற்க எப்போது இயலும்? இதற்கப்பால் சென்று நான் அடைவனவே எனக்குரியவை. நான் என்னை வென்றாலொழிய தந்தையை அணுகமுடியாது.

ஆனால் அவன் உடல் அச்சொற்களுக்கு அப்பால் பிறிதொன்றை நாடிக்கொண்டிருந்தது. அது என்ன என்பதை பன்னிரண்டாம் அகவையில் முதல் முறையாக மகரயாழ் ஒன்றின்மேல் விரல் ஓட்டிப் பார்த்தபோது உணர்ந்தான். களிறுஎழு விழாவிற்காக நூபுரத்வனியிலிருந்து வந்திருந்த இசைச்சூதர் நிகழ்ச்சி முடித்து உணவருந்தச் சென்றபோது உறையிட்டு மூடி வைத்திருந்த யாழ் அது. எழுபத்திரண்டு நரம்புகள் கொண்ட பேரியாழ். அதன் நரம்புகள் ஒளியாலானவை என தோன்றின. விந்தையான சிலந்தி ஒன்றால் கட்டப்பட்ட வலையின் ஒரு பகுதியென. அவன் எழுந்துசென்று மெல்ல அவற்றினூடாக விரலை ஓட்டியபோது அவை முன்னரே அந்த யாழை அறிந்திருப்பதை உணர்ந்தான்.

கனவிலும்கூட தான் யாழ் மீட்டுவதை அவன் பார்த்திருக்கவில்லை. அவ்வுள மயக்கை அகற்ற முயன்றும்கூட விரல்கள் தங்களுக்குரிய தெய்வங்களை ஏற்றுக்கொண்டவையென யாழை அறிந்தன. தொட்டுத் தொட்டு அவை எழுப்பிய இசையை செவி அறிந்திருந்தது. மிக மெல்ல சுட்டுவிரலால் அதிரும் யாழ்நரம்பை தொட்டபோது முதுகெலும்பு கூச, உடல் அதிர்ந்து விழிநீர் கோத்தது. யாழை உடலோடு சேர்த்து அமர்ந்து அவன் மெல்ல விம்மினான். காலடியோசை கேட்க விழிகளை மேலாடையால் துடைத்துக்கொண்டான்.

இளையவன் சினி அப்பாலிருந்து ஓடிவந்து “மூத்தவரே, யாழ் மீட்டுவது தாங்களா?” என்றான். அவன் மறுமொழி சொல்வதற்குள் “மூத்தவர் யாழ்மீட்டுகிறார், யாழ்மீட்டுகிறார்” என்று கூவியபடி அவன் வெளியே ஓட பிறர் உள்ளே வந்தனர். “மெய்யாகவா?” என்றான் சித்ரன். நாணத்துடன் அசங்கன் “வெறுமனே தடவிப்பார்த்தேன்” என்றான். உத்ஃபுதன் “இல்லை, சற்று முன் அந்தச் சூதர் மீட்டிச்சென்ற இசையின் நீட்சி இது. அதே பண், ஐயமேயில்லை” என்றான். “நான் பயின்றதேயில்லை” என்றான் அசங்கன். “நீங்கள் விழிகளால் பழகியிருப்பீர்கள். நானே பலமுறை பார்த்திருக்கிறேன், பிறர் யாழ் மீட்டுகையில் நீங்கள் சூழல்மறந்து விழிகளால் அவ்விரல்களை மட்டுமே பார்த்து முற்றிலும் ஆழ்ந்திருக்கிறீர்கள்” என்றான் சாந்தன்.

முக்தன் “மூத்தவரே, அதை மீட்டுக!” என்றான். “ஷத்ரியர் யாழ் மீட்டும் வழக்கமில்லை” என்று அசங்கன் சொன்னான். “நாம் குழலிசைப்பவர். இசையை நம் குருதியிலிருந்து அகற்ற இயலாது” என்றான் உத்ஃபுதன். “யாழ் மீட்டும் கைகளால் அம்பு தொடுக்க இயலாது என்பார்கள்” என்றான் அசங்கன். உத்ஃபுதன் “எவர் சொன்னது? திசையானைகளின் கொம்பை நெஞ்சில் சூடிய இலங்கையின் ராவண மகாபிரபு யாழ்வில் தேர்ந்தவர், இசைவேதம் பயின்றவர் என்று நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா?” என்றான். “ஆம்” என்று அசங்கன் சொன்னான். அச்சொற்கள் அவனுக்கு நிறைவளித்தன. பின்னர் “எவரேனும் வருகிறார்களா என்று

பார்” என்று சினியிடம் சொல்ல அவன் அக்கூடத்தின் வாயிலருகே நின்றுகொண்டான். பிறர் ஆங்காங்கே நின்றனர்.

யாழைப்பற்றி மார்பில் சாய்த்து அமர்ந்தான். அதன் ஆணியையும் திருகியையும் தொட்டு சீரமைத்த பின் மெல்ல விரலோட்டலானான். “மூத்தவரே, பலநாள் பயின்று தேர்ந்தவர் போலிருக்கிறீர்கள்” என்று சாந்தன் கூவினான். அவன் முகம் மலர்ந்து “ஆம், இப்படி மீட்ட முடியுமென்றே நான் எண்ணியிருக்கவில்லை” என்றான். மீண்டும் மீண்டும் மீட்டியபோது மெல்ல அவன் எண்ணிய இசைக்கும் விரலில் எழுந்ததற்கும் இடையேயான சிறிய இடைவெளியை கண்டுகொண்டான். அக்குறை அவனை பித்தூட்டி ஆட்கொள்ளும் கொடுந்தெய்வமென பற்றிக்கொண்டது. பின்னர் தனித்திருக்கும் ஒவ்வொரு தருணத்திலும் அவன் உள்ளத்தில் யாழொன்றை மீட்டிக்கொண்டிருந்தான்.

“மூத்தவரே, நீங்கள் தனித்திருக்கையில் உங்கள் கைகளை பார்க்கிறேன். அவை யாழ் மீட்டுவனபோல அசைந்துகொண்டிருக்கின்றன” என்று சினி சொன்னான். “நான் அம்புப் பயிற்சி எடுக்கிறேன்” என்றான் அசங்கன். சினி குழப்பத்துடன் “அம்புகள் இவ்வளவு விரைவாக எடுக்கப்படுவதுண்டா?” என்றான். “இது பிறிதொரு வகை அம்பு” என்று அசங்கன் அவன் தலையை தட்டினான். சினி சிரித்து “இல்லை, என்னை ஏமாற்றுகிறீர்கள். இது யாழேதான்… யாழ்நரம்பில்தான் விரல்கள் ஓடுகின்றன” என்றான். “எவரிடமும் சொல்லாதே” என்றான் அசங்கன். சினி மந்தணம் சொல்லப்படுகையில் சிறுவர் அடையும் உளவிசையை அடைந்து “சாந்தரிடம்கூட சொல்லமாட்டேன்” என்றான். “உத்ஃபுதர் கேட்பார். அவரிடமும் சொல்லமாட்டேன்” என்று சேர்த்துக்கொண்டான்.

சாத்யகி துவாரகைக்கு கிளம்பிச்சென்ற பின்னர் களரித்தலைவர் சிம்ஹர் அவர்களுக்கு வில்லும் வளைதடியும் வாளும் கற்பித்தார். ஆனால் அவரால் அவனை பயிற்றுவிக்கவே இயலவில்லை. “உங்கள் உள்ளம் இதிலில்லை, யாதவரே” என்று சிம்ஹர் சொன்னார். “நாம் கையாளும் படைக்கருவி எதுவாயினும் அதன் வடிவு நம் உள்ளத்திலிருக்க வேண்டும். வெறுங்கையால் வாள்வீசுகையில்கூட எண்ணத்திலிருக்கும் அந்த வாளின் நீளமும் எடையும் விசையும் மெய்யான வாளுக்கு நிகராக இருக்கவேண்டும். அன்றி வாள் ஒருபோதும் வயப்படுவதில்லை. வாள் எனும் பருவடிவை வாள்மை எனும் உளநிகழ்வாக ஆக்கிக்கொள்வதற்கு பெயரே பயிற்சி.” யாழ்மை என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ஒவ்வொரு நாளும் குறுங்காட்டுக்குள் செல்கையில் அங்கிருக்கும் கொடிமண்டபத்தில் முன்னரே கொண்டுவந்து ஒளித்துவைத்த மகரயாழை அவன் மீட்டினான். இளையோர் அவனைச் சூழ்ந்தமர்ந்து அதை கேட்டனர் அவர்கள் எவரும் தாங்கள் வாள்தேர்ச்சி கொள்ளவில்லை என்பதற்காக வருந்தவில்லை. அவன் மீட்டும் யாழுடன் அவர்களின் விழிகளும் கனிந்து இணைந்துகொள்வதை அறிந்தான். விழித்திருக்கும் கணமெல்லாம் விறலியரின் இசைகேட்டு அரண்மனையில் அமைந்திருக்கும் அன்னையின் விழிகள் அவை. அவர்களில் இருவர் அவன் யாழை தாங்கள் வாங்கி மீட்டத்தொடங்கினர். சினி மிக விரைவிலேயே கற்றுக்கொண்டான். ஒருவரையொருவர் ஊக்கியபடி சூதர் அவைகளில் செவிகளால் அள்ளி வந்த மெட்டுகளை மீட்டி களித்தனர்.

துவாரகையிலிருந்து மீண்டதும் சாத்யகி அவர்களை முதல் பார்வையிலேயே அடையாளம் கண்டுகொண்டான். “எவரும் வில்தேர்ச்சி அடையவில்லை அல்லவா?” என்றான். அவர்கள் பேசாமல் நிற்க சினி “யாழ்” என்று தொடங்க அவன் தோளைப் பற்றி நிறுத்தினான் உத்ஃபுதன். “என்ன?” என்று சாத்யகி கேட்டான்.

“வாள்பயிற்சியில் மேலும் ஈடுபாடுகொண்டுள்ளோம், தந்தையே” என்றான் அசங்கன். இம்முறை தந்தைக்கு உகக்காத ஒன்றை செய்கிறோம் எனும் உணர்விருக்கவில்லை. அவருக்கு உகந்ததைச் செய்து முன்னிற்கவேண்டும் என்ற விழைவும் அகன்றுவிட்டிருந்தது. தான் அறிந்த ஒன்றை அறியாது பிறிதொன்றில் ஈடுபட்டிருக்கும் ஒருவராகவே தந்தையை பார்த்தான்.

யாழ் ஒலியென்றாகி, விண் நிறைத்து, அறியா மொழியென்றாகி, புவியில் மழையென இறங்கும் உவகையை ஒருமுறையேனும் இவர் அறிந்திருப்பாரா? “மண்ணில் மிகச் சிலருக்கே இசையை அருளியுள்ளன தெய்வங்கள்” என்று அன்னை ஒருமுறை சொன்னார். “ஏன்?” என்று அவன் கேட்டான். “இசை கேட்போர் பிறிதொன்றுக்கும் ஒவ்வாதவர்கள் ஆகிவிடுகிறார்கள். இவ்வுலகு இசையின்மையின் பெருவெளி. அங்கு தேவர்கள் வந்தமர்ந்து செல்லும் சிறு வட்டங்களென இசையின் தடங்கள் உள்ளன. அங்கு உறைபவர்கள் மட்டுமே இசைகேட்க இயலும். இசையின்மையின் பெருவெளியில் அவர்கள் ஒவ்வொன்றுடனும் முட்டிக்கொள்வார்கள். உரசி சிதைந்து குருதி வடிப்பார்கள். அவர்கள் இசைச்சுவைஞர் அன்றி பிறிதெவரும் அல்லாதாவார்கள். இப்புவியில் அவ்வண்ணம் மானுடர் பெருகினால் வயல் விளைவிப்பவர் எவர்? ஆ புரப்போர் எவர்? போர் புரியவும் நாடாளவும் பொன்எண்ணவும் இங்கு எவர் இருப்பார்கள்?”

“இசைகேட்பவரால் ஆற்றப்படுவதென்ன?” என்றான் சாந்தன். “இசைகேட்பதன்றி பிறிதொன்றும் அவர்கள் ஆற்றுவதில்லை. இங்கு அவர்கள் இருப்பது பிறரின் இசையின்மையை அளப்பதற்கான அளவை எனும் நிலையில் மட்டுமே” என்றார் அன்னை. அவர் சொல்வது என்னவென்று அசங்கனுக்கு புரியவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் மிகுந்துகொண்டே இருக்கும் செறிவுகொண்ட மையத்தில் தானிருப்பதாக அவன் எண்ணிக்கொண்டான். அது இளமை முதல் அவனிலிருந்த குறையுணர்வை அகற்றியது. தன் உடலை மீண்டும் தன்னதென்று உணர்ந்தான். தன் விரல்களை இனியவை என்று கண்டான். அவற்றை கண் முன் ஏந்தி நோக்குகையில் மென்பட்டாலான அரிய இசைக்கருவி ஒன்றைப்போல் தோன்றின. அவற்றின் அனைத்து இயல்புகளும் அவை முன்னரே யாழை அறிந்திருந்தன என்பதனால் உருவானவை என்று அவன் கண்டான்.

தந்தை அவனை அம்பு தொடுக்கச்சொல்லி நோக்கி நின்றார். பதினெட்டு அம்புகளில் இரண்டு மட்டுமே இலக்கை அடைந்தன. அவர் சில கணங்கள் அவனை நோக்கி நின்றபின் ஒரு சொல்கூட உரைக்காமல் திரும்பிக்கொண்டார். முதலில் அது அவனுக்கு ஆறுதலை அளித்தது. பின்னர் அவன் குற்றஉணர்வடைந்தான். அவர் இழித்து ஒரு சொல் உரைத்திருந்தால் அதற்கெதிராக எழுந்து தன்னிலை உறுதி கொண்டிருக்கலாம். அவர் ஒன்றும் உரைக்காததே தன்னை அலைக்கழிக்கிறதென்று உணர்ந்தான். மறுநாள் பதினெட்டு அம்புகளில் எவையுமே இலக்கடையவில்லை. தந்தையின் விழிகளில் சினமெழுவதற்காக அவன் காத்து நின்றான். அவர் அவனை சில கணங்கள் நோக்கி நின்றபின் செல்லுமாறு கைகாட்டி அடுத்தவனை அழைத்தார்.

ஏமாற்றத்துடன் வில்லை வைத்துவிட்டு படைக்கலச்சாலையின் சுவர் சாய்ந்து நின்றான். இளையவன் அம்புகளால் இலக்குகளை அடிக்க அனைத்து அம்புகளும் இலக்கு பிழைப்பதை நோக்கி நின்ற தந்தையின் கண்களை பார்த்தபோது மெல்லிய உளநடுக்குடன் அவன் ஒன்றை உணர்ந்தான். அவர் அவனை நன்கறிவார். அவன் இலக்குகள் குறி தவறும் என்பதை வில்லெடுப்பதற்கு முன்னரே அறிந்திருந்தார். மீண்டும் அவ்விழிகளை பார்த்தான். அவற்றில் சினமில்லை என்று கண்டான்.

பொறுமையின்மையோ எரிச்சலோகூட வெளிப்படவில்லை. தோளிலும் கைகளிலும் வெளிப்பட்ட சலிப்புகூட அவரால் வலிந்து உருவாக்கப்பட்டதே.

அன்று திரும்பிச்செல்கையில் இளையோரிடம் "தந்தைக்கு நம்மேல் சினமில்லை" என்று அவன் சொன்னான். சினி "அது எனக்கு தெரியும்" என்றான். "எவ்வாறு?" என்றான் அசங்கன். "அவர் நான் வில்லை வைத்துவிட்டு கிளம்பும்போது என் தலையில் கைவைத்து அசைத்தார்." அசங்கன் "ஆம், நம் அனைவரையுமே அவர் விழிகளால் தொட்டு விடைகொடுத்தார். நம்மீது அவர் சினம் கொண்டிருக்கவில்லை" என்றான்.

சாத்யகி மீண்டும் துவாரகைக்குச் சென்ற பின்னர் எண்ணும்தோறும் அவனுள் ஓர் அமைதியின்மை எழுந்தது. ஆணையிடப்பட்ட ஒன்றை மறுப்பதன் ஆண்மையென்று ஒன்றுள்ளது. செலுத்தப்படுவதிலிருந்து விலகும்போது தனித்தன்மை அமைகிறது. ஆனால் தந்தை என அவர் விழைவது அதுவென்று அறிந்து அதை இயலாமையால் விலக்குவது பிழையென அவன் அகம் உணர்ந்தது. தந்தைக்கு அவன் அளிக்கக் கூடுவதென அது ஒன்றே உள்ளது. இப்புவியில் அவன் எய்துவன அனைத்தையும்விட அதுவே மேலானது.

ஒரு நாள் அவன் கனவில் தந்தை எங்கோ களம்பட்டார் எனும் செய்தியுடன் வீரன் ஒருவன் வந்தான். அன்னை அலறிவிழ இளையோருடன் ஓடிச்சென்று அரண்மனை முகப்பில் காத்து நின்றிருந்த தேரிலேறிக்கொண்டபோது அவன் விழித்துக்கொண்டான். நெடுநேரம் மஞ்சத்தில் அக்கனவை எண்ணியபடி படுத்துக்கொண்டிருந்தான். அதன் பொருளென்ன என்று அவனால் விளங்கக் கூடவில்லை. முகங்கழுவி களத்திற்குச் சென்றபோது அக்குழப்பம் நெஞ்சில் நிறைந்திருந்தது. தொலைவில் வில்லை பார்த்ததுமே அவன் அறிந்தான், அதன் பொருளென்னவென்று. அவன் அக்கடனை முடிக்கவில்லை என்றால், அவ்வெச்சத்துடன் தந்தை மண்மறைந்தார் என்றால், ஒருபோதும் எஞ்சிய வாழ்நாளில் அவன் நிறைவு கொள்ளப்போவதில்லை.

அன்று வில்லெடுத்தபோது ஆசிரியர் சலிப்புடன் வழக்கம்போல அவனை நோக்காமல் இலக்கை சுட்டிக்காட்டினார். அனைத்து அம்புகளும் இலக்கு தவற அவன் சில கணங்கள் தலைகுனிந்து நின்றான். பிறகு மீண்டும் வில்லை எடுத்தான். இரண்டாம் முறை வில்லெடுக்கும் வழக்கம் அவனுக்கில்லை என்பதனால் துணைஆசிரியர் ஊர்த்துவர் வியப்புடன் அவனை பார்க்க முழு உளத்தையும் விழிகளில் செலுத்தி இலக்கை நோக்கி அடித்தான். பதினெட்டு அம்புகளில் மூன்று இலக்கடைந்தன. அவர் குழப்பத்துடன் "நன்று" என்றார். யாதவர்களின் போர்களெல்லாம் விரிவெளியில் நிகழ்பவை என்பதனால் நிலைவில்லும் தொலையம்புமே அவர்கள் பயில்வன. இலக்கு மிகத்தொலைவில் விழிகூர்ந்தால் மட்டுமே தெரியும்படி இருந்தது. அவன் அதன் மையத்தில் அம்பால் அறைந்ததும் சிம்ஹர் "நன்று" என முகம் மலர்ந்தார்.

அதன் பின் ஒவ்வொரு நாளும் நான்கு மடங்கு பொழுதை அம்புப் பயிற்சிக்கு செலுத்தினான். "நாம் போருக்கு போகவிருக்கிறோமா, மூத்தவரே?" என்றான் சினி. "ஆம்" என்றான். "நம்மீது மகதம் படைகொண்டு வரப்போகிறதா?" என்றான் சினி. "இல்லை, நாம் சென்று மகதத்தை வெல்லவிருக்கிறோம்" என்று அவன் சொன்னான். இளையோர் அவன் வில்தேர்வதை நோக்கி மெல்ல விலக்கம் கொள்ளத் தொடங்கினர். சினியைத் தவிர பிறர் அவனிடம் களியாடுவது அரிதாயிற்று. அவன் தந்தையை நோக்கி சென்றுகொண்டிருந்தான். தந்தையின் நோக்கும் சொல்லும்

அவனிடம் கூட அவர்கள் அவனை தந்தையென்றே எண்ணத் தலைப்பட்டனர். அவன் சொற்களுக்கு பணிந்த நோக்குடன் ஆட்பட்டனர்.

அஸ்தினபுரியில் ஒவ்வொன்றும் பிழையாக சென்று கொண்டிருப்பதை அவையில் நிகழ்ந்த உரையாடல்களிலிருந்து அவன் அறிந்தான். தந்தை போருக்குச் செல்லும் முன் தன் அன்னையிடமும் தந்தையிடமும் விடைகொள்ள வருவாரென்றும், அன்னையிடம் விடைகொள்ள வருகையில் அவரிடம் தானும் போருக்கெழுவதாக கூறவேண்டும் என்றும், வில்லெடுத்து இலக்கை அடித்து தான் அவருக்கு உகந்தவனாக மாறிவிட்டிருப்பதை காட்ட வேண்டுமென்றும் எண்ணியிருந்தான். அவன் இலக்குகள் பெரும்பாலும் நிலையடைந்துகொண்டிருந்தன. ஒவ்வொருநாளும் பயின்று பயின்று தன்னைத் தீட்டி கூரமைத்துக்கொண்டிருந்தான்.

உபப்பிலாவ்யத்திலிருந்து தந்தை விரைவுப்பயணமாக வந்து அன்னையிடம் அவர் போருக்குச் செல்வதாக கூறினார். அன்னை அதை அவனிடம் சொன்னபோது அவன் “நான் தந்தையை சந்திக்கவேண்டும், அன்னையே” என்றான். அன்னை அவன் சொல்லவிருப்பதை உணர்ந்திருந்தாள். மறுநாள் அவர்கள் அனைவரையும் அன்னையின் அறைக்கே வரும்படி தந்தை சொன்னார். அவர்கள் சென்று நின்றபோது கடுமையான நோக்குடன் ஒருமுறை அனைவரையும் நோக்கிவிட்டு “நீங்கள் அனைவரும் என்னுடன் போருக்கு எழுகிறீர்கள்” என்றார்.

சினி “அனைவருமா, தந்தையே?” என்றான். “ஆம்” என்றார் தந்தை. “நானுமா?” என்றான் சினி மீண்டும். “ஆம்” என்றார். “போர்! நான் போருக்கெழுகிறேன்!” என்று சினி இரு கைகளையும் தூக்கி கூவி குதித்தான். அன்னை நீர்பரவிய கண்களால் அவனை பார்த்தார். “அன்னையே, நான் போருக்கெழுகிறேன்! நூறு எதிரிகளை கொல்வேன்! ஏழு விழுப்புண்களுடன் திரும்பி வருவேன்!” என்றான். அசங்கன் தந்தையிடம் தணிந்த குரலில் “இம்முறை தாங்கள் என் வில்தேர்ச்சியை பார்க்கலாம், தந்தையே. என் அம்புகள் இலக்கு பிறழ்வதில்லை” என்றான்.

ஆனால் தந்தை அவனை பார்த்தபோது விழிகளில் துயரே தெரிந்தது. ஆமென்பதுபோல் அவர் தலையசைத்தார். பிறிதொரு சொல்லும் உரைக்காது எழுந்து அறைவிட்டு வெளியே சென்றார். அன்னை அவனிடம் “அவரிடம் இனி இதை குறித்து ஒரு சொல்லும் உரையாட வேண்டியதில்லை” என்றார். “ஏன்?” என்று அவன் கேட்டான். “அவர் இனி இதைப்பற்றி பேச விழையமாட்டார்” என்று அன்னை சொன்னார். அவன் ஏன் என்று கேட்க எண்ணி சொல்லொழிந்தான். சினி “அன்னையே, நான் போருக்குச் சென்றால்…” என தொடங்க அன்னை கடுமையான குரலில் “நானும் பேச விழையவில்லை” என்றார்.

அசங்கன் திரும்பி தம்பியரை நோக்கி “அணுகுக! அணுகிவருக!” என்றான். அவன் உடல் மெல்லிய நடுக்கு கொண்டிருந்தது. முரசு ஆணையிட்டதும் சூழ்ந்திருந்த வில்லவர்கள் “எழுக அம்புகள்!” என்று கூவியபடி விற்களை நிறுத்தி நாணேற்றி அம்புகளை தொடுத்தனர். நீளம்புகள் வானிலெழுந்து வளைந்து யானைநிரையைக் கடந்து அப்பால் விழிக்குத் தெரியாது ததும்பிக்கொண்டிருந்த கௌரவப் படையை சென்று தாக்கின. “தாக்குக! தாக்குக!” என்று தம்பியரை நோக்கி கூவியபடி அசங்கன் அம்புகளை ஏவினான். இந்த அம்புகள் அங்கு சென்று தைப்பது எங்கே? இதோ செல்லும் அம்பால் உயிர்துறப்பவனுக்கும் எனக்கும் என்ன உறவு? விண்ணில் சந்தித்துக்கொண்டால் நாங்கள் ஒருவரை ஒருவர் அறிவோமா?

முகம்நோக்காது அம்பெய்வது எளிதென்று அவன் சற்றுமுன்னர் வரை எண்ணியிருந்தான். அதுவே கடினம் என்று தோன்றியது. இலக்கு விழிமறைந்திருந்தபோது எந்த அம்பும் வீணாகவில்லை. இதோ இது ஏழு மைந்தரின்

தந்தைக்கு. இது இனிய மனையாட்டியை விட்டுவந்த இளமைந்தன் நெஞ்சுக்கு. இது ஒரு தேர்ப்பாகனுக்கு. இது யானைமேல் அமர்ந்தவனுக்கு. அவன் கைநடுங்க வில்லை தாழ்த்தினான். அதிர்ந்துகொண்டிருந்த நாணின்மேல் கைவைத்து அதை நிறுத்தினான். அவன் முதுகெலும்பு கூசி, உடல் விதிர்த்து, விழிகள் கூசின.

தெய்வமெழுந்த பூசகன் என வில் நின்று துள்ள அம்புகளை தொடுத்துக்கொண்டிருந்த அசங்கன் போர்முழவில் ஒலித்தது தன் தந்தையின் பெயரென்பதை எண்ணியிராக் கணமொன்றில் ஓர் அறை விழுந்ததுபோல் உணர்ந்தான். இயல்பாக அவன் வில்லும் அம்பும் அசைவிழந்தன. உள்ளம் சொல் மீண்டபோது “தந்தை!” என்று அவன் கூவினான். அவனைச் சூழ்ந்திருந்த இளையோர் எவரும் முழவிலெழுந்த அச்சொல்லை உணர்ந்ததுபோல் தெரியவில்லை. அவர்களை நோக்கி கைவீசி “தந்தை!” என்று அவன் மீண்டும் சொன்னதும் இளையவன் “ஆம் மூத்தவரே, தந்தையின் பெயர்!” என்றான்.

அவனில் எழுந்த முதல் எண்ணம் தந்தை களம்பட்டிருப்பாரோ என்பதுதான். அவன் கைகள் பதற கால்கள் குழைய தேர்த்தட்டில் தூண்பற்றி நின்றான். சித்ரன் தொழும்பனுக்கு கை காட்ட அவன் மேலெழுந்து இறங்கி “பாஞ்சாலர் சிகண்டி சூழப்பட்டிருக்கிறார். அவருக்கு துணை செல்க என்று யாதவ அரசருக்கு ஆணை சென்றுள்ளது” என்றான். அசங்கன் நெஞ்சின் எடை குறைய வியர்வையை உணர்ந்து புன்னகை செய்தான். “தந்தையை துணை கொள்க!” என்று ஆணையிட்டான். அவன் ஆணையை முழவு ஒலியாக்கியது. உத்ஃபுதனும் சந்திரபானுவும் சபரனும் சாந்தனும் முக்தனும் தேர்களுடன் அவனை சூழ்ந்துவந்தனர். சாலனும் சினியும் சித்ரனும் சித்ராங்கதனும் அடுத்த நிரையாக உடன் தொடர்ந்தனர்.

போர் எவ்வகையிலும் அவன் எண்ணியதுபோல் இருக்கவில்லை. அது தான் எண்ணியதுபோல் இருக்காதென்று அசங்கன் முன்னரே அறிந்திருந்தான். ஆனால் அக்கணிப்பையும் மீறி பிறிதொன்றாக இருந்தது. ஈவிரக்கமற்றதாக, பொருளற்றதாக, வெறும் கொலையும் இறப்புமாக. தனித்தன்மையும் வீரமும் முட்டித் ததும்பும் படைக்கலங்களின் அலைப்பெருக்கில் முற்றிலும் பொருளிழந்து போக கற்றவையும் கேட்டறிந்தவையும் கேலிக்குரியதாக மாறும் மெய்வெளியாக அது இருக்குமென்று அவன் எண்ணியிருந்தான். மூத்த போர்வீரர்கள் மீள மீள அதையே கூறினர்.

“நமக்கு காட்டப்படும் திசை நோக்கி அம்புகளை செலுத்தவேண்டும். பெரும்பாலும் நம் எதிரி முகம் அறியும் தொலைவிலிருப்பதில்லை. நாம் இலக்கு நோக்கி அம்பெய்வதும் பெரும்பாலும் கூடுவதில்லை. அம்புகளின் எண்ணிக்கையை பெருக்குவதொன்றே எளிய படைவீரர் செய்யக்கூடுவது. படைவீரனென்பவன் ஒரு செங்கல். அவனை அடுக்கி படையெனும் சுவர் கட்டப்படுகிறது. அதற்கப்பால் அவன் எதுவுமல்ல” என்றார் உக்ரர். “நாம் நம் சாவு வழியாக அனைத்தையும் சீர்செய்கிறோம். பிற அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற நிகழ்வுகள். எவராலும் வகுத்துக்கொள்ள முடியாத கனவுப்பெருக்கு” என்றார் சக்தர்.

துயின்றுகொண்டிருந்த இளைய வீரனை நோக்கி சுதார்யர் சொன்னார் “இளம்வீரன் முதல்நாள் போரில் அக இறப்பு ஒன்றை அடைகிறான். பின்னர் புற இறப்பு நோக்கி செல்கிறான். சிலர் சிரித்துக்கொண்டு, சிலர் அழுதுகொண்டு. அவ்வளவே வேறுபாடு.” அசங்கன் தன் இளையோருடன் படைநிரைக்கு அப்போதுதான்

வந்திருந்தான். அவர்களுக்கான தேர்கள் வந்துகொண்டிருக்க கவசங்களுடன் காத்திருந்தனர். “மிக இளையோர்” என்றார் சுதார்யர். “அவர்களில் இளையவர் முறையாக படைபயின்றுள்ளாரா?” அசங்கன் “அவன் படைக்கலப்பயிற்சி பெற்றவன்” என்றான். “அது படைப்பயிற்சி அல்ல. படைப்பயிற்சி என்பது தனக்கு எவ்வகையிலும் அப்பாற்பட்ட பொதுவான வஞ்சத்தை தானும் கொண்டு கனலென உளம் மூட்டிக்கொள்வதற்கான பயிற்சி.” அவருடைய ஏளனம் அவனை சொல்லடங்கச்செய்தது.

முதல் மூன்றுநாள் போரில் பாண்டவப் படையில் பெரும்பகுதியினர் பீஷ்மரால் கொல்லப்பட்டுவிட்டிருந்தனர். ஏவலர்களில் படைப்பயிற்சி கொண்டவர்களை தேர்ந்தெடுத்து கவசம் அணியவும் அணிநிற்கவும் பயிற்சி அளித்து படைகளுக்குள் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். மருத்துவநிலைகளில் புண்பட்டுக்கிடந்தவர்களில் சற்றேனும் எழும் நிலையில் இருந்தவர்களை கொண்டுசென்று காவல்நிலைகளின் மேல் அமரச்செய்துவிட்டு அங்கிருந்த காவலர்களை படைகளுக்கு அனுப்பினர். “அடுமனையோர் போரிடும் நாள் அணுகிக்கொண்டிருக்கிறது” என்றார் உக்ரர். “இறந்த உடல்களை வீணாக எரித்துவிட்டோம். அவற்றை தேரில் அமைத்து களத்திற்கு அனுப்பியிருக்கலாம். அம்புதைத்து சரிந்துவிழுவதற்கே என்றால் இறந்த உடலுக்கும் இருந்த உடலுக்கும் என்ன வேறுபாடு?”

ஒவ்வொருநாளும் மேலும் படைக்காக படைப்பிரிவுகளிலிருந்து கோரிக்கை வந்தது. படைப்பிரிவுகளை கலைத்து மீண்டும் பத்தென்றும் நூறென்றும் தொகுத்தனர். “நேரடியாக பிலங்களுக்கும் சிதைகளுக்கும் சென்றவர் பாதி. மருத்துவநிலையினூடாகச் சென்றவர் மீதி. முதல் வழி எளிது, வலியற்றது, சிறுமைகொண்டு நம்பிக்கையிழந்து உளம்தளர்ந்து தெய்வங்களையும் மூதாதையரையும் குலத்தையும் கொடியையும் வசைபாடி பழிகளை ஈட்டிக்கொண்டு சென்றடையும் இவ்வழி மிகச் சுற்றுகொண்டது” என்றார் மருத்துவரான பிரபர். “விழுந்த கணமே செல்பவர்களுக்கு முற்பிறப்பின் நல்லூழ்ப்பயன் சேர்க்கப்பட்டுள்ளது என்று அறிக!” என்றார் அவருடைய துணைவரான சத்வர்.

அவனைச் சூழ்ந்து நின்றிருந்த இளையவர்கள் ஒருவருக்கொருவர் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தனர். சினியின் கையிலிருந்து சாந்தன் எவருமறியாது எதையோ பிடுங்கிக்கொண்டான். அவன் சீற்றத்துடன் ஒரு சொல் உரைக்க உத்ஃபுதன் அவனை அதைவிடத் தாழ்ந்த குரலில் அடக்கினான். இன்னமும் அவர்கள் போரெனில் என்னவென்று உணரவில்லை என்பதை அசங்கன் அறிந்தான். அவர்கள் பதின்மரில் அவன் மட்டுமே போரை நேரில் காணும் வாய்ப்பையேனும் பெற்றிருந்தான். பிறர் முந்தையநாள் புலரி வரை மிகவும் பின்னணியில், குறுங்காட்டில் எல்லைகளில் அமைந்த வெவ்வேறு காவல்மாடங்களில் பணியாற்றினர். புறக்காவல்நிலைகளிலும் காவலர்கள் எவரும் போரையன்றி எதையும் பேச வாய்ப்பில்லை. போருக்கப்பால் எண்ணமென எதுவும் கொண்டிருக்கவில்லை எவரும்.

ஆனால் இளையோரின் உள்ளம் இயங்கும் வழி வேறு என அவன் அறிந்திருந்தான். அவர்கள் தாங்கள் அறியாத அனைத்தையும் பிறருடைய உலகமென ஆக்கிக்கொள்ளக்கூடியவர்கள். எப்போதும் அனைத்துக்கும் வெளியே நின்றிருப்பவர்களாக தங்களை கருதிக்கொள்ள அவர்களால் இயலும். தங்களை உலுக்கும், ஆட்கொள்ளும் அனைத்தின்மீதும் மெல்லிய கேலியை கலந்துகொண்டு ஒருவரோடொருவர் நகையாடி அதை முதிர்ந்தவர்களின் உலகென்று மாற்றி தங்களுக்கென சிறு உலகொன்றை சமைத்துக்கொள்வார்கள். அலைகொந்தளித்து

பெருகிச்செல்லும் நதிப்பரப்பில் சிறு குமிழியொன்றை உருவாக்கி அதில் ஒட்டிக்கொண்டு மிதந்து செல்லும் எறும்புகள்போல.

முந்தையநாள் அந்தியில்தான் அவனுக்கு திருஷ்டத்யும்னனின் ஓலை வந்தது, படைமுகப்பில் சிகண்டியின் படைப்பிரிவுகளில் ஒன்றாக அவன் பணியாற்ற வேண்டும் என்று. முதலில் அந்த ஓலையை படித்தபோது அது காவல் பணிக்கான ஆணை என்றே அவன் உளம் இயல்பாக எண்ணியது. சிகண்டியின் படைப்பிரிவு பதினெட்டாவது துணைப்பிரிவு என்று ஓலையில் படித்து அதை மீண்டும் மூங்கில் குழாயில் இட்டபோதுதான் போர்முனைக்கான ஆணை என்று அறிந்து அவன் உளம் திடுக்கிட்டது. அருகே நின்றிருந்த உத்ஃபுதன் "அரசாணையா, மூத்தவரே?" என்றான். "ஆம்" என்றபோது அவன் குரல் நடுங்கியது.

உத்ஃபுதன் அவன் கையிலிருந்து ஓலையை வாங்கி படித்தான். "நம்மை போர்முனைக்கா அனுப்பியிருக்கிறார்கள்?" என்றான். அப்பால் வளைதடியை வானில் எறிந்து பிடித்துக்கொண்டிருந்த சினி அவனை நோக்கி வந்து "நம் பதின்மரையுமா, மூத்தவரே?" என்றான். "ஆம், நாம் ஒரு சிறுதிரள் என செல்லவேண்டும் என்று ஆணை" என்றான் அசங்கன். உத்ஃபுதன் புன்னகைத்து "நன்று. தனியாக படைமுகப்பில் சென்று நின்றுகொண்டிருக்க வேண்டுமா என்று அஞ்சிக்கொண்டிருந்தேன். மிக நன்று. நாம் எங்கும் ஒரு திரளென்றே இருக்கப்போகிறோம்" என்றான்.

அச்சொல்லிலிருந்த மங்கலமின்மையால் எரிச்சலுற்ற அசங்கன் "நாளை காலை படைப்புறப்பாடு என்றால் இன்று நமக்கு காவல் பணியிருக்காது. நமது காவல்நிலைகளில் சென்று இச்செய்தியை சொல்லிவிட்டு துயிலுங்கள். ஆழ்ந்த துயிலே மறுநாள் காலையில் போருக்கெழுகையில் உடலையும் உள்ளத்தையும் ஆற்றல்கொள்ளச் செய்கிறது" என்றான். "ஆனால் என்னால் துயில இயலாது" என்று சினி சொன்னான். "பகல் முழுக்க குறுங்காட்டுக்குள் நிழலில் துயின்று சற்று முன்னர்தான் நான் விழித்துக்கொண்டேன். மேலும் நாளை போருக்குப் போவதைப்பற்றி எண்ணினால் என்னால் துயில முடியாதாகும்."

உத்ஃபுதன் "அகிபீனா உண்டு துயில்க, அறிவிலி!" என்றான். "ஒவ்வொரு நாளும் ஏற்கெனவே நான் அகிபீனா உண்டுதான் துயில்கிறேன்" என்றான் சினி. "அந்த இனிப்பு இப்போது எனக்கு குமட்டுவதில்லை." உஃத்புதன் "மறுமுறையும் உண்" என்றான். "இனிமேல் உணவென்றுதான் அதை அருந்தவேண்டும்" என்றான் சினி. அவர்கள் வழக்கமான களியாட்டு மனநிலைக்குச் செல்வதை உணர்ந்த அசங்கன் "செல்க, துயின்று மீள்க!" என்றான். அவர்களை அனுப்பிவிட்டு தன் காவல்நிலைக்குச் சென்று தன்னை போருக்கு விடுவித்திருப்பதை அறிவித்து மீண்டான். யானைத்தோல் கூடாரத்தை சுற்றி இளையோர் அமர்ந்து சிரித்து பேசிக்கொண்டிருப்பதை தொலைவிலேயே கண்டான். அவன் அணுகியதும் அவர்கள் சொல்லாடலை நிறுத்தி எழுந்து நின்றனர். சினியின் கண்களில் புன்னகை எஞ்சியிருந்தது.

அசங்கன் "நான் உங்களிடம் துயிலும்படி சொன்னேன்" என்றான். "ஆம், துயில்வதைப்பற்றிதான் எண்ணிக்கொண்டிருக்கிறோம்" என்றான் சாந்தன். சினி "மது அருந்தி துயில்வதா, அகிபீனாவா, அல்லது இரண்டுமா என்று பேசிக்கொண்டிருந்தோம், மூத்தவரே" என்றான். அதிலிருந்த கேலியை உணர்ந்து அசங்கன் முகத்தை இறுக்கிக்கொண்டு "துயில்க! இன்னும் சிறுபொழுதில் நான் வந்து பார்ப்பேன். துயிலாதவர்களை தண்டிப்பேன்" என்றான். "அவ்வாறெனில் தாங்கள் துயிலப்போவதில்லையா, மூத்தவரே?" என்றான் சினி. அசங்கன்

சீற்றத்துடன் திரும்பிப் பார்க்க “ஏனெனில் நற்துயிலே போரில் ஆற்றலை அளிக்கும் என்றார்கள்” என்று அவன் தாழ்ந்த குரலில் சொன்னான். அசங்கன் சினத்தைக் கடந்து “செல்... துயில் கொள்க!” என்று தாழ்ந்த குரலில் சொல்லி தன் குடிலுக்குள் நுழைந்தான்.

அன்றிரவு முழுக்க அவன் துயிலவில்லை. அவனிடம் இரு அகிபீனா உருண்டைகள் இருந்தன. அவற்றை விழுங்கலாம் என்று எண்ணினான். ஆனால் கையிலெடுத்து விரலால் நெருடியபடி வெறுமனே எண்ணங்களை ஓடவிட்டு அமர்ந்திருந்தான். பிறகு மீண்டும் அவற்றை சிறு மூங்கில் சிமிழுக்குள் வைத்தான். இன்றிரவு அரிதானதாக இருக்கக்கூடும். விழித்திருந்து இதில் வாழ்வதே உகந்தது. நாளை இரவு மீள்வேனெனில் துயில் கொள்வேன். ஏன் அவ்வாறு எண்ணிக்கொள்கிறோம்? ஒவ்வொரு நாளும் பல்லாயிரவர் போரிலிருந்து மீள்கிறார்கள்.

ஆனால் போரிலிருந்து மீள்பவர்களை அவன் முன்னரே பார்த்திருந்தான். பெரும்பாலானவர்கள் நடு அகவை கடந்தவர்கள். முதிரா இளைஞர் போர்முனையிலிருந்து மீள்வது அரிதினும் அரிது. “உடல் கொண்டிருக்கும் எச்சரிக்கைகள் அனைத்தையும் உள்ளத்தின் பதற்றத்தால், போர்க்களத்திலெழும் களிவெறியால் இழந்துவிட்டிருக்கிறார்கள் இளையோர். அவர்கள் போர்க்களத்தில் நின்றிருப்பதை பாருங்கள், சில கணங்களுக்குள் படைசூழ்கையின் நெறிகளை மறந்துவிட்டிருப்பார்கள். தங்களை அறியாமலேயே தங்களைப்போன்ற இளையோரை நெருங்குவார்கள். நீர்க்குமிழிகள் ஒன்றோடொன்று இணைந்துகொள்வதுபோல் ஒட்டிக்கொண்டு களத்தில் நின்று ததும்புவார்கள். பெரும்பாலும் எப்பயனும் இன்றி களத்தில் தலைநிறைப்பதொன்றையே அவர்கள் ஆற்றுகிறார்கள். இரக்கமின்றி வெட்டி சரிக்கப்படுகிறார்கள்” உக்ரர் காவல்நிலையில் அவனிடம் சொன்னார்.

போருக்கெழுந்த காலையில் இளையோர் உள்ளம் துள்ளிக்கொண்டிருந்தார்கள். “சாந்தனும் முக்தனும் எங்கே?” என்றான் அசங்கன். “அவர்கள் தங்கள் காவல்மாடங்களில் இருந்து இன்னும் ஆணைபெற்று மீளவில்லை. வந்துவிடுவார்கள்” என்றான் உத்ஃபுதன். அசங்கன் அமைதியிழந்தவனாக “கவசங்கள் வந்துவிட்டனவா?” என்றான். சந்திரபானு “ஆம், உணவுண்ட பின்னர் அவற்றை அணியலாம் என்றனர் ஏவலர்” என்றான். தான் தந்தையைப்போல் ஆகிவிட்டிருப்பதாக அசங்கன் எண்ணினான். ஆனால் அமைதியின்மையை மறைக்க அவனால் இயலவில்லை. “அனைவரும் துயின்றீர்களா?” என்றான். சினி “ஆம், நான் துயின்றேன். ஆனால் முன்னரே விழித்துக்கொண்டேன்” என்றான்.

சித்ரன் “ஒவ்வொருநாளுமென இதற்காக காத்திருந்தேன், மூத்தவரே. காவல்பணிபோல் ஆத்மாவை அழிப்பது பிறிதொன்றில்லை. விழித்திருப்பதும் ஒன்றும் செய்யாதிருப்பதும் ஒருங்கே அமையவேண்டிய பணி...” என்றான். உத்ஃபுதன் “கீழ்மை சேராமல் காவலனென்று அமர்வது எளிதல்ல” என்றான். சந்திரபானு “இன்று நம்மை அனுப்பிவிடுவார்கள் என்று நேற்றே சொன்னார்கள். நானும் சபரனும் அதைப்பற்றி நேற்றே பேசிக்கொண்டோம்” என்றான். சினி எண்ணியிராக் கணம் உவகைகொண்டு “போர்! நான் எண்ணிக்கொண்டே இருந்தேன்!” என்று கூவி கைகளை விரித்து துள்ளி “போர்க்களத்தில் மூத்தவர் கடோத்கஜர் பறக்கிறார் என்றார்கள். பறக்கும் கலையை அவரிடம் கற்பேன்!” என்றான்.

சாந்தனும் முக்தனும் வந்துசேர்ந்ததும் அசங்கன் “ஏன் பிந்தினீர்கள்? பொழுதில்லை” என்று அவர்களிடம் சினம் காட்டிவிட்டு தன் குடிலுக்கு சென்றான். அங்கே

கவசங்களுடன் ஏவலர் காத்திருந்தனர். அவன் பெட்டிமேல் அமர்ந்ததும் குறடுகளையும் கவசங்களையும் அணிவித்தனர். கூத்தில் ஆட்டனை ஆடையும் உருமாற்றும் அணிவித்து தெய்வமென்றாக்குவதுபோல. அவன் அந்தக் கூட்டுக்குள் தன் உடல் மென்தசை நத்தை என சுருண்டுகொண்டதை உணர்ந்தான். சூழ்ந்து கவசங்கள் அணிந்துகொண்டிருந்த இளையோரும் பிறராக மாறிவிட்டிருந்தனர். கவசங்களில் இருளில் எரிந்த பந்தங்கள் செவ்வொளியாக அலைபாய்ந்தன. அந்தக் காலையின் ஒவ்வா தவிப்பு ஏன் என்று அவனுக்கு புரியவில்லை.

கவசங்கள் அணிந்ததும் இளையவர் வந்து அவனருகே நின்றனர். அவன் அவர்களை ஒரு நோக்கு பார்த்தபின் தலைதிருப்பிக்கொண்டு தாழ்ந்த குரலில் “செல்வோம்” என்றான். அவர்கள் பாடிவீட்டில் சாத்யகியை சென்று கண்டனர். தொலைவில் கவசங்களுடன் வந்த அவர்களை பார்த்ததுமே உயரமற்ற மரப்பெட்டிமேல் அமர்ந்து கவசங்கள் அணிவித்துக்கொண்டிருந்த ஏவலர்களுக்கு உடலை அளித்திருந்த சாத்யகி கண் சுருங்க நிமிர்ந்து பார்த்தான். அசங்கன் அவனை அணுகி “வணங்குகிறேன், தந்தையே!” என்றான். திரும்பி தன் இளையோரை அவன் பார்க்க அவர்கள் ஒவ்வொருவராக சாத்யகியின் கால் தொட்டு வணங்கினர். இடக்கையை அவர்கள் தலையில் வைத்து “நலம் சூழ்க!” என்று சாத்யகி சொன்னான்.

அசங்கன் குனிந்து வணங்கி எழுந்தபோதுதான் தந்தை உரைத்த அச்சொல்லில் இருந்த பொருளின்மையை உணர்ந்தான். நீடுவாழ்க என்றோ வென்று மீள்க என்றோ அவர் சொல்லவில்லை. அவ்வாறு சொல்வதில் பொருளில்லை என உணர்ந்திருக்கலாம். அச்சொல்லை கூறுவதேகூட ஒரு நம்பிக்கை இழப்பென அவருக்கு தோன்றியிருக்கக்கூடும். அவர் ஏதேனும் சொல்வாரென்று அசங்கன் எதிர்பார்த்தான். சாத்யகி பக்கவாட்டில் திரும்பி ஏவலனிடம் தன் படைக்கலங்களை கொண்டுவரும்படி கைகாட்டினான். அசங்கன் மீண்டும் ஒரு முறை வணங்கி செல்வோம் என்று இளையோரிடம் கைகாட்டியபின் நடக்க அவர்கள் கவசங்கள் ஒலிக்க அவனை தொடர்ந்தனர்.

உத்ஃபுதன் அவனிடம் “தந்தை நாம் போர்புரிவதை விரும்பவில்லை என்று தோன்றியது” என்றான். அசங்கன் திரும்பி நோக்காமல் “விரும்பவில்லை என்றால் நம்மை அழைத்துவந்திருக்க வேண்டியதில்லை” என்றான். சித்ரன் “ஆம், எனக்கும் அவ்வாறே தோன்றியது” என்றான். “அவர் விழிகளில் வெறுப்பு இருந்ததோ என்றுகூட ஐயுற்றேன்.” “நாம் போருக்கெழுவது அவர் ஆணையால்” என அசங்கன் எரிச்சலுடன் சொன்னான். “ஆனால் அம்முடிவை எடுக்கையில் அவர் பிறிதொரு உளநிலையில் இருந்திருக்கலாம். இந்நான்கு நாள் போருக்குப் பின் ஒவ்வொருவரும் முற்றிலும் மாறானவர்களாக ஆகியிருக்கிறார்கள். பொருளையோ பொருளின்மையையோ சென்றடைந்திருக்கிறார்கள்” என்றான் சந்திரபானு.

அசங்கன் திரும்பி ஏளனத்தால் உதடுகள் சுழிக்க “பொருளை சென்றடைந்த எவரேனும் இருக்க இயலுமா இங்கே?” என்றான். சந்திரபானு “நான் அறியேன். இச்சொற்களை நேற்று படைகளில் பேசும்போது எவரோ சொன்னார்கள். நன்றாக உள்ளதே என்று எடுத்து வைத்துக்கொண்டேன்” என்று சிரித்தான். அச்சிரிப்பு உள்ளத்தை நடுங்கச்செய்ய அசங்கன் திரும்பிக்கொண்டான். ஒருகணம் அவனுள் பெருஞ்சீற்றமொன்று எழுந்து கைவிரல்கள் நடுங்கச் செய்தது. விரல்களை முறுக்கி கைகளை சுருட்டியபடி பற்களைக் கடித்து தலைகுனிந்து நடந்தான். எதன் பொருட்டு தந்தை இவர்களை இக்கொலைக்களத்துக்கு அழைத்து வந்தார்? வெறும் ஆணவம். அதை பணிவென்றும் முற்றளிப்பென்றும் எண்ணிக்கொள்கிறார். வெற்று ஆணவமன்றி வேறொன்றுமில்லை. தான் படிந்தோன், முற்றளித்தோன் என்று

காட்டவிழையும் தன்முனைப்பு. பிறருக்கு மேல் தன்னை எழுப்பி நிறுத்திக்கொள்ள விழையும் சிறுமை.

பின்பு அவன் உளம் மெல்ல அவிந்தது. அல்ல, தன் முற்றளிப்புக்கும் முழுப் பணிவுக்கும் எதிராக தன்னுள் எழுந்த மீறல்களைக் கண்ட அச்சம் அது. தன்னை தான் வெல்லும் பொருட்டு எடுக்கும் மிகைமுடிவு. தன் உயிருக்கு உகந்த ஒன்றை கொண்டுசென்று தெய்வத்திற்கு பலிகொடுப்பது யாதவர் வழக்கம். இனிய பசுவை, இளங்கன்றை. எது இவ்வுலகுடன் தன்னை இணைக்கிறதோ அதை. உடலறுத்துக் கொடுப்பது உண்டு. தலையறுத்து இடுவதும் உண்டு. இழப்பதனூடாக பற்றுகள் அனைத்தையும் கடந்துசெல்வது. முற்றிலும் விடுதலைகொண்டவனால் மட்டுமே முழுதடிமை ஆகவியலும். அத்தனை இழந்துதான் தன்னை மீட்கவேண்டுமென்றால் அவர் கொண்டிருக்கும் ஆணவத்தின் எடைதான் என்ன?

எவ்வாறு அப்படி அறுதியாக எண்ணிக்கொள்கிறேன்? ஏனெனில் பிற எவரையும்விட அவன் தந்தையை அறிவான். தந்தையென்று நடிப்பதையே சொல்லறிந்து தான் திரளத் தொடங்கிய கணம் முதல் செய்துகொண்டிருக்கிறான். தந்தையிலிருந்து தனக்குகந்த ஒன்றை அள்ளிக்கொள்வதும், உகக்காத ஒன்று உடன் வருவதைக்கண்டு சினப்பதும், அவ்விரண்டையும் கலந்து பிறிதொன்றை அடைவதும், அது சலித்ததும் உதறி புதிய ஒன்றுக்காக தேடுவதுமே அவன் வாழ்க்கையென்று அமைந்திருந்தது அதுவரை.

போர்முனை நோக்கி செல்கையில் சினி அவனிடம் “மூத்தவரே, நாம் இந்தக் களத்தில் உயிர்துறக்கக்கூடுமா?” என்றான். “ஏன்?” என்று அசங்கன் கேட்டான். “என்னிடம் என் காவல்நிலை தலைவர் குத்சிதர் சொன்னார். நம்மை களப்பலியாக்கி இளைய யாதவர் முன் தன் முழுதளிப்பை நிலைநாட்டவே தந்தை அழைத்துவந்துள்ளார் என” என்றான் சினி. சில கணங்களுக்குப் பின் அசங்கன் “அவ்வண்ணமே என்றால் நீ வருந்துவாயா?” என்றான். சினி “இல்லை, தந்தை அவ்வாறு எண்ணினால் அது நம் கடமை” என்றான். அசங்கன் முகம் திருப்பிக்கொள்ள சினி “நான் களப்பலியாகவே விரும்புகிறேன்” என்றான். “பேசாமல் வா” என்றான் அசங்கன்.

சிறிய அரைவட்டமாக சூழ்கை அமைந்தது. யாதவ வீரர்களுடன் படைமுகப்பு நோக்கி சென்றுகொண்டிருந்த அசங்கன் வளைவில் விழி திரும்பியபோது தன்னைச் சூழ்ந்து வந்துகொண்டிருந்த தம்பியரைக் கண்டு உளம் அதிர்ந்தான். கால்கள் நடுங்க தேரில் நின்றிருக்க முடியாதவனாக ஒரு கையால் தேர்த்தட்டை பற்றிக்கொண்டான். அவர்கள் முகங்கள் அனைத்திலும் அச்சமோ ஆவலோ இருக்கவில்லை. தயக்கம் கொண்டவர்களாகவோ போருக்கு எழுவதன் உணர்வுகளால் கிளர்ந்தவர்களாகவோ தோன்றவில்லை. அறியா நிலமொன்றுக்குள் நுழையும்போது எழும் விந்தை உணர்ச்சியே துலங்கியது. சினி கையிலிருந்த வில்லை தவறாகப்பற்றித் தாழ்த்தி இருபுறமும் பதற்றத்துடன் நோக்கியபடி வந்தான். பிறர் முகங்கள் உறைந்த நோக்கு கொண்டிருந்தன.

அவன் நோக்கை விலக்கிக்கொண்டான். தேரின் அச்சு ஒலிக்க சினி அவனருகே வந்தான். அவன் திரும்பி நோக்க சினி அவனருகே எழுந்து “நாம் போர்முகப்புக்கு செல்லவிருக்கிறோமா, மூத்தவரே?” என்றான். “ஆம்” என்றான் அசங்கன். “போர்முகப்புக்குச் சென்றவர்கள் மீள்வது அரிது என்கிறார்கள்” என்றான். அசங்கன் “உன் நிரைநோக்கி செல்...” என்றான். “நான் இறக்க விழையவில்லை, மூத்தவரே.

எனக்கு அச்சமாக உள்ளது” என்றான் சினி. “என் கவசம் அவிழ்ந்துகொண்டே இருக்கிறது. அதை ஏவலன் சரிவர கட்டவில்லை.” அசங்கன் “நிரைகொள்க… செல்க!” என்றான். சினி தேரைத் திருப்பி தன் நிரைநோக்கி சென்றான்.

இக்கணமே இவர்களுக்கு திரும்பிச் செல்லும்படி ஆணையிடுவது ஒன்றே நான் செய்யக்கூடுவது. ‘நம் நிலத்துக்கே திரும்புக இளையோரே, இது நமது போர் அல்ல!’ நான் சொல்லவேண்டியது இதை மட்டுமே. அவன் மீண்டும் திரும்பி அவர்களை நோக்கினான். விழிவிலக்கிக்கொண்டு நீள்முச்செறிந்தான். “பதினெட்டாம் படைப்பிரிவு முன்செல்க! சாத்யகியை சூழ்ந்துகொள்க!” என்று ஆணை வந்துகொண்டே இருந்தது. போர்முகப்பின் கொம்போசையை கேட்டான். அங்கே கடும் போர் நிகழ்வதை அதை சூழ்ந்திருக்கும் படை முன்னும்பின்னும் அலைக்கழிவதிலிருந்தே தெரிந்துகொள்ள முடிந்தது. “யானைச்சூழ்கை உடைக்கப்பட்டுவிட்டது… பால்ஹிகப் பிதாமகர் தடையற்று உள்ளே புகுகிறார்!” என எவரோ கூவினர். “சிகண்டியை சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்!” என அப்பால் ஒரு குரல் ஒலித்தது.

அசங்கன் கைகாட்ட தொழும்பன் கழைமேலேறி இறங்கி “யாதவ யுயுதானருக்கும் பால்ஹிகர் பூரிசிரவஸுக்கும் நடுவே உச்சநிலைப் போர் நிகழ்ந்தது. தங்கள் தந்தையாரால் சற்று முன் பூரிசிரவஸ் தோள்கவசம் உடைக்கப்பட்டார். அம்பு பாய்ந்த உடலுடன் தேர்த்தட்டில் விழ அவரை தேர்வலன் இழுத்து பின்கொண்டு சென்றான். இப்போது அவரை கௌரவர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சிகண்டியை அஸ்வத்தாமர் எதிர்கொள்கிறார். யுயுதானரை நோக்கி கௌரவர் முழுமையாகவே திரள்கிறார்கள். ஜயத்ரதரும் அவரை நோக்கி செல்கிறார். அவர் கௌரவப் படைக்குள் தொலைவுவரை ஊடுருவிச் சென்றுவிட்டிருக்கிறார்” என்றான்.

போர்க்களத்தில் வில்லுடன் நின்றிருக்கும் தந்தையை அசங்கன் உள்ளத்தில் கண்டான். சுருங்கிக்கூர்ந்த விழிகளுடன், ஒவ்வொரு அணுவிலும் எச்சரிக்கை நிறைந்த உடலுடன். எதன்பொருட்டு அவர் தன்னை தன் தலைவருக்கு முற்றளித்தார்? ஒருவேளை அவரே அதை அறிந்திருக்க மாட்டார். அத்தனை ஆற்றலையும், உளக்கூரையும் எதன்பொருட்டேனும் அளிக்காவிட்டால் பயனென்ன? அவை வெற்றாணவமாக பொருளழிந்துவிடும் போலும். அளித்து அளித்து அவர் பெருக்கிக்கொண்டவை அவருள் எழுந்து திகழ்கின்றன. அவன் மெய்ப்பு கொண்டான். தந்தைக்கு மிக அண்மையில் வில்லேந்தி அவருக்கு துணைநின்றிருக்கையில் என் முழுதளிப்பு நிறைவுகொள்கிறது. நான் செய்வதற்கு பிறிதொன்றுமில்லை.

அசங்கன் போர்முகப்பை அதற்கு முன்னால் பார்த்திருக்கவில்லை. அதைப் பற்றிய அத்தனை சொற்றொடர்களும் ஒப்புமைகளாகவே இருந்தன. எவரும் அதற்கு நிகரென ஒன்றை முன்பு அறிந்திருக்கவில்லை. ஆகவே அறிந்தவற்றைக்கொண்டு அதை சொன்னார்கள். அலையோடு அலை எனும் சொல்லாட்சி மீள மீள எழுந்தது. உடல்பின்னிக்கொள்ளும் பெருநாகங்கள். மழையை அறையும் காற்று. அவனுக்கு கைத்தறியில் சட்டம் ஓடுகையில் ஊடும்பாவும் மாறிமாறி கலந்து பின்னுவதைப்போல தோன்றியது. இரு படைகளின் ஆடைவண்ணங்களும் கலந்துகுழம்ப விசையில் தலைதிருப்பியபோது புதிய வண்ணம் ஒன்று விழிக்கு தென்பட்டது.

போர்முனையில் அத்தனைபேரும் பித்துகொண்டிருந்தனர். பித்தில்லாமல் அங்கே நின்றிருக்கவே இயலாது என்று தோன்றியது. இளையோர் அஞ்சியிருப்பார்கள் என நினைத்து திரும்பி நோக்கினான். சினி குனிந்து தன் கவசத்தின் கீழ்நுனியை கட்டியிருந்த தோல்நாடாவை இழுத்து இழுத்துவிட்டபடியே வருவதைக் கண்டதும் எரிச்சல் எழுந்தது. கையை எடு அறிவிலி என உள்ளத்துள் சொன்னதுமே அது களம் என நினைவெழுந்தது. அவன் நெஞ்சு மீண்டும் படபடக்கத் தொடங்கியது.

அரசரின் இளையவர் சத்யஜித்தின் தலைமையில் பாஞ்சாலப் படை முன்னெழுந்துகொண்டிருந்தது. தன் தேர் ஏறியிறங்கும் ஒவ்வொரு முழையும் வீழ்ந்த வீரனின் உடல் என்ற எண்ணம் அவன் உடலை கூசச் செய்தது. வில்வளைத்து அம்புகளை தொடுத்தபடி செல்கையில் அவன் அகம் அங்கிருந்து விலகிச்சென்றுவிட ஏங்கியது. முழவுகள் ஆணையிட்டுக்கொண்டே இருந்தன. மிகத் தொலைவில் கொம்போசை எழுந்தது. அருகே சென்ற தேரிலிருந்த பாஞ்சால வீரன் “பாஞ்சால இளவரசர் விண்புகுக! வெற்றிவேல்! வீரவேல்!” என்று கூவியபடி செல்ல அவன் திரும்பி தன் தேர்வலனிடம் “வீழ்ந்தது யார்?” என்றான்.

“இளவரசர் சித்ரகேது” என்றான் தேர்வலன். மீண்டுமொரு கொம்பொலி எழ “யார்? அது யார்?” என்றான் அசங்கன். “இளவரசர் விரிகர்” என்று அவன் சொன்னான். அடுத்த கொம்பொலியை கேட்டதும் அவனே “இளவரசர் யுதாமன்யு” என்றான். அசங்கன் தன் நெஞ்சின் அழுத்தத்தை உணர்ந்தான். மிகத் தொலைவில் சத்யஜித்தின் ஆணை எழுந்தது. தன் பெயர் அதில் சொல்லப்பட்டதை உணர்ந்து அசங்கன் “என்ன? என்ன ஆணை அது?” என்றான். தேர்வலன் “ஆணையை புரிந்துகொள்ள என்னால் இயலாது, இளவரசே” என்றான். மீண்டும் மீண்டும் முழவொலி எழுந்தது.

பாஞ்சால இளவரசன் பிரியதர்சன் தேரில் அசங்கனை நோக்கி வந்தான். இளவெயிலில் அவனுடைய தேரைச் சூழ்ந்து மேயும் பசுவின்மேல் பூச்சிகள்போல அம்புகள் பறந்தன. “யாதவமைந்தரே, தங்கள் தந்தை வெறிகொண்டு தாக்கி முன்சென்றுகொண்டிருக்கிறார். அவரைச் சூழ்ந்து பின்னரண் அமைத்து சென்றுகொண்டிருக்கிறது நமது படைப்பிரிவு…” என்றான். “தந்தையை துணைகொள்ளும்படி தங்களுக்கு ஆணை. பாஞ்சாலப் படையை மூன்று திசையிலும் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நானும் துவஜசேனனும் மறு எல்லையை காக்கிறோம்” என்றபடி அப்பால் சென்றான்.

“தந்தையை துணை கொள்க! தந்தையை துணை கொள்க!” என்று அசங்கன் கையசைத்து தன் தம்பியருக்கு ஆணையிட்டான். அவனுடைய படை சிறிய அலைபோல் களத்தில் நகர்ந்து சென்றது. செல்லும் வழியில் வீழ்ந்த தேர்களையும் யானைகளையும் முட்டி பிரிந்து இணைந்து ஒழுகியது. நெடுந்தொலைவில் வேல் வடிவில் குவிந்து கௌரவப் படைகளுக்குள் நுழைந்திருந்த சாத்யகியின் அணுக்கப் படையுடன் அது இணைந்தது. சாத்யகி எதையுமே நோக்காதவனாக சென்றுகொண்டிருக்க அவனுடைய அணுக்கப்படை தேர்கள் உடைந்தும், புரவிகள் வீழ்ந்தும் சிதறிப்பரந்திருந்தது. அசங்கனின் படை வந்து இணைந்ததும் அது மீண்டும் உருத்திரட்டிக்கொண்டது.

எதிரில் வந்துகொண்டிருந்த அம்புகளின் தாக்குதலால் சாத்யகியை தொடர்ந்து சென்ற வில்லவர் அணி தளர்ந்து பின்நின்றுவிட அவன் மட்டும் மேலும் முன்னகர்ந்துவிட்டிருந்தான். அவனுடைய அணுக்கப்படைகளுக்கும் பாண்டவர்களின் மையப்படைகளுக்கும் நடுவே இடைவெளி விழுந்துவிட்டிருப்பதை கண்ட அசங்கன் “தந்தைக்கு பின்வெளியை நிரப்புக! இடைவெளி அமையலாகாது!

தந்தைக்கு பின்வெளியை முற்றிலும் நிரப்புக!" என்று ஆணையிட்டபடி தேர்களை நீள்ஒழுக்கென மாற்றி பிற வில்லவர்களின் நடுவினூடாகச் சென்று சாத்யகியின் பின்நிரையை தானே அமைத்தான். தன்னைச் சூழ்ந்து வந்துகொண்டிருந்த இளையோரிடம் "நமது பணி தந்தையை அவர்கள் சூழ்ந்துகொள்ளாமல் தடுப்பது மட்டுமே. இருபுறமும் வருபவர்களை அம்புகளால் தடுத்து நிறுத்துங்கள்" என்றான்.

இளையோர் போர்முகப்பு அளித்த திகைப்பிலிருந்து அப்போதுதான் வெளிவந்தனர். விசைதிரட்டி அம்புகளை ஏவியபடி தேரில் முன்சென்றனர். ஆனால் அலையடித்தும் முட்டித்தள்ளாடியும் ஓடிய தேரிலிருந்து அவர்கள் எய்த அம்புகள் எவையும் இலக்கடையவில்லை. "இலக்கு நோக்கவேண்டாம். அம்புகள் திரையென எழுந்து நிற்கட்டும்" என்று அசங்கன் ஆணையிட்டான். தொடர்ந்தெழுந்த அவர்களின் அம்புகளால் சாத்யகியை வளைத்துக்கொள்ள முற்பட்ட கௌரவர்களின் படைகள் தயங்கின. அவர்களில் சிலருடைய புரவிகள் அம்புபட்டு கனைத்தபடி பின்னடைந்தன.

பால்ஹிக அரசுகளின் படைகளை சலன் தலைமைதாங்கி நடத்தினான். பூரிசிரவஸின் மைந்தர்கள் யூபகேதனனும் யூபகேதுவும் பிரதீபனும் பிரஜன்யனும் தங்கள் இளையோர் சூழ பாஞ்சாலத்து அணுக்கப்படையினரை எதிர்த்து அம்புகளை பெய்துகொண்டிருந்தனர். அருகே சலனின் மைந்தர்களான சுசரிதனும் சுதேவனும் வில்லேந்தி நின்று போரிட்டுக்கொண்டிருந்தனர். சாத்யகியை துச்சலனும் துர்முகனும் நேர்நின்று எதிர்க்க இருபுறமும் துச்சகனும் சமனும் சகனும் விந்தனும் அனுவிந்தனும் சுபாகுவும் முன்னிற்க கௌரவர் முழுமையாகச் சூழ்ந்து தாக்கினர். அவர்கள் அனைவரையும் அம்புகளால் தடுத்தபடி சாத்யகி படைமுகப்பில் வீசப்படும் பந்தத்தின் சுடர் என பறந்து நின்றிருந்தான்.

பூரிசிரவஸ் பின்னடைந்ததனால் உருவான விரிசலினூடாக கௌரவப் படைக்குள் சாத்யகி தன்னை புகுத்திக்கொண்டு மேலும் மேலுமென முன்சென்றான். அவர்கள் அவனை சூழ்ந்துகொள்ள முயல அசங்கனும் இளையோரும் அவர்களை அம்புகளால் தடுத்தனர். சலன் தன் மைந்தர்களை நோக்கி "இந்த யாதவ இளையோர் ஆற்றலற்றவர்கள். அஞ்சவேண்டியதில்லை, அம்பெல்லைக்குள் புகுந்து யாதவரை சூழ்ந்துகொள்க!" என்றான். அவர்கள் கூச்சலிட்டபடி அம்புகளை ஏவிக்கொண்டு சவுக்கு நெளிவதுபோல படைவிளிம்பு அசைய முன்னால் வந்தனர். அசங்கன் திரும்பி பாஞ்சாலப் படைகளை நோக்கி "தொடர்க! எங்களை தொடர்க!" என்று கூவியபடி அவர்களை தடுத்தான்.

தன்னைச் சூழ்ந்து பறக்கும் அம்புகளின் ஓசை அசங்கனை திகைக்கச் செய்தது. செவியருகே விம்மிய அம்பு ஒன்று அவனை அதிர்ந்து நிற்கவைக்க அடுத்த கணம் அவன் உடலை ஒரு பேரம்பு அறைந்து கவசத்தை தெறிக்க வைத்தது. பிறிதொரு அம்பு அவன் தலைக்கவசத்தை உடைத்தது. தரையில் அமர்ந்து காவலனிடம் கவசத்தை வாங்கி அணிந்துகொண்டிருக்கையிலேயே இன்னொரு அம்பு வந்து அவன் விலாவில் கவசத்தின் இடைவெளியில் தைத்து நின்றது. உடலில் அனல்பட்டதுபோல் எரிச்சலை அவன் உணர்ந்தான். "தேர்த்தட்டில் படுத்துக்கொள்ளுங்கள், இளவரசே" என்று தேர்வலன் கூவினான். அவன் ஒருக்களித்துப் படுக்க தேர்வலன் கவசத்தை அளித்தான். உடைந்த கவசத்தின் குமிழிக்குழிகளில் தன் குருதி நிறைந்து வழிவதை அசங்கன் பார்த்தான். அவன் தேர்த்தட்டில் மேலும் அம்புகள் வந்து குத்தி நின்றன.

சாத்யகி திரும்பி அசங்கனை நோக்கி அம்புதொடுத்து முன்னேறிய சலனைக் கண்டு சீற்றத்துடன் வசைகூவியபடி அம்புகளை தொடுத்துக்கொண்டு தேரில்

அணுகி வந்தான். சாத்யகியைச் சூழ்ந்திருந்த கௌரவர்கள் துரத்துபவர்கள்போல அவனுக்குப் பின்னால் வந்தனர். சாத்யகியின் விரைவுகண்டு சலன் அஞ்சி பின்னடைய “பால்ஹிகரே, இதுவே உமது விண்தருணம்!” என்று கூவியபடி சாத்யகி அம்புகளை தொடுத்துக்கொண்டே முன்னால் சென்றான். பால்ஹிகர்கள் மேலும் மேலும் வளைந்து பின்னடைந்தனர். அவ்விசையில் சாத்யகி மீண்டும் தன் பின்னணி காவல்படையிலிருந்து அகன்றான். அவனை மீண்டும் கௌரவர் சூழ்ந்துகொண்டனர்.

தேரில் எழுந்து வில்லை கையில் எடுத்துக்கொண்டு “தந்தையின் பின்நிலை ஒழிந்துள்ளது! முன்செல்க! முன்செல்க!” என்று ஆணையிட்டபடி அசங்கன் சாத்யகியின் பின்வெளியை நிரப்பும் பொருட்டு அம்புகளை எய்தபடி முன்னால் சென்றான். எதிர்பாராத கணம் சாத்யகி தன் தேரிலிருந்து பாய்ந்து புரவிமேல் தாவி, முன்னால் நின்ற பிறிதொரு தேரிலேறி, அம்பின் தொடுவட்டத்தைக் கடந்து கௌரவர்களை அணுகி அதே விசையில் கையிலிருந்த நீண்ட வேலால் ஓங்கி எறிந்து சலனின் மைந்தன் சுசரிதனை தேர்த்தட்டில் வீழ்த்தினான். சலன் திகைத்து நிற்க தன் தோளிலிருந்து எடுத்த குறுவேலால் அவனை அறைந்தான்.

சலனின் மார்புக்கவசம் உடைந்து தெறிக்க, பயின்ற உடல் வாழையிலையென பக்கவாட்டில் சரிந்து நெஞ்சுபிளக்க வந்த அடுத்த வேலின் விசையை ஒழிந்தது. பின்னால் நின்ற காவலர்கள் சலனை நோக்கி கொக்கியை வீசி அவனை கவ்வி எடுத்து சுண்டி பின்னிழுத்து படைகளுக்குள் கொண்டுசென்றனர். தேர்த்தட்டிலிருந்து உருண்டு கீழே விழுந்த சுசரிதன் துடித்துக்கொண்டிருக்க அவன் மேல் உருண்டு சென்றது ஒரு தேர். பால்ஹிகப் படையினர் அக்காட்சியால் திகைத்து பின்னகர வெறியுடன் கைவேலைத் தூக்கி போர்க்கூச்சல் எழுப்பியபடி சாத்யகி பாய்ந்து மீண்டும் தன் தேரில் ஏறிக்கொண்டான். தன் மைந்தரை நோக்கி திரும்பி “தொடர்ந்து வருக! பின்தொடர்க!” என்று ஆணையிட்டபடி பால்ஹிக படைகளுக்குள் தன் தேரை நுழைத்தான்.

சாத்யகியின் அம்புகள் சென்று தாக்க பால்ஹிக படைத்தலைவன் கீர்த்திமான் விழுந்தான். பால்ஹிக குடித்தலைவர்கள் எழுவர் களம்பட்டனர். பால்ஹிகப் படை நைந்து அணி உடைந்து பின்னகரத் தொடங்கியது. பின்னிருந்து “பால்ஹிகர்களை துணைசெய்க! பால்ஹிகர் பின்னடைகிறார்கள்!” என்று முரசுகள் முழங்கத் தொடங்கின. அம்முரசொலியின் பொருள் புரியாவிடினும் பின்னணிப் படைகளுக்கான ஆணை என்பதை அசங்கன் உணர்ந்துகொண்டான். சாத்யகியை சூழ்ந்துகொண்ட கௌரவர்கள் வெறிக்கூச்சலிட்டபடி, சினத்தால் தேர்த்தட்டை அறைந்தபடி போரிட்டனர். தந்தையுடன் துணை நிற்க சிகண்டியோ வேறெவரோ வரக்கூடும் என்று அவன் எதிர்பார்த்தான். மிக அப்பால் சிகண்டி கௌரவர்களால் முற்றாக சூழப்பட்டிருந்தார். பிற எவரும் கண்களுக்கு படவில்லை.

இன்று தந்தையின் களவீழ்ச்சி நிகழுமோ என்று ஒருகணம் எண்ணம் ஓடியது அவனுள். இப்போது அவர் கொள்ளும் இந்தப் போர்வெறியும், சொல்லில் பெருகும் தகைகொண்ட பெருஞ்செயல்களும், களம்படுவதற்கு முந்தைய எருமைமறம்தானா? காவியங்கள் போரை எழுதுகின்றனவா, போர் காவியங்களை மீண்டும் நடிக்கிறதா? தந்தையின் பின்வெளியை மட்டும் முழுதாக காத்து நின்றிருக்கவேண்டும். இன்று நான் செய்யக்கூடுவது அது மட்டுமே. கைகளால் ஆணைகளை இட்டபடி அவன் சாத்யகியை தொடர்ந்து சென்றான். பெருமழைக் கதிர்கள் என அவன்மேல் அம்புகள் பொழிந்துகொண்டே இருக்க உடலைக்குனித்து தலைதாழ்த்தி எதையும் நோக்காமல் சென்றுகொண்டிருந்தான்.

அவர்களைத் தொடர்ந்து வந்த பாஞ்சால வில்லவர்களை அம்புகள் தடுத்தமையால் அவர்களால் விரைவுகொள்ள இயலவில்லை. தானும் உடன்பிறந்தாரும் தனித்து படைகளுக்குள் மிக ஊடுருவிவிட்டோமா என்ற ஐயத்தை அவன் அடைந்தான். நின்று உடன்பிறந்தார் அனைவரையும் பின்னிழுத்துக்கொள்ளச் செய்து முதன்மைப் படைகளுக்குள் முற்றிணைந்துகொள்வதே பாதுகாப்பானது. போர்பயிலாத இளையோரை இளவரசனை இழந்து வெறிகொண்டிருக்கும் பால்ஹிகப் படைகளுக்குள் கொண்டுசெல்வதென்பது அழிவுக்கு வழிவகுப்பது. ஆனால் அத்தருணத்தில் தந்தையை தனியாகவிட்டு பின்னகர்வதைக் குறித்து அவனால் எண்ண இயலவில்லை. அவன் உளத்தயக்கம் எதையும் அறிந்திராததுபோல் அவன் கை “முன்னகர்க! மேலும் முன்னகர்க!” என்று தம்பியருக்கு ஆணைகளை இட்டுக்கொண்டிருந்தது.

கௌரவப் படைகளுக்குள் சங்கொலிகள் எழ அச்சத்தாலா வியப்பாலா என்றறியாமல் மெய்ப்பு கொண்டு உச்சமடைந்த உடலுடன் அசங்கன் கூர்ந்து நோக்கினான். இருபுறமும் படைகளைப் பிளந்தபடி அஸ்வத்தாமனும் ஜயத்ரதனும் களத்தில் தோன்றினர். அவர்களின் அணுக்க வீரர்கள் வெறிக்குரல் எழுப்பியபடி அம்புகள் எய்து சாத்யகியை இருபுறமும் நெருங்கி வந்தனர். சாத்யகியால் பின்னுக்குத் தள்ளப்பட்ட கௌரவர்கள் புதுவிசை கொண்டு அம்புகளைத் தொடுத்தபடி மீண்டும் அணியொருங்கு கொண்டனர்.

தந்தை பின்னகரமுடியாதபடி சிக்கிக் கொண்டார் என்பதை அசங்கன் அறிந்தான். அவர்களிருவரையும் சேர்த்து எதிர்கொள்ளும் ஆற்றல் தந்தைக்கில்லை. அஸ்வத்தாமனை தனிப்போரில் சந்திப்பது அர்ஜுனனால் மட்டுமே இயல்வது. தந்தை எக்கணத்திலும் தன் தேரை பின்னிழுத்து மையப்படைக்குள் அமிழ்ந்துவிடுவார். அவருக்குப் பின்னால் அதற்கு வழியிருக்கவேண்டும். “பின்னகர்க! தந்தைக்கு பின்னால் வெளி விடுக!” என்று அவன் ஆணையிட்டான். ஆனால் இளையோர் மேலும் விசைகொண்டு முன்னகர்ந்து கொண்டிருந்தனர். ஆணையில் வந்த மாறுதலை அவர்கள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

மூன்று முறை ஆணை எழுந்தும்கூட இளையவர்கள் சாத்யகியின் பின்வெளியை நிரப்பி நின்றிருப்பதை உணர்ந்த பின்னர்தான் அவர்களால் ஆணைகளை புரிந்துகொள்ள இயலவில்லை என்று அவனுக்கு தெரிந்தது. முன்னரே ஓர் ஆணை அவர்களுக்குள் சென்று பதிந்திருந்ததனால் முழவோசை மாற்றொன்றை உரைத்தபோதும் அவர்கள் அறிந்ததையே உளம் பற்றிக்கொண்டது. ரிஷபவனத்தின் மூன்றிலைக்கொடி பறந்த தேர்கள் அவனைச் சூழ்ந்து ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொண்டு ஆணிகள் உரச சுற்றிவந்தன. “விலகுக! விலகி பின்னடைக!” என்று அசங்கன் அவர்களுக்கு ஆணையிட்டான். சினி கவசத்தின் கீழிருந்த தோல்நாடாவை இழுத்துக்கொண்டிருப்பதை அவன் கண்டான். எரிச்சலுடன் கூச்சலிடுவதற்குள் அவன் காதுக்குள் உறுமியபடி அம்பு ஒன்று வந்து தேர்த்தூணில் தைத்தது.

சாத்யகி தன் அம்புகளால் அஸ்வத்தாமனையும் ஜயத்ரதனையும் எதிர்கொண்டு தடுத்தபடி கைகளை தூக்கினான். அவன் கவசங்கள் உடைத்து தெறித்தன. விலாவிலும் தொடையிலும் அம்பு தைத்தது. அவன் தேர்முகடும் கொடித்தூணும் உடைந்தன. கைகளை அசைத்து “பின்னகர்க! பின்னகர்க!” என்று அவன் ஆணையிட்டான். அசங்கன் ஜயத்ரதனின் பாகனை மட்டுமே இலக்காக்கி அம்புகளை செலுத்தியபடி “பின்னகர்க! பின்னகர்க!” என்று தன் கைவீசி ஆணையிட்டான். இரு முழவுகளும் மாறி மாறி ஆணையிட அவற்றை அறியாதவர்கள்போல் இளையோர் களத்தில் நின்று முட்டித் ததும்பினர். சினி

முதலில் பின்னகர்வதற்கான ஆணையை உணர்ந்தான். அது அவனை குழப்ப தன் தேர்ப்பாகனிடம் வலப்பக்கமாக திரும்பும்படி காலால் தொட்டு ஆணையிட்டான். பாகன் புரவியை வலப்பக்கமாக திருப்ப முன்னால் விசையுடன் சென்று கொண்டிருந்த சாந்தனின் தேர் சென்று அத்தேரில் முட்டியது. இரு தேர்களும் ஒன்றையொன்று செறுத்து அசைவிழந்தன. அதில் பிற தேர்கள் சென்று முட்டின.

அசங்கன் தலையில் கைவைத்து ஓசையின்றி அலறினான். மேலும் மேலுமென இளையோர்களின் தேர்கள் ஒன்றையொன்று முட்டி குழம்பின. சாத்யகி தன் தேரிலிருந்து நீண்ட மூங்கில் கழியை எடுத்து ஊன்றி காற்றில் பறந்து நின்றிருந்த புரவியொன்றின் மேல் பாய்ந்து ஏறி அதை திருப்பி பாண்டவப் படை நோக்கி விரைந்தபடி “தேர்களை கைவிட்டு திரும்புக! தேர்களிலிருந்து புரவியின் மேலேறி பின்னடைக!” என்று ஆணையிட்டுக்கொண்டே சென்றான். அசங்கன் தன் தேரிலிருந்து பாய்ந்திறங்கி அங்கே நின்றிருந்த ஊர்வன் இல்லாத புரவியொன்றை அணுகி அதன் கடிவாளத்தைப்பற்றி பாய்ந்து ஏறிக்கொண்டான்.

அக்கணம் கௌரவப் படைகளுக்குள் இருந்து பிளந்து பீறிட்டெழுந்த பூரிசிரவஸ் விசைமிகுந்த தேரில் நின்றபடி வில்லிழுத்து அம்புகளால் இளையோரை அறைந்தான். என்ன நிகழவிருக்கிறது என்று அசங்கன் உணர்ந்து நெஞ்சுறைந்த கணம் சினியின் தலை வெட்டுண்டு தேர்த்தட்டில் விழுந்து தரையில் உதிர்ந்தது. அனைத்து எண்ணங்களும் அணைய அவன் வெற்றுவிழிகளுடன் நின்றான். சினியின் உடல் தேரில் கைவிரித்து தொங்கிக்கிடக்க சகடம் மீது குருதி வழிந்து தேர்த்தடத்தில் விழுந்தது. மேலும் விசையுடன் விம்மியபடி வந்த பூரிசிரவஸின் அம்புகள் பட்டு இளையோரின் தேர்கள் உடைந்து தெறித்தன. பாகன்கள் தலையறுபட்டு நுகத்தில் விழுந்தனர்.

பால்ஹிகப் படையிலிருந்து வெற்றிக்கூச்சல் எழுந்தது. அவர்கள் பூரிசிரவஸை சூழ்ந்துகொண்டு பாஞ்சாலர்கள் மேல் அம்புகளை ஏவினர். தேர்த்தட்டில் வில்லுடன் நின்ற சாந்தன் தன் நெஞ்சில் பட்ட அம்புடன் தேர்த்தட்டில் அமர அவன் கழுத்தில் நீளம்பு ஒன்று தைத்தது. உத்ஃபுதன் “பின்னடைக! அம்புவட்டத்தை விட்டு நீங்குக!” என்று கைவீசி தொண்டை புடைக்க கூவினான். அவன் கை பிறையம்பு ஒன்றால் சீவி எறியப்பட அவன் தேர்த்தூணில் சரிந்து முட்டிக்கொண்டான். அவன் தலையை இன்னொரு பிறையம்பு வெட்டி மண்ணில் உதிரச்செய்தது.

“தேரிலிருந்து பாய்ந்துவிடுக! பின்னடைக! தேரிலிருந்து இறங்குக! பரிதேர்க” என்று கூவியபடி அசங்கன் பூரிசிரவஸை நோக்கி பாய்ந்து சென்றான். பூரிசிரவஸ் பற்களைக் கடித்தபடி விழிகள் சுருங்கி கூர்கொண்டிருக்க கையில் வில்லும் அம்புமின்றி திகைத்து அசைவிழந்து நின்ற யாதவமைந்தர்களை நோக்கி அம்புகளை தொடுத்தான். சந்திரபானு நெஞ்சில் பாய்ந்த நீளம்பு மறுநுனி முதுகில் எழ மல்லாந்து தேர்த்தட்டில் விழுந்து கால்களை அறைந்துகொண்டு துடித்தான். அவன் கைவிரல்கள் விடுபட்டு அதிர வில் நழுவி கீழே விழுந்தது. அஞ்சி எழுந்த அவன் பாகனின் தலையை பால்ஹிகர்களின் அம்பு கொய்தது.

சபரனும் முக்தனும் தேரிலிருந்து பாய்ந்து இறங்கிவிட்டனர். சபரன் புரவியொன்றின் மேல் ஏறமுயன்றபோது அது அஞ்சியபடி சுழன்றது. அவன் பூரிசிரவஸின் அம்புபட்டு மல்லாந்து தரையில் விழ அடுத்த அம்பால் கழுத்தறுபட்ட புரவி அவன் மேல் விழுந்தது. முக்தன் திகைத்து வெறுங்கைகளை விரித்தபடி அசைவிலாது நின்றான். அரைக்கணம் அவனை நோக்கிய பூரிசிரவஸின் விழி மறுபக்கம் திரும்பியது. அதற்குள் அவன் கையிலிருந்து வந்த அம்பால் முக்தனின் தலை அறுபட்டு மார்பின் மேல் கவிழ்ந்து தொங்க உடல் நின்று ஆடி மறுபக்கம் சரிந்து விழுந்தது.

சித்ரன் பித்தன்போல் அசைவிலாது களத்தில் நின்றான். அசங்கன் “பின்னடைக! மூடா, பின்னடைக!” என்று கூவினான். ஆனால் படைகளுக்குரிய கையசைவையும் குழூக்குறிகளையும் மறந்து யாதவமொழியில் கூச்சலிட்டுக்கொண்டிருந்தான். அவ்வோசை சூழ்ந்திருந்த பெருமுழக்கத்தில் மறைந்தது. “பின்னடைக! பின்னடைக!” என்று அவன் நெஞ்சு உடையும்படி அலறினான். “அப்படியே மண்ணில் படுத்துக்கொள். உடைந்த தேருக்குப் பின் மறைந்துகொள்! அறிவிலி!” ஆனால் சித்ரன் நாகநோக்கால் ஈர்க்கப்படும் எலி என பூரிசிரவஸை நோக்கி மெல்லிய அடியெடுத்து வைத்து சென்றான். பூரிசிரவஸ் அம்பை இழுத்து அவன் நெஞ்சில் பாய்ச்ச ஓசையோ துடிப்போ இல்லாமல் நிலத்தில் சாய்ந்தான்.

அவனருகே நின்ற சாலன் என்ன நிகழ்கிறதென்றே புரியாதவனாக மண்டியிட்டு சித்ரனின் உடலை அள்ளினான். அவன் தலையைப் பற்றி தூக்கியபின் அவன் கையைப் பிடித்து எழுப்ப முயன்றான். பூரிசிரவஸ் பிறையம்பால் அவன் தலையை வெட்டினான். மிக அருகிலிருந்து வந்த அம்பின் விசையால் தலை துண்டாகி அப்பால் விழ அம்பு மேலும் கடந்து வந்து நிலத்தில் தைத்தது. சாலன் சித்ரனின் மேல் குப்புற விழுந்து உடலதிர்ந்தான். உயிரின் விசையால் அவன் இளையோனை இறுகக் கட்டிக்கொண்டான். அவனுடைய நீட்டிய வலக்கால் இழுபட்டு அதிர்ந்தது.

அசங்கன் சித்ராங்கதனை தேடினான். தனக்குப் பின்னால் தந்தையின் ஓலத்தை கேட்டான். “மைந்தா!” என அலறியபடி சாத்யகி புரவியொன்றில் பாய்ந்தேறி போர்முகப்பு நோக்கி வந்தான். ஆனால் பின்னடைந்துகொண்டிருந்த படைகளை காக்கும்பொருட்டு கவசப்படை ஊடேபுகுந்து அவனை போர்முகப்பிலிருந்து அகற்றியது. அசங்கன் சித்ராங்கதன் ஒரு தேர்த்தட்டின் பின்னால் நின்றிருப்பதை கண்டான். அங்கிருந்து அவன் அலறி அழுதபடி சித்ரனின் உடல் நோக்கி செல்ல அவன் தலையை வெட்டி சரித்திட்டது பூரிசிரவஸின் வாளி. அவன் உடல் விசைஅழியாது மேலும் ஓடி குப்புற மண்ணில் விழுந்து அணைத்துக்கொள்வதுபோல் கைவிரித்துக் கிடந்து அதிர்ந்தது.

அசங்கன் ஒற்றை விழியோட்டலில் களத்தில் குருதி சிதறி நெளிந்துகொண்டிருந்த தன் இளையோரை பார்த்தான். எதிரில் விசைகொண்டு வந்த தேரில் வெறிமிக்க முகத்துடன் வில்லேந்தி நின்ற பூரிசிரவஸை கண்டான். அவன் உள்ளத்தில் அனைத்து எண்ணங்களும் வடிய உடல் துயிலிலென ஓய்வு கொண்டது. விரைவிலாது தன் புரவி மேல் கையூன்றி நிலத்தில் இறங்கி இரு கைகளையும் விரித்தபடி அவன் பூரிசிரவஸின் அம்புகளை நோக்கி சென்றான். அவன் நெஞ்சிலொரு நீளம்பு பாய்ந்தது. மூச்சு அதிர அவன் வாய் திறந்தபோது இன்னொரு பேரம்பு அவன் நெஞ்சைத் துளைத்து மறுபக்கம் நுனி நீட்ட அவன் கால் தளர்ந்து நிலத்தில் விழுந்தான். மிக அருகே இளையோன் ஒருவனின் கால்களிருப்பதை உணர்ந்து கைநீட்டி அதை பற்றிக்கொண்டான். அக்கால்கள் இறுதி உயிர்நீக்கத்தின் அதிர்விலிருந்தன. அவன் கைகளும் சேர்ந்து அதிர்ந்தன.

கவசப்படையை வெறிக்கூச்சலுடன் முட்டி பிளந்து அவ்வழியினூடாக பாய்ந்து மறுபக்கம் சென்ற சாத்யகி ஒருகணம்தான் நோக்கினான். அசங்கனின் நெஞ்சில் அம்பு பாய்ந்த கணம், பிற ஒன்பதின்மரையும் அது உள்ளடக்கியிருந்தது. தலையை திருப்பிக்கொண்டு சொல்நின்ற உள்ளத்துடன் நடுங்கினான். சூழ்ந்திருந்த படைவெள்ளம் அலையென வளைந்தெழுந்து அவன் தலைக்குமேல் சென்றது. பின்னர் நினைவு எழுந்தபோது படைப்பிரிவுகளுக்கு உள்ளே தேர்தட்டிலிருந்து

இறக்கி அவனை கீழே மண்ணில் படுக்க வைத்திருந்தார்கள். முகத்தில் விழுந்த நீரின் சிலிர்ப்பில் அவன் இமைகள் அதிர்ந்தன. வானுடைந்தது என பெருகிக்கொட்டும் அருவியொன்றின் அருகே இலைத்தழைப்புக்குள் படுத்திருப்பதாக அவன் உணர்ந்தான்.

“நீர் அருந்துங்கள், யாதவரே” என மரக்குடுவையை அவன் உதடுகளுக்கு அருகே கொண்டுவந்தான் மருத்துவ ஏவலன். நீர் என்னும் சொல் அவன் உடலெங்கும் நிறைந்திருந்த தவிப்பை அவன் உள்ளம் உணரச்செய்தது. தலையை சற்று தூக்கி வலக்கையால் குடுவையை பற்றிக்கொண்டு குடம் நிறையும் ஒலியுடன் அவன் வெல்லம் கலந்த இன்னீரை அருந்தினான். மேலும் மேலும் அருந்தி உடலை அதன் தண்மையாலும் இனிமையாலும் நிரப்பிக்கொண்டான். இன்சுவையை அதைப்போல ஒவ்வொரு தசையும் நாவாகித் திளைக்கும் இனிமையென அவன் உணர்ந்ததே இல்லை. நாவால் துழாவி உதடுகளிலும் மீசைமயிர்ப்பிசிறுகளிலும் ஒட்டியிருந்த இன்துளிகளை நக்கி உண்டான். ரிஷபவனத்தில் சந்திராவதி ஆற்றின் கரையில் மூதன்னையருக்கு அன்னக்கொடை விழாவில் பலாவிலையை கோட்டிச் செய்த சிறு கரண்டியால் அக்காரச்சோற்றை சூடாக அள்ளி அள்ளி உண்டான். இனிமை அவன் முகத்தை மலரச்செய்தது. உடல் அமிழ்ந்துகொண்டே இருப்பதுபோல் ஓய்வுக்குள் சென்றது. இமைகள் எடைகொண்டு அழுந்த அவன் துயிலுக்குள் சென்றான்.

துயிலின் ஆழ்தட்டில் உடல்முட்டிக்கொள்ள திகைத்து விழித்தான். போர்க்களம் அது என உணர்ந்தான். மண்ணில் படுத்திருக்கிறேன். என்ன ஆயிற்று? ஆழ்ந்து புண்பட்டுவிட்டேனா? தன் கைகளையும் கால்களையும் அறிந்தான். அவை உயிருடன் இயல்பாக இருப்புணர்த்தின. நெஞ்சில் அம்பு பாய்ந்திருக்கலாம். இறப்பின் கணமா இது? அது அச்சத்தையோ பதற்றத்தையோ அளிக்கவில்லை. மிக இயல்பாக அவன் அப்போது தன்னில் எழுந்த எண்ணங்களை நோக்கிக்கொண்டிருந்தான். மைந்தர் எங்கிருக்கிறார்கள்? அக்கணம் மீண்டும் நிகழ்ந்தது. அவன் நிலத்தை கையால் அறைந்தபடி எழுந்தமர்ந்தான். உடல் துள்ளிவிழத் தொடங்கியது. இரு மருத்துவர் அவன் தோள்களைப் பற்றினர். “படுத்துக்கொள்ளுங்கள், யாதவரே” என்றார் முதியவர். “இல்லை! இல்லை!” என்றான். மறுகணமே உடல் தீயென பற்றிக்கொள்ள “இழிமக்களே… என் நாவுக்கு இனிமையை ஊட்டியவன் எவன்? இப்போதே அவன் சங்கறுப்பேன்… எனக்கு இனிமையளித்தவன் எவன்?” என்று கூவியபடி எழுந்து நின்றான்.

அப்பால் நின்றிருந்த சேகிதானனைக் கண்டு “நீயா? நீ எப்படி இங்கு வந்தாய்?” என்று கூவியபடிச் சென்று அவன் தோளைப் பற்றினான். அலையும் விழிகளும் பதறும் குரலுமாக “சொல்க, அவர்களில் எவர் எஞ்சியிருக்கிறார்கள்?” என்று கூவினான். சேகிதானன் ஒன்றும் சொல்லாமல் குனிந்து நிற்க “சொல், இப்போதே சொல்… எங்கே அவர்கள்?” என்றான். சேகிதானன் “எவரும் எஞ்சவில்லை, மூத்தவரே” என்றான். நடுங்கும் உடலை தாளமுடியாமல் கால்கள் தளர அவன் மெல்ல பின்னடைந்து தேர்விளிம்பைப் பற்றிக்கொண்டான். “யார்? யார் பிழைத்திருக்கிறார்கள்?” என்று கேட்டான். சேகிதானன் ஒன்றும் சொல்லவில்லை. “சொல் அறிவிலி, இப்போது யார் எஞ்சியிருக்கிறார்கள்?” என்று சாத்யகி கூவினான். சேகிதானன் வெற்று விழிகளுடன் நோக்கினான். கைகள் தளர்ந்து உடல் தாழ்ந்து மண்ணில் அமைய “அனைவருமா?” என்றான் சாத்யகி. சேகிதானன் தலையசைத்தான். சாத்யகி கையூன்றி எழப்போனான்.

மருத்துவ ஏவலன் “தாங்கள் சற்று ஓய்வெடுக்கலாம், யாதவரே” என்றான். “அகிபீனா உள்ளது, உண்டு உறங்குக. இப்பொழுதே பின்உச்சிப்பொழுது ஆகிவிட்டது. இரு

நாழிகைக்குள் களம் ஒடுங்கிவிடும்” என்றார் முதிய மருத்துவர். அவன் அவர்களை வெறித்த செவ்விழிகளால் நோக்கி இல்லை என்று தலையை அசைத்தான். சேகிதானனிடம் “இளைய யாதவர் எங்கிருக்கிறார்?” என்றான். அதை அவன் கேட்க எண்ணவில்லை. ஆகவே கேட்டதும் அவனே திகைத்தான். “அங்கே களமுகப்பில். துரோணரும் இளைய பாண்டவரும் பொருதிக்கொண்டிருக்கிறார்கள். தங்களைப் பார்த்துவர அவர் என்னை அனுப்பினார்” என்றான் சேகிதானன். “ஆம், களத்தில்… அங்கே களம்…” என்றபடி சாத்யகி எழுந்து நின்றான். தலைசுழன்று மண் அலைகொள்வதுபோல் இருந்தது. சேகிதானன் “இந்நிலையில் தாங்கள் போருக்குச் செல்ல இயலாது. ஓய்வு கொள்ளுங்கள், மூத்தவரே” என்றான்.

“ஓய்வு கொள்வதற்காக நான் களம் வரவில்லை. போர்புரிய வந்திருக்கிறேன். போர்புரிய! புரிகிறதா? போர்புரிவதற்காக!” என்று சாத்யகி கூச்சலிட்டான். சேகிதானனின் கைளைப்பற்றி உலுக்கியபடி பற்களை நெறித்து சிவந்த கண்களுடன் நோக்கி “ஆம், போர்புரிவதற்காக… போருக்காக மட்டும்தான்!” என்றான். “ஆம்” என்றான் சேகிதானன். சாத்யகி திரும்பி ஏவலரிடம் “என் தேர் எங்கே?” என்றான். சேகிதானன் “அப்பால் ஒருங்கி நின்றிருக்கிறது, மூத்தவரே” என்றான். “என் தேர் எங்கே? என்ன ஆயிற்று எனக்கு?” என்றான் சாத்யகி அதைக் கேட்காதவனாக. “தாங்கள் தேர்த்தட்டில் நிலைதளர்ந்து விழுந்துவிட்டீர்கள். படைகளால் பின்னணிக்குக் கொண்டுவரப்பட்டீர்கள். இரு புரவிகள் கொல்லப்பட்டன. வேறு புரவிகள் மாற்றப்பட்டுள்ளன” என்றான் ஏவலன். சாத்யகி தன்னை நோக்கியபின் “நானா? என் மேல் அம்புகள் பட்டனவா?” என்றான். சேகிதானன் அதற்கு மறுமொழி சொல்லவில்லை.

“கிளம்புவோம். இன்னும் பொழுதிருக்கிறது” என்றபடி சாத்யகி தேரை நோக்கி திரும்பினான். நெஞ்சுக்குள் அடைப்பொன்றை உணர்ந்தான். ஒரு தசைநார் சிக்கிக்கொண்டு இழுபட்டு அதிர்ந்து சொடுக்கியது. பின்னர் இருமல் தொடங்கியது. பேரோசையுடன் இருமியபடி அவன் சற்றே உடல் வளைத்து நின்றான். சேகிதானன் அவன் கைகளைப் பற்றிக்கொள்ள அவன் தோளைப் பிடித்தபடி நின்று நீண்ட இருமல் தொடர்கள் வழியாகச் சென்று மூச்சிரைக்க நின்றான். “நெஞ்சில் கதை ஏதேனும் பட்டிருக்கவேண்டும். நான் களத்தில் நின்றேன்” என்று மருத்துவ ஏவலனிடம் சொன்னான். “ஆம் யாதவரே, சற்று ஓய்வெடுத்தால் திணறல் நீங்கிவிடும்” என்றான். “களத்தில் ஓய்வெடுக்கும்பொருட்டு வரவில்லை. செல்வோம்” என்றபடி சாத்யகி தேரை நோக்கிச் சென்றான்.

தேரில் ஏறுவதற்காக அதன் படி மீது கால்வைத்தபோது மீண்டும் இருமல் எழுந்து அவன் உடல் அதிரத்தொடங்கியது. நீண்ட மூச்சிரைப்புகளுடன் இருமி அமைந்தான். பின்னர் கைகளை வீசி “செல்க” என்றான். “எங்கு?” என்று தேர்ப்பாகன் கேட்டான். “எங்கு என்றறியாதவனா நீ? மூடா! படைமுகப்புக்கு! படைமுகப்புக்குச் செல்க!” என்று சாத்யகி ஆணையிட்டான். தன் வில்லையும் அம்புத்தூளியையும் எடுத்துக்கொண்டு தேர்த்தட்டில் நின்று சேகிதானனிடம் “செல்க! இளையவரிடம் சொல்க, நான் தளரவில்லை என. ஆம், அதைமட்டும் சொல்க. நான் தளரவில்லை” என்றான். வில்நாட்டி நாணிழுத்துத் தொடுத்து எதிரே ஒளியுடன் வளைந்திருந்த வானை நோக்கி அம்பை வீசினான். எழுந்து சென்று வளைந்து இறங்கிய அந்த அம்பை நோக்கிக்கொண்டிருந்தான். அது ஒரு நெஞ்சைச் சென்றடையும். அந்நெஞ்சுக்குரியவருக்கு தெரியாது அதை எய்தவனின் வஞ்சம் என்ன என்று. அனைத்து அம்புகளும் கேளாச் சொற்களே.

சாத்யகி மேலும் மேலும் அம்புகளை விடுத்தபடி விலகி வழிவிட்ட பாண்டவப் படையை பிளந்துகொண்டு முன்னால் சென்றான். படைமுகப்பை அடைந்தபோது

அங்கே பகதத்தனும் சோமதத்தரும் பாண்டவப் படைகளை எதிர்கொண்டு நிற்பதைக் கண்டான். “இழிமக்களே!” என அடிநெஞ்சிலிருந்து வீறிட்டபடி அவன் அம்புகளை எய்தான். சோமதத்தரின் வில்லும் கவசங்களும் உடைந்தன. அவர் திரும்புவதற்குள் தோளிலும் விலாவிலும் அம்புகள் தைக்க தேர்த்தட்டில் விழுந்தார். பாகன் தேரை பின்னுக்கு இழுத்துச்செல்ல கேடயத்தேர்கள் வந்து அவர்களை மறைத்தன. சாத்யகி பித்தெழுந்தவன்போல் அந்த பெரிய இரும்புக்கேடய நிரை மீதே அம்புகளை எய்தான். அவை உலோக ஓசையுடன் முட்டி உதிர்ந்தன. “இழிமக்களே! இழிமக்களே!” என அவன் கூவிக்கொண்டே இருந்தான்.

பகதத்தன் மறுபக்கத்திலிருந்து “நில் யாதவனே, இங்கு நோக்குக!” என்று அவனை அழைத்தார். “போரென்றால் கன்றோட்டுவதல்ல, கீழ்மகனே. இது சாவின் களம்…” அவன் “ஆம், சாவு! சாவுதான்” என்று கூவியபடி அம்புகளை தொடுத்துக்கொண்டு அவரை நோக்கிச் சென்றான். பகதத்தனின் பெரிய உடலுக்கு இயைய அவருடைய வில் தடித்ததாகவும் பருத்த நாண் கொண்டதாகவும் இருந்தது. அவர் அம்புகள் ஒவ்வொன்றும் ஆள் நீளமும் கைநீள இரும்புக்கூரும் கொண்டிருந்தன. அவை பெரும்பாலும் இலக்குகளை தவறவிட்டன. ஆனால் சென்று தைத்த இடங்களில் உடல்களை ஊடுருவி மறுபுறம் சென்று வீரர்களை நிலத்துடன் சேர்த்து அறைந்தன. தேர்த்தூண்களையும் மகுடங்களையும் தெறிக்க வைத்தன. யானை மத்தகங்களிலேயே தைத்திறங்கி நின்றன.

பகதத்தனின் மூன்று அம்புகளால் தன் தேர்முகடு உடைந்து தெறித்து ஒரு புரவியின் கழுத்தறுத்து விழுந்ததும் சாத்யகி தன் அனைத்து அலைக்கழிப்புகளும் இழந்து விழிகளும் கைகளும் மட்டுமாக ஆனான். பகதத்தனின் ஒவ்வொரு அம்பையும் தனித்தனியாக நோக்கி சற்று நேரத்திலேயே அவர் அம்புவிடும் ஒழுங்கை அறிந்தான். இலக்கு நோக்கியதுமே நாவால் உதடுகளை வருடியபடி அம்பை இழுத்து முழுத்தோள் விசையும் நாணிலேற்றி மூச்சை இழுத்து எய்தார். கதை வீச்சுக்கும் அம்புக்கும் அவரிடம் வேறுபாடு தெரியவில்லை. அம்பு எப்போதுமே நேராகவே சென்றது. வளைந்தெழுந்தமையவோ சுழன்று அணுகவோ அதனால் இயலவில்லை. அவரால் தேர்த்தட்டில் விரைந்து உடல்திருப்பவும் முடியவில்லை.

சாத்யகி கைகளை வீசி பகதத்தனுக்கு வலப்பக்கமாக தன் தேரைச் செலுத்தினான். பகதத்தனின் அம்புபட்டு தன்னைச் சூழ்ந்திருந்த தேர்வீரர்கள் விழுந்தபடியே இருப்பதை பார்த்தான். அவன் தன் வலக்கை பக்கம் செல்வதை உணர்ந்து தேரை அவனை நோக்கி திருப்ப பகதத்தன் ஆணையிட்டார். ஆனால் மேலும் மேலும் வளைந்து சென்றுகொண்டிருந்த சாத்யகியின் தேரை நோக்கி முற்றிலும் திரும்ப அவரால் இயலவில்லை. அவரைச் சூழ்ந்து வந்துகொண்டிருந்த பிரக்ஜ்யோதிஷத்தின் அணுக்க வில்லவர்களின் தேர்கள் அங்கிருந்தன. அவற்றில் முட்டி பகதத்தனின் தேர் நிலையழிந்தது. ஒரு நிலையில் தன் தேர்த்துணைவனால் சாத்யகியின் தேரின் பெரும்பகுதி மறைக்கப்பட்டிருப்பதை அவர் அறிந்தார். ஓரவிழியால் நோக்கவோ பக்கம் திரும்பி அம்பு தொடுக்கவோ அவரால் இயலவில்லை.

சாத்யகியின் அம்புகள் அவர் வலப்பக்க தேர்த்துணைவர்கள் இருவரை வீழ்த்தின. பிறிதொரு அம்பு வந்து அவர் தோள்கவசத்தை உடைக்க அவர் முற்றாக தேரில் திரும்பி நின்று சாத்யகியை எதிர்கொள்வதற்குள் அவர் தோளில் பாய்ந்தது பிறிதொரு அம்பு. அவர் தலைக்கவசத்தை உடைத்தது மீண்டுமொரு அம்பு. அவர் விலாவிலும் பிறிதொன்று நெஞ்சிலும் பாய அவருக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த தேரிலிருந்து வில்லவர் கொக்கிக்கயிற்றை வீசி அவரை

கோத்தெடுத்து இழுத்து தங்கள் தேருக்குள் ஏற்றிக்கொண்டனர். தேரிலிருந்து தேர் வழியாகவே அவர் நீரில் மூழ்குவதுபோல் கௌரவப் படைகளுக்குள் மறைந்தார்.

சாத்யகி வெறிகொண்டவன்போல் பகதத்தனின் ஒழிந்த தேரை நோக்கி அம்புகளை எய்தான். அவரை பின்னுக்கிழுத்துச்சென்ற தேர்வலர்கள் மூவரை வீழ்த்தினான். திகைத்தெழுந்து தேரிலிருந்து இறங்கமுயன்ற பாகனின் தலையை அறுத்தெறிந்தான். காலை தேர்த்தட்டில் ஓங்கி உதைத்தபடி பொருளற்ற வெறிக்கூச்சலை எழுப்பினான். “முன் செல்க! மேலும் முன் செல்க!” என்று தேர்ப்பாகனுக்கு ஆணையிட்டான். மேலும் முன்செல்வதென்றால் அது கௌரவப் படைகளுக்குள் நுழைந்துகொள்வது என்பதை உணர்ந்த தேர்ப்பாகன் தயங்க அவன் விலாவை உதைத்து “முன் செல்க, மூடா!” என்று கூவினான். தன் முகத்தை தேர்த்தூணின் இரும்புக் கவசத்தில் நோக்கியபோது அங்கே பிறிதொருவனைக் கண்டான். அவனுடைய வெறிநின்ற முகத்தில் உதடுகள் விசையுடன் அசைந்தபடியே இருந்தன.

பிரக்ஜ்யோதிஷத்தின் படைகளை பிளந்து அவன் தேர் முன்செல்ல இடப்பக்கத்திலிருந்து சங்கொலி எழுந்தது. அவன் திரும்பிப்பார்க்க பூரிசிரவஸ் தன் தேரில் வருவதை கண்டான். நிலைதளர்ந்தவன்போல் இரண்டடி பின் சென்று தேர்த்தூணில் முட்டிக்கொண்டான். அவன் வில் தாழ்ந்தது. பூரிசிரவஸின் முகம் சாய்வெயிலில் செவ்வொளி சூடியிருந்தது. “கீழ்மகனே! கீழ்மகனே!” என்று கூவியபடி தேரிலிருந்து உடைவாளை உருவியபடி பாய்ந்து புரவிகள் மேலும் பிறிதொரு தேர் விளிம்பிலும் கால்வைத்து காற்றில் பாய்ந்து பூரிசிரவஸை நோக்கி அவன் சென்றுகொண்டிருப்பதை அவனே சற்று பிந்திதான் உணர்ந்தான்.

பூரிசிரவஸ் தன் வாளை உருவிக்கொண்டு தேரிலிருந்து பாய்ந்திறங்கினான். சாத்யகி தன் எடைமிக்க வாளால் ஓங்கி பூரிசிரவஸை வெட்டினான். ஒளிக்கதிர் திரும்புவதுபோல் இயல்பாக அகன்று அவ்வீச்சை பூரிசிரவஸ் தவிர்க்க அருகிருந்த புரவியொன்றின் மேல் பாய்ந்து நின்ற சாத்யகியின் வாளின் பின்னதிர்வை ஏற்று மேலும் இறுகியது அவன் உடல். “இழிமகனே! இழிமகனே!” என்று கூவியபடி வாளைப் பிடுங்கி மீண்டும் மீண்டும் பூரிசிரவஸை வெட்டினான் சாத்யகி. தேன்சிட்டு என பின்பறந்தும் எம்பியமைந்தும் எழுந்தும் இருந்தும் பூரிசிரவஸ் அவன் வாள்வீச்சை எதிர்கொண்டான். ஒருமுறை கூட அவன் வாளை தன் வாளாலோ கவசமணிந்த கையாலோ எதிர்கொள்ளவில்லை.

பூரிசிரவஸ் நுண்வாள் தேர்ச்சி மிக்கவன் என்றும், வாள் சூழ்வதில் அவனுக்கு நிகராக பாரதவர்ஷத்தில் எவருமில்லையென்றும் சாத்யகி அறிந்திருந்தான். பலமுறை தன் வாள் தவிர்க்கப்பட்டபின் மூச்சிரைக்க நின்று புரவிகளில் பட்ட வாளிலிருந்து குருதி சொட்ட அதை நிலம் தாழ்த்தி விழிகூர்ந்து அவனை நோக்கி நின்றபோது அச்சிறிய கண்களில் அவன் எண்ணுவதென்ன என்று உணரமுடியவில்லை. பூரிசிரவஸ் தாழ்ந்த குரலில் “திரும்புக, யாதவரே” என்றான். அச்சொல் ஆழத்து வெறியை கிளப்ப “கொல் என்னை! கீழ்மகனே, கொல் என்னை!” என்று கூவியபடி சாத்யகி மீண்டும் வாளை முழுவிசையுடன் வீசியபடி பூரிசிரவஸை நோக்கிச்சென்றான். அவன் வெட்டுபட்டு அருகிலிருந்த தேரின் சகடம் உடைந்து தெறித்தது. பிறிதொரு வெட்டில் தேர்த்தூணொன்று உடைந்தது.

பூரிசிரவஸ் ஒளியாலோ புகையாலோ ஆனவன் போலிருந்தான். வாள் அவனுடலை ஊடுருவி கடந்து செல்வது போலிருந்தது. மூச்சிரைக்க நின்று கண்ணிலிருந்து நீர் வழிய பற்களை நெறித்து நோக்கியபின் “இன்று நான் மீள்வதில்லை, மலைமகனே” என்று கூவியபடி சாத்யகி பூரிசிரவஸின் வாளை நோக்கியே பாய்ந்தான்.

கணையாழியின் மணியிலிருந்து எழும் சிறு ஒளிக்கீற்றுபோல் அவன் இடத்தோளை தொட்டு கீறிச்சென்றது பூரிசிரவஸின் வாள். சிறு அதிர்வென சாத்யகி அதை உணர்ந்தான். அவன் உடலில் வலப்பக்கம் இடப்பக்கத்துடன் தொடர்பிழந்து எடை மிகுந்து கீழ் நோக்கி இழுக்க உடல் தள்ளாடியது.

பூரிசிரவஸ் பாய்ந்தெழுந்து தன் குறடணிந்த காலால் அவன் இடையை உதைத்து தள்ளினான். பின்னால் சரிந்து தரையில் விழுந்து கிடந்த படைவீரர்களின் உடல்களின்மீது மல்லாந்து வாளுடன் விழுந்தான் சாத்யகி. “செல்க, யாதவரே. இப்புண் உங்களை துயிலச்செய்யும். சென்று நாளை எழுக” என்றபடி பூரிசிரவஸ் பாய்ந்து சென்று தேர்ச்சகடத்தின் ஆரங்களில் மிதித்தேறி தன் தேரில் ஏறிக்கொண்டான். வாளை நீட்டி “இது போர்! என்றேனும் நிகழக்கூடியவை மட்டுமே இங்கு நிகழ்கின்றன! செல்க!” என்றபடி தன் தேரை திருப்ப ஆணையிட்டான்.

கௌரவப் படை விலகி வழிவிட பூரிசிரவஸின் தேர் விரைந்து அகல்வதை நோக்கிக்கொண்டு கிடந்த சாத்யகி உடலைப்புரட்டி எழுந்து தன் தேர்நோக்கிச் சென்றான். அவனை நோக்கி அம்புதொடுக்காமல் சூழ்ந்து நின்றிருந்தனர் பிரக்ஜ்யோதிஷத்தின் வீரர்கள். தேரிலேறிக்கொண்டதும் அவன் தளர்ந்தவனாக அமர்ந்தான். வெயில் நிறம் மாறிக்கொண்டிருந்தது. “செல்க!” என்றான். “பின்னணிக்கா, யாதவரே?” என்றான் பாகன். பின்னணி என்னும் சொல் அவனை நடுங்கச்செய்தது. அங்கே மைந்தர்கள் இல்லை. ஒருகணத்தில் பத்து முகங்களும் மின்னிச்சென்றன. அகம் விம்மி கண்களில் நீர் எழுந்தது. திரும்பி இரைவிழுந்த மீன்பரப்பு என படை கொப்பளித்துக்கொண்டிருந்த திசையை நோக்கி கைசுட்டி “அங்கே” என்றான்.

தேர் படைகளைப் பிளந்துகொண்டு செல்ல அவன் தேர்த்தூணில் எழுந்து சாய்ந்து நின்றபடி அம்புகளுக்காக கைநீட்டினான். அவன் உடலுக்குள் நாண்களில் ஒன்று அறுந்துவிட்டமையால் தசைகள் வலையறுந்துவிட்டிருந்தன. உடல் இடப்பக்கமாக அவனை உந்தியது. ஆவக்காவலன் அளித்த அம்பை அவனால் இலக்கடையச் செய்யமுடியவில்லை. ஆயினும் நிலைக்காது அம்புகளை தொடுத்தபடியே அவன் போர் சுழித்துக்கொண்டிருந்த அந்த மையம் நோக்கிச் சென்றான். தொலைவிலேயே அங்கே பீமன் போர்புரிந்துகொண்டிருப்பதை உணர்ந்தான். அவனை துரியோதனனும் துச்சாதனனும் எதிர்த்து நின்றனர்.

கௌரவர்கள் சித்ரபாணனும் சித்ரவர்மனும் குந்ததாரனும் மகாதரனும் சோமகீர்த்தியும் சுவர்ச்சஸும் அவனை நோக்கித்திரும்ப அவன் அவர்களை அம்புகளால் அறைந்து பின்னடையச் செய்தபடி முன்னால் சென்றான். பீமனைச் சூழ்ந்து தாக்கிய கௌரவர்களின் விழிகளை அவன் அப்போதுதான் அணுக்கத்திலென கண்டான். அவை சிவந்து கலங்கியவை போலிருந்தன. துரியோதனனின் வாய் அசைந்துகொண்டே இருப்பதை கண்டான். எதையோ மென்றுகொண்டிருப்பவன்போல. திகைப்புடன் நோக்கியபோது துச்சாதனனின் வாயும் அசைந்துகொண்டிருப்பது தெரிந்தது. கௌரவர்கள் அனைவருமே எதையோ சொல்லிக்கொண்டிருந்தனர். ஓசையின்றி. உள்ளம் உதடுகளில் நிகழ்வதுபோல. என்ன சொல்கிறார்கள்? அச்சொற்களுக்கு பொருளேதேனும் உண்டா?

பீமன் துரியோதனனுடன் போரிட்டபடியே மெல்லப் பின்னடைந்து கொண்டிருந்தான். மறுபுறம் சங்கொலி எழுந்தது. அஸ்வத்தாமன் கௌரவர்களை பிளந்தபடி தேரில் தோன்றினான். பீமன் மேலும் தேரைப் பின்னடையச் செய்ய

சாத்யகி பீமனைத் தொடரமுயன்ற கௌரவர்களைத் தடுத்து நிறுத்தினான். “துணைசெல்க! பீமனுக்கு துணைசெல்க!” என திருஷ்டத்யும்னனின் முரசுகள் முழங்கின. அஸ்வத்தாமனின் அம்புகளால் பீமனின் கவசங்கள் உடைந்தன. அவன் பாகன் தேரை மீண்டும் மீண்டும் பின்னெடுக்க அஸ்வத்தாமன் அவன் தலையை அறுத்தெறிந்தான். புரவிகள் இரண்டு கழுத்தில் அம்புதைக்க கால்பின்னி கீழே விழுந்தன. பீமன் சரிந்த தேரிலிருந்து விழுவதைப்போல் நிலையழிந்தான்.

அஸ்வத்தாமன் திரும்பி கைநீட்ட ஆவக்காவலன் எடுத்து அளித்த அம்பைக்கண்டு சாத்யகி திகைத்தான். அது எழுவிசையாலேயே சுழன்று நூறு சிற்றம்புகளை ஏவும் சுழலம்பு. “பின்னடைக! பாண்டவரே, பின்னடைக!” என்று கூவியபடி அவன் மேலும் முன்னால் சென்றான். சுழலம்பு உறுமலோசையுடன் வெடித்து எழுந்து காற்றில் சுழன்று அணைந்தது. அதிலிருந்து சின்னஞ்சிறு அம்புகள் கிளம்பி பீமனை நோக்கி எழ சாத்யகி இரு அம்புகளால் அதை அறைந்தான். அவன் அம்புகள் பட்டு சக்ரபாணம் திசையழிந்து அப்பால் சென்றது. அஸ்வத்தாமன் விழியிமைக்கணத்துக்குள் இன்னொரு அம்பால் சாத்யகியை அறைந்தான். கவசம் உடைய சாத்யகி தேர்த்தட்டில் அமர்ந்த கணம் தேர்முகட்டுக்கும் மேலே எழுந்த நீள்வில்லை தேரின் சகடத்துடன் பொருத்தி ஏழுபுரவிகளின் இழுவிசையால் அதை வளைத்து நாணிழுத்து இரண்டுவாரை நீளமுள்ள சூரியாஸ்திரம் எனும் பேரம்பை பீமன் மேல் தொடுத்தான்.

அதன் இரைச்சலை சாத்யகி கேட்டான். அம்பு பீமனின் நெஞ்சுக்கவசத்தை அறைந்து உடைக்க அவன் தூக்கி அப்பால் வீசப்பட்டான். கௌரவர்கள் பெருங்குரலெடுத்து ஆர்ப்பரித்தனர். பீமன் நிலத்தில் கையூன்றி புரண்டு எழுந்து நெஞ்சில் தைத்த அம்புடன் நின்று தள்ளாடினான். அஸ்வத்தாமன் நாணிழுத்து நீளம்பு ஒன்றைத் தொடுத்தபடி பீமனை நோக்கிச் செல்ல அக்கணத்தில் மறுபக்கமிருந்து எழுந்த அம்பால் அவன் வில்லின் நாண் அறுந்தது. அஸ்வத்தாமன் நெடுவில்லைக் கைவிட்டு குனிந்து அடுத்த வில்லை எடுத்து அம்பு தொடுத்து படைபிளந்து தன்னை எதிர்கொண்ட அர்ஜுனன் மேல் ஏவினான். அர்ஜுனன் தன் அம்பால் அதை தடுத்து வீழ்த்தி மீண்டுமொரு அம்பால் அஸ்வத்தாமனின் ஆவக்காவலனை அறைந்து வீழ்த்தினான்.

செவ்வெயிலில் பொன் எனச் சுடரும் கவசங்களுடன் காண்டீபம் ஏந்தி நின்று போர்புரிந்த அர்ஜுனனை தன்னை மறந்தவனாக சாத்யகி நோக்கி நின்றான். அவன் தாடியிலும் உடலிலும் ஒருதுளிக் குருதிகூட இல்லை. அக்கணம் எங்கிருந்தோ களத்திலிறங்கியவன் போலிருந்தான். அவன் தேரின் அமரமுகப்பில் கடிவாளங்களைப் பற்றியபடி சம்மட்டியுடன் அமர்ந்திருந்த இளைய யாதவரின் உடலெங்கும் குருதி வழிந்தது. குருதியால் அவர் குழல்கற்றைகள் தோளில் திரிகளாக ஒட்டியிருந்தன. அவர் விழிகள் அங்கிருந்த அனைவரையும் நோக்கி நோக்கிச் சென்றன. அஸ்வத்தாமனின் தேரை அறைந்து உடைத்த அர்ஜுனனின் அம்புகள் கௌரவர்களை உளம்தளரச் செய்ய அந்தப் படை மெல்ல மெல்ல பின்னடையத் தொடங்கியது.

சாத்யகி தன்னை உணர்ந்தபோது தன் கையிலிருந்த வில்லில் அம்பு பூட்டப்பட்டிருப்பதை உணர்ந்தான். அதை திருப்பி கௌரவப் படையின் வில்லவன் ஒருவனை நோக்கி செலுத்தி மீண்டுமொரு அம்பை எடுத்தபோது விந்தையான ஓர் அமைதியின்மையை அகத்தே உணர்ந்தான். மீண்டும் அதை உணர்ந்தபோது திடுக்கிட்டு வில்தாழ்த்தி தேர்த்தட்டிலிருந்து விழப்போகிறவன்போல் நிலைதடுமாறி வலக்கையால் தேர்த்தூணைப் பற்றிக்கொண்டான். சற்றுமுன் அவன் வில்லில் நாணேறிய அம்பு இளைய யாதவரைக் குறிநோக்கியிருந்தது. அவன் தேரை வந்து

அறைந்தது துச்சாதனனின் அம்பு. இன்னொரு அம்பு அவன் நெஞ்சில் அறைந்து ஓசையுடன் உதிர்ந்தது. அவன் வில்வளைத்து அம்பு செலுத்தியபடி “முன்னேறுக! முன்னே செல்க!” என பாகனுக்கு ஆணையிட்டான்.

சாத்யகி தன் எதிரே தெரிந்த கௌரவர்களின் நிரையை நோக்கி அம்புகளை செலுத்தியபடியே சென்றான். அவனுக்கு எதிராக கௌரவர்கள் அனைவரும் இணைந்து செலுத்திய அம்புகள் வந்து அறைந்து உதிர்ந்தன. “நாம் அம்புவளையத்திற்குள் செல்கிறோம், யாதவரே!” என்று பாகன் சொன்னான். “செல்க! செல்க!” என்றான் சாத்யகி. “அவர்களின் அம்புகள் விசைகொண்டபடியே வருகின்றன!” என்று பாகன் சொல்ல “செல்க… செல்க, அறிவிலி!” என சாத்யகி கூவினான். “யாதவரே, அவர்களின் அம்புகளைவிட தங்கள் அம்புகளின் தொடுதொலைவு மிகுதி… தாங்கள் முன்னகரவேண்டிய தேவையில்லை” என்று பாகன் சொன்னான். சாத்யகி அவன் விலாவை மிதித்து “செல்க! செல்க!” என்று கூவினான்.

பாகன் “தாங்கள் மீள முடியாது, யாதவரே!” என்றான். “மீள வேண்டியதில்லை… மீள விழையவில்லை” என்று சாத்யகி கூச்சலிட்டான். “அச்சமிருந்தால் இறங்கிவிடு… இது சாவின் பாதை. விரும்பாவிடில் அகன்று போ!” என்றான். பாகன் “நான் தங்களுடன் ரிஷபவனத்திலிருந்து வந்தவன்” என்றபின் புரவிகளை சவுக்கால் அறைந்தான். அவை கவசங்கள் உரசி ஒலியெழுப்ப குளம்புகள் விரைவுத்தாளமிட முன்னால் சென்றன. அவன் வருவதை துச்சாதனன் பார்த்தான். கைநீட்டி அவனை சுட்டிக்காட்டியபடி தன் தம்பியருடன் வந்து சூழ்ந்துகொண்டான். அவர்கள் ஏவிய அம்புகளை ஒழிந்து அம்புகளால் அவர்களை அறைந்து சாத்யகி அவர்கள் உருவாக்கிய அரைவட்டத்தின் நடுவே நின்று சுழன்றான்.

ஒருகணத்தில் தன்னை அவன் உணர்ந்தபோது அனைத்திலிருந்தும் விடுபட்டிருப்பதை அறிந்தான். துயரில்லை. இருத்தலின் சுமை இல்லை. அம்பும் எதிரம்பும் மட்டுமே. சாவு அண்மையிலிருக்கையில் உள்ளம் ஏன் உவகை கொள்கிறது? அக்கணம் இளமை உடலில் திரண்ட பின்னால் எப்போதும் சாவைச் சென்று தொட்டு மீள்வதையே விளையாட்டென்றும் களியாட்டென்றும் அவன் கொண்டிருந்ததை உணர்ந்தான். புரவியிலேறி மலைச்சரிவில் பாய்ந்திறங்கியிருக்கிறான். பாறைவிரிசல்களில் விரல்கோத்து செங்குத்தாகத் தொற்றி ஏறியிருக்கிறான். கொடிவள்ளிகளை பற்றிக்கொண்டு ஆழ்பள்ளங்களில் இறங்கியிருக்கிறான். வெறிகொண்டெழுந்த ஏறுகளை வெறும் கைகளுடன் எதிர்கொண்டிருக்கிறான். உடலில் ஆற்றல் கொண்டிருக்கும் எவரும் எவ்வகையிலேனும் சாவை சீண்டிக்கொண்டேதான் இருப்பார்கள். சாவின் முனையில் இருக்கும் நஞ்சு அமுதுக்கு நிகரானது. சாவு சூழ்ந்திருந்தது பலநூறு அம்புமுனைகளாக. சாவு சீற்றம்கொண்ட நாகங்களாக சூழப்பறந்தது. தீத்தழல்களாக மின்னிச் சென்றது.

அவன் நூறு ஆயிரம் பல்லாயிரம் எனப் பிரிந்து ஒவ்வொரு அம்பையும் எதிர்கொண்டு சென்றான். அது அவனை கடந்து செல்வதற்குள் அதை நெஞ்சில் வாங்கிக்கொண்டான். கணந்தோறும் செத்து உதிர்ந்துகொண்டிருந்தான். “யாதவரே, வேண்டாம். இது தற்கொலை” என்று அவனருகே வந்துகொண்டிருந்த பாஞ்சாலத்தின் வில்லவன் கூவினான். அவன் மேலும் அருகே வந்து “யாதவரே!” என்று கூவுவதற்குள் அவன் நெஞ்சில் அம்பு பாய்ந்து பின்னால் தூக்கி வீசப்பட்டான்.

பாகன் திரும்பிப்பார்க்காமல் பெருகிவரும் அருவியை எதிர்கொள்பவனைப்போல தலையை தாழ்த்தி உடலை முன்வளைத்து தேரை செலுத்தினான். அம்புகள் தேர்த்தூணில், கவசங்களில் உரசி பொறிபறக்க கடந்துசென்றன. அவன் நெஞ்சிலும் தோளிலும் வந்தறைந்தன.

சாத்யகி வெறிகொண்டு நகைத்துக்கொண்டிருந்தான். “வருக! வருக!” எதிர்வரும் வீரர்களை அழைத்தான். ஒவ்வொரு அம்பு சென்று படுகையிலும் ஆர்ப்பரித்து எழுந்து குதித்தான். கொலைவெறியும் போர்விசையும் மறைந்து அவன் சிரித்தாடிக்கொண்டிருந்தான். அவன் அம்புகள் எவையும் குறிதவறவில்லை. கவசங்களின் மெல்லிய இடுக்குகளை அவனால் அருகிலென காணமுடிந்தது. அவ்வீரர்கள் கையசைக்கும், தலைதிருப்பும், கால்நீட்டும் அசைவில் மீன்வாய்கள் என அந்தக் கவச இடைவெளிகள் விரிந்து மீள்வதை கணத்தில் ஆயிரத்திலொரு அணுக்காலத்தில் நின்று அவன் விழிகள் கண்டன. அவன் அம்புகள் முன்னரே அறிந்த கூட்டுக்குள் சென்றமையும் பறவைகள்போல அந்த இடைவெளிகளில் புகுந்து தைத்து நின்றன. அவன் நோக்கிய இடத்திலெல்லாம் கௌரவப் படையின் வில்லவர்கள் வீழ்ந்தனர்.

விசையுடன் திரும்பியபோது அவன் தன்னைச் சூழ்ந்திருந்த போர்வெளியை மிக மெல்ல நீர்ப்பாவை என அசைவதாகக் கண்டான். எழுந்து அமையும் பெருஞ்சிறைப் பறவைகள்போல அம்புகள் வில்லில் இருந்து விடுபட்டு காற்றிலெழுந்து வளைந்து அமைந்தன. தேர்கள் காற்றில் மரக்கிளைகள்போல் நலுங்கின. நெளியும் திரையின் ஓவியங்கள்போல வீரர்கள் ஒவ்வொரு முகச்சுளிப்பும் தெளிந்து தெரிய, ஒவ்வொரு அசைவும் விரைவழிய நடனமிட்டனர். அவனைச் சூழ்ந்திருந்த வில்லவர்கள் பெரும்பாலானவர்கள் வீழ்ந்தனர். பாகன்களும் கொல்லப்பட புரவிகள் நிலையழிந்து கனைத்தபடி சுற்றிவர தேர்கள் ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொண்டு நின்றன.

நின்றுவிட்ட தேர்களாலான அரண் ஒன்று உருவாக அதற்குள் சாத்யகி அகப்பட்டான். அவனை எதிர்த்துக்கொண்டிருந்த வில்லவர்கள் அனைவரும் அப்பால் விலகிச்சென்றுவிட அத்தேர்களே அவர்களுக்கு மறைவென்றாயின. தேர்களினூடாக அவர்கள் அவனை நோக்கி அம்புகளை பெய்தனர். ஆனால் அவன் கவசங்களை உடைக்கவோ உடலில் தைக்கவோ அந்த அம்புகளால் இயலவில்லை. தேவர்களால் பாதுகாக்கப்பட்டவனாக அவன் தோன்றினான். அவர்கள் தங்கள் தெரியாக் கைகளால் அம்புகளைப் பிடித்து அப்பாலிட்டனர். அவனைச் சூழ்ந்திருந்த காற்றை அலையடிக்கச் செய்தனர். அவன் விண்ணிலிருந்து இறங்கிய இசையால் ஆட்டுவிக்கப்பட்டதாகத் தோன்றியது. அவன் நடனம் கட்டற்ற வெறியும் பிழையற்ற அசைவுகளும் ஒருங்கே கொண்டதாக, ஆகவே தெய்வங்களுக்குரியதாக தோன்றியது.

தொலைவிலிருந்து நோக்கியவர்கள் அவன் முகத்திலிருந்த பெருங்களிப்பைக் கண்டு திகைத்தனர். தெய்வமெழும் பூசகர்களின் முகங்களில், சிலைகொண்ட தெய்வத்திருவுருக்களில் மட்டுமே விரியும் சிரிப்பு அது. அது அவர்களை அஞ்சவைத்தது. அவன் அம்புகள் வந்து தைக்குந்தோறும் அவர்கள் அஞ்சி அலறி ஒருவரை ஒருவர் எச்சரித்தபடி விலகிச்சென்றனர். அவன் அவர்களை துரத்திக்கொண்டு சென்றான். “நில்லுங்கள்! நில்லுங்கள், பேடிகளே!” என்று கூச்சலிட்டான். அவர்கள் மேலும் மேலும் பின்னடைய அங்கே கௌரவப் படை ஆழ்ந்த பள்ளமென குழிந்துசென்றது. “தடைசெய்க! யாதவர் யுயுதானரை தடை செய்க! ஜயத்ரதர் எழுக!” என சகுனியின் ஆணை ஒலித்தது.

சகுனியின் ஆணையை பாண்டவப் படைக்குள் ஒருவன் பிரித்தறிந்தான். “ஜயத்ரதர்! யாதவரை ஜயத்ரதர் சூழ்ந்துகொள்ளப்போகிறார்!” என அவன் கூவினான். “பின்துணை செல்க! யுயுதானருக்கு பின்துணை செல்க!” என்று பாண்டவர்களின் முரசுகள் முழங்கின. பல பகுதிகளாக பின்னடைவுகொண்டிருந்த பாஞ்சாலப் படையினர் ஒருங்கு திரண்டு அம்புகளை ஏவியபடி முன்னால் வந்தனர். ஆனால் கௌரவர்களின் கேடயத்தேர்கள் ஒன்றுடன் ஒன்று கோத்துக்கொண்டு நீண்டு வந்து இரும்புச்சுவரென்றாகி முழுமையாகவே அவர்களை தடுத்தன. அதற்கு அப்பால் சாத்யகி முற்றிலும் தனியனாக சிக்கிக்கொண்டான். “துணையெழுக! யாதவருக்கு துணையெழுக!” என்று முரசுகள் முழங்கின.

பாண்டவப் படையிலிருந்து தனித்து பிரிந்து முற்றாகச் சூழப்பட்டிருப்பதை சாத்யகி உணரவில்லை. களிவெறிகொண்டு சிரித்துக்கொண்டிருந்த அவனுடைய வில்லில் இருந்து எழுந்த அம்புகளால் அவனைச் சூழ்ந்து ஒரு வேலி உருவானது. அதைவிட அவனைக் கண்டு கௌரவர்கள் கொண்ட அச்சம் கண்காணா பெருவேலியென்றாகியது. அவர்கள் மேலும் பின்னடைய அவன் நின்றிருந்த வட்டம் வெறுமைகொண்டு அகன்றது. அவன் “எங்கே? கௌரவர்கள் எங்கே? எங்கே ஷத்ரியப் பெரும்படை?” என்று வெறிக்கூச்சலிட்டபடி அதன் வடக்குமூலை நோக்கி செல்ல அங்கே முரசுகள் முழங்கின. கௌரவர்களின் பெரும்படை சாத்யகியை நோக்கி வருவதை அவை அறிவித்தன.

ஆனால் அந்த ஓசையையும் சாத்யகி பிரித்தறியவில்லை. அவன் அங்கு நிகழ்ந்த போருக்கு மிக அப்பால் இருந்தான். அவனை தங்கள் கைகளில் ஏந்தியிருந்த தெய்வங்கள் அவர்களின் அமுதை அவன் உடலிலும் உள்ளத்திலும் நிரப்பியிருந்தன. அவன் கைகளும் கண்களும் செவிகளும் பெருகிக்கொண்டே இருந்தன. அவன் பாகனும் ஆவக்காவலனும் அந்தப் பெருங்களியாட்டத்தால் ஆட்கொள்ளப்பட்டனர். அவர்களும் வெறிகொண்டு நகைத்துக்கொண்டிருந்தார்கள். ஆவக்காவலன் கழையூன்றி பாய்ந்து அருகே வந்துகொண்டிருந்த வில்லவன் இறந்துவிழுந்தமையால் ஒழிந்து நின்றிருந்த தேர்களுக்குச் சென்று அங்கிருந்து ஆவநாழிகளை எடுத்துவந்தான். “அவர்கள் மாற்றுருக்கொண்டு வந்த கந்தர்வர்கள். ஒழியா ஆவநாழி தேவர்களுக்கு மட்டுமே உரியது!” என்று கௌரவர்களின் வில்லவன் ஒருவன் கூவினான். அச்சொல் அவன் உதடசைவுகளிலிருந்தே எழுந்து பரவியது.

கொம்போசை ஜயத்ரதன் வருவதை அறிவித்தது. சாத்யகி திரும்பி நோக்கியபோது தலைக்குமேல் எழுந்த நெடுவில்லும் நீளம்புகள் எழுந்து பறந்த தேருமாக ஜயத்ரதன் அவனை நோக்கி வந்தான். அவன் கவசம் மங்கும் ஒளியில் செம்மைகொண்டு மின்னியது. அவன் எய்த முதல் அம்பால் சாத்யகியின் கொடிமரம் முறிந்தது. அவன் நெஞ்சக்கவசம் உடைந்தது. ஜயத்ரதன் ஆணவத்துடன் நகைத்தபடி “ஓடு... ஓடு, கீழ்மகனே! ஷத்ரியர்களுக்கு எதிர்நிற்காதே!” என்றான். ஜயத்ரதனை சாத்யகி அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவன் அம்புகள் ஜயத்ரதனின் தோள்கவசம் விலகிய இடைவெளிகளில் தைத்தன. பிறிதொரு அம்பு ஜயத்ரதனின் கழுத்தை நோக்கி வர அவன் சுழன்று அதை ஒழிந்தான்.

ஜயத்ரதன் அஞ்சிவிட்டான் என பேய்கொண்டதுபோல் துள்ளிக்கொண்டிருந்த அவன் வில் நிலைத்ததிலிருந்து தெரிந்தது. சாத்யகி தயங்காமல் அம்புகளை ஏவியபடி மேலும் மேலுமென முன்னால் சென்றான். அந்த விசை ஜயத்ரதனை மேலும் அஞ்சவைத்தது. அவ்வச்சம் அவன் வில்லை தயங்கவைக்க சாத்யகியின் அம்புகள் அவன் கவசங்களின் இடைவெளிகளில் தைத்தன. தொடையில் அம்புபட்டு அவன் தேர்த்தட்டில் விழுந்தான். மேலுமொரு அம்பிலிருந்து தப்ப புரண்டு தேரிலிருந்து

பின்னால் குதித்தான். அவன் தேரோட்டி தலையறுந்து விழுந்தான். ஜயத்ரதன் பின்னால் வந்த தேரில் கையூன்றி பாய்ந்தேறிக்கொள்ள அந்தத் தேர்வீரன் பின்னால் பாய்ந்து விலகினான். மேலும் அம்புகள் வந்து ஜயத்ரதனை அறைந்தன. அவன் ஒழிந்தாலும் அம்புகள் வஞ்சம் கொண்டு தேடிவந்தன. அவன் தன்னை காத்துகொள்ளவே திணறினான்.

தலைக்கவசம் உடைந்து விழ ஓர் அம்பு ஜயத்ரதன் காதை அறுத்துச்சென்றது. கழுத்தை சீவ வந்த அம்பை தலைதிருப்பி ஒழிந்த ஜயத்ரதன் பாய்ந்து நிலத்தில் இறங்கி பின்னால் நின்ற தேர்களுக்கு நடுவே ஓடி மறைந்தான். ஜயத்ரதனின் தோல்வி கௌரவப் படைகளில் வியப்பு முழக்கமாக வெளிப்பட்டது. அவனைக் காத்து முன்னால் வந்த தேர்வீரர்கள் அம்பால் அறைபட்டு வீழ்ந்தனர். ஒருவனின் தலை தெறித்து மிக அப்பால் சென்று விழ கௌரவ வீரர்கள் சேர்ந்து அலறினர். “ஜயத்ரதரை துணைசெய்க! சைந்தவரைச் சூழ்ந்து காத்துக்கொள்க!” என முழவுகள் ஓசையிடலாயின.சாத்யகி ஊளையிட்டு ஏளன ஒலி எழுப்பியபடி ஜயத்ரதனை தேடித் தேடி அம்புகளை தொடுத்தான்

படையை திரையென கிழித்துக்கொண்டு எழுபவன்போல அப்பால் ஒரு தேரில் ஜயத்ரதன் தோன்றினான். சாத்யகியை நோக்கி உரக்க கூச்சலிட்டு அழைத்து தன் கையிலிருந்த கவசம் ஒன்றை தூக்கிக் காட்டினான். “யாதவக் கீழ்மகனே, இதோ இது உன் சிறுமைந்தனின் நெஞ்சக்கவசம்... அவன் நெஞ்சை கிழித்ததுபோல் உன் நெஞ்சையும் கிழிப்போம்.” சாத்யகியின் கையிலிருந்து வில் நழுவியது. அவனுள் எழுந்த முதல் எண்ணம் தன் பின்னால் சினி காப்புடன் இருக்கிறானா என்பது. மறுஎண்ணம் அலையென வந்து அறைந்தது. அவன் உடலின் அனைத்துத் தசைகளும் விசையிழக்க வலிப்புகொண்டு தேர்த்தட்டில் விழுந்தான். ஜயத்ரதன் தன் வில்லை எடுத்து அம்பு தொடுத்து அவன் மேல் எய்தபோது பாகன் தேரை எதிரிலிருந்த கவிழ்ந்த தேர்மேல் ஓட்டித் திருப்பி அதை கவிழச்செய்தான். கவிழ்ந்த தேருக்குப் பின்னால் சாத்யகி உடல் தளர்ந்து கிடக்க அம்புகள் வந்து தேர்த்தட்டில் அறைந்தன. பாகன் கழுத்தறுபட்டு மறுபக்கம் விழுந்தான். புரவிகள் அம்புபட்டு அலறியபடி சாத்யகியின் மேலேயே விழுந்தன.

பாண்டவப் படை தன் முன்னாலிருந்த கேடயத் தேர்நிரையை உடைத்துத் திறந்து முன்னால் வந்தது. அவர்கள் சேர்ந்து எய்த அம்புகளின் பெருக்கால் ஜயத்ரதனும் கௌரவப் படையினரும் பின்னடைந்தனர். சாத்யகியை அவனுக்குப் பின்னால் வந்த தேரிலிருந்த காப்புப்படை வீரர்கள் கொக்கிக்கயிற்றை வீசி அவன் கவசத்தில் தொடுத்து இழுத்து பின்னெடுத்தனர். அவன் தேர்களில் உடல் முட்டிச் சுழன்று நினைவுமீண்டான். நீர்ப்பெருக்கு ஒன்றில் அடித்துச் செல்லப்பட்டுக்கொண்டிருப்பதாக உணர்ந்தான். தேரிலேறிக்கொண்டபோது அவன் பற்கள் ஒன்றுடன் ஒன்று உரசி கூசின. ஒரு விழி கலங்கி துடித்துக்கொண்டிருக்க கண்ணீர் வழிந்தது. காது அடைத்து போர்க்களம் முழுக்க விந்தையானதோர் மூடுபனி பரவியதுபோல் தோன்றியது. அனைத்து ஓசைகளும் கார்வை கொண்டன. உலோகக் கிழிபடல்போல் ஒரு மூளலோசை எழுந்து அனைத்து ஒலிகளையும் தன்னுள் தொடுத்துக்கொண்டு உடல் கூச தசைகள் சொடுக்கி அதிர அங்கு சூழ்ந்திருந்தது.

“கொண்டு செல்க! யாதவரை பின் கொண்டு செல்க!” என்று படைத்தலைவன் ஒருவன் சொன்னான். ஆணைகள் முழவொலியாக எழுந்தன. சாத்யகி தேர்த்தட்டில் கையூன்றி எழுந்தமர்ந்தான். தன் தோளில் இருந்து கவசத்தை விலக்கி ஆழ்ந்த புண்ணை தொட்டுப் பார்த்தான். ஒரு விரல் உள்ளே நுழையும்படி இருந்த துளையில் குருதி குமிழிகளாக எழுந்தது. ஆனால் அழுத்தி நோக்கியபோது வலிக்கவில்லை.

ஏதோ ஒன்று அவனுள் குடியேறி எழுந்ததுபோல அவன் “போர்முனைக்கு! மீண்டும் போர்முனைக்கு!” என்றபடி எழுந்தான். நீர் நிறைந்த கலமென அவன் உடல் ததும்பியது. அத்தேரின் பாகன் “போதும் யாதவரே, மேலும் களம் செல்வது நன்றல்ல” என்றான். “நான் களத்திலிருந்து மீள விரும்பவில்லை. செல்க! களம்முன் செல்க!” என்று அவன் கூவினான்.

பாகன் “தங்களை மீளக் கொண்டுசெல்லும்படி ஆணை” என்றான். “என் கடன் போரை நிகழ்த்துவதே” என்றான் சாத்யகி. “என் ஆணையை தலைக்கொள்வதே உன் கடமை” என்று சொல்லி வில்லை எடுத்தான். “யாதவரே!” என பாகன் அழைக்க “உன் ஆளுகைக்குள் நான் இல்லை. முன்செல்க!” என்று சாத்யகி ஆணையிட்டான். தேர்ப்பாகன் சில கணங்களுக்குப் பின் சவுக்கால் புரவிகளைச் சுண்டி தேரை முன்னால் செலுத்தினான். பாண்டவப் படையின் முகப்பில் கேடயநிரைக்கு அப்பாலிருந்து அம்புகள் வந்து முட்டி வீழ்ந்துகொண்டிருந்தன. அவனுக்கு அருகே நின்ற இரு வீரர்கள் அம்புபட்டு அலறி விழுந்தனர்.

அவன் கேடயப்படையை அணுகி “படைவாயில் திறக்கட்டும்!” என ஆணையிட்டான். அவ்விரிசலினூடாக அவனுடைய தேர் முன்னால் சென்றது. அம்பெடுத்து இழுத்து தொடுத்தபோது கைகள் நடுங்கின. முதல் வீரனை குறிவைத்து எய்த அம்பு அப்பால் எங்கோ சென்றது. ஓங்கி தேர்த்தட்டை மிதித்து வெறிக்கூச்சலிட்டபடி அடுத்த அம்பை எடுத்து அதே விசையில் எய்து அவனை வீழ்த்தினான். “என் விசை குறையவில்லை! என் உள்ளிருந்து எஞ்சிய உயிரனைத்தையும் விசையாக்குவேன். இன்று எரிந்தமைக என் உடல்! எரிந்தமைக என் உளம்! செல்க! செல்க!”

அம்பை இழுத்துச் செலுத்தும்போது ஒவ்வொரு முறையும் முழுதுடலும் தன் கைகளினூடாக நாணில் எழுந்தமைந்து விடுபட அவனில் ஒரு பகுதியென எழுந்து சீற்றத்துடன் உறுமலோசை எழுப்பி சென்று தைத்து நின்றது. ஆனால் அவை பெரும்பாலும் குறிதவறின. அவற்றில் வெறும் விசை மட்டுமே இருந்தது. அவன் கற்றவை, பயின்றவை அனைத்தும் முற்றாகவே கைகளிலிருந்தும் கண்களிலிருந்தும் அகன்றுவிட்டிருந்தன. “உங்களால் நிற்க இயலவில்லை, யாதவரே” என்றான் பாகன். “செல்க, மூடா! செல்க!” என்று சாத்யகி கூவி மீண்டும் அம்புகளை எடுத்து தொடுத்தான். தேர் எதிலோ ஏறியிறங்க அவன் தேர்த்தட்டில் விசையுடன் முட்டிக்கொண்டான்.

பிறிதொரு முறை தேர் திரும்பியபோது சங்குகளும் முழவுகளும் ஒலிக்க அவன் தன் எதிரே பீஷ்மரை கண்டான். வில் செயலிழக்க மெய்மறந்தவன்போல அவரை பார்த்துக்கொண்டிருந்தான். சாயும் வெயிலொளியில் கவசங்கள் ஒளிர, அம்புகள் பொறிகளெனக் கிளம்ப, விசையுடன் சுழலும் தேர்ச்சகடங்களால் அவர் சாணைதீட்டப்படும் வாளெனத் தோன்றினார். அப்போர்க்களத்திற்கு மிக அப்பால் எங்கோ இருப்பவர்போல நீரில் பாசிச்சரடுகள் என அலைகொள்ளும் நீண்ட கைகளுடன் உலைந்தாடிக்கொண்டிருந்தார். மறுகணம் சாத்யகி “பிதாமகரை நோக்கி செல்க! பிதாமகரை நோக்கி செல்க!” என்று கூவினான். அவன் தேர் திரும்பி அணைந்தபோது அவன் நிழல் நீண்டு பீஷ்மர்மேல் விழுந்தது. அக்கணம் பிதாமகர் அவனை பார்த்தார். சாத்யகி அவரை நோக்கி அம்புகளை எய்தபடி முன்னால் சென்றான்.

பாகன் “பிதாமகரின் அம்புவளையத்திற்குள் நுழையவிருக்கிறோம், யாதவரே” என்றான். வானில் மெல்லிய மின்னல் ஒன்று துடித்தணைந்தது. இடியோசை எழுந்து உருண்டு உருண்டு அகன்றது. அதில் பீஷ்மரின் உருவம் நடுங்கியமைவதை அவன் கண்டான். “செல்க!” என்று சாத்யகி கனவிலென ஆணையிட்டான். அவன் தொடுத்த

அம்புகள் பீஷ்மரின் உடல் அருகே சென்று இறங்கின. அவர் கவசங்களில் உரசி அப்பால் சென்றன. பீஷ்மர் அவனை பார்த்தபோது அவர் முகம் எதிர்வெயிலில் தாடியின் மயிர்க்கற்றைகள் தழல்களெனத் தெரிய கனன்றுகொண்டிருந்தது.

அவருடைய முதல் அம்பு அவன் கவசத்தில் பாய்ந்தது. இரண்டாவது அம்பு அதை உடைத்தது. அவன் கால் வளைத்து தேர்த்தட்டில் அமர அவன் தலைக்கவசத்தை உடைத்து தெறிக்க வைத்தது அடுத்த அம்பு. “பின்னடைவோம், யாதவரே! தன்னந்தனியாக பிதாமகர் முன் நிலைகொள்வது எளிதல்ல” என்று பாகன் கூவினான். “செல்க! செல்க!” என்று கூவியபடி அவனை உதைத்தான் சாத்யகி. மீண்டும் இரு அம்புகள் வந்து அவன் உடலை அறைந்தன. அவன் உடல் வெந்து காந்தத்தொடங்கியது. பிதாமகர் தழல்விட்டு எரிந்தாடுவதை அவன் கண்டான். அவருடைய தேரும் புரவிகளும் தழல்விட்டெரிந்தன. அவரைச் சூழ்ந்திருந்த வெளியில் தீ பரவியது. அத்தனை தேர்களும் எரிந்தெழுந்தன. அவன் திகைப்புடன் சூழ நோக்கியபோது மாபெரும் காட்டெரி என அங்கே மொத்தப் படையும் பற்றி எரிந்து புகையும் செந்தழலுமாக கொந்தளித்துக்கொண்டிருக்கக் கண்டான்.

பிதாமகர் உதடுகளை இறுக்கி விழிகூர்ந்து அம்பறாத்தூணியிலிருந்து பிறை அம்பை எடுப்பதை அவன் கண்டான். தன் வில்லைத் தாழ்த்தி நிமிர்ந்து வெறுமனே நோக்கியபடி நின்றான். அக்கணம் தேர்ப்பாகன் அமரநுகத்தில் எழுந்து இரு கைகளையும் விரித்து “பிதாமகரே, அவர் மைந்தரை இழந்து நிலைகுலைந்திருக்கிறார்!” என்று கூவினான். பீஷ்மர் “அவ்வண்ணமெனில் போர்முனைக்கு அவர் வந்திருக்கலாகாது, அறிவிலி” என்றபடி பிறையம்பை இழுத்து அவன் மேல் செலுத்தினார். பாகன் அதை தான் வாங்கிக்கொண்டு தலை அறுபட்டு கீழே விழுந்தான். அவன் தலை நுகத்திலிருந்து மண்ணில் உதிர உடல் சாத்யகியின் காலடியில் கிடந்து துடித்தது. மின் துடித்தணைய முகில்கள் உறுமின.

முற்றிலும் செயலிழந்து அவன் பீஷ்மரை நோக்கிக்கொண்டிருந்தான். பீஷ்மர் பிறிதொரு பிறையம்பை எடுத்து நாணில் பொருத்தி முழுவிசையுடன் இழுத்தார். அவர் உடலில் மெல்லிய விதிர்ப்பொன்று எழ பக்கவாட்டில் அவர் உடல் சற்றே சாய்ந்தது. தேர்ச்சகடம் கல்லிலோ பிற உடல்களிலோ ஏறி அதிர்வு அடைந்ததுபோலத் தோன்றியது. பிறையம்பு அவனை உறுமியபடி கடந்துசெல்ல வானிலிருந்து மழை பெரிய கூழாங்கற்கள்போல நிலத்தை அறையத் தொடங்கியது. வலுவான சாய்கோடுகளாக மழைத்துளிகள் செல்வதை அவன் நோக்கிக்கொண்டு நின்றான். அனல் முற்றணைய உடலில் நீர்த்துளிகள் அறைந்து சிதறி வழிந்தன.

பீஷ்மர் தன் வில்லைத் தாழ்த்தி அவனை கூர்ந்து நோக்கியபடி நின்றார். அவர் உடலின் குருதிப்படிவுகளை கரைத்தபடி மழைநீர் வழிந்தது. போரின் விசையை மழை நிறுத்தியது. ஆங்காங்கே வீரர்கள் படைக்கலம் தாழ்த்தினர். படைக்கலம் உயிரிழந்தபோது முன்னால் நின்ற எதிரியை அப்போதுதான் அறிபவர்கள்போல உணர்ந்து திகைத்தனர். என்ன செய்துகொண்டிருக்கிறோம் என குழம்பியவர்கள்போல ஒருவரை ஒருவர் நோக்கி உடல் தத்தளித்தனர். பீஷ்மர் தன் தேரை திருப்ப ஆணையிட்டார். அவர் திரும்பியதும் அவரைச் சூழ்ந்திருந்தவர்களும் திரும்பினர். அவ்வசைவு அத்தனை பேருக்கும் தெரிய அனைவரும் போர்முகப்பிலிருந்து பிரிந்து விலகத் தொடங்கினர். துணி கிழிபடுவதுபோல பிசிறுகளுடன் இரு படைகளும் ஒன்றை ஒன்று அகன்றன. அவ்விரிசல் விரிந்தகன்றபடியே சென்றது.

மழை நின்றுவிட்டிருந்தது. புதுக் குருதி என மழைகரைத்த செந்நீர் வழிய கைவிரல்களை உதறிக்கொண்டும் தலைமயிரை கோதிக்கொண்டும் வீரர்கள் பின்னடைந்தனர். என்ன நிகழ்கிறது என்று உணர்ந்தும் எதுவும் செய்யாமல் படைத்தலைவர்கள் செயலற்று நின்றனர். ஒவ்வொருவரும் வேறெங்கிருந்தோ ஓர் ஆணை வரவேண்டுமென எதிர்பார்த்தனர். ஆனால் அனைத்து முரசுகளும் முழவுகளும் கொம்புகளும் ஓய்ந்திருந்தன. சாத்யகி அசையாமல் தேரில் நின்றிருக்க அவனுக்குப் பின்னால் வந்த இரு வீரர்கள் அவன் கைகளைப்பற்றி பின்னால் அழைத்துச்சென்றனர். துயிலில் நடப்பவன்போல அவன் அவர்களுடன் சென்றான்.

மழையில் நனைந்த முரசு ஒன்று அந்தியெழுவதை அறிவித்து முழங்கியது. தொடர்ந்து முரசுகளும் கொம்புகளும் போர்முடிவை அறிவித்து ஓசையிடலாயின.

**பகுதி ஆறு : நீரவன்**

இளைய யாதவரின் பாடிவீட்டுக்கு முன் சேகிதானன் கவச உடையணிந்து காத்து நின்றிருந்தான். தொலைவில் கொம்பொன்று பிளிறி அமைந்தது. மிக அப்பால் முரசுகள் மெல்லிய எக்களிப்போசையை எழுப்பின. படை முன்புலரியில் துயிலெழுந்துகொண்டிருந்தது. அவன் குளிருக்கு கைகளைக் கட்டியபடி படை மெல்ல எழுவதை நோக்கிக்கொண்டிருந்தான். காடு விழித்தெழுவதுபோலிருந்தது. பொழுது மாறுவதற்கேற்ப ஒலிகளும் அசைவுகளும் மாறிக்கொண்டிருந்தன. கூர்ந்து நோக்கினால் கணந்தோறும்கூட அம்மாற்றம் நிகழ்வது தெரிந்தது.

ஒவ்வொரு படைப்பிரிவினரையும் எழுப்ப வெவ்வேறு ஓசைகள் அமைக்கப்பட்டிருந்தன. கருக்கிருளுக்கு முன்னரே படை ஏவலர்களும், புரவிகளையும் யானைகளையும் ஒருக்குபவர்களும் விழித்தெழவேண்டும். கவசங்களையும் படைக்கலங்களையும் கொண்டு சென்று சேர்ப்பவர்கள் அதன் பின்னர். இறுதியாகவே படைமுகம் நிற்கும் வீரர்கள். ஒவ்வொருவருக்கும் உரிய முழவுகளும் கொம்புகளும் அவர்கள் செவிகளுக்கு மட்டுமே கேட்டன. ஆழ்துயிலில்கூட அவை உளம் புகுந்து அவர்களை தொட்டெழுப்பின.

படைகளுக்குள் விளக்குகள் அங்கும் இங்குமென ஒழுகத்தொடங்குவதை சேகிதானன் பார்த்தான். அவை ஏவல்வீரர்களின் கைகளிலிருப்பவை. அவர்கள் படைப்புறப்பாட்டுக்கு உரிய பொருட்களுடன் படைகளின் நடுவே செல்லத் தொடங்கியிருக்கலாம். எத்தனை நூறு பொருட்கள் ஒரு படைப்புறப்பாட்டுக்கு தேவைப்படுகின்றன என்பதை கௌரவப் படைகளுடன் நின்று முதல்நாள் போருக்குமுன் பார்த்தபோது அவன் வியந்தான். புரவிகளுக்குரிய சேணங்கள், கவசங்களைக் கட்டும் தோல்சரடுகள், கவசங்களுக்கு அடியில் அணியவேண்டிய மயிர்கொண்ட தோலுறைகள், கையுறைகள், அம்பறாத்தூணிகள், உணவு கொண்டு செல்லும் பைகள்…

“இவற்றை முந்தைய இரவே அனைவருக்கும் கொண்டு அளித்தாலென்ன?” என்று அவன் மூத்த யாதவரான பிரீதரிடம் கேட்டான். அவர் “நானும் இதுவரை போரை பார்த்ததில்லை, இளையோனே. போரறிந்த ஷத்ரியனிடம் கேட்போம்” என்றார். ஆனால் அன்று மாலையிலேயே அது ஏன் என்று தெரிந்தது. போர்முகத்திலிருந்து மீண்டதுமே படைவீரர்கள் அணிகலைந்து தங்கள் அணுக்கர்களுடனும் உற்றவர்களுடனும் இணைந்து வெவ்வேறு இடங்களில் அமர்ந்தும் படுத்தும்

சொல்லாடினர். சிலர் மருத்துவ நிலைகளுக்குச் சென்று மீண்டனர். எளிய புண்கள் பட்டவர்கள் கூடியமர்ந்து தாங்களே மருந்துகளை போட்டுக்கொண்டனர். மருந்திடுகையிலேயே உணவருந்தி கள்ளும் அகிபீனாவும் உண்டு கூச்சலிட்டனர்.

"அவர்கள் துயிலும்பொருட்டு தங்கள் அணிநிரைகளுக்குள் மீண்ட பின்னர்தான் தலைமைக்காவலன் எண்சொல்லி கணக்கெடுக்கிறான். இறந்தவரின் கணக்குகள் அதற்குப் பின்னர்தான் இடுகாட்டிலிருந்து வந்து சேரும். மருத்துவநிலையின் கணக்குகள் மேலும் சற்று பிந்தி வந்தடையும். அனைத்தையும் தொகுத்தெண்ணி படையின் நிலைமையை தலைமைக்கு அறிவிப்பார்கள். ஒவ்வொரு படைக்கும் தேவையான கூடுதல் படைவீரர்களை அக்ஷௌகிணியின் தலைமை அனுப்பிவைக்கும். அவர்கள் புலரியில்தான் அப்படைநிலைக்கு வந்துசேர்வார்கள். அதன் பின்னர்தான் அவர்களின் தேவைகளை அறிந்துகொண்டு பொருட்களை அளிக்க முடியும்" என்றார் மகதத்தின் காவலர்தலைவரான உத்ராடர்.

சேகிதானன் இளைய யாதவரின் பாடிவீட்டின் கதவுகளை நோக்கினான். அவை மூடியிருந்தாலும் உள்ளே அவர் விழித்திருப்பதை உணரமுடிந்தது. மூடிய உதடுகளும் உள்ளே சொற்களிருப்பதை காட்டுவதுபோல. அவன் முந்தையநாள் புலரியிலேயே கௌரவ எல்லையைக் கடந்து பாண்டவ எல்லையை அடைந்து நிலத்தில் நெற்றிதொட வணங்கி எழுந்து கைவிரித்து உரக்கக் கூவி "நான் என் தலைவர் இளைய யாதவரிடம் செல்ல விழைகிறேன்!" என்றான். அவன்மேல் குறிநோக்கி நின்ற ஏழு அம்புமுனைகள் தழைந்தன. "தனியாக நடந்து வருக... ஒவ்வொரு அடிக்கும் நின்று நின்று வருக!" என்று காவலர்தலைவன் சொன்னான்.

இருளுக்குள் பல்லாயிரம் பந்தங்களில் தழல் உதறிக்கொள்ளும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. அவன் அணுகியபோது நெஞ்சு துடித்துக்கொண்டிருந்தது. எக்கணமும் மெல்லிய ஐயத்திலும் எவரேனும் ஒருவர் அவன் தலையை சீவி எறிந்துவிடமுடியும். ஆனால் கண்கள் சூழத் துழாவி வந்தபோது ஒருகணத்தில் அங்கிருந்த விழிகளில் ஒன்று இளைய யாதவருடையது என உணர்ந்து அவன் திகைத்தான். மீண்டும் நோக்கியபோது அது உளமயக்கு என தெளிந்தது. ஆனால் அந்த நோக்குணர்வு இருந்துகொண்டே இருந்தது. அவன் உள்ளத்துடிப்பு மெல்ல அமைதியடைந்தது.

அவனை நேராக சாத்யகியிடம் கொண்டுசென்றார்கள். சாத்யகி அவனை உடனே அடையாளம் கண்டுகொண்டு "உம்?" என்றான். அவன் "நான் கிளம்பிவந்துவிட்டேன்" என்றான். "ஏன்?" என்று சாத்யகி கேட்டான். "என் குடிக்கு கட்டுப்பட்டவன் என என்னை எண்ணிக்கொண்டிருந்தேன். எல்லா கன்றுகளும் தங்களை மந்தை என்றே எண்ணுகின்றன. ஆனால் இந்தப் போரில் நான் குலமோ குடியோ அல்ல. முற்றிலும் தனித்தவன் என உணர்ந்தேன். என் சாவு அணுகிக்கொண்டிருக்கிறது. என் பிறவிக் கடமையென ஆற்றவேண்டியதைத் தவிர்த்து வாழ்ந்தால் மீளா இருளுலகுக்கே செல்வேன்." சாத்யகியின் முகத்தில் நம்பிக்கை வரவில்லை. ஆனால் எழுந்துகொண்டு "வருக!" என அவனை அழைத்துச்சென்றான்.

இளைய யாதவர் தன் பாடிவீட்டுக்குள் இருந்தார். கதவுகள் அப்போதும் இதேபோல மூடித்தான் இருந்தன. அவை உச்சரிக்கும் சொல் என்ன என அவன் எண்ணம் அலைகொண்டது. கதவு திறந்து இளைய யாதவரின் அணுக்கனான நேமிதரன் எட்டிப்பார்த்து சாத்யகியை உள்ளே அழைத்தான். சாத்யகி உள்ளே சென்ற சற்றுநேரத்திலேயே இளைய யாதவர் கதவைத் திறந்து வெளியே வந்தார். சேகிதானன் அவரை நோக்கி ஓட சாத்யகி "அசையாதே..." என தடுத்தான். அவன் நிலைத்து நின்றான். இளைய யாதவர் அணுகி அவனை கைகளால் சுற்றி நெஞ்சுடன்

அணைத்துக்கொண்டார். “வருக, யாதவனே... நீ மீண்டதனால் மகிழ்கிறேன்” என்றார்.

சாத்யகி பதைப்புடன் “அவன் நோக்கமென்ன என்று இன்னமும் நமக்கு புரியவில்லை” என்றான். “எனக்கு புரிகிறது” என்றார் இளைய யாதவர். புன்னகை விரிந்த முகத்துடன் அவன் தோளை வளைத்து “அவன் மீண்டது இன்றைய நாளை இனிதாக்குகிறது” என்றார். சேகிதானனின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. சாத்யகி “சென்றவர்கள் பல்லாயிரவர், இவனொருவன் மீண்டமையால் நாம் அடைவதொன்றுமில்லை” என்றான். இளைய யாதவர் “சென்றவர் அனைவருக்கும் நிகர் மீண்ட ஒருவன்...” என்றார். சேகிதானன் சரிந்து நிலத்திலமர்ந்து அவர் கால்களைத் தொட்டு “உயிர்கொடுப்பேன்... உயிர்கொடுப்பேன், யாதவரே” என்றான். அவன் கைபற்றித் தூக்கி “நன்று! என்னுடன் இரு” என்றார் இளைய யாதவர்.

கதவு திறந்து நேமிதரன் அருகே வந்தான். சேகிதானன் வணங்கி “அரசருக்காக காத்திருக்கிறேன்” என்றான். “நீ வந்தது அவருக்கு தெரியும்” என்றான் நேமிதரன். சேகிதானன் “என்ன செய்கிறார்?” என்றான். “நூல் நவில்கிறார். ஒருநாளும் ஓதாமல் அவர் புலரியில் எழுந்ததில்லை.” சேகிதானன் “நூலா? போர்க்களத்திலா?” என்றான். நேமிதரன் “அவருக்கு எந்த வேறுபாடும் இல்லை” என்றான். சேகிதானன் மேலும் என்ன சொல்வதென்று தெரியாமல் தத்தளித்து பின்னர் மெல்ல புன்னகைத்து “போர்சூழ்கை குறித்த நூல்போலும்” என்றான்.

நேமிதரன் நகைத்து “அல்ல, சென்ற நான்கு நாட்களாகவே காவியம்தான் பயில்கிறார். இந்திரனுக்கும் விருத்திரனுக்குமான உறவைக் குறித்த நூல். பராசரரின் மாணவரான சார்ங்கதரர் இயற்றியது. அவர்கள் இருவரும் ஒன்றே என்று எழுதப்பட்ட விருத்திர வைஃபவம்” என்றான். சேகிதானன் “அது அசுரர்களுக்குரியது என்பார்கள்” என்றான். “பெரும்பாலான காவியங்கள் அசுரர்களுக்குரியவையே. அசுரர்கள் புகழ் பாட அவர்களின் பாடகர்களால் உருவாக்கப்பட்டவை அவை. நமது கவிஞர்களால் அவை எடுத்து சொல்கூட்டி காவியமாக்கப்படுகின்றன. பிரஹலாத சரித்திரமும் ராமகாவியமும்கூட அவ்வாறே” என்றான் நேமிதரன். பின்னர் “நான் அவருடைய புரவிகளை நோக்கச் செல்கிறேன். அவர் வருவதற்குள் ஒருமுறை நோக்கி வைத்தல் நன்று” என்று கிளம்பிச்சென்றான்.

சேகிதானன் அவன் சொன்னவற்றை உள்ளத்தில் ஓட்டியபடி சற்று நேரம் நின்றிருந்தான். பின்னர் சொல்சலித்து மீண்டும் சூழ்ந்திருந்த படைகளை நோக்கினான். படைகள் முற்றெழுந்து பெருமுழக்கமாக மாறி இருளை நிறைத்து நிழல்கொப்பளித்தன. அவன் முந்தையநாள் இரவு கண்ட மருத்துவநிலையை எண்ணிக்கொண்டான். அன்று கொல்லப்பட்ட யாதவர்களின் பெயர்களை நினைவிலிருந்து மீட்டு தொகுக்க முயன்றான். அவை பெயர்களாகவே இருந்தன, எந்த முகமும் நினைவிலெழவில்லை. பெரும்பாலான யாதவர்களை திருஷ்டத்யும்னனின் அம்புகளே கொன்றன. ஷத்ரியர்களால் கொல்லப்படுவது யாதவர்களுக்கு பெருமைதான் என்னும் எண்ணம் எழுந்ததும் அவன் புன்னகைத்தான்.

மெல்லிய மூங்கில்படல் கதவுக்கு அப்பால் இருந்து “வருக!” என்ற குரல் கேட்டது. சேகிதானன் தன்னையா என்று ஐயுற்று பின் மெல்ல கதவைத் திறந்து உள்ளே பார்த்தான். தரையிலிட்ட மான்தோலில் அமர்ந்து சுவடிகளை சரடால்

கட்டிக்கொண்டிருந்த இளைய யாதவர் வருக என்று கைகாட்டினார். காட்டில் தவக்குடில் ஒன்றில் மாணவர்களுக்கு வகுப்பெடுத்து முடித்தவர் போலிருந்தார். கற்ற நூல் எஞ்சவிடும் நிறைவு அவர் முகத்தில் இருந்தது. எப்போதுமிருக்கும் புன்னகை, இனிய இசையொன்றை உள்ளூர கேட்டுக்கொண்டிருப்பதைப்போல.

சேகிதானன் வணங்கிய பின் அவர் அருகே அமர்ந்தான். “இன்றைய படைசூழ்கை என்ன?” என்று அவர் கேட்டார். “மீன்சூழ்கை. சுறாபோல் விரைந்து தாக்குவதென்று முடிவெடுத்துள்ளனர்” என்றான் சேகிதானன். “அவர்கள் அதை தளைக்கும் பெருஞ்சூழ்கையை அமைப்பார்கள்” என்றார் இளைய யாதவர். “சற்று முன்னர்தான் படைசூழவை முடிந்தது. தங்களை இன்று எதிர்பார்த்தார்கள்” என்று சேகிதானன் சொன்னான். “இன்று சற்று மிகைப்பொழுது நூலாய்ந்துவிட்டேன்” என்றார் இளைய யாதவர். சேகிதானன் “அவர்கள் எவ்வகையிலும் வெற்றிகொள்ள இயலாது என்று திருஷ்டத்யும்னர் சொன்னார். நேற்றுமுன்தினம் அவர்களுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. துரியோதனர் உளம் தளர்ந்திருக்கிறார் என்றும் அவர்களுடைய அவையில் அமைதிப் பேச்சு ஒன்றைப் பற்றிய குறிப்பெழுந்தது என்றும் செய்தி வந்தது” என்றான். “ஆனால் துரியோதனர் சினந்தெழுந்து மறுத்தார் என்றும் சொன்னார்கள்.”

“அவர் ஏற்கமாட்டார்” என்றார் இளைய யாதவர். சேகிதானன் “முதலில் எழும் அந்த எதிர்ப்பே ஒருவகையில் நன்றுதான் என்று துருபதர் சொன்னார். முழு எதிர்ப்பையும் உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்திவிட்டால் மீண்டும் கூறுவதற்கு ஏதுமில்லாதாகிறது. அதன் பின்னரும் அந்த அவையில் இருப்பவர்கள் எவரேனும் அமைதிப் பேச்சை மீள மீள வலியுறுத்துவார்கள் என்றால் சொல்வதற்கு ஏதுமில்லை என்பதனாலேயே அவர் அதற்காக செவி கொடுத்தாகவேண்டும். ஒரு கருத்துக்கு நாம் செவிகொடுப்போம் என்றாலே அது நம்மை மாற்றத்தொடங்கிவிடும் என்றார் பாஞ்சாலத்து அரசர்” என்றான்.

இளைய யாதவர் புன்னகைத்து “இனி அவருடைய உள்ளம் மாறுவதை நான் ஒப்பமுடியாது” என்றார். சேகிதானன் திடுக்கிட்டு “ஓர் அமைதிப்பேச்சு என்றால்...” என தொடங்க தாழ்ந்த கூர்குரலில் “இனி அமைதி இல்லை, முற்றழிவு மட்டுமே” என்றார் இளைய யாதவர். சேகிதானன் தன் நெஞ்சின் படபடப்பை உணர்ந்தான். “அவர்கள் இறங்கிவந்தால்... பாதி நாட்டுக்கே ஒப்புக்கொள்வார்கள் என்றால்...” என்றான். இளைய யாதவர் “முழு நாட்டையும் அளிப்பார்கள் என்றாலும் இந்நிலத்திலிருந்து தன் உற்றாருடன் முழுமையாகவே விலகி பிற நிலம் ஒன்றுக்கு செல்வதாக அவர் ஒப்புக்கொண்டாலும்கூட போர் ஒருகணமும் பின்னடைய நான் ஒப்பமாட்டேன். அவர்கள் இங்கே களத்திலிருந்து தப்பி ஓடினால் அவர்கள் செல்லுமிடமெங்கும் துரத்திச்செல்லச் சொல்வேன். பாரதவர்ஷத்தைவிட்டு அயல்நிலங்களில் அவர்கள் குடியேறினால் அங்கும் படைகொண்டு அவர்களை அழிப்பேன். கௌரவக் குடியின் இறுதித்துளி இந்நிலத்திலிருந்து முற்றாக அழிவது வரை இப்போர் முடியாது” என்றார்.

சேகிதானன் மெல்லிய சீற்றம் ஒன்றை அடைந்தான். அதை கடந்து விழிதாழ்த்தி நிலம்நோக்கி தணிந்த குரலில் “ஆனால் பாண்டவர்கள் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். கௌரவர்கள் களம்பட்டபோதே யுதிஷ்டிரர் ஆழத்தில் அஞ்சிவிட்டாரென்று எனக்குத் தோன்றியது. அவர் தன் உடன்பிறந்தாரோ மைந்தரோ இறக்கக்கூடும் என்று இப்போது அஞ்சிக்கொண்டிருக்கிறார்” என்றான். “அது நிகழக்கூடியதும்கூட. வஞ்சம் இன்றி துரியோதனர் அமையமாட்டார். இப்போது ஒரு அமைதிச்செய்தியுடன் அங்கிருந்து எவரேனும் வருவார்கள் என்றால் பாண்டவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடும்.”

இளைய யாதவர் “பாண்டவர்களில் இருவர் என்னைவிட்டு அகலமாட்டார்கள். இன்றுள பாண்டவப்படையில் இந்திரப்பிரஸ்தத்தினரும் பாஞ்சாலரும் விராடரும் மட்டுமே என்னைவிட்டுச் செல்வார்கள். எஞ்சியோரை என் ஆணை கட்டுப்படுத்தும். கௌரவர்களை நானே வெல்வேன். என் வஞ்சத்திலிருந்து அவர்கள் எங்கும் ஒளியமுடியாது. வேள்விச்சாலையிலோ மூதாதையர் ஆலயத்திலோ சென்று ஒளிந்துகொண்டாலும்கூட உட்புகுந்து வெளியே இழுத்து இட்டு கொல்வேன்” என்றார். “இந்த முடிவு என்று அவர்களின் வேள்விச்சாலையிலிருந்து என் கால்பொடியைத்தட்டி உதறி அஸ்தினபுரிக்கோட்டை முகப்பை கடந்தேனோ அன்று எடுக்கப்பட்டது. எடுத்த முடிவுகளை நான் எந்நிலையிலும் மாற்றுவதில்லை.”

சேகிதானன் பெருமூச்சுவிட்டான். பின்னர் அவர் கையிலிருந்த சுவடியை பார்த்தான். அவன் விழியசைவை நோக்கிய இளைய யாதவர் “விருத்திர வைஃபவம். இனிய பாடற்சுவை கொண்டது. இந்திரனும் விருத்திரனும் அவர்களுக்கு அப்பாலிருக்கும் தெய்வங்களால் களத்தில் ஆட்டுவிக்கப்படுவதை கூறுவது” என்றார். “போர்விளக்கமா?” என்று சேகிதானன் கேட்டான். “இல்லை. இது போருக்குப் பின் விண்புகுந்த விருத்திரன் அரக்கர்களும் தேவர்களும் மானுடர்களும் மண்ணில் அளிக்கும் அவியால் தேவனாவதை சொல்கிறது. அவன் விண்புகுந்து இந்திரனின் அமராவதியை அடைகிறான். இந்திரனுக்கும் அவனுக்கும் உரையாடல் நிகழ்கிறது. இந்திரனை ஏழு சொல்லாடல்களில் விருத்திரன் வெல்கிறான். இந்திரனைவிட தவஆற்றலும் வேள்விப்பயனும் கொண்டவன் விருத்திரன் என்று தெளிகையில் விருத்திரனே இந்திரனாக அமரத்தக்கவன் என்று நாரதர் முடிவு சொல்கிறார். அதன்பொருட்டு பன்னிரண்டு ஊழிக்காலம் விருத்திரன் இந்திரனாக அமர இந்திரன் கானேகிறான்” என்றார் இளைய யாதவர்.

சேகிதானன் “விந்தையான கதை” என்றான். “வெல்பவர்களும் வீழ்பவர்களும் ஒன்றின் இருபக்கங்களே எனும் மெய்மை இதில் சொல்லப்பட்டுள்ளது” என்றார் இளைய யாதவர். சேகிதானன் அங்கு பேசப்பட்ட அனைத்துச் சொற்களும் ஒன்றுடன் ஒன்று முட்டி அசைவின்மை கொள்வதைப்போல் உணர்ந்து தலையை உலுக்கி அவ்வெண்ணங்களை அகற்றினான். பின்னர் “நான் தங்களை சந்திக்கவந்தது பிறிதொன்றின் பொருட்டும்கூட” என்றான். “மூத்தவர் சாத்யகி இன்று படைமுகம் காணவேண்டியதில்லை. பிறிதெவரும் அவ்வாணையை அவரிடம் விடுக்க இயலாது. நேற்று அந்தியில் அவரை படைமுகப்பிலிருந்து கொண்டுசெல்கையில் மெய்யாகவே எனக்குப் பின் தேர்த்தட்டில் ஒரு தழல் நின்றாடுவதாக உணர்ந்தேன்.”

“ஆம், அவன் துயர்கொண்டிருக்கிறான்” என இளைய யாதவர் எளிதாகச் சொல்லி தன் மேலாடையை எடுத்து தோளிலிட்டார். சேகிதானன் குரல் கரைய “எரிந்துகொண்டிருக்கிறார், மூதாதையே. நேற்று இரவு முழுக்க அணு அணுவென தழல் விட்டிருப்பார். அவர் இரவெல்லாம் தனக்குள் பேசிக்கொண்டு பாடிவீட்டை சுற்றிவருவதை நோக்கிக்கொண்டு அப்பால் நான் காவல் நின்றிருந்தேன். இப்பெருந்துயர்களை மானுடருக்கு அளிக்கும் தெய்வங்களை எண்ணி எண்ணி கசந்துகொண்டு எக்கணமும் வாளெடுத்து தன் சங்கில் பாய்ச்சிக்கொள்வார் என்று எண்ணினேன். அவரைத் தடுக்க விழிப்புடன் இருந்தேன்” என்றான்.

“உண்மையில் சொல்லப்போனால் அவர் இன்று செய்வதற்கு உகந்தது அதுவே. எப்படியும் சாவுதான். இந்தக் களத்திலிருந்து அவர் உயிருடன் மீண்டு சென்று எங்கு மகிழ்ந்தமைய முடியும்? ஒரு கைப்பிடி நறுநீரோ ஒரு கீற்று குளிர்தென்றலோ ஒரு மலரோ ஒரு கனியின் இனிமையோ அவருக்கு துளி மகிழ்வையேனும் ஊட்டுமா? சற்று மகிழ்ந்திருந்தாலும் உள்ளிலிருந்து எழுந்த பிறிதொன்று பிடரியில் ஓங்கி அறைந்து வீழ்த்திவிடும். இனி சாவொன்றே அவருக்கு புகல். பிறிதொன்றும் இங்கே

அவருக்கு எஞ்சியிருக்கவில்லை. அச்சாவு வரும்வரை எதன் பொருட்டு இப்புவியில் இப்பெருவலியை ஏற்றுத் துடித்தபடி வாழவேண்டும்?”

“நேற்று அவர் பீஷ்ம பிதாமகரையும் பகதத்தரையும் பூரிசிரவஸையும் ஜயத்ரதரையும் நோக்கி நெஞ்சு திறந்து பாய்ந்தார். கொல்க கொல்க என்று அறைகூவினார். அவர்கள் ஒவ்வொருவரும் அவரை ஒழிந்தனர்” என்றான் சேகிதானன். யாதவர் “ஊழ் எஞ்சியிருக்கிறது போலும்” என்றார். அந்த எளிய கூற்றும் உடனிருந்த மாறாப் புன்னகையும் சேகிதானனை உளமெரியச் செய்தன. “ஊழல்ல, பீஷ்மர் அவரை கொன்றிருப்பார். கவசங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்தார். பிறையம்பொன்றை எடுத்து அவர் மேல் தொடுக்க முனைந்த கணம் நான் இதோ அனைத்தும் முடிந்துவிட்டதென்று ஆறுதல்தான் கொண்டேன். ஆனால் தேர்க்கால் தடுக்கியதுபோல் அவர் சற்று பின்னடைந்தார். வில் தாழ்ந்தது. மீண்டும் வில்லைத் தூக்க அவர் முயல்வது போலவும் அவர் கை எழவில்லை என்றும் எனக்குத் தோன்றியது. அக்கணம் மழைபொழியலாயிற்று. அனைவரும் குளிர்ந்தமைய அவர்களுக்குள் எரிந்த அனல் அணைந்தது. போர் நிலைத்து படைவீரர்கள் தாங்களாகவே திரும்பிவிட்டனர். இருளாகிவிட்டதனால் அந்திமுழவுகள் ஒலிக்கலாயின” என்றான்.

இளைய யாதவர் தலையசைத்தார். “என்ன நிகழ்ந்தது என எண்ணிப்பார்த்தேன். என் உளம் சென்று தொடவில்லை. திருஷ்டத்யும்னர் இன்று அவையில் சொன்னார். பகல் முடியும் வேளை. முதியவர் நெடும்பொழுது வெறிகொண்டு போரிட்டிருக்கிறார், நமது படைகளில் பெரும்பகுதியை நேற்றும் கொன்றே அழித்திருக்கிறார், ஆகவே கைசோர்ந்திருப்பார் என்று” என்றான் சேகிதானன். “ஆம், இருக்கலாம்” என்று இளைய யாதவர் சொன்னார். “ஆனால் சோர்வும் சலிப்பும் கொள்ளாதவர் அவர் என்கிறார்கள். அவர் எட்டுவசுக்கள் வாழும் உடல்” என்றான் சேகிதானன்.

இளைய யாதவர் ஒன்றும் சொல்லாமலிருக்க அவன் தொடர்ந்தான் “பீஷ்மர் மூத்தவர் மேல் கனிவு கொண்டாரா? அது அவர் இயல்பல்ல. அவர் இக்களத்தில் எவருக்கும் எவ்வகையிலும் உளம் கனியவில்லை.” இளைய யாதவர் “அனலின் இயல்பு அது” என்றார். “அது தன் செல்நெறியை தானே வகுத்துக்கொள்கிறது. எண்ணியிராத தருணங்களில் இயலாத இடங்களிலும் பற்றி எழுந்து தன்னை பெருக்குகிறது. மூள்க மூள்க என நாம் வெறிகொள்கையில், நெய்யும் அரக்கும் விறகும் அள்ளி அள்ளிக் குவிக்கையில் பசியழிந்து விலகிச்செல்கிறது. அனல் தன் எண்ணமென்ன என்று தானே அறியும்.”

அவர் சொல்வதென்ன என்று சேகிதானன் புரிந்துகொள்ளவில்லை. சிலகணங்கள் அவரை கூர்ந்து நோக்கியபின் “நேற்றிரவெல்லாம் நான் மூத்தவரை நோக்கிக்கொண்டிருந்தேன். சில தருணங்களில் அவராகவும் ஆகி அத்துயரிலாடினேன். அவர் நெஞ்சில் அறைந்து கதறியிருந்தால், சொல்லிச் சொல்லி புலம்பியிருந்தால், எவ்வகையிலேனும் உளம் ஆறுவார் என்று எண்ணி நிறைவுகொண்டிருப்பேன். ஏனெனில் அவை நாம் அறிந்த உளச்செயல்கள். அவை அறிந்த முடிவை சென்றடையுமென்று எண்ணலாம். அவரோ பித்தர் போலிருந்தார். மருத்துவ ஏவலரிடம் அவருக்கு அகிபீனா கொடுக்கும்படி சொன்னேன். ஏற்கெனவே நான்கு உருளைகள் உண்டுவிட்டார் என்றார் ஏவலர். உள்ளத்தில் அனல் எழுந்துவிட்டால் அகிபீனா புகையாகி மறைந்துவிடுகிறது என்றார். அது நீரில் கரைவது, நெருப்பால் அழிக்கப்படுகிறது என்றார். என்ன செய்வது என்று நான் கேட்டேன். ஒன்றும் செய்வதற்கில்லை. அனல் தன் இரை எரிந்து முடிந்ததும் தானும்

அணைவது. அவருடைய உளவிசை அழிவது வரை காத்திருப்போம். எவரேனும் உடனிருங்கள் என்றார்” என்றான் சேகிதானன்.

இளைய யாதவர் “நன்று. நீர் கிளம்பும்போது அவன் துயின்றுகொண்டிருந்தானா?” என்றார். “இல்லை, புலரிக்கு முன்னரே கவசங்களும் படைக்கலங்களும் அணிந்து போருக்கெழுந்துவிட்டார். படைசூழ்கையை வகுக்கும் அரங்குக்கும் வந்திருந்தார். அவையில் ஒரு சொல்லும் பேசாமல் நிமிர்ந்த தலையுடன் அமர்ந்திருந்தார்” என்றான் சேகிதானன். “இன்று அவையில் யுதிஷ்டிரர் பிறிதெப்போதையும்விட உளம் தளர்ந்திருந்தார். நேற்று கௌரவர்களின் சொல்லவையில் துரியோதனர் கதறி அழுதார் என்று எவரோ அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். படைசூழ்கையை திருஷ்டத்யும்னர் விளக்கி முடித்ததும் வேறு வினா எழுவதற்குள் அரசர் அதைத்தான் கேட்டார்.”

அவ்வினாவின் பொருத்தமின்மையை உணர்ந்த அவை ஒன்றும் சொல்லாமல் இருந்தது. “மெய்யாகவா? கதறி அழுதானா?” என்று மீண்டும் யுதிஷ்டிரர் கேட்டார். பீமசேனர் உரத்த குரலில் “ஆம், கதறி அழவைக்கவே நான் அவன் உடன்பிறந்தாரை கொன்றேன்” என்றார். “அவர் நம் உடன்பிறந்தார், மந்தா” என்றார் யுதிஷ்டிரர். பீமசேனர் கைவீசி அதை விலக்கி “நாம் நேற்றும் அவர்களை கொன்றோம். இன்றும் அவர்களை கொல்வோம். நாளையும், ஒவ்வொரு நாளும் அவர்களை கொல்வோம். மூத்தவரே, தாங்கள் அறியாததல்ல. நூற்றுவரையும் என் கைகளால் கொல்வேன் என்று நான் சூளுரைத்திருக்கிறேன். எனது சொற்களிலிருந்து எந்நிலையிலும் நான் வழுவப்போவதில்லை” என்றார்.

யுதிஷ்டிரர் துயருடன் குந்திபோஜரையும் துருபதரையும் நோக்கி “என்ன செய்வது, மூத்தவர்களே? இது எங்கு சென்று முடியும்?” என்றார். பீமசேனர் உரக்க நகைத்து “எங்கு சென்று முடியும் என்பது இப்போது தெளிவடைந்துள்ளது. அவர்கள் முற்றழிவார்கள், நாமும் மீளாப் பேரிழப்புகளை அடைவோம்” என்றார். “இளையோனே, இழப்பு என்றால் படையிழப்பும் பொருளிழப்பும் மட்டுமல்ல” என்றார் யுதிஷ்டிரர். “மைந்தர்களும் உடன்பிறப்புகளும் உற்றாரும் கூடத்தான். போரென்பது அதுதான்” என்றார் பீமசேனர். யுதிஷ்டிரர் தளர்ந்து தலையை கையால் தாங்கி அமர்ந்திருந்தார். அவையில் அமைதி நிலவியது.

பின்னர் குந்திபோஜர் “யாதவர் தரப்பிலிருந்து ஒரு செய்தி வந்துள்ளது, ஒருவேளை அவர்கள் நம்மிடம் ஓர் அமைதிப் பேச்சுக்கு வரக்கூடும்” என்றார். அவை அமைதியாக இருந்தது. அவர் சூழ நோக்கிவிட்டு “அவ்வண்ணம் வருவார்களெனில் நாம் ஒரு பேச்சுக்கு அமர்வதொன்றும் இத்தருணத்தில் பிழையல்ல. அது எவ்வகையிலும் அரசருக்கு பெருமை சேர்ப்பதே. தன் படையழிவையும் எதிரியின் படையழிவையும் எண்ணி அமைதிக்கெழும் அரசன் அறத்தோன் என்றே கருதப்படுவான்” என்றார். யுதிஷ்டிரர் அதை ஏற்கும் முகக்குறி காட்டினார். ஆனால் அவையில் எவரும் எச்சொல்லும் எடுக்கவில்லை.

பீமசேனர் “நீங்கள் அமைதிப் பேச்சை நிகழ்த்துங்கள். அது என்னை கட்டுப்படுத்தாது. இனி என் வஞ்சினமே என்னை ஆளும். நான் காட்டாளன், இக்குடியில் எனக்கிருக்கும் அனைத்து உரிமைகளையும் கைவிடுகிறேன். ஷத்ரியன் அல்லவென்றும் வேதத்துக்கு கட்டுப்பட்டவன் அல்ல என்றும் அறிவிக்கிறேன். சென்று அந்நூற்றுவரையும் தனியாக எதிர்கொண்டு கொல்கிறேன், அன்றி சாகிறேன். உயிர்துறந்தாலும் பிறந்தெழுவேன், என் வஞ்சம் என்றுமிருக்கும்” என்றார். “மந்தா!” என்று யுதிஷ்டிரர் அழைக்க பீமசேனர் அவையிலிருந்து வெளியே சென்றார்.

“நான் ஓர் அமைதிப் பேச்சு நிகழக்கூடும் என்ற எண்ணத்தை அவ்வாறுதான் அடைந்தேன்” என்றான் சேகிதானன். இளைய யாதவர் “ஆம், நானும் அவ்வாறே எண்ணினேன்” என்றார். சேகிதானன் “தாங்கள் இன்றைய அவைசூழ்கைக்கு வராதது அதனால்தானா?” என்றான். இளைய யாதவர் புன்னகைத்தார். பின்னர் எழுந்து “செல்வோம்” என்று குடிலிலிருந்து வெளியே சென்றார். பேசவந்தவை அனைத்தும் முறிந்து நிற்பதுபோல் உணர சேகிதானன் பின்னால் வந்து “இன்று மூத்தவர் சாத்யகி போருக்கெழுவார் என்றால் அது நன்றல்ல. அகிபீனா உண்ணப்பட்டால் துயில்கொண்டே ஆகவேண்டும். இல்லையேல் அது உடலை நிலையழியச் செய்யும். அவர் இன்றைய போரில் வெற்றுடலாக சென்று நின்றிருக்கக்கூடும். நாங்கள் எவர் சொன்னாலும் கேட்கமாட்டார். தாங்கள் ஆணையிடவேண்டும்” என்றான்.

“சற்றுமுன்னர் அவனுக்கு இனி எஞ்சியிருப்பது சாவே என்றாய்?” என்றார் இளைய யாதவர். “ஆம், ஆனால்…” என்று சேகிதானன் சொல்ல அவர் மறித்து “அது களத்தில் நிகழுமென்றால் அதுவே அவனுக்கு பெருமை” என்றார். “தன் எஞ்சிய சினத்தை அவன் களத்தில் காட்டட்டும். அறிக, இங்குள எவரையும் களம் செல்லவேண்டாம் என்றோ, வஞ்சமொழிய வேண்டுமென்றோ நான் ஆணையிட மாட்டேன்! இவர்களாக விரிந்து எழுந்து போரிடுபவன் நானே. அனைத்து வஞ்சங்களும் என்னுடையவை.”

குடிலுக்கு வெளியே அவர்கள் சென்றதும் சாத்யகி முழு கவச உடலுடன் புரவியிலிருந்து இறங்கி அவர்களை நோக்கி வந்ததை சேகிதானன் கண்டான். உடல் உருவப்பட்டு கவசங்கள் அணிந்து போருக்கெழும் படைப்புரவியின் மிடுக்கும் விசையும் கொண்டிருந்தான். இளைய யாதவரின் அருகணைந்து தலைவணங்கி “ஆணைகொள்ள வந்துளேன், அரசே” என்றான். “ஆம், உன்னை நேரில் பார்க்கவேண்டுமென்று தோன்றியது” என்றார் இளைய யாதவர். “இன்று களமுகப்பில் நீ துரியோதனனை எதிர்கொள்க!” சாத்யகி “ஆணை” என தலைவணங்கினான்.

துரியோதனன் துச்சாதனனும் துச்சலனும் துர்மதனும் துச்சகனும் சூழ கவச உடையுடன் குருக்ஷேத்ரத்தின் முகப்புக்கு வந்தபோது படைப்பிரிவின் முகப்பில் நின்றிருந்த தேருக்கு அடியில் சிறு மரப்பீடத்தில் அமர்ந்திருந்த சகுனி தன் புண்பட்ட காலை மெல்ல தூக்கி வைத்து தேர்விளிம்பைப் பற்றியபடி எழுந்து நின்றார். துரியோதனன் அவரை அணுகி தலைவணங்கினான். சகுனி “இன்று நாம் வகுத்துள்ள படைசூழ்கை உறுதியாக வென்று மீளும். நமது படைவீரர்கள் வெற்றி கொள்ள இயலுமென்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்” என்றார். “ஆம்” என்று துரியோதனன் சொன்னான். அவன் துயிலின்மையின் வெளிறலுடன் கண்களுக்குக் கீழே கருவளையங்களுடன் முற்றிலும் தளர்ந்தவன் போலிருந்தான்.

“நமது படைசூழ்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளும் மேம்பட்டபடி வருகின்றன. பிதாமகர் பீஷ்மரின் அம்புகளால் எதிரிப்படையின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. பின்னணியில் நிறுத்திய ஏவலர்களையும்கூட படைக்கலம் எடுக்கச்செய்து படைப்பிரிவுகளுக்குள் பொருத்துகிறார்கள். பயிலாதோரைக் கொண்டு முன்நிறுத்தி முகம் பெருக்க எண்ணுகிறார்கள். இன்றைய போர் பிதாமகருக்கு மேலும் எளிதென்றிருக்கும். அனலில் பூச்சிகள்போல பாண்டவப் படை பொசுங்கிக் குவியப்போகிறது” என்றார் சகுனி. தாடியை நீவியபடி

புன்னகைத்து “தேர்ச்சகடத்தில் அடிபட்ட நாகம் சீறித் தலைதூக்கி மண்ணை அறைவதுபோல இன்று சற்று விசைகூட்டிக் காட்டுவார்கள் என நினைக்கிறேன்” என்றார்.

துரியோதனன் “உண்மைதான் மாதுலரே, நேற்று பிதாமகர் பீஷ்மர் பேரழிவை உருவாக்கியிருக்கிறார்” என்றான். சகுனி துரியோதனனின் விழிகளை பார்க்கவில்லை. துரியோதனனும் அவர் விழிகளை ஏறெடுக்கவில்லை. இருவருக்கும் உவப்பில்லாத ஏதோ முறைமைச் சொற்களை பேசிக்கொள்வது போலிருந்தது அவர்களின் முகம். சகுனி “போர் இன்றோ நாளையோ முடியவேண்டும். மழை அணுகிக்கொண்டிருக்கிறது” என்றார். துரியோதனன் “ஆம், இப்பருவத்தில் இங்கு மழை இல்லை. இத்தருணத்தில் ஏன் என புரியவில்லை” என்றான். சகுனி “மழை மண்ணும் விண்ணும் விழைவதற்கேற்ப பெய்கிறது. மானுடருக்கு அதில் சொல் உண்டா?” என்றார். “மெய்” என்றான் துரியோதனன்.

சகுனி அந்த உணர்வற்ற வெற்றுச்சொற்களால் உளம் சீண்டப்பட்டார். அதை வெல்லவேண்டும் என எண்ணி தன் முகத்தை இயல்பாக்கும்பொருட்டு தாடியை நீவியபடி “அனைத்தும் நல்வாய்ப்பென்றே அமைந்துள்ளது” என்றதுமே அவர் சொல் தன்னியல்பாக எல்லைமீறி வெளிப்பட்டது. “நமது இளையோர் இறந்ததும் ஒருவகையில் நன்று. அவர்களின் இறப்பு நமது படைவீரர்களுக்கு வீறு கூட்டியிருக்கிறது” என்றார் சகுனி. தன்னை அறியாமலேயே துச்சாதனன் ஓரடி முன்னால் எடுத்து வைத்தான். சகுனி அறியாமல் ஓர் அடி பின்சென்று பின்னர் நிமிர்ந்து அவனை பார்த்தார். வெண்கற்கள் என ஒளிமங்கிய அவ்விழிகள் துச்சாதனனை நடுங்கச் செய்தன. அவன் எடுத்த சொல்லை தன்னுள் நிறுத்தி தலையசைத்தான்.

ஆனால் அதற்குள் பின்னிருந்து துர்மதன் முன்னால் வந்து “இதை எவரிடம் சொல்கிறீர்கள், மாதுலரே? இதுவரை நிகழ்ந்த போரில் எவர் வென்றுகொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல தெய்வத்தாலும் இயலுமா?” என்றான். “ஆம், பிதாமகர் பீஷ்மர் பாண்டவப் படைகளை அழித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் மறுபுறம் அர்ஜுனனும் பீமனும் நமது படைகளை வீழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது வெறும் இறப்பு. வெற்றியோ தோல்வியோ அல்ல” என்றான். அவர்களின் சலிப்பை கலைத்துவிட்டதை உணர்ந்து சகுனி இதழ் வளைய புன்னகைத்து “போரெனில் வேறு என்னவென்று நினைத்தாய்? இது என்ன கதை விளையாடும் களிநிலமா? இறப்பால்தான் வெற்றிகள் ஈட்டப்படுகின்றன. விலையால்தான் கொள்பொருள் மதிப்பிடப்படுகிறது” என்றார்.

“ஆனால் எங்கள் குருதியினர் களம்படுகிறார்கள்” என்றான் துச்சலன். “குருதிக்குமேல்தான் பேரரசுகள் எழுகின்றன” என்றார் சகுனி. “மாதுலரே, குருதியின் பொருள் மாறுபடுவதென்பதை நேற்றிரவு அறிந்தேன். எங்கோ எவரோ இறப்பதல்ல, என் தோள் தழுவி ஆடிய உடன்பிறந்தார் இறப்பது. நாங்கள் இன்னுமிருக்கிறோம் திரளென. நன்று, நாங்கள் அனைவரும் இறந்து மூத்தவர் அரியணை அமர்வாரென்றால்...” என்று துச்சகன் சொல்ல துரியோதனன் “போதும்” என்றான். சகுனி சீற்றத்துடன் “உங்களுக்கு மாற்று இருக்குமெனில் சொல்க, போரை நிறுத்திவிடுவோம்! இப்போர் எனக்காக அல்ல” என்றார். “உங்களுக்காகவும்தான், மாதுலரே” என்றான் துச்சலன்.

சகுனி தன் உணர்வணைந்த நிலையைக் கடந்து சீற்றம்கொண்டார். “ஆம், நான் கொண்ட வஞ்சினத்திலிருந்து தொடங்கியது இது. ஆனால் வளர்ந்ததும்

நிலைகொள்வதும் உங்கள் குடியின் பூசலால். உங்கள் மூத்தவன் கொண்ட மண்விழைவால். அவன் அவ்விழைவை துறக்கட்டும், குடிப்பூசல் பேசி முடிக்கப்படட்டும். ஒன்று சொல்கிறேன், எக்கணமும் போரை நிறுத்திக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது” என்றார். “அமைதிப்பேச்சு குறித்து அவ்வப்போது எவரேனும் சொல்கிறார்கள். செல்க, விழைந்தால் அவர்களுடன் பேசும்பொருட்டு அமர்க! உங்கள் பிதாமகர்கள் முன்னிலையில் சொல்லமைவு கொள்க!”

துரியோதனன் “அந்தப் பேச்சே வேண்டியதில்லை. இனி எந்நிலையிலும் இந்தப் போர் அடங்காது, மாதுலரே” என்றான். சகுனி துச்சாதனனை நோக்கி புன்னகைத்து “நீங்கள் பேசிக்கொள்ள வேண்டியது உங்கள் மூத்தவனிடம், என்னிடம் அல்ல” என்றார். துரியோதனன் “பேசிக்கொள்வதற்கு இனி ஒன்றுமில்லை. நான் இன்று வாழும் தம்பியருடன் இருப்பதைவிட இறந்த தம்பியருடன் மிகைப்பொழுது இருக்கிறேன்” என்றான். கைவீசி “அனைவருடைய ஊழும் முன்னரே எழுதப்பட்டுவிட்டன. அதை மாற்றி எழுதும் தகுதியோ உரிமையோ நம் எவருக்குமில்லை” என்றபின் முன்னால் நடந்தான்.

துச்சாதனன் தன் இடையில் கைவைத்து சகுனியை நோக்கியபடி நின்றான். துரியோதனன் தன் குரல் கேளா தொலைவுக்கு சென்றுவிட்டதை திரும்பி நோக்கி உணர்ந்தபின் குரல் தாழ்த்தி “மாதுலரே, நீங்கள் யார்? மெய்யாகவே நீங்கள் மானுடர்தானா என்று ஐயுறுகிறேன்” என்றான். சகுனி மங்கிய புன்னகையுடன் அவனை நோக்கினார். “பாலை நிலத்திலிருந்து எழுந்த கொடுந்தெய்வமா நீங்கள்? எத்தனை தெளிவாக இப்போது கண்முன் தெரிகிறது! இவை அனைத்தும் உங்கள் ஆடல். உங்கள் சிற்றறையிலிருந்து களம்பரப்பி, பகடையை உருட்டி, இரவு பகலென நீங்கள் ஆடியதுதான் பிறிதொரு வழியில் இங்கு நிகழ்ந்துகொண்டிருக்கிறது. சொல்க, ஏன் எங்களுடன் விளையாடுகிறீர்கள்? இம்முற்றழிவினால் நீங்கள் ஈட்டுவதென்ன?” என்றான்.

சகுனி அவன் விழிகளை சில கணங்கள் உற்று நோக்கியபின் “அஸ்தினபுரியின் தெருமுனைகளில் இப்போதும் சூதர்கள் பாடுகிறார்கள் நான் துவாபரன் என்று. இந்த யுகத்தை முற்றழித்து, எச்சமிலாது ஒழித்து, இனிவரும் யுகத்திற்கு வழி தெளிக்க வந்தவன் என்று” என்றார். அவர் புன்னகை பெரிதாகியது. “வரவிருக்கும் கலியுகத்தின் மைந்தன் என்று உன் மூத்தானை சொல்கிறார்கள். எனில் நான் யார்? அவனுக்கு வரவறிவிப்பு உரைப்பவன் மட்டுமே. நான் ஆற்றியதனைத்தும் அவன் பொருட்டே. சென்று அவனிடம் கேள்” என்றார்.

“கேட்கத்தான் போகிறேன். இதுவரை ஒரு சொல்லும் மாற்றுரைத்தவனல்ல. ஒவ்வொரு எண்ணமும் அவருக்கு எதிரொலி என மட்டுமே என்னுள் எழுந்துள்ளன. ஆனால் சொல்லியாக வேண்டும். இப்பாதை பேரழிவுக்குரியது. மாதுலரே, நேற்று நம் இளமைந்தர் நாற்பதுபேர் களம்பட்டனர். இளையவர்கள் கவசீயும் நாகதத்தனும் உக்ரசாயியும் அனாதிருஷ்யனும் குண்டபேதியும் விராவீயும் பீமனால் கொல்லப்பட்டார்கள். இப்போர் இப்படியே சென்றால் இங்கு ஒருவரும் எஞ்சப்போவதில்லை. மைந்தர் ஆயிரவரும் களம்படுவார்கள், உடன்பிறந்தார் நூற்றுவரும் அழிவார்கள். ஒருவேளை நீங்கள் எஞ்சுவீர்கள்” என்றான்.

“இல்லை, நானும் எஞ்சமாட்டேன்” என்றார் சகுனி. உடல் நடுங்க நின்றபின் துச்சாதனன் “அதை அறிந்துளீரா?” என்றான். “இக்களத்தில் கால்வைத்ததுமே அறிந்தேன்” என்றார். துச்சாதனன் “ஆம், இங்கே வந்ததுமே நான் மெய்ப்புகொண்டேன். நான் அறிந்தேன், இதுவே என் இடம் என” என்றான். சகுனி புன்னகைத்து “அது நன்று, நாம் எஞ்சுவதைப்பற்றிய விழைவுகொண்டு எங்கும்

பின்னடையவேண்டியதில்லை” என்றார். “நீங்கள் அஞ்சவில்லையா?” என்றான் துச்சாதனன். “இல்லை, என் கடன் முடிகிறது என்றே உணர்கிறேன்” என்றார் சகுனி. துச்சாதனன் “மாதுலரே, நீங்கள் மெய்யாகவே குருதிகோரி வந்த கொடுந்தெய்வம்தானா?” என்றான்.

சகுனியின் நோக்கு மாறுபட்டது. “அவ்வப்போது நானும் உணர்வதுண்டு என் உடலில் ஏறி பாலையிலிருந்து ஒரு தெய்வம் இந்நிலத்திற்கு வந்துள்ளது என்று” என்றார். அவனை நிமிர்ந்து நோக்கி “பாலையை பார்த்திருக்கிறாயா?” என்று கேட்டார். மேலும் குரலெழ “பாலையின் பசித்த ஓநாயை பார்த்திருக்கிறாயா? அதன் விழியில் எழும் அனல் ஒருகணம் உன் நோக்கில் பட்டதென்றால் நான் யார் என்று உனக்கு புரியும்” என்றார். பின்னர் உதடுகள் கோணலாகி இழுபட மென்மையாக நகைத்து “செல்க, உன் எளிய உள்ளம் இதை புரிந்துகொள்ள இயலாது! எந்தப் பேருள்ளமும் இங்கே பேதலித்து செயலழிந்து அமையும்” என்றார்.

“இங்குள்ள ஒவ்வொருவரும் இன்று இவ்வினாவை எதிர்கொள்கிறார்கள். இவையனைத்தும் ஏன்? இங்கு நிகழும் ஒவ்வொருவரும் அவ்வினா அறுபட்டு துடிக்கத்தான் உயிர்விடுகிறார்கள். இறந்தவர்கள் ஒருவரும் இந்நிலத்திலிருந்து அகலவில்லை. மாதுலரே, இரவில் எழுந்து நீங்கள் இருளை நோக்குக! பல்லாயிரம் கோடி மீன்கள் நிறைந்த இருண்ட நீர்போல் இருள் கொந்தளித்து சுழிப்பதை காண்பீர்கள். இருளில் நிறைந்திருக்கின்றன இறந்தவர்களின் இருப்புகள். அவர்கள் இங்கே எழுந்த வினாக்கள் விடைகளாக மாறாமல் அகலவியலாது” என்றான் துச்சாதனன்.

தடுமாறும் குரலில் அவன் தொடர்ந்தான். “என்னால் ஒருகணமும் துயிலமுடியவில்லை. இன்று காலை எழுந்து கதாயுதத்தை எடுத்தபோது நான் எண்ணியது ஒன்றுதான். தெய்வங்களே, மூதாதையரே, இந்தக் களத்தில் இருந்து இன்றேனும் என்னை விண்ணுக்கு எடுங்கள். நெஞ்சுபிளந்து இம்மண்ணில் படுத்திருக்கையில் மட்டுமே நான் அறியக்கூடும் அந்நிறைவை எனக்கு பரிசெனக் கொடுங்கள். மாதுலரே, வெல்வதற்காக அல்ல, ஒவ்வொரு நாளும் தோற்பதற்காகவே களம் நிற்கிறேன்.” சகுனி “அதை அன்றே பகடைக்களத்திலேயே முடிவுசெய்திருப்பாய்” என்றார். துச்சாதனன் “ஆம்” என்றான்.

பின்னர் “இவையனைத்துக்கும் பொருளறிந்த இன்னொருவரும் இருக்கக்கூடும் என நான் எண்ணினேன்” என்றான். சகுனி தாடியை நீவியபடி நோக்கினார். “நான் கணிகரை சென்று கண்டேன், இங்கு வருவதற்கு கிளம்பும்நாளில்” என்றான் துச்சாதனன். சகுனி தலையசைத்தார். “அவர் நோயுற்றிருந்தார். அவ்வறைக்குள் நுழைகையில் அவர் இறந்துவிட்டாரோ என்ற எண்ணம் ஏற்பட்டது. உடல் நடுங்கிக்கொண்டிருப்பதைக் கொண்டே அவர் இருக்கிறார் என உணர்ந்தேன். அருகே சென்று நோக்கினேன். குழிக்குள் இருக்கும் தவளையின் விழிகள்போல சொல்லில்லாத வெறிப்பை கண்டேன். நான் அவரிடம் ஒன்றும் பேசவில்லை.”

சகுனி தலையசைத்தார். துச்சாதனன் மேலும் ஏதோ சொல்ல முயன்று, சொல்லவிந்து திரும்பி நடந்தான். சகுனி அவனை நோக்கியபடி தாடியை நீவிக்கொண்டு நின்றார். பின்னர் “மருகனே” என அழைத்தார். அவன் நின்றான். “நீங்கள் என் பகடைக்காய்கள். நான் அவருடைய பகடையின் காய். அதை இக்களத்திற்கு வந்த அன்றே உணர்ந்தேன்” என்றார். துச்சாதனன் முகம் தசை தளர்ந்து எளிதாகியது. “ஆனால் இப்போது தோன்றுகிறது அவரும் எளிய பகடைக்காய் மட்டுமே என்று.” துச்சாதனன் அவரையே நோக்கிக்கொண்டு நின்றான். பின்னர் திரும்பி நடந்தான்.

காம்போஜ நாட்டு அரசன் சுதக்ஷிணன் தன் தேரில் வருவது தெரிந்தது. தேர் வளைவழிய அதிலிருந்து அவன் இறங்கி சகுனியை நோக்கி வந்து “படைசூழ்கை முழுமையடைந்துவிட்டது, காந்தாரரே. ஒவ்வொன்றும் முற்றாக அமைந்துள்ளன. இம்முறை நமது சூழ்கை வெல்லும்” என்றான். “ஆம்” என்றார் சகுனி. “இம்முறை நாம் அமைத்துள்ளது கிரௌஞ்சவியூகம். இது ஒன்றுள் ஒன்று சுழலும் சகடங்களைப் போன்றது. நாரையின் எந்தச் சகடவளைவுக்குள் அவர்கள் சிக்கிக்கொண்டாலும் அழிவுதான்…” என்றான். சகுனி “அது நிகழும்” என்றார். “இன்றே பீமசேனரை நாம் அழித்தாகவேண்டும். காம்போஜத்து படைத்தலைவர்களில் பன்னிருவர் நேற்றுமட்டும் அவரால் கொல்லப்பட்டுள்ளனர்” என்றான் சுதக்ஷிணன். சகுனி அவன் தோளை தொட்டுவிட்டு தன் தேர்நோக்கி சென்றார்.

தேரில் அவர் ஏற ஏவலன் உதவினான். தேர்த்தட்டில் நின்றபடியே உடல் எடையை அமைத்து அரையமர்வு கொள்வதன்பொருட்டு அமைக்கப்பட்டிருந்த இடையளவு உயரமான தூண்பீடத்தில் தன் உடல் எடையை சாய்த்துக்கொண்டார். வில்லை எடுத்து நிறுத்தி நாணேற்றிய பின் அருகிருந்த தேரில் நின்றிருந்த சுதக்ஷிணனிடம் “செல்வோம்” என்றார். தேர்கள் கிளம்பிச்செல்ல சுதக்ஷிணன் போர்ச்சூழ்கையை விளக்கிக்கொண்டே வந்தான். “முன் நிரையில் பீஷ்ம பிதாமகர் நின்றிருக்க இன்று பூரிசிரவஸும் ஜயத்ரதனும் அவருக்கு இருபுறமும் துணை செய்கிறார்கள். பாண்டவப் படையை பிதாமகர் இரண்டாக உடைத்ததுமே ஜயத்ரதருடன் நாம் இணைந்துகொள்கிறோம்.”

“இன்று அர்ஜுனரைச் சூழ்ந்து செயலிழக்கச்செய்வோம். நம் படைகளுக்கு அர்ஜுனர் அளித்த இழப்பும் மிகப் பெரிது. இன்று அது நிகழலாகாது. இன்று நாம் அவரை கொல்ல முடிந்தால் நன்று. புண்படுத்தவேனும் செய்தால் நமது வெற்றியை உறுதி செய்கிறோம். மறுபக்கம் பூரிசிரவஸும் பால்ஹிகப் பிதாமகரும் பிரக்ஜ்யோதிஷத்தின் பகதத்தரும் பீமசேனரை சூழ்ந்து அப்பால் கொண்டு செல்வார்கள். அவர்கள் அவரை இன்று அழிப்பார்கள். கௌரவ உடன்பிறந்தார் கடோத்கஜனை எதிர்கொள்வார்கள். ஒவ்வொன்றும் முற்றிலும் வகுக்கப்பட்டுவிட்டது” என்றான் சுதக்ஷிணன்.

“ஆம்” என்றார் சகுனி. சுதக்ஷிணன் நகைத்து “எனக்கொன்று தோன்றுகிறது, ஒவ்வொரு முறை நாம் படைசூழ்கையை அமைக்கையிலும் இவ்வாடற்களத்தில் கண்ணுக்குத் தெரியாமல் நமக்கு மறுபக்கம் இருக்கும் ஒருவர் அப்படைசூழ்கையை கலைக்கும் நுண்சூழ்கை ஒன்றை அமைக்கிறார் என. இரு படைசூழ்கைகளும் போர்க்களத்தில் எங்ஙனம் கலைகின்றன என்பது விந்தையானது. ஒவ்வொரு படைவீரன் உள்ளத்திலும் படைசூழ்கையின் வடிவம் எவ்வண்ணமோ நிலைகொள்கிறது. கலைந்து மீண்டும் உருக்கொண்டு மீண்டும் கலைந்து களத்தில் போரிடுகிறோம்” என்றான். கைகளைத் தூக்கி “மந்தைவிலங்குகளில் மந்தையின் வடிவம் நுண்ணுருவில் வாழ்கிறதென்பார்கள்” என்றான்.

சகுனி ஒன்றும் சொல்லாமல் படைகளை கூர்ந்து நோக்கியபடி சென்றார். “இங்கு ஒரு படைசூழ்கையில் சிறுதுளியென இருக்கும் வீரன் இறந்துபோகும்போதுதான் அச்சூழ்கையிலிருந்து முற்றிலும் விடுபடுகிறான் என தோன்றுகிறது. அல்லது அவனுடன் அச்சூழ்கையின் ஒரு துளியும் செல்கிறதா?” என்றான் சுதக்ஷிணன். சகுனி புன்னகைத்து “நல்ல எண்ணம்! இத்தகைய எண்ணங்கள் போர்க்களத்தில் நம்மை மகிழ்வுடன் வைத்திருக்கும்!” என்றார். சுதக்ஷிணன் நகைத்து “முதல் நாள் போரில் மெய்யாகவே உளம் அதிர்ந்துவிட்டேன். முதல் நாள் இரவு மூன்று அகிபீனா

உருண்டைகளை உண்டும் ஒருகணமும் நான் துயிலவில்லை. ஆனால் இரண்டாம்நாள் படைசூழ்கை உடைந்து சிதறும் காட்சியை தேரில் நின்று ஓரவிழியால் பார்த்தபோது ஒருகணம் என்னிலொரு சிரிப்பு எழுந்தது. அதன் பின் அனைத்தும் எளிதாயிற்று” என்றான்.

“காந்தாரரே, இது ஒரு கேலிக்கூத்தன்றி வேறொன்றுமில்லை. இன்று நான் உங்களை முதலில் பார்த்தபோது வெல்வோம் என்று சொன்னேன். அங்கு தொடங்குகிறது இந்த இளிவரல். இப்படைசூழ்கையில் ஒவ்வொருவரும் இன்னொருவரை நோக்கி இன்று நாம் வெல்வோம் என்கிறார்கள். ஒரு சொல்லை முற்றிலும் பொருளில்லாது பயன்படுத்தினால் அது பிற சொற்கள் அனைத்திற்கும் நஞ்சூட்டி சொல்வன அனைத்தையும் பொருளிலாதாக்குகிறது. பொருளில்லாச் சொல்லை சொல்வதென்பது பெரும் பொறுப்பு. எடைபோல அது நம் முதுகில் அமர்ந்திருக்கிறது” என்றான்.

பின்னர் மீண்டும் நகைத்து “ஆனால் பொருளிலாச் சொல்போல் விடுதலை பிறிதொன்றில்லை. பித்தர்களும் கவிஞர்களும் அவ்விடுதலையில் திளைப்பார்கள். அரசர்களோ ஆயிரம் கடிவாளமிட்ட சொற்களை ஆள்பவர்கள். நான் பேசக்கற்றுக்கொண்ட பின்னர் இப்போதுதான் பொருளின்மையின் பித்துவெளியில் திளைக்கிறேன்” என்றான். அவன் பேச விழைவது தெரிந்தது. “ஒருவேளை இப்போர்க்களத்திலன்றி பிறிதெப்போதும் நான் இத்தனை மகிழ்வுடன் இல்லாமலிருந்திருக்கலாம். இங்கு நான் எதையும் செய்யலாம். இக்கவசங்களையும் வில்லையும் உதறிவிட்டு ஆடைகளை கிழித்தெறிந்து வெற்றுடலுடன் களத்திலிறங்கி நான் நடனமிட்டால் எவரும் அதிர்ச்சி கொள்ளப்போவதில்லை. அதுவும் சூதர் பாடல்களின் கருக்கள் என்றாகும்” என்றான்.

சகுனி “உங்கள் நிமித்திகர் உங்களுக்கு எப்போது நாள் குறித்திருக்கிறார்கள்?” என்றார். அவன் திகைத்து பின்பு “இக்களத்தில். உறுதியாக அது இக்களத்தில் நிகழும். இதோ போர்முரசு கொட்டிய மறுகணம். அல்லது இப்போரின் இறுதிநாளில். ஆனால் இக்களத்தில், ஐயமேயில்லை. அதை நிமித்திகன் உரைத்தபோது நான் என் கையிலிருந்த கணையாழியை எடுத்து அவனுக்களித்தேன். அமைச்சர்களும் பிறரும் திகைத்தனர். அப்போது ஏன் அதை செய்தேன் என்று எனக்கு தெரியவில்லை. இக்களம் புகுந்த பின்னர் தெரிகிறது. என்னிடமுள்ள இந்த உளவிடுதலைக்கு அடிப்படையாக இருப்பது அதுவே. நான் திரும்பப் போவதில்லை. திரும்ப வேண்டியிராத பயணங்களைப்போல் இனிது வேறேது? நாம் என்ன செய்தாலும் அந்த இலக்கையே சென்றடைவோம் என்பதைப்போல் விடுதலையின் கொண்டாட்டம் பிறிதில்லை” என்றான்.

சகுனி “காம்போஜரே, இந்தப் பெருங்களத்தில் என்னவென்று தெரியாமல் ஆடும் பகடைக்காய் நீர் என தோன்றியிருக்கிறதா?” என்றார். சுதக்ஷிணன் “ஆம், அதில் எனக்கு ஐயமே இல்லை” என்றான். “இக்களத்தில் உமது இறப்பு எதன்பொருட்டு?” என்றார் சகுனி. “என் முதுதாதை அசுரகுடியிலிருந்து உருவானவர். எங்கள் தோற்றுவாய் வடக்கே சோனகப் பாலைநிலத்தில். அங்கிருந்து நாங்கள் காம்போஜநிலத்துக்கு வந்தபோது அங்கே தூய வெண்ணிறமான புரவிகள் மேய்ந்துகொண்டிருப்பதை பார்த்தோம். விரைந்தோடுகையில் வாலும் செவிகளும் அசைவிலாது நிற்கும் அத்தகைய புரவிகள் எங்கும் மிக அரிதானவை. உறையிலிருந்து உருவிய வாள் என கூரிய மெல்லுடல் கொண்டவை.”

அவற்றை என் மூதாதையான உக்ரபாகு கண்ணிவீசி பிடிக்கச் சென்றபோது அங்கிருந்த முதுமுனிவரான காமிகர் அவரை தடுத்தார். “யவனனே, இவை

வேதவேள்விகளுக்குரிய தூய புரவிகள். இவற்றை மானுடர் பிடிக்கலாகாது” என்று சொன்னார். “வேள்விக்கு புரவி தேவைப்படும்போது அங்கு வந்து வேதமோதியபடி காத்திருப்பார்கள் அந்தணர். அவற்றிலொன்று தானாகவே வந்து அவர்கள் முன் நிற்கும் அதை மட்டும் பிடித்துச்செல்வது அந்தணர் வழக்கம்” என்றார்.

எந்தை அவரிடம் பணிந்து “நாங்கள் உணவும் நீருமின்றி வந்துள்ளோம். இங்கே எங்களுக்கு செல்வமென அமைவது இந்தப் புரவி ஒன்றே. இதை நாங்கள் எப்படி தவிர்ப்பது?” என்று கேட்டார். “இவற்றை ஒளியின் வடிவெனக் கொள்க! இல்லத்துச் சுடரென ஓம்புக! ஒருபோதும் இவற்றின் உரிமையாளர்கள் என எண்ணற்க! இவற்றின் ஏவலர் என்றே உங்களை கொள்க! இவை உங்களுக்கு செல்வமென்றாகும்” என்று காமிகர் சொன்னார். அவ்வண்ணம் அங்கே அப்புரவிகளைப் பேணி வாழ்ந்தனர் என் முன்னோர். புரவியே எங்கள் செல்வம். பாலைவன வைரங்கள் என அவற்றை சொன்னார்கள் அயலார். எங்கள் நாடு செழித்தது. குலம் பெருகியது.

ஒருமுறை எங்கள் அரண்மனைக்கு வந்த வைதிகர் ஒருவருக்கு கொடையளிக்கையில் மேலாடை சரிய என் மூதாதையான உக்ரசிம்மர் வசைச்சொல் ஒன்றை உதிர்த்து ஏவலனை கடிந்துகொண்டார். அவர் நீட்டிய கொடையை மறுத்த அந்தணர் “உன்னிடம் அசுரக்குருதி ஒரு துளி எஞ்சியிருக்கிறது. உன் உள்ளத்தின் கடிவாளத்தை ஒருபோதும் கைவிடாதே. உன் மைந்தர் ஒவ்வொருவரும் தங்கள்மேல் தாங்கள் ஆட்சிசெய்தாகவேண்டும். ஓர் அடிபிழைத்தால் நீங்கள் அழிந்துவிடவேண்டியிருக்கும்” என்றார். உக்ரசிம்மர் அஞ்சிவிட்டார். அதன்பின் இரு நோன்புகளை அவர் தன் குடியினர் கடைபிடிக்கும்படி வகுத்தார். ஒருநாளில் நூறு சொற்களுக்குமேல் உரைப்பதில்லை. ஒருநாளில் நூறுபேருக்குமேல் சந்திப்பதில்லை.

அதை எட்டு தலைமுறைக்காலம் என் குடியினர் கடைப்பிடித்தனர். எட்டாம் தலைமுறை அரசரான மகாபாகு ஒருமுறை நகருலாச் செல்லும்போது கண்ணுக்குப்பட்ட ஒரு திருடனை துரத்திச்செல்கையில் புரவி அசைவிழந்து நின்றுவிட்டது. அவர் அதை சவுக்கால் அறைந்தார். புரவி அசையவில்லை. திருடன் தப்பிவிட்டான். மகாபாகு சீற்றத்துடன் இறங்கி வாளால் அதன் கழுத்தை வெட்டி வீசிவிட்டு நோக்கியபோது புரவியின் முன்னால் புதருக்குள் சிறுகுழியில் மூன்று கண்திறக்காத நாய்க்குட்டிகள் முட்டிமோதிக்கொண்டு கிடப்பதை கண்டார்.

அந்தப் பழியைத் தீர்க்க மகாபாகு ஆலயங்களுக்குச் சென்று நோன்புகள் நோற்றார். கொடைகள் நிகழ்த்தினார். புரவிக்கு நிகராக தன் மைந்தனை அளித்தால் பழிநிகர் ஆகும் என்றும் இல்லாவிட்டால் எங்கள் குடிச்செல்வமான புரவிகள் முற்றழியும் என்றும் நிமித்திகர் உரைத்தனர். அவ்வண்ணம் மைந்தனை அளிப்பதாக அவர் நீர்தொட்டு ஆணையுரைத்தார். அதனூடாக தன் குடியை அழிவிலிருந்து காத்தார். அப்போது அவருக்கு திருமணமாகியிருக்கவில்லை. அவர் ஏழு அரசியரை மணந்தார். எழுவரில் ஒருவரே மைந்தனை ஈன்றார். அம்மைந்தன் நான்.

“என்னை எந்தை நான் பிறப்பதற்கு முன்பே தெய்வங்களுக்கு பலியாக அளித்துவிட்டிருந்தார். அந்த பலிநிறைவேற்றம் இக்களத்தில் நிகழும் என்றார் நிமித்திகர்” என்று சுதக்ஷிணன் சொன்னான். சகுனி புன்னகைத்து “நன்று, ஆடல் நெடுங்காலம் முன்னரே தொடங்கிவிட்டது” என்றார். அவன் வாய்விட்டுச் சிரித்தபடி தன் வில்லை நாணேற்றி “இக்களத்தில் என்னால் கொல்லப்படுபவர்களும் அவர்களுக்குரிய ஊழ்கொண்டவர்கள். என்னை கொல்லும் அம்புடன் எழுபவனுக்கும் தனக்குரிய கதை ஒன்றிருக்கும்” என்றான்.

போர்முரசு முழங்கத்தொடங்கியது. “இந்நாளில் மண்சரியும் அனைத்து வீரர்களுக்கும் வணக்கம். நீங்கள் செய்வதற்கு மிக ஏற்ற ஒன்றை செய்கிறீர்கள்” என்ற சுதக்ஷிணன் கைதூக்கி “வெற்றிவேல்! வீரவேல்!” என்று கூவினான். சகுனியும் கைதூக்கி “வெற்றி! வெற்றி!” என்றார். போர் முரசுடன் இணைந்ததுபோல் எழுந்த படையின் பேரோசை அலையென பெருகிச்சென்று எதிர் அலையென வந்த பாண்டவப் படைகளில் மோதி கலந்து கொந்தளிப்போசையாக மாறியது. அம்புகள் எழுந்து காற்றை நிறைத்தன. அலறல்களும் விலங்குகளின் ஓசைகளும் சகடஒலிகளும் இணைந்த பெருமுழக்கம் சூழ்ந்தது.

தன்னைச் சூழ்ந்து விழிதொடும் தொலைவுவரை நிகழ்ந்துகொண்டிருந்த போரை நோக்கியபடி சகுனி அசைவிழந்து தேர்த்தட்டில் நின்றார். நாரை மெல்ல சிறகுவிரித்து அலகுநீட்டி முன்னால் சென்றது. மீன் அதை எதிர்கொண்டது. எப்பொழுதுமே படைகள் எழுந்து போர் நிகழத்தொடங்கி அரைநாழிகைக்குப் பின்னரே அவர் தேரை கிளப்புவது வழக்கம். முதல்நாள் போருக்கு முன்பு இரவில் படைசூழ்கை வகுக்கும் சொல்லாடல்கள் முடித்து தன் பாடிவீட்டுக்கு திரும்பும்போது அவர் மிகவும் களைத்திருந்தார். உள்ளம் வெறும் சொற்களால் நிரம்பி கொந்தளித்துக்கொண்டிருந்தது. அதன் எடையை தாளமுடியாததுபோல் இடையும் கால்களும் வலித்தன. புண்பட்ட கால் பெருகி பலமடங்கு பருத்து எடைகொண்டுவிட்டதுபோல் இருந்தது. நீர் நிறைந்த தோல்பையை இழுத்துச்செல்வதுபோல் காலை உந்தி வைத்து அவர் தேரிலேறிக்கொண்டார்.

பீடத்தில் அமர்ந்ததுமே கண்களை மூடி தலைதாழ்த்திக்கொண்டார். ஆழத்தில் விழுவதுபோல் இருந்தது. நெடுந்தொலைவுக்கு கேட்டுக்கொண்டிருந்த படைகளின் முழக்கம் ஒரு ரீங்காரமாக மாறி அவரைச் சுற்றி பறக்க அதன் சுழி நடுவில் அவர் விசைகொண்டு சுழன்று அமிழ்ந்துகொண்டிருந்தார். தேர் எங்கோ முட்டிக்கொண்டதுபோல் தோன்ற விழித்தெழுந்து “என்ன?” என்றார். “தங்கள் பாடிவீடு, அரசே” என்றான் பாகன். “ஆம்” என்றபடி அவர் பீடத்திலிருந்து இருமுறை எழமுயன்றார். உடல் உந்தி மேலெழவில்லை. அவர் “உம்” என்று ஒலியெழுப்ப பாகன் புரிந்துகொண்டு இறங்கி படிகளினூடாக ஏறி வந்து அவர் கையைப்பற்றி தூக்கினான்.

தேர்த்தூணைப் பற்றியபடி நின்று உடல் நிலையழிவை சமன் செய்தபடி மூச்சிரைத்தார். கண்களை மூடியபோது நிலம் சரிந்திருப்பதாகவும் தேர் கவிழப்போவதாகவும் தோன்றியது. மீண்டும் கண்விழித்து சூழ்ந்திருந்த நிலத்தை பார்த்தபோது அலையடிக்கும் நீர்ப்பரப்பொன்றின்மேல் அப்படை அமைந்திருப்பதுபோல் காட்சிகள் நெளிந்தன. அவர் நிலை மீள்வதற்காக பாகன் காத்திருந்தான். மீண்டும் விழி திறந்தபோது காட்சிகள் நிலைகொண்டிருந்தாலும் உடல் முழுக்க அனலென விடாய் நிறைந்திருந்தது. மெதுவாக புண்பட்ட காலை எடுத்துவைத்து இறங்கினார். பாகனின் தோளிலிருந்து கையை எடுத்ததும் அவன் தன் கையை விலக்கிக்கொண்டு எப்போது வேண்டுமானாலும் பிடித்துக்கொள்ளும் வகையில் மிக அருகே ஓசையிலாது நிழலென நடந்துவந்தான்.

தன் பாடிவீடு வரை செல்வதற்குள் அவர் மிகவும் களைத்திருந்தார். நெடுந்தொலைவென தோன்றியது. ஒவ்வொரு காலடிக்கும் உடலும் உள்ளமும் வலியால் துடித்தன. அவ்விரவுக்காகவே அத்தனை காலம் காத்திருந்தேன் என்று எண்ணிக்கொண்டார். நாளுமென சொல்சொல்லெனத் திரட்டி களஞ்சியம்

என்றாக்கி சூழ வைத்திருந்தார். அத்தனை சொற்கள், விளக்கங்கள், சூழ்ச்சிகள், உரைகள், சூளுரைகள், உளநெகிழ்வுப் பேச்சுகள்... எத்தனை படைசூழ்கைச் செய்திகள், எவ்வளவு நூல்சுட்டுகள், என்னென்ன நெறிகள்! மூதாதையரின் சொற்கள் கடல்மீன்களென சூழ நிறைந்திருந்தன. நான்கு பகடைகளை மீண்டும் மீண்டும் உருட்டி முடிவிலி வரை ஆடுவதற்கு நிகர்.

அவருடைய பாடிவீடு உயரமற்றதாக இருந்தது. உள்ளே அவருக்கு மஞ்சம் விரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தச் சிறிய குடிலின் உட்பகுதியை பார்த்தபோது அச்சம் எழுந்தது. உள்ளே சென்றால் உடல் வீங்கி அங்கே செறிந்து சிக்கிவிடக்கூடும் என்று ஒரு எண்ணம் உருவாகியது. காட்டில் ஒருமுறை சாரைப்பாம்பை விழுங்கிய அரசநாகம் கல்லிடுக்கொன்றில் சிக்கி உயிர் துறந்து மட்கி எலும்புக்கூடென அமைந்திருப்பதை அவர் கண்டிருந்தார். பாம்பிற்குள் பிறிதொரு பாம்பு. அரசநாகத்தின் விலா எலும்புகள் ஒவ்வொன்றும் உள்ளிருந்த நாகத்தை ஆரத் தழுவியிருந்தன. உடன் வந்த துரியோதனனிடம் “இதில் எது எதை கொன்றது?” என்றார். துரியோதனன் கேட்டது புரியாமல் “அரசநாகம் விழுங்கியிருக்கிறது” என்றான். சகுனி வாய்விட்டு நகைத்து “கவ்வியபின் விடமுடியாத தீயூழ் கொண்டது அரசநாகம்” என்றார்.

திரும்பி தன் ஏவலனிடம் “என் மஞ்சம் வெளியில் அமையட்டும்” என்றார். அவன் தலைதாழ்த்தி உள்ளே சென்று மரவுரி மஞ்சத்தை எடுத்து வெட்டவெளியில் பரப்பினான். முருக்க மரத்தில் செதுக்கப்பட்ட தலையணைகளை வைத்தான். அவர் அவன் தோளைப்பற்றியபடி மெல்ல காலை நீட்டி மஞ்சத்தில் அமர்ந்தார். முழு உடலும் மண்ணில் அமர விழைந்தது. அன்றுபோல் பிறிதெப்போதும் படுக்கையை அவர் விரும்பியதில்லை. வானில் விண்மீன்கள் நிறைந்திருந்தன. கிழக்கு திசையில் ஒளிவிரிசல்கள்போல் சிறுமின்னல்களும் பெருங்களிற்றின் உறுமல்போல் தொலைஇடியோசையும் எழுந்தன. மழை பெய்யக்கூடும் என்று அவர் தனக்குத்தானே சொன்னார். அது தன்னிடமல்ல என்று உணர்ந்த ஏவலன் மெதுவாக தலைவணங்கினான்.

சகுனி தலையணையை சீரமைத்தபின் உடலை சரிக்கப்போக ஏவலன் “தங்களுக்கு மது...” என்றான். “கொடு” என்பதுபோல் கைதூக்கிய மறுகணமே வேண்டாம் என்று கையசைத்தார். “அகிபீனா?” என்று அவன் மீண்டும் கேட்டான். “வேண்டியதில்லை, நீ செல்க!” என்று அவர் கைகாட்டிவிட்டு உடல் சரித்து தலைவைத்து படுத்தார். இன்றிரவு துயில இயலாது. மதுவோ அகிபீனாவோ கொண்டு என் சித்தத்தை துயிலவைத்தால் இவ்விரவை இழந்தவனாவேன். அறுபது ஆண்டுகள் காத்திருந்த இரவு இது. நாளை தொடங்கவிருக்கிறது பெரும்போர். ஒவ்வொன்றும் முற்றிலும் கூடிவந்துள்ளது.

வெற்றி கண்முன் கைநீட்டி தொடும் தொலைவில் நின்றிருக்கிறது. இதற்கு அப்பால் ஒரு அரசக்கூட்டு, இதைவிடச் சிறந்ததோர் படையணி, இன்னும் உகந்த போர்நிலை பாரதவர்ஷத்தில் எவராலும் உருவாக்கப்படவில்லை. அன்று அவையில் நிகழந்த சொல்லாடலில் ஒவ்வொருவரும் உளவிசையின் உச்சத்திலிருந்தனர். வெற்றி எனும் சொல் அனைவர் நாவிலும் இருந்தது. பேசிப் பேசி பெருக அனைத்து சொற்களுமே வெற்றி என்ற உட்பொருளை கொண்டவையாயின. அவர்கள் உளம் எழுந்து கொந்தளிக்கும்தோறும் ஊசியால் தொட்டுவைத்த குருதித்துளிபோல் அவருள் ஐயம் எழுந்தது. அது மாபெரும் வெற்றி என்பதனால், மிக நெடுங்காலம் தவமிருந்து அணுகியதென்பதனால், அது அத்தனை எளிதாக இருக்கப் போவதில்லை என்று அகம் கூறியது.

எளிதாக இருந்தால் ஏமாற்றமடைவேனா? எளிதாக இருக்கலாகாதென்று என்னுள் அமைந்த ஆணவம் ஒன்று ஏங்குகிறதா? படுக்கையில் மெல்ல உடலை நெளித்தபடி சகுனி விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தார். தேவர்களின் ஒரு கணம் இங்கு ஓர் யுகம். அந்த விண்மீனின் ஒரு இமைப்புக்குள் இங்கு கோடி கோடி மாந்தர் பிறந்திறந்து மறைகிறார்கள். பேரரசுகள் உருவாகி அழிகின்றன. குமிழிகள்போல் நகரங்கள் தோன்றி மறைகின்றன. எனில் அங்கிருந்து அதை பார்த்துக்கொண்டிருப்பது யார்? அவர்கள் பார்ப்பதுதான் என்ன?

ஒற்றை விண்மீனை விழியூன்றி நோக்கியபடி படுத்திருந்தார். அது ஆபன் என்னும் வசு. விண்ணிலுள்ள தூய நீரை கறந்து புவியிலுள்ள நீர்வெளிகளை நிறைத்து வற்றாது பேணும் தெய்வம். நோக்கும்போது மெல்ல அலையடிக்கும் மீன் அது. அலைவே நீர். நிலைகொள்ளாமையின் வடிவே நீர். மானுட உடல் நீரால் ஆனது. உடலுக்குள் நீர் அலைகொண்டபடியே உள்ளது. உடலின் ஒவ்வொரு பகுதியும் வலியும் உளைச்சலும் கொண்டது. எப்படி உடலை திருப்பினாலும் ஒருகணம் இதமாகவும் மறுகணம் வலியாகவும் உடலை உணர முடிந்தது.

நாண் அவிழ்த்து ஆயுதசாலையில் வைக்கப்பட்டிருக்கும் வில்லென இவ்வுடலை எங்கேனும் தளர்த்தி வைத்தால் மட்டுமே இளைப்பாற இயலும். அந்நாண் கட்டப்பட்டிருப்பது உள்ளத்திற்குள். அறுபதாண்டுகாலம் இறுகி நின்ற நாண். சகுனி தன் காலில் வலியை உணரத் தொடங்கினார். அகிபீனா இன்றி அறுபதாண்டுகளில் ஒருநாள்கூட முழுதறிந்து துயின்றதில்லை. அகிபீனாவின் மயக்கமே உடலோய்வு. உள்ளம் அமைந்ததே இல்லை. இன்று என் உடலை நேருக்கு நேர் சந்திக்கிறேன். இறுதியாக அது என்னிடம் சொல்லப்போவதென்ன என்று கேட்கிறேன். அது சொல்வது ஒற்றைச்சொல்லையே. வலி வலி வலி வலி.

அந்த ஒற்றைச்சொல் முடிவிலாது செல்லும் கணங்களின் பெருக்கு. என் கால் நரம்புகள் இழுத்துக்கட்டிய ஒரு யாழ். ஒவ்வொரு நரம்பையும் சுண்டி விளையாடும் அறியா விரலொன்று. வலி! வலி ஓர் இசை! துள்ளும், துடிக்கும், தெறித்து கூசி, பின் நெகிழ்ந்து அமைந்து, மீண்டும் வெடித்தெழும் இரக்கமற்ற இசை! என்னால் இயலாது. இனி இயலாது என்னால். இதோ அகிபீனா கொண்டுவர ஆணையிடப்போகிறேன். இதோ எக்கணமும் எழுவேன். எழுந்து சற்று கைவீசினால் போதும், என் ஆணைக்காக காவலன் நின்றிருப்பான். அகிபீனா கொண்டு வருக! ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து. என் உடல் நிறையும் நச்சு. இக்காலில் பெருகியுள்ள நஞ்சை ஒவ்வொரு நாளும் உண்ணும் நஞ்சால் ஈடு செய்கிறேன்.

இல்லை, இவ்வொரு நாள் இந்த வலியை என்னால் எதிர்கொள்ள முடியாதென்றால் இதன் முன் தோற்றவனாவேன். இத்தனை நாள் ஒத்திப்போட்டதனைத்தும் இந்த ஒருநாளுக்காக. இதை எதிர்கொள்ளும் பொருட்டே என்னை தீட்டிக்கொண்டேன். கண்களை மூடிக்கொண்டபோது மிக அருகே அவர் காந்தாரப் பாலைஓநாயின் முகத்தை பார்த்தார். எரியும் விழிகள். திறந்த வாய்க்குள் உலர்ந்த நாக்கு செத்துக்கொண்டிருக்கும் நாகமென அசைந்தது. அது நெடுங்காலம் முன்னரே இறந்துவிட்டிருந்தது. தான் இறந்துவிட்டதை அது அறிந்தும் இருந்தது. அத்துயரம் அதன் முகத்தில் இருந்தது. அது இருக்கும் அவ்வுலகிலிருந்து ஒரு சொல்லையேனும் இங்கு அளிக்க இயலாததன் தவிப்பு தெரிந்தது.

அவர் அதை நோக்கிக்கொண்டிருந்தார். கனவுகளில் பல நூறுமுறை அது எழுந்து கொண்டதுண்டு. ஒவ்வொரு தருணத்திலும் திடுக்கிட்டு உடலதிர விழித்துக்கொண்டு மஞ்சத்தை கைகளால் அறைந்து ஏவலனை கைகளால் அழைத்து நீரும் அகிபீனாவும் எடுத்துவர ஆணையிடுவார். இம்முறை நான் உன்னை

தவிர்க்கப்போவதில்லை. நீ உரைக்க விரும்புவதை எனக்கு சொல்லலாம். அதன் விழி கனிவதை காண முடிந்தது. எக்கணமும் ஊளையிட்டு அது அழுமென்று தோன்றியது.

விழித்துக்கொண்டபோது தன் கால் மேல் சம்மட்டியால் அறைவதுபோல் வலியை உணர்ந்தார். ஒருகணம்கூட துயின்றிருக்கவில்லை. கண்களை மூடி பற்களைக் கடித்து இரு கைகளையும் முட்டிச் சுருட்டி அவ்வலியை கணுக்கணுவென உணர்ந்தார். நெருப்பு சுட்டெடுப்பதுபோல். பாறாங்கற்களால் நசுக்கி அரைப்பதுபோல். தசைகளில் இத்தனை வலி எங்கிருந்து வந்தது? வெளியிலிருந்து அது வந்தணைய இயலாது. அது ஒவ்வொரு அணுவிலும் முன்னரே உள்ளது. வலியுடன்தான் அது கருக்கொண்டது. வலி என்பது அதற்கு ஒத்திவைக்கப்பட்ட அறிதல்.

வலிபோல் உடலை உணர்வதற்கு பிறிதொரு வழியில்லை. வலிபோல் விளக்கங்கள் அற்ற, மாற்றுகள் இல்லாத, ஒரு சொல்லும் சென்றமராத தூய நிகழ்வொன்றில்லை. வலி தெய்வங்களுக்குரியது. வலியினூடாக மேலும் தெய்வங்களை அணுகுகிறோம். என்னை சூழ்க! என் தெய்வங்கள் என்னை எடுத்துக்கொள்க! காற்றுகளின் அன்னையர் எழுக! ஓநாய் முகம் கொண்ட, எரியும் விழி கொண்ட, பசி வறண்ட நாக்கு கொண்ட தெய்வங்கள்! மரு, இருணை, ஃபூர்ணி, காமலை, கிலை, ஆரண்யை என்னும் அறுவர். “அன்னையரே எங்கிருக்கிறேன்? என்னை பலிகொள்க! என் அவிகொள்க!”

தன்னைச் சூழ்ந்து அவர் மெல்லிய காலடியோசைகளை கேட்டார். ஒளிரும் கண்கள் அணுகி வந்தன. வறண்ட கரிய மூக்குகள் நீண்டன. மூச்சொலி. அதில் வெந்த ஊனின் கெடுமணம். அவர் அக்கண்களை நோக்கியபடி காத்திருந்தார். உறுமலோசையுடன் ஆறன்னையரும் அவர்மேல் பாய்ந்தனர். அவர் உடலை கவ்வி கிழித்துண்ணத் தொடங்கினர். உறுமி, உதறி, இழுத்து, கவ்வி குருதி சுவைத்தனர். செவிகோட்டி சிற்றுயிர்களைத் துரத்தி நா சுழற்றி சுவை சுவை என வால் குழைய, உடல் நெளிந்தமைந்து கொப்பளிக்க அவரை உண்டனர்.

இரவெங்கும் குருதி மணம் நிறைய விழி விரித்து விண்மீன்களை நோக்கியபடி அவர் படுத்திருந்தார். புலரி முரசொலி எழுந்தபோது பெருமூச்சுடன் கையூன்றி எழுந்தமர்ந்தார். ஏவலன் அருகணைந்து “புலரி, காந்தாரரே!” என்றான். “ஆம்” என்றார். “படைசூழ்கைச் சொல்லாடலுக்கு முதற்புலரியில் செல்லவேண்டியுள்ளது.” தலையசைத்து அவர் கைநீட்ட பற்றித் தூக்கி அவரை எழுப்பினான். கால் வீங்கிப்பருத்ததுபோல் இருந்தது. வலியில் சொற்கள் ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொள்ள உள்ளம் அசைவிழந்திருந்தது.

அன்று அவையில் ஒவ்வொரு சொல்லையும் வலியின் ஆழத்திலிருந்து நரம்புகள் அறுந்து துடிக்க பிழுதெடுத்து முன்வைக்க வேண்டியிருந்தது. பற்களைக் கடித்து உடலை இறுக்கி அவ்வலியை உணர்ந்தார். அவை முடிந்து எழுந்ததும் துரியோதனன் அணுகி “இன்றே போர் முடிந்துவிடும் என்கிறார்கள், மாதுலரே. ஒருநாள் போருக்கே பாண்டவர்கள் தாளமாட்டார்கள் என்றுதான் நானும் எண்ணுகிறேன். பிதாமகர் பீஷ்மருக்கு நிகர்நின்றிருக்கும் ஆற்றல் புவியில் எவருக்குமில்லை” என்றான். அவர் ஒளியிலா புன்னகையுடன் “ஆம்” என்றார். “நான் கவசங்கள் அணியவேண்டும்… இளையோர் அனைவரையும் சந்திக்கவேண்டும்” என்று துரியோதனன் விடைகொண்டான்.

கவசங்கள் அணிந்து தேரை அணுகியபோது உடல் எடை முழுக்க காலில் அழுந்தியது. தேரில் நிலையமர்ந்து போரிடுவதற்கு உயரமான பீடம்

அமைக்கப்பட்டிருந்தது. தேர் அருகே நின்றிருந்த துச்சலன் அவரிடம் “தாங்கள் போர்முனைக்கு வரவேண்டியதில்லை, மாதுலரே. பின்னணியில் நின்று ஆணைகளை மட்டும் அனுப்பினால் போதும்” என்றான். சகுனி இகழ்ச்சியுடன் உதடுகள் வளைய “நான் போரிடும்பொருட்டே காந்தாரத்திலிருந்து வந்தேன்” என்றார். அவர் சொன்னதன் விரிவு புரிய துச்சலன் தலைவணங்கினான்.

போர்முனையில் நின்றிருக்கையில் வலி ஒன்றே உண்மையென்றும் பிற அனைத்தும் உளமயக்கே என்றும் தோன்றியது. தேர் சற்று அசைந்தபோதுகூட சவுக்குகள் அறைவதுபோல உடலெங்கும் வலி கொப்பளித்தது. புரவியின் ஒவ்வொரு உடலசைவையும் வலியால் பன்மடங்காகப் பெருக்கி உணரமுடிந்தது. காற்று வந்து தொட்டபோதுகூட வலியெழ முடியும் என்பதை அன்று அறிந்தார். கண்களைச் சுருக்கி மூச்சை இழுத்து மெல்ல விட்டபடி வலியை உணர்ந்துகொண்டிருந்தார்.

போர்முரசுகள் ஒலித்து படை எழுந்து அலையெனப் பெருகிச்சென்று பாண்டவப் படையை சந்தித்தது. அதை வெறித்த விழிகளுடன் நோக்கிக்கொண்டிருந்தபோது அவர் ஒன்றை உணர்ந்தார், வலி முழுமையாக அகன்றுவிட்டிருந்தது.

வழக்கம்போல் ஒரு கணத்தில் சகுனியின் அனைத்துப் புலன்களும் விழித்துக்கொண்டன. உடல் உச்சகட்டத் துடிப்பில் இழுத்து முறுக்கிய யாழ்நரம்பென அதிர்ந்தது. பல்லாயிரம் விழிகளால் அவர் வானிலிருந்து களத்தை நோக்கிக்கொண்டிருந்தார். பல்லாயிரம் செவிகளால் ஒவ்வொரு ஒலியையும் பிரித்துக் கேட்டுக்கொண்டிருந்தார். பாண்டவப் படைமீது உலர்ந்த மணலில் நீர் பரவுவதுபோல கௌரவப் படை உட்புகுந்துகொண்டிருந்தது. பீஷ்மர் நாரையின் அலகு என தொடக்கவிசையிலேயே நெடுந்தொலைவு ஊடுருவிச் சென்றுவிட்டிருந்தார். முதல் ஐந்துநாள் போருக்குப் பின்னர் அவரை எவருமே எதிர்க்கத் துணியவில்லை. அவர்முன் ஊழ்முன் என பணிந்து தலைகொடுத்தார்கள்.

சகுனி ஆணைகளை இட்டுக்கொண்டே இருந்தார். “துரியோதனருக்கு துணைசெல்க! அவர் பீமசேனர் முன் தனித்து நின்றிருக்கிறார். கௌரவர்கள் மூத்தவரை சூழ்ந்துகொள்க!” அர்ஜுனனை அஸ்வத்தாமனும் ஜயத்ரதனும் சேர்ந்து எதிர்த்தார்கள். சகுனி படைமுகப்பை நோக்கிக்கொண்டு நின்றார். நகுலனும் சகதேவனும் ஓருடலின் இரண்டு கைகள் போரிடுவதைப்போல களத்தில் திகழ்ந்தனர். அவர்கள் இணைந்திருக்கையில் பெருவல்லமை பெறுவதை அவர் கண்டார். ஆகவே பிரிந்தால் முற்றாக ஆற்றலிழப்பார்கள் என புரிந்துகொண்டு “பூரிசிரவஸ் செவிகொள்க! சகதேவனையும் நகுலனையும் பிரியுங்கள். இருவர் நடுவே மாறா வேலி அமைக! அவர்கள் பார்த்துக்கொள்ளலாகாது. அவர்களின் சொற்கள் அரிதாகவே சென்றடையவேண்டும்” என ஆணையிட்டார்.

பால்ஹிகப் படைகள் கூர்கொண்டு எழுந்து சென்றன. பருந்தின் சிறகுகள் என நின்றிருந்த நகுலனுக்கும் சகதேவனுக்கும் நடுவே அவை தாக்கின. பூரிசிரவஸ் அப்பகுதியை அம்புகளால் தாக்க அவனைச் சூழ்ந்துகொள்ளும் வாய்ப்பென எண்ணி நகுலனும் சகதேவனும் அவன் மேலும் உள்ளே செல்லும்படிவிட்டனர். அவன் ஊடுருவி அவர்களை கடந்துசென்றதும் சகுனி “பால்ஹிகப் படைகளின் பின்பக்கத்தை சலன் காத்துகொள்க… அவர்கள் இணையலாகாது” என்று ஆணையிட்ட பின் தன் தேரைச் செலுத்தி படைமுகப்புக்குச் சென்று நகுலனை எதிர்கொண்டார்.

அவருடைய அம்புகள் நகுலனின் தேரை தாக்க அவன் திரும்பிப்பார்த்து அவரை கண்டுகொண்டான். சீற்றத்துடன் நகைத்தபடி “வருக மாதுலரே, நீங்கள் குருதியால் ஈடுகட்டவேண்டிய பழிகள் பல உள்ளன!” என்று கூவினான். அவன் உதடுகளிலிருந்து சொல்கொண்ட சகுனி “இப்போரே என் பழிகொள்ளல்தான், மருகனே” என்றபடி அம்புகளை தொடுத்தார். அவர்களின் அம்புகள் விண்ணில் உரசிச் சிதறின. இரு தேர்களும் அம்புகளின் விசையால் அதிர்ந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் விழிநட்டு நோக்கி மெல்ல அனைத்திலிருந்தும் விடுபட்டு எழுந்து அவ்வெளியில் நின்று போரிட்டனர்.

நகுலனின் அம்புவளையத்தைக் கடந்து கவசங்களைக் கடந்து தன் முதல் அம்பு சென்று தைத்ததை சகுனி முதலில் உடலால் உணர்ந்தார். ஒரு மாத்திரைப்பொழுது கழித்தே உள்ளம் அதை உணர்ந்து ஆம் என்றது. அதன் பின் உணர்ந்தார், அந்த அம்பை எடுக்கையிலேயே எவ்வகையிலோ அது எங்கு சென்று கொள்ளும் என்று தெரிந்திருந்தது. அந்த கணநேரத் தத்தளிப்பிலிருந்து நகுலன் மீள்வதற்குள் மேலும் மேலுமென அம்புகளால் அவர் அவனை அடித்தார். அவனுடைய பாகன் தேரை பின்னுக்கிழுக்கத் தொடங்கும்போது அப்பால் சகதேவனின் முழவொலி எழுந்தது. மறுபக்கமிருந்து சகதேவன் தன் படையுடன் ஊடே நின்ற பால்ஹிகப் படையை உடைத்து வந்தான்.

அவன் அம்புகள் பக்கவாட்டில் வந்து தன் தேரை தாக்க சகுனி தயங்கினார். நகுலன் புது விசைகொண்டு முன்னால் வர அவர்களிருவரும் மீண்டும் இணைந்துகொண்டார்கள். பின்பக்கம் பூரிசிரவஸ் திருஷ்டத்யும்னனால் எதிர்கொள்ளப்பட்டு பாஞ்சாலப் படைகளால் முற்றாக சூழப்பட்டிருந்தான். சகுனியின் பாகன் தேரை மெல்ல மெல்ல பின்னகர்த்தி கொண்டுசென்றான். நகுலனின் அழைப்பில்லாமலேயே அவன் பின்னடைவது எப்படி சகதேவனுக்கு தெரிந்தது என சகுனி வியந்தார். இருபுறத்திலிருந்தும் சலனும் சோமதத்தரும் வந்து நகுலனையும் சகதேவனையும் எதிர்கொண்டார்கள்.

சகுனியைச் சூழ்ந்து ஏழு கழையர் மேலேறி இறங்கி கையசைவுகளால் செய்திகளை சொல்லிக்கொண்டிருந்தனர். ஒரே தருணத்தில் அவற்றை விழிகொண்டு சொல்லாக்கி ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தார். துரியோதனனுக்கும் பீமனுக்கும் போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அஸ்வத்தாமனை கடோத்கஜன் எதிர்கொள்ள சாத்யகியால் ஜயத்ரதன் எதிர்க்கப்பட்டான். பீஷ்ம பிதாமகரை அர்ஜுனன் எதிர்கொள்ள அவனுக்கு உதவியாக அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் இருபுறமும் துணைத்தனர். துரோணருக்கும் சுதசோமனுக்கும் போர் நிகழ்ந்தது. “துணைகொள்க, பீஷ்மருக்குப் பின்னால் படைகள் இல்லை…” என சகுனி ஆணையிட்டார்.

ஒருகணத்தில் கூரிய சோர்வொன்று எழ அவர் முற்றாகவே அகம் செயலிழந்தார். அங்கே நிகழ்வதை தொடர்பற்ற எதுவோ என நோக்கிக்கொண்டிருந்தார். முன்பு பாலையில் கண்ட ஓநாயை நினைவுகூர்ந்தார். அது பசித்து இறந்துகொண்டிருந்தது. உலர்ந்த நா வெளியே தொங்கியது. கண்கள் பழுத்திருந்தன. மூச்சு மிக மெல்ல ஓடியது. அவர் புரவியிலிருந்து இறங்கி அருகே சென்றார். புரவியின் விலாவில் வேட்டைப்பொருளான முயல் தொங்கியது. அதிலொன்றை எடுத்து கழுத்தை வெட்டி குருதியை அதன் நாவருகே கிடந்த கரியிலையில் சொட்டினார். அதன் விழிகள் உயிர்கொண்டன. நாக்கு சிதைந்த புழு என நீண்டு வந்தது. குருதியை தொட வந்தது. ஆனால் அதனுள் இருந்த தெய்வம் பிறிதொன்று எண்ணியது. நாக்கை உள்ளிழுத்துக்கொண்டு அது விழிமூடியது. அதன் உடலுக்குள் அந்த தெய்வத்தின்

மெல்லிய உறுமலோசை கேட்டது. அது மெல்ல மெல்ல கனல் அணைந்து கரியாவதுபோல் உயிர்துறப்பதை அவர் நோக்கி நின்றிருந்தார்.

சகுனி முழவோசை கேட்டு விழித்துக்கொண்டார். அந்த உளத்தழைவிலும் அவர் ஆணைகளை விடுத்துக்கொண்டிருப்பதை உணர்ந்தார். “சூழ்க! கடோத்கஜனை சூழ்ந்துகொள்க!” என ஆணையிட்டபடி கைகளை வீசினார்.

போர்க்களத்தில் தன் கையசைவுகள், உதடசைவுகள் வழியாக இடைவிடாது ஆணைகளைப் பிறப்பித்து சூழ்ந்திருந்த படைகளை முற்றாகவே ஆட்டுவித்துக்கொண்டு தேரில் நின்றிருக்கையில் சகுனி முதல்முறையாக நாற்களப் பகடைகளைத் தொட்டு எடுத்த நாளை எண்ணிக்கொண்டார். குழந்தையாக இருந்தபோது நிகழ்ந்தவற்றில் ஓர் அணுவிடைகூட ஒளி குன்றாது நின்றிருக்கும் நினைவு அதுதான். அவருக்கு இரண்டு அகவை. தந்தையின் மடியில் அமர்ந்திருந்தார். தந்தையின் முன் நாற்களப் பலகை விரிந்திருந்தது. எதிரே அவருடைய இளையவராகிய மகாபலர் அமர்ந்திருந்தார். அவர் தலையில் கைவைத்து கருக்களை நோக்கியபடி அமர்ந்திருக்க அவரை புன்னகையுடன் கூர்ந்து நோக்கியபடி சுபலர் பகடைகளை கையிலெடுத்தார்.

அவர்களின் முகங்களிலிருந்த உணர்ச்சிகளை சகுனி மாறிமாறி பார்த்தார். அந்த ஒருமையும் கொந்தளிப்பும் பதற்றமும் எக்களிப்பும் அவரை ஆட்கொண்டன. சுபலர் பகடைகளை உருட்டியதும் மகாபலர் தலையில் ஓங்கி அறைந்தபடி “தெய்வங்களே!” என்றார். சுபலர் “மீண்டும் என் கணக்கு” என்றார். “என்ன, தந்தையே?” என்றார் சகுனி. “ஒன்றுமில்லை, பேசாமலிரு” என்றார் சுபலர். “தந்தையே” என்று சகுனி அவர் கையை பிடிக்க அவர் மைந்தனை இறக்கி அப்பால் நிறுத்தி பகடையை உருட்டினார். மகாபலர் குனிந்து நோக்கிவிட்டு வெறிக்கூச்சலிட்டு கைகளைத் தட்டியபடி எழுந்தார். உரக்க நகைத்தபடி நடனமிட்டார். சுபலர் தலையில் கைவைத்துக்கொண்டு குனிந்தார்.

அதற்கு முன்னரும் அந்த ஆட்டத்தை சகுனி பார்த்திருந்தார். ஆனால் ஒரே கணத்தில் துயரை பெருங்களிப்பாக, பெருங்களிப்பை இருண்ட வீழ்ச்சியாக மாற்றும் ஒன்று அப்பகடைகளில் இருப்பது அப்போதுதான் அவர் நெஞ்சில் பதிந்தது. அவர் அந்தப் பகடைகளையே நோக்கிக்கொண்டிருந்தார். அவை எலும்புகளால் ஆனவை. காந்தாரத்தின் பகடைகளில் எல்லாம் ஒருபுறம் காந்தாரத்தின் ஈச்சஇலை பொறிக்கப்பட்டிருந்தது. மறுபக்கம் ஆறன்னையரைக் குறிக்கும் ஆறு என்னும் எழுத்து. பகடைகள் புரண்டு விரிந்து மீண்டும் சேர்ந்து சிதறிப்பரவுவதை அவர் நோக்கிக்கொண்டிருந்தார். அவை சுபலரையும் மகாபலரையும் அறியாமல் தங்களுக்குள் தாங்களே விளையாடிக்கொண்டிருந்தன. புறாக்கள்போல எழுந்து சிறகடித்து மீண்டும் அமர்ந்து. அவற்றுக்கு அப்பால் சுபலரும் மகாபலரும் கொந்தளித்தனர், கூச்சலிட்டனர், கண்ணீர்விட்டனர், மகிழ்ச்சிகொண்டாடினர்.

உச்சிப்பொழுதில் உணவுண்பதற்காக அவர்கள் எழுவதுவரை ஆட்டம் நீடித்தது. ஏவலன் வந்து அறிவித்ததும் எழுந்துகொண்ட மகாபலர் “நான் வென்ற நிலங்களை தனியாக குறித்துள்ளேன், மூத்தவரே. அவை முறைப்படி நீரூற்றி எனக்கு அளிக்கப்படவேண்டும்” என்றார். சுபலர் “ஆம், அவை உனக்குரியவை. ஆனால் இன்னும் ஆட்டம் முடியவில்லை. இறுதியில் எவர் ஈட்டுகிறார்கள் என்று பார்ப்போம்” என்றார். மகாபலர் “நான் ஆடவில்லை என்றால்?” என்றார். “ஆட்டத்தை

நிறுத்திவிட்டுச் செல்ல எவருக்கும் உரிமையில்லை” என்றார் சுபலர். “எங்கேனும் நிறுத்தியாகவேண்டுமே?” என்றார் மகாபலர். “ஆம், ஆனால் என் நிலத்தை நீ கொண்டுசெல்லும் இடத்தில் அல்ல” என்றார் சுபலர்.

இருவரும் நின்று நோக்கோடு நோக்கு பொருந்தினர். இரு முகங்களிலும் இருந்த வெறுப்பையும் சினத்தையும் சகுனி நோக்கிக்கொண்டிருந்தார். சுபலர் திரும்பிச்செல்ல மகாபலர் மெல்ல துப்பியபடி திரும்பி இன்னொரு பக்கமாக சென்றார். அவர்கள் இருவரும் ஒருபோதும் பேசிக்கொள்வதில்லை என்பதை சகுனி உணர்ந்தார். இணைந்து நிற்பதுகூட அரிது. ஆனால் அமர்ந்து ஆடமுடிகிறது. அங்கே நகைப்பும் கூச்சலும் எழுகிறது. பகைக்கும் நட்புக்கும் அப்பால் நிகழும் ஓர் ஆடல் அது என்று அவர் உணர்ந்த தருணம்.

அத்தருணத்தை அவர் எண்ணி எண்ணி வளர்த்துக்கொண்டார். மானுடர் பேசிக்கொள்ளும் அனைத்துமே வெறும் முறைமைச்சொற்கள். அவையில், அறையில், தனிமையில், எங்கும். மானுடர் ஒருவரோடொருவர் உண்மையாக பேசிக்கொள்ளவே இயலாது என்ற நிலையில் எழுந்த மாற்று உரையாடலே நாற்களம். அங்கே உரையாடல்களம் வகுக்கப்பட்டுள்ளது. நான்கு களங்கள், நான்கு பகடைகள், பன்னிரு எண்கள், எழுபத்திரண்டு கருக்கள். வெளியே விரிந்துள்ள பொருட்களின், உட்பொருட்களின், பொருள்மயக்கங்களின், உள்முயக்கங்களின் வெளி அனைத்துப் பேச்சுகளையும் முடிவிலிவரை கொண்டுசென்று பொருளற்றதாக்கிவிடுகிறது. பகடை திட்டவட்டமானது, மயக்கங்களற்றது. பின்பு அவர் அறிந்தார், ஒவ்வொரு உரையாடலும் பகடையாட்டமே என. பகடையாட்டம் சாரம் மட்டுமேயான ஓர் உரையாடல் என.

அன்று அவர்கள் சென்றபின் ஏவலன் தந்தப் பேழைக்குள் எடுத்து வைத்த பகடைகளை தன்னிடம் தரும்படி கேட்டார். “இளவரசே” என தயங்கிய பின் முதிய ஏவலன் “ஒருமுறை மட்டும் தொட்டுக்கொள்க!” என்றான். அவர் அந்தப் பகடைகளில் ஒன்றை எடுத்து கையில் உருட்டினார். “இது எதனாலானது?” என்றார். “இது புரவியின் எலும்பாலானது. எல்லா போட்டிவிரைவுகளிலும் வென்று உங்கள் தந்தையை மகிழவைத்த சுபார்ஸ்வம் என்னும் புரவி அது.” அவர் அதை கையிலிருந்து உருட்டினார். “இது என்ன? இது என்ன?” என்று அவன் கையைப் பிடித்து உலுக்கினார். “இளவரசே, இது பன்னிரண்டு. நீங்கள் வென்றீர்கள்” என அவன் அதை எடுத்து பேழைக்குள் வைத்தான்.

“நான் வென்றேன்! பன்னிரண்டு! பன்னிரண்டு! நான் வென்றேன்!” என்று சகுனி சொல்லிக்கொண்டார். துள்ளியபடி ஓடிச்சென்று தன் மூத்தவரான அசலரிடம் சொன்னார். “மூத்தவரே, நான் வென்றேன்! பன்னிரண்டு! வென்றேன்!” அன்றுமுதல் அந்த எண் அவரை ஆட்டிப்படைக்கலாயிற்று. பன்னிரண்டு. துயிலிலும் விழிப்பிலும் ஆட்கொண்டிருந்த எண். ஓர் எண் நாவிலெழுமென்றால் இயல்பாகவே அது பன்னிரண்டுதான். வெற்றி இத்தனை எளிதானது. இத்தனை கூரியது. கையருகே நின்றிருப்பது. கொலைவாளின் கூர்போல் மற்றொரு பொருள் அற்றது.

ஆனால் பகடையாடத் தொடங்கியபோது வெற்றிகள் கைகூடவில்லை. பெரும்பாலானவர்கள் அவரை எளிதில் வென்றனர். பன்னிரண்டு ஒரு கனவாக, பின் ஏக்கமாக, பின் எரிச்சலாக ஆகியது. ஆட அமர்கையிலேயே சினமெழுந்தது. பகடையை கையிலெடுக்கும்போதே நெஞ்சு இறுகி முகம் கூர்கொள்ள பற்களைக் கடித்தபடி உருட்டினார். பகடை அவரை ஒவ்வொரு முறையும் வென்றது. கால்கீழிலிட்டு மிதித்தபடி குளம்படிகள் ஒலிக்க கடந்துசென்றது. அவருக்கு பகடை கற்பித்த ஆசிரியர்கள் “பகடையை இறுகப்பற்றுகிறீர்கள், இளவரசே. அதை

வாளென பற்றுக! அழுந்தப்பற்றியவர்களும் நழுவவிட்டவர்களும் வெல்வதில்லை" என்றனர்.

"வென்றாலும் தோற்றாலும் நிகரே என உளம் நிலைத்தோரே பகடையில் இறுதிவெற்றியை அடையமுடியும்" என்றார் ஆசிரியரான சுஸ்ரவஸ். "ஆனால் அத்தகையோர் பகடையே ஆடுவதில்லை. ஆடுவோரில் வெல்வோர் விழைவை பிறிதிலாது சூடியவர்கள். அதில் அசைவிலாது நின்றவர்கள். கையின் ஐயத்தையும் அச்சத்தையும் பகடை அறியும். பகடை என்பது களத்தில் உருளும் உங்கள் உள்ளம் என்றுணர்க!" பகடைமேல் கொண்ட விழைவே பகடையை அவரிடமிருந்து அயல்படுத்தியது. மெல்ல மெல்ல பகடையை அஞ்சலானார். பகடை கையில் வந்ததுமே மெய் நடுங்கத்தொடங்கியது.

ஆனால் பகடையை ஒழியவும் இயலவில்லை. ஒவ்வொருநாளுமென பகடையாடி இழந்துகொண்டே இருந்தார். ஒருமுறை தன் உடன்பிறந்தானாகிய விருஷகனுடன் ஆடி இளவரசுப் பட்டத்தையும் இழந்து கணையாழியை கழற்றிக்கொடுத்துவிட்டு புரவியில் ஏறி காந்தார நகரியிலிருந்து கிளம்பிச்சென்றார். மீள முடியாத திசை என மேற்கு சொல்லப்பட்டிருந்தது. செல்லச்செல்ல மண் வெளுத்துக்கொண்டே இருக்கும். தூய வெண்ணிற மண் அலைகளென அமைந்த பாலையில் உயிர்த்துளியே இருக்காது. விடாய்மிக்க எழுபத்திரண்டு காற்றுகள் உலவும் வெளி. அவை அங்கு செல்லும் உயிர்களின் குருதியை உறிஞ்சி உண்பவை. எஞ்சாது தோற்றவர்களும் ஏதுமிலாது வென்றவர்களும் சென்றடைந்து நிறைவுகொள்ளவேண்டிய நிலம் அது.

மேற்கே சென்றுகொண்டே இருக்கையில் ஒரு நாள் அந்தியில் தொலைவில் ஒற்றைப்பறவை ஒன்று வானில் சுழல்வதை கண்டார். அத்திசை நோக்கி செல்ல மிகச் சிறிய ஸாமிமரச் சோலை ஒன்று கண்ணுக்குப்பட்டது. அங்கே முன்னரே ஓர் ஒட்டகம் நின்றிருந்தது. அதை அணுகியபோது சோலைக்குள் ஒருவரை காணமுடிந்தது. பாலைவணிகரெனத் தெரிந்தது. மணற்தரையில் தோல்விரித்து அமர்ந்து பகடையாடிக்கொண்டிருந்தார். அவர் அருகே செல்வதுவரை வணிகர் அவரை நிமிர்ந்து நோக்கவில்லை. அணுகியதும் சகுனி வணங்கி தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

சோனகரான அவர் பெயர் சுவாமர் என்று தெரிந்தது. "இந்தச் சுனை மிக மெல்லவே ஊறுகிறது. இதை அகழ்ந்து அதன்மேல் துணியை விரித்துவிட்டு நீர் ஊறுவதற்காக காத்திருக்கிறேன்" என்றார் சுவாமர். சகுனி அவர் அருகே அமர்ந்தார். "தனிமையில் பகடையாடலாமா?" என்றார். "நம்முடன் நாம் ஆடலாம். இவ்வாறு நம் நிழல் நமக்கு முன்னால் விழுந்திருக்கவேண்டும்" என்றார் சுவாமர். "நம்மை நாமே வெல்வது எளிது" என்றார் சகுனி. "அல்ல. அதுவே கடினம்" என்று சுவாமர் சொன்னார். "என்னுடன் ஆடுகிறீர்களா?" என்றார். "என்னிடம் பணயம் என ஏதுமில்லை. அனைத்தையும் இழந்த பின்னர் வந்துள்ளேன்" என்றார் சகுனி. "எஞ்சியிருப்பது உங்கள் உடல். அதை பணயமாக்கலாமே" என்றார் சுவாமர். "எனக்கு அடிமையாக இருப்பதாக சொல்க…"

நீர் அருந்தியபின் அவர்கள் ஆடத் தொடங்கினர். ஏழு சுற்று ஆட்டத்திற்குப் பின் சகுனி அவர் அடிமையாக ஆனார். "நீர் சிறுவன். என்னுடன் வருக! தொலைவிலுள்ள சோனகநிலங்களை காட்டுகிறேன்" என அவர் அழைத்துச்சென்றார். அவருடைய சுமைதூக்கியாகவும் ஏவல்சிறுவனாகவும் நான்காண்டுகாலம் அவருடன் இருந்தார். "என்றேனும் என்னை நாற்களத்தில் வென்று உமது விடுதலையை நீர் ஈட்டிக்கொள்ளலாம்" என்றார் சுவாமர். ஒவ்வொரு நாளும் அவர்கள் பகடையாடினர்.

மீளமீள அவர் தோற்றுக்கொண்டே இருந்தார். தன் பங்கு நீரை, உணவை பணயம் வைத்தார்.

அவர்கள் பயணம் செய்துகொண்டே இருந்தனர். சுவாமர் பாலையின் அரிய கற்களை பெற்றுக்கொண்டு பொன்னை அளிப்பவர். பாலைவெளியில் நீரிலாது வாடி உடல்வற்றி கண்கள் பழுத்து இறப்பை பலமுறை அருகில் கண்டார். வழிதவறி உயிர்பதைத்து வான்நோக்கி திகைத்து அலைந்து கண்டடையப்பட்டார். சுவாமர் அவரிடம் எந்த இரக்கத்தையும் காட்டவில்லை. “ஒரு குவளை நீர் மட்டுமே எஞ்சுகிறதென்றால் அதை பகிர்ந்துண்ணலாகாது. இருவரும் இறப்பதற்கே அது வழிகோலும். எனக்கே என எண்ணுபவனே இந்நிலத்தில் உயிர்விஞ்ச இயலும். அறிக, பாலை ஓநாய் தனித்தது! முழுத் தனிமையை அது தனக்கான காப்பாக கொண்டுள்ளது” என்றார் சுவாமர்.

நான்காண்டுகளுக்குப் பின்னர் ஒருநாள் பாலைவெளியில் தவறி நீரிலாது உடல் வற்றிக்கொண்டிருக்க பாறைநிழலில் படுத்திருக்கையில் சுவாமர் சொன்னார் “நான் இறக்கவிருக்கிறேன். உம்மை அடிமையாகக் கொண்டு நான் இறந்தால் நீரும் என்னுடன் இறக்கவேண்டும் என்பதே நெறி. நான் அளித்து நீர் பெற்றுக்கொண்டால் நீர் ஷத்ரியர் அல்ல. என்னை கொன்று விடுதலைகொள்ள நீர் இப்போது ஷத்ரியர் அல்ல. என்னை வென்றுமட்டுமே நீர் விடுதலையை அடையமுடியும்.” சகுனி திகைப்புடன் நோக்கிக்கொண்டிருந்தார். “உமக்கு ஓர் அறிவுரையை சொல்கிறேன். நீர் நாற்களத்தை நாற்களமென்றே பார்க்கிறீர். நாற்களம் என்பது போர். இங்குள்ள அரசனும் அரசியும் புரவியும் யானையும் மெய். களம் என்பது நாடே. பகடைக்களத்தில் போரை நிகழ்த்துக!”

அன்று அவர் சுவாமரை வென்றார். இறந்த உடலின் மணம் நாடி வந்த ஓநாய்க்கு அதை விட்டுக்கொடுத்துவிட்டு காந்தார நகரிக்கு திரும்பினார். பிறகு அவர் எந்த நாற்களத்திலும் தோற்கவில்லை. பாலையில் குருதிதேடி அலைந்து பசியால் இறந்த ஓநாய் ஒன்றின் தொடையெலும்பிலிருந்து தன் பகடைகளை உருவாக்கிக் கொண்டார். அறிந்தவை அனைத்தையும் நாற்களத்தின் ஆட்டத்திலிருந்தே கொண்டார். அனைத்தையும் அக்களத்திலேயே நிகழ்த்தினார். விரிந்த வானை துளியெனச் சுருட்டி தன்னுள்கொண்ட ஆடிக்குமிழி என ஊழை உள்கொண்டது நாற்களம் என அவர் கண்டடைந்தார். அங்கிருந்து கிளம்பி அஸ்தினபுரிக்கு வந்தபின்னர் மதயானை ஒன்றின் எலும்பிலிருந்து தன் பகடைக்காய்களை உருவாக்கிக்கொண்டார்.

ஆனால் குருக்ஷேத்ரத்திற்குள் படைகள் வந்தமைந்த முதல்நாள் அந்தப் பெருவிரிவை கண்களால் அறிந்தபோது அவருடைய அகம் திகைத்து செயலிழந்தது. விழித்த வெறும்கண்களுடன் அவர் அந்த செம்மண்நிலத்தை நோக்கி நின்றார். இதுவல்ல இதுவல்ல என அகம் அரற்றிக்கொண்டே இருந்தது. குருதிப்பெருக்கு. வெள்ளெலும்புகள் புதைந்த மண் செவ்வுதடுகளில் பற்கள் தெரிய புன்னகைப்பதுபோலிருந்தது. தேர்த்தட்டில் வியர்வை வழிய நெஞ்சுத்துடிப்பை நோக்கியபடி நின்றிருந்தார். திரும்பிவிடலாம் என்று தோன்றியது. வாளை எடுத்து நெஞ்சில் பாய்ச்சி அக்களத்திலேயே உயிர்விடலாமென எண்ணம் ஓங்கியது. கையிலிருந்த கடிவாளம் நடுங்கிக்கொண்டிருந்தது.

தொலைவில் ஓநாய் ஒன்று ஊளையிட்டது. அக்கணத்தில் உள்ளே ஒரு திரை நலுங்குவதுபோல் ஓர் எண்ணம் எழுந்தது. அதை சொற்களென பின்னர்தான் மாற்றிக்கொண்டார். அப்பெரும் போர்க்களத்தை அவர் ஒரு சிறுநாற்களமென்று

தன்னுள் ஆக்கிக்கொண்டார். அதில் தான் நன்கறிந்த பகடையை உருட்டி ஆடலானார்.

பீஷ்மர் நேர்அம்பென பாண்டவப் படைகளைக் கிழித்து உட்செல்ல அவரை சுருதகீர்த்தியும் அபிமன்யூவும் இருபுறமும் துணைக்க அர்ஜுனன் எதிர்த்தான். பிதாமகரின் அம்புகளுக்கு முன் அவர்களால் நிலைகொள்ள இயலவில்லை. பிதாமகர் ஒவ்வொரு அம்புக்கும் ஓர் அணுவென அவர்களை பின்னடக்கிச் சென்றார். பாண்டவப் படைகளுக்குள் அவர் நெடுந்தொலைவு சென்றுவிட்ட பின்னர் “அர்ஜுனன் பின்னடைகிறான்…” என்று முரசு சொன்னது. “ஊசியை நூல் என படைகள் தொடர்க! மீனுக்குள் தூண்டில் நுழையட்டும்” என சகுனி ஆணையிட்டார். பூரிசிரவஸ் திருஷ்டத்யும்னனிடமிருந்து பின்வாங்கிக்கொண்டிருந்தான். “ஜயத்ரதர் பூரிசிரவஸை துணைக்கச் செல்க!” என்றார் சகுனி.

துரோணர் நகுலனையும் சகதேவனையும் எதிர்கொண்டார். கிருபருடன் யுதிஷ்டிரரும் அவர் மைந்தர்களும் போரிட்டனர். போரில் விரிந்த வெளி வெறும் ஓசையென சகுனியின் காதுக்கு வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு முழவுக்கும் வேறுபட்ட ஒலிகள் எழுந்தன. தோல்களின் அடர்த்தியும் வட்டத்தின் அகலமும் கோல்களின் தடிமனும் ஒலிகளை அமைத்தன. கன்றுத்தோல்கள், உடும்புத்தோல்கள், எருமைத்தோல்கள், முதலைத்தோல்கள் என ஒவ்வொன்றும் தனிக்குரல் கொண்டிருந்தன. நாய்குரைப்பதுபோல் துள்ளித் துள்ளி ஓசையிட்டுச் செல்லும் உடும்புத்தோல் முழவின் குரல் பீஷ்மரை அறிவித்துக்கொண்டிருந்தது. எருமைத்தோல் முழவு சினைப்பொலி எழுப்பி அஸ்வத்தாமனை. கன்றுத்தோலின் அமறலோசை துரியோதனனை.

முதல்நாள் முதல்நாழிகை அனைத்து ஒலிகளும் ஒன்று திரண்டு ஒற்றை முழக்கமென செவியை வந்தறைய தன் தேர்த்தட்டில் நின்று குழம்பி திகைத்து கண்களை மூடிக்கொண்டார் சகுனி. முன்பு ஒவ்வொரு ஒலியையும் ஆயிரம் முறை கேட்டு செவிக்கு பழக்கி வைத்திருந்த அனைத்தும் உள்ளத்திலிருந்து அழிந்து சென்றன. அப்பயனின்மை ஒருகணம் அச்சுறுத்தியது. வேறுவழியில்லை, இப்போர் அதன் போக்கில் தான் நிகழ ஒப்புக்கொடுப்பதைதான் செய்யக்கூடும். பீஷ்மரின் செய்தியை மட்டும் நோக்குவோம். பிற அனைத்தையும் பின்னர் கேட்டறியலாம். ஆம் ஒன்றில் நிலைகொள்க! ஒன்றில்…

பீஷ்மரின் செய்தியை கூறிக்கொண்டிருந்த தொழும்பனின் முழவொலியை செவி கூர்ந்தபோது மிக அண்மையிலென ஒலித்தது. அதன் ஒவ்வொரு தாளக்கட்டையும் ஒரு சொல்லென மாற்றியபோது தன் காதுக்கெனவே காற்றில் வந்ததுபோல் இருந்தது. “முன்னகர்கிறார் பிதாமகர்!” “எதிரில் பாண்டவ இளையோர் வந்து சூழ்ந்திருக்கிறார்கள்!” “பிதாமகர் தயங்கவில்லை!” “பிதாமகர் கொன்று முன்செல்கிறார்!” “குருதிப்பலி நிகழ்ந்துகொண்டிருக்கிறது!” உள்ளம் விசை கொண்டு முன்னெழ ஒவ்வொரு சொல்லையும் கண்முன் காட்சியென்று மாற்றி அதில் நின்று பரவி துடித்தபோது ஒரு கணத்தில் உணர்ந்தார், அனைத்து ஓசைகளையும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார் என.

அவை சொல்லென்றாகி நேரடியாகவே காட்சியென்றாகி குருக்ஷேத்ரப் பெருங்களத்தை வானிலிருந்து குனிந்து நோக்கும் தேவன்போல் ஒவ்வொரு தருணத்தையும் இடத்தையும் நோக்கியபடி அவர் தன் தேரில் நின்றிருந்தார். தன் கைகளால், வாயால் ஆணைகளை பிறப்பித்தார். பத்து விரல்களிலும்

பட்டுச்சரடுகள் கட்டி பாவைகளை ஆட்டுவிக்கும் கூத்தன் என கௌரவப் படையின் பின்புறத்தில் நின்று அப்படையை அவர் நிகழ்த்தினார். எவர் சூழப்படவேண்டும், எவர் பிரிக்கப்படவேண்டும், எவருக்கு துணை வேண்டும், எவர் பின்னடைய வேண்டும் என.

வெற்றி அனைத்தும் அவருடையதாயிற்று. தோல்விகள் அனைத்தையும் அவரே சூடினார். முதல் நாள் பேரழிவை பாண்டவருக்கு நிகழ்த்தி அந்தியில் படை முடிவை அறிவித்தபோது மெல்ல உடல் தளர்ந்து அமர்ந்தார். ஓடிவந்து அவரது தேரில் ஏறிய துர்மதன் "வெற்றி, மாதுலரே! இன்று வெற்றி! பாண்டவப் படையின் பெரும்பகுதியை அழித்துவிட்டார் பிதாமகர். நாளைக்கு அவர்கள் படைக்கு எழுவார்களா என்பதே ஐயம்தான்!" என்றான். சுபாகு தேரில் பாய்ந்தேறி "வெற்றி! வெற்றி!" என்றான். சகுனி தளர்ந்த குரலில் "அப்படை இந்திரமாயக்காரனின் கையிலிருக்கும் பாவைகள் போன்றது. ஒரு பாவையை ஆயிரமெனக் காட்டவும் ஆயிரத்தை ஒன்றென்றாக்கவும் அவனால் இயலும்" என்றார்.

அவர் சொன்னதை புரிந்துகொள்ளாத துர்மதன் "வெற்றி! வெற்றிமுரசுகள் முழங்குகின்றன!" என்றான். சுபாகு "என்ன சொல்கிறீர்கள், மாதுலரே?" என்றான். "இப்போரை களத்தில் நிற்பவர்களில் நான் ஒருவனே முழுமையாக நோக்கிக்கொண்டிருக்கிறேன்" என்றார் சகுனி. சுபாகு "தாங்கள் சோர்ந்துள்ளீர்கள்" என்றபடி தேரிலிருந்து பாய்ந்து இறங்கிச் சென்றான். "திரும்புக!" என்று ஆணையிட்டபடி தேரில் அமர்ந்தபோது தன் காலில் முற்றிலும் வலி இல்லாதிருப்பதை அவர் பார்த்தார். அதை அசைக்க முயன்றபோது எடை மிக்க இரும்புக்கவசம் இருப்பதைப்போல் தோன்றியது. வலி எழவில்லை.

தேர் பலகைப் பரப்பினூடாக சென்றது. அனைத்துப் பாதைகளினூடாகவும் புண்பட்டோரை கொண்டுசெல்லும் வண்டிகள் களம் நோக்கி சென்றன. மெல்ல முதல் சொல் என வலி எழுந்தது. "ஆம், நீ எழுவாயென்று தெரியும்" என்று அவர் புன்னகையுடன் சொன்னார். "நீ அங்கிருக்கிறாய். நீ உடனிருப்பாய். நானின்றி நீ எங்கிருக்க இயலும்? என் அணுக்கனல்லவா? என்னை ஆட்கொண்ட தெய்வம் அல்லவா? என் பாதை நீ கொண்டுசெல்லும் திசையே அல்லவா?" வலி அவரிடம் "நீ!" என்றது. பித்தன்போல "நீ!" என்றார் அவர். அவர் அதை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். தயங்கி விசை அழிந்து ஆனால் எடைமிகுந்து "நான்!" என்றது. "நான்! நான்! நான்!" என்று எடை மிகுந்து துள்ளி செல்லத்தொடங்கியது.

செய்திகளாக வந்து சூழ்ந்து பின்னிப்பின்னி வலையென்றாகி விரிந்துகொண்டிருந்தது குருக்ஷேத்ரப் போர். அவர் ஆணைகளை இட்டுக்கொண்டே பின்னணியில் நிகராக தேரில் ஓடிக்கொண்டிருந்தார். இரு பேருருக்கள் முட்டிக்கொண்டு சீறிப்போரிட்டன. அவை ஒருங்கிணைந்த வஞ்சங்கள் ஓருருவென எழுந்த சீற்றங்கள். வீழ்ந்த படைகளின் இடைவெளிகளில் பின்னணி வீரர்கள் இயல்பாகவே வந்து நிறைந்தனர். வீழ்ந்தவர்களை கொக்கிகளால் இழுத்துக்கொண்டு சென்று அப்பாலிட்ட பின் மேலும் மேலும் என கொடிகளால் ஆணையிட்டனர் படைத்தலைவர்கள்.

"என்ன நிகழ்கிறது, மாதுலரே?" என்றான் துரியோதனன். "நாம் முன்னகர்ந்து கொண்டிருக்கிறோம்... இன்று மாலைக்குள் அவர்களின் படைசூழ்கையை எட்டு துண்டுகளாக சிதைப்போம்" என்றார் சகுனி. அந்தப் படை ஒரு மாபெரும் உள்ளம் என இயங்கிக்கொண்டிருந்தது. ஓயாத சொல்லொழுக்கு. ஒருபாதி பொய்யும் மறுபாதி கனவும். அவை சென்று சென்று அறைந்தும் கரைக்கமுடியாத பெரும்பாறையென மெய்யும். பித்தெடுத்த உள்ளம் இது. ஆனால் அத்தனை

உள்ளங்களும் பித்தெடுத்தவையே. தெளிவென்பது உள்ளம் வெளிக்காட்டும் ஒரு நடிப்பன்றி வேறில்லை.

பித்துவெளி. அதன் ஒவ்வொரு உள்ளமும் பித்துப்பேழை. ஒவ்வொரு சொல்லும் பித்துத் துளி. பித்தை ஆட்டுவிக்கிறேன். பித்தின்மேல் அமர்ந்து நாற்களமாடிக் கொண்டிருக்கிறேன். ஆடல்கள் என்பவை வரையறுக்கப்பட்ட களங்களிலிருந்து மெல்ல மெல்ல பித்துநோக்கி செல்பவை. பித்து நின்றாடும் அரங்குகள். பகடைகளில் குடிகொள்பவை பித்தின் பெருந்தெய்வங்கள்.

அவர் பாலையில் ஓர் ஓநாயைக் கண்டதை நினைவுகூர்ந்தார். அது குருதிச்சுவை கண்டு உண்டு நிறைந்துவிட்டிருந்தது. மணல்மேல் சுழல்காற்றில் சருகு என தன்னைத்தான் சுழற்றிக்கொண்டு துள்ளியது. அவ்விசையில் தூக்கி வீசப்பட்டு எழுந்து தலைதூக்கி ஊளையிட்டது. வெறிகொண்டு மண்ணை கால்களால் அள்ளி அள்ளி வீசியது. பின்னர் மெல்ல அமைந்து வான்நோக்கி கூர்மூக்கைத் தூக்கி ஊளையிடத் தொடங்கியது.

அதனருகே விரிந்திருந்த அந்த மணலோவியத்தை அவர் திகைப்புடன் நோக்கினார். அறியாத் தெய்வமொன்று எழுந்தாடிச்சென்ற களமெழுத்து ஓவியம். அதன் வடிவம் எந்த ஒருமைக்குள்ளும் அமையவில்லை. ஆனால் ஒருமையற்ற வெற்றுவடிவென்றும் தோன்றவில்லை. பின்னர் ஒரு கணத்தில் உடல் மெய்ப்புகொள்ள அவர் கண்டுகொண்டார், அது அந்த ஓநாய் அப்போது எழுப்பிக்கொண்டிருந்த ஊளையின் காட்சிவடிவம் என.

ஒவ்வொரு திசையிலிருந்தும் போர்ச்செய்திகள் வந்துகொண்டிருந்தன. கடோத்கஜன் பிரக்ஜ்யோதிஷத்தின் படைகளை மத்தென கலக்கிக்கொண்டிருந்தான். முன்னூறு பேர் கொல்லப்பட்டுவிட்டனர். பகதத்தனுக்கும் கடோத்கஜனுக்கும் நேர்ப்போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பகதத்தன் மூன்று முறை எறிகதை வீச்சுக்கு ஆளானார். கவசங்கள் உடைந்து பின்னடி வைத்து செல்கிறார். அவருக்குத் துணையாக துச்சாதனனும் துரியோதனனும் செல்கிறார்கள். துரியோதனனின் கதைக்குமுன் நிற்கவியலாமல் கடோத்கஜன் பின்னடைகிறான்.

போரின் விசை கூடக்கூட கடோத்கஜனின் பின்னிலிருந்து திருஷ்டத்யும்னனின் ஆணை அழைத்து காத்தது. அர்ஜுனனை ஜயத்ரதனும் அஸ்வத்தாமனும் சேர்ந்து எதிர்கொள்கிறார்கள். அம்புக்கு அம்பென நிகழ்கிறது போர். சர்வதனை இளைய கௌரவர் எழுவர் சூழ்ந்துள்ளனர். சுதசோமனை கௌரவர் பன்னிருவர் சூழ்ந்துள்ளனர். எஞ்சியவர் பீமனைச் சூழ்ந்து போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். போர் ஒவ்வொரு கணமும் நிகர்நிலையில் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் தடையற்றவராக பீஷ்மர் முன்சென்றுகொண்டிருக்கிறார். அவரிடமிருந்து அபிமன்யூவைக் காத்து கொண்டுசெல்கின்றனர். அதோ வெறிகொண்ட அபிமன்யூ கௌரவப் படையின் தேர் அணியொன்றை பிளந்துகொண்டு முன்னெழுகிறான். அவன் முன் அம்புபட்டு அலறியபடி கௌரவ மைந்தர்கள் தேரிலிருந்து உதிர்கிறார்கள்.

சுவாங்கனும் உத்வேகனும் ஊர்ஜிதனும் விழுந்தார்கள். கனகனும் சுப்ரதீகனும் சுப்ரபனும் தீர்க்கதேஜஸும் தீர்க்கரோமனும் காதரனும் வீழ்ந்தனர். அபிமன்யூ இளைய கௌரவ மைந்தர்களை கொன்று குவித்துக்கொண்டிருந்தான். வாசவனும்

வக்ரனும் ருத்ரடனும் ருத்ரனும் ருத்ரநேத்ரனும் கொல்லப்பட்டார்கள். மதுபர்க்கனும் வல்லபனும் சாமனும் சார்த்தூலனும் வத்கலனும் சாலியும் வர்தனனும் சால்மலியும் வர்ச்சஸும் சமியும் வீரபாகுவும் விஜயபாகுவும் சமடனும் வீரகனும் லோகிதனும் சதபாகுவும் லோலனும் மூலகனும் லோபனும் மூஷிகனும் ரைவனும் கொல்லப்பட்டார்கள்.

சகுனி "மைந்தரை காத்துக்கொள்க... அனைத்து கௌரவர்களும் மைந்தரை சூழ்ந்துகொள்க!" என்று ஆணையிட்டார். கௌரவர்கள் இருபுறத்திலிருந்தும் திரண்டு மைந்தரின் உதவிக்காக செல்ல கடோத்கஜன் எழுந்து அவர்களைத் தடுத்து அறைந்து பின்னடையச் செய்தான். மறுபுறம் சர்வதன் அவர்களை தடுத்தான். துணையின்றி கௌரவ மைந்தர்கள் அபிமன்யூவின் முன் விடப்பட்டனர். திடஹஸ்தன், பாசன், பாமகன், சாந்தன், சுபத்ரன், சுதார்யன் என பெயர்கள் வந்தபடியே இருந்தன. சகுனி "முன்செல்க! முன்செல்க! மைந்தரை காத்துகொள்க!" என்று தன் தேர்ப்படைவீரர்களுக்கு ஆணையிட்டார். அவருடைய தேரைச் சூழ்ந்து காந்தாரப் படையும் சுபலரும் மகாபலரும் அம்புகளைத் தொடுத்தபடி வந்தனர்.

"விரைக! விரைக!" என சகுனி தேரை ஊக்கினார். தேர் படைகளைப் பிளந்தபடி அபிமன்யூவை நோக்கி சென்றது. ஆனால் பாண்டவப் படைகளுக்கு பின்னாலிருந்து வந்த தொலையம்புகளால் காந்தாரப் படை நிறுத்தப்பட்டது. கழுகிறகுகள் பொருத்தப்பட்ட அம்புகள் ஒளிரும் அலகுகளுடன் முழங்கியபடி இறங்கி தேர்களின் புரவிகள்மேல் குத்தி இறங்கி அமைந்தன. தேர்கள் ஒன்றுடன் ஒன்று முட்டிக்குழம்பின. "முன்செல்க! முன்செல்க!" என்று சகுனி கூவினார். அபிமன்யூவை துணைத்த பின்படையினரால் காந்தாரப் படையின் முன்னணிப் பரிவீரர்கள் விழுந்தனர். மூன்றுபுறமும் துணைப்படை தடுத்து நிறுத்தப்பட்டது. கழையன் மேலேறி நோக்கி செய்தியறிவிக்க சகுனி தன் வில்லால் தேரை ஓங்கி அறைந்து கூச்சலிட்டார்.

வலைக்குள் சிக்கிய மீன்களென கௌரவ மைந்தர்கள் சுற்றி வந்தனர். அஞ்சி கூச்சலிட்டு விற்களையும் ஆயுதங்களையும் கீழே விட்டு கைதூக்கினர். பலர் தலையைப் பொத்தியபடி உடல் வளைத்து தேர்த்தட்டில் அமர்ந்து நடுங்கினர். அபிமன்யூ ஒற்றைநாணில் கொத்துக்கொத்தென அம்புகளை எடுத்து எடுத்து அவர்களை கொன்று அழித்தான். சரணன், மானசன், வேகன், தந்தகன், பிச்சலன், விபங்கன், காலவேகன், கண்டகன், விரோகணன், பிரபாவேனன், ஹனு, அகோராத்ரன், அகோவீரன், சம்பு, விக்ரன், விமலன், ஏரகன், குண்டனன், வேணிதரன், வேணுஹஸ்தன், சார்ங்கன், கதாவேகன், மகாகாலன், சேசகன், பூர்ணாங்கன், சுதிரத்மன், ரிஷபன், சங்கு, கர்ணகன், குடாரன், குடமுகன், சுஹாசன், சுசரிதன், விரோசனன் என முழவுகள் வீழ்ந்த கௌரவ மைந்தரின் பெயர்களை அறிவித்துக்கொண்டே இருந்தன.

கைதளர்ந்து சகுனி வெறித்து நோக்கிக்கொண்டு நின்றார். நூற்றெண்பது கௌரவ மைந்தர் கொல்லபட்டுவிட்டனர். கணமொருவர் என கொல்லப்படுகிறார்கள். "பிதாமகர் பீஷ்மர் எழுக! கௌரவ மைந்தர்களை காத்துக் கொள்க!" என்று அவருடைய ஆணை முரசுகளாக வானில் முழங்கிக்கொண்டிருந்தது. விண்ணிலிருந்து எழும் மூதாதையரின் பதைபதைப்பு என. ஒலியிலிருந்து ஒலி தொடுக்க மிகத் தொலைவில் பீஷ்மர் அதை கேட்பதை அவரால் காண முடிந்தது. திரும்பி தேரைச் செலுத்தி பீஷ்மர் அபிமன்யூவை நோக்கி வந்தார். சுருதகீர்த்தி அவரை தடுக்க அவனை அம்புகளால் செறுத்து பின்னடையச் செய்து அவன் இடையில் அம்புபாய்ச்சி தேர்த்தட்டில் விழச்செய்தார். அபிமன்யூவின் பின்னணிப்படையினரின் சூழ்கையை உடைத்து உட்புகுந்து அதே விசையில்

நான்கு அம்புகளால் அவன் தேர்ப்பாகனை கொன்றார். சீற்றத்துடன் திரும்பி தன் கால்களாலேயே கடிவாளத்தைப் பற்றி தேரைத் திருப்பி அபிமன்யூ பீஷ்மரை நோக்கி சென்றான். “மைந்தரை மீட்டெடுங்கள்! மைந்தரை சூழ்ந்துகொள்க!” என்று காந்தாரப் படையினருக்கு சகுனி ஆணையிட்டார்.

சுபலரும் காந்தார இளவரசர்களும் எதிரம்புகளைச் செறுத்து கடந்துசென்று எஞ்சிய கௌரவ மைந்தர்களை சூழ்ந்துகொண்டனர். அவர்கள் அனைவருமே தேர்த்தட்டுகள் மேல் உடல்குறுக்கி அமர்ந்து குளிர்கண்டவர்கள்போல் நடுங்கிக்கொண்டிருந்தார்கள். துர்த்தாரகன் உரத்த குரலில் “இது போரல்ல… படைக்கலம்விட்டு அமர்ந்துவிட்டவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது நெறியே அல்ல…” என்று கூவினான். சகுனியின் தேர் அருகே வந்த பரிவீரன் ஒருவன் “இருநூற்றியேழு இளவரசர்கள் கொல்லப்பட்டனர்… புண்பட்டு எஞ்சியோர் எவருமில்லை” என்றான். அருகே நின்றிருந்த தேர்வீரன் “இன்று மிகுந்த பேரழிவு, காந்தாரரே” என்றான்.

அதற்குள் முழவு இருநூற்றுப் பதினேழு கௌரவ இளவரசர்கள் கொல்லப்பட்டிருப்பதை தெரிவித்தது. “பிணங்களை கண்டெடுக்கிறார்கள்!” என்றான் பராந்தகன். கொக்கிச்சரடுகளை வீசி களத்திலிருந்து கௌரவ மைந்தரை இழுத்து எடுத்துக்கொண்டே இருந்தனர். இருநூற்றி முப்பத்தேழுபேர் என்றது முழவு. தேர்த்தட்டில் ஒருவர் மீது ஒருவரென அடுக்கப்பட்ட கௌரவர்களின் உடல்களை சகுனி ஒருமுறை மட்டும் நோக்கினார். கைகள் விரிந்து விரல்கள் அகன்று களைத்துத் துயில்பவர்கள் போலிருந்தனர். வாழ்ந்திருந்தபோது அவர்கள் அனைவர் முகங்களிலும் ஒற்றை உணர்ச்சியே திகழ்ந்தது. இறந்தபோதும் அவ்வாறே ஒற்றை உணர்ச்சிதான் நிலைகொண்டிருந்தது. வியந்து, திகைத்து, செயலிழந்தவர்கள்போல.

முதல்முறையாக அவர்களை கான்வேட்டைக்கு கொண்டுசென்றதை அவர் நினைவுகூர்ந்தார். காட்டின் ஆழத்துள் நுழைந்ததும் அவர்கள் ஓசையடங்க விழிகள் வெறித்து வாய் திறந்து புரவிகளில் அமைந்திருந்தனர். அதே நோக்கு. கதைபயிலக் கூட்டிவருகையில் மீளமீளச் சொன்னாலும் மிக எளிய பாடங்கள்கூட அவர்களுக்கு புரிவதில்லை. பலமுறை சொன்னபின் சினம்கொண்டு ஆசிரியர் அவர்களை அடிக்க தன் கதையை ஓங்கும்போதும் அதே திகைப்பையே அவர்களின் முகங்களில் காண்பார். எரிபுகுவதற்கென்றே சிறகுகொள்ளும் விட்டில்கள். சகுனி நாவில் கசப்பென ஊறிய எச்சிலை திரும்பி துப்பிக்கொண்டார். துப்புந்தோறும் கசப்பு ஏறி ஏறி வந்தது.

பீஷ்மர் அபிமன்யூவை தடுத்து மேலும் மேலும் பின்னடையச் செய்தார். “இளையோன் உயிர்கொடுக்கத் துணிந்தவனாக களம் நின்றிருக்கிறான்” என்றான் ஒரு பரிவீரன். “அவன் உயிரால் ஈடுகட்டுவோம் இன்றைய இழப்பை!” என அருகே பிறிதொருவன் கூவினான். பீஷ்மரை சூழ்ந்துகொண்ட பாஞ்சாலப் படைவீரர்கள் அலறி விழ அபிமன்யூவை காக்கும்பொருட்டு வில்லவர்கள் அரைவட்டமென பின்வளையம் அமைத்தனர். தடைகளை உடைத்தபடி கௌரவர்கள் இருபுறத்திலிருந்தும் இளைய கௌரவர் களம்பட்ட இடத்தை நோக்கி வந்தனர்.

“சூழ்ந்துகொள்க! அபிமன்யூவை சூழ்ந்துகொள்க! மைந்தரை காக்க வருக!” என்ற அவருடைய ஆணை முழங்கிக்கொண்டிருந்தது. அதை அவரே கேட்டபோது ஒருகணம் திகைத்தார். அது ஒரு சூழ்ச்சி. தூண்டிலில் மீன்களையே மீன்களுக்கு வைத்திருக்கிறார்கள். “முன்செலல் ஒழிக! கௌரவர் பின்னடைக!” என்று ஆணையிட்டார். ஆனால் அவ்வாணை ஒலிக்கையிலேயே காந்தாரப் பரிவீரன் அவர்

முன் பாய்ந்து வந்து “பீமசேனரை ஏற்கெனவே நம்மவர் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்… கௌரவர் நாற்பதின்மர் அவரை ஒருங்கிணைந்து எதிர்க்கிறார்கள்” என்றான். மைந்தர் இறந்த செய்தி கௌரவர்களை வெறிகொள்ளச் செய்யும். இறந்த மைந்தரின் தந்தையர் இறப்புக்கு நெஞ்சுகாட்டி முன்சென்று களம் நிற்பார்கள். தாங்களும் வீழ்வதே அவர்களுக்கு நிறைவளிக்கும்.

“கௌரவர்களை காக்கவேண்டும்! கௌரவர் பின்னடைக!” என அவருடைய ஆணை முழங்கியது. சோமதத்தர் அவர் அருகே தேரில் வந்து “நமது படைகள் முழுமையாகவே இளைய பாண்டவனை சூழ்ந்துகொண்டுள்ளன. இதுவே நற்தருணம்” என்றார். “அவன் மைந்தன் உடனெழுவான். கௌரவர்களை உடைப்பான். கௌரவர்கள் கொல்லப்படுவார்கள்… இன்று கௌரவர்களும் கொல்லப்பட்டால் நமது படை உளம் தோற்றுவிட்டதாக பொருள்” என்று சகுனி கூறினார். நாற்புறத்திலிருந்தும் கௌரவப் படையினர் திரண்டு பீமனை நோக்கி சென்று கதைகளும் விற்களுமாக பொருதுவதை சகுனி கண்டார். “விலகுக… விலகுக!” என்று கூவியபடி அம்புகளை எய்து படைகளை விலக்கியபடி பீமனை நோக்கி சென்றார்.

அவர் எண்ணியதுபோலவே வெறிகூச்சலிட்டபடி தேர்த்தட்டில் நின்று நெஞ்சில் அறைந்து கதறி அழுதபடி கௌரவர்கள் பீமனை சூழ்ந்துகொண்டனர். செல்லும் வழியெங்கும் அவர்கள் தங்கள் மைந்தர்களின் உடல்களை கண்டிருந்தனர். “கௌரவர்கள் விலகட்டும்! போரை திரிகர்த்தர்களும் உசிநாரர்களும் முன்னெடுக்கட்டும்! கௌரவர்கள் விலகுக!” என்று சகுனி ஆணையிட்டார். அவருடைய தேர் ஊடே புகுந்த பாண்டவக் குறும்படையொன்றால் தடுக்கப்பட அவர்களை அம்புகளால் அறைந்து வீழ்த்தி விலக்கி அவர் திரும்பி நோக்கியபோது கௌரவர்களின் வளையத்தை ஒருபுறம் சுதசோமனும் மறுபுறம் சர்வதனும் உடைத்துவிட்டதை கண்டார்.

கௌரவர்கள் மேலும் பீமனை சூழ்ந்துகொண்டார்கள். அம்புகளைப் பெய்தபடி அவர் செல்லும்போதே “பிதாமகர் பால்ஹிகர் வருக! கௌரவர்களை காக்க வருக!” என ஆணையிட்டார். திருதசந்தனும் ஜராசந்தனும் பீமனின் அம்புகளால் அறையுண்டு வீழ்ந்தனர். துராதாரனும் விசாலாக்ஷனும் பீமனின் கொக்கிக் கயிற்றில் சிக்கி தேரிலிருந்து நிலத்தில் உருண்டனர். அவர்கள் எழுவதற்குள் பீமனின் கதை வந்து அவர்களின் தலைகளை உடைத்தெறிந்தது. அக்கணம் பாண்டவப் படையின் பின்னிரையிலிருந்து கழைமேல் எழுந்து பறந்து களம்நடுவே வந்திறங்கிய கடோத்கஜன் சுஹஸ்தனையும் வாதவேகனையும் பீமவிக்ரமனையும் அறைந்து தேரிலிருந்து சிதறடித்தான். அவர்கள் தேர்கள் தேடி ஓட பீமனின் சங்கிலியில் துள்ளிய கதை சுழன்று அவர்களை அறைந்து மண்ணில் குருதிச்சிதைவுகளாக பரப்பியது.

பீமன் தன் தேரிலிருந்து கழையூன்றி தாவி மகாபாகுவின் தேரிலேறி அக்கணமே அவனை அறைந்து கொன்றான். அருகிலிருந்த தேரிலிருந்து சித்ராங்கன் கூச்சலிட அவனை இழுத்துத் தூக்கி தன் முழங்கால்மேல் அறைந்து முதுகெலும்பை முறித்து அப்பால் வீச அவன் புழுதியில் புழுவென துடித்தான். சித்ரகுண்டலன் தேரிலிருந்து பாய்ந்திறங்க பீமனின் கொழுக்கயிற்றின் கூர்தூண்டில் அவன் கழுத்தைக் கவ்வி கவசத்துடன் கிழித்து பறந்தது. குருதிபெருகும் கழுத்தைப் பற்றியபடி அவன் மண்ணில் விழுந்தான். கௌரவர்கள் அந்தக் கொலைகளால் தளர்ந்து பின்னடையத் தொடங்க அவன் தேரிலிருந்து தேருக்கு பாய்ந்து பிரமதனையும் அப்ரமாதியையும் தீர்க்கரோமனையும் கொன்றான்.

தீர்க்கபாகு தேரிலிருந்து பாய்ந்திறங்கியபோது தேர்முகடிலிருந்து கீழே பாய்ந்த பீமனைக் கண்டு “மூத்தவரே!” என அலறினான். எட்டி அவன் நெஞ்சை மிதித்து தேர்ச்சகடத்தின் அச்சுக்கோலுடன் அறைந்தான் பீமன். கழுவில் கோத்தவன்போல் அவன் நின்று உதறிக்கொள்ள அஞ்சி தேரிலிருந்து பாய்ந்த சுவீரியவானை பின்னிருந்து கதையால் தலையிலறைந்து கொன்றான். சகுனி அம்புகளுடன் கௌரவச் சூழ்கையைக் கடந்து பீமனை அடைந்தபோது பீமன் உடலெங்கும் குருதியுடன் ஓங்கி நிலத்தை உதைத்து வெறிக்கூச்சலிட்டான். சகுனியின் இரு பேரம்புகள் பீமனின் கவசங்களை உடைக்க அவன் பாய்ந்து தன் தேரிலேறிக்கொண்டான்.

“கௌரவர் பின்னடைக... கௌரவர் பின்னடைக!” என்று சகுனி ஆணையிட்டார். அவருடைய ஆணை வீணொலியென காற்றில் நின்று அதிர கௌரவர்கள் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மேலும் மேலும் திரண்டு பீமனை நோக்கி சென்றனர். அவ்வாறு பெருந்திரளென சூழ்வதுபோல் பிழையான போர்முறை பிறிதொன்றில்லை என்று அவர் அறிந்திருந்தார். உணர்வுக் கொந்தளிப்பால் அவர்களுக்குள் எந்த ஒத்திசைவும் இருக்கவில்லை. பலர் கதறி அழுதுகொண்டிருந்தனர். நெஞ்சிலறைந்து வஞ்சினம் கூவினர். வெறிகொண்டு தலையை தூணில் முட்டிக்கொண்டனர். ஒவ்வொருவரும் தங்கள் கைகளால் பீமனை கொல்ல விழைந்தனர். எனவே நீர்ப்பரப்பிலிருந்து மீன்கள் துள்ளி எழுவதுபோல் பீமன் முன்சென்று விழுந்தனர். சுவர்ச்சஸும் ஆதித்யகேதுவும் பீமனின் அம்புகளால் கொல்லப்பட்டு தேரிலிருந்து விழுந்தனர்.

சகுனி பீமனை அம்புகளால் அறைந்து நிறுத்தியபடி துச்சாதனனும் துரியோதனனும் வந்து பீமனை எதிர்கொள்ளும்படி ஆணையிட்டார். “துரியோதனர் எழுக! துச்சாதனர் எழுக!” என அவருடைய ஆணை காற்றில் அதிர்ந்தது. ஆனால் அப்பால் வந்த துரியோதனனின் தேரை கடோத்கஜன் தடுத்து நிறுத்தினான். துச்சாதனன் துரியோதனனை விட்டுவர இயலாது தவித்தான். “ஜயத்ரதரும் அஸ்வத்தாமரும் வருக! கௌரவர்களை காத்து நிற்க வருக!” என்று சகுனி ஆணையிட்டார். அவர்கள் அர்ஜுனனால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர். திருஷ்டத்யும்னன் பூரிசிரவஸை எதிர்த்து நிற்க சாத்யகி வந்து இணைந்துகொண்டான். சாத்யகி பித்தன்போல் வெறிகொண்டு தாக்க பூரிசிரவஸ் கை ஓய்ந்து அடிக்கு அடி வைத்து பின்னகர்ந்துகொண்டிருந்தான்.

ஒரு கட்டத்தில் அவர்கள் இருவரும் தங்களுக்குள் மட்டுமே என போர்புரிந்துகொண்டிருக்க ஜயத்ரதன் திருஷ்டத்யும்னனை அம்புகளால் அறைந்து பின்கொண்டு சென்றான். பீமனுக்குத் துணையாக சர்வதனும் சுதசோமனும் வில்லுடன் எழ சகுனி கை ஓய்ந்து பின்னகர்ந்தார். பீமன் அந்த இடைவெளியில் பாய்ந்து மீண்டும் கழையிலெழுந்து தாவி வந்து துஷ்பராஜயனையும் அபராஜிதனையும் கொன்றான். “இளவரசர்கள் களம்பட்டதை முரசுகள் அறிவிக்க வேண்டியதில்லை” என்று சகுனி ஆணையிட்டார். அவரது ஆணை ஒலித்துக்கொண்டிருக்கையிலேயே அவர்கள் களம்பட்ட செய்தியை அறிவித்து முழவுகள் முழங்கின.

சகுனி சீற்றத்துடன் “பிதாமகர் பால்ஹிகர் எங்கே? பிதாமகர் களமெழட்டும்! பால்ஹிகர் களம் எழுக!” என்று கூவினார். ஆனால் பால்ஹிகர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. வெவ்வேறு இடங்களில் தொழும்பர்கள் மேலெழுந்து பால்ஹிகரை தேடி மிகத் தொலைவில் அவர் நிஷாதர்கள் நடுவே பாண்டவப் படைக்கு உள்ளே இருப்பதை கண்டுகொண்டனர். “பிதாமகர் துணை வருக! பிதாமகரை அழைத்து பீமனுக்கு பின்னால் கொண்டு வருக!” என்று சகுனி

ஆணையிட்டார். உசிநாரர்களும் காம்போஜர்களும் இணைந்த படை கிராதர்களையும் நிஷாதர்களையும் தாக்கி வழி உருவாக்கி பால்ஹிகரை நோக்கி சென்றது. அதற்குள் சாருசித்ரனும் சராசனனும் பீமனால் கொல்லப்பட்டார்கள்.

கௌரவப் படை நொறுங்கி ஒன்றிணைவதுபோல் தோன்றியது. “துரோணரை துணை கொள்க! பால்ஹிகரை துரோணர் அழைத்து வருக!” என்று சகுனி கூவினார். துரோணர் தன்னை எதிர்த்து நின்றிருந்த பாஞ்சாலப் படைகளை விலக்கி இடைவிடாத அம்புகளால் கிராதர்களை வீழ்த்தி உருவாக்கிய பாதையினூடாக கவசமணிந்த யானைமேல் பால்ஹிகர் திரும்ப வந்தார். அவர் மையப்படையில் இணைந்துகொண்டதும் அங்கே முரசொலிகள் எழுந்தன. “பால்ஹிகரை பீமனிடம் அழைத்துச் செல்க!” என்று சகுனி ஆணையிட்டார். பீமன் தேரிலிருந்து கழையூன்றி எழுந்து பறந்து யானையொன்றின்மேல் சென்றமர்ந்து கதையால் கௌரவர்களாகிய சத்யசந்தனையும் சதாசுவாக்கையும் தலையறைந்து கொன்றான். குருதி வழிய அவன் நிமிர்ந்தபோது நேர் எதிரில் பால்ஹிகரை கண்டான். பாய்ந்தெழுந்து கதையை வீசி அவரை எதிர்கொண்டான்.

பால்ஹிகரின் பெருங்கதை காற்றில் சுழன்றெழுந்து வந்து அவன் அமர்ந்த யானையின் மத்தகத்தை அறைந்தது. அலறியபடி யானை பின்னடைந்து வலம் சரிவதற்குள் அதன் மேலிருந்து தாவி பீமன் இன்னொரு யானைமேல் ஏறிக்கொண்டான். அந்த யானையையும் அவர் அறைந்து வீழ்த்தினார். பீமன் வீழ்ந்த யானைக்கு அடியில் சிக்கிக்கொண்டான். பால்ஹிகரின் பெரிய கதை பறக்கும் மலை என அவனை நோக்கி வர மண்ணில் படுத்து அதை ஒழிந்து காலை உருவிக்கொண்டு அது மீண்டு வந்தறைவதற்குள் ஓடிச்சென்று தன் தேரில் ஏறிக்கொண்டான். அந்தத் தேரை பிதாமகரின் கதை அறைந்து சிம்புகளாக தெறிக்க வைத்தது.

மீண்டும் அவர் பீமனை தாக்குவதற்குள் அவரை கடோத்கஜன் தன் கதையால் தாக்கினான். ஆனால் பெரிய கதையின் அறைபட்டு அவன் கதை உடைந்து தெறித்தது. அவர் அறைந்தபோது கடோத்கஜனின் அணுக்கப்படையினரான இரு இடும்பர்கள் உடல்சிதைந்து துண்டுகளாக தெறித்தனர். கடோத்கஜன் தன் கொக்கிக்கயிற்றில் தொற்றிப் பறந்து அப்பால் விலகினான். சர்வதனும் சுதசோமனும் பாய்ந்து பின்னடைய திருஷ்டத்யும்னனின் ஆணையின்படி நீண்ட நிலைக்கேடயங்களை ஏந்திய யானைகள் வந்து அவனை மறைத்தன. பாஞ்சாலப் படை பீமனைத் தூக்கி அப்பால் எடுத்துச்சென்றது.

நான்கு விரல்கடை பருமனுள்ள இரும்புத் தகடாலான ஆறு ஆள் உயரமுள்ள அந்த இரும்புக்கேடயங்கள் ஒவ்வொன்றும் மூன்று யானையின் எடைகொண்டவை. முகப்பில் எதிரடியை தாங்குவதற்குரிய முழைவளைவுகள் கொண்டவை. யானைமருப்புகளை எதிர்க்கும்பொருட்டு அவற்றில் கூரிய வேல்முனைகள் பொருத்தப்பட்டிருந்தன. பின்னால் யானைகள் துதிக்கையால் பற்றும்பொருட்டு வளையங்கள் கொண்டவை. கீழே இரண்டு சிறு இரும்புச்சகடங்களில் அவற்றை உருட்டிச் செல்லமுடியும். அவற்றை மத்தகத்தால் ஏந்தி துதிக்கையால் பற்றிக்கொண்டுவந்த யானைகள் ஒன்றுடன் ஒன்று இணைத்து உருவாக்கிய இரும்புக்கோட்டைக்கு அப்பால் பாண்டவப் படை பின்வாங்கிக்கொண்டிருந்தது. அங்கே கௌரவர் கொல்லப்பட்டதை அறிவித்து வெற்றிமுரசுகள் முழங்கின. பாண்டவ வீரர்கள் “வெற்றிவேல்! வீரவேல்! வெற்றி! வெற்றி!” என்று கூச்சலிட்டனர். வேல்களும் கைவாள்களும் காற்றிலெழுந்து சருகலையென தெரிந்தன.

பால்ஹிகர் கதையை வீசி யானைகள் ஏந்திவந்த கேடயங்களை அறைந்து உடைத்தார். அவருடைய கதையின் மோதலில் இரும்புடன் இரும்பு பட்டு பொறியெழுந்தது. அறைபட்ட யானை பின்னடைய அங்கே ஈரப் பரப்பிலென குழியமைந்தது. ஆனால் பின்னிருந்து இன்னொரு யானையால் உந்தப்பட்டு கேடயம் முன்னால் வந்தது. கேடயம் உடைந்து சரிய அந்த இடைவெளியை பக்கவாட்டு யானைகள் இணைந்து உடனே மூடின. பால்ஹிகர் மீண்டும் மீண்டுமென கேடயங்களை அறைந்து உடைத்துக்கொண்டே இருந்தார். கேடயச்சுவர் நீர்விளிம்பென அலைகொள்வதை சகுனி கண்டார்.

“கௌரவ இளையோரை நோக்குக! எவரேனும் உயிர் பிழைக்கக்கூடுமா?” என்று சகுனி கேட்டார். கௌரவர்களை இழுத்து பின்னாலெடுத்துக்கொண்டிருந்தார்கள். “இருபத்திரண்டுபேர்” என்று காவலன் கூவினான். “இதோ இன்னுமொருவர்” என்றான் இன்னொருவன். “நோக்குக!” என்று ஆணையிட்டபடி சகுனி பின்னால் சென்றார். சங்கொலியுடன் துரியோதனனின் தேர் முன்னால் வர உடன் துச்சாதனனும் வந்தான். சகுனி துரியோதனனின் முகத்தை கூர்ந்து சிலகணங்கள் நோக்கிவிட்டு எதிர்த்திசையில் தேரை திருப்பிச்செல்ல ஆணையிட்டார்.

ஒருகணம் உடலில் இருந்து ஆற்றல் முற்றாக விலக மாபெரும் ஓவியத் திரைச்சீலை காற்றிலாடுவதுபோல் குருக்ஷேத்ரக் களம் அலைபாய்ந்தது. அவர் தேர்த்தூணை பற்றிக்கொண்டு மெல்ல இருக்கையில் அமர்ந்தார். கண்களை மூடிக்கொண்டு மிக அருகே என தன் மேல் பதிந்திருக்கும் ஒரு நோக்கை உணர்ந்தார். பின்னர் விழிதிறந்து திரும்பி தேரிலிருந்த ஆவக்காவலனிடம் “நீர்!” என்று கைநீட்டினார்.

பாண்டவப் படையின் நடுவே பாஞ்சால அக்ஷௌகிணியின் ஏழாவது புரவிப்படையின் பரிவீரனாகிய பீலன் அனிலையெனும் பெரும்புரவியின் மீது அமர்ந்திருந்தான். வலக்கையில் நீண்ட குத்துவேலை தண்டை நிலத்தூன்றிப் பற்றி இடக்கையால் கடிவாளத்தை தளர்வாகப் பிடித்து சேணத்தில் கால்களை நுழைத்து உடல் நிமிர்த்தி நீள்நோக்கு செலுத்தி அசையாச் சிலையென காத்திருந்தான். அவனுக்கு முன்னால் நான்கு அடுக்குகளுக்கு அப்பால் படைகளின் பொருதுமுகத்தில் இரு எடைமிக்க இரும்புத்தகடுகள் உரசிக்கொள்வதுபோல பேரோசையும் அனல்பொறிகளென அம்புகளும் எழுந்துகொண்டிருந்தன.

ஆடியை நோக்கும் ஆடியிலென இருபுறமும் புரவிகளின் நேர்நிரை விழி தொடும் எல்லை வரை அகன்று சென்றது. அவன் அந்த எல்லையின்மையை உளம்தவிர்த்து தன் படைப்பிரிவை மட்டும் எண்ணத்தில் நிறுத்தினான். கங்கைக்கரையில் நீண்ட கொடிக்கயிற்றில் புலத்தியர் உலரவிட்ட ஆடைகள்போல அவை உள்ளதாக எண்ணிக்கொண்டான். புரவிகளின் வால்கள் சுழன்றுகொண்டே இருந்தன. அவை உடல் எடைமாற்றியும் பொறுமையிழந்தும் அசைந்தன. அவற்றின் கவசங்களும் மணிகளும் உரசும் ஒலிகளுடன் படைக்கல ஒலிகளும் இணைந்து சாலையில் வண்டிகள் பெருகிச்செல்லும் ஓசை என கேட்டுக்கொண்டிருந்தன.

அப்புரவிகள் அனைத்திலும் அனிலையே உயரமானது. எடையும் விசையும் கொண்டது. ஆகவே தேர்ந்த பரிவீரனாகிய பீலனுக்கு அது அளிக்கப்பட்டது. அவன் அதைப்பற்றி பெருமிதம் கொண்டிருந்தான். எப்போதும் முதல்நிரையில் தானும் புரவியும் நிறுத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். அவனுடைய

படைப்பிரிவு சீராக அணிவகுத்துச் செல்கையில் நோக்கும் படைத்தலைவர்களின் விழிகள் அனிலையைக் கண்டு விரிவதை அவன் ஒருபோதும் தவறவிடுவதில்லை. அப்போது அவன் உடல் மேலும் நிமிரும். அவர்களில் பலர் பின்னர் கொட்டிலுக்கு வந்து அனிலையை பார்த்துச் சென்றதுண்டு. துருபதரே இருமுறை கொட்டிலுக்கு வந்து அதை தொட்டு வருடிவிட்டுச் சென்றார்.

பாஞ்சாலப் படை உபப்பிலாவ்யத்திற்கு வந்த பின்னர் நகுலன் மாதமிருமுறையேனும் அனிலையை நோக்க வருவான். முதல்நாள் நகுலன் அணுகியதுமே நெடுநாட்களாக அறிந்த ஒருவனை நோக்கி உளம்பாய்வதுபோல் அனிலை நிலையழிந்து கட்டுக்கயிற்றை இழுத்து உடல்திருப்பி மெய்விதிர்த்து கனைப்போசை எழுப்பியது. அவன் வந்து அதன் பிடரியில் கைவைத்ததும் திரும்பி தன் பெருந்தலையை அவன் தோள்மேல் வைத்து அழுத்தி அவன் மணம் முகர்ந்து மூச்செறிந்தது. ஒவ்வொரு முறையும் அவன் வருவதற்கு முன்னதாகவே, அன்று காலையிலேயே அது அவனுக்காக உளமொருங்கி நிலையழிந்து குளம்புமாற்றி மிதித்தும் தலைதாழ்த்தி மூச்சுசீறியும் பிடரிகுலைத்தும் காத்திருக்கும். நகுலன் வரும் நாள் அதற்குத் தெரியும் என பீலன் எண்ணிக்கொண்டதுண்டு. ஆனால் நகுலன் சீரான நாளிடையில் வருவதில்லை என்பதை பின்னர் நோக்கியபோது புரவி எப்படி அதை அறிகிறது என அவன் வியப்புறுவான்.

அவன் தந்தை அவனிடம் “புரவி அறிவனவற்றை மானுடர் அறியவியலாது. விலங்குகள் கொள்ளும் அறிவை மானுடரால் விளக்கவே இயலாது. அவை பேரன்பால் மெய்யுணர்கின்றன” என்றார். அனிலையை அவன் தொலைவிலிருந்து நோக்கிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு முறையும் அந்தத் திகைப்பை அடைவான். அதற்குள் வாழ்வது எது? வலியும் நோயும் பசியும் இறப்பும் அதற்குமுண்டு. ஆனால் துயரில்லை, கவலையுமில்லை. மானுடரை விட தெய்வங்களுக்கு உகந்த ஊர்தியாக அது இருப்பது அதனால்தான் போலும். மானுடரில் நோக்கிலேயே அடிமையும் மிடிமையும் கொண்ட புல்லர்களை அவன் கண்டதுண்டு. புரவிகளில் நோயுற்றும் உணவின்றியும் நொய்ந்தவற்றையே கண்டிருக்கிறான். நிமிர்விலாத புரவியென ஏதுமில்லை. கால்மடித்து ஒருக்களித்துப் படுத்து தலைநிமிர்ந்து இளவெயில் காய்ந்து விழிமூடி அசைபோட்டுக்கொண்டிருக்கும் புரவியின் அழகு அவனை விழிநீர் கசிய வைப்பதுண்டு. பேரரசர்கள் அரியணையில் அமர்கையில் மட்டுமே எழும் நிமிர்வு அது.

புரவிச்சாலையில் பிறந்து வளர்ந்தவன் அவன். அவன் தந்தை சுபாங்கர் தேர்ந்த பரிமருத்துவர். அவர்களின் குலமே பரிமருத்துவத்தில் ஈடுபட்டு தலைமுறைகளாக அவ்வறிதலைத் திரட்டி கையளித்து சேர்த்தது. அவர்கள் உத்கலத்திலிருந்து பாஞ்சாலத்திற்கு குடிபெயர்ந்து வந்தவர்கள். முன்பு சோனக நாட்டிலிருந்து புரவிகள் உத்கலத்தின் துறைமுகங்களில் வந்திறங்குகையில் அவற்றை வாங்கி நெடுந்தொலைவிற்கு கொண்டு சென்று பிறநாடுகளில் விற்கும் தொழிலை செய்துவந்ததனர் பலர். அவன் குலம் சோனக மருத்துவர்களிலிருந்து அவர்கள் பரிமருத்துவத்தை கற்றுக்கொண்டது. வணிகர்கள் ஊர்திரும்பிவிட்ட கார்காலத்தில் மருத்துவர்களுக்கான தேவை மிகுந்திருந்தது.

நான்கு கால்கள் கொண்டவை எனினும் யானையும் பசுவும் எருமையும் அத்திரியும் கழுதையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. அவை அனைத்திலிருந்தும் வேறுபட்டது புரவி. பிற விலங்குகளின் தசைகள் முரசில் இழுத்துக் கட்டப்பட்ட தோல் போன்றவை. புரவியின் தசை வில்லில் முறுகி நின்றிருக்கும் நாண். பிற விலங்குகளை நிற்கவைத்தோ அமரவைத்தோ படுக்கவைத்தோ மருத்துவம் பார்க்கலாம். புரவி நின்றிருக்கையிலும் விரைந்தோடிக்கொண்டிருப்பதென்றே

அதன் உடல் அமைந்திருக்கும். விரைந்து புண் ஆறும். ஆறாப் புண் உயிர்குடித்துச் செல்லும். புண்பட்ட, நோயுற்ற புரவி அதுவே தான் உயிர்வாழவேண்டுமென்று எண்ணவேண்டும். அப்புண்ணை குளிர்விக்க வேண்டுமென்று அதனுள் வாழும் தெய்வங்கள் கருதவேண்டும்.

புரவி மானுடரைப்போலவே எண்ணங்களாலானது. ஐயமும் தயக்கமும் ஆறாச் சினமும் கொண்டது. ஆனால் வஞ்சமற்றது, ஆகவே துயரற்றது. மறதி இல்லாதது, ஆகவே கடந்தகாலமற்றது. “புரவி பேணுபவன் ஒவ்வொரு கணமும் உணரவேண்டியது ஒன்றுண்டு, தன்னைவிட உடலால் உள்ளத்தால் உள்வாழ்வதனால் பலமடங்கு மேம்பட்ட ஒன்றுடன் அவன் உரையாடிக்கொண்டிருக்கிறான். மண்ணில் பெருகி நிறைந்துள்ள உயிர்க்குலங்கள் பிரம்மத்தின் வடிவங்கள். எண்ணிலாக் குணங்கள் நிறைந்த பிரம்மத்தின் ஒவ்வொரு இயல்பும் ஓர் உயிர். மானுடன் பிரம்மத்தின் விழைவின் ஊன்வடிவு. புரவி அதன் விசையின் உயிர் கொண்ட உடல். புரவி வடிவிலேயே காற்று புவியில் தன்னை உடலென நிகழ்த்திப்பார்க்கிறது. எண்மூன்று மாருதர்களும் புரவியுடலில் குடிகொண்டுள்ளனர் என்றறிக!” என்றார் தந்தை.

புரவி மருத்துவன் காற்றுக்கு மருந்திடுபவன். புரவி விலங்குகளில் இளந்தளிர். மலர்களில் அது வைரம். புரவி மீதுள்ள பற்று அவன் குடியினரை பிற அனைத்திலிருந்தும் விலக்கியது. பித்துகொண்டவர்களாக அவர்கள் புரவியைப்பற்றி மட்டுமே பேசினர். புரவிகளுடன் வாழ்ந்தனர். புரவிகளை கனவு கண்டனர். அவர்களின் தெய்வங்களும் புரவி வடிவிலேயே அமைந்திருந்தன. இருபத்துநான்கு புரவி வடிவ மாருதர்களுக்கு மேல் அமைந்த ஹயக்ரீவன் அவர்களின் ஆலயங்களில் அமர்ந்து அருள்புரிந்தான். அவர்களின் குடியில் புரவிகளின் பெயரே மைந்தருக்கும் இடப்பட்டது. மண்மறைந்த புரவிகள் மைந்தராகவும் புரவிக்குருளைகளாகவும் அவர்களிடையே மீண்டும் திகழ்ந்தன.

ஆறு தலைமுறைக்கு முன் அவருடைய மூதாதை ஒருவர் புண்பட்ட புரவியின் ஊன் திறந்த வாயை தைத்துக்கொண்டிருந்தார். புண்ணை தைப்பதற்கு முன் அப்புரவியிடம் அதை அறிவித்து ஒப்புதல் பெற்றாகவேண்டும். ஏழு முறை புண்ணைத் தொட்டு ஊசியையும் நூலையும் அதன் முன் காட்டி அதன் விழியசைவை கண்டபின்னரே முதல் கண்ணியை குத்திச் செலுத்தி எடுத்து முடிச்சிடவேண்டும். அன்று அந்த மூதாதை களைத்திருந்தார். பொழுது தொடங்கியது முதல் அவர் மருந்திட்டு தைக்கும் நூறாவது புண் அது. அப்பால் கலிங்கத்திற்கும் உத்கலத்திற்கும் நடுவே அம்பொழியா பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. புரவிகள் புண்பட்டு வந்துகொண்டே இருந்தன.

தன் உதவியாளனிடம் சினத்துடன் ஏதோ கூறிய பின் அருகிருந்த கந்தகம் கரைத்த நீருக்குள்ளிருந்து நூல் கோத்த ஊசியை எடுத்து புரவியின் முன் தோளிலிருந்த ஊன்வாயை இடக்கைவிரலால் சேர்த்துப் பற்றி வலக்கை விரல்களால் ஊசியைக் குத்தி தூக்கினார். சினந்து திரும்பிய புரவி அவர் தோள் தசையைக் கடித்துத் தூக்கி அப்பாலிட்டது. பின்னர் எழுந்து விரைந்தோடி அப்பால் சென்று நின்று நடுங்கியது. மூதாதையின் உதவியாளர்கள் சென்று அவரைத் தூக்கி எடுத்தனர். புரவியின் கடிபட்டு தசைகிழிந்து குருதி கொட்டிக்கொண்டிருந்தது. படிக்காரம் கரைத்த நீரால் அதை மும்முறை கழுவி, கந்தகப் பிசினால் நீவி மெழுகுத் துணியால் கட்டிட்டு அவரை மெல்ல பற்றி இல்லத்திற்கு கொண்டு சென்றனர்.

அப்புரவி தனக்குரிய மரத்தை கண்டடைந்து அதில் உடல் சாய்த்து நின்று முன்வலக்கால் தூக்கி விழிமூடி தலை தாழ்த்தியது. அதன் தசைகள் ஒவ்வொன்றாக

நாண்தளர்ந்தன. மூன்று பகல் அவ்வாறே அது நின்றிருந்தது. புண்ணிலிருந்து குருதி ஒழுகி மறைய, உடல் நடுங்கி சோர்ந்து, பெருந்தலை எடைமிகுந்து மண்தாழ்ந்து, நீரிலாதுலர்ந்த கருமூக்கு மண்ணில் ஊன்ற, செவிகள் மடிந்து முன் தொங்க, நீர்வடிந்து காய்ந்த விழிகள் அசைவிழந்து வெறிக்க, முன்கால் மடித்து மண்ணில் அமைந்து பக்கவாட்டில் சரிந்து விழுந்து, தோல்பை என வயிறு எழுந்தமைய, புழுதிபறக்க மூச்சிரைத்து, மெல்ல அடங்கி கமுகுப்பூக்குலை வாலைச் சுழற்றி ஓய்ந்தது.

அம்மூன்று நாட்களும் தன் இல்லத்தில் கடும்காய்ச்சலில் உடல்சிவந்து, நினைவழிந்து, நாவில் பொருளிலாச் சொற்கள் எழ, அவ்வப்போது வலிப்பில் கைகால் இழுத்துக்கொள்ள, இறப்பு நோக்கி சென்றுகொண்டிருந்தார் மூதாதை. புரவி இறந்த மூன்றாவது நாழிகையில் அவரும் உயிர்துறந்தார். அப்புரவியுடன் சேர்த்து அவரையும் மண்ணில் புதைத்தனர். நாற்பத்தியோராவது நாள் நிமித்திகன் கல்பரப்பி கோள்நோக்கி கணித்து அவர் செய்த பிழையென்னவென்று உணர்த்தினான். அவர் குடியை குலம் விலக்கி வைத்தது. மூன்றாண்டுகள் பிறிதொரு நிலத்திற்குச் சென்று அங்கே பரிபேணி பிழைநிகர் செய்து மீளவேண்டுமென்று ஆணையிட்டது.

இறந்த மூதாதையின் மைந்தர் கபிலர் தன் மூன்று மனையாட்டிகளுடனும் பன்னிரு மைந்தருடனும் உத்கலத்திலிருந்து கிளம்பி பாஞ்சாலத்திற்கு வந்தார். அன்று பாஞ்சாலம் பயிலா பழங்குடிகள் ஒருவரோடொருவர் பூசலிட்டுப் பரவிய மலை நிலமாக இருந்தது. ஆண்டுக்கு இருமுறை ஏழுமடங்கு பெருகும் ஐந்து நதிகளின் சதுப்பில் அவர்கள் கோதுமையும் கரும்பும் பயிரிட்டனர். நதிகளினூடாக வந்துசேரும் பொருட்களை மலை மடம்புகளுக்குள் அமைந்த சந்தைகளுக்கு கொண்டுசெல்லும்பொருட்டு அத்திரிகளை பேணினார்கள். சுழிப் பிழையாலும், காலொருமை இன்மையாலும் போருக்கும் பயணத்திற்கும் ஒவ்வாதவை என தவிர்க்கப்பட்ட புரவிகளை வணிகர்கள் படகுகளில் ஏற்றிக்கொண்டு வந்து பாஞ்சாலப் பழங்குடிகளுக்கு விற்றனர். அவை பிறிதொரு வகை அத்திரிகள் என்றே அக்குடிகள் எண்ணின. அத்திரிகளை நிலமும் நீரும் காற்றும் ஒளியுமே பேணின.

அங்கு வந்து சேர்ந்த கபிலர் இருபுறமும் சுமைதூக்கியபடி மலைவிளிம்புகளினூடாக கொடிபோல் சுற்றிப்படர்ந்திருந்த சிறுபாதைகளில் சென்றுகொண்டிருந்த புரவிகளை கண்டார். அவற்றில் பல புரவிகள் நோயுற்றிருந்தன. முறையாக பேணப்படாமையால் உடற்குறைகள் பெருக வலிகொண்டு துயருற்றிருந்தன. அவற்றை பேணுவதெப்படி என்று அவர் அம்மக்களுக்கு கற்பித்தார். “புரவி வானுக்குரியது. வேள்விக் களத்திலெழும் அனலுக்கு நிகரானது புரவியின் உடல். அதை அவியிட்டு, நுண்சொல் உரைத்து வளர்க்கவேண்டும். மண்ணுக்கு கைப்பிடி விதையை அளியுங்கள், களஞ்சியம் நிறைய அன்னத்தை அது அளிக்கும். அனலுக்கு அவியளியுங்கள், மண் குளிர்ந்து பெருகும் மழையை அது அளிக்கும். புரவிக்கு உங்கள் அன்பை அளியுங்கள், திசைகளைச் சுருட்டி உங்கள் காலடிகளில் வைக்கும். எதிரிகளுக்கு முன் உங்கள் காவல்தெய்வமென எழுந்து நின்றிருக்கும். புரவியை அறிந்தவர்கள் மண்ணில் எங்கும் தோற்பதில்லை” என்று அவர் கூறினார்.

புரவி பாஞ்சாலத்தில் பெருகலாயிற்று. ஏழு தலைமுறைகள் கடந்தபோது பாஞ்சாலம் ஆற்றல்மிக்க ஐந்து குடிகளின் நிலமாக மாறியது. சூழ்ந்திருந்த நாடுகள் அனைத்தும் அவர்களை அஞ்சின. நகரங்களும் கோட்டைகளும் சாலைகளும் சந்தைகளும் என அந்நாடு செழித்தது. அதன் நடுவே காம்பில்யம் அருமணி ஆரத்தில் வைரமென பொலிந்தது. அதன்பின் அவர்கள் அங்கிருந்து திரும்பிச்செல்லவில்லை. பாஞ்சால அரசர்களால் பேணப்பட்டு அவர்களின் குலம் பெருகியது. நூற்றெட்டு குடிகளாகி

நாடெங்கும் பரவியது. கபிலகுலத்தவர் ஒருவரேனும் ஒரு நகரியில் இருந்தாகவேண்டும் என முறையிருந்தது.

அவன் தந்தையின் தந்தை ஊர்வரர் பாஞ்சாலத்தின் தென்னிலத்தில் புண்யகுண்டம் என்னும் ஊரில் குடியேறி அங்கே நிலைகொண்டார். அவன் தன் தந்தைக்கு எட்டாவது மைந்தன். அவனுக்கு இளமையிலேயே போரில்தான் ஆர்வமிருந்தது. மருத்துவ நூல்கள் உளம்புகவில்லை. புரவித் தொழிலுடன் போர்க்கலையும் பயின்றபின் அவன் வாழ்வு தேடி காம்பில்யத்திற்கு சென்றான். அங்கே அரிய புரவிகள் கொண்ட பெரும்படை ஒன்றிருப்பதை அவன் அறிந்திருந்தான். அவன் அரண்மனையை அடைந்து அரசவைக்குச் சென்று பணிகோரினான். அவனைக் கண்ட முதல்நாளே திருஷ்டத்யும்னன் “பெரும்புரவி ஒன்று கொட்டிலில் உள்ளது. தனக்கான வழிகள் கொண்டது. அதை அடக்கி ஆளும்பொருட்டு ஒரு பரிவலரை தேடிக்கொண்டிருந்தோம். நீர் அமைந்தீர்” என்றான்.

அவனுடைய ஆணையைப் பெற்று பீலன் கொட்டிலுக்குச் சென்றான். கொட்டில் காவலனாகிய பப்ரு அவனிடம் “நீரா? இளையோனாக இருக்கிறீர். அனிலை சற்று கட்டற்றது” என்றார். அவன் “நான் உத்கலத்தின் கபிலகுலத்தவன்” என்றான். பப்ரு ஒருகணம் வெறித்து நோக்கியபின் “வருக, கபிலரே” என எழுந்தார். அவனுடைய மணத்தை அறிந்ததும் அனிலை மூச்சுசீறி பெரிய குளம்புகளை கொட்டிலின் கற்தரையில் முட்டியது. அவன் அதை அணுகி சற்று அப்பால் நின்று தன் உள்ளத்தால் அதனுடன் உரையாடலானான். “என் அன்னையே, நான் எளியவன். உன்னை பேணும்பொருட்டு வந்துள்ள அடியவன். உன் காலடிகளில் என் வாழ்க்கையை நிறைவுசெய்ய விழைபவன். எனக்கு அருள்க! என்னை உன்னருகே அணுகவிடுக!”

மீண்டும் மீண்டும் உதடுகள் மெல்ல அசைய அதை சொன்னபடி அருகே சென்று அதன் கழுத்தில் தொட்டான். தொடப்போன இடம் முன்னரே விதிர்த்தது. அனிலை திரும்பி அவன் தலைக்குமேல் தன் தலையை தூக்க அதன் எச்சில் வழிந்து அவன் மேல் விழுந்தது. அவன் முகம் மலர்ந்து அண்ணாந்து நோக்கி “அன்னையே, வணங்குகிறேன்” என்றான். பப்ருவிடம் “அன்னை என்னை ஏற்றுக்கொண்டுவிட்டாள்” என்றான்.

அனிலை நான்கு அகவை வரை குழவி என்றும் கன்னி என்றும் கொட்டிலில் நின்றாள். இனிய விளையாட்டுத் தோழியாகவும் விரைவுக்கு மேல் விரைவெடுக்கும் விசைகொண்டவளாகவும் பரிவலர் அவளை எண்ணியிருந்தனர். கருவுறுவதற்காக அவளை பொலிக்குதிரைகளை நோக்கி கொண்டுசெல்லத் தொடங்கியபோதுதான் அவள் இயல்பு மாறத்தொடங்கியது. முதல் முறையாக அவளை பொலிநிலைக்கு கொண்டுசென்ற ஏவலர் அதன் வாயிலிலேயே முன்காலை அழுந்த ஊன்றி, மூக்குத்துளைகள் விரிய, விழிகளை உருட்டி நின்றுவிட்டதை கண்டனர். அவள் உடல் முழுக்க தோல் சிலிர்த்துக்கொண்டிருந்தது.

அவர்கள் மெல்ல கழுத்திலும் விலாவிலும் தட்டி “செல்க! செல்க! என் அரசியல்லவா? என் இனிய மகளல்லவா?” என்று நற்சொல் உரைத்தனர். துருத்தியென மூச்சுசீறி அனிலை மீண்டும் பின் அடி எடுத்து வைத்தாள். “செல்க!” என்று கடிவாளம் பற்றி இழுத்தார் பரிவலரான ருத்ரர். தலையால் ஓங்கி அறைந்து அவரைத் தூக்கி அப்பால் வீசி அவர் உதவியாளரை விலாவால் தட்டித் தள்ளிவிட்டு நான்கு குளம்புகளும்

நிலத்தில் அறைந்து ஒலி எழுப்ப விரைந்தோடி மூடியிருந்த கொட்டில் வேலியை தாவிக்கடந்து வந்து தன் நிலையை அடைந்து உள்ளே சென்று நின்றிருந்தாள்.

அவர்கள் இருவரும் மூச்சிரைக்க ஓடி வந்தபோது கொட்டில் நிலையில் அவள் காய்ச்சல் கண்டதுபோல் நடுங்கிக்கொண்டிருப்பதை பார்த்தனர். ருத்ரர் அருகே வந்தபோது மூச்சு சீற விழிகளை உருட்டி அவள் திரும்பிப்பார்த்தாள். ருத்ரர் அதிலிருந்த குறிப்பை உணர்ந்து நின்றுவிட்டார். அவர் உதவியாளரையும் தன்னை அணுக அவள் விடவில்லை. கொட்டிலில் இருந்த வேறு இரு உதவியாளர்கள் வந்து அவள் கடிவாளத்தை பற்றிக் கட்டினார்கள். அன்று முழுக்க உணவருந்தாமல் தலை தாழ்த்தி உடல் நடுங்கி அதிர்ந்து மூச்சு சீற அவள் நின்றிருந்தாள்.

மறுநாள் புலரியில் அவள் கடிவாளத்தை அவிழ்த்து வெளியே கொண்டுவந்தபோது முன்னால் கொண்டுவைத்த மென்தவிடும் மாவும் கலந்த நீரை அவள் அருந்தவில்லை. “நோயுற்றிருக்கிறாள். உள்நோயின்றி புரவிகள் உணவு மறுப்பதில்லை” என்றார் கொட்டில் மருத்துவர் சுதலர். அவள் உடலை அவர் எங்கு தொட்டபோதும் அங்கே தோல் விதிர்த்தது. கடிவாளத்தை பற்றித் தாழ்த்தி அவள் வாயின் மணத்தை முகர்ந்து “குடலில் புண் நிறைந்திருப்பதுபோல் மணம் எழுகிறது” என்றார். “ஒரே நாளில் புண் எவ்வாறு எழும்?” என்றார் ருத்ரர். “உளம் கொதித்திருக்கிறாள். என்ன நிகழ்ந்தது?” என்று சுதலர் கேட்டார். அவர்கள் அதை சொன்னபோது “விந்தை! இப்பருவத்தில் புரவிகள் பொலிநிலையின் குருதிமணத்தை அறிந்ததுமே உவகைகொண்டு கனைப்பதையே கண்டுள்ளேன். அவற்றை நாம் உள்ளே கொண்டுசெல்லத் தேவையில்லை. நம்மை அவை இழுத்துச்செல்லும்” என்றார் சுதலர்.

அவளைச் சூழ நோக்கி “நடுக்கம் உள்ளது. அஞ்சியிருக்கிறாள். அஞ்சும்படி எதுவோ நிகழ்ந்துள்ளது” என்றார் சுதலர். ருத்ரர் “என்ன செய்வது? எப்படியும் கருவுற்றாகவேண்டுமே?” என்றார். “பார்ப்போம். இப்போது இவள் உணவுண்ண வேண்டும். இன்னும் ஒருநாள் உணவொழிந்தால் இவள் குடலும் இரைப்பையும் புண்ணாகிவிடும். அப்புண்ணை ஆற்றிய பிறகே உணவு அளிக்க இயலும்” என்றார் சுதலர். “மூங்கில்குழாய் வைத்து உணவை உள்செலுத்தலாமே?” என்றார் ருத்ரர். “தன்னினைவின்றி படுத்திருந்தால் அவ்வாறு செய்யலாம். முழு ஆற்றலுடன் நின்றிருக்கும் புரவிக்கு குழாய் வழியாக உணவுநீரூட்ட இயலாது. ஆனால் ஒன்று தோன்றுகிறது…” என்று சொன்ன மருத்துவர் கொட்டிலில் துள்ளிக்கொண்டிருந்த இரு குதிரை மகவுகளை கயிறு கட்டி இழுத்துகொண்டு வரச்சொன்னார்.

சிறு புரவியான பசலன் ஆர்வத்துடன் அருகே வந்து அனிலையின் கால்களில் தன் முதுகையும் விலாவையும் உரசி அப்பால் சென்றான். அவன் தோழனான ஹரிதன் மேலும் அருகணைந்து அவள் கால்களுக்கிடையில் புகுந்து சிறிய மடியை தன் முகத்தால் முட்டி காம்புகளில் வாய்வைத்தான். கால்களை உதறியபடி பின்னகர்ந்த அனிலை குனிந்து ஹரிதனின் வாலையும் முதுகையும் நக்கத் தொடங்கினாள். “நன்று! நாக்கு அசைந்துவிட்டது. நீரை கொண்டுவையுங்கள்” என்றார் மருத்துவர். மீண்டும் நீரை அருகில் கொண்டுவைத்தபோது அனிலை குனிந்து விழிவரை முகம் முக்கி நீர் அருந்தினாள். நீர் உள்ளே செல்லும் ஒலியை கேட்ட மருத்துவர் “அணைக! உள்ளெழுந்த அனல் முற்றணைக!” என்றார். முகவாய் முள்மயிர்களில் நீர்த்துளிகள் நின்றிருக்க தலைதூக்கி நீள்மூச்செறிந்தாள் அனிலை. தலையை உலுக்கி காதுகளை அடித்துக்கொண்டு மீண்டும் ஹரிதனை நக்கினாள்.

இரு நாட்களுக்குள் முற்றிலும் சீரடைந்து உணவுண்ணத் தொடங்கினாள். அடுத்த கருநிலவு நாளில் மீண்டும் அவளை பொலிநிலைக்கு கூட்டிச்சென்றனர். இம்முறை

கொட்டிலிலிருந்து பொலிநிலைக்குச் செல்லும் சிறு பாதையின் திருப்பத்திலேயே அனிலை காலூன்றி நின்றுவிட்டாள். பின்னர் திரும்பி கொட்டில் நோக்கி நடந்தாள். அவளை பற்றிக்கொண்டிருந்த பரிநிலைக்காவலன் கடிவாளத்தைப்பற்றி இழுக்க அவனை கடிவாளத்துடன் மேலே தூக்கி சற்றே சுழற்றி அப்பாலிட்டுவிட்டு கொட்டிலுக்குள் புகுந்துவிட்டாள்.

மீண்டும் மூன்று முறை முயன்ற பின் “இவள் காமஒறுப்பு கொண்டவள் போலும். யாரறிவார், முற்பிறவியில் அருந்தவம் எதுவோ ஆற்றி அது நிறைவடையாது உயிர் துறந்திருக்கக்கூடும்” என்றார் மருத்துவர் சுதலர். அடுத்த கருநிலவு நாளில் உசிநாரத்திலிருந்து வந்திருந்த மருத்துவரான ஜம்பர் “இதை நான் பார்த்துக்கொள்கிறேன். பலமுறை செய்து வென்ற சூழ்ச்சி ஒன்றுள்ளது. அங்கிருப்பவை நூற்றுக்கு மேற்பட்ட பொலிக்குதிரைகள். அவற்றின் விந்து கலந்த மணமும் அவையெழுப்பிய விழைவொலிகளின் தொகையும் அவளை அச்சுறுத்துகின்றன. சில புரவிகள் அவ்வாறு அஞ்சுவதுண்டு. பொலிநிலைக்கு அவளை கொண்டுசெல்ல வேண்டியதில்லை. காட்டுக்குள் பொலிக்குரிய நிலை ஒன்றை அமையுங்கள்” என்றார்.

புரவிநிலைக்கு அப்பால் காட்டுக்குள் பொலிநிலை ஒன்று அமைக்கப்பட்டது. முப்புறமும் எடைமிக்க தடிகளும் மூங்கிலும் வைத்து கட்டப்பட்ட சிறிய அறையில் அனிலையை கொண்டுசென்று கட்டினர். அவள் முன்கால்களுக்குப் பின்னும் கழுத்துக்குப் பின்னாலும் மூங்கில் வைத்து இறுக்கி அசையாது நிறுத்தினர். திரும்பவோ உடலை அசைக்கவோ அவளுக்கு இடமிருக்கவில்லை. இரு பின்னங்கால்களும் மூங்கில் தூணுடன் சேர்த்து கட்டப்பட்டன. என்ன நிகழ்கிறது என்று அறியாமல் முதலில் கட்டப்படுவதற்கு இடங்கொடுத்த அனிலை பின்னர் பதற்றமடைந்தாள். பெரிய குளம்புகளால் தரையை அறைந்தபடி நிலைகுலைந்து துள்ளத்தொடங்கினாள்.

பொலிநிலையிலிருந்து குருதிவிசை நிறைந்த பொலிக்குதிரையாகிய பாவகன் அழைத்து வரப்பட்டான். அனிலையின் பின்புறத்திலிருந்து கோழையை எடுத்து மரவுரி ஒன்றில் நனைத்து பாவகனின் முகத்தருகே தொங்கவிட்டனர். மணம்கொண்டு காமம் எழுந்து உறுமி விழியுருட்டி முன்கால்களால் மண்பறித்து பாவகன் வெறிகொண்டான். அவன் ஆணுறுப்பு இரும்புலக்கையென வெளிவந்தது. அனிலையைவிட இருபிடி உயரமும் கால்பங்கு எடையும் கொண்டிருந்தான். அவனை இழுத்து வந்து அனிலையின் அருகே நிறுத்தியதும் உறுமி உடல் மெய்ப்பு கொண்டு தலைகுலுக்கியபடி அணுகினான்.

தலையைத் தாழ்த்தி விழிகளை உருட்டி அசைவிலாது நின்றாள் அனிலை. மருத்துவர் ஜம்பர் பழுப்புக் கூழாங்கல்போல பற்களைக் காட்டி “நோக்குக! உலகின் இன்சுவைகளில் முதன்மையானது காமம். தெய்வங்களுக்கு உகந்தது. அதன் முதல் கனி சற்று துவர்க்கும். பின்னர் ஒவ்வொரு கனிக்கும் இனிப்பு மிகுந்து செல்லும்” என்றபின் மேலும் நகைத்து “தோலும் கொட்டையும் இனிக்கும் ஒரு பருவமும் வந்துசேரும்” என்றார். பாவகன் அருகே சென்று உரக்க கனைத்தபடி முன்கால்களைத் தூக்கி அனிலையின் பின்தொடை மேல் வைத்து உடலை நெருக்க அனிலை பெருங்குரலில் கனைத்து தன் கழுத்தால் முன்னாலிருந்த மூங்கிலை ஓங்கி அறைந்து உடைத்தாள். மூங்கில் நெரிபடும் ஒலியுடன் திரும்பி இரு கால்களையும் காற்றில் தூக்கி ஓங்கி உதைக்க பாவகன் அறைபட்டு வலியுடன் ஓசையிட்டபடி இருமுறை தள்ளாடி பக்கவாட்டில் விழுந்தான்.

அனிலை மேலும் முன்னகர்ந்து அதே விசையில் உடலை பின்னெடுத்து முழு ஆற்றலாலும் இரு மூங்கில்களை உடைத்தபடி அறையிலிருந்து வெளி வந்தாள். தரையில் விழுந்துகிடந்த பாவகன் முன் கால்களை ஊன்றி எழ முயல ஓங்கி அவனை முட்டி அப்பாலிட்டாள். அடிவயிறு தெரிய, நான்கு கால்களும் காற்றில் உதைத்துக்கொள்ள, மல்லாந்து விழுந்த பாவகனின் மேல் தலையால் முட்டி அவன் கழுத்தைக் கடித்து தூக்கிச் சுழற்றி அப்பாலிட்டாள். பாவகனின் பெருநாளம் உடைந்து கழுத்திலிருந்து கொழுங்குருதி பீறிட்டு அனிலையின் முகத்திலும் கழுத்திலும் வழிந்தது. குழைந்து வாழைத்தண்டுக் குவியலென நிலத்தில் கிடந்த பாவகனை மீண்டும் கடித்துத் தூக்கி இருமுறை உதறினாள் அனிலை.

“இது புரவியல்ல! இது வேங்கை! புரவி இவ்வாறு செய்வதில்லை! புரவியின் இயல்பே இது அல்ல!” என்று கூவியபடி மருத்துவர் ஜம்பர் விரைந்து ஓடி அருகே நின்ற சால மரமொன்றின் கிளைகளைப்பற்றி மேலேறி உச்சிக்கிளையில் இறுகப்பிடித்தபடி அமர்ந்து நடுங்கினார். பிற ஏவலர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். முகமயிர் முட்களிலும் பிடரியிலும் குருதி செம்மணிகள்போல உருண்டு ஓடையென்றாகி வழிய, திமிர்த்த தசைகள் இறுகி நெளிந்தசைய, மெல்ல நடந்து மீண்டும் கொட்டிலுக்கு வந்த அனிலை உறுமி பரிகாவலரை அழைத்தாள். அவர்கள் எவரும் வந்து வாயில் திறக்கத் துணியவில்லை. வாயிலை தலையால் அறைந்துடைத்து உள்ளே நுழைந்தாள். மீண்டும் தன் கொட்டிலை அணுகி அங்கே நின்றுகொண்டாள்.

அனிலையின் பிறவிநூலை கணிக்க பீலனிடம் கோரினர். அவன் அவளின் ஐந்து நற்சுழிகளையும் நாநிறத்தையும் குளம்புகளின் அமைப்பையும் விழிமணிகளின் ஒளியையும் கணித்து “இவள் காமத்தை தொடப்போவதில்லை. புரவிகளில் தெய்வக்கூறுகள் மூன்று உண்டு. திருமகளின் கூறு மட்டுமே கொண்டவள் ஐம்மங்கலங்கள் நிறைந்தவள். தெய்வங்கள் ஊர்வதற்கு உரியவள். திருமகளும் கலைமகளும் கூடிய புரவி முனிவர்களுக்குரியது. திருமகளும் கொற்றவையும் கூடிய புரவி அரசர்களுக்குரியது. திருமகள் கூறோ கலைமகளின் கூறோ சற்றுமின்றி முற்றிலும் கொற்றவையின் கூறு மட்டுமே கொண்ட புரவி பல்லாயிரத்தில் ஒன்று. அவளை எவரும் ஆள இயலாது. அவள் மேல் ஊர்வதும் எளிதல்ல” என்றான்.

“ஆனால் அன்னை பெருங்கனிவு நிறைந்தவள். தன் மகவையென தன்னை ஊர்பவனை கொண்டு செல்பவள். அவன் தேவியை அடியவனென அவளை வழிபடவேண்டும். அவள் காலடியில் அமர்ந்து பணிவிடை செய்யவேண்டும். போர்முனைகளில் களிறுகளும் அவளைக் கண்டு அஞ்சுவதை காண்பீர்கள். இவளுக்கு அனிலை என்று பெயர் சூட்டியவர் நாளும் கோளும் நன்கறிந்த நிமித்திகர். அவர் வாழ்க!” என்றான் பீலன்.

பீலன் அனிலை தலைதாழ்த்தி செருக்கடிப்பதை கேட்டான். அது போருக்கு கிளம்பவிருக்கிறது என்பதை உணர்ந்ததும் திகைப்புடன் இருபுறமும் பார்த்தான். புரவிகள் அனைத்தும் செவிகோட்டி ஒலிக்காக கூர்ந்து நின்றிருந்தன. அனிலை முன்வலக்காலால் மண்ணை கிண்டியது. மீண்டும் செருக்கடித்து உடல் சிலிர்த்தது. “கிளம்புக! கிளம்புக! கிளம்புக!” என்று முழவின் ஒலி எழுந்தது. நூற்றுக்கணக்கான கடிவாளங்கள் இழுக்கப்பட புரவிகள் கனைத்தபடி, தலைசிலுப்பி, குளம்புகள் நிலத்தில் அறைந்து முழக்கமிட இடிந்து சரியும் கோட்டைபோல் படைமுகப்பு நோக்கி சென்றன.

அனிலையின் மீது அமர்ந்து வேலை சற்றே சாய்த்து பற்றியபடி தலைதாழ்த்தி முழு விரைவில் சென்றபோது பீலன் அவ்வியப்பிலேயே இருந்தான். முழவோசை எழுவதற்கு முன்னரே அனிலை அதை எவ்வாறு உணர்ந்தது? அவ்வாறு அது கணிக்கமுடியா நுண்மையொன்றால் உணர்ந்துகொண்டிருப்பவற்றை பலமுறை அவன் வியப்புடன் அறிந்திருக்கிறான். அதன் பக்கத்து கொட்டிலில் நின்றுகொண்டிருந்த புரவியான சுதீபன் காட்டில் அரவு தீண்டி உயிர்துறந்தபோது இரண்டு நாட்கள் முன்னரே அனிலை அமைதியிழந்திருந்ததை, மீண்டும் மீண்டும் சுதீபனை நோக்கி தலைநீட்டி முகத்தால் அதன் முகத்தை வருடிக்கொண்டிருந்ததை அவன் நினைவுகூர்ந்தான். முதியவராகிய கொட்டில் காவலர் காளிகர் நெஞ்சடைத்து இறப்பதற்கு முந்தைய நாள் இரவு அனிலை அவரை நோக்கி மீள மீள குரல் கொடுத்தது. நிகழ்வனவும் நிகழ்ந்தனவும் வருவனவும் ஒரு சரடின் மூன்று முடிச்சுகள்போல. சரடின் மேல் ஊர்ந்து செல்லும் எறும்புக்கு ஒன்று பிறிதொன்றுடன் தொடர்புடையதல்ல. முழுச் சரடையும் நோக்குபவருக்கு அது ஒன்றே என்று அவன் தந்தை ஒருமுறை சொன்னார்.

புரவிப்படை அவர்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த தேர்ப்படையை அணுகி தேர்கள் ஒன்றுக்குமுன் ஒன்றென அமைந்து வழிவிட்டு உருவாக்கிய நூறு பாதைகளினூடாக பீறிட்டு மறுபுறம் சென்றன. அங்கு கௌரவப் படை தேர்கள் உடைந்து, புரவிகள் தாக்கப்பட்டு நிலைகுலைந்திருந்தது. நீண்ட வேல்களால் எதிர்வந்த புரவிகளையும் தேர்வலர் வில்லவர்களையும் குத்திப் புரட்டி சரித்தபடி முன்சென்றனர் புரவிப்படையினர். பீலன் தன் நீண்ட குத்து வேலால் தேரில் நின்று வில்குலைத்த ஒருவனின் கவசத்தின் மேல் ஓங்கி குத்தினான். அவன் தோள்விசையும் தோள்வலியும் புரவிகளின் எழுவிசையும் இணைந்த அறைதலில் இரும்புக்கவசம் உடைந்தது. வேல் அவன் நெஞ்சுக்குள் புதைந்தது. புரவியை முன் செலுத்தி வேலை உருவி எடுத்து தலைக்குமேல் சுழற்றி மீண்டும் எடுத்து அதற்கு அப்பால் புரவிமேலிருந்து அம்புதொடுத்த ஒருவனின் கழுத்தை நோக்கி இறக்கினான். புரவிப்படை அணி கலைந்து குழம்பியிருந்த கௌரவப் படைக்குள் முழுமையாக ஊடுருவியது.

போரின் உச்சம். இறப்பு ஐம்புலன்களும் அறியும் பருவடிவப் பேரிருப்பென அருகே நின்றிருக்கும் தருணம். ஒவ்வொரு முறை நிகழ்கையிலும் அது விந்தையானதோர் உச்சத்தை அளிப்பதை பீலன் அறிந்திருந்தான். ஒருநாள் போர் முடியும்போது "இன்னொருநாள், மேலும் ஒரு நாள்" என உள்ளம் துள்ளும் உவகை படைப்பிரிவுகளுக்குச் சென்று அமைந்து, உடலில் பாய்ந்த அம்புகளை அகற்றி, புண்களுக்கு எரியும் மருந்திட்டு, ஊனுணவு உண்டு, அகிபீனா மாந்தி, படுப்பதற்காக சரியும்போது முற்றிலும் அணைந்துவிட்டிருக்கும். விண்ணிலிருந்த மீன்களை நோக்கியபடி எழுந்து ஓடவேண்டும் என்ற எண்ணமே எழும்.

அங்கிருந்து கிளம்பிவிடுவதைப்பற்றிய வெவ்வேறு உளநிகழ்வுகள் வழியாக தன்னிலை மயங்கும். ஆனால் புலரியிலெழுந்ததும் முதல் எண்ணம் அன்று போருக்குச் செல்லவிருப்பதாகவே இருக்கும். ஒவ்வொரு கணமென போரை எதிர்நோக்கி படைக்கலங்களைத் தீட்டி, கவசங்களை பழுதுநோக்கி, புரவியை அணிசீரமைத்து ஒருக்கி கடத்துவான். அனைத்தும் அந்த ஒரு தருணத்தின் எழுச்சிக்காகவே. அன்றாட வாழ்க்கையின் முடிவிலாத நிலையொழுக்கில் அத்தகைய தெய்வகணங்களுக்கு இடமில்லை.

முந்தைய ஐந்து நாட்களும் அனிலை உச்சகட்ட விசையுடன் போரிட்டது. களத்தை நோக்கி நடக்கையில் மெல்ல உடல்சிலிர்த்து எடைமிக்க குளம்புகளை நீட்டி வைத்து தலையசைய பிடரி நலுங்க அது நடக்கையில் முற்றமைதி கொண்டிருக்கும்.

நாணேற்றப்பட்ட வில்லின் அமைதியுடன் அது காத்து நின்றிருக்கும். ஆணை கிடைத்ததும் களத்திலெழுந்து பாய்ந்து செல்லும். எங்கே எவரை எப்படி தாக்கவேண்டுமென்று அதுவே முடிவெடுத்தது. அது காற்றில் தாவிஎழுந்து திரும்பும் கணத்தில் வேல்பாய்ச்ச பீலன் அறிந்திருந்தான். அது திரும்பும் அக்கணத்தைப்போல அதற்கு உகந்த பிறிதில்லை என்றும் பட்டறிவு கொண்டிருந்தான்.

அனிலை களத்திலெழுந்ததும் பிற புரவிகள் அஞ்சின. தேர்நுகத்திலேயே அவை நிலைகுலைந்து ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொண்டு அமறின. யானைகளும் தயங்கி பின்னடைந்தன. அவன் வீசிய வேலின் எடையும் விசையும் அக்களத்தில் வேறெவற்றுக்கும் இருக்கவில்லை. அந்த வேலை அவனால் தனியாக ஒற்றைக்கையால் தூக்க முடியாது. அதன் தண்டு நான்கு ஆள் நீளமான தோதகத்தில் மரக்கடைவு. அதன் முனை இரண்டு கைவிரல்களாலும் சுற்றிப்பிடிக்கத்தக்க அளவுக்குப் பெரியது. அதன் கூருக்கு இருபுறமும் கொக்கிகளும் உண்டு. “இது வேலல்ல, சிறு கதை” என்று அவன் அணுக்கர் சொல்வதுண்டு.

அனிலை முன்கால் தூக்கித் தாவி எழுகையில் அவன் வேலை பின்னிழுத்து அதன் முன்விசையாலேயே அதற்கு ஆயம் கூட்டுவான். அது பாய்கையில் வேலைச் சுழற்றி புரவியின் விசையுடன் தன் வேலின் விசையையும் சேர்த்துக்கொண்டு நீட்டி வீசுவான். அவனுடைய வேல் அனைத்துக் கவசங்களையும் பிளந்தது. யானை மருப்புகளிலேயே தைத்திறங்கியது. புரவியின் விசையில் பாய்ந்து சென்று தன் கையில் கட்டப்பட்டிருந்த சங்கிலியை இழுத்து பாய்ந்த வேலை பிடுங்கிச் சுழற்றி மீண்டும் ஆயம் கூட்டி எறிந்தான்.

முதல் நாள் முதல் போர்த்தருணத்திலேயே அவனுக்கும் அனிலைக்குமான ஒத்திசைவு கூடிவிட்டது. அவர்கள் உளம் ஒன்றாக உடல் அதனுடன் இணைய போரிட்டனர். கொல்லுந்தோறும் களிவெறி ஏறிவந்தது. அக்களிப்பை அனிலையும் அடைவதை அவன் கண்டான். களிறுகளும் புரவிகளும் களத்தில் வெறியும் களிப்பும் கொள்ளும் என அவன் கற்றிருந்தான். களத்தில் அதை அறிகையில் அவன் முற்றிலும் அறியாத பிறிதொரு விலங்கின்மேல் அமர்ந்திருப்பது போலிருந்தது.

போர்க்களத்தில் என்ன நிகழ்கிறதென்பதை அவனைப்போன்ற வீரர்கள் அறிவதற்கு வழியே இருக்கவில்லை. முன்னேறுக, வலந்திரும்புக, இடம்திரும்புக, பின்னடைக, விரைவுகொள்க என்னும் ஐந்து ஆணைகளால் அவர்கள் இயக்கப்பட்டார்கள். பீலன் தன்னருகே நின்றிருந்தவர்களையே அறிந்திருக்கவில்லை. முதல் நாள் அவனுக்கு இருபுறமும் நின்றிருந்தவர்களை போர் முடிந்ததும் தேடினான். உடலெங்கும் குருதி சொட்ட அனிலை செருக்கடித்துக்கொண்டு நின்றது. நெஞ்சில் அம்பு தைத்திருக்க, இரு கைகளையும் விரித்து மல்லாந்து கிடந்த ஒரு முகத்தை அவன் நோக்கினான். அவனுக்கு இடப்பக்கம் நின்றவன்! நோக்கை விலக்கிக்கொண்டு திரும்பிச்சென்றான். அதன்பின் எவர் முகத்தையும் நினைவில் நிறுத்திக்கொள்ளவில்லை.

அப்பால் களத்திலெழுந்த ஓசைகளைக் கேட்டு பீலன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அனிலையை நிறுத்தினான். அவன் உள்ளம் அறிந்ததுபோல் அது மூச்சு சீறி செருக்கடித்தபடி முன்னங்கால் தூக்கி நின்றது. அதன் உடலின் மென்மையான மயிர்ப்பரப்பில் குருதித்துளிகள் சிறுகனிகள்போல தொங்கிக்கிடந்தன. புதுக் குருதி தடம் உருவாக்கி இறங்க அது சிலிர்த்துக்கொண்டது. வாளொலிகளின் விசையை கேட்டபடி அவன் மேலும் அணுகியபோது சூழ்ந்திருந்த வீரர்கள் ஆமைகளைப்போல

குனிந்து கேடயத்தை முதுகிலாக்கி வந்து சரியும் அம்புகளை தவிர்த்தபடி அங்கே கிருதவர்மனுக்கும் பீமனுக்கும் நிகழும் போரை நோக்குவதை கண்டான்.

அப்போரில் எவர் வெல்வார் என முன்னரே அனைவருக்கும் தெரிந்திருந்தது. கிருதவர்மன் பாண்டவப் படையால் சூழப்பட்டிருந்தான். போரின் விசையில் அவனுடைய தேர் அணியிலிருந்து பிரிந்து முன்னெழ அதை பாண்டவர்களின் படையினர் பின்தொடர்பை துண்டித்து உள்ளே கொண்டுவந்துவிட்டிருந்தனர். அவன் மீண்டும் தன் மையப்படையுடன் சேரும்பொருட்டு விசைகொண்டு போரிட்டுக்கொண்டிருந்தபோது கதையைச் சுழற்றியபடி உறுமலோசையுடன் பீமன் அவனை எதிர்கொண்டான். சில கணங்களிலேயே அவர்கள் கதைகளால் தாக்கிக்கொண்டார்கள்.

பீமனின் அறைகளை தாவியும் துள்ளியும் பின்னால் சென்றும் உடல்வளைந்து ஒழிந்தும் கிருதவர்மன் எதிர்கொண்டான். ஒருமுறைகூட அவன் கதையின் அடியை தன் கதைமேல் வாங்கிக்கொள்ளவில்லை. பீமனின் கதை விசையுடன் சுழன்றுவரும் ஓசையை, மெல்லிய காற்றசைவைக்கூட உணரமுடியுமென்று தோன்றியது. பீமனை சினம்கொள்ளச் செய்து நிலையழிய வைத்து தாக்குவது கிருதவர்மனின் நோக்கம் என்று தெரிந்தது. பீமன் சினம்கொள்வதை முகம் காட்டியது. மிகச் சிறுபொழுதுக்குள் கிருதவர்மனை கொன்றுமீளவேண்டும் என அவன் எண்ணியிருக்கலாம். அப்பால் பாண்டவப் படையின் மீது கௌரவர்களின் படை தன் முழுவிசையாலும் தாக்குதல் தொடுத்தது.

அவர்களின் அறைகளுக்கேற்ப பாண்டவப் படை உலைந்தும் அதிர்ந்தும் பின்வளைந்து மீண்டும் போர்விளியுடன் முன்னால் சென்று உறுதிகொண்டு ஒருங்கிணைந்தது. அங்கே துரியோதனனும் துச்சாதனனும் துர்மதனும் துச்சகனும் இருப்பதை கொடிகளிலிருந்து உணரமுடிந்தது. அவர்களை எதிர்த்து நின்றிருந்த பாண்டவர்களின் கேடயமேந்திய யானைநிரை அதிர்ந்துகொண்டே இருந்தது. “தண்டுகள்! தண்டுகள் வந்துகொண்டிருக்கின்றன!” என்று படைக்காவலன் கூவினான். “இன்னும் பெரும்பொழுதில்லை… இதோ வளையம் உடைந்துவிடும்!” என இன்னொருவன் கூவினான். இருவரிலும் அது இருவகை விளைவுகளை உருவாக்கியது. பீமன் மேலும் பதற்றம்கொள்ள கிருதவர்மன் நம்பிக்கைகொண்டு புன்னகைத்தான்.

பீமன் பாய்ந்து கிருதவர்மனின் தலைமேல் ஓங்கி அறைய அவன் அதை முற்றொழிந்து இடக்கை ஊன்றி நிலத்திலிருந்து துள்ளி எழுந்து கதையை வீசி பீமனின் விலாவை ஓங்கி அறைந்தான். பீமனின் கவசம் உடைந்து தெறிக்க அவன் பின்னால் சரிந்து நிலையழிந்த கணத்தில் கிருதவர்மன் பாய்ந்தோடி இரு தேர்களின் முகடுகளின் மேலேறி அப்பால் தாவி தன் படையுடன் இணைந்துகொண்டான். சீற்றத்துடன் தன் கதையை நிலத்தில் ஓங்கி அறைந்து கூச்சலிட்ட பீமன் “கேடயப்படை திறக்கட்டும்…” என்று ஆணையிட்டான். அவன் சொல்லாலோ மறுபக்க அறைவிசையாலோ கேடயமேந்திய யானைகளில் ஒன்று விலக அவ்விடைவெளியில் மறுபக்கமிருந்து தண்டு பாய்ந்து வந்தது. பீமன் அதன் மேல் பாய்ந்தேறி அப்பால் சென்றான்.

அந்தத் தண்டுடன் மேலுமிரு தண்டுகள் இணைந்துகொள்ள யானைகளின் சுவர் விலகியது. பாண்டவப்படை போர்க்கூச்சலுடன் பீமனை துணைக்கப் பாய்ந்தது. பீலன் தன் வேலைவீசி முதல்தண்டை ஏந்திவந்துகொண்டிருந்த யானையின் மத்தகத்தின் சென்னிக்குழியில் அறைந்து உள்ளே முனையிறக்கினான். சங்கிலியை இழுத்து வேலை பிடுங்கியபோது வெண்கூழுடன் குருதி வழிந்து அதன்

துதிக்கவசத்தில் ஊறியது. பிளிறியபடி தண்டை விட்டுவிட்டு யானை வலப்பக்கமாக சரிய தண்டின் முனை நிலத்தில் ஊன்றி நிலைகொண்டது.

பின்னணியானையால் தண்டை தனியாக பிடிக்கமுடியவில்லை. அதன் துதிக்கை தண்டில் சிக்கிக்கொள்ள அனிலை பாய்ந்து தண்டைக் கடந்து அப்பால் சென்றது. அக்கணத்தில் பீலன் தன் வேலால் அந்த யானையின் மத்தகத்தை அறைந்தான். அவன் வேல் பெரிய மண்டையோட்டில் முட்டித் தெறித்தது. யானை நிலைதடுமாறி பிளிறலோசை எழுப்ப அவன் அதன் கழுத்தில் வேலை இறக்கிச் சுழற்றி அதன் மூச்சுக்குழாய்களை தொடுத்து இழுத்து நீட்டியபடி அப்பால் பாய்ந்து வேலைச்சுழற்றி விடுவித்துக்கொண்டு மறுபுறம் துரியோதனனும் பீமனும் கதை முட்டிக்கொள்வதை பார்த்தான்.

பீமன் சீற்றம் கொண்டிருந்தான். மாறாக துரியோதனன் ஆழ்ந்த துயரும் அதன் விளைவான அமைதியும் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் மோதத் தொடங்கியபோது துச்சாதனனும் துர்மதனும் துச்சகனும் அவர்களை சூழ்ந்துகொண்டு பின்காப்பளித்தனர். வேலை ஊன்றி நின்று பீலன் அவர்களின் போரை கண்டான். பீமன் கொக்கரித்தபடி, ஆர்ப்பரித்தபடி துரியோதனனை அறைந்தான். துரியோதனன் அந்த அடிகளை தன் கதையால் இயல்பாக வாங்கி அவ்விசையை திசைமாற்றி ஒழுக்கி தன் கதையைச் சுழற்றி அவனை அறைந்தான். துரியோதனன் மேல் விழும்போது அந்த அறைகள் மென்மையான பஞ்சுப்பொதிகளால் நிகழும் போரெனத் தோன்றிய விந்தையை பீலன் உணர்ந்தான்.

மேலும் மேலும் வெறிகொண்டு கூச்சலிட்டு தேர்விளிம்புகளிலும் புரவிப்பிடரிகளிலும் மிதித்துத் தாவி காற்றிலெழுந்தும், கைவிடு வீச்செனச் சுழற்றியும் பீமன் துரியோதனனை தாக்கினான். கண்கூடாகவே துரியோதனன் ஆற்றல்கொள்வதை உணர முடிந்தது. துரியோதனன் பாறை போலவும் பீமன் அதில் அலைத்தொழுகும் நீர்போலவும் தோன்றினர். என்ன நிகழ்ந்ததென்று அறியாக் கணத்தில் பீமன் துரியோதனனின் அறைபட்டு பின்னால் சென்று விழுந்தான். அவன் நெஞ்சக்கவசம் அருகே விழுந்தது. அவன் இருமியபடி புரள துரியோதனனின் அடுத்த அறை அவன் அருகே மண்ணில் பதிந்தது.

ஆனால் மேலும் உருளவியலாமல் கவிழ்ந்த தேர்த்தண்டு ஒன்றில் பீமன் முட்டிக்கொண்டான். துரியோதனனிடமிருந்து வஞ்சினமோ சினமறைதலோ எழக்கூடுமென பீலன் எண்ணினான். ஆனால் அவன் கதையைச் சுழற்றி தலைக்குமேல் தூக்கியகணம் அனிலை கனைத்தபடி பாய்ந்து சென்று துரியோதனனை முட்டித் தூக்கி அப்பால் வீசியது. அவன் புரண்டு எழுந்து கதையை எடுக்க காற்றில் பாய்ந்தெழுந்து அவன் நெஞ்சை தன் தலையால் அறைந்தது. அவன் தெறித்துவிழுந்து கதையைத் தூக்கியபடி எழ பீலன் தன் வேலால் அவன் நெஞ்சில் குத்தி கவசத்தை உடைத்தான்.

கூச்சலிட்டபடி கௌரவர் பீலனை சூழ்ந்துகொண்டார்கள். அம்புகள் நான்கு பக்கமிருந்தும் அவன்மேல் பொழிய ஐந்து கதைகள் அவனுக்குச் சுற்றும் சுழன்றன. அவன் தன் வேலை நிலத்திலூன்றி அதிலேறி காற்றிலெழுந்து அப்பால் சென்று விழுந்தான். அனிலை துச்சலனை முட்டித் தூக்கி அப்பால் எறிந்தது. கதையுடன் வந்த கௌரவ மைந்தன் சாம்யனை கழுத்துநாளத்தைக் கடித்து தூக்கி உதறி கீழே போட்டது. குருதித்துளிகள் சிதறும் மூச்சுடன் அவர்களை நோக்கி திரும்பி நின்றது. “அனிலை, போதும்… வந்துவிடு… வா!” என பீலன் கூவினான். “வந்துவிடு… வா…

வந்துவிடு” என்று நெஞ்சிலறைந்து கூச்சலிட்டான். துரியோதனனின் அறைபட்டு அது விழுந்து இறக்கப்போகிறது என எண்ணினான்.

ஆனால் கௌரவர்கள் அதன் வெறிகண்டு அஞ்சி பின்னடைந்தனர். அக்கணம் இருபக்கமிருந்தும் கேடயமேந்திய யானைகள் வந்து அனிலையை அவர்களிடமிருந்து பிரித்தன. தலைதாழ்த்தி பிடரி சிலிர்க்க நின்ற அனிலை திரும்பி பீலனை பார்த்தது. தன்னை அது அடையாளம் காணாததுபோல் தோன்ற அவன் தயங்கி நின்றான். மெல்ல அருகணைந்து அவன் அதன் கடிவாளத்தை பற்றினான். அது பெருமூச்சுவிட்டது. “அன்னையே!” என்றான் பீலன். அதன் விழிகள் மாறுபட்டன. “அன்னையே, என் தெய்வமே!” என்று அவன் மீண்டும் அழைத்தான். மெல்ல அதன் விலாமேல் கையை வைத்தான். அது மெல்ல உடல்சிலிர்த்தபடி தலைதாழ்த்தியது.

பீமன் எழுந்து நின்று அவனிடம் “அது பாஞ்சாலப் படைப்பிரிவை சேர்ந்ததா?” என்றான். “ஆம், அரசே. அவள் பெயர் அனிலை. ஆணறியா கன்னி. கொற்றவையின் முழுதியல்புகள் அமைந்தவள். வெல்லமுடியாத விசைகொண்டவள்” என்று அவன் சொன்னான். பீமன் தன்னைப் பாராட்டி ஏதேனும் சொல்வான் என அவன் எதிர்பார்த்தான். ஆனால் பீமன் சிவந்த விழிகளும் விம்மும் நெஞ்சும் கொண்டிருந்தான். அவன் விழிநோக்கி சொல்லெடுக்கத் தயங்கினான். திரும்பிச்சென்றபோது அவன் காலடிகள் நிலைகொள்ளவில்லை என்பதை அவன் கண்டான்.

அவனருகே நின்றிருந்த காவலர்தலைவன் “உன் படைப்பிரிவு எது?” என்றான். அவன் சொல்வதற்குள் “ஓடு… இனி இளைய பாண்டவர் கண்முன் நிற்காதே. நீ இனி உயிருடன் திரும்பவியலாது” என்றான். “ஏன்?” என்றான் பீலன். “ஏனென்றால் நீ வெறும் வீரன்… செல்க!” என்றான் காவலர்தலைவன். பீலன் புரவிமேல் ஏறிக்கொண்டபோது படையணியைக் கிழித்து அருகணைந்த அவனுடைய காவலர்தலைவன் “படைமுகப்புக்குச் செல்க! அங்கே பீஷ்மருக்கு எதிர்நிற்க புரவிவேலவர் தேவை” என்றான். ஒருகணத்திற்குப் பின் புரிந்துகொண்டு பீலன் புன்னகைத்தான்.

படைமுகப்பில் பீஷ்மருக்கும் அர்ஜுனனுக்கும் கடும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. பீஷ்மரிடமிருந்து பின்னடைந்து அர்ஜுனன் விலக அவரை பாஞ்சாலப் படைகள் வந்து சூழ்ந்துகொண்டன. தொலைவில் கௌரவர்களுடன் கடோத்கஜன் போரிட்டுக்கொண்டிருந்தான். அபிமன்யூ ஜயத்ரதனுடன் போரிட சுருதகீர்த்தியுடன் பூரிசிரவஸ் வில்கோத்திருந்தான். பீலன் ஒரே கணத்தில் அந்தப் போர் மீதான அனைத்து ஆர்வத்தையும் இழந்தான். அவன் உளச்சோர்வை புரவியும் அடைந்தது. கால்களை நீட்டி வைத்து அது மெல்ல நடந்தது. அவன் கவசங்கள்மேல் உலோகக் கலத்தில் மழைத்துளிகள் என அம்புகள் வந்து விழுந்துகொண்டே இருந்தன.

பீஷ்மரின் அம்புகளால் பாண்டவர்களின் தேர்ப்படை சிதறுண்டுகொண்டிருப்பதை அவன் கண்டான். மிகப் பழகிய ஏதோ சடங்கிலென வீரர்கள் தேரில் வில்குலைத்து அவர் முன் சென்று அம்பேற்று ஓசையின்றி துடித்து விழுந்துகொண்டிருந்தார்கள். நாணொலியுடன் அவரை துருபதரும் சத்யஜித்தும் எதிர்கொள்ள பாஞ்சால இளவரசர்களான பிரியதர்சனும் உத்தமௌஜனும் பாஞ்சாலப் படையுடன் துணைவந்தனர். கிராதர்களின் விற்படையை நடத்திய சுமித்ரனும் பாஞ்சால்யனும்

வந்துசேர்ந்துகொண்டார்கள். சத்ருஞ்ஜயனும் சுரதனும் தங்கள் படையுடன் வந்து இணைந்துகொள்ள பீஷ்மர் அவர்களை எதிர்த்தார்.

பீஷ்மர் பின்னடையத் தொடங்குவதை பீலன் கண்டான். அவரால் அவர்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பை நேர்கொண்டு நிற்க இயலவில்லை. அவர்கள் அனைவரும் நோக்குக்கு ஒன்றுபோலிருந்தனர். உடன்பிறந்தார் இணையும்போது பிழையின்றி ஒன்றாக முடிகிறது. ஒற்றைப் பேருருக்கொண்டு எழ இயல்கிறது. மேலும் மேலும் கொம்போசைகள் எழுந்தன. அனுபநாட்டு மூதரசர் விருத்தஷர்மரும் அவர் மைந்தர் வசுதனனும் இளையோன் நீலனும் வந்து சூழ்ந்தனர். தொடர்ந்து மேற்கு நிஷாதஅரசின் ஹிரண்யநாபனையும் அவன் இளையோன் ஹிரண்யபாகுவையும் மைய நிஷாதநிலத்து அரசர் மணிமானையும் அவர் மைந்தர் மணிகர்ணனையும் கீழ்நிஷாதநிலத்து அரசர் தண்டதரனையும் அவர் மைந்தர் சார்ங்கதரனையும் பீலன் கண்டான்.

அவர்கள் அந்தத் தருணத்தை முன்னரே வகுத்திருக்கவில்லை. ஆகவே அது இயல்பாக உருவானபோது வெறிகொண்டார்கள். ஒருவரை ஒருவர் நோக்கி கூச்சலிட்டும் நாணொலி எழுப்பியும் பீஷ்மரை சூழ்ந்துகொண்டனர். அவர்களின் கொம்போசைகள் ஓநாய்க்கூட்டத்தின் அழைப்பொலிபோல் ஒலிக்க மேலும் மேலும் என அரசர்கள் வந்து பீஷ்மரை சூழ்ந்தனர். உத்தரமல்லநாட்டு தீர்க்கபிரக்யரின் மைந்தர் தீர்க்கதந்தரும் வந்து சேர்ந்துகொண்டார். அரக்கர் குலத்தலைவர்கள் வக்ரசீர்ஷரும் காகரும் வந்தனர். அம்புகளை எதிர்கொள்ளவியலாமல் பீஷ்மர் மேலும் பின்னடைந்தார். அவர்களுக்கு அப்பின்னடைதல் மேலும் விசைகூட்டியது. பீஷ்மரின் கவசங்கள் உடைந்தன. அவருடைய வில் உடைய இருமுறை அவர் வில்மாற்றிக்கொண்டார்.

பீஷ்மருக்குப் பின்னாலிருந்து சங்கொலியுடன் துரோணர் தோன்றினார். நீண்ட வில் தலைக்குமேல் எழுந்து நிற்க, வலக்கை சுழன்று அம்புகளை எடுக்க, நாண் துடிக்க அம்புகள் எழுந்து பறக்க, தேரில் அணுகிவந்த துரோணரைக் கண்டதும் பீஷ்மரை எதிர்த்தவர்கள் திகைத்தனர். ஒருகணம் காற்று நின்றுவிட பறந்துகொண்டிருந்த துணித்திரை அமைவதுபோல அவர்களின் ஊக்கம் அணைவதை பீலன் கண்டான். துரோணரின் பிறையம்பு சென்று தைத்து பாஞ்சால இளவரசன் பிரியதர்சன் தலையறுந்து தேர்த்தட்டில் விழுந்தான். துருபதர் அலறியபடி வில்லை நழுவவிட்டார். பாஞ்சாலர்கள் அனைவருமே திகைப்படைந்தனர். அடுத்த கணமே பாஞ்சால இளவரசன் உத்தமௌஜனும் நெஞ்சில் துரோணரின் அம்பு ஏற்று விழுந்தான்.

துருபதர் வெறியுடன் அலறியபடி துரோணரை எதிர்த்தார். சத்யஜித்தும் சுமித்ரனும் பாஞ்சால்யனும் சத்ருஞ்ஜயனும் சுரதனும் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். பீஷ்மர் பிறரை எதிர்த்து அம்புகளால் அறைந்தபடி முன்னெழுந்தார். உத்தரமல்லநாட்டு தீர்க்கபிரக்யரின் மைந்தன் தீர்க்கதந்தன் அலறியபடி பீஷ்மரை நோக்கி வர அவ்விசையிலேயே அவன் தலை அறுந்து பின்னால் சென்றது. அரக்கர் குலத்தலைவர்கள் வக்ரசீர்ஷரும் காகரும் பீஷ்மரின் அம்புகளால் வீழ்ந்தனர். அனுபநாட்டு மூதரசர் விருத்தஷர்மரும் அவர் மைந்தர் வசுதனனும் இளையோன் நீலனும் சங்கோசையுடன் பீஷ்மரை எதிர்கொள்ள மேற்கு நிஷாதஅரசின் ஹிரண்யநாபனும் அவன் இளையோன் ஹிரண்யபாகுவும் அஞ்சி தேரில் பின்னடைந்தனர்.

ஆனால் அம்புகளால் தன்னை எதிரிட்டவர்களை தடுத்தபடியே பீஷ்மர் திரும்பி அவர்களையும் தாக்கினார். விரிசிறை அம்புகள் காற்றிலெழுந்து மிதப்பவைபோல ஒழுகி அறுபட்டவை என இறங்கின. ஹிரண்யநாபன் அம்புபட்டு தேரிலிருந்து

விழுந்தான். தன் தேரிலிருந்து பாய்ந்து அப்பால் நின்ற புரவியில் ஏறிக்கொண்ட ஹிரண்யபாகுவும் கழுத்தில் அம்பு தைத்து பக்கவாட்டில் விழுந்தான். நிஷாதநிலத்து அரசர் மணிமானையும் அவர் மைந்தர் மணிகர்ணனையும் பீஷ்மர் கொன்றார். கீழ்நிஷாதநிலத்து அரசர் தண்டதரனையும் அவர் மைந்தர் சார்ங்கதரனையும் மறுகணமே வீழ்த்தினார்.

எஞ்சியவர்கள் மேலும் அழுந்தி செறிந்து வளைந்து பின்னடைய பீஷ்மரைச் சூழ்ந்து வெற்றிடம் உருவானது. அதில் தனித்துவிடப்பட்டவர்களாக அனுபநாட்டு மூதரசர் விருத்தஷர்மரும் அவர் மைந்தர் வசுதனனும் இளையோன் நீலனும் திகைத்தனர். நீலன் அம்புபட்டு விழ வசுதனன் தன் தேரை பின்னடையச் செய்யும்படி பாகனிடம் ஆணையிட்டான். பாகன் தேரை பின்னெடுப்பதற்குள் அவன் தலை அறுபட்டு தொங்கியது. வசுதனன் பாய்ந்து தரையிலிறங்கி பின்நிரை நோக்கி ஓடுவதற்குள் அவன் கழுத்தில் நீளம்பு குத்தி நின்றது. தன் வில்லை தேர்த்தட்டில் வைத்து கைகளைத் தூக்கிய விருத்தஷர்மரை பீஷ்மரின் அம்பு அறைந்து தெறிக்கச் செய்தது.

தன் விழிகளில் ஒன்றால் நிகழ்வதை நோக்குகையிலும் மறுவிழியால் களம்பார்த்து பீலன் போரிட்டுக்கொண்டிருந்தான். அனிலை தன் இலக்குகளை அதுவே தெரிவுசெய்து பாய்ந்து சென்று தாக்கித்திரும்பி சுழன்றெழுந்தது. சுமித்ரன் துரோணரின் அம்பை நெஞ்சிலேற்று வீழ்ந்தான். “மூத்தவரே, திரும்புக… போதும்!” என சத்யஜித் கூவ துருபதர் தன் மைந்தரிடம் திரும்பும்படி ஆணையிட்டார். துரோணர் அதை உணர்ந்து முழுவிசையுடன் முன்னெழுந்து சென்று சத்ருஞ்ஜயனைத் தாக்கி வீழ்த்தினார். சுரதனும் பாஞ்சால்யனும் தேர்களை பின்னடையச் செய்தனர். தேர்கள் ஒன்றை ஒன்று முட்டி அசைவிழக்க சுரதன் துரோணரின் அம்பை ஏற்று தேரிலிருந்து ஒருக்களித்து கீழே விழுந்தான்.

பின்னணியில் முரசுகள் முழங்கிக்கொண்டே இருந்தன. அவை துணைகோரும் அழைப்புகள் என பீலன் உணர்ந்தான். பாஞ்சாலப் படைகளுக்குள்ளிருந்து திருஷ்டத்யும்னன் நாணொலி எழுப்பியபடி களத்திற்கு வந்து துரோணரை எதிர்கொண்டான். திருஷ்டத்யும்னனின் அம்பு துரோணரின் தோளை தைத்தது. அவர் அதை பொருட்படுத்தாமல் பாஞ்சால்யனையும் வீழ்த்திவிட்டு அவனை எதிர்த்தார். துருபதர் கதறியழுதபடி தேர்த்தட்டில் அமர்ந்தார். திருஷ்டத்யும்னன் வெறிக்கூச்சலிட்டபடி துரோணரை எதிர்த்து அம்புகளால் அறைந்து அறைந்து பின்னால் கொண்டுசென்றான். அவர்களிருவரும் கௌரவப் படைவிரிவுக்குள் மூழ்கி அப்பால் சென்றனர்.

சாத்யகியும் அபிமன்யூவும் இருபுறங்களிலுமிருந்து எழுந்துவந்து பீஷ்மரை எதிர்த்தனர். பீலன் அனிலையை முன்னெழச்செய்து பீஷ்மருக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த வில்லவர்களை எதிர்த்தான். அனிலை பாய்ந்தெழுந்து முன்செல்ல அவனுடைய வேல் தேரில் நின்றவர்களை அறைந்து வீசியது. மிக அண்மையில் சென்றுவிட்டிருந்தமையால் அவர்களின் அம்புகள் எழுந்து அனிலையையும் பீலனையும் தாக்க முடியவில்லை. உடல்முழுக்க குருதியுடன் களத்தில் நின்ற அனிலை அவர்களனைவரையும் அச்சுறுத்தியது. ஒருவன் “நோக்குக! அது குருதி குடிக்கிறது! குருதியை நக்கிக்குடிக்கிறது!” என்று கூவினான். சூழ்ந்திருந்தவர்கள் அஞ்சி கூச்சலிட்டனர். “பேய் வடிவு! குருதியுண்ணும் கானகப்பேய் இது!” என்று ஒருவன் அலறினான்.

அனிலை பசுங்குருதியை விரும்பி குடிப்பதை பீலன் களம் வந்த முதல்நாளே கண்டிருந்தான். போர் முடிந்தபின் அந்தியில் அதை கொண்டுசெல்கையில்

தலைதிருப்பி தன் உடலின் குருதியை அது நக்கியதை கண்டான். பின்னர் போரிலும் அது வீழ்ந்தவர்களை கழுத்தில் கடித்து குருதியை உறிஞ்சுவதை உணர்ந்தான். களத்தில் புரவிகள் நான்கு நாழிகைப்பொழுதுக்குமேல் போரிடுவதில்லை. அவற்றை பின்னடையச் செய்து வெல்லமும் மாவும் கரைத்த நீர் அளித்த பின்னரே மீண்டும் களத்திற்கு கொண்டுவருவார்கள். அனிலை பசியும் விடாயுமில்லாமல் பகல் முழுக்க போர்க்களத்தில் நின்றிருப்பது குருதியையே உணவென அருந்துவதனால்தான்.

நேர் எதிரில் காம்போஜ மன்னன் சுதக்ஷிணனை பீலன் கண்டான். அவனுடைய படைவீரர்கள் அனிலையை சுட்டிக்காட்டி அவனிடம் கூவ அவன் வில்லைத் தாழ்த்தி அதை நோக்கினான். பின்னர் நாணொலி எழுப்பியபடி அனிலையை நோக்கி வந்தான். எதிரே நின்ற இரு புரவிவீரர்களை வீழ்த்தியபடி அனிலை அவனை நோக்கி சென்றது. சுதக்ஷிணனின் அம்புகள் அதன் கவசங்களின் மேல் பட்டுத் தெறித்தன. அம்புகள் எழுகையிலேயே திசைகணித்து ஒழியவும் கவசப்பரப்பைக் காட்டி தடுக்கவும் அனிலை அறிந்திருந்தது. சுதக்ஷிணனின் அம்பு தோளில் அறைய பீலன் புரவியிலிருந்து கீழே விழுந்தான்.

ஆனால் குன்றாவிசையுடன் உறுமியபடி மேலெழுந்த அனிலை பாய்ந்து சுதக்ஷிணனின் தேரின் புரவிகளின்மீது கால்வைத்தேறி தேர்த்தட்டில் நின்றிருந்த அவனை முட்டி அப்பாலிட்டது. அவன் எழுவதற்குள் எடைமிக்க குளம்புகளுடன் அவன் மேல் பாய்ந்தது. அவன் புரண்டு எழுந்து தன் வேலை எடுப்பதற்குள் பீலன் தன் நீள்வேலால் அவன் நெஞ்சில் அறைந்தான். சுதக்ஷிணன் நிலைதடுமாறி சரிய அவன் தலைக்கவசம் விழுந்தது. கனைத்தபடி அனிலை அவன் கழுத்தைக் கவ்வி தூக்கிச் சுழற்றி உதறி அப்பாலிட்டது. முகத்தில் வழிந்த குருதியை நக்கியபடி அது திரும்ப எதிரே பீஷ்மரின் தேர் வந்தது. அனிலை உறுமலோசை எழுப்பியபடி பிடரி உலைத்து தலைதூக்கி பீஷ்மரை நோக்கி திமிர்த்த அசைவுகளுடன் சென்றது. பீஷ்மர் அதை வெறித்த கண்களுடன் நோக்கினார். அவர் கையிலிருந்த வில் தழைந்தது.

அவருடன் போரிட்டுக்கொண்டிருந்த அபிமன்யூ “வில்லெடுங்கள், பிதாமகரே… இன்றே முடித்துவிடுவோம் இவ்வாட்டத்தை!” என்று கூவியபடி அவரை தாக்கினான். பீஷ்மர் மெல்லிய குரலில் ஆணையிட அவருடைய தேர்ப்பாகன் தேரை கௌரவப் படைகளுக்குள் கொண்டுசென்றான்.

### பகுதி ஏழு : காற்றன்

தெற்கெல்லையின் பன்னிரண்டாவது காவலரணின் காவலர்தலைவனாகிய சந்திரநாதன் அவனே தன்னை காணும்பொருட்டு வந்தது துர்மதனுக்கு வியப்பை அளித்தது. தெற்கு விளிம்பில் அமைந்த தன் பாடிவீட்டில் அவன் அன்றைய போரின் அறிக்கையை கேட்டுக்கொண்டிருந்தான். அவன் உடலின் புண்களுக்கு மருந்திட்டு வேது அளித்துக்கொண்டிருந்தனர் மருத்துவர். சிறு அம்புகளை அவர்கள் பிடுங்கும்போது அவன் முனகினான். அறைக்குள் கந்தகநீரின் எரிமணம் நிறைந்திருந்தது. சூழ்ந்து நின்றிருந்த படைத்தலைவர்கள் தங்கள் படைகளின் அழிவை அறிவித்துக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவரும் தங்கள் படைகளின் அழிவையும் எச்சத்தையும் அறிவித்தனர். எட்டு காலாட்படையினருக்கு ஒரு வில்லவர் என களம்பட்டிருப்பதை அவன் பார்த்தான்.

விழிகளை சுருக்கியபடி “காலாட்படையினரின் இறப்பின் மடங்கு பெரிதாக உள்ளதே?” என்றான். “எப்போதுமே அவ்வாறுதான். நான்கு மடங்கு என்பது கணக்கு. இப்போது சற்று மிகுதி” என்று படைத்தலைவனாகிய துர்வீரியன் சொன்னான். துர்மதன் “எட்டு மடங்கு எனில் அதை நாம் புறக்கணிக்க முடியாது” என்றான். “அது உளச்சோர்வை உருவாக்கும். காலாட்படையினர் மிக எளிதில் அஞ்சி பின்னகரக்கூடும்.”

பிறிதொரு படைத்தலைவனாகிய உஜ்வலன் “அரசே, வில்லவர்கள் படைத்தொழில் பயின்றவர்கள். விரைந்துசெல்லும் தேரில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களிடையே இடைவெளி இருப்பதனால் அகலவும் இயலும். எனவே அவர்கள் களத்தில் அம்புகளிலிருந்து தங்களை காத்துக்கொள்ள முடியும். காலாட்படையினர் குறைந்த பயிற்சி பெற்றவர்கள். மேலும் அவர்கள் ஒருவரோடொருவர் நெருங்கி களம் செல்கிறார்கள். எழுந்து பொழியும் அம்பு மழையிலேயே அவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்துவிடுவதுண்டு” என்றான்.

துர்மதன் “அவர்கள் கவசங்கள் அணிந்துகொள்கிறார்களே?” என்றான். “ஆம், பெரும்பாலும் அவை எருமைத்தோல் கவசங்கள். அரிதாகவே இரும்பு. அம்புகளிலிருந்து அவை ஓரளவே காக்கும்” என்றான் துர்வீரியன். துர்மதன் “இதற்கு ஏதேனும் செய்தாகவேண்டும். மூத்தவரிடம் பேசுகிறேன். காலாட்படையினர் மேலும் சற்று இடைவெளி விட்டு அகன்று வரலாம். அவர்களுக்கு சிறந்த கவசங்கள் அளிக்கப்படலாம்” என்றான். துர்வீரியன் “போர் தொடங்கி இது ஏழாவது நாள். இனிமேல் கவசங்களுக்கோ புதிய படைக்கலங்களுக்கோ நாம் ஒருங்கு செய்ய இயலாது” என்றான்.

அப்போதுதான் ஏவலன் வந்து தெற்கெல்லைக் காவலரணின் தலைவன் சந்திரநாதன் வந்திருப்பதாக சொன்னான். துர்மதன் “தெற்கெல்லைக் காவலனிடமிருந்து தூதா?” என்றான். “தூதல்ல அரசே, அவரே வந்திருக்கிறார்” என்றான் ஏவலன். “அவனேவா? காவலரணை விட்டுவிட்டா?” என்றபடி எழுந்த துர்மதன் படைத்தலைவரிடம் கையசைத்துவிட்டு அவனே வெளியே வந்தான். தெற்கெல்லைக் காவலன் அருகே வந்து வணங்கி “அரசரைப் பார்த்து செய்தி ஒன்றை அளிக்கவேண்டும். அதன் பொருட்டே வந்தேன். இங்கு தாங்களிருப்பதை அறிந்தேன்” என்றான். “சொல்க!” என்றான் துர்மதன்.

“அரசே, விதர்ப்ப நாட்டு அரசர் ருக்மி தன் படைகளுடன் கிளம்பி வந்திருக்கிறார். நம்முடன் சேரவிழைகிறார். அரசரிடம் அளிக்கும்பொருட்டு என்னிடம் ஓர் ஓலை அளித்திருக்கிறார்” என்றான் சந்திரநாதன். முதலில் துர்மதனுக்கு அவன் சொல்வதென்ன என்று புரியவில்லை. “யார்?” என்று மீண்டும் கேட்டான். குழம்பி “அவரா? ஆனால் விதர்ப்ப நாட்டு அரசர் பீஷ்மகர் அல்லவா?” என்றான். காவலன் “அறியேன். ஆனால் விதர்ப்ப நாட்டு அரசருக்குரிய முத்திரை ஓலையுடன் வந்திருக்கிறார்” என்றான். துர்மதன் ஒருகணம் தயங்கி “அவர் எங்கிருக்கிறார்?” என்றான். “தெற்கெல்லை காவல்மாடத்திலேயே காத்திருக்கிறார்” என்றான். “அவரது படைகள்?” என்றான் துர்மதன். “அவை மூன்று நாழிகைத் தொலைவுக்கு அப்பால் காத்திருக்கின்றன” என்றான் சந்திரநாதன்.

துர்மதன் பொறு என்று கைகாட்டி தன் பாடிவீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த படைத்தலைவரிடம் “படைத்தலைவர்கள் மூவர் தெற்கெல்லைக்கு செல்க! அங்கு விதர்ப்ப நாட்டு படை மூன்று நாழிகை அப்பால் நின்றுள்ளது. அது தான் நின்றிருக்கும் இடத்திலிருந்து ஓர் அடிகூட முன்னகரக்கூடாது. நமது தொலைவில்லவர்கள் காவல் மாடங்களிலும் அரண்களிலும் காத்து நிற்கட்டும். வில்

அணியும் விரைவுப்புரவி அணியும் ஒருங்கி நிற்கவேண்டும்” என்று ஆணையிட்டான். அவர்கள் தலைவணங்கினர். அவர்கள் குழப்பமடைந்திருப்பது தெரிந்தது.

துர்மதன் வெளியே வந்து “அவரை அழைத்து வா!” என்றான். “அரசரை பார்த்துவிட்டு...” என்று சந்திரநாதன் தயங்க “வேண்டியதில்லை. அவரே அரசரிடம் பேசட்டும். இன்னும் சற்று நேரத்தில் படைசூழ் அமர்வு நிகழவிருக்கிறது. அரசர் அரியணையில் அமர்ந்து அவை கேட்பார். அதில் விதர்ப்பரே தன்னுடைய சொற்களை உரைக்கட்டும்” என்றான். காவலன் தலைவணங்கி கிளம்ப “பொறு” என்று துர்மதன் மீண்டும் சொன்னான். “அவரை நானே வந்து அழைத்து வருவதுதான் முறை. அவர் அரசர்” என்றான். சந்திரநாதன் “ஆம்” என்றான்.

துர்மதன் சென்று தன் புரவியிலேறிக்கொண்டான். சந்திரநாதனை தன்னை தொடரச் சொல்லிவிட்டு படைகள் நடுவே அமைந்த பலகைகள் விரவிய விரைவுப்பாதையில் புரவிக்குளம்படி தாளம் எழுப்ப விரைந்து சென்றான். செல்லும் வழியெல்லாம் அவன் உள்ளம் குழம்பிக்கொண்டிருந்தது. திரும்பிச்சென்று துச்சகனை அழைத்து வந்தாலென்ன என்று எண்ணினான். ருக்மியுடன் அணுக்கமான கௌரவன் அவன்தான். ருக்மியை இறுதியாக எப்போது பார்த்தோம் என எண்ணிப்பார்த்தான். உள ஓவியம் திரளவில்லை.

தெற்கெல்லையை அவர்கள் அடைந்தபோது புரவிகள் வியர்த்து மூச்சிறைத்துக்கொண்டிருந்தன. துர்மதன் இறங்கி தொடர்ந்து வந்த காவலனிடம் “அவர் எங்கிருக்கிறார்?” என்றான். திரும்பிவிடலாமா என்னும் எண்ணம் அப்போதும் ஏற்பட்டது. “காவலரணின் கீழ் அறையில்” என்றான் சந்திரநாதன். “நன்று” என்றபின் துர்மதன் தன் ஆடைகளை சீர்படுத்தியபடி சென்று காவலரணின் வாயிற்காவலனை அணுகி கைகளாலேயே அவனை விலகிப்போகும்படி காட்டிவிட்டு சிற்றறைக்குள் நுழைந்தான்.

அவைகளில் பார்த்திருந்தாலும்கூட அங்கே அமந்திருந்த முனிவர்தான் ருக்மி என்று புரிந்துகொள்ள சற்று பிந்தியது. நெஞ்சுக்குக் கீழ் தழைந்த செந்தழல் தாடியும், தோள்களில் இறங்கி இடைவரைக்கும் சென்ற சடைவிழுதுகளும், மெலிந்து ஒட்டிய முகமும், சினந்தவைபோல் கூர்கொண்டிருந்த விழிகளும், சற்றே கூன் விழுந்த நெடிய உடலும் கொண்ட அவரை ஒரு நாட்டின் அரசர் என்று எண்ணி கொண்டுசென்று பொருத்துவது இயலாததாக இருந்தது. துர்மதன் நெஞ்சில் கைகுவித்து வணங்கி “விதர்ப்பத்தின் அரசரை வணங்குகிறேன். நான் அஸ்தினபுரியின் பேரரசர் துரியோதனருக்கு இளையோனாகிய துர்மதன். அஸ்தினபுரியின் படை எல்லைக்குள் தாங்கள் வந்தது எங்கள் பேறு” என்றான்.

ருக்மி மறுமுகமன் எதுவும் உரைக்காமல் “நான் உமது மூத்தவரை பார்க்க விழைகிறேன், அதன் பொருட்டே வந்தேன்” என்றான். “இன்னும் இரு நாழிகையில் அவரது பாடிவீட்டிலேயே படைசூழ்கை அமர்வு நிகழும். அவர் அமர்ந்து சொல் கேட்பார். தாங்கள் அங்கு வந்து அவையிலேயே அவரிடம் பேசலாம்” என்றான் துர்மதன். ருக்மி ஒருகணம் எண்ணியபின் “அவையிலென்றால்...” என முனகி “அதுவும் நன்று” என்றான். “தங்கள் படைப்பிரிவுகள் இப்போதிருக்கும் இடத்திலேயே இருப்பது நன்று. மூத்தவரின் ஆணை வரை” என்றான் துர்மதன். “ஆம், அவை அங்கிருக்கும். நான் என் படைகளுடன் கௌரவதரப்பில் நின்று போரிட வந்துள்ளேன்” என்றான் ருக்மி.

துர்மதன் “ஆனால் தங்கள் தந்தை பாண்டவர்களை ஆதரிக்கிறார். தங்கள் உடன்பிறந்தாரான ருக்மரதரும் ருக்மகேதுவும் ருக்மபாகுவும் ருக்மநேத்ரரும்

மறுதரப்பில் இருக்கிறார்கள்” என்றான். “ஆம், அவர்கள் என்னுடன் இல்லை. நான் எனக்குரிய நிலத்தை பகுத்துக்கொண்டு நெடுநாட்களாகின்றன. குண்டினபுரிக்குள் நான் நுழைவதில்லை. போஜகடகத்தை தலைநகராகக்கொண்டு ஆள்கிறேன்” என்ற ருக்மி “கிளம்புவோம்” என்று எழுந்தான்.

துர்மதன் தெளிவுற நினைவுகூரமுடியாமல் தலையை விரல்களால் தட்டி “முதலில் தங்கள் தந்தை பீஷ்மகரும் தாங்களும் இங்கே எங்களுடன் சேர்வதாகத்தானே சொன்னார்கள்?” என்றான். “ஆம், ஆனால் அவருடனிருக்கும் குலத்தலைவர்கள் பன்னிருவரும் ஒரே குரலில் பாண்டவர்களிடம் சென்று சேரவேண்டும் என்றே சொன்னார்கள். தந்தைக்கு வேறுவழியில்லை” என்றான் ருக்மி. “ஆனால் அவருடைய சொல் என்னை கட்டுப்படுத்தாது. என் படைகள் வேறு.” உள்ளம் நிலையழிந்திருந்தமையால் அவன் செயற்கையான உரத்த குரலில் பேசினான்.

துர்மதன் ருக்மியின் பதற்றத்தை விந்தையாக நோக்கியபடி “வேறு எங்கிருந்து படைதிரட்டினீர்கள்?” என்றான். ருக்மி “என் எல்லைக்கு அப்பாலிருந்தும் படைதிரட்டினேன். ஆகவேதான் இத்தனை பிந்தினேன்… குலத்தலைவர்களில் மூவர் என்னுடன் இருக்கிறார்கள்” என்றான். ஏவலன் அருகே வந்து தலைவணங்க துர்மதன் திரும்பி ருக்மியிடம் “தங்களுக்கான தேர்…” என்றான். “தாழ்வில்லை. புரவியில் செல்வதே விரைவு” என்றான் ருக்மி. “நெடுந்தொலைவு. அங்கு சென்றபின் தாங்கள் களைத்து அவையில் அமரமுடியாமலாகலாம்” என்றான் துர்மதன். “நான் களைப்படைவதில்லை” என்று ருக்மி சொன்னான்.

ருக்மி விட்டிலொன்று தாவுவதுபோல புரவியிலேறிக்கொண்டான். புரவியில் உடன் செல்கையில் துர்மதனுக்கு அவனுக்கு கதை பயிற்றுவிக்கையில் துரோணர் சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன. “உள்ளத்தின் விசையை உடல் தவறவிட்டு நின்றுவிடுகையிலேயே தசைகள் கொழுப்பேறி பருக்கின்றன. நதி விரைவழிந்து தேங்குவதுபோல. உள்ளத்தின் விசையை உடலும் அடைகையில் உடல் இருப்பதையே உள்ளம் உணராது. வாளில் பிடியே எடை மிக்கதாக இருக்கவேண்டும், உடல் உள்ளத்தை ஏந்தியிருக்கும் பீடம்.” அவன் ஓரக்கண்ணால் திரும்பி ருக்மியை பார்த்தபடி புரவியில் சென்றான்.

அவர்கள் துரியோதனனின் பாடி வீடு அமைந்த அரசவட்டத்தை அடைந்தபோது இரவு செறிந்து படைகள் முற்றமைந்துவிட்டிருந்தன. அதற்கேற்ப கலைந்து முழங்கிக்கொண்டிருந்த ஓசை சீரடைந்து மெல்லிய உள் முழக்கமென கார்வைகொண்டிருந்தது. துச்சலன் அரசவட்டத்தின் முதன்மைக்காவலரணில் இருந்தான். துர்மதன் இறங்கிச்சென்று அவனிடம் ருக்மி வந்திருப்பதை சொன்னதும் அவன் வெளியே வந்து வணங்கி முகமனுரைத்தான்.

“அவை முன்னரே கூடிவிட்டது, விதர்ப்பரே. படைசூழ்கையை பேசிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் உள்நுழைவதற்கான தருணம் எதுவென நான் சென்று கேட்டு சொல்கிறேன். அதுவரை இக்காவலரணில் தாங்கள் இளைப்பாறலாம்” என்று துச்சலன் சொன்னான். ருக்மி கைவீசி “அமரவேண்டுமென்பதில்லை” என்று காவலரணின் முதல் தூணில் சாய்ந்து நெஞ்சில் கைகளைக் கட்டியபடி தொலைவில் காடு பற்றியதுபோல் தெரிந்த படைகளை நோக்கியபடி நின்றான்.

துர்மதன் அருகே நின்று அவன் முகத்தை நோக்கினான். மானுட முகங்களில் உணர்வுகளும் எண்ணங்களும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருப்பதை அவன் கண்டிருந்தான். ஒற்றை உணர்வில் மாறாது நிலைத்த முகத்தை அப்போதுதான் பார்க்கிறான் என்று எண்ணிக்கொண்டான். என்ன உணர்வு அது? வஞ்சம்!

போர்க்களத்தில் தன் மைந்தரை இழந்து சீற்றத்துடன் வில்லேந்தி வந்த சாத்யகியின் முகமா அது? அந்த உச்சகணம் அப்படியே சிலைத்ததுபோல. இவருள் இப்போது வஞ்சம் கொந்தளித்துக்கொண்டிருக்கிறதா என்ன? எவர் மீதான வஞ்சம்?

ஒருமுறை அவன் உள்ளம் நடுங்கியது. ஒருவேளை அது மூத்தவர் மீதுள்ள வஞ்சமாக இருக்கலாம். அவைக்குள் நுழைகையில் இவருடைய படைக்கலங்கள் அனைத்தையும் அகற்றிவிடவேண்டும். என் வாளுடன் இவருக்கு மிக அருகில் நின்றிருக்கவேண்டும். மூத்தவரை நோக்கி இவர் ஓர் அடி எடுத்து வைத்தால் இந்நெஞ்சைத் துளைத்து இவரை வீழ்த்திவிடவேண்டும் என்று துர்மதன் எண்ணிக்கொண்டான். அவ்வெண்ணம் அவனை இயல்படையச் செய்ய உடலை எளிதாக்கி மூச்செறிந்தான்.

மேலும் சற்று நேரம் அவனை கூர்ந்து நோக்கியபோது அவ்வஞ்சம் அப்போது எழும் உணர்வல்ல என்றே தோன்றியது. ருக்மி தன் உதடுகளால் மெல்ல ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். சுட்டு விரலை காற்றில் சுழித்தான். உடலை நிலையழியச் செய்து மெல்ல அசைந்தான். அவ்வப்போது திரும்பி துரியோதனனின் பாடிவீடு இருக்கும் திசையை பார்த்தான். அவனுக்குள் எண்ணங்கள் மாறிக்கொண்டிருப்பதை அவ்வசைவுகள் காட்டின. அவன் நிலைகொள்ளாமலிருந்தான். ஆனால் முகத்தின் ஆழுணர்ச்சி அவ்வண்ணமே இருந்தது.

நெடுங்காலமாக மாறாது கொண்டிருக்கும் உணர்ச்சி முகமாக மாறிவிடும் என்று அவன் பயின்றிருந்தான். பீஷ்மரின் முகத்தில் உறுதியையும் விதுரரின் முகத்தில் கவலையையும் கர்ணனின் முகத்தில் அகன்று நிற்கும் தன்மையையும் அவன் கண்டது உண்டு. ஆனால் அவை ஓடைக்கு அடியில் பாறை என ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருக்கும் அன்றாட உணர்ச்சிகளுக்கு அடியில் நிலைகொண்டவை. இந்த முகத்தில் இந்த ஓர் உணர்வன்றி பிறிதேதும் இல்லை. தெய்வச்சிலைகளுக்குரிய மாறாமை. “மாறாமை என்பது தெய்வங்களின் இயல்பு. மானுடர் மாறுபவர் என்பதனால்தான் மாறாதவர்கள் தெய்வங்களாகிறார்கள். மாறா மானுடரும் தெய்வங்களே” கிருபரின் சொற்கள்.

இப்போது இவையெல்லாம் ஏன் எனக்கு நினைவுக்கு வருகின்றன என்று துர்மதன் வியந்தான். ருக்மியின் முகத்தை பார்ப்பது அவன் பதற்றத்தை பெருக்கிக்கொண்டிருந்தது. துச்சலன் அங்கிருந்து வருவதை கண்டான். ருக்மி திரும்பிப்பார்த்து தன் மேலாடையை இழுத்து சீரமைத்தான். அக்கணத்தில் சிறு அதிர்வென துர்மதன் ஓர் எண்ணத்தை அடைந்தான். இதே போன்று மாறா உணர்வில் நிலைத்த பிறிதொரு முகம் அவனுக்கு தெரிந்திருந்தது. எவர் முகம் அது? நன்கறிந்த முகம்! மாறாமையை தன் இயல்பெனக்கொண்ட தெய்வ முகம்! எவர் முகம் அது என அவன் உள்ளம் நெளிந்து துழாவித் தவித்தது.

துச்சலன் அருகே வந்து தலைவணங்கி “தாங்கள் அவை புகலாம், விதர்ப்பரே” என்றான். ருக்மி தலையசைத்து முன்னால் செல்ல துச்சலன் பின்தொடர்ந்து செல்லும்படி துர்மதனிடம் கைகாட்டினான். துர்மதன் தலைவணங்கி ருக்மியை பின்தொடர்ந்து நடந்தான். ருக்மி பாடிவீட்டின் வாயிலை அடைந்ததும் அங்கு நின்ற காவலன் தலைவணங்கி உள்ளே சென்று அவன் வரவை அறிவித்து வெளியே வந்தான். ருக்மியின் முகத்தை அப்போது நோக்கியபோது அது வஞ்சமல்ல என துர்மதன் எண்ணினான். அது பிறிதொன்று, அவன் அறியாதது.

ருக்மி உள்ளே நுழைந்தபோது வாள் தொடும் தொலைவில் துர்மதனும் சென்றான். உள்ளே சென்ற ருக்மி அவையை ஒருமுறை விழியோட்டி நோக்கிவிட்டு துரியோதனனை தலைவணங்கினான். முகமனெதுவும் உரைக்காமல் “நான் கௌரவப் படைப்பிரிவுகளுடன் சேர்ந்து போரிடும் பொருட்டு வந்துள்ளேன், தார்த்தராஷ்டிரரே” என்றான். ஒருகணத்திற்குப் பின் துரியோதனன் விழிசுருங்க “போர் தொடங்கி ஆறு நாட்கள் முடிந்துவிட்டன” என்றான். “ஆம், நான் அறிவேன். என் படைப்பிரிவுகளை திரட்டுவதற்கு பொழுதாகியது” என்றான். “ஏன்?” என்று துரியோதனன் கேட்டான்.

“தாங்கள் அறிவீர்கள் என் தந்தைக்கும் எனக்குமான பூசலை. நான் போஜகடகத்தில் தனி நாடமைத்து தனிக்கொடியும் தலைநகரும் கொண்டு ஆள்வதே அவருக்கு எதிராகத்தான். இளைய யாதவன் என்னை சிறுமை செய்து என் தங்கையுடன் சென்று முப்பத்தாறாண்டுகள் கடந்துள்ளன. அன்று முதல் இன்று வரை ஷத்ரிய அவைகளில் அமரமுடியாதவனாகிவிட்டேன். அக்கீழ்மகனின் நெஞ்சைப் பிளந்து குருதிகொள்வேன் என்று வஞ்சினம் உரைத்தேன். அச்சொற்களை அணையா விளக்கென நெஞ்சில் ஏந்தி இதுகாறும் வாழ்ந்துளேன். தந்தையும் அன்று என் உணர்வுகளை புரிந்துகொண்டார். ஆனால் அவர் யாதவனுடன் போரிட விதர்ப்பத்தால் முடியாது என்னும் எண்ணம் கொண்டிருந்தார்.”

“அரசே, மீளமீள அரச அவைகளில் யாதவனுக்கு பெண்ணளித்தவர் என்று என் தந்தை சிறுமை செய்யப்பட்டார். ஆயினும் காலம் எளிதில் அனைத்தையும் மறக்க வைக்கிறது. இன்று அவர் அவர்களை ஆதரிக்கிறார். தன் மைந்தர்கள் நால்வரை அவர் பாண்டவர்களுக்கு ஆதரவாக படைகளுடன் அனுப்பியிருக்கிறார். நான் மறக்கவில்லை. மறப்பது எனக்கு எளிதும் அல்ல. என் வஞ்சம் நூறுமடங்கு நஞ்சும் கூரும் கொண்டுள்ளது. இளைய யாதவனை களத்தில் வென்று பழிகொள்ளவே இங்கு வந்தேன்” என்றான் ருக்மி.

“அவ்வஞ்சத்தை மறக்க முயன்றுளீரா?” என்று துரியோதனன் கேட்டான். “இல்லை” என்றான் ருக்மி. “என் முழு உயிர்விசையாலும் நெய்யூற்றி வஞ்சத்தை வளர்க்கவே முயன்றேன்.” துரியோதனன் “அது தங்கள் தோற்றத்தைப் பார்த்தால் தெரிகிறது. விதர்ப்பரே, இன்று இந்த அரியணையில் அமர்ந்து இவ்வுலகுக்கு நான் சொல்வதற்கு ஒரு சொல்லே உள்ளது, வஞ்சத்தால் எப்பயனும் இல்லை. எவ்வஞ்சமும் அது கொண்டவரைத்தான் முதலில் அழிக்கும். அது அனலின் இயல்பு. விரும்பி தன்னை ஏற்றுக்கொண்டவரை உண்டு நின்றெரித்து எச்சமிலாதாக்கி விண்மீள்வது அது” என்றான்.

ருக்மி அதை எதிர்பாராததனால் சொல் தளர்ந்து அவையை ஒருமுறை நோக்கிவிட்டு “என்னால் இளைய யாதவனை எதிர்க்க முடியும். ஏழு நாழிகைப்பொழுது தனியொருவனாக வில்விஜயனை தடுத்து நிறுத்த முடியும். அரிய அம்புக்கலைகளை கற்றிருக்கிறேன். நான் உங்கள் படைகளில் இணைவது உங்கள் வெற்றியை உறுதி செய்யும்” என்றான். “உங்களுடன் வந்துள்ள படைகள் எந்த உள நிலையில் இருக்கின்றன என்பது இப்போது நீங்கள் சொன்னதிலிருந்தே புரிகிறது. நீங்கள் உடன்பிறந்தாருக்கு எதிராக படை கொண்டெழுவதை அவர்கள் விரும்பவில்லை” என்றான் துரியோதனன்.

“அவர்களை விழைவும் அச்சமும் காட்டி திரட்டி அழைத்து வந்திருக்கிறீர். வஞ்சினம் உரைத்து வெறி கொண்டெழுந்த படைகளே இங்கு உளம் சோர்ந்து சிதைந்துள்ளன. உங்கள் விழைவும் அச்சமும் எத்தனை பொழுதுக்கு களம் நிற்கும்?” என்றான் துரியோதனன். எழாக் குரலில் ஆற்றல் வெளிப்பட “படைவல்லமையும் தோள்

வல்லமையும் அல்ல ஊழ் வல்லமையாலேயே போர்கள் வெல்லப்படுகின்றன என்று உணர்ந்து இங்கு அமர்ந்திருக்கிறேன். நீங்கள் இந்த அவையில் அமர்வதற்கு எனது ஒப்புதல் இல்லை. திரும்பிச்செல்க!" என்றான்.

"நான்... " என்று ருக்மி சொல்லெடுக்க "திரும்பிச்செல்க!" என்று துரியோதனன் உரக்க சொன்னான். "திரும்பிச்செல்லப் போவதில்லை. போருக்கென கிளம்பி வந்துவிட்டேன். போரில் ஈடுபட்டே திரும்புவேன்" என்றான் ருக்மி. "உங்கள் படை வல்லமை எனக்கு தேவையில்லை. உங்கள் போர்த்துணையையும் நான் விரும்பவில்லை" என்றான் துரியோதனன். "ஏன்?" என்று ருக்மி உரக்க கேட்டான். "நீங்கள் உங்கள் உடன்பிறந்தாருடன் போர்புரிய வேண்டியிருக்கும். விதர்ப்பர்கள் ஒருவரோடொருவர் கொன்று குவிக்க வேண்டியிருக்கும்" என்று துரியோதனன் சொன்னான்.

ருக்மி ஏளனத்தால் வளைந்த இதழ்களுடன் "அதைத்தானே இங்கே நீங்கள் இன்று செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்றான். "ஆம், ஆகவேதான் அதன் பொருளின்மையை இவ்வுலகுக்குச் சொல்லும் தகுதியுடையவன் ஆகிறேன். இனி என் ஒப்புதலுடன் ஒருபோதும் குலம் குலத்தோடும் குருதி குருதியோடும் போரிடமாட்டார்கள்" என்று துரியோதனன் சொன்னான். ருக்மி "என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் அதை அவைச்சிறுமை என்றே கொள்வேன். ஏனெனில் நான் இங்கு வருவதை முரசறிவித்து குடியினருக்கும் நாட்டினருக்கும் சொல்லிவிட்டே கிளம்பினேன்" என்றான்.

அவன் குரல் தழைந்தது. "அரசே, இளைய யாதவர் மேல் நான் கொண்ட வஞ்சம் உலகறிந்தது. இத்தருணத்திற்காகவே இத்தனை ஆண்டுகளாக ஒவ்வொரு நாளுமெனக் காத்திருந்தேன். ஒவ்வொரு படைசூழ்கையாக பயின்றேன். நீங்கள் என்னை திருப்பி அனுப்புவது என் இலக்குகளை முற்றழிப்பது. என் வாழ்வையே பொருளற்றதாக்குவது. அளிகூருங்கள், இதை நான் ஒரு அருட்கொடையெனக் கோருகிறேன். நான் உங்கள் படைகளுடன் நிற்கவேண்டும். அந்த யாதவ இழிமகனை எதிர்கொள்ள வேண்டும். அவனை நான் கொல்ல வேண்டும். அன்றி அவன் கையால் நான் மடியவேண்டும். அதுவே என் குடிகளுக்கு முன் வீரனென்றும் ஆண்மகனென்றும் எழுந்து நிற்கும் தருணம்."

துரியோதனன் "உம்மை என்னுடன் ஏற்றுக்கொள்ளாததற்கான அடிப்படையே இப்போது நீங்கள் சொன்னதுதான். இளைய யாதவருக்கு எதிரான வஞ்சத்துடன் எழுந்திருக்கிறீர்கள். இம்மண்ணில் எவரேனும் அவருக்கெதிரான வஞ்சத்தை நிறைவேற்ற இயலுமா என்ன? நீர் மலையில் தலைமுட்டி அழிகிறீர். அதற்கு களமொருக்குவதல்ல என் பணி" என்றான். ருக்மி சீற்றத்துடன் "நீங்களும் இங்கு யாதவருக்கு எதிராகவே போர்புரிகிறீர்கள். உங்களை அவர் முற்றழிப்பார். அது பசி கொண்ட பாம்பு, தீண்டி குறிவைக்கும், விடாது தொடர்ந்துவரும்" என்றான் ருக்மி.

துரியோதனன் புன்னகையுடன் "அறிந்துளீர்! நன்று! நானும் அதை அறிந்துளேன். எழுந்தபின் அமைவது என் இயல்பல்ல என்பதனால் இது என் வழி. உமக்குரியதல்ல அது" என்றான். ருக்மி எண்ணியிராக் கணத்தில் குரல் உடைந்து தளர உடல் வளைத்து "நான் என்ன செய்யவேண்டும்? இன்று நான் இயற்றக்கூடுவதென்ன? அதை சொல்க!" என்றான். "சென்று அவர் அடிபணிக! வஞ்சம் கொண்டேனும் இத்தனை நாள் அவரை நாளும் எண்ணியிருக்கிறீர். அதனாலேயே அவர் அருளைப்பெறும் தகுதி கொண்டிருக்கிறீர். அவருக்கு ஊர்தியாகுக! அவர் கையில் படைக்கலமாகுக! அவரால் முழுமை கொள்வீர்" என்று துரியோதனன் சொன்னான்.

ருக்மி “இதை நான் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. நான் அங்கு சென்று அடிபணிவதென்பது என் வாழ்க்கையின் ஒவ்வொரு எண்ணத்தையும் நானே மறுப்பதுபோல” என்றான். துரியோதனன் “வந்த பாதையை ஒவ்வொரு அணுவும் என முற்றிலும் மறுத்து திரும்பிச்செல்லாமல் எவரும் மெய்மையை அடைவதில்லை, விதர்ப்பரே” என்றான். “இத்தகைய சொற்களை நான் வெறுக்கிறேன். இவை மானுடரை சிறுமை செய்கின்றன. புழுதியின் பொடியாக மாற்றுகின்றன” என்றான் ருக்மி. “சிறுமையின் எல்லை வரை செல்லாமல் எவரும் முழுமையை உணர்வதில்லை. இந்தக் களம் ஒவ்வொருவரும் தங்கள் சிறுமையை உணர்வதற்கு உகந்தது” என்று துரியோதனன் சொன்னான்.

“நேற்று இரவு களம்பட்ட என் உடன்பிறந்தாரின் கவசங்களையும் கங்கணங்களையும் என்னைச்சுற்றி பரப்பி வைத்து ஒவ்வொன்றையும் எடுத்து நெஞ்சிலும் தலையிலும் சூடி விழிநீர்விட்டு கலுழ்ந்தேன். அப்போது அறிந்தேன் புழுதிப்பொடி மட்டுமே நான் என. அதற்கப்பால் எதுவுமே இல்லை. அத்தகைய பெரும் இழப்புகளுக்கு ஆளாகாமல் அதை நீரும் உணரமுடியுமெனில் நல்லூழ் கொண்டவர் நீங்கள்” என்றான் துரியோதனன். புன்னகையுடன் மீசையை நீவியபடி “இவ்வுலகில் ஒவ்வொருவரிடமும் கைபற்றி கண்ணீர்விட்டு தோள் அணைத்து நான் சொல்லவிருப்பது இது ஒன்றே. புழுதிப்பொடியென்று உணர்க! அறிதல் அனைவருக்கும் இயல்வது, உணர்தல் தெய்வங்களால் அளிக்கப்படுவது. அறிந்ததை தவம்செய்து உணர்க! இல்லையேல் தெய்வங்கள் அதை குருதி சிந்தி உணரச்செய்யும்” என்றான்.

பதற்றத்துடன் கைகள் அலைபாய அவையை சூழநோக்கியபின் “இறுதியாக என்ன சொல்கிறீர்கள்?” என்று ருக்மி உரத்த குரலில் கேட்டான். “இந்த அவையில் எவ்வகையிலும் நீங்கள் அமர இயலாது. கௌரவப் படைகளில் விதர்ப்பத்திற்கு இடமில்லை. இளைய யாதவர் மேல் வஞ்சமழியமாட்டீர் என்றால், போர் புரியத்தான் போகிறீர் எனில், அது உங்கள் ஊழ். அதன் பொருட்டு எங்கள் மேல் ஏறி நீர் நின்றிருக்க இயலாது. செல்க!” என்றான் துரியோதனன். சீற்றத்துடன் உடல் தத்தளிக்க “இது அவைச்சிறுமை! விதர்ப்பம் தூசியென தட்டி விலக்கப்படுகிறது. பெரும்புகழ் கொண்ட நாடு என்னுடையது. பாரதத்தின் பெருவீரர்களிலொருவனாக அறியப்பட்டவன் நான். எனது படையுதவி உங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை என்று கருதினீர்கள் என்று உங்களைச் சூழ்ந்திருக்கும் ஷத்ரியர்கள் எண்ணுவார்கள் என்றால் ஆயிரம் ஆண்டுகாலம் இந்தச் சிறுமை எங்கள் மேல் தங்கும். சூதர் சொல்லில் இது பெருகும். எங்கள் கொடிவழிகள் இதை நாணும்” என்றான்.

“இவையனைத்தும் வெறும் உளமயக்குகளே. காலத்தின் பொருட்டும், குடியின் பொருட்டும், சொல்லின் பொருட்டும் ஒருவன் வாழ்வானெனில் அவன் இருளையே சென்றடைவான். உள்ளிருக்கும் ஒளியின் பொருட்டு வாழ்க! இவை அவ்வொளியை மறைக்கும் புகை. செல்க!” என்றான் துரியோதனன். மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்து பின் சீற்றத்துடன் தன் சடைப்புரிகளை அள்ளி பின்னால் வீசி ருக்மி திரும்பிச்சென்றான். துர்மதன் அவனை தொடர்ந்து செல்லப்போக துரியோதனன் “இளையோனே, தெற்கு படைப்பிரிவின் கணக்குகளை சொல்” என்றான். துர்மதன் தலைவணங்கினான்.

தெற்கு எல்லைக்காவலரணில் நின்றிருந்த புரவிவீரர்களில் இருவர் படைத்தலைவர்களுக்கான கொடியுடன் இருப்பதை தொலைவிலேயே யுயுத்ஸு

பார்த்தான். ஐயத்துடன் தன்னைச் சூழ்ந்து வந்துகொண்டிருந்த படைத்தலைவர்களிடம் விரைவு கூட்டும்படி கைகாட்டிவிட்டு பாய்ந்து அதை நோக்கி சென்றான். படைத்தலைவர்கள் எல்லைக்காவல் அரணுக்கு வருவது அரிது. அரசரோ நிகரானவரோ வந்திருக்கவேண்டும். அன்றி ஏதேனும் ஒவ்வாப் பெருநிகழ்வு அமைந்திருக்கவேண்டும்.

ஒவ்வொரு நாளும் போர் முடிந்ததும் படையிலிருந்து கிளம்பி அருகிலிருக்கும் சிற்றூரான மிருண்மயத்திற்குச் சென்று அங்கு காவலர்மாளிகையில் தங்கியிருந்த திரௌபதிக்கும் குந்திக்கும் போர்நிகழ்வை சுருக்கி சொல்லி அவர்களின் வினாக்களுக்கு விளக்கமளித்து மீளும் பொறுப்பு அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. அப்போரின் துயர்மிகுந்த நிகழ்வாக அவன் உணர்ந்தது அதைத்தான். மாளிகையின் முகப்பிலேயே அவனை எதிர்கொண்டு உள்ளே அழைத்துச்செல்ல திரௌபதியின் சேடி நின்றிருப்பாள். அவளுக்கு சற்று அப்பால் தொடர்பற்று தனியாக நிற்பதுபோல் குந்தியின் சேடி நின்றிருப்பது தெரியும். அவர்கள் அவனிடம் ஒருசொல்லும் உரைப்பதில்லை. தலைவணங்கி உள்ளே அழைத்துச் செல்வர். சொற்களை உள்ளத்தில் அடுக்கியபடி அவன் உடன்செல்வான்.

காவலர்தலைவனின் சிறிய இல்லத்தில் மரத்தாலான கூடத்தில் இரு பீடங்களில் குந்தியும் திரௌபதியும் அமர்ந்திருப்பார்கள். முதல் நாளிலிருந்தே அவர்கள் செய்தி கேட்பதற்காக முழு அரசஉடையுடன்தான் வந்து அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின்னால் வாய்மணம் பரப்பிய தாலம் ஏந்திய சேடியர் நின்றனர். அறைக்குள் நுழைவாயிலை காத்தபடி இரு ஆணிலிகள் நின்றனர். யுயுத்ஸுவுக்கு பீடம் அளிக்கப்படுகையிலும் வாய்மணமும் இன்னீரும் அளிக்கப்படுகையிலும் அவர்கள் ஒரு சொல்லும் உரைப்பதில்லை. சேடியரும் ஆணிலிகளும் அகன்றதும் குந்தி சொல்க என கையசைத்து ஆணையிடுவாள். அவன் அவர்களின் விழிகளை நோக்காமல் நோக்கு சரித்து நிலத்தையோ அப்பால் அசையும் திரைச்சீலைகளையோ பார்த்தபடி நிகழ்வுகளை சொல்வான்.

யுயுத்ஸு முதல்நாள் அவ்வமர்வில் அவர்கள் அணிந்திருந்த அரசஉடையைக் கண்டதுமே அங்கு நடந்துகொள்ள வேண்டிய முறையை உய்த்துணர்ந்துகொண்டான். ஆகவே முறைப்படி குந்திக்கும் பின்னர் திரௌபதிக்கும் அவைமுறைமைச் சொற்களை உரைத்து தலைவணங்கி அமர்ந்தான். போர்நிகழ்வுகளை எந்த நாடகமும் இன்றி வெறுமனே செய்திகளாக எளிய சொற்களில் அவர்களிடம் சொன்னான். வெற்றியும் தோல்வியும் படைநகர்வும் சூழ்கையும் ஒரே அளவு சொற்களில் அமையவேண்டுமென்பதை உளம் கொண்டான். குரலில் உணர்வோ ஏற்ற இறக்கமோ இல்லாது பார்த்துக்கொண்டான். அவர்கள் தங்கள் முகங்களில் எந்த உணர்வும் அசைவுமின்றி நிலைத்த விழிகளுடன் கேட்டிருந்தனர்.

கொலைகள், குருதிப்பெருக்குகள் வழியாக அவனது சொற்கள் சென்று நின்றதும் மறுசொல் உரைக்காமல் கையசைத்து செல்க என்று காட்டி குந்தி எழுந்தாள். அருகே நின்றிருந்த சேடி அவள் வெண்பட்டு ஆடையின் மடிப்புகளை சீர்படுத்த கைகூப்பி அவையை என அக்கூடத்தை வணங்கி வலம் திரும்பி வெளியேறினாள். அவள் வெளியேறிய பின்னர் திரௌபதியும் எழுந்து சேடியர் ஆடை சீரமைக்க இடைகொடுத்து பின் அவை வணங்கி அத்திசையிலேயே தானும் சென்று அகன்றாள். அதன் பின் யுயுத்ஸு எழுந்து இரு பீடங்களுக்கும் தலைவணங்கி இடந்திரும்பி கூடத்திலிருந்து வெளியே வந்தான்.

ஒவ்வொரு முறை அந்த அவையிலிருந்து வெளியே வரும்போதும் பெரும் விடுதலை ஒன்றை உணர்ந்தவன்போல் அவன் நீள்மூச்செறிவான். ஒவ்வொரு முறையும் சொல்லத்தொடங்குகையில் “இன்றைய போர் நமக்கு வெற்றிமுகம் அளிப்பதாக முடிந்தது. இன்று நம் படைத்தலைவர்கள் வகுத்த சூழ்கை அதன் இலக்கை அடைந்தது. களத்தில் நம் அரசர்களும் வீரர்களும் தங்கள் குல மாண்புக்குரிய வீரத்தை வெளிப்படுத்தினர். விண்ணவரும் தெய்வங்களும் குனிந்து நோக்கி வாழ்த்தும் செயல்கள் அவை” என்று சொல்கையில் அச்சொற்களின் பொருளில்லாமை அவனை பின்னிருந்து எவரோ வேல்முனையால் தொடுவதுபோல் உறுத்தியது.

ஆனால் முதல்நாள் அப்பொருளிலாச் சொற்றொடர்கள் தொடங்கியபோது அந்த அயன்மையே அவனை இயல்பாக பேசவைத்தது. எஞ்சிய பேச்சின் ஒழுங்கையும் வடிவையும் அதுவே முடிவு செய்தது. எவ்வகையிலும் சொல்பவருக்கோ கேட்பவருக்கோ தொடர்பற்றது என்றும் எப்போதுமே சொல்லப்பட்டு வருவது என்றும் எவராலும் மாற்றிவிட முடியாத தொல்கதை என்றும் அந்நிகழ்வை அது எண்ணிக்கொள்ள வைத்தது. அவ்விலக்கத்தால் அவனால் கூரிய சொற்களை தயக்கமில்லாது சொல்லமுடிந்தது.

ஆனால் தொடர்ந்த நாட்களில் அவ்வாறு சொல்வது அவனை நெருடத்தொடங்கியது. முதலில் உள்ளே எழும் சிறு அசைவின்மை ஒன்றால் பின்னர் சொல்லிக்கொண்டிருக்கும் சொற்களின் அனைத்து ஒழுங்குகளையும் குலைக்கும்படி உள்ளிருந்து எழும் இன்னொரு குரலாக அந்த உறுத்தல் உருமாறியது. ஒவ்வொரு சொல்லையும் அதன் கவ்வுதல்களிலிருந்து பிடுங்கி உள்ளிருந்து எடுக்க வேண்டிய நிலை வந்தது. பின்னர் அவ்வுளப் போராட்டத்தின் வெம்மையால் உடல் மெல்ல நடுங்க குரல் தழுதழுக்க அவன் போர்நிகழ்வுகளை சொல்லலானான். சொல்லி முடித்ததும் தொடுத்த அம்புகளென அந்நிகழ்வுகளனைத்தும் அவனிடமிருந்து செல்ல நாண் தளர்ந்ததுபோல் அவன் உள்ளம் நிலை மீண்டது. எழுந்து வெளிவருகையில் உள்ளிருந்து அக்கதையை எதிர்கொண்ட எதிர்க்குரலே அவன் அகமென இருந்தது.

ஒவ்வொருநாளும் மிருண்மயத்தின் முற்றத்தில் வந்து இருண்ட வானை அண்ணாந்து பார்த்து விண்மீன்களை நோக்கியபடி இடையில் கைவைத்து அவன் நின்றான். வேறு எவரிடமோ தன்னுள் எஞ்சும் கதையை சொல்ல விழைபவனாக. அன்று விண்மீன்கள் தெரியாமல் முகில் மறைத்திருந்தது. இருளுக்குள் மின்னல்கள் கிழிபட்டு துடித்துக்கொண்டிருந்தன. முரசொலிகள்போல தென்மேற்குச்சரிவில் இடியோசை மெல்ல ஒலித்து எதிரொலிகளென நீண்டு தேய்ந்து மறைந்தது.

புரவியிலேறிக்கொண்டு ‘செல்வோம்’ என்று சொல்லிக் கிளம்பியபோது யுயுத்ஸு எப்போதும்போலவே அன்றும் நாளை இங்கு நான் வரப்போவதில்லை, இப்பணியை அன்றி வேறு எந்தப் பணியையும் இங்கு நான் இயற்ற இயலும், இதையே நான் ஆற்றவேண்டுமெனில் களம் சென்று நெஞ்சு கொடுத்து குருதியுடன் வீழ்வதன்றி எனக்கு வேறு வழியில்லை என்று யுதிஷ்டிரரிடம் சொல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டான். புரவி மையச்சாலைக்கு வந்து மிகத் தொலைவில் வானில் செவ்வொளிக் கசிவென எழுந்திருந்த பாண்டவப் படையை நோக்கி செல்லத்தொடங்கியபோது ஒருபோதும் தான் அதை சொல்லப்போவதில்லை என்று உணர்ந்து நீள்மூச்செறிந்தான்.

காவலரணை நெருங்கியதும் யுயுத்ஸு புரவியிலிருந்து இறங்கினான். அங்கு நின்றிருந்த வீரன் அவனை நோக்கி தலைவணங்கி அருகணைந்தான்.

“காவலர்தலைவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்?” என்று யுயுத்ஸு கேட்டான். அதற்குள் காவலரணுக்குள் இருந்து வெளிவந்த படைத்தலைவன் அவனை நோக்கி தலைவணங்கி “இளவரசே, விதர்ப்ப நாட்டு அரசர் ருக்மி வந்துள்ளார். இளைய பாண்டவர் அர்ஜுனரை பார்க்க வேண்டுமென்று விழைகிறார்” என்றான். யுயுத்ஸு நிகழ்ந்த அனைத்தையும் ஒருகணத்தில் புரிந்துகொண்டு “எங்கிருக்கிறார்?” என்றான். “அவருக்கு என்ன முறைமை செய்யவேண்டுமென்று எங்களுக்கு தெரியவில்லை. அரசர்கள் இவ்வாறு நேரடியாக தனித்து வரும் வழக்கமில்லை” என்றான் படைத்தலைவன்.

“தனித்தா வந்திருக்கிறார்?” என்றான் யுயுத்ஸு. படைத்தலைவன் “தன்னந்தனியாக வந்திருக்கிறார். படைக்கலங்கள் எதுவும் இல்லை. அரசர் என்பதற்கான கணையாழி மட்டுமே உள்ளது. அவர் அருகணைந்து ஒளிக்குள் நுழைந்தபோது யாரோ முனிவர் என்று காவலர்தலைவர் எண்ணினார். அவர் இவரெனத் தெரிந்ததும் முழவொலி எழுந்தது. நாங்கள் இங்கு வந்தோம். முடிவெடுப்பதற்குள் தாங்கள் வந்துவிட்டீர்கள்” என்றான். “அரசர்கள் முன்னரே அறிவிப்பின்றி படைக்குள் நுழையலாகாது. படை என்பது ஒரு நகரம். நகர்நுழைவுக்கான எல்லா முறைமைகளையும் அவர்கள் பேணியாகவேண்டும்” என்றான் காவலர்தலைவன்.

யுயுத்ஸு காவலரணுக்குள் நுழைந்தபோது சிறுபீடத்தில் கால்மேல் கால் போட்டு கைகளை மார்பில் கட்டியபடி சாய்ந்தமர்ந்திருந்த ருக்மியை கண்டான். அருகே சென்று தலைவணங்கி “நான் தார்த்தராஷ்டிரனான யுயுத்ஸு. பாண்டவப் படைகளின் சொல்லாயும் பொறுப்பிலிருக்கிறேன். தங்கள் பணிக்கென தலைகொண்டவன்” என்றான். ருக்மி வலக்கையால் அவனை வாழ்த்தி “இங்கு வந்ததை நான் அறியவில்லை” என்றான். யுயுத்ஸு “போர் தொடங்குவதற்கு முன்னரே வந்துவிட்டேன்” என்றான். ருக்மி “நான் முதலில் அங்குதான் சென்றேன். அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. அங்கிருந்து திரும்பி என் நாட்டிற்கு செல்லவேண்டும் என்றே கிளம்பினேன். எனது படைத்தலைவர்கள் அதை விரும்பவில்லை. கௌரவர்களால் திருப்பியனுப்பப்பட்டால் நாம் படைக்கூட்டுக்கு தகுதியானவர்கள் அல்ல என்பதையே வரலாற்றில் நிலைநிறுத்துகிறோம் என்று என் முதன்மை படைத்தலைவன் சக்ரரதன் சொன்னான்” என்றான்.

யுயுத்ஸு அவன் அப்படி நேரடியாக பேசத்தொடங்கியதை எண்ணி வியப்புகொண்டான். ஆனால் அவனறிந்த ருக்மி எப்போதுமே முறைமைகளறியாத நேர்ப்பேச்சு கொண்டவன். “நான் தூதுச்செய்தியுடன் வந்துள்ளேன்… நானே தூதனானேன். ஏனென்றால் இச்செய்தியை என்னால்தான் சொல்லமுடியும்…” என்றான். யுயுத்ஸு மெல்ல இடைமறித்து “நான் தங்களை அழைத்துச்செல்கிறேன்…” என்றான். ஆனால் ருக்மி பேசவிழைந்தான் என தெரிந்தது. அவன் மிகக் குறைவாகவே பேசுபவன். அது சொல்லடங்கியதால் அல்ல, சொல் திரளாமையால். அத்தகையோர் பேசத்தொடங்கினால் அதிலேறி ஒழுகிச்செல்வார்கள்.

ருக்மி “என் படைத்தலைவர்கள் சொல்வது உண்மை என தோன்றியது. துரியோதனரால் திருப்பி அனுப்பப்பட்டேன் என்ற செய்தியே என் குடிக்கு நஞ்சுபோன்றது. சூதர்கள் எங்களை கோழைகள் என்றும் பயிலாதோர் என்றும் நம்பத்தகாதோர் என்றும் சொல்லிச் சொல்லி நிறுத்திவிடுவார்கள்” என்றான். யுயுத்ஸு “எதன் பொருட்டு அவர்கள் உங்களை திருப்பி அனுப்பினார்கள் என்பதை சொல்லில் நிலைநிறுத்தலாமே?” என்றான். “ஆம், ஆனால் அது சூதர் பாடலில் நிலைகொள்ளாது. ஏனெனில் சூதர்கள் சொல்லிச் சொல்லி தார்த்தராஷ்டிரராகிய துரியோதனருக்கு ஓர் இயல்பை அளித்துள்ளார்கள். அதை அவர்கள் எப்போதும்

மாற்றப்போவதில்லை. சூதர்பாடல்கள் ஊற்றிலிருந்து கிளம்பிய நதி போன்றவை. அவை மீண்டும் ஊற்றுக்கு ஒருபோதும் செல்வதில்லை என்பார்கள்” என்றான் ருக்மி.

“தன் இயல்புக்கு மாறான ஒன்றை அவர் கூறினார் போலும்!” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆம், நான் என் குலத்தாருடன் போரிடவேண்டாம் என்றார். எந்நிலையிலும் உடன்பிறந்தார் ஒருவரோடொருவர் போரிட்டு குருதி சிந்தலாகாது என்றார்” என்றான் ருக்மி. “மண்ணுக்காகவும் புகழுக்காகவும் நிகழ்த்தப்படும் அனைத்துப் போர்களும் பொருளற்றவையே என்றும் சொன்னார்.” யுயுத்ஸு “இந்தப் போரிலிருந்து நிறையவே கற்றுக்கொண்டிருக்கிறார்!” என்றான். ருக்மியின் உதடுகள் இகழ்ச்சியுடன் வளைந்தன. “அங்கிருப்பவர் யுதிஷ்டிரரா என்ற ஐயத்தை நான் அடைந்தேன். போர் தொடங்கியபின் துரியோதனர் யுதிஷ்டிரர் ஆகிவிட்டார் என்றால் இங்கு யுதிஷ்டிரர் துரியோதனராக இருப்பாரோ என்று எண்ணிக்கொண்டேன்” என்றான். யுயுத்ஸு “அவர்கள் இருவரும் ஒருவரே” என்றான்.

ருக்மி அதை புரிந்துகொள்ளாமல் கூர்ந்து நோக்க “விதர்ப்பரே, உங்களிடம் பேசியவையும் என் மூத்தாரின் இயல்புக்குரிய சொற்களே. அவரை இருபுறமும் இருவகையான தெய்வங்கள் நின்றாள்கின்றன. நீங்கள் சென்ற தருணம் நன்று இயற்றும் தெய்வங்களுக்குரியது” என்றான். ருக்மி “ஆம், அவர் நன்னிலையில் இல்லை என்பதை நானும் உணர்ந்தேன். ஆனால் என் படைகள் அவரால் திருப்பி அனுப்பப்பட்டன என்பதை எங்கும் என்னால் விளக்க இயலாது. நான் இயற்றவேண்டியதென்ன என்று படைத்தலைவர்களிடம் கேட்டேன். பாண்டவப் படைகளுடன் வந்து சேர்வதொன்றுதான் செய்வதற்குள்ளது என்றார்கள்” என்றான்.

யுயுத்ஸு புன்னகைத்து “உங்கள் வஞ்சினம் என்ன ஆவது?” என்றான். ருக்மி “ஆம், அது பொருளற்றுப் போகிறது. அதை என்ன செய்வதென்று தெரியாமல் வைத்திருக்கிறேன். என்னால் அசைக்க முடியாத மாபெரும் படைக்கலம் ஒன்று என் இல்லத்தில் கிடப்பது போலிருக்கிறது” என்றான். “மெய்யாகவே எனக்கு எதுவும் தெரியவில்லை” என ருக்மி எழுந்தான். மேலாடையை எடுத்து அணிந்தபடி பதற்றத்தால் சற்று நடுங்கிய குரலில் “நான் இளைய பாண்டவர் அர்ஜுனரை பார்க்கவேண்டும், அவரிடம் பேசவேண்டும்” என்றான். அவனுடைய தாடி செந்நிறமாக தழல்போல் அசைந்தது. அவர்களின் குடிக்கே ஹிரண்யரோமர்கள் என்று பெயர் என யுயுத்ஸு நினைத்துக்கொண்டான்.

“உன்னை கண்டால் யுதிஷ்டிரரைப்போல் தோன்றுகிறது. நீ எனக்கு உரிய வழிகாட்டமுடியும்” என்று ருக்மி சொன்னான். “நான் உடனே இளைய பாண்டவரை காணவேண்டும்…” யுயுத்ஸு “நீங்கள் பேச வேண்டியது மூத்தவர் யுதிஷ்டிரரிடமல்லவா?” என்றான். “அல்ல. அதற்கு முன் இளைய யாதவரிடம். அதற்கு முன்பு இளைய பாண்டவரிடம்” என்றான் ருக்மி. “இளைய பாண்டவரிடம் எனக்கு எஞ்சும் சொல் உள்ளது. முன்பு நான் துருமன் என்னும் கிம்புருடநாட்டு ஆசிரியரிடம் வில்பயின்றேன். அவர் எனக்கு அளித்த விஜயம் என்னும் வில்லுடன் நான் அஸ்தினபுரிக்குச் சென்று இளைய பாண்டவர் அர்ஜுனரை நிகர்ப்போருக்கு அழைத்தேன். அன்று இதே குருக்ஷேத்ரத்தில் நிகழ்ந்த போரில் நாங்கள் இருவரும் ஒருநாள் முழுக்க இணைநின்று போரிட்டோம். என் வீரத்தில் மகிழ்ந்த இளைய பாண்டவர் தேவையேற்படுகையில் நான் அவரை சென்று காணவேண்டும் என்றும் அவருடைய வில் எனக்கு உதவும் என்றும் சொல்லளித்தார்.”

யுயுத்ஸுவின் தோளில் கைவைத்து “இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டிய தருணம் இது” என்று ருக்மி சொன்னான். “தாங்கள் நாடும் உதவி எது?” என்றான் யுயுத்ஸு. ருக்மி தத்தளிப்புடன் தலையை அசைத்து நீள்

தாடியை கையால் பற்றி உருவி பின்னர் “என் படைகள் இங்கு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஒருநாளேனும் இங்கு கௌரவரை எதிர்த்து நாங்கள் போரிடவேண்டும்” என்றான். “தங்கள் உடன்பிறந்தோர் முன்னரே இங்குதான் இருக்கிறார்கள்” என்றான் யுயுத்ஸு. “ஆம், அவர்கள் என்னை இரு கை விரித்து ஏற்றுக்கொள்வார்கள். இதுகாறும் நான் இழைத்த அனைத்துப் பிழைகளையும் அவர்கள் எப்போதோ பொறுத்திருப்பார்கள். இத்தருணத்திற்காக காத்திருப்பார்கள் என்றே நான் எண்ணுகின்றேன். அந்தத் தோளிணைவு யுதிஷ்டிரர் அவையில் நிகழ்வதென்றால் நன்று. ஆனால் அதற்கு முன்…”

சொல்லின்மையால் தத்தளித்த ருக்மி கைகளை காற்றில் அசைத்து “அதற்கு முன் எனக்கொரு சொல் தேவை. நான் அதைத்தான் இளைய பாண்டவரிடம் எதிர்பார்க்கிறேன்” என்றான். “என்ன சொல்?” என்று யுயுத்ஸு கேட்டான். “நான் இளைய யாதவர் மேல் கொண்டுள்ள வஞ்சம். நான் இதுகாறும் வாழ்ந்தது அதன்பொருட்டே. அதை நான் கைவிடவேண்டுமென்றால்… எங்கும் இளிவரல் எழாது நான் அதை கடந்துசெல்லவேண்டுமென்றால்…” என ருக்மி தடுமாறினான். “அது இளைய யாதவரால் மட்டுமே இயலும். அவர் உளம்கொள்ளவேண்டும். அதற்கு அவரிடம் இளைய பாண்டவர் சொல்லவேண்டும்.”

யுயுத்ஸு தன்னுள் எழுந்த வெறுப்பை முகத்தில் காட்டாமல் மறைத்தபடி “அவர் ஆற்றவெண்டியதென்ன?” என்றான். “வெறுமனே என்னிடம் ஒரு அடியறைவு சொல்லுதல். வெறும் சொல்தான். தன் பிழையை பொறுக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கை. பொறுத்தேன் என்ற ஒரு சொல்லால் அத்தருணத்தை நானும் கடந்து செல்வேன். இதுவரை அள்ளிக்கொண்டுவந்த அனைத்தையும் அங்கு உதறிவிட விரும்புகிறேன்” என்றான் ருக்மி. தலையை அசைத்து “ஆம், அதற்கு பொருளேதுமில்லை. அது வெறும் நடிப்பு. ஆனால் அத்தகைய ஒரு நாடகத்தருணம் இல்லையென்றால் இந்த நீண்ட தவத்தை என்னால் முடித்துக்கொள்ள இயலாது. என் வாழ்வே பொருளற்றதாகிவிடும்” என்றான்.

யுயுத்ஸு “விதர்ப்பரே, இக்களத்தில் இங்குள்ள அனைவருடைய வாழ்வும் பொருளற்றதாகவே உள்ளது” என்றான். யுயுத்ஸுவின் சொல்லை ருக்மியால் புரிந்துகொள்ள இயலவில்லை. “நான் கூறவருவதை இளைய பாண்டவரால் புரிந்துகொள்ள முடியும். இது அரசுசூழ்பவரின் உணர்வல்ல. வஞ்சத்தாலும் சினத்தாலும் விழைவாலும் ஆட்டுவிக்கப்படும் ஷத்ரியர்களின் தடுமாற்றம். கூற்றைவிட அவர்கள் அஞ்சுவது சூதர் சொல்லைத்தான். ஆகவேதான் அவரை பார்க்கவேண்டுமென்று கேட்டேன்” என்றான். “தங்களை அவரிடம் கூட்டிச்செல்வது என் பணி” என்று யுயுத்ஸு சொன்னான்.

அர்ஜுனனின் படைபிரிவை நோக்கி கிளம்புவதற்குள்ளாகவே அருகிலிருந்த காவல்நிலையிலிருந்து அர்ஜுனனுக்கு ஒரு புறாச்செய்தியை அனுப்ப யுயுத்ஸு ஒருங்கு செய்தான். அதில் சுருக்கமாக ருக்மியின் வருகையின் நோக்கத்தை தெரிவித்திருந்தான். அவன் செய்தியை அனுப்பிவிட்டு வந்து புரவியிலேறிக் கொண்டபோது “முழுச் செய்தியையும் நீ அனுப்பியிருக்க வேண்டியதில்லை” என்றான் ருக்மி. யுயுத்ஸு “செய்தியை அனுப்பாமல் தங்களை நான் அழைத்துச்செல்ல இயலாது. எதன் பொருட்டு தாங்கள் அவரை பார்க்கவேண்டுமென்பதை அவர் அறிந்த பிறகே முடிவெடுப்பார். ஏனெனில் இப்போர் தொடங்கியபின் படைசூழ்கைக்கான அவையில் அவர் அமர்வதில்லை. போர் குறித்த எந்தச் சொல்லாடல்களுக்கும் வந்ததில்லை. போரும் அந்திப்பொழுதின் விற்பயிற்சியும் அவ்வப்போது இளைய யாதவரை சந்தித்து ஓரிரு சொற்கள் உரையாடுவதுமன்றி இங்குள்ள எவருடனும் அவருக்கு எத்தொடர்பும்

இல்லை. காட்டில் யோகிகள் வாழ்வதுபோல் இங்கு வாழ்கிறார், காட்டுடன் எத்தொடர்புமின்றி” என்றான்.

ருக்மி “அவர் அவ்வாறுதான் இருக்க இயலும்” என்றான். அவர்களின் புரவி தாளமிட்டு மரப்பாதையில் விரைந்தது. புண்பட்டோரும் மாய்ந்தோரும் அகற்றப்பட்டு களம் ஒழிந்துவிட்டிருந்ததனால் குருக்ஷேத்ரத்தில் ஓசைகள் முற்றாக அடங்கிவிட்டிருந்தன. படைப்பிரிவுகளில் இரவு விளக்குகளன்றி பிற பந்தங்கள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்தன. விண்மீன் பரவிய வானத்தின் அமைதி தெரிந்தது. மிகத் தொலைவில் படைக்குப் பின்புறம் மருத்துவநிலையிலும் அதற்கும் அப்பால் உலைக்கூடங்களிலும் மட்டுமே வெளிச்சம் இருந்தது. குளிர்ந்த காற்று கந்தக மணத்துடன் வீசியது. சுழன்றுவந்தபோது அடுமனை மணம் அதிலிருந்தது.

ருக்மி கை சுட்டி “காட்டுக்குள் அது என்ன ஒளி?” என்றான். “சிதைகள்!” என்று சுருக்கமாக யுயுத்ஸு சொன்னான். ருக்மி ஒன்றும் சொல்லாமல் இடக்கையால் தாடியை நீவியபடி சிதைச் செம்மையை விழிநிலைத்து நோக்கிக்கொண்டு புரவியில் அமர்ந்திருந்தான். அவன் என்ன எண்ணுகிறான் என்று யுயுத்ஸுவுக்கு புரியவில்லை. அவர் ஏதும் எண்ணுவதே இல்லையோ என்ற எண்ணம் ஏற்பட்டது. என்றேனும் தன்னைக்கடந்து ஒரு சொல் எண்ணியிருப்பாரா இவர்? தங்கள் புகழுக்கும் செல்வத்திற்குமென களம் காண்கிறார்கள். பல்லாயிரம் உயிர்களை வைத்து விளையாடுகிறார்கள்.

அர்ஜுனன் பதினெட்டாவது படைப்பிரிவில் இருப்பதாக புறா செய்தி கொண்டுவந்தது. பதினெட்டாவது படைப்பிரிவை நோக்கி சென்று முதல் காவலரணில் தன் புரவியை நிறுத்தி இறங்கிய யுயுத்ஸு தன் வருகையை அறிவித்தான். அங்கு காவலுக்கு நின்றிருந்த காவலன் “தங்களுக்காக காத்திருக்கிறார்கள்” என்றான். “யார்?” என்று யுயுத்ஸு கேட்டான். “இளைய யாதவரும் இங்கு வந்திருக்கிறார். தங்களுக்காக காத்திருக்கிறார்” என்றான் காவலன். யுயுத்ஸு அதை எப்படி எதிர்பார்க்காமல் இருந்தேன் என்று எண்ணிக்கொண்டான். காவலன் அவர்களின் வரவை அறிவிக்கும்பொருட்டு சென்றான்.

அவனுடன் நடந்து வந்த ருக்மி காவலர்தலைவன் குறிமொழியில் சொன்னதை புரிந்துகொள்ளவில்லை. “நான் இளைய பாண்டவரிடம் சொல்வதற்கொன்றே உள்ளது. என் நோக்கை அவர் இளைய யாதவரிடம் சொல்ல வேண்டும். இன்று தெளிவாக உணர்கிறேன் எனது வஞ்சத்தின் ஊற்றுமுகம் என்ன என்பதை. அது வீரனென்றும் அரசனென்றும் நான் கொண்ட ஆணவம். ஷத்ரியன் என்று அவைகளில் தருக்கி நிற்க விழைந்தேன். யாதவன் என் தங்கையை மணம்கொண்டு சென்றான். அதை தடுக்கச் சென்ற என் தாடியை மழித்து சிறுமை செய்தான். செல்லுமிடமெங்கும் சூதர் சொல்லில் அச்சிறுமை வாழ்வதை கண்டேன். அதைக் கடந்து சூதர்சொல்லில் பெருமை நிலைநாட்டி மண்நீங்கிச் செல்ல வேண்டுமென்பதற்கப்பால் நான் எதைப்பற்றியும் எண்ணவில்லை.”

“அதன் பொருட்டே இதுநாள் வரைக்கும் வாழ்ந்தேன். அவ்வஞ்சத்தை ஒவ்வொரு நாளும் நிகழ்வுகள் பெருக்கின. வெவ்வேறு அவைகளில் நானும் எந்தையும் கொண்ட சிறுமைகள். என் உடன்பிறந்தானுக்கு நிகரான சிசுபாலனை தலைவெட்டிச் சரித்து அவர் கொன்ற முறை...” என்றான் ருக்மி. யுயுத்ஸு “அவரும் இத்தகைய ஆணவத்தால் ஆட்டுவிக்கப்பட்டவரே” என்றான். “ஆம், ஆணவமே ஷத்ரியர்களை ஆக்குகிறது. ஆணவமில்லாத ஷத்ரியன் வேலேந்தி

படைப்பெருக்கில் ஒரு துளியென நின்று பொருதி இறக்கும் ஊழ் கொண்டவன்” என்றான் ருக்மி. யுயுத்ஸு ஏதோ சொல்ல வந்து அச்சொல்லை தவிர்த்தான்.

“அதைவிட ஜராசந்தரின் இறப்பு!” என்றான் ருக்மி. “உடல்கிழித்து வீசப்பட்டார்! என்னளவில் அவை எளிய போர்விளைவுகள் அல்ல. அவர்கள் ஒவ்வொருவராகவும் நின்று நான் நடித்திருக்கிறேன். ஆகவே அவர்கள் ஒவ்வொருவருடனும் இறந்தேன். ஒவ்வொரு இறப்புக்குப் பின்னும் ஏழு மடங்கு வஞ்சத்துடன் எழுந்தேன். ஆனால் இதுவரை எனக்கிருந்த இழிவைவிட நூறு மடங்கு இழிவை கௌரவர்களால் போர்முனையிலிருந்து விலக்கப்பட்டமை எனக்கு அளிக்குமெனும்போது அனைத்தும் குழம்பி சரிந்து கிடக்கின்றன கண்முன்.” ருக்மி “அங்கே இளைய பாண்டவர் தனித்திருக்கிறாரா? எங்களுடன் எவரும் இருப்பதை நான் விரும்பவில்லை” என்றான். யுயுத்ஸு அதற்கு மறுமொழி உரைக்கவில்லை.

“எனக்கு ஒரு தெளிவு வேண்டும்… அதை இளைய பாண்டவர் அளிக்கமுடியும்” என்று ருக்மி சொன்னான். “நான் பாண்டவப் படைகளில் சேர்வதற்கான அழைப்பை இளைய யாதவரே எனக்கு அளிக்க வேண்டும். அவர் எனக்கிழைத்த பிழைக்கு ஒரு சொல்லளித்து என்னை அழைத்தார் என்றும் என்னால் இடர்ச்சூழலை கடந்துசெல்ல இயலும்.” யுயுத்ஸு “அதை அவரே எத்தடையுமின்றி இயற்றுவார். சூதர்சொல்லில் வாழும் பொருட்டு அவர் எதையும் இங்கு செய்யவில்லை” என்றான். “விதர்ப்பரே, ஷத்ரியர்கள் இருவகை. சூதர்களுக்கு பின் செல்பவர், சூதர்களால் தொடரப்படுபவர்.”

ருக்மி அவன் சொற்களை புரிந்துகொள்ளவில்லை. கைவீசி “வீண்சொற்களில் எனக்கு ஆர்வமில்லை” என்றான். “ஆனால் நீங்கள் சொல்வதை இளைய பாண்டவர் ஏற்றுக்கொள்வார் என்று எனக்கு தோன்றவில்லை. உங்களை அவர் ஏற்றுக்கொண்டாரெனில் அது அவருக்கே இழிவு. நான்குநாள் போரில் கௌரவருடன் எதிர்நிற்க இயலாமையால் உங்களை படைத்துணைக்கு அழைத்தார் எனும் பொருள் வரும். அவருடைய வில்வல்லமைக்கும் தோள்திறனுக்கும் அது இழுக்கு” என்றான் யுயுத்ஸு. “இளைய பாண்டவர் பீமன் இங்கிருந்தால் சினந்து இழிசொல்லுரைத்து உங்களை திரும்பிச்செல்ல ஆணையிடுவார்.”

ருக்மியின் கண்கள் இடுங்கின. “ஆம்” என்றான். “அதை என் படைத்தலைவர்கள் கூறினார்கள். ஆகவேதான் பீமனை அவையில் சந்திப்பதற்கு முன்னரே அச்சொல்லை அர்ஜுனனிடமிருந்து பெற்றுவிடவேண்டுமென்று எண்ணினேன்” என்றான். “அதை நீங்கள் இளைய யாதவரிடமிருந்தே பெறலாமே?” என்றான் யுயுத்ஸு. “அவர்முன் சென்று நின்றால் அக்கணமே இயல்பாக என் ஆணவம் வடிந்து தோள்கள் குறுகிவிடக்கூடும். என்னையறியாமலே நான் பணிந்துவிடக்கூடும்” என்றான் ருக்மி.

யுயுத்ஸு திரும்பிப்பார்த்தான். முதன்முறையாக அவனிடம் வியப்புணர்ச்சி எழுந்தது. ருக்மி “பகைமையுடன் என்றாலும் இத்தனை ஆண்டுகள் ஒவ்வொரு கணமும் என இளைய யாதவரை எண்ணியிருந்தவன் நான் என்று தார்த்தராஷ்டிரர் சொன்னார். அது மெய். இப்புவியில் அவர் மணந்த மங்கையரைவிட அவரை எண்ணிக்கொண்டிருந்தவர்கள் சிசுபாலனும் நானுமே. கொன்று அவரை விண்புகச் செய்தார். வென்று என்னை அவர் விண்புகச் செய்யக்கூடும். அத்தருணத்தை நான் அறிவேன். ஆம், ஐயமே இல்லை. அவரை எதிர்கொண்டு அருகில் கண்டால் சென்று கால் பணிந்து வணங்குவதன்றி வேறு எதையும் என்னால் செய்ய இயலாது. அதற்கு முன்னரே அவரிடமிருந்து ஒரு சொல்லில் ஓர் அழைப்பு எனக்கு இளைய பாண்டவரினூடாக கிடைக்குமெனில் என் குலத்தார் முன் நிமிர்ந்து நின்று சொல்ல

ஏதுவாகும். அது ஒன்றையே இத்தருணத்தில் எண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்றான்.

“இப்போர் சென்றுகொண்டிருக்கும் திசையை நானறிவேன். ஒவ்வொரு நாளும் பேரழிவின் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நானும் என் படையும் இப்போரில் அழிவோம் என்பது ஒரு வாய்ப்பே. அதற்கு நான் தயங்கவில்லை. இவை இயல்பாக உரிய முறையில் முடியவேண்டும் என்பதற்கு அப்பால் நான் எண்ணுவது பிறிதில்லை” என்றான் ருக்மி. யுயுத்ஸு “ஒவ்வொன்றும் உரிய முறையில் முடிவதற்கான வழி ஒன்றே. அவை நிகழ்வொழுக்கில் சென்று தங்கள் முடிவை தாங்களே அடைவதற்கு விடுதல். அன்றாட வாழ்க்கையில் அனைத்தையும் பற்றிக்கொள்வதே வாழ்திறன். பிறிதோர் எல்லையில் அனைத்துப் பிடிகளையும் விட்டுவிடுவதே உலகியல் முதிர்வு” என்றான்.

ருக்மி “ஆம். உன் பேச்சும் யுதிஷ்டிரரைப் போலவே” என்றான். அவர்கள் குடிலை அணுகுவதற்குள் கதவு திறந்து உள்ளிருந்து இரு கைகளையும் விரித்தபடி வெளியே வந்த இளைய யாதவர் “விதர்ப்பரே, தாங்கள் வருகிறீர்கள் என்ற செய்தி கேட்டு வந்தேன். முன்பு போரில் உங்களுக்கு பெரும்பிழையொன்றை இழைத்துளேன். அதன் பொருட்டு என்னையும் என் குடியையும் தாங்கள் பொறுத்தருளவேண்டும். தங்கள் வில்லும் தோளும் எங்கள் படைகளுக்கு துணையென அமைய வேண்டும். பெருங்குடி ஷத்ரியர்கள் பிற குலத்தோரின் பிழை பொறுத்தலினூடாகவே மாண்பு கொள்கிறார்கள்” என்றபடி வந்து ருக்மியின் கால்களை தொடுவதற்காக குனிந்தார்.

உடல் நடுநடுங்க ருக்மி இரண்டடி பின்வைத்து யுயுத்ஸுவை பற்றிக்கொண்டான். அவன் பிடித்துக்கொண்ட யுயுத்ஸுவின் கையும் நடுங்கியது. கால்தளர்ந்து நிலத்தில் அமர்ந்த ருக்மி தன் முன் நிலத்தை தொட்டு தலை தாழ்த்தி “எந்தையே! என்னிறையே! இவ்வாடலில் நான் எங்கு அமைய வேண்டுமோ அதை இயற்றுக!” என்றான். இளைய யாதவர் அவன் இரு தோள்களையும் பற்றித் தூக்கி தன் நெஞ்சோடணைத்துக்கொண்டு “நன்று திகழ்க! புகழ் பெருகுக!” என்றார்.

கோசல நாட்டரசன் பிருஹத்பலன் சொல்சூழவையிலிருந்து வெளியே வந்ததும் தயங்கி நின்றான். அவனருகே வந்த தேர்வலன் “அரசே” என்றான். அவனிடம் “செல்க!” என கைகாட்டிவிட்டு அவந்தியின் விந்தனும் அனுவிந்தனும் வருவதற்காகக் காத்து நின்றிருந்தான். அவர்கள் ஒருவர் இருவராகும் விழிமயக்கு என அருகணைந்து தலைவணங்கியதும் “நாம் பேசவேண்டும்” என்றான். விந்தன் “தனியாகவா?” என்றான். “ஆம், இங்கே பேச இயலாத சில உள்ளன” என்றான் பிருஹத்பலன். “நம் குடிலுக்குச் செல்வோம்… கவசமணிய இன்னும் பொழுதுள்ளது” என்றான் விந்தன். விந்தன் பேசுகையில் அதே முகக்குறி அனுவிந்தனின் முகத்தில் உருவானது. அவனும் அச்சொற்களைச் சொல்லி நின்றதுபோல.

பிருஹத்பலன் “நான் அனைவரிடமும் பேசவிழைகிறேன். மாளவரும் வரட்டும்” என்றான். “கிருதவர்மர் வருகிறார்” என்றான் விந்தன். “நான் யாதவர்களைப் பற்றி பேசவில்லை” என்றான் பிருஹத்பலன். “ஆம், நாம் மட்டுமே பேசவேண்டிய சில உள்ளன” என்றான் விந்தன். அவர்கள் முற்றத்தை அடைந்தபோது உள்ளிருந்து உத்தர திரிகர்த்த நாட்டு அரசன் ஷேமங்கரனும் புளிந்த நாட்டு அரசன் சுகுமாரனும் பேசியபடி வந்தனர். பின்னால் தார்விக நாட்டரசன்

சசாங்கனுடன் திரிகர்த்தத்தின் மூத்த அரசர் சத்யரதர் வந்தார். பிருஹத்பலன் விந்தனிடம் “அவர்கள் அனைவரையும் என் குடிலுக்கு வரச்சொல்லலாம்” என்றான்.

தட்சிண திரிகர்த்தத்தின் சுசர்மன் பின்னால் தனியாக வந்தான். விந்தன் அதை நோக்கியபின் திரும்பி புன்னகைத்து “தந்தையும் மைந்தரும் தனித்தனியாக வருகிறார்கள். ஓரவையில் அவர்கள் ஒற்றைச் சொல் எடுத்து நான் கண்டதில்லை” என்றான். அனுவிந்தன் “நானே சென்று சொல்கிறேன், அவர்களை ஒருங்குகூட்டவேண்டியது நம் தேவை” என்று அவர்களை நோக்கி சென்றான். அபிசார மன்னர் சுபத்ரரும் அரேவாக மன்னர் சிம்மவக்த்ரரும் சேர்ந்தே வந்தார்கள். அவர்களும் சோர்ந்திருந்தனர். எனவே சொற்களில்லாத எடைகொண்ட முகத்துடன் தளர்ந்த காலடிகளுடன் அணுகினர். அபிசாரர்களின் இளவரசர்கள் நிசந்திரன், மிருதபன், சுவிஷ்டன் ஆகியோர் களம்பட்டதை பிருஹத்பலன் நினைவுகூர்ந்தான். சுபத்ரரின் கைகள் எதையோ காற்றில் துழாவுவனபோல் அசைந்துகொண்டிருந்தன.

பிருஹத்பலன் “கலிங்கர்களின் களவீழ்ச்சிக்குப்பின் ஷத்ரியர்கள் தலைமையற்றவர்களாக ஆகிவிட்டனர். போர் இன்று நம் கையிலிருந்து முற்றாக நழுவிவிட்டது” என்றான். விந்தன் குரல் தாழ்த்தி “ஆனால் திரிகர்த்தர்களை ஷத்ரியர்கள் என எவரும் ஏற்றுக்கொள்வதில்லை” என்றான். பிருஹத்பலன் சீற்றத்துடன் “நாம் இந்த குடிமேன்மைப் பேச்சை என்று தவிர்க்கிறோமோ அன்றுதான் வாழ்வோம். இங்கே களத்தில் உயிருடனிருப்பவர்கள் சிலரே. நாம் ஒருங்கிணைந்தாகவேண்டும்” என்றான். “ஆம், ஆனால் ஷத்ரியர் என்னும் அடையாளத்துடன் ஒருங்கிணைகிறோம். அப்போது எவர் ஷத்ரியர் என்று நோக்கவேண்டியிருக்கிறதல்லவா?” என்றான் விந்தன்.

பிருஹத்பலன் பெருமூச்சுவிட்டு தலையை அசைத்து “அக்கணக்கை எடுக்கப்போனால் எஞ்சுபவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். அவந்தியின் அரசர்களின் குடித்தெய்வங்கள் இன்றும் காட்டில் மலைவேடர்களுக்கும் தெய்வங்களே” என்றான். விந்தன் சீற்றத்துடன் ஏதோ சொல்ல நாவெடுக்க “இதை நாம் பேசவேண்டுமென்றால் போர் முடியட்டும். நாடு பகுக்கப்படுகையில் சொல்லாடுவோம். இப்போது இக்களத்திலிருந்து நம்மில் எவர் எவ்வண்ணம் எஞ்சி மீளப்போகிறோம் என்பதைப்பற்றி மட்டுமே பேசவிருக்கிறோம்” என்றான். விந்தன் பொருமலுடன் தன் மொழியில் ஏதோ சொல்லி தலையை திருப்பிக்கொண்டான்.

பிருஹத்பலன் “நான் என் குடிலுக்குச் செல்கிறேன். அரசர்கள் ஒவ்வொருவராக அங்கே வரட்டும்” என்றான். அவன் செல்வதற்கு திரும்ப அருகே வந்த காரூஷ நாட்டு அரசர் க்ஷேமதூர்த்தி “என்ன நிகழ்கிறது? இங்கே ஒரு ஷத்ரியர் சந்திப்பு என்று என்னிடம் அவந்தியின் இணையரசன் சொன்னான். அதற்கு ஏன் திரிகர்த்தர்களை அழைக்கவேண்டும்? அவர்களின் உடலில் இன்றும் மலையூனின் மணம் வீசுகிறது. எளிய வேடர்கள். அவர்களின் மணிமுடியிலிருக்கும் இறகு என்ன? நோக்குக, அது இறகல்ல, மலையணிலின் வால்!” என்றார். பிருஹத்பலன் சலிப்புடன் “விந்தர் விளக்குவார்” என்று சொன்னபின் தன் தேர்வலனை நோக்கி தலையசைத்தான். அவன் தேரை கொண்டுவந்து நிறுத்த அதில் ஏறி அமர்ந்துகொண்டான்.

தன் பாடிவீட்டுக்குச் சென்று முற்றத்தில் இறங்கியதும்தான் அங்கே அனைத்து அரசர்களும் வந்தால் அமர இடமில்லை என்பதை உணர்ந்தான். தேர்வலனிடம் “இங்கே அரசர்கள் அமர்வதற்கான பீடங்கள் போடமுடியுமா?” என்றான். அவன் “இருக்கைகள் போட இயலாது, அரசே. ஆனால் தேரிலேறுவதற்கான படிப்பெட்டிகள்

உள்ளன. அவற்றை இருக்கைகள் என இந்த மரத்தடியில் போட முடியும்” என்றான். “சரி, அவையே போதும். ஒருநாழிகைப்பொழுதுதான்... இதோ முரசு முழங்கத் தொடங்கிவிடும்” என்றான்.

அவன் பெட்டிகளை போட்டுக்கொண்டிருக்கையிலேயே கேகய மன்னன் திருஷ்டகேதுவும் மாளவ மன்னர் இந்திரசேனரும் வந்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவில்லை. பிருஹத்பலன் “இங்கே நாம் ஒரு முறையான அரசவையை கூட்டப்போவதில்லை. நாம் ஒரு சில சொற்களை பேசிக்கொள்ளவேண்டியிருக்கிறது” என்றான். “நாம் முறையாகவே இரவு கூடுவோமே” என்றான் திருஷ்டகேது. “மாலையில் நம்மில் எவர் எஞ்சுவோமென தெரியாது. மேலும் மாலையில் நம் உள்ளங்கள் கொந்தளித்துக்கொண்டிருக்கின்றன” என்றான் பிருஹத்பலன்.

“நேற்று காலையில் நான் சுதக்ஷிணரிடம் இதைப் பற்றி பேசினேன். இன்று அவர் நம்முடனில்லை.” விந்தன் “எங்கள் மைந்தர்கள் புஷ்கரனும், புஷ்பதந்தனும், புஷ்பமித்திரனும் களம்பட்டனர். இந்தப் போர் காட்டெரியைப்போல் எங்கள் குலத்தை அழிக்கிறது” என்றான். பிருஹத்பலன் “என் குடியின் மைந்தர்கள் பன்னிருவர் களம்பட்டனர். நான் பேசத்தொடங்குவது அங்கிருந்தே” என்றான்.

இந்திரசேனர் “நாம் இழப்புகளைப்பற்றி பேசவேண்டியதில்லை. நிகழவேண்டியதென்ன என்று மட்டும் பேசுவோம்” என்றார். “ஆம், அதன்பொருட்டே கூடுகிறோம்” என்றான் பிருஹத்பலன். கூர்ஜர சக்ரதனுஸும் சைப்ய நாட்டு கோவாசனரும் சாரஸ்வதரான உலூகரும் சால்வநாட்டு த்யுமந்தசேனரும் ஆஃபிரநாட்டின் உக்ரதர்சனரும் வந்தனர். அவர்களை அமரச்செய்துகொண்டிருக்கையிலேயே வங்கத்தின் சமுத்ரசேனரும் சந்திரசேனரும் வந்தனர். மாகிஷ்மதியின் நீலரின் தேரில் சௌராஷ்டிர நாட்டின் ருஷார்திகரும் வந்தார். மேழிக்கொடி பறக்கும் விதேகநாட்டு தேர் வந்து நிற்க அதிலிருந்து அரசர் நிமி இறங்கினார். சௌவீரர் சத்ருஞ்சயர் தன் மைந்தருடன் வந்தார்.

அவர்கள் அமர்வதற்கு இடம்போதாமலாக மேலும் பெட்டிகளுக்காக ஏவலர் ஓடினர். அவர்கள் அமர்ந்ததும் பிருஹத்பலன் இன்னீரும் வாய்மணமும் கொண்டுவர தன் ஏவலரை அனுப்பினான். “பகதத்தர் வரவில்லையா?” என்று நிமி கேட்டார். சமுத்ரசேனர் “அவர் ஓய்வெடுக்கிறார். நேற்றைய போரில் இரண்டு இடங்களில் கதையால் அறைபட்டிருக்கிறார்” என்றார். “இந்தப் போரில் அறைபட்டு வீழாத எவரேனும் இருக்கிறோமா என்ன?” என்றார் நீலர். “நான் என் மைந்தரை இழந்தேன்” என்றார் மாளவ மன்னர். “என் பட்டத்து இளவரசன் உலூகன் களம்பட்டான். இளையோர் எழுவர் இறந்தனர். என் மைந்தர்கள் அசீதனும் அஸ்மாதனும் அப்ரமாதனும் நேற்றும் என் கனவிலெழுந்தனர். இந்த வேள்வித்தீயில் இனி நான் என்னைத்தான் அவியாக்கவேண்டும்.”

கூர்ஜர மன்னர் சக்ரதனுஸ் “என் பட்டத்து இளவரசன் மகிபாலன் கொல்லப்பட்டான். இளைய மைந்தன் உத்ஃபுதனையும் இழந்துள்ளேன்” என்றார். “நாம் இறந்தவர்களைப்பற்றி பேசவேண்டாம்” என்றார் உக்ரதர்சனர். பிருஹத்பலன் “நான் பேசவிழைவது நம் எதிர்காலத்தைப்பற்றித்தான்” என்றான். “இந்தப் போர் எங்கே செல்கிறது? இது தொடங்கும்போது நாம் எண்ணியதல்ல இப்போது நடந்துகொண்டிருப்பது. நாம் அழிந்துகொண்டிருக்கிறோம்.” மன்னர்கள் கூட்டமாக “ஆம்” என்றனர். சமுத்ரசேனர் “நம் மைந்தர்கள் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள்” என்றார். “அது பிதாமகர் பீஷ்மர் தொடங்கிவைத்தது. அவர் முதல்நாள் அவர்களின்

இளவரசர்களை கொன்றார், அவர்கள் பழிநிகர் செய்கிறார்கள்” என்றார் க்ஷேமதூர்த்தி.

சுபத்ரர் “போர் எனில் அழிவு இருக்கும்” என்றார். “ஆம், ஆனால் முற்றழிவென்பது பொருளற்றது. நாம் எந்த வஞ்சத்துக்காகவும் போருக்கெழவில்லை. குலம்காக்கவோ குடிப்பெருமைக்கோ படைக்கலம் தூக்கவில்லை. நாம் வந்தது நிலத்துக்காக. நமக்குக் கிடைக்கவிருக்கும் நிலங்களுக்காக நாம் மைந்தரை இழக்கவேண்டுமா?” என்றான் பிருஹத்பலன். “போரில் பிறகென்ன நிகழுமென எண்ணுகிறீர்கள்?” என்று நிமி கேட்டார்.

“போரில் வீரர்கள் களம்படுவார்கள். அரிதாகவே அரசகுடியினர் வீழ்வார்கள். அரசகுடியினரை அரசகுடியினரே எதிர்க்கவேண்டும் என்று நெறி உள்ளது. அவ்வாறு வீழ்வது பெருமைக்குரியதும்கூட. சூதர்சொல்லில் வீழ்ந்தவர் வென்றவருக்கு நிகராகவே வாழ்வார். அவர்கள் விண்ணுலகில் தோள்தழுவிக்கொண்டு மகிழ்வார்கள். ஆனால் இங்கே அதுவா நிகழ்கிறது? என் மைந்தர்கள் லோகிதனையும் சியாமனையும் தீர்க்கபாகுவையும் கொன்றவன் கடோத்கஜன். அவ்வரக்கன் இங்குள்ள எத்தனை பேரின் மைந்தர்களை கொன்றான் என சொல்லுங்கள்…”

அவை அமைதியாக இருந்தது. “சொல்க, எத்தனை பேரை?” என்றான் பிருஹத்பலன். “சொல்லமாட்டீர்கள். இங்குள்ள அனைவர் குடியிலும் ஓர் இளவரசனையேனும் அவன் கொன்றிருக்கிறான். இந்தப் போரில் இப்படி வல்லரக்கன் கையில் உயிர்விடவா நாம் மைந்தரை ஈன்றோம்?” என்று பிருஹத்பலன் கேட்டான். அவையினர் ஆழ்ந்த அமைதியில் அசைவிழக்க நீலன் “நம் மைந்தர் இங்கே மழைக்கால நத்தைகளை தேர்கள் அரைத்தழிப்பதுபோல பீமனாலும் அவன் மைந்தர்களாலும் கொல்லப்படுகிறார்கள். என் உடன்பிறந்தார் மணிர்மன், குரோதவான், மகாக்குரோதன், சண்டன், சுருரோணிமான் ஆகியோர் மண்புகுந்த பின் வெற்றியும் தோல்வியும் எனக்கொரு பொருட்டாகத் தெரியவில்லை” என்றார்.

“நான் எண்ணிவந்தது இதை அல்ல. இப்படி ஒரு போரை எங்கள் நூல்கள் சொல்லவில்லை” என்றான் பிருஹத்பலன். “ஷத்ரியர் நிலம் நாடி போரிடுவதுண்டு. இந்தக் கீழரக்கர்களிடம் நாம் ஏன் பொருதவேண்டும்?” அவையிலிருந்த அனைவரும் சேர்ந்து குரலெழுப்பினர். “ஆம், இது போரே அல்ல. இது வெறும் கொலைவெளி” என்றான் விந்தன். “இங்கே நாம் மைந்தரை இழந்து மீண்டு சென்று அடையப்போவது என்ன?” என்றார் உலூகர். “நாம் இங்கே போரிடுவது கீழ்மக்களிடம்… அசுரர்களும் அரக்கர்களும் நம் மைந்தரை கொல்கிறார்கள்.”

“கோசலரே, நாம் என்றாயினும் இந்த அரக்கர்களையும் அசுரர்களையும் நிஷாதர்களையும் கிராதர்களையும் அழித்தேயாகவேண்டும். உண்மையில் இவர்களை எதிர்கொண்டு அழிக்க நம்மால் இயலவில்லை என்பதனால்தான் வாளாவிருந்தோம். நாம் போருக்கெழுந்ததே இவர்கள் மீதுள்ள அச்சத்தால்தான். அவர்களுக்காக நாம் ஒருங்கிணைந்தால் அதுவே அவர்களை ஒருங்கிணைய வைத்துவிடுமென அஞ்சினோம். கீழ்மக்களுக்காக ஷத்ரியர் ஒருங்கிணைந்தனர் என்னும் பேச்சு வந்துவிடலாகாது என நாணினோம். கேளிக்கையாடி சோம்பியும் குடிப்பெருமை பேசி பூசலிட்டும் பொழுது கடத்தினோம். இது ஓர் வரலாற்று வாய்ப்பு என்று கருதியே இங்கே ஒருங்கிணைந்தோம்” என்றார் சக்ரதனுஸ்.

கேகயன் “இல்லை, அதன்பொருட்டு அல்ல. நாம் கூடியது வேதம் காக்கும்பொருட்டு” என்றான். “ஆம், அவ்வாறு எங்கும் சொல்லிக்கொள்ளவேண்டியது நமக்கு இன்றியமையாதது. ஆனால் அதை நமக்குநாமே சொல்லிக்கொள்ள

வேண்டியதில்லை. வேதங்களை ஜராசந்தர் கால்கீழிலிட்டு அரைத்தபோது நாம் என்ன செய்தோம்? அவர் அசுரவேதத்தை மகதத்தில் நிறுவியபோது அவர் நடாத்திய வேள்விகளில் ஒன்றிலேனும் நாம் பங்குகொள்ளாதொழிந்தோமா?" என்றார் சக்ரதனுஸ். அவையினர் அமைதியிழந்து உடலசைவுகொள்ள சக்ரதனுஸ் "நாம் இன்றுகூட திரிகர்த்தர்களையும் மல்லர்களையும் உடன்வைத்து அமர்ந்திருக்கிறோம். அவர்கள் உடலிலிருந்து வேடர்களின் குருதி அகன்றுள்ளது என்று எந்தத் தெய்வம் உரைத்தது?" என்றார்.

சத்யரதர் சீற்றத்துடன் எழுந்து "என் குடியை பேசியவன் வாளை எடுக்கட்டும்... இப்போதே" என்றார். "நாங்கள் வாளை எடுத்து ஆயிரமாண்டுகளாகின்றன" என்றார் சக்ரதனுஸ். இந்திரசேனர் "நாம் இங்கே பூசலிடுவதற்காகவா கூடினோம்? பூசலிடுவதென்றால் அங்கே களத்துக்கே செல்வோம்" என்றார். "மூடர்கள்" என்றபடி அவர் எழப்போக பிருஹத்பலன் "அமர்க, அமர்க... பேசுவோம்!" என்றான். அனைவரும் எழுந்து பிறரை அமரச்செய்ய அவை மெல்ல அடங்கியது. சற்றுநேரம் அமைதி நிலவியது. சக்ரதனுஸ் "நான் சொல்லவந்ததை சொல்லலாமா?" என்றார். "சொல்க!" என்றார் இந்திரசேனர்.

சக்ரதனுஸ் "நாம் எந்த மேற்பூச்சும் இன்றி பேசுவோம். நாம் இப்போருக்கு வந்தது நம் நிலங்களைச் சூழ்ந்து நெருக்கி நம்மை குறுக்கிக்கொண்டிருக்கும் அசுரர்களையும் அரக்கர்களையும் நிஷாதகிராதர்களையும் வெல்லும்பொருட்டே. அவர்கள் நேற்றுவரை காட்டில் கற்படைசூடி, ஊன்வேட்டையாடி, தோலாடை உடுத்தி, குகைகளிலும் மரங்களிலும் வாழ்ந்தனர். இன்று அவர்களுக்கு ஊர்களும் நகரங்களும் அமைகின்றன. சந்தைகள் உருவாகின்றன. வணிகப்பாதைகள் நீள்கின்றன. அவற்றினூடாகச் செல்லும் சகடங்களுக்கு இடும் தீர்வையே நம் செல்வம். அது அவர்களை சினமூட்டுகிறது. அதற்கு எதிராக அவர்கள் படை திரட்டுகிறார்கள். தங்களுக்கான தனிப் பாதைகளையும் படித்துறைகளையும் உருவாக்கிக்கொள்கிறார்கள். நாம் அவர்களை வெல்லாமல் ஓர் அடிகூட முன்னெடுக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டோம்" என்றார்.

"இந்தப் போர் வேதங்களின் பொருட்டு, குலநெறிகளின் பொருட்டு, ஷத்ரியக் குருதியின் பொருட்டு என்ற சொற்களுக்கு அடியில் நாம் கொண்டுள்ள மெய்யான நோக்கம் இதுவே. அதை இந்தக் களத்திலன்றி நம்மால் எங்கும் நிறைவேற்றிக்கொள்ள இயலாது. இங்கேயே நாம் அவர்களை அழிக்கவேண்டும். வேருடன் பிடுங்கவேண்டும்" என்றார் சக்ரதனுஸ். "ஆகவே நமக்கு வேறுவழியில்லை." நிமி "அந்நோக்கம் நிறைவேறுகிறதா?" என்றார். "அது இத்தனை கடினம் என நாம் எண்ணியிருக்கவில்லை. மெய்தான்" என்றார் சக்ரதனுஸ். "அவர்கள் பெருந்திரளென இப்படி ஒருங்கிணைவார்கள் என நாம் கருதவில்லை. இவ்வளவு திறனுடன் போரிடுவார்கள் என நாம் எவருமே எண்ணியிருக்கமாட்டோம்" என்றார் நீலன்.

"ஏன் அவர்கள் அவ்வாறு போரிடுகிறார்கள் என்பதை நாம் அறியோமா என்ன?" என்றார் உலூகர். "நம் தரப்பிலிருக்கும் மாபெரும் பிழை அது. அதைத் தவிர அனைத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம்." கோவாசனர் "என்ன சொல்கிறீர்கள்?" என்றார். உலூகர் "அவர்களை மட்டும் நாம் எதிர்த்திருந்தால் இதற்குள் வென்று அவர்களின் நிலங்களை எரியூட்டியிருப்போம். அவர்களிடம் படைக்கலங்கள் குறைவு. படைசூழ்கைகள் அவர்களுக்கு தெரியாது. ஒரு பெரும்படையெனத் திரள அவர்களின் குலமுறைகளும் மூப்பிளமைகளும் இடம்தரா. இப்போது நாமே அவர்களுக்கு அவையனைத்தையும் அளித்துவிட்டோம். அரசர்களே, கீழ்க்குடியினருக்காகப் போரிட பாரதவர்ஷத்தின் மாபெரும்

போர்வீரர்கள் இருவரை அளித்தது நாமே. படைசூழ்கை அறிந்த ஷத்ரியத் தலைவர்களையும் நாமே அளித்தோம். நாம் இங்கே திரண்டமையால்தான் அவர்களை பாண்டவர்கள் திரட்டிக்கொண்டனர். இன்று மறுபக்கமிருப்பது ஷத்ரியத்தலைமையால் நடத்தப்படும் அசுரவிசை. அதை வெல்வது எளிதல்ல” என்றார்.

“அவர்களை நடத்துவது அர்ஜுனனோ பீமனோ திருஷ்டத்யும்னனோ அல்ல, இளைய யாதவன்” என்றான் பிருஹத்பலன். “எந்நிலையிலும் அவனை நாம் எதிர்த்தேயாகவேண்டும். நாம் வெற்றுச்சொற்கள் பேசிக்கொண்டிருப்பதில் பொருளில்லை.” சுபத்ரர் “அவனைத்தான் எதிர்க்கவேண்டும் என்றால் அவன் பாண்டவர்களுடன் இணையாமல் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். யாதவர்களிடமிருந்து அவனை பிரித்தோம், அவ்விசையிலேயே அவனை அழிக்க முயன்றிருக்கவேண்டும்” என்றார். பிருஹத்பலன் “அவனை சூழ்ச்சியில் வெல்ல நம்மால் இயலாது. பாண்டவர்கள் அவனை தெரிவுசெய்யவில்லை, அவன் அவர்களை தெரிவுசெய்திருக்கிறான்” என்றான்.

“என்றேனும் இப்போர் நிகழும் என அறிந்திருந்தேன்” என்றார் கோவாசனர். “நாளெண்ணி காத்திருந்தேன். உண்மையில் நமக்கு ஒரே வழிதான் இருந்தது. துவாரகையை ஷத்ரியநாடென ஏற்று இளைய யாதவனை நம் அவைகளில் அமரச்செய்வது. அதனூடாக நாம் வெல்லமுடியாதவர்களாக ஆகியிருப்போம். அவனையும் நம்முடன் சேர்த்துக்கொண்டு இழிசினரை வென்று பாரதவர்ஷத்தை முழுதடைந்திருக்கலாம். நம் அறிவின்மையால், ஆணவத்தால் அவனை இழிசினர் பக்கம் சேர்த்தோம்.” பிருஹத்பலன் “எவர் சேர்த்தது? என்ன சொல்கிறீர்கள்?” என்றான். கோவாசனர் “ஆம், சேர்த்தவர்கள் நாமே. எங்கெல்லாம் இளைய யாதவன் பெண்கொண்டானோ அந்த ஷத்ரியர்களெல்லாம் அதை குலச்சிறுமையாக எடுத்துக்கொண்டார்கள். அவர்களை அவையிழிவு செய்து நாமும் அதை நிலைநாட்டினோம். எந்நிலையிலும் இளைய யாதவனை ஷத்ரிய அவைகளுக்குள் அமரமுடியாதவனாக ஆக்கினோம்…” என்றார்.

கேகயன் “எங்களை பழி சொல்கிறீர்களா?” என்று சீறியபடி எழுந்தான். கோவாசனர் “ஆம், உங்களைத்தான் பழிசொல்கிறேன். உங்கள் வஞ்சங்களை ஷத்ரியர்களின் பொது உணர்வாக மாற்றினீர்கள்” என்றார். கேகயன் “உங்கள் அறிவு எங்கு சென்றது?” என்றான். நீலன் “நாம் பூசலிட வேண்டியதில்லை… அதனால் இனி எந்தப் பயனும் இல்லை” என்றார். விந்தன் “அரசர்களே, நான் கேட்பது ஒன்றே. நாம் இளைய யாதவனை நம்முடன் சேர்த்துக்கொண்டு ஷத்ரிய அவையில் இடமளித்தோம் என்றால் எந்த இடத்தை அளித்திருப்போம்?” என்றான்.

அவையினர் சலசலக்க விந்தன் “நாங்கள் ஷத்ரியர்களாகி வேள்விகளை செய்யத்தொடங்கி ஐநூறாண்டுகளாகின்றன. ஆயினும் இன்றும் காசியும் கேகயமும் விதேகமும் எங்களுக்கு மேல்தான். அவர்களுக்குக் கீழே அமைந்த கலிங்கமும் வங்கமும் பிரக்ஜ்யோதிஷமும்கூட எங்களுக்கு மேலே. இந்த அடுக்கில் இறுதியில் நாம் அளிக்கும் ஓர் துணையரசனுக்குரிய பீடத்தில் வந்தமர இளைய யாதவன் விரும்புவான் என நினைக்கிறீர்களா? அந்த இருக்கையின்பொருட்டு நம்முடன் சேர்ந்துகொண்டு இழிசினரை முற்றழிக்க அவன் உடன்படுவான் என எப்படி கருதுகிறீர்கள்?” என்றார்.

“அரசன் குடிகளின் கொடி மட்டுமே” என்றார் சக்ரதனுஸ். “யாதவர் ஷத்ரிய அடையாளத்தை விழைகிறார்கள். அதன்பொருட்டு அவனையே துறக்கவும் ஒருங்கிவந்துள்ளனர். அன்றே அந்த அடையாளத்தை நாம் அவர்களுக்கு

அளித்திருந்தோமென்றால் குடிகளை மீறி அவன் ஒன்றும் செய்திருக்கவியலாது.” பிருஹத்பலன் “அவனை நீங்கள் அறிந்தது அவ்வளவுதான்” என்றான். “அவனுடைய எண்ணங்கள் ஏதும் இன்று இக்களத்தில் வைத்து நாம் அறிந்துகொள்ளத் தக்கன அல்ல.”

உக்ரதர்சனர் “நாம் இதையெல்லாம் ஏன் பேசிக்கொண்டிருக்கிறோம்? இன்னும் சற்றுநேரத்தில் போர்முரசுகள் முழங்கும். நாம் இன்னும் கவசங்களையே அணியவில்லை” என்றார். “நான் சொல்லவந்ததை சொல்லிவிடுகிறேன். இப்போர் இவ்வண்ணமே தொடர்ந்தால் முற்றழிவுதான் எஞ்சும். இன்று ஷத்ரியர்களைவிட பிற அரசர்களின் ஆற்றல் மிகுந்துள்ளது. இப்போது கலிங்கம் அழிந்துவிட்டது. வலுவான ஷத்ரிய அரசுகளில் ஒருசில களத்தில் அழியுமென்றால் ஷத்ரிய ஆற்றலே பாரதவர்ஷத்திலிருந்து அகன்றுவிடும்.”

அவர்கள் அச்சொற்களால் தாக்கப்பட்டவர்கள்போல விழிகள் நிலைக்க நோக்கினர். “அறிக, நம் ஆற்றல்மிக்க பட்டத்து இளவரசர்கள் மறைந்துகொண்டிருக்கிறார்கள். மறுபக்கமிருந்து கடோத்கஜன் உள்ளிட்ட கீழோர் நம் இளவரசர்களையே இலக்காக்கி அழிப்பது தொலைநோக்கு கொண்டது. இப்போரில் நாம் வென்றாலும்கூட ஆற்றல்மிக்க அடுத்த தலைமுறை அரசர்கள் நம் நாடுகளில் உருவாக மாட்டார்கள்.” கோவாசனர் “ஆம், அதை நானும் உணர்ந்தேன்” என்றார்.

பிருஹத்பலன் “நாம் இன்று செய்வதற்கொன்றே உள்ளது. இப்போரை இன்றோடு நிறுத்துவோம். இரு தரப்பினரும் ஓர் உடம்பாடுக்கு வரட்டும்” என்றான். “அதெப்படி? போர் இன்று உச்சத்திலுள்ளது… துரியோதனர் வெறிகொண்டிருக்கிறார்” என்றார் இந்திரசேனர். “அந்த வெறியை அவர் நம் இழப்பின் வழியாக தீர்த்துக்கொள்ளலாகாது. அவரே நேருக்குநேர் பீமசேனரிடம் போரிடட்டும்… அவர்கள் தங்களுக்குள் கொள்ளும் பூசலுக்கு ஷத்ரியர் பலியாக வேண்டாம்” என்றான் பிருஹத்பலன்.

“நாம் பின்வாங்குவதா? நம்மை கோழைகள் என்பார்கள்” என்று நிமி சொன்னார். “அதற்குரிய வழியை கண்டுபிடிப்போம்…” என்றான் பிருஹத்பலன். “நான் அதற்கொரு வழியை எண்ணினேன். அதையே இங்கு முன்வைக்க எண்ணினேன். விதர்ப்பராகிய ருக்மி தூய ஷத்ரியக்குருதி கொண்டவர். அவருடைய வஞ்சம் குலமிலியான இளைய யாதவனுக்கு எதிரானது. அது ஷத்ரியர்களாகிய நாமனைவருமே கொண்டிருக்கும் வஞ்சம். அவரை துரியோதனர் இழிவுசெய்து அனுப்பியதில் நமக்கு உடம்பாடில்லை. ருக்மியை நம் படைக்குள் சேர்த்துக்கொள்ளவேண்டும். துரியோதனர் அவரை அழைத்துவந்து பொறுத்தருளும்படி கோரவேண்டும்.”

சக்ரதனுஸ் “என்ன சொல்கிறீர்கள்? எவர் பணிவது, தார்த்தராஷ்டிரரா?” என்றார். “ஆம், அவர் பணிய மாட்டார். அவர் பணியாவிட்டால் நாம் போருக்கு ஒப்பவும் மாட்டோம். ஷத்ரியர்களாகிய நாம் ஷத்ரியர்களில் ஒருவரின் தன்மதிப்பின்பொருட்டு போரிலிருந்து விலகுவதில் பிழையே இல்லை.” அவையில் அமைதி நிலவியது. நீலன் “நல்ல திட்டம்தான்” என்றார். “இது ஒரு நல்வாய்ப்பு… ஆகவேதான் இதை உடனே செய்யவேண்டுமென நான் முடிவெடுத்தேன்” என்றான் பிருஹத்பலன்.

“இப்போதேவா?” என்றார் சக்ரதனுஸ். “நமக்கு பொழுதில்லை… நம் தரப்பில் மாளவர் செல்லட்டும். துரியோதனரிடம் பேசட்டும்.” இந்திரசேனர் “நானா?” என்றார். “நீங்களே எங்களில் மூத்தவர்… தார்த்தராஷ்டிரர்களுக்கு சற்று அணுக்கமானவர்”

என்றான் பிருஹத்பலன். “நான் சொல்கிறேன், ஆனால்…” என்றார் இந்திரசேனர். “நீங்கள் சொல்லுங்கள், நிகழ்வதென்ன என்று பார்ப்போம்” என்றான் பிருஹத்பலன்.

“சரி, நாம் விலகிக்கொண்டால் போர் நின்றுவிடுமா என்ன?” என்று கோவாசனர் கேட்டார். “நிற்கவே வாய்ப்பு. இங்குள்ள படைகளில் பெரும்பகுதி நாமே. இருக்கும் படைகளைக்கொண்டே பாண்டவர்களை வெல்ல இயலவில்லை. நாம் விலகிக்கொண்டால் தோல்விதான். ஐயமே தேவையில்லை. ஒருவேளை போர் தொடர்ந்து நிகழுமென்றால் அதுவும் நன்றே. நம் எதிரிகள் இருவருமே ஆற்றல் குன்றி அழிவார்கள். நாம் நம் ஆற்றலுடன் விலகிக்கொண்டோமென்றால் இருவரையுமே வெல்லலாம்” என்று பிருஹத்பலன் சொன்னான்.

“இருவரையுமா?” என்று சக்ரதனுஸ் கேட்டார். “ஆம், இழிசினர் நம் உடனடி எதிரிகள். ஆனால் பாரதவர்ஷம் மீது முற்றாகக் குடைவிரித்தாள எண்ணும் தார்த்தராஷ்டிரர்களும் நம் எதிரிகளே…” என்றான் பிருஹத்பலன். “அத்துடன் ஒன்றுண்டு, அசுரர்களையும் அரக்கர்களையும் நாம் ஏன் போர்முறைமைப்படி எதிர்க்கவேண்டும்? நஞ்சும் தீயுமிட்டு அழிப்போம். வஞ்சமும் சூதும் வளர்த்து அவர்களே போரிடச்செய்து ஒழிப்போம். அனைத்துக்கும் நூல்கள் ஒப்புதலளிக்கின்றன. அவர்களை நாம் அரசர்களென்றல்ல, விலங்குகள், பூச்சிகள் என்றே கருதவேண்டும். இங்கு நாம் செய்யும் பிழை அவர்களை போர்நெறிப்படி களம்நின்று எதிர்த்துக்கொண்டிருப்பதுதான்.”

இந்திரசேனர் “எண்ணிப்பார்க்கையில் உகந்த முடிவென்றே தோன்றுகிறது” என்றார். “அவ்வண்ணமென்றால் நாம் இங்கே ஒரு முடிவெடுக்கவேண்டும். நாம் ஒற்றைத்திரளென நின்றிருக்கவேண்டும். எடுக்கப்படும் முடிவுகளுக்கு அனைவரும் கட்டுப்பட்டாகவேண்டும். நாம் போர்முனையிலிருந்து கிளம்புகிறோம் என்று சொன்னால் தார்த்தராஷ்டிரர்கள் நம்மை அச்சுறுத்தலாம், விழைவும் காட்டலாம். எதற்கும் நாம் மயங்கிவிடலாகாது” என்றான் பிருஹத்பலன்.

“ஆம், உண்மை!” என்றார் உக்ரதர்சனர். அவையிலிருந்த அரசர்கள் அனைவரும் “ஆம், அவ்வாறே” என குரலெழுப்பினர். “இன்று பீஷ்மர் மண்டலவியூகத்தை அமைத்திருக்கிறார். சிறுசிறு குழுக்களாக படைகளை அமைத்து ஒன்றென மையச்சரடொன்றால் திரட்டும் இச்சூழ்கை மிக ஆற்றல்மிக்கது என்பார்கள். ஒவ்வொரு யானைக்கும் ஏழு தேர்கள். ஒவ்வொரு தேருக்கும் ஏழு புரவிவேலவர். ஒவ்வொரு புரவிக்கும் பத்து வில்லவர். ஒவ்வொரு வில்லவருக்கும் பத்து நடைவேலவர் என அமைந்திருக்கும் இந்தச் சூழ்கையை உடைத்து உள்ளே நுழைவது மிக எளிது, மீள்வது அரிது. இது எறும்புகளால் அமைக்கப்படும் சூழ்கை என்பார்கள். இன்று பாண்டவர்கள் போர்தொடரவேண்டாம் என முடிவெடுக்கக்கூடும்” என்றார் உக்ரதர்சனர்.

“பாண்டவர்களுடன் இருப்பவர் இளைய யாதவர்” என்று மட்டும் இந்திரசேனர் சொன்னார். “இன்றைய போர் இன்னும் அரைநாழிகைக்குள் தொடங்கும். இனி நாம் ஏதும் சொல்லமுடியாது, நம் படைகளையும் விலக்கிக்கொள்ள முடியாது. இப்போர் முடியட்டும். இதில் பாண்டவர்களுக்கு இழப்பு என்றால் துரியோதனரிடம் பாண்டவர்கள் சோர்ந்திருக்கும் தருணம் இது, அவர்களை பேச்சுக்கு அழைப்போம் என்று சொல்வோம். மாறாக நமக்கே பேரிழப்பு என்றால் இனிமேலும் போரிடுவதில் பொருளில்லை, மண்டலச்சூழ்கையையே அவர்கள் வென்றார்கள் என்றால் இனி எதைக்கொண்டு நம்பிக்கையை பேணுவது என்று கேட்கலாம்” என்று பிருஹத்பலன் சொன்னான்.

“ஆம், இன்று மாலை மாளவர் பேசட்டும்” என்றார் சக்ரதனுஸ். அவையினரும் “ஆம், மாலை பேசுக!” என்றனர். உக்ரதர்சனர் எழுந்துகொண்டு “நாம் கிளம்புவோம்… முரசுகள் முழங்கத்தொடங்கிவிட்டன” என்றார். “இன்றைய போரில் நாம் இழப்புகளின்றி மீள முயல்வோம். கூடுமானவரை படைகளையே முன்னணிக்கு அனுப்புவோம். இன்று போர்க்களத்திலேயே சகுனிக்கு நாம் போருக்கு உளம்கொள்ளவில்லை என்பது தெளிவாவது நன்று” என்றான் பிருஹத்பலன். “ஆம், அதுவே வழி” என்று குரல்கள் எழுந்தன.

அவர்கள் கிளம்பும்போது உக்ரதர்சனர் “அவர்களின் படைசூழ்கை என்ன?” என்று கேட்டார். “நமது படைசூழ்கையை அவர்கள் இதற்குள் அறிந்திருப்பார்கள். தங்கள் சூழ்கையை வகுத்துக்கொண்டிருப்பார்கள்” என்றார் இந்திரசேனர். பிருஹத்பலன் “அவர்கள் வஜ்ரவியூகத்தை அமைத்துள்ளார்கள். வைரம்போல பட்டைகள் கொண்டது. ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாதபடி இணைந்த கூறுகளாலானது. நம் படைகளுக்குள் ஊடுருவினாலும் அவர்களின் படையில் ஒவ்வொரு பகுதியும் முழுப்படையுடன் இணைந்தே இருக்கும்” என்றான்.

அவர்கள் பெருமூச்சுடனும் தளர்ந்த உடல்களுடனும் எழுந்துகொண்டனர். கிளம்பும்போது உக்ரதர்சனர் மெல்லிய கசப்புடன் புன்னகைத்து “இந்தப் போரில் நான் கற்றது ஒன்றே, எந்தச் சூழ்கைக்கும் இணையான சூழ்கை உண்டு. ஆகவே எச்சூழ்கைக்கும் எப்பொருளும் இல்லை” என்றார். பிருஹத்பலன் என்ன பேசுவதென்று தெரியாமல் ஒருகணம் தடுமாறி “நாம் வெல்வோம்… நம்மை உருவாக்கிய வேதமே அதற்கு பொறுப்பு” என்றான். ஒருகணம் நோக்கிய பின் புன்னகைத்து உக்ரதர்சனர் திரும்பி நடந்தார்.

யுயுத்ஸு அவையை நோக்கியபடி கைகட்டி அமர்ந்திருந்தான். அவையிலிருந்த அமைதியில் அவ்வப்போது எவரோ பெருமூச்செறிவதோ இருமுவதோ மட்டும் ஒலித்துக்கொண்டிருந்தது. அறிவிப்பு ஏதுமில்லாமல் யுதிஷ்டிரர் வந்தமர்ந்ததும் முறைமைச்சொற்கள் இன்றி அவை போர்ச்செய்திகளை பேசத் தொடங்கியது. திருஷ்டத்யும்னன் அளித்த ஓலையை படைத்தலைவன் தீர்க்கபாகு படித்தான். யுதிஷ்டிரர் முகவாயை தடவியபடி அதை கேட்டிருந்தார். அவர் மிகவும் தளர்ந்திருந்தார். பீமனும் தளர்ந்தவன்போலிருந்தான். வழக்கமாக அவையில் நின்றுகொண்டிருக்கும் அவன் பீடத்தில் கால்நீட்டி அமர்ந்திருந்தான்.

முந்தையநாள் போரிலும் பாண்டவப் படைகளுக்கு மிகப் பெரிய இழப்புகள் அமைந்திருந்தன. பிரியதர்சனும் உத்தமௌஜனும் சத்ருஞ்ஜயனும் சுமித்ரனும் பாஞ்சால்யனும் சுரதனும் களம்பட்டதை தீர்க்கபாகு வாசித்தபோது துருபதர் பெருமூச்சுவிட்டார். அந்த ஓசை அவை முழுக்க கேட்டது. உத்தரமல்லநாட்டு தீர்க்கதந்தன் பெயர் சொல்லப்பட்டபோது துருபதரின் இருமலோசை கேட்டது. அனுபநாட்டு மூதரசர் விருத்தஷர்மரும் அவர் மைந்தன் வசுதனனும் இளையோன் நீலனும் கொல்லப்பட்டதை படித்தபோது நடுவே துருபதரின் இருமலோசை மட்டும் உரக்க ஒலித்தது. படைத்தலைவன் சற்று நிறுத்தி அவரை நோக்கினான். திருஷ்டத்யும்னன் எழுந்து சென்று துருபதரை அணுகி ஏதோ சொல்ல அவர் கைநீட்டி மறுத்தார். “மாண்டவர்கள் விண்ணின் ஒளியில் நிறைவுகொள்க! வீரர் பொன்னுலகு அவர்களுக்கு அமைக!” என்று படைத்தலைவன் படித்தான். அவையினர் “ஆம், அவ்வாறே ஆகுக!” என்றனர்.

அரக்கர் குலத்தலைவர்கள் வக்ரசீர்ஷரும் காகரும் இறந்த செய்தியை சொன்னதும் அரக்கர் குடித்தலைவர்கள் தங்கள் கோல்களை மேலே தூக்கி “மண்ணுள் உறங்குக! மண்ணுள் உறங்குக!” என்றனர். நிஷாதநிலத்து அரசர் மணிமானையும் அவர் மைந்தர் மணிகர்ணனையும் கீழ்நிஷாதநிலத்து அரசர் தண்டதரனையும் அவர் மைந்தர் சார்ங்கதரனையும் நிஷாதஅரசின் ஹிரண்யநாபனையும் அவன் இளையோன் ஹிரண்யபாகுவையும் படைத்தலைவன் நினைவுகூர்ந்தான். “மண்ணுள் உறங்குக! மண்ணுள் உறங்குக!” என நிஷாதர்களும் கிராதர்களும் வாழ்த்துரைத்தனர். மாண்டவர்களின் பெயர்கள் வந்துகொண்டே இருந்தன. துருபதர் இருமிக்கொண்டிருந்தார். திருஷ்டத்யும்னன் எழுந்து சென்று அவரிடம் அழுந்தப்பேசி அழைத்துக்கொண்டு வெளியே சென்றான். அவர் தொய்ந்த தோள்களும் நடுங்கும் கால்களுமாக செல்வதை அவை நோக்கி அமர்ந்திருந்தது.

யுதிஷ்டிரர் “நமக்கு பேரிழப்பு…” என்றார். சாத்யகி “நிகராகவே அவர்களுக்கும் இழப்புகள் உண்டு… நேற்று நம் இளையவர் பீமசேனர் கௌரவ மைந்தர்கள் இருநூற்றிமுப்பதேழுபேரை கொன்றார். அபிமன்யூ நாற்பத்துநான்கு பேரை கொன்றார். கௌரவர்கள் திருதசந்தனும் ஜராசந்தனும் துராதாரனும் விசாலாக்ஷனும் சுஹஸ்தனும் வாதவேகனும் பீமவிக்ரமனும் கொல்லப்பட்டார்கள். மகாபாகு, சித்ராங்கன், சித்ரகுண்டலன், பிரமதன், அப்ரமாதி, தீர்க்கரோமன்…” என்று தொடர யுதிஷ்டிரர் “போதும்!” என்று தலையை பற்றிக்கொண்டு சொன்னார். சாத்யகி அமரப்போக சிகண்டி “அல்ல. இளையோனே, நீ சொல்க! இது போரவை. நம் களவெற்றியைச் சொல்ல நாம் ஏன் அஞ்சவேண்டும்? சொல்க!” என்றார். சாத்யகி யுதிஷ்டிரரை நோக்கியபின் “தீர்க்கபாகுவும் சுவீரியவானும் சுவர்ச்சஸும் ஆதித்யகேதுவும் துஷ்பராஜயனும் அபராஜிதனும் சாருசித்ரனும் சராசனனும் சத்யசந்தனும் சதாசுவாக்கும் நேற்று கொல்லப்பட்டார்கள்” என்றான். “இத்தனை கௌரவர்கள் இதற்கு முன் பலியானதில்லை. ஏற்கெனவே அவர்கள் உளம் தளர்ந்திருக்கிறார்கள். மீண்டெழுவார்கள் என்று தோன்றவில்லை.”

ஆனால் பீமன் எந்த உணர்வையும் காட்டவில்லை. அங்கே நிகழ்ந்த உரையாடல்களை அவன் செவிகொண்டதாகவே தெரியவில்லை. “நம் படைசூழ்கையை திருஷ்டத்யும்னன் விளக்கட்டும்” என்று குந்திபோஜர் சொன்னார். திருஷ்டத்யும்னன் மின்கதிர்சூழ்கையின் அமைப்பைப் பற்றி விளக்கினான். நெடுந்தொலைவுக்கு உச்சவிசையில் குறைந்த நேரத்தில் தொடர்ச்சி அறுபடாது செல்லும் தன்மைகொண்டது அது. அதற்குரிய எவ்வடிவையும் எடுக்கலாம். கிளை பிரியலாம், வளைந்து சவுக்குச்சுழற்சியாகலாம், அம்பென நீண்டும் பாயலாம். அவன் அதை விளக்கியபோது எவரும் மாற்று உரைக்கவில்லை. ஐயங்களும் எழவில்லை. ஒவ்வொருவரும் சோர்வுற்றிருந்தனர். வேறு எவரோ இருமத்தொடங்கினார்கள். படைசூழ்கையை அவை ஏற்று ஓலையில் யுதிஷ்டிரர் கைச்சாத்திட்டதும் மீண்டும் அமைதி நிலவியது.

யுதிஷ்டிரர் யுயுத்ஸுவை பார்த்தார். யுயுத்ஸு எழுந்து தலைவணங்கி “அவையோரே, நம்முடன் படையில் சேர்வதற்காக உத்தர விதர்ப்பத்தின் போஜகடகத்தை ஆளும் அரசர் ருக்மி இன்று காலை நம் படைகளுக்குள் வந்துள்ளார். அவர் இளைய யாதவரை சந்தித்து வணங்கி ஒப்புதல் பெற்றுள்ளார். அவர் அவைக்கு வர ஒப்புதல் கோருகிறேன்” என்றான். மூன்றே சொற்றொடர்களில் அனைத்தையும் சொல்லிவிடவேண்டுமென அவன் எண்ணியிருந்தான். ருக்மியின் பெயரைச் சொன்னதுமே எழுந்த எதிர்ப்பு இளைய யாதவரின் பெயரால் இல்லாமலாகியது. சிகண்டி “அவருடைய நோக்கத்தை நான் ஐயப்படுகிறேன்” என்றார். அந்த நேரடிக் கூற்று அவையை திகைக்கச் செய்தது. யுதிஷ்டிரர்

சினத்துடன் “அதை முடிவு செய்யவேண்டியவர் இளைய யாதவர், நாமல்ல” என்றார். “படையில் சேர்த்துக்கொள்ள வேண்டியவர் தாங்கள்” என்றார் சிகண்டி. “இல்லை, அதுவும் இளைய யாதவரின் முடிவே” என்றார் யுதிஷ்டிரர்.

அவையின் நோக்கு முழுக்க விதர்ப்ப இளவரசர்களை நோக்கி திரும்பியது. ருக்மரதனும் ருக்மகேதுவும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். ருக்மபாகுவும் ருக்மநேத்ரனும் அவைக்கு வந்திருக்கவில்லை. அவர்கள் குழம்பிய முகத்துடன் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர். நகுலன் “விதர்ப்பர்கள் இதைப்பற்றி தங்கள் எண்ணத்தை சொல்லலாம்” என்றான். ருக்மரதன் “நாங்கள் சொல்வதற்கேதுமில்லை. முடிவை அரசரே எடுக்கட்டும். அதற்கு எனக்கு முழு ஒப்புதலே” என்றான். சிலகணங்கள் மீண்டும் அவை தயங்கியது. அந்தத் தயக்கம் ஏன் என்று யுயுத்ஸுவுக்கு புரியவில்லை. திருஷ்டத்யும்னன் “அவ்வாறெனில் விதர்ப்ப அரசரை அவைக்கு அழைக்கலாமல்லவா?” என்றான். யுதிஷ்டிரர் ஒப்புதலளித்து தலையசைக்க சகதேவன் எழுந்து வாயிலுக்குச் சென்று நின்றான்.

ருக்மி உள்ளே வந்ததும் சகதேவன் தலைவணங்கி “விதர்ப்பத்தின் அரசருக்கு நல்வரவு… இந்த அவை தங்கள் வருகையால் நிறைவுகொள்கிறது” என்றான். ருக்மி அவனை வலக்கை தூக்கி வாழ்த்தி “நன்று திகழ்க!” என்றபின் யுதிஷ்டிரரை வணங்கி “உத்தரவிதர்ப்பத்தின் போஜகடகத்தின் அரசனாகிய ருக்மியின் வணக்கம். வெற்றியும் சிறப்புகளும் திகழ்க!” என்றான். யுதிஷ்டிரர் தலைவணங்கினார். சகதேவன் அவனை அழைத்துச்சென்று பீடத்தில் அமரச்செய்தான். யுதிஷ்டிரர் “தாங்கள் இங்கே படையுடன் வந்திருப்பதாக சொல்லப்பட்டது. தங்கள் படைகளை நமது படைகளுடன் இணைந்துகொள்ள ஆணையிடும் ஓலை இப்போதே அளிக்கப்படும்” என்றார். ருக்மி கையசைத்து அதை ஏற்றுக்கொண்டான்.

யுதிஷ்டிரர் “விதர்ப்பப் படைகள் முன்னரே எங்குள்ளனவோ அவற்றுடன் போஜகடகத்தின் படைகளும் இணைந்துகொள்வதே நன்று. அவர்களுடைய குழூஉக்குறிகளும் போர்முறைகளும் ஒன்றே என்பதனால் இணைந்து போரிட இயலும்” என்றார். ருக்மரதன் எழுந்து “நாங்கள் சிறு படை என்பதனால் விராடப் படைப்பிரிவில்தான் இணைந்துகொண்டோம். விராடர்களின் மண்மறைவுக்குப் பின் விராடப் படைகள் ஏழாக பிரிக்கப்பட்டு வெவ்வேறு தலைமையின்கீழ் அமைக்கப்பட்டன. எங்களை இப்போது பாணாசுரரின் மைந்தர் சக்ரர் தலைமைதாங்கும் பதினேழாம் படைப்பிரிவுடன் இணைத்திருக்கிறார்கள்” என்றான். யுதிஷ்டிரர் “நன்று, அவர் ஆற்றல்மிக்கவர். விதர்ப்பத்தின் படைகள் அவரால் ஒருங்கிணைக்கப்படட்டும்” என்றார்.

ருக்மி சினத்துடன் எழுந்து “என்ன சொல்கிறீர்கள்? விதர்ப்பப் படைகள் அசுரர்களால் நடத்தப்படுகின்றனவா?” என்றான். தன் இளையோனை நோக்கி திரும்பி “இதை அவையில் எழுந்து நின்று சொல்ல உனக்கு நாணமில்லையா? நீ பீஷ்மகரின் குருதியில் எழுந்தவன்தானா? கீழ்மகனே, அசுரருக்குக் கீழே படைக்கலமெடுத்து நிற்கிறாயென்றால் நீ அசுரனுக்கும் கீழோன்!” என்று கூவினான். “விதர்ப்பரே, இங்கே குலமல்ல திறனே நோக்கப்படுகிறது. சக்ரர் பாரதம்கண்ட பெருவீரர்களில் ஒருவர்” என்றார் யுதிஷ்டிரர். “அவனைவிட ஆற்றல்கொண்ட கரடிகளும் குரங்குகளும் காட்டில் இருக்கலாம். அவை நடத்துமா படையை? ஷத்ரியன் குலத்தால் உருவாக்கப்படுபவன், முறைமைகளால் நிலைகொள்பவன், குலமிழந்த ஷத்ரியன் வெறும் படைபயின்ற விலங்கே” என்றான் ருக்மி.

சகதேவன் “விதர்ப்பரே, உளம்கனியுங்கள். உங்கள் எண்ணத்தை புரிந்துகொள்கிறேன். இனி அப்படைகள் அனைத்துக்கும் நீங்களே தலைமைகொள்க! உங்கள் கீழ் சக்ரர் திகழ்வார்” என்றான். “அசுரர்களை நான் வழிநடத்தவியலாது” என்றான் ருக்மி. “ஒரு தனிப் படைப்பிரிவாக செயல்படும் அளவுக்கு உங்கள் படை பெரிதல்ல…” என்று சகதேவன் சொன்னான். திருஷ்டத்யும்னன் “ஒவ்வொரு குலமும் தனியாக செயல்படுவதற்கு படைத்தலைமையின் ஒப்புதல் இல்லை. அது படைகளின் ஒருமையை முற்றழிப்பது” என்றான். ருக்மி “இங்கே என்ன நிகழ்கிறது? அஸ்தினபுரியின் குலப்பூசல் என எண்ணினேன். அரக்கர்களையும் அசுரர்களையும் கொண்டா அதை நிகழ்த்துகிறீர்கள்? என்ன கீழ்மை!” என்றான்.

பீமன் “விதர்ப்பரே, எங்கள் தரப்பில் படைகொண்டு நிற்பவர்கள் பெரும்பாலும் அசுரரும் அரக்கரும் நிஷாதரும் கிராதருமே. நீங்கள் விரும்பும் தூய ஷத்ரியக் குடிகள் அங்குதான் உள்ளனர். அங்கேயே நீங்கள் செல்லலாம்” என்றான். சம்பராசுரரின் மைந்தன் கீர்த்திமான் “அங்கே சேர்த்துக்கொள்ளப்படாமல்தான் இங்கே வந்திருக்கிறார்!” என்றான். “யாரடா அவன்? இழிசொல் உரைத்தவன் எவன்?” என ருக்மி திரும்பினான். “நான்தான். என் பெயர் கீர்த்திமான், சம்பராசுரரின் மைந்தன்” என்றான். “விதர்ப்பரே, நீங்கள் போற்றும் பெருங்குலத்தார் உங்களை ஏற்கவியலாது என அனுப்பிவிட்டனர். ஆகவே நீங்கள் குலப்பெருமையை சற்றே இழக்கத்தானே வேண்டும்?” அவையிலிருந்து சிரிப்பொலி எழுந்தது.

“விதர்ப்பம் என்றும் தன் பெருமையை இழக்காது!” என்று ருக்மி கூவினான். “நாங்கள் பாரதவர்ஷத்தின் தொன்மையான அரசகுலம். தொல்புகழ் தமயந்தி பிறந்து மும்முடிசூடி அமர்ந்து பாரதவர்ஷத்தை முழுதாண்ட பெருமை கொண்டது. அப்பெருமையே எங்கள் பெருஞ்செல்வம். எந்நிலையிலும் அதை நாங்கள் விட்டுத்தரப் போவதில்லை.” முதிய கிராதமன்னர் கூர்மர் “அவ்வாறென்றால் நீங்கள் இந்தத் தரப்பில் நின்று போர்புரிய இயலாது, விதர்ப்பரே. இப்போரில் நாங்கள் வெல்வோம். அதன் பின் எங்கள் அனைவருக்குமே அவையமர்வில் நிகரிடம் அளிக்க பாண்டவப் பேரரசர் யுதிஷ்டிரர் ஒப்புக்கொண்டிருக்கிறார்” என்றார். ருக்மி சீற்றத்துடன் யுதிஷ்டிரரை நோக்கி “அது எவ்வாறு இயலும்? குடிகளை வகுத்து கடமைகளை அளிப்பது வேதம். வேதத்தை மறுக்கிறீர்களா?” என்றான். “இளைய யாதவர் வேதமுடிபை முன்வைக்கிறார் என்றே நான் அறிந்திருக்கிறேன். வேதமறுப்பை என்றால் அதற்கு என் வாள் எழாது!”

“நீங்கள் இதை அவரிடமே கேட்கலாம், விதர்ப்பரே” என்றார் யுதிஷ்டிரர். “நான் இனி சொல்வதற்கொன்றுமில்லை. இந்தப் போர் ஏற்கெனவே முழுமையாக மூண்டுவிட்டது. இதில் எவருக்கும் எத்திசையிலும் பின்னகர்வு இனி இயல்வது அல்ல. நீங்கள் முடிவெடுக்கலாம்.” ருக்மி “முடிவெடுக்கிறேன்… அதற்கு முன் நான் அவரிடமே அதைப்பற்றி பேசவேண்டும்” என்றபின் திரும்பி தன் இளையவர்களை நோக்கி “கிளம்புங்கள் என்னுடன்… நீங்கள் பீஷ்மகரின் குருதியில் பிறந்தவர்கள் என்றால் இப்போதே கிளம்புக!” என்றான். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். “கீழ்மக்களே, என்ன தயங்குகிறீர்கள்? நீங்கள் ஷத்ரியர்கள் என்றால் கிளம்புங்கள்!” என்றான் ருக்மி. “நாங்கள் எந்தையின் ஆணையை ஏற்று வந்தவர்கள். அவருடைய ஆணைக்கே கட்டுப்பட்டவர்கள்” என்று ருக்மரதன் சொன்னான்.

ருக்மி கையோங்கியபடி அவனை அடிப்பதுபோல் சென்று தயங்கி நின்று “இதன் விளைவு என்ன என்று அறிவீர்களா? ஏற்கெனவே அனைத்துப் பெருமைகளையும் இழந்து அவைச்சிறுமை கொண்டு நின்றிருக்கிறது நம் குடி… அசுரருக்கும்

அரக்கருக்கும் அடிமைப்பணி செய்தீர்கள் என்றால் நீங்கள் ஷத்ரியர் முன் தலைநிமிர்ந்து நிற்க இயலாது” என்றான். “நம் குடிப்பெருமைக்காகவே நான் இத்தனைநாள் நோன்புகொண்டேன். இங்கே வந்ததும் அதற்காகவே. நான் கொண்ட அனைத்தையும் இழக்கும் கீழ்மையை இவர்கள் எனக்கு அளிப்பார்கள் என்றால் அதை ஏற்க இயலாது…” என்றான். பேசமுடியாமல் அவனுக்கு மூச்சிரைத்தது.

ருக்மரதன் “மூத்தவரே, நீங்கள் கொண்ட சினம் குடிப்பெருமையின் அழிவால் அல்ல. அது உங்கள் ஆணவத்தால் மட்டுமே. நீங்கள் உங்களை இளைய பாண்டவர் அர்ஜுனனுக்கு நிகரான வில்லவராக எண்ணிக்கொள்கிறீர்கள். இளைய யாதவரின் எதிரியாக உங்களை நிறுத்திக்கொள்வதன் வழியாக அவருக்கு நிகரான பெருமையை அடைய எண்ணுகிறீர்கள்” என்றான். ருக்மி அச்சொற்களை நம்பமுடியாமல் நோக்கி நின்றான். “உங்கள் நோக்கத்தில் ஓரளவு வெற்றியையும் அடைந்தீர்கள். இளைய யாதவருடன் உங்களை இணைத்துக்கொண்டமையால் நீங்களும் அவைகளில் பேசப்படுகிறீர்கள். இளைய யாதவரின் எதிரிகளால் அவ்வப்போது புகழவும்படுகிறீர்கள். பெரிய எதிரிகளை ஈட்டிக்கொள்வது பெரியவர்களாக ஆவதற்கான குறுக்குவழிகளில் ஒன்று.”

ருக்மி கட்டற்ற வெறிகொண்டு உறுமியபடி ருக்மரதனை அடிப்பதற்காக பாய்ந்தான். அவனை சாத்யகி பிடித்துக்கொண்டான். “இது அரசவை. இங்கே அத்துமீறுதல் குற்றம்” என்று சாத்யகி சொன்னான். ருக்மி நடுங்கிக்கொண்டிருந்தான். அவன் குரலே மேலெழவில்லை. “ஒவ்வாமை கொண்டீர் என்றால் வெளியேறுக, விதர்ப்பரே!” என்றான் சாத்யகி. ருக்மியின் குரல் உடைந்து அழுகையோசை கலந்தது என ஒலித்தது. “இழிமகனே, இது என் வஞ்சினம். இது என் வஞ்சினம் என இந்த அவை அறிக! நீ என் எதிரி. உன் நெஞ்சுபிளப்பேன்… என்னைப் பழித்த உன் நாவை இழுத்துப் பறித்தெடுப்பேன்.” ருக்மரதன் “வஞ்சினங்களால் வாழ்பவர் நீங்கள்… உங்கள் முந்தைய வஞ்சினங்களுக்குப் பின் என்னிடம் வருக!” என்றான்.

ருக்மகேது “மூத்தவரே, எதன்பொருட்டு இந்த வெறி? நம் குடியின் பேரரசி தமயந்தியைப் பற்றி சொன்னீர்கள். அவள் மணந்துகொண்ட நளன் நிஷாதன் என்பதை ஏன் மறந்தீர்கள்? அவர்களிருவரின் குருதியே நம்மில் ஓடுவது. வேண்டாம்! இந்த வெற்றுச்சினங்களால் நீங்கள் வீணாகி அழிகிறீர்கள்” என்றான். ருக்மி “உங்கள் அனைவருக்கும் மேல் நின்றிருக்கும் என் வஞ்சினம்! ஆணை!” என்றபின் வெளியே சென்றான். அவையில் இருந்து சினக்குரல்களும் இளிவரல் ஓசைகளும் கலந்த முழக்கம் எழுந்தது. “அவர் இந்நாடகத்தை இங்கே நடத்தும்பொருட்டே வந்துள்ளார் போலும்!” என்றான் திருஷ்டத்யும்னன். “அல்ல, பாஞ்சாலரே. அவருடைய இயல்பு அது. எங்கேனும் பற்றி ஏறி எரிந்து தழலாடிக்கொண்டே இருப்பதே அவருடைய வாழ்க்கை” என்றான் ருக்மகேது. “அவர் தன்னைப்பற்றி மிகைமதிப்பீடு கொண்டிருக்கிறார். அத்தகையோர் புண்பட்டபடியே இருப்பார்கள், ஏனென்றால் அம்மதிப்பீட்டை உலகம் அவர்களுக்கு அளிப்பதில்லை” என்றான் சகதேவன்.

யுயுத்ஸு ருக்மியுடன் வெளியே சென்று “விதர்ப்பரே, நீங்கள் அனைத்தையும் புரிந்துகொண்டு இங்கே வந்தீர்கள் என எண்ணினேன். நீங்கள் இந்தப் போர்த்திரட்சியின் எல்லா அரசவைகளிலும் கலந்துகொண்டிருக்கிறீர்கள்” என்றான். “ஆம், ஆனால் இங்கே நிகழ்வது இது என நான் எண்ணியிருக்கவில்லை. கீழ்மக்களை திரட்டுகிறீர்கள் என நான் அறிவேன். ஷத்ரியர்களை அவர்களுக்கு அடிமைப்பணி செய்ய அனுப்புவீர்கள் என எண்ணியிருக்கவில்லை” என்றான் ருக்மி.

“நான் அவரை பார்க்க விரும்புகிறேன். அவரிடம் கேட்டுவிட்டே செல்வேன். இதனால் அவர் அடையவிழைவதென்ன என்று… ஆம். அதை கேட்காமல் சென்றால் என் நெஞ்சு அணையாது.”

அவன் சென்று தன் புரவியில் ஏறிக்கொள்ள யுயுத்ஸுவும் புரவியில் தொடர்ந்தான். ருக்மி வழியில் புரவியை இழுத்து நிறுத்தி “இந்த நிலத்தில் அரசுகள் அமைந்திருக்கும் அடித்தளத்தை அசைக்கிறார். இங்குள்ள அரசகுலங்கள் அனைத்தும் சரியும். இங்குள்ள நெறிகள் முற்றாக அழியும். வேதமும் நெறிகளும் புரப்போரின்றி மறையும். தெய்வங்கள் அவியிலாது விடப்படும். மூதாதையர் நீரிலாது அமைவர். அதைத்தான் விழைகிறாரா அவர்?” என்றான். யுயுத்ஸு “இங்கு அனைவரும் அறிந்தது ஒன்றுண்டு. குருதிக்கலப்பற்ற ஷத்ரியர் இங்கு எவர்? பாண்டவர்களும் கௌரவர்களும்கூட சர்மிஷ்டையின் கொடிவழியினரே” என்றான். “நீங்கள் அடிபணிந்த இளைய யாதவரின் மைந்தரும் பெயர்மைந்தரும் அசுரர்குடியில் மணம்கொண்டவர்கள்.”

ருக்மி தளர்ந்து “ஆம், நான் ஏன் அதை எண்ணாமல் இருந்தேன்? என் அறிவழிந்துவிட்டது. இது குருதிக்கலப்பாளர்களின் படை. இதில் எனக்கு இடமில்லை. சினத்தில் நான் அனைத்தையும் மறந்துவிட்டேன்” என்றான். கடிவாளத்தைப் பற்றிக் கசக்கியபடி புரவிமேல் அமர்ந்திருந்தான். தலையை அசைத்து “நான் அறிந்த யுகம் அழிகிறது போலும். கலியுகம் எழுகிறது என்றனர் நிமித்திகர். குலக்கலப்புகளின் யுகம். நெறிமயக்கங்களின் யுகம். அதில் எனக்கு இடமில்லை. நான் என் நெறிகள் திகழும் உலகிலேயே வாழ விழைகிறேன். அது சின்னஞ்சிறு வட்டமாக இருப்பினும்” என்றான்.

பின்னர் புரவியை திரும்பிக்கொண்டு “அவரிடம் சென்று அதை கேட்பதில் பொருளில்லை. அவர் எண்ணிச்செய்வதே இவையனைத்தும். அவருக்கு ஷத்ரியர் அவைகளில் இடமளிக்கப்படவில்லை. அதனால்தான் சிசுபாலனை கொன்றார். அந்த வஞ்சத்தை இழிசினரைத் திரட்டி ஷத்ரியக் குடிகளை அழித்து தீர்த்துக்கொள்கிறார்” என்றான். அவன் மீண்டும் சினம் கொண்டான். பற்களைக் கடித்து “ஆனால் அவர் எண்ணுவது நிகழாது. இப்போர் முடிந்ததும் அசுரரும் ஷத்ரியரும் இணைந்த அரசகுடிகள் உருவாகும் என்றும் அவர்களுக்கு தலைக்குடியாக தன் கொடிவழியினர் அமைவார்கள் என்றும் எண்ணுகிறார். ஆனால் வேதம் அதை ஒப்பாது. வேதம் நின்றுகொல்லும் வஞ்சம் கொண்டது” என்றான்.

யுயுத்ஸு “வேதமுடிபுதான் வேதத்தின் விதை. அது முளைத்தெழும் புதிய வேதமே நாராயணவேதம். அது மெய்மையை மட்டுமே தன்னியல்பெனக் கொண்டது” என்றான். “வீண்சொற்கள்…” என கைவீசித் தடுத்த ருக்மி “இனி இங்கே எனக்கு இடமில்லை. நான் கிளம்புகிறேன்” என்று புரவியைத் தட்டி விரைவுகொண்டு அகன்றுசென்றான். அப்புரவியின் வால் சுழல்வதை யுயுத்ஸு நோக்கி நின்றான். என்ன செய்வதென்று அவனுக்கு தெரியவில்லை. அவன் சென்றுமறைந்த பின்னர் புரவியை திருப்பியபோது அதை இளைய யாதவரிடம் சொல்வதே முறை என்று தோன்றியது.

அவன் இளைய யாதவரின் குடில்முற்றத்தை அடைந்தபோது தொலைவிலேயே அவர் கவசங்களை அணிந்துகொண்டிருப்பதை கண்டான். நேமிதரன் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தான். அவனைக் கண்டதுமே இளைய யாதவர் அருகே வரும்படி கையசைத்தார். அவன் புரவியிலிருந்து இறங்கி எவ்வண்ணம் அந்நிகழ்வுகளை தொகுத்துச் சொல்வது என எண்ணியபடி சென்றான். அவருடைய புன்னகையைக்

கண்டதும் அவருக்கு முன்னரே தெரியுமா என்னும் எண்ணம் ஏற்பட்டது. அதற்கு வழியே இல்லையே என குழம்பினான்.

இளைய யாதவர் “எனக்கு செய்தி வரவில்லை. ஆனால் எச்செய்தி வரும் என அறிவேன், தார்த்தராஷ்டிரரே” என்றார். யுயுத்ஸு உள்ளம் எளிதாகி புன்னகை புரிந்து “குலப்பெருமை” என்றான். “நன்று” என்றார். “படைகளுடன் திரும்பச்செல்கிறார்” என்றான் யுயுத்ஸு. “அவர் இப்போரில் கலந்துகொள்ளாமலிருப்பதனால் அவரோ விதர்ப்பமோ காக்கப்படவில்லை” என்றார் இளைய யாதவர். “போருக்குப் பின் நாம் அவர்களை தாக்குவோமா?” என்றான் யுயுத்ஸு. “நான் அதை சொல்லவில்லை. அவருடைய அவ்வியல்பாலேயே அழிவை நோக்கி செல்லவேண்டியவர் என்றேன்” என்றார் இளைய யாதவர்.

யுயுத்ஸு “அரசே, நான் ஒன்றை மட்டுமே அறிய விழைகிறேன். இன்று காலை இளைய பாண்டவரின் குடிலில் நிகழ்ந்தது நாடகமா?” என்றான். “நாடகம் என்றால் அனைத்துமே அவ்வாறுதான். அவர் என்னைக் கண்டதும் அடைந்த உணர்வெழுச்சி மெய்யானது. மீண்டும் இங்கு வந்திருந்தால்கூட அதே உணர்ச்சி எழுந்திருக்க வாய்ப்புண்டு” என்றார் இளைய யாதவர். “தங்கள் உணர்ச்சி?” என்றான் யுயுத்ஸு. “அதுவும் மெய்யானதே. நான் விழிநீர்களுக்கு முன் அறிவிலாதோன்” என்றார் இளைய யாதவர்.

அவந்தி நாட்டு அரசன் விந்தன் தன் தேரில் கௌரவப் படையின் எட்டாவது அக்ஷௌகிணியின் இரண்டாம் நிரையில் வில்லுடன் நின்றிருந்தான். சற்று அப்பால் அவனுடைய இரட்டையனும் அவந்தியின் இணையரசனுமாகிய அனுவிந்தன் அவனைப் போலவே கவசங்கள் அணிந்து, அவனுடையதே போன்ற தேரில் நின்றிருந்தான். விந்தன் அனுவிந்தனைவிட ஓரிரு நொடிகளே அகவையில் முந்தியவன். அந்த ஒரு நொடி அவன் அன்னையால் அவனுக்கு சொல்லப்பட்டது. உலகுக்கும் அவளால்தான் அது சொல்லப்பட்டது. தன் உள்ளத்தால் அவன் அதை பெருக்கிக்கொண்டான். நாழிகையும் நாளும் ஆண்டும் என்றாக்கி ஒரு முழு வாழ்நாள் என்றே வளர்த்துக்கொண்டான். தன்னை மூத்தவன் என்றும் இளையோனிடமிருந்து மதிப்பையும் வணக்கத்தையும் பெறவேண்டியவன் என்றும் கருதிக்கொண்டான்.

அந்த ஒரு கணமே அவனுக்கு மணிமுடியை அளித்தது. பட்டத்தரசியின் முதல் பேற்றில் ஆண் இரட்டையர் பிறந்துவிட்டால் அக்குழவிகளில் பிந்தி வருவதை கொன்றுவிடுவது அரசகுல வழக்கமாக இருந்தது. விந்தனும் அனுவிந்தனும் உடல்தழுவி ஒற்றையுடலென வெளிவந்தனர். அவ்வாறு நிகழுமென்றால், இரு குழவியும் சேர்ந்தே மண்ணிழியும் என்றால், இரு குழவிகளையும் அருகருகே போட்டு இரண்டுக்கும் பொதுவாக ஒரு பொற்கணையாழியை நூலில் கட்டி ஆடவிடுகையில் எந்தக் குழவியின் விழி முதலில் அந்தக் கணையாழியை பார்க்கிறதோ அதுவே அரசனென்று ஆகும் விழைவெனும் தகுதியைக் கொண்டது என்று முடிவெடுப்பது மரபு. அவர்களிருவரையும் அவ்வாறு படுக்கையில் படுக்க வைத்து பொன் மணி காட்டியபோது இருவருமே ஒரே தருணத்தில் அதை நோக்கி விழிசலித்தனர். வாயில் விரல் வைத்தபோது இருவரும் ஒரே விசையில் அதை நோக்கி தலையெழுப்பினர். உள்ளங்கால்களை கைகளால் வருடி நோக்கியபோது இருவருமே உடல் விதிர்க்க கால்களை விலக்கி தொட்ட கையை உதைத்தனர்.

சூழ நின்றிருந்த வயற்றாட்டிகள் திகைத்தனர். “அனைத்திலும் இணையானவர்கள், அரசி” என்று முதுவயற்றாட்டி காளிகை சொன்னாள். அன்னை இரு குழந்தைகளையும் மாறிமாறி நோக்கியபின் விந்தனைத் தொட்டு “இவன் ஒருகணம் மூத்தவன்” என்றாள். வயற்றாட்டி ஏதோ சொல்லவர உரத்த குரலில் “இவன் ஒருகணம் மூத்தவன்! ஆம், இவனே மூத்தவன்!” என்று அவள் சொன்னாள். வயற்றாட்டி “ஆம் அரசி, இவரே மூத்தவர்” என்றாள். வெளியே சென்று அங்கு காத்து நின்றிருந்த அரசரிடம் “இரட்டையர்! ஒருவர் ஒருகணம் மூத்தவர்!” என்று அறிவித்தாள். அரசரின் விழிகள் மாறுபட்டன. அருகே நின்றிருந்த அமைச்சர் “இரட்டையர் என்றால்...” என்று தொடங்க வயற்றாட்டி “ஒருவர் ஒருகணம் மூத்தவர்” என்று மீண்டும் சொன்னாள். அரசர் “ஆம்! ஒருகணம் எனினும் அது தெய்வங்களால் அளிக்கப்பட்ட பொழுது. அம்முடிவை எடுத்த நம் குடித்தெய்வங்களை வணங்குவோம்!” என்றார்.

அவந்தியின் எட்டு குடித்தலைவர்களுக்கும் பட்டத்து இளவரசர்கள் இரட்டையராக இருப்பது எதிர்காலத்தில் பெரும்பிழையென ஆகக்கூடும் என ஐயமிருந்தது. முன்வரலாறுகள் தீய விளைவுகளையே காட்டின என நூலறிந்தோர் கூறினர். நிமித்திகர்களும் நன்று சொல்லவில்லை. ஊரில் அதைப் பற்றிய பேச்சுகள் இருப்பதை ஒற்றர்கள் அவந்தியின் அரசரிடம் வந்து சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆயினும் ஒருகணம் மூத்தவன் என்ற ஒற்றை வரியால் அரசி அவ்விருவரையும் காத்தாள். அவர்கள் இருவரும் ஆடிப்பாவைகளென வளர்ந்தனர். களிப்போரில், சொல்லவையில், கானாடலில் ஒருவரை ஒருவர் முற்றிலும் நிகர்த்தனர். ஒருவனை மற்றவன் என்று பெற்றஅன்னையும் எண்ணும் வண்ணம் ஒன்றுபோல் இருந்தனர்.

அன்னையே அவர்களிடம் ஆள்மாறி உரையாடினாள். ஒருமுறை விந்தனிடம் “இளையவனே, நீ ஒருகணம் இளையவன் என்பதை உன்னுள் வாழும் ஏதோ ஒன்று எதிர்க்கிறது என்று நான் அறிவேன். அதை வெல்க! ஒருகணமும் அது உன் எண்ணங்களையும் செயல்களையும் ஆட்டிவைக்கலாகாது. எவ்வகையிலோ உன் மூத்தவன் உன்னுள் வாழும் அவ்வெண்ணத்தை அறிந்துகொண்டிருப்பான் என்பதை உணர்ந்துகொள். அது அங்கிருக்கும் வரை நீ அவனுக்கு எதிரியாவாய். உடன்பிறந்தாரைப்போல சிறந்த எதிரி பிறிதெவருமில்லை. ஆகவே அவ்வெதிர்ப்பு நாளுமென பெருகும். அழியா வஞ்சமென்றாகும். உன் நீண்ட வாழ்நாளுக்காகவும் என் முதல் மைந்தன் பழி சூடலாகாது என்பதற்காகவும் இதை சொல்கிறேன்” என்றாள்.

சற்று துணுக்குற்றாலும் விந்தன் அத்தருணத்தில் தான் விந்தன் என்பதை அன்னைக்கு அறிவிக்காமல் “அவ்வண்ணமே, அன்னையே. என்றும் நான் இளையோன் என்றே இருப்பேன்” என்றான். ஆனால் அதன் பின் அனுவிந்தனில் உறையும் அந்த மீறலை ஒவ்வொரு கணமும் அவன் நோக்கிக்கொண்டிருந்தான். எந்த அவையிலும் அவன் ஒரு சொல்லெடுத்தால் மறுகணமே அதன் நீட்சியென்றோ மறுப்பென்றோ அனுவிந்தனின் சொல் எழுந்தது. அவன் செய்த எதையும் அனுவிந்தன் செய்யாமல் இருந்ததில்லை. ஒருமுறை காட்டில் எதிர்வந்த பன்றியொன்றின் மீது அம்பு தொடுத்து பன்றி வீழ்ந்ததும் ஏதோ ஒரு எண்ணம் தோன்ற விந்தன் தன் ஏவலனை அழைத்து அதில் எத்தனை அம்புகள் தைத்திருக்கின்றன என்று பார்க்கச்சொன்னான். “பன்னிரு அம்புகள், அரசே!” என்றான் ஏவலன். அவர்கள் இருவர் அம்புகளிலும் வெவ்வேறு அடையாளங்கள் உண்டு. “அவை எவருடையதென்று பார்” என்று அவன் சொன்னதும் ஏவலன் புன்னகைத்து “பார்க்கவேண்டியதே இல்லை. ஆறம்புகள் தங்களுடையவை

ஆறம்புகள் தங்கள் இளையவருடையவை” என்றான். கைசுட்டி அவனை அகற்றிவிட்டு விந்தன் புரவியில் மேலே சென்றான்.

அன்று காட்டில் பாறை ஒன்றின் மீது அமர்ந்து வேட்டை உணவை உண்டு ஓய்வெடுக்கையில் விந்தன் அனுவிந்தனிடம் “இளையோனே, நான் இயற்றும் ஒவ்வொன்றையும் நீயும் இயற்றியாக வேண்டுமென்று ஏன் எண்ணுகிறாய்? என் சொல்லும் செயலும் ஒருமுறைகூட உன்னில் மீண்டும் நிகழாதிருந்ததில்லை” என்றான். அனுவிந்தன் நகைத்து “இதை மட்டுமே தாங்கள் நோக்கியிருக்கிறீர்கள். தாங்கள் சொன்ன இதையே நானும் சொல்ல இயலும். ஒரு சொல்லோ செயலோ என்னிலிருந்து வெளிப்பட்டால் அதன் தொடர்ச்சியும் மறுப்பும் உங்களிடமிருந்து உடனே வெளிப்படுகிறது. நான் சொன்ன ஒரு சொல்லையேனும் சொல்லாமல் நீங்கள் இதுநாள் வரை இருந்ததில்லை” என்றான். சீற்றத்துடன் விந்தன் “நான் மூத்தவன், என்னை நீதான் தொடர்கிறாய்” என்றான். “தங்களைவிட ஒரு மாத்திரை உடல்விசையும் உளவிசையும் மிகுந்தவன் நான். ஆகவேதான் தாங்கள் என்னை தொடர்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்” என்றான் அனுவிந்தன். எழும் சினத்தை அடக்கிக்கொண்டு விந்தன் மேலும் சொல்லெடுக்காமல் தவிர்த்தான்.

அதன் பிறகு அவன் அனுவிந்தனுடன் இணைந்து இருப்பதை பெரும்பாலும் தவிர்த்தான். அரசவையில் அவனுக்கும் அனுவிந்தனுக்கும் இரு வேறு இருக்கைகள் போடப்பட்டன. களரியில் வேறுவேறு பொழுதுகளில் முற்றிலும் வேறு ஆசிரியர்களிடம் பயின்றனர். ஆண்டுக்கு இருமுறை அவந்தியில் நடக்கும் அரச கொலுத்தோற்றத்தில் மட்டுமே அவர்களிருவரும் அருகருகே அமர்ந்தனர். அப்போதும் தான் பட்டத்து இளவரசன் என்பதனால் தன்னுடைய மணிமுடியில் சற்று பெரியதாக மேலும் ஒரு வைரம் பதித்தாகவேண்டுமென்றும் தோற்றத்தில் தான் தனித்துத் தெரிந்தாக வேண்டுமென்றும் அவன் அணிச்சேவகரிடம் ஆணையிட்டான் ஆயினும் அவனை அனுவிந்தன் என்று எண்ணி பேசுபவர்கள் ஒவ்வொரு நாளும் இருந்தனர். ஏவலரோ குடிகளோ அவ்வாறு பேசினால் அக்கணமே அவன் சினம்கொண்டு அவர்களை எதிர்கொண்டான். எளியோரை தண்டித்தான், பெரியவர்களை சிறுமைசெய்தான். ஆனால் தந்தையும் தாயும் ஒவ்வொரு நாளும் அப்பிழையை இயற்றுகையில் அவனால் அதற்கு மறுமொழி சொல்ல இயலவில்லை.

இருவரும் படைக்கலக்கல்வி முடித்து குண்டலம் அணிந்ததும் அவன் முதலமைச்சர் வில்வரை அவரது இல்லத்தில் சென்று சந்தித்து தாங்கள் இருவரும் ஒரே நகரியில் இணையான அரசுநிலையில் இருப்பதை விரும்பவில்லை என்றும் இருவரும் எப்போதும் பிரிந்தே இருப்பதற்கான அமைப்பை உருவாக்குவதே அவந்தியின் எதிர்காலத்திற்கு நல்லதென்றும் சொன்னான். அவரே அதை முன்னரே உணர்ந்திருந்தார். “ஆம், நான் எண்ணியவைதான் இவை. அரசரிடம் நானே கூறுகிறேன்” என்றார். “ஒவ்வொருநாளும் உங்களுக்குள் உருவாகிவரும் அகல்வை உணர்கிறேன். விலகல் உருவானதுமே முற்றகல்வு நிகழ்ந்ததென்றால் இடரில்லை. விலகலை ஒவ்வொரு நாளும் இருவரும் எண்ணி வளர்க்கிறீர்கள். இனி கசப்புகளையும், பகைமையையும் உருவாக்கிக்கொள்வீர்கள். உளவிலகல் திறந்த புண், அது சீழ்பிடிப்பதற்கு காத்திருக்கிறது” என்றார் வில்வர்.

வில்வரின் சொல்லை அரசர் ஏற்றார். விந்தன் அவந்தியின் பட்டத்து இளவரசனாக முடிசூட்டப்பட்டான். அனுவிந்தனுக்கு உத்தர அவந்தியின் பிரபாவதி நகர் தலைநகராக அளிக்கப்பட்டு அங்கு அரசனின் ஆணைக்கோல் கொண்டவனாக ஆட்சி செய்ய அனுப்பப்பட்டான். அதன் பின்னர் ஆண்டுக்கு ஒரு முறை குடிமூத்தார் வணக்கத்தின்பொருட்டு மட்டுமே அனுவிந்தன் தலைநகருக்கு வந்தான். அன்று அந்தியில் கூடும் குடிசூழ் அவையில் மட்டுமே அவன் விந்தனின் அருகே

அரசத்தோற்றம் கொண்டு அமர்ந்தான். அன்று மட்டுமே அவர்கள் ஒருவரோடொருவர் ஓரிரு சொற்கள் பேசிக்கொண்டனர். அப்போதும் ஒருவர் விழியை ஒருவர் நோக்கிக்கொள்ளவில்லை. அவர்களிடையே ஒரு வெறுப்புச் சொல்கூட பேசப்பட்டதில்லை. ஒருமுறைகூட முகம்கசந்த நோக்கு எழுந்ததில்லை. ஆகவே அவ்விலக்கம் மேலும் அழுத்தமானதாக இருந்தது. அவர்கள் அவ்விலக்கத்தையே நாணுபவர்கள்போல அத்தருணத்தை சில நொடிகளில் கடந்துசெல்ல விழைந்தார்கள்.

ஆனால் ஒவ்வொரு நாளும் அனுவிந்தனைப் பற்றிய செய்திகள் விந்தனின் செவியை வந்தடைந்தன. அவை எவ்வாறு தன்னை தேடி வருகின்றன என்று அவன் எண்ணி வியந்ததுண்டு. பின்னர் தெரிந்துகொண்டான், பல்லாயிரம் சொற்களில் அனுவிந்தனைப் பற்றிய சொற்களை மட்டும் தொட்டெடுக்கும் நுண்செவியொன்று தனக்கிருப்பதை. நகருலா செல்லும்போது சந்தையில் பலநூறுபேர் கலந்து பேசும் கலைந்த முழக்கத்தின் நடுவே அனுவிந்தர் என்ற சொல் ஒலிக்குமென்றால் அவன் உள்ளம் அங்கு நோக்கி சென்றது. அனுவிந்தனிடமிருந்து தனக்கு விடுதலையில்லை என்பதை அவன் உணர்ந்துகொண்டான். அமைச்சரிடம் “இதுநாள்வரை அவனிடமிருந்து உளம் விலக முயன்றேன். அது இயலாதென்று இப்போது தெரிகிறது. என் ஆற்றலனைத்தும் அம்முயற்சியிலேயே வீணாகின்றன. நான் முழுமைகொண்டு ஆற்றலுடன் எழ என்ன செய்யவேண்டும்?” என்றான்.

வில்வர் “அரசநெறியின்படி நீங்கள் அவரை அழிக்கவேண்டும். ஆனால் ஒருதுளியும் எஞ்சாது அழிக்கத்தக்க எதிரியையே அழிக்கவேண்டும் என்கின்றன நூல்கள். அவரை அழித்தால் ஒன்றுணர்வீர்கள், உங்கள் ஆற்றலில் பாதி அழிந்திருக்கும். ஏனென்றால் அவர் உங்களில் பாதி. உங்களில் எஞ்சும் பாதி அனைத்து இடங்களிலும் நிலைபிறழ்ந்திருக்கும்” என்றார். “ஆகவே ஒன்றே செய்யக்கூடுவது, அவரை விழுங்கி நீங்களாக ஆக்கிக்கொள்வது. ஒருவரை விழுங்கி நாமாக்கிக்கொள்வதற்குரிய சிறந்த வழி என்பது அன்புதான்” என்றார் வில்வர். “அன்பா? அவனிடமா?” என்று விந்தன் கேட்டான். “அன்பிலாத ஒன்றையே இருபத்திரண்டு ஆண்டுகளாக கணமும் எண்ணிக்கொண்டிருக்க இயலுமா என்ன? அவ்வாறு எண்ணிக்கொண்டிருப்பதனாலேயே அவர் மேல் நம்முள் அன்பு எழாதிருந்திருக்குமா என்ன? ஒரு தொழுவில் அருகருகே கட்டப்பட்டால் எந்தப் புரவியும் ஒரு வாரத்திற்குள் உடல் ஒருங்கிணைவும் உள இசைவும் கொள்வதை கொட்டில்காவலர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்” என்றார் வில்வர்.

விந்தன் சோர்ந்து இருக்கையில் சாய்ந்தான். “அவர் மேல் நீங்கள் கொண்ட அன்பை மறைப்பவை இரண்டு கூறுகளே. ஒன்று உங்கள் முதன்மையை அவர் முழுதேற்கிறாரா எனும் ஐயம். பிறிதொன்று உங்கள் முடிக்கும் உங்கள் கொடிவழியின் உரிமைக்கும் எதிராக அவரோ அவர் குடியோ குருதியினரோ எழுவார்களோ எனும் அச்சம்.” விந்தன் “அவை மெய்யான அச்சங்கள்தானே? அதுதானே உலகத்தியற்கை?” என்றான். “ஆம், மீள மீள உடன்பிறந்தாரின் உரிமைப்போர் பாரதவர்ஷத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஒருபோதும் அது ஓயாது. இன்று அவர் உங்களுக்கு சொல்லளிக்கலாம், ஆனால் வரும் தலைமுறையினரை அவர் சொல் ஆளுமென சொல்லவியலாது. ஆயினும் அனைத்தையும் தெய்வங்களுக்கு ஒப்படைத்து உங்கள் இளையோனை ஆரத்தழுவிக்கொள்வதொன்றே இத்தருணத்தில் செய்யக்கூடுவது” என்றார் வில்வர்.

“நான் என்ன செய்ய வேண்டும் இப்போது?” என்றான் விந்தன். “அமைச்சனாக நான் சொல்வது படைகொண்டுசென்று அவரை வென்று உங்களை முழுதமைத்துக்கொள்ளுங்கள். அவரைக் கொன்று, அவர் இருந்த தடயங்களே

இல்லாமல் செய்யுங்கள். ஒரு சொல்கூட அவருடையதென இப்புவியில் எஞ்சலாகாது. அவருக்கிருந்த அனைத்தையும் நீங்கள் அடையுங்கள். அவரை இழந்தமையால் உருவான குறைவுகளை ஈட்டி நிறையுங்கள்" என்றார் வில்வர். "அந்தணனாக நான் சொல்வது அவரை அள்ளி அணைத்து அருகமரச் செய்யுங்கள். அவர் உங்கள் மணிமுடிக்கும் கோலுக்கும் விழைவு கொண்டால் அதை அவருக்கே உளமுவந்து அளியுங்கள். அவர் உங்கள் தலையறுத்திடத் துணிந்தால் தலைகொடுக்கும் கனிவை அடையுங்கள். தமையன் என்பவன் அணுக்கம் கொண்ட தந்தையே" என்றார் வில்வர்.

விந்தன் சினத்துடன் "என்ன சொல்கிறீர்கள்?" என்றான். வில்வர் "நீங்கள் தமையனென்றானால் அவர் உங்கள் தம்பி என்றாவார். கௌரவ நூற்றுவர் எப்படி ஒருடலும் ஓர் எண்ணமுமாக இருக்கிறார்கள் அறிவீர்களா? அந்நூற்றுவரில் ஒருவர் சென்று துரியோதனரிடம் மூத்தவரே அம்மணிமுடியையும் செங்கோலையும் எனக்கு அளியுங்கள் என்று கேட்பார் என்றால், ஏன் அவ்வாறு அவர் உள்ளாழத்தில் விழைகிறார் என்று தெரிந்தால், மறுஎண்ணமின்றி எழுந்து அவற்றை தம்பிக்கு அளிக்கும் தகைமை கொண்டவர் துரியோதனர். அதை நன்கறிவர் தம்பியர். ஆகவே அத்தம்பியர் அவருக்காக இந்நாநிலத்தை வெல்வார்கள். தேவையெனில் களத்தில் வீழ்வார்கள்" என்றார் வில்வர்.

"இது வீண் பேச்சு. மண்விழைவு கொள்ளாத ஷத்ரியன் எங்குளான்?" என்றபடி விந்தன் எழுந்தான். "மண்விழைவும் பொருள்விழைவும் ஷத்ரியர்களை ஆக்குகின்றன. ஆனால் பேரரசர்கள் உறவின் ஆற்றலால் தங்கள் அரியணையை உறுதி செய்துகொண்டவர்கள். ஒருவனுக்காக பல்லாயிரம் பேர் உயிர் கொடுக்கத் துணிகையிலேயே அவன் பேரரசனாகிறான். எவரும் வீணாக உயிர் கொடுப்பதில்லை. ஒருவனுக்காக அத்தனை பேர் உயிர் கொடுக்கிறார்கள் என்றால் அதற்கான தகுதியை எங்கோ அவன் ஈட்டிக்கொண்டிருக்கிறான் என்றே பொருள்" என்றார் வில்வர். "அவர்களுக்காக அவன் உயிர்கொடுப்பான் என்பதே அத்தகுதி." "வீண்பேச்சு, எந்த விலங்கும் தன் தலையை தானே எதிரிக்கு கொடுப்பதில்லை" என்றபடி அவன் வெளியே சென்றான்.

ஆனால் அன்று இரவு முழுக்க விந்தன் அதைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தான். எண்ண எண்ண நம்பிக்கையின்மையும் கசப்பும்தான் பெருகின. ஆனால் அவன் துணைவி சுதமதி "அமைச்சர் சொல்வதே நன்று என நினைக்கிறேன்" என்றாள். "நீங்கள் உங்கள் தம்பியை உடனமர்த்தி இணைநிலை அளிக்கும்போது மட்டுமே ஆற்றல் கொண்டவர்களாகிறீர்கள். இப்போது இருவருக்குமிடையே இருக்கும் தொலைவு அச்சுறுத்துவது. இதை மாளவரோ விதர்ப்பரோ பயன்படுத்திக்கொள்வார்கள் என்றால் மிக எளிதாக நம் நாட்டை இரண்டாக உடைத்துவிட முடியும்" என்றாள். அவ்வெண்ணம் ஏற்கெனவே விந்தனிடம் இருந்தது என்பதனால் அவனை அச்சொற்கள் அறைந்தன. "அவ்வண்ணம் அவர் எதிரியானால் உங்களை நீங்களே எதிர்ப்பவராவீர்கள்" என்றாள் சுதமதி.

சினந்தெழுந்து "இது தொல்புகழ் அவந்தி! கார்த்தவீரியனின் குருதியில் ஜயத்வஜனின் குடியென எழுந்தது என் அரசகுடி. ஒருபோதும் இது வீழாது. நீ பிறந்தெழுந்த மச்சநாட்டு குடிப்போர்களை இங்கு எண்ணிக்கொள்ள வேண்டியதில்லை" என்று கைவீசி அவளை விலக்கி மேலாடையை எடுத்து அகத்தளத்திலிருந்து வெளியேறி தன் அறைக்கு வந்தான். மூக்குவழி வார மது அருந்தியபடி அரண்மனை மஞ்சத்தில் கிடக்கையில் அவள் சொற்களே அவன் உள்ளத்தை சூழ்ந்துகொண்டிருந்தன. அவை முற்றிலும் உண்மை என்று அவன் அறிந்தான். காலையில் எழுந்து சிப்ரையின் ஒழுக்கின்மேல் பெருகிய காற்றில்

வெண்பறவைகள் மிதந்துசெல்வதை நோக்கி நின்றிருந்தபோது ஒரு முடிவுக்கு வந்தான். அந்தக் காலை அத்தனை இனிதாக, அமைதியாக இருந்ததனால் மட்டுமே அவன் அகம் சென்றடைந்தது அம்முடிவு.

அமைச்சரை தன் அறைக்கு அழைத்து “தங்கள் எண்ணத்தையே நானும் உளம்கொண்டிருக்கிறேன், அமைச்சரே. நாம் இப்போது என்ன செய்யலாம்?” என்று உசாவினான். “இங்கு குடிமூத்தாருக்கான ஒரு பலிபூசனை நிகழவிருக்கிறது. அதற்கு அனுவிந்தரை அழையுங்கள். அவருக்கு இணையாக அரசமருங்கள். இணையரசர் அவரென்று உங்கள் நாவால் நீங்களே அறிவியுங்கள். அனுவிந்தர் இனி தனிநகர் கொண்டு எல்லையில் அமரக்கூடாது. இங்கு உங்கள் உடனிருக்கட்டும். அரசப் பொறுப்புகளை, படைகளை, கருவூலத்தை அனைத்தையுமே அவருக்கும் உரிமையாக்குங்கள். எதுவும் எஞ்சவிடவேண்டியதில்லை. தயக்கமோ ஐயமோ இன்றி இதை செய்ய முடிந்தால் உங்கள் இணையாற்றல் என்று உடனிருக்கும் தம்பி ஒருவரை பெறுவீர்கள். அவரும் நீங்களேதான் என்பதனால் உங்கள் ஆற்றலனைத்தும் முழுமை பெறுவதை காண்பீர்கள்.” “அவனை நான் எவ்வாறு நம்புவது?” என்று விந்தன் கேட்டான். “உறவை நம்புவதும் தெய்வத்தை நம்புவதும் ஊழை நம்புவதும் ஒன்றே” என்றார் வில்வர்.

உஜ்ஜயினியிலிருந்து தமையனின் அழைப்பு வந்தபோது அனுவிந்தன் வியப்பும் ஐயமும் கொண்டதாகவும் தன் அணுக்கர்களை அழைத்து அரண்மனையில் அவையில் அமர்ந்து அவ்வழைப்பின் பின்னுள்ள நோக்கமென்ன என்று உசாவியதாகவும் ஒற்றர் செய்தி வந்தது. அவன் அணுக்கர்களில் நால்வர் அது அனுவிந்தனை கொல்லவோ சிறைப்படுத்தவோ செய்யப்பட்ட சூழ்ச்சியாக இருக்கலாம் என்றனர். ஒருபோதும் தலைநகரைவிட்டு செல்லக்கூடாதென்றும், தன் படைகளனைத்தையும் எல்லைகளிலிருந்து அழைத்து சூழ்ந்து நிறுத்தி உறுதியான காவலுக்குள்தான் அவன் என்றுமிருக்கவேண்டும் என்றும் இரு படைத்தலைவர்கள் கூறினார்கள்.

ஆனால் அங்கு அவனுடைய அமைச்சராக இருந்த சுதபஸ் “அரசே, ஐயம்கொள்ளத் தொடங்கினால் எஞ்சிய வாழ்நாள் முழுக்க ஐயத்தை பெருக்குவீர்கள். ஐயம் நஞ்சென அனைத்து எண்ணங்களிலும் ஊடாடும். உங்கள் செயல்கள் அனைத்திலும் ஊடாடும். நீங்கள் பார்ப்பவை அனைத்தும் திரிபடையும். உங்கள் மூத்தவருக்கும் உங்களுக்குமிடையே ஒருபோதும் உறவு சீரடையாது. இன்று ஒரு துளி ஐயம்கொண்டீர்கள் என்றால் அவந்தியை இரண்டாக உடைக்கும் பணியை தொடங்கிவிட்டீர்கள் என்று மட்டுமே பொருள். உடைந்த அவந்தி வாழ இயலாது. இரு துண்டுகளையும் மாளவமும் விதர்ப்பமும் எடுத்துக்கொள்ளும். நீங்கள் இருவருமே அண்டை அரசர்களுக்கு அடிபணிந்து கப்பம் கட்டுபவர்களாக மாறுவீர்கள். உங்கள் கொடிவழியினர் தொழும்பர்களாவார்கள். இவை அனைத்தும் தேவையெனில் இம்முடிவை எடுங்கள். இக்கணம் உங்களுடையது” என்றார்.

அனுவிந்தன் அரியணையில் தளர்ந்து அமைந்து உளம்தவித்தபின் நொய்ந்த குரலில் “நான் என்ன செய்யவேண்டும், அமைச்சரே? நீங்களே பொறுப்பேற்று சொல்லுங்கள்” என்றான். “அந்தணர் உலகியலுக்கு பொறுப்பேற்கலாகாது. தங்கள் சொல்லுக்கு மட்டுமே பொறுப்பேற்க வேண்டும். ஆயினும் இத்தருணத்தில் இவ்வரசியலுக்கு முழுப் பொறுப்பேற்று சொல்கிறேன், சென்று உங்கள் மூத்தவரின் காலடியில் அமர்க! அவர் உங்கள் தலைமேல் மணிமுடியை வைக்கலாம். கழுவேற்ற ஆணையிடவும் செய்யலாம். எதுவாயினும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். தெய்வங்களிடம் நாம் கொண்டுள்ள உறவும் அத்தகையதல்லவா? அழிக்கும்

ஆற்றலும் உரிமையும் கொண்டவரின் அன்பு பேராற்றல் கொண்டது” என்றார் சுதபஸ்.

மறுநாள் அனுவிந்தன் தன் படைகளுடன் கிளம்பி உஜ்ஜயினிக்கு வந்தான். அவனை அரண்மனை முகப்பில் எதிர்கொண்ட விந்தன் இரு கைகளையும் விரித்து நெஞ்சோடு தழுவி “இதுநாள்வரை அறியாத ஐயங்களாலும் அச்சங்களாலும் ஆட்டுவிக்கப்பட்டேன், இளையவனே. அவ்வெடையை எத்தனை நாள் சுமப்பதென்று என் உள்ளம் தவித்தது. என்னால் ஒருகணமும் நிறைவுற்று அமரவோ உறங்கவோ இயலவில்லை. கவலைகள் மிகுந்து தாள முடியாமல் ஆகும்போது ஒருகணத்தில் முழுக் கவலையையும் நம்மிலிருந்து இறக்கி விட்டுவிடுகிறோம். அதைத்தான் செய்யவேண்டுமென்று எண்ணினேன். ஆகவேதான் உன்னை அழைத்தேன்” என்றான். அவன் காய்ச்சல்கண்டவன்போல் நடுங்கிக்கொண்டிருந்தான்.

கண்ணீருடன் கைகூப்பி நின்ற அனுவிந்தனை தோள்பற்றி முகம் நோக்கி விந்தன் சொன்னான் “எந்தச் சுற்றுச்சொல்லும் இல்லாமல் நேரடியாகவே இதை உரைக்கிறேன். இன்றுவரை என் அரியணைக்கும் கோலுக்கும் நீ விழைவு கொள்வாய் என்றும் என் கொடிவழியினருக்கு குருதியினரின் எதிர்ப்பிருக்குமோ என்றும் நான் கொண்ட ஐயமே என்னை ஆட்டிவைத்தது. இன்று உன்னை என் இணையரசனாக அரியணையில் அமர்த்த முடிவு செய்திருக்கிறேன். நீயோ உன் கொடிவழியினரோ விரும்பினால் முழுதுரிமையையும்கூட பெறமுடியும். எனக்கு மாற்றுச் சொல்லில்லை.” அழுதபடி சரிந்து அமர்ந்து தலையை விந்தனின் பாதங்களில் வைத்து “மூத்தவரே, இணையரசன் என்றல்ல தங்கள் இளையோன் என்றும் அடிமையென்றும் இருப்பதே எனக்கு உகந்தது” என்றான் அனுவிந்தன். விழிநீருடன் அவனை அள்ளி நெஞ்சோடணைத்துக்கொண்டான் விந்தன்.

அந்தச் சொற்கள் அக்கணத்தில் தன் நாவில் ஏன் எழுந்தன என்று அவன் பின்னர் எண்ணி நோக்கியதுண்டு. முற்றத்திற்குச் சென்று நிற்கும்வரை ஐயமும் அலைக்கழிப்பும் கொண்டவனாகவே இருந்தான். பிழை நிகழ்ந்துவிடக்கூடும் என்ற எண்ணம் மேலும் மேலும் வலுத்துக்கொண்டிருந்தது. முற்றத்திலிருந்து மீண்டும் தன் அவை நோக்கி திரும்பி இளையோனை அங்கு வரச்சொல்லிவிட வேண்டுமென்று எண்ணிக்கொண்டு அவ்வெண்ணத்துடன் போரிட்டுக் கொண்டிருக்கையிலேயே அனுவிந்தன் முற்றத்திற்குள் நுழைந்தான். கைவிரித்து அவனை நெஞ்சுதழுவ அழைத்ததுகூட அவன் எண்ணியதனால் அல்ல, அவன் உடலே அதை நிகழ்த்தியது என்று தோன்றியது. நெஞ்சோடு அவன் உடலை அழுத்திக்கொண்டபோது அவன் உள்ளிலிருந்து பிறிதொருவன் எழுந்ததுபோல சொற்கள் கூறப்பட்டன.

அமைச்சரிடம் அதைப்பற்றி கேட்டான். “நீங்கள் இருவரும் உடலால் இணைந்தவர்கள், அரசே. ஒவ்வொரு நாளும் உடல் தழுவிக்கொள்க! ஒவ்வொரு நாளும் ஒருமுறையேனும் தொட்டுக்கொள்க! எங்கு அமர்ந்திருந்தாலும் உங்கள் உடல்கள் தொட்டுக்கொண்டிருக்க வேண்டும். சொற்களால் உணராததை தொடுகையால் பகிர்வீர்கள். கருவறைக்குள் நீங்கள் ஒன்றென இருந்தீர்கள். அங்கு அவ்வாறு இருந்த பெருமகிழ்வையும் முழு விடுதலையையும் இங்கும் உணர்வீர்கள். இரட்டையர் என்று இருப்பது பெரும்பேறு. இருவரும் ஒன்றாக முடியுமெனில் அதுவே பெருங்களிப்பு” என்றார் வில்வர்.

ஓரிரு நாட்களில் விந்தன் கண்டுகொண்டான் அனுவிந்தன் அருகிருக்கையில் தன் உள்ளம் கொள்ளும் பெரும் விடுதலையை. உடற்தசைகள் அனைத்தையும் அழுத்தியிருந்த எடைகள் விலகின. களிப்பும் சிரிப்பும் கொண்டவனாக அவன் மாறினான். அரசி “உங்கள் முகத்தில் இப்புன்னகையை நான் என்றுமே

பார்த்ததில்லை” என்றாள். ஏவலர்கள் அவனை அணுகுகையிலேயே முகத்தில் புன்னகை விரிய வணங்கினர். குடிகள் அவன் பெருங்கருணையுடன் மட்டுமே அவையமர்ந்து முடிவுகள் சொல்வதாக சொன்னார்கள். அறத்தின் தெய்வம் அவனுள்ளில் இருந்து எழுந்துவிட்டதென்று சூதர்கள் கூறினார்கள். இளையோன் வாள் என்றும் மூத்தவர் அதன் பொற்பிடி என்றும் கவிஞர் பாடினர். அவர்கள் இருவரின் ஆட்சியில் அவந்தி வெற்றியும் புகழும் அடைந்தது.

தொலைவில் போர் தொடங்கவிருப்பதற்கான முரசுகள் முழங்கின. அனுவிந்தன் திரும்பி அவனிடம் செல்வோம் என்று கைகாட்டினான். விந்தன் “இளையோனே, இப்போரில் நாம் எந்த இழப்புமின்றி திரும்ப உளம் கொண்டுள்ளோம். இன்று மாலை போர் நிறுத்தம் குறித்து தார்த்தராஷ்டிரரிடம் பேச விரும்புகிறோம். அதை எண்ணி உன் அம்புகள் எழட்டும்” என்றான். பேரோசையுடன் கௌரவப் படைகள் பாய்ந்து முன்னெழுந்து பாண்டவப் படையுடன் முட்டிக் கலந்தன.

போர் தொடங்கியதுமே அது செல்லும் திசை குறித்த உள்ளுணர்வொன்று உருவாவதை விந்தன் முன்னரே கண்டிருந்தான். முதல்நாள் முரசொலியுடன் கௌரவப் படைகள் எழுந்துசென்று பாண்டவப் படைகளை அறைந்தபோது அன்று அருங்கொலை நிகழப்போகிறது என்று அவன் அகம் படபடப்புடன் உணர்ந்தது. அன்று மற்றவர்கள் போரெனும் உணர்வே அற்றவர்கள்போல, ஒரு திருவிழாவின் தொடக்கமென்பதுபோல நகையாட்டும் களிச்சொற்களும் கூச்சல்களுமாக கிளர்ச்சி கொண்டிருந்தனர். போர் தொடங்கிய இரண்டு நாழிகைக்குள்ளாகவே பீஷ்மர் எதிரணியின் இளவரசர்களை கொன்றுகுவித்து முன்சென்ற செய்திகள் வரவரத்தான் ஒவ்வொருவரும் போரென்றால் என்னவென்ற உணர்வை அடைந்தனர்.

பாரதவர்ஷத்தில் அதுவரை அத்தகைய போர்கள் நிகழ்ந்ததில்லை. நெடுங்காலமாகவே உரிமைப்போர்கள் நாற்களத்திலோ சேவற்களத்திலோ சாவேற்றப்படையினர் பொருதும் களரியிலோ தீர்க்கப்பட்டன. நிலம்கொள் போர்கள் படைகள் எழுந்துவரும்போதே அளவும் விசையும் கணித்து அடியறவும் கப்பமுமாக முடிக்கப்பட்டன. கொலைக்களம் அரிதாகவே நிகழ்ந்தது. ஷத்ரியர்களுக்கும் மலைக்குடிகளுக்குமான போர்களில் அரசர்கள் களமிறங்குதல் வழக்கமில்லை. இளவரசர்களை போருக்கு அழைத்துவந்தவர்கள் அதனூடாக அவர்கள் புகழ்பெறுவார்கள் என்றும் போருக்குப் பின் நிகழும் நிலம்பகுப்பில் இளவரசர்களுக்கு குரலிருக்கும் என்றும் எண்ணினர். அவர்கள் தளிருதிரும் கொடுங்காற்றிலென போரில் களம்படுவார்கள் என்று எண்ணியிருக்கவில்லை. போர்க்களத்தில் அவன் கண்ட ஷத்ரிய முகங்களெல்லாம் அச்சத்தில் வெளுத்து சொல்லிழந்திருந்தன. அன்று மாலை பாடிவீடு திரும்பும்போது பெரும்பாலானவர்கள் தலைதாழ்த்தியிருந்தனர்.

அன்றும் அந்த முதல்நாளின் படபடப்பு அவனுக்கு ஏற்பட்டது. அது ஏன் என அவனுக்கு புரியவில்லை. அவன் கைதூக்கி அனுவிந்தனிடம் “முன்னணிக்கு செல்லவேண்டாம். நமது படைகள் முன்செல்லட்டும். இன்றுடன் நம்வரை இப்போர் முடிகிறது” என்றான். அவன் கையசைவில் எழுந்த சொற்களை அனுவிந்தன் விழி கொள்ளவில்லை. தன் புரவிவீரர்களை முன்னால் செலுத்தி அதற்குப் பின்னால் தேரில் படைமுகம் நோக்கி சென்றான். அவன் உவகையுடன் இருப்பதாகவும் அவன் உடல் உள்ளிருந்து எழும் கொப்பளிப்பால் நிலையழிந்திருப்பதாகவும் தோன்றியது. அவனிடம் மேலும் ஏதோ சொல்ல விந்தன் எண்ணினான். ஆனால் அவன் மேலும்

அப்பால் சென்றுவிட்டிருந்தான். முழவொலியினூடாகவே இனிமேல் சொல்லாட முடியும்.

காதுவரை நாண் இழுத்து அம்புகளை செலுத்தியபடி விந்தன் படைமுகம் நோக்கி சென்றான். பல்லாயிரக்கணக்கான நாகங்கள் முத்தமிட்டு முத்தமிட்டு பின்னிப்பிணைந்து காதல்கொள்வதுபோல என்று ஓர் உளச்சித்திரம் உருவானது. இப்பரப்பு ஏன் நீர்போலிருக்கிறது என்று ஒவ்வொரு முறையும் ஏற்படும் ஐயம் எழுந்தது. மிகப் பெரியவை நீரென்றே நிலைகொள்ளவியலும் போலும். மலைமேல் நின்றிருக்கையில் சூழ விரியும் நிலமும் நீர்வெளியென்றே அலைகொள்கிறது. உயிர்களின் பெருவெளி. ஒவ்வொன்றும் பிறிதை கொல்லும் பொருட்டு வெறிகொண்டிருக்கிறது. இப்பொதுநோக்கில் தெரியும் இது கொள்ளும் இந்தக் கொந்தளிப்பு தன்னை தான் கொன்றுகொள்வதற்கு.

ஒருகணம் எதுவோ தோன்ற அவன் விழிதிருப்பிப் பார்த்தபோது விண்ணிலிருந்து பருந்துபோல் இறங்கிய நீள்அம்பொன்று அனுவிந்தனின் நெஞ்சில் பாய்ந்து கவசங்களை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று மறுபுறம் முதுகில் நீண்டு அவனை தேர்த்தட்டுடன் அறைந்து நிறுத்துவதை கண்டான். கையிலிருந்து வில் கீழே விழ “இளையோனே!” என்று கதறினான். தன்னையறியாமலேயே தேரிலிருந்து இறங்கிவிட முயன்றான். தேர்ப்பாகன் “துயர் காட்டும் இடமல்ல இது, அரசே! அத்துயர் எஞ்சிய படைவீரர்களையும் உளம்தளரச் செய்து களத்தில் கொன்றழிக்கும்!” என்றான். “ஆம்” என தன்னை நிலைமீட்டு “செல்க!” என்றபின் முழந்தாளிட்டு தன் வில்லை எடுத்துக்கொண்டு தலைகுனிந்து தேர்த்தட்டிலேயே அமர்ந்திருந்தான்.

“இத்தனை எளிதா? இத்தனை பொருளற்றதா?” என்று அவன் உள்ளம் அரற்றிக்கொண்டிருந்தது. அனுவிந்தன் வீழ்ந்ததை அறிவிக்கும் முழவோசை எழுந்தது. அவந்தியின் வீரர்கள் தங்கள் படைக்கலங்களை தூக்கி “வெற்றிவேல்! வீரவேல்! அவந்தியின் அரசருக்கு விண்ணுலகு! அனுவிந்தருக்கு விண்ணுலகு! மாவீரருக்கு விண்ணுலகு! களம்பட்டவருக்கு விண்ணுலகு!” என்று கூவினர். விந்தன் திரும்பி இரு கைகளையும் வீசி “செல்க! நம் அரசரின் குருதிக்கு ஆயிரம் மடங்கு குருதி கொண்டு திரும்புவோம்! செல்க!” என்று கூவினான். தன் தொடையில் ஓங்கி அறைந்து “எழுக! குருதி கொண்டு மீள்க! வெல்க!” என்று கூவியபடி தேரை முன் செலுத்தினான். அவந்தியின் படைகள் இணைந்து கூர்வடிவு கொண்டு அலையாகி சென்று பாண்டவப் படைகளை மோதின.

அங்கிருந்து அர்ஜுனன் வில்சூடி தேரிலெழுந்தான். அவன் தோற்றத்தை தொலைவிலிருந்து நோக்கியதுமே ஒரு கணம் அவன் உள்ளம் நடுங்கியது. அனுவிந்தனை வீழ்த்திய அம்பு அவனுடையதுதான் என்பதை அவன் உணர்ந்தான். “செல்க! இளைய பாண்டவனை எதிர்கொள்க!” என்று தன் பாகனுக்கு ஆணையிட்டான். பாகன் ஒருகணம் தயங்கி “நாம் தனித்து நின்றிருக்க நேரும்!” என்றான். “செல்க!” என அவன் கூவினான். அவனுடைய தேர் பிற தேர்களை ஒதுக்கி அர்ஜுனனை நோக்கி சென்றது.

அதே பொழுதில் இருபுறத்திலிருந்தும் திரிகர்த்த நாட்டு அரசன் ஷேமங்கரனும் புளிந்த நாட்டு அரசன் சுகுமாரனும் அர்ஜுனனை எதிர்கொள்ள வந்தனர். “இணைந்து அம்புதொடுங்கள். இருபுறத்து அம்புகளும் ஒற்றைக்கணத்தில் சென்று தொடவேண்டும். அவனால் பகுக்கமுடியாத கணமென்று அது அமையவேண்டும். இவ்விழிமகன் நம் அம்புபட்டுத் தோற்று திரும்பவேண்டும். இன்றே இவன் ஆணவம் அழியவேண்டும்! இணைந்து நில்லுங்கள்!” என்றபடி அர்ஜுனனை நோக்கி

அம்புகளை எய்துகொண்டே முன்னகர்ந்தான். தார்விக நாட்டரசன் சசாங்கனும் திரிகர்த்தத்தின் மூத்த அரசர் சத்யரதரும் களத்தில் வந்தார்கள். அவர்களின் முகங்களில் தெரிந்த திகைப்பைக் கண்டதும்தான் என்ன நிகழ்கிறதென விந்தன் புரிந்துகொண்டான். அவர்கள் அங்கே நேர்முன்னால் என அர்ஜுனனை எதிர்பார்க்கவில்லை. எதிர்கொண்டபின் உடனே களமொழியவும் விரும்பவில்லை.

அர்ஜுனன் முகம் கனவிலிருப்பதுபோல் இருந்தது. அதே கனவில் பிறிதொரு இடத்திலிருப்பதுபோல் இருந்தது அத்தேரை ஓட்டிய இளைய யாதவரின் முகம். இங்கு செத்துக்குவிபவர்களைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கவேயில்லை என்று தோன்றியது. அம்புகளைத் தொடுத்தபடி விந்தன் மேலும் மேலும் அணுகிச்சென்றான். அவன் எய்த அம்புகளை அர்ஜுனனின் அணுக்கப்படையினரின் அம்புகளே தடுத்து தெறிக்கச் செய்தன. வெறிகொண்டு கூவியபடி அவன் தொடுத்த நூறு அம்புகளில் ஒன்றே அர்ஜுனனின் தேர்த்தூணில் அறைந்து உதிர்ந்தது. அக்கணம் விந்தனின் தோளில் அம்பொன்று தைத்து தேர்த்தட்டில் முழங்கால் மடித்து விழுந்தான். அம்புகள் வந்து அவனைச் சூழ்ந்து தேர்த்தட்டில் பதிந்தன. அவன் கவசங்களின் மேல் பட்டு உதிர்ந்தன. முதுகுக்கவசத்தை உடைத்து ஒன்று உதிர்ந்தது.

“புரண்டு பின்னால் வருக! அரசே புரள்க!” என்று ஆவக்காவலன் கூவினான். அவன் உருண்டு பின்னடைய ஆவக்காவலன் எழுந்து அவனை அள்ளி பின்னாலிழுத்தான். இரும்புக்கேடயத்தால் அவனை மறைத்துக்கொண்டு அந்த அம்பைப் பிழுது அப்பால் எறிந்து அரக்குநனைத்த மரவுரியால் கட்டிட்டான். பாகன் தேரை பின்னாலிழுத்துச் செல்ல அர்ஜுனன் முன் செல்லும் வீரர்கள் அலறியபடி விழும் கூச்சல் கேட்டது. விந்தன் மீண்டும் கவசமணிந்து எழுந்தபோது அவன் தேருக்கு முன்னால் தார்விக நாட்டரசன் சசாங்கனும் திரிகர்த்தத்தின் மூதரசர் சத்யரதரும் தலையறுபட்டு தேர்த்தட்டில் கிடப்பதை கண்டான். அவர்களின் தேர்ப்பாகர்கள் உதிர்ந்திருந்தனர். அவர்களின் கவிழ்ந்த தேர்களே அவன் தேருக்கு மறைவாக அமைந்திருந்தன.

“செல்க! போர்முகப்புக்கு!” என்று அவன் பாகனிடம் சொன்னான். “அரசே, இனி திரும்புதலே நன்று. இளைய பாண்டவரை எதிர்கொள்ள நம்மால் இயலாது. நின்றுவிட்டீர்கள், புண்பட்டு மீண்டீர்கள். எவ்வகையிலும் தாழ்வில்லை” என்றான் பாகன். “எதிர்கொள்வோம்! இன்று அவன் கையால் இறக்கிறேன்! செல்க!” என்று அவன் கூவி காலால் தேர்த்தட்டை அறைந்தான். பாகன் “ஆம்” என்று தேரை முன்னெடுத்துச் சென்றான். “இழிமகனே… இன்று என் வஞ்சத்தை உனக்கு தெரிவிக்காமல் செல்வதில்லை!” என்று கூவியபடி அர்ஜுனனை நோக்கி அம்புகளை எய்துகொண்டே அவன் முன்சென்று நின்றான் விந்தன். “கொல் என்னை! கீழ்மகனே, கொல் என்னை!” என்று வெறியுடன் அம்புகளை செலுத்தினான்.

அவனுக்குச் சுற்றும் அம்புகள் தெறித்து வந்து தேர்த்தூண்களிலும் தேர்த்தட்டிலும் பதிந்து நின்று அதிர்ந்தன. பிறையம்பால் தேர்முகடு உடைந்து தெறித்தது. இன்னும் சிறுபொழுது. என் வாழ்வின் தருணமே இதுவென்றிருக்கலாம். இந்தச் சில கணங்களின் பொருட்டே நான் நினைவுகூரப்படலாம். இவ்வளவுதான் அப்பொழுதிடை. இதை அம்புகளாக எண்ணிவிட முடியும். எண்ணங்களாக அளந்துவிட முடியாது. எண்ணங்கள் காலத்தால் அளக்க இயலாதவை. என்ன செய்துகொண்டிருக்கிறேன்? இங்கு இத்தருணத்தில் என் இதுவரையிலான விழைவுகளும் வஞ்சங்களும் கனவுகளும் முற்றிலும் பொருளிழந்துவிட்டதை உணர்கிறேன். இக்கணத்தில் அம்பெடுத்து விடுவதும் வரும் அம்புக்கு உடல் ஒழிவதும் தவிர எதுவுமே பொருளுடையதாக இல்லை.

இறப்பு காவியத்தலைவனை உருவாக்குகிறது என்கின்றன இலக்கணங்கள். பல தருணங்களில் அது அனைத்துப் பொருளையும் முற்றழித்துவிடுகிறது. தேனீக்கூட்டில் புகுந்த கருவண்டென சொற்களனைத்தையும் சிதறடித்துவிடுகிறது. அர்ஜுனனின் தேரில் ஏழு இடங்களில் அம்புகளால் அறைய அவனால் இயன்றது. எவரேனும் வருவார்களெனில் இன்னும் சில அம்புகளுக்கு உயிரோடிருப்பேன். எவரும் துணைவரவில்லையெனில் இக்களத்தில் வீழ்வேன். விண்ணுலகில் நின்று என் இளையோன் பதைக்கும் விழிகளுடன் என்னை பார்த்துக்கொண்டிருக்கிறான்.

எத்தனை நன்று அவனுடன் இத்தனை பிந்தியாவது உளம் கோத்துக்கொண்டது! அவ்வஞ்சத்துடன், ஐயங்களுடன், அச்சங்களுடன் இங்கு வந்து நின்றிருந்தேன் எனில் இத்தருணத்தில் நான் உணர்வதென்ன? என் வாழ்நாளில் இனிதென்றும், பொருளுடையதென்றும் நான் உணர்ந்தது அனுவிந்தனுடன் உளம் கோத்து வாழ்ந்த இறுதிச் சில ஆண்டுகள் மட்டுமே. இறுதி… ஆம், வேறென்ன! இக்களத்திலிருந்து நான் உயிருடன் மீள இயலாது. மீண்டால் வெற்றுடலாக, நிலையழிந்த ஊன்தடியாகவே எஞ்சவேண்டியிருக்கும். அனைத்து நெறிகளின்படியும் இக்களத்தில் நானும் வீழ்வதே முறை.

மேலும் மேலும் அம்புகளைத் தொடுத்தபடி அவன் அர்ஜுனனின் அம்பு வளையத்துக்குள் சென்றான். அவந்தியின் தேர் வீரர்கள் அனைவருமே கழுத்தறுபட்டு களத்தில் விழுந்து கிடந்தார்கள். நெஞ்சில் அறையப்பட்ட நீளம்புடன் அவனுக்கருகே தேரில் கிடந்த வில்லவன் வாயில் குருதிக்குமிழி கொப்பளிக்க உடல் இழுபட்டுக்கொண்டிருந்தான். வில்லவர் வீழ்ந்த தேர்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி வழி தடுத்தன. அதுவே அர்ஜுனன் அவந்தியின் படைகளுக்குள் ஊடுருவுவதற்கும் தடையாக இருந்தது. “முன்செல்க! இவ்விடைவெளியினூடக முன்செல்க!” என்றான் விந்தன். “அரசே, இந்த தேர்களே நமக்கு காப்பு” என்றான் பாகன். “செல்க! செல்க!” என்று கூவினான் விந்தன்.

பாகன் இரு தேர்களின் இடைவெளியினூடாக தேரைச் செலுத்தி அர்ஜுனனை நோக்கி சென்றான். அர்ஜுனனை அவனுடைய ஏழு அம்புகள் சென்றடைந்தன. பின்னணியில் சகுனியின் முரசுகள் முழங்கின. “அர்ஜுனனை எதிர்கொள்க! ஷத்ரிய வீரர்கள் முன் வருக!” ஒருகணத்தில் அவன் விழிகள் திரும்பி விந்தனின் விழிகளை நோக்கின. விந்தனின் உடல் சிலிர்த்து காலம் அழிந்தது. இறப்பின் கணம்போலும் அது என அது கடந்த பின் உணர்ந்தான். வலப்புறத்திலிருந்து சங்கொலி எழுப்பியபடி ஜயத்ரதன் களத்திற்குள் புகுந்தான். அதே தருணத்தில் இடப்புறத்திலிருந்து அஸ்வத்தாமனும் அர்ஜுனன் முன் வந்தான். இருவரின் அம்புகளையும் அர்ஜுனன் எதிர்கொள்ள அதுநாள் வரை அக்களத்தில் இடைவிட்டு இடைவிட்டு நடந்துகொண்டிருந்த அப்போர் மீண்டும் தொடங்கியது. விந்தன் அவர்களின் வட்டத்திலிருந்து மெல்ல பின்னடைந்தான்.

எத்தனை முறை இவர்கள் தங்கள் அம்புகளின் ஆற்றலை நோக்கியபடி முற்றிலும் நிகர்நிலையில் நின்று இப்படி போரிட்டிருப்பார்கள் என்று விந்தன் வியந்தான். பாகன் அவன் எண்ணத்தை உணர்ந்தவன்போல் தேரை திருப்ப “வேண்டாம்!” என்றான். “இங்கே நில்… களத்திலேயே நில்!” பாகன் “அரசே!” என்றான். “இறப்பில்லாத வெறும்வெளியில் என்னால் நின்றிருக்கவியலாது!” என்றான் விந்தன். வெறிகொண்டவன்போல கூவி நகைத்து “எட்டு பக்கமும் கொல்ல வரும் அம்புகள் வேண்டும்… இல்லையேல் பித்தனாகிவிடுவேன்!” என்றான். பாகன் இரு கவிழ்ந்த தேர்களுக்குப் பின்னால் தேரை கொண்டுசென்றான்.

தேரில் நின்றபடி அவன் அர்ஜுனனை அஸ்வத்தாமனும் ஜயத்ரதனும் எதிர்த்து நின்றதை மலைத்த விழிகளுடன் பார்த்தான். அம்புக்கு அம்பு நிற்கும் போர். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாளில் உணரும் உச்ச தருணங்களை மட்டுமே தொடுத்து உருவாகிய காலம் என அத்தருணம். அவர்களின் போரை நோக்கிக்கொண்டிருந்தபோது அவன் ஒன்று உணர்ந்தான். அது வேறு விற்கலை. அவனும் பிற ஷத்ரியர்களும் இளமை முதலே கற்று கைகொள்வது வில்லெனும் தொழில். அங்கு நிகழ்ந்தது வில்லெனும் கலை. ஒரு துளியும் எஞ்சாது ஒரு துளியும் குறையா ஒத்திசைவே கலை. ஒருவரும் இறக்கவில்லையென்றால், ஓர் அம்பும் இலக்கடையவில்லை என்றால், போர் முற்றிலும் பொருளிழந்து கேலிக்குரியதாகிவிடும். அந்நிலையில் கலையோ மேலும் எழில் கொள்கிறது. அதன் உச்சமே அதுதான் என்பதுபோல.

அம்மூவர் உடலையும் எந்த அம்பும் சென்றடையவில்லை. ஒவ்வொரு அம்பையும் இணையான பிறிதொரு அம்பு விண்ணில் தெறித்து சிதறடித்தது. அவர்கள் வாழும் உலகம் வேறு. கந்தர்வர்களும் மானுடரும் ஒரே உலகில் ஒருவரை ஒருவர் அறியாதவர்களாக வாழ்கிறார்கள் என்று இளமையில் அவன் கேட்டிருந்தான். மணமும் ஒளியும் ஒரே காற்றில் திகழ்வதுபோல். அவர்கள் தங்களில் ஒருவரையே நோக்குகிறார்கள். பிறரை அறிவதே இல்லை. சிற்றுயிர்களை அரைத்து அழித்தபடி யானை நடந்து செல்வதைப்போல.

இங்கு கொல்லப்பட்டவர்களை விண்ணில் இவர்கள் சந்தித்தால் முகம் அறிந்திருக்கமாட்டார்கள். அவர்கள் இறந்து மீளும் அந்த விண் பிறிதொன்றாக இருக்கலாம். இவர்கள் செல்லும் விண்ணுலகல்ல அது. இவர்களின் உலகில் ராகவராமனும் கார்த்தவீரியனும் ராவண மகாபிரபுவும் விருத்திரனும் இருப்பார்கள். இந்திரனும் சூரியனும் அரியணை அமர்ந்திருப்பார்கள். இரு வேறு உலகங்களைப் படைத்து ஒன்று பிறிதிற்கு பலியென்று அமைத்து இவ்வுலகை யாத்திருக்கின்றன தெய்வங்கள்.

தேர் மிகவும் பின்னணிக்கு வந்துவிட்டிருந்தது. அவன் தேரை அணுகிய கூர்ஜர மன்னன் சக்ரதனுஸ் “ஷத்ரியர் நால்வர் கொல்லப்பட்டுவிட்டனர்” என்றான். “நால்வரா?” என்றான் விந்தன். “திரிகர்த்தன் ஷேமங்கரனும் புளிந்தன் சுகுமாரனும் கொல்லப்பட்டுவிட்டனர்!” அவன் பதற்றத்துடன் திரும்பி தன்னைச் சூழ்ந்திருந்த படைகளை நோக்கிவிட்டு “ஆயினும் இதுவரை ஷத்ரிய அரசர்கள் குறைவாகவே கொல்லப்பட்டிருக்கிறார்கள்!” என்றான். அதன் பொருள் புரியாத கூர்ஜர மன்னன் “ஆயினும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். படைமுகப்பிற்கு செல்லாமல் ஒழியவேண்டும். இன்று நாமனைவருமே எஞ்சி தார்த்தராஷ்டிரர்களிடம் பேசவேண்டியிருக்கிறது” என்றான்.

பொருளற்றதொரு சீற்றம் எழ “படைமுகம் செல்லாமல் போருக்கு வந்து நின்றிருப்பதைப்போன்ற இழிவு பிறிதொன்றில்லை. அவந்தியின் அரசர்களின் இயல்பு அதுவல்ல!” என்றான் விந்தன். கூர்ஜர சக்ரதனுஸ் திகைத்து “ஆம், செல்லவேண்டும். செல்லக்கூடாதென்றில்லை. அங்கே மறுபுறம் எளிய கிராதரும் நிஷாதரும் வந்து நின்றிருக்கிறார்கள். அவர்களை எதிர்கொள்வோம். அர்ஜுனனையும் பீமனையும் திருஷ்டத்யும்னனையும் சாத்யகியையும் எதிர்கொள்வது நாம் இறப்பை நோக்கி செல்வதுதான்” என்றான். “நான் இறப்பதற்கே வந்திருக்கிறேன், இறப்பதற்கே செல்கிறேன்!” என்று கூவிய விந்தன் “தேரைச் செலுத்து… படைமுகப்பு நோக்கி செலுத்து!” என்று பாகனிடம் கூவினான்.

தேர் மீண்டும் படைமுகப்பு நோக்கி சென்றது. விந்தன் தேர்த்தட்டில் எழுந்து நின்று சூழ நோக்கினான். எதிர்முனையில் துருபதரும் அவர் மைந்தர்களும் பூரிசிரவஸுடன் போரிட்டுகொண்டிருந்தனர். சிகண்டியை துரோணர் எதிர்த்துப் போரிட்டார். மிக அப்பால் துரியோதனனும் தம்பியரும் கடோத்கஜனை எதிர்ப்பதை முரசுகள் அறிவித்தன. சக்ரதனுஸ் “நமது படைகள் அர்ஜுனனை நோக்கி செல்லட்டும். அவரை சூழ்ந்துகொள்ளட்டும். நாம் சென்று பாஞ்சாலனை தனிமைப்படுத்தி வெல்வோம்” என்றான். “ஆம், பாஞ்சாலனை வெல்வோம்!” என்று அவனுக்கு அப்பால் நின்ற சைப்யநாட்டு கோவாசனர் கூவினார். அபிசார மன்னர் சுபத்ரரும் அரேவாக மன்னர் சிம்மவக்த்ரரும் அவர்களுடன் எழுந்துசென்றனர்.

அவர்கள் போர்க்கூச்சலிட்டபடி செல்வதைக் கண்டு இகழ்ச்சியுடன் துப்பிய விந்தன் “இழிமக்கள். களத்திலும் நடிப்பவர்கள்!” என்றான். “செல்க… பாண்டவ மைந்தரின் முன்னால் சென்று தேரை நிறுத்துக!” என்றான். மறுசொல்லின்றி தேர்ப்பாகன் அவன் தேரை அர்ஜுனன் அஸ்வத்தாமனையும் ஜயத்ரதனையும் எதிர்த்துக்கொண்டிருந்த முனைக்கு கொண்டுசென்றான். அம்புகள் உரசி செம்பொறிகள் நிறைந்திருந்த காற்றினூடாக தலையைத் தாழ்த்தி ஊடுருவிச்சென்று வில்லை எடுத்து அம்புகளை தொடுத்தான். “இதோ… இந்தக் களம்தான். இந்த மண்ணில்தான்” என உள்ளூர கூவிக்கொண்டான்.

அவன் அம்புகள் எதையும் அவர்கள் மூவரும் அறியவில்லை. அர்ஜுனனின் அணுக்கவில்லவன் ஒருவனை விந்தன் வீழ்த்தினான். இன்னொருவனின் அம்பு வந்து அவன் தோள்கவசத்தை உடைத்தது. அவன் என்னை நோக்கவேண்டும். அந்த விழிகள்! அவை மானுடர்க்குரியவை அல்ல. பல்லாயிரமாண்டுகள் குருதிபலி கொண்டு பழகிய தெய்வம் பசிகொண்டெழுந்து நோக்கும் சீற்றம். மேலும் மேலுமென அவன் அம்புவட்டத்திற்குள் நுழைந்தான். அக்கணம் என்ன நிகழ்ந்ததென்றறியாமல் அப்போர் முடிந்தது. அஸ்வத்தாமனும் ஜயத்ரதனும் இரு பக்கங்களிலாக விலகியகல அர்ஜுனன் தன் பின்னணிப்படைக்குள் புதைந்து மறைந்தான். அவன் களத்தில் திகைத்து நின்று சூழ நோக்க அவனை சூழ்ந்துகொண்டது விராடர்களின் படை.

அம்புகளை தவிர்க்கும்பொருட்டு அம்புகளைத் தொடுத்தபடி அவன் பின்னடைந்தான். அஸ்வத்தாமன் அப்பால் சாத்யகியுடன் போரிலீடுபடுவதை முழவுகள் கூறின. ஜயத்ரதனும் திருஷ்டத்யும்னனும் வில்லிணை நிற்பதை அறிந்தான். அர்ஜுனன் எங்கே என அவன் செவிகள் துழாவின. மிக அப்பால் அர்ஜுனன் எழுந்ததை கூறின முழவுகள். “அங்கு செல்க… அங்கு செல்க… “ என்று அவன் கூவினான். அவன் சொல்வது புரியாமல் “அரசே!” என்றான் பாகன். “செல்க… அங்கே செல்க… இளைய பாண்டவரை தொடர்ந்து செல்க!” என்று அவன் கூவினான். “நான் துரத்திச் செல்கிறேன்! ஆம், நான் அவரை துரத்திச் செல்கிறேன். அதை முழவுகள் நமது படைகளுக்கு அறிவிக்கட்டும்!”

முழவுகள் முழங்கிக்கொண்டே இருந்தன. கௌரவப் படையின் முகப்பிலிருந்த கொப்பளிப்பே ஒரு பெரிய சுவரென்றாகி அப்பாலும் இப்பாலுமிருந்தவர்களை தடுத்தது. அங்கிருந்து எழுந்துகொண்டிருந்த கூச்சல்களே அர்ஜுனன் அங்கிருப்பதை காட்டியது. அவனுடைய தேர் அங்கே செல்வதற்குள்ளாகவே அர்ஜுனன் அங்கிருந்து தன் படைகளுக்கிடையே மூழ்கி மறைந்தான். கௌரவப் படை முழவொலிகளும் கொம்பொலிகளுமாக பின்னடைந்து குழம்பியது. ஆழத்தில் மடைத்திறப்பு இருக்கையில் மேலே தோன்றும் சுழி போலிருந்தது. அவன் அணுகியபோது காவலன் ஒருவன் “சாரஸ்வதரான உலூகரும் சால்வநாட்டு

த்யுமந்தசேனரும் கொல்லப்பட்டார்கள்!” என்று கூவினான். தேரில் வந்த ஒருவன் “ஆஃபிரநாட்டின் உக்ரதர்சனர் களம்பட்டார்!” என்றான்.

அப்பால் அலறல்களுடன் முழவுகளும் கொம்புகளும் எழுந்தன. “அர்ஜுனர் அங்கே தோன்றியிருக்கிறார்... சுறா நீர் கிழித்தெழுந்து வருவதுபோல் வருகிறார்” என்று படைத்தலைவன் ஒருவன் கூவினான். “அங்கே செல்க! அங்கே செல்க!” என்று விந்தன் தேர்ப்பாகனிடம் ஆணையிட்டான். “அரசே, நாம் பக்கவாட்டில் நகரவியலாது... நமக்கு பொழுதிடையில்லை” என்றான் பாகன். “அவர் எப்படி செல்கிறார்? அதைப்போல செல்க...” என்று விந்தன் ஆணையிட்டான். அஞ்சிக்குழம்பி முட்டிக்கொந்தளித்த கௌரவப் படை அவர்களின் தேரை அலைக்கழியச் செய்தது. பாகன் சவுக்கால் புரவிகளை அறைந்துகொண்டே இருந்தான்.

வடக்கே கொம்புகள் அலறின. முழவுகள் பதற்றம் கொண்ட யானைகள்போல் ஓசையிட்டன. “அங்கே எழுந்திருக்கிறார்!” என்று ஒருவன் கூவினான். அவனருகே தேரில் விரைந்த விதேகநாட்டு நிமி “ஷத்ரியர்களை தேடித்தேடி கொல்கிறான். நம் திட்டம் அவனுக்கு தெரிந்திருக்கிறது” என்றார். “சௌராஷ்டிர ருஷார்திகரும் ஐந்து மைந்தர்களும் களம்பட்டனர்!” என்று அப்பால் ஒருவன் கூவினான். “செல்க! விரைந்து செல்க!” என்று விந்தன் பாகனை விசைகூட்ட நிமி “நாம் பின்னடைய வேண்டியதுதான்... பின்னடைவதொன்றே வழி!” என்றார். அவருடைய தேர் பின்னால் செல்ல விந்தனின் தேர் முன்னெழுந்தது.

கோசலமன்னன் பிருஹத்பலனை வழியில் விந்தன் கண்டான். “ஷத்ரிய அரசர்கள் பின்னடைக... ஒருங்குதிரண்டு பின்னடைக!” என அவன் ஆணையிட்டுக்கொண்டிருந்தான். “மாகிஷ்மதியின் நீலரும் எட்டு மைந்தரும் கொல்லப்பட்டனர்” என்று முழவுகள் கூவின. விந்தன் அர்ஜுனனால் கலங்கி சுழித்துக்கொண்டிருந்த போர்முகப்புக்கு செல்வதற்குள் அவன் மீண்டும் மறைந்திருந்தான். “தெய்வங்களே! என்னை வைத்து விளையாடுகிறீர்கள் போலும்!” என்று அவன் தேரில் ஓங்கி உதைத்து கண்ணீருடன் கூச்சலிட்டான். “செல்க... அவரை பின்தொடர்க!” என்று பாகனின் தோளை மிதித்து ஆணையிட்டான்.

பின்னணியில் சகுனியின் ஆணை ஒலித்துக்கொண்டிருந்தது. “பிதாமகர் பீஷ்மர்! பிதாமகர் பீஷ்மர் அர்ஜுனனை தடைசெய்க! அர்ஜுனனை சூழ்ந்துகொள்ளட்டும் பிதாமகர்! ஷத்ரியர்கள் அவருக்கு பின்களமென அமைக!” அவனுடைய தேர் பின்னகர்ந்தபோது பீஷ்மரின் தேர் கொடிபறக்க பருந்துபோல் அணுகுவதை கண்டான். அதன் தட்டில் வில்லுடன் நின்ற பிதாமகர் கைகளை வீசி “என்னை தொடர்க! அர்ஜுனனைச் சூழ்ந்துகொள்ள வருக!” என ஆணையிட்டு அவனை கடந்துசென்றார். ஆனால் அவனை நோக்கி தேரில் வந்த பிருஹத்பலன் “ஷத்ரியகுலமே முற்றழிந்துகொண்டிருக்கிறது. இது இரு சாராரும் சேர்ந்து செய்யும் வஞ்சம்... நம்மை திட்டமிட்டு அழிக்கிறார்கள். பின்னடைவோம். நமது போர் முடிகிறது இதோ” என்று கூவினான்.

விந்தன் “பிதாமகரைத் தொடரும்படி ஆணை... அவர் அர்ஜுனனை வெல்லும்பொருட்டு செல்கிறார்!” என்றான். “அது அவர்களின் போர். நாம் இனியும் உயிர்கொடுக்க வேண்டியதில்லை” என்று பிருஹத்பலன் சொன்னான். “திரும்புக! ஷத்ரியர்கள் திரும்புக!” என கைவீசி ஆணையிட்டான். அவ்வோசை முழவுகளாக எழ வங்கத்தின் சமுத்ரசேனரும் சந்திரசேனரும் கேகயமன்னன் திருஷ்டகேதுவும் மாளவமன்னர் இந்திரசேனரும் தங்கள் தேர்களை திருப்பும்படி ஆணையிட்டார்கள்.

முன்னால் சென்ற பீஷ்மர் திரும்பி நோக்கியபோது தன் பின்படை ஒழிந்து கிடப்பதையும் ஷத்ரியர் பின்வாங்குவதையும் கண்டார். சீற்றத்துடன் வில்லை அவர்களுக்கு எதிராகத் தூக்கி அம்பெடுத்தார். பிருஹத்பலன் வில்லை கைவிட்டுவிட்டு தேர்த்தட்டில் கைதூக்கி நின்றான். பீஷ்மர் இழிசொல்லுடன் துப்பிவிட்டு தேரைத் திருப்பி அர்ஜுனனை துரத்திச்செல்லும்படி ஆணையிட்டார். அவருடைய தேர் மறைந்ததும் இந்திரசேனர் “செல்க… பின்னணிக்கு செல்க!” என ஆணையிட்டார். அவர்களின் தேர்கள் பின்னணிக்கு திரும்ப விந்தன் திகைத்து நின்றான். பின்னர் “பிதாமகரை தொடர்க!” என்று தன் பாகனுக்கு ஆணையிட்டான். ஆனால் அதற்குள் பூரிசிரவஸின் பால்ஹிகப் படையின் வில்லவர்கள் பீஷ்மருக்கு பின்காப்பென்றாகி அவரை முற்றாக மறைத்தனர்.

விந்தன் தன் தேரில் தளர்ந்தவனாக நின்றான். அவன் உள்ளம் வீண் சொற்களாக இருந்தது. “பின் திரும்புக” என பாகனுக்கு ஆணையிட்டான். “அரசே!” என்றான் பாகன். “பின்னணிக்கு செல்க… ஷத்ரிய அரசர்களுடன் சேர்ந்துகொள்க!” என்றான். அவனுடைய தேர் திரும்பியபோது இன்னொரு தேரில் முட்டி நின்றது. அக்கணம் விண்ணிலிருந்து செங்குத்தாக இறங்கிய நீளம்பு ஒன்று அவன் கழுத்தில் தைத்து மறுபக்கம் சென்று நின்றது. மூச்சு அறுபட்டு உடல் துள்ள அவன் தேர்த்தட்டில் விழுந்தான்.

**பகுதி எட்டு : கதிரோன்**

சஞ்சயன் கஜபதத்தில் அமைந்த திருதராஷ்டிரரின் குடிலுக்குள் நுழைந்து உள்ளே மூங்கில் தட்டியாலான மஞ்சத்தில் துயில்கொண்டிருந்த திருதராஷ்டிரரை அணுகி “பேரரசே!” என்று தாழ்ந்த குரலில் அழைத்தான். சிற்றொலிகளையே அறிவது அவர் செவி என அவன் அறிந்திருந்தான். திருதராஷ்டிரர் முனகி “ஆம், கிளம்ப வேண்டியதுதான்” என்றார். “புலரி அணுகுகிறது, பேரரசே” என்று சஞ்சயன் சொன்னான். “பெரும்போர்!” என்று அவர் சொன்னார். “முற்றழிவு!” கைகளை அசைத்து தாடை நடுங்க “போரெனில் வெறும் குருதி! வேறொன்றுமல்ல!” என்றபடி விழித்துக்கொண்டார். “யார்?” என்றார். “நான் சஞ்சயன்… பொழுதணைகிறது, அரசே!”

அவர் கையூன்றி எழுந்தமர்ந்தார். “இனி இப்போரை என்னால் நோக்கி இருக்க இயலாது. திரும்பிச்சென்று குடிலில் ஒடுங்கி துயின்றாலொழிய என் சித்தம் நிலை மீளாது” என்றார். “போதும்… இன்றோடு போதும். நாளை நாம் இங்கே மீளவேண்டியதில்லை…” அவர் சொல்வதென்ன என்று சஞ்சயன் அறிந்திருந்தான். அவர் ஒவ்வொருநாளும் கனவில் பிறிதொரு போரை நோக்கிக்கொண்டிருந்தார். தெய்வங்களும் மாய்ந்தோரும் கனவுருக்களும் கலந்து போரிடும் போர் அது. ஒவ்வொருநாளும் அவனுடன் தேரில் காட்சிமாடம் நோக்கி செல்கையில் அவர் அந்தப் போரைப்பற்றியே சொன்னார். “விண்ணிலிருக்கும் வெள்ளங்களின் ஒரு திவலையே மண்ணில் மாமழை என பெய்கிறது என்பார்கள். இப்போரும் ஒரு துளித்தெறிப்பு மட்டுமே…”

அவர் சொல்வதென்ன என்று அவன் தன் முழுக் கற்பனையாலும் உய்த்துணர முயல்வதுண்டு. அவனால் விழிக்காட்சியாக அதை விரித்துக்கொள்ள இயலவில்லை. சொல்லில் இருந்து காட்சிகளை எழுப்பும் அவன் திறன் அவரிடம் தோற்றது. அவருடைய சொற்களுக்கும் காட்சிக்கும் நேரடியான தொடர்பு

இருக்கவில்லை. அவர் கண்ட காட்சிகளனைத்துமே சொற்களிலிருந்து உருவானவை. அவை மீண்டும் சொற்களாகும்போது எப்படி முற்றிலும் பிறிதொன்றாக அமைகின்றன? அவை அவருக்குள் சென்று எப்படி உருமாறுகின்றன? அவன் விந்தையான நிலமொன்றின் பொருளிலா வடிவம்கொண்ட கூழாங்கற்களை என அச்சொற்களை அளைந்துகொண்டே உடன்சென்றான்.

“நான் சொல்வது உனக்கு புரிகிறதா?” என்று திருதராஷ்டிரர் கேட்டார். “அது பெரும்போர். அங்கே அத்தனை தெய்வங்களும் உள்ளன. மானுடர்களின் தெய்வங்கள் மட்டுமல்ல. வல்லூறுகளின், பருந்துகளின், கழுகுகளின் தெய்வங்கள். யானைகளின், களிறுகளின், புரவிகளின் தெய்வங்கள். வாள்களின், விற்களின், வேல்களின், அம்புகளின் தெய்வங்கள். திசைத்தேவர்கள், புடவிக்காவலர்கள், மறைந்துறையும் இருளுருக்கள், மாநாகங்கள். கந்தர்வர்கள், யட்சர்கள், கிம்புருடர்கள். காலமென்றும் இறப்பென்றும் நோயென்றும் வலியென்றும் விழிநீர் என்றும் ஆன தெய்வங்கள். ஆணென்றும் பெண்ணென்றும் உருகொண்டவை. ஆணும்பெண்ணும் அல்லாதானவை. அனைத்து தெய்வங்களும். அவை உச்சநிலையில் போர் புரிந்துகொண்டிருந்தன. புரிகிறதா? ஈடில்லா பெரும்போர்.”

அவர் திணறித்திணறி கைகளை விரித்து தொண்டைமுழை அசைய கூச்சலிட்டார். “அவை ஒன்றை பிறிது நிகர்செய்தன. இறப்பை மறுபிறப்பு. நோயை மீட்பு. வலியை இன்பம். நாகங்களை இடியின் தெய்வம் ஆண்டது. இடியை மழை மூடியது. எவரையும் எவரும் வென்று அழிக்கவியலாது என்பதனால் அப்போர் கணந்தோறும் முடிவில்லாமல் நிகழ்ந்தது. கணுவிடை குன்றாமல் கூடாமல். நோக்குக, இறப்பில்லை. வெற்றிதோல்வியும் இல்லை. கொள்வதும் கொடுப்பதும் இல்லை. ஆகவே அது வஞ்சம் மட்டுமே. பிறிதொன்றென உருமாற்றப்பட்ட வஞ்சங்களையே மானுடர் அறிவர். வஞ்சம் வஞ்சமென்றே நின்றிருப்பது தெய்வங்களிடம் மட்டுமே. மிகமிகக் கூரிய ஊசிமுனைபோன்ற வஞ்சம். அந்த அச்சத்தை நான் எப்படி உனக்கு விளக்குவேன்… சஞ்சயா, அந்த வஞ்சத்தைக் கண்டவனுக்கு இவ்வுலகில் அனைத்துமே இனிதென்றாகிவிடும். இங்குள்ள அனைத்துமே பொருள்கொண்டவை என தோன்றிவிடும்… ஆம்!”

போர் நிகழ்ந்த ஒவ்வொருநாளும் அவன் அவரை காட்சிமாடத்துக்கு அழைத்துச்சென்றான். காலையில் குடிலில் கண் விழித்து எழுந்து தேரிலேறி வந்து குருக்ஷேத்ரப் பெருங்களத்தை நோக்கி காட்சிமேடையில் அமரும் வரை அவரில் இருப்பவர் அஸ்தினபுரியின் பேரரசர். அன்றைய படைசூழ்கை என்ன என்பதை பறவை கொண்டுவந்து சேர்த்திருக்கும். தேரிலேறி அமர்ந்ததும்தான் அதை சஞ்சயன் சொல்வான். புருவம் சுளிக்க தலையைச் சுழற்றி “பருந்துச் சூழ்கையா? அதை பீஷ்மர் வகுத்துள்ளார் போலும். பிதாமகர் கூரலகென இருப்பதனால் மட்டுமே இது நல்ல சூழ்கை. பருந்துக்கு அலகு மட்டுமே படைக்கலம். அதன் கால்கள் நல்ல படைக்கலங்கள் அல்ல. தான் பற்றியதை அதனால் எளிதில் விட இயலாது. தாக்குவதும் அதே விசையில் பின்னெடுக்கக் கூடுவதுமான ஒன்றே சிறந்த படைக்கலம்” என்றார். “படி, படி அதை, மூடா!”

அவன் அதை முழுமையாக மீண்டும் படித்தான். “இன்னொரு முறை படி. ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி நிறுத்தி படி.” ஒவ்வொரு எழுத்துமென அவருக்குள் ஓலை திறந்துகொண்டே சென்றது. அதிலிருந்து படைகளின் அமைப்பை விரிவாக தன்னுள் நிகழ்த்திக்கொண்டார். “பீஷ்மருக்கு இருபுறமும் பால்ஹிகர்களும் சைப்யர்களும் நிலைகொள்கிறார்கள். பருந்தின் கழுத்துச் சிறகுகள், மெய்யாக அவற்றால் பயனொன்றுமில்லை. ஆனால் சினங்கொள்கையில் பூடை விரித்து தலை பெருக்க

அவை தேவை. பீஷ்மருக்கு முதுகெங்கும் விழிகள். அவருக்கு பின்காவலே தேவையில்லை. அவருடைய விசைக்கு நிகர்நின்று உடன்செல்லும் பின்படை தேவை. அங்குதான் நாம் தோற்கிறோம்… நாம் விசைமிக்க பருந்தால் இழுத்துச்செல்லப்படும் வெற்றுப்படை!”

கனைத்துக்கொண்டும் தன் தலையை தானே தட்டிக்கொண்டும் அவர் தொடர்ந்தார். “பருந்தின் கால்கள் என துரோணரும் கிருபரும்! நன்று! சிறகுகளென ஜயத்ரதனும் அஸ்வத்தாமனும். மறுபக்கம் என் மைந்தர்கள். இவ்வணி உண்மையில் நன்றல்ல. இருபுறமும் வில்லவர்கள் இணையாக இருக்கவேண்டும். என் மைந்தர்கள் வில்லவர்கள் அல்ல. ஜயத்ரதனும் அஸ்வத்தாமனும் எப்போதும் படைகளின் இரு பக்கங்களிலுமாக இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் இருவரும் இணைந்தால்தான் அபிமன்யூவையும் அர்ஜுனனையும் எதிர்கொள்ள முடிகிறது. ஆகவே நமக்கு வேறு வழியில்லை.” பெருமூச்சுவிட்டுக்கொண்டு “சூழ்கைகளால் உண்மையில் பெரும்பயனேதுமில்லை. படைவெற்றி வீரர்களால் அமைகிறது. அவர்கள் தனியர்கள்” என்றார்.

கைகளை மார்பில் கட்டிக்கொண்டு உடல் தளைத்து அமர்ந்து “நன்று, இந்தப் படைசூழ்கை என்ன செய்கிறது என்று பார்ப்போம். குறைந்த இழப்புகளுடன் அடைவதே மெய்யான வெற்றி. இழப்புகள் மிகுந்தோறும் வெற்றி பொருளிலாதாகிறது” என்றார். மேலும் பெருமூச்செறிந்து “இன்று இழப்பின்றி மீள்வதற்கான வழிகளை அவர்கள் காணவேண்டும். இழப்புகள் படைகளை உளச்சோர்வு அடையச்செய்கின்றன. எச்செயலும் அதன் பாதியில் பொருளற்றதாக தோன்றுமெனில் நம் ஊக்கம் குன்றிவிடுகிறது. போரின் பேரிடரே அது தொடங்கியதுமே பொருளற்றதென்று தோன்றத் தொடங்கிவிடும் என்பதுதான். எனினும் போர் தொடர்ந்து நிகழ்வது போரில் நாம் குருதிச்சுவை அறிவதனால். அதை வஞ்சத்தை கொண்டு பெருக்கிவிட்டிருப்பதனால். போரை மானுடர் நிகழ்த்துவதில்லை, தெய்வங்கள் தான் நிகழ்த்துகின்றன என்பார்கள். மானுடக்குருதியில் உறைகின்றன போருக்கான தெய்வங்கள்” என்றார்.

அவன் அவரை கைபற்றி அழைத்துச்சென்று மாடத்தின் மேல் ஏற்றினான். அங்கே பீதன் அவர்களுக்காக ஆடிகளை எடுத்து பொருத்திவிட்டு காத்திருந்தான். அவர்கள் வந்ததும் தலைவணங்கி விலகினான். அவர் தன் பீடத்தில் அமர்ந்து கைகளால் கைப்பிடியை தட்டிக்கொண்டு “அதே இடம்… அதே கோணம்” என்று தனக்குள் என சொல்லிக்கொண்டார். அவன் ஆடிகளை ஒன்றுடன் ஒன்று அமைத்து பொருத்திக்கொண்டிருக்க “என்ன செய்கிறாய், அறிவிலி? இன்னுமா அவ்வாடிகளை சீர்படுத்தவில்லை? ஒவ்வொரு நாளும் இதற்கென நீ எடுத்துக்கொள்ளும் பொழுது எவ்வளவு வீண் என்று அறிவாயா?” என்று நிலைகொள்ளாமல் கூச்சலிட்டார். “அரசே, இது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையும் மீள மீள பொருத்திக்கொள்ளவேண்டிய ஆடி. ஒவ்வொரு காட்சிக்கும் இதை நான் மாற்றிக்கொண்டிருக்கிறேன்” என்றான்.

“ஒவ்வொரு காட்சிக்கும் உன் கண்களை மாற்றிக்கொண்டா இருக்கிறாய்? என்னிடம் விளையாடுகிறாயா?” என்று திருதராஷ்டிரர் கூவினார். “ஆம் அரசே, ஒவ்வொரு காட்சிக்கும் கண்கள் மாறுகின்றன. ஒருமுறை நாம் கண்ணால் பார்ப்பதை பிறிதொரு முறை கண்ணால் பார்ப்பதே இல்லை என்பார்கள். ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்கும் எந்தத் தொடர்புமே இல்லை. அவற்றை ஒன்றிணைத்து தொடராக ஆக்கிக்கொள்வது நாம் அவற்றுக்கு அளிக்கும் பொருள்தான்” என்றான் சஞ்சயன். “நம் விழிகளை தெய்வங்கள் ஆள்கின்றன. அவை உருவாக்குகின்றன நாம் கொள்ளும் பொருட்களை.” அவர் சினம்கொள்வார் என

அவன் அறிந்திருந்தான். எனவே புன்னகையுடன் அதை சொன்னான். அவன் கைகள் ஆடிகளை அணுவணுவாக விலக்கிக்கொண்டிருந்தன.

“தத்துவம் கேட்க நான் வரவில்லை. என்ன தெரிகிறதென்று மட்டும் சொல், அறிவிலி” என்று இரு கைகளாலும் பீடத்தின் கைப்பிடிகளை அறைந்தபடி அவர் கூச்சலிட்டார். இரண்டு காட்சிகள் ஒன்றோடொன்று பொருந்துவதன் வழியாக உருவாகும் மேலும் தெளிவான இன்னொரு காட்சி. வலத்தையும் இடத்தையும் ஆளும் தெய்வங்கள் ஒருவருக்கொருவர் அளித்துக்கொண்டவை. அவன் அவ்விந்தையில் ஆழ்ந்தவனாக ஆடிகளை மேலும் மேலும் பொருத்திக்கொண்டே இருந்தான். இரு நீர்த்துளிகள் தொலைவை அணுக்கமாக ஆக்குகின்றன. அணுக்கத்தை அள்ளி அகலே கொண்டுசெல்கின்றன. “நம் இரு விழிகளும் இரண்டு நீர்த்துளிகளே” என்றான் பீதன். “அவற்றை எப்போதேனும் தனியாக பார்த்திருக்கிறீர்களா?” நிலையற்றுத் ததும்பும் இரு நீர்த்துளிகள் தங்களுக்குள் இணைந்து இணைந்து உருவாக்கும் இப்பெருவெளி நிலையானதென்று தோன்றுவதன் விந்தை.

“அறிவிலி, என்ன செய்கிறாய்? கீழ்மகனே! எழுந்தால் உன் மண்டையை அறைந்து உடைப்பேன்!” என திருதராஷ்டிரர் கூச்சலிட்டார். காலையொளி எழுந்துகொண்டிருந்தது. முகில்களின் விளிம்புகள் செஞ்சுடர் கொண்டிருந்தன. அப்பால் தெரிந்த குருக்ஷேத்ரப் படைப்பெருக்கில் பல்லாயிரம் ஒளித்துளிகள் என கூர்கள் அசைந்தன. கூர் என்பதன் பொருளே அவன் களத்தை நோக்கத் தொடங்கியதும் மாறிவிட்டிருந்தது. ஒவ்வொன்றும் தங்களுக்குள் உறையும் அறியமுடியா விசையொன்றை குவிப்பதே கூர். கூர்வனவற்றில் திகழ்கின்றது தெய்வங்கள் கொள்ளும் வெறி. அவனால் கூர்களை நோக்கவே முடியாதாயிற்று. கூர்கள் காத்திருக்கின்றன. அவை சென்றடைந்து கொன்று கடப்பவை எங்கோ எழுந்து வந்துகொண்டிருக்கின்றன. கூர்கொள்வதற்கு நெடும்பொழுது முன்னரே, பொருளென்றாவதற்கும் முன்னரே அவ்விசை அவற்றில் குடியேறிவிட்டிருக்கிறது போலும்.

ஆனால் அவனால் கூர்களை நோக்காமலிருக்கவும் இயல்வதில்லை. அறியாமலேயே அவன் விழிகள் கூர்களை நோக்கி சென்றன. விலங்குகளின் கொம்புகளில், பறவைகளின் அலகுகளில், முட்களில், கற்களில், கருவிகளில் எங்கும் கூர் திகழ்கிறது. இத்தனை கூர்களுக்கு நடுவிலா வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? அவ்வெண்ணமே அவன் தோலை கூசி அதிரச்செய்யும். கூர்முனையை நோக்கால் தொடும்போது எழும் மெய்ப்புகொள்ளுதல். விழிநீர் சுரக்க முதுகெலும்பு சொடுக்கிக்கொள்ளுதல். காலையில் நீராடச் சென்றபோது ஓடைக்கரையருகே மலர்ந்திருந்த சிறு பூ ஒன்றை பறித்தெடுத்தான். தண்டில் அது பூமுள் கொண்டிருந்தது. மிக மெல்ல அதை தன் விரலால் தொட்டு அந்த உச்சத்தை உணர்ந்தான். குளிர்முனைகொண்ட வேல் ஒன்று அடிவயிற்றில் இறங்கிச் செல்வதும் அதுவும் நிகரே.

“என்ன செய்கிறாய்? கீழ்மகனே!” என்று கைகளை உரக்க அறைந்துகொண்டபடி திருதராஷ்டிரர் எழுந்தார். “பொறுங்கள் அரசே… நான் ஆடித்துளிகளை இணைக்கிறேன்!” என்றான் சஞ்சயன். “இன்னும் என்ன செய்கிறாய்? அறிவிலி!” என்று கூவியபடி அவர் கையை ஓங்கினார். “எதற்காக முந்துகிறீர்கள்? மைந்தர் களம்படுவதைக் காணவா?” என்று அவன் கேட்டான். அவருடைய கை வானிலென நின்றது. இடக்காலும் வாயும் இழுபட்டு அதிர்ந்தன. விழப்போகிறவர்போல ஆடினார். சஞ்சயன் அவரை பிடிக்க முயலவில்லை. வலக்கையை எடையுடன் பீடத்தில் ஊன்றி சரிந்து மெல்ல அமர்ந்து யானைபோல் மூச்செறிந்தார். “கீழ்மகனே! கீழ்மகனே!” என முனகினார். பின்னர் தன் பெரிய கைகளை விரித்து அதில்

முகத்தை அமைத்து மூடிக்கொண்டு குனிந்தார். அவர் தோள்கள் அதிர்ந்து குலுங்கின.

அவன் ஒரு வேலின் முனையை தெரிவுசெய்தான். அதன் கூர் நோக்கி ஆடிகளை இணைத்து பொருத்திக்கொண்டுசென்றான். அதன் விளிம்பின் எழுவளைவுக் கோடும் அது சென்று மடிந்த புள்ளியும் தெளிவாகத் தெரிந்தன. பின்னர் இன்னொரு ஆடியை அகற்றி அகற்றி விரித்தான். குருக்ஷேத்ரவெளி வண்ணங்களின் அலைகளெனத் தெரிந்தது. “அரசே, நமது படைகள் பாண்டவப் படைகளுக்கு முகம் கொடுத்து களத்தில் நின்றுள்ளன” என தொடங்கினான். “நமது படையின் பருந்துச் சூழ்கை முழுமையடைந்துள்ளது. பருந்தின் கூரிய செவ்வலகென பீஷ்மர் நின்றிருக்கிறார்” என்று அவன் சொல்லத்தொடங்குகையில் மெல்ல உடற்தசைகள் தளர்ந்து பெரிய தலை எடை மிகுந்ததுபோல் உடல் தழைய துயில்பவர்போல் மூச்சு ஒலி பெருக கனவிலாழ்ந்து திருதராஷ்டிரர் அமர்ந்திருந்தார்.

அவனுடைய சொற்களை சில சமயங்களில் அவர் கேட்கிறாரா என்றே அவன் ஐயம் கொள்வதுண்டு. ஆழ்துயிலுக்குச் சென்றுவிட்டார் போலும் என்று எண்ணவைக்கும் குறட்டை ஒலியும் அரிதாக கேட்கும். முதல்நாள் அவன் களநிகழ்வை சொல்கையில் அவரது குறட்டை ஒலியைக் கேட்டு அவன் சொல்லொழுக்கை நிறுத்தினான். அரை நாழிகைக்கு மேல் அவன் எதையும் சொல்லவில்லை. வெறுமனே போரை விழியாகி அமைந்து நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் அவர் சப்புக்கொட்டி அசைந்து கால்களை நீட்டியபோது மீண்டும் சொல்லத்தொடங்கினான். ஆனால் அன்று மாலை அவர் கள நிகழ்வுகளை கொந்தளிப்புடன் திருப்பிச் சொன்னபோது தான் சொல்லாமல் விட்டுவிட்ட அரைநாழிகைப் பொழுதிலும் அவர் களத்தை பார்த்திருப்பதை உணர்ந்து அவன் திடுக்கிட்டான்.

தன் சொற்களினூடாக அவர் உருவாக்கிக்கொள்ளும் களம் அவரது கனவில் மேலும் பல மடங்கு விரிவாகிறது என அவன் உணர்ந்தான். சொற்கள் வெறும் விதைகள். அவர் காணும் போர் அவன் அறிய முடியாத பிறிதொரு வெளியில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு போர்நிகழ்விலும் அவரே பங்கெடுப்பவர்போல் திருதராஷ்டிரர் கொந்தளித்தார். கைகளால் ஓங்கி அறைந்துகொண்டார். சீற்றத்துடன் பீடத்தை பின்னால் தட்டிவிட்டு எழுந்தார். தன்னைத்தானே சுற்றிவந்து தன் தொடையிலும் தோள்களிலும் ஓங்கி அறைந்து கூச்சலிட்டார். போரிடுபவர்கள் தனக்கு மிக அருகே நிற்பவர்போல் “என்ன செய்கிறான் மூடன்! அறிவிலி! வெட்டு, இடைவெட்டு… விலகு. விலகு, மூடா… அது பிறையம்பு. அதன் ஓசையே தெரிவிக்கவில்லையா உனக்கு!” என்று கூச்சலிட்டார். “வீழ்ந்தான்… வீழ்ந்தான். அறிவிலிக்கு இறப்பே பரிசு… ஆம்!” என்று கைகளை அறைந்துகொண்டார்.

ஒவ்வொரு போர்வீரனுடனும் அவர் இருப்பதைப்போலிருந்தது. அவனுடைய பார்வை அர்ஜுனனும் பூரிசிரவஸும் போரிட்டுக்கொள்ளும் இடத்திலிருந்து சாத்யகியுடன் ஜயத்ரதன் மோதும் தருணம் வழியாக பீஷ்மரை அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் எதிர்க்கும் இடம் சென்று மீளும்போது அவருள் அந்தக் களங்களனைத்தும் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டிருப்பதை கண்டான். ஆனால் ஒட்டுமொத்த களத்தையும் அவர் பார்த்துக்கொண்டுமிருந்தார். “சகுனி என்றொருவன் அங்கிருக்கிறானா இல்லையா? இப்போதே பறவையை அனுப்பு. அவன் இங்கு வரவேண்டும், அவன் நெஞ்சக்கூழை எடுக்கிறேன்!” என்று கூச்சலிட்டார். “அறிவிலிகள்! அறிவிலிகள்!” என்று அலறியபடி தன் இரு கைகளையும் ஓங்கி அறைந்துகொண்டார்.

“விழியிலாதவர் மட்டுமே இத்தனை விரிந்த நோக்கு கொண்டிருக்க முடியும்” என்று அவன் சங்குலனிடம் சொன்னான். சங்குலன் நோக்குள்ள விழிகளிலேயே நோக்கிலாமையை பயின்றவன். “ஒவ்வொரு துளியையும் முடிவிலாது விரிக்கக் கற்றவர்கள் அவர்கள் மட்டும்தான்.” அவன் விழிகளை நோக்கி சஞ்சயன் சொன்னான் “நோக்குபவற்றிலிருந்து காட்சியை முற்றகற்றி நீரும் அங்கே சென்றுகொண்டிருக்கிறீர், பேருருவரே.” சங்குலன் ஒரு சொல்லுக்கும் மாற்றுரைப்பதில்லை. “இப்போர் நிகழ்ந்துகொண்டிருப்பது இவருடைய உள்ளத்திற்குள். சங்குலரே, இது அங்கே நிகழத்தொடங்கி நெடுநாட்களாகின்றது என்றும் ஐயுறுகிறேன்.”

திருதராஷ்டிரர் பேரருவி அறைந்துவிழும் மரம் போலிருந்தார். “நூறு தெய்வங்கள் வந்தெழுந்த வெறியாட்டன்!” என்று அவன் சங்குலனிடம் சொன்னான். “இவர் வாழ்ந்தது இத்தருணத்துக்காகவே. இது அளிப்பது எதுவாயினும் வாழ்வில் இழந்தவை அனைத்தையும் பெற்றுவிட்டார். ஆயிரம் பல்லாயிரம் முறை உலகிருந்து நிறைந்துவிட்டார். சங்குலரே, உச்சங்களிலிருந்து உச்சங்களுக்கெனச் செல்லும் கணம்நிறை பெருங்காலம் அவருடையது.” சங்குலன் தன் பெருந்தோள்கள் தொய்ந்திருக்க எடைமிக்க தலை தாழ்ந்து முகவாய் மார்பில் படிய அமர்ந்திருந்தான்.

சஞ்சயன் சற்றே அகிபீனா கொண்டிருந்தான். சிவந்த விழிகளுடன், ஈரம்கனிந்த உதடுகளில் புன்னகையுடன் அவன் சொன்னான் “பெருந்துயர். உயிருடன் விலங்குகளை உண்ணும் சில சின்னஞ்சிறு மீன்களுண்டு கடலில் என அறிந்துள்ளேன். பல்லாயிரம் மீன்களால் அவர் கொத்திப்பிடுங்கி கிழித்து உண்ணப்படுகிறார். துளியும் எஞ்சமாட்டார். ஆனால் பெரும்பட்டறிதல்கள் அனைத்துமே அவ்வகைப்பட்டவை அல்லவா? சிற்றறிதல்கள் அனைத்தும் இன்பங்கள். பேரறிதல்களோ கொடும்வலிகள். ஆம், அதை நான் அறிவேன். தவமென்பவை தற்கரைத்து அடையத்தக்கவை.” குடிலுக்குள் கிடந்த அவருடைய பேருடலை அவன் எட்டிப்பார்த்தான். “பேருடல், விழியின்மை. அவர் கொண்டுவந்த அனைத்தும் இங்கு இவ்வண்ணம் ஆகி நின்றிருப்பதற்காகவே போலும்.”

அவன் விழித்துக்கொண்டபோது உடலெங்கும் சருகுகள் பரவியிருந்தன. எழுந்து அமர்ந்தபோது அதுவரை அவன் பார்த்துக்கொண்டிருந்த கனவை எண்ணி திடுக்கிட்டான். ஆனால் அந்த முதற்கணத்துடன் அக்கனவு முழுமையாகவே கலைந்து நினைவிலிருந்து அகன்றுவிட்டது. அதை மீண்டும் சென்று தொட முயன்றான். பலமுறை துழாவியும் அது உருத் திரளவில்லை. சலித்து விலகி எழுந்து ஆடையிலிருந்த புழுதியை உதறிக்கொண்டு மூச்சை இழுத்துவிட்டான். விடிவெள்ளியை சற்றுநேரம் நோக்கியபின் திரும்பி திருதராஷ்டிரரின் குடிலை பார்த்தான். அங்கே வாயிலில் சங்குலன் கைகளை மார்பில் கட்டியபடி விழித்த நோக்குடன் அமர்ந்திருந்தான். அவன் விழிகள் இரவில், இருளில் மட்டுமே ஒளிகொள்பவை என்று தோன்றியது. சஞ்சயன் மலைச்சரிவில் சென்ற ஒற்றையடிப்பாதையில் மெல்ல இறங்கிச் சென்று நிழலுருவான புதர்ச்செறிவுகளுக்கு நடுவே சலசலப்பாக ஓடிக்கொண்டிருந்த சிற்றோடையை அடைந்தான்.

ஒவ்வொருநாளும் அவன் விழித்தெழுவதற்கு முன்னரே அவன் விழித்தெழுந்து அவரைச் சென்று எழுப்புவதாக ஒரு கனவை அவன் அடைந்தான். அக்கனவினாலேயே அவன் எழுப்பப்பட்டான். அக்கனவை எப்போதும் அவன் எண்ணி வியப்பதுண்டு. அவன் தேரில் கிளம்பவேண்டும் என்றால், அவையில் அமரவேண்டும் என்றால் தேரில் கிளம்பிவிட்டதாகவும், அவையில்

அமர்ந்துவிட்டதாகவும் கனவு வந்துதான் அவனை எழுப்பியது. அவன் தன் உடலுக்குள் ஒரு கணம் முன்னரே சென்றுகொண்டிருந்தான். ஒரு கணம் முன்னரே மீண்டு வந்துவிட்டிருந்தான். அவன் பெருமூச்செறிந்தபடி மீண்டும் விடிவெள்ளியை நோக்கினான். காட்டிலிருந்து வந்த காற்றில் இலைகளின் நீராவி வெம்மை இருந்தது.

ஒரு வேம்புக்குச்சியை உடைத்து பல் துலக்கியபின் மெல்ல கால்வைத்து ஓடைக்குள் இறங்கினான். காலில் பட்ட நீர் இளவெம்மை கொண்டிருந்தது. குனிந்து நீரை அள்ளி வாயில் விட்டபோது அக்கனவு தெளிவாக, அப்போது நிகழ்வதென, மீண்டது. அவன் கண்களை மூடி அமர்ந்திருக்க திருதராஷ்டிரர் அவர் கண்ட பெரும் போர்க்களத்தை அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

திருதராஷ்டிரரின் குடிலுக்கு திரும்பும்போது சஞ்சயன் களைத்திருந்தான். அன்றைய நாள் நிகழ்ந்து ஓய இன்னும் நெடும்பொழுதிருக்கிறது என்ற எண்ணமே அப்போது அவன் மேல் பொதிந்து சூழ்ந்து அமைந்திருந்தது. அவரிடம் அவன் சொன்ன போர்க்களக் காட்சிகள் எவையும் அவனிடமிருந்து கடந்து சென்றிருக்கவில்லை. ஒவ்வொன்றும் அவ்வண்ணமே அவனில் எஞ்சி கரும்பாறையிலேயே கால்கள் புதைந்துவிடும் என்பதுபோல் உடல் எடைகொண்டிருப்பதாக அவன் உணர்ந்தான்.

அப்படியே திரும்பச் சென்றுவிட்டாலென்ன என்னும் எண்ணம் எழுந்தது. அஸ்தினபுரிக்கா என்ற மறு எண்ணம் எழுந்ததுமே அங்கிருந்து தன் சிற்றூருக்குச் செல்வதைப்பற்றி எண்ணினான். ஆனால் குருக்ஷேத்ரத்திலிருந்து தப்பவியலாது என்று உடனே தெளிவுறத் தெரிந்தது. நிகழ்ந்தவை காலஇடப்பொருத்தமற்று மீளமீள நிகழும் உள்ளத்துடன் எங்கிருக்கிறோமென்று அறியாமல் இந்த கொதிக்கும் அலைவெளியில் ஒழுகுவதொன்றே செய்வதற்குரியது. காலம் மெல்ல அனைத்தையும் படியச் செய்யக்கூடும். அத்தனை உடல்களும் மண்ணில் மட்கி அத்தனை உயிர்களும் மாற்றுலகுகளில் பொருந்திய பின். அத்தனை சொற்களும் ஒன்றுடனொன்று அறுதியாக இணைந்துகொண்ட பின்.

திருதராஷ்டிரர் கைகளை பீடத்தின் இருக்கைமேல் அறைந்து “சொல்!” என்றார். சஞ்சயன் தன் உள்ளத்தின் சொற்களை கோத்துக்கொண்டான். முதல்நாள் களத்தை சொல்லத் தொடங்கும்போது இருந்த அதே பதற்றமும் நிலைகொள்ளாமையும் ஒவ்வொருநாளும் அவனிடம் கூடின. கண்முன் விரிந்துகிடந்த களம் அத்தனை சொற்களுக்கும் அப்பாற்பட்டதெனத் தோன்றியது. அவன் எடுத்த எந்தச் சொல்லும் அக்காட்சியுடன் பொருந்தவில்லை. ஒவ்வொருமுறை சொல்கையிலும் இதுவல்ல என அகம் பதறியது. அந்தக் குறையை நிறைக்கவே அடுத்த சொற்றொடரை எடுத்தான். அதை நிறைக்க இன்னொன்றை.

பின்னர் ஒருகணத்தில் அவன் சொல்லிக்கொண்டிருப்பதை முற்றாகவே மறந்தான். சொல் அவனிடமிருந்து தடையிலாது வெளிப்பட்டுக்கொண்டே இருந்தது. சொற்கள் முடிந்து அவன் வானிலிருந்து விழுவதுபோல் வந்து தன்னுணர்வை அடைந்தபோது அக்களத்தைவிடப் பெரியதொரு வெளியில் தான் இருப்பதை உணர்ந்தான். மண்ணிலுள்ள அனைத்தையும் தழுவியும் மேலும் பற்பல மடங்கென பெருகிக்கொண்டே இருக்கும் ஒன்று அந்த வானம் என அப்போது உணர்ந்தான். அது மிக அப்பால், எவ்வகையிலும் அடைவதற்கரியதாக, எங்கோ இருந்தது. அவன் தான் சொன்ன அச்சொற்களை தானே கேட்க விழைந்தான். எவ்வண்ணமேனும்

எங்கேனும் அவை பதிவாகியிருக்கக்கூடுமென்றால் எத்தனை நன்று என எண்ணினான். ஆனால் அவை வீணாவதில்லை, அவை எழுந்தன என்பதனாலேயே எங்கோ இருக்கும்.

முதல்நாள் மாலையில் விந்தையானதோர் நுண்ணுணர்வை அவன் அடைந்தான். அவனுடைய சொற்களை எங்கோ எவரோ அறிந்துகொண்டிருப்பதாக. ஒவ்வொரு மாத்திரையையும், ஒவ்வொரு உணர்வுத்துளியையும். அவருடைய நினைவிலிருந்து அவை பதிவாகும். அவை அள்ள அள்ளக் குறையாத பெருங்காவியமாகும். இம்மானுடர் முற்றழிவார்கள். இந்த நதிகள் திசைமாறி பெயர் திரிந்து பிறிதாகும். இந்த மலைகள்கூட சற்றே கரைந்தழியக்கூடும். ஆனால் அச்சொற்கள் இருக்கும். அவற்றை தலைமுறைகள் பயில்வார்கள். ஒவ்வொரு சொல்லும் முளைத்துப்பெருகும். இச்சொற்களிலிருந்து இவையனைத்தும் மீண்டும் மீண்டும் எழுந்து வந்து விரிந்து அலையடிக்கும்.

சொல்வதற்கு முன் அவன் திரும்பி அந்த நோக்கிலா விழிகளை ஒருமுறை நோக்கினான். எப்போதும் எழும் திகைப்பையே அவ்விழியிலாமை உருவாக்கியது. ஆனால் எழுகாலம் விழியற்றதோ என்னும் எண்ணம் எழுந்தது. சொல்லில் இருந்து மட்டுமே இவையனைத்தையும் அறியவேண்டியதென்பதனாலேயே விழியின்மை கொண்டது. காட்சிகளை சொல்கையில் எழும் சிறு குறிப்புகள் அவருக்கு எவ்வளவு தேவையானவை என்று அவன் அறிந்திருந்தான். எவர் எவரை தாக்குகிறார்கள் என்பதல்ல, எவ்வண்ணம் தாக்குகிறார்கள், எப்படி எதிர்வினையாற்றினார்கள், என்னென்ன மெய்ப்பாடுகள் வெளிப்பட்டன என்பதெல்லாம்கூட அவருக்கு தேவையானவையாக இருந்தன.

“அதோ இளைய பாண்டவராகிய பீமசேனர் தன் தேரில் நிலைவில்லை ஏந்தி நின்றிருக்கிறார். அவருக்குப் பின்னால் இருபக்கமும் ஆவக்காவலர்கள் மாறி மாறி அம்புகளை எடுத்தளிக்கிறார்கள். கௌரவர்களின் அம்புகள் எழுந்து வந்து அவர்களை அறைகின்றன. அவர்களை எதிர்கொண்டு நின்றிருப்பவர்கள் காந்தாரராகிய சுபலரும் அவருடைய மைந்தர்களும். துணைநின்று பொருதுகின்றனர் கௌரவப் படைத்தலைவர்கள். பீமசேனர் அவர்களை ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்பது முகத்திலிருக்கும் இளிவரலிலிருந்து தெரிகிறது. கௌரவப் படைத்தலைவர் சுவிரதர் தன் நீண்ட வில்லின் அம்புகளால் பீமசேனரை அறைய சுபலரை நோக்கி அம்பெடுத்து அரைக்கணத்தில் அதை அவரை நோக்கி திருப்பி அவர் கழுத்தை அறுத்து தேர்த்தட்டில் தள்ளுகிறார் பீமசேனர்.”

“சுபலரை அது திகைக்க செய்கிறது. அருகே கழுத்தறுபட்டு குருதியுமிழும் உடலை ஓரவிழியால் நோக்காமல் அவரால் பீமசேனரை எதிர்க்க இயலவில்லை. ஏனெனில் முந்தைய கணம் வரை அவர் தொடர்ந்து சொல்லாடிக்கொண்டிருந்தது அவரிடம்தான். ஓரவிழி நேர்விழியைவிட கூரானது. களத்தில் ஓரவிழியை ஆள்பவனே வெல்பவன். அம்புகளால் அறையுண்டு சுபலர் தேர்த்தட்டில் விழுந்தார். அவருடைய வலக்கால் துடிக்கிறது. அவருடைய வில் நழுவி அப்பால் விழ கொக்கிச்சரடுகளால் அவரை இழுத்து அப்பாலெடுத்து உயிர்காத்தனர். ஆனால் கௌரவ வில்லவர் எழுவர் களத்தில் விழுந்தனர். அவர்களின் தேர்கள் முட்டித்தடுமாறுகின்றன. ஒருவன் கீழே விழுந்து தேர்தட்டை பிடித்துக்கொண்டு எழ முயல அது பிறையம்பு தலையை கொய்துசெல்லக் காட்டியது என அமைந்தது.”

அவன் கதையென, காட்சியென விரித்துரைத்துச் செல்கையில் அவர் அச்சொற்களால் காற்று அலைக்கழிக்கும் சுனை என உடல் கொந்தளிக்க

அமர்ந்திருப்பார். பெயர்மைந்தரின் இறப்புகள் அவர்மேல் அம்புகளாக சென்று தைத்தன. மைந்தர்களின் இறப்பின்போது உடல் நடுங்க கால்கள் வலிப்புபோல் இழுத்துக்கொள்ள முகம் கோணலாகி வாயோரம் எச்சில் நுரைததும்ப அதிர்ந்துகொண்டிருந்தார். “அரசே!” என்று அவன் அழைத்தபோது “ம்!” என்றார். “அரசே!” என்று அவன் மீண்டும் அழைக்க “சொல்க, அறிவிலி! என்ன என்று சொல்!” என்று அவனை ஓங்கி அறைந்தார்.

உடலொழிந்து அவ்வறையை தவிர்த்து மீண்டும் சொல்லத்தொடங்கினான். “உங்கள் மைந்தர் பீமசேனரை எதிர்கொள்கிறார்கள், அரசே. திருதஹஸ்தரும் கண்டியும் பாசியும் அவர் முன் நின்றிருக்கிறார்கள்!” அவர் “ஆ! அறிவிலிகள்! எப்போதும் அவன் முன் தனித்தே சென்று நிற்கிறார்கள்” என்றார். “இறப்பு எளிய உயிர்களை கவர்கிறது. ஏனென்றால் அவர்களறிந்த பெருநிகழ்வு அது ஒன்றே என்கிறார் பராசரர்.” முனகியபடி நிலையழிந்து தலையை உருட்டியபடி “இவர்கள் ஒருடலென்றானவர்கள். ஒற்றைப்பேரிருப்பென நின்று பொருதும் ஆற்றல் கொண்டவர்கள். ஆனால் சாவு வந்து முன்னிற்கையில் சிதறிவிடுகிறார்கள்! ஏன்? சாவுக்குமுன் குருதிக்கோ குலத்துக்கோ பொருளில்லையா என்ன? அதை தனித்தனியாகவே எதிர்கொள்ளவேண்டுமா என்ன? ஆ! என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன் இங்கே?” என்றார்.

ஒவ்வொரு கௌரவனின் சாவும் அவருக்கு நிகர்சாவாக இருந்தது. முதல் கௌரவனின் சாவை அவன் சொன்னபோது அவர் ஒருகணம் இறந்து முற்றிலும் இன்மையை அடைந்து மீள்வதை அவன் கண்டான். அன்றைய போரை அவன் சொல்லிக்கொண்டே சென்றான். “துரியோதனரிடமிருந்து முதல்முறையாக ஓர் உறுமல் எழுந்தது. மறுமொழி என பீமன் பிளிறலோசை எழுப்பினார். அவ்வொலி சூழ்ந்திருந்தோரை திகைக்க வைத்தது. அவர்கள் விழித்தெழுந்தவர்கள்போல் கூச்சலிட்டபடி தாக்கத் தொடங்கினர். சர்வதரை மகாபாகுவும் சித்ராங்கரும் சித்ரகுண்டலரும் பீமவேகரும் பீமபலரும் சூழ்ந்துகொண்டார்கள். தனுர்த்தரரும் அலோலுபரும் அபயரும் திருதகர்மரும் அப்ரமாதியும் தீர்க்கரோமரும் சுவீரியவானும் சுதசோமரை சூழ்ந்தனர். கதையால் அவர்களை அறைந்து பின்னடையச் செய்து பீமசேனரின் பின்பக்கத்தை காத்தார் சுதசோமர். மேலும் மேலும் கௌரவர்கள் வந்துகொண்டிருந்தனர். பெருகிச்சுழன்று நதிச்சுழல் என்றாயினர். நடுவே பீமசேனர் சுழிவிசையில் என சுழன்றபடி கதையால் அவர்களைத் தாக்கி தடுத்தார்.”

கைகளால் பெரிய கதையொன்றை சுழற்றுபவர்போல திருதராஷ்டிரர் தசையிளகினார். “எதிர்பாராக் கணமொன்றில் பீமசேனர் எழுந்து பாய்ந்து சேனானியின் தலையை அறைந்து உடைத்தார்” என்று அவன் சொன்னதும் நுண்ணுணர்வால் அருகே இன்மையை உணர்ந்து திரும்பி நோக்கினான். அங்கே இருந்த திருதராஷ்டிரர் மெய்யாகவே பாறையைப்போல வெற்றிருப்பாகத் தோன்றினார். அவன் “கௌரவர்கள் நடுவே அதிர்ச்சிக் கூச்சல்கள் எழுந்தன. துரியோதனர் என்ன நிகழ்ந்தது என உணராதவர்போல திகைத்து நின்றார்” என்று மெல்லிய குரலில் சொன்னான். அவர் ஓர் உலுக்கலுடன் மீண்டும் தன் உடலில் எழுந்தார். “யார்? யார்?” என்றார். “சேனானி” என்று அவன் சொன்னான். அக்கணம் அவரிடமிருந்து எழுந்த அலறலை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுடைய கை அதிர்ந்து தெறிக்க விரல்பட்டு ஆடிகள் விழப்போயின. பீதன் பாய்ந்துவந்து பற்றிக்கொண்டான்.

அவர் அலறிக்கொண்டே இருந்தார். “அப்போது உருவான கணத்தேக்கத்தில் புகுந்து ஜலகந்தரை நெஞ்சிலறைந்து வீழ்த்தினார் பீமசேனர்” என்றான். “யார்? அறிவிலி,

யார்?” என்றார் திருதராஷ்டிரர். “ஜலகந்தர்” என்றான் சஞ்சயன். மீண்டும் அதே நெஞ்சுகிழிபடும் அலறல். மார்பில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு சொல்லில்லாது வீறிட்டார் திருதராஷ்டிரர். “பீமசேனர் படைவீரன் ஒருவனின் இடையில் மிதித்து மேலேறி எழுந்து சுழற்றி அறைந்த கதையால் சுஷேணரை தலைசிதற குப்புறச் சரித்தார். கௌரவர்களின் சுழிவளையம் விரிந்து அகல அவரைச் சூழ்ந்து உருவான வெற்றிடத்தில் கௌரவர் மூவரும் வாயிலும் மூக்கிலும் குருதிக்குமிழிகள் கொப்பளிக்க கிடந்துநெளிந்தனர்“ என்று அவன் சொன்னதும் அவர் தலையை அசைத்துக்கொண்டு அலறியபடியே இருந்தார்.

“பீமசேனர் பீமபலரை அறைந்து வீழ்த்தினார். அருகே நின்றிருந்த பீமவேகரின் முகத்தில் குருதியும் வெண்தலைச்சேறும் தெறிக்க அவர் உள்ளமும் உடலும் செயலிழந்து அசைவற்று நின்றார். அவர் தலையை வாளால் வெட்டி நிலத்திலிட்டார் பீமசேனர். துரியோதனர் தீ பட்ட யானை என வீறிட்டபடி கதை சுழற்றி பாய்ந்தெழுந்தபோது கீழிருந்த பீமவேகரின் தலையை எடுத்து இடக்கையில் தூக்கிப் பிடித்தார்” என சஞ்சயன் சொன்னபோது திருதராஷ்டிரர் மயக்கமடைந்து இருக்கையில் சரிந்தார். சொற்களை நிறுத்திவிட்டு அவன் அவரை பார்த்தான். அவர் நெஞ்சு ஏறி இறங்கியது. கைவிரல்கள் அசைந்துகொண்டிருந்தன. கால் கட்டைவிரல் மட்டும் தூண்டில் விழுங்கிய மீன்போல் துடித்தது.

அவன் மெல்ல “அரசே!” என்றான். அவருடைய மூச்சு திணறுவது போலிருந்தது. அவன் எழுவதற்குள் அவர் விழித்துக்கொண்டு “சொல்!” என்று உறுமினார். அவன் மீண்டும் ஆடியில் நோக்கினான். சற்றுமுன் அவன் சொல்லி நிறுத்திய சொற்றொடரை நினைவுகூர்ந்தான். “கௌரவர்கள் அணிசிதைந்து ஒருவரோடொருவர் முட்டியபடி தத்தளித்து உடல்ததும்பினர். பீமசேனர் உறுமலோசையுடன் அவர்களை நோக்கி பாய “மூத்தவரே” என்று அலறியபடி அவர்கள் சிதறியோடினர். கால்தவறி கீழே விழுந்த சுவர்மர் “மூத்தவரே! மூத்தவரே!” என்று கூவினார். பீமசேனர் அவர் நெஞ்சை உதைத்து மண்ணில் வீழ்த்தி தன் வாளால் அவர் தலையை வெட்டி குடுமியைப்பற்றித் தூக்கி காட்டியபடி வெறிநகையாடினார். கௌரவர்கள் முட்டி மோதி அகன்றுவிட அவரைச் சுற்றி எவருமிருக்கவில்லை. உடைந்த குடமென கொழுங்குருதி வழிந்த தலையைத் தூக்கி தன் முகத்தின்மேல் அதை ஊற்றினார். காலால் தரையை ஓங்கி அறைந்து “குலமகள் பழிசூடிய வீணர்கள்! இனி தொண்ணூற்றி இருவர்! எஞ்சியோர் வருக! வருக, கீழ்மக்களே! வருக, இழிசினரே! எவருள்ளனர் இங்கே? இக்களத்தில் ஒவ்வொருவரையும் நெஞ்சுபிளந்து குருதியுண்பேன்! அறிக தெய்வங்கள்! அறிக மூதாதையர்!” என்று கூச்சலிட்டார்.”

அவர் “உம்” என்றார். “பீமசேனரின் அறைபட்ட பீமபலரின் உடல் தேரின் அச்சுக் கூரில் தைத்தது. அந்தத் தேர் பின்னிருந்து வந்த தேர்களால் முட்டப்பட்டு மெல்ல நகர நடப்பவர்போல் தோன்றினார். அவ்வுடல் கோக்கப்பட்ட தேர் சற்றே கவிழ இரு கைகளும் விரிய அண்ணாந்து வானை பார்ப்பவர்போல் தெரிந்தார்.” அதை சொன்னதும் மீண்டும் திரும்பி அவன் திருதராஷ்டிரரை பார்த்தான். அவர் அச்சொற்களை வேறெங்கிருந்தோ கேட்டுக்கொண்டிருந்தார். அவனுக்கு விந்தையானதோர் உணர்வு ஏற்பட்டது. மைந்தர் களம்படும் காட்சியானாலும் அக்காட்சி கூர்மையுடன், விரிவுடன் தெரியவேண்டும் என்று விரும்புகிறதா அவ்வுடலில் அடைபட்டு இருளில் தவிக்கும் அது?

அதன்பின் அவன் அனைத்துக் காட்சிகளையும் மேலும் நுண்ணிய செய்திகளுடன் சொன்னான். களம்பட்ட கௌரவர்களின் இறுதித்துடிப்பை, எஞ்சும் மூச்சைவிட்டு அவர்கள் மண்ணில் அமைவதை, சூழ்ந்திருப்பவர்களின் உணர்ச்சிகளை, கொக்கிக்

கயிற்றை வீசி கௌரவர்களை கோத்து இழுத்து எடுக்கும் காட்சியை. தூண்டிலில் சிக்கிய பெருமீன்களென உடல்கள் இழுபட்டு பிற உடல்களிலும் சரிந்த தேர்களிலும் முட்டி மோதி விலகிச் சென்றன. “அவற்றுக்கு மீண்டும் உயிர் வந்ததுபோல. பிறிதொரு உயிர். ஆமைகளின் உயிர், மீன்களின் உயிர், அல்லது நாகங்களின் உயிர்” என்றான் சஞ்சயன். திருதராஷ்டிரரை அவன் ஓரவிழி ஒருகணம் நோக்கி மீண்டது. ஓர் அக அதிர்வென அவர் அதில் மகிழ்கிறாரா என்ற எண்ணம் ஏற்பட்டது. அதெப்படி என்று மறுகணமே திடுக்கிட்டான். பின்னர் சொல்கூட்டுகையில் எல்லாம் அவ்வெண்ணம் உள்ளே ஓடிக்கொண்டே இருந்தது. தார்த்தராஷ்டிரர் விழும் காட்சிகளில் அவரது முகத்தை நோக்காமல் அவனால் இருக்க இயலவில்லை.

பின்னர் அவன் அதை புரிந்துகொண்டான். ஒரே தருணத்தில் இரண்டாக பிரிந்திருந்தார் அவர். முதற்கணம் களக்காட்சி ஒன்றை காணும் இளஞ்சிறுவன் ஒருவனின் மெய்ப்பு. அதன்மேல் விழுந்து மூடி எழும் தந்தையின் துயரம். இது என் உளமயக்கா? ஆனால் உள மயக்குகள் வெறுமனே பாழிலிருந்து எழுவதில்லை. போர் முடிந்து அந்திமுரசுகள் ஒலிக்கையில் திருதராஷ்டிரர் பீடத்தில் தளர்ந்து விழுந்து உயிரிழந்தவைபோல் இரு கைகளும் நிலம்தொட தொங்க மார்பில் சரிந்து முகவாய் படிய முனகிக்கொண்டிருந்தார். ஆடிகளைக் கழற்றி பேழைக்குள் வைக்கும் பீதனைப் பார்த்தபடி அவன் அசையாமல் நின்றான். அவர் விழித்தெழுவதற்கென நெடுநேரம் காத்த பின் “அரசே!” என்றான். “ஆம்! கிளம்பலாம். கிளம்பவேண்டியதுதான். நீராட வேண்டும். இக்குருதி அனைத்தையும் உடலிலிருந்து கழுவிய பின்னரே சற்றேனும் துயில முடியும்” என்று அவர் சொன்னார்.

கைகளை நீட்டியபடி “என்னை பிடித்துக்கொள். என் உடல் நிலையழிந்திருக்கிறது. நான் விழுந்துவிடுவேன்” என்றார். அவரை கைபற்றி மேடையிலிருந்து இறக்குகையில் அவர் தன் திசையுணர்வையும் கால்களில் இருக்கும் இடவுணர்வையும் முற்றாக இழந்துவிட்டிருப்பதை அவன் பார்த்தான். படிகளிலும் கைப்பிடிகளிலும் தூண்களிலும் அவர் முட்டிக்கொண்டார். அவர் உடலில் இருக்கும் தன்னுணர்வை அவன் எப்போதும் வியப்புடனே பார்த்துவந்தான். ஒருமுறை சென்று வந்த இடத்திற்கு நன்கறிந்தவர்போல் மீண்டும் அவரால் செல்ல இயலும். எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த இடத்தை மிகச் சரியாக திசை நுட்பங்களுடன், பொருள் குறிப்புகளுடன் சொல்ல முடியும். அவர் தன் உடல்திகழ்ந்த விழிகளை இழந்துவிட்டிருந்தார்.

தேரில் ஏறி அமர்ந்ததும் அவர் “நாம் எங்கு செல்கிறோம்?” என்று கேட்டார். “ஓய்வெடுப்பதற்கு” என்று அவன் சொன்னான். “அஸ்தினபுரிக்கா?” என்று அவர் கேட்டார். “இல்லை, நம் குடிலுக்கு” என்று அவன் சொன்னான். “ஆம் ஆம், அங்கிருந்துதானே வந்தோம்” என்றார். தேரில் பீடத்தில் தளர்ந்து அமர்ந்து கைகளை மார்பில் கட்டிக்கொண்டார். பின்னர் தலையை அசைத்து “மீண்டெழுகிறது” என்றார். “அரசே” என்றான். “நீ சொல்கையில் எழுவதல்ல, சொல்லி நிறுத்திய பின் பேருருக்கொண்டெழுகிறது போர். நீ சொல்லிக்கேட்கையில் என்னுள் எழும் களம் பிறிது. சற்றே உளம் மயங்குகையில் என் கனவில் எழுவது மேலும் பெரிது. இப்பொழுது விசைமீளும் ஊசல் என மறுதிசை கொண்டெழுவது அதைவிடவும் பெரிது” என்றார். “தெய்வங்களே! எத்தனை களங்களில் நிற்பேன்! எத்தனைமுறைதான் இறப்பேன்!” என உடைந்த குரலில் அழுதார்.

தலையை இரு கைகளால் தட்டியபடி “கொலைகள்! அருங்கொலைகள்!” என்றார். “நிறுத்து! புரவியை நிறுத்து!” என்றபடி எழுந்தார். அவர் உடல் வியர்வை கொண்டிருந்தது. தசைகள் அதிர்ந்துகொண்டிருப்பதை அவன் பார்த்தான். மீண்டும்

அமர்ந்து “செல்க!” என்றார். “அவர்கள் அத்தனை எளிதாக இறக்கமாட்டார்கள்” என்றார். “சஞ்சயா, பறவைத்தூது சென்றுவிட்டதா? அவர்களுக்கு என்ன ஆயிற்று என்று உறுதி செய்தாயா?” என்றார். சஞ்சயன் “அவர்கள் விண்புகுந்துவிட்டதை முரசுகள் அறிவித்தன” என்றான். “முரசுகளா? சில தருணங்களில் எதிரிகளை குழப்பும் பொருட்டு பொய்யாகவேனும் முரசறிவிப்பை செய்வதுண்டு. அவர்களில் சிலர் உயிர் எஞ்சியிருக்ககூடும்” என்றார் திருதராஷ்டிரர்.

“ஆம்” என்று அவன் சொன்னான். “ஓரிருவராவது எஞ்சியிருக்கக்கூடும். அறிவிலி! சொல்க, அவர்கள் அனைவருமே இறந்துவிட்டார்கள் என்றா முரசு அறையப்பட்டது?” என்றார். அவன் “ஆம், அரசே. அவர்கள் அனைவருமே மறைந்துவிட்டதாகத்தான் முரசு அறையப்பட்டது” என்றான். “இல்லை, அவ்வாறு இருக்க வழியில்லை. பொய் அது” என அவர் சொன்னார். உரக்க நகைத்து “அது சகுனியின் சூழ்ச்சி. கௌரவர்கள் இறந்துவிட்டார்கள் என்று பாண்டவர்களை நம்பச்செய்வது அது. நாளை பார்! இறந்துவிட்டவர்கள் இரும்புக்கவசங்கள் ஒளிவிட பெரிய புன்னகையுடன் தேர்த்தட்டில் நிற்பதை அவர்கள் பார்ப்பார்கள். அப்போது எழும் திகைப்பு இருக்கிறதே!” என்று உரக்க நகைத்து தொடைகளை தட்டிக்கொண்டு “அப்போது அறிவார்கள். கௌரவர்கள் யார் என்று. அத்தனை எளிதாக என் மைந்தர் இறக்கப்போவதில்லை. போர் என்றால் என்னவென்று அவர்களுக்கு தெரியும்” என்றார்.

மேலும் மேலும் அவர் முகம் உவகைகொண்டபடியே வந்தது. “அவர்கள் பிறக்கும்போதே நான் அறிவேன், அவர்கள் ஒவ்வொருவரும் பத்து மானுடருக்கு நிகர் என்று. என் கைகளில் அக்குழவிகளை கொண்டுவந்து தருகையில் மூன்று அல்லது நான்கு சேடியர் ஒரு தாலத்தில் வைத்து சேர்த்து தூக்கிக்கொண்டு வருவார்கள். நான் மட்டுமே அவர்களை கைகளால் தூக்க இயலும். உனக்கு தெரியாது, ஒருமுறை துர்மதன் முதல் நிலை மாடத்திலிருந்து கூடத்திற்குள் விழுந்துவிட்டான். ஆறு ஆள் உயரம். அப்போது அவனுக்கு ஆறு மாதம்கூட ஆகவில்லை. என்ன ஆயிற்று? கீழே விழுந்தவன் கூடத்தின் தரையிலிருந்த மரப்பலகை நிரப்பை உடைத்துவிட்டான். ஆம், பலகையில் விரிசல் விழுந்துவிட்டது! மெய்யாகவே!” என்றபடி தொடையில் ஓங்கி அறைந்து “அவர்களை எமனும் அஞ்சுவான்! இறப்பு அவர்களை அணுகாது! ஐயமே இல்லை!” என்றபின் உரக்க நகைத்தார்.

“ஏன் இந்தத் தேர் இத்தனை மெதுவாக செல்கிறது? இதை விரைந்து செல்லும்படி ஆணையிடு. நீயே பார், அங்கே நம் குடிலில் பறவை வந்து அமர்ந்திருக்கும். கௌரவர்கள் இறக்கவில்லை என்ற செய்தியுடன் அது வந்திருக்கும். அதை பார்க்கையில் தெரியும் நான் ஏன் சொன்னேன் என்று. என் மைந்தர்களை மட்டுமல்ல, சகுனியையும் எனக்கு தெரியும். அவன் பாண்டவர்கள் எண்ணி சென்றடைய முடியாத சூழ்ச்சி கொண்டவன். அதை அவர்கள் இந்தப் போரில் காண்பார்கள்” என்றார் திருதராஷ்டிரர். தேர் சென்றுகொண்டே இருக்க “ஏன் இன்னும் நாம் சென்று சேரவில்லை? என்றார். “சென்றுகொண்டே இருக்கிறோம்” என்றான் சஞ்சயன். “விரைந்து செல்லச் சொல். இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறான்?” என்றார்.

“யார்?” என்றான் சஞ்சயன் குழப்பத்துடன். “படைக்கலங்கள் செய்பவன்” என்றார். “எங்கு?” என்று சஞ்சயன் கேட்டான். “இதோ, நீ பார்க்கிறாய் அல்லவா? அவர்கள் ஏழு பேர்! படைக்கலங்களை உருக்கி கூடத்தில் அறைந்துகொண்டிருக்கிறார்கள்.” சஞ்சயன் “எங்கு?” என்றான். “மூடா, இதோ நம் அருகில். பார்க்கவில்லையா?” சஞ்சயன் “ஆம்” என்றான். திருதராஷ்டிரர் எண்ணியிராக் கணத்தில் உடைந்து “என் மைந்தர்களே! என் மைந்தர்களே!” என்று நெஞ்சில் ஓங்கி அறைந்து கதறி

அழத்தொடங்கினார். புண்பட்ட விலங்கின் ஓலம்போல சொல்லில்லாது எழுந்தது அவர் அழுகை. நெஞ்சிலும் தலையிலும் ஓங்கி அறைந்தார். தேர்த்தூணில் தலையை முட்டினார். எழுந்து தேரிலிருந்து பாய்ந்துவிடப்போகிறவர்போல அலைவுகொண்டு மீண்டும் அமர்ந்தார்.

இரு கைகளையும் விரித்து “தெய்வங்களே! மூதாதையரே! என் மைந்தர்! என் மைந்தர்!” என்றார். “விதுரா! விதுரா! எங்கிருக்கிறாய்? விதுரன் எங்கே? விதுரன் எங்கே?” என்றார். “அரசே, விதுரர் இங்கில்லை” என்றான் சஞ்சயன். “அவன் இங்கிருக்க வேண்டும். அவன் வேண்டும் என்னருகில். இத்துயரில் அவனன்றி வேறெவரும் என்னுடன் இருக்க இயலாது. விதுரனை அழைத்து வா!” என்றார். “ஆம்! ஆணை!” என்றான் சஞ்சயன். “இப்போதே அழைத்து வா. உடனே அழைத்து வா!” சஞ்சயன் “இதோ அழைத்து வருகிறேன்” என்றான். “விதுரன் சொன்னான். இவையனைத்தையும் விதுரன் சொன்னான். விதுரா! மூடா! விதுரா! எப்படி என்னை நீ தடுக்காமலிருந்தாய்? விதுரன் எங்கே? இங்கிருந்தானே! சற்று முன் இங்கிருந்தானே?” என்றார்.

சஞ்சயன் ஒன்றும் சொல்லவில்லை. “அவன் அறிவான்! அவர்கள் பிறந்தபோதே அவன் சொன்னான்! அவன் அறிவான்! அவன் அறிந்துதான் என்னைவிட்டு சென்றான்! எங்கிருந்தாலும் அந்த இழிமகன் என் முன் வரவேண்டும். அவன் தலையை என் கைகளால் அறைந்து உடைப்பேன். அதன் பிறகு நானும் உயிர்மாய்த்துக்கொள்வேன். விதுரன் எங்கே? விதுரன் உடனே இங்கு வேண்டும்” என்று திருதராஷ்டிரர் கூவினார். சஞ்சயன் அக்கொந்தளிப்பை பார்த்தபடி ஓய்ந்த உடலுடன் அமர்ந்திருந்தான். மேலும் மேலுமென வெறிகொண்டு கூச்சலிட்டு அலறி அழுது மெல்ல அவர் ஓய்ந்தார். பெருந்துயர் என்பது சொல்லில்லாமல் எழுகையிலேயே முழுமை கொள்கிறது என்று அவனுக்கு தோன்றியது. சொல் எழுகையில் அத்துயர் மானுடனுக்குரியதாகிவிடுகிறது. சொல்லில்லாத் துயரங்கள் தெய்வங்களுக்குரியவை. மானுடரால் விளக்க முடியாதவை. எந்த மானுடராலும் ஆறுதல் உரைத்து ஆற்றிவிட முடியாதவை.

தேர் குடில் பகுதியை அடைந்தபோது திருதராஷ்டிரர் அரைத்துயிலில் இருந்தார். விசும்பல்கள் ஓய்ந்து துயிலுக்கான குறட்டை ஒலிகள் கேட்கத் தொடங்குவதை முன்னரே அவன் உணர்ந்திருந்தான். அவரை எழுப்ப வேண்டாமென்று அவன் எண்ணினான். தேர் நின்ற உலுக்கலில் அவர் விழித்துக்கொண்டு “எங்கிருக்கிறோம்?” என்றார். “குடில்கள் வந்துவிட்டன, அரசே” என்றான் சஞ்சயன். “வந்துவிட்டனவா? பறவைத்தூது இருக்கிறதா பார்! பறவைத்தூது வந்திருக்கும்! அவர்கள் இறக்கவில்லை என்ற செய்தி இருக்கும், பார்” என்றார். “ஆம், இருக்கும். பார்ப்போம், வருக!” என்று அவன் அவர் கைகளை பற்றினான்.

அவர் இறங்கி நடந்தபோது உடல் ததும்பிக்கொண்டிருந்தது. எப்போதும் பேரெடைகொண்ட இரும்புப் பதுமை ஒன்று தன்னருகே நடந்துவருவது போன்ற உணர்வை அவன் அடைவதுண்டு. அன்று காற்றில் பறக்கத் துடிக்கும் பட்டம் போலிருந்தது அவர் உடல். “பறவை வந்திருக்கிறதா பார்… சென்று பார்” என்றார். அவன் ஒன்றும் சொல்லவில்லை. குடிலை அடைந்து குறுபீடத்தில் மெல்ல அமர்ந்தபின் அவர் நீள்மூச்செறிந்தார். இரு கைகளால் தலையைப் பற்றியபடி குனிந்து மீண்டும் மீண்டும் மூச்செறிந்தார். பின்னர் “விதுரனுக்கு ஓலை அனுப்பினாயா?” என்றார். “இல்லை, அரசே” என்று அவன் சொன்னான். “வேண்டாம்” என்றார் திருதராஷ்டிரர்.

திருதராஷ்டிரர் சங்குலனால் ஒரு துணிப்பாவையென கையாளப்படுவதை பார்த்தபடி சஞ்சயன் வாசலில் நின்றிருந்தான். நீராடி முடித்த அவன் உடல் காலைக்காற்றால் உலரத்தொடங்கிவிட்டிருந்தது. ஆனால் நாட்கணக்காக நன்கு துயிலாத அவன் உடல் தளர்வை உணர்ந்தது. வாயில் கசப்பு எஞ்சியிருக்க கைகளை நெஞ்சில் கட்டிக்கொண்டு காத்திருந்தான். அப்பால் திருதராஷ்டிரருக்கான தேர் ஒருங்கி நின்றிருந்தது. அவர் தாடை அசைய வெறும்வாயை மெல்வதுபோல் அசைத்தபடி தலையை உருட்டிக்கொண்டிருந்தார். அவ்வப்போது மெல்லிய முனகலோசை அவரிடமிருந்து எழுந்தது. அந்த ஓசை சஞ்சயனை உளமுருகச் செய்தது. அவர் அடிக்கடி முனகுவதுண்டு, ஆனால் அது ஆணையிடுவதுபோலவோ வினவுவதுபோலவோ அரிதாக எதையேனும் ஏற்பதுபோலவோ ஒலிக்கும். அப்போது துயிலின் கனவுகண்டு முனகும் குழவி என ஒலித்தது. அவ்வப்போது தாளமுடியா வலியில் நைந்த உடல்கொண்ட நோயாளனுடைய குரல் என கேட்டது.

சங்குலன் திருதராஷ்டிரரைத் தூக்கிநிறுத்தி கைபற்றி வெளியே கொண்டுவந்து தேரிலேற்றினான். சஞ்சயன் சங்குலனிடம் தலையசைத்துவிட்டு தேரிலேறிக்கொண்டான். திருதராஷ்டிரர் தேர்த்தட்டில் சாய்ந்து அமர்ந்து “ம்” என்றார். தேர் கிளம்பியதும் சஞ்சயன் பெருமூச்சுவிட்டான். தேரை வேறெங்காவது கொண்டுசெல்லலாமா என்ற எண்ணம் ஏற்பட்டது. அல்லது பிறிதொரு போரை சொல்லிவிடலாமா? அவ்வெண்ணத்திலிருந்த அறிவின்மையால் அவனே சலிப்புடன் புன்னகை செய்துகொண்டான். இக்கட்டுகளில் எப்போதும் குழந்தைபோல மீள்வழி நோக்குவதே அவன் வழக்கம். அத்தனை மானுடரும் அப்படித்தானா? இக்கட்டுகளில் இருந்து மீள்வதைப்பற்றி பெரிதும் எண்ணியதெல்லாம் இளமையில்தானே?

வழியெங்கும் திருதராஷ்டிரர் பேசாமல் அரைத்துயிலில் என அமர்ந்திருந்தார். வழக்கமாக அவருக்குள் கனவும் நனவுமென கலந்து பெருகியிருக்கும் ஒரு போரைப்பற்றி சொல்லிக்கொண்டே வருவார். சென்ற மூன்று நாட்களாகவே ஆழ்ந்த அமைதிக்குள் சென்றுகொண்டிருந்தார். நோக்குமாடத்தில் ஏற திருதராஷ்டிரர் பெரிதும் வருத்தமுற்றார். மூச்சிரைத்தபடி ஒவ்வொரு படியிலாக நின்று மெல்ல மெல்ல மேலேறினார். மேலும் படிகளிருப்பதை அவர் உணரவில்லை. படிகள் முடிந்ததையும் உணரவில்லை. இருக்கையிலமர்ந்ததும் “சொல்” என்றார். “அரசே, இன்னும் பொழுது விடியவில்லை” என்றான் சஞ்சயன். “ஆம்” என அவர் சொன்னார்.

“அரசே, இன்றைய படைசூழ்கையை பீஷ்மர் ஆமைவடிவில் அமைத்திருக்கிறார்” என்று சஞ்சயன் சொல்லத் தொடங்கினான். “ஆமையின் வலுவான ஓடு என நம் படைகளின் வெளிச்சூழ்கை அமைந்துள்ளது. வலுவான ஷத்ரியப் படையால் மூன்று அடுக்குகளாக ஆமையோடு அமைக்கப்பட்டுள்ளது. கோசலர், காம்போஜர், திரிகர்த்தர், மாளவர், சால்வர், சைந்தவர், சௌவீரர் என பெரிய அரசுகளின் படைகள் முதல்நிரை. ஆந்திரர், ஆபிசாரர், அம்பஸ்தர், அஸ்வாடகர், அஜநேயர், ஆபிரர், அரட்டர், ஆரிவேகர், கர்ணப்பிரவர்ணர், கிதவர், குந்தலர், குலூதர், கசுத்ரகர், காசர், கோவாசனர், சிச்சிலர், சீனர், சுச்சுபர், துஷாரர், துண்டிகேரர் என்னும் படையினர் அடுத்த அடுக்கு. தார்விகர், தசமேயர், நாராயர், பஞ்சநதர், பல்லவர், பானிபத்ரகர், பாரதகர், புளிந்தர், பிரஸ்தலர், மாகிஷ்மதர், முண்டர், மேகலர், லலித்தர், வங்கர், வனாயர், வசாதியர், வடாதனர், விக்ரமர், விகுஞ்சர், வேனிகர், சூரர், சுரசேனர், சம்ஸ்தானர், சிங்களர், சுரஸ்திரர், ஹம்சமார்கர் எனும்

படையினர் மூன்றாம் அடுக்கு. ஆமையோட்டுக்குள் நின்றிருக்கின்றனர் நம் படையின் மாவீரர்கள்” என்றான் சஞ்சயன்.

“எதிரியின் தாக்குதல்களை தடுக்கும் நோக்கம் கொண்டது இச்சூழ்கை. எதிரிப்படையை ஊடுருவிக் கடந்து சென்று போரிடும் நோக்கம் இன்று இல்லை என எண்ணுகிறேன்” என்றான் சஞ்சயன். “ஆமையின் தலை என பீஷ்மபிதாமகர் நின்றிருக்கிறார். தேவையென்றால் மட்டுமே அவர் ஓட்டுக்குள் இருந்து வெளியே தலைநீட்டுவார். ஆமையின் கால்களென கிருபரும் துரோணரும் அஸ்வத்தாமரும் ஜயத்ரதரும் நின்றிருக்கிறார்கள். ஆமையின் வயிற்றுக்குள் கௌரவர்கள் நிலைகொள்கிறார்கள். அவர்களுக்குத் துணையென சல்யர் நிற்கிறார். ஆமைச்சூழ்கை முற்றமைந்த பின்னர் அதை நோக்குகையில் எவ்வகையிலும் உட்புக வழியில்லாமல் வாயில்கள் மூடப்பட்ட கோட்டை என தோன்றுகிறது” என சஞ்சயன் தொடர்ந்தான்.

“எதிர்ப்பக்கம் பாண்டவர்கள் வகுத்திருப்பது சிருங்காடகம் என்னும் சூழ்கை. இது தொல்நூல்களில் கோட்டையை எதிரிப்படை தாக்குமென்றால் அவர்களை உள்ளே வரவிட்டு அழிப்பதற்குரியதென்று சொல்லப்படுகிறது. அதை அமைத்திருப்பது ஆமையை எதிர்கொள்வதற்கு அவர்கள் கொண்டுள்ள வழிமுறை. ஆமை அந்த நாற்கர வழிகளில் எதற்குள் புகுந்தாலும் சூழப்பட்டுவிடும். அதை வெளியேறவிடாமல் நெடுநேரம் நிறுத்திவைத்தார்கள் என்றால் போருக்கென நம்மவர் எழுந்தேயாகவேண்டும். அப்போது மீண்டும் இதுவரை நிகழ்ந்த போர்களே நிகழுமென்று தோன்றுகிறது.” திருதராஷ்டிரர் “ம்” என்றார். இருமுவதுபோல அது ஒலித்தது.

அரசே, இரு படைகளும் பொழுதெழுவதற்காக காத்திருக்கின்றன. நின்றிருக்கும் படைகளை பார்க்கையில் அவை ஒரு விழவுக்கே ஒருங்கியிருக்கின்றன என்று தோன்றுவது பெருவிந்தை. அவர்களனைவருக்கும் தெரியும், அப்போர்நாள் முடிகையில் பெரும்பாலானவர்கள் திரும்பப்போவதில்லை என்று. அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அங்கு வந்துசேர விருப்பமும் இருந்திருக்காது. ஆனால் அங்கு வந்த பின்னர் அவர்கள் ஒவ்வொருவரும் போர்தொடங்கும் தருணத்திற்காக காத்திருக்கின்றனர். யானைகள் உடலை அசைத்து பொறுமையிழக்கின்றன. புரவிகளின் தலைகள் குலைக்கப்படுகையில் பிடரிமயிர் அலையெழுகிறது. அவர்களின் உள்ளங்களிலிருக்கும் பொறுமையின்மையை உடல்களும், உடலமைந்த படைக்கலங்களும், அவர்கள் ஊரும் தேர்களும் மெல்லிய அசைவுகளாக வெளிக்காட்டுகின்றன. அவ்வசைவுகள் இணைந்த சிற்றலைகள் அத்தனை பெரிய வெளியை நிறைக்கையில் நான் காண்பது நீரெனத் ததும்பும் பரப்பை.

பாண்டவப் படையின் மூன்றாவது சந்திப்புமுனையில் நின்றிருக்கிறார்கள் இளைய யாதவரும் பாரதரும். அந்தப் பெரும்படைநிரப்பில் அவர்கள் இருவர் மட்டிலுமே சலிப்பற்றவர்களாக தென்படுகிறார்கள். ஆம், நான் ஒவ்வொருவரையாக பார்க்கிறேன். யுதிஷ்டிரர் சலிப்புற்று தலைதொய்ந்து தாடியை நீவிக்கொண்டிருக்கிறார். அவரிடமிருந்து சலிப்பு நகுலருக்கும் சகதேவருக்கும் படர்ந்திருக்கிறது. பீமசேனர் அவரடைந்த சலிப்பை சினமென்று மாற்றி உடலெங்கும் பரவவிட்டிருக்கிறார். திருஷ்டத்யும்னரின் பதற்றத்திற்கு அடியிலும் சாத்யகியின் இறுக்கத்திற்குள்ளும் இருப்பது சலிப்பேதான். அது போர்மேல் கொண்ட சலிப்பல்ல, போரெனக் கூர்கொண்ட வாழ்க்கையின்மேல் கொண்ட சலிப்பு. இப்பால் பீஷ்மரிடம் எப்போதுமிருக்கும் கசப்பு நிறைந்த சலிப்பு இன்று கனிந்து காம்பு முதிர்ந்துவிட்டிருக்கிறது. துரோணரும் கிருபரும் சலிப்பு

கொண்டிருப்பது தாங்கள் அதுகாறும் பயின்ற கலையின் மெய்யான பொருள் என்ன என்று அறிந்து. உங்கள் மைந்தர் துரியோதனர் கொண்ட சலிப்பு இறப்பின் பேருரு கண்டவர்களுக்குரியது. சலிப்பின் பெருவெளியில் சலிப்பேயற்ற இரு முகங்களை காண்கிறேன். விளையாட்டுப்பிள்ளைகளுக்குரிய விழிகள். ஒன்றில் இளநகை உள்ளது. இன்னொன்றில் இலக்கடைய எழுபவனுக்குரிய கூர் மின்னுகிறது. சலிப்பில்லாதவர்களே இறுதியில் வெல்கிறார்கள். ஐயம்கொள்ளவேண்டியதில்லை, இறுதிவெற்றி அவர்களுக்கே.

புலரிமுரசுகள் முழங்கத்தொடங்கிவிட்டன. ஓசையை விழியால் அறிவதெப்படி என இப்படையை நோக்கினால் புரிந்துகொள்ளலாம். இரு பக்கமிருந்தும் வீசும் இரு காற்றுகளில் இரு திரைச்சீலைகள் நெளிந்து புடைத்து முன்சென்று உரசித் தழுவிக்கொள்வதுபோல் படைகள் முயங்கிக்கொண்டன. போர் தொடங்கிவிட்டது. ஆமை தன் கால்களை ஓட்டுக்குள் எடுத்து வைத்து சீராக முன்னகர்கிறது. நால்வழிப் பாதை விரிந்து இருபுறமும் அரண் என அமைந்து அதை உள்ளே விடுகிறது. ஆமை தயங்காமல் உள்ளே சென்றுகொண்டிருக்கிறது. ஆமையின் இருபுறங்களையும் சூழ்ந்துகொண்டபின் பாண்டவப் படையின் அம்புகள் அதன்மேல் பொழியத்தொடங்குகின்றன.

நான் காண்பது ஆமையோட்டு வளையத்தை கடக்க முயலும் பேரம்புகளை. அவற்றை கேடயக்காப்பால் தடுக்கிறது ஆமை. நன்கு நுழைந்த பின்னர் ஆமை தன்னை வலமிடமாக திருப்பி நாற்கைச் சூழ்கையின் சுவர்களை உடைக்க முயல்கிறது. ஆமையோட்டின் அடிப்பகுதியே பாதுகாப்பற்றது. ஆமையை உப்பக்கம் காணச்செய்யவே எவ்வேட்டை விலங்கும் முயலும். ஆமையின் தலை வெளியே வருகிறது. ஆமையின் வலப்பக்க மூலையில் அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் இணைந்து தாக்குகிறார்கள். ஆமையின் இடப்பக்கத்தை சாத்யகியும் திருஷ்டத்யும்னரும் தாக்குகிறார்கள். ஆமையின் முன்கால்களை பீமனும் சர்வதரும் சுதசோமரும் தாக்குகிறார்கள். ஆமையைச் சூழ்ந்து அதன் பின்னங்கால்களை தாக்குகிறார்கள் கிராதர்கள். ஆமை தன்னை தரையோடு பதியவைத்துக்கொண்டு அவர்களைச் சுழற்றி அகற்ற முயல்கிறது.

ஆமையின் தலை வெளியே வருகிறது. அக்கணமே எதிர்பார்த்து நின்றிருந்த இளைய யாதவர் தேரை பீஷ்மரை நோக்கி கொண்டுசென்றார். அர்ஜுனனுக்கும் பீஷ்மருக்குமான கூரோடு கூர் ஒக்கும் போர் தொடங்கிவிட்டது. ஆமையின் ஓட்டுவிளிம்பு உடைகிறது. அபிமன்யூ உள்ளே நுழைகிறார். அவர் நுழைந்த இடத்திலிருந்தவர்கள் கௌரவ மைந்தர். அவர்கள் ஏற்கெனவே அவரைக் கண்டு அஞ்சியிருந்தனர். அலறிக்கூவியபடி அவர்கள் பின்னடைய அபிமன்யூ வைக்கோலை எரித்தபடி நுழையும் அனல்துண்டு என உள்ளே செல்கிறார். கௌரவ மைந்தர்கள் பன்னிருவர் களம்பட்டனர். எஞ்சியவர்கள் அலறிக்கொண்டு தேர்களிலிருந்து பாய்ந்திறங்கினர். அவர்களை கிளையுலுக்கி கனியுதிரச் செய்வதுபோல் அவர் கொன்று வீழ்த்துகிறார். கொடிகளின் அசைவை நோக்குகிறேன். அரசே, நாற்பத்தெட்டு கௌரவ மைந்தர் கொல்லப்பட்டுவிட்டார்கள்.

ஒவ்வொருவரையாக நான் பார்க்கிறேன். இதோ ஒவ்வொருவரும் தங்கள் எதிரிகளுடன் கோத்துக்கொண்டிருக்கிறார்கள். போரில் அவர்கள் எப்படி இணையானவர்களை கண்டடைகிறார்கள் என்பது விந்தையே. அல்லது அதில் விந்தையென ஏதுமில்லை, அவர்கள் ஒருவரை ஒருவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் மட்டுமே பார்க்கிறார்கள். அவர்களில் ஒருவரை நோக்குபவர் மற்றவரை நினைவுகூர்கிறார். ஆகவே அவரை

எதிர்க்க இவரையே அமைக்கிறார். இரு கையின் விரல்களும் ஒன்றையொன்று அறிந்திருப்பதுபோல. அவர்கள் ஒருவரை ஒருவர் கொன்றுவிட்டார்களென்றால் பாதியை இழப்பார்களா? அல்லது பாதியைப் பெறுவார்களா? இவ்வுலகில் ஒவ்வொருவரும் பாதியளவே என்று கொள்ளலாகுமா?

அரசே, துரியோதனர் பீமசேனருடனும் துச்சாதனர் கடோத்கஜனுடனும் கதைப்போர் செய்கிறார்கள். சாத்யகியும் பூரிசிரவஸும் மீண்டும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டார்கள். திருஷ்டத்யும்னரை துரோணர் சந்தித்துவிட்டார். சகுனியை யுதிஷ்டிரரும் சல்யரை நகுலசகதேவர்களும் எதிர்கொண்டுவிட்டார்கள். அங்கே அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மிகச் சிறந்த அசைவுகளால், மிகக் கூரிய எண்ணங்களால், மிகச் செறிந்த வஞ்சத்தால், பேருருக்கொண்டு சூழ்ந்துள்ள ஊழால் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் பீமசேனரின் மெய்ப்புகொள்ளச்செய்யும் பெருங்களமாடலை நோக்கிக்கொண்டிருக்கிறேன். பாலையில் சருகுகளை அள்ளிச்சுழற்றும் சுழலிபோல் கதை சுற்றிவரும் பிராந்தம், நிலம்நடுங்கி நான்கு சுவர்களும் இடிந்துவிழுவதுபோன்ற ஆவிந்தம், பாறையிலறைந்து அலைநுரை எழுவதுபோன்ற உத்ப்ராந்தம், துறைமேடைக்குள் பேரலை புகுந்ததுபோன்ற ஆப்லுதம், ஏரிமதகு திறந்தெழும் நீர் என பிரஸ்ருதம், சீற்றம்கொண்ட எருதுபோன்ற ப்லுதம், முட்டித்தெறித்து இலக்கடையும் ஸம்பாதம், களிற்றுமத்தகம் என குனிந்துவரும் சமபாதம் என்னும் எட்டு கதைச்சுழற்சிகள். உங்கள் மைந்தரும் அணுவிடை குறைவுபடவில்லை. அவர் அறையுமிடத்தை முன்னரே அறிந்திருக்கிறார். அவர் எழும் சுவடுமுறையை தானும் எடுக்கிறார். அரிய போர்த்தருணங்களை தெய்வங்கள் கொண்டாடுகின்றன. ஏனென்றால் மானுடனின் உடலும் உள்ளமும் உச்சம்கொள்வது அப்போதே.

ஒருகணத்தில் போர் முடிய துரியோதனர் தன் தேரிலேறிக்கொண்ட கணம் பாய்ந்து அம்பால் அறைந்து சுநாபனின் தலையை கொய்தெறிந்தார் பீமசேனர். துரியோதனர் தேரில் நின்று தன்னை மறந்து “இளையோனே!” என்று கூச்சலிட்டார். ஷுரப்ரம் என்னும் அந்த அம்பு தோதகத்திப் பெருமரத்தை துண்டுகளாக்குவது என சூதர்களால் பாடப்படுவது. அந்த அம்பு மீண்டும் எழுந்து தன் இளையவராகிய குண்டாசியை நோக்கி எழ கதையை வீசி அவர் தேரை அறைந்து விலகச்செய்து அதிலிருந்து அவரை காத்தார். சீற்றம்கொண்டு முழக்கமிட்டபடி சித்ராயுதர், குந்ததாரர், பலவர்தனர், மகாதரர், அயோபாகு, பகுயாசி ஆகியோர் பீமனை சூழ்ந்துகொண்டார்கள். அவர்களின் அம்புகளை தன் அம்புகளாலும் இடக்கையிலேந்திய இரும்புச்சரடாலும் தடுத்தபடி பீமசேனர் போர்புரிந்தார். துரியோதனர் “மேலும் படைகள் செல்க! தம்பியர் அனைவரும் சூழ்ந்துகொள்க!” என்று கூவியபடி தன் வில்லில் நாணோசை எழுப்பியபடி பீமசேனரை தாக்கினார்.

ஆனால் பீமசேனரின் மைந்தர்களான சர்வதரும் சுதசோமரும் இருபுறத்திலிருந்தும் துரியோதனரை தாக்கினார்கள். அவர் அவர்களை எதிர்கொண்டபடி “தம்பியரை சூழ்ந்துகொள்க… தனியாக எவரும் முன்னெழ வேண்டியதில்லை” என்று கூவினார். அதற்குள் பீமசேனர் சித்ராயுதரின் தலையை அறுத்து வீழ்த்தினார். அவருடைய கூரிய அம்பு உளியின் வாய்விரிவையும் பெருந்தோளர்கள் மட்டுமே ஏந்தி எய்யத்தக்க எடையையும் கொண்டிருந்தது. அந்த வில் அவருடைய தொடையளவு பருத்தது. இரும்பாலானது. அதன் நாண் யானையின் துதிக்கையின் தோலை முறுக்கி செய்யப்பட்டிருந்தது. அரசே, அந்த அம்புகளின் எடையே விசையாகியது. விசையே கூராகியது. குந்ததாரரின் தேரின் மகுடம் உடைந்தது. அவர்

தலைதாழ்த்துவதற்குள் உடல் நின்றிருக்க தலை பின்னால் தெறித்து மண்ணில் கிடந்தது.

ஒவ்வொரு கௌரவராக விழத்தொடங்கினர். துரியோதனர் தன் மைந்தரிடமிருந்து விடுபடுவதற்குள் முடிந்தவரை கௌரவரைக் கொன்றுமீள்வதே பீமசேனரின் எண்ணமென தெரிந்தது. பலவர்தனரை அவர் ஜாதுகாங்கம் என்னும் அம்பால் அறைந்தார். வௌவால்போல் சிறகுவிரித்து ஓசையின்றி வந்த அந்த அம்பை அவர் காண்பதற்குள் அது தலைகொய்து சென்றிருந்தது. புலிபோல் உறுமியணைந்த வியாஹ்ரபாணி என்னும் அம்பை கண்டு நடுங்கி வில்லை நழுவவிட்ட மகாதரரின் மார்புக்கவசத்தைப் பிளந்து நெஞ்சுகூட்டை உடைத்து உட்புகுந்தது வாளி. அயோபாகுவும் பகுயாசியும் பின்னடைந்தனர். ஆனால் அவர்களால் பீமசேனருடைய அம்புவளையத்திலிருந்து எளிதில் பின்னடைய முடியவில்லை. அவர்களின் விலாக்கவசங்களை உடைத்தது கட்கபக்ஷம் என்னும் பேரம்பு. குண்டசாயி வில்லை விட்டுவிட்டு இரு கைகளையும் தூக்கி கண்மூடி நின்றார். தன் முகத்தில் வழிந்த குருதியை துப்பிவிட்டு நாணிழுத்து அம்புதொடுத்து அவரை நெஞ்சுபிளந்து தேர்த்தட்டில் வீழ்த்தினார் பீமசேனர்.

துரியோதனரின் அம்புகளிலிருந்து தப்பி சர்வதரும் சுதசோமரும் பின்னடைந்தபோது அவர் தன் தம்பியரை நோக்கி திரும்பினார். தன் குருதிதோய்ந்த வில்லைத் தூக்கி ஆட்டி பற்கள் காட்டி வெறியுடன் நகைத்து “அறத்திற்கு இனிது கொழுங்குருதி என்றுணர்க, தார்த்தராஷ்டிரனே!” என்று பீமசேனர் கூவினார். “நில்… ஆண்மையிருந்தால் நில், கீழ்மகனே!” என்று கூவியபடி துரியோதனர் நாணொலியுடன் பீமசேனரை தொடர முயன்றார். “இன்றைய கணக்கு இப்போது முடிகிறது… உன் குடியினர் நூற்றுவரையும் கொன்றொழித்தபின்னர் அக்கணக்கு முடியும்” என்று சொல்லி கூவிச்சிரித்தபடி பீமசேனர் தன் படைகளுக்குள் மறைந்தார்.

“விடாதீர்கள்… விடாதீர்கள் அந்தக் கீழ்மகனை!” என்று கூச்சலிட்டபடி அவரைத் தொடர துரியோதனர் முயன்றார். “அரசே, ஆமையோட்டுச்சூழ்கைக்கு அப்பால் செல்லவேண்டாம்… அங்கே தங்களுக்காக பொறி வைக்கப்பட்டுள்ளது” என்று துச்சாதனர் கூவினார். ஆனால் வெறிகொண்ட துரியோதனர் தன் வில்லில் நாணொலி எழுப்பியபடி மறுபக்கம் வெளிப்பட்டார். அங்கே காத்து நின்றிருந்த நிஷாத அரசர்கள் அவரை சூழ்ந்துகொண்டார்கள். கானனர்களாகிய சுக்ரனும் அவர் இளையோன் சூக்தனும் அவரை எதிர்த்தனர். தங்கள் குறிய ஆனால் விசைமிக்க அம்புகளால் அவர்கள் அவரை நிலையழியச் செய்தனர். விழிக்குச் சிக்கா விரைவுகொண்ட அந்த அம்புகளை எதிர்கொள்ள ஒரே வழி அவற்றை எய்பவரை மிக விரைவாக அணுகிச்சென்று கொல்வதுதான். துரியோதனர் எதிர்பாரா விரைவுடன் நீள்வேலை ஊன்றிப் பாய்ந்தெழுந்து சுக்ரரை அணுகி அவரை குத்தித் தூக்கி அப்பாலிட்டார். அந்தக் கணத்தின் விசைகண்டு திகைத்த சூக்தனை அதே வேலை உருவி எறிந்து வீழ்த்திவிட்டு தன் தேருக்கு மீண்டார்.

துரியோதனர் வெறிகொண்டிருந்தார். நிஷாத அரசர்கள் கொல்லப்பட்ட செய்தியை முரசுகள் அறிவிக்க திருஷ்டத்யும்னரும் சாத்யகியும் இருபுறங்களிலுமிருந்து அவரை நோக்கி வந்தனர். வீழ்ச்சிகாணும்போது வெறிகொள்ளும் இயல்புகொண்ட நிஷாதர்களும் கிராதர்களும் அவரை சூழ்ந்துகொண்டார்கள். அவர் உத்தரநிஷாத நாட்டு இளவரசர்களான தண்டகனையும் தாருகனையும் சுக்ரனையும் சுதீரனையும் வேலெய்து வீழ்த்தினார். அவர்களின் குருதியால் உடல் நனைந்தவராக களத்தில் நின்று வெறியாட்டமிட்டார்.

“அரசே, பின்னடைக! பின்னடைக!” என ஆமைக்குள்ளிருந்து முரசுகள் கோரிக்கொண்டிருந்தன. தமையனின் பின்நிலைக் காப்புக்காக துச்சலரும் துர்மதரும் துச்சாதனரும் வந்தனர். துர்மதர் கிராதகுலத்து சோமித்ரனையும் அக்ரனையும் கொன்றார். துச்சாதனரால் கிராத படைத்தலைவர்கள் உதகனும் சண்டனும் சக்ரனும் கொல்லப்பட்டார்கள். அரசே, அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது என்ன செய்கிறோமென்றறியாமல் போர்வெறி கொண்டிருக்கும் துரியோதனரின் கொலையாடல். ஒருவேளை இளைய யாதவரே அவ்வனலை அணைக்கும் நீரென்று அந்த நிஷாதரையும் கிராதரையும் அனுப்பிக்கொண்டிருக்கிறாரோ என்னும் ஐயமே எழுகிறது. அசுரகுலத்து அரசர் ஹிரண்யகட்கர் அதோ துரியோதனரின் அம்புபட்டு சரிகிறார். அவருடைய ஏழு மைந்தர்கள் நெஞ்சிலும் விலாவிலும் அம்புகள் தைத்து நிற்க அலறிச் சரிகிறார்கள். கதையுடன் எழுந்த மச்சர்குலத்து அரசர் மகாகதரை நெஞ்சில் அறைந்து வீழ்த்துகிறார். அவருடைய கொலைவெறி கொல்லுந்தோறும் பெருகிவருகிறது.

பாண்டவர் படையிலிருந்து “செறுத்து நில்லுங்கள்... கௌரவர்களை முன்னேறவிடாதீர்கள்!” என்று ஆணை எழுந்துகொண்டே இருந்தது. சர்வதரும் சுதசோமரும் இருபுறங்களில் இருந்தும் மீண்டும் தோன்றினர். அவர்களுடன் சுருதகீர்த்தியும் இணைந்துகொண்டார். கௌரவர்கள் அவர்களை எதிர்கொண்டனர். சர்வதரும் துச்சாதனரும் அம்புகளால் கோத்துக்கொண்டு விசையுடன் அணுகி கழைகளில் எழுந்து விண்ணில் கதைகளால் மோதிக்கொண்டார்கள். தேர்முகடுகள்மேல் பாய்ந்திறங்கி அங்கிருந்து வீழ்ந்த யானையொன்றின்மேல் நின்று அறைந்து சுழன்றெழுந்து அறைந்து பாய்ந்து எழுந்தமைந்து அறைந்து சுழன்றுவந்து அறைந்து போரிட்டனர். சுதசோமரும் துர்மதரும் மண்ணிலிறங்கி கதையால் பொருதினர்.

சுருதகீர்த்தியின் அம்புகள் துரியோதனரின் கவசங்களை பிளந்தன. அவர் அமையவோ கவசங்களை மாற்றிக்கொள்ளவோ முயலவில்லை. உயிரென்ற ஒன்றை மறந்துவிட்டவரென அவர் மேலும் மேலும் முன்னால் சென்றார். சுருதகீர்த்தி தன் அம்புகள் விசைகொள்ளும் தொலைவை ஈட்டும்பொருட்டு மேலும் பின்னடைந்து பின்னணி வீரர்களில் முட்டிக்கொண்டு நின்றிருக்க தேரிலிருந்து கழையிலெழுந்து வேலால் அவர் நெஞ்சை தாக்கினார். கவசம் உடைய அவர் அக்கணமே தேரிலிருந்து பாய்ந்து பின்னால் சென்று மறைந்தார். பெருங்குரல் எழுப்பியபடி அவர் திரும்பி சர்வதரை அறைந்தார். அவர் விலாக்கவசம் உடைந்தது. மூக்கில் குருதி வழிய அவர் தேர்த்தட்டில் விழ பாகன் தேரை பின்னெடுத்து கொண்டுசென்றான்.

கதையைச் சுழற்றியபடி தார்த்தராஷ்டிரர் போர்க்கூச்சலெழுப்பினார். சுதசோமர் தன் கதையை வீசிவிட்டு பாய்ந்து தேரொன்றிலேறி அதன் பின்பக்கம் பாய்ந்து அப்பால் செல்ல அந்தத் தேர் புரண்டது. அதன் புரவிகள் கனைத்தபடி நின்று சுழன்றன. அதற்குப் பின்னாலிருந்த தேரிலிருந்த பாகன் உரக்க கூச்சலிட்டு குதிரைகளை அறைந்தான். அத்தேரில் இருந்த சதானீகர் துரியோதனரை மிக அருகே கண்டதும் வில்லை கீழே போட்டுவிட்டு அச்சத்துடன் கூச்சலிட்டார். துச்சாதனர் பெருஞ்சினத்துடன் கூவியபடி கதைசுழற்றி சதானீகரை நோக்கி பாய பற்களைக் கடித்து “நில், மூடா!” என்றபடி தார்த்தராஷ்டிரர் துச்சாதனரின் விலாவில் அறைந்தார். நிலையழிந்து துச்சாதனர் தடுமாறி நிற்க சதானீகரை ஒருகணம் நோக்கியபின் தார்த்தராஷ்டிரர் திரும்பிச் சென்றார்.

தமையனின் எண்ணத்தை அறிந்தவர்களாக துச்சாதனரும் பிற கௌரவர்களும் அவரை விட்டுவிட்டு திரும்பிக்கொண்டார்கள். பாகன் சதானீகரின் தேரை இழுத்துத்

திருப்பி தங்கள் படைக்குள் மூழ்கடித்துக்கொண்டான். கதையைச் சுழற்றியபடி நின்ற துரியோதனரை நோக்கி பீமசேனரும் சாத்யகியும் சங்குகளை ஊதியபடி வந்தனர். பின்னணிப்படை எழுந்துவந்து தார்த்தராஷ்டிரரையும் கௌரவர்களையும் உள்ளிழுத்துக்கொள்ள ஆமையின் ஓடு இறுக மூடிக்கொண்டது. மூடிய ஓட்டின்மேல் சாத்யகியும் பீமசேனரும் தொடுத்த அம்புகள் வந்து அறைந்தன. அப்பால் கொம்பூதியபடி ஆமையின் தலை அவர்களை நோக்கி திரும்பியது. ஆமை மெல்ல திரும்ப பீஷ்மர் அவர்களை நோக்கி வந்தார்.

ஆமை நாற்கை சூழ்கையின் நடுவே நின்று தன்னை தான் காத்து திரும்பிக் கொண்டிருந்தது. அரசே, இன்றைய ஆமைச்சூழ்கை எவ்வகையிலும் கௌரவர்களுக்கு துணைசெய்யவில்லை என்றே கொள்ளவேண்டும். இன்றும் கௌரவ மைந்தர் அறுபத்தெட்டுபேர் உயிர்துறந்துள்ளனர். கௌரவர்கள் எண்மர் கொல்லப்பட்டனர். பாண்டவர் தரப்பிலோ நிஷாதர்களுக்கும் கிராதர்களுக்கும் இன்று பேரிழப்பென தோன்றுகிறது. போர் தொடங்கி இன்னும் உச்சிப்பொழுதாகவில்லை. அந்திக்குள் எவரெவர் எங்கெங்கே கொல்லப்படுவார்கள் என்று சொல்ல இயலாது. அதை இப்போரை நின்று நடத்தும் தெய்வங்களே அறியும்.

சஞ்சயன் திருதராஷ்டிரரை நோக்கினான். அவருடைய இரு விழிகளிலிருந்தும் நீர்க்கோடுகள் வழிந்து முகத்திலிருந்து மார்பில் சொட்டிக்கொண்டிருந்தன. உதடுகள் பிதுங்கியிருக்க தொய்ந்த தோள்களுடன் அவர் அமர்ந்திருந்தார். மேலும் சொல்வதா என அவன் தயங்கினான். “ஜயத்ரதரை அர்ஜுனர் எதிர்க்கிறார். இளைய பாண்டவருக்கு எதிர்நிற்பதே தன் தகுதி என அவர் எண்ணுவதனால் நின்றிருக்கும் பொழுதை நீட்டிக்கவே முயல்கிறார். ஆகவே அம்புகளை ஒழிகிறார், அம்புகளால் அறைகிறார். ஆனால் அம்புகளின் விசைவட்டத்திற்குள் நுழைவதை முற்றாகத் தவிர்க்கிறார். போரென்றும் ஆட்டமென்றும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது அப்போர்.”

திருதராஷ்டிரர் மெல்ல கலைந்து எழுந்து “என்ன ஆயிற்று பாண்டவ மைந்தனுக்கு?” என்றார். “அரசே, இதோ சுருதகீர்த்தியும் சுதசோமரும் சர்வதரும் அபிமன்யூவும் இணைந்து ஆமையின் வலப்பக்க மூலையின் காப்புச்சூழ்கையை உடைத்து உட்புக முயல்கிறார்கள். யௌதேயரும் பிரதிவிந்தியரும் சுபலரின் மைந்தர்களுடன் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்” என்றான் சஞ்சயன். “அவன், நகுலனின் மைந்தன்…” என்றார் திருதராஷ்டிரர். “அரசே, அவர் தப்பிவிட்டார்… பிரதிவிந்தியருக்குத் துணையாக நிர்மித்ரரும் சுருதசேனரும் நின்றிருக்கிறார்கள்” என்றான் சஞ்சயன். “மிக இளையோர்” என்றார் திருதராஷ்டிரர்.

சஞ்சயன் அவரை பார்த்தான். அவர் கையசைத்து மேலே சொல்லும்படி கைகாட்டினார். “அரசே, அதோ ஆமையின் ஓடு மீண்டும் உடைந்துவிட்டது. சுருதகீர்த்தியும் அபிமன்யூவும் அம்புகளைப் பொழிந்தபடி உள்ளே நுழைகிறார்கள். அங்கே காந்தாரத்தின் படைகள் சுபலரின் தலைமையில் நின்றிருக்கின்றன. அவர்கள் அச்சமும் வெறியுமாக கூச்சலிடுகிறார்கள்” என்று சஞ்சயன் சொல்லத் தொடங்கினான். திருதராஷ்டிரர் மீண்டும் விழிநீர் வழிய விசும்பத் தொடங்கினார். அவன் ஒருகணம் தயங்கி அவரை நோக்கிவிட்டு “சர்வதரும் சுதசோமரும் வந்து சேர்ந்துகொள்கிறார்கள். அவர்களை சுபலரின் மைந்தர் தலைமையில் காந்தாரப் படைகள் எதிர்க்கின்றன” என்று சொல்லத் தொடங்கினான்.

சஞ்யசனின் கைகள் ஆடிக்குமிழிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்தும் பிரித்தும் காட்சிகளை மாற்றிக்கொண்டே இருந்தன. அவன் கண்விழிகள் அசைந்த விரைவிலேயே அவை நிகழ்ந்தன. அவன் உள்ளத்தின் விசையை கண்களும் அடைந்திருந்தன. எனவே எண்ணியதை அவன் நோக்கினான். எண்ணிய இடத்தில் இருந்தான். ஏதோ ஒரு தருணத்தில் அவன் தன் எண்ணத்துக்கேற்றவற்றை கண்டான். தன் அகப்போக்குக்கு இயைய அப்போரை தொடுத்துக்கொண்டான். இறுதியில் அவன் அறிந்த அப்போரை அவனே அங்கே அமைத்துக்கொண்டிருந்தான்.

“ஆம் அரசே, நான் இப்போது சொல்லிக்கொண்டிருப்பது அக்காட்சிவெளியில் நான் அமைத்து விளையாடும் போரைத்தான். ஆனால் எவர் அந்தப் போரை முழுதறியவியலும்? மானுடரால் இயல்வதாகுமா அது? அங்கே நின்றிருக்கும் ஒவ்வொருவரும் அவரவர் போரை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இமையா விழியன் அர்ஜுனர். விழிக்கு மேல் விழித்திருக்கும் பீலிவிழி கொண்டவர் இளைய யாதவர். அவர்களும் மானுடரே. தேவர்கள் அறிவரா இப்போரை? விழைவோ வஞ்சமோ எண்ணமோ எதிர்நோக்குதலோ கொண்ட எவருக்கும் அவர்கள் அறிவதை அவ்வுணர்வுகளே சமைத்தளிக்கும். தேவர்கள் உணர்ச்சிகள் கொண்டவர்கள். ஆகவே அவர்களும் இப்போரிலாடுகிறார்கள்.

எண்ணுகில் முத்தெய்வங்களும் உணர்ச்சிகள் கொண்டவர்களே. அவ்வுணர்ச்சிகளால்தான் அவர்கள் முழுமுதல் பிரம்மத்திலிருந்து உருக்கொண்டு எழுந்தனர். அறிவது ஆகாய வடிவான அதுவே. அல்லது அதுவும் அறியாது. ஏனென்றால் அது இருக்கும் அம்முழுமையில் அறிவதும் அறிபடுவதும் அறிதலும் ஒன்றே. அங்கே நிகழ்வதும் நிகழாமையும் வேறல்ல. ஆகவே அறிதலும் அறியப்படாமையும் ஒன்றே.

அரசே, இன்று இப்போரிலிருந்து நான் அறிவதே மிகப் பெரிய மானுடக்காட்சி என்க! இன்னும் கருக்கொள்ளாத, இனிமேல் பிறந்து பிறந்தெழும் மானுடருக்கெல்லாம் என்னுடையதே விழி. நான் அங்கிருந்து இங்கு நோக்கிக்கொண்டிருக்கிறேன். எனில், நான் நோக்குவது எதை? இங்கு நிகழ்ந்துகொண்டிருக்கும் இப்போர் எல்லையற்றது, அலகிலாதது. இதில் நாளையோர் நோக்க விழைவதை இன்றென நோக்குகிறேனா? வருவோருக்கு தெய்வங்கள் அளிக்கவிழைவனவற்றை மட்டுமே அள்ளிக்கொள்கிறேனா? அரசே, நான் இதோ காண்பவை இன்றில் நிகழ்கின்றனவா, அன்றி நாளை உருவாகப்போகும் நேற்றில் நிகழ்கின்றனவா? இவை எவருடைய புனைவு? நான் புனைகின்றேன் எனில் நான் எவருடைய சொல்லின் கரு?

அதோ இளைய பாண்டவர்களால் ஆமையின் ஓடு உடைபடுகிறது. ஆமை அசைந்து திரும்புவதற்குள் அந்த இடைவெளியினூடாக அவர்கள் உள்ளிருக்கும் காந்தாரர்களை தாக்குகிறார்கள். காந்தாரரான சுபலர் தன் அரச மைந்தர்களான அசலரும் விருஷகரும் இருபுறமும் துணைவர குலமைந்தர்களான கஜன், கவாக்ஷன், சர்மவான், ஆர்ஜயன், சுகன் ஆகியோர் தொடர அவர்களை எதிர்கொண்டார். அசலனின் மைந்தர்களான தீர்க்கபலனும் பாகுபலனும் விருஷகரின் மைந்தர்களான விருஷதர்ப்பனும் விருஷகீர்த்தியும் அவர்களுக்கு பின்னணி அமைத்தனர். அம்புகளுடன் அம்புகள் இணைந்து அனலெழுகின்றது. வெறிகொண்ட வீரர்கள் அம்புகளில் தங்கள் விசை முழுதெழவில்லை என

உணர்ந்தால் கூச்சலிட்டபடி பாய்ந்து நிலத்திலிறங்கி வாள்களாலும் வேல்களாலும் கதைகளாலும் மோதிக்கொண்டார்கள்.

சுபலருக்குத் துணையாக அஸ்வாடகர்களும் அஜநேயர்களும் துண்டிகேரர்களும் தசமேயர்களும் பாரதகர்களும் மேகலர்களும் வேனிகர்களும் அடங்கிய படை எழுந்தது. ஒருகணமும் கைசலிக்காது சுருதகீர்த்தியும் அபிமன்யூவும் நின்று பொருதினர். தசமேய இளவரசர்களான சுபர்ணன், சுபக்ஷன், சுகீர்த்திமான் ஆகியோரை சுருதகீர்த்தி கொன்றார். பாரதக இளவரசர்களான உத்கதன், உஜ்வலன், ஊர்ஜன் ஆகியோரை அபிமன்யூவின் அம்புகள் கொன்றன. வேனிக இளவரசர்களான சாமனும் சங்கசித்ரனும் சுதேவனும் சுமுகனும் அதோ இறந்துவீழ்கிறார்கள்.

சுபலருக்கு சகுனியின் ஆணை எழுகிறது. அது அவருக்கு மட்டுமே புரியும் முழவொலி என எண்ணுகிறேன். அவர் பிற அரசர்களை அபிமன்யூவின் முன்னால் செலுத்திவிட்டு தன் மைந்தர்கள் பெயர்மைந்தர்களுடன் பின்னடைகிறார். அபிமன்யூ கொலைவெறியிலிருந்தமையால் அதை அறியவில்லை. துண்டிகேரர்களின் இளவரசர்களான முக்தனையும் முகுந்தனையும் மூர்த்திமானையும் அவர் கொன்று சரித்தார். அஸ்வாடக இளவரசர்களான குண்டலனையும் சாருகேசனையும் சாருசித்ரனையும் குந்தளனையும் குமாரதேவனையும் அவருடைய அம்புகள் தேரோடு சேர்த்து அறைந்து நிறுத்தின.

சிறு அரசுகளில் சிறுகளரிகளில் படைக்கலப்பயிற்சி பெற்ற அந்த இளவரசர்கள் அத்தனை ஆற்றல் மிக்க அம்புகளை அறிந்ததில்லை. ஓர் இலக்கும் பிழைக்காத வில்லவனுடன் எதிர்நின்று பொருதுவதன் பயனில்லாமையை அவர்கள் உணர்ந்துவிட்டமையால் நிரைநிரையாக வந்து அபிமன்யூவின் முன் உயிர்கொடுத்தனர். மெல்லிய எதிர்ப்புகூட இல்லாமல் அஜநேயர்களின் இளவரசர்களான கலாதனும் சுஜாதனும் மேகரூபனும் விலாசனும் விதேகனும் அம்புகளால் துண்டாடப்பட்டனர். வேனிகர்களின் இளவரசர்களான சுமூர்த்தனும் சுபத்ரனும் பார்க்கவனும் பார்திபனும் பாவகனும் ஹரிதனும் ஹரனும் அம்புகளுக்கு தங்களை ஆட்கொடுத்து துடித்து வீழ்ந்தனர்.

சுபலரின் படைகள் பின்னடைந்தபோது ஆமையோட்டின் இன்னொரு வளைவை உடைத்தபடி சகதேவரும் நகுலரும் உள்ளே நுழைந்தனர். சுபலர் அந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. தன்னைச் சூழ்ந்து நின்றிருந்த கர்ணப்பிரவர்ணர், கிதவர், குந்தலர், குலூதர் ஆகிய சிற்றரசர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து அவர்களை எதிர்கொள்ளச் செய்தார். ஆனால் நகுலரும் சகதேவரும் உச்சவிசைகொண்டிருந்தார்கள். இருவரும் ஒருவரே எனத் தோன்றினர். ஒருவர் இரண்டு இடங்களிலென திகழ்ந்தனர்.

சகதேவர் குந்தலர்களின் அரசரான மகராக்ஷனையும் அவர் மைந்தர்களான சந்திராக்ஷனையும் மதனனையும் கொன்றார். நகுலர் கிதவர் குலத்து அரசர் வாயுவேகனையும் அவர் மைந்தன் வாதவேகனையும் கொன்றார். சகுனியின் ஆணை சுபலரும் மைந்தர்களும் பின்வாங்கும்படி எழுந்துகொண்டே இருந்தாலும் அவர்களால் பின்னடைய முடியவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் முட்டிமோதினர். அவர்களை காக்கும்பொருட்டு அனுப்பப்பட்ட சிற்றரசர்களின் எண்ணிக்கையே அவர்களை சேறுபோல சிக்கவைத்தது.

சுபலரும் அசலரும் விருஷகரும் தங்களை மூன்று அணிகளாக பிரித்துக்கொண்டனர். சுபலருடன் கஜனும் கவாக்ஷனும் அசலரின் மைந்தர்களான தீர்க்கபலனும் பாகுபலனும் சென்றனர். விருஷகரின் மைந்தர்களான

விருஷதர்ப்பனும் விருஷகீர்த்தியும் அசலருடன் சென்றனர். சர்மவானும் ஆர்ஜயனும் உடன் சென்றனர். விருஷகர் அரட்டர் குலத்து அரசர் ஆரியமானையும் அவர் மைந்தர்களான சாருசித்ரனையும் சாத்விகனையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். சுகன் அவருடன் இருந்தார். ஆரிவேக நாட்டு அரசர் விசித்ரநேத்ரனும் அவர் மைந்தர்களான சுநேத்ரனும் சுவாக்கும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். படை அமைந்ததும் அவர்கள் துணிவுகொண்டு நகுலசகதேவர்களை எதிர்த்தனர். நகுலரை சுபலரும் சகதேவரை அசலரும் எதிர்கொள்ள விருஷகர் நடுவே நின்று இருவரையும் பிரித்து ஊடுருவிச்செல்ல முயன்றார்.

நகுலர் எடுத்த அதே அம்பையே சகதேவரும் எடுத்தார். இருவரும் ஒரேகணம் நாணிழுத்து ஒரே மின் என அம்பு தொடுத்தார்கள். இருவரின் இலக்குகள் மட்டுமே மாறுபட்டன. அல்லது அவர்கள் இருவரும் இணைந்தே இலக்குகளை தெரிவுசெய்தனர். ஆந்தைபோல முழங்கியபடி எழும் ஹிக்காஸ்திரத்தால் ஆரிவேகநாட்டு இளவரசன் சுநேத்ரனை நகுலர் கொன்றார். வெறியுடன் நெஞ்சிலறைந்தபடி நகுலரை நோக்கி பாய்ந்த அவர் தந்தை விசித்ரநேத்ரனை சகதேவரின் கதம்பாஸ்திரம் வீழ்த்தியது. சுவாக் கதறியபடி தந்தையை நோக்கி செல்ல அவர் தலையை வெட்டிவீசியது சகதேவரின் கட்கபாணம்.

சுழன்றுவரும் சக்ரபாணம் அரட்டர்குலத்து அரசர் ஆரியமானை கொன்றது. அவர் மைந்தர்களான சாருசித்ரனையும் சாத்விகனையும் தேடி மீண்டும் அந்த அம்பு சுழன்று வந்தது. சாருசித்ரன் தேரிலேயே அறுபட்டு சுழன்றுவிழுந்தார். சாத்விகனின் தலையை கொய்து சென்ற சகதேவரின் அம்பு பிறிதொரு படைத்தலைவன் நெஞ்சில் பாய்ந்து சுழன்று புகுந்து நிலைகொண்டது. சாத்விகனின் தலையும் உதிரும் விதைபோல் சுழன்று நிலத்தில் விழுந்து திரும்பி நின்றது. நகுலர் சுகனை கொன்றார். உடல் நிலமறைந்து விழ அதன்மேல் மேலும் பொழிந்து நின்றன அம்புகள். கவாக்ஷனை சகதேவர் கொன்றார். அவர் அம்புகளால் அறையப்பட்டு தேர்த்தூணில் ஒட்டியிருந்து தவித்து துடித்து கால்மடிந்து சரிந்தார்.

அக்கொலைகளாலேயே போர் செல்லும் திசையை காந்தாரர்கள் உய்த்தறிந்துவிட்டிருந்தனர். சுபலர் சகுனியின் பின்துணை வரும்வரை சகதேவரையும் நகுலரையும் தடுத்து படைகாக்கவே விழைந்தார். ஆனால் அசலரின் மைந்தர்களான தீர்க்கபலனும் பாகுபலனும் இளையோர். அவர்கள் போரிலிறங்கும் முன் அச்சமும் கிளர்ச்சியும் கொண்டவர்களாகவும் போர் தொடங்கியபின் தங்கள் உள்ளத்தின் கட்டிலா வெறிக்கு முற்றாக அளித்துவிட்டவர்களாகவும் இருந்தனர். அரசே, போரில் சற்றேனும் தன்னை எண்ணுவோர் மணந்து மைந்தரை ஈன்றவர்கள் மட்டுமே.

நகுலரால் தீர்க்கபலன் கொல்லப்பட்டார். அவருடைய உடல் தேர்த்தட்டை அறைந்து விழ உயிர்விசையில் அவர் கைகள் தேர்த்தூணை பற்றிக்கொண்டன. அதே கணம் பாகுபலனும் நெஞ்சில் அம்புபாய்ந்து விழுந்தார். இரு நிகழ்வுகளையும் ஒற்றைக் கண்ணசைவிலெனக் கண்டு சுபலர் வீறிட்டலறினார். அசலர் அவர்களை நோக்கி ஓடிவந்தார். அது அவர் செய்த பிழை. அவருடைய நெஞ்சில் சகதேவரின் பேரம்பு உடைத்துப்பாய்ந்து நின்றது. சுபலர் தேர்த்தட்டில் அமர்ந்து தலையிலறைந்து கதறினார். அவருடைய தேரை பின்னிழுத்தான் பாகன்.

தீர்க்கபலனின் உடல் தேர்த்தட்டிலிருந்து சரிந்தது. அவர் கைகள் தேர்த்தூணை இறுகப்பற்றியபடி இறந்துவிட்டிருந்தன. அவர் உடல் தேரிலிருந்து தொங்க தேர் சுற்றி அலைக்கழிந்தது. அதன் பாகனின் கழுத்தை சீவிச்சென்றது பிறைவாளி.

தேர்க்குதிரைகள் நிலையழிந்து கனைத்தபடி ஓடின. தேர் கவிழ்ந்தது. அதற்கு அடியில் தீர்க்கபலன் சிக்கிக்கொண்டார். விருஷகர் கூச்சலிட்டபடி நகுலரை நோக்கி சென்றார். சுபலர் “பின்னடைக! பின்னடைக!” என்று கூவிக்கொண்டிருக்க விருஷகரும் நகுலரும் அம்புகோத்துக்கொண்டார்கள். விருஷகருக்கு துணைசென்ற சர்மவானும் ஆர்ஜயனும் நகுலரும் சகதேவரும் எய்த அம்புகள் பட்டு சிதறிவிழுந்தார்கள். அவர்களின் விழிகளை இருவர் ஒருவரென்று ஆகி நின்றமை மயக்கியது. தங்களைக் கொன்றது எவர் என்று அறியாதவர்களாகவே அவர்கள் விண்ணேகினர்.

விருஷகரின் அம்புகளில் ஒன்று நகுலரின் தோள்கவசத்தை உடைத்தது. பிறிதொன்று கையின் கங்கணத்தை சிதறடித்தது. சுபலர் கைநீட்டி “வேண்டாம்! பின்னடைக!” என்று கூவிக்கொண்டே இருக்க அவர் நோக்கில் சுபக்ஷம் என்னும் பேரம்பு எழுந்து வந்து விருஷகரின் கழுத்தை அரிந்து நிலத்திலிட்டது. அவர் நெஞ்சில் ஓங்கியறைந்தபடி தேரிலிருந்து பாய முயல ஆவக்காவலன் அவர் கால்களைப்பற்றி இழுத்து தேர்த்தட்டிலிட்டான். தேர் திரும்பி கௌரவப் படைக்குள் மூழ்கியது.

சகுனியின் ஆணைப்படி ஆர்ஸ்யகுலத்து அரக்கர்களின் படை ஒன்று தேர்நிரைகளை தாவிக் கடந்து வானிலிருந்து உதிர்பவர்கள்போல நகுலரையும் சகதேவரையும் எதிர்க்க களத்தில் வந்து இறங்கினர். எடைமிக்க இரும்புக்கவசங்களை அணிந்துகொண்டு பெரிய கதைகளையும் கொக்கிக் கயிறுகளையும் படைக்கலங்களாக்கி போரிடும் ஆர்ஸ்யர்களின் தலைவனான ஆர்ஸ்யசிருங்கி பீமசேனரால் கொல்லப்பட்ட அரக்கர்குலத்தவனாகிய ஜடாசுரனின் குலமைந்தன். தன் குடித்தெய்வத்தின் முன்னால் பாண்டவர்களை கொல்வதாக வஞ்சினம் உரைத்தவன். அவர்கள் ஒருவரைப்போல் பிறிதொருவர் தோன்றும் கலை அறிந்தவர்கள். ஒருவரின் பின் ஒருநூறுபேர் பிசிறின்றி நின்றிருக்கும் திறன் கொண்டவர்கள்.

ஆர்ஸ்யசிருங்கி தன் கதையை நிலத்திலறைந்து பேரோசை எழுப்பியபடி தன் முன் வந்து நின்றபோது அவன் ஒருவனே வந்துள்ளான் என்று நகுலர் எண்ணினார். ஆனால் அவனுக்குப் பின் முற்றிலும் அவனால் மறைந்து அவனைப்போலவே என நூற்றுவர் நின்றிருந்தனர். அம்புக்கு விசைகூட்டும்பொருட்டு தன் தேரை மேலும் மேலும் பின்னிழுத்தபடி நாணிழுத்து எடையும் விசையும் கொண்ட அம்புகளை அவன்மேல் தொடுத்தார். அவன் கவசங்களில் அம்புகள் கூழாங்கற்கள்போல பட்டு உதிர்ந்தன. அவன் தன் கதையைச் சுழற்றி தேர்களை அறைந்தான். கொக்கிகளால் வீரர்களை கவ்வி இழுத்து பெரிய காலால் உதைத்து கழுத்தையும் முதுகையும் முறித்தபடி முன்னால் சென்றான்.

நகுலரின் அம்பு அவன் கவசத்தை உடைக்க அக்கணம் சகதேவர் எய்த அம்பு அவன் நெஞ்சைப்பிளந்து உட்புகுந்தது. கதைவீசியபடி எழுந்த ஆர்ஸ்யசிருங்கி அலறியபடி மண்ணில் விலாவறைந்து எடையோசையுடன் விழ அவன் நின்றிருந்த இடத்தில் அவன் சற்றும் குறையாமல் நின்று கதைவீசி கொக்கரித்தான். சகதேவரின் தேர் உடைந்து சிதறியது. அவர் பாய்ந்து பின்னாலிறங்கி பரியொன்றில் தொற்றிக்கொண்டார். ஆர்ஸ்யசிருங்கி திரும்பி நகுலரை அறைந்தான். உடலெங்கும் உடைந்த தேர்ச்சிம்புகளுடன் நகுலர் மண்ணில் விழுந்து உருண்டு எழுந்தார். அருகே நின்றிருந்த யானையின் காதுக்குப் பின் அவர் தன் வேலால் குத்த அது துதிசுழற்றி வெறிப்பிளிறலுடன் எழுந்து சென்று ஆர்ஸ்யசிருங்கியை முட்டியது. அவன் கவசங்கள் உடைய சிதறி அப்பால் விழுந்தான். அவனுக்குப் பின்னாலிருந்து ஆர்ஸ்யசிருங்கிகள் மேலும் வெறியுடன் கூச்சலிட்டபடி கதைகள் சுழற்றி எழுந்தனர்.

நகுலர் புரவியொன்றின் மறைவில் ஓடி அப்பால் சென்றார். “இவன் மாயம் கற்றவன்… அரக்க மாயத்தை நம்மால் எதிர்கொள்ள இயலாது” என்று சகதேவர் கூவினார். “விலகுங்கள், தந்தையரே. நஞ்சுக்கு நஞ்சே முறிமருந்து!” என்று முழங்கியபடி அவர்களுக்குப் பின்னாலிருந்து கடோத்கஜன் கதைவீசிக்கொண்டு தோன்றினார். அவரை ஆர்ஸ்யசிருங்கிகள் சூழ்ந்துகொண்டனர். நூறு கதைகளால் சூழப்பட்டிருந்தார் கடோத்கஜன். அவர் கொக்கி எழுந்து பறந்து ஆர்ஸ்யசிருங்கிகளை இழுத்து தன்முன் இட்டது. அவர் கதை அவர்களின் நெஞ்சக்கூடுகளையும் தலைப்பேடகங்களையும் உடைத்தது.

பறந்து தன்னைச் சூழ்ந்து போரிட்ட ஆர்ஸ்யசிருங்கிகளை பறந்தெழுந்து வானில் தடுத்து அறைந்து வீழ்த்தி கடோத்கஜன் போரிட்டார். அவரை துணைக்க இடும்பர்களின் நிரை தேர்களுக்கு மேலாக பறந்து வந்தது. ஆர்ஸ்யர்களும் இடும்பர்களும் மோதிக்கொண்ட அந்தப் போர் பெரும்பாலும் வானிலேயே நிகழ்ந்தது. ஆர்ஸ்யர் ஒவ்வொருவராக கடோத்கஜனைச் சூழ்ந்து வீழ்ந்தனர். பின்னர் அவன் மூச்செறிந்து கதை சுழற்றி உறுமியபடி நோக்கியபோது அவனைச் சுற்றி ஆர்ஸ்யர்கள் சிதறிப்பரந்து கிடந்தனர். அவர்களின் சிதைந்த உடல்களிலிருந்து குருதி பெருகி கவசங்களின் இடுக்குகளினூடாக பாறைகளில் ஊற்றென வழிந்தது.

கடோத்கஜனை எதிர்கொள்ள பகதத்தனுக்கு சகுனியின் ஆணை சென்றது. ஆமையின் ஓடு அப்பகுதியில் உடைந்து பாண்டவப் படை உள்ளே நுழைந்துகொண்டிருந்தது. ஆமையின் தலையுடன் அர்ஜுனனும் அபிமன்யூவும் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். ஆமை தன் கால்களை நீட்டி விரைவடி வைத்து சூழ்ந்துகொண்டிருந்த பாண்டவப் படைகளின் நடுவே மெல்ல உலைந்தாடியது. சுப்ரதீகம் என்னும் பெரிய யானையின் மேல் அமர்ந்திருந்த பகதத்தர் தன் வேலைத் தூக்கி வீசி பிரக்ஜ்யோதிஷத்தின் படைகளையும் வங்கப் படைகளையும் கடோத்கஜனை நோக்கி செல்ல ஆணையிட்டார். சிற்றரசர்களின் சிதறிய படைகளினூடாக அவருடைய படை திரண்டு கடோத்கஜனை நோக்கி சென்றது.

கடோத்கஜனுக்கு உதவும்பொருட்டு அவரருகே பீமசேனர் எழுந்தார். சர்வதனும் சுதசோமனும் அவருடன் வந்தனர். பகதத்தர் வந்த விசையிலேயே தன் யானைமேலிருந்து பாய்ந்து அதன் கழுத்துக்கயிற்றில் தொங்கி கீழிறங்கினார். அப்போது அந்த யானையின் காதில் அவர் ஓரிரு சொற்களை சொன்னார். அரசே, சுப்ரதீகம் என்னும் அந்த யானை திசையானைகளின் ஒன்றின் பெயர்கொண்டது. தென்கிழக்கின் இருண்ட காடுகளில் பிடிக்கப்பட்டது. ஏழாண்டுகள் பயிற்சியளிக்கப்பட்ட பின்னரும் அது பகதத்தரையும் இரண்டு பாகன்களையும் அன்றி எவரையுமே தன்னை அணுகவிட்டதில்லை.

அரசே, பாரதவர்ஷத்தின் மாபெரும் யானைகளில் ஒன்றாகிய அதைப்பற்றி கௌண்டின்ய ஹர்ஷர் எழுதிய மதங்கராஜவிலாசம் என்னும் காவியத்தை அறிஞர் பயின்றிருப்பார்கள். நூற்றெட்டு நற்குறிகள் கொண்டது. சுக்கான் நிலைநிறுத்தப்பட்ட பெருங்கலம்போல் முற்றிலும் நிகர்த்த அசைவுகள் கொண்டது. விசையில் உருளும் மலைப்பாறையையும், புயல்கால கடல் அலைகளையும் போன்றது. போர்புரியும் விழைவும் பெருஞ்சினமும் கொண்டது. பகதத்தர் பீமசேனரின் உருவை தோலிலும் இரும்பிலும் வடித்து அந்தப் பாவையை சுப்ரதீகத்திற்கு காட்டி நாளும் பயிற்சியளித்துவந்தார். அந்தப் பாவையின் உடலில் இருந்து சுப்ரதீகத்தின் மேல் காய்ச்சிய எண்ணையும் அரக்கும் வீசப்பட்டும் கூரிய அம்புகள் செலுத்தப்பட்டும் அதற்கு சினமூட்டப்பட்டபின் அது அதன் துதிக்கைக்கு

சிக்கவைக்கப்படும். அப்பாவையை யானை மிதித்து அரைத்தும் கிழித்து நாராக்கியும் வெறிகொண்டாடும்.

பீமனை நோக்கிய சுப்ரதீகம் துதிசுழற்றி தலைகுலுக்கி காதுகள் முன்கோட்டி வால்முறுக்கி பிளிறியபடி அவரை நோக்கி ஓடியது. அதை எதிர்கொள்ள பீமசேனர் தன்னருகே நின்றிருந்த வஜ்ரதந்தம் என்னும் பெருங்களிறை ஏவினார். சுப்ரதீகமும் வஜ்ரதந்தமும் அக்களம் அதிரும் விசையுடன் மத்தகங்களால் முட்டிக்கொண்டன. துதிக்கைகளை சுற்றிப்பற்றியபடி ஒன்றையொன்று சுற்றிவந்தன. கடோத்கஜனை கொல்ல பகதத்தர் மேலும் மேலும் யானைகளை ஏவினார். அந்த யானைகளை தடுக்க பாண்டவர்களும் யானைகளை அனுப்பினர். யானைகள் ஒன்றையொன்று தடுத்து பிளிறி ஆர்ப்பரித்துப் போரிட்டுக்கொண்ட இடைவெளிகளில் அவற்றின் உடல்களில் மிதித்து ஏறிப்பாய்ந்து மத்தகங்களின் மீதும் முதுகின்மீதும் நின்றபடி கடோத்கஜனும் பகதத்தரும் போரிட்டனர்.

கடோத்கஜன் விசையும் எடையும் கொண்டவர். பகதத்தர் ஆணவத்தால் அமைந்த அமைதிகொண்டவர். அப்போரில் விசை முதலில் வென்றது. எட்டு அடிகள் பகதத்தர் மேல் விழுந்தன. ஆனால் பின்னர் கடோத்கஜன் பகதத்தரின் அடிகளை வாங்கி நிலையழிந்து யானைமேல் தள்ளாடினார். சுப்ரதீகம் வஜ்ரதந்தத்தை துதிசுழற்றிப்பற்றித் தூக்கி பக்கவாட்டில் அறைந்து காலால் மிதித்து அதன் கழுத்தை முறித்தது. வெற்றிக்குரலுடன் அது திரும்பிய கணம் பகதத்தரின் அடிபட்டு இடப்பாதி செயலற்ற நிலையில் கடோத்கஜன் அதன் முன் விழுந்தார். உடலால் அவரை பீமசேனர் என எண்ணிய சுப்ரதீகம் கொம்புதாழ்த்தி அவரை கொல்ல அணுகியது.

அக்கணம் பாய்ந்து வந்த பீமசேனர் கடோத்கஜனை அள்ளிச் சுழற்றி தோளில் இட்டுக்கொண்டு தீர்க்கநாசன் என்னும் பெருங்களிறின் கால்களுக்குக் கீழே புகுந்து அப்பால் சென்றுவிட்டார். தீர்க்கநாசன் படைகளில் பட்டறிவுகொண்ட முதுகளிறு. உடலெங்கும் கவசங்கள் அணிந்திருந்த அது தன்னை நோக்கி வந்த சுப்ரதீகத்தின் கால்களில் தன் துதிக்கையால் ஓங்கி அறைந்தது. விலாவறைய விழுந்து சுப்ரதீகம் ஓலமிட்டது. ஆனால் தீர்க்கநாசன் துதிக்கை சுழற்றி அதை கொல்ல வருவதற்குள் அதன் காதுக்குப் பின்னால் பகதத்தரின் வேல் பாய்ந்தது. அலறியபடி தீர்க்கநாசன் சுப்ரதீகத்தின் மேல் விழுந்தது.

தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்த சுப்ரதீகம் தீர்க்கநாசனின் காதுக்குப் பின் பாய்ந்திருந்த வேலில் மேலும் ஓங்கி அறைந்து அதை ஆழப்பதித்துவிட்டு துதிக்கை சுழற்றி வெற்றிக்கூச்சலிட்டது. அங்கிருந்த பிரக்ஜ்யோதிஷத்தின் களிறுகள் அனைத்தும் அவ்வோசையைக் கேட்டு துதிக்கைகளைச் சுழற்றித் தூக்கி பிளிறின. பிரக்ஜ்யோதிஷத்தின் படைகள் உடன் சேர்ந்து வெற்றிக்குரலெழுப்பின. அது கௌரவர்களை மேலும் ஊக்கம் கொள்ளச் செய்தது. பாண்டவப் படையினர் பீமசேனரின் உதவிக்கு பெருகிவந்தனர். போர் விசைமிகுந்து மேலும் நிகழ்ந்தது.

அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது யானைகளும் மானுடரும் இணைந்தாடிய போர். வங்கத்தினர் யானைப்போரில் வல்லவர்கள். யானைகளை ஏவியும் புண்படுத்தித் துரத்திவிட்டும் ஒருவரை ஒருவர் தாக்கினர். வில்லில் இருந்து எழுந்த அம்புகள்போல யானைகள் களத்தில் பிளிறியபடி பாய்ந்தன. அவற்றை யானைகளை ஏவி தடுத்தனர். யானைகளிலிருந்து ஒழிந்து யானைகளுக்குப் பின்னால் மறைந்துகொண்டார்கள். யானைகளின் கால்களுக்குக் கீழே பதுங்கி யானையையே கேடயமாக்கி எதிரிகளை நோக்கி சென்றனர். யானை உருவாக்கிய வழித்தடத்தில் நின்று போரிட்டு யானைகொண்டு மறைத்து பின்னகர்ந்தனர்.

யானைப்போர் கரிய நீரின் அலைச்சுழிப்புபோல் தெரிகிறது. யானைகள் யானைகளின் உடலை நன்கறிந்தவை. ஒன்றுடன் ஒன்று வெறிகொண்டு பொருதும் யானைகளின் துதிக்கையில் ஆணவம் நெளிகிறது. விடைத்த விரியிலைச் செவிகளில் அச்சம் தெரிகிறது. கொம்புகளில் வஞ்சம். விழிகளின் ஆழத்து மின்னிப்பில் திகைப்பு. அரசே, அவற்றின் பெருகிய உடலின் அலைகளுக்குள் அவை அள்ளியுண்ட உணவின் மதம். அவற்றிலெழுகிறது ஒவ்வொரு விலங்கிலும் மதமென எழும் காட்டின் வெறிக்களிப்பு.

ஆனால் இங்கிருந்து நோக்குகையில் அவற்றின் குறுவால்களில் நெளிகின்றன யானைக்குழவிகள். அவை சேற்றுவெளியில் முட்டி விளையாடுகின்றன என்று தோன்றும். இதோ போர்முடிந்ததும் அவை துதிக்கை தழுவியபடி நீராடச்செல்லவிருக்கின்றன என்று எண்ணுவோம். யானையில் வால் மட்டும் வளராது போனதென்ன? என்றென்றும் எவ்வளவு பெருத்தாலும் அதை மதலையென நிறுத்த விரும்பிய காட்டின் வாஞ்சையா அது? கானிருளின் குழவிகள் இக்களத்தில் ஏன் போரிட்டு மடியவேண்டும்? அப்பால் பசுமை இருண்டு நடுங்கிச் செயலற்று நின்றிருக்கும் மரங்களாலான காடு குறுங்காற்றால் நெடுமூச்செறிந்துகொள்கிறதா என்ன?

வெட்டுண்டும் அம்புபட்டும் கதையால் அறைபட்டு மத்தகம் பிளந்தும் யானைகள் சரிந்தன. சரிந்த யானைகள் மேல் மேலும் யானைகள் விழுந்து குன்றுகளென்றாயின. பகதத்தரும் பீமசேனரும் கதைகோத்தனர். கடோத்கஜனை கௌரவர்கள் துச்சலனும் துர்மதனும் தடுத்தனர். அக்கணம் சங்கொலியுடன் அங்கே எழுந்த துரியோதனர் அவரை தானே எதிர்கொண்டார். அவர்களிருவரும் பாய்ந்தும் எழுந்தகன்றும் அமர்ந்தெழுந்து பாய்ந்தும் அறைந்துவிழுந்து சுழன்றெழுந்து மீண்டும் அறைந்தும் போரிட்டனர்.

அரசே, சற்றுமுன் நிகழ்ந்தவை அனைத்தும் அவர்களிடமிருந்து மறைந்துவிட்டிருக்கின்றன. அடுத்த கணம் என்ன நிகழவிருக்கிறதென்றும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. அக்கணத்தில் மட்டுமே வாழும் வாழ்க்கையின் மிகச் சிறந்த வடிவம் போர் மட்டுமே. முந்தைய கணமும் அடுத்த கணமும் இறப்பு என்கையில் வாழ்க்கை அணுவணுவாக விரிகிறது. அங்கே ஓர் உள்ளத்தில் நிகழும் எண்ணங்களை எவரேனும் அளந்து கூறிவிடமுடியுமா? அவை கணத்திற்கு கோடி. உள்ளம் எத்தனை வடிவங்களில் தன்னை மாற்றிக்கொள்ளும் வல்லமைகொண்டது! எவ்வளவு துண்டுகளாக பிரிந்து ஒன்றையொன்று அறியாமலும் ஒன்றையொன்று நோக்கியும் தனித்தனியாக இயங்கும் சூழ்ச்சி அறிந்தது! அங்கு களம் நின்றிருக்கும் பல்லாயிரம் உள்ளங்களில் நிகழும் பல்லாயிரம் கோடி எண்ணங்களாக பிரம்மம் தன் அலகின்மையை மீண்டும் நிகழ்த்தி நோக்கிக்கொள்கிறது போலும்.

சஞ்சயன் இரு விழிகள் மேல் பதிந்த நான்கு விழிகளால் நோக்கு பெருகி ஒவ்வொன்றையும் தொட்டும் அனைத்தையும் தொகுத்தும் குருக்ஷேத்ரப் பெருங்களத்தை நோக்கி சொல்பொழிந்துகொண்டிருந்தான். “கௌரவர்களிடம் என்ன நிகழ்ந்ததென்று தெரியவில்லை. அவர்கள் இதுவரை உள்ளூர சற்று அஞ்சிக்கொண்டிருந்தனர். அந்த அச்சத்திலிருந்து எதனாலோ அவர்கள் விடுபட்டனர். தளைச்சரடுகள் ஒவ்வொன்றாக அறுபட்டு கைகளிலும் கால்களிலும் நெஞ்சிலும் விடுதலையை உணர்ந்தனர். வீறிட்டுக்கூவியபடி கதைகளை சுழற்றிக்கொண்டு அவர்கள் களமெழுந்தனர்.”

தன்னுயிர் பிரிவதைப்பற்றிய அச்சமல்ல அது. தங்களில் ஒருவர் வீழ்வதைப்பற்றிய அச்சம். அது இரும்புக்குண்டுபோல் அவர்களின் கால்களில் தடுக்கியது. அவர்கள் அத்தனை எளிதாக கொல்லப்பட அதுவே வழிவகுத்தது. அந்த அச்சத்தை வெல்ல அவர்கள் மிகையாக வெறியூட்டிக்கொண்டனர். அவ்வெறியில் விழிசெவி துலங்காது முன்னால் பாய்ந்தனர். அதனாலேயே அம்புகள் முன் சென்று நின்று தலைகொடுத்தனர்.

கொக்கிக்கம்பிகளில் இழுத்தெடுக்கப்பட்ட கௌரவர்களின் உடல்களை காணும்போதெல்லாம் அவர்கள் அகம் துடித்தது. அந்தக் கொக்கி தசையில் சிக்கி இழுபடுவதுபோல் முகம்சுளித்து உடல்துள்ளினர். உடல்களைக் கண்டவர்கள் பாறையில் தலையுடைத்துக்கொள்ள வெறியெழுந்தவர்களாக எழுந்து பாய்ந்தனர். கதையால் நெஞ்சுடைந்து களம்வீழ்கையில் அவர்கள் உரியது நிகழ்ந்தது என்னும் நிறைவை அடைந்தனர். அவர்களின் இறந்த முகங்களிலெல்லாம் புன்னகை எஞ்சியிருந்தது. அவர்களின் கைகள் முழுமையாக விரிந்து அனைத்துப் பிடிகளையும் விட்டிருந்தன.

அரசே, அக்களத்தில் இறந்தவர்கள் அனைவரும் எதையேனும் பற்றியிருந்தனர். படைக்கலங்களை, தங்கள் ஆடையை, அல்லது அருகிருக்கும் உடைந்த தேர்த்துண்டுகளை. பலர் உடனிறந்தவர்களின் கைகளையோ கால்களையோ பிடித்திருந்தனர். நிலத்தை அள்ளிப்பற்றி விழுந்தவர்களும் உண்டு. அரிதாகவே இரு கைகளும் விரல்விரியவிட்டுக் கிடந்தவர்கள் இருந்தனர். அவர்கள் அனைவர் முகங்களிலும் அந்தப் புன்னகை இருந்தது. அது தார்த்தராஷ்டிரர் அனைவரிடமும் இருந்தது என்பதை அங்கே படையினர் கண்டனர். கௌரவப் படைப்பிரிவுகளில் அதைப்பற்றி பேசி வியந்துகொண்டனர்.

கௌரவர்கள் இன்று ஏன் அச்சமிழந்தனர்? இன்றும் அதோ இறந்த கௌரவர்களின் உடல்களை வண்டிகளில் அடுக்கி கொண்டுசெல்கிறார்கள். இன்றும் துரியோதனரும் துச்சாதனரும் பெருந்துயரால் எடைமிகுந்த உடலுடன், தள்ளாடும் கால்களுடன், விழிநீர் வழியும் முகத்துடன் தேர்த்தட்டில் நின்றிருக்கிறார்கள். வீழ்ந்தவர்களின் பெயர்சொல்லி முழவுகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ”கௌரவர்கள் விண்புகுக!” என படைவீரர் வாள்களையும் வேல்களையும் தூக்கி வாழ்த்தொலி எழுப்புகிறார்கள்.

ஏதோ நிகழ்ந்தது. என்னவென்று அறியமுடியாத ஒன்று. அவர்கள் அனைவரிலும் அது ஒரே தருணத்தில் பரவியது. அவர்களின் முகங்கள் மலர்ந்தன. உடல்கள் கொந்தளித்தன. ”வெற்றி! வெற்றி! வெற்றி!” என்று கூச்சலிட்டபடி அவர்கள் வில்களையும் வேல்களையும் கதாயுதங்களையும் எடுத்துக்கொண்டு படைமுனைக்கு சென்றார்கள். அங்கே ஆமையின் ஓட்டுக்காப்பு பல இடங்களில் உடைந்திருந்தது. ஆமையால் நாற்கரம் சிதைந்து பொருளில்லாத வளையமாக ஆகி ஆமைமேல் அலையடித்துக்கொண்டிருந்தது.

கௌரவர்கள் பீமசேனரை சூழ்ந்துகொண்டார்கள். அவர்களின் அம்புகள் பீமனை அறைந்து அப்பாலிட்டன. அவருடைய கவசங்கள் உடைந்தன. தொடையிலும் விலாவிலும் அம்புகள் பாய்ந்தன. அவர் அவர்கள் மாறிவந்திருப்பதை அப்போதே புரிந்துகொண்டார். அவருடைய கையசைவுக்கேற்ப கொடிகளும் முழவுகளும் ஆணையிட்டன. சுருதகீர்த்தியும் சுருதசேனரும் சதானீகரும் சுதசோமரும் சர்வதரும் அம்புகளை தொடுத்தபடி வந்து கௌரவர்களை எதிர்த்தனர். கௌரவர்கள் பின்னுச்சிப் பொழுதின் மெல்லிய ஒளியில் பொன்னெழில் கொண்டிருப்பதை

அவர்கள் கண்டார்கள். அவர்களின் விழிகளுடன் கைகள் ஒத்திசைந்தன. அவர்களின் அம்புகள் திசையழியவில்லை.

தாம்ரலிப்தியின் படைத்தலைவன் சங்கஹஸ்தனை நிஷங்கியின் அம்பு வீழ்த்தியது. விரஜஸால் தித்திரநாட்டு இளவரசர்கள் சங்குவும் சுதாகரனும் கொல்லப்பட்டார்கள். திருதரதாசிரயர் தண்டகநாட்டு இளவரசர்களான ஆகுகனையும் அஜயனையும் ஆர்ஜவனையும் கொன்று வீழ்த்தினார். கௌரவர்களான காஞ்சனதுவஜரும் சுபாகுவும் துர்பிரதர்ஷணரும் திருதக்ஷத்ரரும் இணைந்து சர்வதரையும் சதானீகரையும் அம்புகளால் அறைந்து பின்செலுத்தினர். கௌரவ வீரர்களாகிய நிஷங்கியும் துச்சலனும் துச்சகனும் இணைந்து சுருதகீர்த்தியை அறைந்து தேரிலிருந்து தெறிக்கச்செய்தார்கள்.

பீமனை கௌரவர்கள் மேலும் மேலும் பின்னடையச் செய்தார்கள். அவருடைய கவசங்கள் முற்றாகவே உடைந்து விழுந்தன. குருதிவழியும் உடலுடன் தேரிலிருந்து பாய்ந்து படைகள் நடுவே மறைந்த பீமசேனரை நோக்கி கௌரவர்களின் அம்புகள் சீறிவந்தன. பாண்டவர்களின் படைகளிலிருந்து வில்லவர்கள் கௌரவ அம்புகளால் சரிந்துகொண்டே இருந்தார்கள். தசார்ணத்தின் இளவரசர்கள் ஊர்ஜனும் உத்கீதனும் வீழ்ந்தனர். படாச்சார அரசர் சூரர் தன் மைந்தர் சுதீபனுடன் களம்பட்டார். சர்வதர் கவசம் உடைந்து நெஞ்சில் அம்புபட்டு தேரில் வீழ அவரை பின்கொண்டுசென்றான் தேர்ப்பாகன். சுருதசேனரின் தோளில் அம்புகள் தைத்தன. அவரை காக்கும்பொருட்டு சென்ற சதானீகரும் தேர்த்தட்டில் அம்புபட்டு வீழ்ந்தார்.

பாண்டியப் படையும் பிஷச்சர்களின் படையுமே கௌரவர்களை எதிர்கொண்டு நின்றிருந்தன. பிஷச்சர்களின் அரசர் கமலநாபர் வீழ்ந்ததும் அவர்களும் பின்னடையலாயினர். அப்போது பின்னணியிலிருந்து புரவிகளின் கனைப்போசை கேட்டது. உரசி பழுக்கச்செய்யப்பட்ட அம்புகளால் மலவாயில் சூடுவைக்கப்பட்ட புரவிகள் தறிகெட்டு கனைத்தபடி பாய்ந்து களத்தில் தெறித்துச் சிதறிப்பரந்தன. அவற்றிலொன்றின்மேல் காலூன்றி பீமன் ஏவப்பட்ட அம்புபோல களத்திற்கு வந்தார். அவ்விசையிலேயே விருந்தாரகனை தலையை அறைந்து கொன்றார். நிஷங்கியும் விரஜஸும் மறுகணமே களம்பட்டார்கள்.

சிதறிப்பரவிய புரவிகளில் சர்வதரும் சுதசோமரும் எழுந்துவந்தனர். அவை ஒன்றுடன் ஒன்று முட்டித்ததும்பி துள்ளி அகன்று காலுதறிச் சரிந்து உருண்டு எழுந்து கனைத்து பிடரி சிலிர்த்துப் பாய்ந்து அம்புபட்டுச் சரிந்து துடித்தெழுந்து மீண்டும் சரிந்து துள்ளி தசைக்குவியல்களென அதிர்ந்த கொப்பளிப்பின் மேல் அவர்கள் அலைபாயும் புதர்ப்பரப்பின் மேல் சிட்டுகளும் வண்ணத்துப்பூச்சிகளும்போல் துள்ளி அலைந்தனர். எதிர்பாராத இடங்களில் தோன்றி கௌரவர்களை அறைந்து வீழ்த்தினர். சர்வதர் கௌரவ மைந்தர்களாகிய கௌஷிகியையும் கோமதரையும் சுமந்தரையும் வீழ்த்தினார். சுதசோமர் கௌரவ மைந்தர்களாகிய ஹிமரையும் பத்மரையும் ஜலசாயியையும் பத்ரசாயியையும் கொன்றார்.

பீமனின் கையிலிருந்த கொக்கிக்கயிறு வந்து காஞ்சனதுவஜரை இழுத்து சென்றது. அவர் பீமசேனரின் காலடியில் சென்று விழுந்து அவர் கதையால் தலையுடந்து குதிரைகளின் குளம்புகளுக்குக் கீழே விழுந்தார். துர்பிரதர்ஷணரும் திருதக்ஷத்ரரும் பீமசேனரின் பெருவேலால் நெஞ்சு துளைக்கப்பட்டு தேர்த்தட்டிலிருந்து விழுந்தார்கள். பீமசேனர் தன் தோள்களை ஓங்கி அறைந்துகொண்டு உரக்க நகைத்து ”எழுக! கௌரவர்கள் எழுக! இன்றைய வேட்டை எஞ்சியிருக்கிறது!” என்று கூவினார். அவரைச் சூழ்ந்து சிறகுகள் அலையப் பறந்த நாற்பத்தொன்பது

மருத்துக்கள் தங்கள் கைகளிலிருந்த முழவுகளை முழக்கி ”எழுக! எதிர்க்கவிருப்போர் எழுக!” என்று கூச்சலிட்டனர்.

திருதராஷ்டிரர் திகைத்து ”என்ன சொல்கிறாய், அறிவிலி?” என்றார். சஞ்சயன் கனவிலோ கள்மயக்கிலோ இருப்பது போலிருந்தான். ”தட்சப்பிரஜாபதியின் மகளும் தர்மதேவனின் மனைவியுமான மருத்வதியின் மைந்தர்கள் அவர்கள். காற்றுகளின் மைந்தனைத் துணைக்க அவர்கள் எழுந்திருக்கிறார்கள். அவர்களால் வழிநடத்தப்படும் முந்நூற்றறுபது மருத்துக்களின் படைகள் குருக்ஷேத்ரத்தை நிறைத்து கொப்பளிக்கின்றன” என்றான். ”என்ன சொல்கிறாய்? மூடா! நீ எதை பார்க்கிறாய்?” என்று திருதராஷ்டிரர் கூவினார்.

சஞ்சயன் வெறிகொண்டவன்போல் சொன்னான். ”அதோ மருத்துக்கள்! நீர்வண்ணமும் வெள்ளிவண்ணமும் பொன்வண்ணமும் கொண்ட சிறகுகள் அலைப்பவை. கூரிய அலகுகொண்ட பறவைகள் போன்றவர்கள் சிலர். பறக்கும் புரவிகள் போன்றவர்கள் சிலர். சிலர் வண்டுகள். சிலர் தும்பிகள். அரசே, சிலர் கூரிய நோக்கு கொண்ட கரிய வௌவால்கள். அதோ சுழன்றடிக்கும் பிரவாகன், சுழிக்கும் ஆவகன், அலைகொள்ளும் உத்வகன், நிலைகொள்ளும் சம்வகன், இரண்டாகப் பிளந்த விவகன், கூரிய பர்வகன், நீரை அள்ளிச்செல்லும் வாககன், மூலையை காக்கும் இஷான்கிருத், தழலுடன் விளையாடும் துனயன், புழுதியள்ளிச் சுழற்றும் ரிஷதன்ஷ், கூச்சலிடும் தூதயன், ஓங்கியறைந்து ஓலமிடும் பரீஜயன்.”

“அதோ வருபவன் மரங்களை அள்ளிச்சுழற்றும் மகிஷாசன், இலைகளை அள்ளிக்கூட்டும் சுதானவன், மின்னலை சூடிக்கொண்ட ஆஃப்யவன், பொன்னிறமான சித்ரஃபானவன், ஊளையிடும் மஞ்சினன், அறைகளுக்குள் சுழலும் ஸ்வத்வாசன், எழுந்தமையும் ரகுஷ்யாத், மலைகளை தழுவிச்சுழலும் கிரீசன், பாறைகளை முட்டி உருட்டும் ஹஸ்தின், மான்களைப்போல் காட்டுக்குள் ஓடும் மிருகைவன், ஒளிகொண்ட பிரசேதஸ், நடுங்கச்செய்யும் குளிர்கொண்ட சுபிஷ், உலுக்கும் சபத், முகில்களை சுமந்துசெல்லும் அஹிமான்யவன், வேள்வித்தீயை வளர்க்கும் ருஷ்திஃபி, வேள்விப்புகையை பரப்பும் பிருஷ்திஃபி, விண்ணளாவ விரியும் விஸ்வதேவன், சினம்கொண்ட ருத்ரஸ்யன், அனைத்தையும் பிளக்கும் யுவனன், பசிகொண்ட ஆபோக்யன். அவர்கள் சாட்டைகளை படைக்கலங்களாக கொண்டிருக்கிறார்கள். அவற்றை சுழற்றிச்சுழற்றி வீசியறைந்து போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.”

“அதோ வருபவன் புரவிகளை ஆளும் அதிக்ரேவன், சிம்மங்களின் பிடரிகளில் திகழும் அஜ்ரன், தழலென ஒலிக்கும் ருத்ரன், சந்திரசூரியர்களை நடத்தும் விவாக்ஷு, அலையடித்து விளையாடும் ருஷ்தயன், எதிர்பாராமல் வந்தறையும் சித்ரேயன், அடுமனையில் அனலோம்பும் நரன், உலைகளில் தங்கத்தை ஊதி சிவக்கச்செய்யும் அஜ்ஜோஃபி, நெஞ்சில் பொன்னணிந்த வக்ஷஸி, விண்மீன்களின் ஒளியை அதிரச்செய்யும் திவன், ஒவ்வொன்றையும் தொட்டெண்ணி காலம் சமைக்கும் நிமிமுக்ஷு, வேள்விநிறைவு செய்யும் ஹிரண்யேயன்” என்று சஞ்சயன் கூவினான். “அவர்களுடன் இணைந்துள்ளனர் மூச்சுவடிவ மருத்துக்கள். விழும் அபானன், எழும் உதானன், நிலைகொள்ளும் சமானன், அவர்கள் மேல் ஏறிய பிராணன். அங்கே புரவிக்கால்களில், யானைச்செவிகளில், அம்புச்சிறகுகளில் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.”

அவர்களை எதிர்த்துப் போரிட வந்துள்ளனர் மூன்று பெருந்தழல்கள். காற்றை ஊர்தியாகக்கொண்டு எழும் சூசி இளநீல நிறமானவன். விண்ணிலெழும் பாவகன் வெண்ணிறம் கொண்டவன். அன்னத்திலெழும் பவமானன் செந்நிறத்தோன்.

அவர்கள் ஆயிரம் பல்லாயிரமென கணம்தோறும் பெருகும் சிறகு கொண்டவர்கள். அம்புமுனைகளில் மின்னுகிறார்கள். தேர்ச்சகடங்களில் பொறிகளாகி தெறிக்கிறார்கள். கேடயங்களை வெம்மைகொள்ளச் செய்கிறார்கள்.

அங்கிருக்கிறார்கள் அனலோனின் அனைத்துத் தோற்றங்களும். விண்நிறைக்கும் அக்னி, பசிவடிவான வைஸ்வாநரன், காற்றிலூரும் வஹ்னி, ஆகுதிகளை வாங்கும் விதிஹோத்ரன், பொன்னிலுறையும் தனஞ்சயன், நீரிலுறையும் கிருபீதயோனி, மின்னுவனவற்றில் எழும் ஜ்வலனன், அறிவிலெழும் ஜாதவேதன், மூச்சிலுறையும் தனுனபாத், கனலும் பார்ஹி, தளிர்களில் வாழும் சுஷமன், கரும்புகை வடிவான கிருஷ்ணவர்த்தன், தழலை முடியெனக்கொண்ட சோசிகேசன், புலரியிலெழும் உஷர்ஃபு, அனைத்தையும் அள்ளிப்பற்றும் அஸ்ரஸ்யன், அனைத்தையும் ஒளிரச்செய்யும் பிருஹத்பானு.

காற்றுத்தெய்வங்களை அனல்தேவர்கள் தாக்குகிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் ஆள்கிறார்கள். முடிவிலாதது என நிகழ்ந்துகொண்டிருக்கிறது அந்தப் போர். அவர்களின் நடுவே ஓடித்தவிக்கிறான் காற்றுகளுக்கும் அனல்களுக்கும் அன்னைவடிவமான மாதரிஸ்வான். அங்கிருக்கிறார்கள் அனைத்து தேவர்களும். அருள்வடிவான அஸ்வினிதேவர்கள் இரட்டைப்புரவிகளாக களம்வந்துள்ளனர்.

அரசே, அங்கெழுந்துள்ளனர் பதினொரு ருத்ரர்கள். அனலுருவான அஜர், அடிமரமென ஒற்றைக்காலூன்றி எழுந்த ஏகபாதர், நான்கு தலைகள்கொண்ட அக்னிபுத்திரர், எரிகுளமென விழியெழுந்த விரூபாட்சர், மலைமுடியென ஓங்கிய ரைவதர், கொலைக்கரம் நூறுகொண்ட ஹரர், பன்னிரு முகம் எழுந்த பகுரூபர், மூன்றுவிழியரான த்ரியம்பகர், காட்டாளத் தோற்றம்கொண்ட அசுரேசர், பொன்னொளிகொண்ட சாவித்ரர், மின்படைகொண்ட சயந்தர். அவர்களின் சினத்தால் அதிர்ந்துகொண்டிருக்கிறது குருக்ஷேத்ரத்தின் வான்வெளி.

அரசே, அங்கே கதையும் மின்கொடியும் ஏந்திய மித்ரனை கண்டேன். பறக்கும் முதலைமேல் பாசக்கயிற்றுடன் வருணன். மானுட உருக்கொண்ட வேதாளத்தின் மேல் கதாயுதத்துடன் குற்றுருவனாகிய குபேரன், எருமைமீதூரும் எமன். தழலெனப் பறக்கும் முடிக்கற்றைகள் கொண்ட செவ்வாட்டின் மீது அனலோன், மின்சுழலை படைக்கலமாகக் கொண்ட நிருதி. பொற்குளம்புள்ள கலைமான் மீதூரும் வாயு, வெண்முகில்மேல் தேயுஸ், வெண்களிறு வடிவில் பிருத்வி, ஆமையின்மேல் ஊரும் ஆபன், அரசே, அங்கே அத்தனை தெய்வங்களும் போரிட்டுக்கொண்டிருக்கின்றன.

எட்டு திசையானைகள் களத்திலுள்ளன. ஐராவதம், புண்டரீகன், வாமனன், குமுதன், அஞ்சனன், புஷ்பதந்தன், சார்வபௌமன், சம்பிரதீகன். முகில்குவைகளைப்போல எடையற்றவை அவை. ஆனால் துதிக்கையால் அறைகையில் மட்டும் மலைபெயரும் எடைகொண்டவை. திசைகளை நிறைத்துச் சுழல்கின்றன. மத்தகங்கள் முட்டிப்போரிடுகின்றன. அவற்றின் வெண்கொம்புகள் குருதிகொண்டு சிவந்துள்ளன.

அதிதியின் மைந்தர்களான ஆதித்யர்கள் அங்குள்ளனர். தாதா, மித்ரன், ஆரியமா, ருத்ரன், வருணன், சூரியன், பகன், விவஸ்வான், பூஷா, சவிதா, த்வஷ்டா, விஷ்ணு ஆகியோர் ஒளிகொண்டு நின்றிருக்கின்றனர். அவர்களுக்கு தங்கள் ஒளிக்கதிர்களே படைக்கலங்கள். அரசே, அவர்களுக்கு உடலே விழியுமாகும். திதியின் மைந்தர்களாகிய தைத்யர்கள் அங்குள்ளனர். ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷன் இருவரும் போரிடுகின்றனர். மைந்தர்கள் அனுஹ்ளதன், ஹ்ளதன் ஆகியோர் உடனுள்ளனர். சூரசேனன், சிம்மவக்த்ரன், வாயுவேகன், மனோதரன், பானுகோபன்,

வஜ்ரமுகன், அக்னிமுகன், வஜ்ரபாகு, ஹிரண்யன், சம்பரன், சகுனி, திரிமூர்த்தா, சங்கு, அஸ்வன் என அசுரர்களின் முடிவிலா நிரை நின்றிருக்கிறது.

எட்டு வசுக்களான தரனும் துருவனும் சோமனும் அனிலனும் அனலனும் ஆபனும் பிரபாசனும் பிரத்தியூடனும் தங்கள் படைக்கலங்களுடன் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் அவர்களின் மைந்தர்களும் களம் நின்றிருக்கிறார்கள். வைதண்டன், சிரமன், சாந்தன், த்வனி ஆகியோர் தங்கள் தந்தையாகிய ஆபனுக்கு உடன்நின்றுள்ளனர். துருவனுடன் மைந்தனாகிய காலன் நின்றுள்ளான். சோமனுடன் அவன் மைந்தன் வர்ச்சஸ் நின்றிருக்கிறான். அவன் மைந்தன் தர்மனுடன் அவன் மைந்தர்களாகிய திரவிணன், ஹுதஹவிவயஹன், சிரிரன், பிராணன், வருணன் ஆகியோர் படைக்கலமேந்தி போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். அனிலனுடன் மனோஜவன், அவிக்ஞாதகதி ஆகியோர் நின்றிருக்கிறார்கள். அனலனின் மைந்தன் குமாரனும் அவன் மைந்தர்களான சாகன், விசாகன், நைகமேயன் ஆகியோர் படைகொண்டிருக்கிறார்கள். பிரபாசனுடன் நின்றிருப்பவர் விஸ்வகர்மன். அவர் மைந்தர்களான அஜைகபாத், அவிர்புத்தன்யன், த்வஷ்டா ஆகியோர் அவருடனிருக்கிறார்கள்.

அங்கெழுந்துள்ளனர் பெருநாகங்கள். வாசுகி, தட்சகன், கார்க்கோடகன், சங்கன், குளிகன், பத்மன், மகாபத்மன், அனந்தன். அவர்களுடன் இணைந்து எழுந்துள்ளது பாதாளநாகங்களின் பெரும்படை. வாசுகியின் மைந்தர்களான கோடிசன், மானசன், பூர்ணன், சலன், பாலன், ஹலீமகன், பிச்சலன், கௌணபன், சக்ரன், காலவேகன், பிரகாலனன், ஹிரண்யபாகு, சரணன், கக்ஷகன், காலதந்தகன் ஆகியோர். விண்ணில் நீரிலென நீந்தும் ஆற்றல்கொண்ட கரிய பேருடலர்கள் அவர்கள்.

தட்சகனின் மைந்தர்களான புச்சாண்டகன், மண்டலகன், பிண்டசேக்தா, ரபேணகன், உச்சோசிகன், சரபன், பங்கன், பில்வதேஜஸ், விரோஹணன், சிலி, சலகரன், மூகன், சுகுமாரன், பிரவேபனன், முத்கரன், சிசுரோமன், சுரோமன், மஹாஹனு ஆகியோர் அதோ மழைமுகில்களென சூழ்ந்துள்ளனர். கீழே ஐராவதனின் மைந்தர்களான பாராவதன், பாரிஜாதன், பாண்டரன், ஹரிணன், கிருசன், விஹங்கன், சரபன், மேதன், பிரமோதன், சௌஹதாபனன் ஆகியோர் சேற்றுப்பரப்பென நிலம் நிறைத்துள்ளனர்.

கௌரவ்ய குலத்தில் பிறந்த பாம்புகளாகிய ஏரகன், குண்டலன், வேணி, வேணிஸ்கந்தன், குமாரகன், பாகுகன், சிருங்கபேரன், துர்த்தகன், பிராதரன், அஸ்தகன் ஆகியோர் பிற வடிவங்களின் நிழல்களென நெளிந்தனர். திருதராஷ்டிர குலத்தில் பிறந்த சங்குகர்ணன், பிடரகன், குடாரமுகன், சுகணன், சேசகன், பூர்ணாங்கதன், பூர்ணமுகன், பிரஹாசன், சகுனி, தரி, அமாஹடன், குமடகன், சுஷேணன், அவியயன், பைரவன், முண்டவேதாங்கன், பிசங்கன், உத்ரபாரகன், ரிஷபன், வேகவத், பிண்டாரகன், ரக்தாங்கன், சர்வசாரங்கன், சம்ருத்தன், படவாசன், வராஹகன், வீரணகன், சுசித்ரன், சித்ரவேதிகன், பராசரன், தருணகன், மணிஸ்கந்தன், ஆருணி என்னும் நாகங்கள் பிற நாகங்களின் நிழல்களாகி அங்கே நிறைந்திருந்தன.

இவையனைத்தையும் ஒரு பக்கமென்றாக்கி பேருருக்கொண்டு களம்நிறைந்திருக்கின்றனர் அன்னையர். கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதை, சிந்து, காவேரி என நூற்றெட்டு நீரன்னையர். துளசி, மானசி, தேவசேனை, மங்கள சண்டிகை, தரித்ரி என்னும் தேவியர். பலிகொள்ளும் ஸ்வாகா, ஏற்றுக்கொள்ளும் தட்சிணை, நெறிவடிவான தீக்ஷை, உண்ணும் ஸ்வாதா, காற்றை ஆளும் ஸ்வஸ்தி, வளம்நிறைக்கும் புஷ்டி, நஞ்சுவடிவான துஷ்டி, ஈசானத்தை ஆளும் ஸம்பத்தி,

நாகினியாகிய த்ருதி, அனலையான சதி, அளிவடிவான தயை, நிலைகொள்பவளான பிரதிஷ்டை, தவவடிவான ஸித்தி, அருள்வடிவான கீர்த்தி, செயல்கொண்ட கிரியை, விழிமயக்கும் மித்யை, அமைதிவடிவாகிய சாந்தி, இளமகளான லஜ்ஜை ஆகியோரை அங்கே போர்க்கோலத்தில் காண்கிறேன்.

மெய்வடிவான புத்தி, மெய்கடந்த மேதா, விடுதலையளிக்கும் திருதி, விழிநிறை அழகுமகளான மூர்த்தி, அனைத்து மங்கலங்களும் கொண்ட ஸ்ரீ, துயிலரசி நித்ரை, இருள்வடிவான ராத்ரி, செம்மை சூடிய சந்தியை, வெள்ளிப்பெருக்கான திவை, பசிவடிவான ஜடரை, விடாய்வடிவான திரிஷை, நீர்வடிவான பிபஸை, ஒளிகொண்ட பிரபை, சுடரில் வாழும் தாஹிகை, சாவரசி மிருத்யூ, முதுமையின் தேவியான ஜரை, குருதிவெறிகொண்ட ருத்ரி, அனைத்தையும் மறக்கச்செய்யும் விஸ்மிருதி, அனைத்தையும் விரும்பச்செய்யும் ப்ரீதி, நினைவரசி சிரத்தை, பணிவின் தேவியான பக்தி ஆகியோரும் இக்களத்தில் நின்றுள்ளனர்.

விசாலாக்ஷி, லிங்கதாரிணி, குமுதை, காமுகி, கௌதமி, காமசாரிணி, மதோல்கடை, ஜயந்தி, கௌரி, ரம்பை, கீர்த்திமதி, விஸ்வேஸ்வரி, புரூகுதை, மந்தை, ருத்ரகர்ணிகை, பத்ரை, ஜயை, மாதவி, பவானி, ருத்ராணி, காளி, மாகாளி, குமாரி, அம்பிகை, திரயம்பிகை, மங்கலை, பாடலை, நாராயணி, ஏகவீரை, சந்திரிகை, சுகந்தை, திரிசந்தி, நந்தினி, ருக்மிணி, குந்தளை, ஔஷதி, பிரசண்டை, சண்டிகை, அபயை, நிதம்பை, தாரை, புஷ்டி, கோடி, கல்யாணி என நான் நோக்குந்தோறும் சீற்றம்கொண்டு ஒளிரும் படைக்கலங்களுடன் இங்கே களம்நிற்கும் அன்னையர் பெருகிக்கொண்டே செல்கிறார்கள்.

இருளுலகை ஆளும் தெய்வங்கள் ஊடுகலந்துள்ளன அங்கே. எட்டு கால்களில் வலைவீசிப்பறக்கும் ஜாலிகர் என்னும் பெரும்பூதங்கள். கைகளோ கால்களோ உடலோ தலையோ இன்றி வயிறும் வாயும் மட்டுமேயான கபந்தர்கள். ஒற்றைவிழியில் அனலெரிய சிறகுவீசிப் பறக்கும் ஜாதுகர்கள். நண்டுகளைப்போன்ற பெருங்கொடுக்குகளுடன் அசைந்து நடக்கும் கர்கடகர்கள், தவளைகள்போல் பின்காலில் எம்பிப்பறந்து நாநீட்டி கவர்ந்துண்ணும் மாண்டூக்யர்கள். ஒற்றைக்கை மட்டுமேயான ஹஸ்தர்கள். ஒற்றைக்கால் மட்டுமேயான பாதுகர்கள். ஒற்றை நாக்கு மட்டுமேயாகி புழுவென நெளிந்து வளைத்துண்ணும் ஜிஹ்வர்கள். பல்லாயிரம் நெளியும் புழுக்களாலான உடல்கொண்ட கீடர்கள். நோக்க நோக்க பெருகுகின்றன பூதங்களும் பேயுருக்களும். அவர்களின் முழக்கங்களை விழிகளால் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

ஒன்றையொன்று விழுங்குகின்றன. ஒன்றையொன்று கொன்று வெளிவருகின்றன. ஒன்றை ஒன்று உண்ணமுயன்று முடிவிலாது சுழல்கின்றன. ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒருடலாகி போருக்கெழுகின்றன. ஒன்று கிழிந்து பலவாகிப்பெருகிச் சூழ்கின்றன. நகங்களும் பற்களும் உகிர்களும் கொம்புகளும் வால்முனைகளும் செதில்களும் படைக்கலங்களாகின்றன. கைகளும் விரல்களும் நாக்குகளும் கொல்படையாகின்றன. நோக்குகளும் ஓசைகளும் மூச்சுச்சீறல்களும்கூட கொலைக்கருவியாகின்றன. நஞ்சும் அனலும் கொண்டவை. வஞ்சப்பெருங்குரல் எழுபவை. கொலைவெறிகொண்டு கூத்தாடுபவை. குருதியுண்பவை. குருதிச்சேற்றில் திளைத்து ஆடுபவை.

அங்கே வெண்ணிறத் தேரிலெழுந்திருக்கிறான் இந்திரன். அவன் கையில் இருந்து மின்னிமின்னி அதிர்கிறது வான்படை. அவனை எதிர்த்து எழுபவன் சூரியன். அவன் தழலெழும் செந்நிறத்தேரில் அமர்ந்திருக்கிறான். சுழலும் மலர்ச்சகடத்தை படைக்கலமாக கொண்டிருக்கிறான். நாநீட்டிய காளிகைகளும், அனல்வாய்

கொண்ட பைரவிகளும், குழல்நீண்டு பறக்கும் தீர்க்கசிகைகளும் அவர்களுக்குச் சுற்றும் குருதிதேடி கூத்திடுகின்றன.

நான் எதை காண்கிறேன்? அரசே, நான் காண்பது துளியினும் துளியினும் துளி. ஒரு விதைக்குள் எழுந்த காடு இது. இத்தகைய பல்லாயிரம்கோடித் துளிகளின் விரிவென ஒரு பெருங்கடல். அக்கடலே ஒருதுளியென இன்னொரு கடல். அக்கடலை ஒரு துளியெனக்கொண்டது அப்பாலொரு கடல். கடல் கடல் கடலெனச் சென்றமையும் முடிவிலா ஆழ்கடலின் ஒரு விழித்துளியசைவு இது. ஒரு கணம் நான் இமைத்தால் அனைத்தும் மாறிவிடுகிறது. ஆதித்யகோடிகள் முட்டிச்சுழல்கின்றன. இடியிடியிடியென வெடித்துச்சிதறி அணைந்தழிகிறது ஒரு புடவி. இருளுக்குள் மின்னிப்பெருகி வெடித்துச் சிதறி உருப்பெருக்கி விழிநிறைக்கப் பரவி நின்றிருக்கிறது புதுப்புடவி ஒன்று.

நான் எதை காண்கிறேன்! அரசே, என்னை பற்றிக்கொள்க! இந்தப் பெருக்கில் உதிர்ந்து கரைந்தழிவேன். எஞ்சுவதில்லை என்னுள் ஒரு சொல்லும். நான் காண்பதென்ன? இப்பெரும் போரை நிகழ்த்தும் இந்தத் தெய்வங்களின் முடிவின்மையின் பொருளென்று எச்சொல் நின்றிருக்கும்? எச்சொல்லின் விரிவென்று இம்முடிவின்மையை எடுத்துவைப்பேன்? அரசே, என்னை பற்றிக்கொள்க! என்னை இழுத்துச்செல்கிறது பேரொழுக்கு ஒன்று. அரசே, என் உடல் வெடித்துத் திறக்கிறது. என் அணுக்கள் ஒவ்வொன்றும் உடைந்து அகல்கின்றன. இன்மையென்றாவதன் இறுதிச்சொல்லில் நின்றுள்ளேன். நான் என்ற இச்சொல்லை இறுகப்பற்றிக்கொள்கிறேன். அரசே, நான் எனும் சொல்லில் துளியிலும் துளியென எஞ்சியிருக்கிறேன். இந்த சிறுமணற்பருவில் துளிப்பொன்பூச்சென இச்சொல்லில் சற்றே பொருள் எஞ்சியிருக்கிறது. நான் எனும் சொல். நான்! ஆம், நான்!

“அரசே!” என்ற அலறலுடன் சஞ்சயன் சரிந்து திருதராஷ்டிரரின் காலடியில் விழுந்தான். அவனுடைய சொற்குமுறலை கேட்டுக்கொண்டிருந்த அவர் அசையவில்லை. அவன் உடல் அங்கே கிடந்து கைகால்கள் இழுத்து இழுத்து அதிர்ந்து புளைந்தது. வாயோரம் எச்சில்நுரை வழிய, விழிகள் ஆழிமைகளுக்குள் சிக்கிச்சரிய, உதடுகளைக் கடித்த பற்கள் குருதியெழ ஆழப்பதிந்திருக்க, தொண்டைமுழை அதிர்ந்து அதிர்ந்து அடங்க, மெல்ல சஞ்சயன் அமைந்தான். அவனை அறியாதவர் போலிருந்த திருதராஷ்டிரரின் தாடை மட்டும் அசைந்துகொண்டிருந்ததை பீதன் கண்டான்.

தேரிலேறிக்கொண்டதும் சஞ்சயன் விழித்துக்கொண்டான். “போர்முனைக்கு செல்லட்டும்! தேரை அர்ஜுனர் முன் நிறுத்துக!” என்றான். தேரோட்டி திரும்பி நோக்கியபின் புரவிகளை அதட்டினான். திருதராஷ்டிரர் “மூடா, நீ என்னருகே இருக்கிறாய்!” என்றார். “ஆம், நான் இங்கிருக்கிறேன்!” என்று அவன் சொன்னான். “ஆனால் நான் போர்க்களத்தை பார்த்துக்கொண்டிருக்கிறேன். அங்கே போர் இன்னும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது!” திருதராஷ்டிரர் “அந்திமுரசு ஒலித்துவிட்டது. நாம் திரும்பிக்கொண்டிருக்கிறோம்” என்றார். “இல்லை, அங்கே போர் நிகழ்கிறது… நான் இதோ பார்க்கிறேன்!” என்றான் சஞ்சயன்.

“தேவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். ஒளிரும் வைரமுடி அணிந்தவர்கள். வைரமென இமையா விழி ஒளிர்பவர்கள். அவர்களின் பற்களும் நகங்களும் வைரங்கள்போல் மின்னிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் கொண்டிருக்கும் படைக்கலங்களை

பார்க்கிறேன். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம். அவற்றை நான் எங்கெங்கோ கண்டிருக்கிறேன். இது மேழி அல்லவா? ஆம், அது துரட்டி. அது அரிவாள், அது கத்தி. இன்னொன்று அகப்பை. இன்னொன்று சட்டுவம். அது துடுப்பு… நாம் இங்கு புழங்கும் அத்தனை பொருட்களையும் அவர்கள் படைக்கலங்களாக ஏந்தியிருக்கிறார்கள்.”

“கிண்ணங்கள், சருவங்கள், கலங்கள், யானங்கள், குண்டான்கள். எத்தனை வகையான படைக்கருவிகள்! அவர்களின் முகங்கள் ஒன்றுபோலிருக்கின்றன. ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தோற்றம் கொண்டவர்களாகவும் தோன்றுகிறார்கள். அரசே, அவர்களை நான் முன்னரே நோக்கியிருக்கிறேன். ஒவ்வொருவரையும் முன்னரே அறிவேனா என்ன? அவர்களில் ஒருவர் என் தந்தை. அவர் முகம் மணலில் பொற்குண்டு என மின்னி விழிமாயமோ என மறைந்தது. அவர்கள் எவரெவருடையவோ முன்னோர்கள். ஓவியங்களில் கண்ட முனிவர்கள். அது பிரதீபரா? அப்பாலிருப்பவர் ஹஸ்தியா? அதற்கப்பால் யயாதி. அருகே பரதன். அவர்கள் அனைவரும் அவ்வடிவில் அங்கிருக்கிறார்களா? அவர்களிலிருந்து எழுந்து அங்கே சென்றார்களா?”

“தேவர்கள் அணிவகுக்கும் இப்போர்க்களத்திற்கு முடிவே இல்லை. கந்தர்வர்களை காண்கிறேன். அவர்கள் இசைக்கருவிகளையே போர்க்கருவிகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நூற்றெட்டு நரம்புள்ள பேரியாழ் நூற்றெட்டு அம்புகளை தொடுக்கும் நூற்றெட்டு நாண்கள் இழுத்துக்கட்டப்பட்ட வில்லென ஆனதென்ன? வேய்குழல்கள் வேல்கள். வீணைகள் விற்கள். கொம்புகள், முழவுகள், முரசுகள், துந்துபிகள், சங்குகள், மணிகள் அனைத்துமே கொலைப்படைகளென மாறிவிட்டிருக்கின்றன. விழிகள் மலர்ந்த யட்சர்கள். பறக்கும் கின்னரர்கள். ஒன்றுநூறென எண்ணியதுமே பெருகும் கிம்புருடர்கள். ஒவ்வொருவரும் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொடுங்காற்றில் பொடித்துகள்கள் என அவர்களனைவரும் பறந்தலைந்து கொந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். போராலான ஒரு பெருங்கடற்பரப்பு. போராலான பெருஞ்சுழி!”

மீண்டும் அவனுக்கு வலிப்பு ஏற்பட்டது. விழிகள் மேலே செருகிக்கொள்ள கைகால்கள் இழுத்து அதிர்ந்தன. வாயிலிருந்து நுரைவழிந்து கன்னத்தில் ஒழுகியது. அவனுடைய மூச்சு புறாவின் ஓசையென ஒலித்தது. பின்னர் விழிப்புகொண்டு “ஆ!” என்றான். “நான் பீஷ்மரை காண்கிறேன்” என்றான். “என்ன காண்கிறாய்?” என்று திருதராஷ்டிரர் கேட்டார். “அவர் களத்தில் நின்றிருக்கிறார். தன் குழலை நீண்ட தோல்நாடாவால் கட்டி தோளிலிட்டிருக்கிறார். குருதி வழிந்து உலர்ந்த தாடி திரிகளாக தொங்குகிறது. சீற்றம்கொண்டவராக அவர் போரிட்டுக்கொண்டிருக்கிறார். அஸ்மாகர்களும் குனிந்தர்களும் அவரைச் சூழ்ந்து எதிர்க்கின்றனர். குனிந்த மன்னர் அமோக்ஃபூதியின் இளையவர்களாகிய அஹோபாகுவும் விஸ்வமித்ரனும் அவர் அம்பால் வீழ்ந்தனர். அமோக்ஃபூதி அலறியபடி அவர் முன் வருகிறார். அவரை சிகராஸ்திரம் என்னும் அம்பால் பீஷ்மர் வீழ்த்தினார்.

பீஷ்மரின் வில்லில் இருந்து அனைத்துவகையான அம்புகளும் எழுந்து செல்கின்றன. பறவைக்குலங்களால் மூடப்பட்ட வான் போலிருக்கிறது அந்தப் படைவெளி. நீண்ட தண்டுகொண்ட தண்டசக்ரம் என்னும் கணைகள் சென்று அறைந்து நிலைகொள்பவை. பிளந்து செல்பவை இந்திரசக்ரம் என்னும் அம்புகள். வஜ்ரம் என்னும் கணை விம்மிச்சுடர்ந்து சென்று துளைப்பது. ஐஷீகம் சிட்டுபோன்றது. விழியறியாது வந்து விழிகொத்தி தாழ்வது. காலபாசம் அம்புடன் இணைந்த நீள்சரடு கொண்டது. தைத்தவற்றை இழுத்து எடுக்க உதவுவது. பினாகாஸ்திரம் நெளிந்தது.

நெஞ்சுள் நுழைந்தால் திரும்ப இழுத்தெடுக்க இயலாதது. கிரௌஞ்சபாணம் சிறகுகள் விரித்து மெல்ல பறந்து எழுந்து விசைகொண்டு இறங்குவது. பிரதனாஸ்திரம் பம்பரம்போல் சுழல்வது. வாருணாஸ்திரம் அலையலையென துள்ளிச்செல்வது.

அரசே, அம்புகளையே நோக்குகிறேன். அவற்றுக்கு மானுடர் ஒரு பொருட்டே அல்லவோ என ஐயுறுகிறேன். காலபாசம் தைத்ததுமே சுழற்று அங்கே சுற்றிக்கொள்கிறது. பிரம்மபாசம் அரக்குடன் இணைந்தது. தைத்த இடத்தில் உருகி இறங்குகிறது. சிகராஸ்திரம் செங்குத்தாக பீறிட்டு மேலெழுந்து அங்கே திசைதெரிந்து சரிந்திறங்குவது. பெருமுழக்கமிட்டுச் செல்கிறது கங்காளாஸ்திரம். தன் எடையாலேயே சென்றறைந்து உடைக்கிறது முசலாஸ்திரம். மண்டையோடுகளை உடைக்கும் கபாலாஸ்திரம். வளைந்த முனைகொண்ட கங்கணாஸ்திரம். சென்றபின் இலக்கைத்தேடி வழிவளைந்தும் சென்றெய்தும் மானவாஸ்திரம். நரம்புகளை அறைந்து நினைவழியச் செய்யும் மோஹாஸ்திரம். வந்தது அறியாமல் வந்து தைக்கும் சௌம்யாஸ்திரம். புலிப்பல்லென இரட்டை வளைமுனைகொண்ட தம்ஷ்ட்ராஸ்திரம். வெடித்து ஒளிவிட்டுச் செல்லும் தைஜப்பிரபாஸ்திரம்.

அம்புகள் இப்போரை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு அம்பிலும் எழுந்து செல்லும் தெய்வங்களை காண்கிறேன். அவற்றுக்கு ஒவ்வொரு வடிவம். விழிமணிமட்டுமே கொண்டவை. நகங்களைப் போன்றவை. பற்களைப் போன்றவை. சிட்டுக்களின் அலகு போன்றவை. யானைத்தந்தம் போன்றவை. அத்தெய்வங்கள் அங்கே களியாட்டமிடுகின்றன. அரசே, ஒவ்வொரு உயிரின் வடிவிலும் அங்கே தெய்வங்கள் உள்ளன. யானைகளைப் போன்ற சிறுபூச்சிகள். சிறு பூச்சிகள் போன்ற யானைகள். பறக்கும் மீன்கள். செதில் வால் சொடுக்கிச் சீறும் களிறுகள். நாமறிந்த ஒவ்வொன்றும் பிறிதொன்றாகி நின்றுள்ளன அங்கே.

அரசே, நான் பீஷ்மரைச் சூழ்ந்து பேருருக்கொண்டு நின்றிருக்கும் அறுவரை காண்கிறேன். வலக்கையில் கதாயுதமும் இடக்கையில் தாமரையும் கொண்ட தரன். ஒருவிரல் சுட்ட மறுவிரல் வளைந்து ஆமென்று அடங்க நின்றிருக்கும் துருவன். அமுதகலம் ஏந்திய சோமன். விசிறியும் வில்லும் ஏந்திய அனிலன். எரிதழல் எழுந்த வலக்கையும் முப்புரி வேல் கொண்ட இடங்கையுமாக அனலன். அலையடிக்கும் பாசக்கயிறும் வேலும் கொண்ட ஆபன். அவர்கள் அவரை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். விளையாடும் சிற்றுயிரை குனிந்து பார்க்கும் பேருருவர்கள்போல. அவர்களின் முகத்திலிருக்கும் அந்த இரக்கம் எதன்பொருட்டு?

அரசே, பீஷ்மருக்கு இருபுறமும் இருவர் நின்றிருக்கிறார்கள். அவர் வலக்கையென ஆகி இயங்கிக்கொண்டிருப்பவன் பிரத்யூஷன். செந்நிற ஒளிகொண்டவன். இடக்கையென அமைந்திருப்பவன் பிரபாசன். இளநீல நிறத்தில் மின்னுபவன். பீஷ்மர் என நின்று அப்போரை நிகழ்த்துபவர்கள் அவர்களிருவருமே. காண்டீபம் நாணொலிக்க, சங்கூதியபடி பீஷ்மரை எதிர்கொள்ள வருகிறார் பாரதர். அவருடைய தேருக்குமேல் என எழுந்து நின்றுள்ளது வெண்முகில்களிறு. அதில் மின்னல் சொடுக்கும் படைக்கலத்துடன் அமர்ந்திருப்பவன் இந்திரன், இடியோசையுடன் மின்னொளியுடன் காற்று கிழிபட திசைகள் வெடிபட அவர்களின் போர் நிகழ்ந்துகொண்டிருப்பதை காண்கிறேன்.

சஞ்சயன் விசும்பியழுதான். கைகளை விரித்து “நான் காண்பதென்ன? இந்தப் போரை நான் ஏன் காண்கிறேன்? இதிலிருந்து நான் எவ்வண்ணம் விடுபடுவேன்?” என்றான். திருதராஷ்டிரர் “மூடா, அங்கே என் மைந்தர் செய்துகொண்டிருப்பதென்ன

என்று சொல்!” என்றார். “அங்கே கரிய இருளின் திவலைகள்போல் வௌவால்களும் காகங்களும் என வடிவுகொண்டு பாதாளதெய்வங்கள் காற்றில் சுழன்று சிறகடிக்கும் ஓரிடத்தில் போரிட்டுக்கொண்டிருக்கிறார் துரியோதன மாமன்னர். அவருடைய உடல் கரிய ஒளிகொண்டிருக்கிறது. அவருடைய தேர்ச்சகடங்களை கைகளால் தாங்கியிருக்கின்றன நரிவடிவுகொண்ட இரண்டு பூதங்கள். அவருடைய தேரின்மேல் கொடியெனப் பறக்கிறது காகபூதம். அவருடைய அம்புகளை பற்றிக்கொண்டு பறந்து சென்று எதிரியின்மேல் அறைகின்றன கூருகிர்பறவைகள்.”

பாண்டவர்களின் தரப்பிலிருந்து பெரிய உழலைத்தடிகளையும் கொக்கிக்கயிறுகளையும் சுழற்றியபடி போர்க்குரலெழுப்பிக்கொண்டு வந்துகொண்டிருக்கிறார்கள் வேகவான், மகாரௌத்ரன், வித்யுத்ஜிஹ்வன், பிரமாதி என்னும் நான்கு அரக்கர்கள். தென்கிழக்கே விந்தியனின் சரிவில் விண்ணிலிருந்த தொல்லரக்கர் நகரமான மாகிஷ்மதி உடைந்து மண்ணில் சிதறிய துண்டுகளில் ஒன்றான கூர்மாவதி என்னும் நகரை ஆள்பவர்கள் அவர்கள். ஹிரண்யாக்ஷனின் குருதி எஞ்சிய தொல்லரக்கர் குடியினர். ஓங்கிய கரிய உடலும், ஒளிரும் பற்களும், சிப்பிபோல் விழிகளும், முழங்கும் முழவுக்குரலும் கொண்டவர்கள்.

அவர்களின் நகரம் மாளவ மன்னரின் எல்லைக்குட்பட்டது என்று மாளவப்படை பன்னிருமுறை அவர்களின் மேல் படைகொண்டு சென்றது. பன்னிருமுறை அவர்களின் காடுகள் தீவைத்து எரிக்கப்பட்டன. பன்னிருமுறை அவர்களின் குடிகள் முற்றழிந்தனர். வெந்த மைந்தருடன் கருகிய துணைவியருடன் அவர்கள் மேலும் மேலும் உள்காடுகளுக்குள் சென்றனர். அவர்களை மேலும் மேலுமென துரத்திவந்தது மாளவத்தின் படை. எரியுண்ட காட்டில் புகைசூழ்ந்த குகைக்குள் ஒடுங்கியிருந்த அவர்களின் தந்தை ஹிரண்யநபஸ் தன் நான்கு மைந்தரை நெஞ்சோடணைத்து போரிட்டு இறக்கும் நல்லூழ் அமைக உங்களுக்கு என்று வாழ்த்தி விழுந்துமறைந்தார்.

நான்கு உடன்பிறந்தாரும் தங்கள் குடிகளை சேர்த்துக்கட்டினர். மாளவத்தின் படைகள் எழுவதுவரை காத்திருக்கலாகாது என்று அவர்கள் அறிந்துகொண்டனர். மாளவத்தின் படைகளை கூர்நோக்க மலைமுடிகளில் பன்னிரு நோக்குமண்டபங்களை அமைத்தனர். மாளவப் படை ஐந்து விரல்களாகப் பிரிந்து நின்றிருப்பது என்றும் ஐந்தும் இணைந்து கையென்றாகும்போதே படையெடுப்பு நிகழ்கிறது என்றும் கண்டுகொண்டார்கள். அதன்பின் அவர்கள் இணைந்து வந்த மாளவப் படையை ஒருமுறைகூட எதிர்கொள்ளவில்லை. படை விலகிப்பிரிந்ததுமே மலைகளிலிருந்து இறங்கி அவர்களை தாக்கினர். படைகளின் ஊற்றுகளை அழித்தனர். களஞ்சியங்களை எரித்தனர். காவல்மாடங்களை சிதைத்தனர்.

அஞ்சிப் பின்னடைந்த மாளவம் அதன்பின் அரக்கர்நிலத்தை கைவிட்டது. தங்கள் தொல்நகரை அவர்கள் மீட்டமைத்தனர். துவாரகையுடன் வணிகப்பாதையை அமைத்துக்கொண்டனர். அவர்களின் நதிக்கரையில் படகுகளில் பொருட்களுடன் வணிகர்கள் வந்திறங்கலாயினர். துவாரகையின் அரசரை அவர்கள் தங்கள் குடித்தலைவர் என்றே எண்ணலாயினர். சம்பராசுரரும் பாணாசுரரும் அவருக்கு குருதியுறவினரானபோது அவர்களின் குருதிச்சரடிலமைந்த அவர்களும் உறவினரானார்கள். அரசே, அவர்கள் பாணாசுரரின் மைந்தர் சக்ரர் தலைமைதாங்கும் பதினேழாம் படைப்பிரிவில் எட்டாம் படையாக நின்று களம்கண்டனர்.

நால்வரும் துரியோதனரை சூழ்ந்துகொண்டு தாக்கினர். துரியோதனரின் பின்புலத்தை துச்சாதனர் காத்தார். அம்புகளால் அவர் அரக்கர்களின் தேர்களை

உடைத்தார். வேகவானின் கழுத்தை அறுத்துச்சென்றது ஒரு வாளி. தன்னை அணுகிய அந்தக் கணையை இரு காகங்கள் ஏந்திவருவதைக் கண்டு அவன் அலறினான். அவ்வலறலை இரண்டாகப் பிளந்தது கூர்முனை. எஞ்சிய அலறலுடன் இருந்தது துண்டுண்ட தலை. அவன் அலறலைக்கண்டு ஓடியணைந்த மகாரௌத்ரன் பன்னிரு துதிக்கைகள் கொண்ட பெருங்களிறு ஒன்றின்மேலேறி பறந்துவரும் துரியோதனரை கண்டான். வெறிகொண்டு கதைசுழற்றியபடி அவரை அணுகினான்.

அவனுடைய எட்டு குடித்தெய்வங்கள் அவனை தங்கள் கைகளில் ஏந்தியிருந்தன. குளிகன், மாதன், மதங்கன், சம்பன், சம்புகன், சாமன், காமன், கதம்பன் என்னும் அத்தெய்வங்கள் யானைபோல் கொம்புகளும் துதிக்கைகளும் வௌவால்களின் சிறகுகளும் கொண்டவை. உறுமிச்சிரிக்கும் பற்கள்கொண்ட நாகங்கள் மேல் ஊர்பவை. கதையுடன் கதைகள் மோதிக்கொண்டன. தெய்வங்கள் தெய்வங்களுடன் போரிட்டன. உறுமிக்கூவின. அறைந்தன, கிழித்தன, மோதிச்சிதறிப் பின்னடைந்து மீண்டும் வெறிகொண்டு எழுந்தன. துரியோதனரின் கதையின் அறைகொண்டு நெஞ்சுபிளந்து மகாரௌத்ரன் மண்ணில் விழுந்தான்.

அவனைச் சூழ்ந்து ஆர்ப்பரித்த அரக்கர்களின் குடித்தெய்வங்கள் எழுந்துசென்று வித்யுத்ஜிஹ்வனை தங்கள் கைகளில் தூக்கி வந்தன. அவனுக்குப் பின்னால் பாய்ந்துவந்த புரவியின்மேல் நின்றவனாக பிரமாதி வந்தான். துரியோதனர் பிரமாதியை ஒரே அம்பால் வீழ்த்தினார். வீழ்ந்தவர்களின் குருதியை குடித்தன நீண்ட கூரலகுகளும் பற்களும் கொண்ட பாதாளதெய்வங்கள். மண்ணின் சிறுதுளைகளிலிருந்து நண்டுக்குஞ்சுகளென அவர்கள் எழுந்தபடியே இருந்தனர். விழிகளோ செவிகளோ இல்லாத விடாய் மட்டுமேயான சிற்றுருவர்கள். குருதியுண்டு வீங்கிப்பருத்து பேருருக்கொண்டு எழுந்து நெஞ்சிலறைந்து வெறிக்குரலெழுப்பி கால்களை ஓங்கி அறைந்து உதைத்து மருப்பு சிலிர்த்தனர்.

துரியோதனரும் வித்யுத்ஜிஹ்வனும் போரிட்டுக்கொண்டார்கள். அந்தப் போருக்குச் சுற்றும் குருதிகுடிக்கும் தெய்வங்கள் நின்று கைவீசி கூச்சலிட்டன. நெஞ்சிலும் தொடையிலும் அறைந்துகொண்டு ஆடின. நிலத்தில் மிதித்தும் கைதூக்கி வானில் சுழற்றியும் ஆர்ப்பரித்தன. இருவரின் தெய்வங்களும் அவர்களின்மேல் மிதித்தேறி போரிட்டனர். துரியோதனர் வித்யுத்ஜிஹ்வனை அறைந்து வீழ்த்தினார். அக்கணமே பாய்ந்த தெய்வங்கள் அவனை அள்ளி எடுத்து குருதியருந்தலாயின. அந்த உடல்கள் குருதியிழக்க அவற்றிலிருந்து வெளிறிய வண்ணம் கொண்ட புகைவடிவென அவர்கள் எழுந்தனர். துயர்கொண்ட மலைத்த விழிகளால் அந்தப் போர்க்களத்தை நோக்கியபடி நின்றனர். அவர்களினூடாக கடந்துசென்றன கூரம்புகள். அவர்களை அறியாமல் முட்டித்ததும்பிக்கொண்டிருந்தன தெய்வங்கள்.

துரியோதனர் தன் இரு தோள்களிலும் மாறிமாறி அறைந்துகொண்டு ஆர்ப்பரித்தார். “வருக! வருக!” என்று அவர் எதிரிகளை கூவியழைத்தார். பௌரவமன்னர் சுதாசர் செந்நிறப்பிடரி பறக்கும் நான்குதலைப் புரவிகளின் வடிவிலமைந்த தன் தெய்வங்களால் களத்தில் பறந்தலைந்தார். அவரை அணுகிய துரியோதனர் அம்புகளால் அவர் தலையை கொய்தெறிந்தார். தண்டக நாட்டு அரசன் குமுதனையும் அவன் இளையோன் ஜீமுதனையும் நீள்வேல் கொண்டு வெட்டி வீழ்த்தினார். அவர்களின் தெய்வங்கள் ஊளையிட்டபடி அஞ்சிச் சிதறி ஓடின.

இடியோசை எழுப்பியபடி கடோத்கஜன் துரியோதனரை நோக்கி வந்தார். அரசே, அவர் மலைகளைப்போன்ற தோள்கள்கொண்ட பெருங்குரங்குகளின்

வடிவிலமைந்த நூற்றெட்டு மலைத்தெய்வங்களால் காக்கப்பட்டார். அவர்கள் ஒருவர்மீது ஒருவர் தாவியேறி ஒருவரை ஒருவர் கடந்து ஒருவரையொருவர் எடுத்து வீசி பெருகி அணுகினர். பேரலைகளில் எழுந்துவரும் சிறுநாவாய்போல கடோத்கஜன் அவர்களில் திகழ்ந்தார். வரும் வழியிலேயே ஜயத்ரதரின் தேரை அறைந்து துண்டுகளாக தெறிக்கவிட்டார். தேரிலிருந்து இறுதிக்கணத்தில் ஜயத்ரதரை பறக்கும் கரடிபோல் தோன்றிய சிந்துநாட்டுக் குடித்தெய்வம் தூக்கி அகற்றியது. சல்யர் கலப்பை வடிவில் படைக்கலமேந்திய ஏழு தெய்வங்களால் கடோத்கஜனிடமிருந்து காக்கப்பட்டார்.

கடோத்கஜனும் துரியோதனரும் போரிட்டபோது குரங்குருக்களும் காகவடிவப் பூதர்களும் விண்ணில் மோதிக்கொண்டார்கள். முகில்களுக்கும் மலைகளுக்குமான போரென அதை காண்கிறேன். கடோத்கஜனின் உடலில் ஒவ்வொரு உறுப்பிலும் அமைந்த விலங்குகள் எழுந்து வந்தன. நெஞ்சிலிருந்து இரு மத்தகங்கள் எழுந்து யானைகளாயின. தொடைகளிலிருந்து இரு களிறுகள் எழுந்தன. கால்களிலிருந்து கரடிகள். அரசே, அவருடைய இரு கைகளும் விரைவுகொண்ட இரு சிறுத்தைகளாகி எழுந்தன. வளைந்து பதுங்கியும், விரிந்தும், சிலிர்த்தும், சீறியும் அவை தாக்கின. பத்து கைநகங்களும் பத்து கூரலகுகளாகி கழுகுகளாக மாறின. அவருடைய வயிற்றிலிருந்து செதில்நிரைகொண்ட உடலுடன் எழுந்தது முதலை.

பெருகிக்கொண்டே இருந்தார் துரியோதனர். நரிக்கூட்டங்களாகி ஊளையிட்டுச் சீறி வால்சுழற்றி பாய்ந்தார். காகங்களாகி, முகில்களாகி நிறைந்தார். கழுதைபோல் ஒலியெழுப்பின அக்காகங்கள். இடியோசை என உறுமின அந்த நரிகள். அவருடைய தோள்கள் பெருகுவதை காண்கிறேன். அரசே, மண்மறைந்த கௌரவர்கள் அனைவரும் கதையேந்திய கைகளுடன் வந்து அவர் உடலில் பொருந்தி கிளைக்கிறார்கள். அவர்களின் மைந்தர்களும் கதைகளுடன் எழுந்து விரிகிறார்கள். நூறுநூறு கைகள். நூறுநூறு கதைகள். அவர் ஒரு படையென கடோத்கஜனை தாக்கினார். அவரை எத்திசையிலிருந்தும் அறைந்தார். ஒருகணமும் பின்னடைய விடாமல் அறைந்தார்.

அவர் ஆற்றிய போரின் விசையால் அப்பகுதியில் பெருஞ்சுழி ஒன்றே காணக்கிடைத்தது. தெய்வங்களும் தேவர்களும் பேயுருக்களும் அரக்கர்களும் அசுரர்களும் மானுடரும் இணைந்துருவான அச்சுழியின் அடியில் நிகழ்வதென்ன என்று காணக்கூடவில்லை. கடோத்கஜனின் அறைகள் ஒவ்வொன்றையும் அவருடைய கதைகள் தடுத்தன. அள்ளி அப்பால் வீசப்பட்ட கடோத்கஜனை அவருடைய தெய்வங்கள் தூக்கிக்கொண்டு அப்பால் சென்றன. அவரை துரத்திச்சென்று கூச்சலிட்டு அறைகூவினார் துரியோதனர்.

அநூபநாட்டு அரசன் நீலன் அஸ்வத்தாமாவால் கொல்லப்பட்டார். மலைவிழுந்ததுபோல் அவர் உடல் மண்ணிலறைந்து விழுந்தது. அப்பால் பகதத்தரை சேதிநாட்டு வசுதானரும் தசார்ணநாட்டரசர் சுதர்மரும் எதிர்த்தனர். பகதத்தரை சூழ்ந்திருந்தனர் பிரக்ஜ்யோதிஷத்தின் குடித்தெய்வங்களாகிய மீனுருக்கொண்ட மத்ஸ்யன், நண்டுருக்கொண்ட கர்க்கடகன், முதலையுருக்கொண்ட மகரன், ஆமையுருக்கொண்ட கூர்மன் ஆகியோர். அவர்களை எதிர்கொண்ட தெய்வங்கள் முகங்களில் கொம்புகளும் விரிக்கும் சிறகுகளும் கொண்டவை. வெட்டுக்கிளிகளெனத் தாவி வந்து அவை போர்புரிந்தன.

துரியோதனரை பீமசேனர் தன் காற்றுப்படை சூழவந்து தாக்கினார். அவருடைய கைகள் வீசுவதற்கேற்ப நாற்பத்தொன்பது காற்றுகளில் ஒன்று வந்து அமைந்தது. அறைகையில் எருமைத்தலைகொண்ட மகிஷாசன் வந்தமைகிறான்.

தேர்த்தூண்களைப் பிழுது எறிகையில் பன்னிரு கைகள் கொண்ட ஸ்வத்வாசன். கதைசுழற்றி வரும் நெஞ்சில் யானைப்பாறைபோன்ற ஹஸ்தின். உறுமி கைவிரித்து விரிந்தெழுகையில் நூறுகைகள் கொண்ட விஸ்வதேவன். சீற்றத்துடன் கால்களை உதைத்து பாய்கையில் ருத்ரன். நெஞ்சை நோக்கி கதைவீசி அணுகும்போது செந்தழல்போல் முடிகொண்ட யுவனன். அரசே, நாற்பத்தேழு காற்றுகள் கடந்துசெல்லும் மலையுச்சியின் ஒற்றைமரம் போன்று களம்நின்றாடுகிறார் பீமசேனர்.

துரியோதனரும் பீமசேனரும் இணையொடு இணையென நின்று பொருதிய அப்போரில் விண்ணில் இடியெழுந்தது. ஒவ்வொரு அறைக்கும் தெய்வங்கள் கூக்குரலிட்டன. தொடைகளை அறைந்துகொண்டும் கைகளை வீசி எழுந்து குதித்தும் ஒருவரை ஒருவர் கூச்சலிட்டு அழைத்து அறைகூவியும் களியாட்டமிட்டன. அவற்றின் ஆட்டத்தால் நிலம் மரவுரி விரிப்புபோல் நெளிபட்டது. நிலத்துக்கடியில் ஆழ்ந்த பொந்துவழிகளினூடாக பாதாளநாகங்கள் பிதுங்கி வெளியே வந்தன. துரியோதனர் பீமசேனரின் நெஞ்சக்கவசத்தை பிளந்தார். பிறிதொரு வீச்சில் அவர் தலைக்கவசத்தை உடைத்தார். மீண்டும் அறைய அவர் காற்றிலெழுந்தபோது பீமசேனர் அவர் விலாவிலறைந்தார். துரியோதனர் நிலையழிந்து பின்னால் சரிந்தார்.

அரசே, துரியோதனர் சென்ற சிலநாட்களாகவே நிலையழிந்திருக்கிறார். அவர் உடல் நூற்றுவரால் ஆனது. இழப்புகள் ஒவ்வொன்றும் அவருடலின் ஒரு தசையை ஆற்றலிழக்கச் செய்கின்றன. ஆகவே ஒவ்வொரு நாளும் அவருடைய நடை மாறுபடுகிறது. குரலும் கையசைவும் மாறுகின்றன. அவர் முகமேகூட நாளுக்கொன்று எனத் தெரிகிறது என்கிறார்கள். களத்தில் அவர் நிலைமீள்வதற்குள் பீமசேனர் அவரை அறையும்பொருட்டு கதையுடன் பாய்ந்தெழுந்தார். ஆனால் துச்சாதனரும் துச்சகரும் துச்சலரும் துர்மதரும் அவரை சூழ்ந்துகொண்டனர். கதையை ஊன்றியபடி துரியோதனர் எழுந்து நோக்கியபோது கௌரவர் நால்வருக்கும் பீமசேனருக்கும் உச்சப்போர் மூண்டுவிட்டதை கண்டார்.

அப்போது பொன்னுருகியதெனச் சிவந்த பெருங்களிற்றின் மீது மெல்ல மிதந்தவராக பால்ஹிகப் பிதாமகர் வருவதை அவர் கண்டார். அந்தப் படைக்களத்தில் ஒவ்வொன்றும் உச்சவிரைவில் கொப்பளித்து அலையடித்துக் கொண்டிருக்க அவர் மட்டும் மிகமிக மெல்ல அசைவதறியாது ஒழுகும் முகிலென வந்தார். அவருடைய கவசங்கள் அந்தியொளியில் மின்னிக்கொண்டிருந்தன. நான்கு கந்தர்வர்கள் வெண்முகில் சாமரங்களால் அவருக்கு விசிறிக்கொண்டிருந்தனர். சுடர்முடி சூடிய இந்திரவடிவான தேவன் ஒருவன் அவருக்குப் பின்னால் வெண்குடை ஏந்தியிருந்தான். யக்ஷர்களும் கின்னரர்களும் அவருக்கு இருபுறமும் மலர்மழை சொரிந்தனர். மலர்களாலான துந்துபிகளையும் எக்காளங்களையும் முழக்கினர்.

பால்ஹிகரின் கையில் பொற்சங்கிலி ஒன்றில் கட்டப்பட்ட மென்மையான மலர்போன்ற சாமரம் தொங்கியது. அதை சுழற்றிவீசியபடி அவர் அணுகினார். அந்தக் காற்றில் பறந்துகொண்டிருந்த தேவர்களின் பொன்னிறக் குழல்கள் அலைபாய்ந்தன. கந்தர்வர்களின் ஒளிவண்ண ஆடைகள் நெளிந்தமைந்தன. அது வருடிச்சென்ற தெய்வங்கள் மெய்ப்பு கொண்டு புன்னகைத்து அசைவழிந்து நின்றன.

அவரைப் பார்த்ததும் பீமசேனரை ஏந்தியிருந்த மாருதர்கள் அவரை அப்படியே விட்டுவிட்டு பின்னடைந்தார்கள். அவர் நிலத்திலுதிர்ந்து எழுந்தோடி அப்பால் சென்று நோக்கினார். துரியோதனரைச் சூழ்ந்திருந்த காருருவ தெய்வங்கள்

புகையணைவதுபோல் கரைந்தழிந்தனர். அவர் வெற்றுக்கைகளுடன் திகைத்து நின்றார். பீமசேனர் தன் படைகளுக்குள் பாய்ந்து மறைய துரியோதனரை அவருடைய தம்பிகள் சூழ்ந்துகொண்டனர். அவர்களை அறியாதவர்போல தன் மெல்லிய சாமரத்தைச் சுழற்றியபடி அவர்களிருவருக்கும் நடுவே பால்ஹிகர் கடந்துசென்றார்.

அரசே, அதோ பீஷ்ம பிதாமகர் தன் கைகளென எழுந்த வசுக்களுடன் படைமுகம் நின்று பொருதிக்கொண்டிருக்கிறார். அவருடைய களத்தில் குருதிவெறிகொண்ட தெய்வங்கள் முட்டிமோதுகின்றன. உடலைவிடப் பெரிதாக நாக்குகொண்டவை. நாவுகளை சிறகுகளாக்கி பறக்கின்றன. நாவுகளை வால்களாக்கி அறைந்து பூசலிடுகின்றன. நாவுகளை கால்களாக்கி எழுந்து தாவுகின்றன. நாவுகளை பின்னிப்பிணைத்து வளைத்து எடுத்து அறைந்து போரிடுகின்றன. நாவுகளை ஊன்றி எழுந்து நின்றிருக்கின்றன.

பீஷ்மர் தன் எதிரே மிக அப்பால் ஒரு தேரை கண்டார். அது அந்திவெளிச்சத்தில் திரும்பிய மின்னல் அவர் விழிகளில் அடித்தது. அவர் கைகளால் முகம் மறைத்து மீண்டும் நோக்கியபோது அவரை நோக்கி வந்தது. வெள்ளியெனத் தெரிந்த இரும்புத்தேர் அணுகும்தோறும் பொன்னொளிகொண்டது. நெருங்கி வருந்தோறும் சிற்றுருவாகியது. களித்தேர் என்றாகி அவர் முன் வந்து நின்றது. அதில் ஆடையேதும் அணியாத சிறுகுழவி ஒன்று நெஞ்சில் ஐம்படைத்தாலியும் இடையில் கிண்கிணி நாணுமாய் கையில் அல்லிமலர்த்தண்டாலான வில்லுடன் நின்றிருந்தது. அவரை நோக்கி புன்னகைத்து “வருக!” என போருக்கு அழைத்தது. அதன் சிவந்த சிற்றுதடுகளுக்குள் மேலீறில் ஒரு பால்துளி என பல் தெரிந்தது. தெளிந்த விழிகளில் சிரிப்பு ஒளிகொண்டிருந்தது.

பீஷ்ம பிதாமகர் தன் வில்லைத் தாழ்த்தி தலைகவிழ்ந்தார். பின்னர் “திருப்புக! தேரை திருப்புக!” என ஆணையிட்டார். அரசே, அப்போது அவருடைய வலக்கையென விளங்கிய பிரத்யூஷன் என்னும் வசு துயருடன் விலகிச்செல்வதை கண்டேன். உயிரற்றதுபோல் வலக்கை சரிய வில் விழப்போயிற்று. அவர் பாய்ந்து அதைப்பற்றி நிறுத்தினார். பிரத்தியூடன் தன் உடன்பிறந்தார் அறுவருடன் சேர்ந்துகொண்டான். அவர்கள் துயர்நிறைந்த விழிகளுடன் பீஷ்ம பிதாமகரை குனிந்து நோக்கினர்.

### பகுதி ஒன்பது : வானவன்

கோசல மன்னன் பிருஹத்பலன் தன் குடிலின் வாயிலில் இடையில் இரு கைகளையும் வைத்து தலைகுனிந்து தனக்குள் ஒற்றைச் சொற்களை முனகியபடி குறுநடையிட்டு சுற்றி வந்தான். அவனது நிலையழிவை நோக்கியபடி அப்பால் தலைக்கவசத்தை ஏந்தியபடி ஏவலன் நின்றிருந்தான். பிருஹத்பலன் நின்று திரும்பிப்பார்த்து “வந்துவிட்டார்களா?” என்றான். “அரசே!” என்று அவன் கேட்டான். “அறிவிலி! அவர்கள் எங்கே?” என்றான். வெற்று விழிகளுடன் ஏவலன் “அரசே!” என்று மீண்டும் சொன்னான். “மூடர்கள்! மூடர்கள்!” என்று தன் தொடையை தட்டியபடி அவன் மீண்டும் சுற்றி வந்தான்.

மீண்டும் நின்று “எங்கிருக்கிறார்கள்?” என்றான். “அரசே!” என்றான் ஏவலன். “வங்க மன்னர் சமுத்ரசேனரும் சந்திரசேனரும் இங்கு வருவதாக சொல்லியிருந்தார்கள்” என்றான் பிருஹத்பலன். “அதைப்பற்றிய செய்தி ஏதும் இன்னும்

சொல்லப்படவில்லை, அரசே” என்றான் ஏவலன். “பிறகு நீ இங்கு என்ன செய்கிறாய்? அதை கீழே வை, நீர்க்குடம் சுமந்த கன்னிபோல. அறிவிலி!” என்றபின் பிருஹத்பலன் சென்று பீடத்தில் அமர்ந்தான். தன் இரு கைகளையும் விரல் கோத்து மடியில் வைத்து தலையை அசைத்தபடி “என்ன நிகழ்கிறது என்றே தெரியவில்லை” என்றான். பற்களைக் கடித்து எட்டித் துப்பி “எங்கும் புழுதி… குருதியுலர்ந்த புழுதி” என்றான்.

ஏவலன் “தேர் வருகிறது, அரசே” என்றான். “அது எனக்கும் கேட்கும். விலகு” என்று உரத்த குரலில் சொல்லி கைவீசினான் பிருஹத்பலன். ஏவலன் தலைவணங்கி சற்றே பின்னடைந்து நின்றான். ஒற்றைப்புரவித் தேர் வந்து நிற்க அதிலிருந்து சமுத்ரசேனரும் இளையோன் சந்திரசேனரும் இறங்கி பிருஹத்பலனை நோக்கி வந்தனர். பிருஹத்பலன் அமர்க என்று கைகாட்டினான். சமுத்திரசேனர் அமர்வதற்குள்ளாகவே “நாம் என்ன செய்யப்போகிறோம்? அவைக்குச் சென்று பேசவிருக்கிறோமா?” என்றார். “அதைப்பற்றி முடிவெடுக்கத்தான் உங்களை வரச்சொன்னேன்” என்றான் பிருஹத்பலன். சந்திரசேனர் “நாம் மட்டும் முடிவெடுத்தென்ன பயன்? மாளவரும் கூர்ஜரரும் இன்னும் வரவில்லை. குறைந்தது அவர்களாவது நம்முடன் இருந்தாகவேண்டும். பிற சிறு அரசர்களைப்பற்றி நாம் கவலை கொள்ளவேண்டியதில்லை” என்றார்.

“முதலில் நாம் அறுதி முடிவெடுப்போம். அதை நாம் பேசுவோம். நமது முடிவை அவர்களுக்கு தெரிவிப்போம்” என்றான் பிருஹத்பலன். “கூர்ஜரனைப்பற்றி நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டியதில்லை. நாளுக்கொரு பேச்சு பேசும் வீணன்” என்றார் சமுத்ரசேனர். “இங்குள்ள ஷத்ரியர்கள் அனைவருமே நாளுக்கொரு பேச்சு பேசுபவர்கள்தான். எவருக்கும் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லை. ஏற்கெனவே படையும் செல்வமும் கொண்டு சேர்ந்து நிற்கும் பெருங்குழுவுடன் நிற்பதே அவர்கள் விரும்புவது. அந்தப் பெருங்குழு எது என்று எப்போதும் முடிவெடுக்க முடிவதில்லை. ஏனென்றால் அது ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்திப்பறவைகளைப்போல மரங்களிலிருந்து மரங்களுக்குப் பறந்து கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார்கள்” என்று பிருஹத்பலன் சொன்னான். “எவருமே உறுதியாக இல்லை” என்று சமுத்ரசேனர் முனகிக்கொண்டார். “எவரிடம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. எச்சொற்களும் பிழையாகிவிடும் என்னும் அச்சமே எழுகிறது.”

“உறுதியாக இருந்த இருவர் அவந்தியின் விந்தரும் அனுவிந்தரும்” என்று பிருஹத்பலன் முனகினான். “நேற்று நமது சொல்லாடல் எவ்வகையிலோ எவரையோ சென்று சேர்ந்திருக்கிறது. ஒருவேளை…” என்று நிறுத்திய சமுத்ரசேனர் “ஒருவேளை நான் சொல்வது பிழையாக இருக்கலாம். ஆனால் இங்கிருந்தே பாண்டவர்களுக்கு செய்தி போயிருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன்” என்றார். பிருஹத்பலன் “இங்கிருந்தென்றால்?” என்றான் விழிசுருங்கி. சமுத்ரசேனர் “கௌரவர்களிடமிருந்து… துரியோதனர் அவையிலிருந்து. நாம் போரிலிருந்து விலகுவதைப்பற்றி முடிவெடுத்ததனால் எவருக்கு இடர்? கௌரவ மன்னர் துரியோதனருக்கு. ஆனால் நேற்று நிகழ்ந்தது என்ன? நமது அரசர்கள் கொத்து கொத்தாக கொன்று வீழ்த்தப்பட்டனர். என்ன நிகழ்ந்திருக்கிறது என்று எண்ணிப்பார்க்கையில் ஐயங்கள் பெருகுகின்றன. வேண்டுமென்றே நம்மை படைமுகப்புக்கு அனுப்பினார்களா?” என்றார்.

பிருஹத்பலன் “நம்மை எவரும் படைமுகப்புக்கு அனுப்பவில்லை. நாம் அனைவருமே பின்னணியில்தான் நின்றோம். படை நேற்று குழம்பியதில் ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டோம். அம்புகள் பட்டு செத்துக்குவிந்தோம்” என்றான். “ஆம், அதைத்தான் சொல்கிறேன். நாம் திட்டமிட்டு படைகளுக்குப்

பின்னால் நின்றிருந்தோம். ஆயினும் தொலையம்புகள் வானிலிருந்து பருந்துகள்போல வந்து நம் மீது இறங்கின. நாம் அவ்வாறு அகன்று நின்றிருப்போம் என அவர்கள் அறிந்திருக்கின்றனர். ஷத்ரியர் நின்றிருக்கும் இடம் முழுக்கவே அவர்களுக்கு தெரிந்திருக்கிறது" என்றார். "அச்சம் அறிவின்மையாகிறது" என பிருஹத்பலன் கைவீசி அதை தவிர்த்தான்.

"நம்மை குறிவைத்து தாக்கினார்கள் என்பதில் ஐயமே இல்லை. நேற்றும் முன்னாளுமாக ஷத்ரியர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை பாதிக்கும் மேல். இனி இப்போர் முடிந்தால்கூட பாரதவர்ஷத்தில் ஷத்ரிய வல்லமை பெரிதும் எஞ்சியிருக்காது" என்றார் சந்திரசேனர். இகழ்ச்சியுடன் "துரியோதனர் ஷத்ரியர் அல்லவா?" என்று பிருஹத்பலன் கேட்டான். "அவனை யார் ஷத்ரியன் என்றது? அவனது குருதி என்ன? மூதாதையரால் ஒதுக்கப்பட்ட துர்வசுவின் குலம். காட்டுப்பெண்டிரின் கருக்களில் எழுந்தவர்கள். பாலைவன வேட்டுவக் குடிகள் என்றன்றி எவர் அவர்களை பொருட்படுத்துகிறார்கள்? துளிநீர் தேடி தவமிருக்கும் பாலைவன ஓநாய் வழி வந்தவர்கள். பாரதவர்ஷத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வதற்கா இப்போருக்கு எழுந்தோம்?" என்றார் சந்திரசேனர்.

பிருஹத்பலன் தலையை அசைத்தபடி "சரி, ஆளவேண்டிய ஷத்ரியர் எவர்? மாளவர்களா?" என்றான். "அவர்கள் அசுரர்கோன் ஹிரண்யரின் குருதி கொண்டவர்கள்" என்றார் சந்திரசேனர். "சரி, வேறு யார்?" என்றான் பிருஹத்பலன். சமுத்ரசேனர் பேசாமலிருந்தார். "நீங்களா?" என பிருஹத்பலன் கேட்டான். சமுத்ரசேனர் சீற்றத்துடன் "ஏன் நானாக இருந்தாலென்ன? வேதம் கனிந்த தீர்க்கதமஸின் குருதியில் எழுந்த குலம் நாங்கள்" என்றார். "உங்கள் குலமூதாதையான வாலி அரக்கர்குலம் என்பதல்லவா கூற்று?" என்றான் பிருஹத்பலன். "அதை நீங்கள் பேசவேண்டியதில்லை. கோசலகுலத்தின் வேரை நாங்கள் தோண்டி எடுக்க முடியும்..." பிருஹத்பலன் "எடுங்கள் பார்க்கலாம்" என்றான்.

சந்திரசேனர் "நாம் இப்போது இதை பேசவேண்டாம். நாம் குலப்பெருமை கிளத்த இங்கே அமரவில்லை" என்றார். "நாளுக்கொரு பேச்சு என நான் சொன்னது இதைத்தான்" என்றான் பிருஹத்பலன். சந்திரசேனர் சீற்றத்துடன் ஏதோ சொல்ல எழ அதை கையமர்த்தி பிருஹத்பலன் "இன்று நாம் பேசவேண்டியது வேறு. நம் குடிகளைப்பற்றி பேசுவோம். நாம் துரியோதனரிடம் இதைப்பற்றி பேசுவோம். இன்னும் இப்போர் தொடர்ந்தால் ஷத்ரியர் எவரும் எஞ்சப்போவதில்லை. ஷத்ரியரின் குலத்தை முற்றொழிப்பதற்காக நாம் இப்போருக்கு எழவில்லை. நமக்கு வேறு இலக்குகள் உள்ளன" என்றான். "ஆம், நாம் அழிந்துகொண்டிருப்பதை அவரிடம் சொல்வோம்" என்றார் சந்திரசேனர். "இறந்தவர்களின் நிரையை அவரே அறிவார். ஆனால் நாம் நமது சினத்தையும் துயரையும் சொல்லியாகவேண்டும்."

சமுத்ரசேனர் "இப்போரிலிருந்து இனி எவ்வகையிலும் அவர் பின்னடைவார் என்று எனக்கு தோன்றவில்லை. ஒவ்வொரு நாளும் தன் உடன்பிறந்தாரை இழந்துகொண்டிருக்கிறார். ஒவ்வொரு இழப்புக்கும் மேலும் மேலும் வஞ்சினம் கொண்டவராக ஆகிறார். எண்ணி நோக்குகையில் இப்போது அவர் அமைதிப்பேச்சுக்கு சென்று அமர்ந்தால் தன் இறந்துபோன உடன்பிறந்தாரை கைவிடுகிறார் என்றே பொருளாகும். அதை அவரால் இயற்ற இயலாது" என்றார். சந்திரசேனர் அவரை திரும்பிப்பார்த்துவிட்டு "மூத்தவர் சொல்வதும் சரியென்றே தோன்றுகிறது. நாம் சொல்வதை அவர் செவிகொள்ளப் போவதில்லை" என்றார். "நம் சொற்களை போரை அஞ்சும் கோழையின் குரல் என அவர் கொள்ளவும்கூடும்." சமுத்ரசேனர் "நாம் பிறிதொரு வலுவான சொற்கோவையை வைக்கவேண்டும். நாம்

அழிவோம் என்பதற்காக போரொழியக் கோருகிறோம் என பொருள்வரக்கூடாது. அது பாரதவர்ஷத்தின் பொதுநலனுக்காகவும் வேதத்தின் வளர்ச்சிக்காகவுமே என ஒலிக்கவேண்டும்” என்றார்.

பிருஹத்பலன் எழுந்து தலையை அசைத்து “ஆம், ஆனால் எத்தனை எண்ணம் சூழ்ந்தாலும் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. இக்களத்தில் நாம் மடிவோம் என்ற எண்ணம் மட்டுமே வலுவாக நிலைகொள்கிறது. நம்மை மெய்யாகவே துரத்துவது அந்த அச்சம் மட்டும்தானா?” என்றான். “உங்களிடம் நிமித்திகர்கள் என்ன சொன்னார்கள்?” என்று சமுத்ரசேனர் கேட்டார். “யார்?” என்று பிருஹத்பலன் சீற்றத்துடன் கேட்டான். “நிமித்திகர்கள். இங்கு வருவதற்கு முன் ஒவ்வொருவரும் நிமித்திகர்களை பார்த்துவிட்டுதான் வந்திருக்கிறோம். உங்களிடம் நிமித்திகர் சொன்னதென்ன?” என்றார் சமுத்ரசேனர். “உங்களிடம் சொன்னதென்ன?” என்று பிருஹத்பலன் கேட்டான்.

“நாங்களிருவரும் இந்தக் களத்தில் மடிவோம் என்றுதான். இது பெருநகரங்களை சருகுகளென உள்ளிழுத்து ஆழ்த்திச்செல்லும் சுழி, இதிலிருந்து எவரும் தப்ப இயலாது என்றான் எங்கள் நிமித்திகன். பாரதவர்ஷத்தின் அரசர்களில் பெரும்பாலானவர்கள் இங்கு அழிவார்கள் என்றும் காட்டெரிக்குப் பின் புதிய முளைகள் எழுவதுபோல் வேறு அரசுகளும் புதிய நெறிகளும் இங்கே உருவாகும் என்றும் சொன்னான். அது அத்தனை பெரிதாக இருந்ததாலேயே அவனுடைய கற்பனை என்று எண்ணினோம். அவ்வாறு ஒருதுளியும் எஞ்சாது உள்சுழற்றி இழுக்கும் ஒரு பெரும்போர் நிகழ இயலுமென்றே அப்போது எண்ணவில்லை. இப்போது விழி முன் காண்கிறோம்.”

பிருஹத்பலன் “நான் அவனால் கொல்லப்படுவேன் என்றான் நிமித்திகன்” என்றான். தலைகுனிந்து நிலத்தை நோக்கியபடி “அதை தெளிவாகவே உரைத்தான். மேலும் கேட்டிருந்தால் எங்கே எவ்வண்ணம் என்றுகூட சொல்லியிருப்பான்” என்றான். சந்திரசேனர் “யாரால்?” என்றார். “அபிமன்யூவால்” என்று பிருஹத்பலன் சொன்னான். “அது நிகழக்கூடும்” என்றார் சமுத்ரசேனர். பிருஹத்பலன் திரும்பி நோக்கி “இக்களத்தில் கொல்பவனும் கொல்லப்படுபவனும் ஊழால் முன்னரே தொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று என் நிமித்திகன் சொன்னான். முற்பிறவிகளில் அவர்கள் ஆற்றியவற்றின் தொடர்ச்சியே இக்களத்தில் அவர்கள் எதிர்கொண்டு நின்றிருப்பது. இங்கிருந்து மேலும் ஒரு சரடு நீண்டு மறுபிறப்புகளுக்கு செல்கிறது. இது நாமறியா பெருஞ்சிலந்தி ஒன்று பின்னும் வலை” என்றான்.

சென்ற பிறவியில் நான் அவன் உடன்பிறந்தான். நான் அவனுக்கு மூத்தவன். கங்கைக்கரையில் சுஹர்ஷம் என்னும் சிறுநகரின் இளவரசர்களாக பிறந்தோம். நான் மூத்தவன் என்றாலும் எதிர்காலத்தில் அரசன் என அமர்ந்து ஆளும் ஊழ் அவனுக்கிருப்பதாக நிமித்திகர் சொன்னார்கள். அவன் என்னை கொல்லக்கூடும் என அச்சொற்களை நான் பொருள்கொண்டேன். அவன் என்னை கொல்வதை எண்ணி எண்ணி கொல்ல எண்ணுகிறான் என்றே நம்பலானேன். அவன் என்னை கொல்வதை கனவுகண்டேன். கனவிலெழுந்த அச்சமும் வஞ்சமும் நனவிலும் பெருகின. அவனை கொல்லாவிட்டால் அவன் கையால் இறப்பேன் என முடிவெடுத்தேன்.

அவனை நீராடும்பொருட்டு கங்கைக்கு அழைத்துச் சென்றேன். நாங்கள் இருவரும் கங்கையின் நீர்ப்பெருக்கில் ஒருவரை ஒருவர் துரத்தி விளையாடி காவலரிடமிருந்து மிக அகன்று சென்றோம். அங்கே அவன் தலையைப்பற்றி நீருள் ஆழ்த்தி அழுத்தி பிடித்துக்கொண்டேன். ஆனால் கரையிலிருந்த என் பெற்றோரிடம் நீரில் மூழ்கும்

அவனை நான் காப்பாற்ற முயல்வதாக கூச்சலிட்டேன். படைவீரர் பாய்ந்து நீந்தி அணுகுவதற்குள் அவன் இறுதிமூச்சை விட்டிருந்தான். அவனுடைய இழப்பால் துயருற்றவனாக சிலநாள் நடித்தேன். நீர்க்கடனும் புலைச்சடங்குகளும் முடிந்த பின்னர் விடுதலை கொண்டேன். மைந்தன் இறப்பால் உளம்சோர்ந்து தந்தை படுக்கையில் விழுந்தார். அன்னையும் நோயுற்றாள். ஓராண்டில் அவர்கள் இருவரும் இறக்க நானே அரசன் ஆனேன்.

ஆனால் முடிசூடிய பின் என்னால் அவனை மறக்க இயலவில்லை. ஒவ்வொருநாளும் அவன் கனவிலெழுந்தான். என் மைந்தர்களில் இளையவன் அவனைப்போல தோற்றமளித்தமையால் அவனை நோக்குவதையே ஒழிந்தேன். அவனைப் பெற்ற அன்னையை சந்திப்பதை அதன் பின்னர் தவிர்த்தேன். அவனுக்காக எவருமறியாமல் பழிநிகர்க் கடன்கள் செய்தேன். நிமித்திகர்களை அழைத்து அவனை நிறைவுறுத்த என்ன செய்யவேண்டுமென கோரினேன். அவர்கள் என் நாளும் கோளும் கணித்து சென்ற பிறவியில் அவனும் நானும் அயோத்தியின் பெருவணிகன் ஒருவனுக்கு மைந்தர்களாக பிறந்திருந்தோம் என்றனர். தந்தையின் பொருளை விழைந்த அவன் நான் துயில்கையில் என் அறைக்குள் பாம்பொன்றை அனுப்பி என்னை நஞ்சூட்டிக் கொன்றான். என்னையே நினைத்திருந்து பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தான்.

நான் விண்புகாமல் அவனைச் சூழ்ந்து மூச்சுவடிவில் இருந்தேன். அவன் அளித்த அன்னத்தையும் நீரையும் ஏற்க மறுத்தேன். அவ்வஞ்சமே என்னை அடுத்த பிறவியில் அவனுக்கு உடன்பிறந்தானாகப் பிறந்து பழியீடு கொள்ளச்செய்தது என்றார்கள் நிமித்திகர்கள். இந்தச் சுழலை எப்படி கடப்பேன்? இது பிறவிபிறவியெனத் தொடரும் ஊசலாட்டம்தானா என நான் கேட்டேன். உங்களில் ஒருவர் வஞ்சம் ஒழிந்து பிறரை முற்றாக பொறுத்து கனியவேண்டும். வாழ்த்து சொல்லி மூச்சுலகிலிருந்து அகன்று விண்புகுந்து முன்னோர்களுடன் சென்றமையவேண்டும். அடுத்தவர் பிறிதொரு பிறவி எடுத்து தன் செயலுக்கு ஈடுசெய்து அங்கு வந்துசேர்வார். அதுவரை இந்த மாற்றாட்டம் தொடரும் என்றார் முதுநிமித்திகர். என் இளையோன் வஞ்சமொழியவேண்டும் என நான் விழிநீர் சிந்தி வேண்டிக்கொண்டேன். நோன்புகள் நோற்றேன். பூசனைகளும் கொடையும் இயற்றினேன்.

“அவன் வஞ்சமொழியவில்லை. அந்த வஞ்சமே அவனை அபிமன்யூவாக பிறப்பித்திருக்கிறது என்றனர் நிமித்திகர்” என்றான் பிருஹத்பலன். “இப்பிறவியில் அவன் என்னை கொல்வான். கொல்பவனும் கொல்லப்படுபவனும் ஒன்றே என்று உணர்ந்து, இங்கு எழுந்தவர்கள் எவரும் கொல்லப்படுவதே இல்லை எனத் தெளிந்து நான் இன்னுளத்துடன் விடைகொண்டேன் என்றால் வட்டச்சுழல் முழுமையடையும் என்றனர். நான் இதுநாள்வரை என் உள்ளத்தை அதன்பொருட்டு பழக்கிக்கொண்டிருந்தேன். எங்களுக்குள் இந்தப் பிறப்பில் எப்பூசலும் இல்லை. உளமறிய வஞ்சமென ஒருதுளியும் அவனிடமும் இல்லை. ஆகவே இங்கே நிகழும் இறப்பு மலருதிர்வென நிகழட்டும் என எண்ணினேன்.”

நான் அவனையே எண்ணிக்கொண்டிருக்கிறேன். உண்மையில் அவன் எவன் என்றும் இந்த ஊழாடலின் இயல்பென்ன என்றும் அறிவதற்கு முன்னரே அவனிடம் என் உள்ளம் படிந்துவிட்டது. ஏன் என்று அறியாமலேயே அவனைப்பற்றிய செய்திகளை தனித்து செவிகொண்டபடியே இருக்கிறேன். அவை அனைத்தையும் என் உள்ளம் நினைவில் தொகுத்துக்கொண்டிருக்கிறது. அவனை நான் நேரில் பார்த்ததில்லை. பார்த்திருக்கலாம், ஆனால் எதனாலோ பார்ப்பதை தவிர்த்தேன். அவனைப்பற்றிய என் உளச்சித்திரத்தை அனைவரிடமிருந்தும்

காத்துக்கொண்டேன். அவனையும் என்னையும் ஊழ் முடிச்சிட்டிருக்கிறதோ என நான் ஐயுற்ற தருணம் எழுந்தது அவன் விராடரின் மகளை மணந்தபோது.

வங்கரே, விராடர் தன் மகளை எனக்கு அளிக்க எண்ணம் கொண்டிருந்தார் என அறிவீர்கள். அவளை நான் மணக்கக்கூடுமா என்று கோரி தூது வந்தது. ஆனால் மச்சர்குடியின் அரசமகளை அரசியாக்க என் அவையினர் ஏற்கவில்லை. என் பட்டத்தரசி காமரூபத்தின் அரசமகள். அவளை மீறி நான் எதையும் செய்ய இயலாது. ஆனால் தூதன் அதை அறிந்தவன்போல் என்னிடம் ஓர் பட்டுத்திரை ஓவியத்தை காட்டினான். அவளை கண்டதுமே நான் அவளை முன்னரே அறிந்திருப்பதாக உணர்ந்தேன். காதல்கொண்டவர்கள் எப்போதும் உணர்வது அது என அறிந்திருந்தேன். ஆண்கள் இளமையிலேயே அவர்களுக்கான பெண்ணுருவை அகத்திரையில் தீட்டிக்கொள்கிறார்கள். அப்பெண்ணை தேடிக்கொண்டிருக்கிறார்கள். கண்டடைந்ததும் முன்பறிந்தவள்போல் இருக்கிறாள் என எண்ணி வியக்கிறார்கள். ஆனால் இது அவ்வாறல்ல, என் உள்ளத்திலிருந்த பெண்ணே அல்ல அவள். ஆனால் அவள் விழிகள் என்னை நேர்நோக்கின. அவள் எப்படிபேசுவாள் என்றுகூட நான் அறிந்திருந்தேன்.

தூதன் சொன்னான், அவர்கள் மணத்தன்னேற்பு ஒன்றை ஒழுங்குசெய்வதாக. அதில் நான் அவளைக் கொண்டால் அதை என் குடிகள் எதிர்க்கவியலாது. மணத்தன்னேற்பு அரசகுடியினருக்கு தெய்வங்களால் ஆணையிடப்பட்டது. அதை நானும் ஏற்றேன். விராடநகரிக்கு நான் அவளை கவர்ந்துவரும்பொருட்டே சென்றேன். அப்போது அங்கே பாண்டவர்கள் கரந்துறைவதை அறிந்திருக்கவில்லை. அவளை அர்ஜுனன் கவர்ந்துசென்றதை அறிந்தபோது அதையும் முன்னரே அறிந்திருப்பதாக தோன்றியது ஏன் என்றே எண்ணிக்குழம்பிக்கொண்டிருந்தேன். இழப்புணர்வுடன் மதுவிலாடி அரண்மனையில் இருக்கையில் அவளை அபிமன்யூ மணம்புரிந்துகொண்டதாக செய்தி வந்தது. அபிமன்யூ என்னும் சொல்லால் துரட்டியால் குத்தப்பட்டதுபோல் எழுந்தமர்ந்தேன். அப்போதுதான் அவன் என்னுடன் பிணைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

ஆகவே நிமித்திகர் நான் அபிமன்யூவால் கொல்லப்படலாம் என்று சொன்னபோது நான் திகைப்படையவில்லை. அவர்கள் அவன் பெயரை சொல்லக்கூடுமென எண்ணி காத்திருந்தேன். சொன்னதும் என் நரம்புகள் முறுக்கவிழ உடல் தளர்ந்தது. நான் ஒரு சொல்லும் கூறவில்லை. நிமித்திகர் கூற்றை என் அமைச்சர்கள் நம்பவில்லை. நான் அபிமன்யூவின் செய்திகளை கூர்ந்து கேட்பதை நிமித்திகர்கள் எவ்வண்ணமோ உய்த்தறிந்தே அதை சொன்னார்கள் என்றார் என் பேரமைச்சர். நிமித்திகர்கள் பெயர்களை ஒழுக்கென சொல்லிச் செல்கையில் அபிமன்யூவின் பெயர் ஒலித்ததும் என் விழி ஒளிகொண்டது. அவர்கள் அதை கூர்ந்துநோக்கிக்கொண்டிருந்தனர், அவர்களின் வழிமுறை அது என்றார் அமைச்சர்.

அது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் நான் அதை முழுதும் நம்பினேன். இல்லையேல் அவ்வண்ணமொரு ஈர்ப்பு எனக்கு அவன்மேல் தோன்ற வாய்ப்பில்லை. இக்களத்துக்கு வந்த பின்னரும் அவனை நேரில் பார்ப்பதை தவிர்த்தேன். முதல்நாள் போரில் அவன் இருக்கும் இடத்துக்கு மிக அப்பால் படையுடன் நின்றிருந்தேன். ஆனால் அவனை என் அகம் அறிந்துகொண்டிருந்தது. மிக விரைவிலேயே பாண்டவர்களின் குழூஉக்குறியில் அவன் பெயர் எப்படி முரசொலியாகும், கொடியசைவாகும் என புரிந்துகொண்டேன். அதன்பின் அவன் செய்வதனைத்தையும் கேட்டு அகவிழியால் நோக்கிக்கொண்டிருந்தேன். அவனுக்கு என்னை தெரியுமா என்று வியந்தேன். அவன் முன் சென்று நின்றால் அவன் என்னை

நோக்கி திகைக்கக்கூடும். நாங்கள் விற்களை கீழே வீசிவிட்டு பாய்ந்து அணைத்துக்கொள்ளவும்கூடும்.

வங்கரே, நான் இன்றுவரை அபிமன்யூவை பார்க்கவில்லை. திட்டமிட்டே அதை தவிர்த்துக்கொண்டிருக்கிறேன். போர் முறுகும்தோறும் ஒன்று தோன்றலாயிற்று, இப்போரிலிருந்து அகன்றுசென்றால் ஊழியின் அந்த வளையத்திலிருந்து நான் முறித்துக்கொண்டு விலகக்கூடும். ஏனென்றால் இங்கே நான் உசாவிய ஒற்றர்கள் ஒன்று சொன்னார்கள், அபிமன்யூ இந்தக் களத்திலிருந்து உயிருடன் மீளப் போவதில்லை. அவன் மாவீரன் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்போரில் அவன் களம்படுவான். ஒவ்வொருநாளும் அவன்மேல் வஞ்சம் பெருகிக்கொண்டிருக்கிறது. கௌரவ மைந்தர்களில் பெரும்பகுதியினரை அவன்தான் கொன்றிருக்கிறான். அவன் தந்தைக்கு இருக்கும் பெருங்காப்பென்பது இளைய யாதவரின் உளச்சூழ்கை. அது அவனுக்கில்லை. அவனுக்கும் தற்காப்பு குறித்த எவ்வெண்ணமும் இல்லை. அவன் இங்கே கௌரவர்களால் வீழ்த்தப்படுவான் என்றால், அதற்கு முன்னரே நாம் படையிலிருந்து விலகிவிட்டோம் என்றால் ஊழிலிருந்து தப்பிவிடமுடியும்.

“நான் விழைவது அதை மட்டுமே. ஆயிரம் கைகள் நீட்டி பற்றவரும் ஊழிலிருந்து விலகி மீண்டும் கோசலத்திற்கு சென்றுவிடுவதைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்றான் பிருஹத்பலன். சமுத்ரசேனர் “இத்தகைய கதைகளுக்கு என்ன பொருள்? இப்பிறப்பை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். மறுபிறப்பை பற்றி நமக்கு என்ன தெரியும்? தெரியாதவற்றை பற்றி பேசுவது ஷத்ரியனின் பணி அல்ல, அது சூதர்களின் உலகம்” என்றார். “ஆம், ஆனால் இப்போது அவன் கையால் நான் கொல்லப்பட விரும்பவில்லை” என்று பிருஹத்பலன் சொன்னான். “நான் அஞ்சுவது சாவை அல்ல. சாவுக்குப் பின்னரும் தொடரும் வஞ்சத்தின் தொடரை. இங்கே இச்சரடை அறுத்து விடுபட விழைகிறேன்.”

“எப்படி எவர் சொல்லெடுத்தாலும் இங்கு போரைப்பற்றி பேசுவதனைத்தும் இந்த அச்சத்திலிருந்துதான். நாம் எவரும் எஞ்சப்போவதில்லை” என்றார் சமுத்ரசேனர். “நேற்று நிகழ்ந்ததென்ன? மீண்டும் ஒரு கொலைவெறியாடல். இறந்த மன்னர்களின் பெயர்களை நேற்று படைத்தலைவன் பட்டியலிட்டான். ஒவ்வொரு பெயரும் என் நெஞ்சை அறுத்தது. அவர்களின் முகங்களும் சொற்களும் செரிக்காத உணவென உள்ளே புளித்துக் கொப்பளித்தன. இனி அந்த நாடுகளெல்லாம் என்ன ஆகும்?” சந்திரசேனர் “எந்த அறிவின்மையால் நாம் பட்டத்து இளவரசர்களை கொண்டுவந்து இந்தக் களத்தில் நிறுத்தினோம்?” என்றார். சமுத்ரசேனர் “பட்டத்து இளவரசர்களை களம் நிறுத்தாமல் இருந்தால் நம்மால் வென்ற நிலத்தில் எப்பங்கும் கோர இயலாது. ஒருவேளை நாம் இக்களத்தில் மறைந்தால் நமது பட்டத்து இளவரசர்கள் ஷத்ரியப் படைக்கூட்டிலிருந்து முற்றிலும் அகன்றுவிடுவார்கள்” என்றார்.

“ஆம், அதுதான் நமது கணிப்பு. ஆனால் இப்படி குலம் முழுமையும் அழியுமென்று அப்போது எண்ணியிருக்கவில்லை” என்றார் சந்திரசேனர். “அதைப்பற்றி இப்போது என்ன? நாம் என்ன செய்யவிருக்கிறோம்?” என்றார் சமுத்ரசேனர். “அனைத்து ஷத்ரியர்களையும் இன்று துரியோதனர் அவையில் எழுந்து பேசச் சொல்லலாம். அது ஒன்றே செய்வதற்குரியது” என்று பிருஹத்பலன் சொன்னான். “அமைதிக்கு அவர் ஒப்பமாட்டார்” என்று மீண்டும் சமுத்ரசேனர் சொன்னார். “ஒப்பமாட்டார். ஆனால் ஷத்ரியர்கள் மேலும் உயிர்கொடுக்க சித்தமாக மாட்டோம் என்று அவரிடம் சொல்லியாகவேண்டும். முழுப் போரையும் இனி அவரே தன் தோளில் நிகழ்த்தட்டும். நாம் படைவல்லமையை மட்டும் அளிப்போம். அரசர்கள் முற்றிலும் பின்னணியில்தான் நிற்கவேண்டும்.”

“நேற்றும் முன்னாளும் முற்றிலும் பின்னணியில்தான் இருந்தோம். பின்னணியில் இருப்பவர்களை கொல்வதற்கும் அவர்களிடம் படைக்கலங்கள் இருக்கின்றன” என்றார் சமுத்ரசேனர். பிருஹத்பலன் எண்ணியிராதபடி உளம் சோர்ந்து “என்ன பொருள் இவற்றுக்கெல்லாம் என்றே புரியவில்லை. முற்றிலும் வீண் பேச்சு” என்றான். “இன்று அவையில் என்ன நிகழ்கிறது என்று பார்ப்போம். நமது எதிர்ப்பையேனும் பதிவு செய்வோம். இப்போரை இவ்வாறே முன்னெடுத்தால் இது எங்கு சென்று சேரும் என்று துரியோதனர் எண்ணவில்லை என்றாலும் பீஷ்மரும் துரோணரும் கிருபரும் சல்யரும் எண்ணட்டும். அவர்கள் இப்போர் தொடங்குவதற்கு முன் துரியோதனருக்கு அளித்த சொல்லுறுதிகள் என்னாயிற்று? அரணென கௌரவ குலத்தை காத்து நிற்பேன் என்று சொன்ன பீஷ்மரின் கண் முன்னால் கௌரவர்கள் ஒவ்வொரு நாளும் இறந்து உதிர்ந்துகொண்டிருக்கிறார்கள்” என்று சமுத்ரசேனர் சொன்னார்.

“ஆம், அவர்களை நோக்கி நாம் பேசுவோம். ஒருவேளை ஆயிரத்தில் ஒரு பங்கு நல்லூழ் இருந்தால் துரியோதனர் நம் சொற்களை செவி கொள்ளக்கூடும்” என்று பிருஹத்பலன் சொன்னான். எழுந்தபோது தலைசுழன்றவன்போல நிலையழிந்து மீண்டும் அமர்ந்துகொண்டான். “என்ன?” என்றார் சமுத்ரசேனர். “தலைசுழல்கிறது. விழித்திருக்கையிலேயே கனவு வந்து சூழ்கிறது” என்றான் பிருஹத்பலன். “என்ன கனவு?” என்றார் சமுத்ரசேனர். “ஒரு தாமரை. அதற்குள் இரண்டு புழுக்கள்… என்ன என்று புரியவில்லை” என்றான் பிருஹத்பலன்.

துரியோதனனின் சொல்சூழ் அவையில் அரசர்கள் ஒவ்வொருவராக வந்து அமர்ந்துகொண்டிருந்தனர். அவர்களின் ஒற்றைச் சொற்களும் ஆடையசைவின் ஒலிகளும் கலந்து கேட்டுக்கொண்டிருந்தன. பிருஹத்பலன் கைகூப்பியபடி உள்ளே நுழைந்து அவையை ஒருமுறை விழிசுழற்றி நோக்கியபின் கூர்ஜர அரசர் சக்ரதனுஸை நோக்கி தலை அசைத்தான். அவர் மெல்லிய புன்னகை பூத்து தலையசைத்தார். அவன் தன் பீடத்தில் அமர்ந்து அருகிலிருந்த அனுவிந்தனிடம் பேசுவதற்காக திரும்பி, உடனே திகைத்து அதை உடனே மறைத்து இன்சொல் எடுத்தான். அருகே இருந்த காரூஷநாட்டு க்ஷேமதூர்த்தி “நன்று, கோசலரே” என்றார்.

அவனிலிருந்த திகைப்பை புரிந்துகொண்டு க்ஷேமதூர்த்தி “அவந்தியின் படைகளை நான்காக பிரித்து புளிந்தர்களுடன் இணைத்துக்கொண்டிருக்கிறார்கள். காரூஷப் படைகளும் புளிந்தர்களுடன் நின்றுள்ளன” என்றார். “நன்று” என்று பிருஹத்பலன் சொன்னான். க்ஷேமதூர்த்தி “படைகள் குறைந்துகொண்டே இருக்கின்றன. ஒருவரை ஒருவர் முன்பறியாதவர்கள் இணைந்து நிற்கவேண்டியிருக்கிறது. என்ன துயரென்றால் முன்னரே போரிட்டுக்கொண்ட படையினர்கூட சேர்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. புளிந்தர்களுடன் இணைந்துள்ளனர் அஸ்மாகநாட்டுப் படையினர். அவர்களுக்கும் அவந்தியினருக்கும் நூறாண்டுகளாக போர் நிகழ்ந்துள்ளது” என்றார்.

கொம்பொலி எழுந்ததும் கைகூப்பியபடி துரியோதனன் அவைக்குள் நுழைந்து பீடத்தில் அமர்ந்தான். நிமித்திகன் அவை கூடும் நோக்கத்தை உரைத்து முடித்ததும் பூரிசிரவஸ் எழுந்து முகமன்கள் ஏதுமில்லாமல் “வெற்றி திகழ்க!” என வாழ்த்தி தொடங்கினான். “அவையினரே, இந்த எட்டு நாள் போரில் நாம் பாண்டவப் படைகளின் பெரும்பகுதியை அழித்துவிட்டிருக்கிறோம். நமது திறல்மிக்க படைத்தலைவர்களாகிய பீஷ்மரும் துரோணரும் கிருபரும் ஜயத்ரதரும் சல்யரும்

அஸ்வத்தாமரும் தங்கள் முழு செயலூக்கத்துடன் களம் நின்றிருக்கிறார்கள். ஆம், வெற்றி எளிதல்ல என்று தெரிந்தது. ஆனால் அணுக அரிதல்ல என்றும் தெளிவாக இருக்கிறது. நாம் வெல்வோம் என்னும் உறுதி அமைந்துள்ளது” என்றான்.

“இன்னும் ஓர் அடிதான். உடைந்து சரிவதற்கு முன்வரை கற்கோட்டைகள் உடைவதற்கு வாய்ப்பே அற்றவை என்றே தோன்றும். அதன் அடித்தளத்தில் விரிசல் விழுந்திருப்பதை அதனுடன் மோதும்போது மட்டுமே நாம் புரிந்துகொள்ள இயலும். அவையீரே, நான் உணர்கிறேன் பாண்டவப் படையின் அடித்தளம் சரிந்துவிட்டது என்று. ஒருகணம், இன்னும் ஒருகணம், அது முழுமையாகவே சரிந்து சிதறும். அந்தக் கணம் வரை நாம் நின்று பொருதியாக வேண்டும். அதற்கு முந்தைய கணம் வரை நம்பிக்கை இழக்கவும் பின்னடையவும் வாய்ப்பிருக்கிறது. நாம் பொருத வேண்டியது நம்முள் நம்பிக்கையின்மையாகவும் சோர்வாகவும் வெளிப்படும் அந்த இருள்தெய்வங்களுடன் மட்டுமே. தவம் கனியும்தோறும் எதிர்விசைகள் உச்சம் கொள்ளும். வழிபடு தெய்வம் எழுவதற்கு முன்னர் இருள்தெய்வங்கள் தவம் கலைக்க திரண்டு எழும். நாம் வெல்வோம். வென்றாகவேண்டும். நாம் உளம்தளராது முன்சென்றால் முன்னோர் நமக்கென ஒருக்கிய கனிகளை கொய்வோம். ஆம், அவ்வாறே ஆகுக!”

“ஆம்! ஆம்! ஆம்!” என்று அவை ஓசையிட்டது. “இன்றைய போருக்கென படைசூழ்கையை வகுத்துள்ளேன். அவற்றை ஓலைகளாக்கி அரசருக்கும் படைத்தலைவர்களுக்கும் அளித்துள்ளேன். நீங்கள் அனைவரும் அதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும்” என்றான் பூரிசிரவஸ். “இந்தப் படைசூழ்கை நேற்றே பிதாமகர் பீஷ்மரால் எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் அதை பகுத்து வரைந்தெழுப்பினேன். சர்வதோபத்திரம் என்று நூல்களில் சொல்லப்படுவது இது. பன்னிரு ராசிக்களத்தின் வடிவில் அமைந்தது. இதன் மையம் என சகுனி அமைவார். பன்னிரு களங்களில் பன்னிரு போர்த்தலைவர்கள் தலைமைகொள்வார்கள். துரியோதனர் தன் இளையோருடன் ஒரு களத்திலமைவார். பீஷ்ம பிதாமகரும் ஜயத்ரதரும் சல்யரும் அஸ்வத்தாமரும் நானும் கிருபரும் துரோணரும் பால்ஹிகரும் பகதத்தரும் மாளவரும் கூர்ஜரரும் பிற களங்களில் அமைவோம். இது விடாது சுழன்றுகொண்டிருக்கும் சகடம். தேவைக்கேற்ப களத்தில் சுழன்று சுழன்று சென்று தாக்கும் வல்லமைகொண்டது.”

சல்யர் “பிதாமகர் பீஷ்மருக்கு நேர்பின்னால் துரோணர் அமையும்படி வகுக்கப்பட்டிருக்கவேண்டும்” என்றார். பூரிசிரவஸ் “ஆம், அப்படியே அமைந்துள்ளது” என்றான். “ஒருமுறை இச்சகடம் தன்னை சுற்றிக்கொள்ள என்ன பொழுதாகும்?” என்று ஜயத்ரதன் கேட்டான். “முழுப் படையும் சுற்றிவர அரைநாழிகைப் பொழுதாகும்… விளிம்பில் புரவிகளும் பின்னர் தேர்களும் அப்பால் காலாள்படையும் நின்றிருப்பதனால் சுற்றுதல் எளிது” என்றான் பூரிசிரவஸ். “ஓலைகள் அனைவருக்கும் செல்லட்டும்” என்றார் துரோணர். அஸ்வத்தாமன் “அவர்களின் படைசூழ்கை என்னவென்று தெரிந்ததா?” என்றான். “நம் படைசூழ்கையை ஒட்டியே அவர்களுடையது அமையும்… ஒற்றர்களை அனுப்பியிருக்கிறேன்” என்று துச்சாதனன் சொன்னான்.

படைசூழ்கைகள் பற்றிய சொல்லாடல்கள் சென்றுகொண்டிருப்பதை பிருஹத்பலன் நோக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் எவருக்கும் பெரிய ஆர்வமிருப்பதாக தெரியவில்லை. கிருபர் மேலும் சில ஐயங்களை கேட்டார். பூரிசிரவஸ் அவற்றை விளக்கினான். எதிர்பாராத தருணத்தில் சல்யர் எழுந்து “நான் ஒன்றை கேட்க விழைகிறேன். நாம் வகுக்கும் படைசூழ்கைகள் எவையேனும் அவற்றின் இயல்பான வெற்றியை அடைந்துள்ளனவா? ஒவ்வொரு படைசூழ்கையும் இணையான

படைசூழ்கையால் எதிர்க்கப்படுமெனில் இவ்வாறு எண்ணி எண்ணி அமைப்பதற்கு என்ன பொருள்?” என்றார். “இதென்ன வினா?” என்று ஜயத்ரதன் திகைத்தான். “இது எளிய மலைமகனின் ஐயம் என்றே கொள்க… சொல்லுங்கள்” என்றார் சல்யர்.

பூரிசிரவஸ் “மாத்ரரே, இணையான படைசூழ்கையால் எதிர்க்கப்படுவதனால்தான் நாம் எளிதில் வெற்றியடையாமல் இருக்கிறோம். நாம் படைசூழ்கை அமைக்காது சென்றிருந்தால் இத்தருணத்தில் நாம் அனைவரும் விண்ணுலகிலிருந்திருப்போம்” என்றான். துச்சாதனன் “ஆம், கவசங்கள் அணிந்தே செல்கிறோம். ஆயினும் அவை உடைக்கப்படுகின்றன. ஆகவே கவசமணியாமல் களம்நிற்போமா?” என்றான். “படைசூழ்கை அமைக்காது செல்வதைவிட படைசூழ்கையை அமைத்துச் செல்வது மேல்” என்றான். அவன் இளிவரலாக சொல்கிறானா என்பது முகத்திலிருந்து தெரியவில்லை. பூரிசிரவஸ் “நாம் படைசூழ்கைகளை அமைப்பது வெல்லும் பொருட்டே. களத்தில் அச்சூழ்கைகள் தோற்கடிக்கப்படலாம். ஆனால் என்றேனும் ஒருமுறை நமது படைசூழ்கை அவர்களின் படைசூழ்கையைவிட ஆற்றல் மிகுந்ததாக அமையும். அத்தருணத்தில் நாம் வெல்வோம். அந்த வெற்றி நோக்கியே ஒவ்வொரு படைசூழ்கையும் அமைக்கப்படுகின்றது” என்றான்.

பிருஹத்பலன் கனைத்துக்கொண்டு எழுந்ததுமே சக்ரதனுஸ் தானும் எழுந்தார். பிருஹத்பலன் “இந்தப் போர் நீங்கள் எண்ணுவதுபோல் வெற்றி நோக்கித்தான் செல்கிறது என்பதற்கு என்ன சான்று உள்ளது? கௌரவர்கள் ஒவ்வொரு நாளும் இறந்துகொண்டிருக்கிறார்கள். கௌரவ மைந்தர் பாதிக்குமேல் கொல்லப்பட்டுவிட்டனர். இத்தருணம்வரை மறுதரப்பில் கொல்லப்பட்ட பெருந்திறலுடையவர் எவர்? சங்கனையும் ஸ்வேதனையும் சொல்வீர்கள் என்று நான் எண்ணவில்லை” என்றபோது அவையில் சிரிப்பொலி எழுந்தது. “நான் இளிவரலாடவில்லை. சொல்க, பாண்டவர்களில் ஒருவருக்கேனும் சிறு புண்ணாவது இதுவரை நிகழ்ந்துளதா? படைத்தலைமைகொள்ளும் திருஷ்டத்யும்னனோ சாத்யகியோ துருபதரோ கொல்லப்பட்டிருக்கிறார்களா?”

அவையில் ஓசைகள் எழுந்தன. “ஒவ்வொருநாளும் இங்கே வெற்றியென சொல்லெடுக்கப்படுகிறது. மெய்யாகவே கேட்கிறேன், எவருக்காக நாம் இச்சொற்களை இங்கு கூறுகிறோம்?” என்றான் பிருஹத்பலன். ஜயத்ரதன் “அவர்களை கொல்வோம். ஐயம் தேவையில்லை” என்றான். பிருஹத்பலன் “நாம் இந்த வஞ்சினங்களை உரைக்கத்தொடங்கி எட்டு நாட்களாகின்றன. கணம் கணமென நிகழும் இப்போரில் எட்டு நாட்களென்பது நெடும்பொழுது. இருதரப்பிலும் ஷத்ரியர்கள் கொன்றும் கொல்லப்பட்டும் அழிந்துகொண்டிருக்கிறோம். இந்தப் பொருளின்மையை இதற்குமேல் நாம் நீட்டிக்க வேண்டுமா?” என்றான்.

சக்ரதனுஸ் “ஆம், நான் கேட்க விழைவதும் இதுவே. இங்கே பொருளிலாத சாவுதான் நிகழ்கிறது. போர் என்பது எவர் மேல் என்பதை முடிவுசெய்யும் களநிகழ்வுதான். அதுவே நூல்கள் சொல்வது. மதம்கொண்ட களிறுகள்கூட மத்தகம்முட்டிக்கொண்டு வலுவறிந்ததும் போரை நிறுத்திக்கொள்கின்றன. ஆற்றலுடையதை அல்லது பணிகிறது. இருசாராரும் நிகர் என்றால் அதை எண்ணி போரை நிறுத்திக்கொள்வோம். இருசாராரும் முற்றழிவதுவரை போரிடுவோம் எனில் அது போரே அல்ல. எந்தப் போர்நூலும் அதை சொல்வதில்லை. காட்டில்கூட எந்த விலங்கும் அவ்வாறு போரிட்டுக்கொள்வதில்லை” என்றார்.

“நாம் என்ன செய்யவேண்டும் என தாங்கள் எண்ணுகிறீர்கள், கோசலரே?” என்று கிருபர் கேட்டார். “என்ன செய்யவேண்டுமென மூத்தோர் முடிவெடுங்கள். இங்கே

ஷத்ரிய குலம் அழிந்துகொண்டிருக்கிறது. வேதங்களுக்கு வேலியாக முனிவர்களால் அமைக்கப்பட்டது இக்குலம். இப்போது களத்தில் இது முற்றழியுமெனில் நாளை வேதப்பயிர் இங்கு எவ்வாறு செழிக்கும்? இங்கு இந்த நெறிகள் அனைத்தும் எத்தகைய பெரும் குருதிச்சேற்றிலிருந்து முளைத்தெழுந்தவை என்று உங்களுக்கு சொல்லவேண்டியதில்லை. ஆயிரம் ஆண்டுகாலம் நெறியின்மையே திகழ்ந்த நிலத்தில் ரிஷிகள் இயற்றிய பெருந்தவத்தால் விளைந்தது இது. இங்கு வேதம் மழையென இறங்கியதால்தான் ஞானம் பொலிகிறது, செல்வம் நிறைகிறது" என்றான் பிருஹத்பலன்.

"வேதத்தின் பொருட்டே நாம் களம் நிற்கிறோம்" என்று பூரிசிரவஸ் சொன்னான். "ஆம், ஆனால் இப்போர் செல்லும் திசை நோக்கினால் வேதத்தின் காவலர்கள் முற்றழிவார்கள் என்றே தோன்றுகிறது. காவலை அழித்து வேதத்தை நிலைநிறுத்தவியலுமா? சூழ நிறைந்துள்ள வேதஎதிரிகள் முன் வேலியின்றி வேதத்தை திறந்திட்டு நீங்கள் அடையப்போவதென்ன?" என்று பிருஹத்பலன் கேட்டான். "சரி, நாம் என்ன செய்யவேண்டும்?" என்று துர்மதன் கேட்டான். கையை தூக்கி முன்னகர்ந்து "போரை நிறுத்தவேண்டுமென்கிறீர்களா? அது நிகழாது. எங்கள் உடன்குருதியினரின் பழிக்காக வேறு எவர் அகன்றாலும் நாங்கள் களம் நிற்போம்" என்று கூச்சலிட்டான்.

"உயிர்கொடுப்பது உங்கள் விழைவு" என்றான் பிருஹத்பலன். "நாங்கள் எந்த வஞ்சத்திற்காகவும் இங்கு வரவில்லை. வேதம் காக்கவே வந்தோம். வேதம் செழிக்கவேண்டுமெனில் ஷத்ரியக்குருதி எஞ்சியிருக்கவேண்டும். ஆகவே இப்போரிலிருந்து விலக எண்ணுகிறோம்." எழுந்து கூர்ந்து நோக்கி தணிந்த குரலில் "போரிலிருந்து விலக எவருக்கும் ஒப்புதல் இல்லை" என்று துரோணர் சொன்னார். "விலகினால் என்ன செய்வீர்கள்? எங்களை கட்டுப்படுத்தும் விசை உங்களிடம் என்ன உள்ளது?" என்று பிருஹத்பலன் கூவினான். "வில் உள்ளது!" என்று துரோணர் சொன்னார். "ஐயமே வேண்டியதில்லை, இக்களத்திலிருந்து படையுடன் விலகிச்செல்லும் ஒவ்வொரு ஷத்ரியரும் எங்கள் எதிரிகளே. இப்போர் முடிந்து அவர்களை தேடி வருவோம் என்று எண்ண வேண்டியதில்லை, இப்போர்க்களத்திலேயே அவர்களை கொன்றழிக்கவும் துணிவோம்" என்றார்.

துரோணரின் முகத்தை பார்த்தபின் சக்ரதனுஸ் அமர்ந்துகொண்டார். பிருஹத்பலன் மெல்ல கைகள் நடுங்க சொல்லிழந்து தவித்து "அதற்கு உங்களுக்கு உரிமையில்லை" என்றான். "வெல்வதற்கான உரிமை ஒவ்வொரு ஷத்ரியனுக்கும் உள்ளது. வெல்வதன் பொருட்டே இங்கு களம் எழுந்துள்ளோம். போர்க்களத்தில் கைவிட்டு விலகுதல் கோழையின் செயல் மட்டுமல்ல அது பின்னின்று குத்தும் வஞ்சகமும்கூட. வஞ்சகரை கொல்வதற்கு அரசனுக்கு உரிமையுள்ளது" என்றார் துரோணர். "வென்றபின் சிறுபழிகளை தெய்வங்களுக்கு பலிகொடுத்து அழித்துக்கொள்வோம். அறமே வெல்லும், வெல்வதே அறம். வெல்லாதொழிந்தால் எந்த அறமும் பொருளற்றதே." பிருஹத்பலன் மேலும் சொல்ல நாவெடுக்க கூரிய குரலில் "கோசலனே, வாள்பழி கொள்ளவேண்டியதில்லை. அமர்க!" என்றார் துரோணர்.

சல்யர் சீற்றத்துடன் "அவர்களுக்கு அதை சொல்ல உரிமையுண்டு, துரோணரே. நாம் அவர்களுக்கு எந்தச் சொல்லையும் அளித்து இந்தப் போருக்கு அழைத்து வரவில்லை. அவர்களே வஞ்சினம் உரைத்து வந்தார்கள். ஆகவே அவர்களுக்கு விலகிச்செல்ல உரிமை உள்ளது" என்றார். துரோணர் "அந்த நெறிகளை அவர்களின் சிதைகளுக்கு முன்னால் நின்று பேசி முடிவெடுப்போம். இங்கு வெற்றியொன்றே இலக்கு. ஐயம் தேவையில்லை, இப்படையிலிருந்து விலக முயலும் எவரும்

அக்கணமே கௌரவப் படைகளால் கொன்றழிக்கப்படுவார்கள்" என்று துரோணர் சொன்னார். "அது மாத்ரர்களுக்கும் பொருந்தும்."

சல்யர் "என்ன சொன்னாய், அறிவிலி!" என கூவியபடி எழுந்தார். "அமர்க, ஒரு சொல் இனி உன் நாவிலெழுந்தால் உன் தலை மண்ணில் கிடக்கும்! எனக்கு அதற்கு வில்லோ அம்போ தேவையில்லை" என்றார் துரோணர். கைகள் பதற தலைநடுங்க நின்று வாய்திறந்துமூடிய சல்யர் விழுவதுபோல் பீடத்தில் அமர்ந்தார். துரோணர் "இப்போர் தொடரட்டும். நாம் வெல்வோம். பிற எண்ணங்கள் அனைத்தும் அரசவஞ்சகம்" என்றார். ஜயத்ரதன் எழுந்து "அதை சிந்து நாட்டின் படைகள் வழிமொழிகின்றன" என்றான். ஷத்ரியர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நோக்கியபடி அமைதியாக இருக்க பிருஹத்பலன் "நான் பின்னடைவதைப்பற்றி பேசவில்லை. பேரழிவைப்பற்றி பேசுகிறேன். அதை குறைப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை நீங்களே முடிவெடுங்கள். அதற்கு நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்" என்றபின் கைகளை விரித்து தலைகுலுக்கி பீடத்தில் அமர்ந்தான்.

துரியோதனன் அங்கு நிகழ்ந்த சொற்களை கேட்காதவன்போல் அமர்ந்திருந்தான். அவையில் நிகழ்ந்த அமைதியை அவனுடைய மெல்லிய அசைவு கலைத்து அனைத்து விழிகளையும் ஈர்த்தது. "அவையினரே, இந்தப் போர் முற்றிலும் நிகர்நிலையில் நின்றுள்ளது என்பதே உண்மை" என தாழ்ந்த குரலில் அவன் சொன்னான். "ஓர் அணுவிடைகூட அவர்களோ நாமோ முன்னகரவில்லை. நாம் முன்னகர்ந்து வெல்ல வழி ஒன்றே. நம் தரப்பில் பெருவீரன் ஒருவனை உள்ளே கொண்டுவருவது. கர்ணன் போருக்கு இறங்கட்டும். இப்பொழுதேனும் பிதாமகர் பீஷ்மர் அதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும்" என்றான்.

பீஷ்மர் அதை கேட்கவில்லை. தாடியை நீவியபடி அரைவிழி சரித்து எங்கோ நோக்கி அமர்ந்திருந்தார். துரோணரின் முகம் சுருங்கியது. அவர் "கர்ணன் களமிறங்குவதனால் பெரிய மாற்றம் எதுவும் நிகழப்போவதில்லை" என்றார். "அவன் வெற்றியை ஈட்டி நம் கையில் அளிப்பான் என்று நான் சொல்ல வரவில்லை. ஆசிரியரையும் பிதாமகரையும்விட பெருவீரன் அவன் என்றும் நான் கூறவில்லை. ஆனால் அவனுக்கு இப்போரில் பெருந்திறலுடன் களம் நிற்கும் வீரம் உண்டென்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். முற்றிலும் நிகர்நிலையில் துலாவின் இரு தட்டுகளும் நின்றிருப்பதனால் அவன் ஒருவன் இப்பகுதியில் வரும்போது போரின் கணக்குகள் அனைத்தும் மாறத்தொடங்கும்" என்றான்.

துரோணர் ஏற்காமல் தலையசைத்தார். "அவன் பொருட்டு பிதாமகர் பீஷ்மர் கொண்டுள்ள ஒவ்வாமை நீங்குமெனில் நாம் வெற்றிநோக்கி செல்ல இயலும்" என்றான் துரியோதனன். "பிதாமகரிடம் நான் கனிந்து மன்றாடுகிறேன். பிதாமகர் பீஷ்மர் இக்கொடையை எனக்கு அளிக்க வேண்டும். என் விழைவுக்காகவோ வஞ்சத்துக்காகவோ அல்ல, இறந்த என் உடன்பிறந்தாரின் குருதிப்பழிக்காக" என்று சொல்லி கைகூப்பினான். பீஷ்மரின் அருகே குனிந்த கிருபர் என்ன நிகழ்ந்ததென்று சொல்ல அவர் உடல் நடுங்க எழுந்து "இல்லை! இல்லை!" என்று முதிய குரலில் கூவினார். "நான் இருக்கும் வரையில் இப்படையில் ஒருபோதும் சூதன் படைத்தலைமை கொள்ளமட்டான்" என்றார்.

"படைத்தலைமை கொள்ள வேண்டியதில்லை. இப்போரில் அவன் இறங்கட்டுமே என்றே சொன்னேன்" என்றான் துரியோதனன். "இங்கு அரக்கர்களும் நிஷாதர்களும் கிராதர்களும்கூட படை நின்றிருக்கிறார்கள் அல்லவா?" பீஷ்மர் "ஆம், அவர்களில் ஒருவனாக அவன் களம் நிற்கட்டும். ஆனால் அங்க நாட்டுப் படையுடன் அவன்

வரக்கூடாது. அவன் கொடி கொண்டோ முடி கொண்டோ களத்தில் நிற்கக்கூடாது" என்றார். "அதை நாம் எப்படி சொல்ல முடியும்?" என்று துரியோதனன் சொன்னான். "நான் சொல்கிறேன். அவன் ஷத்ரியனாக உருக்கொண்டு இங்கு நின்றிருக்கக்கூடாது. நீ சொல்வதுபோல் விழைந்தால் கிராதனாக வரட்டும், நிஷாதனாக வரட்டும்" என்றார் பீஷ்மர்.

"தாங்கள் என் மேல் வஞ்சம் கொண்டு பேசுவதுபோல் உள்ளது" என்றான் துரியோதனன். பீஷ்மர் சினத்துடன் "வஞ்சம் கொண்டு பேசுகிறேன் என்றால் இதுநாள் வரை உனக்காக களத்தில் நின்றிருக்கமாட்டேன். இந்தப் போர் எங்கு வென்றாலும் எனக்கொன்றுமில்லை. இத்தனை ஆண்டுகள் மண்ணில் கடுநோன்புகள் கொண்டு நான் ஈட்டிய அனைத்தையும் இந்தக் களத்தில் நெறிபிறழ்வதனூடாக இழந்துகொண்டிருக்கிறேன். என்னில் குடியேறிய எட்டு வசுக்களில் எழுவரை இழந்துள்ளேன். எஞ்சியுள்ளவன் என் நாள்தேவனாகிய பிரபாசன் மட்டுமே. அவ்விழப்புகள் அனைத்தும் உனக்காகவே. இன்னும் நூறு பிறவிகள் வழியாக நான் ஈட்டி நிகர்செய்யவேண்டியவை அவ்விழப்புகள்" என்றார்.

"தாங்கள் எங்களுக்காக களம் நிற்கவில்லை என்றோ இழக்கவில்லை என்றோ சொல்லவில்லை. பிதாமகரே, வெற்றிக்கான ஒரு வழி திறந்திருக்கையில் தங்கள் தனிப்பட்ட ஒவ்வாமையால் அதை தவிர்க்க வேண்டாம் என்று மட்டுமே கோரினேன்" என்று துரியோதனன் சொன்னான். "அது வெற்றிக்கான வழி அல்ல, பேரிழிவுக்கான வழி. மானுடர் இப்புவியில் அடைவனவற்றின் பொருட்டு வாழக்கூடாது, விண்ணில் ஈட்டப்படுவனவும் அவர்களின் கணக்குகளில் இருந்தாகவேண்டும். இங்கு வென்று, அங்கு பெரும்பழி ஈட்டி நீ அமைவாய் என்றால் அதை உன் தந்தையாக நான் ஒருபோதும் ஒப்ப இயலாது" என்றார் பீஷ்மர்.

"தங்கள் சொற்கள் எனக்கு புரியவில்லை" என்றான் துரியோதனன். "இதற்கு அப்பால் எனக்கும் கூறுவதற்கு ஒன்றுமில்லை" என்று பீஷ்மர் சொன்னார். "நான் எண்ணுவது உனது பெருமையைக்குறித்து மட்டுமே. நீ இந்த அவையில் அவன் பெயரைச் சொன்னது எப்படி விளக்கினாலும் என் மேல் உள்ள நம்பிக்கை இழப்பையே காட்டுகிறது. என்னால் வெல்ல முடியாதென்று நீ சொல்கிறாய் என்றே அதை வரலாறு பொருள்கொள்ளும்" என்றார் பீஷ்மர். "அவ்வாறல்ல. பிதாமகரே, களத்தில் ஒருவரும் இதுவரை வெல்லவில்லை என்பதை நான் அறிவேன். தாங்கள் இருக்கும்வரை என்னை எவரும் தோற்கடிக்க இயலாதென்று உறுதி கொண்டுள்ளேன். ஆனால்…" என்று அவன் சொல்ல அவர் கைவீசி அதை தடுத்தார்.

"அந்த ஆனால் எனும் சொல்லே கர்ணனாக இங்கு வரவிருக்கிறது" என்று பீஷ்மர் கூவினார். அவருடைய உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. தன் மரவுரியாடையை இழுத்து தோளிலிட்டபடி கிளம்புவதுபோல் அசைந்தார். "இப்போரில் எட்டு நாட்களுக்குப் பின் அவன் களம் இறங்குவான் எனில் அது எனக்கு பெரும்பழியையே சேர்க்கும். ஒன்று செய்கிறேன், நான் வில் வைத்து பின்னடைகிறேன். காட்டுக்கு சென்றுவிடுகிறேன். என் பிழைகளுக்காக கடுநோன்பு கொண்டு அங்கு உயிர் துறக்கிறேன். கர்ணன் நின்று உன் படையை நடத்தட்டும். நீ விழையும் வெற்றியை உனக்கு அவன் ஈட்டி அளிக்கட்டும்" என்றார் பீஷ்மர்.

பதற்றத்துடன் துரியோதனன் எழுந்தான். "பிதாமகரே!" என்று அழைத்து கைநீட்டி முன்னால் வந்தான். "நான் சொல்வதை தாங்கள் புரிந்துகொள்ளவில்லை. அளிகூர்ந்து என் சொற்களை நோக்குக! முற்றிலும் நிகர்நிலையில் இன்று இரு படைகளும் நின்றிருக்கையில் அவன் நம் தரப்புக்கு வருவது சற்று முன்தூக்கம் அளிக்கும். அந்தச் சிறு வேறுபாடே நமக்கு வெற்றியை ஈட்டும். தாங்கள் அகன்று

அவ்விடத்துக்கு அவன் வந்தால் நம்மில் இருக்கும் ஆற்றல் மேலும் குறையும். அது உறுதியாக என் தோல்விக்கே வழிவகுக்கும். பிதாமகரே, தங்களுக்கிணையான போர்வீரர் எவரும் இந்த பாரதவர்ஷத்தில் இல்லை என்பதை தாங்களே அறிவீர்கள்."

"அந்தப் பேச்சை இனி பேசவேண்டியதில்லை. நாங்கள் இருவரும் இணைந்து ஒரு போர்க்களத்தில் நின்றிருப்பது ஒருபோதும் நிகழாது" என்றார் பீஷ்மர். கிருபர் "அவன் இப்போரில் கலந்துகொள்ள வேண்டியதில்லை என்றே நானும் எண்ணுகிறேன்" என்றார். அனைவரும் திரும்பி நோக்க "அவன் இப்போரில் கலந்துகொண்டால் என்ன நிகழுமென்பதை எண்ணி நோக்குக! ஷத்ரியர்கள் தோற்று சோர்ந்து பின்னடையும்போது சூதனொருவன் வந்து வேதத்தை காத்தான் என்று ஆகுமல்லவா? இன்று இந்த அவையில் பிருஹத்பலனும் இவனுடன் இணைந்த ஷத்ரியர்களும் சொன்ன சொற்களை காலத்தின் செவி கேட்டிருக்கும். சூதர் சொல்லில் அது வாழும். ஷத்ரியர் உரைக்கட்டும் சூதன் வந்து காக்க வேண்டுமா உங்கள் வேதங்களை?" என்றார் கிருபர்.

பிருஹத்பலன் "வேண்டியதில்லை! கர்ணன் களமிறங்க வேண்டியதில்லை" என்றான். சக்ரதனுஸ் "ஆம், ஷத்ரியர்கள் இக்களத்தில் இருக்கும்வரை சூதன் வில்லுடன் முன் நிற்க வேண்டியதில்லை. அதை ஒப்பமாட்டோம்" என்றார். மாளவ மன்னர் இந்திரசேனரும் காரூஷரான க்ஷேமதூர்த்தியும் "ஆம், அதுவே எங்கள் கருத்தும்" என்றனர். கிருபர் திரும்பி "வேறென்ன? இங்குள எவருக்கும் கர்ணன் களமிறங்குவதில் ஒப்புதல் இல்லை. எனவே இதை நாம் மீண்டும் பேச வேண்டியதில்லை என்றே எண்ணுகின்றேன்" என்றார். "ஆம்! ஆம்!" என அவை ஓசையிட்டது. பிருஹத்பலன் "எங்களுக்கு பிதாமகர் பீஷ்மர் மேல் முழு நம்பிக்கை உள்ளது. அவர்பொருட்டே நாங்கள் களம் நிற்கிறோம்" என்றான்.

துரியோதனன் பெருமூச்சுவிட்டு "இப்போர் இனிவரும் நாளிலேனும் வெற்றி நோக்கி செல்லும் என்று நான் எண்ணினேன்" என்றான். பீஷ்மர் "ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்க! இப்போர் வெற்றி நோக்கியே செல்லும் என்னும் சொல்லை நான் உனக்கு அளிக்கிறேன்" என்றார். "எட்டு நாட்களில் ஈட்டாத வெற்றி இனிவரும் நாளில் எவ்வாறு ஈட்டப்படும்? சொல்க, பிதாமகரே!" என்று துச்சாதனன் உரத்த குரலில் கேட்டான். "இந்த எட்டு நாட்களிலும் என்னை தளையிட்டிருந்தது என்னைச் சூழ்ந்திருந்த வசுக்களின் தூய்மை. அவர்களின் ஆற்றல் எனக்கு காவல் என்று எண்ணினேன். அவர்களின் நெறி எனக்கு தளை என்று இப்போது உணர்கிறேன். இன்று இறுதித் தளையையும் அறுக்கிறேன். அதன் பின்னர் கீழ்மகனாக, வெற்றிக்கென எதையும் செய்யத்துணியும் கிராதனாக களம் நிற்கிறேன். என்னை தடுக்க எவராலும் இயலாது" என்றார் பீஷ்மர்.

பிருஹத்பலன் மெய்ப்புகொண்டான். அவருடைய முகம் பெருவலியிலென சுளித்திருந்தது. தாடையை இறுக்கி மூச்சொலியென பீஷ்மர் சொன்னார். "ஆயிரம் ஆண்டுகள் கெடுநரகில் விழுவேன். என் மைந்தர் அளிக்கும் ஒருதுளி நீரோ அன்னமோ வந்தடையா இருள்வெளியில் உழல்வேன். அதன் பின் கோடி யுகங்கள் பருவெளியில் வீணாக அலைவேன். என் அன்னையால் பழிக்கப்படுவேன். எனை ஆக்கிய பிரம்மத்தால் ஒதுக்கப்படுவேன். அது நிகழட்டும். இக்களவெற்றி ஒன்றை ஈட்டி உனக்களித்துவிட்டு செல்கிறேன். இது என் ஆணை!" துரியோதனன் கைகூப்பி சொல்லடங்கி இருந்தான். துர்மதன் "பிதாமகரே!" என்றான். பீஷ்மர் கைநீட்டி அவனைத் தடுத்து "இறுதித் தளையையும் இன்று அறுப்பேன். இனி தேவவிரதனாக அல்ல, கீழ்மை மட்டுமே கொண்ட கிராதனாக என்னை பாடுக சூதர்!" என்றபின் அவையிலிருந்து வெளியே சென்றார்.

அவை ஒருவரை ஒருவர் நோக்கி சோர்ந்தமர்ந்திருந்தது. துரோணர் எழுந்து “இப்போர் தொடங்கிய முதற்கணம் முதலே நம் ஒவ்வொருவரையும் நெறிபிறழச் செய்துகொண்டிருக்கிறது. காற்றில் ஆடைகள் பறப்பதுபோல் நமது அறங்கள் அகல்கின்றன. இறுதியில் வெற்றுடலுடன் நின்று நாம் அனைவரும் போரிடப் போகிறோம். நன்று! விலங்குகளும் அவ்வாறுதானே போரிடுகின்றன? போர்களின் உச்சம் என்பது விலங்காதலே” என்றபின் கிருபரிடம் கைகாட்டிவிட்டு தானும் வெளியேறிச் சென்றார்.

சொல்சூழவையிலிருந்து வெளியே வந்ததும் கூர்ஜர மன்னர் சக்ரதனுஸ் பிருஹத்பலனை அணுகி மெல்லிய குரலில் “நாம் ஒன்றும் செய்வதற்கில்லை” என்றார். பிருஹத்பலன் “நாம் கோழைகள். நம்முள் ஒற்றுமையில்லை. அந்த நெறியிழந்த அந்தணனும் திருட்டுஷத்ரியனாகிய அவன் மைந்தனும் எங்களை தாக்கினால் பிற ஷத்ரியர்கள் வெறுமனே நோக்கியிருப்பீர்கள். உங்களுக்கு எங்கள் மண்ணை பங்கிட்டு அளிப்பதாக அவர்கள் சொன்னார்களென்றால் உடனிருந்து எங்களை கொல்லவும் செய்வீர்கள்” என்றான். “உங்கள் அச்சத்துக்கும் மடமைக்கும் பரிசு இறப்புதான்... உங்கள் குலங்கள் இந்தப் பாழ்நிலத்தில் முற்றழியும். அது ஒன்றே நிகழவிருக்கிறது.”

அவன் சென்றதை நோக்கிவிட்டு சக்ரதனுஸ் திரும்பி பிற அரசர்களை நோக்கினார். அவன் பேசியதை எவரும் கேட்கவில்லை என உறுதிசெய்தபடி அவர் முற்றத்திலிறங்கி தன் படைநோக்கி சென்றார். அங்கே அவருக்காக காத்து நின்றிருந்த மாளவ மன்னர் இந்திரசேனர் “நாம் இன்றைய படைசூழ்கையில் நமது பங்களிப்பைப் பற்றி பேசவேண்டியுள்ளது. நாம் அஞ்சிவிட்டோம் என எவரும் எண்ணவேண்டியதில்லை. இன்றைய படைசூழ்கை அரிதானது. எனவே இன்று நமக்கே வெற்றி என உறுதியாகத் தோன்றுகிறது” என்றார். சக்ரதனுஸ் “நமக்கான ஆணைகளை அவர்களே பிறப்பித்துவிட்டிருக்கிறார்கள். நாம் செய்வதற்கொன்றுமில்லை. சென்று தலைகொடுப்பதை தவிர” என்றபின் தன் தேரிலேறிக்கொண்டார்.

தன் பாடிவீட்டுக்கு வந்தபோது அங்கே அவருக்காக கவசங்களுடனும் படைக்கலங்களுடனும் வீரர்கள் காத்திருப்பதை கண்டார். அவர் அமர்ந்துகொண்டதும் அவர்கள் அவருக்கு அவற்றை அணிவிக்கலாயினர். அகிபீனா உருளைகள் வந்ததும் அவற்றில் ஒன்றை எடுத்து வாயிலிட்டுக்கொண்டார். இன்னும் சிலவற்றை எடுத்து தோல்கச்சையில் கட்டிக்கொண்டு எழுந்தார். தன் வாளை அவர்கள் நீட்டியபோது அதை வாங்கி சற்றுநேரம் கூர்ந்து நோக்கினார். பின்னர் பெருமூச்சுடன் அதை இடையிலணிந்தபடி தேர் நோக்கி சென்றார்.

நிலத்தில் விழுந்து நைந்த பெரிய துணித்திரைபோல கௌரவப் படை அவருக்கு பட்டது. ஆங்காங்கே அதன் அணிவகுப்பு உடைந்திருந்தது. படைகளின் இழப்புகளுக்கேற்ப அவற்றை இணைத்து இணைத்து ஒன்றாக்கிக்கொண்டே இருந்தமையால் குலங்களும் குடிகளும் கலந்து அடையாளங்களில்லாத பெருந்திரள் எனத் தெரிந்தது. அவருடைய தேர் சென்றுகொண்டிருக்கையில் திடீரென்று படைகளுக்குள் இருந்து ஒரு குரல் ஒலித்தது. “அரசே, ஒன்று கேளுங்கள்!” அவர் தேரை நிறுத்தும்படி பாகனிடம் கையசைத்தார். அவ்வாறு கூவிய வீரனை எவரோ அடக்கிவிட்டனர் என்று தெரிந்தது. அவர் தேரை திருப்பி அருகே சென்றார். “என்ன? என்ன குரல் கேட்டது இப்போது?” என்றார்.

படைத்தலைவன் “ஒன்றுமில்லை, அரசே. நமது படைவீரன் ஒருவன் தவறுதலாக புரவியை அழைத்தான்” என்றான். அவனை கூர்ந்து நோக்கியபடி “எனக்கு செவி கேட்கும்” என்றார் சக்ரதனுஸ். “அரசே, அவன் பித்தன். போரில் உளம்பிறழ்ந்துவிட்டான்…” என்றான் படைத்தலைவன். “அவன் எவன்?” என்றார் சக்ரதனுஸ். அதற்குள் படைநிரைகளுக்குள் இருவரால் பற்றப்பட்டிருந்த ஓர் இளைஞன் உதறி எழுந்து “நான்! அழைத்தவன் நான்! அரசே, நான் தங்களிடம் சில சொற்கள் உரைக்க விழைகிறேன்” என்றான். “சொல்” என்றார் சக்ரதனுஸ். “என் பெயர் கௌமாரன். கூர்ஜரத்தின் தெற்கே சிந்துநிலத்தைச் சேர்ந்தவன். அரசே, இந்தப் போர் எதற்காக? எதன்பொருட்டு நாங்கள் இங்கே வந்து எங்கள் தோழர்களை அம்புகளுக்கு பலிகொடுக்கிறோம்?”

“நீ படைவீரன் என்பதனால்!” என்று சக்ரதனுஸ் சொன்னார். “ஆம், நான் இறக்க சித்தமானவன். ஷத்ரியனாகப் பிறந்தமையாலேயே இறந்தேயாகவேண்டுமென அறிந்துகொண்டவன். களம்படுதலை பெருமையாக எண்ணுபவன்” என்று அவன் சொன்னான். “நான் கேட்பது இந்தப் போரில் கூர்ஜரம் எதை அடையவிருக்கிறது என்று. எவருக்கெதிராக நாம் போரிட்டுக்கொண்டிருக்கிறோம்? நம் எதிரிகள் இருவர். யாதவர்களும் சைந்தவர்களும். இதோ இருவருமே நம்முடைய தோழர்களாக உடன் நின்றிருக்கிறார்கள். அங்கே படையெழுந்திருப்பவர்களுக்கும் நமக்கும் எந்தப் பூசலுமில்லை. நாம் எதன்பொருட்டு போரிட்டு சாகிறோம்?”

“படைவீரனிடம் அரசன் கொள்கைகளை விளக்கவேண்டியதில்லை” என்றார் சக்ரதனுஸ். “ஆம், ஆனால் தன் குடியிடம் மறுமொழி சொல்லியாகவேண்டும். நான் கேட்டுக்கொண்டிருப்பது எனது வினாக்களை அல்ல. என் குடியின் வினாக்களை. இங்குள்ள அத்தனை படைவீரர்களும் கேட்டுக்கொண்டிருப்பவற்றை” என்று கௌமாரன் சொன்னான். “எந்த அரசனும் குடியின் முன் படைவீரனும் காவலனுமே. என் வினாவின்பொருட்டு என்னை கொல்லலாம். ஆனால் என் குடியின் குரலாக நான் ஒலிக்கிறேன் என்பதை நீங்கள் மறுக்கவியலாது.”

சக்ரதனுஸ் அங்கே நின்றிருந்த தன் படைவீரர்களை நோக்கினார். பின்னர். “இது எனது படையின் வினாவா?” என்றார். அவர்கள் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தனர். “சொல்லுங்கள், இச்சொற்கள் உங்கள் அனைவரின் பொருட்டும் எழுந்தனவா?” அவர்களிடமிருந்து மறுமொழி வரவில்லை. “ஆமென்றே இந்தச் சொல்லின்மையை நான் எடுத்துக்கொள்கிறேன்” என்றார் சக்ரதனுஸ். “உங்கள் வினாவாக இச்சொல் திரண்டெழுந்துள்ளது என்றால் நான் மறுமொழி சொல்லியாகவேண்டும்” என்றார். பின்னர் கைகளைத் தூக்கி “அனைவரும் அறிக, எனக்கு ஒரு சொல்லும் கூறுவதற்கில்லை!” என்றார்.

நான் இப்போரில் கலந்துகொள்ள ஏன் முடிவெடுத்தேன்? எப்படி இப்படையுடன் வந்து சேர்ந்தேன்? எந்த வினாவுக்கும் என்னிடமே மறுமொழி இல்லை. சென்ற நூறாண்டுகளாகவே கூர்ஜரம் இந்நிலத்தின் எப்பூசல்களிலும் கலந்துகொண்டதில்லை. எந்தப் போரிலும் நாம் இறங்கியதுமில்லை. ஏனென்றால் பாரதவர்ஷத்தின் தொல்குடி ஷத்ரியர்கள் நம்மை சிறுகுடியென நடத்தினர். அவைகளில் சிற்றிடமே அளித்தனர். ஆகவே நாம் அவர்களையும் முழுமையாகவே புறக்கணித்தோம். நமக்கு அவர்களின் சாலைகளோ நீர்வழிகளோ தேவையில்லை. அவர்களின் வணிகத்தொடர்பு நமக்கில்லை. நாம் கடலையும் சிந்துவையும் நம்பி வாழ்பவர்கள். நமக்கு விரிந்தகல எல்லையில்லா நிலம் மேற்கே கிடக்கையில் அவர்களுக்கும் நமக்கும் எல்லைப்பூசல்களும் இல்லை.

ஆயினும் இந்தப் போரின் நடுவே வந்து நின்றிருக்கிறேன். எவ்வண்ணம் அது நிகழ்ந்தது? நான் அறியாத ஏதோ விசை. ஒவ்வொருநாளுமென இங்குள்ள இப்பூசல் என்னை வந்தடைந்துகொண்டிருந்தது. என்னை அறியாமலேயே இவற்றில் நானும் உள்ளத்தால் பங்குகொண்டேன். இவர்களில் ஒருவனாக நடித்தேன். எனக்கு இளைய யாதவர் மேல் கசப்பிருந்தது. ஆகவே அவருக்கு எதிரியான திருதராஷ்டிரர் மைந்தருடன் என் அகம் அணுக்கம் கொண்டது. என்னையறியாமலேயே உள்ளே நுழைந்துகொண்டிருந்தேன். ஒருநாளும் இப்போரில் நாம் பங்குகொள்ளப் போவதில்லை என்றே எண்ணியிருந்தேன். ஈடுபடலாகாதென்ற உறுதியையே வைத்திருந்தேன்.

இளையோரே, தன்னைச் சூழ்ந்து நிகழ்வனவற்றுக்கு செவிகொடுப்பவன் உளம் கொடுக்கிறான். உளம்கொடுப்பவன் இறுதியில் உயிரும் கொடுக்க நேரும். அதுவே நிகழ்ந்தது. என்னுள் நிகழ்ந்த போரை வெளியே நிகழ்த்த விழைவுகொண்டேன். இந்தப் போர் உடனடியாக நிகழ்ந்திருந்தால் நான் முற்றாக விலகியிருக்கக்கூடும். இது நாளுக்குநாள் கணத்துக்குகணம் என அணுகிக்கொண்டிருந்தது. உள்ளத்தால் நூறுமுறை இப்போரை நிகழ்த்திக்கொண்டபின் இதை களத்தில் நிகழ்த்தாமல் ஒழிய என்னால் இயலவில்லை. உங்கள் அனைவரையும் போருக்கு இட்டுவந்துள்ளேன்.

இந்தப் போரில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலக்குகள் இருந்தன. ஒவ்வொருவரையும் விழைவுகள் ஆண்டன. எனக்கு எந்த இலக்குமில்லை, எந்த விழைவுமில்லை. போருக்கென மட்டுமே போருக்கு வந்தவன் நான். இந்தப் போரில் இறப்பவர்கள் அனைவரும் எந்த நோக்கமும் இன்றி இறப்பவரே. இளையோரே, நாம் தோற்றால் மட்டும் வெறுமையை சென்றடையப் போவதில்லை, வென்றாலும் எஞ்சுவது அதுவே. இப்போரில் நம் பட்டத்து இளவரசன் மகிபாலன் கொல்லப்பட்டான். என் இளைய மைந்தன் உத்ஃபுதனையும் இழந்துள்ளேன். இனி இங்கே நான் எதை அடைந்தாலும் முற்றிழந்தவனாகவே உணர்வேன். நான் விழைவதென இனி ஒன்றும் இல்லை.

“நீங்கள் எண்ணுவதுபோல இப்போர் இன்று முற்றழிவை நோக்கி மட்டுமே செல்கிறது. வேறேதும் இதில் விளையப்போவதில்லை. இளையோரே, இங்கு படைகொண்டு வந்துள்ள எவரும் இங்கிருந்து மீள வாய்ப்பில்லை என்று உணர்க! நான் உங்களனைவரையும் இந்தக் கொல்சுழலில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறேன். இதிலிருந்து ஒரு அடிகூட பின் வைக்கவும் நமக்கு வழியில்லை” என்று கூர்ஜர சக்ரதனுஸ் சொன்னார். “ஒன்றுமட்டும் சொல்கிறேன், என் விழைவெனும் பிழைக்காக இந்தக் களத்தில் உயிர்கொடுப்பேன். திரும்பி உயிருடன் இங்கிருந்து சென்றால் இப்பிழையின் சுமையுடன் என்னால் வாழவியலாது என இரு நாட்களுக்குள் உணர்ந்துவிட்டேன்.”

“அரசே” என கைநீட்டி ஏதோ பேச எழுந்த படைத்தலைவனை நோக்கி கையமர்த்திவிட்டு சக்ரதனுஸ் சொன்னார் “ஆகவே, உங்களை ஊக்கப்படுத்தும் எதையும் என்னால் செய்ய முடியாது. உங்களுக்கு எதையும் வாக்களிக்கவியலாது. உங்களிடமும் என் மூதாதையரிடமும் தொல்தெய்வங்களிடமும் உரைக்க ஒரு சொல்லேனும் என்னிடமில்லை.” தலைக்குமேல் கைகூப்பியபின் சக்ரதனுஸ் சென்று தன் தேரை திருப்ப ஆணையிட்டார். அக்கணம் வெடித்தெழுந்ததுபோல “மாமன்னர் சக்ரதனுஸ் வெல்க! கூர்ஜரம் வெல்க! பெரும்பாலைகளின் நாடு வெல்க!” என அவர் படையினர் வாழ்த்துக்கூச்சலெழுப்பினர். அவர் நீள்மூச்சுடன் தன் தேர்த்தட்டில் சாய்ந்து அமர்ந்துகொண்டார்.

படைமுகப்பை அடைந்து தேர் நின்றபோது அவர் தன் பாகனிடம் “நான் சொன்னவற்றை கேட்டாயல்லவா?” என்றார். “ஆம், அரசே” என்று பாகன் சொன்னான். “நான் இன்று மீளப் போவதில்லை” என்றார். பாகன் “ஆம், நன்று” என்றான். “நான் களம்படவேண்டியது பார்த்தனின் கையால். அவருடைய அம்புகளே என் நெஞ்சிலிருக்கவேண்டும்.” பாகன் சில கணங்களுக்குப் பின் “ஆம்” என்றான். “நமது படைகள் உளம்தளர்ந்து பின்னடையுமென்றால் அது நன்று, பின்னடையும்தோறும் அவர்கள் உயிர்பிழைக்க வாய்ப்பாகும். அவர்களில் எத்தனைபேர் எஞ்சினாலும் அது நம் குடிக்கு நலம்பயக்கும்” என்றார். பாகன் தலையசைத்தான்.

சக்ரதனுஸ் தொலைவில் தெரிந்த காவல்மாடத்தை நோக்கினார். அதன்மேல் புலரிமுரசு காத்திருந்தது. படைகள் போர்க்கணத்துக்காக அணுவணுவாக அகத்தே முன்னகர்ந்துகொண்டிருந்தன. நின்றிருக்கும் படையில் தெரியும் அந்த நுண்நகர்வு அவருக்கு விந்தையெனப்பட்டது. “இளைய பாண்டவர் எங்கிருக்கிறார் என்று சொல்லக்கூடுமா?” என்று சக்ரதனுஸ் கேட்டார். “மிக எளிதாக. அரசே, அவர் எங்கிருக்கிறாரோ அதற்கு நேர்மேலாக ஒரு செம்பருந்து வட்டமிடும். அவ்வட்டத்தின் அச்சே அவருடைய தேர்” என்றான் பாகன். “ஏன்?” என்று சக்ரதனுஸ் கேட்டார். “அது இந்திரன் என்கிறார்கள். தன் மைந்தனின் களமறம் காண வந்துள்ளானாம்” என்றான் பாகன்.

சக்ரதனுஸ் “நமது குடித்தெய்வம் இங்கு வந்துள்ளதா?” என்றார். “அனல்காற்றுகளின் தேவனாகிய விஸ்வம்பரன். அனைத்தையும் உண்ணும் ஃபுஜ்யு. பாலைமணலில் உறையும் பர்ஹிஸ். தேவர்களே, எங்குள்ளீர்கள்? என்னை சூழ்க! என் எருமைமறம் கண்டு மகிழ்க!” என்று சக்ரதனுஸ் சொன்னார். அக்கணம் காற்று ஒன்று புழுதியுடனும் எரிமணத்துடனும் வீசி அவர் ஆடைகளையும் கொடியையும் படபடக்கச் செய்தது. அவர் கைகூப்பி “அருள்க! என்மேல் கனிக!” என்றார்.



படையெழுந்து மோதிக்கொண்டபோது அவரும் அலையிலென முன்கொண்டுசெல்லப்பட்டார். இலக்கு நோக்கும் கண்களுக்கும் அம்புகளை தொடுக்கும் கைகளுக்கும் ஆணையிடும் உதடுகளுக்கும் நெளிந்தும் வளைந்தும் அம்புகளுக்கு ஒழியும் உடலுக்கும் அப்பால் அவர் மலைப்புடன் அந்தப் போரை பார்த்துக்கொண்டிருந்தார். பீஷ்மரை சூழ்ந்துகொண்டு பாண்டவர்களின் முதன்மை வில்லவர்கள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பால் அர்ஜுனனை அஸ்வத்தாமா எதிர்த்தான். ஜயத்ரதனுக்கும் சாத்யகிக்கும் போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. “பீமசேனர்! பீமசேனர்!” என முரசுகள் முழக்கமிட்டுக்கொண்டிருந்தன.

“அபிமன்யூவால் சித்ரசேனன் கொல்லப்பட்டான்!” என்று முரசுகள் முழங்கின. சுதசோமனால் நடத்தப்பட்ட யானைப்படை போர்க்களத்தை நோக்கி வந்தது. அவற்றின் முன் பெரிய சகடங்கள் கொண்ட திறந்த வண்டிகளில் எடைமிக்க கல்லுருளைகள் கொண்டுவரப்பட்டன. பாகன்களால் ஆணையிடப்பட்ட யானைகள் அந்தக் கற்களைத் தூக்கி துதிசுழற்றி குறிபார்த்து வீசின. பேரெடையுடன் வந்து அறைந்த கற்குண்டுகளால் தேர்கள் உடைந்தன. யானைகள் மத்தகம் அறைபட்டு துதிக்கை சுழற்றி கூச்சலிட்டன. சக்ரதனுஸ் தன்னருகே நின்றிருந்த புரவிவில்லவன் ஒருவன் அதிலொரு கல்லால் அறைபட்டு நசுங்கித்தெறிப்பதை உணர்ந்தார்.

கற்குண்டுகள் விழுந்து உருவான இடைவெளியில் யானைகள் ஏந்திய தண்டுகள் வந்து மோதின. கண்ணுக்குத் தெரியாத யானை ஒன்றின் தந்தங்கள் அவை என

சக்ரதனுஸ் எண்ணினார். துச்சாதனன் “நம் யானைகள் பின்னடையட்டும்... தண்டுகளை எதிர்கொள்ளாதொழிக தேர்கள்!” என்று கூவினான். கற்குண்டுகள் விழுந்து உருவான வெளியில் தண்டுகளுடன் நுழைந்த பாண்டவர்களின் யானைகள் அந்தத் தண்டுகளை அங்கேயே விட்டுவிட்டு துதிக்கை சுழற்றி பிளிறியபடி பாய்ந்தன. அவற்றின்மேல் பாய்ந்தேறி இருபுறமும் சுற்றப்பட்டிருந்த வலையில் உடல்தொடுத்துக்கொண்டு தொங்கிய வில்லவர்கள் நீளம்புகளால் தேர்வில்லவரை எதிர்த்தனர். யானைகள் அணுகியதும் அவர்கள் பாய்ந்திறங்கி யானைகளின் உடலில் நெடுக்காக கட்டப்பட்டிருந்த நீள்வேல்களை எடுத்துக்கொண்டு வில்லவர்களை குத்தித் தூக்கி அப்பாலிட்டனர்.

யானைமேல் ஏறி வந்த பீமன் நீண்ட சங்கிலியில் கட்டப்பட்ட ஈட்டிமுனைகள் கொண்ட இரும்புக்குண்டை தூக்கிச்சுழற்றி தேர்களை தாக்கினான். அவன் ஏறிவந்த வக்ரதந்தம் என்னும் முதிய பெருங்களிறுக்கு முன் பிற யானைகள் குழவிகளெனத் தெரிந்தன. வானிலிருந்து தாக்குபவன்போல பீமன் அவர்களை அறைந்து சிதறடித்தபடி வந்தான். துச்சாதனனின் தேர் உடைந்தது. துர்மதன் தன் தேரை இரும்புருளை அறைவதற்குள் கீழே குதித்தான். மத்தகம் உடைந்த இரு களிறுகள் பிளிறியபடி பின்னடைந்து தங்களைத்தாங்களே சுற்றிக்கொண்டன. ஒன்று தேர் ஒன்றை தூக்கிச் சுழற்றி அப்பால் வீசியது.

“பால்ஹிகர் எழுக! பால்ஹிகர் பீமனை எதிர்கொள்க!” என்று முரசுகள் கூவிக்கொண்டிருந்தன. பால்ஹிகரின் யானையாகிய அங்காரகன் மற்ற யானைகளுக்குமேல் எழுந்த மத்தகத்துடன் பிளிறியபடி வந்தது. அதன் ஓசையை கேட்டதும் அது தனக்கான அறைகூவல் என புரிந்துகொண்டு வக்ரதந்தம் மறு ஒலி எழுப்பியது. பால்ஹிகரும் பீமனும் தொங்குகதைகளால் மோதிக்கொண்டார்கள். பால்ஹிகரின் கதை பெரிதாகையால் அது சுழன்று வரும் தொலைவும் மிகுதியாக இருந்தது. ஆகவே அதை தவிர்த்து ஒழியவும் அது அணுகுவதற்குள் தன் இரும்புருளையால் அறையவும் பீமனால் இயன்றது.

அவ்விரு களிறுகளும் தனியாக தங்களுக்குள் போரிட்டன. மத்தங்களால் முட்டிக்கொண்டு பின்னடைந்து வால்சுழற்றி செவிவிடைத்து பிளிறி முன்னால் பாய்ந்து மீண்டும் முட்டின. பீமனின் உருளைபட்டு அங்காரகனின் நெற்றிக்கவசம் உடைந்தது. மீண்டுமொருமுறை அவனுடைய உருளை சென்றறைந்தபோது ஈட்டிமுனை அங்காரகனின் மருப்பில் பட்டு அது பிளிறியது. பால்ஹிகர் கூவியபடி எழுந்து நின்று விசையுடன் தன் கதையால் வக்ரதந்தத்தை அறைந்தார். அதன் மத்தகம் உடையும் ஓசையே கேட்பதுபோலிருந்தது. அது தன் துதிக்கையை சுழற்றியபோது அக்குழலிலிருந்து குருதி தெறித்தது. அலறியபடி அக்களிறு பக்கவாட்டில் சரிந்து விழ பீமன் அதிலிருந்து பாய்ந்து அப்பால் விலகினான். அங்காரகன் தள்ளாடியது. பால்ஹிகர் அதை பின்னடையச்செய்து கௌரவப் படைகளுக்குள் கொண்டுசென்றார்.

போரின் படைக்கலக் கொப்பளிப்புக்கு நடுவிலூடாக அவருடைய தேர் அர்ஜுனனை நாடி சென்றது. அர்ஜுனனை எதிர்கொள்ள முடியாமல் அஸ்வத்தாமன் பின்னடைந்துகொண்டிருந்தான். ஒன்றெனக் கிளம்பி சுழல்விசையால் நூறாக மாறும் மாயாதராஸ்திரத்தை அஸ்வத்தாமன் செலுத்தினான். தேரிலிருந்து உதிர்வதுபோல் இறங்கி அக்கணமே சுழன்றேறி அவற்றை ஒழிந்து அர்ஜுனன் எட்டுகோல் நீளமுள்ள பேரம்பால் அஸ்வத்தாமனின் தேர்மகுடத்தை உடைத்தான். திரைவிலகுவதுபோல் காட்டி சுழன்றுவரும் பிரசமானாஸ்திரத்தை அர்ஜுனன் ஏவ அஸ்வத்தாமன் அதை நிகரான மாதனாஸ்திரத்தால் செறுத்து சிதறடித்தான். குறிய தண்டும் தடித்த அலகும் கொண்ட சிசிராஸ்திரம் அறைந்த இடத்தை உடைத்து

சில்லுகளாக்கியது. அது இன்னொரு சிசிராஸ்திரத்துடன் விண்ணில் முட்டிக்கொண்டபோது அனல்பொறி பறக்க அவை சிதறி விழுந்தன.

அஸ்வத்தாமனின் பின்வில்லவனாக சக்ரதனுஸ் சென்று சேர்ந்துகொண்டார். அவருடைய அம்புகள் பட்டு அர்ஜுனனை தொடர்ந்து வந்துகொண்டிருந்த வில்லவன் ஒருவன் தேர்த்தட்டில் விழுந்தான். அங்கே இன்னொருவன் பாய்ந்தேறி அம்பு தொடுக்க அவனை ஒழிந்து அருகே புரவியிலமர்ந்து வில்தொடுத்த ஒருவனை சக்ரதனுஸ் வீழ்த்தினார். அர்ஜுனன் அவரை பார்க்கவில்லை. அவன் விழிகள் அஸ்வத்தாமனின் விழிகளை மட்டுமே நோக்குவன போலிருந்தன. ஆனால் சக்ரதனுஸ் ஏவிய அம்புகள் அனைத்தையும் அர்ஜுனனுடைய உடல் இயல்பாக விலகி தவிர்த்தது. அவன் ஒளியாலானவன், பருப்பொருட்களால் தொடமுடியாதவன் என்று தோன்றியது.

அப்பால் பீமனால் அறையப்பட்ட யானைகள் கலைந்து பேரோசை எழுப்பின. அவற்றைக் கண்டு விலகிய படைகளால் ஓர் அலையெழுந்தது. அந்த அலையை அர்ஜுனனோ அவனுடன் போரிட்டுக்கொண்டிருந்தவர்களோ அறியவில்லை. அவ்வலையில் அவர்கள் எழுந்தமைய அவர்களை அது கடந்துசென்றது. அந்த யானைகள் அலறியபடி விலகிச்செல்ல மீண்டும் படைகள் ஒருங்கிணைந்தபோது பிறிதொரு அலை எழுந்து அவர்களை எழுந்தமையச் செய்தது. அவர்கள் சூழ நிகழ்ந்துகொண்டிருப்பது எதையும் அறியாதவர்களாக அம்புகளால் அறைந்துகொண்டிருந்தனர்.

“அரசே, நமது படையினர் வெறிகொண்டு போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்” என்று கூர்ஜரத்தின் படைத்தலைவன் மணிகர்ணன் கூவினான். சக்ரதனுஸ் திரும்பி நோக்கியபோது படைமுகப்பில் கூர்ஜரர்களே நிறைந்திருப்பதை கண்டான். விழாவில் களியாட்டு கொள்பவர்களைப்போல அவர்கள் கூச்சலிட்டனர். வெறியுடன் ஒருவரை ஒருவர் உந்திக்கொண்டு போர்முகப்புக்கு சென்றனர். அவர்களுக்கு அப்பால் பாண்டவர்களின் படைவிளிம்பில் சுருதகீர்த்தியும் அபிமன்யூவும் அதிரும் வில்லுடன் நின்றிருந்தார்கள். அம்புகள் எழுந்து வந்து படிய கூர்ஜரப் படை பால்பொங்குதலில் குளிர்நீர் விழுந்ததுபோல் அடங்குவதை அவர் கண்டார். “பின்னடைக! கூர்ஜரர் பின்னடைக!” என்று அவர் ஆணையிட்டார்.

அவருடைய ஆணை காற்றில் முரசொலியாக எழுந்து அங்கே சூழ்ந்து அதிர்ந்தது. ஆனால் கூர்ஜரர்கள் எதையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் பெருகிச்சென்று கற்பாறையில் தலையறைந்து செத்துக்குவியும் சிறுபறவைகள்போல அர்ஜுனனின் மைந்தரின் அம்புகளுக்கு இரையாகிக்கொண்டிருந்தார்கள். “அகன்று விரிவது ஒழிக! கூர்கொள்க! ஜயத்ரதருக்குப் பின்னால் நிலைகொள்க!” என அவர் தன் படைகளுக்கு ஆணையிட்டார். ஆனால் அவர்கள் மேலும் மேலும் களிவெறிகொண்டார்கள். பலர் நடனமாடுவதைக் கண்டு அவர் திகைத்தார். வாள்களையும் வேல்களையும் வானிலெறிந்து கூச்சலிட்டார்கள். நெஞ்சிலும் தொடையிலும் அறைந்து துள்ளித்துள்ளி எழுந்தார்கள். அருகே நின்றவன் நெஞ்சில் அம்புபட்டு சரிகையில், தலையறுந்து உடல் தள்ளாடி விழுகையில் அவன் குலத்தையும் பெயரையும் சொல்லி நகையாடினர்.

சக்ரதனுஸ் வில் தாழ்த்தி பின்னடைந்து அவர்களை பார்த்துக்கொண்டு நின்றார். அவர்களில் அப்போது எழுந்திருப்பது என்ன விசை என்று அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவர் முகங்களும் தெய்வக்கெட்டு ஆட்டத்தின்போது பூசகர் அணியும் மர முகமூடிகளைப்போல வெறிநகைப்பில்

இளித்து தசை வலித்திருந்தன. அவர்களின் நடனம் படையில் அலையலையாக எழுந்தமைந்தது. படைத்தலைவன் “உயிர்கொடுப்பதற்கென்று எழுந்துவிட்டார்கள். இனி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை, அரசே!” என்றான். பின்னர் தலைவணங்கி தன் வேலை எடுத்துக்கொண்டு தானும் வெறிக்கூச்சலிட்டபடி படைமுகப்பு நோக்கி சென்றான்.

போர்முனையில் கூர்ஜரர்களால் பாண்டவப் படைக்கு பேரிழப்பு ஏற்பட்டதை காணமுடிந்தது. உயிரச்சமில்லாது வந்து வந்து அறைந்த கூர்ஜரர்களின் தாக்குதலால் சிதைந்து பரவிய பாண்டவப் படை வளைந்து தொய்ந்து பின்னடைந்து பல துண்டுகளாக உடைந்தது. அவர்களை கொன்றழித்தபடி ஊடுருவிச் சென்றுகொண்டே இருந்தனர் கூர்ஜரர். அவர்களுக்கு ஆணையிட்டுக்கொண்டிருந்த முழவுகள் அமைதியாயின. போர்க்கூச்சல்களும் சாவொலிகளுமன்றி வேறெந்த ஓசையும் அங்கே எழவில்லை.

அபிமன்யூ எதையும் அறியாதவன்போல அம்புகளை தொடுத்துக்கொண்டே இருந்தான். சுழன்று விரிந்த தொகையம்புகள் கூட்டம் கூட்டமாக கூர்ஜரர்களை வீழ்த்தின. கொன்று கொன்று சலிக்காமல் போரிடுகையில் அவன் விளையாடும் சிறுவன் என தோன்றினான். அவன் இருபக்கங்களையும் காத்தனர் சுருதசேனனும் சுருதகீர்த்தியும். அவர்களின் அணுக்கப்படைகள் சிதறி விலகிய பின்னரும் அவர்கள் நிலைநகரவில்லை. அவர்கள் கூர்ஜரர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டபோது இருபுறங்களிலும் இருந்து சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் வந்து சேர்ந்துகொண்டார்கள். அவர்கள் அபிமன்யூவிடம் பின்னடைய ஆணையிட்டபடியே கூர்ஜரர்களை கொன்றனர். அபிமன்யூ சொல்கேட்காத உளத்தொலைவிலெங்கோ இருந்தான்.

கூர்ஜரப் படை முற்றழிவதை சக்ரதனுஸ் கண்டார். உதிரிகளாக எஞ்சியிருந்த தேர்வில்லவரும் பரிவில்லவரும் வேலர்களும் வீழ்ந்துகிடந்த உடன்படையினரின் உடல்களின்மேல் ஏறி மேலும் விசைகொண்டு முன்னகர்ந்து அம்புகள் பட்டு விழுந்தனர். இறுதியாக எஞ்சிய சிலர் உடல்களில் கால்தடுக்கி விழுந்தனர். எழுந்து வேலை ஓங்கியபடி சென்று களம்பட்டனர். தேரிலிருந்து இறுதி கூர்ஜரன் அம்புபட்டு நிலம்பட்டபோது அபிமன்யூ தன் வில்லை தாழ்த்தி தலையை அசைத்து முகத்தில் விழுந்த குழலை பின்னால் தள்ளினான். கடுமை தெரிந்த முகத்துடன் கைதூக்கி வெற்றிச்செய்தியை அறிவித்தான்.

ஆனால் பாண்டவப் படையிலிருந்து வெற்றிமுரசுகள் எழவில்லை. அபிமன்யூ சீற்றத்துடன் முரசுமேடையை ஏறிட்டு நோக்கி கைதூக்கி வசைபாடினான். பாண்டவப் படையினர் பின்னிருந்து மீண்டும் ஒருங்குகூடி நிரையாகி முன்னால் வந்தனர். அவர்களில் பெரும்பகுதியினர் களம்பட்டு கூர்ஜரர்களுடன் சேர்ந்து களத்தை நிறைத்திருந்தார்கள். சுருதகீர்த்தி தேரிலிருந்து பாய்ந்து புரவிமேல் ஏறிச்சென்று கைவீசி வெற்றிமுரசு ஒலிக்க ஆணையிட்டான். அப்போதும் முரசுமேடையிலிருந்தவர்கள் வாளாவிருந்தனர்.

சக்ரதனுஸை நோக்கி வந்த தசார்ணத்தின் படைத்தலைவன் சாஜன் “மாபெரும் தற்கொடை, அரசே! கூர்ஜரத்தின் வீரர்களில் ஒருவரும் எஞ்சவில்லை. ஒருவர்கூட ஓரடிகூட பின்னெடுக்கவில்லை” என்றான். சக்ரதனுஸ் வெறுமனே நோக்கி நின்றார். “அவர்கள் இருமடங்கு பாஞ்சாலர்களை பலிகொண்டனர்!” என்று அவன் மீண்டும் சொன்னான். “தற்கொடையான வீரர்களின்பொருட்டு மாவீரரை ஏத்தும் முந்நடை முரசொலி எழவேண்டும்! அதுவே மரபு” என்றான். அதற்குள் கௌரவப் படையினரிடமிருந்து முந்நடை முரசு ஒலிக்கத் தொடங்கியது. “மாவீரர் வெல்க!

விண்புகுந்தோர் வாழ்க! கூர்ஜரர் வெல்க!” என்று கௌரவப் படையினர் வேல்களையும் வாள்களையும் தூக்கி வாழ்த்தொலி எழுப்பினர்.

எதிர்பாராதபடி பாண்டவர்களின் முரசுமேடைகளில் இருந்தும் முந்நடை முரசொலி எழத் தொடங்கியது. பாண்டவப் படையினர் அதை எதிர்பாராமல் குழம்பி குரல்முழக்கமெழுப்பினர். “விண்புகுந்தோர் வெல்க! மாவீரர் வெல்க!” என்று பாண்டவர்களில் எங்கிருந்தோ குரல்கள் எழ அவர்களின் படையினரும் அம்முழக்கத்தை எழுப்பத் தொடங்கினர். அவ்விரு படைகளும் ஒன்றென ஆகி தெய்வமெழும் விழவில் வாழ்த்தொலிப்பவர்கள்போல கூச்சலிட்டனர். அவர்களின் தலைக்குமேல் முரசுகள் தெய்வத்தை நோக்கி என முழக்கமிட்டுக்கொண்டிருந்தன.

சக்ரதனுஸ் தன் கன்னங்களில் விழிநீர் வழிவதை உணர்ந்தார். கைதூக்கி தன் அணுக்கவில்லவரிடம் ஆணையிட்டபின் அர்ஜுனனை நோக்கி சென்றார். அஸ்வத்தாமன் வில்தாழ்த்தி பின்னடைந்த இடைவெளியில் புகுந்துகொண்டார். அவர் அம்புகள் எழுந்து அர்ஜுனனின் தேரை தாக்கின. ஓர் அம்பு தேரோட்டியின் நெஞ்சக்கவசத்தை அறைந்து உடைத்தது. இன்னொரு அம்பு அர்ஜுனனின் வலத்தோளில் பதிந்தது. அடுத்த கணம் எழுந்த பேரம்பால் அவர் உடல் தேருடன் சேர்த்து அறையப்பட்டது. இன்னொரு அம்பால் அவர் தலை வெட்டி வீழ்த்தப்பட்டது.

மாளவ மன்னர் இந்திரசேனர் படைக்கலத்துடன் தேரிலேறிக்கொண்டபோது படைத்தலைவன் சந்திரஹாசன் அருகே வந்து தலைவணங்கினான். அவர் திரும்பிப்பார்க்க “அனைத்தும் ஒருங்கிவிட்டன, அரசே. நமது படைவீரர்கள் இன்று வெல்வோம் என்று உறுதி கொண்டு களம் எழுகிறார்கள்” என்றான். “வெற்றி நம்மை தொடர்க!” என்று முறைமைச்சொல் உரைத்தபின் தேரிலேற படிப்பெட்டியை கொண்டு வைக்கும்படி ஏவலனிடம் கைகாட்டினார். ஏவலன் படியை வைக்கும்போது அவரை மீறி கசப்பு மேலெழுந்தது. திரும்பி சந்திரஹாசனிடம் “எதன் பொருட்டு இந்த முறைமைச்சொல்? நாமிருவரும் சேர்ந்து தெய்வங்களை ஏமாற்றிக்கொள்கிறோமா?” என்று கேட்டார்.

படைத்தலைவன் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. “இல்லை. நமது படைகள்…” என்றான். “நமது படைவீரர் ஒவ்வொருவரும் இல்லம் திரும்பவே விழைகிறார்கள். முன்னால் இருப்பது வெற்றியல்ல, வெற்றிறப்பு மட்டுமே என ஒவ்வொருவரும் அறிவார்கள். அதை நீரும் நானும் அறிவோம்” என்றார். படைத்தலைவன் “ஆம் அரசே, நாமிருவரும் அறிவோம். ஆனால் நாமிருவரும் அதை நாவால் சொல்லிக்கொள்ளக்கூடாது. எண்ணங்கள் ஆயிரம் எழலாம். நாக்கு தெய்வங்களால் கண்காணிக்கப்படுகிறது. சொல் பிறப்பது ஓர் உடலெழுவதுபோல. அது தொட்டு உணரும் பருவடிவம். நம்முடன் உடனிருக்கும் இருப்பு. எழுந்தசொல் அழிவதில்லை” என்றான்.

“சரி, மங்கலச் சொற்களையே சொல்வோம். நம்மைச் சூழ்ந்து சூதர்களின் இன்னிசையும் அவைக்கலைஞர்களின் வாழ்த்தும் எழட்டும். நம் இறப்பிற்குப் பின்னும் அது தேவைப்படலாம்” என்றார் இந்திரசேனர். படைத்தலைவன் “வெற்றி நம்மை தொடரட்டும்” என்றான். அவனை புண்படுத்தவேண்டும் என்ற உளவிசை எழ இந்திரசேனர் தன் கட்டுக்களை கடந்து “வெற்றி என்று எதை சொல்கிறீர்கள்? அர்ஜுனனின் அம்பை நெஞ்சில் வாங்கி அலறி விழுவதா?” என்றார். “அதுவும்தான்.

களத்தில் வெற்றியென்பது பின்வாங்கும் எண்ணமின்றி இறுதிவரை நின்றிருப்பது மட்டுமே” என்றான் சந்திரஹாசன்.

அச்சொல்லில் இருந்த நஞ்சை உணர்ந்து சீற்றம் கொண்ட இந்திரசேனர் “நீர் பின்வாங்கியதே இல்லையா?” என்றார். “முன்னெழும் பொருட்டு பின்வாங்குதல் ஓர் போர்க்கூறு” என்றான் சந்திரஹாசன். “அதை உணர்ந்துகொள்க”! என்றபின் “நேற்று நமது படைப்பிரிவில் எழுந்த பூசலை ஒற்றர்கள் கூறினார்கள்” என்று பேச்சை கடத்திச்சென்றார் இந்திரசேனர். “பூசல் அல்ல, நமது யானைகளில் சில புண்பட்டிருக்கின்றன. உரிய முறையில் அவற்றுக்கு மருத்துவம் செய்ய இயலவில்லை. ஆகவே இரவில் அவை வலி தாளாமல் அலறின” என்று சந்திரஹாசன் சொன்னான்.

“ஏன் மருத்துவம் செய்ய இயலவில்லை?” என்று இந்திரசேனர் கேட்டார். “அரசே, புண்பட்ட யானைகளை இரவு துயிலவைப்பதற்கு அகிபீனா கொடுப்பது வழக்கம். மானுடருக்குக் கொடுப்பதைவிட நூறு மடங்கு அகிபீனா அவற்றுக்கு தேவைப்படும். இங்கு ஒவ்வொரு நாளும் அகிபீனா குறைந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு நாட்களுக்குப்பின் வெளியிலிருந்து அகிபீனா கொண்டு வந்தால் மட்டுமே போர் நிகழமுடியும் எனும் நிலை. ஆகவே மருத்துவர்கள் அகிபீனா மறுத்துவிட்டனர்” என்றான் சந்திரஹாசன். “போருக்கு உணவைவிட இருமடங்கு அகிபீனாவை சேர்த்துக்கொள்வதுதானே வழக்கம்?” என்று இந்திரசேனர் கேட்டார். “ஆம், ஆனால் இங்கு உணவு உண்பவர்கள் குறைந்துவருகிறார்கள். அகிபீனா அருந்துபவர்கள் மும்மடங்கு பெருகுகிறார்கள்” என்றான் சந்திரஹாசன்.

கைவீசி அவனை செல்லும்படி பணித்துவிட்டு தேரில் அமர்ந்து “எந்த யானை? அஸ்தினபுரியிலிருந்து நமக்கு கொடையளிக்கப்பட்டதே அதுவா?” என்றார் இந்திரசேனர். “அல்ல” என்று படைத்தலைவன் மறுத்தான். “இந்த யானைகள் நமது நாட்டிலேயே போர்முகப்பு காப்புக்கென பயிற்றுவிக்கப்பட்டவை. அவை அனைத்துமே துதிக்கையில் காயம் பட்டுள்ளன.” இந்திரசேனர் “துதிக்கையில் கவசங்களில்லையா?” என்றார். “துதிக்கையை காத்துக்கொள்ள வேண்டும் என்பது எந்த யானைக்கும் உள்ளுறையும் எச்சரிக்கை. துதிக்கையின் முனை வரை கவசங்கள் செல்வதில்லை. சுருட்டி அள்ளிப்பற்றுவதற்காக முழநீளம் விடப்பட்டிருக்கும். அவை துதிக்கைகளை நன்கு சுருட்டி வைத்துக்கொண்டால் நுனிதுதிக்கையை அம்புகள் தாக்கா. ஆனால் படைமுகத்தில் எழுந்து அச்சமோ வெகுளியோ கொண்டு அவை நிலையழிந்துவிட்டால் பயிற்சிகளை மறந்து கான்விலங்கென மாறி தலைக்குமேல் துதிக்கையை தூக்கி ஓலமிடும். அந்நிலையில் எளிதாக அவற்றின் நுனிக்கையை அம்புகளால் தாக்க இயலும்” என்று சந்திரஹாசன் சொன்னான்.

“நேற்றும் முன்னாளும் பாண்டவர்களுக்கு அந்த அறைகூவலை பீமசேனர் அளித்திருந்தார் என்று இப்போது தெரிகிறது. போர்முகப்பில் யானைகள் வந்ததுமே அவற்றை அச்சுறுத்தும் பொருட்டு நாற்புறமிருந்தும் அம்புகளை அவற்றின் மேல் எய்தனர். அம்புகள் ஒன்றுடன் ஒன்று உரசி நெருப்புப் பொறி எழச் செய்தனர். கேடயப்பரப்புகளைத் திருப்பி அவற்றின் விழிகளில் மின்னடித்தனர். அவற்றின் செவிகளில் விந்தையான பேரொலிகள் கேட்கும்படி முழவுகள் முழக்கினர். அஞ்சி நிலையழிந்து அவை துதிக்கை தூக்கியதும் பிறையம்புகளால் அவற்றின் துதிக்கைகளை வெட்டினர். வலிகொண்டு கட்டற்றுச் சுழன்ற யானைகளிலிருந்து தப்பும் பொருட்டு நமது படைகள் அகன்றுவிலக அந்த இடைவெளியில் அவர்கள் தங்கள் தண்டேந்திய யானைகளைக்கொண்டு பிளவு உருவாக்கி உட்புகுந்தனர்” என சந்திரஹாசன் தொடர்ந்தான்.

“நேற்று மட்டும் நமது நூற்றுப்பன்னிரண்டு களிறுகள் புண்பட்டுள்ளன. ஆனால் களத்தில் முற்றிலும் தன்னொழுங்குடன் ஒருகணமும் நிலையழியாது நின்று போரிட்டது அஸ்தினபுரியால் அளிக்கப்பட்ட யானையான அஸ்வத்தாமன் மட்டும்தான்” என்றான். “இளமையிலேயே புண்பட்டமையால் உளநிலை பிறழ்ந்த யானை என்றுதானே அதைப்பற்றி சொல்வார்கள்? அது அஸ்தினபுரியின் கொடை என்பதனால்தான் நாம் அதை கொல்லவில்லை” என்றார் இந்திரசேனர். “ஆம், அதற்கு விழி ஒருமையும் இல்லை. ஆகவே அனைத்தைக் கண்டும் மிரண்டு பூசலிடுவதே அதன் இயல்பு. நமது கொட்டிலில் அதை ஒரு பெரும் தொல்லையென்றே இதுகாறும் கருதி வந்தோம். எந்தப் போரிலும் முதலில் களப்பலியாவது அதுவாகவே இருக்குமென்று பயிற்றுநர் கூறினர்.”

“அதன் பொருட்டே முதல் நாள் போரில் அதை களமுகப்புக்கு கொண்டு சென்றோம். ஆனால் கவசங்கள் அணிந்து களமுகப்புக்குச் சென்றதுமே அது பிறிதொன்றென மாறிவிட்டது. அமைதியும் சூழ்ச்சியும் கொண்டதாக ஆயிற்று. களத்தில் அது நின்றிருப்பதையே எதிரிகள் உணராதபடி ஓசையும் அசைவுமின்றி சென்றது. எதிர்பாரா தருணத்தில் தேர்களை அறைந்து தூக்கி அடித்தது. புரவிகளை மிதித்து கூழாக்கியது. ஆணையின்றி தானாகவே தண்டுகளை ஏந்திச்சென்று எதிர்முகப்பை உடைத்தது. தன் கவசமணிந்த உடல் மட்டுமே எதிரியின் அம்புக்கு தெரியவேண்டுமென்று எண்ணி இயங்கியது. இந்த எட்டு நாள் போரில் ஒற்றை அம்பைக்கூட அது தன் உடலில் வாங்கியதில்லை. பயிற்றுநிலையில் ஒவ்வொரு சொல்லையும் கற்றுக்கொண்டு மானுடருக்கு நிகரான மதிக்கூர்மையுடன் இலங்கிய யானைகள் அனைத்துமே களத்தில் அஞ்சி வெகுண்டு அம்புகள் முன் அடி பணிந்தன” என்றான் சந்திரஹாசன்.

திகைப்புடன் அதை கேட்டபின் “போர் பிறிதொரு வாழ்க்கை. போரில் வெல்பவர்கள் இயல் வாழ்க்கையில் பொருந்துவதில்லை போலும்” என்றார் இந்திரசேனர். “அவர்கள் எப்பொழுதும் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நுண் வடிவில் தங்களுக்குள் ஆற்றி பழகிய போரை மீண்டும் நிகழ்த்துகையிலேயே அவர்கள் வெல்கிறார்கள்” என்றபின் தேரை செலுத்தும்படி பாகனிடம் ஆணையிட்டார்.

செல்லும் வழியெல்லாம் இந்திரசேனர் தன் படையினரை நோக்கிக்கொண்டிருந்தார். அவர்கள் துயிலில் நடப்பவர்கள் போலிருந்தனர். ஒவ்வொருவர் விழிகளும் ஒளியிழந்து இரு குழிகள் போலிருந்தன. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. ஒருவர் இருப்பை பிறர் உணர்ந்ததாகவும் தெரியவில்லை. போரில் அணிவகுத்தெழுவதற்கு முன் படைவீரர்கள் சீர்நடையிட்டுச் செல்வதை பலமுறை அவர் பார்த்திருந்தார். அணிவகுப்பில் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளலாகாதென்பது நெறி. ஆனால் கழுத்தை இறுக்கி நோக்கை நேர்நிறுத்தி கை வீசி இரும்புப் பொறியென நடக்கையிலேயே அவர்கள் உதடுகள் மெல்ல அசைந்துகொண்டிருப்பதை பார்க்க இயலும். அருகிருப்பவர்களிடம் அவர்கள் சொல்லாடுகிறார்கள் என்பதை உணர முடியும்.

ஒருமுறை படைநடப்பை நோக்கி மேடையில் அமர்ந்திருக்கையில் அதரஸ்புடம் அறிந்த தன் அமைச்சரிடம் “அந்த ஏழாவது வீரன் சொல்வதென்ன? என்றார் இந்திரசேனர். அவர் நோக்கிவிட்டு “வேண்டாம், அரசே” என்றார். “சொல்க!” என்றார் இந்திரசேனர். “அவன் என்ன சொல்கிறான்?” அமைச்சர் “அவர்கள் வசைச்சொற்களை மட்டுமே சொல்வார்கள்” என்றார். “என்ன சொல்கிறான் என்று சொல்க!” என்று இந்திரசேனர் மீண்டும் கேட்டார். அமைச்சர் தயங்க உரத்த குரலில்

“இது என் ஆணை!” என்றார். “அரசே, அதோ யானைகள் எடுத்துச்செல்லும் அந்தப் பெருந்தண்டு தங்கள் ஆண்குறி என்று கூறுகிறான்” என்றார் அமைச்சர். “அதற்கு அவன் என்ன மறுமொழி சொன்னான்?” என்று அவர் கேட்டார். “பெரிதுதான் ஆனால் எதிர்முனையில் வருவதும் இன்னொரு ஆண்குறி அல்லவா என்றான்.” இந்திரசேனர் “சொல்க!” என்றார். “அவர்கள் சிலம்பாடிக்கொள்ளட்டும் என்று இவன் மறுமொழி சொன்னான். இருவரும் உதடசையாமல் சிரித்துக்கொண்டார்கள்” என்றார் அமைச்சர்.

இந்திரசேனர் பெருமூச்சுவிட்டு உடல் தளர்த்தினார். அமைச்சர் “அதன்பொருட்டு அவர்கள் மேல் முனியவேண்டியதில்லை, அரசே. களத்தில் இவ்வண்ணம் இழிசொற்கள் சொல்லிக்கொள்வது அனைத்து வீரர்களுக்கும் வழக்கம்தான். அதன் வழியாக அவர்கள் இத்தருணத்தின் செயற்கையான இறுக்கத்தை தணித்துக்கொள்கிறார்கள். இக்கணத்தில் திளைக்கிறார்கள். இது ஓர் உச்சம். உச்சநிலைகளில் மனிதர்கள் இயல்பின்றி உணர்கிறார்கள், நகையாடியோ பித்தெடுத்து வெறியாடியோ தங்களை அவ்வுச்சத்துடன் பொருத்திக்கொள்ள முயல்கிறார்கள். இவர்களை இப்போது படைக்கலங்களை தூக்கிவீசி வெறிநடனமிட ஒப்புவீர்கள் எனில் அதை செய்வார்கள்” என்றார்.

“அவர்களிடமிருந்து இயல்பான கீழ்மைதான் இவ்வண்ணம் வெளிவருகிறதா?” என்று இந்திரசேனர் கேட்டார். “இயல்பான ஒன்று வெளிவருகிறது. பெரும்பாலும் படைவீரர்கள் தங்கள் நெறிசார்ந்த நிலைகளை முற்றிழந்துவிடுவார்கள். அன்னையரையும் மூதன்னையரையும்கூட காமக்கீழ்மைச் சொற்களால் அவர்கள் வசை பாடிக்கொள்வதை பார்க்க இயலும். ஒரு சொல்லுக்கு ஊர்கள் தீப்பிடித்து எரியும் குலங்கள் உண்டு. ஆயிரம் தலைகளை உருட்டும் பற்றவைக்கும் சொற்களும் உண்டு. அவர்கள் எத்தயக்கமும் இன்றி இப்படைமுகப்பில் கூறுவார்கள். இங்கு எழுபவை வேறு தெய்வங்கள்.”

இந்திரசேனர் அந்தப் படைவீரர்கள் உதடுகளை நோக்கிக்கொண்டிருந்தார். அவை எதுவும் அசைவதாக தெரியவில்லை. அவர்கள் தங்களிலெழுந்த தெய்வங்களை இழந்துவிட்டிருக்கிறார்களா? ஒருகணம் குமட்டல் எழுந்து உடல் உலுக்கியது. பாகன் திரும்பி “அரசே!” என்றான். “ஒன்றுமில்லை, செல்க!” என்று இந்திரசேனர் கைகாட்டினார். “அரசே” என்று அவன் மீண்டும் சொன்னான். “செல்க!” என்று இந்திரசேனர் சொன்னார். அந்தப் படைகளை நோக்காமல் விழிமூடிக்கொண்டார். ஆனால் அவை இமைகளுக்குள் கொந்தளித்தன. மலத்தில் நெளியும் புழுக்கள்போல.

வெறும் தசைத்துண்டுகள். வெட்டி அரிந்து துண்டுகளென களத்தில் குவிக்கப்படப் போகின்றவை. முன்னரே இறந்துவிட்டவை. உள்ளூற அழுகத் தொடங்கியவை. முன்பு கலிங்கத்தில் இருந்து வந்த சூத்திர வைதிகர்களால் நிகழ்த்தப்பட்ட அதர்வ வேள்வியொன்றில் பன்னிரண்டாயிரத்து நூற்று எட்டு வெள்ளாடுகள் அவியாக்கப்பட்டன. எழுந்து தழல்விரித்த மாபெரும் வேள்விக்குளத்தில் ஒவ்வொரு ஆடாக தலையரிந்து தூக்கி வீசப்பட்டது. அவற்றின் ஊன்நெய் உண்டு எழுந்த தீ மேலும் மேலுமென ஊன் கேட்டது. அன்று கல்லரியணையில் அமர்ந்து நிரைவகுத்துச் சென்றுகொண்டிருந்த ஆடுகளை பார்த்துக்கொண்டிருந்தார். அடியிலாத பிலமொன்றுக்குள் ஒழுகிச்சென்று மறையும் ஓடைகள்போல. ஒவ்வொன்றும் அவற்றுக்கு முன்னால் நின்றவற்றை தலையால் முட்டி முன்செலுத்தியது. அந்தத் தழலுக்குள் சென்று மறைவதே ஊழென்பதுபோல். ஒரு கணமும் தயங்கியோ பொறுத்தோ நின்றிருக்க இயலாதென்பதுபோல்.

தேர் நின்றதும் அவர் எழுந்தார். தலை சுழன்று உடல் ஒருபக்கமாக சரிந்தது. தேர்த்தூணை பற்றியபோது அது சற்று அப்பால் இருந்தது. நிலை தடுமாறி விழப்போய் பற்றிக்கொண்டு நின்றார். வயிறு குமட்டி இருமுறை வாயுமிழ்ந்தார். “அரசே!” என்று பாகன் அழைத்தான். “நீர்!” என்று கைநீட்டினார். பாகன் அளித்த நீரை வாங்கி அருந்தியபோது வயிற்றில் கொதித்த அமிலம் குளிர்ந்து அடங்கியது. தேர் படைமுகப்பிற்கு வந்து நின்றது. மங்கிய விழிகளுடன் தொலைவில் தெரிந்த பாண்டவப் படையை பார்த்துக்கொண்டிருந்தார். அங்கும் படைவீரர்கள் அனைவரும் அந்நிலையில்தான் இருப்பார்கள் என்று தோன்றியது. நம்பிக்கை இழந்த, ஊக்கம் அழிந்த வெற்றுப்பிண்டங்கள். பொருளிலா செயலாக கொல்லவும் இறக்கவும் இங்கு வருகிறார்கள். கொல்வதும் இறப்பதும் நிகரே என்றான ஒரு வெளியில் அவர்கள் உடல்கள் முட்டி ததும்புகின்றன.

இந்தக் களத்தில் சற்றேனும் பொருளுணர்ந்தோன் எவன்? மிகத் தொலைவில் செம்பருந்து சுழல்வதை கண்டார். அங்கிருக்கிறான் அவன். அனைத்தும் அவனுக்குத் தெரியும் என்கின்றனர் சூதர். அதைப்பற்றி எத்தனையோ அவைகளில் எள்ளி நகையாடியதுண்டு. “சூதர்கள் போரை நிகழ்த்தினால் பாரதவர்ஷத்தில் ஒருநாளில் காலடியில் வீழ்த்தும் ஆற்றல் மிக்கவன் அவனே” என்று கேகய மன்னன் திருஷ்டகேது சொன்னபோது பிற ஷத்ரியர்கள் தொடையில் அறைந்து வெடித்து நகைத்தனர். மெய்யாகவே போரை சூதர்கள்தான் நிகழ்த்துகிறார்கள் போலும். இங்கு ஒவ்வொருவரும் ஏந்தி வந்திருக்கும் படைக்கலங்களைவிட பல மடங்கு ஆற்றல்கொண்டவை அவர்களின் சொற்கள். அவை எவற்றாலும் வெட்டுப்படாதவை. இவ்வுலகில் எதனாலும் எதிர்க்க இயலாதவை. என்றுமிருப்பவை.

புலரிப் போர்முரசு ஒலித்ததும் படைகள் எழுந்து சென்று ஒன்றையொன்று அறைந்து போர்புரியலாயின. போர்முகப்பு இரு தோல்பட்டைகள் இணைத்து தைத்த தையல்வடுபோல அங்கிருந்து தெரிந்தது. இரண்டையும் ஒன்றுடன் ஒன்று தைப்பவை எழுந்து சென்று அமையும் அம்புகள். அந்த விந்தையான கற்பனையால் மெல்லிய உளமலர்வு உண்டாக அவர் நோக்கிக்கொண்டிருந்தார். இரு படைகளும் மேலும் மேலும் அம்புகளால் இறுக்கி தைக்கப்பட்டன. அவை இருபுறமும் விரிந்து அகல முயலும்போது அந்த முட்சரடுகள் இழுபட்டு அதிர்வதாக, மேலும் மேலும் என எழுந்து தங்களை தைத்து இறுக்கிக்கொள்வதாக அவருக்குத் தோன்றியது. “செல்க!” என்று ஆணையிட்டு வில்லை எடுத்து பொருத்தி தன் முதல் அம்பை செலுத்தினார். அந்த அம்பு எவர் மேலும் படலாகாதென்றும் வீணாகி குருக்ஷேத்ர மண்ணில் சென்று பதியவேண்டும் என்றும் விழைந்தார்.

அவர் எண்ணியதுபோலவே அன்று போர் பொருளிலாப் படுகொலைகளாகவே நிகழ்ந்தது. அபிமன்யூ இருபுறமும் சுருதகீர்த்தியும் சதானீகனும் படைத்துணையாக வர, நாணொலி எழுப்பியபடி களத்திற்குள் வந்தான். அவனுடைய அம்புகள் பட்டு படைத்தலைவர்கள் ஒவ்வொருவராக சரிந்துகொண்டிருந்தனர். வீரர்கள் பலர் ஒருமுறை ஓரம்பை செலுத்துவதற்குள்ளாகவே தலையறுந்து விழுந்தனர். அவர்களில் பலர் முறையாக கவசங்கள் அணிந்திருக்கவில்லை என்பதை அவர் பார்த்தார். கைவீசி படைத்தலைவனை அருகே அழைத்தார். “என்ன நிகழ்கிறது? இங்கே நம் படைவீரர்கள் சாவதற்கு மட்டுமாக வந்துள்ளார்களா?” என்றார். சந்திரஹாசன் “அரசே, அவர்கள் போர்புரிகிறார்கள்” என்றான். “எங்கே போர்புரிகிறார்கள்? கவசங்களை முறையாக அணியாதவர்கள் போர்புரிந்து பயன் என்ன?” என்றார் இந்திரசேனர்.

“அரசே, கவசங்களால் பயனில்லை” என்றான் சந்திரஹாசன். “பின் எதனால் பயன்? சென்று தலைகொடுப்பதற்கு என்று எழுந்துவந்தார்கள் போலும், மூடர்கள்!” என்றபின் மேலும் சீற்றத்துடன் அவர் “செல்க!” என்று கைகாட்டினார். படைவீரர்கள் சிதறிக்கிடந்த களத்தில் அவருடைய தேர் ஏறி உலைந்து சென்றது. உடல்களின் மேல் தேர் செல்லும்போது ஏற்படும் உடற்சொடுக்கு அவருக்கு ஏற்பட்டது. விலா எலும்புகள் உடையும் ஓசை. அலறல்களும் முனகல்களும் காலடிக்குக் கீழே நிறைந்திருப்பதுபோல. முதல்நாள் போரில் அந்த ஒலிகளின் மெல்லதிர்வை தாள இயலாமல் இரு கைகளாலும் தலை பற்றி அவர் பீடத்தில் அமர்ந்தார். அன்று மாலை அவரிடம் முதிய படைத்தலைவர் சிம்மவக்த்ரர் “போரில் நாம் அதை அஞ்சலாகாது, அரசே. வீழ்ந்தவர்கள் மேலும் எழுந்து செல்பவர்கள் மட்டுமே வெற்றியை அடைய முடியும்” என்றார்.

“மனித உடல்கள்! அவை நம் குடிகளின் உடல்கள்!” என்று இந்திரசேனர் சொன்னார். “மெய்! ஆனால் அரசர்கள் எப்போதும் குடிகளின் உடல்களின் மீதே பயணம் செய்கிறார்கள். அவர்களை குபேரனின் கூறு என்கின்றன நூல்கள். குபேரன் மானுடனை ஊர்தியாகக் கொண்டவன்” என்றார் சிம்மவக்த்ரர். சீற்றத்துடன் எழுந்து “என்ன சொல்கிறீர்?” என்றார். “அரசே, மண்ணில் இன்றுவரை தோன்றிய அரசர்கள் எவரும் மானுடரை ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. எண்ணும் கணமே அவர்கள் அரியணையிலிருந்து விலகத் தொடங்கிவிடுகிறார்கள்” என்றார் சிம்மவக்த்ரர்.

சில கணங்கள் அவரை நோக்கிவிட்டு “செல்க!” என்று கைகாட்டினார். அவர் சென்றதும் தன் குடிலுக்குள் விசைகொண்ட காலடிகளுடன் சுற்றினார். மீண்டும் அகிபீனா கொண்டுவரச் சொன்னார். மறுநாள் தேரில் ஏறி களம் வருகையில் வெறும் நிலத்திலேயே மனித உடல்கள் நிறைந்திருப்பதாகவும் ஒவ்வொரு முறையும் எலும்புகளும் உடற்பைகளும் உடையும் ஓசை கேட்பதாகவும் எண்ணி உடல் விதிர்த்தார். ஆனால் அன்று போரில் ஏதோ ஒரு கணத்தில் அவர் உடல் அதை ஏற்று மகிழத் தொடங்கியிருப்பதை கண்டார். எங்கோ ஒரு குருதி விரும்பும் தெய்வம் அமர்ந்து கீழே சதைந்தறையும் உடல்களைக்கண்டு நீள் செந்நா சுழற்றி உவகை கொண்டது. மேலும் மேலும் என்று தாவியது.

அபிமன்யூவின் தேருக்கு முன் அவன் அம்புகளால் உருவான வெற்றிடம் இருந்தது. அதில் புலரியில் ஆற்றுப்பரப்பில் துள்ளியெழும் வெள்ளி மீன்கள்போல அம்புகள் பறந்துகொண்டிருந்தன. “அங்கு!” என்று அவர் தன் பாகனிடம் ஆணையிட்டார். பாகன் செலுத்த தேர் அபிமன்யூவின் முன் சென்று நின்றது. நாண் இழுத்து அம்பை அபிமன்யூவை நோக்கி செலுத்தினார். முதல் அம்பு இலக்கு தவறி எங்கோ சென்றது. வெறிகொண்டு மீண்டும் மீண்டும் அம்புகளால் அபிமன்யூவை அறைந்தார். ஒரு அம்பு அபிமன்யூவின் தேர்த்தட்டில் சென்று தைத்தபோது இதோ என்று உள்ளம் பொங்கி எழுந்தது. “செல்க! செல்க!” என்று மேலும் தேர்ப்பாகனை தூண்டி அம்புகளின் தொடுவளையத்திற்குள் சென்றார்.

அபிமன்யூவின் அம்புகள் அவர் கவசத்தை அறைந்தன. அவர் தோளிலைகள் உடைந்து தெறித்தன. அருகிருந்த தேர்த்தூண் முள்ளம்பன்றியின் உடலால் ஆனதுபோல் அம்புகளால் தைக்கப்பட்டு நின்றது. அம்புகளை நாணிழுத்து விசைகொண்டு செலுத்திக்கொண்டிருந்தபோத அபிமன்யூவின் கை விசையையும் உடல் நெளிவையும் கண்டு அவருள் அமர்ந்த ஒருவன் வியந்தான். யாரிவன்? போருக்கென்றே உடல்கொண்டு எழுந்தவன்போல! போரன்றி பிற அனைத்திலும் தோற்றுவிட்டவன் ஒருவனே இவ்வண்ணம் போரிட இயலும். போர்க்களத்தில் மட்டுமே தன் நிறைவை அடைகிறான் இவன். ஒருகணம் அவன் உளம் தளர்ந்தால் கையும் தளரும். ஆம், அவன் உளம் தளரும் ஒன்று உண்டு.

போரில் வஞ்சினங்கள் எதிரியை தளர்த்துவன. ஆனால் இக்களத்திலிருந்து எடுக்கும் வஞ்சினங்கள் எதுவும் இவனை தொடுவதில்லை. இக்களத்தில் இவனை வெல்ல எவராலும் இயலாது. இவன் தோற்ற களங்கள் எவை? ஒருகணத்தில் அவையில் வசைக்கவி பாடும் இளிவரல் கவிஞனொருவன் சொன்னதை நினைவுகூர்ந்தார். அக்கணம் மிகச் சரியாக அதை எடுத்தளிக்கும் தெய்வம் எது என வியந்தார். உரத்த குரலில் “இழிமகனே, இக்களத்தில் உன்னை கொன்றால் உன் குருதியில் ஒரு துளிகூட மண்ணில் எஞ்சாது. ஐயமிருந்தால் உன் கருசுமக்கும் துணைவியிடம் சென்று கேள்!” என்று உரக்க கூவினார்.

அத அபிமன்யூவின் விழிகளுக்கு சென்றிருக்குமா என்ற எண்ணம் எழுந்த கணமே அபிமன்யூவின் நோக்கு நடுங்குவதை, கையில் வில் தளர்வதை அவர் கண்டார். வஞ்சமும் வெறியும் எழ “சென்று கேள் உன் துணைவியிடம்! ஆம், சென்றுகேள் விராடத்து அரசியிடம்!” என கூவி நகைத்தபடி மேலும் அம்புகளை செலுத்தினார் அபிமன்யூவின் தோளிலைகள் உடைந்து தெறித்தன. விலாக்கவசம் உடைந்தது. அசைவற்ற உடலுடன் அக்கணமே இறக்கத் துணிந்தவன்போல அவன் அங்கே நின்றான். அவனுக்கு துணை வந்த சுருதகீர்த்தி தன் அம்புகளால் இந்திரசேனரை அறைந்தான்.

இக்கணத்தில் பிறை அம்பால் உயிர் துறந்தாலும் சரி, இவன் நெஞ்சில் ஒரு அம்பு தைத்தால் மட்டுமே என் வாழ்வு பொருள்படும் என்று இந்திரசேனரின் உள்ளம் எழுந்தது. நீளம்பை எடுத்து ஓங்கி இழுத்து அறைந்தார். அபிமன்யூவின் நெஞ்சக் கவசத்தை பிளந்து தைத்து அவனை தேர்த்தட்டில் வீழ்த்தியது அவர் அம்பு. சுருதசேனனும் சுருதகீர்த்தியும் இருபுறத்திலிருந்தும் வந்த அபிமன்யூவைக் காத்து மாளவரை எதிர்கொண்டனர். அபிமன்யூவின் தேர்ப்பாகன் தேரை இழுத்து அப்பால் கொண்டு சென்றான். சுருதகீர்த்தி வெறியும் விசையும் கொண்டிருந்தான். அம்பை இழுத்து ஓங்கி அறைந்தான். அதன் எக்காளத்தை இந்திரசேனர் கேட்டார். அதிலிருந்து தப்பும்பொருட்டு முழந்தாளிட்டு அமர்ந்தபோது பிறிதொரு அம்பால் அவர் தலைக்கவசத்தை உடைத்தான் சதானீகன்.

அம்புகள் நான்குபக்கமும் இருந்து சுழன்று வந்து அவர் தேரில் விழுந்தன. அருகே அவர் தன் படைத்தலைவர்கள் அலறிவீழ்வதை கண்டார். ஓர் அம்பு அவர் தோளை அறைய இன்னொரு அம்பு விலாக்கவசத்தை உடைக்க தேரிலிருந்து தூக்கிவீசப்பட்டு தரையில் விழுந்தார். தரையெங்கும் மண் தெரியாது பரவிக்கிடந்த வீரர்களின் உடல்களை அவர் பார்த்தார். மாளவர்கள், பாஞ்சாலர்கள், தசார்ணர்கள், மச்சர்கள், அரக்கர்கள், நிஷாதர்கள், காந்தாரர்கள். அதில் எந்த ஒழுங்கமைவும் இருக்கவில்லை. தலையை தூக்க அவர் முயன்றார். குருதி வழிந்து கவசங்களுக்குள் நிறைந்திருந்தது. தலை எடைகொண்டு நோக்கு அலையடித்தது.

முரசுத்தோல் மேல் நடமிடும் முழைக்கழிகள்போல புரவிக் குளம்புகள் மண்ணை அறைந்தறைந்து சென்றன. கால்கள் சேற்று வயலிலென மானுட உடல்களை மிதித்து நின்று துள்ளின. சகடங்கள் ஏறியிறங்கியும் மிதிபட்டும் அசைந்த உடல்கள் பிறிதொரு உயிர்கொண்டுவிட்டவைபோல் தோன்றின. மிதிபட்டுகொண்டே இருக்கும் அவ்வுடல்களின் பரப்பை அவர் பார்த்தார். அவற்றின்மேல் சிற்றலையில் படகுகள்போல் தேர்கள் ஏறி இறங்கிச் சென்றன. உடைந்த உடல்களிலிருந்து தேர்ச்சகடங்களில் குருதிச்சேறு தெறித்தது. குருதியைச் சுழற்றி பின்னால் தெறிக்கவிட்டபடி தேர்கள் சென்றன. உடல்கள் மேல் அம்புகள் விழுந்தன. அவற்றின் மேல் மீண்டும் வீரர்கள் விழுந்தனர். குருக்ஷேத்ரத்தில் அனைத்தும் வந்து விழுந்துகொண்டே இருந்தன. விழித்த கண்களுடன் அவர் அதை பார்த்துக்கொண்டிருந்தார்.

காரூஷநாட்டு அரசர் க்ஷேமதூர்த்தி போர்க்களத்தில் தன் படைகளை குவிப்பதில் முழுவிசையுடன் ஈடுபட்டிருந்தார். “காரூஷர் குவிக! காரூஷர் கொடிக்கீழ் அமைக!” என்று அவருடைய ஆணையை முழவுகள் ஒலித்துக்கொண்டே இருந்தன. காரூஷர்களின் தேள்முத்திரை பொறிக்கப்பட்ட கொடி அசைந்துகொண்டிருந்தது. காரூஷநாட்டு வீரர்கள் கவசங்கள் வெயிலில் ஒளிவிட ஒருவரோடொருவர் முட்டித்ததும்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்து மாளவப் படை முன்னெழ உந்தியது. படைமுகப்பில் கூர்ஜரர்கள் அபிமன்யூவின் அம்புபட்டு விழுந்துகொண்டிருந்தார்கள். “நிரைகொள்க! அணிகலையாதமைக!” என அவர் ஆணையிட்டார்.

அவருக்கு எதிரே சாத்யகி வில்லுடன் நின்று போரிட அவனுக்குத் துணையாக விராடர்களின் விசைவில்லவர் அரைநிலா வடிவில் நின்றிருந்தார்கள். “எதிர்கொண்டு நில்லுங்கள்… பின்னடையாதீர்கள்” என ஆணையிட்டு அவர் காரூஷநாட்டு தேர்வில்லவரை முன்னணிக்கு அனுப்பியபடி தேரில் நின்றிருந்தார். கவசமணிந்த இரண்டு யானைகள் அவருக்குக் காவலென முன்னால் நின்றிருந்தன. அவற்றின் எடைமிக்க இரும்புக்கேடயங்களின் மேல் அம்புகள் வந்து விழும் ஒலி எல்லைக்காவல் அன்னையின் ஆலயத்தின் நூற்றுக்கணக்கான சிறிய மணிகள் ஒலிப்பதுபோல கேட்டுக்கொண்டிருந்தது.

அவரால் அந்த மணியோசையில் இருந்து உளம் விலக்கவே இயலவில்லை. அது காரூஷத்தின் தெற்கெல்லையில் விந்தியமலை மடிந்து மடிந்துயரும் அலைகளின் முதல் வளைவிலமைந்த பத்ரையன்னையின் ஆலயத்தின் முன் நின்றிருக்கும் உணர்வை அவருள் நிலைநிறுத்திக்கொண்டிருந்தது. போருக்கு எழுவதற்கு முன்பு அவரும் அவருடைய குலமும் அங்கே சென்று அன்னைக்கு குருதிபலி அளித்து பூசனைசெய்து மீண்டனர். அப்போது அவர் மைந்தர்கள் ஹஸ்திபதனும் சுரவீரனும் மூஷிகாதனும் உடனிருந்தார்கள். “அன்னையே, உனக்கு நிறைவு! அன்னையே, உனக்கு விண்நிறைவு! அன்னையே, உன் மைந்தருக்கு வெற்றி!” என்று சொல்லி பூசகர் குருதித் தாலத்தை கொண்டுவந்து நீட்டினார். அதைத் தொட்டு நெற்றியிலிட்டுக்கொண்டார்கள்.

திரும்பும்போது அவர் ஒருசொல்லும் உரைக்கவில்லை. அவருடைய தேரிலேயே மைந்தர்களும் ஏறிக்கொண்டிருந்தனர். அவர்கள் இளமையிலேயே பத்ரையன்னையின் கதையை அறிந்திருந்தார்கள். அவர்கள் பிறப்பதற்கு முன்னரே நிகழ்ந்தது. சேதிநாட்டரசன் சிசுபாலனுக்கு அணுக்கமானவர்களாக அன்று காரூஷநாட்டினர் இருந்தனர். மகதத்தின் பேரரசன் ஜராசந்தனின் தென்னெல்லைக் காவலர்கள் என அவர்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஜராசந்தனின் ஆதரவால் அவர்களின் சிற்றூர் வளர்ந்து நகராயிற்று. கோட்டையும் அங்காடியும் கொண்டு தலைநகராகி சூழ்ந்திருந்த ஊர்களை வென்று இணைத்து நாடென்று மாறியது. ஜராசந்தனின் தோழன் என்பதனால் சிசுபாலனுக்கும் அவர்கள் கட்டுப்பட்டிருந்தனர்.

அவர்களின் குலம் வடக்கே கங்கைக்கரையில் எங்கிருந்தோ கிளம்பியது. அங்கம், வங்கம், கலிங்கம், சுங்கம், பௌண்டரம் என்னும் ஐந்து நாடுகளின் அரசர்களின் குருதியை அளித்த விழியிலா வைதிகரான தீர்க்கதமஸின் குருதியில் பிறந்தவர்கள் அவர்கள் என்பது அவர்களுக்கு கற்பிக்கப்பட்ட வரலாறு. தீர்க்கதமஸ் அவருடைய முதல் மனைவி பிரத்தோஷியின் மைந்தரால் கங்கையில் ஒழுக்கப்பட்டு மகாபலர்

என்னும் அரக்கர் குலத்தைச் சேர்ந்த வாலி என்னும் அரசனால் கண்டெடுக்கப்படுவதற்கு முன்பு அவர் அக்காட்டில் உறவுகொண்ட ஏழு வேடர்குலங்களில் ஒன்றிலிருந்து உருவானது அவருடைய அரசகுலம்.

அவர்கள் நிலம் தேடி தண்டகாரண்யம் வந்தனர். அங்கே காடழித்து நிலம்கொண்டு அவர்கள் அமைத்த அரசுகளுக்கு அரக்கர்களும் நிஷாதர்களுமே எதிரிகளாக இருந்தனர். அவர்களுடன் போரிட்டு இழந்து இழந்து கிளைவெட்டப்பட்ட மரம் குறுகியமைவதுபோல் அவர்கள் மலைச்சரிவில் சிற்றோடைக்கரையில் அமைந்திருந்த காரூஷவதி என்னும் ஊரில் ஒண்டியிருந்தனர். ஜராசந்தனின் உதவியுடன் அரக்கர்களையும் நிஷாதர்களையும் வென்றதும் காரூஷநாட்டு தேள்கொடியை மாளவத்தின் எல்லைவரை கொண்டுசென்று நாட்டினார் க்ஷேமதூர்த்தியின் முதற்றாதை வாகர். அண்டைநாடுகளனைத்தும் அவர்களை அஞ்சின. சூழ்ந்திருந்த காடுகளின் நடுவே அமைந்த சந்தை என்பதனால் வணிகம் செழித்து வரிச்செல்வம் பெருகியது. ஆகவே மகதத்திற்கு திறைகொடுத்தும் கருவூலம் நிறைந்திருந்தது.

வாகரின் அரசி சூக்திதேவி காரூஷகுடிகளில் ஒன்றாகிய சீர்ஷர்களில் பிறந்தவள். நெடுங்காலமாகவே தங்கள் குலங்களுக்குள் பெண்கொள்வதே காரூஷர்களின் வழக்கம். பிற ஷத்ரிய அரசர்களிடம் பெண்கோரும் திறனிருக்கவில்லை. அரசரல்லா குடிகளிடம் பெண்கொண்டால் குடிநிலை அழியும் என அஞ்சினர். வாகர் தன் மைந்தன் தந்தவக்ரனுக்கு விசால நாட்டு அரசர் சமுத்ரசேனரின் மகள் பத்ரையை மணமுடிக்க விரும்பினார். விசால அரசு தீர்க்கதமஸின் குருதியிலெழுந்த ஷத்ரியகுடிகளில் ஒன்று என்று அங்கம், வங்கம், கலிங்கம், சுங்கம், பௌண்ட்ரம் என்னும் ஐந்து நாடுகளும் அவையேற்பு அளித்திருந்தன. கங்கையின் துணையாறான பீதவாகினியின் கரையில் அமைந்த அவர்களின் சிறுநகர் வைசாலியில் வணிகர்களின் படகுகள் நின்று செல்வதனால் நீர் வணிகம் என்றுமிருந்தது. மகத ஜராசந்தனின் வரிகொள்நிலையாக அவர்கள் மாறினார்கள். ஜராசந்தனின் மைந்தர்களில் ஒருவனுக்கு மகளை அளித்து மணவுறவு பெற்று மெல்ல செல்வமும் படைவல்லமையும் பெறத் தொடங்கியிருந்தார்கள்.

காரூஷநாட்டின் மணத்தூதை சமுத்ரசேனர் முதலில் விரும்பவில்லை. இளவரசி பத்ரை அழகி என்றும் ஆற்றல்கொண்டவள் என்றும் அறியப்பட்டிருந்தாள். அங்கம், வங்கம் உட்பட ஐந்து பெரிய நாடுகளில் ஏதேனும் ஒன்றின் அரசனுக்கு பட்டத்தரசியாக தன் மகளை அனுப்ப அவர் விழைந்தார். அந்த ஐந்து நாடுகளின் பட்டத்து இளவசர்களுக்கும் அவர்களுக்குள்ளேயே மகள்கொண்டு மணம்நிகழ்ந்தமையால் இரண்டாம்நிலை அரசியென அவளை அளிக்கலாமென எண்ணினார். அப்போதுதான் சேதிநாட்டிலிருந்து தமகோஷரின் மணக்கோரிக்கை வந்தது. பத்ரையை சிசுபாலனுக்கு மணமுடித்து அளிக்கவேண்டும் என்றும் அவள் சேதியின் பட்டத்தரசியாவாள் என்றும் அவர் சொன்னார். ஆனால் சேதியின் மணவுறவை வைசாலியின் குடித்தலைவர்கள் விரும்பவில்லை.

“வைசாலி என்னும் சிறுநகர் மட்டுமே கொண்ட நாம் இன்று அரசகுடி என அறியப்படுகிறோம் என்றால் நமது குருதித்தூய்மையால்தான். யாதவக்குருதி கொண்ட சேதியுடனான உறவு நம்மை நிலையிறக்கும். அதன்பின் ஷத்ரியர் நம் குடியில் மணம்கொள்ள மாட்டார்கள்” என்றனர். “சேதியுடன் மணவுறவை மறுத்துவிடுவோம். நம் அரசியை காரூஷர் கோருகிறார்கள். அவர்களுக்கே அவளை அளிப்போம். அங்கே அவள் பட்டத்தரசியாவாள். காரூஷநாட்டு இளவரசர் தந்தவக்ரர் திறன்மிக்கவர். மகதமன்னருக்கு அணுக்கமானவர். அவர் நாடு தெற்கே தண்டகாரண்யம் முழுக்க விரிந்தெழும் வாய்ப்பு கொண்டது. சிசுபாலருக்கும்

அவர்கள் அணுக்கமானவர்கள். மகதமன்னரைக் கடந்து சிசுபாலரும் ஒன்றும் செய்யமுடியாது" என்று உரைத்தார்கள்.

ஆகவே சமுத்ரசேனர் தன் மகளை தந்தவக்ரருக்கு அளிக்க ஒப்புக்கொண்டு ஓலையளித்தார். சிசுபாலனுக்கு மணமறுப்பு ஓலை அளிக்கப்பட்டது. செய்தியறிந்த சிசுபாலன் பன்னிருபேர் மட்டுமே கொண்ட சிறிய படையுடன் விசாலநாட்டுக்கு கிளம்பினான். செல்லும்வழி முழுக்க காரூஷநாட்டு தேள்கொடியை அவர்கள் ஏந்தியிருந்தனர். ஆகவே வைசாலியின் எல்லையை கடப்பதுவரை அவர்களை வரவேற்கும் நிலையிலேயே விசாலநாட்டுப் படையினர் இருந்தார்கள். காரூஷநாட்டரசரின் தூதுக்குழுவாக வந்திருப்பதாகவே காவல்மாடங்களில் சிசுபாலன் சொன்னான். நகர்முகப்பை அடைந்ததும் அந்நகரை முற்றழித்துவிடுவதாக அறைகூவினான். பன்னிருவர் மட்டும் வந்து தன்னுடன் பொருதும்படி அவன் கோரவே வைசாலியின் படைத்தலைவன் பத்மசேனன் அவனை நகர்முகப்பில் எதிர்கொண்டான். அப்போரில் பத்மசேனனைக் கொன்று அரசி பத்ரையை சிசுபாலன் கவர்ந்துசென்று மணமுடித்தான்.

பத்ரையை மணப்பது பற்றிய கனவிலிருந்தார் தந்தவக்ரர். அவளை சிசுபாலன் கவர்ந்துசென்றதை அறிந்து சினம்கொண்டு படையுடன் சேதிமேல் எழ எண்ணினார். ஆனால் காரூஷம் அதற்கான படைத்தகுதி கொண்டது அல்ல என்று தந்தை விலக்கினார். மகதநாட்டுக்குச் சென்று ஜராசந்தனிடம் முறையிட்டனர். அவன் மணம் நிகழ்ந்துவிட்டமையால் மேலும் பேசுவதில் பொருளில்லை என அவர்களை திருப்பியனுப்பினான். நாடு திரும்பிய பின்னரும் தந்தவக்ரர் பத்ரை நினைவிலேயே இருந்தார். பித்தெழுந்தவராக காட்டில் அலைந்தார். தனித்திருந்து விழிகலுழ்ந்தார். கனவுகளில் அவளைக் கண்டு கதறியழுதார்.

நிமித்திகர் எழுவர் கூடி களம் வரைத்து அவருடைய நிலையை கணித்தறிந்தனர். பத்ரையின் கன்னியுடலில் குடிகொண்ட பத்ரை என்னும் அன்னை அவளிடமிருந்து விலகி காரூஷ நாட்டுக்கு வந்து அவள்மேல் பெருங்காதல் கொண்டிருந்த தந்தவக்ரரின் உடலில் கூடியிருப்பதாக சொன்னார்கள். பத்ரையன்னைக்கு நாட்டின் எல்லைக்காட்டில் எவருமறியாத ஒரு சிற்றாலயத்தை அமைத்தனர். அங்கே பத்ரையின் அதே வடிவில் கற்சிலை ஒன்று அமைக்கப்பட்டது. வேதம் ஓதி பீடத்தில் நிறுவப்பட்ட அன்னைக்கு மலரும் நீருமிட்டு வணங்கினர். பதினெட்டு நாட்கள் தன்னந்தனிமையில் பத்ரையன்னையின் முன் அவள் முகத்தை நோக்கியபடி உண்ணாமல் உறங்காமல் நோன்பிருந்த தந்தவக்ரர் எழுந்தபோது கன்னியன்னையிடமிருந்து மீண்டிருந்தார். அதன் பின்னரே அவர் மூக குடியின் நேத்ரையை மணந்து க்ஷேமதூர்த்தியை பெற்றார்.

பத்ரையில் வாழ்ந்த கன்னியை காரூஷநாட்டுக் காட்டுக்குள் ஆலயத்தில் நிறுவிவிட்டிருந்தமையால் பத்ரையிலிருந்து கன்னியழகுகள் அகன்றன. அவள் உடல்தளர்ந்து விழிமங்கி முதுமகளானாள் என்று காரூஷநாட்டுக் கதைகள் கூறின. அவளை சிசுபாலன் பின்னர் பொருட்படுத்தவில்லை. சேதிநாட்டின் பழைய அரண்மனை ஒன்றில் அவள் தனித்திருந்து நோயுற்று நலிந்து சொல்லவிந்து வெற்றுவிழிகொண்ட தசைப்பதுமை என்றானாள். இளைய யாதவரின் படையாழியால் சிசுபாலன் கொல்லப்பட்ட பின்னர் அவள் மீண்டும் உயிர்கொண்டு பிறிதொருத்தியானாள். உறுதியும் கசப்பும் கொண்ட அன்னைவடிவாக சேதியை ஆண்டாள்.

ஆனால் காரூஷநாட்டில் அவள் கன்னியென்றே அமைந்திருந்தாள். பத்ரையன்னைக்கு குருதிபலி அளித்து நீர்முழுக்காட்டப்பட்டது. அதன்பின்

அவ்வாலயம் காரூஷநாட்டு அரசர்களின் குடித்தெய்வங்களில் ஒன்றென ஆயிற்று. தந்தவக்ரர் இறக்கையில் க்ஷேமதூர்த்தியை அருகழைத்து "நம் குடியன்னையின் பழி ஒன்று நம் கணக்கில் உள்ளது. என்றேனும் ஏதேனும் களத்தில் அன்னையின் வஞ்சம் எழும் என்று நிமித்திகர்கள் கூறினார்கள். அன்னை அதை எவ்வண்ணம் நிகர்த்த விழைகிறாள் என்று கேள். அவள் ஆணையே நம் குடியை வழிநடத்தவேண்டும்" என்றார். "போர் என ஒன்று நிகழுமென எண்ணுகிறீர்களா?" என்று க்ஷேமதூர்த்தி கேட்டார். "ஜராசந்தர் கொல்லப்பட்டதுமே ஒரு போர் நிகழுமென்பது உறுதியாகிவிட்டது. அது எப்போது எங்கு எவரெவர் நடுவே என்பதுதான் வினா. அது நிகழுமென்றால் அங்கே அன்னையின் வஞ்சமும் எழவேண்டும்" என்றார். அவர் முன் வாள்தொட்டு க்ஷேமதூர்த்தி ஆணையிட்டார்.

போரெழுவதை ஒவ்வொருநாளும் செய்திகளின் வழியாக அறிந்துகொண்டிருந்தார். போருக்கான அழைப்புகள் இருதரப்பிலிருந்தும் வரத்தொடங்கின. "நாம் எம்முடிவை எடுப்பது, தந்தையே? ஷத்ரியர்களாகிய நாம் வேதம் காக்கவே நின்றிருக்கவேண்டும் என குடிகள் எண்ணுகிறார்கள்" என்று மூத்தவனாகிய ஹஸ்திபதன் சொன்னான். "ஆம், ஆனால் நாம் அன்னையின் சொல்லை கோருவோம்" என்றார் க்ஷேமதூர்த்தி. ஆனால் ஏழு நாட்கள் அன்னைமுன் நோன்பிருந்தபோதும் அன்னை வெறியாட்டில் எழவில்லை. "அன்னைக்கு சொல் இல்லை என்றால் நாம் நம் குடியவையின் சொல்லையே ஏற்போம், தந்தையே" என்றான் ஹஸ்திபதன். "இப்போரில் ஷத்ரியர்களே வெல்வர். அஸ்தினபுரியின் படைவல்லமையும் அங்கிருக்கும் பெருவீரர்களின் திறனும் பாரதவர்ஷத்தை மும்முறை வெல்லற்குரியவை." அவன் இளையோரும் அவ்வண்ணமே சொன்னார்கள்.

ஆனால் எட்டாம்நாள் பூசகனில் வெறியாட்டெழுந்து அன்னை ஆணையிட்டாள். "கௌரவர்களுடன் சேர்ந்துகொள்க, சிசுபாலனைக் கொன்ற இளைய யாதவர்மேல் குருதிவஞ்சம் தீர்த்து என்னை விண்ணேற்றுக!" காரூஷநாட்டினர் உவகை கொண்டனர். "அன்னையின் ஆணை. அவள் துணை நம்முடன் என்றுமிருக்கும். நாம் களவெற்றி கொள்வோம். போருக்குப் பின் நம் படைத்துணைக்கு ஈடாக பெருநிலம் பெறுவோம். காரூஷம் தென்னிலத்தின் பேரரசென அமைவதற்கு அன்னையின் அருள் அமைந்துள்ளது" என்றார் மூத்த குடித்தலைவரான சக்தர். பிற குடித்தலைவர்கள் தங்கள் வில்களையும் வாள்களையும் தலைக்குமேல் ஏந்தி ஆர்ப்பரித்தனர்.

போருக்கான அரசர் சந்திப்புக்கு அழைப்பு வந்தபோது க்ஷேமதூர்த்தி தன் மூன்று மைந்தர்களுடன் அஸ்தினபுரிக்கு சென்றார். அங்கே அவையமர்ந்திருந்தபோது ஒன்றை உணர்ந்தார், கௌரவர்களின் படைக்கூட்டில் அவருடைய இடமென்பது மிகமிகச் சிறிது. அவருக்கு மிக இயல்பான ஷத்ரிய அவைமுறைமைகள் மட்டுமே செய்யப்பட்டன. நான்குமுறை அவர் பீஷ்மரிடம் பேசியபோதும் அவரை பீஷ்மர் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. "இங்கே நம் படைகளுக்கு என்ன இடம்? இங்கு வந்திருப்பவர்கள் பேரரசர்கள். அவர்களின் படைகளும் முறையான பயிற்சிகொண்டவை. நிறைந்த கருவூலமே படையாகிறது. இவர்களின் படைக்கலங்களையும் தேர்களையும் புரவிகளையும் பார். நாம் இவர்கள்முன் காட்டுமானுடராகவே தெரிவோம்" என்றார் க்ஷேமதூர்த்தி. மைந்தர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

"இங்கே போருக்குப் பின் நிலப்பகுப்பு பற்றி அரசர்கள் பேசிக்கொள்கிறார்கள். அத்தனை நிலங்களும் பகுக்கப்பட்டுவிட்டன. நமக்கான நிலத்தைப்பற்றி ஒரு சொல் எடுக்க இடையில்லை" என்றான் சுரவீரன். மூஷிகாதன் "அதைவிடக் கீழ்மை. நேற்று

மதுக்கூடத்தில் பேசுகையில் மாளவரும் அவந்திநாட்டு அரசர்களும் நம் நிலத்தையும் சேர்த்தே தங்கள் நாட்டைப்பற்றி பேசுகிறார்கள்" என்றான். க்ஷேமதூர்த்தி "ஆம், இந்தப் படைக்கூட்டில் மாளவ இந்திரசேனர் மிகப்பெரிய பங்காளி. அவந்தியின் விந்தரும் அனுவிந்தரும் அவ்வாறே. அவர்களிருக்கும் இடத்தில் நாம் குறுநிலமன்னர்களாகவே திகழமுடியும்" என்றார்.

குழம்பிய உள்ளத்துடன் அவர்கள் காரூஷநாட்டுக்கு மீண்டார்கள். முரசறைந்து படையறிவிப்பை வெளியிட்டு பதினெட்டு நாட்களாகியும் நாநூறுபேருக்குமேல் படைதிரளவில்லை. "ஆயிரம்பேரையாவது கொண்டுசெல்லாவிட்டால் நமக்கு எவ்வகையிலும் அங்கே மதிப்பில்லை" என்றார் க்ஷேமதூர்த்தி. அந்நாட்களில் அன்னைக்கு பலிபூசனை செய்துகொண்டிருக்கையில் பூசகனில் வெறியாட்டெழுந்த அன்னை "என் மைந்தரே, சென்று பாண்டவர்களுடன் சேர்ந்துகொள்க! என் மைந்தன் திருஷ்டகேது அங்கே படைக்கூட்டு கொண்டிருக்கிறான். அவனுக்கு துணைநில்லுங்கள்" என்று ஆணையிட்டாள். அன்னையின் ஆணை காரூஷர்களை குழப்பியது. சுரவீரனும் மூஷிகாதனும் "அன்னைசொல்லை தலைக்கொள்வோம். அவள் நமக்கு படைக்காப்பு" என்றனர்.

க்ஷேமதூர்த்தி இளவரசர்களுடன் உபப்பிலாவ்யத்திற்குச் சென்று அங்கே திருஷ்டகேதுவை கண்டார். அன்னையின் ஆணையை அறிவித்தபோது அவன் புன்னகை செய்து "ஆம், அன்னையின் சொல் தலைக்கொள்ளப்படவேண்டியதே" என்றான். பாண்டவ அவையில் க்ஷேமதூர்த்தி முன்னணியில் அமரச்செய்யப்பட்டார். அவையில் அவர் சொல் எப்போதும் ஒலித்தது. ஆனால் படையெழுச்சி தொடங்கியபோது க்ஷேமதூர்த்தி நிறைவின்மையை அடைந்தார். "இங்கே அசுரர்களும் நிஷாதர்களும் கிராதர்களுமே நிறைந்துள்ளனர். இப்படையில் நம் எல்லைக்குத் தெற்கே நம்முடன் நூறாண்டுகள் போரிட்ட ஏழு அசுரகுடியினர் இடம்பெற்றுள்ளனர். இப்போரில் இவர்கள் வென்றால் அதனால் நாம் ஆற்றலிழந்தவர்களாக ஆவோம்" என்றார்.

ஆனால் மைந்தர்கள் அதை ஏற்கவில்லை. "நமக்கு இன்று இயல்பான துணை சேதிநாடுதான். இளைய யாதவர் வெல்லப்பட இயலாதவர் என்கிறார்கள். மெய்தான், அசுரரும் அரக்கரும் நிஷாதரும் கிராதருமே இங்கிருக்கிறார்கள். ஆனால் நம் அனைவருக்குமே பொது எதிரி மேற்கே மாளவமும் கிழக்கே விதர்ப்பமும் வடக்கே அவந்தியும்தான். அவர்கள் மூவரும் அங்கிருக்கிறார்கள். அவர்களை வென்று நாம் கொள்ளப்போகும் நிலம் நம்மனைவருக்குமே பொதுவானது" என்றான் ஹஸ்திபதன். சுரவீரனும் மூஷிகாதனும் "ஆம் தந்தையே, இங்கு நமக்குள்ள இடம் அங்கில்லை. அங்கே நம் எதிரிகளுடன் சேர்ந்தமரும் நிலைக்கு ஆளாவோம்" என்றார்கள்.

படைகள் உபப்பிலாவ்யத்திலிருந்து கிளம்பிய அன்று பாடிமுற்றத்தில் களம் அமைத்து பத்ரை அன்னைக்கு குருதிபலிகொடுத்து வணங்கினர். அன்னை வெறியாட்டெழுந்து "என் மைந்தரே, கௌரவர்களிடம் செல்க! அங்குள்ளது உங்கள் வெற்றி. என் மைந்தன் தந்தையின் குருதிக்கு வஞ்சமிழைத்தவன். இளைய யாதவரின் குருதிகொண்டு என்னை நிறைவுசெய்க! என் கொழுநரை விண்ணேற்றுக!" என்று ஆணையிட்டாள். க்ஷேமதூர்த்தி "அன்னையின் ஆணை இம்முறை தெளிவாகவே உள்ளது. நமக்கு இதை மீற உரிமையில்லை" என்றார். ஹஸ்திபதனும் சுரவீரனும் மூஷிகாதனும் அதை மறுத்தனர். "இனி பின்னடைதலென்பது இல்லை. அன்னையின் ஆணையை நாம் காரூஷநாட்டுக்கு மீண்டபின் மீண்டுமொருமுறை உசாவலாம்" என்றனர்.

அவர்களுடன் க்ஷேமதூர்த்தி பூசலிட்டார். “நாம் இன்றே கிளம்பி அப்புறம் செல்வோம்… நம் நாட்டுக்கு நலன் பயப்பது அதுவே” என்றார். “தந்தையே, இங்கே நாம் வாள்தொட்டு ஆணையுரைத்திருக்கிறோம்” என்றான் ஹஸ்திபதன். “அறிவிலி… அங்கும் இங்குமாக அத்தனை அரசர்களும் நிலைமாறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இங்கே பாண்டவ அவையில் நம்முடன் இருந்தவர்கள்தான் கேகய மன்னர் திருஷ்டகேதுவும் திரிகர்த்தமன்னர் சுசர்மரும் துஷார மன்னர் வீரசேனரும் வத்சநாட்டரசர் சுவாங்கதரும். அவர்களெல்லாரும் அப்பக்கம் சென்றுவிட்டார்கள். அணிமாறுதல் அரசியல். நாம் சொல்லுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல, நம் குடிகளின் நலனை மட்டுமே கருத்தில்கொள்பவர்கள்” என்றார்.

“ஆம், ஆனால் அவர்களெல்லாரும் படைவஞ்சினம் எழுவதற்கு முன்னரே சென்றுவிட்டார்கள். நாம் இங்கு வாளேந்தி வஞ்சினம் உரைத்திருக்கிறோம்” என்றான் ஹஸ்திபதன். “என்னுடன் கிளம்புக! இது உங்கள் தந்தையின் சொல்” என அவர்களுக்கு ஆணையிட்டார். “எங்கள் மூதாதையருக்காக நாங்கள் நிலைகொள்கிறோம். தந்தையைவிட சொல் மேன்மைகொண்டது” என்றான் ஹஸ்திபதன். “இழிமகனே, என்னை எதிர்க்கிறாயா? என் சொல்லை மறுதலிக்கிறாயா?” என்றார் க்ஷேமதூர்த்தி. “ஆம் தந்தையே, வேறு வழியில்லை” என்றான் ஹஸ்திபதன். “சொல்லுங்கள், உங்களில் என்னுடன் எவர் வரப்போகிறீர்கள்?” என்று க்ஷேமதூர்த்தி கேட்டார். சுரவீரனும் மூஷிகாதனும் ஒன்றும் சொல்லவில்லை.

அன்றே அவர் தன் படைகளை அழைத்துக்கொண்டு அஸ்தினபுரியின் படைகளுடன் சென்று சேர்ந்துகொண்டார். காரூஷநாட்டுப் படைகளில் பெரும்பகுதியினர் அவருடன்தான் வந்தனர். ஏனென்றால் அரசருக்குரிய கணையாழியால் ஆணையிட அவரால் இயன்றது. அந்த ஓலைக்கு காரூஷநாட்டின் பதினாறு படைத்தலைவர்களும் கட்டுப்பட்டார்கள். அவர்கள் அஸ்தினபுரியின் படைகளை அடைந்தபோது அது குருக்ஷேத்ரம் நோக்கி சென்றுகொண்டிருந்தது. கௌரவ அவையில் அவரை வரவேற்ற சகுனி “மைந்தருக்கு எதிராக களம்நிற்கப் போகிறீர்கள்” என்று சொன்னார்.

அச்சொல்லின் உள்ளுறை புரியாமல் “அவர்கள் என் மைந்தர்கள் அல்ல. என் சொல்லை தட்டியதுமே என் எதிரிகளாகிவிட்டனர். நான் என் அன்னையின் ஆணையை ஏற்று இங்கே வந்தவன்” என்றார் க்ஷேமதூர்த்தி. துச்சாதனன் “ஆனால் இங்கிருந்து அங்கு செல்லவும் உங்கள் அன்னையல்லவா ஆணையிட்டாள்?” என்றான். அவையில் எழுந்த சிரிப்பின் ஒலி க்ஷேமதூர்த்தியை கூசச் செய்தது. வந்திருக்கலாகாதோ என்னும் எண்ணம் எழுந்தது. ஆனால் துரியோதனன் “எவ்வண்ணமாயினும் என்ன? நம்மை நாடி வந்துவிட்டார். அவையமர்க, காரூஷரே! நம் வெற்றியில் மைந்தரும் வந்து இணையட்டும்” என்றான். அவர் விழிநீர் வழிய “இந்தப் பெருந்தோள்களுக்காகவும் அகன்ற உள்ளத்துக்காகவும்தான் இங்கே வந்தேன்” என்றார்.

காரூஷத்தின் படைகள் களத்தை அடைந்துவிட்டதை க்ஷேமதூர்த்தி கண்டார். அவர்களை எதிரிலிருந்து வந்த திருஷ்டத்யும்னனின் படைகள் ஏவிய அம்புகள் அறைந்தறைந்து வீழ்த்தின. ஒவ்வொருவர் வீழும்போதும் க்ஷேமதூர்த்தியின் உடல் மெல்லிய அதிர்வை அடைந்தது. பின்னர் அத்திசையை பார்க்கவேண்டியதில்லை என்று நோக்கை விலக்கிக்கொண்டார். ஆனால் ஓசைகளினூடாக அதையே அறிந்துகொண்டிருந்தது அவருடைய உள்ளம். அவர் ஹஸ்திபதனும் சுரவீரனும் மூஷிகாதனும் களம்பட்ட நாளை நினைத்துக்கொண்டார். மூன்றாம்நாள் போர்முடிந்து அவர் பாடிவீட்டுக்கு திரும்பும்போதுதான் படைத்தலைவன்

சிருங்கதரன் அவர் அருகே வந்து அச்செய்தியை சொன்னான். முதலில் அதன் பொருள் அவர் உள்ளத்தை அடையவில்லை. அவன் மீண்டும் சொன்னான். “அரசே, நம் இளவரசர்கள் ஹஸ்திபதனும் சுரவீரனும் மூஷிகாதனும் இன்று களத்தில் விழுந்தனர்.”

“யார்?” என்று க்ஷேமதூர்த்தி நடுங்கும் குரலில் கேட்டார். “யார்?” சிருங்கதரன் “நம் இளவரசர்கள் ஹஸ்திபதனும் சுரவீரனும் மூஷிகாதனும். துரியோதனரின் மைந்தர் லட்சுமணரால் கொல்லப்பட்டார்கள்.” அவர் பெருமூச்சுடன் “ஆம்” என்றார். சிருங்கதரன் “நாம் அவர்களுக்குரிய கடன்களை செய்யவேண்டும். அவர்களின் உடல்களை கோரிப்பெறலாம்” என்றான். “வேண்டாம்!” என்று அவர் சொன்னார். “அரசே, அதற்கு வழியும் நெறியும் உள்ளது” என்று சிருங்கதரன் சொன்னான். “வேண்டியதில்லை. அவர்கள் நம் எதிரிகள்” என்றார் க்ஷேமதூர்த்தி. செல்க என கையசைத்துவிட்டு தன் தேரை கிளப்ப ஆணையிட்டார்.

மறுநாள் சொல்சூழவை முடிந்து கிளம்புகையில் துரியோதனன் அவர் அருகே வந்து “போரின் நிகழ்வுகளை புரிந்துகொள்க, காரூஷரே! அதற்கப்பால் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை” என்றான். அவர் “ஆம், அது ஊழ். வேறொன்றுமில்லை” என்றார். துரியோதனனுக்குப் பின்னால் நின்ற லட்சுமணன் அவர் அருகே வந்து “நான் தாங்கள் இங்கிருப்பதை எண்ணவில்லை, காரூஷரே. போரில் எவரென்று எண்ணமே எழுவதில்லை. அங்கிருப்போர் என் உடன்பிறந்தாரென்றாலும் உளம்கொள்வதில்லை” என்றான். “ஆம், போரில் எதிர்நிற்போர் எதிரிகளே” என்றார் க்ஷேமதூர்த்தி “நாம் வெல்வோம்… அதையே நான் இதில் காண்கிறேன்.”

அதன்பின் அவர் ஒருகணம்கூட அவர்களைப்பற்றி எண்ணவில்லை. இருமுறை சிருங்கதரன் அவர்களைப்பற்றி சொல்லத் தொடங்குகையில் கையமர்த்தி அவனைத் தடுத்தார். அவர்கள் தன் கனவிலெழக்கூடும் என எண்ணினார். ஒவ்வொருநாளும் படுப்பதற்கு முன் கனவில் அவர்களை காண்போம் என அச்சத்துடன் பின் எதிர்பார்ப்புடன் எண்ணிக்கொண்டார். அவர்கள் முழுமையாகவே மறைந்துவிட்டிருந்தார்கள். அப்போது களத்தில் ஏன் அவர்களின் நினைவு எழுந்தது என வியந்தார். என்றுமில்லாத அளவு களத்தில் காரூஷர் விழுந்துகொண்டிருந்தார்கள் என்பதனாலா?

“காரூஷர் பின்னடைக… அம்புகளின் தொடுஎல்லைககுப் பின்னால் யானைகளை அரணாக்கி நிலைகொள்க” என அவருடைய ஆணை ஒலித்தது. காரூஷப் படையினர் இழப்பை உணர்ந்துவிட்டிருந்தனர். இயல்பாகவே இணைந்துகொண்ட படைவீரர்கள் அல்ல அவர்கள். இயல்பாக படைக்கெழுந்தவர்கள் ஆயிரவர் மட்டுமே. எஞ்சியோர் வீட்டுக்கு இருவர் வந்தாகவேண்டுமென்னும் ஆணைக்கேற்ப படைக்கலம் எடுத்து கிளம்பியவர்கள். பெரும்பாலானவர்கள் காடுகளில் வேட்டையாடி தோலும் ஊனும் சேர்ப்பவர்கள். தேனெடுப்பவர்கள். போர் என்றால் என்னவென்று அவர்கள் முன்னர் அறிந்திருக்கவே வாய்ப்பில்லை.

அவர் முன் காரூஷநாட்டு வீரர்கள் இருவர் அம்புபட்டுச் சரிந்தனர். ஒருவன் அவர்களுக்கு அப்பால் நின்று நடுங்கிக்கொண்டிருந்தான். அவன் உடல் வலிப்புகொண்டதுபோல துள்ளியது. கண்ணுக்குத் தெரியா கையொன்றால் பற்றி முறுக்கப்பட்டதுபோல திருகிக்கொண்டது. அவன் நிலத்திலிருந்து சுண்டுபுழுவைப்போல துள்ளி துள்ளி எழுந்தான். உறுமியபடி பாய்ந்து விழுந்துகிடந்த நால்வரை ஒரே தாவலில் கடந்து அவரை நோக்கி வந்தான். அவன் பற்கள் கிட்டித்து, தாடை இறுகி, கைவிரல்கள் இழுபட்டு விறைத்திருந்தன.

விலங்குபோல உறுமியபடி “நான் வந்துள்ளேன்! தந்தையே, நானே வந்துள்ளேன்!” என்றான்.

அவன் குரலை அவர் உடனே அடையாளம் கண்டுகொண்டார். ஹஸ்திபதனுக்கே உரிய குரலிழுப்பு. “நான் வந்துள்ளேன், தந்தையே! என்னுடன் இளையோரும் உள்ளனர்!” என்றான். “சொல்க!” என்றார் க்ஷேமதூர்த்தி “செல்க! இக்கணமே கௌரவர்களைத் துறந்து மறுபக்கம் செல்க! பாண்டவர்களுடன் சேர்ந்துகொள்க! ஆணை! ஆணை! ஆணை!” என்று அவன் கூச்சலிட்டான். உதைத்து தூக்கி வீசப்பட்டவனாக தெறித்து மல்லாந்து விழுந்தான். அவன் மேல் வானிலிருந்து இரு அம்புகள் வந்து தைத்து நின்றன. அவன் உடல் நெளிந்து பின் மெல்ல தளர்ந்தது. விழிகள் உருண்டு நிலைக்க வாய்திறந்து பற்கள் வெறித்துத் தெரிந்தன.

காரூஷநாட்டு க்ஷேமதூர்த்தி திரும்பி தன் படைகளை பார்த்தார். அவர்களால் போரிட இயலவில்லை என்பது தெரிந்தது. எந்தப் படையாலும் அர்ஜுனனை எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை. அதைப்போலவே மறுபக்கம் பாண்டவப் படையின் எந்தப் பிரிவாலும் பீஷ்மரை எதிர்கொள்ள முடியவில்லை. அவர்களின் விழிமுன் பேருருக்கொண்டு காட்சியிலிருந்தே அவர்கள் மறைந்துவிட்டதுபோல் தோன்றினார்கள். விண்ணிலிருந்து என அம்புகளைப் பொழிந்து அவர்களை கொன்றார்கள்.

எளிய மக்கள்! தங்களால் புரிந்துகொள்ள முடியாதவற்றால் ஒவ்வொருநாளும் ஆட்டிவைக்கப்படுபவர்கள். துரத்தி வேட்டையாடப்படுபவர்கள். கொன்று குவிக்கப்படுபவர்கள். பெருமழைகள், புயல்கள், வெயிலனல்கள், காட்டெரிகள், நோய்கள். அவற்றுக்கிணையாகவே அவர்கள் அரசனையும் கொடுந்தெய்வங்களையும் எண்ணினர். அந்தப் புடவிவிசைகளுக்கு முன் சொல்லின்றி அழிவதை, அழியும் தருணத்திலும் அவற்றின் எஞ்சும் அளியால் மீண்டும் முளைத்தெழமுடியும் என நம்புவதை அன்றி அவர்கள் எதையும் உளம்பயின்றிருக்கவில்லை. பீஷ்மரென்றும் பார்த்தரென்றும் களத்திலெழுந்திருப்பது அவர்கள் நன்கறிந்த, அத்தனை இறைவேண்டல்களிலும் அஞ்சி மன்றாடிய அவ்வழிவாற்றல்கள்தான்.

அவர் தத்தளித்துக்கொண்டிருந்தார். அவர் அருகே நின்றிருந்த வேலேந்திய வீரன் அஞ்சி அலறியபடி பாய்ந்து திரும்பி ஓட அவன் மேல் வேல் ஒன்று பாய்ந்து தரையுடன் அறைந்தது. அவன் எதை அஞ்சினான் என அவர் திகைக்கையில் அவன் வேலுடன் எழுந்து கைகளை விரித்து “தந்தையே!” என்று கூவினான். “மறுபக்கம் சென்றுசேர்க! பாண்டவர்களுடன் சேர்க!” அவன் உதடுகள் நிலைக்க வலப்பக்கம் சரிந்து விழுந்தான். க்ஷேமதூர்த்தி துடிப்புகொண்ட உடலுடன் தேர்த்தட்டில் நின்று பதறி உடனே இரு கைகளையும் விரித்து ஆணையிட்டார். “உடனடி ஆணை! காரூஷநாட்டு அரசரின் ஆணை! காரூஷப் படைகள் திரள்க! ஒருவரோடொருவர் உடல் பற்றிக்கொள்க! அரசரை தொடர்க!”

உடனடி ஆணை காரூஷநாட்டு வீரர்களை திகைக்கச் செய்தது. அனைவரும் போரை அக்கணமே நிறுத்தினர். படைமுழுக்க ஒரு நடுக்கமெனப் பரவியது அச்செய்தி. பின்னர் அவர்கள் படைக்கலங்களை மேலே தூக்கி “காரூஷம் வெல்க! மாமன்னர் வெல்க!” என்று கூவியபடி ஒருவரை ஒருவர் அணுகினர். சில கணங்களிலேயே அங்கு கலந்து போரிட்டுக்கொண்டிருந்தவர்களில் காரூஷர்கள்

மட்டும் ஓர் அணியாக இணைந்தனர். பாற்றிக்கழிக்கப்படும் முறத்தில் கற்களும் அரிசிமணிகளும் அதிர்ந்து அதிர்ந்து தனித்தனியாகப் பிரிவதுபோல அவர்கள் பிறரிடமிருந்து வேறுபட்டனர். க்ஷேமதூர்த்தி தன் தேரை படைமுகப்பை நோக்கி செலுத்த ஆணையிட்டார்.

தேர் முன்னால் சென்றதும் கோட்டைவாயில் ஒன்று திறந்து கிடப்பதுபோல பாண்டவப் படையை அணுகுவதற்கான இடைவெளி ஒன்று அகன்றிருப்பதை கண்டார். முன்னரே அது திறந்துவிட்டிருக்கவேண்டும். அவருக்கு மைந்தரின் அழைப்பு எழுவதற்கும் நெடுநேரம் முன்னதாகவே. அவர் உடல் மெய்ப்பு கொண்டது. “படைக்கலம் திருப்புக! படைக்கலம் திருப்புக!” என்று கூவியபடி கைகாட்டினார். அவருடைய தேருக்கு வலப்பக்கம் வந்த முழவுக்கழையர் இருந்த தேரிலிருந்து அந்த ஆணை முழங்கியபோது படைவீரர்களிடமிருந்து சொல்லில்லா முழக்கம் ஒன்று உருவாகியது. அவருடைய தேரிலிருந்த ஆவக்காவலன் தேரின்மேல் பறந்த காரூஷநாட்டுக் கொடியை இழுத்து தலைகீழாக கட்டினான். வில்லை தலைகீழாக ஏந்தியபடி அவர் பாண்டவப் படையின் இடைவெளி நோக்கி சென்றார். கொடிகள் தலைகீழாக பறக்க படைக்கலங்களை தலைகீழாக ஏந்தியபடி காரூஷநாட்டுப் படையினர் அவரைத் தொடர்ந்து பாண்டவப் படைக்குள் நுழைந்தனர்.

அவர்கள் வருவதைக் கண்ட பாண்டவர்களின் முரசுமாடத்திலிருந்த காவலர்தலைவன் திகைத்தான். பின்னர் முரசுகள் முழங்கின. அந்த ஆணைகளை ஏற்று பாண்டவர்களின் படை இரு கைகளாக உருக்கொண்டு நீண்டு வந்து அவர்களின் இருபக்கமும் அரண்செய்து அணைத்து உள்ளிழுத்துக்கொண்டது. அப்போதுதான் அவர்கள் படைவிட்டு முன்செல்வதை கௌரவர்களின் படை புரிந்துகொண்டது. அவர்களிடமிருந்து இளிவரல் ஓசைகள் எழுந்தன. சில அம்புகள் எழுந்து வந்து அவர்களை பின்னாலிருந்து தாக்கின. கொடிகள் அசைந்து அவர்கள் செல்வதை அறிவிக்க முழவுகள் ஓசையிட்டன. க்ஷேமதூர்த்தி திரும்பி நோக்கியபோது பின்னணியில் சிலர் விழுந்துவிட்டதை தவிர்த்தால் காரூஷர்களில் பெரும்பாலானவர்கள் பாண்டவப் படைக்குள் நுழைந்துவிட்டதை கண்டார்.

“நான் படைத்தலைவரை காணவேண்டும்… நாங்கள் அணிமாறுகிறோம். எங்கள் குடித்தெய்வத்தின் ஆணை இது!” என்றார் க்ஷேமதூர்த்தி. “அதை படைத்தலைவர் திருஷ்டத்யும்னர்தான் முடிவெடுக்கவேண்டும்…” என்ற காவலன் “உங்கள் படைகள் இங்கே நின்றிருக்கட்டும். நீங்கள் சென்று படைத்தலைவரை பார்க்கலாம்” என்றான். காவலன் ஒருவன் க்ஷேமதூர்த்தியை அழைத்துக்கொண்டு புரவியில் போரில் கொந்தளித்துக்கொண்டிருந்த பாண்டவர்களின் படைப்பிரிவுகளின் இடைவெளிகள் வழியாக சென்றான். மலைப்பாறை வெளியில் இறங்குவதுபோல வளைந்தும் ஒசிந்தும் நின்றும் தாவியும் அவர்கள் சென்றார்கள். கழையன் ஒருவன் விண்ணிலெழுந்து அமைந்த இடமே திருஷ்டத்யும்னன் இருக்குமிடம் என க்ஷேமதூர்த்தி உணர்ந்தார்.

அங்கே செல்வதற்குள் திருஷ்டத்யும்னன் அவர் வருவதை அறிந்திருந்தான். கைகளாலும் வாய்மொழியாலும் ஆணைகளை இட்டு படைகளை நடத்திக்கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து கழையர்கள் மாறி மாறி வானிலெழுந்தமைந்தனர். அறிவிப்புமாடங்களில் முரசுகளும் முழவுகளும் முழங்கின. “வருக, காரூஷரே. தாங்கள் நெறிநின்று அணிமாறியதை பாண்டவர்களின் படை வரவேற்கிறது. நாம் வெல்வோம்!” என்று அவன் சொன்னான். “ஆம், வெல்வோம் என்று என் குலதெய்வம் ஆணையிட்டது. நாங்கள் அச்சொல்லுக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள்” என்று க்ஷேமதூர்த்தி சொன்னார். “உங்களுக்கான படைப்பிரிவுகளை சற்று கழித்து ஒதுக்குகிறேன். உங்கள் படைகள்

இப்போது படைமுகப்பிலிருந்து பின்விலகி நிலைகொள்ளட்டும்" என்று திருஷ்டத்யும்னன் சொன்னான்.

அப்போது எழுந்த முழவொலி அவன் விழிகளை திருப்பியது. "பீமசேனரின் ஆணை!" என்றான். பின்னர் திரும்பி "உங்களை ஏற்கவியலாது என்று ஆணையிடுகிறார். திரும்பிச்செல்லும்படி கோருகிறார்" என்றான். பின்னர் தூதனை நோக்கி "அவருக்கு சென்று சொல்க! ஒரு படை மிகச் சிறியதாயினும் அங்கிருந்து விலகி இங்கு வருவது அவர்களின் உள உறுதியை தளர்த்துவது, நமது படைகளின் நம்பிக்கையை பெருக்குவது. போர் இப்போது நிகர்நின்று நிகழ்வதனால் எந்தச் சிறுமாற்றமும் நன்றே. இந்தச் சிறுசெயலால் ஒருவேளை நம்மை நோக்கி வெற்றி திசைதிரும்பக்கூடும். போரில் வெற்றி என்பது உருளைக்கல் குவியல்கள் சிறுதொடுகையில் உருண்டு சரிவதைப்போல கணநேரத்தில் நிகழ்பவை" என்றான்.

அவன் சொல்லச்சொல்ல அந்த வீரன் அதை குறிமொழியில் தோல்சுருளில் எழுதிக்கொண்டான். தன் தோள்பையிலிருந்த புறாக்களில் ஒன்றை எடுத்து அதன் கண்களை மூடியிருந்த ஈரத்துணியுறையை அகற்றி தோல்சுருளைச் சுருட்டி அதன் கால்களில் கட்டி வானில் விட்டான். திருஷ்டத்யும்னன் "எழுக, சிகண்டியை துணைசெய்க! சதானீகனும் சர்வதனும் சிகண்டியின் இணைநின்று பொருதுக... கிருபரை எதிர்க்கும் சாத்யகிக்கு கிராதர்களின் அணி ஒன்று நீளம்புகளுடன் துணைசெல்க!" என்று ஆணையிட்டான். "பீஷ்மருக்கு நேர்முன்னால் கேடயப்படை மட்டுமே நிற்கட்டும். வில்லவர்கள் அவருடைய அம்புவளையத்திற்கு வெளியே நின்று நீளம்புகளால் மட்டும் அவரை எதிர்த்துப் போரிடுக! ஜயத்ரதனிடம் போரிடும் அபிமன்யூ பீஷ்மரை எதிர்த்து செல்க! அதுவரை பாஞ்சால வில்லவர் பீஷ்மரை அரண்செய்க!"

புறா வானிலிருந்து சிறகடித்து வந்து இறங்கி காவலன் தோளில் அமர்ந்தது. அவன் அதை எடுத்து தோல்சுருளை விரித்து உரக்க படித்தான். "களத்தில் அணிமாறுபவரை ஏற்குமளவுக்கு பாண்டவப் படை நலிந்துள்ளது என்றும் இச்செய்தியை உருமாற்றலாம். சகுனி அதையே செய்வார். அவர்கள் இதை இவ்வாறு அறிவித்து ஒரு வெற்றிக்கூக்குரலிட்டால் நம்மவர் உளம்தளர்ந்துவிடுவார்கள். அறம் மீறியும் வெல்ல நாம் ஒருங்கிவிட்டோம் என நம்மவர் பொருள்கொண்டால் நம் ஆற்றல் அழியும். காரூஷரை ஏற்கவேண்டியதில்லை. இது அரசாணை, காரூஷர்களை உடனடியாக கொன்று தலைவீழ்த்துக!"

திகைப்புடன் பின்னடைந்த க்ஷேமதூர்த்தி "இது நெறிமீறல்! இதற்கு உங்களுக்கு உரிமை இல்லை" என்று கூவினார். "நான் என் தெய்வங்களின் ஆணைக்கு ஏற்ப இங்கே வந்தேன். என் மைந்தர்கள் இறந்தமையால் உங்களுக்காக போரிட வந்தேன்... என்னை இங்கு வரும்படி ஆணையிட்டவர்கள் என் மறைந்த மைந்தர்களே" என்றார். திருஷ்டத்யும்னன் "நான் ஒன்றும் செய்வதற்கில்லை, காரூஷரே. பீமசேனர் அரசரின் முதலிளையோர். அவருடைய ஆணை இந்திரப்பிரஸ்தத்தில் அரசாணையேதான் என்பது யுதிஷ்டிரரின் நிலையாணை. என் கடமை உங்களையும் காரூஷர்களையும் கொல்வது" என்றான்.

"தெய்வங்கள் இதை ஏற்கா! இது நெறிமீறல்" என்று க்ஷேமதூர்த்தி கண்ணீருடன் கூவினார். "எங்கும் பொதுநெறி இதுவே. உங்களை எப்படி திருப்பியனுப்ப முடியும்? நீங்கள் எங்கள் படைகளுக்குள் வந்து எங்கள் சூழ்கைகளின் அமைப்புகளை அறிந்துவிட்டீர்கள்" என்றான் திருஷ்டத்யும்னன். "நான் எதையும் பார்க்கவில்லை... மெய்யாகவே பார்க்கவில்லை! பார்த்தாலும் எதையும்

அறிந்துகொள்ளக்கூடியவனல்ல நான்!” என்றார் க்ஷேமதூர்த்தி. திருஷ்டத்யும்னன் மறுமொழி சொல்லாமல் திரும்பிக்கொள்ள கழையன் எழுந்தமைந்து கைவீசி செய்தியை அளித்தான். “துருபதரைச் சூழ்ந்து நில்லுங்கள், பாஞ்சாலர்களே. அவருடைய பின்புலம் ஒழிந்துள்ளது. கேடயப்படை அவருக்கு இருபுறமும் காப்பாகட்டும்!” என திருஷ்டத்யும்னன் ஆணையிட்டான்.

இரண்டு வீரர்கள் வாளுடன் வந்து க்ஷேமதூர்த்தியின் இருபுறமும் நின்றனர். “வருக!” என்று அவர்களில் ஒருவன் சொன்னான். “எங்கே?” என்றார் க்ஷேமதூர்த்தி. “புறக்களத்திற்கு… உங்களை தலைகொய்திடும்படி ஆணை!” என்றான். “இல்லை, அது நெறியல்ல. நான் அரசன்… என் குடி இப்பழியை பொறுக்காது” என்றார் க்ஷேமதூர்த்தி. இடப்பக்கத்திலிருந்து புரவியில் சுதசோமன் வந்து பாய்ந்திறங்கி “முழவுச்செய்தி கேட்டு வந்தேன். பாஞ்சாலரே, காரூஷர் கொல்லப்படலாகாது. அவர் உடனே திருப்பி அனுப்பப்படவேண்டும். அவர் கௌரவப் படைக்கு செல்லக்கூடுமென்றால் அவ்வாறே ஆகட்டும். அன்றி களமொழிவார் என்றால் அதுவும் ஒப்புதலே” என்றான்.

“தங்கள் தந்தையின் ஆணை!” என்றான் திருஷ்டத்யும்னன். “அதை நான் மாற்றியமைக்கிறேன். இது என் ஆணை!” என்றான் சுதசோமன். “பாஞ்சாலரே, நானும் இவர் மைந்தர்கள் ஹஸ்திபதனும், சுரவீரனும், மூஷிகாதனும் கீழ்மச்ச நாட்டு சம்ப்ரதனுடனும் சௌகிருதனுடனும் சௌமூர்த்தனுடனும் இணைந்து ஆடிய உண்டாட்டை மறக்க முடியாது. அவர்கள் விண்புகுந்தமையாலேயே அவர்களின் விழைவை நாம் மறுக்கமுடியாதவர்களாகிறோம். தங்கள் தந்தை கொல்லப்படுவதை ஹஸ்திபதர் விரும்ப மாட்டார்.” “ஆனால் தங்கள் தந்தை…” என திருஷ்டத்யும்னன் தயங்க “என் ஆணைக்கு மாற்றாக தந்தையிடமிருந்து சொல்லெழும் என எண்ணுகிறீர்களா?” என்றான் சுதசோமன். “இல்லை” என பெருமூச்சுவிட்ட திருஷ்டத்யும்னன் “செல்க, காரூஷரே! உங்கள் படையினருடன் விரைந்து விலகிச்செல்க!” என்றான்.

“எங்கள் குலதெய்வத்தின் காப்பு எனக்குண்டு. எங்களை எவரும் அழிக்கவியலாது!” என்றார் க்ஷேமதூர்த்தி. பின்னர் சுதசோமனிடம் “இச்செயலை காரூஷர்குடி மறவாது. என்றேனும் இதற்கு நிகரீடு செய்வோம்” என தலைவணங்கியபின் சென்று புரவியில் ஏறிக்கொண்டார். அவர் உடல் அப்போதும் நடுங்கிக்கொண்டிருந்தது. புரவியிலிருந்து விழுந்துவிடுவோம் என்று தோன்றியது. என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது? மெய்யாகவே அவரைக் கொல்ல ஆணையிடப்பட்டதா? அது இயல்வதா? ஷத்ரியன் ஒருவனை தலைகொய்திட ஆணையிடுவார்களா என்ன? அதுவும் கீழ்க்குருதிகொண்டவர்களாகிய பாண்டவர்களில் ஒருவன்?

காரூஷநாட்டுப் படைகளை அடைந்தபோது அவர் கண்களிலிருந்து அனல் எழ உடல்தசைகள் தளர்ந்தன. வியர்வை பெருக அவர் ஓய்ந்து நின்றார். அவருக்கு முன் காரூஷ நாட்டு வீரன் ஒருவன் வேலை ஏந்தியபடி ஓடிவந்தான். வந்த விசையில் விழுந்துகிடந்த தேரொன்றை தாவிக்கடந்து அவர் முன் வந்து விழுந்து சுருண்டுச் சுழன்று எழுந்து கைகளை விரித்து தொண்டை புடைக்க கண்களின் கருவிழிகள் உருண்டு மறைய புலிக்கண்களென அவை திரண்டு விழிக்க நரம்புகள் புடைக்க உடல் முறுகி அதிர உறுமலோசை எழுப்பினான். அவன் குரல் பிளிறல்போல் எழுந்தது.

“என் மைந்தரே! என் மைந்தரே! செல்க! மறுபக்கம் மீள்க! கௌரவர்களின் தரப்பில் நின்று போரிடுக! உங்களை குலச்சிறுமை செய்த பாண்டவர்களின் நெஞ்சு பிளந்து

குருதி உண்க! உங்களை காலடியிலிட்டு மிதித்த இளைய பாண்டவன் பீமசேனனையும் அவன் மைந்தனையும் கொன்று குருதிப்பழி தீர்த்து என்னை விண்ணிலேற்றுக!” என்று அலறினான். சுழன்று அப்பால் விழுந்து வலிப்பு வந்து வாயிலிருந்து நுரைவழிய துடித்துப்புரண்டான். அவன் மேல் வானிலிருந்து பொழிந்த அம்புகள் தைத்து நிற்க அவன் குருதிகொப்பளிக்கும் மூக்குடன் உடல் அலையடித்து பின் மெல்ல அமைந்தான்.

“திரும்புக! கௌரவர்பக்கம் செல்க!” என்று க்ஷேமதூர்த்தி தன் படைகளுக்கு ஆணையிட்டார். அவருடைய ஆணை முழவொலியாக எழுந்ததும் காரூஷநாட்டுப் படை எந்த ஓசையையும் எழுப்பவில்லை. அவர் தன் கைவாளைத் தூக்கி மீண்டும் மீண்டும் ஆணையிட்டார். “திரும்புக! நம் அன்னையின் ஆணை! கௌரவர்களுடன் சேர்ந்துநின்றிருக்க அன்னை உரைக்கிறாள். வெற்றி நமக்குரியதே! நீடுபுகழும் நம்முடையதே!” படைகள் மீண்டும் கொடிகளையும் படைக்கலங்களையும் தலைகீழாக தூக்கிக்கொண்டன. ஒரு சொல்லும் உரைக்காமல் சிதையூர்வலம்போல வீரர்கள் நடந்தார்கள். தேர்கள் மேடேறுவதுபோல அசைந்து அசைந்து சென்றன.

அவர்களைப் பார்த்ததும் கௌரவப் படையில் இருந்து ஆரவாரம் எழுந்தது. அவர்கள் கௌரவர்களை சென்றுசேரும்பொருட்டு பாண்டவப் படை உருவாக்கிய இடைவெளியினூடாக அவர்கள் சென்று எதிரே நின்றிருந்த காந்தாரப் படை முன் தயங்கினர். காந்தாரநாட்டு படைத்தலைவன் எதிரே வந்து “தங்கள் சொல்” என்றான். “நாங்கள் பிழையாக பாண்டவர்பக்கம் சென்றுவிட்டோம். மீண்டும் கௌரவர் தரப்பில் நின்று போரிட விழைகிறோம். எங்கள் அன்னையின் சொல் எழுந்துள்ளது. நாங்கள் அன்னையின் ஆணைக்கு அடிமைப்பட்டவர்கள்” என்றார் க்ஷேமதூர்த்தி. அவன் கைகளை அசைக்க முழவுகள் அச்சொற்களை முழங்கின. அப்பாலிருந்து அவர்களை உள்ளே அனுப்பும்படி சகுனியின் ஆணை எழுந்தது.

“செல்க!” என்று க்ஷேமதூர்த்தி ஆணையிட்டார். ஆனால் காரூஷநாட்டுப் படையினர் தயங்கி நின்றனர். “நமக்கு எந்த இடரும் அமையாது. அன்னை துணையிருப்பாள். செல்வோம்!” என்றார் க்ஷேமதூர்த்தி. படைகள் மெல்ல தேங்கி ஒழுகி கௌரவப் படைக்குள் சென்றன. “படைகள் இங்கிருக்கட்டும். நீங்கள் மட்டும் காந்தாரரைச் சென்று பார்த்து மீள்க!” என்றான் காவலர்தலைவன். காவலன் ஒருவன் வழிநடத்த க்ஷேமதூர்த்தி நிமிர்ந்த தலையுடன் கௌரவர்களின் நடுவே சென்றார். அவருக்கு இருபக்கமும் எழுந்த இளிவரல்கூச்சல்களை கேட்டார். எவரோ பழைய மரவுரி ஒன்றை எடுத்து அவர் மேல் வீசினர். எந்த முகமாறுதலும் இல்லாமல் அவர் அதை எடுத்து நிலத்திலிட்டு மேலே சென்றார்.

காந்தாரப் படை நடுவே சகுனியின் அறிவிப்புமாடத்தில் முழவுகளும் முரசுகளும் ஓசையிட்டுக்கொண்டே இருந்தன. கொடிகள் சுழன்றன. அவர் அருகே சென்றதும் சகுனி திரும்பி நோக்கி அணுகிவரும்படி கையசைத்தார். பின்னர் திரும்பி ஏறி இறங்கிய கழையனை நோக்கிவிட்டு “கடோத்கஜனை சூழ்ந்துகொள்க! இடும்பர்களை நம் கதைவீரர்களும் யானைகளும் மட்டுமே எதிர்கொள்ளவேண்டும். தேர்கள் அவர்கள் முன்னிருந்து ஒழிக!” என்று சொன்னபின் திரும்பி அவரை நோக்கி “சொல்லுங்கள்” என்றார். க்ஷேமதூர்த்தி “நான் என் அன்னையின் ஆணை எழுந்தமையால் பாண்டவர்பக்கம் சென்றேன். அவர்களால் ஏற்கப்படவில்லை. அப்போது அன்னை எழுந்து நான் இப்பக்கம் வரவேண்டும் என ஆணையிட்டாள். ஆகவே வந்தேன்” என்றார்.

“நீங்கள் போர்தொடங்குவதற்கு முன்னரும் இருமுறை அணிமாறினீர்கள்” என்றார் சகுனி. “ஆம், அதுவும் அன்னையின் ஆணையே. நாங்கள் தொல்குடி ஷத்ரியர்.

அன்னையின் ஆணைக்கே நாங்கள் கட்டுப்பட்டவர்கள்.” சகுனி சலிப்புடன் தலையசைத்து “அதோ அருகில்தான் கௌரவர்கள் நின்றிருக்கிறார்கள். நீங்கள் அரசரின் ஆணையை பெற்று வரலாம்” என்றார். க்ஷேமதூர்த்தி “எவராயினும் என் சொல் இதுவே. இது எங்கள் குடிகாக்கும் அன்னையின் ஆணை.” சகுனி திரும்பிக்கொண்டு “எழுக! பால்ஹிகர்களும் சைப்யர்களும் மத்ரர்களும் இணைந்து பாஞ்சாலப் படையை சூழ்ந்துகொள்க!” என ஆணையிட்டார். காவலன் “நாம் செல்வோம், அரசே” என்று க்ஷேமதூர்த்தியிடம் சொன்னான்.

கௌரவப் படையை நோக்கி செல்கையில் க்ஷேமதூர்த்தி தன்னுள் மெல்லிய நடுக்கத்தை உணர்ந்தார். அது ஏன் என்று அவருக்கு புரியவில்லை. எதுவாயினும் அன்னை என்னை வழிநடத்துக என்று எண்ணிக்கொண்டார். ஆனால் உள்ளமென அமைந்திருந்த குளிர்ந்த எடைமிக்க உருளையுடன் தொடர்பின்றி காற்றென வேறெங்கோ ஓடின அச்சொற்கள். அவர் கௌரவர்களின் மையத்தை அடைந்தபோது அங்கே துச்சாதனனும் துர்மதனும் இருந்தார்கள். துர்மதன் அவரைப் பார்த்ததுமே கையிலிருந்த கதையை ஓங்கியபடி அறைய வந்தான். அவர் தயங்கி நின்றிருக்க துச்சாதனன் அவனை ஆணையிட்டு தடுத்தான். க்ஷேமதூர்த்தி அணுகிச்சென்றார்.

துர்மதன் “இந்த இழிமகன் ஷத்ரியர்களுக்கே இழுக்கை தேடித்தந்துள்ளான். இவன் தண்டிக்கப்படவேண்டும்...” என்றான். துச்சாதனன் “ஏற்றுக்கொள்ளலாம் என்பது காந்தாரரின் ஆணை. இவர் திரும்பி வந்தது பாண்டவர்களின் தோல்வி உறுதி என தெரிந்தமையால்தான் என முரசறையும்படி மாதுலர் சொல்கிறார்” என்றான். “அந்தச் சூது நமக்கு தேவையில்லை. கண்முன் நிகழ்ந்தது ஒரு கீழ்மை. அதை நாம் ஏற்கலாகாது!” என்றான் துர்மதன். “நான் எவர் சொல்லுக்கும் கட்டுப்பட்டவன் அல்ல. என் அன்னையை தொடர்வதில் எனக்கு கீழ்மை என ஏதுமில்லை. நாங்கள் பாரதவர்ஷத்தின் தொல்குடி ஷத்ரியர். எங்கள் நெறிகளை புதியவர்களால் உணரமுடியாது” என்றார் க்ஷேமதூர்த்தி.

அப்பால் தேர்த்தட்டில் மல்லாந்து கிடந்த துரியோதனனின் வயிற்றிலிருந்த அம்பைப் பிடுங்கி மெழுகுத்துணியால் சுற்றி கட்டிக்கொண்டிருந்தனர் மருத்துவர். கந்தகநீரின் கெடுமணம் அங்கே நிறைந்திருந்தது. துர்மதன் “நாவை அடக்குக! மூத்தவர் ஆணையிட்டால் என் கையால் உமது தலையை உடைத்து தலைக்கூழை அள்ளி வீசுவேன்” என்றான். க்ஷேமதூர்த்தியின் உடல் மெய்ப்புகொண்டது. துச்சாதனன் “எதுவாயினும் முடிவெடுக்கவேண்டியவர் நம் அரசர்” என்றான். “ஆம், அவர் முடிவெடுக்கட்டும். அவர் வீரர்களை நம்பி போரிடுகிறாரா இல்லை இந்தக் கோழைகளையா என நானும் அறிய விழைகிறேன்” என்றான் துர்மதன்.

துரியோதனன் எழுந்துகொண்டு க்ஷேமதூர்த்தியை பார்த்தான். அவன் முகத்தில் சிரிப்பு எழுந்தது. கையை ஊன்றி எழுந்து அவன் நின்றதும் அஞ்சியவராக க்ஷேமதூர்த்தி சற்று பின்னடைய துரியோதனன் வெடித்து நகைத்தான். “நான் என் அன்னையின் ஆணைப்படியே சென்றேன்” என்றார் க்ஷேமதூர்த்தி. “உமது அன்னை நுண்ணறிவுகொண்டவள்” என்றான் துரியோதனன். “மூத்தவரே சொல்க, இக்கோழையின் தலையை பிளக்கிறேன்!” என்றான் துர்மதன். “அதை ஏன் நாம் செய்யவேண்டும்? பாண்டவர்களே செய்வார்கள். அவரை களம்செல்லும்படி சொல்” என்றான் துரியோதனன். “என்ன சொல்கிறீர்கள்? இந்தக் கோழை...” என்று துர்மதன் சொல்ல “இளையோனே, இந்தக் களத்தில் இத்தகைய எச்சொற்களுக்கும் பொருளில்லை” என்றபின் துரியோதனன் க்ஷேமதூர்த்தியிடம் “செல்க, முன்பிருந்த படைப்பிரிவிலேயே சென்று சேர்ந்துகொள்க!” என்றான்.

துச்சாதனனை நோக்கியபின் க்ஷேமதூர்த்தி “நான் அன்னையால் காக்கப்படுகிறேன் என அறிவேன்” என்றார். துர்மதனிடம் “எந்தக் கெடுமதியாளரும் எனக்கு எந்தத் தீங்கையும் செய்துவிடமுடியாது” என்றபின் திரும்பி காவலனிடம் “செல்லலாமா?” என்றார். காவலன் தலைவணங்கினான். “முழவுகள் உங்களுக்கான ஆணையை ஒலிக்கும், செல்க!” என்றான் துச்சாதனன். அவர் செல்லத் திரும்பியபோது துரியோதனன் “உங்கள் மைந்தரை எண்ணி நானும் துயருறுகிறேன், காரூஷரே. அவர்கள் விண்நிறைவு கொள்க!” என்றான். க்ஷேமதூர்த்தி அவனை நடுங்கும் தலையுடன் சிலகணங்கள் நோக்கினார். பின்னர் திரும்பிச்சென்று தேரிலேறிக்கொண்டார்.

அஸ்தினபுரியிலிருந்து நாற்பத்திரண்டு காதம் அப்பால், மைய வணிகப்பாதையில் அமைந்திருந்த முசலசத்ரம் என்னும் சிற்றூரில் தொன்மையான குதிரைச்சூதர் குலமான சுகித குடியில் சதமருக்கும் சாந்தைக்கும் மகனாக விசோகன் பிறந்தான். அவனது குடியில் அனைவருமே கரிய சிற்றுடல் கொண்டவர்கள். நெடுங்காலம் புரவிகளுடன் வாழ்ந்து புரவியின் உடல்மொழியையும் உளநிலையையும் அடைந்தவர்கள். தங்களை அவர்கள் புரவிகளென்றே உள்ளாழத்தில் நம்பியிருந்தனர். தொலைநாட்டுப் பயணத்தில்கூட அறியாத புரவிகள் அவர்களை புரவியின் வேறு வகையினர் என்பதுபோல் அடையாளம் கண்டுகொண்டு குறுஞ்சொல் எடுத்து அழைத்து உரையாடத் தொடங்குவதுண்டு.

புரவி எப்போதும் பாய்ந்து ஓடுவதற்கான உள்ளத்துடனும் உடலுடனும் இருப்பது. நின்றிருக்கையிலும் தனக்குள் விரைந்தோடிக்கொண்டிருப்பது. அதன் ஒவ்வொரு தசையும் தனிப் புரவிபோல் சிலிர்த்து இழுபட்டு சுருங்கி பாய்ந்துகொண்டிருக்கும். புரவிச் சூதர்களும் அவ்வண்ணமே எப்போதும் நாணிழுத்து அம்பேற்றப்பட்ட வில் போன்று இருப்பவர்கள். அவர்களின் உடலில் தசைகள் விதிர்ப்பதுண்டு. கைநொடிக்கும் ஓசையில் சுண்டப்பட்டதுபோல் அவர்கள் திரும்பி நோக்குவார்கள். அதற்கேற்ற சிற்றுடல் அவர்களுக்கு காலப்போக்கில் அமைந்தது. சுகிதர்கள் புரவிமேல் ஒரு வெட்டுக்கிளிபோல் அமர்ந்திருப்பார்கள், புரவி எடையுணர்வதேயில்லை என்பார்கள்.

ஆனால் விசோகன் பிறவியிலேயே பேருடல் கொண்டவனாக இருந்தான். அவன் அன்னையின் உடலுக்குள்ளிருந்து அவனை வெளியே எடுத்த வயற்றாட்டி அவன் எடையை எதிர்பாராததனால் கைநழுவவிட்டாள். குழவி மண்ணில் இரும்புக்குண்டு விழும் ஓசையுடன் அறைந்ததாக அவள் பின்னர் சொன்னாள். கைகால்களை உதைத்து முகம் சுளித்து அழுத குழந்தையை அவளும் துணைவயற்றாட்டியுமாக இருபுறமும் பிடித்து தூக்கினர். பெரிய மரத்தாலத்தில் வைத்து அதை அவன் தந்தையிடம் காட்டியபோது அவர் ஒருகணம் திகைத்து “இது?” என்றார். “பேருடலன். நம் குடியில் இதைப்போன்று ஒரு குழந்தை எழுந்ததில்லை” என்று வயற்றாட்டி சொன்னாள். தந்தை அக்கணமே திரும்பி அங்கிருந்து வெளியேறினார். பின்னர் ஒருமுறைகூட அவர் விழி தூக்கி அவனை நோக்கியதில்லை. அவனிடம் நேர்ச்சொல் உரைத்ததில்லை.

அவன் வளர்ந்தபோது பிற சூதமைந்தரின் ஏளனத்துக்கும் பின்பு அச்சத்திற்கும் மெல்ல மெல்ல வெறுப்புக்கும் உள்ளானான். அவனை அரக்கர் குருதியை கொண்டவன் என்றனர் குலப்பெண்டிர். ‘உன் அன்னை காட்டுக்குள் புரவி மேய்க்கச்

சென்றபோது விண்ணிலிருந்து இழிந்த பேரரக்கன் ஒருவனிடமிருந்து குருதி பெற்றுக்கொண்டாள்' என்றாள் அவன் மூதன்னை. இளமையில் அச்சொற்கள் அவனை துன்புறுத்தின. பிறரைப்போல் தான் ஏன் இல்லை என்று நீரில் குனிந்து தன் பாவையை நோக்கி அவன் ஏங்கினான். தூண்கள்போல் திரண்டெழுந்த கைகளை பார்க்கையில் அவை தன்னுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் விரும்பத்தகாத இரு அயலார்போல் உணர்ந்தான்.

ஒருநாள் அன்னையிடம் அவன் அதைப்பற்றி கேட்டான். "அன்னையே, என்னை எவ்வண்ணம் கருக்கொண்டீர்கள்? என் குருதி எது?" அவள் அவ்வினாவை நெடுநாட்களாக எதிர்பார்த்தவள் போலிருந்தாள். "உன் தந்தையின் குருதிதான், பிறிதொன்றல்ல" என்று அவள் சொன்னாள். அவன் விழிகளை பார்த்தபின் "ஆனால் எண்ணத்தால் அவருக்கு நான் உன்னை பெறவில்லை" என்றாள். அவளே மேலும் சொல்வதற்காக விசோகன் காத்திருந்தான். அவனுடைய பெரிய கைகளை தன் கைக்குள் எடுத்துக்கொண்டு அன்னை சொன்னாள் "இங்கு அவர் வந்திருந்தார். அருகிருந்த காட்டில் தன் படையினருடன் காட்டுப்புரவிகளை கொக்கிக்கயிற்றை வீசி சிறைப்பற்றினார். நான் அப்போது காட்டிலிருந்தேன். அவர்கள் வரும் ஓசை கேட்டு என் குடியினர் அஞ்சி அகன்றோடினர். நான் அங்கிருந்த அசோகமரத்தின் மீதேறி இலைகளுக்குள் ஒளிந்துகொண்டு அவரை பார்த்தேன்."

"அவருடைய ஒவ்வொரு தசையையும் என் உள்ளத்தில் பதியவைத்துக்கொண்டேன். விழிகளால் உன்னை கருவுற்றேன்" என்றாள் அன்னை. அவன் அவர் யாரென்பதை உணர்ந்திருந்தான். இருப்பினும் "அவரா?" என்றான். "ஆம், அஸ்தினபுரியின் இளைய பாண்டவர் பீமசேனர்தான்" என அன்னை தயக்கமே இல்லாமல் சொன்னாள். "இந்த அஸ்தினபுரியின் மண்ணில் மட்டுமல்ல, பாரதவர்ஷத்திலேயே பல்லாயிரம் பெண்டிர் அவரால் நயனகர்ப்பம் அடைகிறார்கள். நீயும் அவ்வண்ணம் எழுந்தவனே. நீ அவரிடம் சென்று சேர். உன்னை அவர் அறிந்துகொள்வார்." அவன் அவளை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். "பிறர்போல் இருப்பது ஒரு விடுதலை. தனித்தன்மை என்பது பொறுப்பு" என்றாள் அன்னை. "பொறுப்புகளிலிருந்தே பெருஞ்செயல்கள் எழுகின்றன. பெருஞ்செயல்களால் மானுடர் சான்றோரும் வீரரும் ஆகிறார்கள்."

அன்று அவன் தான் யார் என்றும் மண் வந்த நோக்கம் என்னவென்றும் தெளிவுகொண்டான். அதன் பின்னர் அங்கிருந்த சூதமைந்தர்களின் இளிவரலோ பெண்டிரின் அலரோ மூத்தவர்களின் கூர்நோக்கோ அவனுக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை. அதுவரை அவன் புரவிப்பணி கற்பதில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. அவனுடைய தந்தை அவனை பலமுறை அதன்பொருட்டு கடிந்துகொண்டார். அவன் செவிபட "பேருடல்கொண்ட சூதன் அடுமனையாளனே. அவன் படைக்கலமேந்தி போரிட இயலாது என்று அவ்விழிமகன் அறிக!" என்றார். அவன் குலத்து மூத்தவர்கள் "புரவித்தொழிலே நம் செல்வம். அதில்லையேல் நாம் வறியர்" என்றனர். அவன் உள்ளம் புரவிகளை வெறுத்தது. அவன் பார்த்தது எல்லாம் களைத்து வாயில் நுரைவலை தொங்க பிடரி உலைத்து ஒற்றைக்கால் தூக்கி நின்று துயிலும் வண்டிக்குதிரைகளை மட்டுமே.

முசலசத்ரம் தென்மேற்கே மச்சர்நிலத்திலிருந்து அஸ்தினபுரிக்குச் செல்லும் வணிகப்பாதை ஒன்றில் அமைந்திருந்தது. தொல்காலத்தில் வணிகர்கள் அங்கு நின்றிருந்த செங்குத்தான உலக்கைப்பாறையின் அடியில் செழித்திருந்த ஆலமரத்தின் கீழ் தங்கள் புரவிகளை அவிழ்த்திட்டு நீர்காட்டி இளைப்பாறிச் செல்லும் வழக்கம் இருந்தது. அதன் பொருட்டு அங்கொரு விடுதி உருவாகியது. அதைச் சுற்றி புரவிகளுக்கு புல்லும், பயணிகளுக்கு உணவும், விளக்குகளுக்கு

நெய்யும் கொண்டு வந்து அளிக்கும் மலைக்குடிகளின் சந்தை ஒன்று உருவாகியது. அது வளர்ந்து ஊராயிற்று. வண்டியிழுக்கும் புரவிகள் அங்கு மிகுதியாக தங்கத்தொடங்கியதும் புரவி மருத்துவர்களான சூதர் குடிகள் அங்கே குடியேறினர். அங்கே புரவிகளுக்கு புதிய பாகர்களை பெற்றுக்கொண்டு பயணம் தொடரலாம் என்ற எண்ணம் வணிகர்களுக்கு எழுந்தபோது சூதர் குடி பெருகியது.

அங்கிருந்த புரவிச்சூதர் அனைவருமே வண்டிகளை இழுக்கும் புரவிகளை ஓட்டுவதற்கு மட்டுமே கற்றிருந்தனர். போர்ப் புரவிகள் அவ்வூரில் மிகச் சிலவே தென்பட்டன. அவ்வழியே செல்லும் அஸ்தினபுரியின் காவலர்கள் ஊரும் பெரிய புரவிகளை சிறுவர்கள் சாலையோரத்தில் கூடி நின்று விழிவிரிய நோக்கினர். வண்டியிழுக்கும் புரவிகளையே கண்டு பழகியிருந்த சூதமைந்தர்களுக்கு அந்தப் போர்ப்புரவிகள் பேருடல் கொண்டு விண்ணின் ஆற்றலை பெற்றவை என்று தோன்றின. “புரவியென்றால் அவைதான். இவை அத்திரிகளின் சற்று பெரிய வடிவங்கள்” என்று விசோகன் பிற சூதமைந்தரிடம் சொன்னான். அவர்கள் “ஆனால் அவற்றை ஆள தெய்வங்களின் ஆணை தேவை” என்றனர். “அவற்றை நாம் அணுக இயலாது. அவை தங்கள் உரிமையாளரன்றி பிறர் கைபடுமென்றால் கொலைவெறி கொள்பவை.”

தந்தையிடம் “நான் புரவிக்கலை கற்கும் பொருட்டு அஸ்தினபுரிக்கு செல்கிறேன்” என்று அவன் சொன்னபோது அவர் வழக்கம்போல அவனை நிமிர்ந்து பார்க்காமல் தலையசைத்தார். ஒருநாள் அவன் அஸ்தினபுரிக்கு கிளம்பிச் சென்றுவிடுவான் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அவன் அன்னையிடம் விடைபெற்றபோது அவள் சற்று கலங்கினாள். அவன் திரும்பவரமாட்டான் என அவள் அறிந்திருந்தாள். “அங்கு சென்று நீ கற்கும் புரவிக்கலையை இங்கு கற்க இயலாதா?” என்று மட்டும் தலைகுனிந்து தன் கைவிரல்களை நோக்கியபடி கேட்டாள். “நான் போர்ப்புரவிகளை மட்டுமே பயில விரும்புகிறேன், அன்னையே” என்று அவன் சொன்னான். அன்னை மறுசொல் இன்றி அவன் தலைதொட்டு வாழ்த்தினாள்.

மரவுரிமூட்டையில் மாற்றுடையும் உலருணவும் தோல்குடுவையில் நீருமாக அவன் கிளம்பி வணிக வண்டிகளுடன் நடந்தான். வழியில் அவனைக் கண்ட அனைவருமே அவனை மாற்றுருவில் செல்லும் ஷத்ரியன் என்றே எண்ணினர். ஒரு வணிகன் மட்டும் “வீரரே, தாங்கள் பேருடல் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உடலெங்கும் தேடியும் ஒரு போர்வடுவைக்கூட காண முடியவில்லை. தாங்கள் படைக்கலம் பயிலவில்லையா?” என்று கேட்டான். அவன் “நான் பயில்வது வடு அமையாத போர்” என்று மட்டும் சொன்னான். தன் சொற்கள் ஒவ்வொன்றும் எண்ணியதைவிட எடைகொண்டிருப்பதை அப்பயணத்தில் அவன் கண்டான். அவன் உண்ண அமர்ந்ததும் கேளாமலேயே உணவு அவன் முன் வந்து குவிந்தது. அவன் உண்ணுவதை பிற வணிகர்கள் சூழ்ந்து நின்று மகிழ்ந்து நோக்கினர்.

“வீரரே, எங்கள் வணிகக்குழுவுடன் காவலுக்கு வருகிறீர்களா?” என்று முதுவணிகர் சுபூதர் கேட்டார். “நான் அஸ்தினபுரிக்கு சென்றுகொண்டிருக்கிறேன். என் பணி அங்குதான்” என்று அவன் சொன்னான். “எங்கு?” என்று இளைய வணிகனாகிய பிரபவான் கேட்டபோது “இளைய பாண்டவர் பீமசேனருடன். நான் அவருடைய அணுக்கன்” என்றான். அதை சொல்கையில் அவனுக்கு உடல் மெய்ப்பு கொண்டது. அதை சொல்லும் பொருட்டே பிறந்திருக்கிறோம் என்று எண்ணினான். அவன் விழிகளைக் கண்ட எவருக்கும் அதில் ஐயம் எழவில்லை. ஒருநாளிலேயே அவன் இளைய பாண்டவரின் அணுக்கன் என்று வணிகர் நடுவே அறியப்பட்டான். “ஆம், தாங்கள் பிறிதெவரும் அல்ல. பிறிதெங்கும் தங்களால் அமையவும் இயலாது” என்று வணிகர்கள் சொன்னார்கள்.

அஸ்தினபுரிக்குச் சென்று சேரும்போது அவன் தன்னை முழுமையாகவே பீமசேனரின் அணுக்கனாக ஆக்கிக்கொண்டிருந்தான். ஆனால் அந்நகரின் விரிவை அருகணைந்து கண்டதும் அவனில் நம்பிக்கையின்மை எழுந்து பெருகத் தொடங்கியது. அந்நகரின் தெருக்களினூடாக சென்றபோது ஒவ்வொருவரின் தோளையும் நெஞ்சையுமே விழிகளால் அளவிட்டுக்கொண்டிருந்தான். அங்கு பேருடலர்கள் பலர் இருந்தனர். அவனுக்கு நிகரான எவரும் அவன் எதிரில் தென்படவில்லை. எதிர்படும் ஒவ்வொருவரும் தன் தோளையும் நெஞ்சையும் அளவிடுவதை அவன் பார்த்தான். எவர் விழிகளிலும் துணுக்குறலோ வியப்போ இல்லையென்பதை கண்டான். அவர்கள் பேருடலர்களைக் கண்டு பழகியிருந்தனர். அப்பேருடலனை அடையாளப்படுத்திக்கொள்ளவே முயன்றனர்.

இங்கு தன் தனித்தன்மை என்று எப்போதும் அவன் எண்ணிக்கொண்டிருந்த பேருடல் பொருளற்றதாகிவிடும் என்று அஞ்சினான். எந்தப் பயிற்சியும் அற்றவனும் உலகறியாதவனுமாகிய அவனை நோக்கியதுமே அடுமனைக்கு கலம் தூக்குவதற்கு அனுப்பிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டான். அதற்கேற்ப அவன் அணுகி பேசிய முதல் காவலர்தலைவனே அவனிடம் “எங்கு செல்கிறீர்கள்?” என்று மதிப்பற்ற உரத்த குரலில் கேட்டான். அவன் சீண்டப்பட்டு “நான் இளைய பாண்டவர் பீமசேனரை பார்க்கும்பொருட்டு வந்துள்ளேன்” என்று சொன்னான். “அவரை பார்க்கும்பொருட்டு ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கில் மல்லர் வருகிறார்கள். அவர்கள் அனைவரையுமே அருகில் உள்ள குடிகாட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அவர்களில் தகுதியானவருடன் அவர் தோள்கோத்து மல்லிடுவார்” என்றான் காவலர்தலைவன்.

“ஆம், அதன்பொருட்டே வந்தேன்” என்றான் விசோகன். “நீர் மற்கலை கற்றவரா?” என்று காவலர்தலைவன் கேட்டான். ஒருகணத்திற்குப் பின் அவன் “ஆம்” என்றான். “அறிந்திருப்பீர் மற்கலையில் அவர் இரக்கமற்றவர். நீர் உயிர் துறக்கக்கூடும்” என்றான் காவலர்தலைவன். “உயிர் வைத்து களமாடுவதற்கு துணிந்தவர்களுக்கு மட்டுமே இங்கு இடம்.” விசோகன் “அதன்பொருட்டே வந்துள்ளேன்” என்றான். காவலர்தலைவன் அவனுக்கு ஓலை அளித்து அருகிருந்த குடிகாட்டுக்குள் தங்கச்செய்தான். அங்கு பாரதவர்ஷத்தின் பல ஊர்களிலுமிருந்து வந்த நூற்றுக்கணக்கான மல்லர்கள் தங்கியிருந்தனர். ஒவ்வொரு நாளும் அடுமனையிலிருந்து அவர்களுக்கு அத்திரிகள் இழுத்த வண்டிகளில் உணவு வந்தது. அதை அவர்கள் குவித்திட்டு உண்டனர். கற்பாறைகளை தூக்கிச்சுழற்றியும் கதை வீசியும் அவர்கள் உடல் பயின்றனர். ஒருவரோடொருவர் கைபற்றி தோள் கோத்து மற்போர் பழகினர்.

அவன் அதுவரை மற்போரை பார்த்ததே இல்லை. அந்தப் பிடிகளும், தோள் முட்டலும், கைவீச்சும், உடலறைந்து, துள்ளி அகன்று, எழுந்தமைந்து மீண்டும் தழுவுதலும், மண்ணில் பிணைந்து புளைந்தெழுந்து மீண்டும் பாய்தலும் அவனுக்கு வியப்பை அளித்தன. ஆனால் சற்றும் அச்சம் எழவில்லை. அங்கு அவனைவிட பெருந்தோளர்கள் இருந்தனர். அவர்களிடம் உரு பெரிதாகுந்தோறும் ஒரு மிதப்பு உருவாகியிருந்தது. எங்கும் செல்லாமல் தங்கள் உடலெனும் பெருங்கட்டமைப்புக்குள்ளேயே சிறைப்பட்டுவிட்டவர்கள் போலிருந்தனர். பெரும்பாலானவர்கள் நீரில் தங்கள் தசைகளை தாங்களே நோக்கி நோக்கி மகிழ்ந்தனர். அவர்கள் உடலுக்கு உள்ளிருந்து தாழிட்டுக்கொண்டவர்கள்.

அங்கு சென்ற பதினெட்டாவது நாள் பீமசேனர் அங்கு வந்தார். அவரைப் பார்த்ததும் மல்லர்கள் அனைவரும் விரைந்துவந்து குலமும் குடியும் ஆசிரியமரபும் கூறி வணங்கி கைகட்டி இருபுறமும் நின்றனர். ஒவ்வொருவரிடமாக இன்சொல் பேசி

வந்த அவர் விழிகள் அவனை தொட்டதும் அவன் நிலத்தில் குப்புற விழுந்து அவர் கால்களை தொட்டான். “எழுக!” என்று அவர் சொன்னார். அவன் எழுந்ததும் “மற்போர் அறிவீரா?” என்று பீமசேனர் கேட்டார். “இல்லை, அரசே. தங்களை சந்திக்கும்பொருட்டு அவ்வாறு கூறினேன். நான் தங்களுக்கு அணுக்கனாக இருக்கும் பொருட்டு வந்தேன். ஏவலனோ அடுமனையாளனோ எப்பணியாயினும் தங்களை நோக்கிக்கொண்டிருக்கும் பேறு மட்டுமே கோருகிறேன்” என்றான்.

“நீர் சூதரல்லவா?” என்று பீமசேனர் கேட்டார். “ஆம், புரவிச் சூதன். ஆனால் இதுவரையில் புரவிக்கலை எதுவும் நான் பயிலவில்லை. என் ஊரில் வண்டிப்புரவிகள் மட்டுமே உள்ளன. அவற்றை பயில்வதில் எனக்கு விருப்பமில்லை” என்றான். “உமது குருதியில் புரவிக்கலை உண்டு. நினைவுபடுத்திக்கொண்டால் மட்டும் போதும். நீர் போர்ப்புரவி பயில்வதற்குரியவர். என் இளையோனிடம் செல்க!” என்று பீமசேனர் சொன்னார். அன்று பதினெட்டு மல்லர்களை பீமசேனர் தூக்கி நிலத்தறைந்து வெல்வதை அவன் பார்த்தான். இருவர் முதுகொடிந்து அங்கேயே உயிர் துறந்தனர். அவர்களுக்காக அவர் அமர்ந்து மலரும்நீருமிட்டு கடன்செலுத்தினார்.

அவர் கிளம்பிச்செல்லும்போது தேரில் ஏறியபின் நின்று திரும்பி அவனைப் பார்த்து “வருக!” என்றார். அவன் தேருடன் ஓடத்தொடங்கியதும் “தேரில் ஏறிக்கொள்க!” என்றார். “அரசே!” என்று திகைப்புடன் அவன் சொன்னான். “ஏறுக!” என்று அவன் தோளை அறைந்தார். தேரிலேறி அவர் காலடியில் மண்டியிட்டு அமர்ந்தான். தன்னை ராகவராமனின் காலடியில் அமர்ந்த அஞ்சனை மைந்தனாக உணர்ந்தான். அவர் அவன் தலையைத் தொட்டு “இளையவராக இருக்கிறீர்” என்றார். அவன் மெய்ப்புகொண்டான். அவருடைய பெரிய கை அவன் தோளில் விழுந்தது. அப்பயணம் முழுக்க அது அவனை தொட்டபடியே இருந்தது. பின்னர் எப்போது அவனை பார்த்தாலும் அவருடைய கை வந்து அவனை தொடுவதுண்டு. ஆனால் அந்த முதல் தொடுகையை அவன் ஒவ்வொரு கணமும் என நினைவில் வைத்திருந்தான். விழிநீர் வழிய தேரில் தலைதாழ்த்தி அமர்ந்திருந்தான்.

பீமசேனர் அளித்த ஓலையுடன் சென்று நகுலரிடம் பணிக்கு சேர்ந்தான். புரவிநிலையில் ஒரு பெண்புரவியை உடல்நோக்கி நரம்பு ஆய்ந்து கொண்டிருந்த நகுலர் அவனைப் பார்த்ததுமே அப்பால் நின்ற கரிய பெரும்புரவியைச் சுட்டி “அவன் பெயர் காரகன். அவிழ்த்து வருக!” என்றார். “அரசே, நான் புரவி பயிலாதவன்” என்றான். “உமது உடல் புரவியசைவு கொண்டது. புரவி அதை அறியும்” என்றார் நகுலர். அவன் அருகே சென்றதும் காரகன் திரும்பி அவனை நோக்கி மெல்ல கனைத்து பிடரி சிலிர்த்தது. அவன் தயங்காமல் சென்று அதன் கடிவாளத்தை அவிழ்க்க அது திரும்பி அவன் தோளை தன் மரப்பட்டைபோன்ற நாவால் நக்கியது. அப்பால் நின்ற இன்னொரு புரவி அவனை நோக்கி தன் பெருந்தலையை நீட்டியது.

ஈராண்டுகளில் புரவிக்கலையில் நகுலருக்கு இணையானவன் என்று அவன் அறியப்பட்டான். திமிறும் பெரும்புரவிகளை ஒற்றைக்கையில் பிடித்து நிறுத்துபவனாகவும், இளம்புரவிகளை தோளில் தூக்கிக்கொண்டு ஓடும் ஆற்றல் கொண்டவனாகவும் திகழ்ந்தான். நகுலர் அவனிடம் “இனி நீர் மூத்தவரின் தேர்ப்பாகன் என்று அமைக! உமக்கிணையான ஒருவரே அவருக்கு தேரோட்ட இயலும்” என்றார். அவன் இந்திரப்பிரஸ்தத்தில் அவருக்காக தேர் பயின்றான். ஒருமுறைகூட பீமசேனருக்காக தேரோட்டும் வாய்ப்பு அமையவில்லை. ஆனால் அத்தருணம் வரும் என்று அவன் அறிந்திருந்தான். நூறுமுறை அவருக்காக கனவில் அவன் பெருங்களங்களில் தேரோட்டினான். அக்கனவினூடாகவே பயிற்சிபெற்றான்.

உபப்பிலாவ்யத்தில் போர் குவியம் கொண்டபோது பீமசேனரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. தன் தேர்ந்த புரவிகள் பதினான்கை அழைத்துக்கொண்டு அவன் உபப்பிலாவ்யத்திற்கு சென்று சேர்ந்தான். பீமசேனரின் தேரை சிற்பிகள் அமைத்திருந்தனர். அதை ஏழு முறை பிழை நோக்கி திருத்தங்கள் செய்து அவன் பெற்றுக்கொண்டான். தேர்ந்த புரவிகளை அதில் கட்டி ஓட்டி கை பழகினான். புரவியும் தேரும் அவன் உடலும் இணைந்து அவன் உள்ளம் என்றாயின. நினைத்ததை தேர் இயற்றியது. முதல் நாள் களத்தில் அவன் தேரோட்டுவதைக் கண்ட பீமசேனர் “நீர் என் வடிவாக அங்கு அமர்ந்திருக்கிறீர். என் எண்ணங்களை இத்தேர் இயற்றுவதைக் கண்டு வியக்கிறேன்” என்றார். “நான் தங்களில் ஒரு சிறு துளி மட்டுமே, அரசே” என்று அவன் சொன்னான்.

அவன் போரில் பீமசேனருக்காக தேரோட்டினான். அவர்களிடையே பேச்சு மிக அரிதாகவே நிகழ்ந்தது. போர் முடிந்து தேரிலிருந்து இறங்குகையில் பீமசேனர் அரைவிழி நோக்கால் அவன் விழிகளைத் தொட்டு தலையசைத்து செல்வார். இரவெல்லாம் தேரை மீண்டும் பிழை நீக்கி, முற்றொருக்கி, புண்பட்ட புரவிகளை மாற்றி பிற புரவிகளை கட்டி, ஏழு முறை அவற்றை ஓட்டி பயின்று மறுநாள் புலரியில் அவன் சித்தமாக நின்றிருப்பான். அவனிடம் நகுலர் “இந்தப் பெருங்களத்தில் இருவரே பரிவலர். ஒருவர் பார்த்தருக்கு தேரோட்டும் இளைய யாதவர். நிகரென்று நீரும் அமைந்திருக்கிறீர்” என்றார். அவன் தலைவணங்கி “அங்கே தேர்த்தட்டிலும் பாகனே நின்றிருக்கிறார். இங்கே தேர்த்தட்டில் நின்றிருப்பவரே அமரமுனையில் அமர்ந்து தேரோட்டுகிறார்” என்றான். “சொல்லெடுக்கவும் கற்றிருக்கிறீர்!” என்று நகுலர் அவன் தோளை தட்டினார்.

விசோகன் போர்க்களத்தில் நிகழ்வதென்ன என்பதை பெரும்பாலும் அறிந்திருக்கவில்லை. தன் எதிரே தெரிந்த தேருக்கான வழிகளை அன்றி வேறெதையும் உளம் கொள்ளவில்லை. வீழ்ந்த தேர்களின் இடையினூடாக, சரிந்த புரவிகளின் உடல்கள் மீதேறிக் கடந்து, குவிந்து பரவிய மானுட உடல்களின்மீது சகடங்கள் சேற்றிலென சிக்கி மீள, அம்புப்பொழிவின் அடியில் அவன் தேரை செலுத்தினான். எண்ணியிரா இடங்களிலெல்லாம் அவன் தேர் ஏறிக்கடந்தது. யானைகளை பின்பக்கத்திலிருந்து பிளந்தெழுந்து வேட்டைச் சுறா என தோன்றியது. விண்ணிலூர்வதுபோல் விழுந்த யானைகளின் மேலேறி அப்பால் சென்றது.

அவன் தேரோட்டும் திறனை இரு நாட்களுக்குள்ளேயே கௌரவப் படையும் பாண்டவப் படையும் முற்றறிந்துவிட்டிருந்தன. ஆகவே பீமனை எதிர்கொண்ட அனைத்து வில்லவர்களும் அவனை வீழ்த்தும் பொருட்டு அம்பை எய்தனர். துரியோதனனும் துச்சாதனனும் பீமனுடன் போரிடுகையில் அவர்களுக்கு இருபுறமும் நின்று கௌரவர்கள் அவனை வீழ்த்துவதற்காக மட்டுமே அம்புகளை தொடுத்தனர். ஆனால் பீமனைவிட இருமடங்கு பருமன் கொண்ட பெருங்கவசங்களை அவன் அணிந்திருந்தான். “ஆமைபோல் அமர்ந்திருக்கிறான். அவன் தலை பிறிதொரு ஆமையென ஓடு கொண்டிருக்கிறது” என்று கௌரவர்கள் சொல்லிக்கொண்டனர்.

அவன் உடலில் அம்புகள் மணியோசை எழுப்பி வந்தறைந்து உதிர்ந்துகொண்டே இருந்தன. ஒருமுறைகூட அவனுடைய கவசத்தைப் பிளக்க அவர்களால் முடியவில்லை. போர் முடிந்து இறங்குகையில் கையூன்றி பாய்ந்து நிலத்தில் நிற்கும்போது அவனது கால்குறடுகள் பதிந்த மண் உளைசேறு என அழுந்தி உள்வாங்கியது. அவன் தன் கையால் எளிதாக தேர்த்தூண்களை அறைந்துடைத்தான். “அரக்கன்போல் பேருருக்கொண்டிருக்கிறீர்.

இந்திரப்பிரஸ்தத்தின் இரும்புப்பாவை எனத் தோன்றுகிறீர்” என்று திருஷ்டத்யும்னன் அவனிடம் சொன்னான். விசோகன் புன்னகைத்து “நான் என்னைப்பற்றி ஒருகணமும் எண்ணாதொழியவேண்டும் என்பதற்காக” என்றான்.

பீமனின் உடல்மொழி அவனில் திகழ்ந்தது. ஆகவே நகுலனும் சகதேவனும் அவனை பன்மை விகுதியுடன் மட்டுமே அழைத்தனர். “தாங்கள் நெடுங்காலம் மூத்தவருடன் வாழ்ந்ததில்லை. மூத்தவரின் உடல்மொழி எப்படி தங்களிடம் அமைந்தது?” என்று நகுலன் ஒருமுறை கேட்டபோது “நான் எப்போதும் அவருடனே இருக்கிறேன்” என்று விசோகன் புன்னகையுடன் மறுமொழி சொன்னான். யுதிஷ்டிரர்கூட அவனிடம் மதிப்புடன் மட்டுமே பேசினார். “உமது கைகளில் என் இளையோனின் விழிகள் திகழவேண்டும்” என்றார். “இந்தக் களத்தில் அவனுக்கு எவ்விடரும் நிகழலாகாது.” விசோகன் “அவர் இத்தகைய சிறிய களங்களில் ஒருபோதும் விழமாட்டார்” என்று சொன்னான்.

யுதிஷ்டிரரின் விழிகள் சற்றே சுருங்க “அவனுடைய களம் எது?” என்றார். “இன்னும் பெரிய களம். அறியாத படைக்கலங்களுடன் மானுடருடன் விளையாட தெய்வங்கள் வந்து நின்றிருக்கும் இடம். அங்கு அவர் வீழ்வார். அதுவரைக்கும் இங்கு நின்றிருப்பார். எந்த மானுடரும் அவரை அணுக முடியாது. வெள்ளிமுடி சூடி வடக்கே நின்றிருக்கும் பெருமலைகள்போல” என்று அவன் சொன்னான். சிலகணங்கள் அவனை நோக்கியிருந்துவிட்டு யுதிஷ்டிரர் பெருமூச்சுவிட்டார்.

களத்தில் பீமசேனர் வெறிகொண்டு போரிட்டுக்கொண்டிருந்தார். கௌரவர்கள் அன்றேனும் அவரை வீழ்த்திவிட வேண்டுமென்று முடிவு கொண்டவர்கள்போல் பெரும் சீற்றத்துடன் போர்புரிந்தனர். தேரில் அம்புகளைத் தொடுத்தபடி விரைந்து சென்று, அவ்விரைவழியாமலேயே கழையூன்றி எழுந்து சென்று தேர்களை கதையால் அறைந்து சிதறடித்து, புரவிகளை வீழ்த்தி, நிலத்தமைந்து கதை சுழற்றி தனிப்போரில் சுழன்றறைந்து துள்ளி மீண்டும் தேருக்கு மீண்டு பீமசேனர் போரிட்டார். அவர் மீளுமிடத்திற்கு விசோகன் முன்னரே தேருடன் சென்று நின்றிருந்தான். தேரும் பீமசேனரும் இரு வண்டுகள் வானில் சுழன்று விளையாடுவதுபோல களத்தில் நின்றிருந்தனர்.

அந்தப் போரில் அன்று போருக்கெழுந்ததுபோல பீமசேனர் விசைகொண்டிருந்தார். ஒவ்வொருநாளும் போருக்குப்பின் எழும் பெருஞ்சலிப்பிலிருந்தும் சோர்விலிருந்தும் சினத்தை திரட்டி அதை பெருக்கி மறுநாள் மேலும் விசைகூட்டிக்கொள்வது அவர் வழக்கம் என்று விசோகன் அறிந்திருந்தான். கொல்பவர்கள் மேல் அவருக்கு தனிப்பட்ட சினமேதும் இல்லை என்று அவனுக்கு இரண்டாம்நாளே தெரிந்தது. ஏனென்றால் அவர் எவரையும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. தன்னை ஒரு பொருட்டாக நினைக்காத உளநிலையின் நீட்சி அது. கௌரவர்கள்மீதுகூட அவருக்கு வஞ்சம் இல்லை என்றே அவனுக்கு தோன்றியது. அவருடைய வெறியாட்டும் நகைப்பும் எல்லாம் களத்தில் தன்னை வெறியூட்டிக்கொள்வதற்கான நடிப்புகளே. எவரும் ஒரு பொருட்டல்ல என்பதனால் எக்கொலையும் அவர் உள்ளெழுந்த சினத்தை அணைக்கவில்லை. சினம் உருமாறி கசப்பாக ஆகும்போது அந்திமுரசு உறுமத்தொடங்கும்.

பீமசேனர் களத்தில் காறி உமிழ்ந்தபடியே இருப்பதை அவன் முதல்நாள் முதல் நோக்கியிருந்தான். குருதித்துளிகள் வாயில்படுவதனால் பலரும் உமிழ்வதை அவன்

கண்டிருந்தான். ஆனால் அவர் தொடர்ந்து தன் உடல்நீர் முழுமையையும் வெளியேற்றிவிடுபவர்போல, மிக எதிரில் மாறாமல் நின்றிருக்கும் எவரையோ சிறுமைசெய்பவர்போல உமிழ்ந்துகொண்டிருந்தார். போர் முடிந்த பின்னரும் உமிழ்ந்தார். அவன் அவரை தனிக்குடிலில் சென்று நோக்கியபோதும் நிலையழிந்து நடந்தபடி காறி உமிழ்ந்துகொண்டிருந்தார். உள்ளிருந்து எழும் கசப்பை எவரும் உமிழ்ந்து அகற்றிவிடமுடியாது என எண்ணிக்கொண்டான். அவரை அப்பால் நின்று நோக்கிக்கொண்டிருந்தபோது ஒவ்வாதது ஊட்டிவிடப்பட்ட பேருடல்கொண்ட குழவி என்று தோன்றி அவன் புன்னகைத்துக்கொண்டான்.

களத்தில் பீமசேனர் துரோணரை எதிர்கொண்டார். துரோணரின் அம்புகள் முன் அவரால் நிற்கமுடியாதென்று அறிந்திருந்த விசோகன் தேரை எப்போதும் அம்புகளின் முழுவிசையின் எல்லைக்கு அப்பால் நிறுத்தினான். பீமசேனரின் அம்புகளும் துரோணரை சென்றடையவில்லை. “செல்க! அணுகுக!” என்று பீமசேனர் கூவிக்கொண்டிருந்தார். பலமுறை காலால் அவனை உதைத்தார். துரோணர் வில்லேந்தியிருந்தமையால் கழையிலேறி கதையுடன் பாய்ந்து செல்லவில்லை. விசோகன் தேரை முன்செலுத்துவதுபோல ஒவ்வொருமுறையும் பக்கவாட்டில் வளைத்து கொண்டுசென்றான். எப்போதுமே அவன் கண்கள் அவருடைய அம்புகளின் எல்லையை அளந்துகொண்டே இருந்தன.

ஒரு கட்டத்தில் துரோணரின் தேர் முழுவீச்சுடன் எழுந்து முன்னால் வந்தது. சினம்கொண்ட யானைபோல காதுகள் விடைக்க தலைகுலுக்கி துதிசுழற்றி அது வருவதாக அவனுக்கு தோன்றியது. அவன் தேரை பின்னெடுக்க முயல்வதற்குள் அவர் மிக அருகே வந்துவிட்டார். அவருடைய அம்புகள் பீமசேனரின் மேல் வந்து அறையத்தொடங்கின. எடைமிக்க கவசங்களில் பட்டு அவை உதிர்ந்தன. துரோணர் முசலம் என்னும் மிகப் பெரிய அம்பை எடுப்பதைக் கண்டு அவன் தேரை பின்னுக்கு கொண்டுசென்றான். பீமசேனர் எடுத்த பேரம்பால் அந்த அம்பை தடுக்க இயலவில்லை. அது வந்து அறைந்து பீமசேனரின் நெஞ்சக்கவசம் உடைந்தது. அவர் அமர்ந்து தன் கவசத்தை மாற்ற இடமளிக்காமல் துரோணர் அம்புகளால் அறைந்துகொண்டே இருந்தார்.

பீமசேனரின் உடலில் இரண்டு அம்புகளேனும் புதைந்துவிட்டன என்று விசோகன் உணர்ந்தான். தேரை பின்னிழுக்கவியலாது என்று அவனுக்கு தெரிந்தது. எண்ணித்துணிந்து முழுவிசையுடன் தேரை முன்னால் செலுத்தினான். அதை எதிர்பாராத துரோணரின் பாகன் தேரை சற்றே பின்னடையச் செய்ய அவர்களுக்கிடையே அம்புகள் உருவாக்கியிருந்த வெற்றிடத்தின் வழியாக தன் தேரை விரைந்து ஓட்டி வளைத்து துரோணரின் முன்னாலிருந்து விலகிச்சென்றான் விசோகன். துரோணர் “மந்தா, நில்! கௌரவர்களைக் கொன்ற உன் கையை காட்டு!” என்று கூவினார். கௌரவர்கள் இளிவரலோசை எழுப்பி கூச்சலிட்டார்கள். பீமசேனர் “நிறுத்து, அவரை நோக்கி செல். பார்த்துவிடுவோம்... செல்க! முன்செல்க!” என்று கூச்சலிட்டார். ஆனால் விசோகன் குதிரைகளை சவுக்கால் மாறிமாறி அறைந்து விசையுடன் முன்செலுத்தி அப்பால் சென்றான்.

விராடப் படைகள் இருபுறத்திலிருந்தும் எழுந்து சென்று துரோணரை சூழ்ந்தன. பீமசேனர் படைகளின் நடுவே புதைந்ததும் விசோகன் தேரை நிறுத்தினான். “அறிவிலி! என் ஆணைகளை மீறிய உன்னை இக்கணமே கொல்வேன்!” என்று கூவிய பீமசேனர் கைகளை ஓங்கியபடி அவனை நோக்கி வந்தார். அவன் வெற்றுவிழிகளால் அவரை நோக்கி அமர்ந்திருந்தான். பீமசேனர் தணிந்து “எனக்கு இழிவை உருவாக்கிவிட்டாய்... உயிர்தப்பி ஓடச்செய்துவிட்டாய்!” என்று கூச்சலிட்டார். “அவரை கொல்லும்பொருட்டு பிறந்தவர் திருஷ்டத்யும்னர். அவர்

நடத்தட்டும் போரை... உங்கள் பணி கௌரவர்களை எதிர்கொள்வதே" என்றான் விசோகன். "எனக்கு எவர்மேலும் அச்சமில்லை... துரோணரிடம் செல்க!" என்றார் பீமசேனர்.

"ஆம், ஆணை!" என்று சொல்லி விசோகன் தேரை செலுத்தினான். ஆனால் செவிகளால் கௌரவர் இருக்குமிடத்தை உணர்ந்துகொண்டான். பன்னிருகளம் திரும்பிவரும் விசையில் கௌரவர்களின் முனை எங்கே வந்து நின்றிருக்கும் என கணித்து அங்கே தன் தேருடன் சென்று நின்றான். கௌரவப் படையில் பீமசேனர் தப்பியோடிய செய்தி முழங்கிக்கொண்டிருந்தது. துச்சலனும் துர்மதனும் தொலைவிலேயே பீமசேனரைக் கண்டதும் கைநீட்டி இளிவரல் உரைத்தபடி தேரை விரைவுபடுத்தி அவரை நோக்கி வந்தனர். "இழிமக்கள்... கீழுயிர்கள்... இன்று இவர்களின் குருதி குடிப்பேன்..." என்று பீமசேனர் கூவினார். "செல்க! செல்க!" என்று ஆணையிட்டார். "சர்வதனும் சுதசோமனும் தந்தையை துணையுங்கள். அவருக்கு இருபுறமும் காத்து நில்லுங்கள்!" என்று திருஷ்டத்யும்னனின் ஆணை முழவோசையாக எழுந்துகொண்டிருந்தது.

சர்வதனும் சுதசோமனும் வருவதற்குள்ளாகவே பீமசேனரும் கௌரவர்களும் கடும்போரில் இறங்கிவிட்டிருந்தார்கள். துச்சலனும் துர்மதனும் இருபுறமும் நின்று அம்புகளால் தாக்க துச்சகனும் சுபாகுவும் நேர்எதிரில் நின்று போரிட்டனர். பீமசேனரின் இருபக்கங்களையும் பாஞ்சாலப் படையின் பரிவில்லவர் காத்தனர். அம்புகள் உரசிச்செல்லும் உலோகக் கிழிபடலோசை செவிகூச ஒலித்தது. அம்புமுனைகள் முட்டிய பொறிகள் கண்முன் வெடித்து வெடித்து சிதறின. பரிவில்லவர்கள் இருபுறமும் அலறி விழுந்துகொண்டிருந்தனர். அவ்விடத்தை நிரப்பிய பரிவில்லவர்கள் குளிர்நீரில் குதிக்கும் இளையோர்போல உரக்க கூச்சலிட்டனர். இரும்பின் ஓசைகளாக சூழ்ந்திருந்தது காற்று. அம்புகளின் ஓசை, கவசங்களின் ஓசை, சகடங்களின் ஓசை. அங்கே ஒரு மாபெரும் கொல்லப்பட்டறை செயல்படுவதுபோல தோன்றியது.

கௌரவர்கள் மிகுந்த எச்சரிக்கை கொண்டிருந்தனர். வழக்கமாக அவர்கள் போர் தொடங்கியதுமே உளம்கொந்தளித்து ஒற்றைத்திரளென்று ஆகி சூழ்ந்துகொண்டு எந்த ஒழுங்கும் இல்லாது போர்புரிவார்கள். அவர்களில் சிலர் இறந்த பின்னர் அந்தச் சீற்றம் மேலும் வெறியை கிளப்பியது. ஆனால் அன்று அவர்கள் அனைவருமே மிகமிகக் கருதி எண்ணி போரிட்டனர். அவர்களின் தேர்களால் ஆன அரைவட்டம் பறக்கும் கொக்குகளின் சூழ்கைபோல நெளிந்தாலும் வடிவிழக்காமல் முன்னால் வந்தது. அவர்களில் சில தேர்வலர் அம்புகள் பட்டு விழுந்தாலும் அது அறுபடவே இல்லை. அவர்களின் அம்புகள் ஒற்றை அலையென எழுந்து வந்தன. ஒன்றுக்குள் ஒன்றென எழுந்த அரைவட்டங்களாக அவை வந்து அறைய பீமசேனர் மேலும் மேலும் பின்னடைந்துகொண்டிருந்தார்.

விசோகன் தேரை அவர்களின் அம்புவளையத்திலிருந்து பின்னடையச் செய்தபடி சர்வதனையும் சுதசோமனையும் எதிர்பார்த்தான். அவர்கள் இருபக்கமும் இணைந்துகொண்டு நிகரான அரைவட்டத்தை அமைத்துக்கொண்டால் எழுந்து சென்று தாக்கமுடியும். ஆனால் அவர்கள் அத்தனை முழுமையான வட்டத்தை அமைத்திருக்கும் நிலையில் தன் வட்டத்தை உடைத்து பீமசேனர் முன்னெழுவது அவர்களால் சூழ்ந்துகொள்ளப்படுவதற்கே வழிகோலும். சர்வதனும் சுதசோமனும் சேர்ந்தே இருபக்கமும் வந்தணைந்தனர். வில்லவர்கள் அவர்களின் தலைமையில் பிறைவடிவ பின்காப்பை உருவாக்க பீமசேனர் முன்னேறிச்செல்லத் தொடங்கினார்.

ஆனால் மறுபக்கம் சகுனியின் ஆணைப்படி கௌரவர்கள் மேலும் மேலும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் வளையம் விரிந்து இருமடங்காகியது. அதில் வங்கமன்னர்கள் சமுத்ரசேனரும் சந்திரசேனரும் வந்து இணைந்துகொண்டார்கள். அவர்களின் அம்புகளின் ஒத்திசைவு மேலும் மேலும் இறுகியது. பாண்டவப் படை மேலும் பின்னடைந்தது. துர்மதன் “ஊன்குன்றே, இன்று உன் குருதியை அள்ளி உடலில் பூசி களிப்போம்! நில்! எங்கு ஓடுகிறாய், அடுமனைக்கா?” என்று கூவினான். கௌரவர்கள் உரக்க நகைத்தனர். “துரோணரிடமிருந்து ஓடி தப்பினாய். இங்கிருந்து ஓடினாலும் எங்கள் அம்புகள் தேடிவரும்!” என்றான் துச்சகன்.

பீமசேனர் சினந்தெழுவார் என்று விசோகன் எதிர்பார்த்தான். ஆனால் “மெல்ல மெல்ல பின்னடைக!” என்று அவர் கை காட்டினார். அம்புகளால் கௌரவர்களை எதிர்த்து நிறுத்தியபடி மெல்ல மெல்ல பின்னடைந்துகொண்டிருந்தார் பீமசேனர். சர்வதனும் சுதசோமனும் பின்னடைந்தனர். சர்வதனின் கவசங்கள் உடைந்தன. சுதசோமனின் தேர்வலன் அம்புபட்டு சரிந்து விழுந்தான். பரிவில்லவர் பன்னிருவரும் தேர்வில்லவர் எழுவரும் களம்பட்டார்கள். கௌரவப் படை மேலும் விசைகொண்டது. ஒருவரை ஒருவர் சொற்களைக் கூவியபடி அவர்கள் அணுகிவந்தனர். மலைச்சரிவு பிளந்து சரியும் சேற்றுவளையம் இறங்கி அணுகுவதுபோல ஒற்றை அலைவளையமென அவர்கள் தெரிந்தாலும் வேறொரு நோக்கில் அதில் பாறைகளும் கற்களும் தெரிவதுபோல ஒவ்வொருவரையும் தனித்தனியாக காணமுடிந்தது.

அவர்கள் அணுகும் விசை மிகுந்து சிலர் மிக அருகே வந்துவிட்டனர். எண்ணியிராக் கணத்தில் பீமசேனர் கழையூன்றிப் பாய்ந்தெழுந்து கௌரவனாகிய நந்தனை கதையால் அறைந்து கொன்றார். அவனருகே நின்றிருந்த உபநந்தன் கூச்சலிட அவனை கொக்கிக்கயிற்றை வீசி கோழிக்குஞ்சை பருந்து எடுப்பதுபோல் இழுத்தெடுத்து கதையால் அறைந்தார். அவன் உடல் உடைந்து திறந்து குருதிச்சிதறல்கள் வெடித்துப்பரவின. மணிமாலை அறுந்ததுபோல கௌரவர்களின் அணி உடைந்து சிதறியது. ஒவ்வொருவரும் வெறிகொண்டு கூச்சலிட்டபடி அவரை தாக்கினர். துர்மதனும் துச்சலனும் “அணிகொள்க! அணிசிதையாதமைக!” என்று கூவினாலும் அவர்கள் அதை செவிகொள்ளவில்லை.

பீமசேனர் அவர்களை ஒவ்வொருவராக தாக்கினார். சித்ரபாணனை கதையால் நெஞ்சிலறைந்து கொன்றார். கழையை ஊன்றி எழுந்துசென்று இறங்கி அங்கே வாளுடன் வந்த தனுர்த்தரனை அறைந்து கவசத்துடன் தலையை உடைத்தார். கௌரவர்கள் கூக்குரலிட்டனர். ஒருவரோடொருவர் மாறி மாறி கூவி ஆணைகளை இட்டனர். அந்தக் கூச்சலே அவர்களின் உள்ளங்களைக் குழப்பி விழிகளை அலையடிக்கச் செய்து எதையும் கணிக்கமுடியாதவர்களாக ஆக்கியது. பீமசேனர் எழுந்து பறந்து அமைந்து மீண்டும் எழுந்து அவர்களை கொன்றார். அனூதரன் தலையுடைந்து விழுந்தான். அவரை அவர்கள் சூழ்ந்துகொள்ள கழையிலெழுந்து மீண்டும் தேருக்கு வந்தார். அவர்கள் தங்கள் தேரை நோக்கி ஓட நீள்வேலை எடுத்து அதை ஊன்றிப் பறந்தெழுந்து திருடவர்மாவின் நெஞ்சில் ஊன்றி அவனை மண்ணுடன் தைத்தார். உருவி எழுந்து சுழற்றி திருதஹஸ்தனை கொன்றார்.

மான்கூட்டங்களை வேட்டையாடும் சிம்மம் தரையில் அறைந்து பேரொலி எழுப்பி அவற்றை சிதறடித்தபின் பாய்வதைப் போலிருந்தது. அச்சத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் முற்றிலும் தனித்தவர்களாக, எதையும் செவிவிழிகொள்ள இயலாதவர்களாக ஆனார்கள். அவர்களை வரப்பு வெட்டும்போது சிதறியோடும் எலிகளை கூர்க்கம்பியால் குத்திக் கோத்தெடுக்கும் உழவர்களைப்போல பீமசேனர் கொன்றார். வாலகியும் சித்ரவர்மனும் சலனும் சித்ரனும் நெஞ்சில் குத்துபட்டு

விழுந்து துடித்து இறந்தனர். துர்மதன் வெறிக்கூச்சலிட்டபடி பீமசேனரை தாக்க துச்சலனும் துர்முகனும் துச்சகனும் அவனுடன் சேர்ந்துகொண்டனர். நான்கு கதைகளை அவருடைய ஒற்றைக் கதை தடுத்தது. தந்தையரை துணைக்கச்சென்ற மௌரவ மைந்தர் ஷத்ரஜித்தையும் தர்மியையும் வியாஹ்ரனையும் சர்வதன் அம்பெய்து வீழ்த்தினான்.

சுதசோமன் தந்தையைப்போலவே கழையிலெழுந்திறங்கி கௌரவ மைந்தர்களான மனோனுகனையும் தும்ரகேசனையும் கதையால் அறைந்துகொன்றான். அவனைச் சூழ்ந்துகொண்ட க்ரோதனையும் ஊர்த்துவபாகுவையும் கொன்றபின் மீண்டும் பாய்ந்து தன் தேரிலேறிக்கொண்டான். அவனைத் தொடர்ந்து ஓடிவந்த கௌரவ மைந்தர் ரக்தநேத்ரனையும் சுலோசனனையும் மகாசேனனையும் உக்ரசேனனையும் விப்ரசேனனையும் சர்வதன் அம்பெய்து வீழ்த்தினான். சகுனியின் ஆணை ஒலித்துக்கொண்டே இருந்தது. பகதத்தரும் பால்ஹிகரும் வருகிறார்கள் என்று விசோகன் கூவினான்.

பீமசேனர் துர்மதனை அறைந்து அப்பாலிட்டார். தொடை உடைந்து அவன் எழமுயல துச்சலனின் தோளை அறைந்தார். உடைந்த கவசத்துடன் அவன் பின்னடைய அவர் பாய்ந்து வந்து தன் தேரிலேறிக்கொண்டார். அதற்குள் சகுனியின் ஆணைக்கேற்ப பகதத்தர் தன்னுடைய பெருங்களிறான சுப்ரதீகத்தின் மேலேறி வலப்பக்கம் தோன்றினார். இடப்பக்கம் பால்ஹிகர் அங்காரகன் மேலமர்ந்து வந்தார். சர்வதனும் சுதசோமனும் அம்புகளால் கௌரவ மைந்தர்களை தடுத்து நிறுத்த பீமசேனர் தேரை பின்னடையச் செய்யும்படி ஆணையிட்டார். சர்வதனின் அம்புகள் பட்டு கௌரவ மைந்தர் ஜடிலனும் வேணுமானும் நிலம்பட்டனர். சுதசோமனால் கௌரவ மைந்தர்களான அனந்தனும் சானுவும் உதாரனும் கிருதியும் கொல்லப்பட்டார்கள்.

பாண்டவப் படை உருவழிந்து பின்னடைந்து மையப்படைக்குள் புகுந்துகொள்ள கேடயங்களேந்திய யானைகள் வந்து பகதத்தரையும் பால்ஹிகரையும் தடுத்தன. அவர்களின் யானைகள் பிளிறியபடி கேடயயானைகளை அறைந்தன. விசோகன் பெருமூச்சுவிட்டு உடல் தளர்ந்தான். பீமசேனர் “மறுபக்கம் எழுக! நாம் எதிர்கொள்ளவேண்டியவர்கள் துரியோதனனும் துச்சாதனனும்” என்று ஆணையிட்டார். விசோகன் தேரை படைகளின் நடுவில் செலுத்தியபோது முன்னணியில் சிகண்டி அப்பால் நின்றிருந்த சல்யரை எதிர்கொள்வதை கண்டான். சல்யருக்குத் துணையாக புளிந்த நாட்டு இளவரசர்களான விமலனும் ஆகிருதியும் அந்தகனும் தார்விகநாட்டு படைத்தலைவன் துரந்தனும் நின்றிருந்தனர். சிகண்டிக்குத் துணையாக குனிந்தநாட்டுப் படைகளும் சேதிநாட்டுப் படைகளும் நின்றிருந்தன. சேதியின் மன்னன் திருஷ்டகேது சிகண்டிக்கு நிகரென நின்று போரிட்டுக்கொண்டிருந்தான்.

சிகண்டியின் அம்புகளுக்கு முன் நிற்கவியலாமல் சல்யர் பின்னடைந்து கொண்டிருந்தார். சிகண்டியின் மெல்லிய உடலில் கைகள் இரு சவுக்குகள்போல சுழன்றுகொண்டிருந்தன. பீமசேனர் “செல்க, அவர்களுக்கு நம் துணை தேவையில்லை” என்றார். அவர்களின் தேர் படைமுகப்புக்குச் சென்றபோது பன்னிருமுனைச் சகடம் திரும்பி அவர்களுக்கு முன் ஜயத்ரதன் தோன்றினான். “வீணனே, என்னை எதிர்கொள்க! படைக்கலம் பழகாத கௌரவர்களிடம் போரிட்டு நின்றிருப்பது ஆண்மையல்ல!” என்று ஜயத்ரதன் பீமசேனரை நோக்கி கூச்சலிட்டான். “எனில் உன் குருதியில் நீராடுகிறேன் இன்று!” என்றபடி பீமசேனர் தேரை அவனை நோக்கி செலுத்தினார். இருவரும் அம்புகளால் கோத்துக்கொண்டார்கள்.

ஜயத்ரதனின் வில்திறனை விசோகன் அறிந்திருந்தான். அவன் எண்ணிய கணமே எண்ணியதை முரசுகள் அறிவித்தன. “ஜயத்ரதரை எதிர்கொள்ளும் பீமசேனரை சுருதகீர்த்தியும் சுருதசேனனும் துணைக்கட்டும்.” அவர்கள் வரும்வரை ஜயத்ரதனை எதிர்கொள்வதற்குரிய வழிகளை விசோகன் எண்ணினான். ஜயத்ரதனின் ஆற்றல் அம்புகளின் எழுதொலைவில் இல்லை என்றும் அவை எழும்விரைவிலேயே உள்ளது என்றும் அவன் அறிந்திருந்தான். ஆகவே தேரை மேலும் அணுகச்செய்து ஆனால் ஒருகணமும் நிலைக்கச் செய்யாமல் கொண்டுசென்றான். பீமசேனரின் வில் உடைந்தது. கவசங்கள் சிதறின. ஆனால் அவர் வெறியுடன் கூவிக்கொண்டே போரிட்டார்.

சுருதகீர்த்தி தோன்றியதும் விசோகன் ஆறுதல்கொண்டான். சுருதகீர்த்தியைக் கண்டதும் விரைந்து முன்னெழுந்துகொண்டிருந்த ஜயத்ரதன் எச்சரிக்கைகொண்டு விரைவு குறைந்தான். ஏளனத்துடன் பீமசேனரை நோக்கி “அச்சமிருந்தால் என்னிடம் சொல்லியிருக்கலாமே, மந்தா. இளையோன் மைந்தனால் காக்கப்படும் கைக்குழவி என உன்னை நான் அறிந்திருக்கவில்லையே” என்றான். “உன் உதடுகளைக் கிழித்த பின் இதற்கு மறுமொழி சொல்கிறேன்” என்று கூவியபடி பீமசேனர் அம்புகளை தொடுத்தார். அவர்களுடன் சுருதசேனனும் இணைந்துகொண்டதும் ஜயத்ரதன் பின்னடையலானான்.

அப்பால் சிகண்டி சல்யரை மிகப் பின்னால் கொண்டுசென்றுவிட்டிருப்பதை விசோகன் கண்டான். வங்கத்து இளவரசர்களான ஹோாஷனும் புரஞ்சயனும் சிகண்டியால் கொல்லப்பட்டதை முரசுகள் அறிவித்தன. மத்ரநாட்டு படைத்தலைவர்களாகிய உக்ரேஷ்டனும் சத்யகனும் சிகண்டியால் கொல்லப்பட்டார்கள். சிகண்டியைச் சூழ்ந்துகொள்ளும்படி சகுனி ஆணையிட்டுக்கொண்டே இருக்க புளிந்த நாட்டு இளவரசர்களான விமலனும் ஆகிருதியும் அந்தகனும் கொல்லப்பட்டார்கள். தார்விகநாட்டு படைத்தலைவன் துரந்தன் கொல்லப்பட்டதும் அவனுடைய படைகள் சிதறி பின்னடைந்தன. சல்யர் தனித்துவிடப்பட்டார். அவரை சிகண்டி அம்புகளால் அறைந்தபடி துரத்திச்செல்ல அவர் நெஞ்சிலும் விலாவிலும் அம்பு தைத்து தேர்த்தட்டில் விழுந்தார்.

அப்போது பன்னிருமுனைச் சகடம் திரும்பி பீஷ்மர் படைமுகப்பில் தோன்றி தேரில் அணுகி வந்தார். நாணொலியுடன் அவர் எழுந்தபோது சல்யரை துரத்திச்சென்ற சிகண்டி நேர் எதிரில் தோன்றினார். பீஷ்மர் திகைத்தவர்போல இரு கைகளிலும் அம்பும் வில்லும் அசைவற்று நிற்க செயலிழந்தார். அவருடைய வில் தாழ்ந்தது. தேரை திருப்பும்படி அவர் ஆணையிட பாகன் தேரை மறுதிசை நோக்கி கொண்டுசென்றான். தன்னைச் சூழ்ந்து பறக்கும் அம்புகளின் நடுவே பீஷ்மரை கூர்ந்து நோக்கியபடி சிகண்டியும் அசைவிலாது நின்றார்.

அந்திமுரசு ஒலிக்கத் தொடங்கியதும் பீமசேனர் தன் வில்லை கீழே வைத்துவிட்டு இரு கைகளையும் மரக்கட்டை ஒலியுடன் உரசிக்கொண்டார். விசோகன் தேரை திருப்ப அவர் ஒன்றும் சொல்லாமல் பாய்ந்து கீழே இறங்கி அருகே நின்றிருந்த புரவிமேல் ஏறி படைகளின் நடுவே பாய்ந்து அப்பால் சென்றார். விசோகன் தான் கண்ட காட்சியை மீண்டும் நினைவுகூர்ந்தான். அது மெய்யா விழிமயக்கா? ஆனால் வேறு பலரும் கண்டிருக்கவேண்டும். அவர்கள் கண்டார்களா என்பது சற்றுநேரத்திலேயே தெரிந்துவிடும். படைவீரர்கள் குருதி வழியும் உடலுடன் படைக்கலங்களையே ஊன்றுகோலாக்கி தளர்ந்து திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

விசோகனை அணுகிய தேர்வலன் ஒருவன் “இன்றும் பேரழிவே... நம் தரப்பின் கிராதப்படை முழுமையாகவே அழிந்துவிட்டது. பீஷ்மர் இன்றும் கொலையாடினார். ஒவ்வொருநாளும் அவர் உருவாக்கும் அழிவு மிகுந்துகொண்டே செல்கிறது” என்றான். விசோகன் தலையசைத்தான். “இன்று அழிவைக் கண்டு சினந்து இளைய யாதவர் தன் படையாழியுடன் பீஷ்மரை கொல்ல எழுந்தார் என்றார்கள்” என்று அவன் சொன்னான். “அது முன்னரே நிகழ்ந்தது” என்றான் விசோகன். “இன்றும் நிகழ்ந்ததாகச் சொன்னார்கள்” என்றான் தேர்வலன். பின்னர் “ஆனால் அவரே பீஷ்மரை கொன்றால்தான் உண்டு. வேறு எவராலும் இயலாது என்று தெளிவாகிவிட்டது. இன்றேல் நாம் அவர் கையால் அழிவோம்” என்றான். விசோகன் ஒன்றும் சொல்லவில்லை.

இன்னொரு பரிவீரன் அருகணைந்து “இளைய யாதவர் பொறுமையிழந்துவிட்டார். இன்று முதல்முறையாக அவர் முகத்தில் கடுஞ்சினத்தை நான் கண்டேன்” என்றான். அவர்கள் எவரேனும் சிகண்டிமுன் அவர் வில்தாழ்த்தியதை சொல்கிறார்களா என்று விசோகன் செவிகூர்ந்தான். “இன்று நம் வீரர்கள் முற்றாகவே உளம்தளர்ந்துவிட்டனர். போர்முடிவில் இப்படி ஒரு சொல்கூட இன்றி அவர்கள் திரும்பிச்செல்வது இதுவரை நிகழ்ந்ததில்லை” என்றான் தேர்வலன். “தங்களை ஊக்கப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் ஒரு முறைமை என்ற வகையிலும் அவர்கள் வெற்றிக்கூச்சலிடுவது என்றுமுள்ள வழக்கம். நாளுக்குநாள் அக்குரல் தளர்ந்துதான் வந்தது. ஆனால் இன்று முற்றமைதி நிலவுகிறது.”

பரிவீரன் “ஆம், ஆனால் மறுபக்கத்திலும் எந்த ஓசையும் இல்லை. அவர்களும் வெறுமையுடன்தான் திரும்புகிறார்கள் போலும்” என்றான். அதன்பின்னர்தான் குருக்ஷேத்ரப் போர்க்களமே அமைதியாக இருப்பதைப்போல விசோகன் உணர்ந்தான். திரும்பும் படைகளின் காலடிஓசைகள், விலங்குகளின் குரல்கள், சகடஒலிகள், வலியிலும் துயரிலும் கதறுபவர்களின் குரல்கள் என முழக்கம் நிறைந்திருந்தாலும் அதை அமைதி என்றே உள்ளம் உணர்ந்தது. தேரை திருப்பி தன் இடத்திற்கு கொண்டுசென்றான். தேரை நிலையில் நிறுத்திவிட்டு புரவிகளை நுகத்திலிருந்து அவிழ்த்தான். அவை கால்களை உதறிக்கொண்டு மூச்சொலியுடன் விலகி நின்றன. ஒரு புரவி கீழே கிடந்த இலை ஒன்றை எடுத்து நாவால் சப்பிவிட்டு கீழே போட்டது.

விசோகன் புரவிகளின் கவசங்களை அவிழ்த்து அகற்றினான். இரண்டு புரவிகளின் உடலில் ஆழமாகவே அம்புகள் பாய்ந்திருந்தன. குருதி உலர்ந்து கவசம் தோலுடன் ஒட்டியிருந்தது. பிற புரவிகளின் உடல்களில் பெரிய அளவில் புண் ஏதும் இருக்கவில்லை. அவன் ஏழு புரவிகளையும் தனித்தனியாக தறிகளில் கட்டினான். அவை உடல்சிலிர்த்துக்கொண்டும் பெருமூச்சுகள்விட்டுக்கொண்டும் நின்றன. ஒரு புரவி இன்னொன்றின் விலாவை முகர்ந்து அதிலிருந்த குருதியின் வீச்சத்தால் மூக்கு சுளித்து தும்மலோசை எழுப்பியது. உடலில் வலியிருந்தமையால் அவை கால்மாற்றி வைத்து அசைந்து அசைந்து நின்றன.

விசோகன் குடிலுக்குச் சென்று கவசங்களை கழற்றிவிட்டு நீர் அருந்தினான். பரிவலன் புரவிகளுக்கு நீர் வைத்தான். அவை முகம் முக்கி உறிஞ்சி குடம்நிறையும் ஒலியுடன் குடித்தன. முகமுடிகள் நீர்த்துளியுடன் நின்றிருக்க நிமிர்ந்து விழியிமைகளை சுருக்கிக்கொண்டன. மீண்டும் மூழ்கி அருந்தி பெருமூச்சுவிட்டன. அவற்றின் விலா குளிர்ந்து மெய்ப்புகொண்டு விதிர்த்து அசைந்தது. இரு புரவிகள் சிறுநீர் கழித்தன. கால்களை மாற்றி ஊன்றிக்கொண்டு மீண்டும் நீர் அருந்தின. அவை சாணியுருளைகளை உதிர்க்கும் ஓசை கேட்டு விசோகன் திரும்பி

நோக்கினான். குதிரையின் சாணியுடன் சிறுநீர் கலக்கும் மணம் அவன் உள்ளத்திற்கு அணுக்கமானது.

கையுறைகளை கழற்றியபோது உலர்ந்த குருதியுடன் கருகியதசைபோல உரிந்து வந்தது. கையுறைகளை நீரில் நனைத்து ஊறவைத்துவிட்டு மரவுரியுடன் அவன் புரவிகளை அணுகினான். பரிஏவலன் மத்தன் மரத்தொட்டியை கொண்டுவந்து வைத்தான். அதிலிருந்த கந்தகம் கலந்த நீரிலிருந்து சிறிய கொப்புளங்கள் வெடித்துக்கொண்டிருந்தன. மத்தன் “நீங்கள் ஓய்வெடுங்கள் தேர்வலரே, நானே இவற்றை செய்வேன்” என்றான். “இல்லை, நான் செய்யாவிடில் நிறைவிருக்காது” என்றபின் விசோகன் மரவுரியை கந்தகநீரில் முக்கி பிழிந்து புரவிகளின் உடலை நனைத்து இழுத்து உருவிவிட்டான். அவற்றின் தோலின் மென்மயிர்ப்பரப்பிலிருந்து குருதி கரைந்து வந்தது. பரிஏவலன் இன்னொரு புரவியின் உடலை நீவத்தொடங்கினான்.

உறைந்த குருதி கரைந்து அகன்றபோதுதான் தோலுக்கு அடியிலிருந்த புண்கள் தெரியத் தொடங்கின. அவன் மெல்ல விரல்களால் தொட்டு அந்தப் புண்களின் மீதிருந்த குருதிப்பொருக்குகளை அகற்றினான். செவ்வூன் மீது கந்தகம் பட்டபோது புரவிகள் வலியுடன் கால்மாற்றி வைத்து நின்றன. அவனுக்கு புரவிகளின் உடலை நீவி சலிப்பதேயில்லை. மீண்டும் மீண்டும் மரவுரியை முக்கி உழிந்து கொண்டிருந்தான். “குறைவாகவே புண்கள் உள்ளன இன்று” என்றான் மத்தன். “ஆம்” என்றான் விசோகன். “தங்கள் உடலில் புண்கள் சற்று பெரிதாகவே உள்ளன, தேர்வலரே” என்றான் ஏவலன். “ஆம், மருந்திடவேண்டும். இப்பணி முடியட்டும்” என்றான் விசோகன்.

புரவிகளின் உடல்களை தூய்மைசெய்து முடித்ததும் வேம்பெண்ணையில் மஞ்சளுடன் சேர்த்துக்குழைத்த மருந்துவிழுதை மரக்குடுவையிலிருந்து அள்ளி புண்கள் மேல் பூசினான். உப்புநீர் தெளித்து சிறிதாக வெட்டப்பட்ட புல்கற்றைகளை ஏவலர்கள் வண்டிகளில் கொண்டுவந்து புரவிகளுக்கு முன் போட்டனர். அவை ஆவலுடன் குனிந்து புல்லை அள்ளி தாடையிறுகி அசைய, தலைகுலுக்கி செவிகளை அடித்துக்கொண்டு மென்று தின்னத் தொடங்கின. களைப்புடன் கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தபோது விசோகன் மெல்லிய பாடலோசையை கேட்டான். “என்ன அது?” என்றான். “பாடுகிறார்கள்” என்றான் ஏவலன். “பாடுகிறார்களா? யார்?” என்றான் விசோகன். “வீரர்கள்தான்… நான் வரும்போதே சில இடங்களில் பாடிக்கொண்டிருந்தார்கள்” என்று ஏவலன் சொன்னான்.

விசோகன் வியப்புடன் பரிநிலையிலிருந்து வெளியே சென்று பார்த்தான். உணவுக்காக சிறுசிறு குழுக்களாக அமர்ந்திருந்த வீரர்கள் கைகளை தட்டிக்கொண்டு பாடினர். அவன் நோக்கியபடியே நடந்தான். படையின் ஒரு மூலையிலிருந்து தொடங்கிய களிப்பு பாடலாகவும் சிரிப்பாகவும் பரவி படைமுழுக்க சென்றுகொண்டிருந்தது. அவன் காவல்மாடம் வரை சென்றான். “என்ன நிகழ்கிறது?” என்று காவலரிடம் கேட்டான். “என்னவென்று தெரியவில்லை. எவனோ எங்கோ சிரிக்கத் தொடங்கிவிட்டிருக்கிறான். அனைவரும் சிரிக்கிறார்கள்” என்றான் காவலன். விசோகன் படிகளில் ஏறி காவல்மாடத்திற்குமேல் சென்றான். அங்கே வில்லுடன் நின்றிருந்த வீரர்களும் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அந்திவிளக்குகளின் ஒளியில் கண்ட படை முழுக்க சிரித்து நகையாடி பாடி ஆடிக்கொண்டிருந்தது.

## பகுதி பத்து : விண்நதி மைந்தன்

போர் ஓய்ந்து களம் அடங்கிக்கொண்டிருந்த பின்அந்திப்பொழுதில் எல்லைக் காவல்மாடத்தில் அமர்ந்து காவலர்தலைவர்களிடம் அறிக்கை பெற்றுக்கொண்டிருந்த சதானீகன் காட்டுக்குள் இருந்து கண்காணிப்பு முழவுகள் ஓசையிடுவதை கேட்டான். பேச்சை நிறுத்தி “அது என்னவென்று பார்!” என்று காவலர்தலைவனிடம் ஆணையிட்டான். காவலர்தலைவன் வெளியே சென்று செவிகூர்ந்து “இருவர் நமது படை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இளவரசர்கள்” என்றான். “இளவரசர்களா?” என்றபடி சதானீகன் எழுந்தான். “எந்த நாட்டை சார்ந்தவர்கள்?” என்று கேட்டான். காவலர்தலைவன் “கீழைதசார்ணர்கள்” என்றான். “அவர்கள் பால்ஹிகக் குருதியினர். எந்தப் படைகூட்டமைப்பிலும் இல்லாதவர்கள். இருதரப்பிலும் பங்கெடுக்காதவர்கள்” என்றபடி அவன் வெளியே நடந்தான்.

வெளியே குளிர்காற்று வீசியது. பல்லாயிரம் மானுட உடல்களிலிருந்து எழுந்த நீராவியும் மணமும் அதில் கலந்திருந்தது. “உடன் படை வருகிறதா?” என்று காவலர்தலைவனிடம் சதானீகன் கேட்டான். காவலர்தலைவன் முழவொலியாக அச்செய்தியை அனுப்பி மறுமொழி பெற்று “இல்லை இளவரசே, அவர்கள் இருவர் மட்டுமே வருகிறார்கள்” என்றான். சதானீகன் காவல்மாடத்தின் வெளியே கைகளைக் கட்டியபடி நின்றான். சற்று நேரத்தில் புரவிகளின் ஓசை கேட்கத்தொடங்கியது. “இருவரும் தனித்தே வந்திருக்கிறார்கள். காட்டுக்குள் இருந்து உளவுச்செய்தி சொல்கிறது” என்றான் காவலர்தலைவன்.

அதற்குள் அவனுடைய ஆவல் முற்றாக அடங்கிவிட்டிருந்தது. வடமேற்கைச் சேர்ந்த தசார்ணச் சிற்றரசின் இரு இளவரசர்கள் போர்ச் செய்திகளை சூதர்களிடமிருந்து கேட்டு தாங்களும் கலந்துகொண்டு சொல்லில் வாழும் பொருட்டு வாளுடன் கிளம்பி வந்திருக்கிறார்கள். பிறிதொரு தருணத்தில் என்றால் அவன் புன்னகை புரிந்திருக்கக்கூடும். அப்போது உள்ளம் கசப்பை மட்டுமே உணர்ந்தது. இந்தப் போரில் புகழ்பெறும் பொருட்டு வந்து களம்பட்டவர்கள் மறுநாள் போரிலேயே முற்றிலும் மறக்கப்பட்டதை அவன் கண்டான். ஒவ்வொரு நாளும் இறந்துவிழும் இளவரசர்களின் பெயர்களை ஓலைகளில் பதிவு செய்வதே பெரும்பணியாக இருந்தது. அந்த ஓலைகள் மேலும் மேலும் ஓலைகளால் மூடப்பட்டன.

அப்பெயர்கள் என்ன ஆகும்? ஒருவேளை சூதர்கள் முழு இரவும் இப்போர்க்கதையை பாடினார்கள் என்றால் அப்பெயர்களை ஒன்றுடன் ஒன்று தொடுத்து நீண்ட மாலையாக ஆக்குவார்கள். கேட்டிருப்பவர்கள் கதை நடுவே எழுந்து சென்று மதுவருந்தியோ உறவினருடன் பேசியோ மீண்டு வந்து அமர்வதற்கான இடைப்பொழுதாக அது அமையும். எப்போது தன் உள்ளம் இத்தகைய கசப்புகளை திரட்டிக்கொண்டது என்று அவன் வியந்துகொண்டான். எப்போதுமே பெரிய தந்தை பீமசேனரில் இருக்கும் அந்தக் கசப்பை அவன் கூர்ந்து நோக்கி வந்தான். அதன் ஊற்றுமுகம் என்ன என்று வெவ்வேறு கதைகளிலிருந்து அவன் அறிந்திருந்தாலும்கூட எப்போதுமே அது அவனை ஒவ்வாமை நோக்கி தள்ளியது. சூழ்ந்திருக்கும் அனைத்தையும் கசந்து ஒருவர் எப்படி வாழமுடியும்? இங்குள நெறிகளை, உணர்வுகளை நம்பி ஈடுபடும்போதுதான் பொழுதுகள் பொருள் கொள்கின்றன. முற்றிலும் கசந்தவர் ஒவ்வொன்றையும் பொருளற்றது என்று அறிந்துகொண்டே இயற்றுகிறார். ஆகவே மேலும் பொருளின்மையை அடைகிறார். மேலும் கசப்பை திரட்டிக்கொள்கிறார். இப்போருக்குப் பின் பாரதவர்ஷத்தில் உளக்கசப்பின்றி எவரேனும் எஞ்சுவார்களா? பீமசேனரிடமிருந்து கசப்பின் விதை

பரவி எங்கும் முளைத்து சதுப்புச் செடிகள் என மண்டி பிறிதில்லாமல் மண்ணை மூடப்போகிறது.

குளம்படிகள் அணுகி வந்தன. சுற்றிவந்த காவலர்கள் அப்பால் நிற்க உடன்வந்த கானகக் காவலர்தலைவன் இரு இளவரசர்களை மட்டும் அழைத்தபடி அருகே வந்தான். அவர்களைப் பார்த்ததுமே சதானீகன் விந்தையானதோர் அறிமுக உணர்வை அடைந்தான். அவர்களை எவ்வகையிலும் முன்னால் பார்த்ததில்லை என்பது உறுதியாகத் தெரிந்தது. ஆனால் அவர்களின் உடலசைவுகளில் அவனறிந்த ஏதோ ஒன்று இருந்தது. அவர்கள் அருகணைந்து புரவியிலிருந்து இறங்கி தலைவணங்கினர். சதானீகன் “பாண்டவப் படைகளுக்குள் நல்வரவு, இளவரசர்களே” என்றான். அவர்களில் முதல்வன் அருகே வந்து முறைப்படி தலைவணங்கி “என் பெயர் ஷத்ரதேவன், இவன் என் இளையோன் ஷத்ரதர்மன். நாங்கள் பாஞ்சாலராகிய சிகண்டியின் மைந்தர்கள்” என்றான்.

சதானீகன் திகைப்புடன் “ஆம், அவ்வாறு ஓர் மணஉறவு அவருக்கு இருந்ததை அறிந்திருக்கிறேன். தசார்ணநாட்டரசர் ஹிரண்யவதனரின் மகள் தசார்ணையை பாஞ்சாலர் மணந்தார் என்று…” என்றான். “ஆம், அவர் என் அன்னையை ஆண் என வந்து மணத்தன்னேற்பில் வென்று அடைந்தார். அதை சூதர்கதைகளும் பாடுகின்றன” என்றான். சதானீகன் “நான் அதை கேட்டதில்லை. மெல்லிய நினைவாகவே அது என்னுள் உள்ளது” என்றான். ஷத்ரதேவன் “பாண்டவ மைந்தரே, தாங்கள் அறிந்திருப்பீர். எங்கள் குடி கருடனை வழிபடும் தொன்மையான மலைமக்களிலிருந்து எழுந்தது. பால்ஹிக இளவரசன் ஒருவனின் குருதிவழி கொண்டது. ஆயினும் எங்களுக்கு அரசர்கள் என்னும் அவையொப்புதல் இல்லை. என் அன்னையை அரசகுடியினர் மணக்கவேண்டும் என அவர் தந்தை ஹிரண்யவதனர் விழைந்தார். ஆகவே தன் மகளுக்கு மணத்தன்னேற்பு ஒருக்கினார்” என்றான்.

தகுதியான ஷத்ரியர்கள் வந்து அவளை கவர்ந்து செல்வார்கள் என்று அவர் எண்ணினார். முறையான மணநிகழ்வில் குலக்குறைவுடைய பெண்ணை மணக்க ஷத்ரியர்களுக்கு ஒப்புதல் இல்லை. மணத்தன்னேற்பு வீரத்திற்கான போட்டி என்பதனால் அதில் கலந்துகொண்டு பரிசென பெண்ணை வெல்லலாம். ஷத்ரியர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. மேற்குநிலத்தின் அரசர்கள் அனைவருமே வந்து அவையமர்ந்திருந்தனர். அப்போது அங்கு நீண்ட குழல்கொண்ட, பெண்மை கலந்த அசைவுகள் அமைந்த ஓர் இளவரசர் புரவியில் வந்தார். தன்னை தொல்புகழ் கொண்ட பாஞ்சால நாட்டின் இளவரசன் என்று கணையாழியைக் காட்டி நிறுவினார். அவைக்குள் நுழைந்து முதன்மை இருக்கையில் அமர்ந்தார்.

பாஞ்சால நாட்டின் இளவரசர்கள் எவரையுமே எங்கள் நாட்டில் எவரும் பார்த்ததில்லை. தன் பெயர் துருபதனாகிய சோமதத்தன் என்று அவர் சொன்னார். அவர் அவையிலிருக்கையில் பிறிதொருவர் அன்னையை வெல்ல முடியாதென்பது எவ்வகையிலோ அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆகவே பிற ஷத்ரிய மன்னர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அவரை தோற்கடிப்பது என்று விழிகளாலேயே முடிவெடுத்தனர். அந்த மணத்தன்னேற்புக்கான போட்டி என்பது விண்ணில் பறக்கும் பறவைப்பாவை ஒன்றை அம்பால் வீழ்த்துவது. அங்கிருந்த மன்னர்கள் எவராலும் அதை அடைய இயலவில்லை. அவர்கள் திகைத்து அமர்ந்திருக்க அவ்விளவரசர் எழுந்து அப்பறவையின் நிழல் தரையிலூர்வதை பார்த்தே அதை மும்முறை மீண்டும் மீண்டும் அம்புகளால் அறைந்து சிதறடித்து கீழே வீழ்த்தினார்.

இளவரசியை அவருக்கு அளிப்பதற்கு அரசர் எழுந்தபோது அவையிலிருந்த அரசர்கள் எழுந்து பூசலிட்டனர். நாணொலி எழுப்பி அவர்களை நோக்கி திரும்பிய அவ்விளவரசர் அவர்கள் என்னவென்று உணர்வதற்குள்ளாகவே ஐவரின் செவிகளிலிருந்த குண்டலங்களை அறுத்தெறிந்தார். அவருடைய நிகரற்ற திறனை அறிந்த அவர்கள் சொல்லடங்கி அவையில் அமர்ந்தனர். இளவரசியை அவர் மணம் கொண்டார். என் அன்னைக்கு அத்தகைய வீரனை அடைந்ததில் உளநிறைவு. அரசர் பாஞ்சாலத்துடன் மணவுறவு என்பதில் உவகை அடைந்தார். விரிவான மணக்கொண்டாட்டமும் உண்டாட்டும் நிகழ்ந்தது.

அன்றிரவு என் அன்னை மணமகளாக அணிபூண்டு கொடிமண்டபத்திற்கு சென்றார். அங்கு இளவரசராகிய சோமதத்தரும் வந்தார். மறுநாள் காலையில் என் அன்னை பெருந்துயருடன் அந்தக் கொடிமண்டபத்திலிருந்து வெளிவந்தார். தன் அன்னையை அகத்தறைக்கு வரவழைத்து தன்னை மணந்தவர் ஓர் ஆணிலி எனும் செய்தியை சொன்னார். அரசர் கொதித்தார். தன் அமைச்சருடன் சென்று சோமதத்தரை நோக்கி வாளேந்தி கூச்சலிட்டார். அவர் எந்தத் தயக்கமும் இல்லாமல் தான் ஆணிலி என்பதை ஒப்புக்கொண்டார். ஆணிலி என்று ஆகி பெருநோன்பொன்றை இயற்றுவதாகவும், ஆகவே பெண்ணுறவு இயல்வதல்ல என்றும் அவர் சொன்னார்.

“அவ்வாறென்றால் ஏன் என் மகளை வென்றீர்?” என்று அரசர் கேட்டார். “நான் குண்டலமிட்டு இளவரசனாகவேண்டும். பாஞ்சாலன் என்னும் பட்டம் எனக்கு அமையவேண்டும். அதன் பின்னரே ஷத்ரியன் ஆவேன். நான் களத்தில் சந்திக்கவிருக்கும் என் எதிரி ஷத்ரியனாகிய அரசகுடியினனிடம் மட்டுமே எதிர்நின்று போரிடுவார்” என்று அவ்விளவரசர் சொன்னார். “மேலும் நான் களம்படுகையில் எனக்கென விழிநீர் சிந்தவும் என் பெயர் சொல்லி இப்புவியில் வாழவும் எனக்கு மைந்தர்கள் தேவை. மைந்தரில்லாதவன் செல்லும் நரகங்களை நான் விரும்பவில்லை” என்று அவர் சொன்னார்.

“அதைவிட ஒன்றுண்டு, இந்நாள்வரை என் அன்னைக்கு ஆண்டுதோறும் ஆடி மாதம் கருநிலவு நாளில் நான் தவறாது நீர்க்கடன்கள் செய்து வருகிறேன். அவருடைய சொல்மைந்தன் நான். எனக்குப் பின் அவர் கைவிடப்படலாகாது. ஏழு தலைமுறைக்காலம் அவருக்கு அன்னமும் நீரும் இங்கிருந்து சென்றாகவேண்டும். எனக்குப் பின் தன் மூதாதையரை விண்ணேற்றும் பொறுப்பேற்கும் ஐந்து தலைமுறைகள் உருவாகவேண்டும். அதன்பொருட்டே உங்கள் மகளை மணந்தேன். அவர்கள் ஷத்ரியர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் என் அன்னை ஷத்ரியப்பெண். நானும் ஷத்ரியனே” என்று இளவரசர் சொன்னார்.

அவர் எவர் என்றும் அவர் கொண்ட வஞ்சினம் என்னவென்றும் தெரிந்த பின் அரசர் அதை ஏற்றுக்கொண்டார். அவர் அங்கிருக்கையிலேயே என் அன்னைக்கு கருவேற்பு முறைப்படி நாங்கள் இருவரும் பிறந்தோம். எங்கள் இருவருக்கும் ஏற்புத்தந்தையாக அவர் அமர்ந்து முதலன்னத்தை ஊட்டினார். எங்களிருவருக்கும் முதல் அம்பை எடுத்தளித்து களம் நிறுத்தியபின் எங்கள் நாட்டிலிருந்து தெற்கே சென்றார். அதன்பின் அவரைப்பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. நான் பாஞ்சாலராகிய சிகண்டியின் மைந்தனென்றே அறியப்படுகிறேன். என் குருதியடையாளமும் இனி வரும் என் குடியின் அடையாளமும் அதுவே.

இங்கு படை கொண்டெழுவதற்கு முன் அவர் எங்களுக்கு ஓர் ஓலை அனுப்பினார். நாங்கள் என்று இங்கு வரவேண்டும் என்பதை அவர் எங்களுக்கு அறிவிப்பார் என்றும் அதுவரை பொறுத்திருக்கவேண்டும் என்றும் ஆணையிட்டார். நாங்கள்

இங்கு எழுந்து வருகையில் எங்கள் துணைவியரின் கருப்பைகளில் மைந்தர்கள் பிறந்திருக்கவேண்டும் என்றார். நாங்கள் இருவரும் ஏழு மைந்தர்களின் தந்தையர். தந்தையின் ஓலைக்காக காத்திருந்தோம். பன்னிரு நாட்களுக்கு முன் எங்களுக்கு ஓலை வந்தது. இப்போரின் பத்தாவது நாள் நாங்கள் இங்கு வந்து சேரவேண்டுமென்று அதில் எங்களுக்கு ஆணை இடப்பட்டிருந்தது.

சதானீகன் பெருமூச்சுடன் "வருக, பாண்டவப் படை தங்களை எதிர்கொள்வதில் மகிழ்கிறது. ஆனால் இங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது என்னவென்று அறிந்திருப்பீர்கள். ஒன்பது நாட்களாக நிகர்ப்போர் இங்கு நிகழ்கிறது. இருதரப்பிலும் இணையான பேரழிவு. இப்போர் இங்ஙனம் சென்றால் எவர் எஞ்சுவார் என்றே சொல்ல முடியாது" என்றான். ஷத்ரதேவன் "இப்போரில் எந்தை பீஷ்மரை வெல்வார்" என்றான். சதானீகன் "அவரது வஞ்சினத்தை அறிவேன். ஆனால் இந்த ஒன்பது நாட்கள் இங்கு நிகழ்ந்த போர் நிறுவியது ஒன்றையே, பீஷ்மரை எதிர்க்கும் அம்பு எவரிடமும் இல்லை. பெரிய தந்தை அர்ஜுனரும் பெருவில்லவர்களான அவரது இரு மைந்தர்களும் போர்த்தொழில் தேர்ந்த சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் இணைந்து நின்று வில்லெடுத்தால்கூட பிதாமகரை வெல்ல இயலாது" என்றான்.

"எந்தை வெல்வார்" என்று ஷத்ரதேவன் சொன்னான். சதானீகன் அவனை கூர்ந்து பார்த்தான். "ஏனெனில் வெல்லும் பொருட்டே அவர் பிறந்திருக்கிறார். அதற்காகவே பெருநோன்பு இயற்றியிருக்கிறார். வழுவிலாப் பெருந்தவம் வென்றாகவேண்டுமென்பது புடவி நெறி" என்றான் ஷத்ரதேவன். "நன்று, அவ்வண்ணம் நிகழட்டும்" என்று சதானீகன் சொன்னான். ஷத்ரதேவன் "அவரை சந்தித்து தாள்பணிய விழைகிறோம், இளவரசே" என்றான். "வருக!" என்று சதானீகன் அவர்களை புரவிக்கு அழைத்துச்சென்றான். தானும் புரவியிலேறிக்கொண்டு காவலர்தலைவனுக்கு ஆணைகளை பிறப்பித்துவிட்டு படைகளின் நடுவே விரிந்த பலகைப் பாதையில் சென்றான்.

இருபுறமும் பாண்டவப் படைகள் மெல்ல அமைந்துகொண்டிருந்தன. அவர்களனைவரும் களியாட்ட நிலையிலிருப்பதை ஷத்ரதேவன் பார்த்தான். "அவர்கள் உவகையில் ஆழ்ந்திருக்கிறார்கள்" என்றான். "ஆம். அவ்வண்ணமொரு உவகை எந்த நம்பிக்கை இழப்பிலும் அதன் உச்சமென்று வந்தமையும். இனியொன்றுமில்லை, அனைத்தையுமே ஊழுக்கும் தெய்வங்களுக்கும் விட்டுவிட்டோம் என்று உணர்கையில் ஏற்படும் விடுதலை அது. இப்போர் முடிந்ததுமே இயல்பாக எழுந்த இந்த உவகைக்களியாட்டு எங்கள் அனைவரையுமே முதலில் வியப்படையச் செய்தது. பின்னர் கசப்பும் துயரமும் கொண்டோம். மெல்ல அதிலிருந்து நாங்களும் அந்தப் பொருளிலா உவகையை பெற்றுக்கொண்டோம். அங்கே அரசரின் அவைக்கூடத்திலும் மதுக்களியாட்டே நடந்துகொண்டிருக்கிறது" என்று சதானீகன் சொன்னான்.

ஆங்காங்கே பாண்டவப் படைவீரர்கள் சூழ்ந்தமர்ந்து தலைக்கவசங்களிலும் மார்புக்கவசங்களிலும் தட்டி பாடிக்கொண்டிருந்தனர். பலர் கைகளில் மதுக்கிண்ணங்களுடன் எழுந்து எழுகாலும் அமைகாலும் வைத்து நடனமிட்டனர். ஒருவரையொருவர் கூவி நகையாடிக்கொண்டனர். பிடித்துத்தள்ளியும் மேலே ஏறிக்குதித்தும் இளிவரலாடினர். அவர்களின் சொற்களை செவிகொண்ட ஷத்ரதேவன் திகைப்புடன் "அவர்கள் அரசரை களியாடுகிறார்கள்" என்றான். "ஆம். அரசரை, மூதாதையரை, தெய்வங்களை, அனைவரையுமே இளிவரல் செய்கிறார்கள். நின்று கேட்டால் அதிலிருக்கும் வசையும் கீழ்மையும் செவி

கூசச்செய்யும். பெரிதும் இழிவுசெய்யப்படுபவர்கள் ஈன்ற அன்னையர்" என்றான் சதானீகன்.

ஷத்ரதேவன் நகைத்து "எதிர்பார்க்கக்கூடியதுதான்" என்றான். சதானீகன் திரும்பி அவனை பார்த்தான். "இப்போது தெரிகிறது உங்களிலிருக்கும் தெரிந்த கூறு என்னவென்று. உங்கள் உடலில், அசைவுகளில் எங்கும் பாஞ்சாலராகிய சிகண்டி இல்லை. ஆனால் உங்கள் விழிக்கூரில், புன்னகையில் அவர் இருக்கிறார்" என்றான். "ஆம், அவருடைய சில கூறுகள் எங்களிடம் இருப்பதாக சொல்லப்படுவதுண்டு" என்று ஷத்ரதேவன் சொன்னான். "என்னைவிட என் இளையவனாகிய இவன் மேலும் அவரை போன்றவன்." ஷத்ரதர்மன் புன்னகைத்தான். "அவர் பேசுவதில்லையா?" என்று சதானீகன் கேட்டான். ஷத்ரதர்மன் "தேவைக்கு மட்டும்" என்றபின் "மானுடருக்கு பேசுவதற்கான தேவை மிகக் குறைவே" என்றான்.

இருபுறமும் உண்டாட்டும் கூத்துமாக ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த பாண்டவப் படைகளை அவர்கள் கடந்து சென்றனர். ஒருவன் யுதிஷ்டிரரைப்போல மரவுரி சூடி, தோளில் மரவுரியை சால்வையாக அணிந்து, உடைந்த வேலொன்றை தொடைகளால் கவ்வி ஆண்குறிபோல் நீட்டி, அதை அசைத்து நடனமிட்டான். சூழ்ந்திருந்தவர்கள் நகைக்க நால்வர் கீழமர்ந்து அந்த ஆண்குறியை கைகூப்பி வணங்கினர். ஒருவன் திரௌபதிபோல இடை ஒசித்து கையில் மரவுரிச் சால்வையொன்றை மாலையாகக்கொண்டு வந்தான். அதை அந்த வேலுக்கு அணிவித்து தொழுதான். அவன் மரவுரியை ஐந்துபுரிக்கூந்தலாக தலையில் கட்டியிருந்தான். சூழ்ந்திருந்தவர்கள் வெடித்து நகைத்தனர். யுதிஷ்டிரராக நடித்தவன் அக்கணமே அந்த வேலை எடுத்து ஊன்றுகோலாக்கி முதியவர்போல கைகள் நடுங்க நடந்து அப்பால் சென்றான். வெடிச்சிரிப்பு எழ பலர் கவசங்களையும் மரவுரிகளையும் வானில் தூக்கி எறிந்து கூச்சலிட்டனர்.

சதானீகன் "நாம் நோக்குவதை அவர்கள் அறிவார்கள். நின்று நோக்கினால் இவ்விளிவரல் மேலும் பல மடங்கு பெருகும்" என்றான். ஷத்ரதேவன் "போர்க்களத்தில் இறக்கக்கூடும் என்பதனாலேயே எல்லா உரிமைகளையும் பெற்றவர்களாகவும் அனைத்துத் தடைகளையும் மீறியவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். போர் அளிக்கும் விடுதலை அது என்று நூல்களில் படித்திருக்கிறேன்" என்றான். சதானீகன் "ஆனால் போருக்குப் பின் அவர்கள் இந்தக் கீழ்மைகளை நினைவிலிருந்து முற்றாக அகற்றிவிடுவார்கள். எஞ்சியவர்கள் தாங்கள் இயற்றிய வீரத்தையும் வெற்றியையும் மட்டுமே சொல்லிக்கொண்டிருப்பார்கள். இறப்புகள்கூட நினைவிலிருந்து அகன்றுவிடும். களவீரம் மட்டுமே எஞ்சியிருக்கும். ஏனெனில் அதுவே மேலும் போரிடுவதற்கான ஊக்கத்தை அளிப்பது. ஆகவே சொல்லிச் சொல்லி நினைவில் பெருக்கி நிறுத்தப்பட வேண்டியது" என்றான்.

சிகண்டியின் குடிலை அவர்கள் அணுகினர். அது இருண்டுகிடந்தது. அங்கே இருந்த சிகண்டியின் காவலனாகிய வசுதன் அவர்களை அணுகி தலைவணங்கினான். "பாஞ்சாலரை பார்க்கவேண்டும். அவர் மைந்தர்கள் இவர்கள்" என்றான் சதானீகன். அவன் வியப்பில்லாமல் அவர்களை நோக்கிவிட்டு "அவர் ஏழாவது எரிகாட்டில் இருக்கிறார். இன்று அங்குதான் பதினெட்டு பெருஞ்சிதைகள் ஒருக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து அவர் பிலங்களுக்கு செல்வார். புலரிக்கு சற்று முன்னரே இங்கு மீள்வார்" என்றான். சதானீகன் ஷத்ரதேவனிடம் "அவர் துயில்வதே இல்லை. இரவெலாம் இறந்தோரை விண்ணுக்கும் மண்ணுக்கும் செலுத்தும் பணியை அவர் இயற்றுகிறார். புலர்ந்ததும் படைக்கலமேந்தி களத்திற்கு வருகிறார்" என்றான்.

“ஆம், அவர் துயில்வதில்லை என்று அன்னையும் சொல்லியிருக்கிறார். எங்கள் நாட்டிலிருந்த ஏழு ஆண்டுகளில் ஒருமுறைகூட அவர் படுத்து அன்னை பார்த்ததில்லை. துயிலாதார் என்னும் சொல்லே எங்கள் நாட்டில் அவரைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது” என்றான் ஷத்ரதேவன். வசுதன் அவர்களை வழிநடத்தி அழைத்துச்சென்றான். அவர்கள் அவனை புரவியில் தொடர்ந்தனர். வசுதன் சிகண்டியைப்போலவே சொல்லவிந்தவனாக, மானுடரை நோக்கா ஒளிகொண்ட கண்கள் கொண்டவனாக இருந்தான். ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குரிய ஏவலர் எப்படி அமைகிறார்கள் என சதானீகன் வியந்தான்.

தெற்குக்காட்டில் நெடுந்தொலைவிலேயே சிதைநெருப்பு வானில் எழுந்து நின்றாடுவதை காண முடிந்தது. அப்பகுதியில் காட்டெரி எழுந்ததுபோல் மரநிழல்கள் வானளாவ எழுந்து கூத்தாடின. நெருப்பின் அருகே நின்றிருந்தவர்களின் நிழல்களும் பூதவடிவுகளாக எழுந்து கைவீசி கால்வைத்து வான் நிறைத்து அசைந்தன. ஒரு நிழலைப் பார்த்ததும் ஷத்ரதேவன் “தந்தை!” என்றான். திடுக்கிட்டு திரும்பிப்பார்த்த சதானீகன் “எங்கே?” என்றான். “அதோ!” என்று அவன் மீண்டும் சுட்டிக்காட்ட சதானீகன் ஒருகணத்துக்குப் பின் அது சிகண்டியின் நிழல்தான் என்று கண்டுகொண்டான். முகில்களை தொடுமளவுக்கு பேருருக்கொண்டு அசைந்து மறைந்தது அது.

ஒருகண மின்னலில் தந்தையின் பெருநிழலை எப்படி அவன் அறிந்துகொள்கிறான் என வியந்து திரும்பிப்பார்த்தான். ஷத்ரதேவன் “நான் எப்போதும் அவரையே எண்ணிக்கொண்டிருக்கிறேன்” என்றான். “அவரை நீங்கள் பார்த்து எவ்வளவு ஆண்டுகளாகின்றன?” என்று சதானீகன் கேட்டான். “என் இளையவனின் ஐந்தாம் அகவையில் அம்பெடுத்து அளிக்கும் சடங்கு முடிந்த மறுநாள் அவர் எங்கள் நாட்டிலிருந்து கிளம்பிச்சென்றார். அப்போது எனக்கு ஆறு அகவை. அதன் பிறகு பார்த்ததில்லை” என்றான் ஷத்ரதேவன். “இன்று அவருடைய தோற்றம் முற்றாக மாறியிருக்கிறது. நீங்கள் பார்த்த உடல் அல்ல” என்று சதானீகன் சொன்னான். “ஆனால் நிழல்களில் தெரிவது வெறும் உடல் மட்டுமல்ல” என்றான் ஷத்ரதேவன்.

அவர்கள் தென்காட்டுக்குள் புகுந்தபோது பாதையின் இருமருங்கும் உடல்கள் நெருக்கமாக அடுக்கப்பட்டிருந்தன. உடல்களாலான இருபெரும்பாதைகள் இணையாக வந்துகொண்டிருந்தன என அவன் நினைத்தான். அவற்றின்மேல் தெய்வங்களின் தேர்கள் ஊர்ந்து செல்லக்கூடும். வியப்பு அடங்கி நோக்கு சலித்தபின்னரும் உடல்களின் நீள்நிரை முடிவிலாது வந்துகொண்டிருந்தது. ஷத்ரதேவன் “ஆம், பேரிழப்பே!” என்றான். “ஒவ்வொரு நாளும்” என்று சதானீகன் சொன்னான். “இதைப் போன்று இங்கே பதினெட்டு சிதைநிலைகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் இதைப்போல் நிரைகொண்டு நீண்டிருக்கின்றன உடல்கள். இடுகாடுகள் வேறு. நிஷாதர்களும் கிராதர்களும் அரக்கர்களும் அங்கு புதைக்கப்படுகிறார்கள். கபந்தனின் நிறையாத பெருவயிறென பிலம் அவர்களை ஏற்றுக்கொண்டே இருக்கிறது.”

ஷத்ரதேவன் “இந்த இடுகாடுகளையும் எரிகாடுகளையும் நிகழ்த்த ஏற்றவர் எந்தை மட்டுமே. பிறர் இங்கு உளம் கலங்கிவிடக்கூடும்” என்றான். சதானீகன் “ஏன்?” என்றான். “பிறர் தங்களை அறியாமலேயே இவற்றையெல்லாம் சொற்களாக மாற்ற முயன்றுகொண்டே இருப்பார்கள். இவை சொற்களாக ஆகா என்னும் உண்மையை சென்று முட்டி சித்தம் கலங்குவார்கள். எந்தை முற்றாக அகச்சொல் அடங்கியவர் என்று அன்னை சொல்லியிருக்கிறார். அவர் விழிகளும் நாவும் உள்ளிருக்கும் அனலும் மட்டுமே கொண்டவர்.” சதானீகன் “அவரை எப்படி அறிகிறீர்?” என்றான். “இவன் அவரைப்போன்றவன்” என்றான் ஷத்ரதேவன்.

அணுகுந்தோறும் சிதைகள் பெரும் தழல்கோபுரங்களாக மாறின. அருகே நின்றிருந்தவர்கள் மிகச் சிறியவர்களாக சுருங்கி கரிய நிழல்களுடன் அசைந்தனர். புரவிகளை நிறுத்திவிட்டு அவர்கள் இறங்கி நடந்து சிதையருகே சென்றனர். சிறிய சகடங்கள் கொண்ட வண்டிகளில் குவியல்களாக ஏற்றப்பட்ட உடல்கள் எருதுகளாலும் அத்திரிகளாலும் கொண்டு செல்லப்பட்டு மேட்டிலிருந்து சிதைமேல் கொட்டப்பட்டன. அவற்றில் உடல் உருகி எரிந்த ஊன்நெய்யின் அனல் இரண்டாள் உயரத்திற்கு நீர்போல நீலமாக அலைகொண்டது. அதற்கு மேல் செந்தழல் நின்றாடியது. செந்தழல் சூடிய கரிய புகைக்குழல்கற்றைகள் வானில் உதறிக்கொண்டன. மாபெரும் பட்டாடை ஒன்றை விண்ணிலிருந்து பேருருவத் தெய்வங்களின் கைகள் அள்ளி உதறுவதுபோல் என்று சதானீகன் எண்ணிக்கொண்டான்.

அவர்களை தொலைவிலேயே பார்த்துவிட்ட சிகண்டி அணுகி வந்தார். சதானீகன் முன்னால் சென்று வணங்கி “பாஞ்சாலரே, தங்கள் மைந்தர்கள் தங்கள் ஆணைப்படி பார்க்க வந்துள்ளார்கள்” என்றான். சிகண்டி அவர்களை அணுகும்படி கைகாட்டினார். ஷத்ரதேவனும் ஷத்ரதர்மனும் சென்று சிகண்டியின் கால்களைப் பணிந்து வணங்கினர். அவர் அவர்களை அள்ளி தோளுடன் சேர்த்துக்கொள்வார் என்று சதானீகன் எதிர்பார்த்தான். ஆனால் சுட்டுவிரலால் அவர்களிருவரின் தலையைத் தொட்டு “வெல்க! நீடு வாழ்க!” என்று மட்டும் அவர் முணுமுணுத்தார்.

ஷத்ரதேவன் எழுந்து வணங்கி “எங்கள் பணி என்ன, தந்தையே?” என்றான். “போரில் களம் நில்லுங்கள். நாளை நிகழும் போரில் என் இலக்கை நான் எய்துவேன். அப்போது நீங்களிருவரும் என் உடன்நிற்க வேண்டும்” என்று சிகண்டி சொன்னார்.

சிகண்டியின் உடல் மெல்ல நடுங்கிக்கொண்டிருப்பதை ஷத்ரதேவன் பார்த்தான். அது குளிரினாலா என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. சிதைகளின் நெருப்பிலிருந்து விலகி வரும்தோறும் தெற்கிலிருந்து வீசிய மழையீரம் கலந்த காற்று ஆடைகளை பறக்கவைத்து குளிரை அள்ளிப் பொழிந்தது. சிகண்டியின் உடல் மிக மெலிந்தது. அடுக்கி வைக்கப்பட்ட சுள்ளிகள்போல விலாஎலும்பும், புறாக்கூண்டுபோல உந்தி எழுந்த நெஞ்சும், ஒட்டி மடிந்த வயிறும், கைப்பிடிக்குள் அடங்குவது போன்ற இடையும் கொண்டது. ஆகவே நீண்ட கைகளை வீசி அவர் நடப்பது வெட்டுக்கிளி தாவிச் செல்வதுபோல் இருந்தது. தசையின்மை அவரை மேலும் அதிக குளிரை உணரச் செய்யக்கூடும்.

ஆனால் புரவியில் அவர் ஏறிக்கொண்ட விசையை, புரவி முழுவிசையில் பாய்ந்து சென்றபோதும்கூட சற்றும் மூச்சிளைக்காமல் இருந்த உறுதியை பார்த்தபின் அது குளிரினால் அல்ல என்று அவன் அறிந்தான். அவர் உள்ளூர பதறிக்கொண்டிருக்கிறார். இன்று அவர் அதுகாறும் மேற்கொண்ட தவம் நிறைவுறப் போகிறது. ஆம், இன்று. இப்போது நள்ளிரவு கடந்துவிட்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் விடிவெள்ளி எழுந்துவிடும். இரவு எப்போது காலையாகிறது? ஏதோ ஒரு கணத்தில் இரவிலிருந்து உள்ளம் விடுபட்டு காலை என உணரத்தொடங்குகிறது. அக்கணத்தில் குளிர் மாறுபடுகிறது. வானின் விண்மீன்களின் அமைப்பு மெல்ல தன்னை மாற்றிக்கொள்கிறது. காற்றில் எழும் மணங்கள் வேறு வகையில் கலவை கொள்கின்றன.

எங்கோ கீழ்வானுக்கு அடியில் புலரி எழுந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் புலரியின் அறிவிப்பாளராக விண்ணிலிருந்து விழியை முற்றாக மூடும் கருக்கிருள் வந்து நிறையும். கையால் அள்ளி எடுத்துவிடக்கூடிய பிசின் போன்ற இருள். அதற்குள் விண்மீன்கள் அரக்கில் ஒட்டியிருக்கும் மின்மினிகள்போல அதிர்ந்துகொண்டிருக்கும். விடிவெள்ளி முதலில் எழுந்து வரும். நாணுவதுபோல தயங்கி. வான்வெள்ளமொன்றின் விளிம்பில் மிதந்து மிதந்து மேலெழுவதுபோல. விடிவெள்ளியை பறவைகள் உணர்கின்றன. காட்டுக்குள்ளிருந்து முதற்குரல் எழுப்பும் கரிச்சான் “புலரி! ஆம், புலரி!” என அறிவிக்கிறது.

தந்தை எப்படி உணர்வார் என்று அவனால் அறிந்துகொள்ள இயன்றது. பிறந்த நாள் முதல் ஒவ்வொரு கணமுமென காத்திருக்கும் ஒரு தருணம் அணைகையில் வாழ்க்கை ஒட்டுமொத்தமாகவே பொருளோ பொருளின்மையோ கொள்கிறது. சிகண்டி அவர்களை நோக்கி “நாம் இளைய யாதவரின் குடிலை நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம். இன்று சிதையொருக்கப் பணிகள் முடிந்தபின் என்னை அங்கு வரச்சொல்லியிருக்கிறார்” என்றார். ஷத்ரதேவன் “நாங்களும் உடன் வரலாமா?” என்று கேட்டான். “நீங்கள் உடனிருக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வரச்சொன்னேன்” என்று சிகண்டி சொன்னார். ஷத்ரதேவன் மீண்டும் ஏதோ கேட்க எண்ணியபின் சொற்களை அடக்கிக்கொண்டான்.

அவர்கள் ஆழ்ந்து துயின்றுகொண்டிருந்த படைகளினூடாக புரவிக்குளம்படிகள் ஒலிக்க இளைய யாதவரின் குடில் நோக்கி சென்றனர். பகலுயிர்கள் அனைத்தும் துயிலும் இப்பொழுதில் அவர் விழித்திருப்பாரா என்று ஷத்ரதேவன் எண்ணினான். ஆனால் அவரும் துயிலற்றவராகவே இருக்கவேண்டும் என்று மறு எண்ணம் எழுந்தது. பார்த்தர் துயில்வதே இல்லை என்று அவன் அறிந்திருந்தான். இளைய யாதவர் எப்போதும் துயின்றுகொண்டிருப்பவர் என்று இளிவரல் சூதனொருவன் பாடி கேட்டிருந்தான். அவரை நோக்காதவர்களுக்குக்கூட அவருடைய முகம் அகவிழியில் உள்ளது. வரைந்தெடுத்து அரங்குக்குக் கொண்டுவந்த பலநூறு கூத்தர்களின் முகங்களினூடாக. அது எப்போதும் காதல் நிறைந்தது. எதையும் நோக்காதது என்றும் அனைத்தையும் அறிந்தது என்றும் ஒரேபோலத் தோன்றும் தன்மைகொண்டது.

தொலைவில் காட்டின் உள்ளடுக்குகள் வரை ஊடுருவிப் பரந்திருந்த மருத்துவநிலைகளில் பந்தங்களின் செவ்வெளிச்சம் வானில் எழுந்து இளம்பனியில் செந்நிறத் திரைச்சீலைபோல தெரிந்தது. அங்கிருந்து ஓலங்களும் அலறல்களும் அழுகை ஓசைகளும் கேட்டுக்கொண்டிருந்தன. இருபுறமும் வந்துகொண்டிருந்த படைநிரைகள் ஆழ்துயிலில் அங்கு இல்லாதவைபோல தோன்றின. மீன்நெய்ப் பந்தங்கள் மட்டும் புலரிக்காற்றில் மெல்லிய எரியதிர்வுடன் புகை அலைத்துக்கொண்டிருந்தன. அவர்களுடைய குளம்படியோசை படைகளின் அமைப்புக்கேற்ப எதிரொலி மாறுபட்டு எழுந்துகொண்டிருந்தது.

இளைய யாதவரின் குடில்முற்றத்தில் புரவியை நிறுத்தி இறங்கிய சிகண்டி ஷத்ரதேவனை நோக்கி திரும்பி “இன்றைய சொற்கள் ஒவ்வொன்றும் உங்கள் நினைவில் நிற்கவேண்டும்” என்றார். ஷத்ரதேவன் “ஆம்” என்றான். சிகண்டி “அவரை கூர்ந்து நோக்கவேண்டாம், நோக்கி அறியத்தக்கவரல்ல” என்றபின் நடந்து குடில் வாயிலை நோக்கி சென்றார். அங்கே நின்றிருந்த நேமிதரன் தலைவணங்கி “தங்களுக்காக காத்திருக்கிறார்” என்றான். “என் மைந்தர் உடன்வர விரும்புகிறேன் என்று அவரிடம் உரையுங்கள்” என்றார் சிகண்டி. “மைந்தருடன் நீங்கள் வருவீர்கள்

என்றும் மூவரையும் உள்ளே அனுப்பும்படியும்தான் எனக்கு ஆணை” என்றான் நேமிதரன்.

சிகண்டி தலைவணங்கிவிட்டு குடில் வாயிலை அடைந்து மூடியிருந்த படல் கதவை மெல்ல திறந்து உள்ளே சென்றார். ஷத்ரதேவன் நேமிதரனிடம் புன்னகையுடன் தலைவணங்கிவிட்டு தந்தையைத் தொடர்ந்து அறைக்குள் நுழைந்தான். அவனைத் தொடர்ந்த ஷத்ரதர்மன் நிழல்போல் ஓசையற்றவனாக இருந்தான். அறைக்குள் கூரையிலிருந்து தொங்கிய பீதர் நாட்டு பளிங்கு விளக்கின் ஒளி நிறைந்திருந்தது. தரையில் விரிக்கப்பட்டிருந்த மரவுரியில் இளைய யாதவர் அமர்ந்திருந்தார். அவருக்கு வலப்பக்கமாக இளைய பாண்டவன் அர்ஜுனன் அமர்ந்திருந்தான். அவர்களுக்கு முன் மான்தோல் விரிக்கப்பட்ட மணையில் இன்நீர் புகையெழும் பீதர் நாட்டு வெண்களிமண் கலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இளைய யாதவருக்கு வலப்பக்கம் பேழையில் ஓலையும் எழுத்தாணியும் இருந்தன.

சிகண்டி உள்ளே புகுந்து இருவரையும் தலைகுனிந்து வணங்கிவிட்டு திரும்பி தன் மைந்தரிடம் அவர்களை வணங்கும்படி கைகாட்டினார். ஷத்ரதேவன் முன்னால் சென்று உடல் நிலம்பட விழுந்து இளைய யாதவரை வணங்கினான். எழுந்து அர்ஜுனனையும் வணங்கிவிட்டு தந்தைக்குப் பின்னால் சென்று நின்றான். இளையவன் வணங்கும்போதும் இளைய யாதவர் கைதூக்கி செய்கையாலேயே வாழ்த்து உரைத்தார். அவர்கள் அமரும்படி அர்ஜுனன் கைகாட்டினான். அவர்கள் அமர்ந்ததும் இளைய யாதவர் எந்த முகமனும் இல்லாது “நாங்கள் நாளைய போரை முடிவெடுத்துவிட்டோம்” என்றார். சிகண்டி தலையசைத்தார்.

“பாஞ்சாலரே, தங்களை அவர் போரில் எதிர்த்து நிற்கமாட்டார் என்பது தெளிவாகிவிட்டது. அப்பொருள் வரும் ஒரு சொற்குறிப்பை அவர் முன்னர் நமக்கு அளித்துமிருக்கிறார்” என்றார் இளைய யாதவர். “சிம்மம் உண்ணாத இரை நீங்களே.” சிகண்டி புன்னகைத்தார். “ஆகவே நாளை நீங்கள் அர்ஜுனனின் தேரில் அவனுக்கு முன்னால் வில்லுடன் நின்றிருங்கள்” என்றார் இளைய யாதவர். சிகண்டி தலையசைத்தார். அர்ஜுனன் “உங்கள் அம்புகளும் அவர் நெஞ்சை துளைக்கட்டும். உங்கள் அம்பால் அவர் வீழ்ந்தார் என்றே இருக்கட்டும்” என்றான். சிகண்டி “இல்லை, நான் என் அம்புகளால் அவரை வீழ்த்தினாலும் அவர் உங்களால் வீழ்த்தப்பட்டதாகவே சூதர்களால் பாடப்படும். உங்கள் தேரிலிருந்து நான் இயற்றும் இப்போர் எந்நிலையிலும் உங்கள் போரே” என்றார்.

“உங்கள் வஞ்சினம் நிறைவேற வேண்டுமல்லவா?” என்று அர்ஜுனன் சொன்னான். “ஆம், அதை என் அன்னைமட்டும் அறிந்தால் போதும்” என்றார் சிகண்டி. “அவரை எதிர்த்து கொல்வேன் என்று என் அன்னைக்கு சொல்லளித்தேன். அது நாளை நிறைவேறும். என்னுடைய அம்புகளும் அவருடலில் இருக்கும். தன் உயிர் குடிப்பது எந்த அம்பென்பதை அவரே முடிவு செய்வார். அது என் அம்பாகவே இருக்கும்” என்றார் சிகண்டி. இளைய யாதவர் புன்னகையுடன் “நாம் முன்னரே இறந்துவிட்டவரை மீண்டும் கொல்லப்போகிறோம் என்பதை நினைவுகூர்க! நாம் செய்யப்போவது அவருக்கு செய்யும் நலன் மட்டுமே. நேற்றே அவர் இப்போரின் இறுதியை கண்டுவிட்டார். இன்று களத்தில் நமக்காக காத்திருப்பார்” என்றார்.

அர்ஜுனன் பெருமூச்சுவிட்டான். சிகண்டி புன்னகைத்து “இளைய பாண்டவர் ஒவ்வாமை கொண்டிருக்கிறார்” என்றார். அர்ஜுனன் “ஆம், இரவு முழுக்க இளைய யாதவரின் சொற்களை கேட்டுக்கொண்டிருந்தேன். இப்போர் எவ்வகையிலேனும் முடிவடைய வேண்டுமெனில் பிதாமகர் பீஷ்மர் களத்தில் வீழ்த்தப்பட வேண்டும் என்றார். அதற்கு இந்த வழியின்றி வேறேதுமில்லை என்றும் இவ்வழியையே அவரே

நமக்கு சுட்டிக்காட்டியுமிருக்கிறார் என்றும் மீளமீள சொன்னார். ஆகவே இது நம் கடன் என்றார். அவர் சொல்வது அனைத்தையும் என் உள்ளம் ஏற்றுக்கொள்கிறது. அதற்கு அடியில் ஒன்று நிலையற்று தவிக்கிறது. நான் சிற்றகவையிலிருந்து எண்ணியிருந்த போர் இதுவல்ல" என்றான்.

சிகண்டி "எவரும் இத்தகையதோர் போரை எண்ணியிருக்க மாட்டார்கள்" என்றார். அர்ஜுனன் "இது ஒரு தொடக்கம். இத்தகைய தொடக்கங்களை எப்போதும் நம்முள் இருக்கும் நுண்தெய்வங்கள் எச்சரிக்கின்றன. தன் வாழ்வை முற்றாகவே மாற்றிவிடும் பிறழ்வுகளை அந்த தெய்வத்தின் எதிர்ப்பை மீறியே மானுடர் செய்கிறார்கள். பிறகு எப்போதும் அந்த தெய்வத்தின் குரலை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நீர்த்துளிவிழும் ஒலியென முதலில் கேட்கும் அது பெருகிப்பெருகி இடியோசைபோல ஆகிறது" என்றான். சிகண்டி திரும்பி இளைய யாதவரை பார்க்க அவர் மாறா புன்னகையுடன் இருந்தார். "உங்களுள் பிறிதொரு தெய்வமிருப்பது விந்தையாக இருக்கிறது, இளைய பாண்டவரே" என்றார் சிகண்டி.

"ஆம், என்னுள்ளிருப்பது பாண்டுவாக இருக்கலாம். பிரதீபராகவோ விசித்திரவீரியராகவோ குருவாகவோ ஹஸ்தியாகவோ யயாதியாகவோ இருக்கலாம். அறியேன்" என்றான் அர்ஜுனன். "ஆனால் உறுதியாக அது இந்திரனல்ல" என்று சிகண்டி சொன்னார். "இந்திரன் தன் வெற்றிகள் அனைத்தையுமே பிறர் கொண்டுள்ள பிறழ்வுகளை பயன்படுத்திக்கொண்டோ அல்லது தான் பிறழ்ந்தோதான் ஈட்டியிருக்கிறார். வெற்றியால்தான் அவர் இந்திரனாக நிலைகொள்கிறாரே ஒழிய நெறியால் அல்ல." அர்ஜுனன் "நான் பேசவிரும்பவில்லை. பேசும்தோறும் இது மேலும் பிழையென்று தோன்றுகிறது" என்றான்.

ஆனால் அவனால் பேசாமலும் இருக்க முடியவில்லை. "இன்று சற்று முன் நானும் இளைய யாதவரும் வெளியே நின்று விண்மீன்களை நோக்கி பேசிக்கொண்டிருந்தோம். இது ஊழென்றும், இதுவன்றி வேறு வழியில்லையென்றும், இதனூடாக என்னை இழக்கிறேன் எனினும் என் குடிக்கும் பாரதவர்ஷத்திற்கும் பெரும் கொடையை அளிக்கிறேன் என்றும், மண்ணில் புதுவேதம் நிலைகொள்ள இச்சிறு பிழையினூடாக என் ஆத்மாவை பலிகொடுப்பேனெனினும்கூட அது பெருஞ்செயலே என்றும் அவர் சொன்னார். ஆம், நான் ஏற்கிறேன், என்னை முழுதளிக்கிறேன், நாளை களத்தில் அவரை கொல்கிறேன் என்று சொல்லளித்துவிட்டு திரும்புகையில் என்னுள்ளிருந்து ஓர் எண்ணம் எழுந்து அலைத்தது. இங்கிருந்து இப்படியே ஓடிவிடு, திரும்பி உன் சிற்றில்களுக்கு செல், நீ அலைந்து திரிந்த தொலைதூர நிலங்களுக்கு சென்றுவிடு, இன்மையென்றாகி மறைந்து விடு என்று அது ஆணையிட்டது. ஒருகணம் அங்கிருந்து கிளம்பியிருப்பேன். மறுகணத்தில் என்னைத் தடுத்து இங்கு கொண்டு வந்தது எதுவோ அதுவே நாளை அப்போரை நிகழ்த்தவிருக்கிறது."

சிகண்டி "எப்போதும் இந்த இருநிலையின் வாள்முனையிலேயே இருந்துகொண்டிருக்கிறீர்" என்று புன்னகைத்தார். "அலைவில்லாத அமைவு என்பது அறியாமையிலோ தீமையிலோ ஆனாலும் ஒரு நல்லூழ்" என்று அர்ஜுனன் சொன்னான். சிகண்டி மீண்டும் இளைய யாதவரை பார்த்தார். அங்கு நிகழ்ந்த சொல்லாடல்களுக்கு தொடர்பே அற்றவர்போல் அவர் புன்னகைத்துக்கொண்டிருந்தார். சிகண்டி இளைய யாதவரிடம் "என் மைந்தர் இங்கு அமர்ந்து இச்சொற்களை கேட்கவேண்டுமென்று விரும்பினேன். பிறிதொரு நாள் அவர்கள் எண்ணிக்கொள்ளும்போது இங்கு நிகழ்ந்தது என்ன என்று அவர்கள் அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் பெருவீரர்களின் வீழ்ச்சியை ஊழின்

சூழ்ச்சியென்றும் சிறுமானுடரின் வஞ்சமென்றும் சொல்லில் விரித்துரைக்கும் வழக்கம் சூதர்களுக்குண்டு. இது எவர் சொல்லில் இருந்து எழுந்தது என்று அவர்கள் அறிந்திருக்கவேண்டும்” என்றார்.

இளைய யாதவர் ஷத்ரதேவனை நோக்கி “என் சொல்லில் இருந்து என அறிக! இங்கிருக்கும் அனைத்து நெறிகளும் என்னுடையவையே. அனைத்து சூழ்ச்சிகளும் நானே” என்றார். ஷத்ரதேவன் ஏனென்று அறியாமல் மெய்ப்பு கொண்டான். பெருமூச்சுவிடுபவன்போல ஓர் மெய்ப்பாட்டை காட்டிய அர்ஜுனன் பின்னர் மெல்ல தளர்ந்து “நாம் சற்று நேரம் ஓய்வெடுக்கலாம் என்று தோன்றுகிறது” என்றான். “யுதிஷ்டிரரையும் பீமசேனரையும் இளையோரையும் இங்கு வரச்சொல்லியிருக்கிறேன்” என்றார் இளைய யாதவர். “இங்கா?” என்று அர்ஜுனன் கேட்டான். “ஆம், இங்கு நாம் மட்டுமே இதை முடிவெடுப்போம். படைசூழ் அவையில் நாம் எதையுமே பேசவேண்டியதில்லை” என்றார் இளைய யாதவர்.

“இங்கு நாமே முடிவெடுத்தால் போதும். மூத்தவர் எதற்கு இதில்?” என்று அர்ஜுனன் சொன்னான். “அவர் அறிந்திருக்கவேண்டும்” என்றார் இளைய யாதவர். “அவர் ஒருபோதும் நெறிமீறலை ஒப்புக்கொள்ளமாட்டார்” என்று அர்ஜுனன் சொன்னான். “அவர் வாழ்நாளெல்லாம் நெறி ஆய்ந்தவர். ஆகவே நெறிமீறல்களின் வாய்ப்புகள் அனைத்தையும் அறிந்திருப்பார்” என்று இளைய யாதவர் சொன்னார். அவர் சொல்வது புரியாததுபோல அர்ஜுனன் பார்த்தான். “அவர் ஏற்கவில்லையென்றாலும் அவர் அறிந்தாகவேண்டும்.” “பீமசேனர் ஏற்பார் என தோன்றுகிறது. அவர் கடந்துசென்றுவிட்டார்” என்று அர்ஜுனன் சொன்னான். “அவர் ஏற்றுக்கொண்டதனால் ஒருவேளை மூத்தவரும் ஏற்கக்கூடும். ஆனால் அவர்கள் இருவரிடமும் இச்செய்தியை இப்போது சொல்லவேண்டுமா என்று எனக்கு ஐயமாக இருக்கிறது” என்றான். “பார்ப்போம்” என்று இளைய யாதவர் சொன்னார்.

அதன்பின் அவர்கள் சொல்லவிந்து காத்திருந்தனர். இளைய யாதவரின் நிழல் சுவரில் எழுந்திருப்பதை நோக்கியபடி ஷத்ரதேவன் அமர்ந்திருந்தான். நேமிதரன் உள்ளே வந்து “அரசரும் இளையவர்களும்” என்றான். “வரச்சொல்க!” என்று இளைய யாதவர் கைகாட்டினார். வெளியே இருந்து யுதிஷ்டிரரும் பீமசேனனும் கைகூப்பியபடி உள்ளே வந்தனர். அவர்கள் வணங்கி அமர்ந்த பின்னர் நகுலனும் சகதேவனும் உள்ளே வந்து இளைய யாதவரை வணங்கிவிட்டு அவர்களிருவருக்கும் பின்னால் நின்றனர். யுதிஷ்டிரர் நீர் அருந்தும் புரவி என பெருமூச்சுவிட்டார்.

இளைய யாதவர் “இங்கு நாங்கள் பேசி முடிவெடுத்த ஒன்றை உங்களிடம் சொல்லலாம் என்று அழைத்தோம்” என்றார். “இந்த பின்னிரவுப்பொழுதில் நீ அழைப்பாய் என்றால் அதற்கு பெரும் பொருளுள்ளது என்றே எண்ணுகிறேன்” என்றார் யுதிஷ்டிரர். “அரசே, இந்தப் போர் இவ்வண்ணமே நீளுமெனில் இன்னும் சில நாட்களில் இருபுறமும் படைகள் முற்றழியும். பாரதவர்ஷத்தில் ஷத்ரிய குலமென்று எதுவும் இருக்காது. இருவரில் ஒருவர் வெல்லாமல் இப்போர் முடிவடையாது. வெல்பவர் நாம் என்று இருப்பது நமக்கும் பாரதவர்ஷத்திற்கும் நலம் பயக்கும். இங்கு புதிய வேதச்சொல் முளைத்தெழவேண்டும். புதிய தலைமுறைகள் நலமுறும் வாழ்வை நோக்கி செல்ல வேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலுமே பேரறத்தின் நெறி. அதற்கு பீஷ்மர் களப்பலியாக வேண்டும். அவர் இருக்கும் வரை நம்மால் கௌரவர்களை வெல்ல முடியாது. இந்த ஒன்பது நாள் போரும் ஐயமின்றி அதை நிறுவிவிட்டது” என்றார்.

“ஆம்” என்று யுதிஷ்டிரர் சொன்னார். பீமசேனன் ஏதோ சொல்ல வருபவன்போல தலையசைத்தபின் நோக்கை திருப்பிக்கொண்டான். அவனை திரும்பிப் பார்த்தபின்

யுதிஷ்டிரர் “நாம் அனைவரும் உணர்ந்தது அது. அதற்கெதிராக ஆணவத்தால் வெற்றுச்சொல் எடுக்க வேண்டியதில்லை. பிதாமகர் பீஷ்மரால் நாம் முற்றழிக்கப்படுவோம்” என்றார். “நாம் அவரை வென்று கௌரவர்களை முற்றழிக்க முடியும். நேற்று அதற்கான தடயம் ஒன்று எங்களுக்கு கிடைத்தது. எதிர்பாராமல் பீஷ்மருக்கு முன் சிகண்டி சென்றார். இந்த எட்டு நாள் போரில் ஒருமுறைகூட அவ்வாறு நிகழவில்லை. ஏனெனில் நான் சொல்லும்வரை பிதாமகர் பீஷ்மரை சிகண்டி எதிர்க்கவேண்டியதில்லை என்று அவரிடம் நான் ஆணையிட்டிருந்தேன். தன் எதிரில் சிகண்டியை பார்த்ததும் பீஷ்மர் வில் தாழ்த்தி திரும்பிச்சென்றார்” என்றார் இளைய யாதவர்.

“ஆம், அதை அறிந்தேன்” என்று யுதிஷ்டிரர் சொன்னார். “எனவே நாளை அர்ஜுனன் போருக்கெழுகையில் அவனுடைய தேர் முகப்பில் சிகண்டி இருப்பார். அவர் முன் நின்று போரிடாமல் பீஷ்மர் வில் தாழ்த்துவார். அர்ஜுனனின் அம்புகளால் களத்தில் விழுவார்” என்றார் இளைய யாதவர். பீமசேனன் உரத்த குரலில் “ஒளிந்திருந்து தாக்குவதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு? இதையா இங்கு நின்று போர்சூழ்ச்சி என்று திட்டமிடுகிறோம்? இதை ஒருபோதும் பாண்டுவின் மைந்தர் ஏற்கமாட்டார்கள். களத்தில் முற்றழிவதே மேலும் பெருமையானது” என்றான். இளைய யாதவர் சொல்லெடுப்பதற்குள் கைவீசி “இல்லை, இதற்கு என் சொல்லில்லை” என்றான்.

“நாங்கள் இதை அனைத்துக் கோணங்களிலும் பேசிவிட்டோம்” என்றார் இளைய யாதவர். “பாரதவர்ஷமே அழியட்டும். இங்கிருக்கும் ஷத்ரியகுலம் முற்றழியட்டும். புதுவேதம் எழாமலேயே போகட்டும். இத்தகைய கீழ்மை இங்கு முளைக்கலாகாது. இளைய யாதவரே, தாங்கள் சொல்லும் அந்த வேதம் இக்கீழ்மையிலிருந்து முளைக்குமென்றால் அதற்கு என்ன பொருள்? ஒருதுளி நஞ்சு கலந்த பாலையா நாம் பிற்காலத்திற்காக வைத்துச்செல்லவிருக்கிறோம்? இது நரம்பு முடிச்சில் செலுத்தப்படும் நச்சுப்பல். முற்றழிவையன்றி வேறெதையும் உருவாக்காது. ஒளிந்திருந்து பிதாமகரைக் கொன்றபின் ஈட்டும் வெற்றி தேவையில்லை” என்று சொல்லிவிட்டு “போதும், நாம் இதை பேசவேண்டியதில்லை. கிளம்புவோம்” என்றான்.

“அமர்க! பேசும்பொருட்டே இங்கு வந்திருக்கிறீர்” என்று கடுமையான குரலில் இளைய யாதவர் சொன்னார். “இல்லை. இதில் இனி பேச்சிற்கே இடமில்லை. இது என் ஆணை! இளையோன் இந்த வஞ்சத்திற்கு ஒருபோதும் ஒப்பக்கூடாது. அதை கூறுபவர் அவன் இறைவடிவுக்கு நிகராக எண்ணும் இளைய யாதவராக இருந்தாலும் சரி. ஏன், தெய்வஉரு கொண்ட மூதாதையராக இருந்தாலும் சரி. மூன்று தெய்வங்களே எழுந்து வந்து ஆணையிட்டாலும் சரி. இது கீழ்மை. படைக்கலம் தொட்டு எடுத்த ஷத்ரியர் எவருக்கும் இது ஏற்கத்தக்கதல்ல” என்று பீமசேனன் சொன்னான்.

“உமது மூத்தவர் இன்னும் ஒருசொல்லும் உரைக்கவில்லை” என்று இளைய யாதவர் சொன்னார். பீமசேனன் திகைத்து தலைகுனிந்து அமர்ந்திருந்த யுதிஷ்டிரரை பார்த்தான். யுதிஷ்டிரர் மெல்லிய உடல் நடுக்கத்துடன் கைகளை மடியில் கோத்து அமர்ந்திருந்தார். உதடுகளால் ஏதோ நுண்சொல்லை உச்சரிப்பவர்போல தோன்றியது. பீமசேனன் உரத்த குரலில் “மூத்தவரே, தாங்களும் இதை உளம்கொள்கிறீர்களா என்ன? ஆணிலியை முன்னிறுத்தி பிதாமகரை தோற்கடிக்கப் போகிறோமா?” என்றான். திரும்பி சிகண்டியிடம் “இதையும் நீங்கள் விரும்புகிறீர்களா?” என்றான். “ஆம், நான் இன்று அவரை கொல்ல எண்ணுகிறேன்” என்றார் சிகண்டி.

“உங்கள் முன் பிதாமகர் பீஷ்மர் வில் தாழ்த்துவாரெனில் நீங்கள் சென்று அவரை எதிர்கொள்ளுங்கள். எதற்கு உங்களுடன் பார்த்தன் நிற்கவேண்டும்?” என்றான் பீமசேனன். “எனது அம்புகளால் அவர் நெஞ்சுக்கவசங்களை பிளக்க இயலாது” என்றார் சிகண்டி. “ஏன்?” என்று பீமசேனன் கேட்டான். “ஏனெனில் அவர் என் தந்தை. அவரை வெல்லும் படைக்கலம் தேடி அலைந்தேன். அந்த எண்ணத்தை கடப்பதற்கு படைக்கலமேதும் இல்லை என்று அறிந்தேன். நேற்று களத்திலும் அதை உணர்ந்தேன். என்னால் இயலுமென்றால் நேற்றே அவரை கொன்றிருப்பேன். இன்று இச்சூழ்ச்சிக்கு நான் ஒப்புக்கொள்வதே அதனால்தான்.”

பீமசேனன் திகைத்து நின்று இரு கைகளையும் விரித்தபின் “என்னால் இதை புரிந்துகொள்ள இயலவில்லை” என்றான். “நான் இதை புரிந்துகொள்ள நெடுந்தவம் தேவைப்பட்டது. அவர்முன் களத்தில் தோன்றுவதை ஒவ்வொரு கணமும் என் அகவிசை தடுத்தது. அறியா ஊழால் நேற்று அவர் முன் களத்தில் சென்றேன். என் வில் இரும்புக்குண்டு என எடை மிகுந்து நிலம் தாழ்ந்தது. அவர் வில் தாழ்த்தியதை நீங்கள் கண்டீர்கள். அதற்கு முன் என் வில் தாழ்ந்ததை நான் அறிவேன். அவர் கொல்லப்படவேண்டுமென்றால் நானும் இளைய பாண்டவரும் இணைந்தால் மட்டுமே நிகழும். அவருக்கெதிராக எழும் கை கொண்ட ஒருவர் இன்று அவர் மட்டுமே” என்றார் சிகண்டி.

“பார்த்தா, இது உனக்கு ஏற்புடையதா? இத்தனை நாள் வில் பயின்று நீ அடைந்தது இதுவா? உன் காண்டீபம் இதை ஏற்குமா?” என்றான் பீமசேனன். அர்ஜுனன் எழுந்து “ஆம், இது எனக்கு ஏற்புடையதல்ல” என்றான். திரும்பி இளைய யாதவரிடம் “இது எனக்கு ஏற்புடையதல்ல. நான் ஒப்பமாட்டேன்” என்று சொன்னான். “நான் முடிவு செய்துவிட்டேன். இன்று நிகழும் போரில் பீஷ்மர் களம்படுவார். தேரில் நீ இருக்காவிடில் அபிமன்யூ இருப்பான். எந்தத் தயக்கமும் இன்றி அவர் நெஞ்சை பிளக்க அவனால் இயலும்” என்றார் இளைய யாதவர். “இல்லை! அதை நான் ஒப்பமாட்டேன். அது அவனுக்கு பெரும்பழி சேர்க்கும். விண்ணில் மூதாதையர் முன்னில் அவன் சிறுமையுற்று நின்றிருப்பான்!” என்று அர்ஜுனன் கூவினான்.

புன்னகையுடன் “எனில் இப்பொறுப்பை நீ ஏற்கவேண்டும்” என்றார் இளைய யாதவர். “என்னை துயருறச் செய்கிறீர்கள். என்னை இறப்புக்கு நிகரான தருணங்களில் நிறுத்துகிறீர்கள்” என்று அர்ஜுனன் தளர்ந்த குரலில் சொன்னான். “என் வழி இதுவே. நான் முடிவுகளை நோக்கி மட்டுமே செல்பவன்” என்றார் இளைய யாதவர். அர்ஜுனன் சிகண்டியை நோக்கி “நீங்கள் இதை ஏற்கிறீர்களா, பாஞ்சாலரே?” என்றான். “ஆம், எனக்குத் தேவை பீஷ்மருக்கெதிராக எழும் இரு கைகள். அது உங்களுடைய கைகள் அல்லவென்றால் உங்கள் மைந்தனுடைய கைகளாக அமையட்டும். இன்று பத்தாவது நாள் பீஷ்மர் களம் விழுந்தாக வேண்டும். அதை முடிவெடுத்தே என் மைந்தரை இங்கு வரச்சொன்னேன்” என்றார் சிகண்டி.

ஷத்ரதேவனை நோக்கியபின் “நான் அறிந்திருந்தேன் ஒன்பது நாட்கள் மட்டுமே இளைய யாதவர் பொறுப்பார் என்று. என் ஊழ்கத்தில் பத்தாம் நாள் போரில் அவர் நெஞ்சு பிளந்து விழுவதை முன்னரே கண்டிருந்தேன்” என்றார் சிகண்டி. “அதுவே ஊழ். நமது அனைத்து எதிர்ப்புகளுடனும் நாம் அங்கு சென்று சேர்ந்தாகவேண்டும்.” பீமசேனன் “இல்லை, இதற்கு ஒப்புதலில்லை. பாண்டவர்கள் இதற்கு ஒருபோதும் ஒப்பமாட்டார்கள்” என்று கூவினான். திரும்பி யுதிஷ்டிரரிடம் “தங்கள் சொல்லின்மை துயரளிக்கிறது, மூத்தவரே. சொல்லுங்கள்! தங்கள் எண்ணமென்ன? தாங்கள் இப்போது சொல்லியாகவேண்டும்” என்றான்.

யுதிஷ்டிரர் சிவந்த விழிகளைத் தூக்கி அவனை பார்த்தார். அதில் நீர் நிறைந்திருந்தது. “என்னால் சொல்ல முடியவில்லை. மைந்தர்களின் இறப்பை பார்த்துக்கொண்டிருக்கிறேன். முற்றழிவுக்கு முன் எதுவுமே பிழையல்லவோ என்ற எண்ணத்தை அடைகிறேன்” என்றார். திரும்பி சகதேவனிடம் “இளையோனே, எப்போதும் உன் சொல்லுக்கு அப்பால் நான் எண்ணியதில்லை. சொல்க, நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டார். சகதேவன் தணிந்த குரலில் “ஒப்புதல் அளியுங்கள், மூத்தவரே” என்றான். “என்ன சொல்கிறாய்? அறிவிலி!” என்று கையை ஓங்கியபடி பீமசேனன் அவனை நோக்கி சென்றான். “அது ஒன்றே வழி. அவர் களம்பட்டாக வேண்டும்” என்றான் சகதேவன். “இப்போருக்கு நாம் எழுந்திருக்கலாகாது. எழுந்தபின் வென்றே தீரவேண்டும்.”

“தாதையை மறைந்திருந்து கொல்லவா களம் வந்தோம்?” என்று பீமசேனன் கேட்டான். “அத்தந்தை இவ்வாறு மறைந்திருந்து கொல்லத்தக்க பிழையொன்றை ஆற்றியிருந்தார்” என்று சகதேவன் கூரிய குரலில் சொன்னான். “அங்கு அஸ்தினபுரியின் அவையில் அவர் இந்த இறப்பின் தொடக்கத்தை இயற்றினார். தன் குலமகள் ஆடை களைந்து இழிவுசெய்யப்பட்டபோது தலைகுனிந்து அங்கு அமர்ந்திருந்தார். அந்தப் பிழைக்கு இந்தப் பழியே ஈடு.” பீமசேனன் தளர்ந்து “இவ்வாறு சொல்லப்போனால் அனைத்துமே சரியென்றாகிவிடும். எச்செயலையும் சரியென்றாக்கிவிடலாமென்றால் இங்கு முன்னோர் சொல் எதற்கு? தெய்வங்கள்தான் எதற்கு?” என்றான்.

“எச்செயலையும் சரியென்றாக்குபவை தெய்வங்கள்தான். அவையில் தன் குலமகள் இழிவு செய்யப்பட்டபோது சொல்லடங்கி அவர் அமர்ந்திருந்தார். அப்போது அவருடைய ஊழ் முடிவுக்கு வந்துவிட்டது. இதுவே என் சொல்” என்று சொன்னான் சகதேவன். யுதிஷ்டிரர் தெளிவுகொண்டவராக “இளையோன் சொல்லே என்னுடையது. பீஷ்மர் களம்படட்டும்” என்றார். “மூத்தவரே, என்ன சொல்கிறீர்? நீங்கள் தீராப் பெரும்பழி பெறுவீர்கள். யயாதியின் குலத்திற்கு இழுக்கு சேர்ப்பீர்கள்” என்றான் பீமசேனன். “இளையோனே, இது என் ஆணை. நீ விரும்பினால் என் ஆணையை கையுதறி இங்கிருந்து கிளம்பிச் செல்லலாம். நீ இல்லாமலே இதை நிகழ்த்தட்டும் பாண்டவப் படை” என்றார் யுதிஷ்டிரர்.

பீமசேனன் இரு கைகளும் தளர்ந்து விழ வாய் சற்றே திறந்திருக்க கலங்கிய கண்களுடன் யுதிஷ்டிரரை நோக்கிக்கொண்டிருந்தான். “என் சொல்லை மீறிச் செல்வதாக இருந்தால் நீ செல்லலாம். ஆனால் சென்றால் என்னுடனான இறுதி குருதிஉறவை முறித்துவிட்டுச் செல்லவேண்டும். நான் இறந்தபின் உன் கையிலிருந்து ஒரு பிடி அன்னமோ நீரோ விரும்பமாட்டேன். எந்த இடத்திலும் என் பெயரை நீ சொல்லவும் ஒப்பமாட்டேன்” என்றார் யுதிஷ்டிரர். பீமசேனன் தன் தலையில் ஓங்கி அறைந்தான். பற்களை இறுகக் கடித்து இரு கைகளையும் முறுக்கி தோள் தசைகளும் மார்பும் நெளிந்து விரிய உடலுக்குள்ளிருந்து பெருவிசையொன்று வெடித்து தசைகளை சிதறடித்துவிடுமென்பதுபோல் விம்மி பின் அனைத்து விசைகளையும் இழந்து தளர்ந்து “என்றும் உங்கள் சொல்லுக்கு அடிமை. இப்பிறப்பில் மறுசொல் இல்லை. எப்பழி சூடினும்” என்றான். பிறகு ஒருசொல்கூட உரைக்காமல் கதவைத் திறந்து வெளியே சென்றான்.

யுதிஷ்டிரர் “அவ்வண்ணமே ஆகுக, இளைய யாதவனே!” என்று கைகூப்பினார். அவரும் எழுந்து சகதேவனை நோக்கி கை காட்டிவிட்டு வெளியே நடந்தார். சகதேவனும் நகுலனும் எழுந்து தலைவணங்கிவிட்டு அவரை தொடர்ந்தனர். “இனி உனக்கு மாற்றுச்சொல்லெதுவும் இருக்காது என்று எண்ணுகிறேன், பார்த்தா” என்றார் இளைய யாதவர். “என் ஊழ்” என்றான் அர்ஜுனன்.

துச்சகனின் பாடிவீட்டுக்கு முன் துண்டிகன் காத்து நின்றிருந்தான். உள்ளிருந்து வெளிவந்த ஏவலன் அவன் உள்ளே செல்லலாம் என்று கைகாட்டினான். துண்டிகன் தன் மரவுரி ஆடையை சீர்செய்து, குழலை அள்ளி தலைக்குப்பின் முடிச்சிட்டு, மூச்சை இழுத்து நேராக்கி குடிலுக்குள் நுழைந்தான். உள்ளே மரவுரியில் கால் மடித்து அமர்ந்திருந்த துச்சகன் ஓலைகளை பார்வையிட்டுக்கொண்டிருந்தான். அருகே சென்று தலைவணங்கி துண்டிகன் நின்றான். அவனை நிமிர்ந்து பார்த்து ஒருகணம் கழித்தே அவன் யார் என்றும் அவனை எதன்பொருட்டு அங்கு அழைத்தோமென்றும் துச்சகன் நினைவுகூர்ந்தான். “உன் பெயர் துண்டிகன் அல்லவா? ஸ்பூட குலத்து புரவிச்சூதன்?” என்று துச்சகன் கேட்டான். “ஆம் இளவரசே, தாங்கள் அழைத்தமையால் வந்தேன்” என்றான் துண்டிகன்.

துச்சகன் பெருமூச்சுவிட்டு கைகளை மார்பில் கட்டிக்கொண்டு பின்னால் இருந்த தூணில் சாய்ந்தமர்ந்தான். “உன்னை இன்று வரச்சொன்னது சற்று உளக்குழப்பமூட்டும் ஒரு நிகழ்வுக்காக” என்றான். வெறுமனே சொற்களை தெரிவுசெய்வதற்கான வரி அது. பின்னர் அவன் மேல் நோக்கு நிலைக்க “பீஷ்ம பிதாமகரின் மாணவர்கள் அனைவருமே களம்பட்டுவிட்டனர்” என்றான். “ஆம், அறிவேன்” என்றான் துண்டிகன். விழிகள் சுருங்க “அறிவாயா? எப்படி?” என்றான் துச்சகன். “இளவரசே, பீஷ்ம பிதாமகரை பற்றித்தான் நம்முடைய படை முழுவதும் பேசிக்கொண்டிருக்கிறது. அவருடைய நேரடி மாணவர்களில் எஞ்சியிருந்த எழுவர் நேற்று கொல்லப்பட்டுவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் படைவீரர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான்.

துச்சகன் “அவருக்குத் தேரோட்டியவர்கள் அவருடைய மாணவர்கள். இறுதியாக தேரோட்டிய வீரசேனர் நேற்று நெஞ்சிலும் கழுத்திலும் அம்புகள் பட்டு மருத்துவநிலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். அவரால் இன்று தேரோட்ட இயலாது. பீஷ்ம பிதாமகருக்கு இன்னமும் இச்செய்திகள் முழுமையாக தெரியாது” என்றான். துண்டிகனின் விழிகளிலிருந்த ஐயத்தை பார்த்துவிட்டு “ஆம், அவர் மெய்யாகவே அறிந்திருக்கவில்லை. படைகளில் மட்டுமல்ல தன்னைச் சூழ்ந்தும் என்ன நிகழ்கிறது என்றே அவருக்கு தெரியாது. பிறிதொரு உலகில் இருக்கிறார். போர்க்களத்திற்கு வில்லுடன் வரும்போது மட்டுமே நமது படைகளை ஒவ்வொரு முறையும் துணுக்குறலுடன் என பார்க்கிறார். இப்போரில் அவர் உளமில்லை. இவ்வுலகிலேயே அவருடைய அகம் பெரும்பாலும் இல்லை” என்றான் துச்சகன். துண்டிகன் தலையசைத்தான்.

“அவரிடம் இச்செய்தியை சொல்லவேண்டும். அதற்கு முன் மருத்துவமனையிலிருக்கும் வீரசேனரை சென்று பார்த்து அவருடைய உடல்நிலை எங்ஙனமுள்ளது என்று அறிந்துவரவேண்டும். அவ்வுடல்நிலையைக் குறித்து பீஷ்மரிடம் விளக்கச்செல்வதுபோல் நீ சென்று அவரை சந்திக்கவேண்டும். வீரசேனர் தேரோட்ட இயலா நிலையிலுள்ளார் என்பதை சொன்ன பின்னர் நீ தேர்வலன் என்று கூறு. உனது குடிப்பெயரையும் தந்தை பெயரையும் கூறினால் அவர் புரிந்துகொள்வார்” என்றான். துண்டிகன் “என் தந்தை பெயர் தெரியாத வீரர்களில்லை” என்றான். “ஆம், உன் பெயரும் பெரும்பாலும் தெரிந்துள்ளது. நேற்று இந்தப் போரை முன்னெடுக்கும் முதன்மை வீரருக்குத் தேர்வலராக தகுதியுடையோன் எவனென்று கேட்டபோது வீரரும் சூதரும் ஐயமின்றி உன் பெயரை

சொன்னார்கள். இளையவனாக இருக்கிறாயே என்று நான் சற்று குழம்பினேன். ஆனால் புரவியை அறிந்தவன் என்றனர்” என்றான் துச்சகன்.

“ஆம், நான் புரவிக்கு அணுக்கமானவன்” என்றான் துண்டிகன். “புரவியை அறிதலென்பது ஒரு வாழ்நாளில் நிகழ்வதல்ல. எட்டு தலைமுறை தவம் இருந்தாலொழிய எவரும் புரவியுடன் உளம் பேச இயலாது என்றார்கள். உங்கள் குடி பதினெட்டு தலைமுறைகளாக போர்ப்புரவிகளுடன் வாழ்கிறது என்றனர்” என்றான் துச்சகன். “அறிந்த தலைமுறைகள் பதினெட்டு. நீர்க்கடன் அளிக்கும் பொருட்டு அவ்வாறு பதினெட்டு மூதாதையரை நிரைவகுத்து சொல்கிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக எங்கள் கொடிவழியினர் புரவிகளுடன் வாழ்கிறார்கள். வடமேற்கே மலையவன நாட்டிலும் அதற்கும் அப்பால் சோனகர்களின் நாடுகளிலும் எங்கள் மூதாதையர் பரவியிருந்ததாக சொல்கிறார்கள். புரவிகள் போருக்கும் பணிக்கும் பயிற்றப்படும் காலத்திலேயே அப்பணிக்கு வந்தவர்கள் என்று என் தந்தை சொல்லி கேட்டிருக்கிறேன்” என்றான் துண்டிகன்.

“மாணவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதென்பது பிதாமகருக்கு இழப்பு. அதை அவர் எவ்வகையிலும் உணர்ந்திருக்கவில்லை எனினும் எதிரிகள் அதை உணர்ந்திருப்பார்கள். அவருடைய மாணவர்கள் அவருடைய உள்ளத்திலிருந்தே ஆணைகளை பெற்றுக்கொள்பவர்கள். அவருக்குப் பின்னால் அணிநிரந்து அவரை படையினரின் அம்புகள் அணுகாது தடுத்த காவல் வளையம் என்று இலங்கினர். அது அழிந்துள்ளது. களத்தில் இன்று பிதாமகர் தனித்து நிற்கப்போகிறார். ஆகவே நமது படைகளிலிருந்து தேர்ந்த புரவி வில்லவர் எழுபத்திரண்டு பேரை தேர்வு செய்துகொண்டிருக்கிறோம். அவர்கள் இன்றுமுதல் பிதாமகர் பீஷ்மரின் பின்காவல் படையென உடன் செல்ல வேண்டும். பிதாமகர் பீஷ்மர் நம் படையின் முகப்பில் நிற்பது வரை நாம் தோல்வியற்றவர்கள்” என்று துச்சகன் சொன்னான்.

“தேர் பற்றி எண்ணுவதை நீங்கள் விட்டுவிடலாம். இப்புவியில் எனக்கிணையான தேர்வலன் என்று நான் ஒருவனையே சொல்வேன், பீமசேனரின் தேர்வலனாகிய விசோகன். ஆனால் அவனும் களத்தில் தேர் தெளிக்கையில் என்னைவிட பல படிகள் பிந்தியவனே. அதை அவனும் அறிவான்” என்றான் துண்டிகன். “நன்று, செல்க!” என்று துச்சகன் சொன்னான். துண்டிகன் தலைவணங்கி பின்னகர்ந்து பாடிவீட்டிலிருந்து வெளிவந்தான். தன் புரவி நோக்கி சென்று அதன் சேணத்தை சீரமைத்து கால்வளையத்தில் இடக்கால் வைத்து சுழன்று ஏறி அமர்ந்தான். அவனருகே வந்த ஏவலன் “தங்களுக்கு துணை வரும்படி ஆணை” என்றான். துண்டிகன் “நான் மருத்துவநிலைக்கு செல்கிறேன்” என்றான். “ஆம், உரிய ஒப்புதலின்றி எவரும் மருத்துவநிலை நோக்கி செல்ல இயலாது. தங்களை மருத்துவநிலை வரை கொண்டுசென்று விடும்படி எனக்கு ஆணையிடப்பட்டுள்ளது” என்றான்.

துண்டிகன் சில கணங்களுக்குப் பின் “இளவரசரிடமிருந்து என் பணிக்கென ஆணைஓலை ஏதும் அளிக்கப்படவில்லையா?” என்றான். “இல்லை. அவ்வாறு ஆணையிடுவது பிதாமகர் பீஷ்மருக்கு ஆணையிடுவதுபோல என்று இளவரசர் கருதுகிறார். தாங்கள் அவராலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். செய்தியை நீங்கள் அவரிடம் சொல்லும்போது அவரே எண்ணிக்கொண்டு உங்களை தன் பணிக்கு அமர்த்துவார் என்று இளவரசர் எதிர்பார்க்கிறார்” என்றான் ஏவலன். துண்டிகன் தலையசைத்துவிட்டு புரவியை செலுத்தினான். ஏவலன் இன்னொரு புரவியிலேறி அவனுடன் வந்தான். இருவரும் இருண்டு ஓசையடங்கி கருக்கிருள் அழுந்தி போர்த்தியிருந்த படைப் பிரிவுகளினூடாக சென்றனர்.

படைகள் துயின்றுகொண்டிருந்த மூச்சொலிகளே முழக்கமென எழுந்து சூழ்ந்தொலிப்பதாக உளமயக்கெழுந்தது. அனைத்துப் பந்தங்களும் அசைவற்று நிற்பதை அவன் விழிகள் விந்தையென உணர்ந்தன. ஓர் அசைவுகூட எங்குமில்லை. கொடிகள், வழிசுட்டு பட்டங்கள் அனைத்தும் அசைவிழந்திருந்தன. யானைக்கொட்டிலை அவர்கள் கடந்து சென்றபோது பெரும்பாலான யானைகள் ஒற்றைக்கால் தூக்கி வைத்து நிலத்திலறையப்பட்ட கந்துகளில் சற்றே உடல் சாய்த்து துயின்றுகொண்டிருப்பதை காண முடிந்தது. அவற்றின் மூச்சொலிகளின் கலவையோசை அங்கே காற்று ஒன்று சுழன்று இலை ஒலித்தபடி வீசுவதுபோல எண்ணச் செய்தது.

அவன் விழிகளைக் கண்ட ஏவலன் "யானைகளில் பெரும்பாலானவை இறந்துவிட்டன" என்றான். துண்டிகன் ஒன்றும் சொல்லவில்லை. "இறந்த யானைகள் இருக்கும் யானைகளின் மீது தெய்வங்களாக எழும் என்கிறார்கள். யானைகள் களம்படும்தோறும் எஞ்சிய யானைகள் வெறிகொள்கின்றன. அகிபீனா உண்ணாமல் பெரும்பாலான யானைகள் துயில்வதில்லை. இன்று அகிபீனா குறைந்துவிட்டமையால் காட்டிலிருந்து மயக்களிக்கும் ஊமத்தை, எருக்கு, அரளி போன்ற செடிகளையும் காய்களையும் வேடர்களைக்கொண்டு பறித்து வரச்செய்து அரைத்து உணவுடன் கலந்து யானைக்கு அளிக்கிறார்கள். அவை நஞ்சு. ஆனால் இத்தருணத்தில் நஞ்சே அமுதென்றாகி அவற்றை உறங்கச்செய்கிறது."

அச்செய்திகள் தனக்கு ஏன் என்று அவன் எண்ணினான். ஆனால் போர்க்களத்தில் எச்செய்தியையும் உள்ளம் வரவேற்கிறது. வெளியிலிருந்து ஏதேனும் ஒன்று ஒருகணம் ஒழியாது உள்ளே விழுந்துகொண்டிருக்க வேண்டும். வெளியிலிருந்து ஏதும் வராதபோது உள்ளிருப்பவற்றை உருட்டி விளையாடத் தொடங்குகிறது உள்ளம். அது பெருந்துன்பம். நினைவுகளாக எழுந்து வருபவர்கள் அனைவருமே களம்பட்டவர்கள். தங்கள் இடம் இனி நினைவுகளே என்று நன்கறிந்தவர்களாக, நினைவின் அனைத்துக் கொடிகளையும் அவர்கள் இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஒருகணம்கூட எவரும் அவர்களை தவிர்க்கமுடியாதபடி தங்களை ஆக்கிக்கொள்கிறார்கள்.

துண்டிகனின் ஏழு உடன்பிறந்தார்கள் அக்களத்தில் கொல்லப்பட்டனர். அவன் குடியிலிருந்து நூற்றுப்பதினாறு பரிவலர் போருக்கென வந்தனர். அவர்களில் எண்மரே எஞ்சியிருந்தனர். பரிவலரை போரில் கொல்லலாகாதென்ற நெறி முதல்நாளிலேயே இல்லாதாயிற்று. பீஷ்மரும் பீமனும் மாறி மாறி அந்நெறியை கடந்து சென்றனர். போரில் விசைகொண்டு இயங்கும் வில்லவனின் தேர்வலன் கொல்லப்படுகையில் மீண்டும் பிறிதொரு தேர்வலன் அங்கே வந்து அமர்ந்து கடிவாளங்களைப்பற்றி தன் உள்ளத்தால் புரவிகளுடன் தொடர்பு உருவாக்கிக்கொள்வது வரை அத்தேர் அசைவிழந்து போரின் அலைகளில் தத்தளிக்கும். அவ்வில்லவனை வீழ்த்துவதற்கு மிக எளிய வழி அது.

முதல்நாள் போருக்குப் பின் பரிவலர் அனைவருக்கும் எடைமிக்க ஆமைக்கவசங்கள் அளிக்கப்பட்டன. ஆமை ஓடுபோல உடல் மேல் அந்த முழுக் கவசம் கவிழ்ந்திருக்க புரவிகளின்மேல் நன்கு குனிந்து தேரை ஓட்டும்படி தேர்வலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் தேர்வலனின் உடலசைவுகளை புரவிகளே முடிவெடுத்தன. அவை திரும்புகையில், மேடுகளில் ஏறி இறங்குகையில், ஒருக்களித்து சரியப்போகையில் வேறு வழியின்றி தேர்வலர் கடிவாளம் பற்றி திருப்பவும், தலை தூக்கி அவற்றின் ஒத்திசைவுகளை விழி கொள்ளவும் தேவை இருந்தது. அத்தருணங்களில் அவர்களின் நெஞ்சுக்கும் கழுத்துக்கும் கொலையம்புகள் வந்தன.

மருத்துவநிலையை அடைந்ததும் ஏவலன் அங்கிருந்த காவலர்தலைவனிடம் துச்சகனின் ஆணையை உரைத்தான். ஏவலனை நன்கறிந்திருந்த காவலர்தலைவன் ஒருமுறை துண்டிகனை பார்த்துவிட்டு கையசைத்தான். ஏவலன் திரும்பிச்சென்றான். துண்டிகன் “இங்கு பீஷ்ம பிதாமகரின் மாணவர் வீரசேனர் எங்கிருக்கிறார்?” என்று கேட்டான். காவலர்தலைவன் “அவர் ஷத்ரியர் அல்லவா?” என்று கேட்டான். “ஆமாம்” என்று துண்டிகன் சொன்னான். “ஷத்ரியர்களில் அரசகுடி அல்லாதவர்களுக்கான படுக்கைநிலை இங்கிருந்து பதினெட்டாவதாக உள்ளது” என கைகாட்டினான். “கொட்டகையா?” என்று துண்டிகன் கேட்டான். “இப்போது அரசகுடியினருக்கு மட்டுமே கொட்டகை அளிக்கப்படுகிறது. பிற அனைவருக்குமே திறந்தவெளிதான்” என்று காவலர்தலைவன் சொன்னான்.

துண்டிகன் திரும்பி அந்த மருத்துவநிலையை பார்த்தான். அவற்றை பகுக்கும் தூண்களின் மேல் துணிப்பட்டங்கள் தொங்கவிடப்பட்டு அருகே நெய்விளக்குகள் எரிந்தன. அசையாத் தழல்கள் என அந்தத் துணிப்பட்டங்கள் தெரிந்தன. கசப்பான புன்னகையுடன் “இங்கு இடமில்லை. ஒவ்வொரு நாளும் புண்பட்டோர் வந்துகொண்டிருப்பதனால் மருத்துவநிலைகள் அகன்று பெருகி காடுகளை ஊடுருவி செறிமையம் வரை சென்றுவிட்டன. நல்லவேளையாக புண்பட்டோர் இந்த சில நாட்களாக கூட்டம்கூட்டமாக இறந்துகொண்டிருக்கிறார்கள். நேற்று முன்நாள் பெய்த சிறு மழையால் பெரும்பாலானோரின் புண்கள் அழுகிவிட்டன. ஆகவே இனி மருத்துவநிலை இடம் விரிந்து செல்ல வாய்ப்பில்லை” என்றான்.

அவனை சீற்றத்துடன் ஒருகணம் பார்த்துவிட்டு துண்டிகன் புரவியில் ஏறிக்கொண்டு மருத்துவநிலைக்குள் சென்றான். பெரும்பாலான நோயாளர் அகிபீனாவின் மயக்கில் துயின்றுகொண்டிருந்தாலும் உடல்வலியாலும் உயிர்பிரியும் தவிப்பாலும் அகிபீனாவை மீறி பலர் முனகிக்கொண்டும் கூச்சலிட்டு அழுதுகொண்டும் சொற்களைக் கூவி புலம்பிக்கொண்டும் இருந்தனர். அந்த மருத்துவநிலையே பித்தெடுத்த மாபெரும் உள்ளம் போலிருந்தது. அதனூடாக செல்கையில் பல்லாயிரம் பேய்தெய்வங்கள் தன்னை கூவி அழைப்பதுபோல, அவற்றின் இருண்ட குறிய கைகள் தன்னை பற்ற வருவதுபோல அவன் உணர்ந்தான். கைகளில் சிறு நெய்விளக்குடன் ஆதுரநிலை ஊழியர்கள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்த ஒளிப்புள்ளிகள் மின்மினிகள்போல் அங்கு நிறைந்திருந்தன.

மிக இடைவெளிவிட்டு நெய்ப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன. ஆகவே ஆதுரநிலையில் பெரும்பகுதி இருளுக்குள்தான் இருந்தது. ஒளிவிழுந்த பகுதிகள் பெரிய ஓவியத் திரைச்சீலைபோல தெரிந்தன. அவன் ஒவ்வொரு படுக்கைநிலை வழியாகவும் மெல்ல கடந்துசென்றான். பதினெட்டு. எண்ணிக்கை தவறிவிடலாகாது. எதிரில் எவரேனும் வந்தால் கேட்கலாம் என்று எண்ணினான். ஆனால் அந்தச் சிறிய பாதையில் எவருமே தென்படவில்லை. மரத்தாலான தரை புதிய குருதியால் நனைந்து வழுக்கியது. இரவு முழுக்க அங்கு கொண்டு வரப்பட்ட புண்பட்டவர்களின் உடற்குருதி அது. உறைந்து கருமை கொண்டு, அழுகிய ஊன் கதுப்பாக மாறியது. நூற்றுக்கணக்கான காலடிகளால் மிதிபட்டு சேறாகி பலகைகளின் இடுக்குகளில் திரண்டு உலரத்தொடங்கியிருந்தது. அந்த இருளில் மெல்லிய ரீங்காரத்துடன் சிற்றுயிர்கள் அக்குருதியில் பரவி புரவிக்காலடிக்கு எழுந்து அமைந்தன.

அவன் ஒரு மருத்துவநிலையிலிருந்து ஏழு பெண்கள் வெளியேறுவதை பார்த்தான். முதலில் அவர்கள் திரையசைவுகள்போல, அருகிருந்த எதனுடையதோ

நிழலாட்டங்கள்போல தோன்றினர். ஒருகணத்துக்குப் பின்னரே அவர்கள் மானுட உருவங்கள் என்றும், மறுகணம் அவர்கள் பெண்கள் என்றும் தெளிந்தது. அவன் புரவியை இழுத்து நிறுத்தியபடி அவர்களை கூர்ந்து நோக்கி நின்றான். அவர்கள் கைகளில் விளக்குகள் எதையும் வைத்திருக்கவில்லை. ஒருவரை ஒருவர் நோக்கவோ பேசவோ செய்யவில்லை. சீரான காலடிகளுடன் காற்றில் ஒழுகிச்செல்லும் புகைத்திரள்போல வந்தனர். அவன் அவர்களை கூர்ந்து நோக்கினான். அது கனவு என்னும் எண்ணம் ஏன் எழுகிறது என எண்ணிக்கொண்டான். படைகளுக்குள் பெண்டிர் வரவியலாது. ஆனால் மருத்துவநிலையில் மருத்துவர்களாக வரக்கூடும்.

அவர்களின் உருவை நோக்குந்தோறும் விழி மங்கலடைவது போலிருந்தது. விழி திருப்பி அச்சூழலை சுழன்று நோக்கியபின் திரும்பி அவர்களை பார்த்த முதல்கணம் மிகத் தெளிவாக அவர்களின் முகங்களும் விழிகளும் தெரிந்தன. அனைவர் விழிகளுமே கல்லில் செதுக்கப்பட்டவைபோல அசைவிழந்திருந்தன. அவர்களின் ஆடைகள் எழுந்து பறந்து காற்றில் திளைத்தன. ஆனால் அங்கிருக்கும் பந்தங்களோ தொலைவிலிருந்த மரக்கிளைகளில் இலைகளோ அசையவில்லை. அவனுடைய கூந்தலிழைகூட காற்றில் அசையவில்லை.

அவர்கள் அவனை அணுகியபோது குளிர்காற்று வந்து உடலை தொடுவதுபோல் உணர்ந்தான். அவன் தோல் மெய்ப்பு கொண்டது. அவர்கள் அவன் நின்றிருப்பதை அறியவே இல்லை. ஒரு கணம்கூட அவர்களின் விழி அவனை நோக்கவோ உடலில் சிறு மெய்ப்பாடுகூட அவன் பொருட்டு எழவோ இல்லை. அவர்கள் அவனைக் கடந்து அப்பால் சென்றனர். அவன் அவர்கள் இருளில் மறைவது வரை பார்த்து நின்றான். அவர்களிடம் ஏன் வழி கேட்க தோன்றவில்லை என்று அதன் பின்னரே எண்ணினான். திரும்பி சற்றுநேரம் அவர்கள் சென்றமைந்த இருளை நோக்கிக்கொண்டிருந்தான். அவர்களை மெய்யாகவே பார்த்தோமா என்னும் ஐயத்தை அடைந்தான்.

பின்னர் புரவியை திருப்பிச் சென்று மருத்துவநிலைகளைக் கடந்து பதினெட்டாவது மருத்துவநிலையை அடைந்தான். அதன் முகப்பில் பதினெட்டு என்னும் எண் பொறிக்கப்பட்டிருந்த படாஅம் விளக்கொளி பரவி நீர்ப்படலம்போல தெரிந்தது. அதனருகே நின்றிருந்த காவலன் அரைத்துயிலில் தலை தொய்ய தூங்கிக்கொண்டிருந்தான். அவனருகே சென்று துண்டிகன் “காவலரே!” என அழைத்தான். அவன் விழித்துக்கொள்ளவில்லை. “காவலரே” என அவன் மீண்டும் அழைத்தான். ஓசை எழ காவலன் வாயை உறிஞ்சினான். “யார்?” என்று முனகலாக கேட்டான். துண்டிகன் “நான் பீஷ்ம பிதாமகரின் மாணவராகிய வீரசேனரை பார்க்கும் பொருட்டு வந்தேன்” என்றான். காவலன் விழித்தெழுந்து “யார்? யார்?” என்றான்.

“பீஷ்ம பிதாமகரின் மாணவராகிய வீரசேனரை பார்க்கும்பொருட்டு வந்தவன். என் பெயர் துண்டிகன். இது அரசாணை” என்றான். காவலன் “தாங்கள் இங்கு வருவதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்” என்றான். “நான் வரும்போது விழிமூடி துயின்றுகொண்டிருந்தீர்கள்” என்றான் துண்டிகன். “ஆம், துயின்று கொண்டுதான் இருந்தேன். ஆனால்…” என்றபின் அவன் குழம்பி வாயை துடைத்தபடி “இங்கிருந்து அறுபத்துஎட்டாவது படுக்கை. அவர் மிக மிக நோயுற்றிருக்கிறார். இரண்டு நாழிகைக்கு முன்னர்தான் மருத்துவ உதவியாளர் வந்து அவருக்கு மேலும் அகிபீனா அளித்துவிட்டுச் சென்றார். நாளைப் பொழுது கடந்தால்தான் அவர் மீள்வாரா இல்லையா என்று சொல்ல முடியும் என்றார்கள்” என்றான்.

“வீரரே, நான் இங்கே வரும்போது ஏழு பெண்களை பார்த்தேன்” என்று துண்டிகன் சொன்னான். “அவர்கள் நிழலுரு என அசைவிலாது சென்றனர். அவர்கள் எவர்?” காவலன் “எங்கே?” என்றான். துண்டிகன் “இரண்டாவது படுக்கைநிலை அருகே” என்றான். “உளமயக்கு. இங்கே பெண்டிருக்கு நுழைவொப்புதல் இல்லை. களத்திலேயே பெண்டிர் நுழையவியலாது” என்றான் காவலன். “ஆனால் மெய்யாகவே நான் பார்த்தேன். மிகத் தெளிவாக அவர்கள் எழுவரையும் பார்த்தேன்” என்றான் துண்டிகன். காவலன் திரும்பிப்பார்த்து “இது இறப்பின் வெளி. இங்கு உளமயக்குகள் நிகழும்” என்றான். அவன் விழிகள் கலங்கியிருந்தன. நாட்கணக்காக துயில்நீத்தவனின் கண்கள் சேற்றுக்குட்டைபோல் ஆகிவிடுகின்றன. விழிகளுக்கு அடித்தட்டில் படிந்திருப்பவை அனைத்தும் மேலெழுந்து மிதக்கின்றன.

காவலன் தலையசைத்து “பித்துபிடிக்க வைக்கும் உளநிகழ்வுகள் இங்கு நிகழ்கின்றன. ஒவ்வொரு நாளும் விந்தையான கனவுகள்! விழித்திருக்கையில், விழிதிறந்திருக்கையில், வெயில் பொழியும் பகலில்கூட கனவுகள் வருமென்று இங்கு வந்த பின்னர்தான் அறிந்தேன்” என்றான். “இங்கிருந்து என்னை படைப்பிரிவுக்கு மாற்றும்படி கோரினேன். நேரில் சென்று அழுதேன். நெஞ்சில் வேலேந்தி செத்து விழுவது இங்கு அமர்ந்திருப்பதைவிட பலமடங்கு மேலானது. இங்கிருந்தால் இன்னும் சில நாட்களில் நானும் பேயென்று மாறி இங்கு உலாவத் தொடங்கிவிடுவேன்” என்றான். துண்டிகன் அவனுடைய புலம்பல்களை கேட்காமல் மருத்துவநிலைக்குள் செல்ல திரும்பினான்.

“சூதரே, நீங்கள் அந்த எழுவரை பார்த்த இடத்தின் அருகே அரசமைந்தர்களுக்கான கொட்டகை உள்ளது. அங்கே பலர் பெண்டிரை பார்த்திருக்கிறார்கள்” என்றான் காவலன். அவன் நின்று திரும்பி நோக்கினான். “அங்கே விழிகளின் அம்புபட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முலைப்பாலில் மருந்து கலந்து ஊற்றுகிறார்கள். ஒவ்வொருநாளும் அருகிலுள்ள சிற்றூர்களிலிருந்து குடுவைகளில் முலைப்பால் கொண்டுவரப்படுகிறது. அங்கே அந்த முலைப்பாலின் மணம் நிறைந்துள்ளது” என்றான் காவலன். “முலைப்பாலின் மணம் வழியாக அவர்கள் வந்துவிடுகிறார்கள்.” துண்டிகன் “யார்?” என்றான். “அவர்கள்தான்… நீங்கள் பார்த்தவர்கள்” என்றான் காவலன்.

அவனுடைய கண்கள் இரு சிவந்த குமிழிப்படலங்கள்போல் அசைந்தன. “முலைப்பாலை நா மறந்தாலும் கண்கள் மறப்பதில்லை. ஏனென்றால் மனித உடலில் கண்களில் மட்டுமே பால் உள்ளது… வெண்பால்!” அவன் பித்தனேதான் என துண்டிகன் முடிவெடுத்தான். திரும்பி புரவியை காலால் அணைத்து முன்செலுத்தியபோது அவனுடைய விழிகளில் குருதிகலந்த பால் இருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டது. என்ன பித்து இது என அச்சொற்களை விலக்கினான். “ஆனால் இங்கே இவர்கள் வரும்போது அப்படி இல்லை. இங்கிருப்பவர்களுக்கு அது முன்னரே தெரிந்திருப்பதில்லை. மெய்யாகவே இங்கே வந்துகொண்டிருப்பவர்கள் அவர்களல்ல. ஆம், அவர்கள் வேறு. அவர்கள் இதை அறிந்திருப்பதில்லை” என காவலன் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை கேட்டபடி அவன் உள்ளே சென்றான்.

துண்டிகன் காவலனின் புலம்பல்களை கேட்காதவன்போல மருத்துவநிலைக்குள் புரவியில் மென்னடையில் சென்றான். வலியலறல்களும் துயிலின் முனகல்களும் நெளிவுகளும் அசைவுகளுமாக அந்த இடம் பரவியிருந்தது. அவற்றுக்கு இடையிலிருந்த இடைவெளி மேலும் இருண்டு செறிந்திருந்தது. அது

இறப்பு என அச்சமூட்டியது. அந்த அலறல்களும் முனகல்களும் அசைவுகளும் உயிருக்குரியவை என இனியவையாக தோன்றின. அலறி நெளிந்துகொண்டிருந்த இருவருக்கு நடுவே இருந்த இருண்ட இடைவெளியை அவன் விழி சென்று தொட்டபோது உடல் குளிரில் என நடுங்கியது. நோக்கை திருப்பிக்கொண்டு உடலை இறுக்கி, கைகளை சுருட்டிப்பற்றியபடி அந்தச் சிறிய தொலைவை நெடும்பொழுதெனக் கடந்துசென்று பெருமூச்செறிந்தான்.

அங்கே குருதியும், சீழும், கந்தகமும், படிக்காரமும், பச்சிலைகளும் கலந்த கெடுமணம் மூச்சடைக்கும்படி எழுந்தது. நாற்றம் முகத்தில் ஒட்டடைபோல படியமுடியும் என அவன் அப்போதுதான் உணர்ந்தான். அறியாமலேயே கையால் முகத்தை வருடிக்கொண்டே இருந்தான். அந்தச் சீழ்நாற்றத்தை முன்னரே அறிந்திருந்தான். நாட்பட்ட சீழின் நாற்றம் அது. சூழ்ந்துகொள்ளும் நாற்றம். குருதிபோல் எரிவதோ கந்தகம்போல் தீய்வதோ படிக்காரம்போல் உவர்ப்பதோ அல்ல. மென்மையானது. பாய்வதற்கு முன்னர் புலி உறுமுவதுபோல மிகமிக மென்மையான பேராற்றல்கொண்டது. அவன் கடிவாளத்தைப் பற்றி இழுத்து நிறுத்தினான். அது என்ன? எங்கே அறிந்தேன்? சீழில் அல்ல. இத்தனை சீழை எங்கும் பார்த்ததில்லை. வேறெங்கோ.

கண்களை மூடியபோது விழிகளுக்குள் அலைகள் எழுந்தன. செல்க என புரவியை தட்டியபோது அது மெல்ல செல்லத் தொடங்கியது. அதன் தாளம் அவன் உடலுக்குள் எங்கெங்கோ சென்று நரம்புத்துடிப்புகளாக மாறியது. விழிகள் ஒரு நெளிவை கண்டுவிட்ட பின்னர்தான் அவை அதற்காக துழாவிக்கொண்டிருந்தன என்று அறிந்தான். நெஞ்சு திடுக்கிட நோக்கு கூர்ந்தான். அந்த நாகம் இருளுக்குள் இருளலையாக மறைந்தது. படுத்திருந்தவர்களுக்குள் நிறைந்திருந்த இருளுக்குள் விழிகள் நூற்றுக்கணக்கான நெளிவுகளை உருவாக்கிக்கொண்டன. உடல் அதிர்வடங்கியதும் அவன் முன்னால் சென்றான்.

அவை உயிரின் ஓசைகள் அல்ல என்று அவனுக்கு தோன்றியது. இறப்பின் ஓசைகள்தான் அனைத்தும். ஊற்றின், ஓடையின், ஆற்றின், அருவியின் ஓசைகள் எல்லாமே கடலின் ஓசைகளே. ஆம், என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன்? நான் ஒருகணம்கூட ஒழியாமல் எண்ணிக்கொண்டிருப்பது சாவைப்பற்றி மட்டுமே. சாவின் ஓசைகளால் நிறைந்திருந்தது இருள். இருளே சாவாகவும் இருந்தது. அவன் நோக்கியபடியே சென்றான். காட்டுமரங்களின் இலைகளைக்கொண்டு உருவாக்கப்பட்டிருந்த படுக்கைகள். சிலருக்கருகே மரக்கிளைகள் நடப்பட்டு கைகால்கள் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தன. கட்டுகள் பெரும்பாலும் இலைகளாலும் மரநார்களாலும் ஆனவை. மரவுரிகள் தீர்ந்துவிட்டிருக்கும். மருந்துகள் இருக்குமா? இல்லை இந்த மருத்துவநிலையே ஒரு நாடகம் மட்டும்தானா?

படுக்கையில் எழுந்தமர்ந்த ஒரு வீரன் அவனை நோக்கி “மிக எளிது!” என்று புன்னகைத்தான். துண்டிகன் நின்று “என்ன? என்ன?” என்றான். அவன் ஒருக்களித்து படுக்கையில் மீண்டும் விழுந்தான். அவன் என்ன சொன்னான் என்று திகைத்தபடி சிலகணங்கள் நோக்கிநின்றான். அவன் ஆழ்துயிலில் கிடந்தான். அவனேதானா? அவனிலெழுந்த வேறேதும் தெய்வமா? இங்கு விழியறியாமல் நிறைந்திருப்போர் எவரெவர்! துண்டிகன் மீண்டும் புரவியைத் தூண்டி முன்னால் சென்றான். பின்னால் “மிக எளிது!” என்னும் சொல் எழுந்தது. சொல்லப்பட்டதா, உளம் கேட்டதா? எது எளிது? எது மிக எளிது? விலக்குக! உளம்விலக்கிக் கொள்க! இல்லையென்றால் இங்கிருந்து மீள்தல் அரிது.

பாதையோரமாக உருண்டு வந்து படுத்திருந்த ஒருவன் தன் வலக்கையை நிலத்தில் ஓங்கி ஓங்கி அறைந்து “என்னை கொன்றுவிடுங்கள்! கொன்றுவிடுங்கள்! உத்தமரே, என்னை கொன்றுவிடுங்கள்! என் மூத்தோர் உங்களை வாழ்த்துவர். என் அன்னை உங்களை வணங்குவாள். என்னை கொன்றுவிடுக!” என்று அலறிக்கொண்டிருந்தான். துண்டிகன் கடந்து சென்றபோது அவன் தன் கையை நீட்டி “மருத்துவரே, எனக்கு நஞ்சூட்டுங்கள்! என் நரம்பொன்றை அறுத்துவிடுங்கள்! இவ்வண்ணம் இங்கு வலியில் துடிக்க நான் விழையவில்லை! நன்று செய்வீர்கள் எனில் இது ஒன்றையே செய்யுங்கள்!” என்றான். அவன் விழிகள் சிவந்து வெறித்திருந்தன. எங்கும் நரம்பு புடைத்து கொடிகளால் கட்டப்பட்டது போலிருந்தது அவன் உடல்.

கழுத்தறுக்கப்பட்ட கன்றுக்குட்டியென ஊளையிட்டுக்கொண்டிருந்த ஒருவனைக் கடந்து துண்டிகன் சென்றான். ஒருவன் எழுந்து எழுந்து விழுந்துகொண்டிருந்தான். அவர்கள் அனைவரிலும் மானுடமல்லாத ஒன்று இருந்தது. மானுடவியல்பு என்பது அறிந்த அசைவுகளும், பொருள்சூடிய சொற்களும் சேர்ந்து அமைப்பது. உள்தொடர்ச்சியால் அறியப்படுவது. சினம்கொண்டவர்கள், வெறியெழுந்தவர்கள், காமத்திலாடுபவர்கள் மானுடவியல்பை இழந்துவிடுகிறார்கள். தெய்வமெழுந்தவர்களிலும் மானுடவியல்பு இல்லை. பெருவலி கொண்டவர்களும் மானுடர்கள் அல்ல. உடல்கள், விலங்குகள். அல்லது அவர்கள் தெய்வமெழுந்தவர்களா என்ன?

எதிரில் கைவிளக்குடன் மருத்துவஏவலன் ஒருவன் வந்தான். துண்டிகன் இறங்கிக்கொண்டு “வணங்குகிறேன், உத்தமரே. நான் துண்டிகன், தேர்வலன்” என்றான். அவன் விழிகளில் சொல்லடங்கியிருந்தது. நெடும்பொழுதாக எதையுமே பேசாமலாகிவிட்டிருந்தமையால் உதடுகளும் தொண்டையும் அசைவை மறந்திருந்தன. வெறுமனே தலையை மட்டும் அசைத்தான். “உத்தமரே, நான் பீஷ்ம பிதாமகரின் மாணவரும் தேர்வலருமான வீரசேனரை பார்க்க விழைகிறேன். இது அரசரின் ஆணை” என்றான். கணையாழியை காட்டினாலும் மருத்துவஏவலன் அதை வாங்கிப்பார்க்க ஆர்வம் காட்டவில்லை. அவன் வெறுமனே கையை நீட்டி காட்டினான்.

“அங்கா?” என்றான் துண்டிகன். “ஆம்” என அவன் தலையசைத்தான். “உத்தமரே, என் விழிமயக்காக இருக்கலாம். ஆனால் நான் இங்கே ஒரு பாம்பை பார்த்தேன்” என்றான் துண்டிகன். மருத்துவஏவலன் “ஆம், இங்கே பாம்புகள் நிறையவே உள்ளன. அவ்வப்போது பாம்பு கடித்து பலர் இறக்கிறார்கள்” என்றான். “இத்தனைபேர் இருக்கையில் பாம்புகளா! அருகே உள்ள காடுகளிலிருந்து வருகின்றன போலும்!” என்றான் துண்டிகன். “இல்லை, காடுகளில் இருந்து சிற்றுயிர்களும் விலங்குகளும் வராமலிருக்க நெருப்பு அரண் போடப்பட்டுள்ளது. கந்தக அரணும் உள்ளது. இவை இந்த மண்ணில் நிறைந்துள்ள வளைகளினூடாக வருகின்றன.”

துண்டிகன் கீழே பார்த்தான். “இந்த மண்ணே பல்லாயிரம் வளைகளாலானது. யானைக்கூட்டங்கள் நடமாடும் அளவுக்கு பெரிய பிலங்கள் முதல் புழுக்களின் பாதைகள் வரை நாம் கரவுப்பாதைகளின் பெரிய வலைக்கு மேல் அமர்ந்திருக்கிறோம்” என்றான் மருத்துவஏவலன். “ஆகவே, நம்மால் நாகங்களை எவ்வகையிலும் தடுக்கமுடியாது.” துண்டிகன் “அவை ஏன் இங்கே வருகின்றன? இங்கே இரை என ஏதுமில்லையே” என்றான். “அவற்றின் இரை இந்த மண்ணில் நிறைந்துள்ள சிதல்தான். இங்கே சிதலின் மணம் பெருகியிருக்கிறது. சீழுக்கும் சிதலுக்கும் ஒரே நாற்றம்தான்” என்றான் மருத்துவஏவலன்.

துண்டிகன் மெய்ப்பு கொண்டான். ஆம், அந்த மணம்தான். தன் ஆழுள்ளம் தேடித்தேடி அலைந்தது சிதல்மணத்தின் நினைவொன்றைத்தான். இளமையில் அவனுடைய ஆடை ஒன்று தொலைந்துவிட்டிருந்தது. அவன் தந்தை புரவிகளுடன் தண்டகம் என்னும் ஊரில் நிகழ்ந்த விழாவுக்குச் சென்று மீண்டபோது கொண்டுவந்து அளித்த பரிசு. இரு வண்ணங்களில் அமைந்த பருத்தியாடை. அவன் குடியில் பிறிதெவருக்கும் இல்லாதது. பெரும்பாலானவர்கள் பார்த்தே இராதது. தந்தை அதை மூன்று வெள்ளிக்காசுகளுக்கு வாங்கினார். பத்து வெள்ளிக்காசுகளுக்கு ஒரு பரிக்குழவியை வாங்கமுடியும்.

அதை தான் ஆடையென அணியக்கூடும் என்றே அவனுக்கு தோன்றவில்லை. கைகளால் நீவிநீவி நோக்கிக்கொண்டிருந்தான். மென்மையான குழவியொன்றை தொட்டு வருடுவதுபோல. அதை நெஞ்சோடணைத்தபடி படுத்திருந்தான். முகத்தில் ஒற்றிக்கொண்டான். அதை வைத்துப்பூட்டிய மரப்பெட்டிக்கு அருகிலேயே அமர்ந்திருந்தான். அதை அணியும்படி அன்னையும் மூதன்னையும் சொல்லியும் அவனால் இயலவில்லை. அதை ஒவ்வொருநாளும் எடுத்துப் பார்த்து முகர்ந்து முத்தமிட்டு திரும்ப வைத்தான். “பெண் வளர்வதற்காக முறைமணவாளன் காத்திருப்பதுபோல” என அன்னை ஏளனம் செய்தாள்.

ஏழு மாதம் அதை அவன் அணியவில்லை. அதன்பின் உள்ளூர் விழவில் அதை அணியும்படி தந்தை ஆணையிட்டார். அன்று அவன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அதை அணிந்தபோது இரும்புக் கவசம் என எடைகொண்டிருந்தது. அவன் வெளியே வந்தபோது தான் பிறிதொருவனாக ஆகிவிட்டதாக உணர்ந்தான். அனைத்து விழிகளும் மாறிவிட்டிருந்தன. அவை வேறு எவரையோ நோக்கின. அந்நோக்கு தன்னையல்ல என உணர்ந்து அவன் அகம் சீற்றம்கொண்டது. அதை கிழித்து வீசிவிடவேண்டுமென எழுந்தது. ஆனால் அன்று பகலுக்குள் அந்த ஆடைக்குரியவனாக அவன் மாறிவிட்டிருந்தான். தன் உடலுக்குள் வேறொன்றாகப் பிறந்து வளர்ந்திருந்தான்.

பின்னர் அத்தனை விழவுகளிலும் அவன் அந்த ஆடையையே அணிந்தான். துவைத்து கஞ்சியிட்டு வெம்மைமிக்க எடை கொண்டு அழுத்தி புதியதென ஆக்கி அணிந்து வெளியே செல்லும்போது ஒவ்வொருவரும் தன்னைவிட கீழே என உணர்ந்தான். அதை அணிவதற்காகவே விழவுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் சென்றான். அந்த ஆடையின் வண்ணமும் வடிவமும் அவன் என்று ஆகியது. தன் அகவையின் அப்பருவத்தின் உடல் அது. பின்னர் அறிந்தான், அத்தகைய நூற்றுக்கணக்கான உடல்களினூடாக ஓடிச்சென்றுகொண்டே இருக்கிறோம் என. கடந்தபின் நம்மால் அவ்வுடலை நினைவுகூரவே இயல்வதில்லை. அது எவருடையதோ என ஆகிவிட்டிருக்கிறது. ஓவியங்களில் அரசர்களை பார்க்கையில் அந்த உடலில் இருந்து அவர்கள் நெடுங்காலம் முன்னரே வெளியேறியிருப்பார்கள் என நினைத்துக்கொள்வான். அதன்முன் வந்து நின்றால் யார் இவர் என்றே அவர்கள் துணுக்குறுவார்கள்.

அவன்மேல் பொறாமை உருவாகிக்கொண்டிருந்ததை அறிந்தாலும் அது அவனை உளம்மகிழச் செய்தது. பின்னர் ஒருநாள் அவன் பெட்டியைத் திறந்து நோக்கியபோது ஆடை அங்கே இருக்கவில்லை. முதல் கணத்திலேயே அது முற்றாக மறைந்துவிட்டது என உள்ளம் உணர்ந்து குளிர்ந்துறைந்தது. ஆனாலும் அது எங்கோ இருக்கும் என தேடத் தொடங்கினான். அனைவரிடமும் உசாவினான். சினந்தான், அழுதான், பித்தன்போல் அலைந்தான். அது எங்குமிலாதபடி மறைந்துவிட்டிருந்தது. அந்த ஏக்கம் அவனை தளர்த்தியது. நோயுற்று விழிகளில் ஒளியும் வயிற்றில் அனலும் அணைந்து சொல்லிழந்து தனித்தான். அவனை மீட்க அன்னையும்

மூதன்னையும் முயன்றனர். அவனுக்கு வேறு ஆடை வாங்கி அளிப்பதாக உறுதியளித்தனர். அவனை புதிய ஊர்களுக்கு அழைத்துச்சென்றனர். மீளமீள அவனிடம் நல்லுரை உரைத்தனர். அன்னை நயந்துரைக்க தந்தை கடிந்துரைத்தார்.

உண்மையில் அவன் மீள விழையவில்லை. மீண்டு எழும் அவ்வுலகில் அந்த ஆடை இருக்காதென்பதனால் அந்த ஆடை நினைவென்றும் துயரமென்றும் எஞ்சியிருக்கும் உலகையே நீட்டிக்க விழைந்தான். ஆனால் மிக விரைவில் அந்த உலகம் கரைந்துகொண்டிருந்தது. நாளென்று சூழும் புறம் அவனை உருமாற்றிக்கொண்டே இருந்தது. அவன் அந்த ஆடையை மறந்தான். எப்போதேனும் கனவுகளில் மட்டும் அது எழுந்தது. விழித்து அமர்ந்து ஏங்கி விழிகசிந்தான். ஒவ்வொன்றுக்கும் நிகராக ஆயிரத்தை வைக்கும் விரிவுள்ள புறவுலகில் அவன் மீண்டும் புதியவனாக எழுந்தான்.

அதன்பின் ஒருமுறை இல்லத்தின் பின்புறம் பழைய புரவிச்சேணங்களை இட்டுவைக்கும் சிற்றறைக்குள் சேணம் ஒன்றை எடுப்பதற்காகச் சென்றபோது அவன் அந்த ஆடையை பார்த்தான். கீழே கிடந்த இரும்பாலான கால்வளையம் மண்ணுடன் சேர்ந்து துரும்பெடுத்திருந்தது. அதை தூக்கியபோது உதிர்ந்தது. கூரையின் வெயில்குழல்களின் ஒளியில் அப்பால் தன் ஆடை கிடப்பதை கண்டான். வண்ணம் மாறியிருந்தாலும் அதன் வடிவமே ஆடையென காட்டியது. மெல்ல சென்று குனிந்து நோக்கியபோது உணர்ந்தான், அது ஆடை அல்ல. சிதல் ஆடைக்குமேல் உருவாக்கிய கூடு. ஆடையின் அதே வடிவம், அதே நெளிவுகள். அதன் அணிநெசவுகள்கூட மென்மண்ணால் உருவாகியிருந்தன.

அவன் அதை விரலால் தொடப்போய், தயங்கினான். மீண்டும் மெல்ல தொட்டான். புண் பொருக்கு கட்டியதுபோலிருந்தது. அதை உடைத்தான். உள்ளே வெண்ணிறத்தில் சிதல்கள் ஓடிக்கொண்டிருந்தன. உயிருள்ள சீழ். சீழ்மணம். அவன் அந்த ஆடைவடிவை தட்டித்தட்டி கலைத்தான். சிதல்களின் வழித்தடம் மண்ணில் எஞ்சியிருந்தது. அதையே நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் பெருமூச்சுடன் எழுந்து மீண்டுவந்தான். அதை அவன் எவரிடமும் சொல்லவில்லை. நெடுநாட்களுக்குப் பின் ஒரு கனவு வந்தது. அவன் துயின்றுகொண்டிருந்தான். உடல் மண்ணாலானதாக இருந்தது. உள்ளே சிதல்கள் ஓடிக்கொண்டிருந்தன.

“இவர்தான்” என்று மருத்துவஏவலன் சொன்னான். அவன் தலைவணங்க மருத்துவஏவலன் விலகிச் சென்றான். ஒருமுறை நோக்கி அது வீரசேனர்தான் என்று உறுதி செய்தபின் துண்டிகன் படுக்கையில் படுத்திருந்த அவரை அணுகி நின்றான். அவர் உடலில் இருந்து கந்தகம் உடல் வெப்பத்தால் ஆவியாகும் கெடுமணம் எழுந்தது. கந்தகத்திற்கும் அழுகும் மணம் உண்டு. உடல் அழுகும் மணம் வேறு. கந்தகம் நிலம் அழுகுவதன் கெடுமணம். அவன் வீரசேனரின் கால்களைத் தொட்டு “வீரரே!” என்றான். அவன் அழைத்த பின்பே அவர் கண்களைத் திறந்து “நீங்களா? நீங்களா?” என்றார். “ என்னை அறிவீரா?” என்றான் துண்டிகன் வியப்புடன்.

வீரசேனர் முற்றாக விழித்துக்கொண்டு “நீ யார்?” என்று கேட்டார். “நான் துண்டிகன். அரசர் ஆணைப்படி தங்களை பார்க்க வந்தேன். தங்கள் உடல்நிலையை நோக்கி பீஷ்ம பிதாமகரிடம் சொல்லும்படி ஆணை” என்றான். வீரசேனர் “உங்களுடன் வந்தவர்கள்! இவர்களை நான் முன்னரே அறிவேன்!” என்றார். “யார்?” என்று துண்டிகன் திரும்பிப்பார்த்தான். “இவர்கள்! இங்கெலாம் இவர்கள் உலவிக் கொண்டிருக்கிறார்கள். குளிர்ந்தவர்கள். அவர்கள் வருகையிலேயே கைகளும்

கால்களும் குளிர்கொண்டு விரைத்துக்கொள்கின்றன” என்றார் வீரசேனர். “பலமுறை வந்திருக்கிறார்கள். நீங்கள் வருவதை தொலைவிலேயே கண்டேன்.”

துண்டிகன் “தங்கள் உடல்நிலை எவ்வாறு உள்ளது?” என்றான். “நான் இவர்களுடன் செல்வேன். இவர்களை பார்க்க முடிவது என்பதே அதற்கான அறிகுறிதான்” என்றார் வீரசேனர். விழிகள் வெறித்து உருள “இவர்கள் என்னை அழைத்துச் செல்வார்கள்... ஆம்” என்று மெல்லிய குரலில் சொன்னார். “பிதாமகரிடம் சொல்லுங்கள், அவரிடமிருந்து அவன் விலகிச் செல்வதை நான் பார்த்தேன். அவரைப் போன்றே தோற்றம் கொண்டவன். ஆனால் வைரங்கள் பதிக்கப்பட்ட பொன்முடியும் ஒளிரும் குண்டலங்களும் பொற்கவசமும் அணிந்தவன். மின்னல் கதிர்போல் ஒளிவிடும் வில்லேந்தியவன்... அவரிடமிருந்து விலகிச்சென்றான்.”

“எப்போது?” என்று துண்டிகன் கேட்டான். “போர்க்களத்தில் என் முன்னாலிருந்த நோக்காடியில் அவரை பார்த்தபடியே தேர்செலுத்திக்கொண்டிருந்தேன். அவர் ஒருவராகவும் இருவராகவும் அதில் தெரிந்தார். அவன் அவர் உடலாக ஆகி உடன்நின்றிருப்பதுபோல. நோக்காடி அசையும்போதெல்லாம் அவருடைய ஆடிப்பாவையும் உடைந்து அவர்கள் இரண்டானார்கள். மீண்டும் ஒன்றாகினர். முன்னரே அவருடைய தேர்ப்பாகனாகிய என் மூத்தவர் உக்ரசேனர் என்னிடம் கூறியிருந்தார், அவரில் எட்டு வசுக்கள் குடிகொள்வதாகவும் ஒவ்வொரு முறையும் ஒரு வசுவே அவர்களில் எழுந்து அப்போரை நடத்துவதாகவும். அந்த எண்ணத்தால் ஏற்பட்ட உளமயக்கா என்று நான் ஐயப்பட்டேன்.”

“ஆனால் ஆடிப்பாவையை விழிநுனியால் நோக்காமலிருக்க என்னால் இயலவில்லை. என் பின்னால் நின்று போரிடுபவர் இருவர் என்ற உணர்வை முதுகுகொண்ட நுண்ணுணர்வும் வலுவாக அடைந்துகொண்டே இருந்தது. போர் நிகழ்ந்துகொண்டிருந்தபோது எதிரில் அவன் வந்தான்...” என்றார் வீரசேனர். “யார்?” என்றான் துண்டிகன். “சிகண்டி, ஆணிலி. ஒருகணம்தான் என் ஆடியில் நான் அந்தத் தேவனின் முகத்தை பார்த்தேன். திகைத்ததுபோல், கசந்ததுபோல் ஒரு முகம். பின்னர் அவன் அகன்றுவிட்டிருந்தான். வில் தாழ்த்தி துயருடன் நோக்கிக்கொண்டிருந்த பீஷ்ம பிதாமகரின் முகத்தையே அதன்பின் ஆடியில் பார்த்தேன்.”

“தேரை திருப்புகையில் அன்று பீஷ்மரின் பின்னால் எட்டு நிழல்கள் எழுந்து சரிந்திருப்பதை கண்டேன். அவர்கள் எண்மர்தான். எண்மரும் அவரிடமிருந்து விலகிவிட்டார்கள். ஐயமில்லை இனி அவர் ஆற்றலற்றவர். அவர் உடல்தளர்ந்திருந்தார். ஒவ்வொருமுறை நோக்குகையிலும் இறப்பற்றவர், தோல்வியற்றவர், மானுடம்கடந்த பிறிதொருவர் என நமக்கு தோன்றும் ஒன்று அவரிடமுண்டு. அது முற்றாக அகன்றுவிட்டிருந்தது. இன்று அவர் உயிர்துறக்கக்கூடும்” என்றார் வீரசேனர்.

துண்டிகன் “இன்றுமுதல் நான் அவருக்கு தேரோட்டவிருக்கிறேன்” என்றான். வீரசேனர் சிலகணங்கள் அவனை கூர்ந்து நோக்கிவிட்டு “ஆம், பிறிதொரு தேர்வலன் அவருக்கும் தேவை. நீர் எவரென்று சொன்னீர்?” என்றார். துண்டிகன் தன் குலத்தையும் தந்தை பெயரையும் சொன்னான். “அறிந்திருக்கிறேன். உமது தந்தை பலமுறை குருநிலைக்கு வந்து பிதாமகரிடம் சொல்லாடியிருக்கிறார். தங்களை அவர் அறிவார்” என்றார் வீரசேனர். பின்னர் புன்னகைத்து “அவருடன் களம்படும் நல்லூழ் கொண்டவர் நீங்கள். அவர் மாணவர்களாகிய அனைவருமே அந்த நல்லூழை விழைபவர்கள்தான். அவர் பொருட்டு உயிர்துறந்தோம் என்ற நிறைவுடன் இங்கிருந்து செல்கிறோம்” என்றார்.

துண்டிகன் என்ன சொல்வது என்று அறியாது நோக்கிக்கொண்டிருந்தான். வீரசேனர் தன் கைகளை நீட்டி அவன் கைகளை பற்றிக்கொண்டார். “சற்று முன்னர் வரை எண்ணிக்கொண்டிருந்தேன், நான்கு தலைமுறை மாணவர்களை பயிற்றுவித்த பின்னரும் களத்தில் என் ஆசிரியன் தனித்து நின்றிருக்கவேண்டுமா என்று. ஆனால் என்றும் அவர் தனியரே. இக்களத்தில் எவராயினும் தனியரே. ஆனால் எந்தக் கோழையாவது வஞ்சம் கொண்டு அவர் முதுகின் பின் ஒரு அம்பு செலுத்தி களத்தில் வீழ்த்திவிட்டால் அவ்விழிவுக்கு அவருக்கு முன் களம்பட்ட அத்தனை மாணவர்களுமே பொறுப்பேற்க வேண்டுமே என்று எண்ணினேன்.”

“அது நிகழாது” என்று கூரிய குரலில் துண்டிகன் சொன்னான். “நேர்நின்று கற்றால்தான் மாணவன் என்றில்லை.” வீரசேனர் “ஆம், நீர் வந்ததுமே அதை அறிந்துகொண்டேன். நீர் அவருக்குரியவர், அதன்பொருட்டு தேர்வுசெய்யப்பட்டவர். அவருடன் இரும். களம்பட்ட நாங்கள் அனைவரும் உம்முடன் வந்திருப்போம். என் ஆசிரியர் நிமிர்ந்து களம் நிற்க வேண்டும். அடிபணியும் மைந்தர் குருதிநிரையை கைதூக்கி வாழ்த்தும் மூதாதையின் புன்னகையுடன் உயிர் துறக்கவேண்டும். விண்ணுலகில் அவருக்காக சந்தனுவும் பிரதீபரும் ஹஸ்தியும் குருவும் யயாதியும் காத்து நின்றிருப்பார்கள்” என்றார்.

“அவர் அவர்களில் ஒருவர். இங்குள்ளவர் அல்ல. கதைகளில் வாழும் மூதாதைகளில் ஒருவர். இங்கிருக்கும் உலகைவிட நூறுமடங்கு பெரிது கதையுலகு. அதில் ஒரு சிறு துளி காலத்தில் சற்றே பிந்தி, இவ்வுலகில் தலைநீட்டி நின்றிருக்கிறது. அதுதான். அந்தப் பொருந்தாமையினால் இங்கிருக்கும் ஒவ்வொருவருடனும் அவர் முட்டிக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் அவரை புண்படுத்தியிருக்கிறோம். தேர்வலரே, அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் ஒரு சொல்லம்பையேனும் பிதாமகர் மேல் வீசாத எவரும் இருக்கமாட்டார்கள்.”

“துரியோதனருக்காக படைகொண்டு எழுகிறார் என அவர் சொன்னபோது மாணவர்கள் அனைவரும் அவரை பழித்தோம். அவர் வெற்றிகொள்ளும் தரப்பில் நிற்க விழைகிறார் என்றும், அதனூடாக சென்றபின்னர் இங்கொரு நடுகல்லை ஈட்ட எண்ணுகிறார் என்றும் அவரிடம் நானே சொன்னேன். சொல்லில்லாது விழிதாழ்த்தி தாடியை நீவிக்கொண்டிருந்தார். சென்ற ஒன்பது நாட்களில் இந்தப் படைகளில் நான் செவிகொண்ட அனைவருமே அவரை பழித்தனர். இவ்வழிவுக்கும் போருக்கும் அவரே ஊற்றென்று அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் அரங்கிலும் அடுமனைகளிலும் அவரை தூற்றுகிறார்கள். கௌரவரும் பாண்டவரும் அவரை வெறுக்கிறார்கள். சொல்லாதவர் எண்ணத்தால் அம்பு தொடுக்கிறார்கள். உடலெங்கும் இடைவெளியிலாது அம்புகள் தைத்து விழுந்து கிடப்பவராகவே அவரை என்னால் எண்ண இயல்கிறது. மயிர்க்கால்கள் அனைத்தும் அம்புகளாகிவிட்டவைபோல்.”

“ஆனால் அதுவே இயல்பு. நம் வீழ்ச்சிகளுக்கும் சரிவுகளுக்கும் தந்தையரை குறைசொல்வதற்கே நாம் பயின்றிருக்கிறோம். தந்தைவடிவானவருக்கு நிகராக குடிப்பழியும் குலவஞ்சமும் வேறெவருக்கும் அளிக்கப்படுவதில்லை. நம் பொறுப்புகள் அனைத்தையும் தந்தையரிடமே அளிக்கிறோம். நமது கீழ்மைக்கான பொறுப்பையும் அவர்களிடமே கொடுக்கிறோம். அவர்களும் உளம் கனிந்து ஆமென்று பெற்றுக்கொள்கிறார்கள். அவ்வாறே என்று தாங்களும் நம்புகிறார்கள். மகவென்று நெஞ்சில் உதைப்பதை மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் அதே உளநிலையில் இறுதிக்கணம் வரை அவர்கள் நீடிக்கிறார்கள். அவர்கள் மண்மறைந்து சொல்லிலும் கனவிலும் விண்ணிலும் நிறைந்த பின்னர் அவர்களுக்கு நாம் என்ன அளித்தோம் என்பதை நாம் உணர்வோம்.”

வீரசேனர் மெல்ல மூச்சு வாங்க கண்களை மூடினார். அச்சொற்கள் அவருக்குள் ஊறிநிறைந்து காத்திருப்பதாகத் தோன்றியது. எஞ்சிய மூச்சே அதுதான் என. இமைகளுக்குள் விழிகள் மெல்ல அசைந்துகொண்டே இருந்தன. துண்டிகன் அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். அவர் உடலிலிருந்து அந்த அதிர்வு மெல்ல வடிந்துசெல்வதுபோல் தோன்றியது. “ஆனால் நான் நிகர்செய்துவிட்டேன். நான் அளித்துவிட்டேன்“ என்றார். மேலும் அவர் பேசக்கூடும் என துண்டிகன் காத்திருந்தான். அவர் நெடுநேரம் பேசவில்லை. மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. காற்றுகாட்டிபோல அவ்வப்போது திடுக்கிட்டு திசைமாறியது. அவர் உடல் இன்னொன்றாக மாறிக்கொண்டிருந்தது. அதிலிருந்து உயிர் என உணரும் ஒன்று, அது அசைவா, தோலின் ஒளியா, மெய்ப்பா ஏதோ ஒன்று அகன்றுகொண்டிருந்தது. குடுவையிலிருந்து துளைகளினூடாக நீர் ஒழிந்து மறைவதுபோல. சற்று நேரம் கழித்து அவன் அவர் கைகளை பற்றினான். அவற்றில் உயிரில்லை என்பதை உடனே உணர்ந்தான்.

துண்டிகன் அவர் கையை வைத்துவிட்டு எழுந்துகொண்டான். சூழ்ந்திருந்த இருளையும் வானில் நிறைந்திருந்த விண்மீன்களையும் நோக்கிக்கொண்டு நின்றான். மூச்சை இழுத்து இழுத்து விட்டான். மருத்துவஏவலனை அழைத்து சொல்லவேண்டுமா என எண்ணினான். வேண்டாம் என்று தோன்றியது. அவன் மெல்ல நடந்து தன் புரவியை நோக்கி சென்றான். கால்வளையத்தை மிதித்துச் சுழற்றி சேணத்தின்மேல் அமர்ந்த கணம் அந்த ஆடை நினைவுக்கு வந்தது. அது எவ்வாறு அங்கே சென்றிருக்கும் என்றும்.

துண்டிகன் பீஷ்மரின் பாடிவீட்டை அடைந்தபோது அதன் நுழைவாயிலில் அமர்ந்திருந்த காவலன் தன் நீள்வேலை ஊன்றி, அதை பற்றி, அந்தக் கைகளின் மேல் முகத்தை வைத்து துயின்றுகொண்டிருந்தான். துண்டிகன் “காவலரே!” என்று அழைத்தான். அக்குரல் அவனை சென்றடையவில்லை. “காவலரே! காவலரே!” என்று அழைத்தபின் மெல்ல அவனை தொட்டான். திடுக்கிட்டு எழுந்து வேலை தூக்கியபின் “யார்? எங்கே?” என்றான் காவலன். “காவலரே, நான் தேர்வலனாகிய துண்டிகன். அரசரின் ஆணைப்படி பீஷ்ம பிதாமகரை பார்க்கும்பொருட்டு வந்தவன்” என்றான் துண்டிகன். “ஆம்! பிதாமகர்!” என்றபின் வாயைத்துடைத்து “யார்?” என்று மீண்டும் கேட்டான் காவலன்.

துண்டிகன் பொறுமையிழக்காது மீண்டும் சொன்னான். அவன் இருமுறை கேட்ட பின்னரே விழி தெளிந்தான். சலிப்புடன் கோட்டுவாயிட்டபடி “பிதாமகர் குடிலுக்குள் துயின்றுகொண்டிருக்கிறார்” என்று சொல்லி அமர்ந்தான். “இல்லை, அவர் அக்குடிலுக்குள் இல்லை” என்று துண்டிகன் கூறினான். “எப்படி தெரியும்?” என்று கேட்டபின் காவலன் ஐயத்துடன் சென்று குடிலுக்குள் எட்டிப்பார்த்து “ஆம், மெய்யாகவே அவர் இல்லை. இவ்வழியாகத்தான் சென்றிருப்பார்” என்றான். “இவ்வழியாகத்தான் சென்றிருப்பார் என்று எனக்கும் தெரியும். எங்கு சென்றார் என்று தங்களுக்கு தெரியுமா என்றுதான் கேட்கிறேன்” என்று துண்டிகன் சொன்னான்.

“இல்லை. நான் இங்கு அமர்ந்திருந்தபோது அவர் அங்கே நடைபயின்று கொண்டிருந்தார். சலிப்பும் சினமும் கொண்டிருந்தார். நான் கேட்ட வினாக்களுக்கெல்லாம் கடுமையாக மறுசொல் கூறினார். ஆகவே நான் இங்கே வந்து அமர்ந்தேன். அதன்பின் நான் சற்று அயர்ந்துவிட்டேன்” என்றான் காவலன்.

துண்டிகன் அவனிடம் “நீர் எந்த படைப்பிரிவை சேர்ந்தவர்?” என்றான். “நான் அஸ்தினபுரியின் கோட்டைக்காவலன்” என்றான் அவன். “காவலுக்கு நன்கு பழகியிருக்கிறீர்” என்றபின் துண்டிகன் திரும்பி தன்முன் துயிலில் ஆழ்ந்து இருள் மூடிக்கிடந்த கௌரவப் படையை பார்த்தபடி இடையில் கைவைத்து நின்றான்.

பீஷ்மர் எங்கு சென்றிருப்பார் என்று எண்ணி எடுக்க முயன்றான். அவர் துரியோதனனைப் பார்க்க சென்றிருக்கக் கூடும் என்ற எண்ணம் முதலில் வந்ததுமே அவ்வாறு அல்ல என்று தோன்றியது. அல்லது சகுனியைப் பார்க்க சென்றிருக்கலாம். தன் படைகளை பார்வையிடச் சென்றிருக்கவும் கூடும். பின்னர் அவர் எரிகாட்டுக்கு சென்றிருக்கலாம் என்று அவன் உள்ளம் சொன்னது. எரிகாட்டில் அவருக்கு அணுக்கமான எவர் இருக்கிறார்கள்? எவருமில்லை என்ற எண்ணம் வந்தது. ஆனால் அவர் செல்வதற்குரிய இடம் என வேறு எதுவுமில்லை. ஒருவேளை பாண்டவப் படைக்குள் இளைய யாதவரைப் பார்க்க சென்றிருக்கலாம். அவன் அகம் திடுக்கிட்டது. ஏன் அவ்வாறு எண்ணினோம் என வியந்துகொண்டான்.

புரவியை அணுகி அதன் சேணத்தை சீரமைத்து கால்வளையத்தில் பாதத்தை ஊன்றி சுழற்றி ஏறி அமர்ந்தபோது அவனுக்கு தெரிந்தது, அவர் அருகே குறுங்காட்டுக்குள் எங்கோ இருக்கிறார் என்று. குருக்ஷேத்ரக் காடு விரிந்து பரந்தது. முட்செடிகளும் கள்ளிச் செடிகளும் மண்டிக் கிடப்பது. குருக்ஷேத்ரத்தில் ஒவ்வொரு யுகத்திற்கும் ஒரு பெரும்போர் நிகழுமென்றும், அப்போர் நிகழ்ந்த பகுதி முற்றாகவே கைவிடப்பட்டு மானுடர் நடமாடாமல் தெய்வங்களுக்குரிய காடாக மாறிவிடும் என்றும் அவன் கேட்டிருந்தான். அங்கு எப்படி அவரை தேடிச்செல்வது என்று அவன் உள்ளம் திகைத்தது. அவர் திரும்பி வரும்வரை குடில் முற்றத்தில் அமர்ந்து காத்திருப்பதே சிறந்தது. காட்டிற்குள் சென்றால் வழி தவறிவிடக்கூடும். புலரிக்குள் அவன் பீஷ்மரிடமிருந்து தேர்வலனாக பொறுப்பேற்றுக் கொள்ளும் ஆணையை பெறவேண்டும். அதன் பின்னரே தேரையும் புரவியையும் ஒருக்கவேண்டும்.

அவன் புரவியில் அமர்ந்தபடி தயங்கினான். ஆனால் அவன் உடலிலிருந்து ஆணைகளை பெற்றுக்கொண்டதுபோல் புரவி தலைசிலுப்பி மணியோசையுடன் அடியெடுத்து வைத்து முன்னால் சென்றது. துண்டிகன் பெரும்பாலான தருணங்களில் முடிவுகளை புரவியிடமே விட்டுவிடுவதுண்டு. தன் மீது களைப்பு ஈரமான கம்பளிப்போர்வைபோல விழுந்து அழுத்தி மூடுவதுபோல் உணர்ந்தான். கைகால்கள் எடைகொண்டன. தாடை மெல்ல விழுந்து வாய் திறந்தது. இமைகள் மூடின. அவன் பீஷ்ம பிதாமகரிடம் “வீரசேனர் மறைந்துவிட்டார்” என்றான். “ஆம், தெரியும்” என்று பீஷ்மர் சொன்னார். “அவர் மறையும்போது தங்களிடம் வரும்படி என்னிடம் ஆணையிட்டார்” என்றான். “அதுவும் தெரியும்” என்ற பீஷ்மர் திரும்பி அவனை நோக்கி புன்னகைத்து “வீரசேனனை நான் கொன்றேன். உன்னையும் இன்றே கொல்லவிருக்கிறேன்” என்றார்.

அவன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். புரவி துயின்றுகொண்டிருந்த கௌரவப் படைகள் நடுவே சீரான குளம்போசையுடன் சென்றுகொண்டிருந்தது. அந்தக் கனவில் பீஷ்மர் இருந்த இடம் எது என்று அவன் எண்ணிப்பார்த்தான். அது குறுங்காட்டுக்குள் ஒரு சிற்றோடையின் கரை. உயரமற்ற கள்ளிப்புதர்கள் இருபுறமும் செறிந்திருக்கும் ஒரு பாறை. கனவில் அவன் அவரைத் தேடி அந்தக் காட்டுக்குள் சென்ற வழி மிகத் தெளிவாக நினைவில் எழுந்தது. கள்ளிச்செடிகளை எளிதில் அடையாளம் காணமுடியும். அவை காட்டின் விளிம்பிலேயே தொடங்கி தனிப்பெருக்காக காட்டுக்குள் செல்லும். அவ்வழியிலேயே சென்று ஒருமுறை

பார்த்துவிட்டு வந்தால் என்ன என்று தோன்ற அவன் புரவியைத்தட்டி விரைவடையச்செய்தான்.

குளம்புகள் ஒலிக்க படை நடுவே ஓடிய புரவி வடமேற்கு எல்லைக் காட்டை அடைந்ததும் தயங்கியது. அங்கிருந்த காவல்மாடத்தில் சிறுத்தையின் சிறுநீரில் நனைக்கப்பட்ட மரவுரிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. புரவி அக்காவல்மாடத்தை அணுகியதும் மிரண்டு, தயங்கி, கனைத்து காவலருக்கு தங்கள் வரவை அறிவித்தது. காவல்மாடத்திலிருந்து வெளிவந்த காவலர்தலைவன் கூர்ந்து நோக்கியபடி அவனை அருகழைத்தான். காவல்மாடத்திலிருந்து இரண்டு அம்புகள் அவனை கூர்வைத்தன. துண்டிகன் காவலனை அணுகி கணையாழியைக் காட்டி “நான் பீஷ்ம பிதாமகரின் அணுக்கனாகிய தேர்வலன். அவரைத் தேடி சென்றுகொண்டிருக்கிறேன்” என்றான்.

அவனை நோக்கி குழம்பியபடி “அவர் இங்கு இல்லையே!” என்றான் காவலர்தலைவன். “அப்பால் குறுங்காட்டுக்குள் இருக்கிறார். அவர் இங்கு இருக்கிறார் என்ற செய்தி எனக்கு வந்தது” என்றான் துண்டிகன். “செய்தியா?” என்று காவலர்தலைவன் கேட்டான். “அங்கிருப்பேன் என்று அவர் சொன்னார்” என்று துண்டிகன் சொன்னான். குழப்பத்துடன் மீண்டுமொருமுறை நோக்கிவிட்டு “செல்க!” என்று காவலன் ஒப்புதல் அளித்தான். புரவி மெல்ல தயங்கி காவல்மாடத்தை கடந்ததும் வால்சுழற்றி கனைத்தபடி விரைவு கொண்டது.

குறுங்காட்டுக்குள் செல்வதற்கான ஒற்றையடிப்பாதை உறுதியான செம்மண்ணாலும் சரளைக்கற்களாலும் ஆனதாக இருந்தது. எனவே புரவியால் விரைந்து தாவிச் செல்ல இயன்றது. செல்லச் செல்ல அந்தப் பாதை தனக்கு மிக நன்றாக தெரிந்திருப்பதாகவும், அங்கு பலமுறை வந்திருப்பதாகவும் அவனுக்கு தோன்றியது. ஆனால் சற்று முன் கனவில் மட்டுமே அந்தப் பாதையை கண்டிருக்கிறோம் என்பதை அவன் உள்ளம் உணர்ந்திருந்தது. புரவி செறிகாட்டிற்குள் சென்றதும் இருபுறமும் செறிந்து முட்குலைகளை நீட்டி நின்ற மரங்களால் அதன் விரைவு குறைந்தது. துண்டிகன் தன் உடலை புரவியின் உடலுடன் சேர்த்து வைத்து முட்களிலிருந்து உடலை காத்துக்கொண்டான்.

செல்லச் செல்ல முட்புதர்களின் சூழ்கை அடர்ந்து ஒரு குகைவழிபோல் ஆயிற்று அப்பாதை. முதன் முதலாக செல்லும் வழி சரிதானா என்ற ஐயத்தை அவன் அடைந்தான். கனவில் கண்ட ஒன்றை நம்பி அத்தனை தொலைவு வந்திருக்கலாகுமா? ஆனால் கனவுகள் ஒருபோதும் வீணாவதில்லை. அவை சுற்றுவழிப் பாதைகளாக இருக்கலாம், சென்று சேருமிடம் தெய்வங்களால் வகுக்கப்பட்டது. அவன் மீண்டும் சற்று தொலைவுக்குச் சென்றபோது தெளிவாகவே உணர்ந்தான், அந்த இடம்தான். பின்னர் பீஷ்மர் அருகிருக்கும் உணர்வை அவன் உள்ளம் பெற்றது.

புரவி எடைமிக்க குளம்படிகள் மெல்ல ஒலிக்க தலை தாழ்த்தி புதர்களினூடாக சென்றது. அவரை அணுகிக்கொண்டிருக்கும் உணர்வு எழுந்து வலுத்து வந்தது. பின்னர் அவன் அவரை கண்டான். பீஷ்மர் அவன் அணுகி வருவதை முன்னரே அறிந்திருந்தார். அவர் திரும்பவோ உடலில் அசைவை வெளிக்காட்டவோ இல்லையெனினும் அவனால் அதை உணர முடிந்தது. புரவியை நிறுத்திவிட்டு இறங்கி அவரை நோக்கி சென்றான். குரல் கேட்கும் தொலைவில் நின்று “வணங்குகிறேன், பிதாமகரே. அரசரின் ஆணைப்படி தங்களைப் பார்க்கும் பொருட்டு வந்தேன்” என்றான்.

பீஷ்மர் திரும்பாமலேயே “தேர்வலனா நீ?” என்றார். “ஆம்” என்றான். “என் பெயர் துண்டிகன். ஸ்ூடகுலத்தை சேர்ந்தவன்.” பீஷ்மர் “உன் தந்தையை அறிவேன்” என்று

சொன்னார். “பிதாமகரே, தங்கள் மாணவரும் தேர்வலருமாகிய வீரசேனர் சற்று முன்னர் விண்புகுந்தார். அப்போது நான் அவருடன் இருந்தேன்” என்றான் துண்டிகன். பீஷ்மரிடம் எந்த மாறுதலும் உருவாகவில்லை.

“அவரைச் சென்று பார்க்கும்படி என்னிடம் இளவரசர் துச்சகர் சொன்னார். அவரது இறப்பை தங்களிடம் அறிவிக்கும்படி ஆணையிடப்பட்டேன்” என்றான். அதற்கும் பீஷ்மர் ஒன்றும் சொல்லவில்லை. “தங்கள் மாணவர்களில் இனி எவரும் உயிருடனில்லை என்ற செய்தியை தாங்கள் உணர்ந்திருப்பீர்கள், பிதாமகரே” என்றான் துண்டிகன்.

பீஷ்மர் வெறுமனே உறுமினார். அவர் ஏதேனும் சொல்லவேண்டுமென்பதற்காக துண்டிகன் காத்து நின்றான். அவரிடமிருந்து நெடுநேரம் சொல்லெழவில்லை. நிழற்சிலையென அசைவிலாது அமர்ந்திருந்தார். சூழ்ந்திருந்த முட்செடிகளும் தளிரிலைகளும் அசைவற்றிருந்தன. துண்டிகன் “நாளை தங்கள் தேரை ஓட்டும் வாய்ப்பு எனக்கு அமையுமெனில் எனது நல்லூழ்” என்றான். “நன்று” என்று அவர் சொன்னார். “பேறு பெற்றேன்” என்று துண்டிகன் தலைவணங்கினான். பீஷ்மர் அவனிடம் “உனக்கு மைந்தர் உள்ளனரா?” என்றார். “ஆம், பிதாமகரே. நான்கு மைந்தர் என் குடியில் உள்ளனர்.”

செல்லும்படி பீஷ்மர் கைகாட்டினார். துண்டிகன் அடிவைத்து பின்னால் வந்து அவரை கூர்ந்து நோக்கியபடி நின்றான். அவர் அங்கு என்ன செய்கிறார் என்று அறிய விரும்பினான். அவர் முற்றிலும் தனிமையிலிருக்கிறார் என்பதை விழி கூறினாலும் அவருடன் பிறர் இருக்கிறார்கள் என்று நுண்ணுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது. விழிகளால் காட்டையும் அருகிருந்த மெல்லிய நீரோடையையும் மாறி மாறி பார்த்தான். அவன் அங்கிருப்பதை அவர் உணர்ந்திருந்தார். அவரிடமே அங்கு வேறு எவர் இருக்கிறார்கள் என்று கேட்டால் என்ன என்று அவன் எண்ணினான். ஆனால் அது துடுக்கென கருதப்படும் என தோன்றியது.

மீண்டும் அடிவைத்து பின்னால் சென்று புரவியில் ஏறிக்கொண்டான். புரவி திரும்பிச் செல்லும்போது விந்தையானதோர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அங்கிருந்த அந்த பிறிதொருவர் தன்னை நோக்குவதுபோல. அவன் புரவியை நிறுத்தி திரும்பிப் பார்த்தான். பீஷ்மர் அதே அசைவின்மையுடன் தெரிந்தார். இந்த இரவில் துயிலின்மையால் உளமயக்குகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறேன். மெய்யையும் பொய்யையும் பிரிப்பது துயில்தான் போலும். துயிலுக்கு அப்பால் அறியாத உலகங்கள் ததும்பிக்கொண்டிருக்கின்றன. இறந்தவர்கள், தேவர்கள், புவிவல்லமைகள். எண்ணங்களின் வடிவில் இயல்பவர்கள்.

அவன் மீண்டும் தன் உடலில் களைப்பை உணர்ந்தான். சற்று நேரம் எங்கேனும் படுத்துத் துயின்றால் போதுமென்று தோன்றியது. அவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கையிலேயே அவன் துயில்வதை அவனே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கைகள் தளர்ந்து விழ, கடிவாளம் மடியில் கிடந்தது. துயிலால் எடைகொண்ட தலை முன்னால் சரிந்து புரவியின் கழுத்தில் முட்டியது. கால்களால் புரவியின் உடலை கவ்வியபடி சற்றே சரிந்து துயின்றபடி அவன் சென்றான். முட்களும் கள்ளியிலைகளும் அவனை வருடிச்சென்றன. காட்டுக்குள் கூகைகள் குழறிக்கொண்டிருக்க இலைகளுக்குள் வௌவால்கள் சிறகடித்துச்செல்லும் ஓசைகள் கேட்டன.

அவன் திரும்பிச்சென்று பீஷ்மரிடம் “பிதமாகரே, தாங்கள் இங்கு பேசிக்கொண்டிருந்தது எவரிடம்?” என்றான். அதன் பின்னரே அவருக்கு முன்னால்

அந்த ஓடைக்கு மறுபுறம் அதே போன்றதொரு பாறையில் இளைய யாதவர் நிழலுருவாக அமர்ந்திருப்பதை பார்த்தான். அவர் தலையில் சூடிய பீலி மட்டும் தனி ஒளி கொண்டதுபோல் தெளிவாகத் தெரிந்தது. விழிகளின் இரு ஒளிப்புள்ளிகள். நிழலுருவில் அவர் சிறுவனைப்போல முதுமையற்றவராக தெரிந்தார்.

அவன் தலைவணங்கி கால் வைத்து பின்னால் சென்றபோது அங்கு இனிய குழலோசை எழுவதை கேட்டான். இளைய யாதவர்தான் குழலிசைக்கிறார் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் அவரது இடைக்கச்சையில்தான் வேய்குழல் இருந்தது. அந்தக் குழலோசை துயர்கொண்டதாக, கோடைகாலக் குயிலின் தவிப்பு நிறைந்ததாக தோன்றியது. சுழன்று சுழன்று தவிப்பு என்னும் ஒற்றைச் சொல்லையே வெவ்வேறு ஒலியமைப்புகளில் சொல்லிக்கொண்டிருந்தது. பின்னர் அது துள்ளலாயிற்று. கைக்குழவிபோல் காலுதைத்துச் சிரிக்கும் குழலிசை. அது விசைகொண்டது. துள்ளும் புரவியாகியது. மலைச்சரிவில் கனைத்தபடி பாய்ந்திறங்கியது. வெண்ணிற அருவிபோல.

அவன் விழித்துக்கொண்டபோது மீண்டும் படைமுகப்புக்கு வந்திருந்தான். வாயை துடைத்துக்கொண்டு புரவியைத் தட்டி காவல்மாடத்தை நோக்கி அதை செலுத்தினான். அது சிறுத்தைநீர் மணத்தை உணர்ந்து மூக்கை விடைத்து மூச்செறிந்து சிற்றடி வைத்தது. அதை தட்டித்தட்டி ஊக்கி முன் செலுத்தினான்.

படைப்பிரிவை அடைந்ததுமே துண்டிகன் பீஷ்மரின் தேரைச் சென்று பார்த்தான். கௌரவர்களின் படைத்தேர்களிலேயே பெரியது அது. ஆளுயரச் சகடங்களும், உயர்ந்த பீடமும், இரண்டு பின்னிருக்கைகளும், நான்காள் உயரமான முகடும் கொண்டது. ஆனால் மூன்று இரும்புருளைகள்மேல் அதன் அச்சு அமைந்திருந்தமையால் ஓசையின்றி நீரில் படகென ஒழுகுவது. அவன் அடியில் சென்று நோக்கினான். அதன் சகடங்களில் ஒன்றின் உட்புறம் பட்டை சற்று விலகியிருந்தது. எடை தாங்கும் வில்லில் இருந்த மூங்கில்களில் ஒன்று சற்று தளர்ந்திருந்தது. அவற்றை சரிசெய்யும்படி தச்சர்களிடம் சென்று சொன்னான். யவனத்தச்சர்கள் முன்னரே தேரை சரிபார்த்திருந்தனர். அவர்கள் அக்குறைகளை அறிந்திருக்கவில்லை. அவன் குரலில் இருந்த ஆணைக்கு அவர்கள் பணிந்தனர்.

துண்டிகன் புரவிகளை தானே சென்று தெரிவு செய்தான். முன்னரே அத்தேருக்குப் பழகிய புரவிகளே நன்று. ஆனால் ஏழு புரவிகளில் நான்கு மீள முடியாதபடி புண்பட்டிருந்தன. புதிய நான்கு புரவிகளை அழைத்து வந்து அவற்றின் உடலை முழுக்க தன் கைகளால் உருவி சுழிகளைத் தேர்ந்து அவை போருக்கு உகந்த நிலையிலிருப்பதை உறுதி செய்துகொண்டான். அவற்றை பிற மூன்று புரவிகளுடன் சேர்த்துக் கட்டினான். அவை ஒன்றையொன்று நோக்கி மூக்குசுருக்கி மூச்செறிந்து உறுமி உடல் சிலிர்த்தன. அவற்றை ஒரே மூங்கில்கூடையிலிருந்து கொள்ளுண்ணச் செய்தான்.

அவற்றை ஒன்றுடன் ஒன்று அணுகி நிற்கவைத்து அனைத்தையும் ஒரே மரவுரியால் உருவினான். அவற்றுக்குள் ஒரே மணம் உருவானபோது ஒன்றை ஒன்று முகர்ந்து பெருமூச்செறிந்தன. அணுகி உடலொட்டி நின்றன. அவற்றை சேர்ந்து ஓடவிட்டு தேரை நான்குமுறை ஓட்டி பயிற்றுவித்தான். புலரிக்கு முன்னர் அவற்றுக்கு நீர் காட்டி வயிறு புடைக்கும் அளவிற்கு உப்பிட்ட உலர் புல்லை ஊட்டி நிறுத்தினான். அவை ஒற்றைக்கால் தூக்கி நின்றபடி தலைதாழ்த்தி துயிலத் தொடங்கின. போருக்குச் செல்வதற்கு முன் புரவிகளுக்கு வெல்ல உருண்டைகளை

அளிப்பதுண்டு. போர் நடுவே வெல்லமும் உப்பும் கலந்த நீர் அவற்றுக்கு அளிக்கப்படும். அவனே சென்று நீரை நோக்கி உறுதிசெய்துகொண்டான்.

கருக்கிருட்டு செறிந்து கொண்டிருந்தபோது அவன் மரவுரியால் தன் உடலைத் துடைத்து புதிய மரவுரி அணிந்து தோற்கச்சை கட்டி கவசங்களை அணிந்துகொண்டான். கையுறைகளை இழுத்துவிட்டு கையில் சவுக்குடன் தேர் அருகே ஒருங்கி நிண்றான். தன் உள்ளம் ஆழ்ந்த நிறைவுகொண்டிருப்பதை உணர்ந்தான். புவியில் இனி ஏதும் எஞ்சியிருக்கவில்லை என்பதுபோல. விழைவதற்கோ எய்துவதற்கோ. அவன் அந்த நிறைவை ஓர் எடையாக உடலெங்கும் உணர்ந்தான்.

புரவிகள் விழித்தெழுந்தன. அவற்றிலொன்று அவனை அழைத்தது. அவன் எழுந்துசென்று அவற்றுக்கு மீண்டும் நீர் வைத்தான். அவை சிறுநீர் கழித்து சாணியுருளைகள் பொழிந்து ஒன்றை ஒன்று முகர்ந்து அடையாளம் கண்டுகொண்டபின் குளம்புகள் மிதிபட கால்களை தூக்கி வைத்தன. ஈரப்புல் கற்றைகளை வைத்தபோது தலைகுலுக்கியபடி புல்லை தின்னத் தொடங்கின. அவற்றின் தாடைகள் இறுகி அசைவதை, வால் சுழல்வதை, உடல் விதிர்ப்பதை அவன் நோக்கிக்கொண்டிருந்தான். அவையும் தானுணர்ந்த அந்த நிறைவை கொண்டிருப்பதாகத் தோன்றியது.

பீஷ்மர் வருவதற்காக அவன் காத்திருப்பதை உணர்ந்த காவலன் “நேற்று இங்கிருந்து அவர் செல்கையில் நான் பார்த்தேன். ஆனால் அவர் செல்கிறார் என்பது எனக்கு தோன்றவில்லை. வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தேன்” என்றான். சீற்றத்துடன் திரும்பிய துண்டிகன் “இனி ஒரு சொல் உமது நாவில் எழுமென்றால் சூதனின் எல்லைகடந்து இந்தத் துரட்டியால் உமது கழுத்தை நான் அறுக்கவேண்டியிருக்கும்” என்றான். காவலன் வெறித்து நோக்கியபின் மீண்டும் சென்று தன் சிறுபீடத்தில் அமர்ந்தான். துண்டிகன் அமர்ந்து கைகளை கோத்துக்கொண்டான்.

மெல்ல உடலும் உள்ளமும் அடங்கியபோது அந்தச் சினம் ஏன் என துண்டிகன் வியந்துகொண்டான். அச்சிறுமையாளன் அரிய ஒன்றை கலைத்து ஊடுருவினான் என்பதனாலா? அல்ல, அவனைப் போன்றவர்கள் பிறிதொரு உலகில் வாழ்பவர்கள். அவர்கள் நாணல்கள்போல, புயலுக்குப் பின்னரும் எஞ்சுபவர்கள். ஆம், அதுதான். இவன் எஞ்சியிருப்பான். புரவியின் காலடிகள் ஒலிப்பதைக் கேட்டு துண்டிகன் செவி கொண்டான். பீஷ்மரின் புரவி அது என்பதை எந்த முன்னறிதலுமின்றி அவன் உள்ளம் உணர்ந்தது.

அவன் எழுந்து நின்றான். துள்ளலுடன் வந்த புரவி அணுகி திரும்பி நிற்க பீஷ்மர் இறங்கி வந்தார். அவரது உடலில் இருந்து ஒளி எழுந்து பரவுவதாக தோன்றியது. கருக்கிருள் எங்கும் சூழ்ந்திருந்தபோது மிகத் தெளிவாக அவரை பார்க்க இயன்றது. தவத்தில் நிறுவிக்கொண்ட முனிவர்களின் உடலில் தன்னொளி உண்டென்று அவன் கேட்டிருந்தான். இரவில் துயிலும்போது விளக்கு ஏற்றிவைக்கப்பட்ட படிகக்கலம் என அவர்களின் உடல் துலங்கும் என்பார்கள். அது மெய்தான். அல்லது தன் விழிமயக்கா?

பீஷ்மர் அவனை அணுகி புன்னகைத்து “நன்று, சித்தமாகிவிட்டாய்” என்றார். “ஆம், ஆசிரியரே” என்றான் துண்டிகன். “சற்று நேரம். நானும் ஒருங்கிவிடுவேன்” என்று பீஷ்மர் சொன்னார். துண்டிகன் “தாங்கள் சற்று ஓய்வெடுக்கலாம், ஆசிரியரே” என்றான். “நெடுநாள் ஓய்வெடுத்துவிட்டேன். இன்னும் சிறு பொழுதுதான்” என்றபடி பீஷ்மர் உள்ளே சென்றார். அவருக்கு உதவும்பொருட்டு செல்வதா வேண்டாமா

என்று தயங்கியபடி துண்டிகன் நின்றான். பின்னர் சவுக்கை கீழே வைத்துவிட்டு பீஷ்மரை அணுகினான்.

பீஷ்மர் மரவுரியால் தன் உடலை துடைத்துக்கொண்டிருந்தார். அவன் அருகே சென்று அந்த மரவுரியை வாங்கும் பொருட்டு கைநீட்டினான். “தொட வேண்டாம்” என்று பீஷ்மர் சொன்னார். “பிழை பொறுக்கவேண்டும்” என்று பதறி அவன் கையை பின்னிழுத்துக்கொண்டான். அவர் நிமிர்ந்து நோக்கி “என்னை இப்போது எவரும் தொடலாகாது” என்றார். அவர் சொல்வதென்ன என்று அவனுக்கு புரியவில்லை. அவர் பீஷ்மர்தானா கந்தர்வர்கள் எவரேனும் அவ்வடிவில் வந்திருக்கிறார்களா என்ற ஐயத்தை அவன் அடைந்தான்.

பீஷ்மர் எழுந்து தன் மரவுரி ஆடையைத் துறந்து சிறிய மூங்கில்பேழையிலிருந்து புதிய மரவுரி ஒன்றை எடுத்து அணிந்தார். புதிய இடைக்கச்சையையும் கையுறைகளையும் அணிந்தார். புதிய தோல்நாடா ஒன்றை எடுத்து குழலை மரச்சீப்பால் நீவி கட்டினார். அவனிடம் “அந்தப் பெட்டியில் இருந்து என் குறடுகளை எடு” என்றார். அவன் பனையோலைப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து புத்தம்புதிய இரும்புக்குறடுகளை எடுத்து வைத்தான். அவர் பீடப்பெட்டியில் அமர்ந்து அதை தன் கால்களில் அணிந்துகொண்டார். கவசங்களும் புதியனவாக இருக்குமோ என அவன் எண்ணினான். அவர் கைசுட்டி “உம்” என்றார். அந்தப் பெட்டியில் அவருடைய கவசங்கள் உலையிலிருந்து அப்போதுதான் வந்தவை போலிருந்தன. அவர் அவற்றை அணிந்துகொண்டு எழுந்தபோது முதல்நாள் போருக்கெழுந்தவர் போலிருந்தார்.

அவருடைய வில்மட்டும் மாறவில்லை. அதை எடுத்து ஒருமுறை வளைத்து நோக்கியபின் “நான் சித்தமாகிவிட்டேன்” என்றார். அவர் முகம் அவன் அதுவரை கண்டிராத புன்னகையுடன் இருந்தது. எண்ணி எண்ணி மகிழும் எதையோ நெஞ்சுள் கொண்டவர்போல விழிகள் ஒளிகொண்டிருந்தன.

சுருதகீர்த்தி பிரதிவிந்தியனின் பாடிவீட்டை அடைந்தபோது அங்கு சதானீகனும் சுதசோமனும் இருந்தனர். கவச உடையணிந்திருந்த அவன் புரவியிலிருந்து இறங்கி ஏவலனிடம் கடிவாளத்தை அளித்துவிட்டு சிறிய பெட்டி மேல் அமர்ந்து ஏவலன் கவசங்கள் அணிவிக்க முழங்கையை கால்மடித்த முட்டுகளில் ஊன்றி நிலம் நோக்கி அமர்ந்திருந்த பிரதிவிந்தியனை அணுகி “வணங்குகிறேன், மூத்தவரே” என்றபின் அப்பால் கைகட்டி நின்றிருந்த சுதசோமனை நோக்கி “சுருதசேனன் வரவில்லையா?” என்றான். “இல்லை” என்று சுதசோமன் தலையசைத்தான்.

சுருதகீர்த்தி திரும்பிப்பார்க்க அப்பால் நின்ற ஏவலன் வந்து மென்மரத்தாலான பெட்டியை அவன் அமரும்பொருட்டு வைத்தான். அவன் அமர்ந்துகொண்டு “வரும் வழியெங்கும் கெடுநாற்றம் வீசுவதுபோல் உணர்ந்தேன்” என்றான். “ஏன்?” என்று பிரதிவிந்தியன் விழிகளைத்தூக்கி கேட்டான். “வீரர்கள் நேற்று இரவு முழுக்க களியாடிக் கொண்டிருந்திருக்கிறார்கள். துயின்று எழுந்த பின்னரும் அதே உளநிலை நீடிக்கிறது” என்றான். “அதனால் என்ன?” என்றான் பிரதிவிந்தியன். சுருதகீர்த்தி “கீழ்மை!” என்றான். “அது எப்போதுமுள்ளதுதானே?” என்றான் பிரதிவிந்தியன்.

“மூத்தவரே, நேற்று அவர்கள் அந்த உளநிலையில் இருந்ததை அகிபீனாவின் வெறியென்றோ போருக்குப் பிந்தைய உளச்சோர்விலிருந்து வெளிவரும் முயற்சியென்றோ சொல்லலாம். அது அவர்களிடமில்லை. அத்தருணத்தில் அவர்கள் மேல் கூடும் தெய்வங்கள் மண்ணின் ஆழத்திருலிருந்தும் இருளுக்கு அப்பாலிருந்தும் வருபவை. ஆனால் துயின்றெழுந்து படைக்கலம் அணிந்துகொண்டிருக்கும் அவர்கள் இன்று கொண்டிருக்கும் உணர்ச்சி அவர்களுடையதேதான்” என்றான் சுருதகீர்த்தி.

சுதசோமன் “அவர்கள் உள்ளிலிருந்தும் பேய்த்தெய்வங்கள் எழுந்து வரலாம்” என்றான். அவனை வெறுமனே நோக்கியபின் எரிச்சலுடன் “சென்று சற்று சுற்றி பாருங்கள். அவர்களின் சொற்களை செவிகொள்ளுங்கள். இந்த மூன்று யுகங்களின் மானுடம் இங்கு படைத்துள்ள அனைத்து நெறிகளும், அனைத்து அறங்களும், அத்தனை அழகுகளும், மேன்மைகளும் இடிந்து சரிந்து கிடப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். ஒன்றும் மிச்சமில்லை. தாய் என்றும் மனைவியென்றும் மகளென்றும் பாராத நிலை என்று பேச்சுகளில் கேட்டிருக்கிறேன், இங்குதான் செவிகளால் அறிந்தேன்” என்றான்.

தலையை மீண்டும் உலுக்கி “எண்ணிச் சென்றடையாத கீழ்மை. எத்தனை ஆழங்களுக்கு மனித உள்ளத்தால் சென்றடைய முடிகிறது! மூத்தவரே, அத்தனை ஆழங்களுக்குச் சென்றாலும் மனிதனுக்கு சொல்லுக்கு பஞ்சம் ஏற்படுவதில்லை. அவையனைத்தையும் அவன் எங்கோ ஏற்கெனவே சொல்லாக்கி சேர்த்திருக்கிறான் என்று பொருள். அடுக்கடுக்காக செல்லும் பாதாளக் கரவறைகளில் நிறைந்துள்ளன அவன் ஒருபோதும் வெளியே எடுத்து நோக்கியிராதவை. அழுக்குகள், அழுகல்கள், நஞ்சுகள்” என்றவன் கண்களை மூடிக்கொண்டு “புழுக்களும் மலமும் சீழும் மலைமலையாக கொட்டிக்கிடப்பதுபோல்… அவை பேராறுகளாக ஓடுவதுபோல்” என்றான்.

சுதசோமன் “மேன்மைகளில் அவ்வளவு உச்சத்திற்கு உள்ளம் சென்று சொல்லை அடையமுடியுமெனில் அதே விசை ஊசலின் மறுமுனைக்கும் இருக்குமல்லவா?” என்றான். “உங்கள் கசப்பை பங்கிட நான் இங்கு வரவில்லை, மூத்தவரே” என்றான் சுருதகீர்த்தி. “பின் எதற்காக வந்தாய்? அவருடைய நூலறிவை பங்கிடவா? எந்த நூலறிவனும் சில ஆயிரம் பக்கங்களை புரட்டிவிட்டால் எஞ்சுவது இதே கசப்புதான்” என்று சுதசோமன் சொன்னான். “மந்தா, அவனை பேசவிடு” என்றான் பிரதிவிந்தியன். சுதசோமன் “நான் தேர்கள் ஒருங்கியுள்ளனவா என்று பார்க்கிறேன்” என்று கவசங்கள் உரசியும் குலுங்கியும் ஒலிக்க கிளம்பிச் சென்றான்.

சுருதகீர்த்தி “இவர்கள் யார், மூத்தவரே? இவர்கள் அல்லவா எழவிருக்கும் புதிய வேதத்தின் பொருட்டு போர்புரிபவர்கள்? புத்துலகை ஆக்கும் நெறிகளை இங்கு நிறுவப்போகிறவர்கள்? இத்தனை கீழ்மைகளிலிருந்தா அது முளைக்கும்?” என்றான். பிரதிவிந்தியன் “இரு ஒப்புமைகளை நூல்களிலிருந்து எடுத்து நான் சொல்ல முடியும். இளையோனே, சீழும் குருதியும் கலந்த கருப்பையிலிருந்தே குழவி எழுகிறது. மட்கி அழுகும் சேற்றிலிருந்தே தாமரை முளைத்து மேலெழுகிறது” என்றான். “எந்த ஒப்புமைகளும் இதற்கு பொருந்தாது” என்று சுருதகீர்த்தி சொன்னான். “ஒப்புமைகளைக்கொண்டு விளையாடத் தொடங்கினால் முடிவே இல்லை.”

“ஒப்புமைகளைப் பற்றி கல்லாதவர்களிடம் ஒரு ஒவ்வாமை இருக்கிறது. அது வெறுமனே கற்றோரின் வெற்று உளப்பயிற்சி என்றும், கற்பனையின் விளையாட்டென்றும் எண்ணுகிறார்கள். இளையோனே, இப்புவியில் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடத்தக்கவை என்பதிலேயே உண்மை ஒன்று ஒளிந்துள்ளது. ஓர்

உளநிகழ்வையோ புவிநிகழ்வையோ பொருட்களால் ஒப்புமைப்படுத்திவிட முடியுமென்பதுதான் மானுட அறிதலுக்கு இறை அளித்துள்ள ஒரே வாய்ப்பு. இப்புவியையும் மானுட உள்ளத்தையும் விண்நிறைந்த பிரம்மத்தையும் அறிந்துகொள்வதற்கு ஒப்பிடுவதன்றி வேறுவழியில்லை. பிரம்மம் என்பதே ஒரு மாபெரும் ஒப்புமை மட்டுமே" என்றான் பிரதிவிந்தியன். "அடிப்படையில் அறிவு என்பது ஒப்புமைகளை உருவாக்கும் திறன் மட்டுமே. மெய்மை என்பது ஓர் அழகிய ஒப்புமையே."

அப்பால் கைகட்டி நின்ற சதானீகன் "நீங்களேகூட ஓர் ஒப்புமை வழியாகவே அங்கு நிகழ்ந்ததென்ன என்று சொன்னீர்கள், மூத்தவரே" என்றான். "சீழும் மலமும் குருதியும் போன்ற சொற்கள்." களைப்புடன் "ஆம்" என்று சுருதகீர்த்தி சொன்னான். பிரதிவிந்தியன் அவன் தோள்மேல் கைவைத்து "எண்ணிப் பார், உடல் கிழித்து வெளிவரும் குருதி எத்தனை தூய்மையானது. தெய்வங்களுக்கு அமுதென அதை படைக்கிறோம். நாமும் சமைத்து உண்கிறோம். அழகியது, அன்று பூத்த செம்மலரின் ஒளிகொண்டது. அனலுக்கு நிகரானது. நீரில் எழுந்த அனல் என்று அதை தொல்நூல்கள் சொல்கின்றன. ஆனால் இரு நாழிகைப்பொழுது கடந்தால் அது சீழ். மேலும் இரு நாழிகை கடந்தால் மலம். முத்தமிட்டு உடல்சேர்த்து நாமறியும் குழவிகூட தன் உடலுக்குள் கொண்டிருப்பது குருதியும் மலமும்தான்" என்றான்.

"இதைப்பற்றி பேசிப் பேசி குறைத்துக்கொள்ளலாம், மூத்தவரே. ஆனால் அங்கு வெளியே எழுந்திருக்கும் இருட்டை எவ்வகையிலும் அகற்றிவிட இயலாது" என்றான் சுருதகீர்த்தி. சதானீகன் "அவர்கள் மெய்யாகவே அதனூடாக ஒரு விடுதலையை உணர்கிறார்கள். இந்தப் பத்தாவது நாள் போர் எந்த நம்பிக்கையும் எஞ்சாத இருண்ட சுவரில் முட்டி நின்றுவிட்டிருக்கிறது. இனி பொருளற்ற சாவன்றி எதுவும் எஞ்சியிருக்கவில்லை. அந்தப் பெருஞ்சலிப்பிலிருந்து இவ்வாறு எளிய விடுதலையை அடைகிறார்களா?" என்றான். "ஆம், இருக்கலாம்" என்று பிரதிவிந்தியன் சொன்னான். "சோர்விலிருந்தும் துயரிலிருந்தும் மீள்வதற்கு மானுடர் காமத்தையே கருவியாக்குகிறார்கள். மெய்யாகவே அது அவர்களை விடுதலை செய்கிறது" என்றான்.

"இது காமம் அல்ல" என்று கைநீட்டி சுருதகீர்த்தி சொன்னான். பற்களைக் கடித்து தாடை இறுகியசைய "இங்கிருப்பது மாபெரும் மறுப்பு. ஆம், மறுப்பு. மூத்தவரே, காமம் என்பது மாபெரும் ஏற்பு. பெண்ணை, அழகை, களிப்பை முற்றேற்கும் நிலை. அதை சூழ்ந்திருக்கும் இப்புவியின் ஆயிரம் ஆயிரம் இனியவற்றை ஏற்பது அது. அவர்கள் அங்கே செய்து கொண்டிருப்பது காமக்கொண்டாட்டமல்ல, காம மறுப்பு. முடிவிலாத இழிசொற்களால் காமத்தை கீழ்மையினும் கீழ்மை என்றாக்குகிறார்கள். அரசை, அறத்தை, தெய்வங்களை, மூதாதையரை, குடிமாண்பை, அனைத்தையும் இழிவுசெய்கிறார்கள்" என்றான்.

"அது ஒரு உளநடிப்பாக இருக்கலாம்" என்றான் சதானீகன். "இந்த உச்சத்தில் அவை எதுவும் தங்களை காக்கவில்லை என்ற சினமாக இருக்கலாம்." பிரதிவிந்தியன் "அத்துடன் அவற்றில் ஏதேனும் ஒரு துளி தங்களிடம் எஞ்சியிருந்தால் இத்தருணத்தை எதிர்கொள்ள முடியாது என்பதனால் அவர்கள் அதை உதறிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. மலை ஏறுபவர்கள் எடை குறைப்பதுபோல் அவற்றைக் கழற்றி கீழிட்டு செல்கிறார்கள் போலும்" என்றான்.

சுருதகீர்த்தி எழுந்துகொண்டு "எனக்குத் தோன்றுவது பிறிதொன்று. இதுநாள் வரை அவர்கள் இறப்பை அஞ்சி அணிந்து வந்த கவசங்களை ஒவ்வொன்றாக கழற்றி வீசுகிறார்கள். ஆடையும் கவசமே. வாய்ப்பிருக்கும் தருணங்களிலெல்லாம்

ஆடைகளை கழற்றி வீசுவதே மானுட இயல்பு. மானுடரின் விடுதலையும் இன்பமும் ஆடையற்ற நிலையிலேயே அமைகின்றன. இது ஒருவகை நிர்வாணம்” என்றான். பிரதிவிந்தியன் “இதைப்பற்றியும் நூல்கள் சொல்கின்றன. இது வைதரணி. அனைத்துக் கீழ்மைகளும் ஓடும் பெருநதி. யோகிகள் பல்லாயிரம் படிகளை ஏறி சென்றடையும் எல்லை. இந்த வீரர்கள் பின்னிருந்து துரத்தும் இறப்பால் அதன் கரைவரை வந்தடைந்துவிட்டார்கள்” என்றான்.

சுருதகீர்த்தி அதை கேட்காதவன்போல் அமர்ந்திருக்க பிரதிவிந்தியன் “இப்பல்லாயிரங்களில் ஒருவர் அதை கடந்தால் நன்று” என்றான். “அதில் மூழ்கி அழியும் பிறர் பொருட்டு ஒருவரேனும் அமுதை அறியவேண்டும்” என்றான் சுருதகீர்த்தி. பிரதிவிந்தியன் எழுந்துகொண்டு சிரித்து “யோகிகளிலும் பல்லாயிரத்தில் ஒருவரே சென்றடைகிறார்கள் எனப்படுகிறது” என்றான். சுருதகீர்த்தி “காலையிலிருந்தே விந்தையான ஓர் உளக்கலக்கம். கிளம்பி இங்கு வருவதற்குள் இக்காட்சி அக்கலக்கத்தை பெருமடங்கு பெருக்கியது” என்றான்.

பிரதிவிந்தியன் வினாவுடன் நோக்க “நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். நான் ஊழ்கத்தில் அமர்ந்திருக்கும் பீஷ்ம பிதாமகரின்மேல் அம்புகளைச் செலுத்தி அவரை வீழ்த்துகிறேன். அவர் ஒரு கரிய மலைப்பாறை மேல் அமர்ந்திருப்பதாகவே அம்பு செலுத்தும்போது நான் கண்டேன். ஆனால் அவர் உடல்மடங்கி குருதி சிந்தி விழுந்தபோது அந்தப் பாறை ஓர் அன்னையின் மடி என்று உணர்ந்தேன். அவ்வன்னை கல்லாலான தன் பெருங்கைகளால் அவரை எடுத்து தன் நெஞ்சோடணைத்து குனிந்து அவர் முகத்தை நோக்கி விழிநீர் சிந்துவதை பார்த்தேன்” என்றான் சுருதகீர்த்தி.

“விழித்துக்கொண்டு எழுந்து வெளிவந்தபோது விடிவெள்ளி முளைத்திருந்தது. என் அணுக்க ஒற்றன் வந்து ஒரு செய்தி சொன்னான். நேற்றிரவு தந்தையர் ஐவரும் சிகண்டியும் இளைய யாதவரும் மட்டும் இளைய யாதவரின் குடிலில் சந்தித்திருக்கிறார்கள்” என்றான். “ஆம், நானும் அறிந்தேன்” என்று பிரதிவிந்தியன் சொன்னான். “நாமறியாத ஏதேனும் படைசூழ்கைகள் வகுத்திருக்கலாம். அது எதுவாயினும் உயர்ந்ததல்ல” என்றான் சுருதகீர்த்தி. “எவ்வாறு சொல்கிறாய்?” என்று பிரதிவிந்தியன் கேட்டான். “எதுவும் கீழ்மை கொள்ளும்தோறும் மந்தணமாகிறது” என்றான் சுருதகீர்த்தி.

பிரதிவிந்தியன் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. சுருதகீர்த்தி “இன்றுடன் இந்தப் போரின் தேக்கம் முடிவடையுமென்றும், எங்கோ ஓர் உடைப்பு நிகழுமென்றும் ஓர் உள்ளுணர்வு எனக்கிருக்கிறது” என்றான். பிரதிவிந்தியன் “ஆம், இன்றோ நாளையோ. எந்தத் தேக்கமும் அவ்வாறே முடிவிலாது நீடிக்க இயலாது. ஒழுக்கே புடவியின் இயல்பு. தேக்கம் என்பது ஒழுக்குக்காக ஒவ்வொரு அணுவும் தன் எல்லைகளை முட்டிக்கொண்டிருக்கும் நிலை மட்டுமே. எங்கேனும் ஏதேனும் ஒரு வாயில் உடைந்து திறந்தே ஆகவேண்டும்” என்றான்.

“இன்று பீஷ்மர் களம்படுவார்” என்று சுருதகீர்த்தி சொன்னான். “என்ன சொல்கிறாய்?” என்று பிரதிவிந்தியன் திகைப்புடன் கேட்டான். “மூத்தவரே, எண்ணி நோக்கினால் தெள்ளத்தெளிவாக தெரிவது அது. பீஷ்மர் களம்படாமல் இந்த தேக்க நிலையில் மயிரிழை அளவுகூட மாற்றம் ஏற்படப் போவதில்லை. இளைய யாதவர் இன்று முதன்மையாக விழைவது அதையே. சிகண்டி பீஷ்மரைக் கொல்லும் நோன்பு கொண்டவர். அவருடனும் அவர் மைந்தருடனும் அமர்ந்து தந்தையர் சொல்லாடுகிறார்கள் என்றால் பீஷ்மரை வீழ்த்தும் வழியொன்றை கண்டுவிட்டார்கள் என்றே பொருள்.”

“இந்த ஒன்பது நாளும் பீஷ்மரை வீழ்த்தவே முயன்றுகொண்டிருக்கிறோம்” என்றான் பிரதிவிந்தியன். “ஆம், இதுவரை பீஷ்மரை வீழ்த்த முயன்றவர்கள் பிறர். இன்று முதல்முறையாக அதற்கு இளைய யாதவர் எழுகிறார்” என்றான் சுருதகீர்த்தி. பிரதிவிந்தியன் அவனை வெறுமனே நோக்கினான். “மூத்தவரே, தாங்கள் அதை உணரவில்லையா, இளைய யாதவர் வெல்லற்கரியவர் என்று? அவர் முயற்சிகள் எதுவும் பிழைபடப்போவதில்லை என்று? இங்கு நிகழ்வன அனைத்தையும் முன்னரே கடந்து அங்கு சென்று நின்று நாம் அங்கு செல்வதற்காக காத்திருக்கிறார்” என்றான்.

“ஆம், சில தருணங்களில் இவை அனைத்தையும் அவரே இயற்றுகிறார் என்று தோன்றும். சில தருணங்களில் அவர் பார்வையாளராக அமர்ந்திருக்கும் மாபெரும் கூத்துமேடையில் நாம் அனைவரும் நடித்துக் கொண்டிருப்பதாக தோன்றும். இளமையிலிருந்தே அவரைப்பற்றி சொல்லிச் சொல்லி அவரை நாம் அணுகவோ அறியவோ முடியாதபடி மாற்றி வைத்திருக்கிறார்கள்” என்றான். “அணுகவோ அறியவோ முடியாதவர் என்னும் உண்மையை நமக்கு கற்பித்திருக்கிறார்கள்” என்றான் சுருதகீர்த்தி. “எவ்வாறாயினும் அது நிகழட்டும். அறமிலி என்று அவருக்கு ஒரு பெயர் இருக்கிறது” என்றான் பிரதிவிந்தியன். “சூதர்கள் அவரை சொல்லும் ஆயிரம் சொற்களில் அதுவும் ஒன்று. அறவடிவன், அறமிலி, அறம்கடந்தோன்.”

“இன்று அவ்விரண்டாம் பெயர் சூடி நின்றிருக்கப் போகிறாரா?” என்று சுருதகீர்த்தி கேட்டான். “அறியமுடியாதவர் என்று முன்னரே சொல்லிவிட்டோம். அதன்பின் நாம் ஏன் இத்தனை சொல்லெடுக்க வேண்டும்?” என்றான் பிரதிவிந்தியன். சுதசோமன் நடந்து வந்து “மூத்தவரே, தேர்கள் ஒருங்கிவிட்டன. நாம் இப்போது கிளம்பினால்தான் களமுனைக்கு செல்ல முடியும். பொழுதில்லை” என்றான். பின்னர் சுருதகீர்த்தியிடம் “நானும் கேட்டேன் படைவீரர்களின் பாடலை. மிக அரிய சொல்லாட்சிகள். ஆனால் என்ன விந்தை என்றால் எவையுமே எனக்கு புதியவை அல்ல. அவற்றை அவ்வாறு சொல்லக்கூடும் என்பதில்தான் புதுமை உள்ளது” என்றான்.

“அத்தனை சொற்களையும் மொழியறிந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளேயே நானும் அறிந்திருக்கிறேன்” என்றான் சதானீகன். “மொழியை அறியும்போது அவ்வனைத்தும் கூடவே வந்துவிட்டிருக்கின்றன.” பிரதிவிந்தியன் “செல்வோம்” என்று சொல்லி சுருதகீர்த்தியின் தோளில் தட்டிவிட்டு தேர் நோக்கி சென்றான். சுருதகீர்த்தி தொடர்ந்தான். அவனுடன் நடந்தபடி சதானீகன் “மூத்தவரே, தாங்கள் உணரவில்லையா?” என்றான். “என்ன?” என்றான் சுருதகீர்த்தி. “இந்தக் கீழ்மை ஏன் என்று?” என்றான் சதானீகன். “ஏன்?” என்றான் சுருதகீர்த்தி. “பிதாமகர் வீழ்வார். அறமிலா வழியால். அக்கீழ்மையை எதிர்கொள்ள படையினர் உளம் ஒருங்குகின்றனர்.” சுருதகீர்த்தி நின்று கூர்ந்து நோக்கினான். “அவர்களை ஆளும் தெய்வங்கள் அங்கே அவர்களை கொண்டுசென்று நிறுத்துகின்றன” என்று சதானீகன் சொன்னான். சுருதகீர்த்தி ஒன்றும் சொல்லாமல் நடந்தான்.

களமுனை நோக்கி அவர்கள் தேரில் சென்றுகொண்டிருக்கையில் பக்கவாட்டில் இருந்த ஏழாம் படைப்பிரிவின் முகப்பில் ஷத்ரதர்மனும் ஷத்ரதேவனும் நின்றிருப்பதை சுருதகீர்த்தி பார்த்தான். “மூத்தவரே, பாஞ்சாலர் சிகண்டியின் மைந்தர்” என்றான். சுதசோமன் திரும்பிப்பார்த்து “நேற்றே அவர்களை பார்த்தேன். தந்தையைப்போன்றே இருக்கிறார்கள்” என்றான். பிரதிவிந்தியன் திரும்பிப்பார்த்து “எந்த உடல் ஒப்புமையும் இல்லையே?” என்றான். “ஆம், முற்றிலும்

பிறிதொரு உடலில் அவர் எழுந்ததுபோல் இருக்கிறார்கள். கல்லில் சுடரை செதுக்கி வைத்ததுபோல்” என்றான் சுதசோமன்.

பிரதிவிந்தியன் தேரை நிறுத்த அவர்களிருவரும் அருகே வந்து தலைவணங்கினர். பிரதிவிந்தியன் அவர்களின் தலைதொட்டு வாழ்த்தினான். ஷத்ரதேவன் “தங்களை பாடிவீட்டுக்கு வந்து கண்டு வணங்கி நற்சொல் பெறவேண்டுமெனும் விழைவு இருந்தது. ஆனால் நேற்றுதான் இங்கு வந்தோம். இன்று புலரியிலேயே தந்தையுடன் போருக்குச் செல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம்” என்றான். “இங்கே பாஞ்சாலர்களின் முகப்புத்தேர்ப் படையில் எங்களுக்கு படைப்பணி ஒதுக்கப்பட்டுள்ளது.”

சுருதகீர்த்தி “நீங்கள் வில்பயின்றவர்களா?” என்றான். “ஆம், இருவருமே தந்தையால் வில்லெடுத்து அளிக்கப்பட்டு பயின்றிருக்கிறோம். எங்கள் நாட்டின் விற்தொழில் சற்று மாறுபட்டது. நாங்கள் அம்புகளை கீழ்நோக்கி செலுத்துவோம். அவை நீரில் பட்டு மேலெழுவதுபோல் காற்றிலேயே வளைந்தெழுந்து இலக்குகளை தாக்கும். முதன்மை வில்லவர் அன்றி பிறர் எங்கள் அம்புகளை தடுக்க இயலாது” என்று ஷத்ரதேவன் சொன்னான். சுருதகீர்த்தி “உங்கள் தந்தை எங்கிருக்கிறார்?” என்றான். “படைமுகப்பில்” என்று ஷத்ரதேவன் மறுமொழி சொன்னான்.

பிரதிவிந்தியன் ஒருகணம் எண்ணியபின் சுருதகீர்த்தியிடம் “இளையோனே, உனது படைப்பணி எங்கு ஒதுக்கப்பட்டுள்ளது? என்றான். “பாஞ்சாலப் படைகளில்தான்” என்று சுருதகீர்த்தி சொன்னான். “தந்தைக்குப் பின்னால் காவல் அணியாக செல்லும்பொருட்டு இன்றும் பணிக்கப்பட்டுள்ளோம்.” பிரதிவிந்தியன் “நன்று, இம்மைந்தரை நீயே உடன் அழைத்துச் செல்க!” என்றபின் “இவர்கள் உன் பொறுப்பில் களம் காணட்டும்” என்றான். அவன் சொல்வதை புரிந்துகொண்டு சுருதகீர்த்தி தலைவணங்கினான்.

ஷத்ரதேவனும் ஷத்ரதர்மனும் உடன்வர சுருதகீர்த்தி பாஞ்சாலப் படைகளினூடாக சென்றான். அவர்கள் சொல்லின்றி புரவியில் உடன்வந்தனர். சுருதகீர்த்தி ஷத்ரதர்மனைப் பார்த்துவிட்டு “இவர் பேசுவதில்லையா?” என்றான். “இல்லை, இளமையிலேயே அவனுக்கும் சேர்த்து நான் பேசுவது வழக்கமாகிவிட்டது” என்று ஷத்ரதேவன் சொன்னான். “தந்தையை பார்த்தீர்கள் என்று அறிந்தேன்” என்றான் சுருதகீர்த்தி. “ஆம். ஆனால் எப்போதும் அவரை பார்த்துக்கொண்டே இருப்பதுபோல்தான் உணர்ந்தோம். ஆகவே நேற்றைய சந்திப்பு எவ்வகையிலும் புதிய நிகழ்வாக அமையவில்லை. என்றுமென நேற்றும் கண்டோம் என்று மட்டுமே தோன்றுகிறது.”

சுருதகீர்த்தி தன்னுள்ளிருந்து எழுந்த அறியாச் சீற்றமொன்றை அறிந்து வியந்து அதை அடக்கிக்கொள்ள முயல்வதற்குள்ளாகவே அவன் நா அதை கூறியது. “அது நன்று. இன்றுடன் அவர் களம்பட்டாலும் உங்களுடன் அவர் இருந்துகொண்டிருப்பார்.” ஆனால் ஷத்ரதேவனின் விழிகளில் எந்த மாறுதலும் தென்படவில்லை. “ஆம், அவர் எப்போதும் எங்களுடன் இருப்பார். எங்கள் குடிகளில் வாழ்வார்.” சுருதகீர்த்தி அவனை திரும்பிப் பார்த்துவிட்டு “மைந்தர்கள் உள்ளனரா?” என்று கேட்டான். “இருவருக்கும் சேர்த்து ஏழு மைந்தர்கள்” என்று ஷத்ரதேவன் சொன்னான். “அது எங்கள் தந்தையின் ஆணை.”

அவர்கள் படைமுகப்பிற்குச் சென்று சேர்ந்தனர். அங்கே தேரில் நின்றிருந்த சிகண்டியை தொலைவிலிருந்தே சுருதகீர்த்தி பார்த்தான். ஒவ்வொரு முறை அவரை பார்க்கும்போதும் ஏற்படும் புரிந்துகொள்ளமுடியாத துணுக்குறல் அப்போதும் ஏற்பட்டது. பல்லாயிரம் பேரின் நடுவே நின்றிருக்கையிலும் அவர் அவர்களில்

ஒருவரல்ல என்றும், உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் முற்றிலும் பிறிதொருவர் என்றும் தோன்றும். மானுட உடலில் தெய்வங்கள் குடியேறுகையில் அத்தெய்வத்திற்குரிய தனித்தன்மை ஒன்று உடலில் தோன்றுவதுபோல. சினம் மிக்க காவல்தெய்வங்கள் எழுகையில் உடலெங்கும் ஒவ்வொரு தசையிலும் சினம் எழும். துயர் மிகுந்த அன்னை தெய்வங்கள் நனைந்த துணிப்பாவைபோல் அவ்வுடலை துயரத்தால் நிறைத்துவிடும். தெய்வங்களின் கோணல் தெய்வங்களின் கூர் உடலென்றே விழிக்கு தென்படும்.

சிகண்டியின் உடலுக்குள் விளங்கும் தெய்வமென்ன என்று அவன் வியப்பதுண்டு. அது வில்லிழுத்துக் கட்டிய நாணில் திகழும் தெய்வம் என்று ஒருமுறை எண்ணினான். அவர் உடலில் அனைத்துத் தசைகளும் இறுகி நின்றிருக்கும். நூற்றுக்கணக்கான நாண்கள் இழுத்துக் கட்டப்பட்ட விற்களின் தொகை. அல்லது நாண்முறுகி ஆணி நிலைத்த எழுபத்துநான்கு நரம்புகொண்ட பேரியாழ். மானுட உடலில் எப்போதும் ஒரு தசை இறுகினால் பிறிதொரு தசை தளரும். ஒன்று உறைந்தால் பிறிதொன்று நெகிழும். ஒவ்வொன்றும் இறுகி நின்றிருக்கும் ஓர் உடலென்று அவன் அவரை நினைத்துக்கொள்வதுண்டு.

அணுகிச் செல்லுந்தோறும் சிகண்டி மேலும் தெளிந்து வந்தார். முதலில் அவர் உடலை அப்போதுதான் அத்தனை தூய்மையாக பார்ப்பதாக அவனுக்கு தோன்றியது. குழலை சீவி கட்டியிருந்தார். தாடியையும் சீவி நுனியில் முடிச்சிட்டு நெஞ்சில் இட்டிருந்தார். இடையிலும் மார்பிலும் புதிய தோலாடைகள் அணிந்திருந்தார். கச்சை புதிதாக இருந்தது. அதில் பளபளக்கும் பிடி கொண்ட குத்துவாள். கவசங்கள் நன்கு தீட்டப்பட்டவைபோல நீரொளி கொண்டிருந்தன. கால்குறடுகள்கூட வெள்ளியென மின்னின. வில்லும் அம்பறாத்தூணியும் மட்டும் குருதிபடிந்து பழையவையாக இருந்தன.

அந்தக் களத்தில் எவரும் புத்தாடை அணிந்திருக்கவில்லை. மாமன்னர் யுதிஷ்டிரர்கூட மீண்டும் மீண்டும் போருக்கணிந்த, குருதி நனைந்து இறுகி மரக்கட்டை போலாகிவிட்ட மரவுரியையே அணிந்திருந்தார். ஒவ்வொரு உடலிலும் மரவுரியால் துடைத்து நீவி எடுத்த பின்னும் எஞ்சும் குருதி உலர்ந்த கரும்பசையாலான வரிகள் நிறைந்திருந்தன. காதுகளுக்குப் பின்னாலும், கழுத்திலும், தோள் மடிப்புகளிலும், கைவிரல்களின் இடுக்குகளிலும் குருதிப்பிசின் எப்போதுமிருந்தது. ஆனால் சிகண்டி நீராடி எழுந்தது போலிருந்தார்.

ஷத்ரதேவனும் ஷத்ரதர்மனும் அருகே சென்று சிகண்டியை வணங்கினர். சிகண்டி வெற்றுவிழிகளுடன் அவர்களை பார்த்தார். சுருதகீர்த்தி “இப்படைப்பிரிவின் வில்லவர்களில் ஒருவனாக நிற்கும்பொருட்டு எனக்கு ஆணை வந்துள்ளது, பாஞ்சாலரே” என்றான். விழிகளை அசைத்து அதை ஏற்ற சிகண்டி திரும்பிக்கொண்டார். அவர் நெடும்பொழுதுக்கு முன்னரே முற்றிலும் பேச்சை நிறுத்திவிட்டிருந்தார் என்பது முகத்திலிருந்து தெரிந்தது. அத்தருணத்தில் அவரால் பேச இயலாதென்பது இயல்பாகவே இருந்தது. தன்னுள் பேருணர்வுகள் நிறையும் ஒருவர் முற்றிலும் சொல்லிழப்பது இயல்பே. நேற்று இரவு என்ன நிகழ்ந்தது என்று மீண்டும் மீண்டும் எண்ணிக்கொண்டிருந்தாரோ?

அப்போதுதான் சிகண்டி ஒருமுறைகூட பீஷ்மரை படைக்களத்தில் எதிர்கொள்ளவில்லை என்னும் எண்ணம் எழுந்தது. இன்று எதிர்கொள்ளப்போகிறார். அவ்வண்ணமெனில் இன்று பீஷ்மர் கொல்லப்படுவார். ஆனால் அது எவ்வாறு என்று அவன் உள்ளம் வியந்தது. வெல்ல முடியாதவர். தெய்வங்களால் கையிலேந்தி களத்திற்கு கொண்டுவரப்படுபவர். அவரை இக்கடுநோன்பினன் எவ்வாறு வெல்ல

இயலும்? தவத்தால் ஒருவர் வடக்கு மலையை இல்லையென்றாக்கிவிட இயலுமா என்ன?

தன் தேரிலேறி பாகனிடம் ஓரிரு சொல் உரைத்த பின் தேர்த்தட்டில் நின்று வில்லையும் அம்புகளையும் நோக்கினான். கையுறைகளை இழுத்துவிட்டு தலைச்சரடை இறுக்கிவிட்டு எதிரே நோக்கியபோது படைமுகப்பில் பீஷ்மர் நின்றிருப்பதை கண்டான். தொலைவிலேயே அவரும் புத்தாடை அணிந்து தன்னை சீர்படுத்திக்கொண்டிருப்பதை அறிய முடிந்தது.

போர்முரசு ஒலிக்கத்தொடங்கியதுமே சுருதகீர்த்தி அந்நாள்வரை அத்தருணத்தில் ஒருபோதும் உணர்ந்திராத ஒரு தயக்கத்தை தன் உள்ளத்திலும் உடலிலும் உணர்ந்தான். தேரை பின்நகர்த்தி படைகளுக்குள் புதைந்துவிட வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. ஆனால் அவ்வெண்ணத்தை உடலுக்குக் கொண்டுசென்று அசைவுகளாகவோ சொல்லாகவோ மாற்ற முடியாமையினால் உறைந்ததுபோல் அவன் நின்றான். அவன் ஆணைக்கு காத்திராமலேயே தேர்ப்பாகன் தேரை முன்னணிக்கு கொண்டுசென்றான். எதிர்க்காற்றின் தண்மை அத்தனை உளச்சோர்விலும் வருடி ஆற்றும் வல்லமைகொண்டிருந்ததை எண்ணி வியந்தான். வெம்மைகொண்ட எண்ணங்களின்மீதே அது தொடுவதுபோலிருந்தது.

எதிரில் கௌரவப் படையிலிருந்து எழுந்து வந்த அம்புகள் அவனைக் கடந்து சென்றன. சில அம்புகள் அவன் தேர்த்தூண்களிலும் கவசங்களிலும் முட்டி ஒலியெழுப்பி சிதறி விழுந்தன. ஒவ்வொரு அம்பும் ஒவ்வொரு சொல்லை உதிர்த்து விழுந்தது. சலித்துக்கொண்டன, விம்மின, உறுமின, கசப்புடன் சூள்கொட்டின, சிறுமியர்போல் நகைத்தன, ஆம் என்றன, இல்லை என்றன, மேலும் என்றன, நான் நான் என்றன. அவற்றை அறியாதவன்போல் விழி மலைத்து ஒரு கையில் வில்லும் மறுகையில் எடுத்த முதல் அம்புமாக அவன் அசைவழிந்து நின்றான். தேரின் அசைவுகளுக்கேற்ப அவன் உடல் கட்டித்தொங்கவிடப்பட்ட அணிப்பட்டம்போல் திரும்பியது.

வழக்கம்போல ஓரிரு கணங்களுக்குள்ளேயே போர் முற்றாக மூண்டுவிட்டிருந்தது. போர் மூண்ட ஒருகணத்துக்குப் பின் நோக்குகையில் அப்போர் நெடுநாட்களாக அதே விசையுடன் அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பதுபோல் தோன்றும் விந்தையை அவன் பலமுறை உணர்ந்திருந்தான். அவ்வண்ணமெனில் அதற்கு முந்தைய கணம் வரை அப்போர் எங்கோ நிகழ்ந்துகொண்டிருந்திருக்கிறது. அவர்களின் உள்ளத்தில், கனவுகளில் அது அறுபடுவதே இல்லை. அது ஏதோ வடிவில் எப்போதும் இருந்துகொண்டிருந்தது. “போருக்கும் காமத்துக்கும் எவருக்கும் பயிற்சி தேவைப்படுவதில்லை” என்ற கிருபரின் சொல் குருக்ஷேத்ரப் போர் தொடங்கிய நாள் முதலே அவன் நினைவில் ஒலித்துக்கொண்டிருந்தது. “ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்திற்குள் காமத்தையும் போரையும் நிகழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். புணராப் பெண்களாலும், கொல்லப்படாத எதிரிகளாலும் ஆனது ஆண்மகனின் அகம்.”

அவன் சூழ நோக்கிக்கொண்டு தேரில் நின்றான். ஒவ்வொருவரும் அதற்கு முன்பு முகத்திலோ உடலிலோ இல்லாதிருந்த வெறியை கொண்டுவந்து நிறைத்திருந்தார்கள். கூச்சலிட்டபடி, வசைபாடியபடி, இளிவரலாடியபடி, வெறியுடன் பற்களை நெரித்தபடி அம்புகளை தொடுத்தனர். கதைகளைச் சுழற்றி

எதிரியை அறைந்தனர். நீள்வேல்களை உடல் வளைத்து வீசினர். உழலைத்தடிகளையும் கொக்கிக்கயிறுகளையும் நீள்பிடிக் கோடரிகளையும் கொண்டு போரிட்டனர். ஒவ்வொரு முறை படைக்கலமெழுகையிலும் அவர்களின் முகத்தில் குவிந்த வெறுப்பை, அப்படைக்கலம் சென்றடைந்தபோது மின்னிச்சென்ற களிப்பை நோக்கி நின்றபோது அந்த முகங்களை முன்னர் கண்டதே இல்லை என்று தோன்றியது. மென்மயிர்த் தோலை உரித்தகற்றி வெற்றுத்தசை தெரிய கிடத்தப்பட்டிருக்கும் வேட்டைவிலங்கு போலிருந்தது மானுடம் அங்கே.

சற்று நேரத்திற்குப் பிறகே பாகன் அவன் போரிடவில்லை என்பதை தெரிந்துகொண்டு “இளவரசே!” என்றான். அக்குரலால் அவன் திகைத்து “செல்க!” என்று ஆணையிட்டான். தேர் போர்முகப்பின் கொந்தளிப்புக்குள் நுழைந்ததும் அவன் தன் வில்லை நிலைநிறுத்தி நாணிழுத்து அம்புகளை ஏவத் தொடங்கினான். அந்த அம்புகளால் உயிரிழப்போர் அறிக, அவை அவ்வாறு எண்ணப்படவில்லை! அவற்றை தொடுத்தவன் கொலையாளி அல்ல. அவன் தோள்கள் முன்னோர்களால் எப்போதோ முடுக்கப்பட்ட கைவிடுபடைகள். அவர்களின் வஞ்சம் தலைமுறைகளாக தசைகளில் காத்திருந்தது. கண்களும் கைகளும் ஒத்திசைந்தன. பாகனும் தேரும் அதில் இணைந்தனர். அவன் அந்த நடனத்தில் முற்றிலும் கலந்தான். முழுமையாகவே தன்னை இழக்கையில் அடையும் விடுதலையில் அலைகொண்டான்.

ஒவ்வொரு முறையும் தோள் இறுகி அம்பு நெகிழ்கையில் தன்னுள்ளிருந்து ஒன்று வெளியேறுவதை உணர்வதுண்டு. எவரிடமோ எதையோ சொல்லிவிட்டதுபோல். அடுத்த அம்பை எடுக்கையில் அதற்குரிய நுண்சொல்லை உரைத்து அதில் தன்னுள்ளத்தை ஏற்றுகையில் அச்சொற்களினூடாக அத்தருணத்தில் தன் அகம் வடிவெடுப்பதை உணர்வதுண்டு. போர் அதன் அத்தனை இழப்புகளுடனும் அத்தனை வெறுமையுடனும் வெறும் களியாட்டென்றே அவனுக்கு தோன்றியது. ஒவ்வொரு நாளும் போருக்கெழுகையில் வெறுமையும், போர்முடிகையில் நிறைவும், பின்னிரவில் தனிமையும் துயரும், காலையின் முதல் விழிப்பில் ஊக்கமும் எதிர்பார்ப்பும் என அவன் அகம் அலைபாய்ந்துகொண்டிருந்தது.

அன்று உணர்ந்த முழு முற்றான அயன்மையை ஒருபோதும் உணர்ந்ததில்லை. அது அவன் கைகளில் எடையென ஏறி அமர்ந்திருந்தது. அவன் உள்ளத்தில் ஒவ்வொரு சொல்லும் தன்னை பிசின்போல் பற்றியிருந்த சொல்லின்மையிலிருந்து பிதுங்கி வெளிவர வேண்டியிருந்தது. அம்புகளுக்குரிய நுண்சொற்களில் ஒன்றைக்கூட அவன் முழுமையாக சொல்லவில்லை. வெற்றுப் பயிற்சியினால் அவன் அம்புகளை ஏவிக்கொண்டிருந்தான். போருக்கு வெற்றுப் பயிற்சியே போதும் என அவன் அறிந்தான். பயிற்சி என்பது ஒவ்வொன்றிலும் இருந்து உள்ளத்தை விடுவிப்பது. உள்ளம் அனைத்தையும் உதறி வேறெங்கோ திளைக்க செயலாற்றுவது.

போர் மூண்டதுமே பீஷ்மரும் அர்ஜுனரும் வெவ்வேறு இலக்குகளை தங்களுக்கென தெரிவு செய்துகொண்டனர். பீஷ்மர் திருஷ்டத்யும்னனையும் சாத்யகியையும் எதிர்த்துக்கொண்டு அம்புகளால் அவர்களை அறைந்து அணுஅணுவாக பின்னடையச் செய்தபடி வலப்பக்கம் சென்றுகொண்டிருந்தார். இடப்பக்கம் பூரிசிரவஸையும் ஜயத்ரதனையும் அம்புகளால் அறைந்து பின்னடையச் செய்துகொண்டிருந்தார் பார்த்தர். தந்தையின் பின்படையாக அமைந்த வில்லவர் வளையத்தின் வலது எல்லையில் சுருதகீர்த்தி நின்றிருந்தான். மறு எல்லையில் சுருதசேனன் அமைந்திருந்தான். அதற்கு அப்பால் அபிமன்யூ சல்யரை எதிர்கொண்டான்.

போர் விசைகொண்டபோது தந்தையும் பீஷ்மரும் எதிர் திசைகளில் முன்னேற ஒரு மாபெரும் வட்டம் சுழல்வதாகத் தோன்றியது. படைகளை அவர்கள் தங்களுடன் இழுத்துச்சென்றார்கள். புயலின் சுழி. சுழியே விசையின் மையம். ஆனால் அது தான் நிகழ்வதை அன்றி எதையும் நிகழ்த்துவதில்லை, விளிம்புகளுக்கு அப்பால் தன்னில் ஆழ்ந்திருக்கிறது. அதன் நடுவே இருந்த வெற்றிடத்தில் விசையொன்று திரள்வதாக. அங்கே எதுவோ ஒன்று வந்தமர்வதற்கான பீடம் ஒருங்குகிறது. அவன் உள்ளம் அவ்வெண்ணத்தால் பதைப்பொன்றை அடைந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் அணுகிக்கொண்டும் இருக்கிறார்கள். மெல்ல இவ்வட்டம் சிறிதாகும். அதன் மையத்தில் அது நிகழும்.

அக்கணம் உருவான மெய்ப்புக்குளிர் அவனை சிலகணங்கள் வில் தாழ்த்த வைத்தது. எத்தனை தெளிவாக இதை உணர முடிகிறது! இன்று அது நிகழும்! அம்புகளால் எதிரிலிருந்த கௌரவத் தேர்வில்லவர்களை மீண்டும் மீண்டும் அடித்து பின்னடையச் செய்துகொண்டிருக்கும்போது அவன் உள்ளம் பீஷ்மரிலும் பார்த்தரிலுமே மாறி மாறி சென்றுகொண்டிருந்தது. பின்பொரு கணத்தில் எதிர்பாராதபடி நெஞ்சில் கூரிய ஈட்டியால் குத்தப்பட்டதுபோல் அவன் சிகண்டியை நினைவு கூர்ந்தான். பார்த்தருக்குப் பின்புறம் சென்ற தேரில் சிகண்டி அத்தேரால் சற்றே மறைக்கப்பட்டதுபோல் நின்றிருந்தார். அவர் முழு விசையுடன் போர்புரியவில்லை என்பது தெரிந்தது. தந்தையும் முழு விசையுடன் போர்புரிகிறாரா என்பது ஐயமாகவே இருந்தது.

அவன் பீஷ்மரை திரும்பிப்பார்த்தான். அவரும் முழு விசையுடன் போர்புரியவில்லை. விஞ்சுவதில்லாது நன்கறிந்ததும், ஒவ்வொரு நாளும் பயில்வதும் சலிப்பூட்டுவதுமான ஒரு செயலை உளமொன்றாது இயற்றுவது போலிருந்தார். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள் போலும். அருகிருந்த வில்லவனின் விழிகளை அவன் பார்த்தான். அவன் பீஷ்மரை நோக்கிக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது. திரும்பி இன்னொருவனை பார்த்தபோது அவனும் பார்த்தரை நோக்கிவிட்டு பீஷ்மரை பார்ப்பதை அறிந்தான். அது உளமயக்கா என்று எண்ணினான். அங்கிருந்த அனைத்துப் படைவீரர்களும் இளைய பாண்டவரையும் பீஷ்மரையுமே மாறி மாறி நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பொழுது வந்தணையவிருக்கிறது. இன்று அந்திமுரசு ஒலிப்பதற்குள். அல்லது இன்னும் சற்று நேரத்தில். ஒருவேளை அடுத்த கணமே. ஒவ்வொரு கணமுமென போரை நிகழ்த்தியபடி அதை எதிர்பார்த்திருந்தான். பீஷ்மரால் சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் மேலும் மேலும் பின்னடைய அவர் பாண்டவப் படைகளுக்குள் புகுந்து ஊடுருவிச் சென்றார். பூரிசிரவஸ் பார்த்தரின் அம்பு இடையில் தைக்க தேரில் மல்லாந்து விழுந்தான். அவனுடைய கால்குறடு தெறித்தது. அவன் தேர்ப்பாகன் தேரை பின்னெடுத்துச் செல்ல அங்கு கிருபர் தன் அம்புகளுடன் வந்தார். வருகையிலேயே அம்புகளால் அறைந்து காற்றையே முள்வேலியாக்கியபடி அணுகினார்.

பார்த்தரின் விசை மட்டுப்பட்டது. அவருடைய இடப்பக்கம் நின்றிருந்த வில்லவன் அலறி விழுந்தான். மீண்டும் மீண்டுமென துணைவில்லவரை அறைந்து வீழ்த்திக்கொண்டே இருந்தார் கிருபர். பார்த்தரின் நோக்கு அரைக்கணமேனும் அதை நோக்கி திரும்புமென்றால் அவர் அம்பு வந்து அறையும் என்று தெரிந்தது. ஆனால் தந்தையின் விழி கிருபரிலேயே நிலைகொண்டிருப்பதை சுருதகீர்த்தி கண்டான். கிருபரிலல்ல, அவர் விழிகளில். அவர் விழிகளிலும் அல்ல, அவருள் உறையும் சித்தத்தின் கூர்முனையில். அரைவிழி மூடியது போலிருந்தன இளைய யாதவரின் கண்கள். அவர்கள் அங்கே ஊழ்கத்திலென திகழ்ந்தனர்.

சுருதகீர்த்தி தந்தையின் வலப்பக்கம் சென்று ஜயத்ரதனை இடைவிடாத அம்புகளால் அறைந்து அவனை தன்னை நோக்கி திரும்ப வைத்தான். பார்த்தர் கிருபரை அம்புகளால் அறைந்து நிலைக்கச்செய்து பின்னர் மெல்ல மெல்ல புறம் தள்ளத்தொடங்கினார். மீண்டும் பார்த்தரின் வில்லவர் படை கௌரவப் படைக்குள் புகுந்து உள்ளே சென்றது. உருகும் மெழுகை கொதிக்கும் இரும்புக்கழி என கௌரவரை இருபுறமும் அகற்றி இளைய யாதவர் செலுத்திய தேர் முன்னால் சென்றது. ஜயத்ரதன் தன்னை பார்க்கவில்லை என்பதை சுருதகீர்த்தி உணர்ந்தான். அவன் நோக்கு பார்த்தரிலும் அப்பால் எங்கோ தெரிந்த மீன் கொடியிலுமே இருந்தது. எப்படி இது அனைத்தும் அனைவருக்கும் தெரிகிறது? எவரேனும் ஒருவர் உணர்ந்து பிறருக்கு சொல்லியிருக்கலாம் என்றாலும் ஒரு படை முழுக்க இது பரவுவது எளிதா?

முதலில் அவன் உடலில் கோள்மயிர் உருவாகியது. பின்னரே அவன் அந்த எண்ணத்தை அடைந்தான். முந்தையநாள் கனவில் அவர்கள் அனைவரும் அதை பார்த்திருக்கக்கூடும். அங்கு நிகழ்ந்த ஒவ்வொரு பெருநிகழ்வையும் அத்தனை வீரர்களும் எவ்வாறோ முன்னுணர்ந்திருந்தனர். முன்னரே நிகழ்ந்த ஒன்று மீண்டும் நிகழ்வதுபோல் அப்போர் என்று வெவ்வேறு முறை எளிய வீரர்களும் தேர்வலரும் அவனிடம் கூறியிருந்தனர். தாங்கள் அன்று இறப்போமெனும் உட்சொல் எழாது எவரும் அக்களத்திற்கு வரவில்லை. ஆகவே மீண்டு செல்கையில் எவருக்கும் உயிரோடிருப்பதன் திகைப்பு ஏற்படவில்லை. ஒருநாள் ஈட்டப்பட்டது என்னும் உவகை மட்டுமே இருந்தது.

கடோத்கஜன் துரியோதனனுடனும் துச்சாதனனுடனும் போர்புரிந்துகொண்டிருக்கும் செய்தியை முரசுகள் அறிவித்தன. பீஷ்மரின் முன்னிருந்து திருஷ்டத்யும்னன் விலகி மைய ஆணைமாடத்திற்குள் சென்றான். பீஷ்மரை செறுக்க சுருதசேனனும் சுதசோமனும் சென்றனர். “பீஷ்மரை சென்று தடுத்து நிறுத்துக… இனிமேலும் அவர் நம் படைக்குள் செல்லலாகாது” என்று அபிமன்யூவுக்கு திருஷ்டத்யும்னனின் ஆணை வானில் ஒலித்தது. அந்தப் போரில் மீள மீள நிகழ்வதொன்றே. எவருக்கு எவர் இணை, எத்தனை பேரை சேர்த்தால் எவர் நிகர் என்ற கணக்குகள். ஒரு மாபெரும் துலாத்தட்டில் மாறி மாறி வீரர்களை அள்ளி வைத்து அதன் முள் நடுங்கி இருபுறமும் ஆடுவதை பார்த்துக்கொண்டிருத்தல்.

பீஷ்மருக்கு எவரும் இணையல்ல என்று உணர்ந்தமையால் பாண்டவப் படையின் வெவ்வேறு வீரர்களை அவருக்கு முன் அள்ளி வைத்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு நிறைகொண்டு அவர் கடந்துசென்றார். ஒருபக்கம் வெல்லமுடியாதவர், நிகரற்றவர் என்று தெரிந்துகொண்டே இருந்தாலும் எங்கோ அவர் சரிகிறார் என்ற எண்ணமும் இருந்தது. மீண்டும் அவன் ஏதோ ஒன்றில் உளம்முட்டிக்கொள்ள திடுக்கிட்டு எண்ண ஒழுக்கை திருப்பிக்கொண்டான். நின்று துள்ளுவதை அவன் திகைப்புடன் பார்த்தான். “வில்லவர்களை வீழ்த்துக! சூழ்ந்துகொள்ளலை உடைத்துச்செல்க!” என முழவுகள் ஆணையொலித்தன.

திருஷ்டத்யும்னனின் முரசு துடிப்பு கொண்டது. “செறுத்து நிறுத்துக! பிதாமகர் பீஷ்மரை செறுத்து நிறுத்துக! பிதாமகர் வெறி கொண்டிருக்கிறார்! முழு விசையை அடைந்துள்ளார்! நம் படையின் தேர்ந்த வில்லவர்கள் அனைவரும் சேர்ந்து அவரை தடுத்து நிறுத்துக!” என்று ஒலித்தது. சுருதகீர்த்தி திகைத்து திரும்பிப் பார்த்தான். முழவோசை அவனுக்கான ஆணையை ஒலித்தது. “சுருதகீர்த்தி பீஷ்மரை நோக்கி செல்க! சுருதகீர்த்தி பீஷ்மரை நோக்கி செல்க!” அவன் பாகனிடம் “பிதாமகரை நோக்கி!” என்றான். அவன் சொல்வதற்கு முன்னரே தேரைத் திருப்பி படைகளினூடாக பீஷ்மரை நோக்கி கொண்டுசென்றான் பாகன்.

பிதாமகர் பீஷ்மர் சலித்த, ஆர்வமற்ற நிலையிலிருந்து அனல்பட்ட களிறு அலறி விசைகொள்வதுபோல் கொலைவெறி அடைந்திருந்தார். தொலைவிலேயே அவரது தேர் சென்ற தடத்தை பார்க்க இயன்றது. தேர்கள் உடைந்து சிதறிக்கிடந்தன. விண்ணிலிருந்து உதிர்ந்தவைபோல நிலம் முழுக்கப் பரவி வில்லவர்களின் உடல்கள் கிடந்தன. சிதறல்களே எஞ்சியிருந்த நெடுஞ்சாலை. அங்கிருந்த ஒவ்வொன்றிலும் அவருடைய எழுந்த பெருஞ்சினத்தை நோக்க முடிந்தது. நோக்க நோக்க அவன் நெஞ்சு அச்சத்திலும் வியப்பிலும் பதறத் தொடங்கியது. ஒற்றை வீரர் தன் ஆற்றலால் அவ்வளவு பெரிய அழிவை உருவாக்க முடியுமா? எனில் அவருள் எத்தனை பெரிய சீற்றம் எழுந்திருக்கவேண்டும்? ஊனுடலுக்குள் அத்தனை அனலெழுந்தால் தாங்குமா?

முதல்நாள் முதல் பீஷ்மர் பாண்டவப் படைகளில் பேரழிவை உருவாக்கிக்கொண்டுதானிருந்தார். என்றும் அவர் வில்கொண்டுசென்ற தடம் தெளிந்தே தெரிந்தது. ஆனால் அன்று உருவாக்கிய அழிவுக்கு இணையே இல்லை என்று தோன்றியது. அவர் ஒருவரையும் எஞ்சவிடவில்லை. பலர் பின்னடைகையில் கொல்லப்பட்டிருந்தனர். பலர் முதுகில் அம்பு தறைத்துச் சரிந்திருந்தனர். எளிய காலாள்படையினர். பயிலாத இளமைந்தர். அஞ்சியமைந்த முதியோர். அத்தனை முகங்களிலும் திகைப்பு இருப்பதுபோல அவனுக்குப் பட்டது. பீஷ்மர் உருவில் பிறிதொரு தெய்வம் எழுந்திருக்குமா என்ன? எட்டுத் தெய்வங்கள் குடிகொண்டது அவர் உடல் என்பார்கள். எட்டுத் தெய்வங்களும் அகன்ற பீடத்தில் எழுந்தருளியதா ஏழாமுலகத்து இருள்தெய்வம்?

“சூழ்ந்துகொள்க! பிதாமகரை சூழ்ந்துகொள்க! தடுத்து நிறுத்துக! காலாட்படையினரும் பிறரும் அவர் முன்னிலிருந்து விலகுக! அவர் அம்புகளின் எல்லைக்குள் கவசமணிந்த வில்லவர் மட்டுமே நின்றிருக்கவேண்டும்!” என்று திருஷ்டத்யும்னனின் ஆணை வந்துகொண்டிருந்தது. அவன் பீஷ்மரை சென்றடைந்தான். பீஷ்மரின் கைகளின் விசையை அவன் எப்போதுமே வியந்துதான் நோக்குவான். அன்று அவர் விழிதொட முடியாத விரைவுகொண்டிருந்தார். ஆனால் அவரிடம் எப்போதுமிருக்கும் நடன இசைவு அகன்றிருந்தது. சுழலியால் அலைமோதிக்கொண்டிருக்கும் மரம் போலிருந்தார்.

பீஷ்மரின் முன்னிருந்து சதானீகன் அம்புபட்டு விழுந்து தேரில் பின்னடைந்தான். சுருதசேனனின் தேர் உடைந்தது. அவனை தேடிவந்த அம்புகளிலிருந்து காக்க பாகன் தேரை திருப்பினான். சுருதசேனன் நிலைசாய்ந்து அம்புடன் எழுவதற்குள் அவனை பீஷ்மரின் அம்புகள் தாக்கி தேரிலிருந்து அப்பால் விழச் செய்தன. பிரதிவிந்தியனை பீஷ்மரின் அம்புகள் தாக்குவதற்குள் நாணொலியுடன் அபிமன்யூ பீஷ்மரை தன் அம்புகளால் எதிர்கொண்டான். சுருதகீர்த்தி மறுபுறம் சென்று பீஷ்மரை தாக்கினான். சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் களத்திற்கு வந்தனர். நால்வரும் நான்கு திசைகளிலிருந்து அவரைத் தாக்க பீஷ்மர் தன் தேர்த்தட்டில் நின்றபடியே சுழன்று அவர்கள் அனைவரின் அம்புகளையும் தடுத்தார்.

அவர்களால் பீஷ்மரை அம்புகளால் தொடவே முடியவில்லை. அவருடைய அம்புகளிடமிருந்து தங்களைக் காக்கவே அவர்கள் போராட வேண்டியிருந்தது. அம்புகளின் வடிவுக்கும் வகைமைக்கும் எவ்வொழுங்கும் இருக்கவில்லை. மலையிடிந்து சரிவதுபோல பெரும்பாறைகளும் கூழாங்கற்களுமென அவை பெய்தன. கட்டற்ற வெறிக்கு இயற்கைவல்லமைகளின் ஆற்றல் அமையும் என்பதை சுருதகீர்த்தி கண்டான். புயலையோ காட்டுநெருப்பையோ எதிர்கொள்வதுபோல இயலாததுதான் அது. அத்தனை ஆற்றலையும் அள்ளி வீசுவது, வெடித்தெரிந்து அணைவது. ஆகவே நெடும்பொழுது இவ்விசை நீடிக்காது. இது அணையும். ஓயும்.

வேறுவழியே இல்லை. பயிற்சியும் இசைவும் ஆற்றலை வீணாக்காது வெளிப்படுத்துவதற்கே. இது மதகுத்திறப்பல்ல, கரையுடைப்பு. இதோ முடிந்துவிடும். அதுவரை நின்றிருக்கவேண்டும். அது ஒன்றே இலக்கு.

வில்லவர்கள் பீஷ்மரின் அம்புகள்பட்டு ஓசையின்றி விழுந்தனர். ஒற்றை நாணில் ஏழு அம்புகளை, பன்னிரு அம்புகளை, இருபத்துநான்கு அம்புகளை அவர் செலுத்தினார். தேர்த்தட்டில் காற்றுச் சகடையென நோக்கற்கரிய விசையில் அவர் சுழல்வதாகத் தோன்றியது. இருபத்துநான்கு அம்புகளை ஒற்றை நாணிலிழுத்து முழு விசையில் சுற்ற அவை ஒவ்வொன்றும் தனித்தனியான திசையும் இலக்கும் கொண்டிருப்பதை முதன்முறையாக அவன் பார்த்தான். ஒரு வீரன் அவ்வாறு களத்தில் போரிட்டிருக்கிறான் என்பதை கதையில் சூதன் சொன்னால் அக்கணமே சிரித்து கைவீசி அவன் அதை புறக்கணித்திருப்பான். போரென்பது எப்போதுமே மானுட எல்லைகளின் உச்சமென்பதனால் எல்லாச் செயல்களும் அருஞ்செயல்களே என்பார்கள். அருஞ்செயல்களின் எல்லையை எப்போதும் புதிய மானுடன் ஒருவன் வந்து கடக்கிறான். அதிமானுடர்கள் உருவாகும் களம் இது. ஆயினும் அது நம்புவதற்கு அரியதாக, நோக்கி அறிகையிலேயே இயல்வதல்ல என்று தோன்றியது.

பீஷ்மரின் அம்புகள் அவன் தேரிலும் கவசங்களிலும் அறைந்தன. சீழ்க்கை ஓசையிட்டபடி அவனைக் கடந்து சென்றன. சிற்றம்புகளின் பெருந்தொகையை அனுப்பி அவற்றால் படைவீரர்கள் நிலையழிந்திருக்கையில் விழிதொடமுடியாத விசையில் பேரம்பொன்றை எடுத்து முன்னரே இலக்குதேரப்பட்ட வீரன் ஒருவனின் நெஞ்சைப் பிளந்து வீழ்த்துவது அவரது போர்முறையாக இருந்தது. அவர் முன் சரிந்து விழுந்த தேர்களும் உடல்களுமே அவருக்கான கோட்டைக் காப்பென ஆயின. அந்த எல்லை விரிந்து அகலுந்தோறும் அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் அனுப்பிய அம்புகள அவரை சென்றடைய இயலவில்லை. ஆனால் அவர் அனுப்பிய அம்புகள் வந்து அவர்களின் அணுக்க வில்லவர்களை ஒவ்வொருவராக வீழ்த்தின.

அவரது கை தன் கையைவிட ஒருமடங்கு நீளம் மிகையானது. தன்னைவிட ஒருமடங்கு உயரமானவர். அவர் வில் அவரைவிட மிகப் பெரியது. ஆகவே அவர் இழுத்து நாணேற்றுகையில் எறிவேலைவிட நீளம் கொண்டிருந்தது அம்பு. அவருக்கும் பிறருக்குமான இடைவெளியைக் கடந்துவந்து தாக்குகையில் முழு விசையுடன் அது இருந்தது. அவன் அனுப்பிய அம்புகள் அனைத்தும் அவரை அடைவதற்குள்ளாகவே விசையழிந்து வளைந்து நிலம்பட்டன. அல்லது தளர்ந்தவைபோல் அவர் காலடியில் சென்று விழுந்தன.

அவரை எவ்வகையிலும் தடுக்க இயலாதென்று அவன் உணரத்தொடங்கினான். அவரது கைகளின் நீளம் அல்ல, அம்புகளின் அளவுமல்ல, அவையென வெளிப்படும் பிறிதொன்று அங்கே நின்றிருந்தது. அவர்கள் அனைவரையும்விட மிகப் பெரியது. எவ்வகையிலும் எதிர்கொள்ள முடியாதது. அணுகுதலே இயலாது. இந்த நெடிய உடலில் எழுந்திருக்கும் அது தனக்குரிய உடலொன்றை உருவாக்கிக்கொண்டது. எத்தனை பொங்கியிருந்தால் இமையம் தனக்கென அத்தனை பேருடலை கொண்டிருக்கும் என்னும் கவிச்சொல் நினைவிலெழுந்தது. அணுகவே முடியாது. ஆம், ஒருவேளை கொன்று வீழ்த்தினாலும் வெல்லமுடியாது.

மேலும் மேலுமென பீஷ்மர் முன் உடல்கள் விழுந்து அவர் உருவாக்கிய

வெறுங்களம் அகன்றது. அவர்கள் எவருமே அம்புகளால் தொட இயலாத தொலைவுக்கு அவர் விலகிச்சென்றிருந்தார். அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் ஒருகட்டத்தில் அம்பு செலுத்துவதன் பயனின்மையை உணர்ந்தனர். வில்லவர்கள் பலர் அம்புகள் தொடுப்பதை நிறுத்தி வில் தாழ்த்தி மலைத்த விழிகளுடன் அவரை பார்த்தனர். சீற்றத்துடன் வந்த அம்புகளால் அறைபட்டு அவர் முன் விழுந்துகொண்டிருந்தனர். பலி கோரி எழுந்த பெருந்தெய்வம் ஒன்றுக்கு முன்னால் தலைக்கொடை அளிப்பவர்கள்போல சென்று விழுந்து அக்களத்தை நிரப்பிக்கொண்டிருந்தனர்.

“அவர் மிக அகன்று சென்றுவிட்டார். இன்று அவர்மேல் தொடுக்கும் தொலைவுக்கு அம்பு செலுத்தும் மானுடர் எவருமில்லை” என்று சுருதகீர்த்தி சொன்னான். “அவர் தன் நெடிய உடலால் என்றும் அகன்றுதான் இருந்திருக்கிறார். மானுடரை தொலைவில், வானிலிருந்து என நோக்கிக்கொண்டிருந்தார்” என்றான் பிரதிவிந்தியன். “ஆகவேதான் அவர் எவரையும் புரிந்துகொள்ளவில்லை போலும்” என்றான் சுதசோமன். “அவரையும் எவரும் புரிந்துகொள்ளவில்லை” என்றான் யௌதேயன். “ஆனால் அவரால் நம்மை கொல்லமுடிகிறது. சொல்லொழிந்துவிட்டு அம்புகளை ஏவுக! அவருடைய அம்புகளையாவது தடுத்து நிறுத்துங்கள்” என்று அபிமன்யூ கூவினான். “ஒன்றே இயல்வது. இக்களம் மேலும் மேலும் விரிந்து அவருடைய அம்புகளும் வந்தடையாதபடி ஆகும்போது தன் களத்தாலேயே அவர் தனிமைப்படுவார்” என்றான் சுருதகீர்த்தி.

சுருதகீர்த்தி அந்தப் போரை செயலற்ற உள்ளத்துடன் நோக்கிக்கொண்டிருந்தான். பாண்டவ வில்லவர் படையில் பெரும்பாலானவர்கள் பீஷ்மரின் அம்புகளை ஏற்று களம்பட்டனர். அவர்களின் விழிகள் சொல்லற்றிருந்தன. விழுந்து துடித்த உடல்களும் சொல்லற்றிருந்தன என்று தோன்றியது. தசையை உடலாக்கும் சொற்களை இழந்திருந்தன. ஐம்பெரும்பருக்களும் தங்களை இணைத்த நோக்கத்தை இழந்து விலகத் துடித்தன. பேரம்புகள் வந்து அறைந்து தேர்கள் சரிய, புரவிகள் கழுத்து குழைந்து முகம்பதித்து விழ, புண்பட்டு அவற்றின்மேல் விழுந்து துடித்து நெளியும் உடல்களும் உடைசல்களும் கொண்ட பெரிய வட்டக்களமொன்றுக்கு நடுவே பீஷ்மர் நின்று வில் தாழ்த்தினார். அவரைச் சூழ்ந்து வந்த துணைவில்லவர்களும் வில்லை தாழ்த்தினர்.

ஒருகணம் ஆழ்ந்த அமைதி ஒன்று களத்தில் எழுந்தது. முற்றிலும் புதிய தெய்வமொன்று தோன்றியதுபோல. கடுங்குளிர் என அந்த அமைதியை உடல்களால் உணர முடிந்தது. பீஷ்மர் சூழ்ந்திருந்தவர்களை பார்க்கவில்லை என்று தோன்றியது. பல்லாயிரம் விழிகளால் பார்க்கப்படுவதை உணர்ந்தது போலவும் தெரியவில்லை. எவ்வாறு அப்படி தனிமைப்பட்டோம் என்பதை திகைப்புடன் பார்ப்பவர்போல் தனக்குச் சுற்றும் விழுந்து கிடந்த உடல்களை விழியோட்டி பார்த்தார். சுருதகீர்த்திக்குப் பின்னால் நின்ற யௌதேயன் “ஏற்கெனவே இறந்துவிட்டவர் போலிருக்கிறார். மூச்சுவெளியில் நின்று நம்மை பார்க்கிறார். நமது சொற்களும் அங்கு சென்று சேராது” என்றான். ஆம், இனி அனலுக்கு உடலை அளிப்போம். நீருக்கு அன்னத்தை அளிப்போம். எங்கிருந்தோ அவர் அவற்றை பெற்றுக்கொள்வார் என்று சுருதகீர்த்தி எண்ணினான்.

பீஷ்மர் தன் தேரை பின்னுக்கிழுக்க ஆணையிட்டார். அவருடைய தேர் விழுந்துகிடந்த உடல்களினூடாக ஏறி, அங்கே கிடந்த உடைந்த தேர்களை நொறுக்கியபடி எழுந்து அலைபாய்ந்து மெல்ல பின்னடைந்துகொண்டிருந்தது. அவர் அகன்று செல்வதை வெற்றுவிழிகளுடன் நோக்கியபடி பாண்டவ வில்லவர்கள் நின்றிருந்தனர். மேலும் மேலும் அகன்று மீண்டும் தன் பின்னணிப் படையுடன் அவர்

இணைந்துகொண்டார். அவர்கள் அந்தப் பெருவெற்றியை கொண்டாடும் பொருட்டு விற்களையும் வாள்களையும் தூக்கி போர்க்குரல் எழுப்புவார்கள் என்று சுருதகீர்த்தி எண்ணினான். ஆனால் அவர்களும் மலைத்துப் போயிருந்தார்கள். அங்கு வெற்றி தோல்வியே இல்லை. ஏனெனில் அங்கு எதிரி என்பதே இல்லை என்று எண்ணிக்கொண்டான்.

விரிந்து கூர் அழிந்து மேலும் அகன்று பீஷ்மரின் அணுக்கப்படை பின்னகர்ந்து கௌரவப் படை விளிம்பை சென்றடைந்தது. அதன் பின்னரே சுருதகீர்த்தி போர்க்களத்தின் முழுமையை பற்றிய உணர்வை அடைந்தான். பார்த்தரை கிருபரும் துரோணரும் சேர்ந்து இருபுறமும் அம்புகளால் அறைந்து பின்னடையச் செய்தனர். பார்த்தர் தன்னை பாதுகாத்தபடி தேரை பின்னிழுத்து மேலும் பின்னடைந்து தன் படையின் விளிம்பை வந்தடைந்தார். விரிந்து சுழன்ற வட்டம் சற்றே கலைந்து மீண்டும் வடிவுகொள்ளத் தொடங்கியது. பீஷ்மர் கௌரவப் படைகளின் வடக்குதிசை நோக்கி சென்றுகொண்டிருந்தார். கௌரவப் படைகளின் சுழற்சிக்கேற்ப தங்கள் அமைப்பை உருவாக்கிக்கொண்டே இருந்த பாண்டவப் படையின் நுனியில் அமைந்த பார்த்தரும் வடக்கு நோக்கி சென்றார். இரு அம்புகள் சரிந்து ஒன்றை ஒன்று சந்திக்கும்பொருட்டு முனைகொண்டு செல்வதுபோல. என்ன நிகழப்போகிறது என அவன் உணர்ந்தான். அவன் உள்ளம் அதிரத்தொடங்கியது.

வடக்கு எல்லை நோக்கி அவர்கள் செல்வதை தடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அக்கணமே அது இயல்வதேயல்ல என்ற எண்ணமும் உருவானது. இரண்டு படைகளும் அவர்களிருவரையும் அந்த முனைநோக்கி செலுத்தும்பொருட்டே விசையும் அதற்கேற்ற வடிவும் கொண்டவை போலிருந்தன. அவர்கள் தங்களுக்கு எதிரே நின்ற படைகளுடன் முழு வீச்சுடன் போரிட்டபடியே அங்கே சென்றனர். குருக்ஷேத்ரத்தின் வடக்கு எல்லை, குறுங்காட்டின் விளிம்பு. அந்த இடம்தானா? அது முன்னரே தெரிவுசெய்யப்பட்டதா? அங்கே முன்னர் சென்றிருக்கிறார்களா? எவ்வகையிலேனும் அறிந்திருக்கிறார்களா? விழவுக்கூட்டத்தின் நெரிசலில் ஒருவரோடொருவர் உடல் முட்டிக்கொள்வதுபோல் பீஷ்மரும் பார்த்தரும் அருகருகே வந்தனர். இரு தேர்களும் இயல்பாக திரும்பி ஒன்றையொன்று எதிர்கொண்டன.

நோக்குக்கு அது முற்றிலும் எதிர்பாராத கணம். தெய்வ கணங்களனைத்துமே எதிர்பாராதவை. எதிர்பாராத கணங்கள் அனைத்துமே தெய்வங்களால் அமைக்கப்படுபவை. அந்தப் போரின் பல்லாயிரம் விசைகள், பல லட்சம் மானுடர், அவர்களிலெழுந்த எண்ணிலா நிகழ்வுகள் ஒன்றெனக் குவிந்து அதை அமைத்தன போலும். நீர்த்துளிகளை நதிப்பெருக்கென்றாக்கும் நெறி. புழுதிப்பருக்கைகளை மணற்புயலாக்கும் விசை. இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி ஒருகணம் திகைத்தவர்போல் நின்றனர். பீஷ்மர் தாடி மேலெழ வாயை இறுக்கி, நீள்கை சுழன்று அம்புத்தூளியைச் சென்றடைந்து மீள, தன் வில்லை இழுத்து நாண் விம்மச்செய்து நீளம்பொன்றால் பார்த்தரின் தேரை அறைந்தார். தேர்த்தூண் உடைந்து தெறித்தது. அடுத்த அம்பை ஒழிந்து தன் ஆவநாழியிலிருந்து அம்பு ஒன்றை எடுத்து நெற்றிமேல் வைத்து வணங்கி அதை தொடுத்தார் பாரதர். அந்த அம்பு பீஷ்மரின் காலடியில் வந்து தைத்து நின்றது. அவர் குனிந்து அந்த அம்பை பார்த்தார். மேலும் இரு அம்புகள் வந்து அங்கே தைத்து அதிர்ந்து நின்றன.

மூன்று அம்புகளால் பீஷ்மரின் காலடியை வணங்கியபின் பார்த்தர் தன் அம்புகளை விட்டார். இருவரும் உச்சநிலைப் போரை ஓரிரு கணங்களில் சென்றடைந்தனர். பீஷ்மரின் தோள்கவசம் உடைந்தது. அவருடைய தொடைக்கவசத்தின் இடுக்கில் ஒரு அம்பு சென்று தைத்தது. பார்த்தரின் தேர்மகுடம் உடைந்ததது. அவர் புரவிகளில்

ஒன்று கழுத்தறுந்து விழுந்தது. அவர் நெஞ்சக்கவசம் உடைந்து தெறிக்க அம்புகளிலிருந்து தப்பும் பொருட்டு அவர் முழங்காலிட்டு தேர்த்தட்டில் புரண்டெழுந்து அடுத்த கவசத்தை அணிந்தபடி எழுந்து அவரை பார்த்தார். இருவரும் போர்புரிவதை சூழ்ந்தவர்கள் போர்நிறுத்தி கைகள் ஓய நின்று நோக்கினார்கள். அந்த அமைதியே செய்தியெனப் பரவ சூழ்ந்திருந்த படையினர் அனைவருமே போரை நிறுத்தி அவர்களை நோக்கி நின்றிருந்தனர்.

இருவரும் ஆற்றிய போர் கணம்தோறும் மேலும் மேலும் விசை கொண்டது. இரு தரப்பிலிருந்த அணுக்க வில்லவர்களும் வில் தாழ்த்தி அவர்கள் மட்டுமே போர்புரியும்படி விட்டனர். சுருதகீர்த்தி அடியிலாத ஆழமொன்றில் விழுந்துகொண்டே அதை பார்ப்பதுபோல் உணர்ந்தான். அங்கிருந்த ஓசைகள் அனைத்தும் முற்றடங்கி அவர்கள் இருவரும் விடும் அம்புகளின் உலோக ஓசை மட்டும் கேட்பது போலிருந்தது. ஓர் அறியா ஆலயத்தின் மணிஓசைபோல் அம்புகளின் கிலுக்கம் ஒழுங்குடனும் இசைமையுடனும் இருந்தது. பின்னர் அதிலொரு சிறு மாறுபாடு தோன்றலாயிற்று. வெறும் செவிகளாலேயே பீஷ்மரின் கை ஓங்குவதை உணரமுடிந்தது. கூர்ந்தபோதும் விழிகளால் அதை அறியமுடியவில்லை. பார்த்தர் பின்னடையவில்லை. அவர் கை தளரவில்லை. அம்புகளின் விசை மேலும் எழுந்தது போலவே தோன்றியது. ஆனால் செவி உணர்ந்துகொண்டிருந்தது, அவர் பின் தங்குகிறார் என்று.

ஒரு கணத்தில் இளைய யாதவர் தன் தேரை சற்றே வலப்பக்கமாக திருப்பி கைதூக்கினார். அர்ஜுனனுக்குப் பின்னாலிருந்து சிகண்டியின் தேர் முன்னால் வந்து பீஷ்மரை எதிர்கொண்டது. சிகண்டிக்கு இருபுறமும் ஷத்ரதேவனும் ஷத்ரதர்மனும் வந்தனர். சிகண்டி அம்பை இழுத்து முதல் அம்பை பீஷ்மரின் நெஞ்சை நோக்கி ஏவினார். பீஷ்மர் சற்றே வாய்திறந்து தாடை தொங்கியிருக்க உடல் நடுக்கு கொள்ள அவரை பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் தன் வில்லைத் தாழ்த்தி செயலற்று நின்றார். சிகண்டி வெறிகொண்டவர்போல் அம்புகளை இழுத்து அவர் நெஞ்சை நோக்கி அறைந்துகொண்டே இருந்தார். ஒவ்வொரு அம்பும் அவர் கவசங்களில் பட்டுத் தெறித்தது. கீழே விழுந்த அம்புகளை சுருதகீர்த்தி பார்த்தான். அவற்றில் உலோக முனைகள் அனைத்தும் மடங்கி கிளி அலகுகள் போலாகிவிட்டிருந்தன.

சிகண்டி தன் வெறியடங்கி தளர்ந்து மூச்சிரைத்தார். ஒரு வேள்வியை பார்ப்பவர்கள்போல பாண்டவ வீரர்கள் விழி மலைத்து நின்றிருக்க கௌரவர்கள் என்ன நிகழ்கிறதென்றே தெரியாமல் ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டு தேங்கி மெல்லிய அலையாகத் தெரிந்தனர். சிகண்டி தன் ஆவநாழியிலிருந்து தர்ப்பைப்புல்லின் மெல்லிய தண்டு ஒன்றை எடுத்தார். அதைத் தூக்கி உதடுகள் நடுங்க நுண்சொல் ஓதி பீஷ்மர் மேல் எய்தார். அது பீஷ்மரின் கவசத்தின் இடுக்கொன்றுக்குள் பாய்ந்து நின்றது. மேலும் மூன்று புல்லம்புகளை சிகண்டி பீஷ்மர் மேல் ஏவினார். பீஷ்மர் தள்ளாடி மெல்ல அசைய வில்லும் அம்பும் தேர்த்தட்டில் விழுந்தன.

பீஷ்மரின் பாகன் தேரைத் திருப்பி அவரை பின்னால் கொண்டுசெல்ல முயல சிகண்டியின் புல்லம்பு அவன் கழுத்தில் பாய்ந்து அவனை சரித்து நிலத்திலிட்டது. புல்லம்புகள் நரம்புமுடிச்சுகளைத் தாக்க ஏழு புரவிகளும் துடித்து அதிர்ந்து கால்தளர்ந்து தலைகள் தொய்வுற்று சரிந்தன. முகப்புக்குதிரை குருதி வழிந்த மூக்குடன் முகத்தை மண்ணில் ஊன்றியது. இரு பக்கங்களிலிருந்த புரவிகள் விலாவறைந்து நிலத்தில் விழுந்தன. தேர் அசைவிழக்க பீஷ்மர் விரித்த கைகளுடன் நின்றார்.

பார்த்தர் தன் தேர்த்தட்டில் காண்டீபம் ஒரு கையிலும் எடுத்த அம்பு மறுகையிலுமாக உடல் பதற நின்றிருந்தார். இளைய யாதவர் உதடுகளை மட்டுமே அசைத்து அவரிடம் பேசுவதை காண முடிந்தது. இளைய யாதவர் முகத்தில் உறுதியும், பின்னர் சீற்றமும், பின்னர் உச்சத்திலெரிந்த சினமும் தெரிந்தது. அவர் பிறிதொரு சொல் உரைத்து புரவியை அறைந்து தேரை முன்னெடுத்தார். அக்கணம் பார்த்தர் தன் வில்லை சற்றே தூக்கி பேரம்பொன்றை எடுத்து முழுவிசையுடன் இழுத்து பீஷ்மரின் நெஞ்சை நோக்கி அறைந்தார். பார்த்தரின் தோள்தசைகள் இறுகும் அசைவை, நரம்புகள் விம்மித் தளர்வதை, அவருடைய உளவிசை முழுக்க கைகளில் எழுந்த அம்புக்கு வருவதை கணத்துளிகளாக சுருதகீர்த்தியால் பார்க்க முடிந்தது.

நீளம்பு சென்று பீஷ்மரின் நெஞ்சக்கவசத்தை அறைந்து உடைத்து உள்ளே பதிந்து நின்றது. பீஷ்மர் தள்ளாடி பின்னடைந்தார். அடுத்த அம்பால் அதே இடைவெளியில் மீண்டும் அறைந்தார். கௌரவர்கள் தரப்பிலிருந்து பெருங்குரல் எழுந்தது. ஆனால் அவர்கள் அப்போதும் செயலிழந்து ததும்பிக்கொண்டிருந்தனர். பார்த்தர் மேலும் மேலும் அம்புகளால் பீஷ்மரை அறைந்தபடி அணுகி சென்று கொண்டிருந்தார். அணுகுந்தோறும் அம்புகள் விசை மிகுந்தன. பீஷ்மரின் நெஞ்சுக்கவசமும் தோள்கவசமும் உடைந்து விழுந்தன. அவருடைய கழுத்திலும் விலாவிலும் அம்புகள் தைத்துக்கொண்டே இருந்தன. பீஷ்மர் தேரின் பின்தூணில் சாய்ந்து நின்றிருந்தார். அம்புகள் அவருடைய கவசங்கள் அனைத்தையும் உடைத்து தெறிக்கவிட்டன. அவருடைய உடலில் அம்புகள் ஒன்று பிறிதொன்றை நாடிச்செல்வதுபோல் பாய்ந்து தைத்துக்கொண்டே இருந்தன.

பீஷ்மர் தூணில் சாய்ந்தபடியே குடை சாய்ந்த தேரில் நின்று அசைந்தார். அக்கணம் வரை செயலிழந்து நின்றிருந்த கௌரவர்களின் வில்லவர்கள் வெறிக்கூச்சலெழுப்பியபடி பாய்ந்து வந்தனர். அவர்களை சிகண்டியும் அபிமன்யூவும் எதிர்த்து வீழ்த்தினர். வில்லவர்கள் நிலையழிந்திருந்தமையால் வெற்றுநெஞ்சை காட்டுபவர்கள்போல் வந்து அம்பேற்று விழுந்துகொண்டிருந்தனர். சுருதகீர்த்தி தன் அம்புகளால் பதினெட்டு வில்லவர்களை வீழ்த்தினான். வீழ்ந்த தேர்களாலான வேலிவளைப்புக்கு அப்பால் கௌரவப் படை கூச்சலிட்டுக் கொந்தளித்தது. தொலைஅம்புகளை வானிலேற்றி வளைத்திறக்கி அவர்களை வீழ்த்தி அங்கேயே நிறுத்திக்கொண்டிருந்தான் அபிமன்யூ.

பார்த்தர் தன் அம்புகளை குறி பார்க்கவேண்டிய தேவை இல்லாத அளவுக்கு அணுகிவிட்டிருந்தார். அத்தனை அம்புகளும் பீஷ்மரின் உடலில் தைத்தன. உடலெங்கும் அம்புகளுடன் அவர் புரண்டு தேரிலிருந்து தொங்கினார். பார்த்தர் வெறியாட்டெழுந்தவர்போல அம்புகளை செலுத்திக்கொண்டே இருந்தார். விசைமிக்க அம்புகளால் பீஷ்மரின் உடல் தேரில் தொங்கிக்கிடந்து துள்ளியது. பின் சுழன்றபடி நிலத்தில் விழுந்து உருண்டது. அம்புகள் அவ்வுடலை அள்ளிப்புரட்ட அவர் முதுகெங்கும் அம்புகள் தைத்தன. முட்பன்றிபோல் அம்புகளால் மூடப்பட்டவராக அவர் களத்தில் கிடந்தார். குருதி ஊறி அம்புகளினூடாக வழிந்தது. அவருடைய வாய்மட்டும் அசைந்துகொண்டிருந்தது. பார்த்தர் காண்டீபத்தை ஓங்கி தேர்த்தட்டில் அறைந்த பின் தளர்ந்து பீடத்தில் அமர்ந்தார். இளைய யாதவர் தேரைத் திருப்பி அவரை கொண்டுசென்றார்.

பீஷ்மரை நோக்கி நின்றிருந்த கௌரவப் படையிலிருந்து சொல்லற்ற முழக்கம் எழுந்தது. எவரோ “பிதாமகர் விண்புகுக!” என்று கூவினார். அக்குரலை ஏற்று குரல்கள் எழவில்லை. “காங்கேயர் விண்புகுக! தேவவிரதர் விண்புகுக!” என்று அக்குரல் அழுகையும் ஆங்காரமுமாக மீண்டும் எழுந்தது. வெடித்தெழுந்ததுபோல

கௌரவப் படை வாழ்த்தொலி எழுப்பத் தொடங்கியது. “பிதாமகர் விண்புகுக!” “காங்கேயர் விண்புகுக! தேவவிரதர் விண்புகுக!” பீஷ்மர் விழுந்த செய்தியை கௌரவர்களின் படைமுரசுகள் ஒலித்தன. இடித்தொடர்போல் அச்செய்தி அங்கிருந்து எழுந்து பரவி கௌரவப் படைகளெங்கும் சென்றது.

முதன்மை வீரர்கள் விழும்போது மட்டுமே ஒலிக்கும் அறுநடைத் தாளத்தைக் கேட்டு கௌரவப் படைவெளி விற்களையும் வாள்களையும் தூக்கி “பிதாமகர் விண்சேர்க! குடிமூத்தார் நிறைவுறுக! விண்வாழ்க காங்கேயர்! சாந்தனவர் விண்வெல்க! ஆபகேயர் வான்வெல்க! பரதர்ஷபர் நிறைவுறுக! தேவவிரதர் அழியா வாழ்வடைக! குருசார்த்தூலர் புகழ் எழுக! நதீஜர் பெயர் வாழ்க! தாலத்வஜர் அழிவின்மைகொள்க!” என்று வாழ்த்தொலி எழுப்பினர். கௌரவப் படையிலிருந்து எழுந்த அந்த வாழ்த்தொலி சற்று நேரத்திலேயே பாண்டவப் படையில் எதிரொலி என எழத் தொடங்கியது. சுருதகீர்த்தி திரும்பிப் பார்த்தபோது அவனைச் சூழ்ந்திருந்த வில்லவர் அனைவரும் விற்களைத் தூக்கி “வெல்க பிதாமகர்! வெல்க குருகுலோத்தமர்! குருமுதல்வர் விண்வெற்றிகொள்க! வெல்லப்படா வில்லவர் புகழ் எழுக!” என்று குரலெழுப்பத் தொடங்கினர்.

பாண்டவ கௌரவ தரப்பென்னும் வேறுபாடில்லாமல் வீரர்கள் வெறிகொண்டு தொண்டை நரம்புகள் புடைக்க கூச்சலிட்டு குதிப்பதை அவன் பார்த்தான். கண்ணீருடன் நெஞ்சிலறைந்து சிலர் அழுதனர். குனிந்து நிலத்தில் அமர்ந்து தரையை ஓங்கி அறைந்து கூச்சலிட்டனர். நோக்க நோக்க அனைத்து முகங்களிலும் இருந்த துயரவெறி அவனை பதறச் செய்தது. அவனுடைய பாகன் கடிவாளத்தை நுகக்கணுவில் கட்டி முகம் குனிந்து அழுதுகொண்டிருந்தான். தன் கண்ணீர் மார்பில் சொட்டும்போதுதான் தானும் அழுதுகொண்டிருப்பதை சுருதகீர்த்தி உணர்ந்தான். பார்த்தர் தலையை கைகளில் தாங்கி தேரில் அமர்ந்திருக்க இளைய யாதவர் தேரை பின்னுக்கிழுத்து மேலும் மேலுமென உள்ளே கொண்டு சென்றார். தன் இரு மைந்தராலும் காக்கப்பட்டு சிகண்டி படைகளுக்குள் சென்று மறைந்தார்.

சுருதகீர்த்தி தேரைச் செலுத்தி முன்னால் சென்று யுதிஷ்டிரரை அணுகினான். யுதிஷ்டிரர் தேர்த்தட்டில் மடியில் வில்லுடன் கைகட்டி அமர்ந்து கண்ணீர்விடுவதை பார்த்தான். நகுலன் தன் தேரில் அணுகிவந்து “போர் இனி எவ்வாறு முன்னெடுக்கப்படவேண்டும், மூத்தவரே?” என்றார். “இனி போரில்லை. இனி புவியில் நாம் கொல்வதற்கும் வெல்வதற்கும் எவருமில்லை. சென்று தலைகொடுப்போம். பெண்பழிகொண்ட அக்கீழ்மகனால் கொல்லப்படுவோம். இப்பழிக்கு நம் குலம் ஏழுமுறை முற்றழிக்கப்பட்டாலும் தகும்” என்று யுதிஷ்டிரர் கூவினார். எழுந்து வெறியுடன் அம்பொன்றை எடுத்து தன் கழுத்தை அறுக்க கைதூக்கினார். தன் தேரிலிருந்து பாய்ந்து அவர் தேரிலேறிக்கொண்ட நகுலன் அவர் கையைப்பற்றி நிறுத்தினார்.

அப்பால் புரவியில் தோன்றிய பீமசேனர் இகழ்ச்சியுடன் நகைத்து “சங்கறுத்து விழுவதென்றால் களத்தில் சென்று கௌரவர் கையால் சாகலாம். விண்ணுலகாவது எஞ்சும்” என்றார். யுதிஷ்டிரர் கைதளர உடைந்த குரலில் “மந்தா!” என்றார். “எண்ணியதை இயற்றிவிட்டோம். இனி சற்று குற்றவுணர்வும் கண்ணீரும் கொண்டு அதை கழுவுவோம்” என்றார் பீமசேனர். “பிறகென்ன செய்யவேண்டுமென்கிறாய்? இப்பழிக்கோள் நிகழ்வையே கொண்டாட வேண்டுமா?” என்றார் யுதிஷ்டிரர். “வேண்டாம். ஆனால் அழுதுகொண்டிருக்க நமக்கு நெடும்பொழுதில்லை. பிதாமகர்

மறைவால் அவர்கள் வெறிகொண்டு எழுந்துவந்தால் நம் படை முற்றழியும்” என்றார் பீமசேனர்.

பாண்டவத் தரப்பிலிருந்து முதன்மைப் பெருவீரர் மண்மறைந்ததை அறிவிக்கும் முரசுகள் முழங்கத்தொடங்கின. பீமசேனர் அதை செவிகொண்டு கசப்புடன் துப்பியபடி “நம் தரப்பின் பெருவீரர் விழுந்துவிட்டாரா? யார், அபிமன்யூவா அன்றி அர்ஜுனனா?” என்றார். “மந்தா, அவர் நம் பிதாமகர். இக்களத்தில் அவர் நமக்கு எதிர்நின்றதனால் நமது பிதாமகர் அல்லாமல் ஆவதில்லை” என்றார் யுதிஷ்டிரர். பீமசேனர் “அதை நேற்று நானும் சொன்னேன். ஆனால் இன்று இக்களத்தில் அதை சொல்லமாட்டேன். இது வெற்றிக்கும் பழிநிகருக்கும் நாம் நின்றிருக்கும் குருதிவெளி” என்றபின் சுருதகீர்த்தியைப் பார்த்து “அவர்கள் எழவில்லை. உளம்சோர்ந்துவிட்டனர். ஆகவே இதுவே தருணம். இந்தச் சோர்வில் நாம் எழுந்து கௌரவரை அறைவோம். பிதாமகர் பீஷ்மர் கொன்றதற்கு இருமடங்கு வீரர்களை நாம் கொன்றாலொழிய இப்போர் நமக்கு நலம் தருவதாக திரும்பாது” என்றார்.

சுருதகீர்த்தி பேசாமல் நின்றான். தளர்ந்த குரலில் “மந்தா!” என்று யுதிஷ்டிரர் சொன்னார். “பிறகென்ன செய்வது? போரை நிறுத்துவதா? இன்னும் முற்பொழுதே ஆகவில்லை. இன்னும் நாம் கொன்றுகுவிக்க வேண்டியவர்கள் எஞ்சியிருக்கிறார்கள். கௌரவர்களில் எஞ்சியவர்களின் தலைகளை அறைந்துடைத்தால் நான் நிறுத்திவிடுகிறேன் போரை. என் வஞ்சம் அதுமட்டுமே” என்று பீமசேனர் சொன்னார். “நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. என் புரிதல் திறனுக்கு அப்பால் சென்றுவிட்டன அனைத்தும்” என்று யுதிஷ்டிரர் சொன்னார். சுருதகீர்த்தியிடம் திரும்பி “எழுக, மைந்தா! இன்று நமது கொலையாட்டு நிகழட்டும்!” என்று பீமசேனர் சொன்னார். “இல்லை, தந்தையே. என்னால் இனி வில் தூக்க இயலுமென்று தோன்றவில்லை” என்று சொன்னான் சுருதகீர்த்தி.

“பார்த்தீர்களல்லவா படையினர் முழுவதுமே அழுதுகொண்டிருக்கிறார்கள். இவர்களை எந்த ஆணையால் போருக்குத் திருப்புவீர்கள்?” என்றார் நகுலன். “இவர்கள் எழ வேண்டியதில்லை. என் வீரர்கள் எழுவார்கள். அவர்கள் என் உணர்வுகளன்றி பிறிதொன்றை அடையமாட்டார்கள். என்னை பின்தொடர்க! இது என் ஆணை” என்றார் பீமசேனர். சுருதகீர்த்தி பேசாமல் நின்றான். “நாம் மட்டும் போதும். இன்றே கௌரவர்களின் தலைகொய்வோம்” என்று பீமசேனர் சொன்னார். அவருக்குப் பின்னால் புரவிகளில் வந்து நின்ற சதானீகனும் சுருதசேனனும் சொல்லின்றி தலைகுனிந்தனர். “எழுக!” என்று பீமசேனர் கைவீசிக் கூவ அவர்கள் மறுகுரல் எழுப்பவில்லை.

சினம் பொங்க “கீழ்மக்களே! எளிய உணர்வுகளுக்கு இடம் கொடுக்கிறீர்கள் என்றால் எதற்கு போருக்கெழுகிறீர்கள்? சொல்க, எவர் என்னுடன் வரப்போகிறீர்கள்?” என்றார் பீமசேனர். அப்பால் நின்ற யௌதேயன் “தந்தையே, இத்தருணத்தில் போருக்கெழுந்தால் பெரும்பழி சூடுவோம்” என்றான். “சூடிய பெரும்பழி வீணாகப் போகவேண்டாம், அது வெற்றி என்று ஆகட்டும் என்றுதான் வந்துள்ளேன். இக்களத்தில் நமக்கு அதுமட்டுமாவது எஞ்சட்டும்” என்றார் பீமசேனர். கசப்புடன் கைவீசி “ஆமாம், நீங்கள் வரமாட்டீர்கள். என்னுடன் இத்தருணத்தில் நிற்பதற்கு இருவரே உள்ளனர். கடோத்கஜனும் அபிமன்யூவும் போதும், இன்றைய பேரழிவை நான் நிகழ்த்துகிறேன்” என்றபின் பாய்ந்து புரவியிலேறிச் சென்றார்.

யௌதேயன் “ஆம், அவர்கள் இருவரும் செல்வார்கள். எத்தயக்கமும் இன்றி இத்தருணத்தில் கொலைவெறியாடி திளைப்பார்கள்” என்றான். யுதிஷ்டிரர் நீண்ட தேம்பலோசையுடன் அழத்தொடங்க அவர் மேல் பெருவெறுப்பை சுருதகீர்த்தி

உணர்ந்தான். பீமசேனர் சொன்னதைவிட கடுஞ்சொற்களால் அவரை வசைபாடவேண்டுமென்று தோன்றியது. திரும்பி நோக்கியபோது சுருதசேனன் முகத்திலும் சதானீகன் முகத்திலும் அந்தக் கசப்பை கண்டான். தேரைத் திருப்பி படைமுகப்பிற்கு கொண்டுசெல்ல ஆணையிட்டான். அவன் தேர் முகப்பெல்லையை கடந்தபோது எங்கும் போர்வீரர்கள் அழுதுகொண்டும் சோர்ந்து குனிந்து அமர்ந்து உடல் விம்மிக்கொண்டும் இருப்பதை கண்டான்.

போர்முரசு முன்னணியில் ஒலிக்கத் தொடங்கியது. “பீமசேனர் எழுகிறார்! அபிமன்யூவும் கடோத்கஜனும் உடன் எழுகிறார்கள்! எழுக! போர் வெல்க! வெல்க குருகுலம்! வெல்க மின்கொடி! வெல்க அறம்!” என்று போர்முரசு கூவியது. படைவீரர்கள் திகைத்தவர்போல ஒருவரை ஒருவர் நோக்கினர். சிலர் எழுந்து முழவொலி கேட்ட திசை நோக்கி பொருளிலாது கைசுட்டினர். சில இடங்களில் வசைச்சொற்களும் கூச்சல்களும் எழுந்தன. பாகனிடம் “முகப்புக்குச் செல்க!” என சுருதகீர்த்தி ஆணையிட்டான். செல்வதற்குள் அங்கு பெரும்போர் மூண்டுவிட்டிருப்பதை ஓசைகளிலிருந்து உணர்ந்தான். “தேரை போர்முனைக்கு செலுத்துக!” என்றான். “தாங்களும் கலந்துகொள்ளப் போகிறீர்களா?” என்றான் தேர்ப்பாகன். “ஆம், வேறு வழியில்லை. இப்போரில் இனி பழியென்று எதுவும் கொள்வதற்கில்லை. தந்தை சொன்னதைப்போல் வெற்றியெனில் பழியை சற்று குறைத்துக்கொள்ளலாம்” என்றான்.

அவனுடைய தேர் படைமுகப்பிற்குச் சென்றபோது பீமசேனர் நடுவிலும் கடோத்கஜனும் அபிமன்யூவும் இருபக்கமும் நிற்க பாண்டவர்களின் படையொன்று அலைவடிவு கொண்டு எழுந்து பின்னர் நீண்டு வேல் வடிவம் கொண்டு கௌரவர்களின் படைகளுக்குள் ஊடுருவிச் சென்றுவிட்டதை கண்டான். கௌரவர்கள் முற்றிலும் எதிர்ப்பற்றவர்களாக இருந்தனர். அபிமன்யூ கௌரவப் படைவீரர்களை வெறும் மரப்பட்டை இலக்குகள் மட்டுமே என்பதுபோல் அறைந்தறைந்து வீழ்த்திக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றி விழுந்த கௌரவர்களாலான வெளி உருவாயிற்று. மறுபுறம் கடோத்கஜன் கழைகளிலும் கொக்கிக்கயிற்றிலுமாக காற்றில் பறந்து கதையால் கௌரவர் தலைகளை அறைந்து உடைத்தான். அவனைத் தொடர்ந்த இடும்பர்கள் எதிர்கொண்ட அனைவரையும் எதிர்த்து குருதிச்சேறென தெறிக்கவைத்தனர்.

கௌரவ மைந்தர்கள் கீர்த்திமானும் கீர்த்திமுகனும் நீரஜனும் நிரலனும் அபிமன்யூவால் கொல்லப்பட்டார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் முட்டித் ததும்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான ஆணைகள் ஏதும் எழவில்லை. காலபதனும் புசனும் தருணனும் தமனும் அதரியும் அபிமன்யூவின் அம்புகளால் வீழ்த்தப்பட்டனர். அவர்களின் இறப்பை அறிவிக்கும் பொருட்டு கௌரவர் முரசுகள் முழங்கவில்லை. பீமசேனர் தேரிலிருந்து ஊன்றுவேலில் முன்னெழுந்து சென்று கௌரவர்களின் தேர்களை அடைந்து கதையால் அறைந்து உக்ராயுதனையும் துர்விகாகனையும் பாசியையும் கொன்றார். அவர்கள் தலைசிதறி நிலத்தில் விழுந்தபோதும்கூட கௌரவர்கள் போருக்கெழவில்லை. கண்ணீர் நிறைந்த முகங்கள் நம்பமுடியாத வெறிப்புடன் பீமசேனரை நோக்கின. விட்டில்போல களமெங்கும் தாவி அவர்களின் தலைகளை அத்திகைப்பினூடாக சேர்த்து அறைந்துடைத்து தெறிக்க வைத்தார். உக்ரசிரவஸும் உக்ரசேனனும் செத்துவிழுந்தனர். விவித்சுவும் துர்விமோசனும் தேரிலேயே குருதி சிதறி விழுந்தனர்.

மேலும் மேலுமென கௌரவப் படைகளுக்குள் சென்றுகொண்டிருந்தது அவர்களின் படை. சகுனியின் முரசு விழித்துக்கொண்டு கூவத்தொடங்கியது. “அழிவு! பேரழிவு!

தடுத்து நிறுத்துக! பீமனை தடுத்து நிறுத்துக!” அதைத் தொடர்ந்து திருஷ்டத்யும்னனின் ஆணை முரசொலியாக எழுந்தது. “பீமனுக்கு துணைசெல்க! கௌரவர்களை வெல்க!” சகுனியின் ஆணைகளுடன் கௌரவரும் மைந்தரும் களம்பட்டதை அறிவிக்கும் முரசொலிகள் எழுந்தன. அதைக் கேட்டதும் பாண்டவப் படையினர் எண்ணியிராக் கணம் ஒன்றில் போர்வெறி கொண்டனர். கூச்சலிட்டபடி பெருகிவந்து பீமசேனரின் படையுடன் இணைந்துகொண்டனர். அவர்களின் கூச்சல் முழக்கை கேட்டு சுருதகீர்த்தி திரும்பிப் பார்த்தான். வெறிகொண்ட முகங்களில் பற்கள் மின்னின. அவர்கள் நகைத்துக்கொண்டும் வசைகூவிக்கொண்டும் நடனமிட்டபடியும் வந்தனர்.

கௌரவ வில்லவர்களும் காலாட்களும் பாண்டவர்களால் நிரைநிரையாகக் கொல்லப்பட்டு சரிந்தனர். விழுந்த சடலங்களை ஓங்கி மிதித்தனர் பாண்டவப் படையினர். தலைகளை வெட்டித் தூக்கி வீசினர். உடல்கள் மேல் நின்று கூத்தாடினர். “உங்கள் பிதாமகரின் குருதி இது, இழிமக்களே!” என்று கூவியபடி ஒருவன் வெட்டுண்ட தலையின் குருதியூற்றை தன் தலைக்குமேல் தூக்கிப்பிடித்தான். அதை நாநீட்டி நக்கிக் குடித்தான். “உங்கள் பிதாமகர் விண்ணிலிருந்து நோக்கட்டும்! அவர் கையால் களம்பட்ட எங்கள் தோழர்கள் அங்கு நின்று ஆர்க்கட்டும்!” என்று ஒருவன் கூவினான். “கொல்க… எண்ணாது கொல்க! எஞ்சாது கொன்று கடந்துசெல்க!” அனைத்து வீரர்களும் நகைத்துக்கொண்டிருந்தனர்.

சுபாகு புரவியில் ஏறி முட்டித் ததும்பிக்கொண்டிருந்த படைகளினூடாக விரைந்து துரியோதனனின் படைப்பகுதியை அடைந்தான். அவன் புரவியிலிருந்து இறங்கியதுமே அவனை நோக்கி வந்த துச்சலன் “மூத்தவர் பிதாமகர் வீழ்ந்த இடத்திற்கு சென்றுள்ளார்” என்றான். அவன் திரும்பி நோக்க “வடக்கு எல்லையில்… படைகளின் விளிம்பில்” என்றான் துச்சலன். அவனுக்கு முன்னால் கௌரவப் படைகளை பாண்டவர்களின் படைகள் கடல்பாறையை அலைகள் என வந்து அறைந்துகொண்டிருந்தன. “வெறிகொண்டு தாக்குகிறார்கள். பீமசேனர் உக்ராயுதனையும் துர்விகாகனையும் பாசியையும் கொன்றுவிட்டார். நம் மைந்தர்கள் கீர்த்திமானும் கீர்த்திமுகனும் நீரஜனும் நிரலனும் களம்பட்டுள்ளனர்” என்றான் துச்சலன்.

“பிதாமகரைக் கொன்றதை கொண்டாடுகிறார்கள்!” என்றான் துர்மதன். “இல்லை, அனைத்து அறங்களையும் கடந்துவிட்டதை கொண்டாடுகிறார்கள்” என்ற சுபாகு “நான் மூத்தவரிடம் செல்கிறேன்” என்று புரவியில் ஏறிக்கொண்டான். காலபதனும் புசனும் கொல்லப்பட்ட செய்தியை முரசுகள் முழங்கின. அவன் புரவியை படைகள் நடுவே செலுத்தினான். “எதிர்கொள்க! பீமனையும் மைந்தரையும் இணைந்து எதிர்கொள்க!” என்று சகுனியின் முரசொலி எழுந்தது. தருணனும் தமனும் அதரியும் வீழ்ந்தனர். சுபாகு பெருமூச்சுவிட்டான். அவன் துரியோதனனின் அரவுக்கொடியை தொலைவில் நோக்கியபோது உக்ரசிரவஸும் உக்ரசேனனும் கொல்லப்பட்டதை முரசு கூறிக்கொண்டிருந்தது. பீஷ்மரின் படுகளம் கௌரவப் படைகளால் சூழப்பட்டிருந்தது. அங்கிருந்த பாண்டவப் படைகள் விலகி வேறு இடங்களில் குவிந்து தாக்கிக்கொண்டிருந்தனர். அர்ஜுனன் போர்முனையில் இல்லை என்று தெரிந்தது.

சுபாகு புரவியிலிருந்து இறங்கி பீஷ்மரின் படுகளம் நோக்கி சென்றான். விவித்சுவும் துர்விமோசனும் கொல்லப்பட்டதை முழங்கிக்கொண்டிருந்தது முரசு. அவனை எதிர்கொண்ட துச்சாதனன் “எங்கிருந்து வருகிறாய்? என்ன நடக்கிறது?” என்றான். “மூத்தவரே, பாண்டவப் படையும் பீமனும் களிவெறிக்கொண்டு எழுந்து வந்து நம்மை தாக்குகிறார்கள். நம் உடன்பிறந்தாரும் மைந்தரும் வீழ்ந்துகொண்டிருக்கிறார்கள்” என்றான் சுபாகு. “கௌரவ மூத்தவர்கள் எழுக! பீமனை தடுத்து நிறுத்துக!” என்று சகுனியின் ஆணையை ஒலித்தது முரசு. துச்சாதனன் அங்கே பீஷ்மரின் உடலருகே குனிந்து நின்றிருந்த துரியோதனனை நோக்கி ஓடிச்சென்று “மூத்தவரே, நாம் களம் சென்றாகவேண்டும். இளையோர் மறைந்துகொண்டிருக்கிறார்கள்” என்றான்.

துரியோதனன் கைவீசி “நாம் இங்கிருந்தாக வேண்டும். பிதாமகரை கொண்டுசெல்ல வேண்டியிருக்கிறது. பகதத்தரும் பால்ஹிக பிதாமகரும் சென்று அவர்களை எதிர்கொள்ளட்டும்!” என்றான். கௌரவ மைந்தர்களான துராசதனும் வீரஜிஹ்வனும் வீரதன்வாவும் வீரபாகுவும் களம்பட்ட செய்தியை முழவுகள் கூறின. கௌரவர்கள் அலோலுபனும் அபயனும் பீமனால் கொல்லப்பட்டார்கள் என்று முரசு கூறியபோது துச்சாதனன் “மூத்தவரே, படுகொலை நிகழ்ந்துகொண்டிருக்கிறது. பிதாமகரைக் கொன்ற களிவெறியில் அவர்கள் நம்மை அழிக்கிறார்கள்!” என்றான். கீழே பீஷ்மரை தொட்டுநோக்கிக்கொண்டிருந்த மருத்துவன் நிமிர்ந்து நோக்கி “உயிர் எஞ்சியிருக்கிறது” என்றான்.

துரியோதனன் திகைப்புடன் “உயிருடனிருக்கிறாரா? மெய்யாகவா?” என்றான். மண்ணில் முழந்தாளிட்டுக் குனிந்து பீஷ்மரின் செவிகளில் “பிதாமகரே! பிதாமகரே, நான் உங்கள் மைந்தன், துரியோதனன்!” என்றான். பீஷ்மர் “நீயா?” என மெல்ல முனகினார். “குருதியும் குடியும் காப்பவனே நல்லரசன்… மைந்தா, வஞ்சத்தைவிட, மண்ணைவிட, நெறிகளைவிட, அறத்தைவிட, தெய்வங்களைவிட குலம் வாழ்வதே முதன்மையானது” என்றார். அவர் சொல்வதை சரியாக புரிந்துகொள்ளாமல் துரியோதனன் “தந்தையே! மூதாதையே!” என்றான். சுபாகு “மூத்தவரே, நாம் பிதாமகரை மருத்துவநிலைக்கு கொண்டுசெல்லவேண்டும்” என்றான். “எப்படி அவரை தூக்குவது? அவர் உடலில் அம்பு தைத்திருக்காத இடமே இல்லை” என்றான் துச்சாதனன்.

சுபாகு “முதுமருத்துவர்களை கொண்டுவருவோம்… அவர்கள் ஏதேனும் சொல்வார்கள்!” என்றான். துரியோதனன் “செல்க, முதுமருத்துவர் வஜ்ரரை உடனே அழைத்து வருக!” என்றான். திரும்பி சுபாகுவிடம் “பிதாமகர் உயிருடனிருப்பது விந்தை. இத்தனை அம்புகளுக்குப் பின்னரும்!” என்றான். “அவர் இறக்க விழையவில்லை, மூத்தவரே. முதியவர்கள் சிலர் அவ்வாறு இறக்க விழையாமல் மண்ணில் தங்கியிருப்பதுண்டு” என்றான் சுபாகு. “எத்தனை அம்புகள்!” என துரியோதனன் மீண்டும் வியந்தான். “முழு விழைவுடன் தொடுக்கப்பட்ட அம்பு ஒன்றுகூட இல்லை என்பதே அவர் இறக்காமலிருப்பதன் பொருள்” என்றான் சுபாகு.

பீஷ்மர் மயக்கத்தில் “ஆனால்” என முனகினார். “என்ன சொல்கிறார்?” என்று துரியோதனன் கேட்டான். பீஷ்மர் மீண்டும் “ஆனால்…” என்றார். துரியோதனன் துச்சாதனனை நோக்க அவன் “புரியவில்லை… வேறேதோ எண்ணத்தின் நீட்சி” என்றான். “ஆனால்… ஆனால்” என்றார் பீஷ்மர். சுபாகு புன்னகைத்தான். “என்ன? என்ன?” என்றான் துரியோதனன். “ஒன்றுமில்லை” என்றான் சுபாகு. “சொல், மூடா… என்ன எண்ணினாய்?” என்றான் துரியோதனன். “ஒன்றுமில்லை, மூத்தவரே. ஒரு குறுக்கு எண்ணம்” என்றான் சுபாகு. “அவர் வாழ்க்கையை ஒற்றைச் சொல்லில் சுருக்கிக்கொண்டாரோ என…” துரியோதனன் “என்ன சொல்கிறாய்?” என்று முகம்

சுளித்தான். “வெற்று எண்ணம், பொருளற்றது” என்றான் சுபாகு. “அறிவிலி” என்று துரியோதனன் முகம் திருப்பிக்கொண்டான். பீஷ்மர் மீண்டும் ஆழ்ந்த முனகலோசையை எழுப்பினார்.

அப்பால் ஆணைமாடங்களிலிருந்து முரசுகள் களநிகழ்வுகளை சொல்லிக்கொண்டிருந்தன. நிலைகுலைந்திருந்த துரியோதனன் “என்ன? என்ன அறிவிப்பு?” என்றான். “பகதத்தரும் பால்ஹிகரும் களம்செல்கிறார்கள். அபிமன்யூவை பூரிசிரவஸும் ஜயத்ரதரும் சேர்ந்து எதிர்க்கிறார்கள்” என்றான் சுபாகு. “நன்று. நம் இளையோர் பின்னகரட்டும்... இன்று அவர்கள் வெறியாடுவார்கள்” என்றான் துச்சாதனன். துரியோதனன் பொருளிலா விழிகளுடன் அவனை நோக்கினான். அவன் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தான். பற்களை இறுகக் கடித்துக்கொண்டிருந்தமையால் தாடை அசைந்தது. கழுத்துத் தசைகள் நெளிந்தன. துச்சாதனன் “இன்று அவர்கள் இருளில் வீழ்ந்துவிட்டனர். இனி அவர்கள் எதை வென்றாலும் இழுக்கே” என்றான். துரியோதனன் அவனை விளங்கா விழிகளுடன் நோக்க “ஆணிலியை முன்னிறுத்தி போரிடுதல். படைக்கலம் தாழ்த்தியவரை கொல்லுதல். கீழ்மை!” என்றான். துரியோதனன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் தலைமட்டும் ஆடியது.

சகட ஓசை கேட்டது. மருத்துவர் வஜ்ரர் விரைவுத்தேரில் வந்திறங்கினார். கூன்விழுந்த உடலுடன் அவர் விரைவடி எடுத்துவைத்து வர அவருக்குப் பின்னால் அவருடைய மாணவர்களான இரண்டு மருத்துவ உதவியாளர்கள் மூங்கில் பெட்டிகளுடன் வந்தனர். அவர் துரியோதனனுக்கு தலைவணங்கி “செய்தியை சற்று முன்னர் அறிவித்தனர். களம்பட்டார் என்றே முழவுகள் சொல்லின. ஆகவே நான் இங்கு எவரையும் அனுப்பவில்லை. பொறுத்தருளவேண்டும்” என்றார். “களம்பட்டார் என்றே எண்ணினோம். உயிர் எஞ்சியிருப்பது விந்தைதான்” என்றான் துச்சாதனன். பீஷ்மரை அதன் பின்னர்தான் வஜ்ரர் பார்த்தார். அதிர்ந்து ஓரடி பின்னகர்ந்த பின் “அவரா?” என கைசுட்டினார். “அவரேதான். தெய்வங்களே, உயிர் இருக்குமென்றால் அது இறையாடல் அன்றி வேறல்ல!”

சுபாகு “உயிர் இருக்கிறது, பேசுகிறார்” என்றான். வஜ்ரர் விரைந்து பீஷ்மரின் அருகே சென்று முழந்தாளிட்டு அமர்ந்து இடக்கை பற்றி நாடிநோக்கி “சீரடி... மூன்று நாடிகளும் முற்றிலும் ஒத்திசைந்துள்ளன. உயிர் பழுதின்றி உடலில் திகழ்கிறது!” என்றார். “ஆனால்...” என்றார் பீஷ்மர். வஜ்ரர் திடுக்கிட்டு அவர் உதடுகளை பார்த்துவிட்டு “உயிர் எப்படி தங்கியிருக்கிறது என்பது பெருவிந்தை!” என்றார். சுபாகு “அம்புகள் உயிர்நிலைகளை தொடவில்லை போலும்” என்றான். “இல்லை, அத்தனை உயிர்மையங்களிலும் அம்புகள் தைத்திருக்கின்றன” என்ற வஜ்ரர் “ஆனால் இங்கே குருக்ஷேத்ரத்திற்கு வந்த பின்னர் நான் வியப்படைவதை விட்டுவிட்டேன்...” என்றார்.

“இங்கிருந்து பிதாமகரை கொண்டுசெல்லவேண்டும். மருத்துவநிலைக்கு சென்ற பின் அத்தனை மருத்துவர்களும் வந்தமர்ந்து அவரை நோக்கட்டும். அவர் எழுந்துவரவும் கூடும்” என்றான் துரியோதனன். வஜ்ரர் மீண்டுமொருமுறை நாடியை நோக்கிவிட்டு “அரசே, அது இயல்வதல்ல. அவர் உடலில் அம்புகள் இடைவெளியில்லாமல் தைத்துள்ளன. உயிர் ஒரு மெல்லிய விந்தையாக ஓடிக்கொண்டிருக்கிறது. அரிதான ஒரு சுடர் அது. விளக்கமுடியாத எதனாலோ எரிகிறது. விளக்கவே முடியாதபடி அணைந்துவிடவும் கூடும். நாம் இங்கிருந்து அவரை அகற்றவே முடியாது” என்றார். “பிறகு என்ன செய்வது? இந்தக் களத்தில்...” என்றான் துரியோதனன்.

“அரசே, இது முகக்களம் அல்ல. போர் இப்போதே தெற்கே நகர்ந்துவிட்டது. அவர்களிடம் சொல்க, இது பிதாமகரின் படுகளம் என! நாளை முதல் போர் தெற்கே நிகழட்டும். அவர் இங்கேயே இவ்வண்ணமே இருப்பதே நன்று. உண்மையில் அது ஒன்றே இயல்வது” என்றார் வஜ்ரர். துரியோதனன் துச்சாதனனை நோக்க “அது உகந்ததே, மூத்தவரே. இது களமல்ல” என்றான். துரியோதனன் “ஆணையிடுக!” என்று கைகாட்டினான். சுபாகு “இங்கேயே ஓர் மருத்துவநிலையை அமைக்கலாம்” என்றான். வஜ்ரர் சில கணங்கள் எண்ணிவிட்டு “அதை அவர் விழைவாரா என தெரியவில்லை. அவரிடமே கேட்கிறேன்” என்றார். “அவர் உளத்தெளிவுடன் இல்லை” என்றான் சுபாகு. “ஆம், ஆனால் ஆத்மன் இப்போதுதான் உள்ளத்தின் தடையில்லாமல் சொல்கூர்வான்” என்றார் வஜ்ரர்.

வஜ்ரர் பீஷ்மரின் செவியில் “பிதாமகரே, இங்கே தங்களுக்கு மேல் கூரை தேவையா?” என்றார். “பிதாமகரே, செவிகூர்க! இங்கே கூரை தேவையா?” அவர் மீண்டும் மீண்டும் கேட்க துரியோதனன் அதிலிருந்த பொருளின்மையைக் கண்டு பொறுமையிழந்தான். அவன் ஏதோ சொல்லத் தொடங்குவதற்குள் பீஷ்மர் “விண்மீன்கள்!” என்றார். “ஆம்” என்றபின் வஜ்ரர் எழுந்துகொண்டு “அவர் விண்மீன்களின் கீழ் படுக்க விழைகிறார்” என்றார். சுபாகு “எண்ணினேன்!” என்றான். துரியோதனன் “ஏன்?” என்று அவனிடம் கேட்டான். அவன் விழிகள் சிவந்து கலங்கியிருக்க உதடுகள் உலர்ந்து ஒட்டியிருந்தன. “மூத்தவரே, இறப்பவர்கள் விண்மீன்களுக்குக் கீழே படுத்திருக்கவே விழைகிறார்கள்” என்றான் சுபாகு. “அவர் இறக்கமாட்டார். அவர் இறப்பற்றவர்” என்று துரியோதனன் கூச்சலிட்டான். சுபாகு ஒன்றும் சொல்லாமல் வெறுமனே நோக்கினான். “அறிவிலிகள்!” என்று துரியோதனன் திரும்பிக்கொண்டான்.

வஜ்ரர் “அரசே, தாங்கள் இங்கே இருக்கவேண்டியதில்லை. நாங்கள் எங்கள் பணியை ஆற்றுகிறோம். தாங்கள் சென்று தங்கள் பணியை ஆற்றுக!” என்று கடுமையான குரலில் சொன்னார். “பிதாமகரின் உயிர் போக விழைந்தால் அதற்கான வாசலை திறந்து கொடுப்போம். தங்க விழைந்தால் இந்தப் பீடத்தை அதற்கென ஒருக்குவோம். எங்கள் தொல்மரபு துணைநிற்கட்டும்!” துரியோதனன் ஏதோ சொல்லவந்த பின் தலையசைத்தான். சுபாகு துச்சாதனனை நோக்கி விழியசைத்தான். துச்சாதனன் “மூத்தவரே, இங்கே நாம் இருந்து ஆவதொன்றுமில்லை. பிதாமகர் சாகவில்லை என்ற செய்தியை உங்கள் அறிவிப்பாக படையினர் அறியட்டும். அது இக்களத்தில் நம்மை வீழாமல் காக்கும். யானை மீதேறி நீங்கள் களம்புகுந்தால் இன்றும் நாமே வெல்வோம்” என்றான்.

துரியோதனன் பெருமூச்சுடன் “ஆம்” என்றான். திரும்பி சுபாகுவை நோக்கி “நீ இங்கேயே இரு. நாழிகைக்கொருமுறை பிதாமகர் எவ்வண்ணமிருக்கிறார் என்னும் செய்தி என்னை வந்தடைய வேண்டும்” என்றபடி கிளம்பினான். அவன் நடை தளர்ந்திருப்பதை சுபாகு வெறுமனே நோக்கிக்கொண்டு நின்றான். துரியோதனன் தேரிலேறிக்கொண்டான். துச்சாதனன் சுபாகுவிடம் “நற்செய்தி மட்டும்” என்றபின் தானும் சென்று தேரில் ஏறிக்கொண்டான். தேர் குலுங்கி அதிர்ந்து கிளம்பிச்சென்றது. சுபாகு திரும்பி மருத்துவரிடம் “அவரை தங்களிடம் ஒப்படைத்துள்ளோம், மருத்துவரே. இயன்றதை செய்க!” என்றான்.

வஜ்ரர் “இப்போது செய்யவேண்டியது பிதாமகரை சரியாக படுக்க வைப்பது. அவர் உடலில் எங்கென்றில்லாமல் அம்புகள். சிறிய புல்லம்புகளே பல உள்ளன” என்றார். “அம்புகளை பிழுதெடுக்க முடியுமா என்றுதான் பார்த்தேன். இத்தனை அம்புகளை பிடுங்கினால் புண்வாய்களிலிருந்து வழியும் குருதியே அவரை கொன்றுவிடும். அம்புமுனைகளையே குருதியை அடைக்கும் தடையாக நிறுத்திக்கொள்ளலாமென

நினைக்கிறேன்” என்றார். கூர்ந்து நோக்கியபடி பீஷ்மரை சுற்றிவந்தார். “பெரும்பாலான அம்புகள் இரும்புக்கூர்களில் மரத்தண்டு பொருத்தப்பட்டவை. சற்றே உருகிய நெய்விட்டால் அவற்றை தனியாக பெயர்த்து எடுத்துவிட முடியும். ஆனால் எப்படி படுக்கவைப்பது? மென்மயிர்ச் சேக்கையிலானாலும் இந்த அம்புப்புண்கள் அழுந்துமே.”

அவருடைய மாணவர்களில் ஒருவன் தாழ்ந்த குரலில் “அதற்கொரு வழி உள்ளது” என்றான். “என்ன?” என அவர் விழிதூக்கினார். “முன்பு வத்ஸநாட்டு அரசர் சுவாங்கதருக்கு பெரிய கட்டிகள் உடலெங்கும் வந்து புண்ணாயின. அன்று எங்கள் நிலத்து மருத்துவர் ஒருவர் அவரை முட்படுக்கையில் படுக்க வைத்தார். நூற்றெட்டு நாட்கள் அப்படுக்கையில் கிடந்து அவர் நோய்நீங்கினார்” என்றான். வஜ்ரர் கேள்வியுடன் நோக்கிக்கொண்டிருக்க “முதுகில் புண்கள் இருந்த இடங்களை கணக்கிட்டு புண்களின் நடுவிலூடாக ஊன்றும்படி ஆயிரத்தெட்டு முட்களை நிறுத்தி அவற்றின்மேல் அவரை படுக்கச் செய்தார். முட்கள் மிகச்சரியான உயரம் கொண்டிருந்தால் உடலில் அவை தைப்பதில்லை. நாமும் அவ்வண்ணம் ஒன்றை இங்கே உருவாக்கலாம்” என்றான்.

வஜ்ரர் “ஆம், முயன்று பார்க்கலாம். முறையாக படுத்தாலே அவர் உடலின் வலி பெரும்பாலும் குறைந்துவிடும்” என்றார். “இங்கே களமெங்கும் மெல்லிய உறுதியான நீளம்புகள் சிதறிக்கிடக்கின்றன. இவற்றை நாட்டியே நாம் அவ்வண்ணம் ஒரு படுக்கையை உருவாக்கிக்கொள்ள முடியும். ஆணையிட்டால் நானே செய்கிறேன்” என்றான். வஜ்ரர் திரும்பி சுபாகுவிடம் “தென்றிசையில் தமிழ்நிலத்தைச் சேர்ந்தவன். அவர்கள் இசையிலும் மருத்துவத்திலும் தெய்வங்களால் தனித்து பயிற்றுவிக்கப்பட்டவர்கள்” என்றார்.

சுபாகு “ஆனால் அம்புகள் மேல்…” என்றான். “அரசே, நூற்றுக்கணக்கான அம்புமுனைகளாலான கண்ணுக்குத் தெரியாத வலை அது என்று உணர்க! அதன்மேல் உடல் அழுந்துகையில் பலநூறு இடங்களிலாக உடல் எடை பகிரப்படும். காற்றில் மிதக்கும் எடையின்மையை பிதாமகர் உணர்வார்” என்றான் மாணவன். வஜ்ரர் “முட்காலணியில் நின்றிருப்பீர்கள், அதைப்போல” என்றார். “ஆகுக!” என்றான் சுபாகு. மாணவன் தலைவணங்கினான். சுபாகு “உன் பெயர் என்ன?” என்று கேட்டான். “சாத்தன்” என்று அவன் மறுமொழி சொன்னான். வஜ்ரர் “அவன் பெயர் ஆதன். இருவருமே தென்றிசையினர். அகத்திய மரபினர்” என்றார். சுபாகு பெருமூச்சுவிட்டான். பின்னர் நினைத்துக்கொண்டு புன்னகைத்தான். வஜ்ரர் வினாவுடன் நோக்க “நெடுநாட்களுக்கு முன்பு எங்கள் குலமூதாதை விசித்திரவீரியரை நோக்க தென்றிசையிலிருந்து சாகா நிலைகொண்ட சித்தராகிய அகத்தியர் வந்தார் என ஒரு கதை உண்டு” என்றான்.

அவர்கள் இருவரும் மிக விரைவாக செயல்பட்டனர். வஜ்ரர் பீஷ்மரின் முதுகிலும் இடையிலும் கால்களிலும் இருந்த அம்புகளின் எண்ணிக்கையையும் இடங்களையும் கணக்கிட்டு அதை அருகே தரையில் ஓர் அம்புமுனையால் வரைந்தார். ஆதன் அங்கே சிதறிக்கிடந்த நீண்ட அம்புகளை பொறுக்கி சேர்த்தான். சாத்தன் நூற்றெட்டு நீண்ட அம்புகளை நிலத்தில் இறக்கி நாட்டினான். அருகே கிடந்த கதை ஒன்றால் அவற்றை அறைந்து இறுக்கி நிறுத்தியபின் பீஷ்மரின் முதுகுப்புண்களை கணக்கிட்டு அவற்றுக்கேற்ப மேலும் அம்புகளை நாட்டினான். அவற்றின் நீளம் மிகச் சரியாக அமையும்படி கண்களாலும் கைகளாலும் அளவிட்டான். தூக்கணாங்குருவி கூடுசெய்வதுபோல என்று சுபாகு எண்ணிக்கொண்டான்.

அம்புகள் நாணல்புதர்போல் நின்றிருந்தன. ஆனால் அவற்றின் மேற்தளம் கூர்களாலான மென்பரப்புபோல தெரிந்தது. சற்றே அகன்று நோக்கியபோது அக்கூர்புள்ளிகள் இணைந்து ஒரு படுக்கை போலாயின. நிலத்தில் கிடந்த பீஷ்மரின் காலையும் தலையையும் பற்றி அவர்கள் இருவரும் மெல்ல தூக்க வஜ்ரர் அவரை கிடத்தவேண்டிய வகையை முழந்தாளிட்டு அமர்ந்து நோக்கி ஆணையிட்டார். முனகலோசையில் “மெல்ல… வடக்கே! வடக்கேதான்! ஆம்! சற்று… ஆம், மேலும்… மேலும் சற்று” என அவர்கள் பேசிக்கொண்டார்கள். அவர் முதுகில் தைத்து நின்றிருந்த அம்புகள் அனைத்துமே எங்கும் முட்டாமல் நீட்டி நிற்க அவரை அம்புப்படுக்கைமேல் மெல்ல படுக்கவைத்தனர்.

உடல் அம்புப்பரப்பு மேல் அமைந்ததும் பீஷ்மர் மெல்ல முனகி நீள்மூச்செறிந்தார். அவர் உடல் இழுவிசை இழந்து தளர்வதையும் அதுவரை சுருங்கியிருந்த முகத்தசைகள் நெகிழ்வதையும் சுபாகு பார்த்தான். வஜ்ரர் “நலமாக உணர்கிறார்” என்றார். பீஷ்மர் புரண்டு எழ முயல்பவர்போல ஓர் அசைவை உருவாக்கினார். “அஞ்சவேண்டாம், அவர் நன்கமைந்து கொள்கிறார்” என்றான் சாத்தன். பீஷ்மர் மீண்டும் பெருமூச்சுவிட்டு “ஆனால்…” என்றார். வஜ்ரர் “என்ன சொல்கிறார்?” என்று சுபாகுவிடம் கேட்டார். “அவர் அடிக்கடி சொல்லும் சொல் அது” என்றான் சுபாகு. “ஆம், அப்படி ஒரு சொல் இருக்கும்” என்றார் வஜ்ரர். பீஷ்மர் மீண்டும் சற்று உடல்தளர்ந்தார். முட்கள்மேல் படிந்த ஆடை போலாயிற்று அவர் உடல்.

அந்த அம்புப்படுக்கையை அகன்று நின்று நோக்கியபோது சுபாகு விந்தையான ஒரு கூச்சத்தை அடைந்தான். அவன் உடலில் அந்த அம்புகள் குளிராக கூர்பாய்ந்து நிற்பதைப்போல. பீஷ்மரின் கரண்டைக்கால்கள் ஆறு கூரிய அம்புகளால் தாங்கப்பட்டிருந்தன. அவன் நோக்குவதைக் கண்ட வஜ்ரர் “கரண்டைக்காலின் எடை ஆறுமுறை பகிரப்பட்டுள்ளது. மென்மலர் தொடுகை போலிருக்கும்” என்றார். ஆயினும் அவனால் அந்த உடற்கூச்சத்தை வெல்ல முடியவில்லை. தசைகள் விதிர்த்து மெய்ப்பு கொண்டபடியே இருந்தன. “நூற்றெட்டு அம்புமுனைகளால் ஒரு யானையை காற்றில் மிதப்பதுபோல படுக்க வைக்க முடியும், அரசே. உரிய முறையில் எடை பகுக்கவேண்டும். இங்கே பிதாமகரின் உடலின் அம்புகளுக்கேற்ப படுக்கை அமைக்கப்பட்டுள்ளமையால்தான் இத்தனை அம்புகள்” என்றான் சாத்தன்.

சுபாகு பெருமூச்சுடன் அப்பால் சென்று உடைந்த தேர் ஒன்றின் மேல் அமர்ந்தான். போர்க்களம் மிக அப்பால் விலகிச்சென்றிருந்தது. அவனுடைய அணுக்கனாகிய காஞ்சனன் வந்து நின்றிருந்தான். சொல் என அவன் கைகாட்டினான். “அரசே, பால்ஹிகரும் பகதத்தரும் களமுகப்பிற்கு வந்தனர். அதற்குள் கௌரவ வில்லவர்களும் தேர்வலர்களும் பரிவீரர்களுமாக பெரும்பகுதியினர் களம்பட்டிருந்தனர். பால்ஹிகரின் அறைபட்டு இடும்பர்கள் சிதறி விழுந்தனர். கடோத்கஜன் அவருடைய பெருங்கதையை எதிர்கொண்டபடியே பின்னடைந்தார். பகதத்தரின் யானை விழுந்து கிடந்த கௌரவர்களின் மேல் எழுந்து வந்து பீமனை தாக்கியது” என்று காஞ்சனன் சொன்னான்.

“பூரிசிரவஸ், ஜயத்ரதர், அஸ்வத்தாமர் மூவரும் அம்முகப்பிற்கு வந்தனர். அபிமன்யூ அவர்களை எதிர்கொண்டபடி பின்னடைய சுருதகீர்த்தி முன்னால் சென்று அபிமன்யூவை அவர்களின் தாக்குதலிலிருந்து காத்தார். மெல்ல பின்னடைந்து அவர்கள் பாண்டவப் படை விரிவிற்குள் புகுந்துகொண்டனர். அதற்குள் கௌரவப் பேரரசர் களத்திற்கு வந்தார். பிதாமகர் கொல்லப்படவில்லை என்ற செய்தியை முரசுகள் அறிவித்தன. நம் படைகள் அதனால் ஊக்கம் பெற்று அவர்கள் மேல் பாய்ந்து தாக்கி பின்னடையச் செய்தன. வெல்ல முடியாதவர். எவராலும் கொல்ல

முடியாதவர். மூதாதை வடிவர். எட்டு வசுக்களால் ஏந்தப்பட்டவர் என்று பீஷ்மரின் புகழைக் கூவியபடி நம்மவர் போரிட்டனர்."

"மறுபக்கம் பாண்டவப் படையினர் பீஷ்மப் பிதாமகர் இறக்கவில்லை என்ற செய்தியால் உளச்சோர்வடைந்தனர். அவர்கள்தான் அவருடைய இறப்புக்காக கதறியழுதவர்கள். ஆனால் அவர் மீண்டும் எழுவார் என எண்ணியதுமே ஏமாற்றமும் அதன் விளைவான சீற்றமும் கொண்டு அர்ஜுனரையும் சிகண்டியையும் இளைய யாதவரையும் வசைபாடினர். அவர்களில் உருவான குலைவை பயன்படுத்திக்கொண்டு நமது படையினர் அறைந்து முன்சென்றனர். நமது படைகளால் பாண்டவப் படை தென்கிழக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளது. பொழுதணைந்து வருகிறது. இன்னும் சிறுபொழுதில் போர்நிறுத்தம் முழங்கும்."

சுபாகு அவனிடம் போகலாம் என்று கையசைத்தான். வஜ்ரரும் சாத்தனும் ஆதனும் அமர்ந்து மருந்தெண்ணையை செம்புக்குடுவைகளிலிருந்து அம்புகள்மேல் சொட்டுகளாக ஊற்றினர். எண்ணை வழிந்து அம்புமுனை பதிந்திருந்த புண்வாயில் சென்று பொருத்தில் தேங்கி சற்று ஊறி உள்ளிறங்கியது. சிறிய தோல்பட்டையால் அம்புகளின் தண்டை சாத்தன் சுற்றி பிடித்துக் கொண்டான். ஆதன் அம்புமுனையை பிடித்தான். வஜ்ரர் பீஷ்மரின் உடலை பற்றிக்கொண்டார். அம்புத்தண்டுகளை அவர்கள் புல்லை பிடுங்குவதுபோல விசையுடன் இழுத்து உருவி எடுத்தனர். பீஷ்மர் மெல்ல முனகினார். அவர் உதடுகள் அசைந்தன. அவர் "ஆனால்" என்றுதான் சொல்கிறாரா?

அவன் அம்புகள் ஒவ்வொன்றாக அகல்வதை நோக்கி நின்றிருந்தான். எத்தனை அம்புகள் என்ற எண்ணம்தான் ஏற்பட்டது. அவை அர்ஜுனனும் சிகண்டியும் மட்டும் தொடுத்தவைதானா? பாண்டவப் படையின் பிறரும் அவற்றை ஏவினார்களா? அங்கிருந்த படையினர் அனைவருமே அவர்மேல் அம்புகளை பெய்திருப்பார்கள். எட்டியவை அவர்கள் இருவரும் எய்தவை. அவர்கள் அப்படையிலிருந்து முழுத்தெழுந்தவர்கள். கலத்தில் ஊறிக் கனிந்த நீர்த்துளிகளைப்போல. அவன் பீஷ்மர்மேல் அம்புதொடுத்த அர்ஜுனனின் முகத்தை நினைவில் உருவாக்கிக்கொள்ள முயன்றான். அவன் அர்ஜுனனை காணவில்லை. ஆனால் பாண்டவப் படையினர் அனைவரிடமும் அந்த முகம்தான் இருந்திருக்கும். அவனெதிரே வில்லுடன் நின்றிருந்த கிராதப் படைத்தலைவன் சாகரனின் முகம்போலவே இருந்திருக்கும் அர்ஜுனனின் முகமும்.

சாத்தன் பீஷ்மரின் தலையை கையால் சற்றே தூக்கிப்பிடிக்க வஜ்ரர் அவர் வாயில் மருந்தை ஊற்றினார். பீஷ்மரின் நா வந்து துழாவிச்சென்றது. "உண்கிறார், சுவை தெரிகிறது. நன்று" என்றார் வஜ்ரர். மேலும் மருந்தை அளித்தபோது அவர் உதடுகளைக் குவித்து பெற்றுக்கொண்டு அருந்தினார். "இது உடலை ஆற்றும். சற்றுப்பொழுது கழித்து உணவை அளிக்கலாம்" என்றார் வஜ்ரர். "உணவா?" என்றான் சுபாகு. "தேனும் கனிச்சாறும் மட்டும். அவை உடலுக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கும்" என்றார் வஜ்ரர். சாத்தன் சிறிய புட்டியிலிருந்து ஒரு மருந்தை எடுத்து குலுக்கி அதில் ஒரு சிறுகுழாயை விட்டு மேல்திறப்பை விரலால் தொட்டு மூடிக்கொண்டான். அதை எடுத்து பீஷ்மரின் மூக்கில் இரு சொட்டுகள் விட்டு வாயால் ஊதி உள்ளே செலுத்தினான். அவர் தும்மப்போகிறவர்போல இருமுறை உடலை உலுக்கிய பின் மீண்டும் முகம் தளர்ந்தார்.

"அது பீதர்நாட்டு மருந்து. அவரை புலரும்வரை ஆழ்துயிலில் ஆழ்த்தும். காலையொளியில் அவர் உளம்மீண்டுவிட்டிருப்பார்" என்றார் வஜ்ரர். "இச்செய்தியை நான் மூத்தவருக்கு அனுப்பலாம் அல்லவா?" என்றான் சுபாகு. "ஆம்,

இப்போது நலமாக இருக்கிறார். மஞ்சம் அமைந்துள்ளது, மருந்துண்டார், உறங்குகிறார் என்று தெரிவியுங்கள்” என்றார் வஜ்ரர். சுபாகு திரும்பி அப்பால் நின்ற ஏவலனை அருகழைத்து அச்செய்தியை அறிவிக்கும்படி ஆணையிட்டான். ஏவலன் புரவியில் ஏறிச் சென்றான். வஜ்ரர் “இந்த இடம் காட்டுக்கு அருகே உள்ளது. இதைச் சூழ்ந்து காவல் அமையவேண்டும். பந்தங்கள் இரவெல்லாம் எரியவேண்டும். விலங்குகள் குருதிமணம் நாடி வந்துவிடக்கூடாது. சிற்றுயிர்களும் அணுகலாகாது. நுண்ணுயிர்கள் அணுகாமலிருக்க மூலிகைப்புகை எப்போதும் இருக்கவேண்டும்” என்றார். “ஆணையிடுகிறேன்” என்றான் சுபாகு.

முழவோசை அவன் சொற்களை வான்நிறைத்து சொல்லத் தொடங்கியது. அவன் அவற்றை ஏவலனிடம் சொல்லும்போது நம்பிக்கையின்மையுடன்தான் உரைத்தான். ஆனால் வானிலிருந்து அது இடியின் மொழியில் பொழிந்தபோது மறுப்பிலா மெய்யென்றும் தெய்வச்சொல்லென்றும் தோன்றியது. அவன் ஆறுதலுடன் பெருமூச்சுவிட்டான். வஜ்ரர் பீஷ்மரின் புண்களுக்கு மருந்திடுவதை நோக்கியபடி மீண்டும் உடைந்த தேர் ஒன்றின் தட்டில் அமர்ந்தான்.

நாள்நிறைவை அறிவிக்கும் முரசுகள் முழங்கிக்கொண்டிருக்க சுபாகு கௌரவப் படைகளின் நடுவிலூடாகச் சென்றான். கௌரவப் படைவீரர்கள் தொடர்ந்து பலநாட்களாக உளச்சோர்வுடன்தான் அந்தியில் பாடிவீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தார்கள். அன்று அச்சோர்வு மேலும் பலமடங்காக இருக்கும் என அவன் நினைத்திருந்தான். முதலில் பொதுவான நோக்குக்கு அப்படி தோன்றவும் செய்தது. ஆனால் உண்மையில் அவ்வாறல்ல என்று பின்னர் தெரியலாயிற்று. வீரர்கள் ஊக்கமும் மகிழ்வும் கொண்டிருக்கவில்லை. ஆனால் எதிலிருந்தோ போராடி விடுபட்டவர்கள்போல களைப்பும் தளர்வும் கலந்த ஆறுதலை உடலசைவுகளில் வெளிப்படுத்தினார்கள்.

அது தன் எண்ணம் மட்டும்தானா என ஐயம் கொண்டவனாக அவன் ஒவ்வொரு முகங்களாக நோக்கியபடி சென்றான். அவர்கள் மெல்லிய குரலில் பேசிக்கொண்டார்கள். கைகளை நீட்டி சோம்பல் முறித்தனர். சிலர் வாய்திறந்து கோட்டுவாய் இடுவதுபோலத் தெரிந்தது. பின்னர் ஒட்டுமொத்தமாக படையை பார்த்தபோது உறுதியாயிற்று, அவர்கள் அதுவரை இருந்த இறுக்கம் ஒன்றை இழந்துகொண்டிருந்தனர். அன்று அவர்கள் விரைவிலேயே துயின்றுவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டான்.

அது ஏன் என அவன் உள்ளம் துழாவலாயிற்று. பிதாமகர் பீஷ்மர் இனி எழமாட்டார் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க வாய்ப்பில்லை. அவருடைய இறப்பு கணம்கணமாக அணுகிக்கொண்டிருக்கிறது. அது அவர்களுக்கு துயரளிக்க வேண்டும். குருகுலத்திற்கு மட்டுமல்லாது அஸ்தினபுரியின் குடிகளுக்கே அவர் தந்தைவடிவம். அவரை அவர்கள் வெறுத்திருக்கிறார்கள், பழித்திருக்கிறார்கள். ஆகவே குற்றவுணர்வு கொண்டு அத்துயரை பெருக்கிக்கொண்டிருக்கவேண்டும். அவர்தான் அன்றுவரை பாண்டவர்களால் ஒருகணம்கூட வெல்லமுடியாத அரணாக நின்றிருந்தவர். அவரை வென்றதுமே பாண்டவர்கள் வென்றுமேற்செல்வார்கள் என்று ஆகியிருக்கிறது. அவர்கள் அஞ்சியிருக்கவேண்டும். அந்த விடுதலையுணர்வை புரிந்துகொள்ள முடியவில்லை. எத்தனை எண்ணி எண்ணி நோக்கியும் அதை வகுத்துக்கொள்ள இயலவில்லை.

துரியோதனனின் பாடிவீட்டுக்கு அவன் சென்றபோது அங்கே துர்மதனும் துச்சகனும் துச்சலனும் துர்முகனும் நின்றிருந்தனர். அவர்கள் கவசத்தை கழற்றியிருக்கவில்லை. சுபாகுவைப் பார்த்ததும் துச்சகன் வெறுமனே தலையசைக்க மற்றவர்கள் வெற்றுவிழிகளுடன் நோக்கியபின் தலைகுனிந்தார்கள். அவன் அங்கே சென்று ஓரமாக நின்றான். அவனிடம் ஏதேனும் கேட்பார்கள் என எதிர்பார்த்தான். தேர்ச்சகடங்களின் ஓசை எழுந்தது. சகனும் விந்தனும் அனுவிந்தனும் சமனும் வந்தனர். அவர்களும் எதுவும் பேசவில்லை. சற்று நேரம் கழித்து சமன் மெல்ல அசைந்து “எங்கிருக்கிறார்?” என்றான்.

“துரோணரையும் கிருபரையும் பார்த்துவருவதாகச் சொல்லி சென்றுள்ளார்” என்றான் துச்சகன். “அவர்கள் பிதாமகரை பார்க்கச் செல்லவேண்டும் என விழைகிறார்கள்” என்றான் துச்சலன். ஆனால் அப்பேச்சு மேலும் நீடிக்கவில்லை. சற்று நேரத்தில் மீண்டும் சகட ஓசை எழுந்தது. அது எவருடையது என அனைவருக்குமே தெரிந்திருந்தது. மெல்லிய உடலசைவுகளாக அவர்கள் நிமிர்ந்து நின்றனர். தேர் அணுகி நின்று அதிலிருந்து துரியோதனன் மெல்ல இறங்கினான். நோயுற்றவன்போல் தேரின் கைப்பிடியைப் பற்றியபடி நிலத்தில் கால்வைத்து உடல் நிமிர்ந்தபின் திரும்பி பின்னால் இறங்கிவந்த துச்சாதனனை பார்த்தான். துச்சாதனன் முன்னால் வர அவனைத் தொடர்ந்து எடைமிக்க காலடிகளை எடுத்துவைத்து மெதுவாக வந்தான்.

துச்சாதனன் இருக்கையை எடுத்துப் போட்டான். துரியோதனன் நடந்து வந்து தம்பியரை நோக்கிவிட்டு கையை பீடத்தில் ஊன்றி முனகியபடி உடலை அதில் அமைத்தான். முழங்கால் மூட்டுகளில் கைமுட்டுகளை அமைத்து தலைகுனிந்து அமர்ந்தான். அவன் உடலில் நீர் வற்றிவிட்டிருக்கிறதோ என்று சுபாகு எண்ணினான். கண்களுக்குக் கீழே மென்தசைவளையங்கள். உதடுகளைச் சுற்றி ஆழ்ந்த மடிப்புகள். கழுத்துத்தசை சுருங்கி தொய்ந்திருந்தது. விரல்கள் நடுங்கிப்பதறி கோத்துக்கொண்டும் விலகிக்கொண்டுமிருந்தன. நிலம் நோக்கி விழிதாழ்த்தி அசையாச் சிலை என அமர்ந்திருந்தான்.

துச்சகனும் துச்சலனும் சென்று துரியோதனனின் கவசங்களை கழற்றத் தொடங்கினர். சமனும் விந்தனும் துச்சாதனனின் கவசங்களை கழற்றினர். உலோகங்கள் உரசிக்கொள்ளும் ஓசை மட்டும் கேட்டது. துச்சகன் மெல்ல தொண்டையை கமறிக்கொண்டது பேரொலியாக எழுந்தது. கவசங்களை கழற்றிவிட்டு மர யானத்தில் நீர் கொண்டுவந்து அதில் துரியோதனனின் கைகளை எடுத்துவைத்து சிறிய நார்ச்சுருளால் தேய்த்துக் கழுவினான் துச்சலன். துச்சகன் மரவுரியால் துரியோதனனின் உடலை துடைத்தான். சமனும் விந்தனும் துச்சாதனனின் கைகளை கழுவினர்.

துரியோதனன் “மாதுலர் எங்கே?” என்றான். அங்கிருந்த அனைவருமே திடுக்கிட்டனர். அது அவ்வினாவால் அல்ல, அக்குரலால் என்று தோன்றியது. நோயுற்று நலிந்த முதியவரின் குரல் போலிருந்தது. துச்சகன் “இங்கு வரக்கூடும்” என்றான். துரியோதனன் சுபாகுவை நோக்கி “எப்படி இருக்கிறார்?” என்றான். சுபாகு “இருமுறை தேனும் பழச்சாறும் அருந்தியிருக்கிறார். நீர் பிரிந்திருக்கிறது. பீதர்நாட்டு மருந்து மூக்கு வழியாக செலுத்தப்பட்டுள்ளது. துயில்கிறார்” என்றான். துச்சாதனன் “எழுந்துவிடுவாரா?” என்றான். அப்போது அவ்வினாவை கேட்குமளவுக்கு துச்சாதனன் அறியாமை கொண்டிருப்பது சுபாகுவை எரிச்சலடையச் செய்தது. அதை அங்கிருந்தோர் அனைவரும் உணர்ந்தனர். துச்சாதனன் அதை அறியாமல் “அவர் எழுந்துவிடுவார் என்றால் நாம் அஞ்சவேண்டியதில்லை” என்றான்.

என்ன சொல்வதென்று தெரியாமல் சுபாகு தலையை திருப்பிக்கொண்டான். அந்தப் பொழுதின் இக்கட்டான நிலையை அப்பால் கேட்ட சகட ஓசை கலைத்தது. சமன் “மாதுலர்” என்றான். சுபாகு பெருமூச்சுவிட்டான். தேர் வந்து நிற்க அதிலிருந்து கர்ணனும் துர்கர்ணனும் இறங்கினர். தொடர்ந்து சகுனி இறங்கி அவர்களின் தோளைப் பற்றியபடி புண்பட்ட காலை நீக்கி நீக்கி வைத்து நடந்துவந்தார். சுபாகு ஒரு மரப்பெட்டியை எடுத்து அவர் அமர்வதற்காக போட்டான். துரியோதனன் எழுந்து தலைவணங்க சகுனி முனகலுடன் அணுகி பெட்டியில் அமர்ந்தார். அவர் கைகாட்ட துரியோதனன் அமர்ந்தான். சகுனி “சென்றிருந்தேன்” என்றார். துரியோதனன் வெறுமனே முனகினான். “நாம் தோற்றுவிட்டோம் என அவர்கள் எண்ணுகிறார்கள் என நினைக்கிறேன்” என்றார்.

துச்சலன் “ஆனால் அங்கே வெற்றிக்கொண்டாட்டம் ஏதும் தென்படவில்லை” என்றான். “சற்றுநேரம் அப்படித்தான் இருக்கும். ஒருவகையான இழப்புணர்வும் குற்றவுணர்வும் அவர்களை கவ்விப்பற்றியிருக்கும். மதுவுண்டு உள்ளத்தை இளகச் செய்வார்கள். எங்கிருந்தோ எவரோ தொடங்குவார்கள். மெல்ல மெல்ல களிவெறி எழுந்து இரவெல்லாம் கொண்டாட்டமாக முழங்கிக்கொண்டிருக்கும்” என்றார். துரியோதனன் ஒன்றும் சொல்லவில்லை. துச்சலன் “அவர்களால் தங்கள் மூதாதையின் சாவை வெளிப்படையாக கொண்டாட முடியுமா?” என்றான்.

சகுனி “இத்தகைய தருணங்களுக்கு கைகொடுப்பது இளிவரல். இந்த இக்கட்டின் இரண்டுமற்ற நிலையை நகையாட்டு வழியாக கடந்துசெல்லலாம். பீஷ்ம பிதாமகரையும் யுதிஷ்டிரனையும் சேர்ந்தே இழிசொல்லாடத் தொடங்கினால் இதை கடந்துவிடலாம். மெல்ல மெல்ல பீஷ்ம பிதாமகரை வென்றதன் கொண்டாட்டமாக அதை உருமாற்றிக் கொள்ளலாம். இருள் செறிந்து இரவு சரியும்தோறும் தீமை வளர்கிறது. பின்னர் அது மட்டுமே எஞ்சியிருக்கும். பேருருக்கொண்டு அவர்கள் அனைவரையும் தன் இடையிலும் தோளிலும் சூடியிருக்கும்” என்றார்.

துரியோதனன் “ஆம். இனி என்ன செய்வது, மாதுலரே?” என்றான். அவன் குரல் உடைந்து ஒலித்தமை சுபாகுவை உளமுருகச் செய்தது. விழி கசிய அவன் முகம் திருப்பிக்கொண்டான். “ஒன்றும் ஆகவில்லை. நான் இப்போதுதான் துரோணரை சந்தித்துவிட்டு வருகிறேன். அவர் மேலும் உறுதிகொண்டிருக்கிறார். பிதாமகரின் இறப்புக்கு வஞ்சம் தீர்க்க எழுவதாக என்னிடம் சொன்னார்” என்றார் சகுனி. “நான் அவரை சந்திக்கவே சென்றேன். என்னால் இயலவில்லை. அஸ்வத்தாமரை மட்டும் சந்தித்துவிட்டு திரும்பிவிட்டேன்” என்றான் துரியோதனன். “அஸ்வத்தாமனிடம் நானும் பேசினேன். தந்தையைவிட வஞ்சம்கொண்டு அவன் எரிந்துகொண்டிருக்கிறான். தந்தையை தழல்கொள்ளச் செய்ய அவனே போதும்” என்றார் சகுனி.

துரியோதனன் “என்ன செய்வதென்றே தெரியவில்லை!” என்றான். “இந்த உளச்சோர்வே இப்போது நம்மை வீழ்த்துவது. இதுவரை நாம் வெல்லவேண்டுமென்றே விழைந்தோம். இனி வஞ்சம்கொள்ள வேண்டுமென்று எழுவோம். பிதாமகரின் களம்படுகை அதற்காகத்தான் போலும். துரோணர் இதுவரை முழு விசையுடன் போரிடவில்லை. தன் மாணவர்களை தன் கையால் கொல்ல தயங்கிக்கொண்டிருந்தார். இனி அவ்வாறல்ல, நாளைமுதல் களத்திலெழுபவர் பெருவஞ்சம்கொண்ட பிறிதொருவர்” என்றார் சகுனி.

“பிதாமகர் முழு விசையுடன் போரிடவில்லை என்பதே உண்மை. அவர் எண்ணி முடிவெடுத்து வில்சூடியிருந்தால் பாண்டவப் படை முதல் நாளிலேயே சிதறியிருக்கும். இப்படி களத்தில் தன்னை கொடுப்பதைத்தான் அவர் தொடக்கம்

முதலே உள்ளூர விழைந்திருந்தார் என எண்ணுகிறேன். ஏனென்றால் இது அவருடைய போர் அல்ல. கடமைக்காகவே அவர் களம்வந்தார். அவருள் அரசவையில் திரௌபதி ஆற்றிய வஞ்சினம் குற்றவுணர்வை உருவாக்கியிருந்தது. அவருடைய கனவுக்குள் அம்பையின் வஞ்சத்துடன் அதுவும் கலந்துவிட்டிருக்கக்கூடும். பிதாமகர் பீஷ்மர் கொல்லப்படவில்லை, தற்கொலை செய்துகொண்டார். அதனூடாக அவர் தன்னுள் உணர்ந்த ஒரு பழியை நிகர் செய்துகொண்டார்."

"அறிவின்மைதான்" என சகுனி தொடர்ந்தார். "ஆனால் இந்தப் போரில் இம்முதியவர்களுக்கு பெரிதாக எந்த ஈடுபாடும் இல்லை. போரும் வணிகமும் எப்போதுமே இளையோருக்குரியது. முதியவர்களுக்கு இவ்வுலகில் அடைவதற்கேதுமில்லை, தக்கவைப்பதற்கே சில உள்ளது. அவர்கள் எண்ணுவதனைத்தும் இங்கு நீத்து அங்கு சென்றபின் எய்துவன பற்றியே. பிதாமகரும் துரோணரும் கிருபரும் அவ்வாறே போரிட்டனர். இனி அவ்வாறல்ல, துரோணரும் கிருபரும் இங்கே தீர்த்தாகவேண்டிய கணக்கு ஒன்று உள்ளது. அதை தீர்க்காமல் அவர்கள் இங்கிருந்து செல்லமுடியாது. ஆகவே நடந்துள்ளது நன்றே." துரியோதனன் முகத்தில் எந்த மாறுபாடும் தெரியவில்லை. துச்சாதனன் "ஆம்" என்றான்.

"உண்மையில் பிதாமகர் களம்பட்டது அவர் நமக்கிழைத்த பெருந்தீங்கு. நம்பிக்கைவஞ்சம்" என்றார் சகுனி. அவரை நோக்கியபடி கௌரவர் வெறும்முகங்களுடன் சூழ்ந்து நின்றிருந்தனர். "அவர் ஏன் வில்தாழ்த்தி நெஞ்சு காட்டினார்? புகழுக்காக. ஆணிலியிடம் பொருதினார் என்னும் பழி நிகழாதமைவதற்காக. நம்மைவிட, நாம் கொண்டுள்ள அறத்தைவிட அவருக்கு தன் புகழே பெரிதென்று தோன்றியிருக்கிறது." துச்சாதனன் "அவர் அம்பையன்னைக்கு தன்னை கொடுத்தார் என்கிறார்கள்" என்றான். அதை அவன் சொல்லியிருக்கக் கூடாதென்பதுபோல் அனைவரும் முகம் சுளித்து நோக்கினர்.

அவ்வுணர்வுகளை உணராதவனாக துச்சாதனன் "ஆம், அவ்வாறுதான் சொல்லிக்கொள்கிறார்கள். அவர் இந்த வாக்குறுதியை சிகண்டிக்கு மிக நெடுங்காலம் முன்னரே அளித்திருக்கிறார், களத்தில் அவர் கையால் இறப்பேன் என்று" என்றான். சகுனி சில கணங்கள் துச்சாதனனை நோக்கிவிட்டு தன் உணர்ச்சிகளை கடந்துசென்று புன்னகைத்தார். அதை தனக்கான ஏற்பு என்று எண்ணி துச்சாதனன் "அவரிடம் எட்டு வசுக்கள் இருந்தமையால் அவரை அம்பையால் வெல்ல இயலவில்லை. எட்டு வசுக்களும் அவர் அன்னை கங்கையால் அவருக்கு அளிக்கப்பட்ட காப்பு. அவர்கள் எண்மரும் இங்கே களத்திலிருந்து விலகிச்சென்றனர். அதன்பின் அவர் தன்னை அம்பைக்கு பலியாக அளித்தார். அவ்வாறு தன்மேல் படிந்த தொல்பழியிலிருந்து விடுபட்டார். இனி அவர் தடையில்லாது விண்ணேகமுடியும். அம்பையன்னையும் விண்ணேகுவார்" என்றான்.

"யார் வாய்ச் சொற்கள் இவை?" என்றார் சகுனி. "இங்குள்ள அத்தனை சூதர்களும் இதைத்தானே பாடிக்கொண்டிருக்கிறார்கள்?" என்றான் துச்சாதனன். "அதற்குள்ளாகவா?" என்றார் சகுனி. துச்சாதனன் ஊக்கம் பெற்று "ஆம், போர்முடிந்து செல்லும்போதே கைகளைக் கொட்டியபடி பாடத்தொடங்கிவிட்டனர். ஆவக்காவலராகவும் தேரோட்டிகளாகவும் வந்த பலர் உண்மையில் இசைச்சூதர்களும்கூட. அவர்களிடமிருந்தே அந்தியில் களம்பாடும் சூதர்கள் களமெய்யை அறிகிறார்கள். அதைச் சார்ந்தே அவர்கள் பாடல்களை புனைகிறார்கள்" என்றான். சகுனி வாய்விட்டு நகைத்து துரியோதனனிடம் "அரிய நுண்திறன் கொண்ட இளையோன். மருகனே, நீ விண்புகுந்தபின் இவன்

அஸ்தினபுரிக்கு அரசன் ஆனால் பாரதவர்ஷமே வந்து பணிந்து திறையளிக்கும்” என்றார். துச்சாதனன் ஐயத்துடன் பிறரை நோக்கினான்.

“நாம் இனி என்ன செய்வது, மாதுலரே?” என்றான் துரியோதனன். “நாம் செய்யவேண்டியது சில உண்டு” என்றார் சகுனி. “அதை சற்றுமுன் துரோணர் சொன்னார். பூரிசிரவஸும் அதையே சொன்னான். எண்ணிக்கொண்டே வந்தேன்” என்றார். துரியோதனன் நிமிர்ந்து நோக்க “நாம் பிதாமகரின் உடல்நிலை குறித்து இந்திரப்பிரஸ்தத்தின் அரசனுக்கும் தம்பியருக்கும் முறைப்படி செய்தி அனுப்பவேண்டும். யாதவ மூதரசிக்கும் பாஞ்சாலத்து அரசிக்கும் முறைமைச்சொல்லுடன் தூது செல்லவேண்டும்” என்றார். துச்சாதனன் “என்ன பேசுகிறீர்கள்? கொன்றது அவர்கள்... அவர்களுக்கு நாமே செய்தி அறிவிப்பதா?” என்று கூவினான். “இளையோனே!” என்று தளர்ந்த குரலால் துச்சாதனனை அடக்கியபின் துரியோதனன் “அதன் பயன் என்ன?” என்றான்.

“அவர்கள் வெற்றிக்களிப்பு கொள்வதை அதனூடாக தடுக்கிறோம்” என்று சகுனி சொன்னார். “அவர்கள் முறைமைப்படி துயர்கொண்டாடியே தீரவேண்டுமென்ற நிலையை உருவாக்குகிறோம்.” துச்சாதனன் “அதனாலென்ன பயன்? வென்றோம் எனும் களிப்பை அவர்களின் உள்ளங்களில் இருந்து அகற்றமுடியுமா என்ன?” என்றான். சகுனி “முடியும்” என்றார். “படைகளின் உள்ளம் உள்ளிருந்து எழும் உணர்வுகளால் இயங்குவதல்ல, வெளியிலிருந்து உள்ளே செல்லும் ஆணைகளால் இயங்குவது. படை என்பதே ஆணைக்கேற்ப உணர்வுகளையும் எண்ணங்களையும் கொள்வதற்காக பயிற்றுவிக்கப்பட்ட மானுடத் திரள்தான்.”

“அவர்கள் வெற்றிகொண்டாடினார்கள் என்றால் அக்கொண்டாட்டத்தை ஒவ்வொருவரும் பெற்று பெருக்கிக்கொள்வார்கள். நாளை காலை பெரும் நம்பிக்கையும் ஊக்கமும் கொண்டு எழுவார்கள். மாறாக அரசாணைப்படி துயர்காத்தனர் என்றால் மேலும் சோர்ந்து தொய்வடைவார்கள்” என சகுனி தொடர்ந்தார். “அவர்களிடம் நாம் குற்றவுணர்ச்சியை நிலைநிறுத்தவேண்டும். அதற்கு அதை அவர்களின் அரசரிடமும் தலைவர்களிடமும் உருவாக்கவேண்டும். அதற்கான வழி அவர் நமக்கு மட்டுமல்ல, அவர்களுக்கும் பிதாமகரே என அறிவிப்பதே. மூத்தாருக்கான எல்லா முறைமைகளிலும் சடங்குகளிலும் அவர்களுக்கும் பங்குள்ளது என்று சொல்வதே.”

“அவர்கள் அதை மறுக்கலாமே?” என்றான் துச்சலன். “யுதிஷ்டிரன் எந்தத் தொல்முறைமையையும் மறுக்கக்கூடியவனல்ல” என்றார் சகுனி. “யாதவர் மறுக்கலாம்” என்றான் துச்சலன். “அவர் இதன் அரசியலையே நோக்குவார். பீஷ்மருக்கு முறைமைத்துயர் காத்ததன் வழியாக அவரை நெறிமீறி களத்தில் வீழ்த்திய பழியிலிருந்து விலகிக்கொள்ள முடியும். நாளை ஒருவேளை அவர்கள் வென்று அஸ்தினபுரியில் அரசமைப்பார்கள் என்றால் பீஷ்ம பிதாமகருக்கு அங்கே மாபெரும் நடுகல் விழவை எடுக்கவும் பள்ளிப்படை அமைக்கவும் அது தொடக்கமாக அமையும். நாளடைவில் மக்களின் உள்ளங்களில் இருந்து பிதாமகரை விலக்கிவிடலாம். தெய்வமென மானுடரை ஆக்குவதே அவர்களை அகற்றுவதற்கான எளிய வழி.”

துரியோதனன் பெருமூச்சுடன் “இவை எவற்றையும் என்னால் எண்ணக் கூடவில்லை, மாதுலரே. நீங்களே வேண்டுவனவற்றை எண்ணி இயற்றுக!” என்றபின் எழுந்துகொண்டான். சகுனி “ஆம், நானே பார்த்துக்கொள்கிறேன். அரசியரிடம் செய்தி சொல்ல பூரிசிரவஸை அனுப்புவோம். கௌரவரிடமிருந்து யுதிஷ்டிரனுக்கான தூதுடன் அரசகுடியினன் ஒருவன் செல்வதே உகந்தது. சுபாகு

செல்லட்டும்” என்றார். சுபாகு தலைவணங்கினான். “என்ன சொல்லவேண்டுமென நீ அறிவாய். அவர்களிடம் அவர்களுக்கிருக்கும் கடன்முறைமைகளை சொல்க! அவர்களுடன் இணைந்து அவற்றைச் செய்ய அஸ்தினபுரியின் அரசனுக்கு தயக்கமில்லை என்று உணர்த்துக!” சுபாகு “ஆம்” என்றான்.

சகுனி எழுந்துகொண்டு “நான் சற்று ஓய்வெடுக்கவேண்டும். படைநிலைகளைப் பற்றிய செய்திகளுடன் தூதர்கள் வந்திருப்பார்கள். அவர்களிடம் கலந்துரையாடவேண்டும். படைசூழ்கையை நாளை அஸ்வத்தாமன் வகுக்கட்டும்” என்றார். துரியோதனன் அப்பால் நின்று தலைவணங்கினான். சகுனி சுபாகுவிடம் “அங்கே செல்வதற்கான படையொப்புதல் கோரி முரசு முழங்கும். நீ படைமுகப்பை சென்றடைவதற்குள் அவர்களின் ஒப்புதல் வந்துவிடும் என எண்ணுகிறேன்” என்றார். சுபாகு தலைவணங்கிவிட்டு சென்று தன் புரவியில் ஏறிக்கொண்டான்.

படைமுகப்புக்குச் செல்வதற்கு முன்பு மருத்துவர்களிடம் பேசிவிட்டுச் செல்லலாம் என்று அவனுக்கு தோன்றியது. அதைவிட மீண்டும் பீஷ்மரைப் பார்க்க அவன் உள்ளம் விழைந்தது. அவன் புரவியில் அமர்ந்து சூழ்ந்திருந்த படைகளைப் பார்த்தபடி சென்றுகொண்டிருந்தான். நாற்றுப்படுகையில் காற்றுபோல படைகளுக்குள் உணவுவண்டிகள் செல்லும் அசைவுகள் தெரிந்தன. அந்தி மங்கி வான் இருள்கொண்டிருந்தது. எங்கோ யானை ஒன்று உரக்க குரலெழுப்பியது. அவனைக் கடந்துசென்ற புரவிவீரர்கள் இருவர் தலைவணங்கி வாழ்த்துரைத்தனர்.

பீஷ்மர் கிடந்த பகுதி படையிலிருந்து மிக விலகி காட்டின் எல்லைக்கு அருகே இருப்பதை அவன் அப்போதுதான் வியப்புடன் உணர்ந்தான். மொத்தப் படைகளும் அங்கிருந்து தெற்கு நோக்கி மிகவும் இறங்கி வந்துவிட்டிருந்தன. படைகளின் வடக்கு எல்லையில் அமைந்த காவல்மாடத்திலிருந்து வெளியேறுவதற்கான ஒப்புதலைப் பெற்று அப்பால் கடந்து மேலும் புரவியில் சென்றடைய வேண்டியிருந்தது அங்கே. பீஷ்மர் அந்த இடத்தை தெரிவுசெய்தாரா? அது முழுக்க முழுக்க தற்செயல் என்பதை அவனே களத்தில் கண்டான். ஆனால் களத்திற்கு வெளியே அவர் களம்பட்டார் என்பது எப்படி தற்செயலாக அமைய முடியும்? அந்த இடம் இரு படைகளுக்கும் பொதுவான ஒன்றாக, இருசாராருக்கும் அயலானதாக இயல்பாகவே மாறிவிட்டிருந்தது.

அவன் தொலைவிலேயே புரவியை இழுத்து அந்தப் படுகளத்தை பார்த்துக்கொண்டு நின்றான். அதைச் சுற்றி தேர்களின் உடைந்த நுகங்களையும் நெடுவேல் கட்டைகளையும் காட்டிலிருந்து வெட்டிக் கொண்டுவரப்பட்ட மரக்கிளைகளையும் ஊன்றி கழிகளாலும் மூங்கில்களாலும் பிணைத்து வட்டமாக வேலியிட்டிருந்தார்கள். வடக்கே அரைவட்டமாக அரணிட்டிருந்த காட்டின் உயர்ந்த மரங்களுக்கு மேல் பரண் அமைக்கப்பட்டு வில்லவர்கள் காவலுக்கு அமைக்கப்பட்டிருந்தனர். வேலிக்குள் மருத்துவ ஏவலரும் பணியாளர்களும் காவலர்களும் தெரிந்தனர்.

அவன் அணுகிச் சென்றபோது காட்டின் விளிம்பில் நடப்பட்டிருந்த கழிகளில் பந்தங்களைக் கட்டி மீன்நெய் ஊற்றி பற்றவைத்துக்கொண்டிருந்தனர் ஏவலர். பந்தங்கள் ஒவ்வொன்றாக எரியத் தொடங்கின. தழலாட்டத்தின் ஓசையில் காட்சி மெல்ல அதிர்ந்துகொண்டிருந்தது. அவன் வேலிக்கு வெளியே புரவியை நிறுத்திவிட்டு இறங்கி வாயிலில் காவல் நின்ற வீரனிடம் தலையசைத்துவிட்டு உள்ளே சென்றான். உள்ளே வஜ்ரர் இருந்தார். சாத்தன் அவனைக் கண்டு தலைவணங்கினான். ஆதன் ஏவலருடன் இணைந்து மண்கலங்களில் அனல்

நிறைத்து அவற்றில் மூலிகைகளை இட்டு புகைப்படலத்தை எழுப்பிக்கொண்டிருந்தான்.

வஜ்ரர் அவனை பார்த்தார். “விழித்துக்கொள்ளவில்லை” என்றார். சுபாகு தலையசைத்தான். “இறப்பு நிகழுமென்பதில் ஐயமே இல்லை. எப்போதென்று சொல்லவியலாது. ஒவ்வொரு கணமும் அதற்கான வாய்ப்புள்ளதே. ஆனால் நாடிகள் நிலையாக உள்ளன. உடலின் உள்ளனல் தணியாதிருக்கிறது. தன்னுணர்வால் உயிர் கவ்வி நிறுத்தப்பட்டுள்ளது. அது விடும்கணம் உயிர் அகலும்” என்றார். அவன் அனலாட்டத்தில் அதிர்ந்துகொண்டிருந்த பீஷ்மரின் உடலை பார்த்தான். நிலத்திலிருந்து எழுந்து காற்றில் மிதந்து நிற்பதுபோலத் தோன்றியது.

வேலிக்குள் நெய்விளக்குகள் ஏற்றப்பட்டன. “அவர் எதன்பொருட்டு காத்திருக்கிறார் என்று தெரியவில்லை. போர் முடிவை அறிந்துகொள்ளவா?” என்று வஜ்ரர் சொன்னார். அப்பால் நின்றிருந்த சாத்தன் “அதை அவர் அறியாரா என்ன?” என்றான். சுபாகு திடுக்கிட்டவன்போல திரும்பிப் பார்த்தான். சாத்தன் புன்னகைத்தான். ஒருகணத்துக்குப் பின் சுபாகுவும் புன்னகைத்தான். சாத்தன் “அவர் மேலும் பெரிய ஒன்றுக்காக காத்திருக்கக்கூடும்” என்றான். “எதற்காக?” என்றான் சுபாகு. “உரிய பொழுதுக்காக. விண்திறக்கும் நற்பொழுதுகள் சில உண்டு. அவர் அவற்றை கணித்திருக்கக் கூடும்.”

“அத்தகைய பொழுது அருகணைகிறதா?” என்றான் சுபாகு. “கதிரவனின் வடக்குமுகம் அணுகுகிறது. விண்புகுந்தோர் மீளாதமைவதற்குரியது அந்த நாள் என்பார்கள்” என்றான் சாத்தன். “உத்தராயணம் அணுக இன்னும் ஐம்பத்தெட்டு நாட்கள் உள்ளன” என்று ஆதன் சொன்னான். “ஆம், வடக்குமுகப் பொழுதில் உயிர்விடவேண்டுமென்றால் இவ்வுலகில் எஞ்சிய அனைத்தையும் முற்றாக கைவிட்டிருக்க வேண்டும். ஒரு விழைவோ ஒற்றைச் சொல்லோ எஞ்சலாகாது. முதல் ஒரு மண்டலப்பொழுது அவர் தன்னைக் கடக்க தவமிருக்கலாம். பின்னர் அரைமண்டலப்பொழுது அங்கு செல்லும் ஊழ்கத்தில் அமையலாம்.”

சுபாகு வஜ்ரரிடம் “அத்தனை காலம் அமையுமா இவ்வுடல்?” என்றான். “அவருடைய தன்னுணர்வுதான் அதை முடிவு செய்கிறது…” என்றார். ஆதன் “குருதிவழிவு முற்றிலும் நின்றுவிட்டிருக்கிறது” என்றான். அவனை நோக்கியபின் சுபாகு “பிதாமகர் விண்புகுக! அவர் விண்புகுந்தாரென்றால்தான் பெருநோன்புகளும் பயனுள்ளனவே என மானுடம் கற்கும்” என்றான். வஜ்ரர் “நோன்புகளால் மானுடர் தங்களை இறுக்கிக் கொள்கிறார்கள். ஊசிக்காதில் நுழையும்பொருட்டு நூல் முறுகி கூர் கொள்வதைப்போல” என்றார். “அவருடைய உடலின் இறுக்கம் நம்ப இயலாததாக உள்ளது. தசையால் ஆனதே அல்ல என்று ஐயம்கொண்டேன்” என்றான் ஆதன். “இத்தனை அம்புகளுக்குப் பின்னரும் தசைநார்கள் விசை தளரவில்லை.”

சுபாகு அவர்களிடம் விடைபெறாமல் கிளம்பினான். வேலியைவிட்டு வெளியே செல்லும்போதும் காலடியில் நாகங்கள் நெளிவதாக விழிமயக்கு ஏற்பட உடல் நடுங்கி நின்றுவிட்டான். அதன் பின்னரே பீஷ்மரை தாங்கிநின்றிருந்த அம்புகளின் நிழல்கள் அவை என உணர்ந்தான். மீண்டும் இளங்காற்றில் பந்தச்சுடர்கள் அசைய அம்புநிழல்கள் நாகக்கூட்டங்கள்போல் அசைந்தன. அவன் திரும்பி நோக்கியபோது நெளியும் நாகங்களின் மீது அவர் படுத்திருப்பதாக உணர்ந்தான். கண்களைக் கொட்டி நோக்கை கலைத்து மீட்டுக்கொண்டு புரவியில் ஏறிக்கொண்டான்.

மீண்டும் கௌரவப் படைகளுக்குள் நுழைந்தபோது மிக அப்பால் அவனுக்கான ஆணை ஒலிப்பதை கேட்டான். பாண்டவர்களிடம் அவன் நுழைவுக்கான ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. காவல்மாடத்தை அவன் கடந்தபோது அங்கே முழவுடன்

நின்றிருந்த முதிய சூதர் சிரித்தபடி அவனை நோக்கி ஓடிவந்தார். “அரசே, அரசே, நில்லுங்கள்!” என்றார். காவலர்தலைவன் “இழிமகனே, உன்னிடம் இங்கிருந்து செல்லும்படி சொன்னேன். கசையடி வாங்குவாய்” என்று கூவியபடி பின்னால் வந்தான்.

சூதர் “அரசே, நான் அங்கே செல்ல ஒப்புதல் அளிக்க ஆணையிடுங்கள்... நான் பிதாமகரை உடனே பார்க்கவேண்டும்” என்றார். “ஏன்?” என்றான் சுபாகு. “அவன் மூக்குவழிவார குடித்திருக்கிறான், அரசே” என்றான் காவலன். “யார்தான் குடிக்கவில்லை? சூதர்கள் குடித்தேயாகவேண்டும் என்பது தெய்வங்களின் ஆணை. குடிக்காத சூதன் படைக்கலம் பயிலாத ஷத்ரியனைப்போல” என்றார் முதிய சூதர். “அனங்க குடியினனாகிய என் பெயர் சுப்ரஜன். நான் பாடிய காவியங்கள் பல!” கரிய பற்களைக் காட்டி சிரித்து “அவற்றை ஏற்கெனவே பலர் பாடிவிட்டிருந்தமையால் நான் சொல்லிக்கொள்வதில்லை” என்றார்.

எரிச்சலுடன் அவரை விலகிப் போகும்படி கையசைத்துவிட்டு சுபாகு முன்னால் சென்றான். அவர் பின்னால் ஓடிவந்தபடி “நான் பீஷ்ம பிதாமகரைப் பற்றி காவியங்கள் புனைபவன். எங்கள் காவியங்கள் வேறுவகையானவை. அவற்றை அவருடைய எதிரிகளும் கேட்டு மகிழலாம். எளியோர் வெடித்து நகைக்கலாம். பெரியோர் தனிமையில் எண்ணி புன்னகைக்கலாம். அரசே, பீஷ்மரின் புகழ்பாடுவது எங்கள் குடித்தொழில்போல” என்றார். “செல்க!” என்று சுபாகு சவுக்கை எடுத்தான்.

அவர் அஞ்சியதுபோல தெரியவில்லை. சிரித்தபடி “நாங்கள் எங்கள் புகழ்பாடலுக்காக பொன்னைப் போலவே சவுக்கடிகளையும் பெறுவதுண்டு. முன்பொருமுறை என் பாட்டனார் ஒரு விடுதியில் இரவு முழுக்க பீஷ்மரைப் பற்றி புகழ்பாடிக்கொண்டிருந்தார். அங்கே குடியிருந்த தெய்வம் ஒன்று அந்தப் பாடலைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தது. அவர் துயின்றதும் அவர் காலடியில் பொன்னை குவித்துவிட்டுச் சென்றது. அவர் அந்தப் பொன்னைக் கொண்டு மேலும் வெறிகொண்டு குடித்து காசிப் படிக்கட்டில் இறந்தார். அவரைப் போலவே தெய்வங்களுக்கு உகக்கும்படி பாடி குடித்துச் சாவதையே நானும் இலக்காகக் கொண்டிருக்கிறேன்” என்றார்.

சுபாகு முன்னால் செல்ல அவர் பின்னால் வந்தபடி “அந்த தெய்வத்தின் பெயர் அவிரதை. அனைத்து நோன்புகளுக்கும் எதிரானது. நோன்புகொள்வோரை அணுகி அவர்களை கலைத்து வீழ்த்திவிட்டுச் செல்வது. கள்ளுண்ணா நோன்பு கொண்டவர்களிடம் அது விருப்பாக எழுகிறது. அரசே, காமஒறுப்பு நோன்பு கொண்டவர்களிடம் அது கடும் வெறுப்பாக திரள்கிறது. பீஷ்ம பிதாமகர் அரசவையில் தன் குலமகள் இழிவுசெய்யப்பட்டபோது தலைதாழ்த்தி ஏன் அமர்ந்திருந்தார்? அருகே அமர்ந்திருந்தாள் அவள். அவிரதை. சூழ்ச்சியும் வஞ்சமும் நிறைந்தவள். மானுட உள்ளங்களின் ஆழத்து இருளில் கரிய மீன் என நீந்திக்கொண்டிருப்பவள்” என்றார்.

அவன் புரவியை நிறுத்திவிட்டான். தன் உடல் நடுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். “அரசே, அவளுடைய அருளால்தான் நாங்கள் வாழ்கிறோம். எந்த நோன்பையும் எங்களால் மேற்கொள்ள முடியாது. கள்ளுண்டு சாவது என்னும் நோன்பை மேற்கொண்டால் கள்ளே வாய்க்கு சிக்குவதில்லை” என்றார். “செல்க!” என மூச்சொலியாக அவன் சொன்னான். “நான் அவரை பார்க்கவேண்டும். அவர் அம்புப்படுக்கையில் படுத்திருக்கிறார் என்றார்கள். ஆயிரத்தெட்டு அம்புமுனைகள் அவரை தாங்கியிருக்கின்றனவாம். அது உண்மைதானா என்று பார்க்கவேண்டும்.”

“ஏன்?” என்றான் சுபாகு. இது ஏதோ பாதாளத்து தெய்வம். இதன் சொற்களை செவிகொடுக்கலாகாது என அவன் அகத்தை விலக்கிக்கொண்டிருந்தாலும்கூட நா அதை கேட்டுவிட்டது. “அரசே, நீங்கள் அறிவீர்கள். அவருடைய அம்புகளில் பல்லாயிரத்திற்கு ஒன்றே இலக்கு பிழைக்கிறது. அவ்வாறு இலக்கு பிழைத்த அம்புகள்தான் இப்போது அவரை தாங்கிக்கொண்டிருக்கின்றன என்றார்கள்.” சுபாகு சீற்றத்துடன் “யார்?” என்றான். “அவிரதை… அவளுடைய தமக்கை ஒருத்தி இருக்கிறாள். அவள் பெயர் அதர்மை.”

சுபாகு அவரை உற்று நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். பெருச்சாளிகளுக்குரிய சிறிய ஒளிகொண்ட கண்கள். அவர் உடலில், முகத்தில், உதடுகளில், நோக்கில் எங்கும் ஒரு கோணல் இருந்தது. அவன் புரவியிலிருந்து இறங்கி அவரை அணுகி கால்தொட்டு வணங்கி “அருள்க, மெய்ச்சொல்கொண்டவரே!” என்றான். “நிறைவுறுக! தெய்வங்கள் உடன் நிலைகொள்க!” என அவர் வாழ்த்தினார். சுபாகு திரும்பி அப்பால் நின்றிருந்த காவலர்தலைவனிடம் “இவரை பிதாமகர் பீஷ்மரிடம் கொண்டுசெல்க!” என ஆணையிட்டபின் புரவியில் ஏறிக்கொண்டான்.

சுபாகு பாண்டவப் படையின் எல்லையை அடைந்து முதற்காவலரணின் முன் நின்றான். காவலர்தலைவன் வந்து அவனுடைய கணையாழியை வெறுமனே நோக்கிவிட்டு செல்லும்படி தலைவணங்கினான். அவனுக்கு தன் வருகை முன்னரே தெரிந்திருக்கிறது என சுபாகு உணர்ந்தான். படைகளின் நடுவே சென்றபோது தன் மேல் மொய்த்த விழிகளிலிருந்து அங்கிருந்த அனைவருக்குமே தன் வருகை தெரிந்துள்ளது என்று தெளிந்தான். அவர்கள் அவனை வெறுப்புடன் நோக்குவது போலிருந்தது. பின்னர் அது வெறுப்பல்ல, ஒவ்வாமையும் அல்ல, வெறும் வெறிப்பே என தோன்றியது. தங்களை மீறியவற்றின் முன் மானுடர் கொள்ளும் செயலின்மையின் விழிவெளிப்பாடு அது.

நான்காவது காவலரணில் அவனை திருஷ்டத்யும்னனிடம் அழைத்துச்சென்றார்கள். அவன் விற்கொடி பறந்த பாடிவீட்டின் முன் காத்து நின்றான். உள்ளிருந்து வந்த காவலன் நுழைவொப்புதல் அளித்ததும் உள்ளே சென்று அங்கே மான்தோலிட்ட பீடத்தில் அமர்ந்திருந்த திருஷ்டத்யும்னனை வணங்கி முகமனுரைத்தான். திருஷ்டத்யும்னன் முகத்தில் எவ்வுணர்வும் இருக்கவில்லை. தன் அகத்தை புறச்செயல்களைக்கொண்டு நன்கு வகுத்துக் கொள்பவர்களுக்குரிய தற்கட்டுப்பாட்டுடன், அசைவின்மையுடன் இருந்தான். “நான் பாண்டவ அரசர் யுதிஷ்டிரரை பார்க்கும்பொருட்டு அனுப்பப்பட்ட தூதன்” என்றான் சுபாகு.

“அவருக்கு செய்தி அளிக்கப்பட்டுள்ளது” என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். “நீங்கள் அவரை சந்திக்கலாம். உங்கள் செய்தி எம் படைகளையோ அவரையோ உளச்சோர்வுறுத்தும் பொருட்டு திட்டமிட்டதாக இல்லை என நினைக்கிறேன். அவ்வாறு திட்டமிடப்பட்டதாகத் தெரிந்தால் உம்மை நான் சிறைப்படுத்த நேரும்” என்றான் திருஷ்டத்யும்னன். “நீங்கள் உளச்சோர்வடைவதோ ஊக்கம்கொள்வதோ எங்களிடம் இல்லையே” என்று சுபாகு சொன்னான். “நான் செய்தியை சொல்வதற்கு மட்டுமே பணிக்கப்பட்ட தூதன்.” திருஷ்டத்யும்னன் சில கணங்களுக்குப் பின் “நன்று” என்று சொல்லி எழுந்துகொண்டு “நானும் உம்முடன் வருகிறேன்” என்றான்.

அவர்கள் யுதிஷ்டிரரின் தலைமையிடத்தை நோக்கி புரவிகளில் சென்றனர். பாண்டவப் படையினர் உணவருந்திக்கொண்டிருந்தார்கள். திருஷ்டத்யும்னன்

பீஷ்மரின் உடல்நிலைகுறித்து கேட்பான் என அவன் நினைத்தான். ஆனால் மீசையை நீவியபடி புரவியின்மேல் திருஷ்டத்யும்னன் வெறுமனே அமர்ந்திருந்தான். சுபாகுவின் வருகையை அறிவித்து முரசுகள் முழங்கின. சுபாகு ஏதோ எண்ணிக்கொண்டு திரும்பி வடமேற்கே பார்த்தான். பீஷ்மரின் படுகளம் தனியாக அனல்செம்மையால் சூழப்பட்டு தெரிந்தது. அவன் திரும்பிப் பார்த்ததைக்கூட திருஷ்டத்யும்னன் நோக்கவில்லை.

யுதிஷ்டிரரின் பாடிவீட்டின் முகப்பில் யௌதேயன் காவல்பொறுப்பில் இருந்தான். அவன் தன் கணையாழியை அளித்ததும் அதை வாங்காமல் தலைவணங்கி “பிதாமகர் எவ்வண்ணம் இருக்கிறார், தந்தையே?” என்றான். சுபாகு முகம் மலர்ந்து “எஞ்சியிருக்கிறார். தன் இறப்பை தானே முடிவெடுக்கும் நிலையில்” என்றான். யௌதேயன் தலைவணங்கி “அவர் யோகி” என்றான். அவனுக்குப் பின்னால் நின்றிருந்த சதானீகன் “அவர் எங்களுக்கான செய்தி எதையேனும் சொன்னாரா?” என்றான். “என்ன செய்தி?” என்று சுபாகு கேட்டான். சதானீகனின் விழிகள் தழைந்தன.

யௌதேயன் “நேரடியாகவே சொல்லலாம். அவர் எங்கள் குலத்தின்மேல் தீச்சொல் என எதையேனும் விடுத்தாரா?” என்றான். “அவர் பெருந்தந்தை… தந்தையர் எந்நிலையிலும் மைந்தரை வாழ்த்துவதை மட்டுமே அறிந்தவர்கள்” என்றான் சுபாகு. யௌதேயன் விழிகள் கனிய “ஆம்” என்றான். “இந்த ஆட்டத்தில் அவர் நமக்களித்த அனைத்துமே தந்தையின் கொடை எனக் கொள்க!” என்ற சுபாகு “மைந்தர்கள் அனைவரும் நலம் அல்லவா?” என்றான். “ஆம்” என்றான் யௌதேயன். “அபிமன்யூவிற்கு இன்று சற்றே புண் மிகுதி என அறிந்தேன்” என்றான் சுபாகு. “ஆற்றும் தகைமை கொண்டவைதான்” என்றான் யௌதேயன். “நலம்பெறுக!” என்று வாழ்த்தியபின் சுபாகு யுதிஷ்டிரரின் குடிலை நோக்கி சென்றான்.

யுதிஷ்டிரரின் குடிலில் முன்னரே பீமனும் நகுலனும் சகதேவனும் வந்திருந்தார்கள் என்பது அவர்களின் கொடிகள் பறந்த தேர்கள் வெளியே நிற்பதிலிருந்து தெரிந்தது. சாத்யகி குடிலுக்கு வெளியே நின்றிருந்தான். சுபாகுவைக் கண்டதும் அருகே வந்து தலைவணங்கி “அரசர் தங்களுக்காக காத்திருக்கிறார், கௌரவரே” என்றான். “இளைய யாதவரும் இளைய பாண்டவர் அர்ஜுனரும் இருக்கிறார்களல்லவா?” என்றான் சுபாகு. “இல்லை, அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்” என்று சாத்யகி சொன்னான். “அவர்களும் வரட்டும். பாண்டவர்கள் ஐவரும் அடங்கிய அவைக்காகவே நான் தூது வந்திருக்கிறேன்.”

“இளைய பாண்டவர் அரசவைக்கு வருவதே இல்லை” என்றான் திருஷ்டத்யும்னன். “ஆம், அறிவேன். ஆனால் என் தூது ஐவருக்குமாகத்தான்” என்றான் சுபாகு. “நான் வெளியே காத்திருக்கிறேன். அவைக்குள் நுழைகையில் அவர்கள் ஐவரும் இருந்தாகவேண்டும்.” சாத்யகி “நன்று” என்றபின் உள்ளே சென்றான். திருஷ்டத்யும்னன் “இளைய பாண்டவர் இன்றும் வருவது ஐயமே” என்றான். “செய்தியனுப்புக!” என்றான் சுபாகு. “செய்தி பலமுறை சென்றுவிட்டது, தூது ஐவருக்குமாக என்று சகுனியின் ஆணையும் சொல்லப்பட்டுள்ளது” என்றான்.

தேர் வந்துநின்ற ஓசை கேட்டு இருவரும் திரும்பி நோக்கினர். விரைவுச் சிறுதேரிலிருந்து இளைய யாதவர் முதலில் துள்ளி இறங்கினார். தொடர்ந்து தயங்கிய காலடிகளுடன் இளைய பாண்டவன் இறங்கினான். தேர்ப்பாகன் தேரை அப்பால் கொண்டு செல்ல அவர்கள் இருவரும் பாடிவீட்டை அணுகினர். சுபாகு தலைவணங்கி “துவாரகையின் அரசருக்கு வணக்கம்” என்றான். “நலம்திகழ்க!” என இளைய யாதவர் வாழ்த்தினார். அவன் அர்ஜுனனை வணங்கி “வணங்குகிறேன்,

மூத்தவரே” என்றான். இளைய பாண்டவன் அவன் தலையைத் தொட்டு சொல்லின்றி வாழ்த்தினான்.

“நான் தங்களுக்காகவே காத்து நின்றுள்ளேன்” என்றான் சுபாகு. இளைய யாதவர் “அபிமன்யூவின் புண்கள் சற்று கடுமையானவை. மருத்துவநிலைக்கு சென்றிருந்தோம்” என்றார். சுபாகு “ஆம், சொன்னார்கள்” என்றபின் இளைய பாண்டவனிடம் “எங்களிடம் மிகச் சிறந்த தென்னக மருத்துவர் சிலர் இருக்கிறார்கள். சாத்தன், ஆதன் என இருவர். அகத்திய வழிவந்தவர்கள். தாங்கள் விழைந்தால் அவர்களை இங்கே அனுப்புகிறேன். மைந்தனின் உடலை அவர்கள் ஒருமுறை நோக்கட்டும்” என்றான். இளைய யாதவர் “ஆம், அது நன்று. அகத்திய மரபு நரம்புநிலை மருத்துவம் தேர்ந்தது” என்றார். இளைய பாண்டவன் நலிந்த குரலில் “நலம்பெறுவான் என்றனர் மருத்துவர்” என்றான்.

சாத்யகி உள்ளிருந்து வந்து தலைவணங்கினான். “முறைமைப்படி முழுதவையில் நான் என் செய்தியை உரைக்கவேண்டும். நீங்கள் அவைக்குச் சென்று அமர்ந்தபின் நான் உள்ளே நுழைகிறேன்” என்றான் சுபாகு. இளைய யாதவர் புன்னகைத்து “ஆம், அவை ஒருங்கவேண்டும் அல்லவா?” என்றபின் சுபாகுவின் தோளை மெல்ல தொட்டுவிட்டு உள்ளே சென்றார். இளைய பாண்டவன் தளர்ந்த காலடிகளுடன் தொடர்ந்தான். சாத்யகி அவர்களுடன் உள்ளே சென்றுவிட்டு மீண்டு வந்து தலைவணங்கினான். சுபாகு உள்ளே நுழைந்தான்.

அவையின் நடுவே பீடத்தில் அமர்ந்திருந்த யுதிஷ்டிரரை வணங்கி “அஸ்தினபுரியின் அரசரிடமிருந்து உபப்பிலாவ்யத்தின் அரசருக்கு நல்வணக்கம். நான் அரசரின் செய்தியுடன் வந்த தூதன்” என்றான் சுபாகு. “நலம் சூழ்க! தூதை சொல்க!” என்றார் யுதிஷ்டிரர். சுபாகு மீண்டுமொருமுறை தலைவணங்கி “குருகுலத்து மூத்தவருக்கு இளையவனின் வணக்கம்” என்றான். யுதிஷ்டிரர் சற்று முகம் மலர்ந்து “நன்று நிறைக, இளையோனே!” என்றார். “மூத்தவரே, நம் குலமூதாதையின் களவீழ்ச்சியை முறைப்படி அறிவிக்கும்பொருட்டு என் மூத்தவர் என்னை அனுப்பியிருக்கிறார்” என்றான் சுபாகு. அவையில் எழுந்த அசைவையும் மூச்சொலியையும் உடலால் உணர்ந்தான்.

சுபாகு “நம் முதுதந்தையும் சந்தனுவின் மைந்தருமாகிய தேவவிரதர் நேற்று போரில் நிலம்சரிந்தார். அவருடைய உடல்நிலை இறுதிக்கட்டத்தில் உள்ளது. மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்துகொண்டிருக்கிறார். அவரை இறுதியாகக் காணவும் வணங்கி நற்சொல் பெறவும் அவர்களின் மைந்தர்களாகிய தங்களுக்கும் தங்கள் இளையோருக்கும் பொறுப்பும் உரிமையும் உள்ளது. அதை அறிவுறுத்தவே வந்தேன்” என்றான். யுதிஷ்டிரர் கைகளால் தலையைத் தாங்கி அவனை நோக்கியபடி அமர்ந்திருந்தார்.

பீமன் “அவரிடமிருந்து தீச்சொல் எழுமெனில் நன்றே என எண்ணுகிறீர்கள் போலும்” என்றான். “தீச்சொல் எழுமென எண்ணுகிறீர்களா நீங்கள்?” என்றான் சுபாகு. பீமன் சொல்லிழந்தான். சுபாகு “மாறாக முழுதுளம் கனிந்த வாழ்த்தை அவர் அவர்மேல் அம்புகளைத் தொடுத்து களத்தில் வீழ்த்திய இளைய பாண்டவர் பார்த்தருக்கே அளிப்பார்” என்றான். “ஆம்” என்றார் யுதிஷ்டிரர். சுபாகு “இது வெறும் முறைமையறிவிப்பு. இதை நாங்கள் அறிவிக்கவில்லை என்று ஆகக்கூடாது. எங்களை எண்ணி நீங்கள் தயங்கவும் கூடாது. மூத்தவரே, பிதாமகர் வீழ்ந்துகிடக்கும் அந்நிலப்பகுதியை கௌரவ அரசர் இருவருக்கும் பொதுவான நிலமாக அறிவித்திருக்கிறார். அங்குள்ள காவலர்களுக்கும் அது அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்றான்.

திருஷ்டத்யும்னன் “முறைமைகளின்படி அவர் மறைந்தால் நீர்க்கடன் பொறுப்பு கொண்ட அனைவரும் அவரைச் சென்று கண்டு தாள்பணிந்தாகவேண்டும்” என்றான். யுதிஷ்டிரர் “அதற்கான நெஞ்சுரம் நம்மிடம் உண்டா, பாஞ்சாலரே? அவர் முன் சென்று நின்றிருக்க நம்மால் இயலுமா?” என்றார். திருஷ்டத்யும்னன் “நாம் நாணும் எதையும் செய்யலாகாது. செய்தபின் எதன்பொருட்டும் நாணுதலும் ஆகாது” என்றான். “என்னால் இயலும். இங்கு எவரும் வரவில்லை என்றால் உங்கள் சார்பில் நான் செல்கிறேன்” என்றான் பீமன். சகதேவன் “நாம் ஐவருமே சென்றாகவேண்டும். குறிப்பாக மூத்தவர் பார்த்தர்” என்றான். “ஆம், செல்வதே முறை. ஆனால் எப்படி செல்வது? எண்ணுகையிலேயே என் கால்கள் தளர்கின்றன” என்றார் யுதிஷ்டிரர்.

“அத்தனை பிழையுணர்வு அளிக்கும் ஒன்றை நீங்கள் செய்திருக்கலாகாது” என்றான் பீமன். “இனி அதைப்பற்றி பேசவேண்டியதில்லை” என்று இளைய யாதவர் கடுமையான குரலில் சொன்னார். “நாம் உடனே கிளம்புவோம். அவரைச் சென்று கண்டு அடிபணிந்து அவர் அளிப்பவை எவையாக இருப்பினும் பெறுவோம்.” யுதிஷ்டிரர் “ஆனால்…” என்று உடைந்த குரலில் சொன்னார். இளைய யாதவர் சற்றே எரிச்சல் கலந்த குரலில் “அரசே, அவரை நாம் வீழ்த்தியது அவருடைய சொல்லில் இருந்து ஆணைபெற்றுத்தான். ஆகவே நாம் அவர் எண்ணாத பிழை எதையும் செய்யவில்லை. அவரைச் சென்று கண்டு வாழ்த்துபெறுதல் நாம் அவரை வஞ்சகத்தால் வீழ்த்தினோம் என்னும் வீண்பழியிலிருந்து நம்மை காக்கும். அவருடைய ஆணையைத்தான் நாம் தலைக்கொண்டோம் என உலகம் அறியட்டும். செல்வோம்” என்றார்.

யுதிஷ்டிரர் “ஆம்” என்றபின் சுபாகுவிடம் “நாங்கள் இப்பொழுதே வந்து பிதாமகரின் தாள்பணிகிறோம் என்று சொல்க!” என்றார். “ஆணை” என சுபாகு தலைவணங்கினான். நகுலன் “நமது படைகள் இதைப்பற்றி என்ன எண்ணுமென்றும் நாம் கணிக்கவேண்டியிருக்கிறது” என்றான். “அதைப்பற்றி எனக்கு கவலையில்லை” என்று உரத்த குரலில் யுதிஷ்டிரர் சொன்னார். “கவலைகொள்ளவேண்டும்… நாம் பிதாமகரைச் சென்றுகண்டு சொல்பெற்றதே மிகப் பெரிய சோர்வை இங்கே உருவாக்கியதை நாம் அறிவோம். அரவானை களப்பலி கொடுத்தே நாம் அதை மீட்டோம்” என்றான் நகுலன்.

யுதிஷ்டிரர் “ஆம், ஆயினும் எனக்கு கவலை இல்லை. நான் அவரால் வாழ்த்தப்பட்டேன் என்றால் மகிழ்வேன். தீச்சொல்லிடப்பட்டேன் எனில் நிறைவடைவேன்” என்றார். இளைய யாதவர் “அரசே, தாங்கள் செல்வதே நன்று. இளையோர் உடன்வரட்டும். அவர் தங்கள் குலமூதாதை. நாளை அஸ்தினபுரியின் அரசர் என நீங்கள் முடிசூடி அமர்ந்திருக்கையில் சொல்லப்படும் மூதாதையர் பெயர்நிரையில் அவருடையதும் இருக்கும்” என்றார். “ஆம், நான் இப்போதே கிளம்புகிறேன்” என யுதிஷ்டிரர் எழுந்தார்.

நகுலன் “தங்கள் ஆணை அதுவெனில் அவ்வாறே ஆகுக!” என்றான். யுதிஷ்டிரர் அர்ஜுனனை நோக்கி “எழுக இளையோனே, இது நம் கடன்!” என்றார். அர்ஜுனன் அசையாமல் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். “வருக, நாம் கிளம்பியாகவேண்டும்!” என்றார் யுதிஷ்டிரர் மீண்டும். அர்ஜுனன் அசையவில்லை. அவன் இமைகளும் கீழே சரிந்து நிலைத்திருந்தன. “பார்த்தா, அவரைச் சென்று பார்ப்பது உன் கடன்” என்று இளைய யாதவர் சொன்னார். “அவர் அளிப்பது எதுவாக இருந்தாலும் பெற்றுமீள்க! அதை தவிர்ப்பது அஞ்சுவதென்றே பொருள்படும்.”

சீற்றத்துடன் அர்ஜுனன் “ஆம், நான் அஞ்சுகிறேன்” என்றான். விழிகளில் நீர் மின்ன “என் கீழ்மையை. அவர்முன் சென்று நின்றிருக்கையில் நான் சிறுத்து எறும்பென,

அணுவென ஆகப்போவதை” என மூச்சிரைத்தான். புன்னகையுடன் இளைய யாதவர் “ஆம், அவ்வாறு நிகழலாம். ஆனால் நீ வான்வெளியில் தலைதூக்கி நின்று நான் என்று தருக்கிய தருணங்கள் உண்டு. அப்போது அறிந்தவற்றை அணுவென்றும் இன்மையென்று ஆகி நின்றிருக்கையில் மெய்யா என்று உசாவுக! இது ஒரு நல்வாய்ப்பு” என்றார். ஏதோ சொல்ல வந்த அர்ஜுனன் வலிகொண்டவனாக தலையை அசைத்தான்.

“பார்த்தா, உண்ணாநோன்பு கொண்டவன் பசியாலும் நோயாளன் வலியாலும் தவமியற்றுவோன் துயராலும் விடுதலையடைகிறார்கள் என்பது தொல்நூல் கூற்று” என்றார் இளைய யாதவர். “இவையனைத்தும் மெய்மையின் தருணங்களே என்று உணர்க! செல்க!” பீடத்தின் கைப்பிடிகளை இறுகப் பற்றியபடி அசையாமலிருந்த அர்ஜுனன் “ஆம்” என்றபடி எழுந்து யுதிஷ்டிரரை அணுகி “செல்வோம்” என்றான். சுபாகு “நீங்கள் வரும் செய்தியை நான் என் படைகளுக்கு அறிவிக்கிறேன், அரசே” என்றான்.

யுதிஷ்டிரர் தம்பியருடன் நான்கு தேர்களில் கௌரவப் படைமுகப்பை அணுகியதும் அரசருக்குரிய வரவேற்பை அளிக்க முரசுகள் முழங்கின. படையினர் பெரும்பாலும் துயில்கொண்டுவிட்டிருந்தமையால் அந்த அமைதியில் முரசொலி உரக்க எழுந்து இருளை நிறைத்தது. இரு படைகளுக்கும் நடுவே அமைந்திருந்த வெற்றுநிலத்தை அவர்களின் தேர்கள் கடந்தபோது எழுந்த ஓசையை இருபக்கமும் இருந்த படைவீரர்கள் அறிந்திருந்தனர். அன்று என்ன நிகழும் என்பதையும் ஒருவாறாக உய்த்துணர்ந்திருந்தனர்.

முரசொலி கேட்டு யானைகள் சில குரலெழுப்பின. அவர்களை வரவேற்க அஸ்தினபுரியின் அமுதகலக் கொடியுடன் துச்சாதனனே வந்திருந்தான். அவர்கள் அருகணைந்ததும் கொம்பு ஓசையிட்டமைந்தது. துச்சாதனன் இருபுறமும் துர்மதனும் துச்சலனும் துணைவர ஏழு அடி முன்னால் வந்து தலைவணங்கி “அஸ்தினபுரியின் படையெல்லைக்குள் உபப்பிலாவ்யத்தின் அரசருக்கு நல்வரவு. உங்கள் வாழ்த்துக்கள் எங்களுக்கு அமைவதாக!” என முறைமைச் சொல் உரைத்தான். யுதிஷ்டிரர் சொல்லில்லாமல் கைதூக்கி வாழ்த்து அளித்தார்.

துச்சாதனன் “பாண்டவ இளையோர் நால்வருக்கும் நல்வரவு” என தலைவணங்கிய பின் “உங்களை இளையோன் சுபாகுவே அழைத்துச்செல்வான்” என்றான். யுதிஷ்டிரர் தலையசைத்தார். துச்சாதனன் மீண்டும் தலைவணங்கி புறம்காட்டாமல் விலகிச்சென்றான். யுதிஷ்டிரர் திரும்பி “செல்வோம்” என்று சுபாகுவிடம் சொன்னார். சுபாகு அவர்களை அழைத்துச்செல்ல ஐவரும் மெல்லிய காலடிகளுடன் தொடர்ந்து வந்தார்கள்.

படைகளின் முன்விளிம்பு வழியாக வடக்கு நோக்கி செல்கையில் பாண்டவர்கள் நால்வரும் நடுங்கிக்கொண்டிருப்பதை சுபாகு பார்த்தான். பீமன் மட்டும் பெரிய கைகளை வீசியபடி நிமிர்ந்த தலையுடன் தோளில் சரிந்த நீள்குழல்சுருள்கள் காற்றில் அலைபாய கால்களை தூக்கி வைத்து நடந்தான். அர்ஜுனன் எதையுமே பார்க்கவில்லை. நகுலனும் சகதேவனும் நிலம்நோக்கி நடந்தனர். யுதிஷ்டிரர் கைகளை கூப்புவதுபோல நெஞ்சோடு சேர்ந்திருந்தார்.

பந்தங்களால் சூழப்பட்ட பீஷ்மரின் படுகளம் இருளில் மிதப்பதுபோலத் தெரிந்தது. அங்கு நின்றிருந்த மருத்துவர்களின் நிழல்கள் செவ்வொளி எழுந்த கரிய வானில் பேருருக்கொண்டு அசைந்தன. யுதிஷ்டிரர் “அவர் இறந்துவிடவில்லை அல்லவா?”

என்று கேட்டார். அவ்வினாவிலிருந்த பொருளின்மையை உணர்ந்த சுபாகு “அவ்வாறு முரசுகள் ஒலிக்கவில்லை, மூத்தவரே” என்றான். “ஆம், அவர் மறைந்தால் முரசொலி எழும்” என்றார் யுதிஷ்டிரர். பீமன் “அவர் இறந்துவிட்டதாகவே முரசொலி எழுந்தது. இறக்கவில்லை என இன்னொரு முரசொலி. மீண்டும் முரசொலித்தாலும் நம் வீரர்கள் நம்பப் போவதில்லை” என்றான்.

ஏன் இக்கட்டுப் பொழுதுகளில் மானுடர் பொருளிலாது பேசுகிறார்கள் என்று சுபாகு எண்ணிக்கொண்டான். ஆனால் பேசுவது அந்தத் தருணத்தின் இறுக்கத்தை எளிதாக்கியது. அப்போது எதை பேசினாலும் பொருளில்லாததாகவே இருக்கும். அப்போது பொருள்கொள்வது இளிவரல் மட்டுமே. பொருளில்லாமையையே பொருளெனக் கொள்ள இயல்வது இளிவரலில் மட்டும்தான். அப்படி எண்ணியதுமே அவன் முதிய சூதரை பார்த்துவிட்டான். அவர் காவல்மாடத்தில் அமர்ந்திருந்தார். அவர்களைக் கண்டதும் ஆவலுடன் முகம் மலர எழுந்து நின்றார். சுபாகு எரிச்சல் கொண்டான். ஆனால் அவரை ஒன்றும் செய்யமுடியாது என்று உணர்ந்தான். அதன்பின் அவர் அத்தருணத்தில் சொல்லப்போவதென்ன என்ற ஆர்வமும் எழுந்தது.

முதிய சூதர் கைகளை விரித்து அவர்களை தடுப்பதுபோல் அருகே வந்தார். முன்னால் சென்ற சுபாகுவிடம் “நில்லுங்கள், அரசே. தங்கள் ஆணையின்படி நான் உள்ளே சென்று அவரை பார்த்தேன். அவருடைய அம்புகள் எவை எனத் தெளிந்தேன். அவை அந்தக் களத்தில் இருந்து பொறுக்கப்பட்டவை. ஆம், அவர்மேல் படாமல் குறிதவறிய அம்புகளைக்கொண்டு அந்த மஞ்சம் அமைக்கப்பட்டுள்ளது” என்றார். கண்களைச் சிமிட்டியபடி “அந்த மஞ்சம் அமைக்கும் கலை எவ்வாறு உருவானது என கண்டுபிடித்தேன். இளமையில் அவர் அம்புகளால் கங்கைக்கு அணைகட்டினார் என்றார்கள். அந்த அணையமைக்கும் கலையே இங்கே மஞ்சமென்றாகியிருக்கிறது. கங்கைக்கு கரைகட்டுதல்!” என்றார்.

“ஆனால் அவர் பெருவீரர்!” என்று சூதர் கூவினார். “அவரால் நீருக்கு மட்டுமல்ல நெருப்புக்கும் காற்றுக்கும்கூட அணைகட்ட முடியும். ஏன் முயன்றால் வானுக்கே அணைகட்டுவார். அந்த அணை முழுமையடையாது, ஏனென்றால் அது முழுமையடைய இயலாது. முழுமையடையாத செயல்களை செய்பவர்களே பெரியவர்கள். ஏன் என்று சொல்கிறேன், அச்செயல்களை தொடங்கினாலே போதும், செய்ததாகவே பொருள்கொள்ளப்படும். இவர்கள் யார்? பாண்டவர்கள் போலிருக்கிறார்கள்… இந்த முதியவர் கௌதமகுலத்து முனிவர் அல்ல என்றால் யுதிஷ்டிரராக இருக்கலாம். இவர் பலாஹாஸ்வ முனிவர் அல்ல என்றால் பீமன். அவர் சரத்வான் அல்ல என்றால்…”

“போதும்” என்று பீமன் உறுமினான். யுதிஷ்டிரர் கைகூப்பி “சூதரே, நாங்கள் பாண்டவர்கள். எங்கள் பிதாமகரை பார்த்துவரச் செல்கிறோம். வழிவிடுங்கள்” என்றார். “ஆம், அது உகந்த செயல்தான். பெரிய தீங்குகள் இழைக்காத தருணங்களிலெல்லாம் நாம் முறைமைகளை கைவிடாது பேணவேண்டும்… அதுவே அரசநெறி” என்றார் முதிய சூதர். “தங்கள் வாழ்த்துக்கள் அமையட்டும்” என்று கைகூப்பியபின் யுதிஷ்டிரர் முன்னால் நடந்தார். முதிய சூதர் பின்னால் வந்தபடி “நானும் உடன்வந்தால் உங்கள் பெருமையை அவரிடம் சொல்வேன்” என்றான். சுபாகு “வேண்டாம்” என்றான்.

“வேண்டுமென்றால் உங்கள் பெருமையை உங்களிடமே சொல்கிறேன். அவர் உடலில் சிகண்டியின் அம்பையும் அர்ஜுனரின் அம்பையும் பிரித்தறியவே முடியவில்லை என்றார்கள்” என்றபடி அவர் தொடர்ந்து வந்தார். “அம்புகளில் வேறுபாடில்லை என்பதை அறியாமல்தான் பிதாமகர் உயிர்விடத்

துணிந்திருக்கிறார்.” சீற்றத்துடன் பீமன் திரும்பினான். “மந்தா!” என்றார் யுதிஷ்டிரர். “களம்பட்டவர்கள் தங்கள் உயிரைக் குடித்த படைக்கலத்தை கையில் ஏந்திக்கொண்டுதான் விண்ணுலகு எய்துவார்கள் என்று கதைகள் சொல்கின்றன. பீஷ்ம பிதாமகர் கொண்டுசெல்லும் அம்பு எவருடையதாக இருக்கும் என்று ஆவலாக சூதர்குலமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. உண்மையில் அதற்காகவே நான் வந்தேன்.”

அவர் மேலும் ஊக்கம் கொண்டு கைதூக்கி “அந்த அம்பு ஒரு ஆணிலியுடையதாக இருக்கும் என்று நிமித்திகர் சொல்லியிருக்கிறார்கள். நிமித்திகர் பொய்யுரைப்பதில்லை, உறுதியாக அது ஆணிலியின் அம்பே. ஆனால் எவருடைய அம்பு என்பது அப்போதும் ஐயத்திற்குரியதே” என்றார். சீற்றத்துடன் திரும்பிய பீமன் “போதும்” என்றான். “நான் சொல்லவருவது விராடநாட்டு பிருகந்நளை…” என்றார். “வாயை மூடு… இல்லையேல் தலையை அறைந்து உடைப்பேன்” என்றான் பீமன். “அதனால் பயனில்லை. நாங்கள் இளிவரல் சூதர், கீழ்வாயாலும் பாடுவோம்” என்றார் முதிய சூதர்.

“சூதரே, செல்க! இனி சொல்லெடுக்க வேண்டாம்” என்றபின் சுபாகு கண்காட்ட எல்லைக்காவலன் வந்து அவரைப் பார்த்து “உம்” என உறுமினான். அவர் அஞ்சி பின்னடைந்து “இவன் என்னை முன்னர் இருமுறை அறைந்தான். இவன் குடியில் சூதர்களை அறையும் வழக்கம் உள்ளது” என்றார். அவர்கள் முன்னால் செல்ல அவர் “கல்வியறிவில்லாதவர்கள் என்னைப்போன்ற காவிய ஆசிரியனை கையாளும்படி விட்டுச்செல்வதுதான் அரசர்களுக்கு அழகா?” என அப்பால் நின்று உரக்கக் கேட்டார்.

அவரை காவலன் வேலால் உந்தி கொண்டுசென்றான். அவர் அவனிடம் திமிறியபடி “இவர்கள் கல்லாக் களிமகன்கள். ஆண்கள் பெறும் கல்விஅறிவுதான் பெண்களை அழகிகளாக்குகிறது என்ற உண்மையை அறியாத வெற்று வேல்தாங்கிகள்!” என்று பின்னால் நின்று கூவினார். “நீங்கள் களம்படும்போது நான் புகழ்ந்து பாடுவேன். ஆயிரமாண்டுகளாக எங்கள் பாடலுக்காக நாங்கள் ஷத்ரியர்களை போர்க்களங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம்!” யுதிஷ்டிரர் திரும்பி நோக்கிவிட்டு தலைகுனிந்து நடந்தார். பீமன் உறுமியபடி தன் கைகளை உரசிக்கொண்டான்.

யுதிஷ்டிரர் நின்று பீஷ்மரின் படுகளத்தை நோக்கி “அது ஓர் விண்ணூர்திபோல் உள்ளது. அவரை அழைத்துச்செல்ல வந்தது” என்றார். சுபாகு “ஆம்” என்றான். அவர் பெருமூச்சுவிட்டு “குருகுலத்து மன்னர்கள் அனைவரும் காமத்தால் அலைக்கழிக்கப்பட்டவர்கள் என்பார்கள். யயாதியிலிருந்து இன்றுவரை அதுவே நிகழ்கிறது. இக்குலத்தில் இப்படி ஒருவர் பிறந்தமை விந்தைதான்” என்றார். பீமன் “அவரும் காமத்தால் அலைக்கழிக்கப்பட்டவரே” என்றான். “மந்தா!” என்றார் யுதிஷ்டிரர். “எதிர்த்திசையில் அலைக்கழிக்கப்பட்டார்” என்று பீமன் சொன்னான்.

யுதிஷ்டிரர் அவனை வெறுமனே நோக்கிவிட்டு முன்னால் நடந்தார். அவர்கள் பீஷ்மரின் படுகளத்திற்குள் நுழைந்தனர். அங்கே பீடத்தில் அமர்ந்து சாத்தனும் ஆதனும் மருந்தரைப்பதை நோக்கிக்கொண்டிருந்த வஜ்ரர் எழுந்து வணங்கினார். சுபாகு “எப்படி இருக்கிறார்?” என்றான். “அவ்வண்ணமே…” என்றார் வஜ்ரர். “இன்னும் பல நாட்கள் இப்படியே மாற்றமின்றி செல்லக்கூடும்” என்றான் சாத்தன். “மூச்சும்

நெஞ்சுத்துடிப்பும் சீரடைந்துள்ளது.” யுதிஷ்டிரர் “அவரிடம் எங்கள் வரவை அறிவிப்பது இயலுமா?” என்றார். “ஆம், துயிலில் சொற்கள் சென்றுசேரும். எல்லா சொற்களுமல்ல, அந்த ஆழம் எவற்றை தெரிவுசெய்கிறதோ அவை மட்டும். செவிகளில் உங்கள் வரவை சொல்லுங்கள்” என்றான் சாத்தன்.

யுதிஷ்டிரர் கூப்பிய கைகளுடன் பீஷ்மரின் அருகே சென்றார். பீஷ்மரின் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. ஆனால் என்னும் சொல்லை சுபாகு கண்டான். யுதிஷ்டிரர் “என்ன சொல்கிறார்?” என்றார். “அது வெறும் உதட்டசைவு” என்றான் சுபாகு. யுதிஷ்டிரர் அவர் அருகே மண்டியிட்டு அமர்ந்து செவிகளில் “பிதாமகரே, நான் யுதிஷ்டிரன். பிதாமகரே, உங்கள் பெயர்மைந்தனாகிய யுதிஷ்டிரன். பிதாமகரே, உங்களைப் பார்க்க வந்துள்ளேன். என்னை வாழ்த்துக!” என்றார். பீஷ்மரின் விழியிமைகள் அதிர்ந்தன. “கேட்கிறார்” என்றார் வஜ்ரர். “பிதாமகரே, என்னை வாழ்த்துக! என் பணிவை ஏற்றுக்கொள்க, தந்தையே!” என்று உரத்த குரலில் யுதிஷ்டிரர் சொன்னார். குரல் அழுகையால் உடைய “என் தலை தங்கள் கால்களில் அமைகிறது. நான் ஆற்றிய அனைத்துப் பிழைகளையும் பொறுத்தருள்க!” என்றார்.

பீஷ்மரின் இமைகளுக்குள் விழிகள் ஓடுவது தெரிந்தது. யுதிஷ்டிரர் தளர்ந்தவராக பீஷ்மரின் அருகே அமர்ந்தார். அவர் தோள்கள் குலுங்கின. மூச்சொலியும் கேவல்களுமாக அழுதார். “அரசே!” என்றான் சுபாகு. “மூத்தவரே!” என்று பீமன் அழைத்தான். பின்னர் சகதேவனிடம் கண்காட்டினான். சகதேவனும் நகுலனும் விழிநீர் வார நின்றிருந்தனர். சகதேவன் குனிந்து யுதிஷ்டிரரின் தோளைத் தொட்டு “மூத்தவரே” என்றான். யுதிஷ்டிரர் உடல்குலுங்க அழுதபடி கையூன்றி எழுந்தார். மூச்சால் அலைக்கழிந்த உடலுடன் தோள்குறுக்கி நடந்துசென்று பீஷ்மரின் பாதங்களில் தன் தலையை மும்முறை வைத்து எடுத்தார்.

எழுந்து விலகியபோது அவருடைய ஒரு கால் இழுத்துக்கொண்டு விறைத்து நின்றது. கழுத்துத் தசைகள் இழுபட்டு அதிர்ந்தன. பற்களைக் கடித்து தலையை குனிந்தபடி நடந்து தள்ளாடி விழப்போனார். சகதேவன் பாய்ந்து அவரை தோள்பற்றி பிடித்துக்கொண்டான். அவர் அவன் கையிலமையாது மேலும் சரிந்தபோது சாத்தன் ஒரு பெட்டியை எடுத்துப்போட்டான். அவர் அதில் அமர்ந்து இரு கைகளாலும் தலையை பற்றியபடி குனிந்துகொண்டார். பீமன் சென்று பிதாமகரின் செவிகளில் “நான் பீமன், பிதாமகரே. உங்கள் வாழ்த்துகொள்ள வந்தேன்” என்றான். இமைகள் மட்டும் அசைந்தன. உதடுகள் அச்சொல்லில் நிலைகொண்டிருந்தன. பீமன் அவர் பாதங்களை வணங்கி விலகினான்.

உரத்த விக்கல் ஓசை எழுந்ததைக் கேட்டு சுபாகு திரும்பிப் பார்த்தான். யுதிஷ்டிரர் மூச்சுத்திணற உடல்துள்ள அதிர்ந்துகொண்டிருந்தார். சாத்தனும் வஜ்ரரும் அவரை பிடித்தனர். சாத்தன் அவர் நெஞ்சை அழுத்தி தடவினான். கழுத்து இறுக்கப்பட்டவரைப்போல் யுதிஷ்டிரரின் உடல் துடித்தது. வாயின் ஓரத்தில் நுரைவழிய அவர் வலிப்பு கொண்டார். விழிகள் மேலேறியிருக்க வெண்பற்கள் உதடுகளை அழுந்தக் கவ்வியிருந்தன. கைகள் விரல்சுருட்டி இறுகியிருந்தன. வஜ்ரர் அவரைப் பற்றி மெல்ல நிலத்தில் ஒருக்களித்து படுக்கச்செய்தார். சகதேவன் நீர்க்குடுவையை எடுக்க “வேண்டாம்” என்றார் வஜ்ரர். வலிப்புடன் விசைகொண்ட இருமல்கள் யுதிஷ்டிரரின் உடலை உலுக்கின. கமறி மூச்சிளைத்து மெல்ல அவர் அடங்கியதும் உடைந்த தேர்ப்பீடம் ஒன்றை அவருக்கு தலைக்கு அணையாக வைத்தார் வஜ்ரர். மெல்லிய குரலில் “சற்றுநேரம் மூச்சு ஒழுங்கமையட்டும். அதன்பின் இன்னீர் கொடுப்போம்” என்றார்.

சகதேவன் அர்ஜுனனிடம் “மூத்தவரே” என்றான். அர்ஜுனன் பீஷ்மரை நோக்கவில்லை என்று தோன்றியது. யுதிஷ்டிரரின் துடிப்பையும் நோக்கவில்லை. எதையுமே நோக்காமல் விழிகள் இருளை வெறிக்க நின்றிருந்தான். “மூத்தவரே” என்றான் சகதேவன். “என்ன?” என்று அர்ஜுனன் கலைந்து திரும்பி நோக்கினான். “வணங்குக!” என்றான் சகதேவன். “ஆம்” என்றபின் அர்ஜுனன் சென்று பீஷ்மரின் காதருகே “நான் அர்ஜுனன். உங்கள் மைந்தன் வந்துள்ளேன்” என்றான். பீஷ்மரிடம் மெல்லிய இமையசைவன்றி ஏதும் வெளிப்படவில்லை. அவன் அவருடைய கால்களை தலைசூடிவிட்டு விலகினான்.

நகுலனும் சகதேவனும் பீஷ்மரை வணங்கினர். வஜ்ரர் “அவர் அறிந்துகொண்டிருக்கிறார்” என்றார். யுதிஷ்டிரர் முனகினார். சாத்தன் சென்று அவருக்கு சிறுகுவளையில் தேன் சேர்த்த நீரை அளித்தான். விடாய்கொண்ட உதடுகளுடன் அவர் அதை அருந்தினார். அவருக்குள் நீர் நுழையும் ஓசை அந்த அமைதியில் தெளிவாக கேட்டது. எவரோ எதுவோ சொல்வதுபோலிருந்தது. அங்கே உருவிலியாக எழுந்த தெய்வத்தின் குரல் என. சுபாகு மெய்ப்பு கொண்டான். “பார்த்தன்” என மீண்டும் அக்குரல் ஒலித்தபோது அது பீஷ்மரின் வாயிலிருந்து எனத் தெரிந்தது.

“செல்க! மூத்தவரே, அருகணைக!” என்றான் சகதேவன். யுதிஷ்டிரர் கையூன்றி எழுந்தமர்ந்தார். தலை ஆடிக்கொண்டிருக்க அவர்களை நோக்கினார். அர்ஜுனன் தயங்கிய காலடிகளுடன் அருகே சென்று அவர் அருகே மண்டியிட்டான். “பிதாமகரே, நான் அர்ஜுனன். உங்கள் பெயர்மைந்தன்” என்றான். அம்புகள் மேல் அமைந்திருந்த பீஷ்மரின் வலக்கையில் நடுவிரல் துடித்தது. அதில் குருதி கருமையான பிசினாகப் படிந்திருந்தது. உள்ளங்கையிலும் முழங்கையிலும் மட்டும் நான்கு அம்புகளின் முனைகள் பதிந்திருந்தன. அவற்றைச் சுற்றி தசை சிவந்து நரம்புகள் புடைத்து எழுந்திருந்தன.

“கையருகே செல்க!” என்றான் சகதேவன். “நான் பார்த்தன், பிதாமகரே. உங்கள் சொல்லுக்காக வந்துள்ளேன். உங்கள் அடிபணிகிறேன்” என்றான் அர்ஜுனன். “ம்ம்” என்று பீஷ்மர் மிக ஆழத்தில் எங்கோ இருந்து முனகினார். “பார்த்தன்!” என ஒரு சொல் எழுந்தது. அவர் குரல்தானா என ஐயமெழுந்தது. “அவர் கையருகே செல்க!” என அர்ஜுனனின் தோளை தொட்டான் சகதேவன். அர்ஜுனன் அந்தக் கையின் அருகே சென்றான். பீஷ்மர் தன் கையை மேலே தூக்க முயன்றார். அது துடிப்பு கொண்டதே ஒழிய அசையவில்லை.

“அந்தக் கையை தூக்கி உங்கள் தலைமேல் வைத்துக்கொள்ளுங்கள்” என்றான் சாத்தன். அர்ஜுனன் தயங்கினான். “அவர் எண்ணுவது அதையே. செய்க!” என்றான் சாத்தன். அர்ஜுனன் தன் தலையை அந்தக் கையருகே கொண்டுசென்றான். மிக மெல்ல அதை தூக்கி தன் தலைமேல் வைத்தான். “பார்த்தன்!” என்று பீஷ்மர் சொன்னார். அவர் கை உயிரற்றதுபோல் அவன் தலைமேல் கிடந்தது. “பார்த்தன்!” என மீண்டும் தொண்டை கமறுவதுபோன்ற ஒலியுடன் சொன்னார். “வெல்க! மெய்மையை கண்டடைக!” என்றார். அவன் உடலில் மெல்லிய துடிப்பு ஒன்று நிகழ்ந்தது. அவன் தலையை அம்புமுனை ஒன்றின்மேல் சாய்த்துக்கொண்டான்.

வஜ்ரர் பீஷ்மரின் கையைத் தூக்கி மீண்டும் அம்புகள் மேல் வைத்தார். “செல்க… அவருக்கு மீண்டும் துயில்மருந்து அளிக்கவேண்டும்” என்றார். கையை நிலத்தில் ஊன்றி அர்ஜுனன் எழுந்துகொண்டான். இடையில் கையை வைத்துக்கொண்டு நின்று நீள்மூச்செறிந்தபடி வானை நோக்கினான். சுபாகு “செல்வோம்” என்றான். யுதிஷ்டிரர் சாத்தனின் கைகளை பற்றிக்கொண்டு எழுந்து நின்றார். அவர் முகம்

தெளிந்திருந்தது. சகதேவன் “விடைகொள்கிறோம், மருத்துவர்களே” என்றான். வஜ்ரர் “நலம் சூழ்க!” என்றார்.

அவர்கள் வெளியே வந்ததும் புதுக் காற்றை ஏற்றவர்கள்போல் முகம்தெளிந்தனர். நீள்மூச்சுகள் ஒலித்தன. யுதிஷ்டிரர் “பிதாமகரின் வாழ்த்து நம்மனைவருக்கும்தான். நம் துயரை அவர் அறிந்திருக்கிறார்” என்றார். சகதேவன் “தந்தை அறியாத எதுவும் மைந்தருக்கில்லை” என்றான். அவர்கள் நடந்தபோது அந்தக் காலடியோசை உரக்க ஒலித்து உளநிலையை குலைத்தது. யுதிஷ்டிரர் அண்ணாந்து நோக்கி விண்மீன்களை பார்த்தார். பின்னர் நீள்மூச்சுடன் முன்னால் நடந்தார்.

சற்றே பின்னடைந்த பீமன் “இந்த மருத்துவரையா அபிமன்யூவைப் பார்க்க அனுப்புகிறேன் என்றாய்?” என்று சுபாகுவிடம் கேட்டான். “ஆம், அந்த இரு இளையோரும் உயிரின் நெறி அறிந்தவர்கள். உடலை ஆள்பவர்கள்” என்றான் சுபாகு. “உன் தமையனிடம் பேசிவிட்டு அவர்களில் ஒருவனை அனுப்பு. அபிமன்யூவுக்கு அவர்களின் மருந்துதவி தேவைப்படுகிறது. அவன் உடலில் இரண்டு புண்கள் ஆழமானவை” என்றான் பீமன். “ஆணை, மூத்தவரே” என்றான் சுபாகு. “பிதாமகர் தன் சிறுமைந்தனுக்களித்த கொடைகள் அவை. உயிர்குடிக்காதவை, உடல்வருத்துபவை” என்றான் பீமன்.

அவர்கள் மீண்டும் படைமுகப்பை வந்தடைந்தனர். காவல்நிலையில் முதிய சூதர் தன் முழவை மடியில் வைத்து தலை தொங்கிக்கொண்டிருக்க துயிலில் இருந்தார். சுபாகு நோக்குவதை பார்த்த காவலர்தலைவன் “மொந்தை நிறைய கள்ளை கொடுத்தேன். அதில் அகிபீனாவையும் சேர்த்தேன்… நாளை காலைவரை ஓசையெழாது” என்றான். யுதிஷ்டிரர் புன்னகைத்து “திறன்மிக்க சொல்லாளர். தென்னகத்து வேடர்கள் அம்புகளில் நஞ்சுபூசும் கலை தேர்ந்தவர்கள் என்பார்கள். வேட்டைவிலங்கு மயங்கிவிழவேண்டும், ஆனால் அதன் ஊனில் நஞ்சு ஏறிவிடக்கூடாது. அந்த அளவு அவர்களுக்கு மட்டுமே தெரியும். இவர் சொல்நஞ்சுக் கலைதேர்ந்தவர்” என்றார்.

அவர்கள் படைநடுவே உள்ள வெளியை அடைந்தனர். அங்கே தேர்கள் காத்து நின்றிருந்தன. யுதிஷ்டிரர் “மறவா உதவி இது இளையோனே, நன்று சூழ்க!” என அவனை வாழ்த்த சுபாகு அவருக்கு தலைவணங்கினான். பீமன் அவன் தலையைத் தொட்டு வாழ்த்திவிட்டு தேரிலேறிக்கொண்டான். நகுலனும் சகதேவனும் அவன் கால்களைத் தொட்டு வணங்கினர். அவன் வாழ்த்துச்சொற்களை முணுமுணுத்தான். அர்ஜுனன் தேரிலேறும் முன் அவனை நோக்கினான். அவன் ஏதோ சொல்ல விழைவதை விழிகளில் கண்டுவிட்டிருந்தான்.

சுபாகு “மூத்தவரே” என தாழ்ந்த குரலில் அழைத்தான். “என் மைந்தன் சுஜயன், உங்களுக்கு அவன் முகம்கூட நினைவிருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவன் தந்தையென உங்களையே உளம்கொண்டிருந்தான்.” அர்ஜுனனின் முகம் உறைந்திருந்தது. “நீராடுகையில் அவனுக்காக ஒரு கைப்பிடி நீரள்ளி விடுங்கள், மூத்தவரே. சென்று நிறைக மைந்தா என ஒரு சொல் உரையுங்கள். இப்புவியில் இருந்து இனி அவன் எதிர்பார்க்க வேறேதுமில்லை.” கண்ணீர் கோக்க சுபாகு விழிகளை தாழ்த்திக்கொண்டான். அர்ஜுனன் வெறுமனே தலையசைத்துவிட்டு தேரிலேறிக்கொண்டான்.

சுபாகு தன் புரவியிலேறிக்கொண்டு திரும்பி கௌரவப் படைகளுக்குள் நுழைந்தான். புரவியை தளர்நடையில் விட்டு அதன் மேல் உடலை சற்று சரித்து

அமர்ந்திருந்தான். அப்போது தேவைப்பட்டது துயில்தான். எங்கு படுத்தாலும் துயில்கொள்ள முடியும் என்று தோன்றியது. அவன் புரவி மேலேயே துயில்கொள்வதை அவனே நோக்கிக்கொண்டு சென்றுகொண்டிருந்தான். எதிரே பூரிசிரவஸ் வந்து “எங்கு செல்கிறீர்?” என்றான். “நான் பாண்டவர்களை பார்க்கச் சென்றிருந்தேன்” என்று சுபாகு சொன்னான். “நானும் அவர்களை பார்க்கத்தானே சென்றிருந்தேன்?” என்றான் பூரிசிரவஸ். “அதெப்படி?” என்று வியந்த சுபாகு உடனே விழித்துக்கொண்டான்.

அவனுக்குப் பின்னால் புரவிக்குளம்படி ஓசை கேட்டது. பந்தவெளிச்சத்தில் பூரிசிரவஸ் அணுகுவது தெரிந்தது. அவனருகே வந்த பூரிசிரவஸ் “வணங்குகிறேன், மூத்தவரே. நான் உங்களை அழைத்துக்கொண்டிருந்தேன்” என்றான். சுபாகு “அரசியரை பார்த்துவிட்டு வருகிறீரா?” என்றான். “ஆம், தூது முடிந்து இப்போதுதான் நம் படைகளுக்குள் நுழைந்தேன்” என்றான் பூரிசிரவஸ். சுபாகு ஏதும் கேட்கவில்லை. ஆனால் பூரிசிரவஸ் அவனே தொடர்ந்தான். “நான் செல்வதற்கு முன்னரே அவர்களுக்கு செய்தி சென்றடைந்துவிட்டிருந்தது. அவர்களுக்கு முறையாக விரிவான களச்செய்திகள் சென்றுகொண்டிருக்கின்றன. போர் நிகழ்ந்துகொண்டிருக்கையிலேயே நாழிகைக்கு ஒருமுறையேனும் செய்திகள் அவர்களை சென்றடைகின்றன.”

“ஆம், அதற்காகத்தானே வந்திருக்கிறார்கள்?” என்றான் சுபாகு. “நான் சென்றபோது என் வருகையும் முறைப்படி அறிவிக்கப்பட்டிருந்தது. என்னை சிறிய கூடமொன்றுக்குள் கொண்டுசென்றார்கள். அங்கே முன்னரே இரு அரசியரும் வந்து அமர்ந்திருந்தனர். இருவருமே இறுகிய முகத்துடன் இருந்தனர். யாதவப் பேரரசி முகத்திரை அணிந்திருந்தார். நான் செய்தியை முறைமைச் சொற்களில் உரைத்தேன். யாதவப் பேரரசி “எங்கள் குலத்து மூத்தவர் அவர். அவர் வீழ்ச்சிக்காக வருந்துகிறேன். பாண்டுவின் குருதியினர் அவருக்கு கடமைப்பட்டவர்கள்” என்று முறைமைச் சொல் உரைத்தார்” என்றான் பூரிசிரவஸ்.

“இது வெறும் சடங்கே” என்றான் சுபாகு. “ஆம், ஆனால் விந்தையான ஒன்று நிகழ்ந்தது. அதைத்தான் இதுவரை எண்ணிக்கொண்டிருந்தேன்” என்றான் பூரிசிரவஸ். “மூத்தவரே, பாஞ்சாலத்து அரசி மறுமொழி எதையும் உரைக்கவில்லை. அவருடைய தலையாடை முகத்தின்மேல் சரிந்திருந்தது. மங்கிய விளக்கொளியில் முகம் தெளிவுறவில்லை. அவர் அங்கிருக்கவில்லை என்னும் உள்ளுணர்வை நான் அடைந்தபடியே இருந்தேன். அது அவரல்ல, வேறு எவரையோ அரசியென கொண்டுவந்திருக்கிறார்கள் என. ஆனால் சேடியோ தோழியோ அல்ல. அந்த நிமிர்வு அவர்களுக்கு அமையாது. நான் அவரை சிலமுறை பார்த்துள்ளேன். உடலால் அவரேதான். அந்த விந்தையுணர்ச்சியை என்னால் விளக்க இயலவில்லை.”

“யாதவப் பேரரசி பாஞ்சாலத்து அரசி மறுமொழி சொல்வார் என காத்திருந்தார். அவர் மறுமொழி சொல்லிவிட்டால் அந்தச் செய்திநிகழ்வு நிறைவுற்று நான் கிளம்ப முடியும். ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை. நான் மீண்டும் என் செய்தியை சொன்னேன். சற்று அழுத்தியே சொன்னேன். பிதாமகரான பீஷ்மர் பாஞ்சாலராகிய சிகண்டியாலும் அர்ஜுனராலும் களத்தில் வீழ்த்தப்பட்டார். இறப்புநிலையில் படுகளத்தில் படுத்திருக்கிறார். அவர் எழுவது அரிது என்றனர் மருத்துவர் என்றேன். அப்போதும் பாஞ்சாலத்தரசி ஒன்றும் சொல்லவில்லை. யாதவப் பேரரசி மெல்ல கனைத்தார். அது செவிகொள்ளப்படாதபோது மேலும் ஒருமுறை ஓசையுடன் கனைத்தார். பாஞ்சாலத்தரசி அசைவிலாது அமர்ந்திருந்தார். அவர் ஆடை மட்டும் இளங்காற்றில் சற்றே நெளிந்தது.”

சுபாகு புரவியை நிறுத்திவிட்டு நோக்கினான். பூரிசிரவஸ் சொன்னான் “பாஞ்சாலத்து அரசி, உன் மறுமொழிக்காக பால்ஹிகர் காத்திருக்கிறார் என்று யாதவப் பேரரசி சொன்னார். நான் பாஞ்சாலத்து அரசி அறிக, பீஷ்மர் களம்சரிந்தார். அவரை வீழ்த்தியவர்கள் பாஞ்சாலராகிய சிகண்டியும் இளைய பாண்டவர் அர்ஜுனனும். அவர் நூறு அம்புகள் உடல்துளைக்க களத்தில் கிடக்கிறார். அவர் எழுவதரிது என்றேன். அவர் புலி உறுமுவதுபோல் ஓசையெழுப்பினார். நான் எண்ணியிராத தருணத்தில் எழுந்தார். அவர் தலையிலிருந்து ஆடை நழுவி விழ அவர் முகத்தை விளக்கொளியில் நன்கு கண்டேன்.”

பதற்றமான சொற்களால் பூரிசிரவஸ் தொடர்ந்தான். “அவர் கண்கள் சிவந்து கலங்கியிருந்தன. முகம் காய்ச்சல் கண்டது போலிருந்தது. ஆம் அவன் வீழ்ந்தான். என் மைந்தனின் கையால் வீழ்ந்தான். வென்றது என் வஞ்சம். பெண்பழி நின்றுகொல்லும் என்று அறிக இவ்வுலகு என்றார். நான் திகைப்புடன் யாதவப் பேரரசியை பார்த்தேன். அவரும் திகைத்ததுபோலிருந்தார். ஆனால் விரைவிலேயே தன்னை மீட்டுக்கொண்டு எழுந்துசென்று பாஞ்சாலத்து அரசியை தோள்பற்றி மெல்ல உலுக்கி பாஞ்சாலத்து அரசி, உன் சொற்கள் எதிர்நோக்கப்படுகின்றன என்றார். பாஞ்சாலத்து அரசி துயில்கலைந்து விழித்துக்கொண்டவர்போல சிறு அதிர்வுடன் மீண்டு என்னை நோக்கினார்.”

“உன் செய்தியை சொல்க பாஞ்சாலத்து அரசி என்று யாதவப் பேரரசி சொன்னார். பாஞ்சாலத்து அரசி என்னை நோக்கியபின் என்ன செய்தி என்றார். நான் யாதவப் பேரரசியை நோக்கினேன். சொல் என அவர் விழிகாட்டினார். நான் மீண்டும் சொன்னேன். பாஞ்சாலத்து அரசி ஆம், அவர் என் மைந்தரின் மூதாதை. என் குருதிவழி அவருக்கு நீர்க்கடன் பொறுப்புள்ளது. எங்கள் விழிநீர் அவரை சேர்க. அவர் விண்புகுந்தால் எங்கள் நீரும் அன்னமும் அவரை சென்றடைக என்றார். நான் தலைவணங்கி அவ்வண்ணமே அரசி என்றேன். இருவருக்கும் மீண்டும் தலைதாழ்த்தி பின்னடிவைத்து வெளியே வந்தேன்” என்று பூரிசிரவஸ் சொன்னான்.

அவர்கள் இருவரும் புரவிகளில் இணையாக சென்றனர். “அவர் சிகண்டியை தன் மைந்தன் என்றார்!” என்று பூரிசிரவஸ் மீண்டும் சொன்னான். சுபாகு ஒன்றும் சொல்லவில்லை. பின்னர் நெடுநேரம் இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. புரவிக்குளம்படிகள் ஒலித்துக்கொண்டே இருந்தன. தொலைவில் காவல்மாடம் ஒன்றில் விளக்கொளி தெரிந்தது. பூரிசிரவஸ் “அது பார்பாரிகனின் மாடம். அவன் அங்கிருந்துதான் போரை பார்க்கிறான்” என்றான். சுபாகு “ஆம், நான் பலமுறை அதை கடந்துசென்றுள்ளேன். மேலே கூர்ந்துநோக்கியதில்லை” என்றான். “இளவரசரின் ஆணைப்படி அவன் அங்கேயே இருக்கிறான். நீர் மட்டுமே அருந்துகிறான். அந்த மாடத்திலிருந்து கீழே இறங்குவதில்லை. துயில்கொள்வதுமில்லை” என்றான் பூரிசிரவஸ். சுபாகு அவனை அறியாமலேயே புரவியை அந்த மாடம் நோக்கி செலுத்தினான். அதை அணுகி புரவியை நிறுத்திவிட்டு இறங்கி மேலே பார்த்தான். பின்னர் நூலேணியில் ஏறி மேலே சென்றான். பூரிசிரவஸ் மேலே வரவில்லை.

சுபாகு பார்பாரிகனின் அருகே சென்று நின்றான். பார்பாரிகன் ஒரு மரப்பீடத்தில் அமர்ந்திருந்தான். அவன் உடல் மெலிந்திருக்கவில்லை. அமர்ந்திருக்கையிலேயே சுபாகுவின் உயரமிருந்தான். பெரிய விழிகளால் குருக்ஷேத்ரத்தை நோக்கிக்கொண்டிருந்தான். அவன் சுபாகு வந்ததை அறிந்ததாகத் தெரியவில்லை. “இடும்பரே, நான் சுபாகு, கௌரவன்” என்று அவன் தன்னை அறிமுகம் செய்துகொண்டான். பார்பாரிகன் திரும்பி அவனை நோக்கினான். அவ்விழிகளின்

கடந்த நோக்கு சுபாகுவை அச்சம்போன்ற ஒரு பதைப்பை அடையச்செய்தது. அல்லது மிக உயரத்திலிருந்து கீழே விழுவதைப்போல.

“இடும்பரே, இரவிலும் எதை பார்க்கிறீர்?” என்று சுபாகு கேட்டான். “இரவு இறந்தவர்களுக்குரியது” என்று பார்பாரிகன் சொன்னான். “இறந்தவர்களை பார்க்கிறீர்களா?” என்றான் சுபாகு. “ஆம்” என்றான் பார்பாரிகன். “அவர்கள் இங்குள்ளார்களா?” என்றான் சுபாகு. அதற்கு பார்பாரிகன் மறுமொழி சொல்லவில்லை. “அரக்கரே, சொல்க! என் உடன்பிறந்தார் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் துயருற்றிருக்கிறார்களா? அவர்கள் எங்களை எண்ணி வருந்துகிறார்களா?” பார்பாரிகன் “ஆம், துயருற்றிருக்கிறார்கள்” என்றான். “அவர்கள் பதற்றம் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்நேரமும் உங்கள் மூத்தவரை சூழ்ந்திருக்கிறார்கள்.”

“அனைவருமா? எவருமே விண்ணேறவில்லையா?” என்றான் சுபாகு. “மானுடர் விண்புகுவதற்கு இரண்டு நிறைவுகள் வேண்டும். இங்கு அவர்களின் பிறவிப்பணி முடியவேண்டும். இங்கிருந்து அவர்களை விண்ணேற்றும் அன்னமும் நீரும் செல்லவேண்டும்” என்றான் பார்பாரிகன். “அவர்களின் பிறவிப்பணி என்ன? அவர்களுக்கு எவர் நீரளிப்பார்கள்?” பார்பாரிகன் சில கணங்கள் அமைதியாக இருந்தான். பின்னர் “அவர்களிடம் உங்கள் வினாவை கேட்டேன். இக்குருக்ஷேத்ரம் நிறைவடைகையில் அவர்களின் பிறவிப்பணி முடியும் என்கிறார்கள். அவர்களுக்கு நீரளிப்பது எவர் என அப்போதே முடிவாகும்” என்றான்.

கடுமையான நீர்விடாயில் என நெஞ்சு பதைக்க சுபாகு அவனை நோக்கிக்கொண்டு சொல்லொழிந்து நின்றான். பின்னர் மூச்சைத் திரட்டி சொல்லென்றாக்கி “இடும்பரே” என அழைத்தான். “சொல்க, என் மைந்தன் சுஜயன் இங்குள்ளானா?” பார்பாரிகன் “இல்லை” என்றான். சுபாகு பதைப்புடன் “ஏன்?” என்றான். “அவன் நிறைவுற்றுவிட்டான். ஆகவே விண்புகுந்துவிட்டான்.” பார்பாரிகனின் பெரிய முகத்தை நோக்கி சுபாகு குனிந்தான். கொந்தளிப்பில் நெளிந்த உதடுகளுடன் “நிறைவென்பது என்ன?” என்றான்.

“கருபுகும் பார்த்திவப் பரமாணுவில் வந்தமையும் உயிர் ஒரு வினாவை கொண்டுள்ளது. வாழ்வென்பது அவ்வினாவின் வளர்ச்சி” என்றான் பார்பாரிகன். “அதன் விடையைக் கண்டடையும் உயிர் நிறைவடைகிறது. அவ்விடை எஞ்சியிருக்குமென்றால் மீண்டும் பிறக்கிறது.” சுபாகு “என் மைந்தன் அவன் விடையை கண்டடைந்துவிட்டானா?” என்றான். “ஆம், வினாக்கள் கோடிகோடி. விடை ஒன்றே. வினாக்களுக்கேற்ப உருக்கொள்வது அது” என்று பார்பாரிகன் சொன்னான். மேலும் என்ன கேட்பது என அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் கேட்பதற்கு ஏதோ எஞ்சியுமிருந்தது.

அவன் இறங்கிவிடலாமென எண்ணினான். உடல் திரும்புவதற்குள் உளம் திரும்பியது. அவ்வசைவில் அது வினாவை அடைந்தது. “இடும்பரே, என் மைந்தன் எப்போது விண்புகுந்தான்?” என்றான். “இன்று” என்றான் பார்பாரிகன். “எப்போது?” என்றான் சுபாகு. “அவன் களத்தில் அர்ஜுனனுடன் இருந்தான். பீஷ்மர் மேல் அர்ஜுனனின் முதல் அம்பு பட்ட கணமே மறைந்தான்” என்றான் பார்பாரிகன். கைகளை நெஞ்சுடன் சேர்த்துக் கூப்பியபடி சுபாகு அதை கேட்டுக்கொண்டு நின்றான். பின்னர் தன்னிலை உணர்ந்து வணங்கிவிட்டு மேடையிலிருந்து கீழிறங்கினான். நூலேணியில் இறங்கும்போது அவன் கால்களும் கைகளும் நடுங்கிக்கொண்டிருந்தன.

துண்டிகன் விழித்துக்கொண்டபோது தன் ஊரில், கோதுமை வயல்களின் நடுவே கட்டப்பட்டிருந்த காவல்மாடத்தின் வைக்கோல் படுக்கையில் படுத்திருந்தான். முற்றத்தொடங்கியிருந்த கோதுமை மணிகளின் மணமும் சிலுசிலுவென்ற ஒலியும் காற்றில் கலந்து வந்தன. கூகையின் ஓசையும் மிக அப்பால் காட்டுக்குள் காற்று கடந்துசெல்லும் இரைச்சலும் கேட்டன. அவன் எழமுயன்றபோதுதான் தன்னிலை உணர்ந்தான். மருத்துவநிலையில் தரையிலிட்ட ஈச்சைப்பாயின்மேல் அவன் படுத்திருந்தான். அவன் கால்கள் இரண்டிலும் எடைமிக்க மரவுரிக் கட்டுகள் இருந்தன. வலதுதோளிலும் மரவுரிக்கட்டு மெழுகிட்டு இறுக்கப்பட்டிருந்தது. கழுத்து மரச்சிம்புகள் வைத்து கட்டப்பட்டு உரல்போலிருந்தது.

மெல்ல அவன் அந்த இடத்துக்கு திரும்பிவந்தான். பெருமூச்சுகள் விட்டுக்கொண்டு அசைந்தான். உடல் அசையவில்லை. எடைமிக்க கற்சிலைபோல் அது கிடந்தது. அதனுடன் அவனை இணைத்த தன்னிலையின் சரடுகள் மெல்லியவையாக இருந்தன. ஆனால் வலி இருக்கவில்லை. அது விந்தையாக இருந்தது. வலிமரப்புக்கான மருந்துகள் எதையேனும் அவனுக்கு அவர்கள் அளித்திருக்கக் கூடும். அவன் விழிகளைச் சுழற்றி சுற்றும் பார்த்தான். நிரைநிரையாக படுத்திருந்த புண்பட்டோர் ஆழ்துயிலில் இருந்தனர். அவர்களின் மூச்சுகள் நாகக்கூட்டங்களின் சீறல்கள் என சூழ்ந்து ஒலித்தன.

துண்டிகன் திடுக்கிடலுடன் பீஷ்மரின் நினைவை அடைந்தான். அவர் உயிருடனிருக்கிறாரா எனும் வினா எழுந்ததுமே ஒன்றன்மேல் ஒன்றென காட்சிகள் வந்து அவன்மேல் பொழிந்து மூடிக்கொண்டன. அவன் விழிகள் அதிர்ந்துகொண்டே இருந்தன. கைவிரல்களில் ஒன்று மட்டும் மெல்ல துடித்தது. அன்றைய அரைநாள் போரில்தான் அவன் முழுமையாக வாழ்ந்தான். கொண்டுவந்தனவும் சேர்த்தனவுமாகிய ஆற்றல்கள் அனைத்தும் திகழும் கணங்கள். கண்டடைதலும் திகழ்தலும் கடந்துசெல்லலும் ஒரே நேரத்தில் நிகழும் கணங்கள். பெருகி எழுந்து ஒரு கணத்தில் நுழைந்து மேலும் பெருகி அதைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தான். பலநூறாண்டுகள் வாழ்ந்தவன்போல, பல பிறவிகளினூடாகச் செல்பவன்போல.

போர்க்களத்தில் முரசுக்காகக் காத்திருக்கையில் அவன் கைகளில் பதற்றத்துடன்தான் கடிவாளத்தை பற்றியிருந்தான். எத்தனை நீர் அருந்தினாலும் தீராத விடாய் என நெஞ்சு தவித்தது. அவனுக்கு இருபுறமும் தேர்நுகத்தில் பதிக்கப்பட்டவையாக தீட்டிய இரும்பாலான குமிழியாடிகள் இருந்தன. அவற்றில் பீஷ்மரின் முகம் தெரிந்தது. அவர் ஆழ்ந்த அமைதியில், விழியிமைகள் பாதிசரிய உதடுகள் இறுகக்குவிந்து மூடியிருக்க, இடக்கையில் வில்லும் வலக்கையில் நீளம்புமாக நின்றிருந்தார். அவருக்குப் பின்னால் ஆவக்காவலர்கள் இருவர் அரைத்துயிலில் என அமர்ந்திருந்தனர். அவருடைய தேர்த்தூண்களின் வளைவில் படைகள் வண்ணத்தீற்றல்களாக படிந்திருந்தன.

படைகள் முதல்நாள் போரில் பல வண்ணங்களில் இருந்தன. நாள் செல்லச்செல்ல வண்ணங்கள் ஒளியிழந்தன. குருதியும் புழுதியும் படிந்து அனைத்து வண்ணங்களும் மறைய மண்நிறம் எஞ்சியது. யானைகள், புரவிகள், தேர்கள், மானுடர் அனைவரும் ஒரே நிறம். வானில் சற்று எழுந்து கீழே நோக்கினால் அங்கே மண் கொந்தளிப்பதாகவே தோன்றும். அவன் புழுக்களை நோக்கியிருக்கிறான்.

அவை தனி உயிர்களல்ல, ஒற்றைப்பொருளின் கொதிப்புதான் என்று தோன்றியிருக்கிறது.

அவனுடைய புரவிகளில் இரண்டு அப்போதும் அவனை புரிந்துகொள்ளவில்லை. இரண்டுமுறை அவன் ஆணையிட வேண்டியிருந்தது. தேரின் சகடங்களில் ஒன்று சற்றே வலப்பக்கமாக இழுபட்டது. அவனுக்கு பீஷ்மரின் ஆணைகளை தன்னால் புரிந்துகொள்ளமுடியுமென்று தோன்றவில்லை. இறுகிய முகம், எதையும் சொல்லாத விழிகள், தாடிக்குள் புதைந்த உதடுகள். அவருடைய ஆணைகளுக்காக விழிகொடுத்தால் களத்தை நோக்கமுடியாமலாகும். அவன் மூச்சுத்திணறுவதுபோல் உணர்ந்தான். போர் தொடங்கியதுமே அர்ஜுனனின் பேரம்பு தன் நெஞ்சு துளைத்ததென்றால் நன்று என எண்ணினான். புரவிகள் சிலிர்த்துக்கொண்டு கால்மாற்றின. எதை உணர்ந்தன என அவன் எண்ணிக்கொண்டிருக்கையிலேயே முரசுகள் முழங்கலாயின.

பீஷ்மர் இடையிலிருந்து தன் சங்கை எடுத்து ஓங்கி ஊதிவிட்டு ஏவலனிடம் அளித்தார். அவன் மெய்ப்புகொண்டான். அந்த வலம்புரியின் பெயர் சசாங்கம். முழுநிலவின் நிறம்கொண்டது. நிலவு நோக்கி துதிக்கை தூக்கி முழங்கும் இளங்களிறின் ஒலிகொண்டது. அன்றுதான் அவன் முதன்முறையாக அதை கேட்டான். அது சங்கொலி எனத் தோன்றவில்லை. அனைத்துச் சங்குகளும் கடலில் இருந்து தங்கள் ஒலியை பெற்றுக்கொள்கின்றன. கடல் அலைகளில் கணந்தோறும் எழுந்து மறைந்துகொண்டிருக்கும் பல்லாயிரம் கோடி சொற்களில் ஒன்று சங்குக்குள் நிலைகொண்டுவிடுகிறது. பீஷ்மரின் சங்கில் உறையும் சொல் என்ன? அது மானுடரை நோக்கி சொல்லப்படவில்லை.

தேர் கிளம்பிய கணமே அவன் முழுமையாக தன்னை இழந்தான். தேர் அவன் ஒரு பகுதியாயிற்று. அவன் பீஷ்மருடன் இரண்டறக் கலந்தான். அவர் எண்ணியவை அத்தேரில் நிகழ்ந்தன. அவர் எண்ணுவதற்கு முன்னரே அதற்காக ஒருங்கின அனைத்தும். பறவையின் சிறகுகளில் வந்தமைகிறது அதன் உள்ளம். பீஷ்மர் தேரை நிறுத்தி சிகண்டியின் முன் திகைத்து நின்றபோதுதான் அவன் மீண்டான். அவர் வில்லை கீழே வைத்துவிட்டு கைகளை விரித்து நின்றபோது அவன் திகைப்புடன் தலைதிருப்பி நோக்கினான்.

அவர் உடலில் முதல் அம்பு பாய்ந்தது. சிறிய நாகக்குழவி போன்ற புல்லம்பு. அது கீழிருந்து எழுந்து கவசத்தின் இடைவெளிக்குள் வால் புளைய நுழைந்தேறியது. நரம்பு முடிச்சு ஒன்று தாக்கப்பட்டது என தெரிந்தது. பீஷ்மர் நிலையழிந்ததை உணர்ந்ததும் அவன் தேரைத் திருப்பும்பொருட்டு கடிவாளத்தை சுண்டினான். ஆனால் புரவிகள் கால்நிலைத்து நின்றன. அதன் பின்னரே தன் கைகள் கடிவாளத்தை சுண்டவில்லை என உணர்ந்தான். அவருடைய எண்ணங்களை மட்டுமே அவனும் புரவிகளும் ஆற்றமுடிந்தது.

அர்ஜுனனின் நீளம்பு வந்து அவர் கவசத்தை உடைத்ததை அவன் அண்மையிலெனக் கண்டான். கவசத்துண்டு தேர்த்தட்டில் உலோக ஒலியுடன் விழுந்த கணம் அடுத்த அம்பு வந்து அவர்மேல் பாய்ந்தது. தசையில் அம்பு தைக்கும் ஓசையை கேட்க முடிந்தது. பின்னர் நேர்முன்னால் அம்புகள் எழுந்து வந்துகொண்டிருந்தன. அவர் உடலில் அம்புகள் தைத்துக்கொண்டிருக்கும் ஓசை கேட்டது, சேற்றுப்பரப்பில் புன்னைக் காய்கள் விழுவதுபோல. மழைத்துளிகள் போல அவருடைய குருதி அவன் மேல் தெறித்தது.

நீளம்பு ஒன்றால் சரிக்கப்பட்டபோது மட்டும் பீஷ்மர் சற்றே முனகினார். அவன் தன்னியல்பாக திரும்ப தன் கழுத்தில் குளிர்ந்த தொடுகையை உணர்ந்தான்.

இழுத்த மூச்சு இரண்டாக வெட்டுப்பட்டது. விசிறியால் வெட்டப்பட்ட புகை என மூச்சு இரு துண்டுகளாயிற்று. ஒன்று அவன் உடலுக்குள்ளேயே நின்றது. தேரிலிருந்து புரண்டு நிலத்தில் விழுந்தான். விழித்த கண்களால் நோக்கிக்கொண்டிருந்தான். பீஷ்மர்மேல் அம்புகள் வந்து தைத்துக்கொண்டே இருந்தன.

அவன் விழிதிருப்பி நோக்கியபோது அப்பால் சிகண்டியை கண்டான். வெறித்த கண்களும் வளைந்த புருவங்களும் சினத்தால் குவிந்த உதடுகளுமாக அவர் அம்புகளை தொடுத்தார். அவருக்குப் பின்னால் அதே முகத்துடன் அர்ஜுனன். அவருக்குப் பின்னால் பீமனும் சகதேவனும் நகுலனும் அதே வெறிப்புடன் அம்புகளை அவர்மேல் எய்துகொண்டிருந்தனர். திருஷ்டத்யும்னனும் சாத்யகியும் அம்புகளை தொடுத்தனர். அபிமன்யூவும் சுருதகீர்த்தியும் சதானீகனும் சுதசோமனும் சர்வதனும் சுருதசேனனும் நிர்மித்ரனும் அம்புகளை ஏவியபடி சூழ்ந்திருந்தனர். யௌதேயனும் பிரதிவிந்தியனும் அம்புகளை விடுத்தனர். பாண்டவப் படை மொத்தமாகத் திரண்டு அம்புகளால் வானை நிறைத்தது. புயல்காற்றில் சருகுகளும் புழுதியும் வருவதுபோல அங்கிருந்து அம்புகள் வந்துகொண்டிருந்தன.

பீஷ்மர் புழுதியில் விழுந்து அம்புகளால் உருட்டப்பட்டார். நீரில் விழுந்து மீன்களால் கொத்திப் புரட்டப்படும் ஊன் துண்டுபோல. அவன் எங்கோ ஓர் ஊளையை கேட்டான். அல்லது அழுகையோசை. தொலைவில் இடியோசை முழங்கி எதிரொலிகளாக மாறி நீண்டுசென்றது. கூரிய சிறு மின்னல்கள் இடைவெளியில்லாமல் வெட்டின. போரிடும் களிறுகளின் ஓசை என கொம்புகள் முழங்கின. அவ்வோசை வானிலிருந்து எழுந்து மழையென இழிந்தது. அம்புப்பெயல் நின்றது. பாண்டவப் படையினர் விலகிச்செல்ல கௌரவர்கள் திகைப்புடன் அகன்றனர். விரிந்து பரவி உருவான முற்றத்தில் பீஷ்மரின் உடல் நாற்றுவயல் என அம்புகள் மேவியதாக மல்லாந்து வான்நோக்கி கிடந்தது. அவர் வாயின் கடையோரம் குருதி வழிந்தது. விழிகள் திறந்து நிலைகொண்டிருந்தன.

அவன் எழுந்து அமர்ந்து சுற்றிலும் நோக்கினான். வானம் மாபெரும் யானைத்தோல் கொட்டகையின் உட்பகுதி என கருமைகொண்டிருந்தது. அப்பால் போரிட்டுக்கொண்டிருந்த படைவீரர்கள் அனைவரும் ஒளிமங்கி நிழலுருக்களாக ஆனார்கள். பாண்டவப் படைக்குள் இருந்து விரிந்த நீள்குழல் அலையலையாக எழுந்து பறக்க செம்பட்டாடை அணிந்த பெண் ஒருத்தி ஓடிவந்தாள். நெஞ்சிலும் வயிற்றிலும் அறைந்து கதறியபடி அவள் வந்த விசையில் முழங்கால் மடிந்து நிலத்தில் அறைய விழுந்து கைகளால் பீஷ்மரின் கால்களை பற்றிக்கொண்டாள். அவர் பாதங்களில் தன் தலையை அமைத்துக் கொண்டு கதறியழுதாள்.

கௌரவர்களின் பக்கமிருந்து இன்னொருத்தி நீல ஆடையும் நீள்குழலும் எழுந்து அலைபறக்க கைகளை வீசி கதறியழுதபடி ஓடிவருவதை அவன் கண்டான். அவளைச் சூழ்ந்து எட்டு இளைமைந்தர்கள் வந்தனர். அவள் பீஷ்மரின் தலையை எடுத்து தன் மடியில் வைத்துக்கொண்டாள். அவர் குழல்கற்றைகளை கோதியபடி குனிந்து நோக்கி அழுதாள். அவர் பெயரை அவள் சொல்லிச் சொல்லி அழைக்கிறாள் என்பது உதடுகளின் அசைவிலிருந்து தெரிந்தது. அவர்களைச் சூழ்ந்து எண்மரும் ஒளிகொண்ட உடல்களுடன் நின்றனர். அவர்கள் ஒற்றைக் கருவிலெழுந்ததுபோல் ஒரே முகமும் உடலும் கொண்டிருந்தார்கள். அவன் அந்த அழுகையை சொல்மறைந்த உள்ளத்துடன் நோக்கிக்கொண்டிருந்தான். அவர்களின் அழுகை பெருகிப்பெருகி வந்தது. அப்படியோர் அழுகை பெண்களின் உடல்களிலேயே நிகழமுடியும். அன்னையரென அவர்கள் உணர்கையிலேயே எழ முடியும்.

துண்டிகன் ஒரே உந்தலில் எழுந்துகொண்டான். எழுந்து நின்றபின்னர்தான் அத்தனை எளிதாக எழமுடியும் என்பதை அவன் வியப்புடன் உணர்ந்தான். குளிர்ந்த சேறாலானதுபோல குழைந்து எடைகொண்டு கிடந்த அந்த உடலை அவன் அதுவரை அஞ்சிக்கொண்டிருந்தான் போலும். கைகளையும் கால்களையும் விரித்தான். எடையின்மையை உணர்ந்தபின் அவன் வெளியே சென்றான். காவலன் பீடத்தில் அமர்ந்து வேலை ஊன்றிய கையில் தலையை வைத்து துயின்றுகொண்டிருந்தான். அவன் கடந்துசெல்கையில் திடுக்கிட்டு விழித்து அவனை பார்த்தான். ஆனால் காய்ச்சல் படிந்ததுபோலிருந்த அவன் விழிகளில் எந்த உணர்வும் உருவாகவில்லை. துண்டிகன் நின்று அவனை நோக்கினான். அவனும் வெறுமனே அவனை நோக்கிக்கொண்டிருந்தான். “இவ்வழிதானே?” என்று துண்டிகன் கேட்டான். “ஆம்” என்று காவலன் மறுமொழி சொன்னான்.

துண்டிகன் வெளியே சென்று பந்தங்களின் ஒளி அசைந்துகொண்டிருந்த மரப்பாதையினூடாக நடந்தான். அதில் வழிந்து உறைந்து மிதிபட்டுச் சேறாகி உலர்ந்த குருதி கால்களை வழுக்குமென எண்ணி மெல்ல நடந்தான். ஏழு பெண்கள் எதிரில் வந்தனர். அவர்கள் கரிய மேலாடையால் முகம் மறைத்திருந்தார்கள். அவன் நின்று அவர்களை நோக்கினான். அருகே வந்தபோது மேலாடைகள் விலக அவர்கள் தலைதூக்கி அவனை பார்த்தனர். எழுவருமே வெண்பல்நிரைகள் தெரிய புன்னகைத்தனர். துண்டிகன் அவர்கள் ஏதேனும் சொல்வார்கள் என எதிர்பார்த்தான். அவர்கள் மருத்துவநிலைக்குள் சென்று மறைவதை நோக்கி நின்றபின் அவன் மீண்டும் நடந்தான்.

படைகளுக்குள் இருந்து பல்லாயிரம்பேர் நிழலுருக்களாக எழுந்து செல்வதை அவன் பார்த்தான். ஏரியிலிருந்து புலரியில் நீராவி எழுவதைப்போல. அவன் அவர்கள் ஒவ்வொருவரையும் முகம்முகமாக நோக்கியபடி நின்றான். அவர்கள் முகங்கள் ஆழ்துயிலில் இருப்பவைபோல் அமைதிகொண்டிருந்தன. திறந்து இமைநிலைத்த விழிகளிலும் துயில் இருந்தது. அவர்கள் இயல்பாக இணைந்து ஊற்றுக்கள் ஓடையாவதுபோல நிரைகொண்டனர். நிரைகள் மேலும் இணைந்து ஒழுக்காயின. அந்தப் பெருக்கு படைமுகப்பு நோக்கி செல்கிறது என்று தெரிந்தது.

அவன் அவர்களுடன் நடந்தான். அவர்கள் அனைவருமே அவனை நோக்கினர், அடையாளம் கண்டனர், ஆனால் ஏதும் சொல்லவில்லை. அவர்கள் நடந்தபோது கால்கள் பட்ட சில வீரர்கள் முனகியபடி புரண்டு படுத்தனர். சிலர் விதிர்த்து எழுந்து அமர்ந்தபின் தலையை சொறிந்துகொண்டு மீண்டும் படுத்துக்கொண்டார்கள். எங்கோ மெல்லிய முரசொலி கேட்டது. கொம்போசை இணைந்துகொண்டது. வானில் மின்னல்கள் துடித்தணைந்தன. அவன் செல்லும் வழியில் உயர்ந்த மேடை ஒன்றில் அமர்ந்திருந்த பார்பாரிகனை பார்த்தான். மிகப் பெரிய உடல்மேல் அமைந்த பெருந்தலை. அவன் முன் இன்னொருவன் அமர்ந்திருந்தான்.

துண்டிகன் கூர்ந்து நோக்கி அவன் யார் என புரிந்துகொள்ள முயன்றான். எங்கோ பார்த்த முகம். அவர்கள் இருவரும் அருகருகே அமர்ந்து எதிரே நோக்கிக்கொண்டிருந்தார்கள். கூத்துமேடையில் திரை விலக காத்திருப்பவர்கள்போல. துண்டிகன் வடக்கே சென்றான். நெடுந்தொலைவுக்கு விலகிச்சென்றுவிட்டான். இருதரப்புப் படைகளும் ஆயிரக்கணக்கான பந்தங்களுடன் அப்பால் தெரிந்தன. பாவைநோன்பு நாளில் அகல்சுடர்கள் ஒழுகும் கங்கைபோல. அவன் பீஷ்மரின் படுகளம் நோக்கி சென்றான். சங்கொலி ஒன்றைக் கேட்டு இயல்பாக திரும்பி நோக்கியபோது பார்பாரிகனுடன் அமர்ந்திருந்தவன்

அரவான் என உணர்ந்தான். மேலும் மேலுமென சங்கொலிகள் எழுந்தன. செவிநிறைக்கும் போர்முழக்கம் பெருகி அலைகொண்டது. பல்லாயிரம்பேர் ஒருவரோடொருவர் வெறிக்கூச்சலுடன் பாய்ந்து போரிடத் தொடங்கினர்.

அவன் படுகளத்தின் எல்லையை அடைந்தான். அவன் உள்ளே நுழைந்த அசைவைக் கண்டு அங்கிருந்த முதிய மருத்துவர் நிமிர்ந்து நோக்கிவிட்டு இயல்பாக கண்களை மூடிக்கொண்டு மீண்டும் துயிலத் தொடங்கினார். இரு இளைஞர்கள் அப்பால் கைகளைக் கட்டியபடி தரையில் போடப்பட்ட மரவுரிகளில் அமர்ந்து துயின்றுகொண்டிருந்தனர். பீஷ்மர் அம்புப்படுக்கைமேல் படுத்திருந்தார். அவர் இமைகள் அசைவற்றிருந்தன. உதடுகளில் மட்டும் ஏதோ சொல் நிகழ்ந்துகொண்டிருந்தது.

அவர் அருகே அவன் அந்த இரு பெண்களையும் பார்த்தான். நீலஆடை அணிந்த பெண் குழல்பெருக்கு நிலத்தில் விழுந்து ஓடையென ஒழுகி இருளில் சென்றிருக்க கையூன்றி அமர்ந்திருந்தாள். அவள் மடியில் முகம்புதைத்தவளாக செவ்வாடை அணிந்தவள் படுத்திருந்தாள். அன்னையும் மகளும் என துண்டிகன் எண்ணினான். மகளின் சுரிகுழலை அன்னை கைகளால் நீவிக்கொண்டிருந்தாள். மகள் மெல்லிய விசும்பலுடன் புரண்டு படுத்தபோது அவள் கன்னங்களில் நீரின் ஒளியை துண்டிகன் கண்டான். அன்னை குனிந்து ஆறுதல் சொன்னாள். அவன் அறியாத மொழி. நீரலைகள் மென்மணலில் எழுப்பும் ஓசைபோல மென்மையானது.

அவர்கள் இருவரின் முகங்களிலும் இருந்த ஒற்றுமை வியக்கவைப்பதாக இருந்தது. அன்னையின் விரல்கள் யாழ்விறலியர்களுக்குரியவைபோல மிக மெலிதாக நீண்டிருந்தன. விழிகள் நீலமணிகள். அவள் இமைப்பீலிகளும் பெரியவை. அவள் ஆடை குளிர்ந்திருந்தது. மகள் பற்றிஎரிந்துகொண்டிருப்பவள் போலிருந்தாள். அவள் விரல்கள் நாகக்குழவிகள்போல. எரித்துளிகள் போன்ற கண்கள். அவள் உதடுகளை இறுக்கிக்கொண்டு தன்னை அடக்கினாள். அன்னை அவளிடம் மென்மொழிகளை சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அவன் அவர்களை நோக்கிக்கொண்டிருந்தான். அப்போது போரின் ஓசை மிக அப்பாலென விலகிச்சென்றுவிட்டிருந்தது. அவன் நோக்குவதை அவர்கள் உணரவில்லை. நீள்மூச்சுடன் அவன் திரும்பியபோது இளைய மருத்துவர்களில் ஒருவன் அவனைப் பார்த்து திடுக்கிட்டான். ஏதோ சொல்லெழுந்த உதடுகளுடன் அவன் கைநீட்டினான். துண்டிகன் அவனை நோக்கியபடி நின்றான். அவன் கைதழைத்து தலையை அசைத்தான். துண்டிகன் வெளியே சென்றான். அப்பால் குருக்ஷேத்ரத்தில் இருளுக்குள் பல்லாயிரம் இருளலைகளாக போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அவன் சில கணங்கள் அதை நோக்கியபின் எதிர்த்திசையில் நடந்தான்.

குறுங்காடு இருண்ட குவைகளாலான கோட்டைபோல் வளைத்திருந்தது. வானின் பகைப்புலத்தில் இலைவடிவங்கள் கூர்கொண்டிருந்தன. குறுங்காட்டுக்கு அப்பால் வானில் சிதைவெளிச்சம் எழுந்து நின்றிருந்தது. சற்றே விழிகூர்ந்தபோது புகையின் அலைவையும் அதிலேறி மேலே செல்லும் சருகுக்கரித் திவலைகளையும் பார்க்க முடிந்தது. அங்கே நிழல்கள் வானிலெழுந்து ஆடின. காற்று ஓசையெழுப்பியபடி சென்றபோது புதர்களுக்குள் அசைவுகள் எழுந்தன. விலங்குகளா, நாகங்களா, பாதாளதெய்வங்களா?

அவன் அதை நோக்கி செல்கையில் ஒருவனை தொலைவிலேயே கண்டான். முள்மரத்தின் அடியில் அவன் தனித்து நின்றிருந்தான். அணுகும்தோறும் அவ்வுருவின் வடிவம் தெளிந்து சிகண்டியென்று காட்டியது. சிகண்டி அங்கே நின்று

தொலைவில் தெரிந்த படுகளத்தை பார்த்துக்கொண்டிருந்தார். அவன் அருகே சென்றதையும் அவர் அறியவில்லை. துண்டிகன் அவர் முன் சென்று நின்றான். அவர் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தான். அதிலிருந்தது என்ன உணர்வு என அறியமுடியவில்லை. அது கரிய சிலைபோல இருளில் தெரிந்தது.

அவன் குறுங்காட்டின் விளிம்பு வழியாக அந்தப் பெருஞ்சிதை நெருப்பை நோக்கி சென்றான். நீண்ட நிரையாக உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. அவன் உடல்கள் ஒவ்வொன்றாக நோக்கிக்கொண்டு சென்றான். பின்னர் ஓர் உடலை நோக்கியபடி பெருமூச்சுடன் சற்றுநேரம் நின்றான். மிக அப்பால் தாழ்வான சகடங்கள் கொண்ட வண்டிகளில் உடல்களை அள்ளி அடுக்கிவைத்து கொண்டுசென்று சிதையேற்றிக்கொண்டிருந்தனர். வண்டி அந்த உடலை அணுக மேலும் சிலநாழிகைகள் ஆகும் என எண்ணிக்கொண்டான்.

**[திசைதேர்வெள்ளம் நிறைவு]**